சுவாமி விவேகானந்தரின்
ஞான தீபம்

சுவாமிகளின் நூற்றாண்டு விழாப் பதிப்பு

சுடர் - 1

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் :: சென்னை-4

சென்னையில் மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண
மடத்துத் தலைவரால் வெளியிடப்பட்டது.

1847-ஆம் ஆண்டுச் சட்டப் பிரிவு XX-ன்படி
உரிமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

உரிமை பதிப்பாளர்க்கே

II—XXII—5-65

சாதாரண பைண்டு ரூ. 5.00
காலி

அச்சிட்டோர் :
தி ஜூபிடர் பிரஸ் பிரைவேட் லிமிட்டெட்
109-C, மவுண்ட் ரோடு, தேனாம்பேட்டை, சென்னை-18

நூன்முகம்

ஐம்புலச் சின்றின்பச் சேற்றிலும், அறிவொளி மாய்ந்த காரிருளிலும் உழல்கின்ற மன்னுயிரை உய்விக்கும் பொருட்டு ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவதாரம் செய்தார் என்பது இவ்வுலகம் அறிந்ததே. தாம் கண்ட பேரின்பம் இவ்வையகம் பெறவேண்டு மென்று, பொங்கும் பரிவால் விண்ணகத்திலிருந்து மண்ணகத் திற்கு விவேகானந்தரைக் கொண்டு வந்த இம்முனி வேந்தர் தாம் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் நாளில், 'ஞாலம் தழைத்தோங்க நரேந்திரன் பணியாற்றவேண்டும்,' என்ற ஒரு துண்டுக்கடிதம் வாயிலாகத் தம் விருப்பத்தை அருளினர்; ஆனல் நரேந்திரர் இதை விழையவில்லை. அவருடைய ஆர்வம் யாவும் இடையருது நிர்விகற்ப சமாதியில் ஆழ்ந்து கிடப்பதேயாகும். நரேந்திரர் தம் பணியைத் தொடங்கத் தவறினுல் உலக அன்னையே அவரைத் தூண்டுவாள் என்பதில் ஐயமில்லை என்று பகவான் மொழிந்தார். மேலை நாட்டிலும் கீழை நாட்டிலும் தாம் புரிந்த நீண்ட பல பிரயாணங்களிலெல்லாம் தம்மை ஒரு சத்தி ஆட்டி வைக்கிறதென் றும், அது ஒரு மாபெருந் திரைபோல எங்கும் தம்மை அடித்துச் செல்லுகிறதென்றும், தாம் பிற்றை நாட்களில் அச்சத்தியின் ஆற்றலை உணர்ந்ததாகவும் விவேகானந்தர் உரைத்திருக்கிருர்.

தம் தாய் நாட்டிற்கும் உலகத்திற்கும் இவர் ஆற்றிய தெய்வப் பணி, காலத்தில் குறுகியதேயாயினும், அதன் சிறப்பை இனிவரும் மக்கள் மேன்மேலும் தேர்ந்து உய்வார்கள் என்பது திண்ணம். இவருடைய அறிவுரைகள் தனிப்பட்ட மனிதனுக்கும் சமூகங் களுக்கும் ஆற்றலை அளித்து, மக்களை அறத்துறையில் நிற்கும் வண் ணம் உறுதிபயக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். ஆற்றல் குன்றி வலியிழந்த நாடுகளுக்கு இவை ஒரு தளராத நம்பிக்கையை ஊட்டும்; உடைந்த உள்ளத்தவர்களின் இதயத்தில் ஒரு பெருஞ் சத்திக் கனலை எழுப்பும். விவேகானந்தரை ஒரு தெய்வச் சத்திப் பிழம்பெனக் கொள்ளலாம். இவருடைய அறிவுரைகளெல்லாம் அவ்விழுமிய சத்தி பெற்று, மன்னுயிரை உய்விக்கும் திறன் வாய்ந் தனவாய் இன்றைக்கும் இலங்குகின்றன.

இவர் திருவாய் மலர்ந்த அருளுரைகளின் தீஞ்சுவை அமுத நன்னீரைப் பருகித் தம் அகவுயிர்ப் பயிர் வளர்ந்தோங்க

ஆர்வங்கொள்ளும் மக்களின் தொகை நாளுக்கு நாள் பெருகி வருவதைக் காண்கின்றோம். எனவே, இச்சான்றோருடைய நூற்றாண்டு விழாவைத் தமிழ் மக்கள் சிறப்பித்துக் கொண்டாடுகையில், கைம்மாறு கருதாது இவர் ஆங்கில மொழியில் அமைத்த எட்டுத் தொகுதிகளையும் பத்துத் தொகுதிகளாகத் தமிழாக்கம் செய்து, இவற்றை இவர் பொன்னடிக் கீழ் ஒரு வாடா மாலையெனச் சமர்ப்பிக்க நினைந்துள்ளோம்.

இப்பெரும்பணி இயற்றுவதற்குப் பெருநல்லுதவியாய் உவந்து பொருளீந்த நடு இந்திய அரசாங்கப் பண்பாட்டு அலுவல் அமைச்சர் அவர்கட்கும், சென்னை மாநில அரசியலார்க்கும் யாம் ஆழ்ந்த நன்றி தெரிவிக்கின்றோம். காலத்தினாற் செய்த அத்தகைய நன்றியைப் பெற்றிராவிடின், இத்தகைய மாபெரும்பணியைத் தொடங்கி இன்று நிறைவேற்றுதல் இயலாத காரியமாகிவிடும். சென்னைக் கல்வி அமைச்சர் இந்த 'விவேகானந்தரின் ஞான தீப'த்தை உயர்நிலைப் பள்ளிகளின் நூல் நிலையங்களில் ஏற்றி வைக்க இசைந்து, இந்நூல்களை விலைக்கு வாங்கி அவற்றுக்கு அளிக்க ஏற்பாடு செய்திருப்பது குறித்து யாம் எமது பாராட்டை அறிவிக்கின்றோம். இறையருளால் யாம் ஏற்றுக்கொண்ட இத் திருப்பணியைச் செவ்வனே இயற்றுவதற்குத் துணைபுரிந்த பொதுப் பதிப்பாசிரியர் ஸ்ரீ ரா. ஸ்ரீ. தேசிகன். எம். ஏ. அவர்கட்கும், மகா வித்துவான் ஸ்ரீ மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கட்கும், பிழையற அச்சுத்தாள்களை அவ்வப்போது திருத்தித் தந்த ஸ்ரீ ஈ. எஸ். வரதாசாரியார், பி. ஏ. அவர்கட்கும், மற்றும் இந்நூலை அச்சு வாகனத்தில் அழகுற இவருமாறு செய்த ஜூபிடர் அச்சகத்தார் அவர்கட்கும் யாம் மனமார்ந்த நன்றி கூறுகிறோம்.

அறிவுச் சுடரைத் தூண்டி, உயிர் ஊட்டி, உயர்நிலைக்கு உய்விக்கும் விவேகானந்தரின் வீரம் நிறைந்த, 'சிந்தைக்கினிய, செவிக்கினிய, வாய்க்கினிய, வந்த இருவினைக்கு மாமருந்தாய' ஞான மொழிகளை உண்டு, பிறவிப் பிணி நீங்கி, 'மற்றீண்டு வாரா' மாணெறி சென்று, மக்கள் பேரின்பப் பெருவாழ்வை எய்துவாராக!

பதிப்பாளர்

முன்னுரை

திருவளர்ந்தோங்கும் பரத மாநாட்டிலே அவதரித்து, குருவருளும் திருவருளும் பெற்று, ஆணையால் ஊரையும் நாட்டையும் உலகத்தையும் தம்மைப் போலாக்கும் ஞான ஒளி பரப்பி உய்விக்கக் கருதினர் வீரமாகுரவர் சுவாமி விவேகானந்தர். அவர் பரம்பொருளோடு மன்னிக் கிடந்து யோகத் துயிலில் அமர்ந்து அறிவுற்று விழித்த பின், மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு வேதாந்தச் சிங்கம் போல மேலை நாடும் கீழை நாடும் திரிந்தார். சென்னையிலிருந்து சிக்காகோப் பல்சமயப் பெருமன்றத்திற்குச் சென்று தொண்டாற்றத் தொடங்கிய காலை, இறைமைப் பண்பாம் அமுத ஆழியுட்புகுந்து முகந்துகொண்டு, நாவீறுடைய ஆசாரிய பதத்தில் ஏறினர். அருட்காளமுகில் வடிவாய் மெய்ப்போத ஒளியினை மின்னலென வீசினர். அகப்பகைகள் அஞ்சி நடுங்கியொழியும்படி அம்முகில்போல அதிர்ந்து, சார்ங்கம் உதைத்த சரமழை போலச் சொன்மாரியை அமெரிக்க நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் பொழிந்து, மக்களை விழிக்கச் செய்து, சென்றவிடமெல்லாம் ஞான நற்பயிர் தழைக்கச் செய்து வந்தனர்.

அப்பெரியார் தம் மாபெருங்குரவரின் திருவடிக்கு இவ்வாறு ஞானச் சுடர் விளக்கேற்றும் பணியினில் ஈடுபட்டிருந்தபோது, அவரது திருவாயினின்றும் திருக்கரத்தினின்றும் வெளிவந்த ஞான மொழிகள் அத்தனையையும் திரட்டிப் பத்துத் தொகுதிகளாக்கித் தமிழ் உலகம் தழைக்குமாறு தமிழாக்கம் செய்து, 'விவேகானந்தரின் ஞான தீபம்' எனப் பெயரிட்டுப் பத்துச் சுடர்களாக வெளியிடும் நோக்கம் பூணலானேம்.

இச்சுடரிலுள்ள 'வீரமாகுரவர் விவேகானந்தர்' என்ற பகுதியை எழுதியவரும், 'அணிந்துரை'யை மொழி பெயர்த்துத் தந்தவரும் ஸ்ரீ ரா. ஸ்ரீ. தேசிகன் என்பார். 'சிக்காகோச் சொற்பொழிவு' என்ற பகுதியைத் தமிழாக்கியவர் ஸ்ரீமத் சுவாமி விபுலாநந்தர். 'இந்தியாவின் பண்பாடும், அதன் இடர்ப்பாடுகளும்' என்ற பகுதியில், 1, 2, 3, 4 என்னும் பொருள்கள் டாக்டர் சேஷாத்திரிநாதன் (எம். பி. பி. எஸ்.) என்பவராலும், 5 என்பது ரா. ஸ்ரீ. தேசிகன் என்பவராலும், 6 என்பது ஒர் அன்பராலும், 11 என்பது

சுவாமி பரமாத்மாநந்தராலும், ஏனையவை ஸ்ரீ கி. ஸ்ரீ. திருநாராயணையங்கார் (பி. ஏ., பி. எல்.) என்பவராலும் தமிழாக்கம் செய்யப்பட்டன. 'பத்தியோகம்' என்பதில் 249-ஆம் பக்கத்திலிருந்து 292-ஆம் பக்கம் வரை ஸ்ரீ வி. விசுவநாதய்யர் (எம். ஏ., பி. ஓ. எல்.) என்பவராலும், எஞ்சிய பகுதி ஸ்ரீ 'அண்ணு' அவர்களாலும், மொழி பெயர்க்கப்பட்டன. 'என் வாழ்க்கையும் பணியும்' என்பதை ஸ்ரீ எஸ். எஸ். ராகவாசாரியார் (பி. ஏ.) என்பவரும், 'அருளுரை' என்பதைச் சுவாமி பரமாத்மாநந்தரும், 'அமெரிக்க நாட்டுச் செய்தித் தாள்களில் வெளி வந்துள்ள அறிக்கைகள்' என்பதை ஸ்ரீ ரா. ஸ்ரீ. தேசிகன் (எம். ஏ.) என்பவரும் தமிழ்ப் படுத்தியுதவினர்.

இந்நூலைத் தமிழ்த் தாயின் தாளிணையில் ஆர்வத்தோடு சமர்ப்பிக்கின்றோம். தமிழகத்தார் இதனை மனமுவந்தேற்று, சிரத்தையுடன் பயின்று, திருவருள் பெற்று இன்புறுவாராக!

பதிப்பாளர்

பொருளடக்க

பொருள்

I. வீரமா குரவர் விவேகானந்தர்
II. அணிந்துரை ... xix
III. சிக்காகோச் சொற்பொழிவு ... 1
IV. இந்தியாவின் பண்பாடும் அதன் இடர்ப்பாடுகளும்
1. இராமாயணம் ... 30
2. மகா பாரதம் ... 49
3. ஜடபரதரின் வரலாறு ... 80
4. பிரகலாத சரிதம் ... 85
5. கோபாலன் என்னும் சிறுவன் ... 91
6. இந்திய மாதர் ... 100
7. இந்தியாவின் கலைச் செல்வம் ... 126
8. இந்தியா இருள் அடைந்த நாடா? ... 128
9. இந்தியா உலகத்திற்கு விடுத்த செய்தி ... 135
10. இந்தியாவின் வரலாறு வளர்ந்த முறை ... 147
11. இக்கால இந்தியா ... 161
12. இந்தியப் பணிக்கு ஒரு திட்டம் ... 212
13. இந்தியாவுக்குத் தேவையான கல்வி ... 217
14. இக்கால இந்தியாவின் இடர்ப்பாடும், அதை நீக்கும் முறையும் ... 226
15. நம் இப்போதைய சமுதாய நலப் பிரச்சினை ... 238
16. பொது மக்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடன் ... 244
V. பத்தி யோகம் ... 249
VI. என் வாழ்க்கையும் பணியும் ... 329
VII. அருளுரை ... 355
VIII. அமெரிக்க நாட்டுச் செய்தித் தாள்களில் வெளி வந்துள்ள அறிக்கைகள் ... 490
பொருட் குறிப்பகராதி ... 495

வீரமாகுரவர் விவேகானந்தர்

"மொய்க்குங் கவலைப் பகைபோக்கி
முன்னோன் அருளைத் துணையாக்கி
எய்க்கும் நெஞ்சை வலியுறுத்தி
உடலை இரும்புக் கிணையாக்கிப்
பொய்க்குங் கலியை நான்கொன்று
பூலோ கத்தார் கண்முன்னே,
மெய்க்குங் கிருத யுகத்தினையே
கொணர்வேன், தெய்வ விதியிஃதே."

ஒரு நாட்டின் சிறப்பு அதன் பொருட்செல்வத்தில் கோயில் கொள்ளவில்லை; அதன் வான் நிமிர்ந்த கூடகோபுரங்களில் மிளிரவில்லை. வையகத்தின் செல்வங்களனைத்தையும் பெற்றாலும், ஒருவன் ஆன்ம ஒளி அடையாமல் அதை இழக்க நேரிடுமாயின், அந்தச் செல்வங்களால் யாதொரு பயனுமில்லை என்று இயேசுநாதர் அருளியது நம் சிந்தையை விட்டகலுமோ?

வசிட்டருக்கும் விசுவாமித்திரருக்கும் நடந்த வெம்போர் அனைவருக்கும் நினைவிருக்கக்கூடும். அதில் ஓர் உண்மை அலர்ந்திருக்கக் காண்பீர். போர்க்கருவிகளில் திளைத்த விசுவாமித்திரரின் ஆற்றல் வசிட்டரின் ஆன்மப் பேரொளிக்கு முன் மங்கி மறைந்து போயிற்று. விசுவாமித்திரராம் குடதிசை, வசிட்டராம் குண திசைக்கு வணக்கம் செய்ததை, அந்நாளில் மட்டும் நாம் காணவில்லை; தட்சிணேச்சுவரத்தில் அகண்ட அறிவும், எல்லையற்ற அன்பும், கடலனைய அருளும் எல்லாம் ஒருங்கே திரண்ட ஸ்ரீ ராம கிருஷ்ணப் பெருமானின் பொன்னடிக் கீழ் இந்நாளில் நிகழ்ந்ததையும் நாம் நோக்குகின்றோம். ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு தனித்த பண்பாடுண்டு. மேலை நாட்டவர் புறச் செல்வத்தை நாடுகின்றனர். கீழை நாட்டைச் சார்ந்தவர்களான நாம் மனக் கடலில் ஆழ்ந்து கிடக்கின்ற ஞான நல் முத்தைத் திரட்ட முயல்கின்றோம். நாடுகள் தோன்றிக் காலக் கடலில் குமிழிகள் போல வெடித்து, இருந்த சுவடுகள்கூட இல்லாமல் போய்விடுகின்றன. சாம்ராச்சியங்கள் மலர்ந்து உதிர்கின்றன. நம் வாழ்வோ, கன

வாய்ப் பழங்கதையாய் மெல்ல மெல்லத் தேயக் கண்ணுறுகின்றோம். மின்னின் நிலையில் எல்லாப் பொருள்களும் என்று கண்ட நம் சான்றோர்கள் எஞ்ஞான்றும் அழிவிலா மெய்ப்பொருளைத் தரிசிக்க நீண்ட ஞான யாத்திரை செய்கின்றார்கள்.

ஆன்மஞானம் தனித்த மனிதனுக்குமட்டுமன்று; அது சமுதாயத்திலும் நடனமாட வேண்டுமென்று தேர்ந்தனர். தனித்த மனிதனுக்கும் மக்கட்சமுதாயத்திற்கும் யாதொரு பிளவுமில்லை. மக்கட்சமுதாயமும் தனித்த மனிதனின் விரிவே என்று உணர்ந்தனர். இந்த ஆன்ம ஞானந்தான் பாரதநாட்டில் வாழ்கின்ற மக்களின் தனிச்சிறப்பாகும். அதன் உயிர் நாடி என்றுகூட அதை உரைக்கலாம். அத்தகைய நம் நாட்டின் வரலாற்றில் பேரச்சத்தை விளைவிக்கக் கூடிய ஒரு மாபெரு நெருக்கடி பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பாதியில் ஏற்பட்டுவிட்டது.

மேலை நாட்டின் நாகரிகப் படையெடுப்பால் நமக்கு விளைந்த இன்னல்களுக்கோ எல்லையில்லை. அவற்றோடு விஞ்ஞானமும் நாட்டில் புகுந்ததை நாம் அறிவோம். நாத்திகப்பேய் தலை விரித்தாடிற்று. மேலை நாட்டுக் கல்வியாகிய மதுவை உண்ட நம் மக்கள் நம் பண்டைய நாகரிகத்தின் பெருமையை ஓராது அதைப் புறக்கணிக்கவும் தொடங்கிவிட்டார்கள். உலக ஆடம்பர வாழ்வில் திளைத்துப் பசி தீர உண்பதும் உறங்குவதுமாய் மக்கள் ஐம்புலச் சேற்றில் உழன்று தங்கள் வாழ்நாளை வீணே கழித்து வந்தார்கள். ஆன்மிகத் துறையின்மீது ஓர் இருள் படர்ந்துவிட்டது. இவ்விருளைப் போக்க ஞானக்கதிரவன் வேண்டும். வேதம், உபநிடதம், கீதை முதலிய நல்ல நீர்களால் தழைத்தோங்கிய ஞானப் பயிர் வாடத் தொடங்கிவிட்டது. இது வாடாவண்ணம் ஒரு முகில் வேண்டுமன்றோ? இந்த முகிலேதான் சுவாமி விவேகானந்தர் என்று ஐயமறக் கூறலாம். இந்த முகில் நீரை எடுத்துக் கொள்ளுவதற்கு ஓர் அகண்ட ஞானக்கடல் விரிய வேண்டுமே! அத்தகைய ஞானக் கடலே ஸ்ரீ ராமகிருஷ்ணப் பெருந்தகையார். அந்தக் கடல் அந்த முகிலை மிக்க ஆர்வத்துடன் எதிர் பார்த்து நின்றதில் வியப்பில்லை. இந்த முகில் நம் நாட்டு வாடி வதங்கிய ஞானப் பயிர் தழைப்பதற்கு மட்டும் பொழியவில்லை. இது உலகம் எங்கணும் பெய்து இப்பாலையாம் உலகை எழில் மிக்க கற்பகச் சோலையாய்த் திகழச் செய்ய, ஆண்டவன் உறைதற்குரிய அருட் பூம்பொழிலாய் விளங்கச் செய்ய முயன்றது.

பெருந்தவத்தால் புனிதமான இடத்திலேதான் சான்றோர்கள் பிறக்கின்றார்கள் ; நல்ல சூழ்நிலையாம் தொட்டிலிலேதான் தாலாட்டப்படுகின்றார்கள். உமை மாதேவனை அடைந்தது அருந்தவத்தால் என்பதைக் குமார சம்பவம் என்ற நூல் வாயிலாக நாம் உணர்கின்றோம். நரேந்திரர் உதித்த தத்தர் குடும்பமும் பரம்பரையாகச் செல்வம் வாய்ந்தது. அறத்திற்கும், அன்பிற்கும், விரிந்த படிப்பிற்கும், எதற்கும் அஞ்சாது தம் தனி அற வழியே செல்லுகின்ற இயல்புள்ளவர்களைப் படைப்பதற்கும் அது புகழ் வாய்க்கப்பெற்றிருந்தது. நரேந்திரரின் பாட்டனார் துர்க்க சரண தத்தர் துறவறத்தை ஏற்றார். துறவறத்தின் இரத்தம் இவருடைய நரம்பில் ஓடுகின்றதை அதனால் நாம் அறிகின்றோம். மேலும், நரேந்திரர் சந்நியாசிகளிடத்தில் ஒரு தனி ஆர்வம் தம்முடைய கிளரொளி இளமையில் காட்டினதாக இவர் வரலாறு கூறுகின்றது.

இவருடைய தாயார் புவனேச்வரி தேவியார் சிவபிரானை இடையறாது இறைஞ்சி வழிபடுவார் ; மிக்க தூய்மை வாய்ந்த ஓர் உத்தமியார் ; இசையில் மிக்க தேர்ச்சியுடையவர் ; இராமாயணம், பாரதம் இவற்றின் சுவையை நன்கு பருகினர் ; பிள்ளைப் பேறில்லாமல் தவங்கிடந்தார்; காசியில் எழுந்தருளியிருக்கும் விசுவநாதரிடம் பேரன்பு பூண்ட காரணத்தால் அவர் கனவில் சிவபிரானே ஒரு குழந்தை வடிவமெடுத்துத் தம்பால் விரையக் கண்டார் ; சில மாதங்கள் கழித்து ஓர் ஆண் மகவை ஈன்றார். இந்த ஆண் மகவுதான் நரேந்திரர். பின்பு இவரே விவேகானந்தர் என்ற பெயரைப் பூண்டார்.

உலகத்திற்கே ஞான விளக்காய்த் திகழப்போகும் இச்சான்றோர், 1863-ஆம் ஆண்டு ஜனவரி மாதம், 12-ஆம் தேதி திங்கட்கிழமை சங்கராந்தியன்று கதிரவன் தோன்றுவதற்கு ஆறு நிமிடங்களுக்கு முன்பே அவதரித்தார். பராசத்தியாம் உலக அன்னையை வழிபட்டு அச்சமெலாந்தீர்ந்து அருளமுதம் உண்டு ஞானக் குன்றின்மீது நின்ற தட்சிணேசுவரத்துப் பேரருளாளர் இச்சோதிப் பிழம்பு கீழே இறங்குவதைக்கண்டு உளம்பூரித்தார். இவர் தந்தையரான விசுவநாதர் இசைக் கலையை மிக்க ஆர்வத்துடன் போற்றுவர். இசையில் உள்ள அன்பு நரேந்திரருக்குத் தம் தந்தையார்வாயிலாக மலர்ந்தது என்று கூறலாம். இந்த இசை வன்மை பிற்காலத்தில் ஆண்டவனை வழிபடும் துறையில் இவருக்குத் தக்க துணை புரிந்தது.

மேலும் இவருடைய தாயார் இவருடைய மனக்கழனியில் ஆன்மிக விதையை முதன்முதலாகத் தூவிவிட்டார். இராமாயணம், பாரதம் இவற்றில் வரும் வீரர்களின் அருஞ்செயல்களைத் தம் மைந்தருக்கு எடுத்துக் காட்டினார். இராமனுடைய தெய்வ வாழ்வு இவருடைய சிந்தையைக் கொள்ளை கொண்டுவிட்டது. அனுமார் தாம் இவருக்கு இலட்சிய புருடராய்த் திகழ்ந்தார். அனுமாரைப் பற்றிக் கேள்விப்பட்டதும், அவர் வாழைத் தோப்பில் இருப்பார் என்று அங்கே இரவில் சில மணி நேரங்களைக் கழித்தார். அத்தகைய கற்பனைச் செறிவு இவரிடம் மிளிர்ந்தது. அன்றியும், மகா பாரதத்து வீரனான அருச்சுனனுடைய வாழ்வு இவருக்கு ஆன்மிகத் துறையில் ஒரு புதிய பாதையை வகுத்துக் காட்டிவிட்டது. பிருந்தாவனக் கண்ணனைக்காட்டிலும், போர் முரசு கொட்டி அறம் நாட்டிய குருக்ஷேத்திரக் கண்ணனிடத்தில் இவருக்குப் பற்றுதல் மிகுதியென்றே மொழிய வேண்டும்.

இவர் அறியாக் காலத்தே—ஐந்தாருண்டிலேயே—தியானத்தை விளையாட்டாகப் பாவனை பண்ணத்தொடங்கினார். இப்பாவனை இவருடைய உள்ளத்தில் துயின்றுகொண்டிருந்த ஆன்மிகப் பேருணர்ச்சிகளைத் தட்டியெழுப்பிவிட்டது. ஒரு நாள் தியானத்திலிருக்கும் பொழுது ஒரு நல்ல பாம்பு படமெடுத்து அங்கே வந்துவிட்டது. விளையாட்டுத் தோழர்கள் எச்சரிக்கை யாகக் கூச்சலிட்டு அப்புறம் அகன்றார்கள். பின்பு இவரை உசாவிய பொழுது, “நிகழ்ந்தது ஒன்றுமே யான் அறியேன்; புகலரிய இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்திருந்தேன்!” என்று விடை அளித்தார். ஆன்மிக உணர்ச்சியும் தியானமும் இவரோடு உடன் பிறந்தன போலும்!

இவரது வாழ்க்கையைச் சாத்திர ஆராய்ச்சி, குருவின் கீழ்ப்
பயிற்சி, நாட்டுப் பணி என்ற மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.
இவர் எதையும் நுணுக்கமாய்த் துருவி ஆராயும் ஆற்றல்வாய்ந்
தவர். இவருடைய நினைவுச்சத்தியோ, சொற்கடந்தது. இவர் 1879-
ஆம் ஆண்டு, தம் 16-ஆம் ஆண்டில் பிரவேசப் பரீட்சையில் தேறி,
ஓர் ஆண்டு கல்கத்தா அரசாங்கத்தார் கல்லூரியில் படித்தார். பிறகு
ஸ்காட்லந்து நாட்டவர் நிறுவிய பாதிரிக் கல்லூரியில் தொடர்ந்து
கல்வி பயின்றார். வேட்ஸ்வொர்த்து இயற்கை எழிலில் ஆழ்ந்து
சமாதி நிலையின் காட்சியைக் கண்டார் என்பது உண்மையே.
இந்த உண்மையை மெய்ப்பிக்க வேண்டுமென்றால் தட்சிணேசு

வரத்தில் அமர்ந்த இராமகிருஷ்ண பகவானை நண்ணலாம் என்று அக்கல்லூரிக்குத் தலைவரான வில்லியம் ஹெஸ்டி என்றவர் தம் சொற்பொழிவில் குறிப்பிட்டார். இதைக் கேட்ட நரேந்திரர் முதன் முதலாக 1881-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், இராமகிருஷ்ண ரைச் சந்தித்தார். இச்சம்பவம் உலக வரலாற்றிலேயே ஒரு மாபெரு நிகழ்ச்சி என்று பொன்னேட்டில் பொறிக்கலாம்.

அவர் வடமொழியை நன்ருகக் கற்ருர்; அதன்கண் அடங்கியுள்ள காவியச் சுவைகளை இன்புறப் பருகினுர்; மேலைநாட்டுக் கவிகளின் நயங்களில் தோய்ந்தார்; மேலைநாட்டுத் தத்துவ ஆசிரியர்களான பிளாட்டோ, அரிஸ்டாட்டில், ஹெகல், காண்டு, ஹெர்பர்ட்டு ஸ்பென்சர், ஷோப்பனேர்—இவர்களுடைய நூற்கடலின் ஆழங்களைக் கண்டார்; சமணர் தத்துவத்தை ஆராய்ந்தார்; சாக்கியம் பயின்ருர்; பைபிள், குரான் போன்ற சமய நூல்களின் நுட்பங்களைத் தம் கூர்ந்த அறிவுகொண்டு சோதித்தார்; வேதம், உபநிடதம், கீதை முதலிய நம் நாட்டுச் சமய நூல்களையும் திறனுய்வு முறையில் நோக்கினுர். பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தார். வெற்று அறிவு வேட்கையைத் தணித்துக் கொள்வதற்காக இவர் பல்வேறு நூல்களில் திளைக்கவில்லை. மெய்ப்பொருளைக் காண வேண்டும் என்ற அவா ஒன்றே இவரை எல்லாத்துறைகளிலும் இழுத்துச் சென்றது. இவர் திறனுய்வுத் தராசில் எல்லாவற்றையும் நிறுத்துப் பார்த்தார்; ஆராய்ச்சியாம் உலையில் தாம் கற்ற அனைத்தையும் வைத்து அருஞ்சோதனை செய்தார்; 'மெய்ப்பொருள் இங்கு இலங்குமா, அன்றேல் அங்குத் திகழுமா?' என்றெல்லாம் நினைத்துச் சிந்தனைக் கடலில் ஆழ்ந்தார். மெய்யொளி காண எல்லாச் சமயக் கபாடங்களையும் தட்டிப்பார்த்தும், ஒன்றிலிருந்தும் இவருடைய அறிவுக்குச் சமாதானம் அளிக்கக்கூடிய விடை ஒன்றுமே எழுந்தபாடில்லை. அந்தக் காலத்தில் மகரிஷி என்று போற்றப் பட்ட தேவேந்திர நாத தாகூரைப் பார்த்து, "நீவிர் கடவுளைக் கண்டிருக்கிறீரோ?" என்று வினவினுர். அவர் அதற்குத் தக்க விடை அளிக்காமல், "உன் கண்கள் யோகிகளுடைய கண்கள் போல மிளிர்கின்றன," என்று மொழிந்தார். இவர் தம் உள்ளத்திற்கு உயர்ந்த சமாதானம் எங்கும் கிடைக்காமல், மனம் அல்லலுற்ருர். அதனுல், இவர் எதையும் நம்பாத ஓர் அஞ்ஞேயவாதியாய் இருக்கும் படி நேர்ந்தது. கடவுளை நேரில் காணுத வரையில் தமக்கு உள்ளத்தில் ஓர் அமைதி உண்டாவதற்கு சற்றும் இடமில்லை என்று இவர்

மனம் உரைத்தது. இவர் கடவுட்பித்தேறினவர் போலக் காட்சி அளித்தார்.

பத்திப் பூஞ்சோலையில் ஒரு ஞான நன்மலர் பூத்தால், அம் மலரை நாடி வண்டுகள் ஒலித்து விரையத்தானே செய்யும்? சீடன் குருவை நாடுகிறதுண்டு; தாம் அரும்பாடு பட்டுத் தேடிய ஞானச் செல்வத்தை ஒப்படைக்கத் தகுந்த ஒரு சீடன் வரமாட்டானு என்று ஏங்கும் உள்ளம் படைத்த உத்தம ஞான குருவுமுண்டு.

நரேந்திரரும் இராமகிருஷ்ண பரமஹம்ஸரும் சந்தித்தனர். 'நீர் இறைவனைக் கண்டீரோ?' என்று நரேந்திரர் அவரை வினவினர். 'நான் இறைவனை நேரிற் காண்கின்றேன்; உன்னைக் காண்பதுபோலவே அவரையும் காண்கின்றேன்; உனக்குக் காட்டவும் வல்லேன்,' என்று துணிவுடன் கூறிய சான்றோரைப் பார்த்து இவர் வியப்பில் ஆழ்ந்துவிட்டார். இவ்வளவு திண்ணமாக, இவ்வளவு உறுதியுடன் பேசின பெரியாரை இதுவரையில் இவர் கண்டதில்லை. தம் ஞானக்கண்ணுல் உணர்ந்த இவ்விளைஞரின் பெருமையைக் கொஞ்சமும் கூசாமல் பலர் முன்னிலையில் அவர் உரைத்தார்; உலகத்திற்குப் பேருண்மையை நல்க வந்த ஞான வள்ளலென்றும், சிவசத்தி வாய்க்கப் பெற்றவரென்றும், சப்தரிஷிகளில் ஒருவரென்றும் உணர்ச்சி ஓங்க, உளங்குழையப் பேசி, ஆராத அன்பால் இவரை நீராட்டினர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அருளிய மொழிகளை அப்படியே இவர் ஏற்கவில்லை; குருநாதர் தம் அனுபூதியில் கண்ட உண்மைகளை ஒவ்வொன்ருய்த் துருவி ஆராய்ந்த பிறகே அவற்றை ஏற்க உடன்பட்டார். தாம் படித்துத் தேர்ந்த எல்லா ஆராய்ச்சிகளாகிய வெங்கணைகளை, விசுவாமித்திரர் வசிஷ்டர் மீது தொடுத்தது போல எறிந்தார். அந்த ஞானக்குன்றின் அருகில் அவை எல்லாம் பயனற்று விழுந்தன. இந்நிலையை ஓரறிஞர் மிகக் கவின் பெறச் செஞ்சொற்கள் கொண்டு 'மும்மணிகள்' என்ற பொருட்செறிவுடைய தம் கட்டுரையில் சித்திரித்திருக்கிருர்:

"தாம் பருகியிருந்த ஆங்கிலக் கல்வியின் சாரத்தையெல்லாம் திரட்டி அம்புகளாக்கி, அவற்றைக் குரு மொழிகளின்மீது தொடுத்தார்; சுருங்கச் சொல்லின், ஆங்கிலக் கல்வியால் வளர்ந்த இக்கால இந்தியாவின் உருவமேயானுர். பண்டைய இருடியரது ஞானக் கல்வியின் களஞ்சியமாய் மிளிர்ந்தார் குருதேவர். புதிய இந்தியாவும் பழைய இந்தியாவும் இருவர் வாயிலாகவும் ஒன்றோடொன்று எதிர்த்துப் போராடியது போன்றதாயிற்று. ஐந்தாண்டு வரை

நடந்த சொற்போரின் இறுதியில் தோற்றவர் நரேந்திரரே.

"நரேந்திரரது மனத்தின்கண் இருந்த ஐயங்களெல்லாம் பரிதியைக் கண்ட பனிபோல அகன்றன. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஞான ஒளி இவர் இதயத்தின் இருளை மாய்த்துவிட்டது. தியான முறைகளையும், ஒழுக்கத்தைத் திருத்தும் முறையையும், ஞானசத்தியைச் சேமிக்கும் முறையையும் இராமகிருஷ்ண பகவான் இவருக்கு நன்கு விளங்க விரித்துரைத்தார். நிர்விகற்ப சமாதி நிலையின் பெருமையையும், இவர் அந்த மாகுரவர் வாயிலாக உணர்ந்து அதையும் தம் அனுபூதிச் செல்வமாக அமைத்துக்கொண்டார். இராமகிருஷ்ண வள்ளலார் தம் சத்திகள் அனைத்தையும் தம் சீடருக்கு மனமுவந்தே அளித்தார். இவர் பெருந்தியாகத்தில் பெற்ற எல்லாச் சத்தியையும் துறத்தலால் இன்னுமொரு தியாகத்தின் சிறப்பைப் பெற்றுத் தியாக வடிவமாய்த திகழ்ந்த தம் குருநாதரிடமிருந்து அவற்றை வணக்கத்துடன் ஏற்று, அவர் பணித்த ஆணையைச் செவ்வனே நிறைவேற்றும் விரதம் பூண்டார். இவர்தம் குருவும் 1886-ல் தம் தெய்வத் திருவுருவை மறைத்து, விண்ணுட்டை அலங்கரித்துவிட்டார். விவேகானந்தரும் இவர்தம் துணைச் சீடரும் முற்றத்துறந்த முனிவராயினர்.

> "எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு."
> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு."

என்ற மொழிகளுக்கு விரிவுரையாய்த் திகழ்ந்து வீர வாழ்வை நடத்திய நரேந்திரர், விவேகானந்தரானுர்; அறிவுக் கடலைக் கடைந்து வேதாந்த மணியைப் பெற்ருர். சர்வ சமய சமரச மணிதான் அந்த வேதாந்த மணியாகும். இவர் அனுபூதிக்கே மாபெருங் காப்பியமான ஸ்ரீ ராமகிருஷ்ணரென்னும் குருமணியைக் கண்டறிந்தார். இந்திய மக்களது வாழ்க்கைக்கடலுள் அடிவரை மூழ்கி நாட்டுப் பணியெனும் சுடரொளி விடும் மணியையும் கண்டார்.

"இம் மும்மணிகளையும் கண்ட சுவாமியார், தம் உள்ளத்திற் குருதேவ மணியைப் பதித்துக்கொண்டார்; தமது உரையில் வேதாந்த மணியைப் பதித்துக்கொண்டார்; தமது செயலில் (தாய் நாட்டுத்) தொண்டு எனும் மணியைப் பதித்துக்கொண்டார். பின்னர் உலக முழுதும் தாம் கண்ட இம்மூன்று மணிகளின் பெருமையினை வெளியிடத் தொடங்கினர்."

மூன்றும் பகுதியில் ஸ்ரீ ராமகிருஷ்ணரது மஹா சமாதிக்குப் பின்பு விவேகானந்தர் புரிந்த அருஞ்செயல்களனைத்தும் திகழப் பார்க்கின்றோம். ஸ்ரீ ராமகிருஷ்ண மடமும், சங்கமும் நிறுவப் பட்டன. இந்தச் சிறிய ஆல வித்தில் உலகத்திற்கே தண்ணிழல் பரப்பும் விரிந்த மடம் மறைந்திருப்பதை யார் அந்தக் காலத்தில் உணர்ந்திருக்க முடியும்! அதைச் சுற்றிப் பல இன்னல் முகில்கள் திரண்டு எழுந்து முழங்கின. மின்னல்கள் வீசினலென்ன? பேரிடிகள் பல்லாயிரம் முரசுகள் போல ஒலித்தாலென்ன? ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருட்பரிதியால் எல்லாம் அவிந்து போயின. இந்த மடத்தின் ஆன்ம வெற்றிக்கொடி எல்லா இதயக் கோட்டையிலும் ஆடுவதை உலகம் இப்பொழுது கண்டு களிக்கின்றது!

இவர் மடத்தை நிறுவிய பின் யாதொரு தளையுமின்றி இமயத்தினின்று குமரி வரையில் யாத்திரை செய்யலானார்; பிச்சையேற்றே நடந்தார்; பசி தாகம் இவற்றைப் பொருட்படுத்தாமல் புண்ணியத் துறைகளாடி எங்கும் திரிந்தார். இந்த நீண்ட யாத்திரையில் இவருக்குப் பல்வேறு அனுபவங்கள் ஏற்பட்டன. ஒருகால் வேந்தர் பேரரண்மனைகளில் உறைவார்; ஒருகால் ஏழை மக்கள் வசிக்கும் மட்குடிசைகளில் தங்குவார்; நல்லறமும், மனச்செம்மையும், பேரன்பும் ஏழை மக்கள் குடிசைகளில் பெரிதும் தாண்டவமாடக் கண்டார்; பண்டிதர்களோடு வாதம்புரிவார். அன்பு ஊற்றுகளையும், உண்மைத் தீஞ்சுவைப் பொய்கைகளையும் அடைத்து நிற்கும் வெறும் சம்பிரதாயக் குப்பை கூளங்களைக் காட்டி அவற்றை அகற்றித் தரும்படி மன்றுடுவார்; பகுத்தறிவாம் தெளிந்த நன்னீர் ஓடை பொருளற்ற பண்டைய வழக்காம் பாலையில் பாய்ந்து மறைந்து போவதைக் கண்டு வெகுண்டு எழுவார்; சமுதாயச் சீர்திருத்தக்காரர்களுள் ஒரு சிறந்த சீர்திருத்தக்காரராயும், நாட்டுப் பணியில் இறங்கிச் சிறந்த தொண்டாற்றும் தேச பத்தருள் மிக உயர்ந்த தேச பத்தராயும் திகழ்ந்தார்; ஏழை படும் துயர் கண்டு கண்ணீர் சொரிவார்.

இந்தத் துயரைத் துடைக்க, இந்த வறுமையை வேரொடு களைய மாமருந்தொன்று உண்டு. சமரசத்தைப் போதிக்க வந்த வேதாந்தத்தின் உட்பொருளை ஓராது தம் மனச் சார்பிற்கேற்றவாறு அதைத் திரித்துப் பொருள் கூறும் சமயவாதிகளை என்னென்று இயம்புவது என்று இவர் உள்ளம் ஏங்கிநிற்கும். உண்மை மணிகள் நிரம்பிய கருவூலமாம் வேதங்களும் உபநிடதங்களும் ஒர்

இனத்திற்கு மட்டும், ஒரு சாதிக்கு மட்டும் உரியவையல்ல; அந்தக் கருவூலக் கதவுகளை எல்லோருக்கும் திறந்துகாட்டி அதன் பேரொளியின் பெருமையை உலகங் கேட்கப் பெரும்பூதூர் வள்ளல் இராமானுசர்போல முரசறைய வேண்டுமென்று திருவுளங்கொண்டார். உண்மையெனும் ஊருணி ஆன்ம நீர் வேட்கையுற்ற அனைவருக்கும் சமமான உரிமை உடையது என்பதுதான் விவேகானந்தரின் உள்ளக் கிடக்கையாகும். வேதாந்தத்தின் உண்மையான கருத்தைச் செயல் முறையிற் கொண்டுவருகின்ற எந்த நாடும் இம்மையையும் சாதித்து, மறுமையையும் கண்டுவிடும் என்பதில் யாதோர் ஐயமுமில்லை.

இவர் 1892-ன் இறுதியில் நீலத் திரைக்கடல் தாலாட்டும் குமரி வந்ததும் அங்கே கோயில் கொண்டிருக்கும் அம்மையைத் தரிசித்துப் பிறகு தனித்து நிமிர்ந்து காட்சி அளிக்கும் ஒரு பாறை மீது தியானத்தில் அமர்ந்தார். தம் தாய் நாட்டின் வானளாவி நின்ற உயர்தோற்றமும், அதன் சாக்கடைத் தேக்கமும், அதன் கடலனைய பெருமையும், எல்லாத் துறைகளிலும் எழுந்த அதன் சிறுமையும், அதன் தபோதனர்களும், இருடிகளும், ஞானிகளும், சிற்றின்பச் சேற்றில் உழல்கின்ற இழிவான மக்களும், வறுமையில் வாடுகின்ற ஏழை மக்களின் இடும்பைகளும் எல்லாம் அலைக்கு மேல் அலையாய்க் கிளம்பி இவர்தம் மனக்கரை மீது மோதுவதைக் கண்டார். "என் நாட்டின் வறுமையை அகற்றி அதன் வெந்துயர்களைப் போக்கி அதன் பண்டைய பெருமையை உலகிற்குமுன் நிலை நாட்டுவேன்!" என்ற ஓர் உறுதியான எண்ணம் இவர் மனத்தில் வேரூன்றிவிட்டது. புத்தபிரான்போல இவர் உலகத் துயரில் ஆழ்ந்து அதைத் துடைக்கும் துறையில் இறங்கிவிட்டார்.

மேலை நாட்டிற்குப்போய்த் தம் நாட்டின் பெருமையை நாட்ட வேண்டுமென்ற அவா எனும் விதை இவர் மனத்தில் எப்பொழுதோ விழுந்துவிட்டது. அது முளைத்துத் தளிர்த்து அரும்பிப் பூத்துக் காய்த்துப் பழுக்கும் காலமும் நெருங்கிக்கொண்டிருந்தது. நம் கொல்லையிலுள்ள மாமருந்துப் பச்சிலையின் பெருமையை நாம் உணர்கிறதில்லை. அயலார் சுட்டிக் காட்டினாற்றான் நாம் அதை உள்ளவாறு அறிவோம். மேலை நாட்டிற்குத் தேவையானது ஆன்மிகச் செல்வம்; வெவ்வறுமையில் உழலும் நம் நாட்டிற்கு மிக மிகத் தேவையானது, அதை அகற்றும் இம்மைச் செல்வமேயாகும். பசிப் பிணியால் வாடி வதங்குகின்ற ஒருவனிடத்திற் போய்

வேதாந்தம் உரைத்தால் அது யாது பயனைத் தரும்? நம் நாட்டுத்
தரித்திர நாராயணர்களுக்குக் காணிக்கையாய்ச் சமர்ப்பிப்பது
உணவேயாகும் என்று தேர்ந்தார். விலையிலா மாணிக்கமாம்
வேதாந்தத்தை மேலை நாட்டிற்கு அளித்துப் பொருட் செல்வத்தைத்
தம் தாய் நாடு வறுமைத் துயர் மாயுமாறு பெறுகின்றார்! இவரது
வாணிகம் இருந்தவாறு என்னே!

சர்வ சமயப் பெருமன்றம் 1893-ஆம் ஆண்டு, செப்டெம்பரில்
சிக்காக்கோ மாநகரில் கூடிற்று. அச்சபையை அடைவதற்குரிய
ஆயத்தங்களின்றிச் சென்னையிலுள்ள அன்பர்களின் உதவியால்
'இராமா' என்ற திருநாமத்தை உச்சரித்துக்கொண்டே விவேகா
னந்தர் கப்பலேறினார். 'இராமா' என்று இவர் இயம்பியதில் ஒரு
பேருண்மை இயங்கப் பார்க்கின்றோம். மேலை நாட்டு நாகரிகத்
தளையில் சிக்கிக் கிடந்த தம் தாய் நாடாம் சீதையை மீட்கத்தான்
திரை கடலைக் கடக்கின்றார் போலும்!

தம் அகக்கண்முன் தம் குருநாதர் தோன்றி ஆசி கூறியபிறகு
இவர் பிரயாணஞ் செய்தார் என்பதை நாம் மறக்கக்கூடாது. அந்
நாட்டில் இவர் அடைந்த இன்னல்களுக்கு எல்லை இல்லை; அவை
யாவும் ஆண்டவன் அருளால் ஒன்றன்பின் ஒன்றாய் மறைந்தன.
பேரவையில்—பழுத்த அறிவு படைத்த பல பெரியோர் திகழும்
பேரவையில்—'பிறகு ஆகட்டும்; பிறகு ஆகட்டும்;' என்று முத
லில் கூறினார். பின்னர்ப் பேச எழுந்ததும், இவர் மனத்தில் ஓர்
ஆவேசம் பிறந்தது. "சகோதரிகளே! சகோதரர்களே!" என்று
தொடங்கியபொழுதே கடல்போலப் பரந்துள்ள அச்சபைமீது ஒரு
பெரும்புயல் அடிப்பது போல ஓர் உணர்ச்சி அலை ஓங்கி எழுந்
தது. சமயங்களனைத்தும் ஆண்டவன் திருக்கோயிலுக்கு அழைத்
துச் செல்லும் பாதைகளே தவிர வேறல்ல என்று மொழிந்தார்.
பல்வேறு சமயங்களாம் மலர்களைத் தொடுத்து ஆண்டவனுக்கு
ஒரு மாலையாய் அளிப்பதுதான் முறையாகும். அந்த மாலையில்
எந்த மலரும் ஏற்றத்தாழ்வில்லை—எல்லாம் சமமே—என்ற உண்
மையை—விவேகானந்தரின் நாவினால், தாம் கண்ட ஆன்மிகச்
செல்வத்தை பகவான் இராமகிருஷ்ணர் உலகுக்கு வெளியிட்டார்.
சிக்காகோ பல்சமயப் பெருமன்றத்தில் பேசினவர் இவர் குரு
நாதரே. அவர் கையில் ஒரு கருவியாய் அமைந்து நின்றார் சுவாமி
விவேகானந்தர் என்பதுதான் உண்மையாகும்.

அமெரிக்காவில் இவருக்குப் பலர் சிஷ்யராயினர். அங்கே

வேதாந்தக் கழகங்கள் நிறுவப்பட்டன. வேதாந்தத்தைப் பரப்புவதற்கு வேண்டிய முயற்சிகள் ஏற்பட்டன; அதற்குரிய முறைகளையும் சுவாமிகள் வகுத்துக் காட்டினர். இங்கிலாந்திலும் தம் குருநாதரின் ஞானப் பயிர் எங்கணும் தழைப்பதற்குப் பற்பல இடங்களில் மாரி போல் சொற்பொழிவுகளைத் தமக்கெனத் தனிச் சிறப்புடன் திகழும் யாழொத்த குரலில் வாரி வழங்கினர். வடிவழகிலும், சொல்லின் இன்னிசையிலும், ஒழுக்கத்தின் சிறப்பிலும், பொருட்செறிவிலும் ஆழ்ந்த மாந்தர் பலர் இவரை வியந்து போற்றினர். மார்கரெட்டு நோபிள் என்ற நங்கை விவேகானந்தரின் அடிச்சுவட்டைப் பின்பற்றலானர். இவரே சகோதரி நிவேதிதை என்று பிறகு வழங்கப்பட்டார். இவர் விவேகானந்தரைப் பற்றித் தந்த குறிப்புகள் விவேகானந்தருடைய பெருமையை நன்கு விளக்குகின்றன. சுவாமி விவேகானந்தர் அகில சமயக் கோவில் ஒன்றமைத்து அதன் கோபுரத்து மீது 'ஓம்' என்னும் எழுத்தைப் பொறிக்கவேண்டுமென்று கருதினர்.

இவர் அமெரிக்காவிலே வேதாந்தப் பிரசாரம் எனும் பெரும் புயலை வீசியதோடு நின்றுவிடாது, ஆங்காங்கே வேதாந்த சங்கங்களை அமைத்துச் சமய சாதனைகளில் ஈடுபடும்படி அன்பர்களைத் தூண்டினர்; தம் சகோதர சீடர்களை இந்தியாவினின்றும் வரவழைத்து, ஞானப்பணியைத் தொடர்ந்து நிகழ்த்துமாறு ஏற்பாடு செய்தனர்; 1896 ஏப்பிரலில் அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு, ஐரோப்பாவிலுள்ள சிறந்த நாடுகள் வழியாகச் சென்று, இறுதியில் கொழும்பிற்கு 1897 ஜனவரி 15-ல் வந்தடைந்தார். கொழும்பிலிருந்து இமயமலையில் அல்மோரா வரை சுவாமிகள் தாய் நாட்டிலே வாகை வேந்தர் போலச் சஞ்சரிக்கும்போது, நன்றி கூர்ந்த இந்தியர் பேரன்பும் பணிவும் பொங்க ஆசாரியராக இவரை வரவேற்று, உபசாரப் பத்திரங்கள் வாசித்து வழங்க, இவரும் தக்க மறுமொழிகளை முழங்கலானர்; இந்திய மக்கட்குத் தம் பிரசங்க மாரியாற் புத்துயிரளித்தனர்; தாய்நாடு தன் பண்டைய பெருமையை எய்துதற்குரிய நெறிகளை எடுத்துக் காட்டி, சமூக வாழ்க்கையிற்கண்ட கேடுகளை நீக்கவும், எத்துறைக்கண்ணும் சிறப்புற்று விளங்கவும் வழிகளைக் கோலினர்; சீடர்கட்குப் பயிற்சியை அளித்தனர்; தம் குருநாதரது ஆணைக்கிணங்கப் பணிகள் அனைத்தையும் இயற்றி முடித்ததை உணர்ந்து, 1902 ஜூலை 4-ஆம் தேதியன்று தமது கந்தையான உடற்போர்வையைக் களைந்து மகா

சமாதியைத் தாம் முன்னரே குறிப்பிட்ட தினத்தன்று எய்தினர்.

கம்பர் அயோத்தியைச் சித்திரிக்கும் பொழுது, "கல்வி என்ற வித்திலிருந்து அளவிறந்த கிளைகள் எழுகின்றன ; தவமாகிய இலைகள் தளிர்க்கின்றன ; அன்பு அரும்புகிறது ; அறம் மலர்கின்றது ; போகம் என்ற கனி பழுக்கின்றது," என்று கூறுவது சுவாமிகளுக்கும் மிகப் பொருந்தும்.

"ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
ஆகம் முதற்றிண் பணைபோக்கி யருந்த வத்தின்
சாகம் தழைத்தன் பரும்பித் தருமம் மலர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே."

ஆனல் விவேகானந்தர் கண்ட அழியா இன்பம் நிர்விகற்ப சமாதியாகும் ; அந்தச் சமாதிப் பேரின்பத்தையும் துறந்து உலகப் பணி செய்யத் தொடங்கினர். உலகப் பணியும் ஆண்டவனுக்குப் புரியும் கைங்கரியமன்றோ? தொழிலும் தொழுதல்தானே?

"தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" என்று நாயனர் கூறின பொன்மொழியை மெய்ப்பித்த இச்சான்றோரின் தனிச் சிறப்புகளைச் சற்று ஆராய்வோம் :

"இந்திரியப் பலகணிகள் வாயிலாகப் புறத்தில் திரிகின்ற மனத்தை அடக்குகின்றவனே வீரன்" என்று கடவல்லி உபநிடதம் கூறுகின்றது. 'புலனைந்தும் வென்றான்தன் வீரமே வீரமாம்,' என்றார் ஔவையாரும். 'பலவீனமுள்ளவனால் மெய்ப்பொருள் காண்பதரிது' என்று மறைகள் முழங்குகின்றன.

'ஞானத்தாலும், பத்தியாலும், கருமத்தாலும் முத்தி எய்தலாம்' என்று முன்னோர்கள் கூறின மொழிகள் நம் மனத்தின் கண் ஒலிக்கக் கேட்போம். ஆனல், அணுச்சக்தி தாண்டவமாடும் இக்காலத்திற்குச் சக்தி வழிபாடே சாலச்சிறந்தது என்று விவேகானந்தர் விரிக்கின்றார்.

இவரை ஒரு முழு மனிதர் என்று கூறலாம். ஒருவனுக்கு உடல் வலிவு இருக்கும் ; ஆனல், அறிவு திகழாமலிருந்துவிடும். வெற்று அறிவு மிளிரும் ; ஆனல், அது ஞானமாய்க் கனிந்து பொலியாது போகலாம். ஞானம் சுடர் விட்டு ஒளிவிடும் ; ஆனல், அது அன்பாய் அலராமல் நின்றுவிடும். அன்பு இருக்கலாம் ; ஆனல், அன்பு அருள்வெள்ளமாய் ஓடாமல் காட்சி அளித்துவிடும். ஆனல், விவேகானந்தரோ, எல்லாம் அமைந்த ஒரு மெய்வீரர் என்று ஐயமின்றிச் சாற்றலாம். இவரிடத்தில் எல்லா வீரங்களும்

களிநடம் புரியக் காண்கிறேம். உடல் என்ற புணையைப் பேணுத விடத்தும் பிறவிக்கடலைக் கடப்பது இயலாத காரியமாய் முடிந்து விடும். விவேகானந்தரிடம் உடல் வீரம் செறிந்திருந்தது. அதை வற்புறுத்தியே பற்பல சொற்பொழிவுகளிற் கூறியுள்ளார். இவர் சென்னைக்கு விஜயம் செய்திருந்த பொழுது ஓர் ஐயர் இவரைப் பயில்வான் சுவாமி என்று அழைத்தது நம் மனத்தைவிட்டு அகலா தன்றே? மேலும், இவர் புயத்தின் தசை வலியால் கீதையின் நுண்பொருளை அறியக்கூடும் என்று நவின்றுர். 'கீதையைப் படித்து முத்தியை அடைவதைவிட, காற்பந்தடித்து விரைவில் பேரின்ப வீட்டை எய்திவிடலாம்' என்று இவர் இயம்பியது சிந்திப்பதற் குரியது. இரும்பனைய தசைகளும் எஃகனைய நரம்புகளும் வேண்டு மென்று இவர் கூறிய சொற்சுவட்டைப் பின்பற்றியே பாரதியாரும், 'உடலை இரும்புக்கிணையாக்கி' என்று உரைக்கின்றுர்போலும்!

உடல் வீரம் விலங்கினத்திடையே மிகுதியாகக் காணலாம். ஆனல், மனித இனத்தை விலங்கினத்தினின்று பிரிப்பது பகுத்தறி வொளியாகும். விவேகானந்தரிடம் இந்த அறிவு வீரம் மிகச் சிறந் தோங்கி நின்றது. இவர் மிக்க நுண்ணறிவு படைத்தவர். கண்ட மாத்திரத்தில் எதையும் ஆராய்ந்தறிந்துகொள்ளும் இயல்பு இவ ரிடம் மிளிர்ந்தது. இவர் பிரிட்டானிகாக் கலைக் களஞ்சியத்தில் பத்துத்தொகுதிகளை மிக விரைவிற் படித்து, அவற்றின்கண் அடங்கி யுள்ள விஷயங்களைப்பற்றிய எந்தக் கேள்விகளுக்கும் விடை அளிக்க ஆயத்தமாயிருந்தார். தாம் அண்டிய வியாகரணப் பண் டிதர் தெளிவாகக் கூற இயலாது போகவே, தாமே அஷ்டாத்தி யாயியை எட்டு நாளில் கசடறக் கற்ற சுவாமிகளின் அறிவின் நுட்பத்தை என்னென்று மொழிவது!

இவரிடத்தில் அன்பும் வீரமும் மலரக் காண்கின்றேம். இவர் ஏழை மக்களின் துயர் கண்டு ஆற்றுது கண்மாரி பெய்த நாட்கள் உண்டு. புகைவண்டி நிலையத்துத் தலைவராயிருந்த சீடர் ஒருவர் நோய்வாய்ப்பட்டு வருந்துங்காலை, மலையிலிருந்து அடிவாரத்திற்கு அவரைத் தம் தோளின்மீது தூக்கி, அவருடைய செருப்பையும் தலையில் தாங்கிய திருவுருவத்தை நாம் மறக்க இயலுமோ? அவரே பின்பு சதானந்தரானுர். இன்னும் சிக்காகோ நகரில் நிகழ்ந்த பல்சமய மாமன்றத்தில் வெற்றி அடைந்த பிறகு மிக்க செல்வம் படைத்த ஒருவரது வீட்டிற்கு இவர் விருந்தினராய்ப் போனுர். இர வில் இவருக்கு விரிக்கப்பட்டிருந்த மிகச்சிறந்த படுக்கையைப்

பார்த்தார். ஆனால், அந்தப் படுக்கையில் கண் வளர இவர் மனம் —அன்பால் உருகுகின்ற மனம்—ஏழை மக்களின் துயர் கண்டு நைந்து வாடுகின்ற மனம்—சற்றும் இடந்தரவில்லை. மழையாலும் வெயிலினாலும் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி உள்ளம் உடைந்து சாம்பி அழிகின்ற இந்திய மக்களின் கூரையுமில்லாத எளிய மட்குடிசைகளிடந்தான் இவர் மனம் திரைகடலைத் தாண்டிச் சென்றது. இவர் கண்கள் இமை பொருந்தாது, அருவி சோர விழித்தே வெறுந் தரையில் அமர்ந்து இரவைக் கழித்தார். அன்று இவர் புகலருந் துயர் வடிவமாய்த் திகழ்ந்தார் என்றே மொழிய வேண்டும்.

இவருடைய சிறந்த தவ வீரமும் நம் உள்ளத்தைக் கவரத்தான் செய்யும். அருந்தவத்தாலேதான் நாம் ஆண்டவனை அடைய முடியும். இவருடைய தவ வீரத்தின் பெருமைகளை விளக்கப் பல சான்றுகள் உள. இவருக்குற்ற ஒரு நோய் நீங்க ஒரு சமயம் நீர் பருகக்கூடாது என்று மருத்துவர் இவருக்குக் கூறியபொழுது, நாற்பது நாள் நீர் அருந்தும் நினைவும் இல்லாமலே இருந்தார். தண்ணீரால் வாயைக் கழுவும்போதும், வாய் அதை உட்செலுத்த மறுத்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. மேலும், தொடர்ந்து இருபத்தொரு நாட்களாக நாளொன்றிற்கு அரை மணி நேரந்தான் துயில் கொண்டார்; துயில் விட்டெழுந்ததும் யாதோர் அயர்வுமின்றித் தம் பணிகளை ஆற்றிவந்தார்; இளம் பிராயத்திலேயே தியானத்தில் ஆழ்ந்துவிடுவார். இவர் சிவபிரானின் உருவ வழிபாட்டில் ஆழ்ந்து ஓர் அறைக்குள் தாளிட்டுத் தியானித்திருந்தபொழுது, ஒருவர் கதவை உடைத்துக்கொண்டு போய் இவரது உடலைக் குலுக்கித்தியானத்தைக் கலைக்க நேர்ந்தது. மேலும், இவர் ஏகாதசி விரதம் பூண்டிருக்கும்பொழுது, இவரை அணுகிய அனைவரும் ஊணையே மறந்து நின்றுவிடுவர். சூழ்நிலை அனைத்தையும் இவருடைய திடமான சங்கற்பம் மாற்றி விடுகின்ற சத்தி வாய்ந்திருந்தது இவருடைய வாழ்க்கையே ஒரு பெருந்தவ நெறியாய்த் திகழ்ந்தது என்று கூறினால், அது மிகையாகாது.

இவருடைய ஞானவீரமோ, சொற்கடந்தது. இவர் அபேதானந்தருக்குத் தம் ஞான வீரத்தால் நிர்விகற்ப சமாதியை அளித்துவிட்டார். 'கிடி' என்று விவேகானந்தரால் வழங்கப்பட்ட சிங்காரவேலு முதலியார்—இவர் தொட்ட மாத்திரத்தில் ஞான ஒளி பெற்றார்; அவருடைய வாழ்க்கையே முற்றிலும் மாறி

விட்டது. மேடைமீது நின்று சுவாமிகள் சொற்பொழிவு ஆற்றும் பொழுது தம்முடைய விரலின் ஓர் அசைவாலேயே, மக்களை மாயக் கடலைக் கடக்கும்வண்ணம் செய்தற்குரிய ஏராள ஞான சத்தி வெள் ளம் தம்மிடையே பாய்வதை உணர்வார். அம்பிகை இவரது கண் முன் வடிவோடு இவர் பக்கத்திலேயே நின்று இவருடைய கைகளை ஆட்டிவைத்தலையும் நோக்கினார். இவர் காஷ்மீரிலுள்ள அமர நாத்தில் தம் விருப்பப்படி உயிர் துறக்கும் வரத்தைப்பெற்றார்.

இத்தகைய ஞானம் பெற்ற இவர் அருள் வீரத்தின் பேரொளி யால் மிகப்பொலிந்து தோன்றினார். ஆர்நால்டு என்பவர் தம் 'ரக்பி சேப்பல்' என்ற சிறந்த கவிதை வாயிலாக மூவகை மனிதர் களை மிகக் கவின்பெறச் சித்திரித்துக் காட்டியிருக்கிறார். உண்டு உடுத்துக் களித்து ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய் ஒழிந்த வாழ்க்கையுடைய விலங்கின மக்களுண்டு; தம்மை மட்டும் மரண வாயிலிருந்து தம் ஆன்ம ஒளியால் காப்பாற்றிக்கொண்ட பெரி யோர்கள் உண்டு; தம்மையும் காப்பாற்றிக்கொண்டு பிறரையும் பேரின்ப நாட்டிற்கு அழைத்துச் செல்லும் சான்றோர்களும் உண்டு. இறுதியாகக் கூறப்பட்ட மெய்ஞ்ஞான வீரர் குழாத்தைச் சார்ந்தவர் விவேகானந்தர் என்பது சொல்லாமலே விளங்கும். இவர் நினைத்திருந்தால் நிர்விகற்ப சமாதியில் ஆழ்ந்து அப்படியே பேரின்ப வீட்டை அடைந்திருக்கக்கூடும். ஆனால், குருவின் ஆணை மேற்கொண்டு தம் முத்தியை நாடாது பிறர் நலத்திற்கே இடை யறாத பணியைச் செய்யலானார். இது தியாகத்தில் எழுந்த மற்றொரு தியாகமாகும்.

விவேகானந்தருடைய வாழ்வும் கருத்துகளும் வீரச் சுவை செறிந்தவையாகும். கரும வீரமாவது தன்னலம் கருதாது பிறர் நன்மையின்பொருட்டே கருமத்தில் இறங்குதலாம் என்பர். பயன் நோக்காது செய்யும் பணி தெய்வ வழிபாடென்பர். இவ ருடைய பத்தி மதுரபாவனையன்று; அனுமார் காட்டிய பத்தி வீரமே யாகும். ஞானத்தில் வீரம் காட்டுவது தன் முத்தியை நாடாது பிறருடைய பிறவித் தளைகளை அறுப்பதே என்றுமொழிவார்.

அறுவகை வீரமும் முற்கூறியவாறு திகழப்பெற்ற இந்தச் சான்றோரின் குருநாதருக்கும், இவருக்குமுள்ள நெருங்கிய தொடர்பை இனிச் சற்று நோக்குவோம். இவ்விருவரையும் பிரிக்க இயலாது. விவேகானந்தரை அறியவேண்டுமாயின், இராம கிருஷ்ண குருநாதரின் பெருமையைத் தெரிந்துகொள்ளவேண்டும்;

இராமகிருஷ்ண குருநாதரை உணர வேண்டுமாயின், விவேகானந்தரை நாம் ஆராய்தல் நலமாம். அகத்தில் ஞானம் உறையப் பெற்றுப் புறத்தில் பத்தியை வெளியிடுகின்றவராவர் ஸ்ரீ ராமகிருஷ்ணர்; புறத்தில் ஞானத்தைக் காட்டி, அகத்தில் பத்திக்கடலில் திளைக்கின்றவர் விவேகானந்தர் என்று விளம்பலாம். "ஸ்ரீ ராமகிருஷ்ண—விவேகானந்தர்" என்ற ஒரு கட்டுரையில் இப்பொருள் மிகச் சிறப்புடன் பின் வருமாறு ஆராயப்பட்டிருக்கிறது.

"ஸ்ரீ ராமகிருஷ்ணர் மெய்யுணர்வுக் கடலில் தாம் ஆழ்ந்து கிடந்து பிறருக்கு உபதேசித்த பெருங்குரவர்; ஸ்ரீ சுவாமி விவேகானந்தர் அக்கடலில் மூழ்கியெழுந்து மெய்ஞ்ஞானப் பிரசங்க மாரியினைப் பொழிந்த ஆசாரியார். முன்னவர் ஆழ்வாரனையர்; பின்னவர் ஆசாரியாரனையர். முன்னவர் அந்தமில் பேரின்பம் துய்த்த அருளாழியான பெரியார்; பின்னவர் அப்பேரின்பத்தின் பெருமிதத்தினை வெளியிட்டுரைத்த அறிவாழியான பெரியார். ஆயினும், இருவர் வாயிலாகவும் மிளிர்வது மெய்ஞ்ஞானப் பேரொளியே. ஒருவரது வாழ்க்கையின்றி மற்றவரது வாழ்க்கை நிறைவெய்தாது என்றே இருகூருகத் தோன்றியது போலாகும். ஒருவர் மின்னலைப்போல் ஞான ஒளியை உலகமெங்கும் வீசியவர்; மற்றொருவர் அதையொட்டி வரும் இடிமுழக்கம்போல ஞானத் தெளிவால் எழுந்த மெய் வீர மொழிகளை உலகெங்கும் அதிர முழங்கியவர்; இரண்டும் மெய்யுணர்வால் விளையும் ஒரு பேராற்றலின் வெளித்தோற்றமே. ஒருவர் உயிரும் மற்றொருவர் உடலும் ஆனார்."

ஒரு நாணயத்தின் இரு பகுதியை ஒத்தவர் இருவரும். ஒருவர் மூலவராக, மற்றவர் உற்சவர் எனக் கொள்ளலாம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இராமர் கிருஷ்ணர் எனும் இருவருடைய அவதாரமென்று கூறுமிடத்து, ஒரு முறையில் விவேகானந்தரை அனுமார் என்றும், மற்றொரு முறையில் அருச்சுனன் என்றும் மொழியலாமன்றோ? நர-நாரணர் என்ற முறையிலும் இவ்விருவரும் காட்சி அளிக்கின்றனர். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் கையின்கண் திகழ்ந்த கருவிதான் விவேகானந்தர் என்று நாம் சாற்றலாம். மேலும் சகோதரி நிவேதிதை அம்மையார் கூறுவதும் இங்கு நோக்குவதற்குரியது: "இப்பெரியார்களுடைய வாழ்க்கைகளையெல்லாம் உய்த்து நோக்குங்கால் எனக்குத் தோன்றுவது ஒன்று உண்டு; அதாவது உலகினிற்றோன்றியது ஸ்ரீ ராமகிருஷ்ண-

விவேகானந்தர் என்னும் ஓர் உயிரே." பெரும்பாலும் ஞானகுரவர் தம் சீடர்களின் மாயையைப் போக்க முயலுவர். ஆனால், இக் குருநாதரோ, தம் சீடர் ஞானச் செறிவால் நிர்விகற்ப சமாதியில் ஆழ்ந்து உலகப் பணியை மறந்துவிடுவாரோ என்றஞ்சி, மாயை யின் மெல்லிய ஏடு தம் சீடர்பால் சற்றே பரவும்படி தாம் வழி பட்ட பராசத்தி அன்னையை இறைஞ்சினர்—அதிசயம் இருந்த வாறு என்னே! போர் புரிய மறுத்த அருச்சுனனைக் கண்ணன் உபதேசத்தால் திருத்திப் பணிகொண்டது போல, ஞானப் போர் புரிய மறுத்த விவேகானந்தரையும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசத் தால், திருத்திப் பணியை ஏற்கின்றார்.

யார் அறிவார் விவேகானந்தரின் பெருமை! இவரை முழுதும் அறிந்தவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரான குருநாதரேயாவர். பெரும் பாலும் உணர்ந்தவர் அவர்தம் நேர்ச்சீடர்களாவார்; ஆனால், அவர்களும் இடையிடையே போராடியபின் இசைத்தனர். "விவேகானந்தரை இன்னொரு விவேகானந்தரைத் தவிர வேறுயார் அறிய முடியும்?" என்று மெய்ம்மறந்த ஒரு நிலையில் இவரே கூறிய தாகவும் தெரிகின்றது. கடல் கண்டேம் என்பார் யாவரே முடி வுறக் கண்டார்? இவருடைய அமுத குணக்கடலிலிருந்து அவரவர் தத்தம் அறிவு எனும் அகப்பைக் கேற்றவாறு அமுதத்தை அள்ளி எடுத்துக் கொண்டனர் என்பதே முடிவான உண்மையாம். 'அவரவர் தம தம தறிவகை அவரவர் இணையவர் என மிக அறை குவர்' என்பதே உண்மை. விவேகானந்தரை ஓர் அறிஞர் பின் வருமாறு சித்திரிக்கிறார்: "ஞானத்திற் சங்கரரனையவர்; பேரன்பு வெள்ளத்தில் புத்தர் போல்பவர்; பத்தியில் நாரதரேயாவர்; பிரம்ம ஞானத்தில் சுகதேவருக்கு நேராவர்; வழக்காடுவதில் பிரகஸ்பதியை ஒப்பர்; வடிவழகில் மன்மதனுக்கு இணையாவர்; வீரத்தில் அருச்சுனற்கு நிகராவர்; சாத்திர அறிவில் வியாச ருக்கு நேராவர்." இவர்தாம் நிறை மனிதராவர். நிறை மனிதர் என்ற சொல்லிற்கு அகத்தில் கரத்து நின்ற பரமான்ம ஒளி முழு தும் நிறைந்த மனிதர் என்பதுதான் பொருளாகும். தாம் நிறை மனிதர் ஆனதுமன்றி, இவர் ஊரும் நாடும் உலகமும் தம்மைப் போலாகுமாறு செய்ய முயன்றார். "தெய்வங்களாகுங்கள்! பிறரைத் தெய்வங்கள் ஆக்குங்கள்!" என்பதுதான் இவர் உலகோர்க்குத் தந்த அறிவுறைச் செய்தியாகும். இவர் உலகிற்கு அளித்த மெய்ம் மைப் பெருவார்த்தைகள் (மகா வாக்கியங்கள்) நான்கேயாகும்.

(1) ஒவ்வொரு ஜீவான்மாவும் உண்ணிறைந்த தெய்வத் தன்மை உடையது.

(2) அகத்தேயும் புறத்தேயும் சார்ந்து நிற்கும் பிரகிருதியை அடக்கி உண்ணிறைந்த தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவதே சமயங்களின் நோக்கமாகும்.

(3) கருமம், பூசனை, பிராணனை இலயப்படுத்துதல், ஞான நூலாராய்ச்சி என்னும் இவற்றினுள் ஒன்றினுலோ, பலவற்றினுலோ, யாவற்றினுலுமோ இதனைச் செய்து நிறைவேற்றி முத்தனுகுக.

(4) இதுவே சமயத்தின் முழு உண்மை; கொள்கைகளும், கருமங்களும், நூல்களும், பிறவும் இதற்கு உதவி புரியும் சாதனங்களாய் அமைந்து நிற்பன.

"அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு"

என்றபடியே நரராகிய விவேகானந்தர் நாராயணராகிய ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு, உலக மக்களைப் பிறவிக்கடலினின்றும் கரையேற்றுமாறு, உலவா ஞான தீபத்தை ஏற்றினுர். இந்த ஞான தீபத்திற்கு நாம் அஞ்சலி செய்து உய்வோமாக!

அணிந்துரை

இப்பதிப்பில் அடங்கியுள்ள சுவாமி விவேகானந்தருடைய நூல்களின் நான்கு தொகுதி*களில், அவர் இவ்வையகத்திற்கு அளிக்கக்கூடிய ஞான நன்மொழி மட்டுமன்றி, அவர்தம் நாட்டு மக்களுக்குரிய இந்து சமய சாஸனமும் (ஆணை மொழியும்) கோயில் கொண்டிருப்பதை நாம் உணர்கின்றோம். நவீன சகாத்தத்தில் எல்லாம் குலைந்து அழிந்தோடுகிற வெள்ளத்தின் நடுவே, இந்து சமயத்திற்குத் தேவையானது, அதைச் சிதரு வண்ணம் காப்பாற்றும் நங்கூரம் நாட்டுதற்குரிய அசையாப் பாறையே யாகும். தன்னைப் புலப்படுத்தக்கூடிய ஓர் ஆணை மொழியும் அதற்கு வேண்டுமன்றோ! சுவாமி விவேகானந்தரின் உரைகளிலும், எழுத்துகளிலும் இந்து சமயத்திற்கு இவை யாவும் நல்கப்பட்டிருக்கின்றன.

பெருஞ்சிறப்பு வாய்ந்த அறிவு படைத்த ஒரு பெருமேதைக்கு இந்து சமயம் பொது உரையாய்க் கூறப்படும் ஒரு பொருளாய் வரலாற்றில் முதன்முதல் அமைந்தது இப்பொழுதுதான் என்று இயம்பலாம். இது பற்றி முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. முன்னோர்களின் சமயம் யாது என்பதைத் தன் சேய்களுக்குக் கற்பிக்க விழையும் ஒரு தாயும், அதை மெய்ப்பிக்கப்புகும் ஓர் இந்துவும் உறுதிமொழி பெறுதற்பொருட்டும் அறவொளி அடைதற்பொருட்டும் இந்நூல்களின் இதழ்களைப் புரட்டிப் பார்ப்பார்கள்.

ஆங்கில மொழி இந்தியாவை விட்டு அகன்று மறைந்த நீண்ட காலத்திற்குப்பின்பும்,உலகத்திற்கு அம்மொழியால் அளிக்கப்பட்ட அறிவுச் செல்வம் அழியாது நின்று, கீழை நாட்டிலுஞ் சரி, மேலை நாட்டிலுஞ் சரி, அதன் பயன் விளையாமற் போகாது. இந்து சமயத்திற்குத் தேவை இதுதான்: அது தன் கருத்தைத் தக்கவாறு அமைத்துக்கொண்டு அதற்கு வலிவை ஊட்ட வேண்டும். உண்மையைக் கண்டு அஞ்சாத ஒரு சமயத்தைத்தான் இந்த ஞாலம் வேண்டி நின்றது. இவ்விரண்டும் இங்கே அலர்ந்திருக்கின்றன. உலகம் தடுமாறும் நிலையில் சான்றோர் ஒருவர் தோன்றிச்-

---

* *பின்னர் எட்டுத் தொகுதிகளாயின (ஆங்கிலத்தில்) — பதிப்பாளர்.*

சமுதாயத்தின் சிதறிப் போன உணர்வைத் திரட்டி அதை முழுக்கஞ் செய்யும் நிலையை நோக்குங்கால், பண்டைக் காலத்தில் எப்படி இந்நாடு சிறப்புற்றிருந்ததோ, அப்படியே இப்பொழுதும் நிமிர்ந்து நிற்கும் என்பதும், எஞ்ஞான்றும் மடியாத ஆற்றல் படைத்த சநாதன தருமத்தை மெய்ப்பிக்க வேறு சான்று வேண்டுவதில்லை என்பதும் புலனுகும்.

தன் எல்லைப்புறங்களுக்கப்பால் உறையும் மனித இனத்திற்கு உயிரளிக்கும் ஞான உணவைக் கொண்டு சென்ருல்தான் இந்தியா தன் தேவை நிறைவேறினதாகக் கருதும் என்பது முன்னரே எதிர் பார்த்த பொருளாயிருந்திருக்கலாம். இந்தச் சந்தர்ப்பத்தில் நடந்தது முதன்முதலாக எழுந்த ஒரு நிகழ்ச்சி அன்று. தன்னுடைய தங்கை நாடுகளுக்கு, நாட்டை உருவாக்கும் சமய நற்செய்தியை முன்பு அனுப்பியது வாயிலாகத் தன்கருத்தின் சிறப்பை முற்றிலும் அது கற்று உணர்ந்துவிட்டது ; தானும் ஒற்றுமை எய்திற்று. அந்த ஒற்றுமைதான் நவீன இந்து சமயத்தைப் பிறப்பித்தது. "உலகத்துள் எங்ஙனும் சென்று ஒவ்வொருவர்க்கும் இந்த அறிவுரையை வழங்குவீர் !" என்று ஞான குரு தம் சீடர்களுக்கு இட்ட கட்டளையை முதன்முதலாகப் புனிதமான இந்தியாவிலேதான் கேட்டோம் என்பதை மறந்துவிடுவதற்குச் சற்றும் இடம் தாரோம். இதே கருத்தைத்தான்—புதிய வடிவெடுத்த இதே அன்பின் தூண்டுதலேத்தான்—சுவாமி விவேகானந்தர் திருவாய் மலர்ந்தருளினர். மேலை நாட்டில் மக்கள் திரண்டிருந்த ஒரு பேரவையில் அவர் பேசினது இங்குக் குறிப்பிடத் தகுந்தது :

"ஒரு சமயமானது உண்மையானதாயிருக்குமாயின், மற்றைய சமயங்களும் உண்மை வாய்ந்தவைகளே. இக்காரணத்தால் இந்து சமயம் எனக்கெவ்வளவு உரியதோ, அவ்வளவு உங்களுக்கும் உரியதாகும்." இதே கருத்தின் விரிவான விளக்கத்தைப் பின்வரும் வரிகளில் காண்கின்ருேம்:

"இந்துக்களாய்த் திகழ்கின்ற நாங்கள் பிற சமயங்களைப் பொறுப்பதோடு நின்றுவிடாமல், ஒவ்வொரு சமயத்தோடும் பிணைந்துகொள்கின்ருேம். மகமதியர்களின் மசூதிகளில் நாங்கள் இறைஞ்சுகின்ருேம் ; சொராஸ்தியர்களின் தீக்கடவுளை வழுத்துகின்ருேம் ; கிறித்தவர்களின் சிலுவைக்கு முன்பு மண்டியிட்டுத் தொழுகின்ருேம். கீழ்ப்படியான உருவ வழிபாட்டிற்கும் மிக உயர்ந்த அத்துவித நிலைக்கும் இடையே உள்ள எல்லாச் சமயங்

களும் மனித ஆன்மா அகண்டத்தை உணர்ந்து அறியக்கூடிய பல முயற்சிகளேயாகும் என்பதை நாங்கள் நன்கறிவோம். அக்காரணம் பற்றியே சமயங்களாம் மலர்களைத் திரட்டி அவற்றை அன்பு நூல் கொண்டு தொடுத்து வியப்புறும் ஆராதனைக்குரிய செண்டாக்குகின்றோம்.”

இப்படி மொழிகின்றவருடைய இதயத்திற்கு எதுவும் அன்னியமுமன்று, அயலுமன்று. அவருக்குக் காட்சி அளிப்பவை மனித இனமும் மெய்ப்பொருளுமே.

பல்சமயப் பெருமன்றத்தின்முன் சுவாமிகள் ஆற்றிய சொற்பொழிவைப் பற்றிப் பின்வரும் வண்ணம் நாம் நவிலலாம்: அவர் பேசத் தொடங்கியபொழுது இந்துக்களின் சமயக் கருத்துக்களைப் பற்றிக் கூறினதாகத் தோன்றிற்று; ஆனால், தம் பேச்சை முடித்தபொழுது, இந்து சமயம் படைக்கப்பட்டது போலக் காட்சி அளித்தது. அவ்வமயம் இத்தகைய சத்தியை வெளியிடக்கூடிய பழுத்த காலமாய்த் திகழ்ந்தது. அவரை நோக்கிய அந்த விரிந்த அவையில் காணப்பட்டது கலப்பற்ற மேலை நாட்டு மனப் பண்பாடேயாகும். இதன் தனிப்பட்ட சிறப்பு வாய்ந்த அமிசத்தின் வளர்ச்சியும் அதன்கண் மிளிர்ந்தது. ஐரோப்பாக் கண்டத்து ஒவ்வொரு நாடும் தன்னால் இயன்றதை அமெரிக்க நாட்டின்மீது சொரிந்தது. பல்சமய மன்றம் நடந்த சிக்காகோவின்மீது சிறப்பாக இச்செல்வம் பொழியப்பட்டது என்று கூறலாம். மிச்சிகன் ஏரிகரை மீது தன் பாதம் படிய, வடநாட்டு அறிவொளி (ஆங்கில-ஐரோப்பாவின் பண்பாடு) முகத்தில் படர, சிந்தையில் ஆழ்ந்து இந்த மேற்றிசை நக்ர அரசி வீற்றிருந்தாள். அவளுடைய எல்லைக்குள் நவீன முயற்சி, போராட்டம், ஆகியவற்றின் நன்மை தீமை இரண்டையும் எப்பொழுதும் காணலாம். நவீன உணர்வு, ஐரோப்பாவின் பண்டைக் காலத்தின் பரம்பரைச் செல்வம் ஆகிய இவற்றின் ஆதிக்கத்தின்விளைவு சிறிதும் இல்லாதஇடமே இந்தச் சிக்காகோவின் எல்லையில் இல்லை. ததும்பி ஓடுகின்ற வாழ்வின் வெள்ளமும், இந்த நகரத்தில் காட்சி அளிக்கின்ற ஈடுபாடுகளில் ஆர்வமிக்க பரபரப்பும், பெரும்பாலும் நம்முள் சிலர்க்கு ஒரு குழப்பமாகத் தோன்றலாம். ஆனால், மெல்ல மெல்ல உருவாகின்றதும், மிக உயர்ந்ததுமான மனித இன ஒருமையின் இலட்சியத்தைப் புலப்படுத்துவதற்கே இவை இருக்கின்றன என்பதை ஐயமறச் சாற்றலாம். மேலும், இவை முற்றிலும் பழுக்கின்ற நாட்களும் அணுகும்.

மாந்தரின் கிளரொளி இளமை எங்கும் தோன்றிற்று. குழப்பம் மிகுதியாய்க் காட்சி அளித்தது. மக்களின் சத்தி வெள்ளமும் துணிச்சலும் பெருகி ஒடின. ஆனல், பொருள்களை ஆயும் அவாவும் அறிவின் விழிப்பும் அவர்களிடையே மிளிர்ந்தன. இத்தகைய உளச் சூழ்நிலையும், இத்தகைய மனக் கடலுந்தான் சுவாமி விவேகானந்தரை எதிர்நோக்கி நிற்பதைக் கண்ணுறுகின்றோம். இதற்கு மாருக, நீண்ட ஊழிக்காலமாய் எய்தப்பட்ட ஆன்மிக வளர்ச்சியால் அமைதியுற்ற ஒரு மாக்கடல் அவருக்குப் பின் அணியில் விரிந்திருந்தது. அருமறைகளின் காலத்தோடெழுந்த ஒரு வியன் உலகமும் அவருக்குப் பின்புறம் நீண்டு பொலிவுற்றுத் திகழ்ந்தது. உபநிடதங்களில் இவ்வுலகம் தன்னை நினைவுறுத்திக் கொண்டது. இந்தச் சமய உலகத்தோடு ஒப்பிடும்பொழுது புத்த சமயம் நேற்று வந்தது போலத் தோன்றும். இவ்வுலகம் முழுதும், நம்பிக்கைகளும் கொள்கைகளும் கொண்ட சமய அமைப்புகளால் நிரம்பியிருந்தது. இது அமைதி வாய்த்த பரப்பேயாகும். வெப்ப நாடுகளில் சுடர்விட்டெழும் செங்கதிரோனின் ஒளி வெள்ளத்தில் தோய்ந்த ஞாலம் இது. இவ்வுலகப் பாதைகளின் புழுதிமீது பல்லூழிகளாய் ஞானிகளின் புனிதப் பொன்னடிகள் பதிந்திருப்பதை நாம் அறிவோம். சுருங்கக் கூறுமிடத்து, ஆயிரக் கணக்கான வருட நாட்டு வளர்ச்சியோடு கூடிய இந்தியாவே, அவர் பின் பக்கலில் இலங்கி நின்றது எனலாம். இந்தியாவோ, பல பொருள்களின் ஆழங்களை அளந்துவிட்டது; பல பொருள்களை மெய்ப்பித்தது. தன்னுடைய பூரணமான ஒற்றுமையைத் தவிர மற்றைய எல்லாவற்றையும் அது உணர்ந்துவிட்டது என்றே உரைக்கலாம். அந்த ஒற்றுமை யாதெனில், விரிந்த கால தேசப் பரப்புடைய நாட்டில் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலையிலுள்ள எல்லா மக்களும் பொதுவாகக் கொண்டவையும், அடிப்படையானவையும், இன்றியமையாதவையுமான உண்மைகளிடையே அமைந்த ஓர் ஒற்றுமையேயாகும்.

குணதிசையும், நவீனக் குடதிசையுமான இரண்டு மனப் பெரு வெள்ளங்களும் கருத்தாறுகளும் கலந்தன; பல்சமயப் பெருமன்றத்தின் மேடைமீது வீற்றிருக்கும் காவி உடை தரித்த துறவியாரே இவ்விரு வெள்ளங்களும் ஆறுகளும் கூடுகின்ற இடமாய்த் திகழ்ந்தார்.

நிர்க்குண தத்துவமாய் விளங்குகின்ற அச்சான்றோரிடத்தில்

கலந்து எழுந்த அதிர்ச்சியின் தவிர்க்க முடியாத விளைவுதான் இந்து சமயத்தின் பொதுத்தளத்தின் அடிப்படையாகும். அங்குச் சுவாமி விவேகானந்தர் வாயிலாகப் பெருகியது அவரது சொந்த அனுபூதியன்று. அவருடைய குருநாதரின் வரலாற்றைப் பற்றிக் கூறுவதற்குரிய சந்தர்ப்பம் வாய்க்கப்பெற்றும் அதை அவர் பயன் படுத்திக்கொள்ளவில்லை. இவற்றிற்கு மாறாக இந்தியாவின் சமய உணர்வு வெள்ளந்தான் அவர் மூலம் வழிந்தது. அதன் முழுப் பண்டைய வாழ்வால் வகுக்கப்பட்ட இந்து மக்கட்சமுதாயத்தின் அறிவுரையின் குரலே அவரிடமிருந்து கேட்டது. மாபெரும் பசிபிக் கடலுக்கு வேறு புறத்தில் இருளடைந்த ஞாலத்தின் பாதிப் பகுதியின் நிழல்களிடையே துயின்றுகொண்டிருக்கும் நாடு—அதன் வாலிப நடுப்பகலில் கிளர்ந்து நிற்கும் நாடு—அவர் பேசும் பொழுது, அதனை நோக்கி விரைகின்ற வைகறையாமமாம் சிறகுகளின்மீது ஊர்ந்துவரும் சொற்களைப் பருகும்பொருட்டுத் தன் ஆன்ம வட்டத்தில் அமர்ந்து காத்துக்கொண்டிருந்தது. இம் மொழிகள் அந்நாட்டினரின் பெருமையையும் ஆற்றலையும் புலப் படுத்தற்குரியவைகளே.

அதே மேடைமீது விவேகானந்தருக்கு அருகில் வேறு சிலரும் வீற்றிருந்தனர். அவர்கள் தங்கள் தனிப்பட்ட கொள்கை களையும், மதத் தாபனங்களையும் பரப்பும் ஞானப் பணியாளர்கள் என்ற முறையில் நின்று சொற்பொழிவுகள் ஆற்றினார்கள். விவேகானந்தர் ஒரு மதத்தைப் பற்றிப் பேச வந்தார். அந்த மதத் தின்படி, தாம் மொழிந்த சொற்களுக்கேற்ப, அவர் கூறின ஒவ் வொரு மதமும், பல நிலைகள் வாயிலாகவும், பல சந்தர்ப்பங்கள் வாயிலாகவும் பல்வேறு ஆடவர்களும் பெண்டிர்களும் ஒரே இலட் சியத்தை நோக்கிச் செல்கின்ற பிரயாணமாகும்.இப்படி மொழிந்த தன் பெருமை சுவாமி விவேகானந்தரையே சார்ந்ததாகும். 'இந்தக் காரணத்தால் இது உண்மை; அந்தக் காரணத்தால் அது உண்மை; இந்த அமிசத்தால் இது உண்மை; அந்த அமிசத்தால் அது உண்மை,' என்று சொல்லாமல், 'என்னிடத்தில் இவை யாவும் பல முத்துகள் ஒரே நூலில் கோத்துத் திகழ்வன போலக் காட்சி அளிக்கின்றன,' என்று மொழிந்த சான்றோரைப் பற்றிக் கூறுவதற்காகவே தாம் அவர்கள் முன் நிற்பதாக மொழிந்தார். "எங்கெங்கே அளவு கடந்த தெய்வத்தன்மையும், மனித இனத்தை உயர்த்திப் புனிதமாக்கும் ஆற்றலும் காணப்படு

கின்றனவோ, அங்கங்கே நான் இருப்பதாக அறிவாய்'' என்று கண்ணபிரானுர் கூறினுரன்றே? ''மனிதன் பிழையிலிருந்து உண்மையை நோக்கிப் பிரயாணம் செய்யவில்லை; ஓர் உண்மைக் குன்றிலிருந்து மற்றோருண்மைக் குன்றின்மீது ஏறுகின்றுன்; தாழ்ந்த சிகரத்திலிருந்து உயர்ந்த சிகரத்திற்கு விரைகின்றுன். இப்படித்தான் சமயங்கள் ஓர் இந்துவின் முன் விரிகின்றன,'' என்று விவேகானந்தர் கூறுகின்றுர். இந்தத் தத்துவமும் முத்தியைப் பற்றிய போதனையுமாகிய இவ்விரண்டும் மிக மிக உயர்ந்த உண்மைகளாகும். அவர் முத்தியைப் பற்றி அளித்த கொள்கை இது. மக்கள் தெய்வத்தன்மையை உணர்ந்து தெய்வமாகவே திகழ வேண்டும். அழிவற்ற ஒன்றே பரமான்மாவாகும்; மற்றைய எல்லா ஆன்மாக்களும் மாயையின் தோற்றங்களே. எங்கும் மாறுகின்ற உலகத்தில் மாருத அடிப்படையான எந்த ஒருவன் காட்சி அளிக்கின்றுனே, மரணம் நடனமாடுகின்ற எந்தப் பிரபஞ்சத்தில் எந்த ஒருவன் உயிர்க்களையோடு திகழ்கின்றுனே அத்தகையோனை நண்ணச் செய்கிற சமயமே நம்மிடையே பூரணத்தை அடைந்த சமயமாகும். இவை வரலாற்றில் காணப்படும் நீண்ட சிக்கலான அனுபவங்களால் மெய்ப்பிக்கப்பட்டன; இவைதாம் நவீன உலக மான மேலை நாட்டிற்கு விவேகானந்தர் முழக்கிய முரசொலிகள்.

முன்னரே குறிப்பிட்டபடி இந்தச் சிறிய சொற்பொழிவு இந்தியாவுக்கு விடுத்த ஒரு சுருக்கமான விடுதலைச் சாஸனமாகும். இந்து சமயம் முழுதும் வேதங்களின்மீது நிறுவப்பட்டிருக்கிறது. அவர் மொழிகின்ற பொழுதே வேதத்தைப் பற்றித் தாம் கொண்ட கருத்திற்கு ஓர் ஆன்மிக விளக்கந் தருகின்றுர். எவையெல்லாம் உண்மையோ, அவையெல்லாம் வேதங்களாய் அவருக்குக் காட்சி அளிக்கின்றன. வேதங்கள் என்ற சொல் நூல்களைக் குறிக்கவில்லை என்று அவர் கூறுகின்றுர். ''வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு சான்றோர்களால் கண்டறியப்பட்ட ஆன்மிக உண்மைகள் திரண்டு ஒரு கருவூலமாய்த் திகழ்கின்ற ஒன்றையே அச்சொல் சுட்டும்,'' என்கிறுர்; பேச்சுப் போக்கில் சநாதன தருமத்தைப் பற்றிய தம் கருத்தையும் வெளியிடுகின்றுர்: ''விஞ்ஞானம் கண்ட மிக நவீன மான உண்மைகளையும் வெற்று எதிரொலியாகக் கருதும்படி செய்கின்ற வேதத்தின் உயர்ந்த நிலையிலிருந்து பல விதமான புராணங்களையுடைய மிகத் தாழ்ந்த படியிலுள்ள உருவ வழிபாடு கள் சம்பந்தமான கருத்துகள் வரையிலுள்ள எல்லாச் சமயங்

களும் இந்து சமயத்தில் இடம் பெறுகின்றன. பௌத்தர்களின் அஞ்ஞேய வாதமும், சமணர்களின் நாத்திக வாதமும் அங்கே காட்சி அளிக்கின்றன. தனித்த மனிதனுக்கு உண்மைப் பாதை யிலிருந்து விலகினதாகத் தோன்றினாலும், இந்து சமயத் தழுவலி லிருந்து எந்த மத இனமும், எந்தச் சமய ஆராய்ச்சிக் கழகமும், இந்து மக்களின் எந்த உண்மையான சமய அனுபூதி செல்வமும். ஒரு நியாயத்தோடு விலக்கிவிட முடியா என்பதே அவருடைய திரு வுள்ளமாகும். எல்லா மதங்களுக்கும் தாயகமாய்த் திகழ்கின்ற இந்த இந்து சமயத்தின் தனிச் சிறப்பு வாய்ந்த இஷ்டதேவதைக் கொள்கை இதுதான் : ஒவ்வொருவருக்கும் தத்தமக்குரிய பாதையை வகுத்துக்கொள்ள உரிமை உண்டு. தம் விருப்பத்தின் படி தம் நெறிகொண்டு கடவுளை நாடலாம். இப்படி வகுக்கப்பட்ட இந்து மதத்தின் பரந்த ஆன்ம வெற்றிக்கொடியைத் தாங்கிச் செல்லுகின்ற படையைப் போல்வதை எந்த விரிவான சாம்ராச்சி யத்திலும் காண இயலாது. இந்து சமயத்தின் ஆன்மிக இலட்சியம் ஆண்டவனைக் கண்டு பிடிப்பதே. அதைப் போலவே அதன் ஆன் மிகச் சட்ட திட்டம் யாதெனில், ஒவ்வோர் ஆன்மாவும் தன்னியல் பிலேயே திளைக்கின்ற சுதந்தரமே.

ஆனால், மிக இன்பமான வாக்குறுதியைச் சுமந்துவரும் இந்து சமயத்தின் ஓர் அழைப்பு எழாமற்போனால், எல்லாவற்றையும்திரட் டிச் சேர்க்கின்ற இந்த முறை, ஒவ்வொருவருக்கும் உரியசுதந்தரம், இவை யாவுமே அவற்றின் சிறப்பாகத் திகழா. "அழியா ஆனந் தத்தின் சேய்களே, செவி சாய்ப்பீர்களாக! உயர்ந்த மண்டலங் களில் உறைகின்ற உத்தமர்களே, கேண்மின் : எல்லா இருளுக்கும் எல்லா மாயைகளுக்கும் அப்பால் திகழ்கின்ற அப்புராணனை (முன்னைப் பழம்பொருளை) நான் கண்டுவிட்டேன். அவனை அறி வதால் நீங்களும் சாவின் வாயிலிருந்து விடுபடுவீர்கள்." இந்தச் சிறந்த மொழியின்பொருட்டே எல்லாம் இருந்து வருகின்றன. இதுதான் மௌலியாய் மிளிரும் ஒரு வெளிப்பாடாகும். இந்த வெளிப்பாட்டில் மற்றைய யாவும் விளக்கம் பெறும்.

'**நம் முன் நிற்கும் பணி**' என்ற தம் சொற்பொழிவில் ஒரு கோயில் நிறுவுகின்ற கைங்கரியத்திற்கு எல்லோரும் உதவிபுரிய வேண்டுமென்று மிக்க ஆர்வத்துடன் அவர் கேட்டுக்கொண்டார். அந்தக் கோயிலில் தொழுவோர் எவரும் ஆண்டவனை இறைஞ்ச லாம் : அந்தக் கோயிலின் கருவறையில் (மூலவர் உறைவிடம்)

‘ஓம்’ என்னும் மந்திரந்தான் ஒளிர வேண்டும் என்று உரைக்
கின்றார். இப்படி உரைக்கும் மொழியில் எங்களிடையுள்ளோருள்
சிலர் இதைவிடப் பெரிய கோயிலாம் தாய் நாடான இந்தியாவின்
காட்சி எழக் கண்டனர். இந்து சமயக் கோயில்களுக்கு அழைத்
துச் செல்லும் பாதைகள் மட்டுமன்றி, மனித இனம் பின்பற்றும்
பாதைகள் அனைத்துமே அச்சின்னம் திகழ்கின்ற புனிதமான
அடியை நோக்கியே விரைகின்றதையும் அவர்கள் நோக்குகின்றார்
கள். இது சின்னமன்று; சொற்கடந்த ஒரு பெயரே ஆகும். இதை
விட்டு விலகாமல், இதை நோக்கியே, எல்லா வழிபாடுகளும் எல்லா
சமய அமைப்புகளும் ஆகிய பாதைகள் செல்கின்றன. முன்
னேற்றம் என்பதெல்லாம் பார்க்கப்பட்ட ஒன்றிலிருந்து கண்ணு
றாத ஒன்றிற்குப் போவதென்றும், பலவற்றிலிருந்து ஒன்றிற்கு
விரைவதென்றும், தாழ்ந்த நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு ஏகுவ
தென்றும், குணத்திலிருந்து நிர்க்குணத்திற்குச் செல்வதென்றும்,
எஞ்ஞான்றுமே மாறான திசையையுடையதன்று என்றும்
கூறப்படுகிற காரணத்தால், இந்து சமயம் வைதிக சமயம் எதனோ
டும் ஒன்றிப்போகும் என்பது திண்ணம். எந்தச் சமயமாயிருந்
தாலும், அது எங்கிருந்தாலும், ஒவ்வொரு சமயமும் நாம் மேலே
றும் மிக உயர்ந்த உண்மைக் குன்றின் ஒரு படியேயாம் என்று
ஒவ்வோர் உண்மையான கொள்கைக்கும் ஆறுதலையும் வாக்குறு
தியையும் அளிக்கின்ற இந்தச் சிறப்பு வாய்ந்த முறையிலேதான்
இது மற்றைய சமயங்களினின்றும் வேறுபடுகின்றது. இந்து சமய
ஞானப் பணி ஆற்றுகின்ற விவேகானந்தரிடம் தமக்கென்று
ஒன்று தனித்து இருந்திருக்குமாயின், இப்பொழுது இருக்கிறதை
விடச் சற்றுக் குறைந்தே அவருடைய பெருமை இருந்திருக்கு
மன்றோ? கீதையை அருளிய கண்ணபிரானாரைப்போல, புத்த
பிரானாரைப் போல, சங்கரரைப் போல, இந்து சமயக் கருத்துக்
கண்ட ஒவ்வொரு ஞான குரவரையும் போல, விவேகானந்தரின்
உரைகள் வேதங்கள் உபநிடதங்கள் இவற்றிலுள்ள சொற்றொடர்
களிலிருந்து மேற்கோள்களை நிரம்ப ஏற்றுத் திகழ்கின்றன. இந்தச்
சமயம் தனக்கென்று அடைந்த ஞானக் கருவூலத்தின் சிறப்பை
வெளியிடுகிறவராயும் அதற்கு விளக்கந்தருகிறவராயுமே அவர் நம்
முன் நிற்கின்றார். அவர் உலகில் அவதாரம் செய்யாமலிருந்
தாலும், அவர் எடுத்தோதிய தத்துவங்கள் உண்மை ஒளிகள்
குன்றாமலே மிளிரும். ஏன்! இதைவிட விரிவாயும் கூறலாம்.

அக்கொள்கைகள் முன் போலவே உண்மை வலிவுற்றுத் திகழும். ஆனால் வித்தியாசம் யாதெனின், நாம் அவற்றை எளிதில் அடைகின்ற நிலையிலும், உரைகளின் நவீனத் தெளிவிலும், வெட்டெனத் தோன்றுகின்ற காட்சியிலும், ஒரு குறைபாடு ஏற்பட்டிருக்கும்; அவை ஒன்றுக்கொன்றுள்ள இணைப்பிலும் ஒற்றுமையிலும் நமக்கு நஷ்டம் உண்டாயிருக்கும். அவர் தோன்றாமற்போனால், பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு உயிரளிக்கும் ஞான நல்லுணவைக் கொண்டு செல்கின்ற நூல்கள், வாதம் புரிகின்ற பண்டிதர்களிடையே விளங்காத சொற்போர்களாகவே மறைந்து நின்றுவிடும். அவர் ஓர் அத்தாட்சியுடன் போதித்தார்! பண்டிதர்கள் காட்டும் அத்தாட்சி அன்று அது. தாமே ஆன்மிக ஆழ்கடலில் மூழ்கி அந்த அனுபூதி நன்முத்தை அவர் நேரில் கண்டார்; அதைத்தான் அவர் புலப்படுத்தினர். வள்ளல் இராமானுசரைப் போல உலகத்திற்குத் திரும்பி வந்து பறையர்களுக்கும், சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்களுக்கும், தம் சமயம் சாரா அன்னியர்களுக்கும் அதன் இரகசியங்களை முரசறைந்து தெரிவித்தார்.

ஆனால், அவர் போதித்ததில் ஒன்றுமே புதிதன்று என்று மொழியப்படுகிற உரை முழுதும் அப்படியே ஏற்பதற்கில்லை. எல்லா அனுபவத்தையும் தன்னிடையே ஒன்றாக ஏற்றுக்கொள்ளும் தம் நிகரற்ற அத்துவிதக் கொள்கையின் ஆட்சியை உலகத்திற்குச் சாற்றினாலும், துவைதக் கொள்கையையும் விசிஷ்டாத்வைதக் கொள்கையையும் அவர் இந்து சமயத்தில் இடம் பெறச் செய்தார் என்பதை நாம் மறக்க இயலாது. இவை யாவுமே ஒரே வளர்ச்சித் துறையில் காணப்படுகின்ற பகுதிகளும், படிகளுமாகும். இறுதியாகக் குறிப்பிடப்பட்ட அத்துவிதந்தான் சமயத்தின் இலட்சியமாய் அமைகின்றது. பல் வேறு காலங்களிலும் பல் வேறு கோணங்களிலும் மனத்தினால் காணப்படுகின்ற தத்துவந்தான் இந்தப் பலவும் ஒன்றுமாயிருக்கிறது. இப்படிக் காணப்படுகிற பெருங்கொள்கையின் மிகச் சிறந்த அமிசமாய் இது இலங்குகின்றது. இராமகிருஷ்ண பரமஹம்ஸர் இவ்வண்ணமே அருளியுள்ளார்: "கடவுள் சகுணமாகவும் நிர்க்குணமாகவும் இருக்கிறார். அவர் உருவத்தையும் உருவற்ற நிலையையும் உள்ளடக்கியவர்."

இதுதான் எங்களுடைய குருநாதரது (விவேகாநந்தரின்) வாழ்வின் மௌலியனைய பயனுக்கு ஒரு தனிச்சிறப்பை ஊட்டுகின்றது. அவர் கீழை நாடும் மேலை நாடும் கூடுகிற இடமாய்

மட்டும் திகழவில்லை; இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும் பிணைக்கும் நடு நாயகமாயும் நிற்கின்றார். பலவும் ஒன்றும் ஒரே தத்துவமாயின், எல்லா வகையான இறைவழிபாடுகள் மட்டுமல்லாமல், எல்லா வகையான முயற்சிகளும், எல்லா வகையான படைப்புகளும் இறைவனை இறைஞ்சி அடைகின்ற பாதைகளாய் விரிந்துவிடும். இனி உலகியலுக்கும் ஞான இயலுக்கும் ஒரு வேறுபாட்டைக் காணவேண்டிய அவசியமில்லை. தொழில் புரிதலும் தொழுதலாகும். வெல்லலும் துறத்தலே. வாழ்வும் சமய மயமே: பற்றலும் பேணலும் நீத்தலையும் விலக்கலையும் போன்று அத்துணைக் கடுமையான ஒப்படைப்புச் செயலே.

இத்தகைய அனுபூதிச் செல்வத்தை விவேகானந்தர் கண்டார். இது அவரைக் கருமயோகத்தைப் பரப்பும்படி தூண்டியது; இது ஞான பத்தி யோகங்களிலிருந்து விலகி நிற்கவில்லை. ஆனால், இது அவற்றைப் புலப்படுத்துகின்றது. மனிதன் ஆண்டவனைச் சந்திப்பதற்கு முனிவரின் குகையும், கோயிலின் வாயிலும் எப்படி மெய்யான ஏற்ற இடங்களாக அமையுமோ, அப்படியே தொழிற்சாலைகளும், மாணவர் படிப்பறையும், ஆயர்பாடியும், கழனிகளும் அவர்முன் விரிகின்றன. மக்கட்குத் தொண்டு செய்வதற்கும் இறை வழிபாட்டிற்கும் இம்மியளவும் வேறுபாடில்லை. பேராண்மைக்கும் முழு நம்பிக்கைக்கும் உண்மையான அறவாழ்விற்கும் ஞானத்திற்கும் மாறுபாடு இல்லை என்பதை அவர் தேர்ந்தார். ஒரு கோணத்தினின்று பார்க்குமிடத்து அவருடைய மொழிகள் யாவும், இந்த முக்கியமான கொள்கையின் விரிவுரையாய்த் திகழ்கின்றன என்று கூறலாம், 'அழகுக்கலை, விஞ்ஞானம், சமயம்—இம்மூன்றும் ஒரே உண்மைக்கு உருக்கொடுக்கும் பல்வேறு வழிகள்,' என்று அவர் ஒரு முறை எங்கேயோ மொழிந்திருக்கிறார். ஆனால், இவ்வுண்மையை அறிவதற்கு அத்துவிதக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும்.

விவேகானந்தரின் தெய்விகக் காட்சியை வகுத்துத் தந்து அவரை உருவாக்கின சத்தி மூன்று வகைப்படும்: வடமொழியிலும் ஆங்கிலத்திலும் அவர் அடைந்த இலக்கியக் கல்விப் பயிற்சியை முதன்முதலாக குறிப்பிடவேண்டும். இவ்விரு உலகங்கட்கும் இடையே இவ்வண்ணம் அவர் முன் விரிந்த வேறுபாடு, இந்து சாத்திரங்களுக்குப் பொருளான அனுபூதியைப் பற்றிய ஒரு தனித்த எண்ணப் பதிவை அவரிடம் எழுப்பிவிட்டது. மறைகள்

கண்டது உண்மையாயின், மற்றவர்களின் அனுபவம் போல, இந்த அனுபவம் தற்செயலாய்க் காலில் இடறியதன்று என்பது நன்கு விளங்கும். இது ஒரு சாத்திரத்திற்குப் பொருளாயிற்று; தருக்க அறிவின் ஆராய்ச்சிக்கு விஷயமாய் விளங்கிற்று. உண்மையை நாடுகின்ற துறையில் எழக்கூடிய எத்தகைய தியாகத்தினின்றும் இது பின் வாங்குகிறதில்லை என்பதையுந் தேர்ந்தார். தட்சணேசுவரத்திலுள்ள கோயிலின் பூஞ்சோலையில் உறைந்து அறிவுரை வழங்கிய தம் குருநாதரான இராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம், அப்பொழுது **நரேன்** என்று வழங்கப்பட்ட சுவாமி விவேகானந்தர் தம்முடைய இதய உணர்ச்சியும் தருக்க அறிவும் வற்புறுத்துமாறே பண்டைய மறைகளின் உண்மை மெய்யுறுவதைக் கண்ணுற்ருர். நூல்கள் தத்துவத்தைப்பற்றி அரை குறையான சிதைந்த உருவத்தைத்தான் தரக்கூடும். ஆனல், அந்த மெய்ப்பொருளே இங்கே திரண்டு நின்றது. சமாதிதான் அவருக்கு இடையருத அறிவை அடைகிற முறையாயிருந்தது. அவர் மனம், பலவற்றினின்று ஒன்றிற்கு ஆடிச் செல்வதை ஒவ்வொரு மணி நேரமும் அறியும் விழித்த அறிவுக்கப்பால் திரட்டப்பட்ட ஞானத்தின் குரலை ஒவ்வொரு கணமும் கேட்டது. அவரைச் சுற்றி நின்ற ஒவ்வொருவரும் ஆண்டவன் அருட்காட்சியைப் பெற்றனர். பேரறிவைப் பெறும் ஆர்வம் சீடரிடம் ஒரு சுரம் போல விரைந்தது. நூல்களின் நடமாடும் வடிவாய்த் தம்மையறியாமலே அவர் திகழ்ந்தார். ஏனெனில், அவற்றில் ஒன்றையும் அவர் படித்தவரல்லர். தம்முடைய குருநாதரான இராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம் விவேகானந்தர் வாழ்வின் மர்மப் பேழையின் திறவு கோலைக் கண்டார்.

எனினும், அவரது பணிக்குரிய ஆயத்தம் பூரணமாகவில்லை. கன்னியா குமரியினின்று இமையம் வரையில் எங்கும் சுற்றித் திரிய வேண்டும். ஞானிகளோடும், பண்டிதர்களோடும், கள்ளங்கபடற்ற ஆன்மாக்களோடும் கலந்து பழக வேண்டுமன்ருே? அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டு, அனைவருக்கும் அதை வழங்கவேண்டும்: எல்லோருடனும் உறைதல் நலமாம். இந்தியா பண்டைக்காலத்தில் எப்படித் திகழ்ந்ததோ, எப்படி இப்பொழுது காட்சி அளிக்கின்றதோ—அவற்றையும் அறிதல் அவர் கடனன்ருே? அந்த விரிவான முழுமையைப் பரந்த முறையில் நோக்கி உணர்வதும் அவர் பொறுப்பேயாகும். அந்த முழுமையான ஒன்றின் ஒளி மிக்க

இரத்தினச் சுருக்கந்தான் தம்முடைய குருநாதரின் வாழ்வும் தனித் தகைமையுமாகும்.

எனவே, சாத்திரங்கள், குருநாதர், தாய் நாடு—இம்மூன்றுமே விவேகானந்தரின் நூல்களாம் பண்ணிற்குச் சுரங்களாய் அமைகின்றன. அவர் அளிக்கக்கூடிய ஞான பொக்கிஷம் இதுவேயாகும். இவைதாம் உள்ளடங்கிய சரக்குகள்; இவற்றினின்று உலக நோய் அனைத்தையும் தீர்க்கும் ஆன்மிகமாம் மாமருந்தைக் கூட்டி அவ் வள்ளல் வழங்கினர். இவைதாம் அந்த ஞான விளக்கொன்றில் எரிகின்ற முச்சுடர்களாகும். சில ஆண்டுகளாக—அதாவது 1893-ஆம் ஆண்டு, செப்டெம்பர், 19-ஆம்தேதியிலிருந்து 1902-ஆம் ஆண்டு, ஜூலைத்திங்கள் வரையில் அவர் தொண்டாற்றிய உலக மக்கட்கும் தம்முடைய நாட்டு மக்கட்கும் வழிகாட்டி உதவுதற் பொருட்டு இந்திய நாடு அவர் திருக்கைகொண்டே ஞான தீபத்தை ஏற்றி முன் வைத்தது. இந்த விளக்கை ஏற்றி வைத்ததற்காகவும், அவர் தம்பின்னே இந்தச் சிறந்த நூல்களை விட்டகன்றதற்காகவும் அவரை ஈன்ற நாட்டிற்கும், அவரை மேலை நாட்டிற்கு அனுப்பியவர் களுக்கும் வாழ்த்துக் கூற எம்மனோரில் சிலர் இன்னும் இருக்கின் றனர். ஆனல், அவர் வழங்கிய அறிவுரையின் மிக விரிந்த பொருளை முற்றிலும் உணரக்கூடிய பாக்கியம் இன்னும் பெற்றிலம் என்றே கருதுகின்றோம்.

4—7—1907

நிவேதிதை

சிக்காகோச் சொற்பொழிவு

[*1893-ஆம் ஆண்டு, செப்டெம்பர்த் திங்கள், 11-ஆம் நாள், சிக்காகோ நகரத்திலே நிலவுலகிற்குப் பொதுவாகக் கூடிய சமயவாராய்ச்சிப் பெருங் கழகத்தில் வாழ்த்துரைக்கு மறு மொழியாக அருளிச் செய்தது.*]

அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே! சகோதரர்களே!

அன்பினேடும் ஆர்வத்தினேடும் நீங்கள் அளித்த வாழ்த்துரைக்கு மறுமொழி கூற யான் எழுந்து நிற்கும் இச்செயலானது சொல்லுதற்கரிய உவகையினலே எனது உள்ளத்தை நிறைவுறச் செய்கின்றது. உலகிலுள்ள துறவொழுக்க நிலையங்களிலே மிகு பழமை வாய்ந்த நிலையத்தின் பெயரினல் நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்; எல்லாச் சமயங்களுக்குந் தாயாகிய சமயத்தின் பெயரினலே நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்; பல்வேறு வகுப்பினராய்ப் பல பிரிவாகிய மதங்களைக் கைகொண்டொழுகுங் கோடிக்கணக்கான இந்திய மக்களின் பெயரினலே நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

இந்த மேடைமீதுள்ள உரையாளருட் சிலர், கிழக்கு நாட்டிலிருந்து வந்த பிரதிநிதிகளைக் குறித்துப் பேசும்பொழுது, 'தொலையிலுள்ள மக்கட்கூட்டத்தினரிடையேயிருந்து வந்த இப்பிரதிநிதிகள் பண்புடைமையாகிய எண்ணத்தினை எல்லா நாட்டிற்குங் கொண்டு செல்கின்ற பெருமைக்கு உரிமையுடையவர்கள்,' எனக் கூறினர்; அதற்காக நான் அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். (பிறருடைய கொள்கையை வெறுத்தொதுக்காத) பண்புடைமை (அக்கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுகின்ற) பொது நோக்கு என்னுமிரண்டினையும் உலகிற்குக் கற்பித்த சமயத்துக்கு நான் உரியவனெனப் பெருமையடைகின்றேன்! எல்லாச் சமயங்களையும் அன்பினேடு நோக்குகின்ற பண்புடைமையில் எங்களுக்கு நம்பிக்கையுண்டு. அது மாத்திரமன்று; எல்லாச் சமயங்களையும் உண்மை நெறிகளென நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறேம். உலகத்திலுள்ள எல்லாச் சாதியாராலும் மதங்களாலும் துன்புறுத்தி ஒதுக்கப்பட்ட மக்களுக்கு அடைக்கலந் தந்து காப்பாற்றிய ஒரு சாதிக்கு நான்

உரியவன் என்பதைக் குறித்துப் பெருமையடைகிறேன்! உரோமருடைய கொடுஞ்செயலினாலே தமது பரிசுத்த தேவாலயம் சின்னபின்னப்பட்ட ஆண்டிலே தென்னிந்தியாவுக்கு வந்து எங்களிடம் அடைக்கலம் புகுந்த கலப்பில்லாத இஸ்ரவேல் சாதியாரில் எஞ்சியிருந்தவர்களை நாங்கள் அன்பினோடு அணைத்துக்கொண்டோம் என்பதனை உங்களுக்கு எடுத்துச் சொல்லும் பெருமை எனக்கு உண்டு. பெருஞ்சிறப்பு வாய்ந்த சொராஸ்திரிய சாதியாரிலே எஞ்சியிருந்தோருக்குப் புகலிடங் கொடுத்து இன்றும் பாதுகாத்து வருகிற ஒரு சமயத்தைச் சார்ந்தவன் நான் எனப் பெருமையடைகின்றேன்! என் அன்புள்ள சகோதரர்களே, இளமையிலே நான் பல முறை ஓதியதும், இன்னும் கோடிக்கணக்கான மானிடர்களாலே ஓதப்படுவதுமாகிய ஒரு கீதத்திலிருந்து சில அடிகளை எடுத்து உங்கள் முன்னிலையிலே மொழிவேன்.

"எண்ணுமிரு நிலத்தெழுந்த பலநதியும்
இறுதியில்வந் தெறிநீர் வேலை
நண்ணுகின்ற இயல்பதுபோற் பலவேறு
தகைமையராய் ஞான நாடும்
மண்ணகத்தோர் செல்லுநெறி செம்மையதாய்க்
கோட்டணையாய் மருவு மேனும்
புண்ணியனே நினையடையு மார்க்கமவை
யனைத்துமெனப் புகல்வன் யானே."

இது வரை ஒரு காலத்திலும் ஏற்படாத மிகவும் பெருமை பொருந்திய சர்வ சமய ஆராய்ச்சிக் கழகமாகிய இம்மாபெரு மன்றமானது கீதையிலே கூறப்பட்டிருக்கும் ஒரு பெரிய அற்புதமான உண்மையைத் தெளிவுபடுத்தி வற்புறுத்துகின்றது.

"மெய்வகைய திதுவென்ன வேண்டியவர் வேண்டியன
அவ்வகைய தெய்வமுமாய் அளிப்பேனும் யானேகாண்."

"யாதாயினும் ஒரு பாதையைப் பின் பற்றி என்னை யாவன் நாடுகின்றானோ, அவனை யான் அடைகின்றேன். ஈற்றிலே என்னை அடைகின்ற பாதைகளிலே எல்லா மக்களும் முயன்று செல்கின்றார்கள்."

"சமய வேறுபாடுகளும் மதச் சண்டைகளும், அவற்றினின்று ஏற்பட்ட கொடிய பிடிவாதமும் ஆகியவிவை இந்த அழகிய பூவுலகத்தை நெடிது பற்றியிருந்தன. இந்நிலவுலகத்தை அவை கொடுஞ்செயலினாலே நிறைந்துவிட்டன ; மீட்டும் மீட்டும் மானிட

உதிரத்தை எங்கும் சொரியச் செய்து, நாகரிக வாழ்க்கையை அழித்து, மக்கட் கூட்டத்தினரைத் திகைக்கும்படி செய்துவிட்டன. இந்தக் கொடிய பேய்கள் தோன்ருதிருந்தால், மக்கட்கூட்டமானது இப்பொழுது இருக்கின்ற நிலையினும் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்திருக்கும். குறித்த பேய்கள் அழிந்து போகிற காலம் நெருங்கிவிட்டது. இன்று காலையிலே இந்தப் பெருமன்றம் கூடும்பொழுது அடித்த மங்கல மணியானது மூடக் கொள்கைகளின் சாவு மணியாகுக! வாளினுலோ, எழுதுகோலினுலோ, ஒருவரையொருவர் பகைக்கின்ற கொடுஞ்செயலானது அகன்று விடுக! ஒரே நோக்கத்தினைக் கொண்டு ஒன்றினையே நாடிச் செல்கின்ற மக்களிடையே அன்பினோடு கூடிய எண்ணங்கள் நிறைவு பெறுக!

யாம் உடன்படாதிருப்பது ஏன்?

[1893-ஆம் ஆண்டு, செப்டெம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் நிகழ்த்திய சொற்பொழிவு.]

நான் உங்களுக்கு ஒரு சிறு கதை சொல்கிறேன். சிறிது முன்பாக மிகக் கவின்பெறப் பேசி முடித்த உரையாளர் ஒருவர், "ஒருவரையொருவர் நிந்திப்பதை ஒழித்துவிடுவோமாக." எனக் கூறி வேறுபாடுகள் எக்காலத்திலும் வளர்ந்து வருவதை யுன்னி மனம் வருந்தினர்.

இந்த வேறுபாட்டினது காரணத்தைத் தெளிவுபடுத்துகிற ஒரு கதையை உங்களுக்கு உரைக்கலாமென நான் நினைக்கிறேன்.

ஒரு கிணற்றிலே ஒரு தவளை வாழ்ந்து வந்தது. அது அங்கேயே பிறந்து அங்கேயே வளர்ந்து வந்தது. ஆயினும், அது சிறிய தவளையே. அதற்குக் கண்கள் இருந்தனவா இல்லையா என ஆராய்வதற்குப் பரிணும வாதி ஒருவரும் அக்காலத்தில் அவ்விடத்தில் இல்லை. ஆயினும், நம் கதையின்பொருட்டு அத்தவளைக்குக் கண்கள் இருந்தனவென்றே வைத்துக்கொள்ளுவோம். நாள்தோறும் அது புழுக்களையும் கிருமிகளையும் அகற்றி இக்காலத்திலுள்ள கிருமி விஞ்ஞான சாத்திரிகளை ஒப்ப மிகவும் வலிமையோடு வாழ்ந்து வந்தது. இவ்வண்ணம் வாழ்ந்து சிறிது பருத்துக் கொழுத்திருந்தது. ஒரு நாள் கடலிலே வாழ்கின்ற ஒரு தவளை வந்து அந்தக் கிணற்றில் விழுந்தது.

கிணற்றுத் தவளை, "நீ எங்கிருந்து வருகிறாய்?" என்றது.

கடல் தவளை, "நான் கடலிலிருந்து வருகிறேன்," என்றது.

கிணற்றுத் தவளை, "கடலா! அது எவ்வளவு பெரியது? என் கிணற்றளவு பெரியதாயிருக்குமா?" என்று கூறிக் கிணற்றின் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்துக்குப் பாய்ந்தது.

"என் நண்பனே, கடலினை உன்னுடைய சிறிய கிணற்றுக்கு எவ்வாறு ஒப்பிடுதல் கூடும்?" எனக் கடல் தவளை கூறியது.

மற்றத் தவளை ஒரு பாய்ச்சல் பாய்ந்து, "உன் கடல் இவ்வளவு பெரியதா?" என வினவினது.

கடல் தவளை, "கடலை உன் கிணற்றுக்கு ஒப்பிடுவது வீண் சொல்லன்றோ!" என்றது.

"நல்லது, என் கிணற்றைவிட எதுவும் பெரியதாயிருத்தல்

இயலாது. உண்டு என்று சொல்கின்ற இவன் பொய்யன். இவனை வெளியே அகற்றிவிட வேண்டும்,'' என்று கிணற்றுத் தவளை கூறியது.

இத்தகைய இடைஞ்சல் எஞ்ஞான்றுமே இருந்து வருகிறது.

நான் ஓர் இந்து. என் சிறிய கிணற்றுக்குள்ளே இருந்து கொண்டு, உலக முழுவதும் எனது சிறிய கிணறென்று நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். கிறித்தவன் தனது சிறிய கிணற்றில் இருந்துகொண்டு, பார் முழுவதும் தனது கிணறென்று எண்ணுகிறான். மகமதியனும் தனது சிறிய கிணற்றினுள் இருந்துகொண்டு, அதுவே ஞாலம் முழுவதுமென எண்ணுகிறான். நாம் ஏற்படுத்திக்கொண்ட சிறுசிறு உலகங்களின் எல்லைகளை அழித்துவிடுகிற பெரிய முயற்சியிலே முற்பட்டு நிற்கின்ற அமெரிக்க மக்களாகிய உங்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன். எதிர்காலத்தில் உங்கள் நோக்கத்தை நீங்கள் அடைவதற்கு ஆண்டவன் உங்களுக்கு உதவி புரிவானாக!

இந்து சமயம்

[1893-ஆம் ஆண்டு, செப்டெம்பர்த் திங்கள், 19-ஆம் நாள் சர்வ சமய ஆராய்ச்சிக் கழகத்திலே நிகழ்த்திய சொற்பொழிவு.]

சரித்திர காலத்துக்கு முற்பட்ட காலத்திலே தோன்றி இப்பொழுதும் நிலைபெற்று விளங்குகின்ற சமயங்கள் மூன்று. அவை இந்து சமயம், சொராஸ்திரிய சமயம், யூத சமயம் என்பன. அவை வலிய தாக்கல்களினாலே மொத்துண்டும் அழிந்து போகாதிருப்பது அவற்றின் உள்ளீடான வலிமையைக் காட்டுகின்றது. யூத சமயமானது கிறித்து சமயத்தைத் தன்னோடு ஒன்றுபடுத்தாது, அனைத்தினையும் வென்ற அதன் புதல்வியினாலே (கிறித்து சமயத்தினாலே) தனது இருப்பிடத்திலிருந்து வெளியே துரத்தப்பட்டுவிட்டது. பெருமை பொருந்திய சொராஸ்திரிய சமயத்தின் சரித்திரத்தைக் கூறுவதற்கு ஒரு சில பார்ஸிக்காரர் மாத்திரமே இருக்கின்றனர். அவை இரண்டும் இவ்வாறாக, இந்து மதத்தின் நிலை யாது என ஆராய்வோம் :

இந்தியாவிலே ஒன்றன் பின் ஒன்றாகப் பல மதங்கள் எழுந்து வைதிக மார்க்கத்தின் அடிப்படையை முதலில் அசைத்தனவாயினும், அந்த மார்க்கமானது, பெரிய பூகம்ப அதிர்ச்சியினாலே அகன்ற கடல்நீர் மீண்டும் வந்து ஒன்று கூடுவதுபோல, கலகம் நீங்கிய பின்பு ஆயிரமடங்கு வலிமையோடு உட்பிரிவுகளனைத்தினையும் தாய்ச்சமயமாகிய தன்னோடு ஒன்று கூட்டிப் பொலிவுற்று விளங்கியது.

இக்காலத்து விஞ்ஞான சாஸ்திரங்களிலுள்ள புத்தம்புதிய முடிபுகள் எதற்கு ஓர் எதிரொலி போன்று காணப்படுகின்றனவோ, அத்தகைய பெருமை வாய்ந்த வேதாந்த தத்துவ ஞானத்தினது மிகவுயர்ந்த கொள்கை முதல், பல திறப்பட்ட புராணக் கதைகளோடு கூடிய உருவ வழிபாடுகள் ஈறாகப் பௌத்தருடைய அஞ்ஞேயவாதமும் சமணருடைய நாத்திக வாதமும் உட்பட, எல்லாக் கொள்கைகளுக்கும் இந்து சமயத்திலே இடமுண்டு.

'பெரிதும் வேறுபட்டு நின்ற இத்தனைத் துறைகளும் ஒன்று சேர்வதற்குரிய பொதுவாகிய மையம் எங்கு உளது?' என்னும் வினா எழுகின்றது. 'ஒன்றுக்கொன்று மறுதலையாகத் தோற்று

கிற கொள்கைகளுக்குப் பொதுவாகிய ஆதாரம் எங்கு உளது?" என்னும் வினவுக்கு நான் விடை கூற முயலுவேன் :

இந்துக்கள் வேதம் எனக் கொள்ளுகிற ஆப்த வாக்கியம் வாயிலாகத் தங்களுடைய சமயத்தைப் பெற்றிருக்கின்ருர்கள். வேதங்கள் முதலும் முடிவும் இல்லாதன என்பது அவர்களது கொள்கை. 'ஒரு நூலுக்கு முதலும் முடிவும் இல்லாதிருப்பது எங்ஙனம் ஆதல் கூடும்!' என இச்சபையிலுள்ளோர் கூறி நகையாடலாம். வேதங்களென்ருல் புத்தகங்களென்று கருத வேண்டா. வெவ்வேறு காலத்திலே வெவ்வேறு மக்களாற் காணப்பட்ட ஆன்மிக முடிபுகள் ஒன்று சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்ற களஞ்சியமே அவை. பூமியின் ஈர்க்கும் சத்தியைப் பற்றிய விதியினை விஞ்ஞான சாத்திரிகள் கண்டுபிடித்தற்கு முன்னும் அது இருந்தது; மக்களெல்லாம் அதை மறந்துவிட்ட பின்னும் அது இருக்கும். ஆன்மிக உலகத்திலுள்ள விதிகளும் அத்தகையனவே. ஓர் ஆன்மாவுக்கும் மற்ருேர் ஆன்மாவுக்கும் இடையேயுள்ள ஒழுக்க இயலும், ஆன்மிக இயைபுகளும், தனிமையாகிய ஆன்மாக்களுக்கும் அவ்வான்மாக்களுக்குத் தந்தையாராயிருப்பவருக்கும் இடையேயுள்ள தொடர்புகளும் கண்டறியப்படுவதற்கு முன்பும் இருந்தன. நாம் அவற்றை மறந்துவிட்டாலும், அப்பொழுதும் அவை நிலைபேருக இருப்பனவேயாம்.

இந்த விதிகளைக் கண்டுபிடித்த ரிஷிகளை நாங்கள் பூரணத்துவத்தை அடைந்தவர்களாக மதித்துப் போற்றுகின்ருேம். அவர்களுள் மிகவுயர்ந்தோர் சிலர் பெண்பாலார் என்னுஞ் செய்தியை இந்தச் சபைக்கு நான் மகிழ்ச்சியோடு மொழிகிறேன்!

'இந்த விதிகள், விதிகளாகக் கருதப்படுமிடத்து அந்தமில்லாதிருப்பனவாயினும், இவற்றுக்கு ஒரு தொடக்கம் இருத்தல் வேண்டுமே?' என இவ்விடத்தில் சிலர் வினவுதல் கூடும். படைப்புக்கு முதலும் முடிவும் இல்லையென வேதங்கள் முழங்குகின்றன. உலகிலுள்ள சத்தியின் கூட்டுத்தொகை என்றும் ஒரே அளவாய் இருக்கிறது என விஞ்ஞான சாத்திரம் முடிவு கட்டுவதைக் கேள்வியுற்றிருக்கிருேம். ஒரு காலத்தில் ஒன்றும் இல்லாதிருந்தால், இப்பொழுது வெளிப்பட்டுத் தோன்றுகிற சத்தியெல்லாம் எங்கே அடங்கியிருந்தன? இவையெல்லாம் ஒடுங்கிய நிலையாகக் கடவுளிடத்தே இருந்தனவாதல் வேண்டும். அப்படியாயின், கடவுள் சில வேளை ஒடுக்க நிலையிலும், சில வேளை இயக்க நிலையிலும் இருக்க வேண்டும். அப்படியாயின், அவர் வேறுபடுந் தன்மைய

ராவர். வேறுபடுகின்ற ஒவ்வொரு பொருளும் கலவைப் பொருளாய் இருத்தல் வேண்டும். கலவைப் பொருள் எதுவும் நாசமாதலென்னும் வேறுபாட்டினை ஏற்கும் இயல்பினதேயாம். அப்படியாயின், ஆண்டவனும் இறக்கவேண்டும். அது பொருந்தா முடிபு. ஆதலால், படைப்பு இல்லாதிருந்த காலம் இல்லையென்பது முடிவாகின்றது. ஒப்பு நோக்கிக் கூறுவதாக இருந்தால், படைப்பும் படைப்புப் பொருளும் சமதூரத்திலே முதலும் முடிவுமின்றி ஓடிக்கொண்டிருக்கின்ற இரண்டு ரேகைக்குச் சமமெனக் கொள்ளுதல் வேண்டும். என்றும் முயன்றுகொண்டிருக்கிற தெய்வத்தின் வலிமையினுலே, அவ்வியக்கத்திலிருந்து ஒன்றின் பின் ஒன்ருகப் பல புவனங்கள் தோன்றி ஒரு காலம் வரை நிலைத்திருந்து அழிந்து போகின்றன. "முந்திய கற்பத்திலுள்ள ஞாயிறு மதியைப்போல, ஆண்டவன் கதிரவனையும் மதியையும் படைத்தான்," என்று அந்தணச் சிறுவன் நாள்தோறும் தனது மந்திர ஜபத்தோடு சொல்லுகின்றான்.

நான் இங்கே நின்று கண்களை மூடிக்கொண்டு, "நான், நான், நான்" என்று நினைத்தால், எனது கண்ணின் முன்னே என்ன எண்ணந்தோன்றுகிறது? உடலைக் குறித்த எண்ணம் தோன்றுகிறது. அப்படியாயின், நான் சடப்பொருட்கூட்டத்தினுல் உருப்பட்ட ஒரு பிழம்புதான? அல்ல; நான் உடலிலே உறைகிற ஆன்மா. நான் உடலல்லேன். உடல் இறந்துவிடும்; நான் இறக்க மாட்டேன். நான் இவ்வுடலிலிருக்கிறேன்; இது வீழ்ந்துவிடும்; ஆயினும், நான் என்றும் வாழ்ந்துகொண்டேயிருப்பேன். எனக்கு ஒரு பழமையுமுண்டு. ஆன்மா படைக்கப்பட்டதன்று. படைப்பு என்பது ஒருவகைக் கூட்டம். கூடியது எதிர்காலத்தில் திண்ணமாகவே அழிந்துபோம். ஆன்மா படைக்கப்பட்டதாயின், அது அழியவும் வேண்டும். சிலர் உவகையுள்ளவராய்ப் பிறந்து பூரண முழு உடல் நலத்தோடும், அழகிய உடலோடும், மனவலிமையோடும் வாழ்கின்றனர். அவர்களுடைய குறைகளெல்லாம் நிறைவாகின்றன. மற்றையோர் துன்புற்றவர்களாய், கைகால் முதலிய அவயவம் இல்லாதவர்களாய், மூடர்களாய்ப் பிறந்து, கவலையோடு கூடிய வாழ்க்கையை நடத்துகின்றனர். அவர் எல்லோரும் படைக்கப்பட்டவராய் இருந்தால், இரக்கமும் நீதியுமுள்ள கடவுள் ஒருவரை மகிழ்ச்சி உளத்தராகவும், மற்றொருவரைத் துன்புற்றவராகவும் படைத்தது ஏன்? அவர் ஏன் பட்சபாதமுள்ளவராய் இருக்

கிருர்? இப்பொழுது துன்புற்ருல் மேல் வரும் பிறப்பிலே இன்புறுதல் கூடும் என்று சொல்லுவதும் பொருந்தாது. இரக்கமுள்ள நீதியான கடவுளினது ஆளுகையிலே எந்த மனிதனும் துன்புற வேண்டிய நியாயம் என்ன?

இரண்டாவதாக, படைப்பவராகிய கடவுள் ஒருவர் உளர் என்னும் கொள்கையானது எல்லா வல்லமையுமுடைய ஒருவர் தாம் விரும்பியபடி செய்யுங் கொடுஞ்செயலை மாத்திரம் புலப்படுத்துகின்றதேயன்றி, மேற்காட்டிய பொருந்தா முடிபைத் தெளிவுபடுத்தவில்லை. ஒரு மனிதன் துன்பத்தை அடைவதற்கும் இன்பத்தை அடைவதற்கும் ஏற்பட்ட காரணங்கள் அவன் பிறப்பதற்கு முன்னமே இருந்திருக்க வேண்டும். அவன் முன்பு செய்த கருமங்களின் பயனையே இப்பொழுது நுகர்கின்ருன்.

உடலிலும் மனத்திலும் பொருந்தியிருக்கின்ற எல்லாக் குணத் தன்மைகளும் முன்னேரிடமிருந்து உரிமையாகப் பெற்றுக் கொண்ட மன நீர்மைகளால் விளக்கமுறும் என்பர் அல்லவா? சமதூரத்திலே செல்லுகின்ற இரண்டு இயக்கங்கள் இங்கு உள்ளன. ஒன்று, மனத்தினைச் சார்ந்தது; மற்ருென்று, சடத்தினைச் சார்ந்தது. சடமும் அதனிடத்தினின்று பரிணமித்த பொருள்களும் அனைத்தினையும் தெளிவுபடுத்துவனவாயின், ஆன்மா என்று ஒன்று வேண்டுவதில்லை. ஆனல், எண்ணங்கள் சடத்தினின்று தோன்றினவென நிறுவுதல் இயலாததாகும். தத்துவ சாத்திர ஆராய்ச்சியின்படி ஏகான்ம வாதத்தைக் கைக்கொள்ள வேண்டுமாயின், ஏகான்ம வாதம், ஏகசடவாதத்தினும் நியாய முறைக்கு ஏற்புடையதாகும். ஆயினும், ஈண்டு இவ்விரண்டும் வேண்டப்படா.

குலமுறை வழியாக உடல் சில தன்மைகளைப் பெறுகிறது என்பதை நாம் மறுத்தல் இயலாது. இவை உடற்கட்டை மாத்திரம் சார்ந்து நிற்பன. குறித்த ஒருமனம், குறித்த முறையாக மாத்திரம் இவற்ருேடு கூடி நின்று தொழில் புரிதல் கூடும். பண்டைய கர்மங்களினலே ஆன்மாவினிடத்துச் சிறப்பாக அமைந்திருக்கின்ற வேறு சில தன்மைகளும் உள. குறித்த ஒரு நீர்மையுடைய ஆன்மாவானது, அந்த நீர்மையைத் தோற்றுவிப்பதற்குத் தகுந்த கருவியாகிய உடலினிடத்தே உதிப்பது பொருத்தமேயாம். இம்முடிபு விஞ்ஞான சாத்திரத்துக்கும் பொருத்தமானது. விஞ்ஞான சாத்திரம், பழக்கம் பற்றுக்கோடாக வேறுபாடுகள் ஏற்படும் முறையைப் புலப்படுத்துகின்றது. பழக்கமானது ஒரு செயலை மீட்டும் மீட்டுஞ்

செய்வதால் ஏற்படுவது. புதிதாகப் பிறந்த ஓர் உயிருக்கு உரிய இயற்கைப் பழக்கங்களைத் தெளிவுபடுத்துவதற்குப் பல முறை செய்யப்பட்ட செயல்கள் உளவெனக் கொள்ளுதல் வேண்டும். அச் செயல்கள் இந்த வாழ்விலே செய்யப்படாதனவாயின், கழிந்த பிறவிகளிலிருந்து அவை வந்திருக்க வேண்டும்.

மற்றும் ஒரு குறிப்பு உளது. இவை எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளினும், எனது கழிந்துபோன வாழ்க்கையின் நிகழ்ச்சிகளுள் எதனையும் நான் நினைவுகூராதிருப்பதற்கு என்ன காரணங் காட்டுதல் கூடும்? இதனை எளிதிலே தெளிவுபடுத்தலாம். நான் இப்பொழுது ஆங்கில மொழியிலே பேசுகிறேன். இது எனது தாய் மொழியன்று. இப்பொழுது எனது உள்ளத்திலே எனது தாய் மொழியில் உள்ள சொற்களுள் ஒன்றுமில்லை. நான் அவற்றினைக் கொண்டு வருவதற்கு முயன்றவுடனே அவை விரைவாக ஒடி வருகின்றன. உணர்வோடு கூடிய விழிப்பு நிலையானது மனக்கடலின் மேற்பரப்பு மாத்திரமேயாகும். அதன் ஆழத்தில் நம் அனுபவங்களெல்லாம் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. வேண்டும் அளவு முயன்றால், அவற்றை மேலே கொண்டுவருதல் கூடும்; நம்முடைய பழம்பிறப்பையும் உணர்தல் கூடும்.

இவ்வுண்மையை நேர் முகமாக மெய்ப்பித்துக் காட்டலாம். அங்ஙனம் மெய்ப்பித்துக் காட்டுதலே எந்தக் கொள்கைக்கும் பூரணமாகிய சான்று ஆகும். 'நினைவென்னும் நீள்கடலின் ஆழங்கள் அனைத்தினையும் காட்டுதற்கு உரிய இரகசியத்தை நாங்கள் கண்டறிந்தோம்,' என மகரிஷிகள் கூறுகின்றார்கள். அவர்கள் காட்டிய வழியிலே முயன்றால், பழம்பிறப்பை பற்றிய முழு நினைவைப் பெறுதல் கூடும்.

தான் ஒரு சித்துப்பொருள் என இந்து சமயி நம்புகிறான். வாள் அவனைப் பிளவாது; நெருப்பு அவனைத் தகியாது; நீர் அவனைக் கரைக்கமாட்டாது; காற்று அவனை உலர்த்தமாட்டாது. ஒவ்வோர் ஆன்மாவும் எல்லை காணவொண்ணாத ஒவ்வொரு சக்கரத்தை நிகர்த்தது. உடலே சக்கரத்தின் மையம். இந்த மையம் ஓர் உடலத்திலிருந்து மற்றோர் உடலத்திற்கு மாறுவதே மரணமெனப்படுவது. மேலும் ஆன்மாவானது சடப்பொருளுக்கு உரிய நிபந்தனைகளாற் கட்டுப்படுத்தப்பட்டதன்று. அது தனது நீர்மையிலேயே சுதந்திரமுடையது; எல்லையற்றது; தூய்மையானது; நிறைவுடையது; ஏதோ ஒரு காரணத்தினாலே சடலத்தோடு கட்டுப்

பட்டுத் தன்னைச் சடமெனை நினைக்கின்றது.

'சுதந்தரமும் நிறைவும் உடைய பரிசுத்த ஆன்மா சடத்தினல் ஏன் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறது?' என்பது அடுத்த வினவாகும். 'பரிபூரணனுகிய ஆன்மா தான் குறைவுடையது என்னும் நம்பிக்கை கொண்டு என்ன காரணம் பற்றி மயக்குற்றது?'' இத்தகைய வினு எழுதல் இயலாதென்று சொல்லி இந்துக்கள் இவ்வினவைக் கடத்தி விடுகிருர்களெனப் பிறர் சொல்லக் கேள்விப் படுகின்றேம். ஒருசார் நிறைவை அடைந்த பெரியோர் ஒரு சிலரைக் காட்டிப் பெரிய சாத்திரச் சொற்களை வழங்கித் தத்துவ சாத்திரிகள் இதற்கு மறுமொழி கூற முயலுகின்ருர்கள். பெயரிட்டுரைப்பது விளக்குவதாகாது; வினு முன்னிருந்தபடியே இருக்கிறது. நிறைவு எங்ஙனம் தனது நிலைமையிலிருந்து குறைவுபடுதல் கூடும்? பரிசுத்தம் பொருந்திய உயர்தனிப்பொருள் தனது நீர்மையிலே அணுவளவேனும் வேறுபடுவது எங்ஙனம் ஆகும்? இந்து இயல்பாகவே உண்மை கூறுபவன். ஆதலால், வீண் வாதத்தினுட் புகாது வினவை ஆண்மையோடு முன்னிட்டு, "நான் அறியேன்!" என்று விடை கூறுகிருன்; "பரிபூரணமாகிய ஆன்மா சடத்தினுற் கட்டுப்பட்டுத் தன்னைக் குறைவுடையதாகக் கருதுவது எவ்வண்ணம் எய்தியதோ, யான் அறியேன்!" என்கின்ருன். அங்ஙனமாயினும், காரியத்தளவிலே உண்மை மாறுபடாதிருக்கிறது. ஒவ்வொருவரும் தத்தம் உள்ளத்து உணர்விலே தம்மை உடலாகக் கருதுகின்றனர். ஒருவன் தன்னை உடலாகக் கருதுவது எதனுல் எய்தியது என்பதை விளக்குவதற்கு இந்து முயலவில்லை. 'இது ஆண்டவனுடைய சித்தத்தினுல் எய்தியது,' என்று சொல்லுவது மறுமொழியாகாது. இந்து, "நானறியேன்," என்று சொல்லுவதை விட இது சிறந்த விளக்கம் ஆகாது. மனிதனுடைய ஆன்மா என்றுமுளது; அழிவற்றது; நிறைவானது; எல்லையற்றது. மரணமென்பது ஒருடலிலிருந்து மற்றேருடலுக்கு இடம் பெயரும் நிகழ்ச்சியேயாம். கழிந்து போன வினைகளினுலே நிகழ்காலம் நிச்சயிக்கப்பட்டது. நிகழ்காலத்தினுலே எதிர்காலம் தீர்மானிக்கப்படும். பிறந்தும் இறந்தும் ஆன்மாவானது உயர்வினையும் தாழ்வினையும் எய்துகின்றது. இப்பொழுது மற்றெரு வினு எழுகின்றது. பெரும்புயற்காற்றிலே ஒரு சிறிய தோணியிலே பிரயாணஞ்செய்யும் ஒருவன் ஒரு கணத்திலே நுரையையுடைய அலையினது உச்சியையடைந்தும், மற்றெரு கணத்திலே ஆழ்ந்த அகழியினுள்ளே வீசப்

பட்டும், நல்வினை தீவினையாகிய கருமங்களினது வலிமையினாலே உந்தப்பட்டும், ஒன்றினாலும் மாறுபடாத காரண காரியத் தொடர்பாகிய தலை புரண்டோடுகிற நீரோட்டத்திலே அக்கப்பாடு உறுகின்றானோ? பின்னுமிவன், அகப்பட்ட அனைத்தினையும் அரைத்துத் தள்ளும் காரண காரியத்தொடர்பு என்னும் சக்கரத்தினுள்ளே அகப்பட்ட ஒரு விட்டிற்பறவையைப் போன்றவனா? நியதி என்னும் சக்கரமானது கைம்பெண்ணினுடைய கண்ணீரையும் திக்கற்றவர்களுடைய அழுகையையும் பொருட்படுத்தாது யாவற்றினையும் நெரித்துக்கொண்டு உருண்டு செல்லுகிறது. இதனை நினைக்கும் பொழுது, நெஞ்சம் பதைக்கின்றது. ஆயினும், இதுவே இயற்கையின் விதி. அப்படியாயின், புகலிடம் ஒன்று இல்லையா? தப்புவதற்கு ஒரு வழி இல்லையா? மிகுந்த துன்பத்தினாலே வருந்திய இதயத்தின் அடியிலிருந்து இத்தகைய வினாவினொலி எழுகின்றது. அது இரக்கமுள்ள ஆண்டவனுடைய அரியாதனத்தைச் சேர்ந்ததும், அங்கிருந்து நம்பிக்கையையும் ஆறுதலையுந் தருகின்ற சொற்கள் ஒரு வேத ரிஷியினிடத்திலிருந்து எழுந்தன. அந்த ரிஷி உலகத்தின் முன்னிலையில் நின்று பெரிய குரலிலே பின் வரும் மகிழ்ச்சிச் செய்தியைச் சொன்னார்:

"அமிர்தத்துவமாகிய ஆனந்தத்துக்கு உரிய மக்களே, கேட்பீர்களாக: உயர்ந்த புவனங்களிலே உறைபவர்களே, நீங்களும் கேட்பீர்களாக: இருள் அனைத்தினுக்கும், மயக்கம் அனைத்தினுக்கும் அப்பாலாயிருக்கின்ற பழையோனை நான் கண்டுகொண்டேன். அவனை அறிவதனால் மாத்திரமே மீட்டும் மீட்டும் மரணமடையாது காப்பாற்றப்படுவீர்கள்."

"அமிர்தத்துவமாகிய ஆனந்தத்தினது மக்களே"—இஃது எவ்வளவு இனிமையையும் மனத்திற்கு நம்பிக்கையையும் தருகின்ற பெயராய் இருக்கின்றது! சகோதரர்களே, அமிர்தத்துவமாகிய ஆனந்தத்திற்கு உரியவர்களென்னும் அந்த இனிய பெயரால் உங்களை அழைப்பதற்கு உத்தரவு தருவீர்களாக. நீங்கள் கடவுளுடைய மக்கள்; அமிர்தத்துவமாகிய ஆனந்தத்திற் பங்குடையவர்கள்; தூய்மை பொருந்திய பூரணர்கள். உலகிலே தெய்வங்களாயிருக்கின்ற நீங்கள் பாவிகளா? ஒரு மனிதனை அவ்வண்ணம் வழங்குவது பாவமாகும். மனித இயற்கைக்கு அஃது ஒரு நிலைத்த பழிச்சொல்லாகும். ஓ! சிங்க ஏறுகளே, விழித்து எழுவீர்களாக! நீங்கள் ஆடுகள் என்னும் மயக்கத்தைத் தொலைத்து

விடுவீர்களாக ! நீங்கள் நித்தியத்துவமுடைய ஆன்மாக்கள் ; சுதந்தரமுள்ள சித்துருவங்கள் ; ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் ; நித்தியர்கள். நீங்கள் சடப்பொருளல்ல. நீங்கள் உடலங்களல்ல. சடம் உங்களுக்கு அடிமை. நீங்கள் சடத்துக்கு அடிமையல்ல.

அஞ்சத்தக்க, மன்னிப்பில்லாத விதிகளின் தொகுதியை வேதங்கள் விரிக்கவில்லை; காரண காரியத் தொடர்ச்சியாகிய முடிவில்லாத சிறை வீட்டினைக் கூறவில்லை ; இந்த விதிகளுக்குத் தலையாகிச் சடம், இயக்கம் என்னும் இரண்டிலும் ஒவ்வோர் அணுவினூடாகவும் ஒருவன் இருக்கின்றானென வேதங்கள் சாற்றுகின்றன. "அவனுடைய கட்டளையினாலே காற்று வீசுகின்றது ; தீ எரிகின்றது ; முகில்கள் மழையைப் பொழிகின்றன ; பூவுலகின்மீது மரணம் இயங்குகின்றது." அவனுடைய தன்மைதானென்ன ? அவன் எங்கும் நிறைந்தவன் ; பரிசுத்தன் ; உருவமற்றவன் ; எல்லாம் வல்லவன் ; பூரண இரக்கமுள்ளவன். "நீ எம் தந்தை ; எம் தாய் ; எம் அன்புக்குரிய நண்பனும் நீயே; எல்லா வலிமைக்கும் உற்பத்தி நீயே ; எங்களுக்கு வலிமையைத் தந்தருளுவாயாக. உலக பாரமனைத்தினையும் தாங்குபவன் நீயே. இந்த வாழ்க்கையின் சிறிய பாரத்தினைத் தாங்குவதற்கு எனக்கு உதவி புரிந்தருள்வாயாக," என்று இவ்வாறு வேத ரிஷிகள் பாடினார்கள். அவனை வழிபடுவது எதனால்? அன்பினால். இம்மையிலும் மறுமையிலும் உள்ள அனைத்தையும்விட மிக அரிய பெரிய அன்பனென அவனை வழிபடுதல் வேண்டும். வேதங்களிலே கூறப்பட்ட அன்பு நெறி இது. இம்மார்க்கத்தினைக் கடவுளுடைய திருவவதாரமாக இந்துக்கள் கொள்ளுகிற ஸ்ரீ கிருஷ்ண பரமாத்துமா எவ்வாறு விருத்தி செய்து போதித்திருக்கிறார் என்பதனைப் பார்ப்போம் :

"நீரிலே வளர்ந்தும் அதனால் நனைக்கப்படாத தாமரை இலையினைப்போல, உலகத்திலே மனிதன் வாழ வேண்டும்," என அவர் போதித்திருக்கிறார். ஆண்டவனுக்கு இதயத்தைத்தந்து கைகளினாலே பணி இயற்றிக்கொண்டு மனிதன் உலகிலே வாழ வேண்டும்.

இம்மையிலோ, மறுமையிலோ, கைம்மாறு கருதி ஆண்டவனிடத்து அன்பு செலுத்துவது நன்று. ஆயினும், கைம்மாறு வேண்டாது அன்பின்பொருட்டாக அன்பு செலுத்துவது அதனினும் நன்று. "ஆண்டவரே, எனக்குச் செல்வம் வேண்டா ; மக்கள் வேண்டா ; கல்வி வேண்டா. தேவரீருக்குச் சித்தமாயின் நான் பல முறை பிறப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன். கைம்மாறு வேண்

டாது சுயநலமற்ற அன்பின்பொருட்டுத் தேவரீரிடத்து அன்பு செலுத்தும் வரத்தை அடியேனுக்குத் தந்தருள்வீராக!'' கிருஷ்ணருடைய சிஷ்யர்களுள் ஒருவரும் அக்காலத்திலே இந்தியாவுக்குச் சக்ரவர்த்தியாயிருந்தவருமான யுதிஷ்டிரர், பகைவர்களாலே தம் ராஜ்யத்தினின்று துரத்தப்பட்டுத் தம் மனைவியாரோடு இமயமலைச் சாரலிலுள்ள ஒரு காட்டில் உறைந்து வரும் நாளிலே ஒருநாள் அரசியார் அவரை நோக்கி, "மக்களுள்ளே ஒழுக்கத்தினுற் சிறந்த நீர் இத்தனை துன்பங்களை அனுபவிக்க வேண்டுவது ஏனோ?'' என வினவினர். யுதிஷ்டிரர் அதற்கு மறு மொழியாக, "பாராய் என் அரசியே, இதோ தோன்றுகின்ற இமயமலை இருக்கிறதே, இது எவ்வளவு பெருமையும் அழகும் உடையது! நான் இதன்மீது அன்பு பாராட்டுகிறேன். இது எனக்கு ஒன்றினையும் தரவில்லை. ஆயினும், உயர்வும் அழகும் பொருந்திய பொருளின்மீது அன்பு செலுத்துவது எனக்கு இயல்பு. ஆதலால், இதன்மீது அன்பு பாராட்டுகின்றேன். இவ்வண்ணமே நான் ஆண்டவர்மீதும் அன்பு பாராட்டுகின்றேன். அவர் எல்லா அழகினுக்கும் பிறப்பிடமானவர். எல்லா நலனும் அவரிடத்தே உள்ளன. அன்பு பாராட்டத்தக்க பொருள் அவரே. அவர்மீது அன்பு பாராட்டுவது எனது இயற்கை. ஆதலால், நான் அவ்வண்ணம் செய்கிறேன். நான் அவரிடம் யாதொன்றினையும் விரும்பி வேண்டுதல் செய்யவில்லை. எங்கு வேண்டுமாயினும் அவர் என்னை வைக்கட்டும். அன்பின்பொருட்டு நான் அவர்பால் அன்பு செலுத்தவேண்டும். அன்பிலே வாணிகம் செய்வது எனக்கு இயலாத காரியம். ஆன்மா தெய்வத்துவமுடையதெனவும், சடத்தினுல் கட்டுண்டு கிடக்கிறதெனவும் வேதங்கள் சொல்லுகின்றன. இந்தக் கட்டு அகன்று போகும்பொழுது பூரணத்துவமானது அடையப்படும். இதுவே முத்தியெனப்படுவது. மாசு படிந்த தளையினின்று நீங்குவது முத்தி; நோய் மரணங்களினின்று விடுதலையடைவது முத்தி,'' என்று கூறினர். இந்தத்தளை ஆண்டவனுடைய இரக்கத்தினுல் மாத்திரமே அகல்வது. இந்த இரக்கம் பரிசுத்தமானவர்களை அடையும். ஆண்டவனுடைய இரக்கத்தைப் பெறுவதற்குப் பரிசுத்த வாழ்க்கை இன்றியமையாதது. இந்த இரக்கம் எவ்வண்ணம் தொழில் புரிகின்றது? தூய்மையுடையவர்களுக்கு ஆண்டவன் தன்னைத்தானே வெளிப்படுத்துகின்றுன். தூயவர்கள் இந்த வாழ்க்கையிலேயே கடவுளைக் காண்கின்றுர்கள். அப்பொழுது சிந்தையின் கோணல்களெல்லாம் செம்மையாகின்

றன ; ஐயங்களெல்லாம் அகன்றுவிடுகின்றன. அஞ்சத்தக்க கரும பந்தத்தினின்றும் மனிதன் விடுவிக்கப்படுகின்ருன். இதுவே இந்து சமயத்தின் அடிப்படையாகிய நடுக்கருத்து. வெறுஞ்சொற்களேயும் கொள்கைகளேயும் மாத்திரம் கேட்டு வாழ்க்கை நடத்துவ தற்கு இந்து விரும்புவதில்லே. சாதாரணப் புலன்களோடு கூடிய வாழ்க்கைக்கு அப்பால் வேறு வாழ்க்கைகளிருந்தால், அவற்றை நேரிலே காண வேண்டுமென்று இந்து விரும்புகிருன். சடப்பொரு ளல்லாத சித்து ஒன்று உளதாயின், அதனே நேரிலே அடைய வேண்டுமென்று அவன் நாடுகின்ருன்.

எல்லா ஐயங்களேயும் அழிக்கின்ற ஆண்டவனேக் கட்டாய மாகப் பார்க்க வேண்டுமென்று அவன் கருதுகிருன். ஆன்மாவைப் பற்றியும், கடவுளேப் பற்றியும் இந்திய ஞானி சொல்லுகிற பெரிய சான்று எதுவெனில், ' நான் ஆன்மாவைக் கண்டேன் ; நான் கடவுளேக் கண்டேன்,' என்பது. இதுவே பூரணத்துவத்தை அடைவ தற்கு இன்றியமையாத வழி. குறித்த கொள்கைகளே நம்புவதற்குச் செய்கின்ற முயற்சிகளிலே இந்து சமயம் அமையவில்லே. உண்மை யைக் கண்கூடாகக் கண்டு அதுவே தாளுய் நிற்கின்ற நிலேயே வேண்டப்படுவது.

இடைவிடாத முயற்சியினுலே பூரணத்துவத்தையடைந்து, தெய்விகமாகி, ஆண்டவனேக் கண்டடைவதே இந்துக்களது மார்க் கத்தின் முழு நோக்கமாகும். இங்ஙனம் கடவுளேக் கண்டடைந்து மோட்ச இராச்சியத்திலுள்ள பரிபூரணனுகிய தந்தையைப் போலத் தாமும் பூரணத்துவத்தை அடைவது இந்து சமயத்தின் கருத் தாகும்.

ஒரு மனிதன் பூரணத்துவத்தை அடைந்த பிறகு என்ன வாகின்ருன் ? அவன் எல்லேயற்ற ஆனந்த வாழ்க்கை வாழ் கின்ருன் ; எல்லேயற்ற பரிபூரணமாகிய ஆனந்தத்தை நுகர் கின்ருன் ; மனிதனுக்கு உவகையைத் தரத்தக்க ஒரே பொருளாகிய கடவுளே அடைந்து ஆனந்தத்தை அனுபவிக்கின்ருன்.

இது வரையில் எல்லா இந்துக்களும் ஒரே கருத்து உடைய வர்கள். இந்தியாவிலுள்ள எல்லா மத வகுப்பினருக்கும் இவை பொதுவாகிய முடிபுகள். அங்ஙனமாயினும், பூரணத்துவமானது ஒன்ருக இருத்தல் வேண்டும் ; இரண்டு மூன்ருக இருத்தல் இய லாது. அது குணங்களற்றதாயிருக்க வேண்டும். அந்நிலேயை அடைந்த உயிர் தனி உயிராய் இருத்தல் இயலாது. ஆதலாலே,

ஆன்மாவானது பரிபூரண நிலையை அடையும் பொழுது பிரம்மத்தி
னோடு ஒன்றாகித் தனது இயற்கையும், நிலையும், உண்மையும் ஆண்
டவனோடு ஒருமித்து நிற்கச் சச்சிதானந்தமாகத் தன்னைக் காண்
கின்றது. தனக்குரிய நிலையழிந்து கல்லைப் போலவும் கட்டையைப்
போலவும் ஆகின்றது என ஒரு சாரார் பல முறையும் சொல்லக்
கேள்வியுற்றிருக்கிறோம்.

'' வாட்புண் பட்ட வடுவறி கில்லார்
நாட்புண் கண்டு நகைக்கினும் நகைப்பர்.''

"அது அத்தன்மையது அன்று,'' என நான் உங்களுக்குச்
சொல்கிறேன். இந்தச் சிறிய உடலத்தின் உணர்வை அனுபவிப்பது
இன்பம் எனக் கொள்ளப்படுமாயின், இரண்டு உடலங்களின்
உணர்வை அனுபவிப்பது அதிக உவகையைத் தருவதாகும். உட
லங்களின் தொகை அதிகப்பட அவற்றிலிருந்து எழும் உணர்வும்
அளவின்றிப்பெருகும். எவ்விடத்திலும் பரந்து நிற்கின்ற உணர்வு
கைகூடிய உடனே, இன்பத்தின் எல்லை எய்தப்பட்டதாகும்.

எல்லையற்று எங்கும் நிறைந்திருக்கின்ற தன்மயத்தை அடை
தற்குத் துன்பம் கவலையோடு கூடிய சிறைச்சாலை போன்ற இந்தச்
சிறிய உடல் எண்ணத்தை ஒழித்துவிட வேண்டும். நான் உயிரோடு
ஒன்றுபட்டிருக்கும் பொழுது மாத்திரமே மரணம் ஒழிந்து
போகும். உவகையோடு ஒன்றி நிற்கும் பொழுது கவலை ஒழிந்து
போகும். அறிவோடு ஒன்றி நிற்கும் பொழுது தவறு அனைத்தும்
போய்விடும். இதுவே சாத்திரத்திற்கேற்ற முடிபு. சடம் தனித்
திருத்தல் மயக்க உணர்வாகுமென விஞ்ஞான சாத்திரம் தீர்மானிக்
கின்றது. இடையீடில்லாத சடப்பொருளாகிய கடலிலே தொடர்ந்து
வேறுபட்டுக்கொண்டிருக்கின்ற சிறிய உருவம் எனது உடலமாகும்.
இனி எனது மற்றொரு பாகமாகிய ஆன்மாவும் இரண்டல்லாத
பொருளென்பது ஆராய்ந்து கண்டோரது முடிவு.

ஒன்றுந்தன்மையைக் காணுவதே விஞ்ஞான சாத்திரத்தின்
நோக்கம். பூரணமாகிய ஏகத்துவத்தைக் கண்டடைந்த உடனே
விஞ்ஞான சாத்திரம் தனது எல்லையை அடைந்து மேற்செல்லாது
நின்றுவிடும். எந்த ஒரு பொருளிலிருந்து மற்றெல்லாப் பொருள்
களும் ஆக்கப்படுகின்றனவோ, அதனைக் கண்டு பிடித்த பின்னர்
இரசாயன சாத்திரம் முன்னேற்றமடைவதையொழித்து நின்று
விடும். எல்லா வலிமைகளும் தோற்றுவதற்கு மூலமாயிருக்கின்ற
ஒரு வலிமையைக் கண்டறிந்தவுடனே பௌதிக சாத்திரம் தனது

தொழிலே முடித்ததாகி நிலை பெற்றுவிடும். மரணமே காட்சியா யிருக்கின்ற உலகத்திலே நிலைபெற்ற ஒரே உயிராயுள்ள ஒருவனைக் கண்டறிந்த உடனே சமய ஆராய்ச்சியும் பூரணமாகிவிடும். அவ் வொருவனே என்றும் மாறுதலடைகின்ற உலகத்திலே மாறுபா டின்றி நிலைபெற்ற ஆதாரமாயிருப்பவன். எல்லா ஆன்மாக்களும் தோற்றத்தளவில் வேறு வேருகக் காணப்படுவதற்கு இடமாய் நின்ற ஒரே ஆன்மா அவனே. இருமை பன்மை ஆகிய இவற்றினைக் கடந்து முடிவாகிய ஒருமை அடையப்படுகின்றது. சமயம் அதற்கு அப்பாற்செல்லமாட்டாது. இதுவே விஞ்ஞான சாத்திரத்திற்கும் இலக்கு.

நாளடைவிலே எல்லாச் சாத்திரங்களும் இந்த முடிபுக்கே வர வேண்டுவன. படைப்பு அன்று, இக்காலம் விஞ்ஞான சாத்திரங் களிலே வழங்கப்படுவது; ஒடுங்கியது தோற்றுதல் என்னுங் கொள்கையே. தனது நெஞ்சத்திலே நீண்ட காலமாகப் போற்றி வந்த கொள்கையானது நிறைந்த ஆற்றலுள்ள மொழிகளினுலே விஞ்ஞான சாத்திர முடிபுகளோடு தெளிவுபடுத்தப்படப்போவதைக் கண்டு இந்துவானவன் உவகையடைகின்ருன். தத்துவஞானத் தின் உயரிடங்களிலேயிருந்து பேதை மக்களின் சமய நிலையை நாடிக் கீழ்ப்படிகளுக்கு வருவோமாக. இந்தியாவிலே பலதெய்வ வணக்கம் இல்லை என்பதைத் தொடக்கத்திலேயே நான் உங்க ளுக்குச் சொல்லிவிடுகின்றேன். ஒவ்வொரு தேவாலயத்திலும் வந்து வழிபடுவோர் அங்குள்ள உருவங்களை நோக்கி அவற்றுக்குச் சர்வ வியாபக முதலாகக் கடவுளுக்குள்ள எல்லாக் குணங்களையும் ஏற்றி வழிபாடியற்றுவதை இன்றும் காணலாகும். இது பல தெய்வ வணக்கமாகாது. "சிறப்புத் தெய்வ வணக்கம்" என்பதும் இங்குப் பொருந்தாது. ரோஜா மலருக்கு எப்பேரிட்டு வழங்கினும் அது தனது நறுமணத்தையே தரும். பெயரிட்டு வழங்குதல் தன் னளவிலே விளக்கமாகாது.

நான் சிறுவனுயிருந்த பொழுது ஒரு கிறித்தவப் பாதிரியார் இந்தியாவிலே ஒரு மக்கட்கூட்டத்திற் பிரசங்கஞ் செய்தது இப் பொழுது என் நினைவிற்கு வருகிறது. பல சுவைப்பட்ட விஷயங் களோடு அவர் பின் வரும் விஷயத்தையும் கூறினர்: "வழிபடும் உங்களுடைய உருவத்தை இந்தத் தடியினுல் ஓர் அடி அடித்தால் அது என்ன செய்யும்?" என்ருர். கேட்டு நின்ருேருள் ஒருவர் பாதிரியாரை நோக்கி, "உம்முடைய தேவரை நான் பழித்தால்

அவர் என்ன செய்வார் ?'' என்று துடுக்காகக் கேட்டார். "நீர் இறக்கும்பொழுது தண்டிக்கப்படுவீர்,'' எனப் போதகர் கூறினர். இந்துவும் மாறுத்தரமாக, "நீர் இறக்கும்பொழுது எனது விக்கிரமும் உம்மைத் தண்டிக்கும்,'' என்று கூறினர்.

மரத்தினைப் பழத்தினுல் அறியலாம். உருவ வழிபாடு புரிபவர் என்று சொல்லப்படுவோருள்ளே, ஒழுக்கத்திலும், ஆன்மிக சக்தியிலும், அன்பிலும் தமக்கொருவர் இணையில்லாதாரை நான் கண்டுள்ளேன். "பாவத்திலிருந்து தூய்மை பிறத்தல் கூடுமா ?'' என்னும் எண்ணம் என் மனத்தில் எழுந்தது.

மூடக்கொள்கை மனிதனுக்குப் பெரிய பகையாகும்; பிடிவாதம் அதனினும் இழிந்தது. கிறித்தவன் எதற்காக ஆலயத்திற்குப் போகின்ருன்? சிலுவை ஏன் பரிசுத்தமானது? பிரார்த்தனை செய்யும் பொழுது முகத்தை ஏன் வானத்தை நோக்கித் திருப்புதல் வேண்டும்? கத்தோலிக்க தேவாலயங்களிலே எத்தனையோ உருவங்கள் எதற்காக இருக்கின்றன? புராட்டஸ்தாந்து கிறித்தவர்கள் பிரார்த்தனை செய்யும் பொழுது அவர்களுடைய உள்ளத்திலே எத்தனையோ உருவங்கள் இருப்பது ஏன்? என்னருமைச் சகோதரர்களே, மூச்சு விடாமல் உயிர் வாழ்தல் இயலாது. அது போலவே மானத உருவங்களில்லாமல் எதைப் பற்றியும் நினைத்தல் இயலாது. பிணைப்பு விதியினுலே சடப்பொருள் உருவமானது மானத உருவத்தை உண்டாக்குகிறது. மானத உருவம் சடப்பொருள் உருவத்தைப்பற்றி நிற்கிறது. ஆகையினுலேதான் இந்து வழிபாடியற்றும் பொழுது புறத்தேயுள்ள உருவத்தை உபயோகப்படுத்துகிருன். எந்தத் தெய்வத்துக்கு வழிபாடு செய்கிருனே, அதனை மனத்திலே அமைத்துக்கொள்ளுவதற்குப் புறவுருவம் உதவியாகின்றது. உருவம் தெய்வமன்று என்றும், சர்வ வியாபியன்று என்றும் நீங்கள் அறிவது போலவே, அவனும் அறிந்திருக்கின்ருன். உலகத்திலுள்ளோருக்குச் சர்வ வியாபி என்பது என்ன கருத்தினை உண்டாக்குகின்றது? அஃது ஒரு வெறுஞ்சொல்; ஒரு குறியீடு. ஆண்டவனுக்குப் பரப்பு உண்டா? இல்லாவிடின், 'சர்வ வியாபகன்' என்னும் மொழியைச் சொல்லுமிடத்துப் பரந்திருக்கின்ற ஆகாயம், வெற்றுவெளி என்னும் இவற்றினையே கருதுகிருேம்.

நமது மனத்தின் அமைப்பினுலே நாம் எல்லையற்ற பொருளை நினைக்கின்ற நினைவுகள் நீல ஆகாயத்தின் உருவத்தையும், கடலின் வடிவத்தையும் தம்மோடு உடன் கொண்டு வருகின்றன. இவ்

வண்ணமே, தேவாலயம், மசூதி, சிலுவை என்னும் இவற்றின் உருவங்கள் தூய்மையைப் பற்றிய எண்ணத்தோடு இயற்கையாகவே தொடர்புடையன. இந்துக்கள் தூய்மை, உண்மை, சர்வவியாபகம் என்னும் இத்தகைய எண்ணங்களோடு வேறு வேருகிய உருவ வேறுபாடுகளை ஒன்றுபடுத்தியிருக்கின்ருர்கள். சிலர் தமது வாழ்க்கை முழுவதையும் ஓர் ஆலயத்திலுள்ள வடிவத்திற்கே செலுத்தி அந்நிலையினின்றும் உயர்வடையாது இருக்கின்றனர். ஏனெனில், சில கொள்கைகளை ஒத்துக்கொள்ளுவதும் தம்மினத்தாருக்கு நலம் புரிவதுமே அவர்களால் சமயமென்று கொள்ளப்படுகின்றன. இந்துக்களின் சமயம் முற்றும் அனுபூதியை அடிப்படையாகக் கொண்டது. தெய்வத்தை நேரிற் கண்டு உணர்வதனுல், மனிதன் தெய்வத்தை அடைகின்ருன். கோயில்களும், மேலும் உருவங்களும், நூல்களும் ஆன்மிக இளம்பருவத்திலே அவனுக்கு ஆதாரமாயிருக்கின்றன. ஆனுல், அவன் மேலும் முன்னேற்றமடைய வேண்டுபவன்.

சடவணக்கமாகிய வெளி வணக்கம் மிகக் கீழாகிய நிலை. உயர்வடைய முயன்று செய்யும் மானசீக வணக்கம் அடுத்தபடி. ஆண்டவனை நேரிற்கண்டு அடைவது மிக உயர்ந்த நிலை. விக்கிரகத்தின் முன்னே முழந்தாட்படியிட்டு நிற்கின்ற மனிதன், ஆண்டவனையே வழிபடுகின்ருன். "கதிரவனுடைய ஒளி அவனுக்கு இணையாக மாட்டாது. மதியும் அவனுக்கு இணையன்று; விண்மீன்களும் இணையாகமாட்டா. மின்னல் அவனது தோற்றத்தைக் காட்ட மாட்டாது. நாம் அக்கினி என்று சொல்லுவதும் அவனைப் புலப்படுத்த மாட்டாது. அவன் மூலமாக அவையனைத்தும் ஒளி பரப்புகின்றன," எனக்கூறி வழிபடுகின்ருன். ஆயினும், அவன் பிறருடைய விக்கிரகத்தை நிந்திப்பதில்லை; பிறருடைய வழிபாட்டைப் பாவமென்று சொல்வதில்லை. அவ்வழிபாட்டினிடத்தே வாழ்க்கைக்கு வேண்டிய ஒரு படியை அவன் காண்கின்ருன். "குழந்தை மனிதனுக்குத் தந்தை." குழந்தைப்பருவம் பாவமுடையதென்ருவது, வாலிபப் பருவம் பாவமுடையதென்ருவது சொல்லுவது ஒரு கிழவனுக்குச் சரியாகுமா?

உருவத்தின் உதவியைக்கொண்டு மனிதனுனவன் தனக்கு உரிமையாகிய தெய்வத் தன்மையை அடைதல் இயலுமாயின், அதனைப் பாவமென்று சொல்லலாமா? அந்தப்படியைக் கடந்த பின்னர் அதனைப் பிழையென்று சொல்லலாமா? மனிதன் தவற்றி

லிருந்து உண்மைக்குச் செல்வதில்லை. கீழான உண்மையிலிருந்து மேலான உண்மைக்குச் செல்கிறனென்பது இந்துவின் கொள்கை. மிகக் குறைந்த பூத வணக்கத்திலிருந்து மிகவுயர்ந்த அத்வைத வாதம்வரையும் உள்ள எல்லாச் சமயங்களும் எல்லையற்ற அகண்டத்தினை மனிதனுடைய ஆன்மா பற்றுவதற்குச் செய்கின்ற முயற்சிகளேயாம். பிறப்பு, சம்பந்தம் என்னும் இவற்றினுலேயே வேறு வேருகிய மார்க்கங்கள் நிச்சயிக்கப்பட்டன. முன்னேற்றமடையும் மார்க்கத்திலே இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு படியாய் அமைந்துள்ளது. ஒவ்வோர் ஆன்மாவும் மேலும் மேலும் உயர்ந்து செல்கின்ற இளங்கழுகுக்குச் சமமாகும். அது உயரச் செல்லச் செல்ல மேலும் மேலும் பலமடைந்து, ஈற்றிலே ஒளிமிக்கஞாயிற்றை அடையும்.

வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பது இயற்கையிற் பொருந்திய அமைப்பு. இந்து இதைக் கண்டறிந்திருக்கிறன். மற்றச் சமயங்களெல்லாம் குறிப்பிட்ட சில கொள்கைகளை நிறுவி, அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி மக்கட்சமுதாயத்தை வற்புறுத்து கின்றன. மக்கட்சமுதாயத்தின் முன்னிலையிலே ஜாக்கு, ஜான், ஹென்றி என்னும் அனைவருக்கும் பொதுவாக ஒரே அங்கியைக் கொடுப்போமாயின், அவ்வங்கி ஜானுக்கோ, ஹென்றிக்கோ பொருந்தாது போதல் கூடும். அப்பொழுது அவர்கள் தமது உடலை மூடுவதற்கு அங்கியில்லாது செல்ல வேண்டுவதுதான். பாரமார்த்திக நிலையிலுள்ள பரம்பொருள் வியவகார நிலையிலுள்ள பொருள்களின் மூலமாக அடையப்படுவது என்பதை இந்துக்கள் கண்டிருக்கிறர்கள். உருவங்களும், சிலுவைகளும், இளம்பிறைகளும் குறியீடுகள் மாத்திரமாய் இருக்கின்றன; ஆன்மிக எண்ணங்களைத் தொங்கவிடுவதற்குக் கொழுக்கள் போன்றிருக்கின்றன. இத்தகைய உதவி அனைவருக்கும் வேண்டப்படுவதன்று. ஆயினும், இதனை வேண்டாதவர் வேண்டி நிற்போரை நோக்கி அவர் செல்லும் வழி தவறு எனக் கூறுவது முறையாகாது. மேலும், இவை இந்து சமயத்திற்கு இன்றியமையாதனவுமில்லை.

இவ்விடத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன்: இந்தியாவிலே உருவ வணக்கமென்பது அஞ்சப்படுவதொன்றன்று. ஏனைய இடங்களிலிருந்தது போல அது விலைமகளை எழுப்பும் விடுதியுமன்று. வளர்ச்சியுறாத மனங்கள் உயர்ந்த ஆன்மிக உண்மைகளைப் பற்றும் வண்ணம் செய்கின்ற முயற்சி அதுவாகும். இந்துக்களிடத்

திலே குற்றமிருக்கலாம். அவர்கள் விதிக்குப் புறநடையாக ஒழுக லாம். ஆயினும், ஒன்று மாத்திரம் உண்மை. அவர்கள் தங்களது உடலைத் துன்புறுத்துவதேயன்றி அயலாருடைய கழுத்தை ஒரு போதும் வெட்டமாட்டார்கள். மதப் பிடிவாதமுள்ள இந்து தீ மூட்டித் தன்னையே தகித்தல் செய்வான். பிறரைத் தகிப்பதற்கு (இடைக்காலத்தில் ஐரோப்பாவிலிருந்த மதவெறி பிடித்த மக்கள் மூட்டிய) இன்குவிஸிஷன் (Inquisition) போன்ற தீயை இந்து மூட்டுவதில்லை. மாந்திரிகக் கிழவிகளை எரித்த குற்றம் கிறித்தவ சமயத்தைச் சாராத தன்மை போல இத்தகைய நிகழ்ச்சிகளும் பிற சமயங்களை வழுப்படுத்த மாட்டா.

உலகிலுள்ள சமயபேதம் அனைத்தும் பல்வேறு வகுப்பின ராகிய ஆடவரும் பெண்டிரும் வேறு வேறு வழிகளின் மூலமாக ஒரே எல்லையை அடையும் பொருட்டு முயல்கின்ற முயற்சி போல் வன என்பது இந்துவின் கருத்தாகும். சடத்தோடு சம்பந்தப்பட்ட மனிதனிலிருந்து தெய்வத்தை உருப்படுத்துவதே சமயங்களின் இலக்கு. எல்லோருக்கும் உண்ணின்று உணர்த்துபவர் ஒரே கடவுளே. அப்படியாயின், மறுதலைப்பட்ட கொள்கைகள் பல இருப்பது ஏன்? அவை தோற்ற மாத்திரையாய் உள்ளன என இந்து சொல்கிறுன். ஒரே உண்மை வெவ்வேறு நிலைகளால் ஏற் பட்ட பல வேறு இயற்கைகளுக்கு ஏற்புடைத்தாகி நிற்பதனுல் வேறு பாடுகள் பலவாயின.

வெவ்வேறு நிறங்களையுடைய கண்ணுடிகளின் மூலமாக ஒரே ஒளி வருகிறது. பொருத்தமுறுவதற்குச் சிறு சிறு வேறுபாடுகள் இன்றியமையாதன. எல்லாப் பொருள்களிலும் உண்ணின்ற நிலை யிலே ஒரே உண்மை ஆணை செலுத்துகின்றது. "முத்துமாலை யினூடே கோத்து நிற்கின்ற நூல்போல எவ்வெவ்விடத்து மிக உயர்ந்த தூய்மையும் சிறந்தவல்லமையும் தோற்றி மக்களை உயர்த் தித் தூய்மைப்படுத்துகின்றனவோ, அவ்வவ்விடத்திலெல்லாம் நான் இருக்கிறேன்," எனப் பகவான் தமது கிருஷ்ண அவதா ரத்திலே எல்லா இந்துக்களுக்கும் இயம்புகிருர். இதனுல் எய்திய பயன் என்ன? வடமொழித் தத்துவ சாத்திரமனைத்தினையும் புரட் டிப் பார்த்தாலும், இந்துக்களைத் தவிரப் பிறர் முத்தியை அடைய மாட்டார் என்னும் கருத்தமைந்த சொல், ஒரிடத்திலும் காணப் படுவதில்லை. உண்டென்று சொல்லுவாரோடு வாதித்து வெல்ல நான் சித்தமாயிருக்கிறேன். "நமது சாதிக்கும் சமயத்துக்கும்

புறம்பாகவும் பூரண நிலையை அடைந்த மனிதர் உளர்,'' என வியாசபகவான் சொல்கிறார். இன்னுமொரு குறிப்பு எழுகின்றது: ஆண்டவனையே நிலையமாகக் கொண்ட தத்துவ ஞானத்தை உடையவனாகிய இந்து, அஞ்ஞேயவாதமாகிய பௌத்தத்தையும் நாத்திகவாதமாகிய சமணத்தையும் எவ்வண்ணம் நம்புதல் கூடும்? பௌத்தரும் சமணரும் தெய்வத்தைச் சார்ந்து நிற்பதில்லை. மனிதனிலிருந்து தெய்வத்தை உருப்படுத்துகின்ற நீர்மையதும், எல்லாச் சமயங்களுக்கும் நிலைபேறுள்ள நடுவாகியமைந்ததுமான உண்மையினையே இந்தச் சமயங்கள் சார்ந்து நிற்கின்றன. இவை தந்தையைக் காணவில்லை; ஆயினும், மைந்தனைக் கண்டிருக்கின்றன. மைந்தனைக் கண்டவன் தந்தையையும் கண்டவனே ஆவன்.

அன்புள்ள சகோதரர்களே, இதுவே இந்துக்களின் சமயக் கொள்கைகளைப் பற்றிய சுருக்கமான குறிப்பாகும். இந்து தான் செய்துகொண்ட ஏற்பாடுகளையெல்லாம் நிறைவேற்றாமல் இருக்கலாம். ஆனால், உலகனைத்தினுக்கும் ஒரு சமயம் இருக்கவேண்டுமாயின், அஃது இடத்தினாலும் காலத்தினாலும் எல்லைப்படுத்தப்படாததாய் இருக்கவேண்டும். தான் போதிக்கின்ற தெய்வத்தைப் போல அச்சமயம் அகண்டமாக இருக்கவேண்டும். கதிரவன் தன் கதிர்களை நல்லோரிடத்தும், தீயோரிடத்தும், கிருஷ்ணனை வழிபடுவோரிடத்தும், கிறித்துவை வழிபடுவோரிடத்தும் ஒரே தன்மையாகப் பரப்புதல் போல, பிராம்மணம், பௌத்தம், கிறித்தவம், மகமதியம் என்னும் வேறுபாடில்லாததாய் இவை அனைத்தினையும் உள்ளடக்கியதாய், வளர்வதற்கு இன்னும் இடமுள்ளதாய், அகண்டமாகிய தன் கைகளினாலே அனைத்தினையும் தழுவி நிற்கும் அச்சமயமானது ஒரு சாராக விலங்கினத்தினின்று வேறுபடாத நாகரிகமற்ற மனிதருக்கு இடந்தந்து, மற்றொரு சாராக 'இவர் தெய்வமோ!' என மக்கள் ஐயப்படத் தக்க உயர்வுடையோருக்கும் இடந்தந்து நிற்றல் வேண்டும். மத கண்டனத்திற்கும் ஒடுங்கிய எண்ணங்களுக்கும் இடந்தாராது, எல்லா ஆடவரிடத்தும் பெண்டிரிடத்தும் தெய்வத்துவத்தைக் கண்டு மக்கள் தங்கள் உண்மையாகிய தெய்வ நிலையை அடைவதற்கு உதவி புரிந்து நிற்பது அந்தச் சமயத்தின் இலக்காகும்.

அத்தகைய சமயத்தை உதவுவீர்களாயின், எல்லா மக்களும் உங்களைப் பின்பற்றிச் செல்வார்கள். அசோகனுடைய மன்றம் பௌத்த மதத்தைப் பரப்பும் மன்றமாய் இருந்தது. அக்பருடைய

சபை மனை முற்றத்திலே கூடிய சபையாகும். எல்லாச் சமயங்களிலும் ஆண்டவன் இருக்கின்றான் என்னும் உண்மையைப் பூகோளத்தின் பல திசைகளுக்கும் பரப்பும் தொழில் அமெரிக்காவிற்கே உரியதாயிற்று.

இந்துக்களால் 'பிரம்மம்' எனவும், சொராஸ்திரியரால் 'அஹுரமஸ்தா' எனவும், பௌத்தர்களால் 'புத்தர்' எனவும், யூதர்களால் 'எகோவா' எனவும், கிறித்தவர்களால் 'பரமமண்டலத்திலுள்ள தந்தை' எனவும் வழங்கப்படுகின்ற தெய்வம், உங்களது மேலான எண்ணம் நிறைவேறும்படி உங்களுக்கு வலிமையைத் தருவதாக! விண்மீன் கிழக்கிலே எழுந்தது; அது மேற்கு நோக்கி நேராகச் சென்றது; சில பொழுது மங்கலாகவும், சில பொழுது ஒளி மிக்கதாகவும் சென்று உலகத்தைச் சுற்றியது. இப்பொழுது மறுபடியும் கிழக்குத் திசையிலே சம்பல் நதியின் கரையிலே முன்னையிலும் ஆயிர மடங்கு கதிர் விட்டு உதிக்கின்றது.

சுதந்தரத்திற்குத் தாயகமாகிய கொலம்பியாவே, நீ வாழ்க! அயலாருடைய குருதியில் கையினைத் தோய்க்காது, அயலாருடைய பொருளைக் கொள்ளையடித்துச் சுருக்க வழியிலே பொருள் ஈட்ட எண்ணாது, சமரசமென்னும் கொடியினைப் பற்றி நாகரிகமென்னும் படையின் முன்னணியிலே செல்வது உனக்கே உரியதாயிற்று!

சமயபோதனை இந்தியாவுக்குப் பெருந்தேவையன்று

[1895-ஆம் ஆண்டு, செப்டெம்பர்த் திங்கள், 20-ஆம் நாள் அருளிச் செய்தது.]

நன்முறையாகக் குற்றங் கூறுமிடத்து அதனை ஏற்றுக்கொள்ளுவதற்குக் கிறித்தவர்கள் என்றும் ஆயத்தமாயிருக்க வேண்டும். நான் சிறிது குற்றங்கூறினால், அதனை நீங்கள் பொருட்படுத்தமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். கிறித்தவர்களாகிய நீங்கள் அஞ்ஞானிகளுடைய ஆன்மாவை இரட்சிக்கும்பொருட்டுப் பிரசாரகர்களை அனுப்பப் பெரிதும் விரும்புகிறீர்கள். ஆனால், அஞ்ஞானிகளுடைய உடலைப் பட்டினியிலிருந்து பாதுகாப்பதற்கு நீங்கள் ஏன் முயலுவதில்லை? இந்தியாவிலே கொடிய பஞ்சங்கள் நடந்தபொழுது, ஆயிரக்கணக்கானோர் பட்டினியினாலே இறந்தனர். ஆயினும், கிறித்தவர்களாகிய நீங்கள் அதற்கு ஒன்றும் செய்யவில்லை. இந்தியா முழுவதிலும் ஆலயங்களை உண்டாக்குகிறீர்கள். ஆயினும், கிழக்கு நாடுகளிலே சமயத்துக்குப் பஞ்சமில்லை; இந்தியாவிலிருக்கின்ற இலட்சக் கணக்கான மக்கள் உணவு கிடையாது தொண்டை காய்ந்து வருந்துகின்றார்கள். அவர்கள் 'உணவைத் தா' என்கிறார்கள்; நாம் கொடுப்பனவோ கற்கள். பட்டினியால் வருந்துகிற மக்களுக்குச் சமய போதனை செய்யப்புகுவது பெரிய அவதூறு ஆகும். பசித்து வாடிக்கிடக்கின்ற மனிதனுக்குத் தத்துவ ஞானம் போதிக்கப் புகுவது அவனை நிந்திப்பதாகும். இந்தியாவிலே பொருளுக்காகச் சொற்பொழிவு செய்கின்ற குரு, சாதியை விட்டு விலக்கப்படுவான். மக்கள் அவனைப்பார்த்துக் காறித் துப்புவார்கள். வறுமையுற்ற எனது நாட்டு மக்களுக்காக உதவி தேடும்பொருட்டு நான் இங்கு வந்தேன். கிறித்தவ நாட்டிலே கிறித்தவர்களிடமிருந்து புறச் சமயத்தார் பொருட்டு உதவியை நாடல் எத்தனை அரிது என்பதை முற்றும் உணர்ந்து கொண்டேன்.

புத்த சமயம் இந்து சமயத்தின் நிறைவு

[*1893-ஆம் ஆண்டு, செப்டெம்பர்த் திங்கள், 26-ஆம் நாள் அருளிச் செய்தது.*]

நான் பௌத்தன் அல்லேன். இதனை நீங்கள் அறிவீர்கள். ஆயினும்,ஒருவகையாக நான் பௌத்தனே. சீனு, ஜப்பான், இலங்கை ஆகிய இடங்களில் புத்தருடைய போதனைகள் பின்பற்றப் பட்டு வருகின்றன. இந்தியா அவரைக் கடவுளுடைய அவதார மென்று வழிபாடு செய்கின்றது. நான் புத்த சமயத்தைக் குறை கூறப்போகிறேனென்று இப்பொழுது சொல்லக் கேட்டீர்கள். ஆனுல், நான் கருதுவது இதுவென அறிவிக்க விரும்புகிறேன்.

இவ்வையகத்திலே கடவுளுடைய அவதாரமென்று யாரை நான் வழிபடுகின்றேனே, அவர்மீது ஒரு பொழுதும் குற்றங்கூறப் புக மாட்டேன். புத்தரைப்பற்றி நாங்கள் கொள்ளுகிற கருத்து யாதெனின், அவருடைய போதனைகள் அவருடைய மாணுக்கர் களாலே தக்கமுறையில் அறிந்துகொள்ளப்படவில்லைஎன்பதேயாம். வேதங்களில் கூறப்படும் சமயமாகிய இந்து சமயத்துக்கும் இக் காலத்தில் புத்த சமயமென்று சொல்லப்படும் சமயத்திற்கும் உள்ள தொடர்பு யூத மதத்திற்கும் கிறித்தவ மதத்திற்கும் இடையேயுள்ள தொடர்பினை நிகர்த்தது. இயேசு கிறித்து யூதராயிருந்தார். சாக்கிய முனிவர் இந்துவாயிருந்தார். யூதர்கள், இயேசுகிறித்துவைத் தள்ளி விட்டார்கள்; சிலுவையில் அறைந்துவிட்டார்கள். இந்துக்கள், சாக்கிய முனிவரைத் தெய்வமெனக்கொண்டு வழிபடுகின்றுர்கள். இக்காலத்துப் புத்த சமயத்துக்கும் புத்த தேவருடைய போதனைகள் என இந்துக்களாகிய எங்களாற் கொள்ளப்படுவனவற்றுக்கும் இடையேயுள்ள முக்கிய வேறுபாடுகளாவன: சாக்கிய முனிவர் புதிதாக ஒன்றனையும் ஓதவில்லை. இயேசு நாதரைப்போல, அவரும் அழிப்பதற்கு அன்றி, நிறைவேற்றுவதற்காகவே வந்தார். பழைய வராகிய யூதர் இயேசுநாதரை அறிந்துகொள்ளவில்லை. புத்தரையோ என்றுல், அவர் சீடர்களே அறிந்துகொள்ளவில்லை. பழைய ஏற் பாட்டின் நிறைவை யூதர்கள் அறிந்துகொள்ளாததுபோல, இந்து சமய உண்மைகளின் நிறைவை பௌத்தர்கள் அறிந்துகொள்ள வில்லை. சாக்கிய முனிவர் அழிக்க வரவில்லை; நிறைவேற்ற வந்தா ரென்று மீண்டும் மொழிகின்றேன். இந்துக்களினது சமயத்தின்

நேராகிய நிறைவு அவருடைய போதனைகளேயாகும்.

இந்துக்களினது சமயம் கர்ம காண்டம், ஞான காண்டம் என இருவகைப்பட்டது. ஞான காண்டம் சந்நியாசிகளாலே சிறப்புறக் கற்கப்படுவது. அதற்குச் சாதி வேற்றுமையில்லை. உயர்ந்த சாதியிலுள்ள மனிதனும் மிகத் தாழ்ந்த சாதியிலுள்ள மனிதனும் இந்தியாவிலே சந்நியாசிகளாகலாம். அப்பொழுது இருவரும் சாதியிலே சமத்துவம் அடைகின்றனர். சமயத்திலே சாதி வேறுபாடில்லை. சாதி என்பது மக்கட்சமுதாயக் கட்டுப்பாட்டுக்கு மாத்திரம் வேண்டுவது. சாக்கிய முனிவர் துறவியராய் இருந்தார். வேதங்களிலே மறைந்து கிடந்த உண்மைகளை எல்லாம் தெரிந்தெடுத்து உலகெங்கும் பரப்பிய பெருந்தன்மை அவருக்கு உரியது. சமயப் பிரசாரஞ்செய்வதை முதன்முதல் உலகிலே நடைமுறைக்குக் கொண்டு வந்தவர் அவரே. மனிதர் ஒரு சமயத்திலிருந்து மற்றொரு சமயத்துக்கு மாறலாம் என்னும் எண்ணத்தை முதன்முதல் நினைத்தவர் அவரே. அவர் அனைவரிடமும் வியப்புறத்தக்க இரக்கமுடையவராய் இருந்தார்; சிறப்பாகப் பேதைகளிடத்தும் ஏழைகளிடத்தும் அன்புடையவராய் இருந்தார். இதுவே அவருடைய பெரிய மகிமை. புத்தருடைய சீடர் சிலர் பிராம்மணர். அவர் போதித்த காலத்தில் வடமொழி இந்தியாவிலே வழக்குமொழியாயில்லை. அது கற்றோர் மாத்திரம் படிக்கின்ற புத்தகங்களிலுள்ள மொழியாயிருந்தது. புத்தருடைய பிராம்மணச் சீடர் சிலர் அவருடைய போதனைகளை வடமொழியிலே மொழிபெயர்க்க முயன்றனர். அவர் அச்சீடர்களை நோக்கி, "நான் ஏழைகளுக்காக வந்தேன்; பொது மக்கட்காக வந்தேன்; பொது மக்களினுடைய மொழியிலேயே பேசக்கடவேனாக," என்றார். அக்காலத்திலே இந்தியாவிலே வழங்கிய வழக்குமொழியிலே அவருடைய போதனைகளிற் பெரும்பாகம் எழுதப்பட்டிருக்கின்றது.

தத்துவ ஞானம் எது பேசினும் பேசுக; பிரமாண வாதம் எதனைக் கொள்ளினும் கொள்ளுக; உலகிலே மரணம் என்பது இருக்கும் வரையும், மானிட இதயத்திலே வலிமையின்மையிருக்கும் வரையும், அந்த வலிமையின்மையினாலே மானிடனுடைய இதயத்திலிருந்து அழுகுரல் எழும் வரையும் ஆண்டவனிடத்து நம்பிக்கை இருந்தே தீரும்.

தத்துவ ஆராய்ச்சியிலே புத்தபகவானுடைய சீடர்கள் வேதங்களாகிய நித்திய மலைகளை நொறுக்க முயன்றார்கள். அவர்களால்

அவற்றை நொறுக்க முடியவில்லை. ஆடவரும் பெண்டிரும் அன்போடு பின்பற்றிவந்த நித்தியமாகிய கடவுளைக் குறித்த எண்ணத்தைப் பௌத்தர்கள் கெடுத்துவிட்டார்கள். இதன் பயனாகப் புத்த மதம் இந்தியாவிலே தானே அழிந்துபோயிற்று. புத்த மதத்தின் பிறப்பிடமாகிய இந்தியாவிலே, இந்நாளிலே தன்னைப் பௌத்தனென்று சொல்லுவோன் ஒருவனுமிலன்.

பிராம்மண சமயமும் பிறரைத் திருத்த முயல்கின்ற முயற்சி, வியப்புறும் இரக்கம், யாவர்மேலும் அன்பு என்னும் இத்தகைய அற்புத நலங்களை இழந்துவிட்டது. இந்நலன்கள் புத்த மதத்தினால் இந்தியப் பொது மக்களுக்குத் தரப்பட்டவை. இவற்றினாலே இந்திய மக்கட்சமுதாயம் மிக்க சீர்திருத்தம் அடைந்திருந்தது. அக்காலத்திலிருந்த யவனபுரத்துச் சரித்திர ஆசிரியர் ஒருவர் அக்காலத்து இந்தியாவைப்பற்றி எழுதும்பொழுது, ‘இந்துக்களுக்குள்ளே பொய் சொல்லுவோர் ஒருவருமிலர்; இந்தியப் பெண்களுள்ளே கற்பு நெறி தவறினோர் ஒருவருமிலர்,’ என எழுதினார்.

புத்த சமயமின்றி இந்து சமயம் வாழமாட்டாது. இந்து சமயமின்றிப் பௌத்தமும் வாழமாட்டாது. இவ்விரு சமயமும் பிரிந்து நிற்பது காரணமாக எவ்வுண்மை உணர்த்தப்படுகிறதெனின், பௌத்தராயினோர் பிராம்மணரது மூளை வலிமையும் தத்துவ ஆராய்ச்சியுமின்றித் தனித்து நிற்றல் கூடாதவாறுபோலப் பிராம்மணர்களும் பௌத்தர்களுடைய இதயமின்றித் தனித்து நிற்கமாட்டார்களென்னும் உண்மை ஈண்டு உணர்த்தப்படுகின்றது. பௌத்தரும் பிராம்மணரும் பிரிந்தமையே இந்தியாவினுடைய வீழ்ச்சிக்குக் காரணம். ஆதலாலேதான் இந்தியா முப்பது கோடிப் பிச்சைக்காரருக்கு உறைவிடமாயிருக்கிறது; கடந்த ஆயிரம் ஆண்டுகளாக வெற்றி கொள்வோருக்கு அடிமையாய்க் கிடக்கிறது. ஆதலால், பிராம்மணனது அற்புதமான புத்தி சாதுரியத்தோடு பெரியாராகிய புத்தர்பாற் காணப்பட்ட அன்புள்ள இதயம், மேன்மை தங்கிய ஆன்மா, மனிதத் தன்மையை உண்டாக்கும் அற்புத வலிமை என்னும் இவற்றினை இணைத்து, ஒன்று கூட்டுவோமாக!

இறுதிக்கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவு

[*1893-ஆம் ஆண்டு, செப்டெம்பர்த் திங்கள், 27-ஆம் நாள் அருளிச் செய்தது.*]

உலகிற்குப் பொதுவாகிய சர்வசமயப் பெருமன்றம் நிறைவு பெற்ற நிகழ்ச்சியாய் முடிந்துவிட்டது. இரக்கமுள்ள தந்தையாராகிய கடவுள் அதற்காக முயற்சி செய்தோருக்கு உதவி புரிந்து அவர்களது தன்னல விருப்பற்ற தொண்டினுக்கு வெற்றி மௌலி சூட்டினர்.

இந்த அற்புதமான கனவினைத் தமது நிறைந்த சிந்தையினுலும், உண்மை விழைவினுலும் முதலிலே கனவாகக் கண்டு பின்பு காரியமாக்கிய நல்லோருக்கு எனது நன்றி உரியதாகுக! இம்மேடையினின்றும் அன்பு மொழியாம் மாரியைச் சொரிந்து அதனைப் பெருக்கெடுக்கும்படி செய்தோருக்கு எனது நன்றி உரியதாகுக! அறிவின்மிக்க இச்சபையிலிருந்து என்பால் என்றும் மாரு அன்பு காட்டிச் சமய சமரசத்துக்கு உரிய எண்ணங்களை நன்கு மதித்த அறிஞருக்கு எனது நன்றி உரியதாகுக! இடையிடையே இவ்வின்னிசையோடு சில பகை நரம்புகளின் ஒலிகளும் கேட்கப் பட்டன. அவற்றுக்கும் எனது நன்றி உரியதாகுக! வேறுபட்டு நின்ற காரணத்தினுலே ஒற்றுமைப்பாலதாகிய சமரசத்தினை அவை மிகவும் இனிமையாக்கிவிட்டன.

சமய பேதங்களின் ஒற்றுமைக்கே இடமாகிய பொதுநலத்தைப் பற்றிப் பல குறிப்புகள் சொல்லப்பட்டன. எனது சொந்தக் கொள்கையைப்பற்றி இப்பொழுது நான் சொல்லப் புகவில்லை. இத் தகைய ஒற்றுமை ஒரு சமயத்தின் வெற்றியினுலும் ஏனையவற்றின் அழிவினுலும் எய்துமென நம்புவோர் யாரேனுமிருப்பின், அன்னுருக்கு நான் சொல்லுவது ஒன்று உண்டு: அஃதாவது, “சகோதரரே, நீர் கொண்ட நம்பிக்கை நிறைவேரு நீர்மையது,” என்பது. கிறித்தவன் இந்துவாக வரவேண்டுமென்று நான் விரும்புகிறேனு? ஆண்டவர் அங்ஙனம் நிகழாது தடுப்பாராக! இந்துக்களோ, பௌத்தர்களோ கிறித்தவராக வேண்டுமென்று நான் விரும்புகின்றேனு? ஆண்டவர் அதனையும் தடுப்பாராக!

விதை பூமியிலே விதைக்கப்படுகிறது; மண்ணும் காற்றும் நீரும் அதனைச் சூழ்ந்திருக்கின்றன. விதையானது மண், காற்று,

நீராகின்றதா ? இல்லே. அது ஒரு செடியாகின்றது ; தனக்குரிய வளர்ச்சி விதிக்கு இயைய விருத்தியடைகின்றது ; காற்றையும், மண்ணேயும், நீரையும் உண்டு அவற்றைத் தனக்கு வேண்டிய சத்துப் பொருளாக்கி ஒரு செடியாய் வளர்கின்றது.

சமயம் வளர்வதும் அவ்வாறே. கிறித்தவன் இந்துவாகவோ, பௌத்தனுகவோ வரவேண்டுவதில்லே. இந்துவோ, பௌத்தனே கிறித்தவனுக வேண்டுவதில்லே. ஒவ்வொரு மதமும் மற்றதனுடைய நல்ல பகுதிகளே உட்கொண்டு தனக்குரிய வளர்ச்சி விதியின்படி தனது தன்மையைப் பாதுகாத்து வளர்தல் வேண்டும்.

சர்வசமய ஆராய்ச்சிக் கழகம் உலகிற்குச் சிறப்புறக்காட்டிய உண்மை எதுவெனின், ‘ தூய்மை, இரக்கம் என்னுமிவை உலகி லுள்ள எந்தச் சமயத்துக்கும் தனி உரிமையாகா ; அனேத்தினுக் கும் பொதுவாகவுள்ளன,’ என்பது. எல்லாச் சமய முறைகளும் மிகவுயர்ந்த ஒழுக்கமுடைய ஆடவரையும் பெண்டிரையும் உண் டாக்கியிருக்கின்றன. இந்தச் சான்று இவ்வாருகத் தனது சொந்த சமயம் மாத்திரம் தனித்துப் பிழைத்திருக்க ஏனேய சமயங்கள் அழிந்துவிடுமென யாரேனும் பகற்கனவு காண்பாராயின், எனது மனப்பூர்வமாக நான் அவர்பால் இரக்கப்படுகின்றேன் ! ஏனெனில், ஒவ்வொரு சமயத்தின் கொடியிலும், “ உதவி செய் ; போரிடாதே ; ஒன்றுபடுத்து ; அழித்துவிடாதே ; சமரசமும் சாந்தமும் வேண் டும் ; வேறுபாடு வேண்டா,” என எழுதியிருப்பதை நான் அவ ருக்குக் காட்டுவேன்.

இந்தியாவின் பண்பாடும் அதன் இடர்ப்பாடுகளும்

இராமாயணம்

[1900-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், 31-ஆம் நாள் காலிபோர்னியாவில் பாஸதேனா என்னும் நகரத்து ஷேக்ஸ்பியர் கழகத்தில் ஆற்றப்பட்ட சொற்பொழிவு.]

வடமொழியில் மிகு தொன்மை வாய்ந்த இரண்டு சிறந்த இதிகாசங்கள் உள. உண்மையை உரைக்குமிடத்து, நூற்றுக் கணக்கில் இவை போன்ற பெருங்காப்பியங்கள் இல்லாமலில்லை என்று கூறலாம். வடமொழியும் அதன் இலக்கியமும் தொன்று தொட்டு இது வரையில் இலங்கிக்கொண்டு வருகின்றன என்று மொழியினும், ஈராயிரம் ஆண்டுகளாக இம்மொழி பேச்சு வழக்கிறந்துவிட்டது. இராமாயணம், மகாபாரதம் என்னும் இரண்டு பேரிதிகாசங்களைப்பற்றி உங்கட்கு இப்பொழுது கூறப்போகின்றேன். பண்டைக்காலத்து இந்திய மக்களுடைய பழக்க வழக்கங்களும், ஒழுக்க முறைகளும், மக்கட்சமுதாயத்தின் நிலையும், நாகரிகமும், மற்றைய பண்பாடுகளும் இவற்றில் உருப் பெற்றுத் திகழ்கின்றன. பேரிதிகாசங்களுள் மிகு பழமை பெற்றது இராம சரிதத்தைச் சித்திரிக்கும் இராமாயணமாகும். இவ்விதிகாசத்திற்கு முன்பு ஏதோ ஒரு வகையான கவிதை இலக்கியம் இருந்தது என்பது உண்மையே. வேதங்களின் பெரும்பகுதிகளும், இந்துக்கள் புனிதமாகப் போற்றும் ஆன்மிக நூல்களும் ஏதோ ஒரு முறையான செய்யுள் நடையில் எழுதப்பட்டுள்ளன. ஆனால், இவ்விதிகாசந்தான் கவிதையின் தொடக்கம் என்பது எல்லோருடைய ஒருமித்த முடிவாகும்.

கவிஞராயும் ஞானியராயும் திகழ்ந்த அவரது பெயர் வான்மீகி என்பதாகும். கவிதை உருவில் மலர்ந்த பற்பல கதைகளை அந்தப் புராதனமான கவிஞரே புனைந்தார் என்று அவர்மீது சுமத்திவிட்டார்கள். ஆகவே, அவர் இயற்றாத பலப்பல சுலோகங்களுக்கு அவரே ஆசிரியர் என்று கூறும் பொது வழக்குப் பின்பு அமைந்து

விட்டது. இத்தகைய எல்லா வகையான இடைச் செருகல்களும் இருந்த போதிலும், உலக இலக்கியங்களில் நிகரற்ற மிக்க வனப்பு வாய்ந்த அமைப்பில் இவ்விதிகாசம் நம்முன் விரிந்து நிற்கின்றது.

எவ்வகை முறையையும் பின்பற்றித் தன் குடும்பத்தைப் பாதுகாக்க இயலாத ஓர் இளைஞன் இருந்தான். ஆற்றலிலும், சுறுசுறுப்பிலும் அவனுக்குக் குறைவில்லை. ஆகவே, அவன் வழிப்பறி கொள்ளைக்காரனாய் மாறிவிட்டான்; தெருவில் நடமாடும் மக்களை எதிர்த்துக் கொள்ளையடித்துத் திரட்டிய பொருளைக்கொண்டு தன் தாய் தந்தையரையும் மனைவி மக்களையும் காப்பாற்றிவந்தான். இவ்வண்ணம் நீண்டகாலஞ் சென்ற பிறகு ஒரு நாள் நாரத மகாமுனிவர் அவ்வழி ஏக நேர்ந்தது. அக்கொள்ளைக்காரன் அவர்மீதும் பாய்ந்து அவரைத் தாக்கினான்.

"ஏன் என்னைக் கொள்ளையடிக்கப் பார்க்கின்றாய்? மனிதர்களைக் கொன்று அவர்கள் பொருள்களை வெளவுதல் பெருந்தீச் செயலாயிற்றே! எதற்காக இந்தப் பாவத்தைத் திரட்டிக்கொள்ளுகின்றாய்?" என்று அம்முனிவர் அக்கொள்ளைக்காரனைக் கேட்டார்.

"ஏன்? இப்பொருளைக்கொண்டே நான் என் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது," என்று அக்கள்வன் விடை பகர்ந்தான்.

"அஃதிருக்கட்டும்; உனது பாவச் சுமையை அவர்கள் சேர்ந்து பகிர்ந்துகொள்ளுவார்கள் என்று நீ கருதுகின்றாயா?" என்று அம்முனிவர் வினவினார்.

"ஆம்; அதில் என்ன ஐயம்? அவர்கள் அதைப் பகிர்ந்து கொள்வார்கள்," என்று அவன் விடை அளித்தான்.

"நல்லது! நான் இவ்விடமிருந்து ஓடாவண்ணம் என்னைக் கட்டிப் போட்டுவிடு. உன்னுடைய பொருளைப் பகிர்ந்துகொள்வது போலவே, உன்னுடைய தீச்செயலிலும் அவர்கள் பங்கு கொள்ளுவார்களா என்பதைக் கேட்டுத் தெரிந்துகொண்டுவா," என்று அம்முனிவர் அவனுக்கு மொழிந்தார்.

முனிவர் மொழிந்த வண்ணமே அவன் தன் தந்தையாரிடம் சென்று, "தந்தையீர், நான் உம்மை எப்படிக் காப்பாற்றுகின்றேன் என்பதை நீர் அறிவீரோ?" என்று வினவினான்.

"அதை நான் அறியேன்," என்று அவர் விடை கூறினார்.

"நான் ஒரு கள்வன்; மனிதரைக் கொல்கின்றேன்; கொள்ளை அடிக்கின்றேன்," என்றான் அவன்.

"நீ அத்தகைய தீச்செயலையா செய்கின்றாய்! என் மைந்தனே, நீசனே, அப்புறம் போ!" என்றார் தந்தையார். பிறகு அக்கள்வன் தன் தாயிடம் சென்று, "அன்னையீர், நான் எப்படி உம்மைக் காப்பாற்றுகிறேன் என்பதை நீர் உணர்வீரோ?" என்றான். "அறியேன்," என்று அவள் கூறினாள்.

"களவாலும் கொலையாலுமே உம்மைக் காப்பாற்றுகிறேன்," என்று அக்கள்வன் கூறினான். "ஐயோ! எத்தகைய கொடுஞ்செயல் இது!" என்று அன்னை ஓலமிட்டாள். "நீர் என் பாவத்திற் பங்கு கொள்ளுவீரோ?" என்று மைந்தன் கேட்டான். "நான் ஏன் உன் பாவத்திற் பங்கு கொள்ள வேண்டும்? நான் கொள்ளையடிக்கவில்லையே?" என்று மறுமொழி கூறினாள் தாய்.

பிறகு அவன் தன் மனைவியிடம் சென்று, "நான் எப்படி உங்களனைவரையுங் காப்பாற்றுகிறேன் என்பது உனக்குத் தெரியுமா?" என்றான். "எனக்குத் தெரியாதே!" என்று விடை கூறினாள் மனைவி. "நான் ஒரு கொள்ளைக்காரனாயிற்றே! பல ஆண்டுகளாக நான் மனிதர்களைக் கொள்ளையடித்து வருகின்றேனே! கொள்ளையடிப்பதன் மூலம் உங்கள் யாவரையும் காப்பாற்றி வருகிறேனே! என்னுடைய பாவச் சுமையில் நீ பங்கு கொள்ள ஆயத்தமாயிருக்கிறாயா என்பதுதான் நான் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்பும் செய்தியாகும்," என்றான் கள்வன். "அது ஒருபோதும் என்னால் இயலாத செயலாகும். நீர் என் கணவராவீர்; என்னைக் காப்பாற்றுவது உமது கடமை ஆயிற்றே!" என்றாள் அவன் இல்லாள்.

கொள்ளைக்காரன் கண்கள் திறக்கப்பட்டன. அவன், "இது தான் உலகின் போக்கு! யாருக்காக நான் கொள்ளையடிக்கின்றேனோ, அந்த நெருங்கிய உறவினர்கூட எனக்கு வரும் பாவத்தைப் பகிர்ந்துகொள்ள மாட்டாராமே!" என்று தனக்குள் கூறிக்கொண்டே நாரத முனிவரைக் கட்டிவைத்திருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான்; அவரைக் கட்டியிருந்த கட்டுகளை அவிழ்த்து, அவர் திருவடிகளில் வீழ்ந்து, நடந்தனவற்றைக் கூறி, "யான் செய்வது ஒன்றும் ஓர்ந்திலேன்! நான் உய்யும்படிச் செய்யுங்கள்!" என்று இறைஞ்சினான்.

"இப்பொழுது நீ நடத்திவரும் வாழ்வின் முறையை விட்டு

விடுவாயாக. உன் குடும்பத்தார் ஒருவருமே உன்பால் அன்பு காட்டவில்லை என்பதை நீ உணர்கின்றாய். நீ இந்தக் கானல் நீரிலிருந்து அறவே விலகுவாயாக. உன் செல்வத்தில் பங்கு கொள்ள உன் உற்றார் உறவினர் விழைவர்; நீ வறியனானதுகண்ட அக்கணமே உன்னைப் புறக்கணித்துவிடுவர். உன்னுடைய தீமையிற் பங்குகொள்ள ஒருவரும் முன் வரமாட்டார். ஆனால், உன் நன்மையை நுகருமாறு அனைவரும் உன்னைச் சூழ்ந்துவிடுவர். ஆதலால், நன்மை செய்தாலும் தீமை புரிந்தாலும் நம் பக்கலில் நிற்கின்ற அந்த ஒருவனையே நீ வழிபடுவாயாக. அவன் நம்மை விட்டு எஞ்ஞான்றும் அகலான். அன்பு நம்மைக் கீழே வீழ்த்தாது; நம்முடன் வாணிபம் பேசாது; சுயநலம் அறியாது,'' என்றார் முனிவர்.

பிறகு நாரத முனிவர் அவனுக்குக் கடவுளை வழிபடும் முறையைக் கற்பித்தார். அக்கள்வன் எல்லாவற்றையும் துறந்து காட்டை நண்ணி, வழிபாட்டிலும் தியானத்திலும் ஆழ்ந்து, தன்னை முற்றிலும் மறந்துவிட்டான். எறும்புகள் சாரி சாரியாய் வந்து அவனைச் சுற்றிப் புற்றை எழுப்பிவிட்டன. இதை அவன் சிறிதும் அறிந்திலன்; மெய்ம்மறந்து போய்விட்டான்.

பல ஆண்டுகள் கழிந்த பிறகு, "முனிவரே, எழுந்திருப்பீராக!'' என்ற குரல் ஒலித்தது. அவன் தியானத்திலிருந்து விழித்தெழுந்து, "நானா முனிவன்? நான் கள்வனாயிற்றே!'' என்று வியப்புற்று அறைந்தான்.

"இனி நீர் கள்வரல்லீர்; தூய்மை அடைந்த முனிவராகிவிட்டீர்,'' என்று கூறியது அக்குரல். "உமது பழைய பெயர் மறைந்துவிட்டது. உமது தியானமோ, மிகச் சிறந்த ஆழ்ந்த தியானம்; அக்காரணம் பற்றியே உம்மைச் சுற்றி எழுந்த எறும்புப் புற்றையும் நீர் நோக்கவில்லை. இனி உமது பெயர் 'வான்மீகி' என்பதாகும்,'' என்றார் முனிவர். எறும்புப் புற்றிலிருந்து தோன்றியவர் என்பதே வான்மீகி என்னும் சொல்லிற்குப் பொருளாகும்.

வான்மீகியார் கவிஞர் ஆனதைப்பற்றியும் கூறுவோம்: புனிதமான கங்கையாற்றில் நீராடுவதற்கு வான்மீகியார் சென்றுகொண்டிருந்தார். அங்கே இரண்டு புறாக்கள் கொஞ்சிக் குலாவிக் கொண்டு வட்டமிடுவதை அவர் உளத்தில் உவகை பொங்கக் கண்ணுற்றார்.

ஆனால் ஒரு கணத்தில் ஓர் அம்பு 'உஸ்' என்று ஒலித்துப் பாயவே ஆண் புறு அடிபட்டுக் கீழே விழுந்துவிட்டது. வெந்துயரால் பெண் புறு மாண்டுபோன ஆண் புறுவின் உடலைச் சுற்றிச் சுற்றிப் பாய்ந்து வந்தது. ஓர் இமைப்பொழுதில் முனிவர் உள்ளத்தில் கடுதுயர் பாய்ந்துவிட்டது; அவர் கண்கள் சுற்றுமுற்றும் பாய்ந்தன. அங்கே ஒரு வேடன் நிற்பதை அவர் பார்த்துவிட்டார். "இறையளவேனும் இரக்கமற்ற பாதகன் நீ! அந்தக் காதற் காட்சி முடிவடையும் வரையிற்கூட உன் கொலைக் கரம் காத்திருக்கவில்லையே!" என்று ஓலமிட்டார்.

"என்ன இது! என்ன பேசிப் புலம்புகின்றேன் நான்!" என்று முனிவர் தமக்குள்ளே சிந்தித்தார்; "நான் முன்பு இவ் வண்ணம் இயம்பினதே இல்லையே!" என்று எண்ணினார்.

"அஞ்சற்க! உன் வாய் மூலமாக மொழிந்தது கவிதையே. உலக நன்மையின்பொருட்டு இராமனுடைய சரிதத்தைச் செஞ்சொற் கவிதைகொண்டு புனைவாயாக!" என்ற குரல் எழுந்தது.

இம்முறையிலேதான் இந்தக் கவிதை முதன்முதல் தொடங்கிற்று. ஆதி கவியான வான்மீகியார் வாயிலாக இரக்கத்தால் இக்கவிதை பெருகிற்று. இராம சரிதமான வனப்புவாய்ந்த இராமாயணத்தை அவர் எழுதினார்.

இந்திய நாட்டில் அயோத்தி என்னும் பண்டைய நகரம் ஒன்று இருந்தது. இக்காலத்திலும் அந்நகரம் இருக்கிறது. அது திகழ்கின்ற வட்டாரத்தை இப்பொழுது ஆங்கிலத்தில் 'ஔடு' என்று வழங்குவார்கள். இந்தியாவின் படத்தில் நீங்கள் அதைப் பார்த்திருக்கலாம். அதுவே அந்தப் பண்டைய அயோத்திமாநகரமாகும். அந்நாளில் தசரதன் என்னும் பெயர் பூண்ட ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவனுக்கு மூன்று அரசிகளிருந்தும், அவர்கள் வாயிலாக அவ்வேந்தனுக்கு மக்கட்பேறில்லை. இந்நிலையில் அவர்கள் நல்ல இந்துக்கள் புரியும் முறைகளைப் பின்பற்றியே சேய்களைப் பெறும்பொருட்டுப் புண்ணியத் துறைகளாடியும், உண்ணுவிரதம் பூண்டும், கடவுளை வழிபட்டும் தங்கள் பொழுதைக் கழித்தார்கள். குறிப்பிட்ட நற்காலத்தில் மைந்தர் நால்வர் பிறந்தனர். அவருள் மூத்தவனே இராமன் என்பவன்.

முறைப்படி அந்த உடன் பிறந்தோர் நால்வர்க்கும் எல்லாக் கல்வித் துறைகளிலும் திகழும் அறிவுச் செல்வம் வழங்கப்பட்டது. பிற்காலத்தில் சச்சரவுகள் எழாவண்ணம் ஒரு முறையைப்பழைய

இந்தியாவில் வேந்தர்கள் பின்பற்றி வந்தார்கள். அதாவது, ஓர் அரசன் தன் நாட்டை ஆண்டுவருங் காலத்திலேயே தனக்குப் பிற்காலம் இராச்சியத்தை ஏற்கும் உரிமையுடையவனுகத் தன் மூத்த பிள்ளையை இளவரசனுக்கிவிடுவான்.

அக்காலத்தில் ஜனகன் என்ற மன்னன் இருந்தான். அவனுக்கு வனப்பு வாய்ந்த சீதை என்ற பெண் உண்டு. அவள் ஒரு கழனியில் கண்டு எடுக்கப்பட்டாள். அவள் பார் தந்த மகளாவள்; தாய் தந்தையரில்லாமலே தானே தோன்றியவள். கலப்பை உழுத சுவடு என்பதுதான் 'சீதா' என்ற பழைய வடமொழிச் சொல்லுக்குப் பொருளாகும். குழவிகள் ஒருவர்க்குமட்டும் பிறந்ததாகவும், பெற்ருேர் இல்லாமலே உண்டானதாகவும், வேள்வித் தீயில் எழுந்ததாகவும், வயலில் தோன்றினதாகவும், மேக மண்டலங்களிலிருந்து கீழே விழுந்ததாகவும் இந்திய நாட்டினர் புராணங்களில் குறிப்பிடப்படுகின்றன. இத்தகைய வியப்புறும் தெய்வப் பிறவிகள் இந்தியப் புராணங்களில் சாதாரணமாகவே காணப்படுகின்றன என்பது உண்மையே.

நிலம் தந்த நங்கையான காரணத்தால் சீதை தூய்மை வாய்ந்தவள். மனிதப் பிறவிக்குற்ற மாசு அவளிடத்தில் இல்லை. அவள் ஜனகனுல் வளர்க்கப்பட்டாள். பருவகாலம் எய்தியபடியால், அவளுக்குத் தகுதியான ஒரு கணவனைத் தேட விழைந்தான் ஜனகன்.

'சுயம்வரம்' என்னும் பண்டைய நாள் இந்திய வழக்கத்தின்படி, அரசிளங்குமரிகளே தங்கட்கு உவந்த கணவர்களைத் தேர்ந்து எடுத்துக்கொள்வார்கள். நாட்டின் பற்பல பகுதிகளிலிருந்தும் அரசிளங்குமரர் பலர் அழைக்கப்படுவர். அரச குமாரியும் அணிகலன்கள் பல பூண்டு, கையில் மலர் மாலையொன்றை ஏந்தி, மிக்க சிறப்புடன் புறப்படுவாள். அவள் கையை நாடும் அரசிளங்குமரர்களுள் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட சிறப்புகளையும் எடுத்தோதக்கூடிய ஒரு தோழி பின் தொடர, கூடியிருப்போரின் நடுவே அவள் சீறடி பெயர்த்து வைப்பாள். தான் உவக்கும் ஆடவன் கழுத்தில் அந்த மலர் மாலையைச் சூட்டி அவனைக் கணவனுகத் தேர்வாள். பிறகு அவ்விருவர்க்கும் மிகுந்த சிறப்புடனும் ஆடம்பரத்துடனும் மணவினை நடக்கும்.

சீதையை மணக்க அரசிளங்குமரர் பலர் விரும்பினர். அரனுரது மாபெரு வில்லை இறுத்தலே கன்னியாசுல்கமாக (மணங்கொளும் வீரச்செயலாக) நியமிக்கப்பட்டிருந்தது. இத்தகைய

அருஞ்செயலை முடிப்பதற்குக் குழுமியிருந்த குமரர்கள் தங்கள் முழு வலிமை கொண்டும் முயன்றார்கள். ஆனால், அனைவரும் தோல்வியுற்றனர். இறுதியில் இராமன் அந்தப் பெருவில்லைத் தாங்கி எளிதில் கவினுறு முறையில் வளைத்து ஒடித்துவிட்டான். தசரதனுக்கு மைந்தனான இராமனைச் சீதை தனக்குக் கணவனாக ஏற்றாள்; மகிழ்ச்சி வெள்ளம் பொங்க மணவினை நடந்தேறிற்று. இராமன் தன் தேவியை அயோத்திக்கு அழைத்துச் சென்றான். தன் மைந்தனுக்கு முடி சூட்டி, தான் அரசியலைத் துறப்பதற்குத் தக்க காலம் அதுவே என்று கருதி, அந்தச் சடங்குக்குரிய எல்லா ஆயத்தங்களையும் அரசன் செய்வித்தான். அந்த நற்செய்தியைக் கேட்ட நாடு முழுதும் பேருவகையில் ஆழ்ந்திருந்தது.

அதே சமயத்தில் வேந்தனுடைய இளைய அரசியான கைகேயி என்பவளுக்கு அவள் பணிப்பெண்களுள் ஒருத்தி, அரசன் நீண்ட காலத்திற்கு முன்பு அளித்த இரண்டு வரங்களை நினைவூட்டிவிட்டாள். மன்னன் மிகவும் உவக்கும் செயலை ஒரு காலத்தில் அவள் புரிந்திருந்தாள். அப்பொழுது அவளுக்கு வேண்டும்போது இரண்டு வரங்கள் தருவதாக வாக்களித்திருந்தான் மன்னன். "என் ஆற்றல் கொண்டு முடிக்கக்கூடிய எந்த இரண்டு பொருள்களையேனும் கேள்; அவற்றை நான் உனக்கு நல்குவேன்," என்றான் பார்த்திபன். அப்பொழுது அவள் அவற்றை யாசித்தாளில்லை. அவை பற்றிய நினைவே அவள் சிந்தையை விட்டு அகன்றுவிட்டது. கொடிய சிந்தையையுடைய பணிப்பெண்ணான மந்தரை என்பவள், அவள் உள்ளத்தில் அழுக்காற்றுக்கனலை எழுப்பிவிட்டாள்; "இராமனையன்றோ அரியாசனத்தில் வீற்றிருக்கச் செய்யப் போகின்றார்கள்? இராமனுக்கு மாறாக உன் மகனுக்கு முடி சூட்டினால் எவ்வளவு நன்றாயிருக்கும்!" என்று மெல்ல மறைமுகமாகத் தீயைப் பற்ற வைத்துவிட்டாள். பொறாமைப்பித்துக் கைகேயியின் தலைக்கு ஏறிவிட்டது. அப்பொழுது அந்த வேலைக்காரி மீண்டும் தூண்டினாள்; "மன்னர் தருகிறேன் என்று வாக்குறுதி தந்த இரண்டு வரங்களை இப்பொழுதே கேள். ஒன்று, உன் மகன் அரியாசனத்தில் அமர வேண்டுவது; மற்றொன்று, இராமன் நாடு கடத்தப்பட்டுப் பதினான்கு ஆண்டுகள் காட்டில் உறைய வேண்டுவது என்று கூறு," என்றாள்.

மூப்படைந்த தசரதனுக்கு இராமன் ஊனும் உயிருமானவன். இந்தக் கொடுமையான வேண்டுகோளைக் கேட்டதும், தசரதன்

சொல்லிய சொல்லிற் பின்வாங்க இயலுமா ? அவன் அரசனல்லவா? அவன் யாது செய்வது என்பதை ஓராது திகைத்து நின்ருன். தந்தை சொற்காக்கும் தனயனுய் முன்வந்தான் இராமன். "இவ் வரசு யான் வேண்டேன் ; யானே நாட்டைவிட்டு அகல்கின்றேன்," என்று மொழிந்து, தன் தந்தை சொல்லிய சொல் பொய்யாவண் ணம் காப்பாற்றினுன் இராகவன். தன் ஆருயிர்த்தலைவி சீதையும், எஞ்ஞான்றும் எக்காரணங்கொண்டும் தன்னை விட்டுப் பிரியாது தன்பால் கண்ணும் கருத்துமாயிருக்கும் தம்பியாகிய இலக்குவனும் பின் தொடரக் கோசலை மகனுன இராமன், பதினுன்கு ஆண்டுகள் நாட்டை விட்டு வெளியே உறையச் சென்றுவிட்டான்.

மரங்கள் செறிந்த பயங்கரமான காடுகளில் எத்தகையோர்கள் உறைகின்ருர்கள் என்பதை ஆரியர்கள் உணர்வார்களா ? வனத் துறையும் மக்கள் இனத்தாரையே குரங்குகள் என்று அவர்கள் வழங்கினுர்கள்போலும்! பேராற்றல் படைத்தவையாகவும், வலி வுள்ளவையாகவும் சில குரங்குகள் தோன்றுமாயின், அவற்றை அரக்கர்கள் என்று அவர்கள் வழங்கினுர்கள்.

அரக்கர்களும் குரங்குகளும் உறைகின்ற காட்டிற்குள் இராம னும், இலக்குவனும், சீதையும் புகுந்துவிட்டனர். சீதை இராம னுடன் காட்டிற்கு வருவேன் என்று மொழிந்த பொழுது, "நீ ஓர் அரசிளங்குமரியாயிற்றே! எப்படி இன்னல்களை ஏற்று அறிய வொண்ணுத ஆபத்துகள் மண்டிக்கிடக்கும் காடுகளில் என்னைத் தொடர்ந்துவர இயலும் ?" என்று இராகவன் கேட்டான். "எங்கே இராகவர் செல்வாரோ, அங்கே சீதையும் செல்வாள். அரசிளங் குமரி என்றும், வேந்தர் குடிப்பிறப்பென்றும் எப்படி நீங்கள் பேச இயலும் ? நான் உங்கள் முன்பு ஏகுவேன்," என்று பகர்ந்தாள் பார் தந்த மகள். சீதை அவனேடு வனம் புகுந்தாள் ; இளையவனும் அவர்களுடன் சென்ருன். கோதாவரி ஆற்றை நண்ணுகிற வரை யில் அம்மூவரும் அடர்ந்த காட்டைத் துருவிக்கொண்டே போயி னர். அந்த ஆற்றங்கரையின்மீது சிறிய குடிசைகளை அமைத்தனர். இராகவனும், இலக்குவனும் மான் வேட்டை ஆடுவதிலும் பழங்கள் பறிப்பதிலும் முனைந்தார்கள். இவ்வண்ணம் அவர்கள் வாழ்க்கைப் பொழுது மெள்ளக்கழியவே, ஒருநாள் ஓர் அரக்கி அங்கே வந்தாள். அவள் இலங்கையின் அரக்கர் வேந்தனுன இராவணனுக்குத் தங்கை (சூர்ப்பணகை). விருப்பம் செல்லுகிற வழியே காட்டில் திரிகிற அவள், வனப்பு வாய்ந்த இராகவனைக் கண்டவுடனே மையல்

கொண்டுவிட்டாள். இராகவனோ, தூயோர்க்குள் தூயன். மேலும் மனைவியுடன் இல்லறம் நடத்துபவன். ஆதலால், அவள் கொண்ட காமத்திற்கு இராகவன் சற்றும் இணங்கவில்லை. எனவே, அவள் வஞ்சம் தீர்க்கும் கருத்துடன் தன் உடன்பிறந்தோன்பால் சென்று இராகவனின் மனைவியான சீதையின் அழகின் சிறப்புகளனைத்தையும் எடுத்துரைத்தாள்.

மாந்தர்களுக்குள் மிகுந்த ஆற்றல் படைத்தவன் இராமன். அரக்கர்களாகட்டும், பூதங்களாகட்டும், யாராய் இருக்கட்டும், அவனை வெல்லுதற்குரிய வலிமை உடையவர் எவருமில்லை. அக்காரணம் பற்றியே ஒரு கள்ளத்தனமான உபாயத்தை அவ்வரக்கர் வேந்தன் நாடினான் ; மந்திரவாதியான ஓர் அரக்கனின் (மாரீசன்) உதவியைப் பெற்று, அவனை ஓர் அழகான பொன்மானாக மாறும் படி செய்துவிட்டான். இராகவன் உறைகின்ற இடத்தில் இங்கு மங்கும் திரிந்துகொண்டிருந்தது அம்மான். அதன் அழகு சீதையின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது. அவள் அம்மானைப் பிடித்துத் தனக்குத் தரும்படி இராகவனை வேண்டினாள். சீதைக்கு இலக்குவனைக் காவல் வைத்து, இராகவன் அதைப் பிடிக்கும் பொருட்டுக் காட்டிற்குள் புகுந்தான். குடிசையைச் சுற்றி வட்டமாய் ஒரு தீயை வளர்த்து, "ஏதோ ஒன்று உங்களுக்கு நிகழும் போலிருக்கிறது ! ஆதலால், இந்த மந்திர வட்டத்திற்கு அப்பால் ஏகாதீர்கள். அப்படிச் செய்தால் ஆபத்து நேரிடும்," என்று சீதைக்கு உரைத்தான் இலக்குவன். இதற்கிடையே அந்த மாய மானைத்தன்வாளியை எய்து இராகவன் கொன்றுவிட்டான் ; அக்கணமே அந்த மான் மனித உரு எடுத்து மாண்டது.

"இலக்குவனே, என் உதவிக்கு விரைந்து வருவாயாக!" என்று இராமன் கூவி அழைப்பது போன்ற குரல் அந்தக் குடிசையில் கேட்டது. "இலக்குவரே, இராமருக்கு உதவி புரியும்பொருட்டு விரைவீராக !" என்று சீதை இயம்பினாள். "இது இராமன் குரல் அன்று," என்று மறுத்தான் இளையவன். சீதை மன்றாடிக் கேட்டுக் கொண்டதால், இராகவனைத் தேடிச்சென்றான் இலக்குவன். அவன் சென்ற உடனே பிச்சையெடுத்து உண்ணும் சந்நியாசி வேடம் பூண்ட அந்த இலங்கை வேந்தன், குடிசை வாயிலை நண்ணிப் பிச்சையளிக்கும்படி சீதையை வேண்டினான். "என் கணவர் திரும்பி வரும் வரையில் காத்திருப்பீராக ! நான் உமக்கு நிரம்பப் பிச்சை அளிக்கின்றேன்," என்று சீதை செப்பினாள்.

“நற்குணம் வாய்ந்த நங்காய், நான் காத்திருக்க இயலாது ; பசிப்பிணி என்னை வாட்டுகின்றது. ஏதேனும் இருப்பதை நல்கினுல் அது போதும்,” என்று அவ்வரக்கன் மன்ருடினுன். இப்படி மன்ருடிய பொழுது குடிசையிலுள்ள பழங்களில் சிலவற்றைக் கொண்டு வந்தாள் சீதை. பல நயமான காரணங்களைக் காட்டித் தன்னிடத்திற்கே பழங்களைக் கொணரும்படி செய்துவிட்டான் அக்கள்வன் ; ஒரு புனிதமான சான்ருேனிடம் அஞ்சுவதற்கு யாதொன்றுமில்லை என்றும் மொழிந்தான். சீதை மந்திர வட்டத்தைக் கடந்து வந்த உடனே, அந்தப் போலிச் சந்நியாசி தன் அரக்க உருவத்தை எடுத்துக்கொண்டு அவளைத் தன் கரங்களால் பற்றி ஈர்த்துத் தன்னுடைய மாய இரதத்தில் வைத்து, அவள் ஓலமிட்டு அழ அழப் பறந்து ஓடிவிட்டான். அந்தோ ! சீதை என் செய்வாள் ! முற்றிலும் செயலற்றுப் போய்விட்டாள். அவள் உதவிக்கு விரைந்து வர எவரும் அங்கில்லை. அவள் தன்னுடைய அணிகலன்களில் சிலவற்றைக் கழற்றித் தரைமீது இடையிடையே எறிந்துகொண்டே போனுள்.

இராவணனது இராச்சியமான இலங்கைத் தீவிற்கு அவள் எடுத்துச் செல்லப்பட்டாள். அவளைத் தன் அரசியாகக் கொள்வதற்கு வேண்டிய திட்டங்கள் செய்து முயன்று பார்த்தான் இராவணன் ; தன் விருப்பத்திற்கு இணங்குமாறு பல வழிகளில் அவளை வஞ்சிக்கவும் அரும் பாடுபட்டான். ஆனுல், கற்பே வடிவான சீதை முகங்கொடுத்து அந்த அரக்கனேடு பேசவும் இல்லை. அவன் அவளைத் தண்டிக்கும்பொருட்டு, அவள் தனக்கு மனைவியாக வர விருப்பப்படுகிற வரையில் ஒரு மரத்தின் அடியில் அல்லும்பகலும் உறையும்படி செய்துவிட்டான்.

இராகவனும் இலக்குவனும் குடிசைக்குத் திரும்பி வந்தனர் ; அங்கே சீதையைக் காணவில்லை. அவ்விருவரும் தம் துயருக்கு எல்லை கண்டிலர். அவளுக்கு என்ன நேர்ந்திருக்கக்கூடும் என்பதைக்கூட அவர்களால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை ; சீதையைக் காண எங்கும் தேடித்தேடித் திரிந்தார்கள். அவள் காற்சுவட்டைக்கூடக் காண அவர்களால் இயலவில்லை. அவர்கள் நீண்டகாலம் தேடித்திரிந்தபிறகு ஒரு குரங்குக் கூட்டத்தைக்கண்டார்கள். அக்குரங்குகளுக்கிடையே தெய்வக்குரங்கான அனுமன் வீற்றிருந்தான். குரங்குகளுக்குள் மிகச் சிறந்தோனுன அனுமன், இராகவனுக்கு உண்மையான பணியாளனுய்த் திகழ்ந்துவிட்டான்.

சீதையை மீட்பதற்கு அனுமன் இராகவனுக்கு உதவி புரிந்தான். அந்தச் செய்தியைப் பின்பு காண்போம். உண்மையான கடவுள் தொண்டிற்கே ஓர் இலட்சியமாய் இந்துக்களிடையே இலங்கி இப் பொழுதும் வழிபடுவதற்குரிய அளவு அனுமன் இராமன்பால் வைத்த பத்தி சென்றுவிட்டது. குரங்குகளென்றும், அரக்கர் களென்றும் கூறப்படுகின்ற மக்கள் தென்னுட்டிலுள்ள பழங்குடி ஆதிமக்களைத்தவிர வேறல்லர் என்பதை நீங்கள் காண்கின்றீர்கள்.

இறுதியில் இராமன் குரங்குகள் என்று கருதப்படும் அவர்க ளோடு நட்புப் பூண்டான். விண்ணில் ஓர் இரதம் பறந்துபோயிற் றென்றும், அழகான ஒரு மங்கையுடன் ஓர் அரக்கன் அதில் வீற்றிருந்தானென்றும், அந்த மங்கை வெந்துயரத்தாற் கண்ணீர் சொரிந்தனளென்றும், தங்கள் தலைகளுக்குமேல் இரதம் விரை கின்றபொழுது தங்கள் கவனத்தைக் கவரும்பொருட்டு அந்நங்கை அணிகலன்களில் ஒன்றை எறிந்தாளென்றும், அவர்கள் அவ்விராக வனுக்குக் கூறினுர்கள்; இராமனுக்கு அந்த அணிகலனைக் காண் பித்தார்கள். இலக்குவன் அதைக் கையில் எடுத்து, 'இது யாருடைய அணிகலன் என்பது எனக்கு விளங்கவில்லை,' என்று சொன்னுன். இராமன் அதைக் கையில் வாங்கினதும், "ஆம்; இது சீதையின் அணிதான்," என்று மொழிந்தான். இலக்குவன் அதன் அடை யாளங் காணுததன் காரணம் இதுவேயாகும்: மூத்தோன் மனைவி யின் கைகளையும் கழுத்தையும் கண் எடுத்தும் பார்க்கக்கூடாத அளவுக்கு அவள்பால் மரியாதை காட்டப்பட்டது என்பது இதனுல் புலனுகின்றது. இந்த அணிகலன் அவள் பூண்ட கழுத்துச் சங்கிலி யாதலால், அந்த ஆபரணம் யாருடையது என்பதை இலக்குவன் அறிந்தானில்லை. அந்தச் சிறு நிகழ்ச்சியில் பண்டைய இந்தியா வின் பழக்கத்தின் ஓர் அம்சம் மிளிரக் காண்கின்றோம். அந்த அரக்கர் வேந்தன் யாரென்றும், அவன் எங்கே உறைகின்றுனென் றும் வானரர் உரைத்தனர். அவனைத் தேடிப் பிடிக்க அனைவரும் விரைந்து முயல்வராயினர்.

வானர வேந்தனை வாலியும் அவன் தம்பியும் இராச்சியத்தைக் குறித்துத் தம்மிடையே போர் புரியலாயினர். இராமன் இளையோ னுக்கு உதவி புரிந்தான்: அவனைத் துரத்தியடித்து வாலியின் இராச்சியத்தைச் சுக்கிரீவன் பெறும்படி செய்தான். கைம்மாருக இராகவனுக்குச் சுக்கிரீவன் உதவி புரிய வாக்களித்தான். நாடு முழுதும் துருவித் தேடினர்; ஆனுல், சீதையைக் கண்டுபிடிக்க

இயலவில்லை. ஆனால், இறுதியில் இந்திய நாட்டுக் கடற்கரையிலிருந்து அனுமன் ஒரே பாய்ச்சலில் இலங்கைத்தீவை நண்ணிவிட்டான். சீதையை அனுமன் எங்கும் தேடினான்; நெடுநேரம் அவளை எங்கும் அவனால் காண இயலவில்லை.

அரக்கர் வேந்தன் தேவர்களை வென்றவன்; உண்மையிலேயே மாந்தர்களையும் உலகமனைத்தையும் தன்னடிக்கீழ் நிற்கச் செய்தவன்; உலகத்திலுள்ள அழகு வாய்ந்த மங்கையர் அனைவரையும் திரட்டித் தன் காமக்கிழத்தியர்களாய் அமைத்துக்கொண்டவன். அந்த அரண்மனையில் அவர்களோடு ஒருத்தியாய்ச் சீதை இருக்க முடியாது என்று தனக்குள் அனுமன் சிந்தித்தான். அவள் நாணமற்ற வாழ்க்கை நடத்துவதைவிட உயிர் துறந்திருப்பாளோ என்று அவன் சிந்தித்தான்; ஆயினும் பின்னும் அவளைத் தேடிச் சென்றான். அடி வானத்திற் காணும் பிறைத்திங்கள் போல உடல் வெளுத்து மெலிந்து ஒரு மரத்தடியில் வீற்றிருக்கும் தேவியை அவன் இறுதியில் கண்டான்; ஒரு சிறிய குரங்கின் உருவை எடுத்துக்கொண்டு அம்மரத்தின்மீது அமர்ந்தான். சீதையை இணங்கச் செய்வதற்காக இராவணன் அனுப்பிய அரக்கிகள் எப்படி அவளை அச்சுறுத்த முயல்கின்றனர் என்பதையும், எப்படிச் சீதை அந்த அரக்கர் வேந்தன் பெயரைக் கேட்கக்கூடச் சகியாது இருக்கின்றாள் என்பதையும் அனுமான் கண்கூடாகப் பார்த்தான்.

பிறகு சீதையின் அண்மையில் வந்து, தன்னை இராமன் தூதனுப்பிய செய்தியை அவளிடம் அவன் இயம்பினான். "உங்களைக் கண்டு வர இராகவர் என்னை அனுப்பினார். என்னை அடையாளங் கண்டுகொள்ளுவதற்குத் தம்முடைய கை மோதிரத்தையும் தந்துள்ளார்," என்று கூறித் தேவியிடம் அதைத் தந்தான் அனுமன். "உங்களுடைய இருப்பிடம் தெரியுமாயின், ஒரு படையைத் திரட்டிக் கொணர்ந்து இவ்வரக்கனைத் தோல்வியுறும்படி செய்து, உங்களை மீட்பதாகவும் உங்களிடம் கூறச்சொன்னார் இராகவர்," என்று மீண்டும் அனுமன் அவளிடம் மொழிந்தான். "நீங்கள் விரும்புவீர்களாயின், என் தோள்கள் மீது உங்களைச் சுமந்து ஒரே பாய்ச்சலில் இக்கடலைக் கடந்து இராகவரிடம் உங்களைச் சேர்ப்பேன்," என்று அனுமன் பகர்ந்தான். இந்தக் கருத்தைச் சற்றும் அவள் ஏற்றாளில்லை. ஏனெனில், அவள் கற்பின் வடிவேயல்லவா? தன் கணவன் உடலைத் தவிர மற்றவர் உடலைத் தீண்டமாட்டாளல்லவா? அக்காரணம் பற்றியே அவள் இருந்த

இடத்தை விட்டு அகலவில்லை. அவள் இராகவனிடத்து எடுத்துச் செல்லுவதற்காகத் தன் கூந்தலில் அணிந்திருந்த மணியை (சூளா மணியை) அனுமனிடம் கொடுத்தாள். அம்மணியோடு அனுமன் திரும்பிவிட்டான்.

அனுமன் வாயிலாகச் சீதையைப்பற்றிய எல்லாச் செய்திகளையும் உணர்ந்த இராகவன், ஒரு படையைத் திரட்டினன்; இந்தியாவின் தென்கோடிக்கு அந்தப் படையுடன் சென்றான். இந்தியாவையும் இலங்கையையும் பிணைக்கின்ற 'சேது பந்தனம்' என்று வழங்கப்படுகின்ற பேரணையை இராகவனுடைய வானர வீரர்கள் அமைத்தார்கள். கடல் அடங்கி ஒய்ந்து சற்று ஆழமில்லாமல் நிற்கிற சமயத்து, அங்கே உள்ள மணல் திட்டுகள்மீது ஊர்ந்தே இந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சென்றுவிடலாம்! இராமன் கடவுளின் அவதாரமேயாவன்; அன்றேல், இத்தகைய அருஞ் செயல்களை அவன் எப்படி ஆற்றியிருக்க இயலும்? இந்துக்களின் கருத்துப்படி அவன் கடவுளின் அவதாரமே. அவனை ஏழாவது அவதாரமென அவர்கள் நம்புகின்றார்கள்.

வானரர்கள் குன்றுகளைப் பெயர்த்துக் கடலில் எறிந்தார்கள். அவற்றைக் கற்களாலும் மரங்களாலும் மூடி ஒரு மாபேரணையை அமைத்தார்கள். ஒரு சிறிய அணிலும் மணலிற் புரண்டு இங்கும் அங்கும் ஓடித் தன் உடலிற் படிந்த மணலை அணையில் உதறியது. இராகவன் அமைக்கும் அணைப்பணியில் தன்னுடைய அற்ப ஆற்றலளவுக்கு அதுவும் பங்கு கொண்டு மணலை, எழுகின்ற அணையின் மீது உதறிற்று. இதைக் கண்டு வானரர் நகைத்தனர். ஏனெனில், அவர்கள் பால அமைப்பிற்காக முழு மலைகளையும், விரிந்த காடுகளையும், பெருமணற்சுமைகளையும் அப்படியே கொணர்ந்து வருகின்றனர் அல்லவா? மணல்மீது புரண்டு, பிறகு அதை உதறும் அச்சிறு அணில் அவ்வானரர்களின் நகை வாளிக்கு இலக்காய் விட்டது. ஆனல், இதைக் கண்ணுற்ற இராகவன், "வாழி இச்சிறு அணில்! இதன் ஆற்றலுக்கு இயைந்தவாறு இது பணியாற்றுகின்றது; அக்காரணத்தால் உங்களிடையே மிகச் சிறப்புற்றோர்களுக்குரிய பதவியையும் இது ஏற்பதற்குரியது," என்றான்; பிறகு அதன் முதுகை மெல்ல வருடினன். இராமனுடைய கைவிரல்கள் வருடின அடையாளங்கள் நீட்டுப்போக்கில் அணிலின்மீது இன்றும் திகழக் காணலாம்.

அணை முடிந்ததும், இராகவனும் அவன் உடன் பிறந்தோ

ஞலும் நடத்தப்பட்ட குரங்குப்படை இலங்கைக்குள் புகுந்துவிட்டது. பல மாதங்கள் கழிந்து மாபெரும்போரும் நடந்தது. அதன் விளைவாகக் குருதி வெள்ளம் பெருகிற்று. இறுதியில் அரக்கர் வேந்தன் தோல்வியுற்று மடிந்தும் போனுன். பொன் மயமான அரண்மனைகள் திகழ்கின்ற அவனுடைய தலைநகரம் கைப்பற்றப் பட்டது. இந்தியாவின் உட்புறத்திலுள்ள தொலைவான சிற்றூர் களில் உள்ள மக்கட்கு நான் இலங்கைக்குச் சென்றிருந்தேன் என்று மொழிந்தபொழுது, "அந்நகரில் உள்ள வீடுகள் தங்கத்தினுல் கட்டப்பட்டிருந்தன என்று எங்கள் நூல்கள் கூறுகின்றன," என்று கள்ளம் கபடற்ற அவர்கள் கூறினுர்கள். இத்தகைய தங்க மயமான நகரங்கள் இராகவன் கைவசமாயின. போரில் தனக்குச் சிறந்த தொண்டாற்றினதற்குக் கைம்மாருக இராகவன் அவற்றை இராவணனுக்கு இளைய தம்பியான விபீடணனுக்கு ஈந்து இராவணன் வீற்றிருந்த அரியணைமீது அவனை அமரும்படி செய்தான்.

பிறகு இராகவன் சீதையுடனும் தன்னைச் சூழ்ந்தவர்களுடனும் இலங்கையை விட்டு அகலும் தறுவாயில் பின் தொடர்ந்தோர் களிடையே ஒரு முனகல் கேட்டது. அவர்கள், "இராவணன் அரண்மனையில் உறைந்த சீதை முற்றிலும் தான் தூய்மை உள்ளவள் என்பதை மெய்ப்பிக்கவில்லை. அதற்கு ஒரு சோதனை வேண்டும்; ஒரு சோதனை வேண்டும்," என்று கூறினுர்கள். "தூய்மையா? அவள் கற்பின் வடிவம் ஆயிற்றே!" என்று இராகவன் ஓங்கிய குரலில் விடை அளித்தான். "அதைப்பற்றி எங்கட்குக் கவலையில்லை. நாங்கள் விழைவது ஒரு சோதனையே," என்று அவர்கள் பிடிவாதமாய் வற்புறுத்திப் பேசினுர்கள். இது காரணமாகப் பின்பு ஒரு பெருந்தீ வளர்க்கப்பட்டது. அந்தத் தீயில் சீதை புக வேண்டியிருந்தது. சீதை இறந்தே போய்விட்டாள் என்று நினைந்து வெந்துயர் உற்ருன் இராகவன்; ஆனுல், ஒரு கணத்தில் தலைமீது ஓர் அரியணையைத் தாங்கிச் செந்தீக் கடவுளே காட்சி அளித்தான். அந்த அரியாதனத்தின்மீது சீதை வீற்றிருந்தாள். எங்கணும் பேருவகை பொங்கிற்று; ஒவ்வோர் உள்ளமும் ஆறுதல் அடைந்தது.

காடுறை தொடக்கத்திலேயே இராகவனுக்கு இளையோனுன பரதன் இராகவனிடம் வந்து, மூப்படைந்த வேந்தன் இறந்ததைக் கூறி அரியாசனத்து அமரும்படி அவனை மிகவும் மன்ருடிக் கேட்டுக் கொண்டான்; இராகவன் தனித்துக் காடுறையுங்கால், தான் எக்

காரணங்கொண்டும் அரியணைமீது ஏற இயலாது என்று மறுத்து விட்டான்; தான் வணங்குதற்பொருட்டுத் தன் உடன் பிறந்தோனுக்குப் பதிலாக அவனுடைய மரப் பாதுகைகளை அரியாசனத்தில் வீற்றிருக்கச் செய்தான். இராகவன் தன் தலைநகருக்குத் திரும்பி வந்ததும் பொதுமக்களின் சம்மதத்தின் பேரில் அயோத்திக்கு வேந்தனானான்.

இராச்சியத்தைப் பெற்ற பிறகு, மக்களின் நலத்தைக்கருதிப் பண்டைக்காலங்களில் மன்னர்கள் உறுதிமொழிவழங்குவதுபோல இராகவனும் உறுதிமொழி அளித்தான். மன்னனே, மக்களுடைய அடிமை. அவர்களுடைய கருத்திற்கு அவன் தலைசாய்க்கவேண்டும். இந்நிகழ்ச்சியைப் பின்பு நோக்குவோம்.

இராகவன் சீதையுடன் சில ஆண்டுகள் இன்பமாய்க் கழித்தான். பின்பு, "ஓர் அரக்கன் சீதையைக் களவாடிக் கடல் வழியே தூக்கிச் சென்றுவிட்டான். இராகவன் அவளை மீட்டு வந்து அவளுடன் வாழ்கிறான்," என்ற அவச்சொல் மீண்டும் முகிழ்க்கத் தொடங்கிவிட்டது. முன்பு நிகழ்ந்த சோதனை போதாதாம்; மற்றொரு சோதனை வேண்டும் என்று சிலர் ஆரவாரம் செய்தனர்; "அன்றேல், சீதை நாடு கடத்தப்பட வேண்டும்," என்று கூச்சலிட்டனர்.

மக்களுடைய நிபந்தனைகளை நிறைவேற்றுதற்பொருட்டுச் சீதை நாடு கடத்தப்பட்டுக் காட்டில் உறைய நேர்ந்தது. அக்காட்டிலேதான் முனிவராயும் கவிஞராயும் திகழ்ந்த வான்மீகியாரின் ஆச்சிரமம் இருந்தது. வறியளாய் ஆதரவற்றுத் தனித்துப் புலம்பும் சீதையை இருடியார் கண்ணுற்றார்; துயர் மண்டிக்கிடக்கும் அவள் கதையைக் கேட்டுத் தம் ஆசிரமத்தில் இடந்தந்து, அவளைக் காப்பாற்றினார். அவள் சூல் கொண்டு தாயாகிற தருணம் அது; அவள் இரட்டைக் குழந்தைகளை ஈன்றாள். அவர்கள் இன்னார் என்பதைக் குழந்தைகளுக்கு அவர் அறிவுறுத்தவில்லை; பிரமச்சரிய வாழ்வை மேற்கொள்ளச் செய்து அவர்களைப் பேணி வளர்த்தார்; இராமாயணம் என்ற பேரிதிகாசத்தைப் படைத்து, அதை இசைக்கும் முறையிலும் அமைத்தார்; பிறகு அதை நாடகமாகவும் சமைத்தார்.

இந்தியாவில் நாடகம் மிகத் தூய்மை வாய்ந்ததாகப் போற்றப்படுகின்றது. நாடகமும் இசையும் சமயமாகவும் கருதப்படுகின்றன என்றும் கூறலாம். எந்த இசையாயும் ஒன்று இருக்கலாம்;

அது காதற்கீதமாயும் திகழலாம்; ஆனல், அந்த இசையில் முற்றிலும் ஆழ்ந்து ஆன்மா திளேக்குமாயின், அது முத்தியுறும்; வேறென்றையும் முத்தி அடைதற்பொருட்டு ஆன்மா நாடவேண்டுவதில்லே. தியானம் எந்தக் குறிக்கோளுக்கு நம்மை அழைத்துச் செல்லுமோ, அதே குறிக்கோளுக்குக் கீதமும் ஈர்த்துச் செல்லும் என்று அவர்கள் இயம்புகின்றுர்கள். அக்காரணம் பற்றியே இராகவனுடைய சரிதத்தை நாடகமாக்கி அதைப் பாடும்படி அந்த இரு குழந்தைகளுக்கும் வான்மீகியார் கற்பித்தார்.

பண்டைய மன்னர்கள் வழக்கமாய் நடத்தும் பெருவேள்வி ஒன்றை இராகவனும் ஆற்றுங்காலம் வந்தெய்தியது; மனேவியில்லாமல் எந்தச் சடங்கும் இந்தியாவில் நிறைவேருது. பக்கத்தில் வாழ்க்கைத் துணேவி (சகதர்மிணி) இருந்தே தீரவேண்டும். இல்லாளுக்கு 'வாழ்க்கைத் துணேவி' என்னும் பெயரை நல்கியிருக்கின்றனர். கணவன் அவளுடனிருந்தே சமயச் சடங்குகளேப் புரிய வேண்டும். இந்தியாவில் இல்லறம் நடத்துபவன் நூற்றுக் கணக்கான சடங்குகளே ஆற்ற வேண்டும். சாத்திரப்படி ஒரு சடங்காவது மனேவி இல்லாமல் நிறைவேருது.

இராகவன் மனேவி காட்டில் உறைகின்ற காரணத்தால், அவன் அவள் பக்கலில் வீற்றிருக்க இயலாமற்போயிற்று. மீண்டும் மணம் புரியும்படி மக்கள் இராகவனே வேண்டினுர்கள். "இது இயலாத செயல்; என் ஆவி சீதையே," என்று இராகவன் விடை அளித்துவிட்டான். சடங்கு முறைப்படி நிறைவேறுதற்பொருட்டுச் சீதைக்கு மாருக ஒரு பொற்சிலேயை அமைத்தனர். அந்தப் பெரு விழாவில் சமய உணர்ச்சி ஓங்கி வளர்தற்பொருட்டு ஒரு நாடகக் காட்சியை மக்கள் கண்களுக்கு விருந்தாய் அமைத்தார்கள். இராகவன் மைந்தர்கள் என்று உணரப்படாத இலவ குசர் என்னும் தம் இரு சீடர்களோடு மிகச் சிறந்த ஞானநற்கவிஞரான வான்மீகியார் அரண்மனேக்கு வந்தார். ஒரு நாடக அரங்கு அமைக்கப்பட்டிருந்தது. நாடகம் நடத்துதற்குரிய யாவும் ஆயத்தமாயிருந்தன. இராகவனும், அவன் உடன் பிறந்தோர்களும், பிரபுக்களும், பொது மக்களும் நாடகக் காட்சியைக் காண வந்தார்கள். காண்போர் அவையோ மிக விரிந்த அவையாகும். வான்மீகியார் வகுத்த முறைக்கேற்றவாறு இலவகுசர்களால் இராம சரிதம் இசைக்கப்பட்டது. அவர்கள் தங்களுடைய உள்ளங்கவரும் இன்னிசைக் குரலாலும் தோற்றப் பொலிவாலும் கூடியிருந்தோர்களின் மனங்

களைக் கொள்ளை கொண்டுவிட்டார்கள். அந்தோ! இராகவன் உணர்ச்சி நறவுண்டு பித்தேறிவிட்டான். நாடகத்தில் சீதையின் வனவாசக் காட்சி நிகழ்ந்த பொழுது, இராகவன் செய்வது ஒன்றும் ஓராது திகைத்து நின்றான். "துயருற வேண்டா; நான் சீதையைக் காண்பிக்கின்றேன்," என்று அம்முனிவர் அவனுக்கு மொழிந்தார். நாடக மேடையில் சீதை தோன்றியதும், இராகவன் மிகவும் உவகை கொண்டான். திடீரெனப் பழைய ஐயக்குரல் எழுந்தது. "சோதனை! சோதனை!" என்று மக்கள் கூச்சலிட்டார்கள். தன்னுடைய புகழ்மீது மாசு படரச் செய்யும் மக்களின் மிகக் கொடிய சொல் மீண்டும் மீண்டும் எழவே, அதைச் சீதையால் சகிக்க இயலாது போயிற்று. "தெய்வங்காள், என் கற்பை மெய்ப்பிப்பீர்களாக!" என்று அவள் தெய்வங்களை நோக்கி இறைஞ்சினாள். பூமி பிளந்தது; "இதுதான் சோதனை," என்று கூறிய படியே புவி மாதின் அகட்டில் மறைந்துவிட்டாள் சீதை. இந்த அவலக் காட்சியைக் கண்ட மக்கள் திடுக்கிட்டார்கள். இராகவனைத் தாங்கருந்துயர் சூழ்ந்துவிட்டது.

சீதை மறைந்து சில நாட்களுக்குப் பிறகு தேவர்களிடமிருந்து ஒரு தூதன் வந்து, "மண்ணில் நீ ஆற்றவேண்டிய செயல் முடிந்துவிட்டது; விண்ணிற்குத் திரும்பலாம்," என்று இராகவனுக்கு அறிவித்தான். இந்தச் செய்தி அவனுடைய உண்மையான தெய்வ நிலையை உணர்த்திற்று. தன்னுடைய தலைநகரை அலம்பிச் செல்லும் சரயு என்னும் பேராற்றிலே இராகவன் மறைந்து போய் விண்ணில் சீதையை அடைந்துவிட்டான்!

இதுதான் இந்தியாவில் விரிந்த பண்டைய பேரிதிகாசமாகும். இராமனும் சீதையுந்தான் இந்திய நாட்டிற்குச் சிறந்த இலட்சியங்களாவார்கள். எல்லாச் சிறுவர்களும், முக்கியமாக எல்லாச் சிறுமிகளும் சீதையைக் கற்புக்கரசியென வணங்குகின்றார்கள். தூய்மை உள்ளவளும், தன்னையே அர்ப்பணம் செய்தவளும், சோகமாயுள்ளவளுமான சீதையைப்போல இருப்பதுதான் ஒரு பெண்ணின் பேரவா ஆகும். இத்தகைய கதைப் பாத்திரங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யுங்கால், மேலை நாட்டு இலட்சியத்திற்கும் இந்தியாவின் இலட்சியத்திற்கும் எவ்வளவு பெரிய மாறுபாடு இருக்கிறது என்பதை நீங்கள் உணர்வீர்கள். இந்திய மக்களுக்குத் துயர்க்கடலுக்கே எல்லையானாள் சீதை. "செயலாற்றுக; செயலில் உன் ஆற்றலைக் காண்பிப்பாயாக," என்று குடதிசை கூறு

கின்றது. இந்திய நாடோ "துயர்ப் பாரம் ஏற்பதில் உன் சத்தியை வெளியிடுவாயாக," என்று இயம்புகின்றது. 'எவ்வளவு செல்வம் வேண்டும்?' என்ற பிரச்சினைக்கு மேலை நாடு விடையளித்துவிட்டது. 'எவ்வளவு குறைவாகச் செல்வத்தை மனிதன் வைத்துக்கொள்ளலாம்?' என்ற கேள்விக்கு இந்தியா விடை அளித்துவிட்டது. இந்த இரண்டு மாறுபட்ட எல்லைகளை நீங்கள் பார்க்கின்றீர்கள். இலட்சிய இந்தியாவுக்கு ஒரு சான்ருய்ச் சீதை திகழ்கின்ருள். "அவள் உண்மையாகவே வாழ்ந்த ஒரு பெண்மணி தாஞ? இந்தக் கதை சரிதத்தில் வேரூன்றியதா? இல்லையா?" என்ற கேள்விகளைப்பற்றிக் கவலைப்பட வேண்டா; ஓர் இலட்சியம் நம்முன் சுடர்விட்டெழக் காண்கின்ருேம்: ஒரு நாட்டு மக்களின் இதயம் முழுவதும் படர்ந்திருப்பதும், அவர்களது வாழ்க்கையை ஊடுருவியிருப்பதும், மக்களின் குருதியின் ஒவ்வொரு சொட்டிலும் ஊறி உறுத்துவதுமான ஓர் இலட்சியத்தை—சீதையின்கண் உருவான ஓர் இலட்சியத்தை—வேறு எந்தப் புராணமும் சித்திரிக்கவில்லை. நல்லது என்று கருதக்கூடிய எதற்கும், தூய்மை என்று எண்ணக்கூடிய எதற்கும், புனிதம் என்று போற்றக்கூடிய எதற்கும், உயர்பெண் தகைமை என்று பாராட்டக்கூடிய எதற்கும் சீதையின் பெயர் சான்ருய்த் திகழ்கின்றது. ஒரு பெண்ணை வாழ்த்துகிற அந்தணன், "சீதைபோல இருப்பாயாக!" என்று மொழிவான். ஒரு சேய்க்கு ஆசி கூறுகிற அந்த அந்தணனே, "சீதையைப்போல விளங்குவாயாக!" என்று செப்புவான். அவர்களனைவரும் சீதையின் சேய்கள்; சீதையைப்போலத் திகழ்வதற்கு முயல்கின்ருர்கள்; பொறைக்கு எல்லையாய், துயரின் உருவாய், கற்புக்கரசியாய், மாசிலா இல்லற மங்கையாய்ச் சீதை காட்சி அளிக்கின்ருள். அவள் எவ்வளவோ துயருற்ருலும், தன் கணவனை இராகவனைக் கடிந்து ஒரு வெஞ்சொல்லும் கூறினுள் இல்லை; எல்லாம் தன் கடமைகள் என்று ஏற்று, எல்லாவற்றையும் ஆற்றினுள். அவள் காடுறையும்படி நேர்ந்த நீதியற்ற கொடுஞ்செயலை உன்னிப் பாருங்கள்! ஆனுல், அவள் உள்ளம் ஒரு கசப்பையும் உணரவில்லை. மீண்டும் மொழிகின்றேன். இதுதான் இந்தியர்கள் கண்ட இலட்சியம். "ஒருவன் உன்னைத் துன்புறுத்துங்கால், நீ இடருக்கு இடர் செய்தால், அது அந்த இடரைத் துடைத்து விடாது; இன்னும் ஒரு கொடிய செயலைத்தான் அது படைத்து விடும்," என்று அப்பண்டைச் சான்ருேரான புத்தபிரானுர் புகல்

கின்ருர். இயல்பாகவே சீதை இந்திய நாட்டுப் பெண்மணியாய்த் திகழ்கின்ருள்; தீங்கிற்குத் தீங்கு இழைக்கும் இயல்பு அவளிடத்தில் இல்லை.

எது உண்மையான இலட்சியம்? மேல்நாடு போற்றும் புற ஆற்றலும், வலிவுமா, அல்லது கீழ்நாடு புகழும் துயரிடைப் பொறையா?

"தீயதை வெல்வதால், அதைக் குறைக்கப் பார்க்கின்ருேம்," என்று மேலை நாட்டவர் மொழிகின்றனர். துயரை ஏற்பதால், நாங்கள் தீயதைத் துடைக்கின்ருேம். தீது செயலற்றுப் போய்விடு கின்றது; இன்னலும் இன்ப வடிவடைகின்றது. நல்லது; இரண் டும் சிறந்த இலட்சியங்களே; இறுதியில் எந்த இலட்சியம் கால வெள்ளத்தை நீந்தி நிற்கும்? எந்தச் சார்பு மன்னுயிர்க்கு மிகுந்த நன்மை பயக்கும்? எந்த இலட்சியம் விலங்கியல்பின் வலிமையைக் குறைத்து அதை வென்றுவிடும்? பொறையா, போராட்டமா?

இடையிலே ஒவ்வொருவருடைய இலட்சியங்களையும் சிதைக்கா மல் இருப்போமாக. தீயதை ஒழிக்கும் தொண்டிலேதான் கண் ணும் கருத்துமாய் நாமிருவரும் இருக்கின்ருேம்; நீங்கள் உங்கள் முறையைப் பற்றுவீர்களாக; நாங்கள் எங்கள் முறையை ஏற்கின் ருேம். இலட்சியத்தை இருவரும் மாய்க்காமல் இருப்போமாக.

"எங்களுடைய முறையைப் பின் பற்றுவீர்களாக!" என்று நான் மேலை நாட்டவர்களுக்குக் கூறவில்லை; அங்ஙனம் மொழிய வும் மாட்டேன் என்பது திண்ணம். குறிக்கோள் ஒன்ருயிருக்க லாம்; ஆனல், முறைகள் ஒன்ருய் இருத்தல் இயலாது. எங்க ளுடைய இலட்சியங்களைக் கேட்ட நீங்களும் இந்தியாவுக்கு நான் பேசுகிற சுருதியிலேதான் மொழிவீர்கள், "குறிக்கோள் நம்மிரு வருக்கும் தக்கதாகத்தான் அமைந்திருக்கின்றது," என்ற மூச் சிலேதான் உங்கள் சொற்களும் செல்லும். "உங்கள் இலட்சி யத்தை நீங்கள் தொடருங்கள்; உங்கட்கு ஆண்டவன் அருள் புரிவானுக! உங்கள் பாதையில் உங்கள் முறையையே பின் பற்று வீர்களாக! மாறுபட்ட கொள்கைகளின்பொருட்டுப் பூசலிடாமல் இருப்போமாக!" என்பதே குணதிசைக்கும் குடதிசைக்கும் நான் வழங்கும் அறிவுரையாகும். வெளித்தோற்றத்திலே வேறுபட்ட தாகத் தோன்றினுலும் அடையவேண்டிய எல்லை ஒன்றே என்பதை நான் வற்புறுத்துகின்றேன். சிக்கலான வாழ்வாம் பள்ளத்தாக்கில் இறங்கித் திரிகின்ற நாம், ஒருவருக்கொருவர் ஆசி கூறுவோமாக!

மகா பாரதம்

[இது காலிபோர்னியாவில் பாசதேனு என்னும் இடத்தில் நிறுவப்பட்டுள்ள ஷேக்ஸ்பியர் கழகத்தில் 1900-ஆம் ஆண்டு, பிப்பிரவரித் திங்கள் முதல் நாள் நடைபெற்ற சொற்பொழிவு.]

நான் இன்று மாலை உங்கட்கு மற்ரொரு மாபேரிதிகாசத்தைப் பற்றிப் பேசப் போகின்றேன். அதை **மகா பாரதம்** என்று வழங்குவார்கள். துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் பிறந்த வேந்தனான பரதனுடைய மரபில் தோன்றியவர்களைப்பற்றிக் கூறும் கதை அதில் கோயில்கொண்டிருக்கிறது. 'மகா' என்னும் சொல் 'பெரிய' என்னும் பொருளை நல்கும். 'பாரத' என்ற சொல் பரதனுடைய தோன்றல்களைச் சுட்டும். இந்த மன்னன் பெயரான 'பரதன்' என்ற சொல் வாயிலாகவே 'பாரத' என்னும் பெயர் இந்தியாவுக்குப் பிறந்தது. 'மகா பாரதம்' என்பது 'பெரிய இந்தியா' என்ற பொருளை அளிக்கும். பரதனுடைய சிறப்பு வாய்ந்த மரபினரைச் சித்திரிக்கும் கதை என்பதும் இதற்குப் பொருளாகும். இந்தப் பேரிதிகாசக் காட்சியின் நிலைக்களம் கௌரவர்களுடைய பண்டைய இராச்சியமாகும். கௌரவர்களுக்கும் பஞ்சபாண்டவர்களுக்கும் மூண்ட பெரும்போரையே இக்கதை அடிப்படையாய்க் கொண்டிருக்கிறது. போர்க்களம் மிகவும் விரிவானதன்று என்பது இதனால் தெரியவருகின்றது. இந்தப் பேரிதிகாசம் மக்களிடையே பெரிதும் பரவியிருக்கிறது. கிரேக்கர்களிடையே எப்படி ஹோமருடைய கவிதை மக்கள் உளத்தில் ஆட்சி புரிகின்றதோ, அப்படியே இந்தியாவிலுள்ள மக்கள் உள்ளத்தில் இது தன் ஆணையைச் செலுத்துகின்றது. ஆண்டுகள் பல செல்லச் செல்ல இடைச் செருகல்கள் மிகுதியாக இந்நூலில் குவியத் தொடங்கிவிட்டன. இது இப்பொழுது ஒரு பெரு நூலாய்க் காட்சி அளிக்கின்றது. இரண்டடிகளைக் கொண்ட சுலோகங்கள் சுமார் ஓர் இலட்சம் இதில் உள்ளன. அந்த அளவுக்கு இது விரிந்துவிட்டது. பல விதமான கதைகள், கட்டுக் கதைகள், புராணக் கதைகள், தத்துவ ஆராய்ச்சிக்கட்டுரைகள், சரிதத்துணுக்குகள், பற்பல வாதங்களைக் குறிக்கும் உரைகள் எல்லாம் அவ்வப்பொழுது இதில் சேர்க்கப்பட்டுள்ளன. மிக விரிந்து ஓங்கி வளர்ந்த ஓர் இலக்கியக் கதம்பமாய் இது திகழ்கின்றது. ஆனால், இதன் நடுவே பண்டைக்

கதை ஓட்டத்தின் ஒலி கேட்டுக்கொண்டுதான் இருக்கிறது. இரு தாயாதி குடும்பங்களுக்கிடையே எழுந்த போர்தான் இக்கதைக்கு ஆதாரமாகும். ஒரு குடும்பம் கௌரவர் குடும்பம்; மற்றொன்று பாண்டவர் குடும்பம். அவர்கள் போர் புரிந்தது, இந்திய சாம் ராச்சியத்தைக் குறித்தேயாகும்.

ஆரியர்கள் சிறு சிறு கூட்டங்களாய் இந்தியாவுக்குள்ளே நுழைந்தார்கள்; இறுதியில், எதிர்ப்போரின்றி இந்தியா முழுவதும் ஆட்சி புரிந்துவிட்டார்கள். இந்த ஒரு குடும்பத்தின் இரு கிளை களுக்குள்ளே அரசியலைக் கைப்பற்றும் வகையில் போர் எழுந்து விட்டது. 'கீதை' என்னும் நூல் அப்போர்க்களத்துக் காட்சி யோடு எப்படித் தொடங்குகின்றது என்பதும், எப்படி இரண்டு படைகளும் ஒன்றுக்கொன்று எதிராக அணி வகுக்கப்பட்டிருந்தன என்பதும், கீதையைப் படித்தவர்களால் நன்கு உணரப்படும். இந்தப் போரே மகாபாரதப் போராகும்.

அரசருக்கரசராய் ஆண்டவருக்கு இரண்டு மைந்தர் இருந் தனர். அவருள் மூத்தவன் திருதராட்டிரன் என்பவன்; மற்றவன் பாண்டு என்பவன். மூத்தோன் பிறவிக்குருடன். இந்து மனுநீதிக் கேற்ப குருடனும், நொண்டியும், உடற்குறைபாடு உள்ளவனும், எலும்புருக்கி நோய்வாய்ப்பட்டு நிற்பவனும், உடலொடு பிறந்த மற்ற எந்நோயில் சிக்கியவனும் இராச்சியத்தைப் பெற இயலாது. வாழ்க்கை நடத்த வேண்டிய அளவுக்கே அவன் செல்வத்தைப் பெறுவான். அக்காரணம் பற்றியே மூத்தோனாயினும் திருதராட் டிரன் அரியாசனத்து அமரவில்லை. பாண்டுவே மன்னர்க்கு மன்னன் ஆனான்.

திருதராட்டிரனுக்கு நூற்றுவர் மைந்தர் உண்டு; பாண்டுவுக் குப் புதல்வர் ஐவரே. இளம்பிராயத்திலேயே பாண்டு இறந்த கார ணத்தால், கௌரவர்களுக்குத் திருதராட்டிரன் வேந்தனாய்த் திகழ்ந் தான். பாண்டு மைந்தர்களைத் தன் சேய்களோடு சேர்த்து அவன் வளர்த்தான். அம்மைந்தர் அனைவரும் வயது வந்ததும், ஓர் அந்தணப் பெரும்போர் வீரரான துரோணரிடம் கல்வி பயின்ற னர். பற்பல போர்க் கலைகளிலும் அரசிளங்குமரர்களுக்குரிய சாத்திரங்களிலும் அவர்கள் மிகவும் தேர்ச்சி பெற்றனர்கள். அர சிளங்குமரர்களின் கல்வி முடியவே, திருதராட்டிரன் பாண்டுவின் மைந்தருள் மூத்தவனான உதிட்டிரனை அவன் தந்தையின் அரியா சனத்தே அமர்த்தினான்.

உதிட்டிரனுடைய அரும்பெருங்குணங்களும், அவனுடைய உடன் பிறந்தோர்களின் வீரமும் ஆர்வமும் குருடனான திருத ராட்டிரனுடைய மைந்தர்களின் இதயத்தில் பொறாமைத் தீயை எழுப்பிவிட்டன. அவர்களுள் மூத்தவனான துரியோதனனது தூண்டுதலால் 'வாரணாவதம்' என்ற இடத்தில் நடைபெறும் ஒரு தெய்வத் திருவிழாவிற்கு வரும்படி பாண்டவர்கள் வற்புறுத்தப் பட்டார்கள். துரியோதனன் கற்பித்தபடியே அமைக்கப்பட்ட மாளிகையில் அவர்கள் தங்கியிருக்க ஏற்பாடாகிவிட்டது. அது சணல், குங்கிலியம், அரக்கு முதலிய எளிதில் தீப்பிடிக்கும் பொருள்களால் அமைக்கப்பட்ட மாளிகை. இரவில் அதற்குக் கள்ளத்தனமாய்த் தீ வைத்துவிட்டனர். திருதராட்டிரன் மாற்றாந் தாய் மகனான நற்குணம் வாய்ந்த விதுரன், துரியோதனனுடைய தீய எண்ணங்களை நன்கு அறிந்து, அவர்கள் வகுத்த சூழ்ச்சியை பாண்டவர்களுக்கு அறிவுறுத்தி, முன்னெச்சரிக்கை செய்துவிட் டான்; யாரும் அறியாவண்ணம் பாண்டவர்கள் தப்பி ஓடி விட் டார்கள். அம்மாளிகை சாம்பராய்ப் போனதைக் கண்டு கௌரவர்கள் தங்கள் முன்னேற்றப் பாதையில் குறுக்கே அல்லல் கள் யாவும் ஒழிந்தன என்று பெரு நிறை மூச்செறிந்தார்கள். இவ் வண்ணம் திருதராட்டிரனின் மைந்தர்கள் இராச்சியத்தைக் கைப் பற்றினார்கள். தங்கள் அன்னையோடு பாண்டவ சகோதரர்கள் காட்டிற்கு ஓடிவிட்டார்கள்; அங்கே இரந்தே வயிறு வளர்த்தார்கள்; அந்தணச் சீடர்கள்போல வேடம் தாங்கி இங்குமங்கும் திரிந்தார் கள். திக்குத்திசை தெரியாத அந்தச் செறிந்த காடுகளில் அவர் களுக்குற்ற இன்னல்களோ, மிகப் பலவாகும். பல அரிய வீரச் செயல்களையும் அவர்கள் நிகழ்த்தினார்கள். இடுக்கண் இடையே அவர்கள் காட்டிய பொறையும், மன வலிமையும், ஆற்றலும், தைரி யமும் எல்லா ஆபத்துகளிலும் அவர்கள் வெற்றி காணச் செய்து விட்டன. அண்மையிலுள்ள நாட்டு இளவரசிக்கு மணம் நெருங் கிக்கொண்டிருக்கிறது என்ற செய்தி அவர்கள் செவியில் விழு கின்ற வரையில் இவ்வண்ணமே எல்லாம் நிகழ்ந்துகொண் டிருந்தன.

தனி இயல்பு வாய்ந்த பண்டைய அந்த மணச் சடங்கைப்பற்றி உங்கட்கு நேற்று மாலை கூறினேன். அதைச் 'சுயம்வரம்' என்று வழங்குவார்கள். அதாவது, இளவரசி தானே தன் நாயகனைத் தேர்ந்தெடுத்தலாகும். அரசிளங்குமரர்களும் பிரபுக்களும் அடங்

கிய பெருஞ்சபை திரண்டிருக்கும். அவர்களுள் எவனேனும் ஒருவனை இளவரிசி வரிப்பாள். கொம்புகளை ஊதிச் செய்தி அறிவிப் போர்களும் கட்டியக்காரர்களும் பின் தொடரக் கையில் மாலை ஒன்றைத்தாங்கி அவள் அடி பெயர்த்து வைப்பாள். அவள் கைத் தலம் கைப்பற்ற அரியாசனத்து அமர்ந்திருக்கும் ஒவ்வோர் இள வரசனுடைய புகழ்களையும், அவன் போரில் அடைந்த வெற்றிகளை யும் கட்டியக்காரர்கள் எடுத்து உரைப்பார்கள். அரசிளங்குமரி எந்த அரசிளங்குமரனை மணக்கத் தீர்மானித்துள்ளாளோ, அந்தக் குமரன் கழுத்தில் மணமாலையை இடும் முறையில் தன் விருப்பத் தைத் தெரிவிப்பாள். பிறகு அது மணச் சடங்காய் முடிந்துவிடும்.

துருபதன் மிக்க புகழ் வாய்ந்த பாஞ்சால நாட்டுக்கு வேந்தன். அவனுடைய பெண்ணுகிய திரௌபதியின் அழகும் எல்லாத்திறன் களின் சிறப்புகளும் எங்கும் பரவியிருந்தன. அவளே தனக்குத் தகுந்த ஒரு வீரனை மணாளனுகத் தேர்ந்து எடுக்கப்போகின்றுள்.

சுயம்வரத்தில் கன்னியா சுல்கமாக ஒரு கைத்திறனே, அதைப் போன்ற ஏதாவது ஒன்றே காத்திருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில் புரிவதற்காக அமைக்கப்பட்ட அருஞ்செயல் ஒன்றை மொழிவேன். மிகவும் உயரத்தில் மீன்போல ஒரு குறி அமைக்கப்பட்டிருக்கும். அதன் அடியில் நடுவில் துவாரமுள்ள ஒரு சக்கரம் சுழன்று கொண்டேயிருக்கும். அதன் அடிக்கீழ் ஒரு தொட்டியில் தண் ணீரை ஊற்றி வைத்திருப்பர். மீனின் நிழலை நீரிற்பார்த்த வண் ணமே, அந்த மீனின் கண்ணிற்பாயும்படி அந்தச் சக்கரத்தின் துவாரம் வழியாக அம்பை எய்ய வேண்டும். எவன் இந்தச் செய லில் வெற்றி காண்கின்றுனே, அவன் அந்த இளங்குமரியை மணக் கலாம்.

இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வேந்தர்களும் அர சிளங்குமரர்களும் வந்து சூழ்ந்திருந்தார்கள். அவள் கைத்தலம் பற்ற அனைவரும் ஆர்வம் கொண்டிருந்தனர். ஒவ்வொருவராகத் தத்தம் திறனைக் காட்டும் வகையில் முயன்று பார்த்தனர்; ஆனல், ஒவ்வொருவரும் குறியை எய்ய முடியாமல் தோல்வியுற்றனர்.

இந்தியாவில் நான்கு வருணங்கள் இருக்கின்றன என்பது உங்கட்குத் தெரிந்ததே. அவ்வருணங்களில் பரம்பரையாகச் சடங் காற்றும் அந்தணச் சாதியினரே மிக உயர்ந்தவர். அடுத்தபடியாக க்ஷத்திரிய குலம் திகழ்கின்றது. வேந்தர்களும் போர்வீரர்களும் இவ்வருணத்தைச் சார்ந்தவர்கள். இதற்குக்கீழ் வைசியர்கள்

இலங்குகின்றுர்கள் ; இவர்கள் வியாபாரிகளே. இறுதியில் பணி யாளர்களான நான்காம் வருணத்தவரே காட்சி அளித்தனர்.

அந்த அரசிளங்குமரியோ, இரண்டாம் சாதியான க்ஷத்திரிய குலத்தில் தோன்றியவள் என்பது சொல்லாமலே விளங்கும். குறியை எய்ய இயலாமல் அரசிளங்குமரரனைவரும் தோல்வியுறவே, துருபத வேந்தன் மகன் அவை நடுவே எழுந்து, "க்ஷத்திரியகுல மன்னர் எவரும் வெற்றி காணவில்லை. எனவே, மற்றைய சாதியினர் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம். அவர் அந்தணராயினும் நான்காம் வருணத்தைச் சார்ந்தவராயினும் சரி; எவர் குறியை எய்கின்றுரோ அவர் திரௌபதியை மணக்கலாம்," என்றுன்.

அந்தணர்களிடையே பஞ்ச பாண்டவர்கள் அமர்ந்திருந்தார் கள். அவர்களுள் அருச்சுனன் மூன்றும் சகோதரனுவன். அந்த விற்போட்டியில் வெற்றி கொண்ட வீரன் அவனேயாவன். அவன் எழுந்து முன் வந்தான். அந்தணர் குலத்தவர் தம் சாதி இயல்புக்கேற்ப அமைதியும் அச்சமும் அமைந்தவர். அவர்கள் சாத்திரப்படி போர்க் கருவிகளைத் தீண்டுதல் கூடாது ; வாளை வீசுதல் கூடாது ; ஆபத்தை விளைக்கக்கூடிய எந்த வீரச் செயலிலும் இறங்குவது அவர்கட்கு அழகன்று. தியா னத்தில் இருப்பது, படிப்பது, புலன்களை அடக்குவது—இவைதாம் அவர்களுடைய வாழ்க்கையாய் அமைந்துள்ளன. அவர்கள் எவ் வளவு அடக்கமும் அமைதியும் வாய்ந்தவர்கள் என்பதைக் கூர்ந்து ஆராய்ந்து பாருங்கள். இந்த வீரன் எழுந்திருப்பதைக் கண்ட அந்த ணர்கள் தங்கள் மீது க்ஷத்திரியர்களுடைய சீற்றம் பாயக்கூடு மென்றும், அவர்கள் தங்களனைவரையும் மாய்த்துவிடக்கூடுமென் றும் அஞ்சினுர்கள்; அக்காரணங்கொண்டே அச்செயலில் இறங்கா வண்ணம் அருச்சுனனைத் தடுக்க முயன்றுர்கள். ஆனல், அருச் சுனன் அவர்கள் உரைக்குச் செவிசாய்க்கவில்லை. ஏனெனில், அவன் ஒரு போர் வீரன் அல்லவா? அவன் வில்லைத் தூக்கி, யாதோர் அல்லலுமின்றி நாணை ஏற்றினுன் ; அம்பைப் பூட்டிச் சக்கரத்தின் நடுவிலுள்ள துவாரம் வழியே இலக்கை எய்தான். அது மீனின் கண்ணைப் பிளந்து அப்பாற் சென்றுவிட்டது.

அங்கே கூடியிருந்த மக்கள் மகிழ்ச்சித்தேன்உண்டு ஆரவாரம் செய்தார்கள். அரசிளங்குமரியான திரௌபதி அருச்சுனனை நண்ணி, அவன் கழுத்தில் பூமாலையை இட்டாள். அரசிளங் குமரர்களிடையே ஒரு பெருங்கூக்குரல் எழுந்தது. "வேந்தர்களும்

அரசிளங்குமரர்களும் திரண்டு இருக்கிற இந்தப் பேரவையிலிருந்து போர் வீரர் குலத்தில் உதித்த ஓர் அரசிளங்குமரனைத் தேர்ந்து எடுக்காது, வறியனான ஓர் அந்தணனை வரித்தாளே!'' என்று அவர்கள் நெஞ்சு புழுங்கினார்கள்; ஆகையால், அருச்சுனனோடு போர் தொடுத்து அவளை அவன் கையிலிருந்து பற்றுவதற்கு விழைந்தார்கள். பஞ்சபாண்டவர்கள் போர் வீரர்களோடு மாபெருஞ் சண்டையில் இறங்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது; ஆனால், பஞ்சபாண்டவர்கள் எதிரிகளுக்குச் சற்றும் இடந்தரவில்லை. வெற்றியோடு மணமகளைத் தூக்கிச் சென்றுவிட்டார்கள்.

அரசிளங்குமரியோடு பஞ்சபாண்டவர் தம் அன்னையாகிய குந்தியை அடைந்தனர். அந்தணர்கள் இரந்தே உயிர் வாழ வேண்டும். ஆகவே அந்தணர் வேடம்பூண்ட அவர்கள் இரப்பதற்கு வெளியே செல்லுவார்கள். "அன்னாய், நாங்கள் மிகவும் வியப்புறும் ஒரு பிச்சையை வாங்கி வந்திருக்கிறோம்!'' என்று மகிழ்ச்சி பொங்க உரத்துக் கூறி, அவர்கள் அன்னையை அழைத்தார்கள். "குழந்தைகளே, எல்லோரும் அதைச் சேர்ந்து நுகர்வீர்களாக!'' என்று தாய் கூறிவிட்டாள்; அரசிளங்குமரியைப் பார்த்ததும், "அந்தோ! என்ன மொழிந்துவிட்டேன்! இவள் ஒரு நங்கையாயிற்றே!'' என வருந்தினாள். ஆனால், என் செய்வது! அன்னை சொன்ன சொல், சொல்லியதுதானே! அதைப் புறக்கணிக்கக் கூடாது. அவளுடைய சொல்லை நிறைவேற்றத்தான் வேண்டும். அவள் பொய் புகன்றதே இல்லையே. ஆதலால், அவள் சொல்லிய சொல்லைப் பொய்ப்பித்தல் கூடாது. அதனால், பஞ்ச பாண்டவர் அனைவர்க்கும் திரௌபதி ஒரே மனைவியானாள்.

ஒவ்வொரு மக்கட்சமுதாயத்திலும் வளர்ச்சிப்படிகள் உண்டென்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த மாபேரிதிகாசத்திற்குப் பின் பண்டைய சரித்திரத்தின் வியப்புறும் காலக்காட்சி மறைந்து நிற்கின்றது. பஞ்ச பாண்டவர்கள் சேர்ந்து ஒரே மனைவியை மணப்பதாகக் குறிப்பிடுகின்றார் இந்த இதிகாச ஆசிரியர். மேலும், அவர் இதற்குப் போலிக்காரணமும்காட்டி விளக்கப் பார்க்கின்றார். அது அன்னை இட்ட கட்டளையென்றும், இத்தகைய மணத்திற்கு அவள்தான் அனுமதி தந்தாள் என்றும் கூறிச் சமாதானம் செய்கின்றார். ஒவ்வொரு நாட்டிலும் ஒருத்தி பல கணவர்களை மணக்கும் வழக்கத்திற்கு இடம் அளிக்கப்பட்டதென்பதும் நீங்கள் அறிந்த விஷயமே. உடன் பிறந்தோர் யாவரும் ஒருத்தியை மணக்கும்

நிலையைச்சுட்டும் பண்டைக்காலக் காட்சி போலும் இது !

திரௌபதியை அருச்சுனன் அழைத்துச் சென்ற பின் அவளுடைய உடன் பிறந்தோனின் மனத்தில் ஒரு பெருங்குழப்பம் பிறந்துவிட்டது. “இம்மக்கள் யார்? என் உடன் பிறந்தாளை மணக்கப்போகும் இந்த வீரன் யார்? இவர்களுக்கு இரதங்களில்லை; புரவிகள் இல்லை; இவர்களிடம் ஒன்றுமே இல்லை. இவர்கள் கால் நடையாகவே செல்கின்றார்களே!'' என இத்தகைய சிந்தையில் ஆழ்ந்து, சற்று விலகியபடியே அவனும் அவர்களைப் பின்தொடர்ந்தான்; இரவில் அவர்கள் பேசுவதை மறைந்து நின்றே செவிசாய்த்துக் கேட்டான். அவர்கள் உண்மையிலேயே க்ஷத்திரியர்கள் என்பது அவனுக்கு மனத்தில் நன்றாய்ப் பட்டுவிட்டது. பிறகு அவர்கள் யார் என்பதை துருபதவேந்தன் அறிந்ததும் பேருவகை கொண்டான்.

இத்தகைய மணம் தக்கதன்று என்ற மறுப்பை மக்கள் முதலில் எழுப்பினாலும், பஞ்ச பாண்டவர்கள் மணம் புரியலாம்; அதற்குச் சாத்திரம் இடம் தருகின்றது என்று வியாசர் விளம்பிவிட்டார். இக்காரணம் பற்றியே ஒருத்தி பல கணவரை மணக்கின்ற சடங்கிற்குத் துருபத வேந்தன் இணங்கினான். பஞ்ச பாண்டவர்களின் கைத்தலங்களை இந்த அரசிளங்குமரி பற்றிவிட்டாள். பிறகு பாண்டவர்கள் அமைதியிலும் செல்வத்திலும் தங்கள் வாழ்க்கையைக் கழித்து வந்தார்கள்.

துரியோதனனும், அவன் குழாமும் பாண்டவர்களை மாய்ப்பதற்குப் புதிய புதிய சதிகளைச் செய்தாலும், மூத்தோர்கள் தங்கள் அறிவுரைகளால் பஞ்ச பாண்டவர்களோடு சமாதானம் செய்து கொள்ளத் திருதராட்டிரனை இணங்கும்படி வற்புறுத்திவிட்டார்கள். மக்களின் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கி எழப் பஞ்ச பாண்டவர்களை வரவேற்று, அவர்கட்குப் பாதி இராச்சியத்தையும் அவன் கொடுத்துவிட்டான். இந்திரப்பிரஸ்தம் என்ற வனப்புவாய்ந்த ஒரு நகரத்தை அவர்கள் அமைத்தார்கள்; பிறகு தங்கள் இராச்சியங்களை விரிவடையச் செய்தார்கள். எல்லா மக்களும் அவர்களுக்கு அடங்கிக் கப்பம் செலுத்தும் அளவுக்கு அவை வளர்ந்துவிட்டன.

பண்டைக்காலத்து இந்தியாவிலிருந்த வேந்தர்களுக்கெல்லாம் தானே வேந்தன் என்பதை நிலைநாட்டுதற்பொருட்டு இராஜசூய யாகம் (மன்னர்க்கு மன்னன் என்பதைச் சுட்டும் வேள்வி) ஒன்றை நடத்தத் தீர்மானித்தான் உதிட்டிரன். அந்த வேள்விக்குத் தோல்வி

யுற்ற வேந்தர்கள் திறையோடு வந்து தங்கள் பணிவுக்கு வாக்குறுதி அளித்தல் வேண்டும்; மேலும், வேள்வி செவ்வனே நிறைவேறுதற் பொருட்டுத் தாங்களே அதில் கலந்துகொள்ள வேண்டும். பாண்டவர்கட்கு உற்ற நண்பரும் உறவினருமான கண்ணபிரானுர் அங்கே வந்து அவர்கள் கொண்ட கருத்தையும் ஆமோதித்தார்.

ஆனல், இந்த வேள்விக்குக் குறுக்கே ஓர் முட்டுக்கட்டை நின்றது. சராசந்தன் என்ற வேந்தன் நூறு மன்னர்களைப் பலியிடும்பொருட்டு எண்பத்துஆறு அரசர்களைச் சிறையில் வைத்திருந்தான். சராசந்தன்மீது படையெடுக்கும்படி கண்ணபிரானுர் அறிவுரை வழங்கினுர். அக்காரணத்தால் பீமனும் அருச்சுனனும் அவனை மற்போருக்கு அழைத்தார்கள். அவனும் போர் புரிய இசைந்தான். பதினுன்கு நாள் இடையரு மற்போர் நடந்தது. அதில் சராசந்தன் தோல்வியுற்ருன். சிறைப்பட்டிருந்த மன்னர்கள் விடுதலை அடைந்தார்கள்.

பிறகு உடன் பிறந்தோர் யாவரும் போர் தொடுக்கப் படைகளுடன் வெவ்வேறு திசைகளில் வெற்றி காண்டற்பொருட்டுச் சென்றனர்; உதிட்டிரனுக்குப் பணியும்படி எல்லா வேந்தர்களையும் கொணர்ந்துவிட்டனர். பெருவேள்வியை ஆற்றுவதில் எழும் செலவிற்காக அவர்கள் திரட்டிவந்த அவ்வளவு செல்வத்தையும் தங்கள் மூத்த சகோதரனுன உதிட்டிரன் பாதத்தில் சமர்ப்பித்தார்கள்.

இந்த இராஜசூய யாகத்திற்கு விடுதலையுற்ற வேந்தர்களும் உடன் பிறந்தோர்களால் வெல்லப்பட்ட மன்னர்களும் உதிட்டிரனுக்குத் திறை செலுத்த வந்தார்கள். திருதராட்டிர வேந்தனும் அவனுடைய மைந்தர்களும் இந்த வேள்வியில் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டிருந்தார்கள். வேள்வியின் இறுதியில் உதிட்டிரன் சக்கரவர்த்தியாய் முடிசூட்டப்பட்டு, எல்லா வேந்தர்களுக்கும் சிறந்த தலைவனுய்த் திகழ்ந்தான். இந்நிலை, வருங்காலத்துக் கலகமாம் வித்தை ஊன்றிவிட்டது.

வேள்வியிலிருந்து திரும்பியதும் துரியோதனன் உதிட்டிரனிடம் மிகவும் அழுக்காறு கொண்டான்; அவனுடைய பேரரசு; அவனுடைய விரிந்த இறை மாட்சியின் பேரொளி, அவனுடைய மாபெருஞ்செல்வம்—இவற்றைக் கண்டு ஆற்ருனுய் மனம் புழுங்கினுன். புயவலிமை கொண்டு அவர்களை வெல்வது தன் சத்தியை மீறின செயல் என்பதை அவன் நன்கு உணர்ந்தவன்; அவர்க

ளுடைய வீழ்ச்சியைக் கள்ளத்தனமாக உண்டாக்கும்பொருட்டுச் சூழ்ச்சிகள் பல செய்தான். உதிட்டிரனுக்குச் சூதாட்டத்தில் விருப்பம் உண்டு. சூதாட்டத்தில் மிக்க தந்திரம் வாய்ந்தவனும், துரியோதனனுக்கு எஞ்ஞான்றும் தீமையே புகட்டும் வஞ்சகனும், தேவதை போன்றவனுமான சகுனி உதிட்டிரனைச் சூதாட்டப் போருக்கு அறைகூவினன். க்ஷத்திரிய குலத்தில் தோன்றின ஒருவனைப் போருக்கு அழைத்தால், எது நேரிடினும் தன் மானத்தைக் காப்பாற்ற அவன் போர் தொடுத்தே தீரவேண்டும். பண்டைய இந்தியாவில் சூதாட்டத்திற்கு அறைகூவப்பட்டாலும், விளையாடுவது தான் அழகாகும்; மறுப்பது மானக்கேடே. எல்லா நற்குணங் களும் வடிவெடுத்த அவதாரம் உதிட்டிரன் என்று அப்பேரிதிகாசம் மொழிகின்றது. அத்தகைய மாண்புடையோனும் சிறந்த ஞான நல்வேந்தனுமான உதிட்டிரனும் அந்த அறைகூவுதலை ஏற்க வேண்டியதாயிற்று. சகுனியும் அவன் குழுவினரும் பொய்யாட்டம் ஆடினுர்கள். ஆதலால், ஆடஆட உதிட்டிரனுக்குத் தோல்விகளே ஏற்பட்டன. அவன் தோல்விகளால் தூண்டப்பட்டுப் பேரின்னல்களை விளைக்கும் சூதாட்டத்தைத் தொடரலானுன்; தனக்குள்ள எல்லாவற்றையும் வைத்துச் சூதாடினுன். அவனுடைய சொத்துச் சுதந்தரங்கள் எல்லாமே போய்விட்டன. வேறு வகையின்றித் தன் உடன் பிறந்தோர்களை வைத்து ஆடினதுமன்றி, தன்னையும் தன் மனைவியையுங்கூடப் பணயம் வைத்து ஆடினுன்; இறுதியில் எல்லா வற்றையும் இழந்துவிட்டான். பாண்டவர்கள் கௌரவர்களின் இரக்கத்திற்கும் கொடுமைக்கும் இலக்காய்விட்டார்கள். கௌரவர்கள் எல்லா விதமான நிந்தனைகளையும் வசை மொழிகளையும் அவர்கள்மீது பொழிந்தார்கள். திரௌபதியிடம் ஒரு கொடிய விலங்கு போல நடந்துகொண்டார்கள்; குருடனுன திருதராட்டிரன் குறுக்கிட்ட காரணத்தால் பஞ்ச பாண்டவர்கள் விடுதலை பெற்ருர்கள்; வீடு திரும்பித் தங்கள் இராச்சியத்தை ஆளும்படி அனுமதியும் அடைந்தார்கள். துரியோதனன் இதனுல் ஏற்படும் ஆபத்தை உணர்ந்து, மற்ருெரு முறை அவர்களைச் சூதாட வற்புறுத்தும்படி தகப்பனைக் கேட்டுவிட்டான். இந்தச் சூதாட்டத்தில் எந்தக் குழு தோல்வியுறுகின்றதோ, அந்தக் குழு பன்னிரண்டு ஆண்டுகள் காடுகளில் உறைய வேண்டும்; மேலும், எவராலும் கண்டுபிடிக்க இயலாதபடி ஓர் ஆண்டு மறைந்து வாழ வேண்டும். அப்படிக் கண்டுபிடிக்கப்பட்டால், மீண்டும் பன்னி

ராண்டுகள் வனத்தில் உறைந்து காலந்தள்ள வேண்டும். இந்த நிபந்தனையை நிறைவேற்றினால்தான் அந்தக் குழு இழந்த இராச்சியத்தை அடைய இயலும். இறுதியாக நடைபெற்ற சூதாட்டத்திலும் உதிட்டிரன் தோல்வி அடைந்துவிட்டான்.

நாடு துறந்து திரௌபதியுடன் பஞ்ச பாண்டவர்கள் காட்டிற்குச் சென்று விட்டார்கள். அடவிகளிலும் மலைகளிலும் பன்னிரண்டு ஆண்டுகள் உறைந்தார்கள்; அங்கே பல அறப்பணிகளையும் அரிய வீரச் செயல்களையும் ஆற்றினார்கள்; அடிக்கடி புண்ணியத் தலங்களுக்கு நீண்ட யாத்திரைகள் செய்தார்கள். இத்தகைய நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் இவ்விதிகாசத்தின் பகுதி மிக்க சுவையுள்ள பகுதியாகும்; நல்லறிவுச் சுடர் கொளுத்தும் பகுதியாகவும் காட்சி அளிக்கின்றது. பல்வகையான நிகழ்ச்சிகள், உண்மைக் கதைகள், கட்டுக் கதைகள்—இவை யாவும் இதில் மண்டிக் கிடக்கின்றன. சமய சம்பந்தமானவையும், தத்துவமயமானவையுமான மிக உயர்ந்த வனப்பு வாய்ந்த கதைகளும் இதில் இடம் பெறுகின்றன. பெருஞானக் கிழவர்கள் வனவாசம் செய்யும் பஞ்ச பாண்டவர்களைக் காண அடிக்கடி வந்து பண்டைய இந்தியாவைப் பற்றிய உள்ளங்கவர் கதைகள் பலவற்றைச் சொன்னார்கள். இவற்றால் வனவாசத்தின் இன்னற்சுமையைப் பாண்டவர்கள் எளிதே தாங்க வழியேற்பட்டது. இக்கதைகளில் ஒன்றை உங்கட்குக் கூறுகின்றேன்:

அசுவபதி என்னும் வேந்தனொருவன் இருந்தான். அவனுக்கு ஒரு பெண் உண்டு. அவள் நற்குணமும் அழகும் வாய்க்கப் பெற்றவள். மிகப் புனிதமான தோத்திரத்தின் பெயரான சாவித்திரி என்ற பெயரால் அவள் வழங்கப்பட்டாள்.

சாவித்திரிக்கு வயது வந்ததும், தானே ஒரு கணவனைத் தேர்ந்தெடுக்கும்படி அவ்வேந்தன் மொழிந்தான். பண்டைய இந்திய அரசிளங்குமரிகள் எவ்வளவு சுதந்தரம் பெற்றவர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் தாங்களே தங்களுக்கு உவந்த அரசிளங்குமரர்களை வரிப்பார்கள்.

சாவித்திரி உடன்பட்டாள். மெய்காவலர்களும் வேந்தர் அவையை அலங்கரிக்கும் வயது முதிர்ந்தோர்களும் தம்பால் ஒப்படைக்கப்பட்ட சாவித்திரியைக் காப்பாற்றி வருகின்றவர்களும் புடை சூழ, அவள் ஒரு பொற்றேரில் ஏறித் தொலைவிலுள்ள பல நாடுகளுக்குச் சென்றாள். பற்பல வேந்தர் அவைகளில் தங்கினாள்;

பல அரசிளங்குமரர்களைக் கண்ணுற்றாள். ஆனால், அவர்களுள் எவரும் அவள் உள்ளத்தைக் கவரவில்லை.

இறுதியில் அவர்கள் காட்டிலுள்ள ஒரு புனிதமான ஆசிரமத்திற்கு வந்தார்கள். பழைய இந்தியாவில் காடுகளெல்லாம் விலங்குகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. அங்கே உறைகின்ற விலங்குகளைக் கொல்லுவதற்கு எவருக்கும் உரிமை இல்லை. எனவே, விலங்குகள் மனிதனைக் கண்டு அஞ்சும் இயல்பை இழந்துவிட்டன. ஏரிகளிலுள்ள மீன்களும் மனிதர்கள் கையிலிருந்து உணவை அருந்தின. பல்லாயிரக்கணக்காக அங்கேயுள்ள விலங்குகளை எவருமே கொல்லவில்லை. மான்களிடையேயும் பறவைகள் நடுவேயும் உறைவதற்கு வயது முதிர்ந்தோர்களும் இருடிகளும் காட்டிற்குச் சென்றார்கள். குற்றம் புரிந்தோர்களும் தஞ்சம் புகுந்து இன்னலின்றி வாழலாம். வாழ்வில் அயர்வுற்றோர்கள் வனத்திற்குச் செல்வது வழக்கம். அவர்கள் இருடிகளோடு தங்கிச் சமயத்தைப் பற்றிப் பேசியும் தியானத்தில் ஆழ்ந்தும் எஞ்சி நின்ற வாழ்நாளைக் கழிப்பார்கள்.

துயுமத்சேனன் என்ற ஓர் அரசன் இருந்தான். அவனுடைய பகைவர்கள் அவனை வென்று அவனுடைய இராச்சியத்தையும் கவர்ந்துகொண்டார்கள். முதுமைப் பருவம் அவனைத் தாக்கவே, தன் கண் பார்வையையும் அவன் இழந்துவிட்டான். எளியவனும் வயது முதிர்ந்தவனும் கண்களை இழந்தவனுமான அந்த வேந்தன், தன்னுடைய மனைவியோடும் மைந்தனோடும் காட்டில் தஞ்சம் புகுந்து, கடுமையான தவம் ஆற்றியே வாழ்ந்துகொண்டிருந்தான். அவ்வேந்தன் மகனே சத்தியவான் என்பான்.

பல அரசவைகளைக் கண்ணுற்றுவிட்டு இந்தப் புனிதமான ஆசிரமத்திற்குச் சாவித்திரி இறுதியில் வந்து சேர நேர்ந்தது. இருடிகளுக்கு வந்தனைகள் புரியாமல் எத்தகைய சிறப்பு வாய்ந்த வேந்தனும் முனிவர்கள் உறையும் ஆச்சிரமங்களைக் கடந்து செல்லல் இயலாது.

இத்தகைய புனிதமான சான்றோர்களுக்கு மிகுந்த கௌரவமும் மரியாதையும் காட்டப்பட்டு வந்தன. கந்தை உடுத்துக் கிழங்குகளையும் கனிகளையும் அருந்திக் காட்டில் வாழ்கின்ற ஒரு ஞானியின் வழித்தோன்றல் என்று தன்னை வழங்கிக்கொள்ளுவதில் வேந்தர்களுக்கு வேந்தனும் இன்புறுவானன்றோ ?

நாமனைவரும் ரிஷிகளின் குழந்தைகள். இத்தகைய பெரு

மரியாதையைத்தான் நாம் சமயத்திற்கு நல்குகின்றோம். ஆதலால், வேந்தர்கள்கூட ஆச்சிரமங்களைக் கடந்து செல்லும் பொழுது அங்கே இருடிகளை வணங்கியே செல்வார்கள்; இப்படி வணங்கிச் செல்லுவதுதான் தங்களுக்குப் பெருமை அல்லது கௌரவம் என்று உணர்கின்றார்கள். பரிகள் மீது ஊர்ந்து செல்பவர்கள் கீழே இறங்கிக் கால் நடையாக அங்கே ஏகுவார்கள். இரதத்தின்மீது வருபவர், தம் கவசங்களை அகற்றி வெளியே வைத்துவிட்ட பிறகே ஆச்சிரமத்திற்குள் நுழைவர். ஒரு போர்வீரன் கூட அங்குப் போவதற்கு இயலாது. அவன் அப்படி ஆச்சிரமங்களை அணுகுவதாயிருந்தால், போர்க்கோலத்தை நீக்கிச் சமயவழிபாடு செய்கிற முறையில் அமைதியாகவும் அடக்கத்துடனும் அங்கே அணுக வேண்டும்.

சாவித்திரி இந்த ஆச்சிரமத்திற்கு வந்து துறவியின் மைந்தனை சத்தியவானைக் கண்டாள். அவள் தன் இதயத்தை அவன்பால் இழந்துவிட்டாள். எத்தனையோ அரண்மனைகளிலும், வேந்தரவைகளிலும் உறைந்த அரசிளங்குமரர்களின் காதல் வலைகளினின்றும் தப்பியவளின் உள்ளத்தை துயுமத்சேனன் தஞ்சம் புகுந்த காட்டிலே வசிக்கின்ற அவன் மைந்தன் கொள்ளை கொண்டுவிட்டான்.

அவள் தன் தந்தையின் வீடு திரும்பிய பொழுது, அவன் சாவித்திரியை நோக்கி, "என் அருமைப் புதல்வி, சாவித்திரி, நீ மணக்க விழையும் ஓர் அரசிளங்குமரனைப் பார்த்தாயா?" என்று உசாவினான். நாணத்தால் வதனம் செந்நிறம் காட்ட மெல்லிய குரலில், "ஆம் தந்தையீர்," என்று அவள் விடை பகர்ந்தாள்.

"குழந்தாய், அந்த அரசிளங்குமரனின் பெயர் யாதோ?" என்று அவன் மீண்டும் வினவினான்.

"அவர் அரசிளங்குமரல்லர்; அரசிழந்த துயுமத்சேனரின் மைந்தராவர். அவருக்குப் பரம்பரைச் சொத்துச் சுதந்தரம் யாதொன்றுமில்லை. அவர் துறவற வாழ்க்கையை மேற்கொண்டுள்ளார்; கந்த மூலங்களைத் திரட்டி, எளிய குடிலில் உறைகின்ற தம் வயது முதிர்ந்த தாய் தந்தையர்களுக்கு உணவளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்," என்றாள் சாவித்திரி.

இதைச் செவியுற்ற வேந்தன், அங்கே வர நேர்ந்த நாரத முனிவருடன் இது பற்றிக் கலந்து சிந்திக்கலானான்.

"இதைப்போன்ற சகுனத் தடையாயுள்ள வரித்தலை இது

வரையில் நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை,'' என்று நாரதர் நவின்றார்.

"ஏன் அப்படி உரைக்கின்றீர்?'' என்று வேந்தன் அவரை வினவினன். "இப்பொழுதிலிருந்து பன்னிரண்டு திங்களில் அந்த இளைஞன் மரிப்பது திண்ணம்,'' என்றார் அவர்.

அரசன் பேரச்சத்தால் திடுக்குற்றுச் சாவித்திரியைப் பார்த்து, "சாவித்திரி, பன்னிரண்டு மாதங்களுக்குள்ளே அவ்விளைஞன் உயிர் நீப்பது உறுதி; நீ கைம்பெண்ணாய்விடுவாய்; இதைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பாயாக; இத்தகைய வரிப்பிலிருந்து நீ விலகுவாயாக. அற்பாயுசுள்ளவனாய், மாண்டு போக வேண்டும் என்று தலையில் எழுதியுள்ள இம்மணமகனை எதற்கு நீ நாடுகின்றாய்? என் செல்வமே,'' என்றான்.

"தந்தையீர், அதைப் பற்றி நீங்கள் அல்லற்பட வேண்டா; இன்னோர் ஆடவனை நான் மணம் புரிய வேண்டும் என்று ஏவாதீர்கள். ஏனெனில், அவரை மனத்தால் வரித்த என் கற்பு மாசுறுமன்றோ? நல்லவரும் தைரியம் வாய்ந்தவருமான அவரே எனக்குக் கணவராக வேண்டும். என் சிந்தையும் அவரை விழைந்து ஏற்றுக் கொண்டுவிட்டது. நான் தயங்கேன். மேலும் ஒரு பெண் ஒரு முறைதானே வரிக்க இயலும்? அவள் உண்மைப் பாதையிலிருந்து இம்மியும் விலகாளல்லவா?'' என்றாள் அந்நங்கை.

சாவித்திரியின் மனத் திண்மையையும் இதயத்தின் உறுதியையும் கண்ட வேந்தன் இணங்கினன். சாவித்திரி சத்தியவானை மணந்தாள். தன் தந்தையின் அரண்மனையை அமைதியுடன் விட்டகன்று, தான் வரித்த கணவனோடு உறைந்து, அவன் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்யலுற்றாள்; சத்தியவான் மாளும் நாளை அவள் நன்கறிந்த போதிலும், அதைக் கணவனுக்குக் கூறாமல் மறைத்தே வைத்திருந்தாள். நாள்தோறும் சத்தியவான் மரம் செறிந்த காட்டின் நடுவே புகுந்து கனிகளைப் பறித்தும், மலர்களைக் கொய்தும், உலர்ந்த சுள்ளிகளைத் திரட்டியும் இல்லம் திரும்புவான். சாவித்திரி அந்த இரண்டு முதியவர்களுக்கும் உள்ளன்புடன் உணவை உதவுவாள்.

இப்படி நாட்கள் கழிந்தன; மாற்றுதற்கரிய பிரமன் எழுதிய நாளும் குறுகிவிட்டது. இன்னும் மூன்று நாட்களே எஞ்சி நின்றன. மூன்று இரவுகள் நோன்பு நோற்பதாக உறுதி பூண்டாள் அவ்வனிதை; புனிதமான உண்ணாவிரதத்தை மேற்கொண்டாள்;

செயற்கரிய மூன்று இராக் கண் விழிப்பாம் வினையை ஏற்ருள்; சோக முகில் சூழ்ந்து நிற்கும் கண் துஞ்சா இரவுகளை இறைவனைத் தொழுதே போக்கினுள்; எவரும் அறியா வண்ணம் கண்ணீர் உகுத்தாள்; மிகவும் அஞ்சத்தக்க பொழுதும் புலர்ந்துவிட்டது. அந்தக் குறிப்பிட்ட நாளில் கணவன் பார்வையைவிட்டுக் கணமும் பிரிந்திருக்கச் சகியாது, கந்த மூலங்கள் விறகு முதலியவற்றைத் திரட்டப்போகும் தன் கணவனைத் தானும் உடன் தொடர்வதற்கு அவன் பெற்ருேர்களை அனுமதி தர இறைஞ்சினுள்; விடை பெற்றுத் தன் கணவனேடு பின் சென்ருள். தனக்கு ஏதோ மயக்கம் வருவதாகத் தழுதழுத்த குரலில் தன் மனைவியிடம் மெல்ல முன கினுன், சத்தியவான்; "என் தலை சுழல்கின்றது! என் ஐம்பொறி கள் தடுமாறுகின்றன! சாவித்திரி, உறக்கமும் என்மீது மெல்ல ஊர்வதை உணர்கின்றேன். உன் பக்கலில் சற்றுப் படுக்கலாம் என்று நினைக்கின்றேன்," என்ருன் பேரச்சத்தால் உடல் நடுங்கி, "ஆருயிர்த் தலைவரே, என் மடிமீது உமது சென்னியை வைத்துப் படுப்பீராக," என்று நவின்ருள் சாவித்திரி. அவன் தணலாய்க் கொதிக்கும் தன் தலையை அவள் மடியில் சாய்த்தான்; விரைவில் ஒரு பெரு மூச்செறிந்து, உயிர் நீத்தான். கண்ணீர் அருவிபோலப் பாயக் கணவனைத் தழுவியபடியே தனிமை அரசு செலுத்தும் அந்தக் காட்டில் அமர்ந்திருந்தாள் அவ்வணங்கு. கூற்றுவன் தூதர் கள் சத்தியவானின் ஆன்மாவை அழைத்துச் செல்ல அங்கே வந் தார்கள். அவளைச் சுற்றி ஒரு பெருந்தீச் சுடர் விட்டெரிந்துகொண் டிருந்தது; எம தூதர்களுள் ஒருவரும் அந்தத் தீச்சுடர் வட்டத் திற்குள் நுழைய இயலவில்லை. அவர்கள் அனைவரும் பின்தங்கி ஓடி மரணதேவனுன எம தருமராஜனிடம் முறையிட்டார்கள்; சத்தியவானது ஆன்மாவைத் தங்களால் அழைத்து வர இயல வில்லை என்று இயம்பிவிட்டார்கள்.

பிறகு மாண்டோர்களுக்கு நியாயம் வழங்கும் அந்த மரணக் கடவுளே அங்கே வந்தான். முதன்முதல் உலகத்தில் இறந்தவனே எமனுவன். இறந்தவர்கள்மீது ஆணை செலுத்துகின்றவனும் அவனே. அவன், மனிதன் மரித்த பிறகு அவன் தண்டனைக் குரியவனு அல்லது போற்றுதற்குரியவனு என்று நியாயம் வழங்கும் கடவுளாவான். அக்காரணம் பற்றியே அவனே அங்கு வந்தான். சுடர்விட்டெரியும் அந்த மந்திர வட்டத்திற்குள் அவன் புக இயலும். ஏனெனில், அவன் ஒரு தெய்வமல்லவா? அவன் சாவித்திரியிடம்

வந்ததும், "பெண்ணே, இந்த உடலைத் தந்துவிடு. இறப்பது அழிவுறும் மக்களின் விதியாகும்; முதல்முதல் மாண்ட மனிதன் நானே. அந்நாள் முதற்கொண்டு ஒவ்வொருவரும் இறந்தே தீர வேண்டும். மரணம் என்பது மனிதனுக்குற்ற விதியாகும்," என்றான்.

அவன் இப்படிக் கூறிய பொழுது சாவித்திரி அப்புறம் அகன்றாள்; எமன் சத்தியவானின் ஆன்மாவைப் பிரித்தெடுத்துத் தன் வசமாக்கிக்கொண்டு தன் வழியே ஏகலானான். அவன் நெடுந்தூரம் போவதற்கு முன்னரே உலர்ந்த இலைகள்மீது யாரோ தன் பின் வருகின்ற காலடி அரவம் அவனுக்குக் கேட்டது. இந்த ஒலி தன் செவியில் விழுந்ததும் அவன் திரும்பிப் பார்த்தான். "புதல்வி, சாவித்திரி, ஏன் என்னைத் தொடர்கின்றாய்? மாய்வது எல்லாவற்றிற்கும் வகுக்கப்பட்ட விதியாயிற்றே!" என்றான் எமன்.

"என் தந்தையீர், நான் உங்களைத் தொடரவில்லை. என் காதலன் செல்வழி நான் போக வேண்டாவா? அன்பு காட்டும் காதலனையும், அவன் கற்புடைய மனைவியையும் ஓர் அழிவிலா அறநெறி எஞ்ஞான்றும் பிரிக்கிறதில்லையே!" என்றாள் சாவித்திரி.

"கணவன் உயிரை மட்டும் இரவாது, வேறு எந்த வரமாயினும் கேட்பாயாக!" என்றான் அந்த மரணதேவன்.

"மரணதேவரே, நீவிர் எனக்கு மனம் உவந்து வரம் தருவதாயிருந்தால், என் கணவரின் தந்தையார் அவிந்த கண்கள் திறந்து, அவர் இன்புற்று வாழும்படிஅருளவேண்டும்," என்றாள் சாவித்திரி.

"கடமையை அறிந்த பெண்ணே, உன் புனிதமான விருப்பம் நிறைவேறட்டும்!" என்று கூறிச் சத்தியவானின் ஆன்மாவோடு தன் யாத்திரையைத் தொடர ஆரம்பித்தான் எமன். மீண்டும் காலடி அரவம் அவன் செவியில் விழுந்தது. அவன் திரும்பிப் பார்த்து, "குழந்தாய், சாவித்திரி, ஏன் இன்னும் என்னைத் தொடர்கின்றாய்?" என்றான்.

"ஆம்; என் தந்தையீர், நான் தொடராமலிருக்க இயலவில்லை. திரும்பித்தான் போக வேண்டுமென்று நினைக்கின்றேன். ஆனால், என் மனம் என் கணவர்பால் விரைகின்றது; என் உடல் அவரைத் தொடரத்தானே செய்யும்? அவர் ஆன்மா போய்விட்டது; ஆனால், அந்த ஆன்மாவில் என் ஆன்மா உறைகின்றதே! அந்த ஆன்மாவை நீங்கள் தாங்கிச் செல்கிற பொழுது அதன் உடல் தொடர்கிறது; அது தொடராமற்போகுமோ?" என்றாள் அவள்.

"உன்னுடைய சொற்களைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்! உன் கணவனுடைய உயிரைத் தவிர மற்றெதையும் கேட்பாயாக!" என்றான் காலன்.

"உங்களுக்கு மற்றொரு வரம் தர விருப்பம் இருக்குமாயின், என்னுடைய மாமனார் தாம் இழந்த செல்வத்தையும் இராச்சியத்தையும் பெற வரம் அளிப்பீராக!" என்றாள் அக்காரிகை.

"பரிவு காட்டும் பெண்ணே, இந்த வரத்தையும் உனக்கு நல்குகின்றேன். நீ வீடு திரும்புவாயாக. உயிரோடு உள்ள எவரும் எமனான என்னைப் பின் தொடர்ந்து வருவது இயலாது," என்று கூறி, எமன் தன் வழியே போய்க்கொண்டிருந்தான்.

அமைதி வாய்ந்தவளும், கணவனிடத்தில் பத்தி உள்ளவளுமான சாவித்திரி, கணவன் உயிரைத் தொடர்ந்து சென்றாள். எமன் மீண்டும் அவளை நோக்கி, "பெருங்குணம் வாய்ந்த சாவித்திரி, நீ இந்தத் தீராத் துயர்கொண்டு என்னைத் தொடராதே," என்று பகர்ந்தான்.

"என் அன்பிற்குரிய நாயகரை எங்கே அழைத்துச் செல்லுகிறீர்களோ, அங்கே நான் வந்தே தீர்வேன். வேறு வழி எனக்கில்லை," என்றாள் சாவித்திரி.

"உன்னுடைய கணவன் தீச்செயல் புரிந்தவன் என்று வைத்துக்கொள். அப்படியானால் அவன் புகுவது நரகமாகும்; அந்நிலையிலும் அவனைக் காதலிக்கிற நீ பின் தொடர்வாயோ?" என்றான் எமன்.

"அவர் எங்கே செல்கின்றாரோ, அங்கு நான் மகிழ்ச்சியுடன் செல்வேன்," என்று உரைத்தாள் அவள். "அது வாழ்வாய் இலங்கட்டும், அல்லது சாவாய்த் தோன்றட்டும்; சுவர்க்கமாய்க் காட்சி அளிக்கட்டும், அல்லது நரகமாய் விரியட்டும். அங்கும் நான் போவேன்," என்று மொழிந்தாள், தன் கணவன்பால் அளவிலாக் காதல் காட்டும் சாவித்திரி.

"மங்கலச் சொற்களை வழங்கும் உன்பால் பேருவகை உற்றேன்! குழந்தாய், இன்னொரு வரம் கேட்பாயாக. ஆனால், மாண்டவர் மீண்டும் உயிர் பெறுவரோ?" என்று இயம்பினான் எமன்.

"எனக்கு நீங்கள் வரம் அளிப்பதாகக் கூறுவதால், அதைக் கேட்கின்றேன். இந்த வேந்தர் குலமுறை சிதையாமலிருக்கட்டும். இவர் மைந்தர்களுக்கு இந்த இராச்சியம் கிடைக்கட்டும்," என்று இறைஞ்சினாள் கற்பரசி.

மரணதேவன் புன்முறுவல் பூத்து, "உன் விருப்பம் நிறைவேறட்டும். பெண்ணே, உன் கணவன் ஆவியைப் பெற்றுக்கொள். அவன் திரும்பவும் உயிர் வாழ்வான் ; அவன் தந்தையுமாவான். உன் சேய்கள் நாளடைவில் மன்னர்களாய்த் திகழ்ந்து பாராளுவார்கள். நீ வீடு திரும்புவாயாக. உன் அளவு கடந்த காதல் மரணதேவனுன என்னையும் வென்றுவிட்டது! உன்னைப்போல் மங்கையர் எவருமே இத்தகைய அன்பு காட்டினதே இல்லை. நிலை பெற்ற உண்மையான காதலுக்குமுன் மரணதேவனுன நானும் செயலற்றுக் கிடப்பதற்கு நீயே தக்க சான்றாய் ஒளிவிடுகின்றாய்," என்று சாவித்திரியைப் பாராட்டி விடை பெற்றான் நடுவன்.

இதுதான் சாவித்திரியைப் பற்றிய வரலாறாகும். இந்திய நாட்டிலே ஒவ்வொரு பெண்ணும் சாவித்திரி போல இருக்க ஆர்வங்கொள்ள வேண்டும். சாவித்திரியின் அன்பின்மீது மரணமும் வெற்றி காண முடியவில்லை. இந்த அளவு கடந்த அன்பின் பேராற்றல் கொண்டு சாவித்திரி மரணவாயிலிருந்தும் தன் கணவனை மீட்டுவிட்டாள்.

இப்பேரிதிகாசத்தில் வனப்பு வாய்ந்த இத்தகைய கதைகள் நூற்றுக்கணக்கிலே மலிந்து உள்ளன. உலகத்திலுள்ள சிறந்த நூல்களில் மகா பாரதமும் ஒன்றாகும் என்று தொடங்கியே நான் இதைச் சொல்லப்புகுந்தேன். இதில் ஓர் இலட்சம் சுலோகங்கள் (செய்யுள்கள்) அடங்கியிருக்கின்றன. அது பதினெட்டுப் பருவங்களாக (பகுதிகளாக) வகுக்கப்பட்டிருக்கிறது.

திரும்பவும் கதையைத் தொடர்ந்து செல்லுவோம். பாண்டவர்களைக் காட்டில் விட்டோமல்லவா? அங்கேயும் தொல்லையற்று இருப்பதற்குத் துரியோதனன் இடந்தரவில்லை ; தீச்சதிகள் பல புரிந்தான். ஆனால், அவனுடைய முயற்சிகள் அனைத்தும் வீணாயின.

பாண்டவர்கள் காட்டில் உறைந்து வந்தவண்ணத்தைப்பற்றிய ஒரு கதை சொல்லுகிறேன் ; கேட்பீராக : ஒரு நாள் அவர்கட்கு நீர் வேட்கை அதிகமாயிற்று. உதிட்டிரன் நகுலனைப் பார்த்து குடிக்கத் தண்ணீர் கொணரும்படி பணித்தான். தண்ணீர் கிடைக்கும் இடத்திற்கு விரைந்து சென்றான் நகுலன். படிகம் போலத் தெள்ளிய நீர் நிரம்பிய ஏரிக்கு வந்தான் ; அதன்கண் மிளிரும் தீஞ்சுவைத் தண்ணீரைப் பருக முயன்றான். "முதலில் என் வினாக்களுக்கு விடை பகர்ந்த பிறகே தண்ணீரை அருந்தலாம்,

குழந்தாய்'' என்ற குரல் ஒலிக்கக் கேட்டான். அளவு கடந்த நீர் வேட்கையால் துன்புறும் அவன் இச்சொற்களைப் புறக்கணித்து விட்டுத் தண்ணீரைக் குடித்தான். குடித்த அக்கணமே கீழே சாய்ந்து அவன் மாண்டுவிட்டான்.

நகுலன் திரும்பாத காரணத்தால் உடன்பிறந்தோனைத் தேடுமாறு உதிட்டிரன் சகாதேவனுக்குச் சொன்னான். அந்த ஏரிக்குச் சகாதேவன் சென்று தன் சகோதரன் மாண்டு கிடப்பதைக் கண்ணுற்றான். உடன்பிறந்தோனின் மரணத்தின் வெந்துயர் ஒருபுறம் அவனை வாட்ட, தணியாத் தாகம் மற்றொருபுறம் அவனை வதைக்க, தண்ணீர்க் கரைக்குச் சென்ற உடனே, "குழந்தாய், என் வினாக்களுக்கு விடை அளித்த பிறகே இந்தத் தண்ணீரைப் பருகுவாய்,'' என்ற அச்சொற்களே அவன் செவியில் விழுந்தன. அவனும் அச்சொற்களுக்குச் செவிசாய்த்தானில்லை; நீர் வேட்கையைத் தணித்த அப்பொழுதே கீழே விழுந்து மாண்டுவிட்டான்.

பிறகு அருச்சுனனும், பீமனும் ஒருவர்பின் ஒருவராக நீரையே நாடிச் சென்றார்கள். அவர்களும் திரும்பி வந்தபாடில்லை; ஏரியின் தண்ணீரை அருந்தியே அவர்களும் மாண்டார்கள்.

பிறகு உதிட்டிரன் தன் உடன் பிறந்தோர்களைத் தேடிச் சென்றான்; கடைசியாக, மிக்க கவினொடு திகழும் அந்த ஏரியை அணுகி அவர்கள் உயிர் நீத்திருப்பதைக் கண்டான். இந்தச் சோகக் காட்சியை நோக்கிய உதிட்டிரன் இதயத்தில் துயர் வெள்ளம் பாய்ந்துவிட்டது. அவன் புலம்பத் தொடங்கிவிட்டான். "மைந்தனே, முன்பின் சிந்தியாமல், துணிச்சலான செயலில் இறங்கி விடாதே!'' என்ற அதே குரல் மீண்டும் விண்ணில் ஒலித்தது. "நான் ஒரு யட்சன்; நாரையுருக்கொண்டு மீன்களை அருந்திக் கொண்டு இங்கே இருக்கின்றேன். மாண்டோர் ஆவிகளுக்குத் தலைவனுடைய ஆட்சியின் கீழ் உன் இளைய சகோதரர்களைக் கொணர்ந்தவன் நான்தான் என்பதை உணர்வாயாக. அரசே, நான் எழுப்புகின்ற வினாக்களுக்கு நீயும் விடைகள் அளியாமல் போனால், நான்கு பிணங்களோடு நீயும் ஐந்தாம் பிணமாய்க் கிடக்க நேரிடும். குந்தி பெற்ற மகனே, வினாக்களுக்கு விடைகள் பகர்ந்த பிறகே தண்ணீர் அருந்தலாம்; உனக்கு எவ்வளவு தேவையோ, அவ்வளவு தண்ணீரையும் மொண்டு செல்லலாம்,'' என்று நாரை நவின்றது.

"வினாக்களை எழுப்புவீராக; என் சிற்றறிவுக்கு எட்டிய வரை

யில் நான் விடை தரக்கூடும்,'' என்று உதிட்டிரன் மறுமொழி கூறினுன்.

அந்த யட்சன் எழுப்பிய பல வினுக்களுக்கு மனத்திருப்தி அளிக்கக்கூடிய வகையில் விடைகளை நல்கினுன் உதிட்டிரன். "இவ்வுலகத்தில் மிகவும் வியக்கத்தக்கது எது?'' என்ற கேள்வி, எழுப்பப்பட்ட கேள்விகளில் ஒன்ருகும்.

"நாள்தோறும் நம்மைச் சுற்றி நம் சகோதர நண்பர்கள் இலைகள் உதிர்வதைப்போல மாண்டு மடியக்கண்டும், எஞ்சிநின்ற நாம் மரிக்கப்போகிறதில்லை என்று நினைக்கின்ருேமே, இதுதான் விந்தையிலும் விந்தையாகும்,'' என்ருன் உதிட்டிரன்.

இது ஓர் ஆச்சரியமான உண்மையன்ருே? மரணம் நேருக்கு நேராக நிற்பினும், ஒவ்வொருவனும் தான் மரிப்பதில்லை என்று கருதுகின்ருன்.

"சமயத்தின் இரகசியத்தை அறியும் பாதை எது?'' என்று அந்த யட்சன் கேட்டான். "தருக்க வாயிலாக எதையும் வரையறுக்க முடியாது; கொள்கைகள் பல. சாத்திரங்களோ, வேறுபட்டவை. அவை முரண்பாடுடையனவே. கருத்துகளில் வேறுபடாத இரண்டு முனிகளைக்காண்பதரிது .சமயத்தின் மருமம் இருள் மண்டிக்கிடக்கும் குகைகளில் புதைந்து கிடப்பது போலக் காட்சி அளிக்கின்றது. ஆதலால், நாம் பின் பற்றற்குரிய பாதை சான்ருேர்கள் சென்ற வழியேயாகும்,'' என்று உதிட்டிரன் விடை தந்தான்.

"பரதகுலத்து மன்னர் ஏறே, நான் உள்ளம் உவக்கின்றேன்! நானே அறக்கடவுள்; இந்த நாரை வடிவத்தில் நிற்கின்றேன். நான் உங்கள் இயல்பைக் கட்டளைக் கல்லில் உரைத்துப் பார்க்கவே வந்தேன். உடன் பிறந்தோர்களில் ஒருவரும் மரிக்கவில்லை என்பதைக் காண்பாய். இவை யாவும் என் மந்திர சத்தியால் நிகழ்ந்தனவே தவிர, பிறிதன்று. இலாபத்தைக்காட்டிலும் இன்பத்தைக் காட்டிலும் பிறர்க்கு இன்னு செய்யாமையே நனிசிறந்த உண்மையாக நீ எண்ணுகின்ற காரணத்தால், உன் உடன் பிறந்தோர்கள் உயிர் பெற்று எழுவாராக!'' என்ருன் யட்சன்.

யட்சன் இம்மொழிகளை உரைத்தலும் பாண்டவர்கள் எழுந்துவிட்டார்கள். இக்கதை வாயிலாகத் தருமன் குண நலம் ஒருவாறு புலனுகின்றது. தருமன் ஒரு வேந்தனுய்க் காட்சி அளிப்பதைவிட, ஒரு தத்துவ ஞானியாயும் யோகியாயும் திகழ்ந்தான்.

இவ்வண்ணம் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் முடிந்து பதின்மூன்றுவது ஆண்டு குறுகவே, யட்சன் பாண்டவர்களை விராட இராச்சியத்திற்குச் சென்று எப்படி மாறுவேடம் பூண்டு இருக்க முடியுமோ அப்படி இருக்கும்படி சொன்னான்.

பன்னிரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன. பாண்டவர்கள் விராட நாட்டிற்குச் சென்றார்கள். அங்கு ஒவ்வொருவரும் மாறு வேடம் தரித்து, எஞ்சியுள்ள ஆண்டை மறைவாகவே கழித்தார் கள்; விராட வேந்தன் அரண்மனையில் பல்வகைப் பணியாளர் களாய் அமர்ந்தார்கள். உதிட்டிரன் (தருமன்) ஓர் அந்தணனாகவும், சூதாட்டத்தில் திறமை வாய்ந்த வேந்தன் தோழனாகவும் அவையில் வீற்றிருந்தான். பீமன் சமையற்தொழில் புரிந்தான். அருச்சுனன் ஓர் அலி வேடம் பூண்டு அரசனுடைய அந்தப்புரத்தில் உத்தரை என்னும் அரசிளங்குமரிக்கு இசைக்கலையும் நாட்டியமும் கற்றுக் கொடுத்தான். நகுலன் மன்னன் பரிகளைக் கவனித்து வந்தான். சகாதேவன் பசுக்களைக் காப்பாற்றி வந்தான். திரௌபதி அந்தப் புரத்தில் அரசிக்குத் தோழியாயிருந்தாள்.

இவ்வாறு பாண்டவர்கள் மறைந்தே அச்சமின்றி ஓராண்டைக் கழித்தார்கள். அவர்களைத் தேடிக் கண்டு பிடிப்பதற்காகத் துரியோ தனன் ஆற்றிய முயற்சிகளனைத்தும் வீணே ஆயின. இறுதி ஆண்டு முடிந்த பிறகே அவர்களைக் காண முடிந்தது.

தருமன் பாண்டவர்களுக்கு உரிமையான பாதி இராச்சியத்தை அளிக்குமாறு திருதராட்டிரனுக்குத் தூது போக்கினான். ஆனால், துரியோதனன் தான் பாண்டவர்கள் மீது கொடும்பகை பாராட்டிய தில் நியாயமான பங்கைக் கொடுக்க மறுத்துவிட்டான். ஒரு மாநில வட்டமாவது, ஐந்து சிற்றூர்களாவது தரப்படுமாயின், அவற்றை ஏற்க அவர்கள் மனம் ஒப்பினார்கள். பெரும்பிடிவாதங் கொண்ட துரியோதனன், "போரில்லாமல் குண்டூசி நிலங்கூடக் கொடுக்க இயலாது," என்றான். திருதராட்டிரன் அமைதிக்காக மன்றாடியும், யாதொரு பயனும் இல்லாமற்போய்விட்டது.

சூழ்ந்துள்ள போராகிய முகில்களையும், கணக்கிலா உறவினர் மரணங்களையும் அகற்றும்பொருட்டு கண்ணபிரானார் தூது சென்றார். அவ்வண்ணமே அரசகுலத்து மூத்தவர்களும் சமா தானப் பாதையை நாடச் சொன்னார்கள். ஆனால், இராச்சியத் தைச் சமாதானமான முறையில் பங்கிடுவதற்குரிய முயற்சிகள் யாவும் சிதைந்து போயின. ஆகவே, இறுதியில் இரு வகுப்பினரும்

போருக்கு வேண்டிய ஆயத்தங்களைப் புரிந்தார்கள். போர் வலிமை வாய்ந்த இராச்சியங்கள் இம்மாபெரும்போரிற் கலந்துகொண்டன. இதில் பண்டைய நாள் மரபுகள் பின்பற்றப்பட்டன. துரியோதனன் ஒரு புறம் நின்றான்; தருமன் மற்றொரு புறத்தே அமர்ந்தான். உடனடியாகவே தருமன் தூதர்களை அனுப்பி எல்லா வேந்தர்களையும் தன் பக்கம் சேரும்படி அழைத்தான். போர் முறைப்படி எவனுடைய அழைப்பு முதலில் வந்து சேர்கிறதோ, அவனுடைய பக்கந்தான் கண்ணியமுள்ள வேந்தர்கள் சேர்வார்கள். எல்லாப் பகுதிகளிலிருந்தும் போர் வீரர்கள் திரண்டு வந்தார்கள். அழைப்பு முறைக்கேற்றவாறு பாண்டவர்களை நண்ணிய மன்னர்களுண்டு; கௌரவர்கள் பக்கம் சார்ந்த வேந்தர்களும் உண்டு. ஒரே வயிற்றிற்பிறந்த சகோதரருள் ஒருவன் ஒரு பக்கமும், மற்றொருவன் வேறு பக்கமும் சேர நேர்ந்துவிட்டது. தந்தை ஒரு பக்கத்தை நாடுவான்; மைந்தன் பகைவன் பக்கத்தை அடைந்து விடுவான். அந்நாளின் அறப்போரின் நெறி மிகவும் விந்தையானது! நாட்போர் முடிவடைந்து அந்திமாலை வந்துற்றால், போரிட்டவர்கள் நண்பர்களைப் போலப் பழகுவார்கள்; பகைவர்கள் தங்கியிருக்கும் படை வீடுகளுக்கும் செல்வார்கள். பொழுது புலர்ந்ததும் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போர் புரிவார்கள். இந்த நற்குணம் மகமதியர் படையெடுப்புக் காலம் வரையில் போர் வீரர்களிடையே திகழ்ந்து வந்தது. குதிரைப் போர் வீரன் காலாட்படை வீரனோடு போர் தொடுக்கக்கூடாது. நச்சு ஊட்டப்பட்ட போர்க் கருவியைப் பயன்படுத்துதல் முறையன்று. தனக்குத் தாழ்ந்த பகைவனைச் சண்டைக்கு இழுத்து வெல்லுதலும் அறமன்று. சூழ்ச்சி செய்து வெற்றி காண்பது மோசம் புரிந்ததாகும். பகைவனது ஆதரவற்ற நிலையைப் பயன்படுத்திக்கொள்ளுதலும் தவறே. இவ்விதிகளிலிருந்து சற்று விலகினோர்கள் முற்றிலும் நாணமற்றவர்களாகக் கருதப்படுவார்கள். சமுதாயம் அவர்களைப் புறக்கணிக்கும். க்ஷத்திரியர்கள் இத்தகைய போர்க்கொள்கைகளில் தாலாட்டப்பட்டுப் பயிற்சி பெற்றவர்கள். மத்திய ஆசியாவிலிருந்து அயல் நாட்டார் இந்திய நாட்டின்மீது படையெடுத்த பொழுது, அவர்களையும் இவ்வண்ணமே கண்ணியமாக நடத்திவந்தார்கள். பலதடவை அவர்களைத் தோல்வியுறச் செய்தாலும், அவர்களுக்குப் பன்முறைகள் பரிசுகளையும் வழங்கித் தத்தம் நாடுகளுக்குத் திரும்புமாறு செய்தார்கள். எவருடைய நாட்டையும் வௌவுதல் நீதியன்று என்று

போர் முறை கூறுகின்றது. முறியடிக்கப்பட்டவன் அவன் தகுதிக்கேற்றவாறு அவன் இராச்சியத்திற்குத் திருப்பியனுப்பப்பட வேண்டும். ஆனல், மகமதியர் இந்தியாவின்மீது படையெடுத்த பொழுது, இந்துக்களை இவ்வண்ணம் அவர்கள் நடத்தவில்லை. அவர்கள் கையில் சிக்கிய இந்துக்களை இரக்கமின்றி மாய்த்துவிட்டார்கள்.

ஒரு விஷயம் உற்று நோக்குவதற்குரியது: போர்க்கலை என்பது அம்பையும் வில்லையும் மட்டும் சுட்டுவதன்று. அது மந்திர சத்தி வாய்ந்த விற்கலையாகும். அது மந்திரத்தின் ஆற்றலையும் தியானத்தின் வலிமையையும் புலப்படுத்துகின்றது. இவை போர்க்களத்தில் சிறந்த தொழில் புரிந்தன. ஓர் அம்பைத் தொடுத்தால் அது பல்லாயிரக் கணக்கான அம்பு மாரியைப் பொழிந்து பேரிடி முழக்கஞ் செய்யும். எதையும் தீக்கு இரையாக்கிவிட முடியும். எல்லாம் தெய்விக மாயமந்திரமே தவிரப் பிறிதன்று. இராமாயணம் வாயிலாகவும் மகாபாரதம் வாயிலாகவும் நாம் மிகவும் விந்தையான ஒரு விஷயம் அறிந்துகொள்ளத்தக்கது. மாய மந்திர சத்தி வாய்ந்த விற்களையும் அம்பு முதலானவற்றையும் தவிர, பெரும் பீரங்கிகளும் வழங்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது. பீரங்கி என்பது பண்டைக் காலத்துப் போர்க்கருவியேயாகும்; சீனர்களாலும் இந்துக்களாலும் பயன்படுத்தப்பட்டது. மாநகரங்களின் கோட்டை மதில்கள்மீது நூற்றுக்கணக்கில் இரும்புக் குழல் போன்ற போர்க்கருவிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் வெடிமருந்தும் குண்டும் திணிக்கப்பட்டிருக்கும். அவை வெடித்துப் பல்லாயிர மக்களைப் பலியிட்டுவிடும். “சீனர்கள் மாய வித்தையால் இரும்புக் குழாய்களில் ஒரு பூதத்தை அடைத்துவிட்டார்கள். ஒரு சிறிய துவாரம் வழியாய் நெருப்பைப் பற்ற வைத்ததும் பேரச்சத்தை விளைக்கக்கூடிய முழக்கத்தை எழுப்பிக்கொண்டு அப்பூதம் வெளிக்கிளம்பி பலரைக் கொன்றது!” என்று சாதாரண மக்கள் எண்ணினர்கள்.

அந்தப் பண்டை நாட்களில் இவ்வண்ணம் மாயவாளிகள் கொண்டு போர் புரிவது வழக்கம். கோடிக்கணக்கானவர்களோடு ஒருவனே தனித்துப் போராடமுடியும். அவர்களிடையே போருக்குரிய அணிவகுப்பு முறைகளும் தந்திரங்களும் திகழக் காண்கின்றேம். ‘**பதம்**’ என்ற காலாட்படை இருந்தது; ‘**துரகம்**’ என்ற குதிரைப் படையும் காட்சி அளித்தது. வேறு இரண்டு பழைய முறைகள் பிற்காலத்தில் வழக்கிறந்துவிட்டன. அவை யானைப்

படையும் இரதங்களுமாம். நூற்றுக்கணக்கான யானைகள் இரும்புக் கவசங்கள் பூண்டு தக்க முறையில் காக்கப்படும். அவற்றின் மீது படை வீரர்கள் இருந்து போர் நடத்துவார்கள். யானைகள் திரள் திரளான பகைப் போர் வீரர்கள்மீது பாய்ந்து வலியத் தாக்கும். ஒவ்வொரு நாட்டு இரதங்களும் போர்களில் பயன்பட்டன. இந்தப்பழைய இரதங்களை நீங்கள் படங்களில் பார்த்திருப்பீர்கள். பண்டைக்காலத்துப் படையின் நான்கு அணிவகுப்புகள் இவைகளே. பாண்டவர்களும் கௌரவர்களும் கண்ணபிரானுரின் உதவியை நாட விழைந்தார்கள். ஆனுல், அவர் போரில் கலந்துகொள்ள விரும்பவில்லை. அருச்சுனனுக்குத் தேர்ப்பாகனுக (பார்த்தனுக்குச் சாரதியாய்) இருக்க இசைந்தார். பாண்டவர்களுக்குத் தோழராகவும் அறிவுரை புகட்டுபவராகவும் திகழ்ந்தார்; துரியோதனனுக்குத் தம்முடைய மாபெரும்படை அனைத்தையும் நல்கினுர்.

குருக்ஷேத்திரம் என்னும் பரந்த வெட்டவெளியிலே இப்பெரும் போர் நிகழ்ந்தது. பீஷ்மர், துரோணர், கர்ணன், துரியோதனன், அவன் உடன் பிறந்தோர்கள், மற்றும் இரு பகுதியைச் சார்ந்த உறவினர்கள் கலந்துகொண்டார்கள். இதன் விளைவாக ஆயிரக் கணக்கான வீரர்கள் மாண்டார்கள். போர் பதினெட்டு நாட்களே நடைபெற்றது. பதினெட்டு அட்சோகிணிச் சேனைகளில் ஒருசிலர் தவிர மற்றெல்லோரும் மடிந்தனர். துரியோதனன் போரில் வீழ்ந்து உயிர் துறந்தான். போரும் முடிந்தது. பாண்டவர்கள் வெற்றி வாகை சூடினுர்கள். பேரரசி காந்தாரியும் கணவர்களை இழந்த கணக்கிலாக் கைம்பெண்களும் ஓலமிட்டழுதார்கள். மாண்ட போர் வீரர்களுக்கு ஈமக்கடன்களும் நிறைவேறின.

மகா பாரதத்தில் மிகச்சிறந்த நிகழ்ச்சி யாதெனின், கண்ணபிரானுர் அருளிய உபதேசமாகும். அதுதான் எஞ்ஞான்றும் அழியாததும், வியக்கத்தக்கதும், அமரகீதமுமான கீதை. அது இந்தியாவில் பொதுமக்களால் போற்றப்படும் சாத்திரமாய்த் திகழ்கின்றது. மிகமிகச் சிறந்த அறிவுரைகள் அதில் கோயில்கொண்டிருக்கின்றன. குருக்ஷேத்திரத்தில் போர் தொடங்குமுன் கண்ணபிரானுருக்கும் அருச்சுனனுக்கும் ஏற்பட்ட உரையாடல் அதில் மிளிர்கின்றது. அந்நூலைப் படிக்காதவர்களைப் பார்த்து, அதைப் படிக்கும்படி அறிவுறுத்துவேன். உங்கள் நாட்டவர் பண்பாட்டின் மீது அது எப்படி ஆட்சி புரிந்திருக்கின்றது என்பதை நீங்கள் உணர்ந்தால், உண்மை புலனுகும். எமர்சனுக்கு உற்ற தெய்வ

ஆவேசப்பெருக்கின் ஊற்று எது என்று நீங்கள் கருதுகின்றீர்கள்? இந்தக் கீதை என்னும் நூலே ஆகும். அவர் கார்லைலைப் பார்க்கச் சென்றார்; அவருக்குக் கார்லைல் அளித்த பரிசு இந்தக் கீதையே யாகும். சமரச சன்மார்க்க இயக்கத்திற்கு (Concord Movement) வித்தாயிருந்தது இந்தச் சிறு நூலேயாகும். அமெரிக்க நாட்டில் தோன்றிய பல பெரிய இயக்கங்கள் இந்தச் சன்மார்க்கத்தோடு ஏதோ ஒரு வகையில் தொடர்பு வைத்துக்கொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம்.

கண்ணபிரானாரே கீதையில் நடுநாயகமாய்க் காட்சி அளிக்கின்றார். நாசரத்தில் தோன்றிய இயேசுநாதரைக் கடவுளே மனித வடிவாய் வந்தாரெனச் சொல்லுகின்றீர்களல்லவா? அதுபோலவே இந்துக்கள் கடவுளின் அவதாரங்களை வழிபடுகின்றார்கள். அவை ஒன்று, இரண்டு அல்ல. அவர்கள் பல அவதாரங்களை வழுத்து கின்றார்கள். இத்தகைய அவதாரங்கள் உலகத் தேவைக்கேற்ற வாறு காட்சி அளிக்கின்றன. அறத்தைக் காப்பாற்றவும், மறத்தை மாய்க்கவும் இவை நிகழக் காண்பீர்கள். ஒவ்வொரு சமய வகுப் பிற்கும் ஒவ்வோர் அவதாரம் உண்டு. கண்ணபிரானார் ஓர் அவதார புருடராவர். கடவுளின் மற்றைய அவதார புருடர்களைக்காட்டிலும் இந்தியாவில் கண்ணபிரானாருக்கே அடியார்கள் மிகுதியாய் இருக் கின்றார்கள். அவரைப் பூரணமான அவதார புருடர் என்று வழி படுகின்றவர்கள் கருதுகின்றார்கள். 'ஏன்?' என்று நீங்கள் வினவலாம். புத்தபிரானையும் மற்ற அவதாரங்களையும் உற்று நோக்குங்கள்; உண்மை தோன்றும். அவர்கள் சந்நியாசிகள்; மணம் புரிந்தோரிடம் அவர்களுக்குப் பரிவில்லை. அவர்களுக்குப் பரிவு இருக்க இயலுமோ? கண்ணபிரானாரைக் கண்ணுறுவீர் களாக. அவர் ஓர் ஒப்பிலா மைந்தராயும், வேந்தராயும், தந்தையா ராயும் நம்முன் நிற்கின்றார். தாம் வழங்கிய வியக்கத்தக்க அறி வுரைகளைத் தம் வாழ்வு முழுதும் செயற்படுத்திக் காட்டிய சான்றோ ரல்லவோ அவர்!

அவர், "இடையறாத பெருஞ்செயல்களின் நடுவேயும் இன்பம் சொரியும் அமைதியை எவன் காண்கின்றானோ, எவன் பேரமைதி யின் இடையேயும் அருஞ்செயல் இயங்கும் இயல்பைப் பார்க்கின் றானோ, அவனே வாழ்வின் இரகசியத்தை அறிந்தவனாவான்," என்ற நல்லுரையை வழங்கினார்; இதைப் பின்பற்றுதற்குரிய நெறியையும் வகுத்துக் காட்டுகின்றார்; "பற்றற்றே எதையும்

செயலாற்றலாம்; ஒன்ருேடும் ஒன்றிப்போய்விடாமல் உன் கருமம் புரிவாயாக. நீயோ, மாசற்ற ஆன்மா; எப்பற்றும் நீங்கிய சுதந்தர ஆன்மா. எல்லாவற்றையும் நடுவுநின்றே நோக்குகின்ற ஆன்மாவும் நீயே,'' எனக் கூறுகின்ருர்.

நம்முடைய துயர் கருமம் புரிவதால் முளைக்கவில்லை; அதில் பற்று வைப்பதாலேதான் அது தோன்றுகிறது. சான்ருக, பணத்தை எடுத்துக்கொள்ளுங்கள். "செல்வத்தைச் சேமிப்பது சிறந்ததுதான்; அதைச் சேமிப்பதில் அரும்பாடு படுவீர்களாக; ஆனால், அதன்பால் பற்று வைக்காதீர்கள்,'' என்று கண்ணபிரானுர் மொழிகின்ருர். குழவிகள்பாலும், மனைவியின்பாலும், கணவன்பாலும், உறவினர்பாலும் இம்முறையிலேயே நடந்துகொள்வாயாக. புகழாயிருந்தாலும் சரி, வேறு எதுவாயிருந்தாலும் சரி; பற்றற்று இருப்பாயாக. ஒரே பற்றுதான் உளது; அதுதான் ஆண்டவன் பால் வைக்கும் பற்ருகும். உறவினர் முதலியவர்களுக்காக உழைக்கலாம்; அவர்கள் மீது அன்பைச் சொரியலாம்; அவர்கட்கு நன்மை புரியலாம்; ஆனால், பற்றற்று இருப்பீர்களாக. கண்ணபிரானுருடைய வாழ்வே அதற்குத் தக்க சான்ருய்ச் சுடர் விட்டு நிற்கின்றது.

கண்ணபிரானுரின் தெய்விக வரலாற்றைச் சித்திரிக்கும் நூலோ, பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் வரையப்யட்டது என்பதை மறந்துவிடாதீர்கள். அவருடைய வாழ்வின் வரலாற்றுப்பகுதிகள் சில, நாசரத்தில் தோன்றிய இயேசுநாதரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை நினைவூட்டுகின்றன. கண்ணபிரானுர் வேந்தர் குலத்தில் உதித்தவர். கம்சன் என்னும் கொடுங்கோல் மன்னன் ஒருவன் ஆட்சி புரிந்தான். 'குறிப்பிட்ட ஒரு குடும்பத்தில் பிறக்கும் ஒரு மகன், அவனுடைய அரியணைமேல் வீற்றிருப்பான் என்று எச்சரிக்கும் தெய்விகக்குரல் முன்னமே ஒலித்துவிட்டது. ஆகவே, அந்த ஊரிலுள்ள குழந்தைகளனைத்தையும் மாய்த்துவிடும்படி ஆணையிட்டுவிட்டான் அக்கொடுங்கோலன்; கண்ணபிரானுருடைய பெற்ருேர்களைச் சிறையில் வைத்தான். அந்தச் சிறைச்சாலையிலேதான் அக்குழந்தை பிறந்தது. திடீரென ஓர் ஒளி சிறைச்சாலையில் சுடர் விட்டெழுந்தது. உதித்த குழவியும் பேசலுற்றது: "உலகத்தை உய்விக்கவந்த ஒளிதான் நான். நான் உலக நலத்தை நாட்டவே பிறந்திருக்கிறேன்,'' என்றது அக்குழவி. ஆக்களிடையே அம்மாயவர் இருப்பதாகச் சித்திரிக்கப்பட்டிருக்கும்

அவரை மிக்க சிறப்பு வாய்ந்த கோபாலர் என்று வழங்குவார்கள். "ஆண்டவரே இவ்வையகத்தில் அவதரித்திருக்கிறார்," என்று இருடிகள் மிக்க உறுதியுடன் சாற்றி, அவரடி தொழ அங்கே சென்றார்கள். கதையின் பிற்பகுதிகளில் இயேசுநாதருடைய சரித்திரத்திற்கும், கண்ணபிரானுருடைய சரித்திரத்திற்கும் உள்ள தொடர்பைக் காண்பதரிது.

அந்தக் கொடுங்கோல் மன்னனை கம்சனைக் கண்ணபிரானர் வென்றார்; ஆனால், அவனுக்குப் பதிலாக அரியணை அமர்ந்து ஆட்சி புரியவில்லை. கம்சனைக் கொல்லவேண்டியது அவர் கடமை. எனவே, அதை மட்டும் செய்தார். அதோடு அவர் கருமம் நின்று விட்டது.

குருக்ஷேத்திரப் போர் முடிவடைந்தது. பெரும்போர் வீரரென வணங்கிப் போற்றுதற்குரியவரும் பிதாமகருமான (பாட்டனர்) பீஷ்மர், பதினெட்டு நாட்களிலே பத்து நாட்கள் வரையில் அரும்போர் புரிந்தார்; மரணப்படுக்கையில் இருந்தவாறே பல்வேறு பொருள்களைப்பற்றி அறிவுரை வழங்கினர்; வேந்தர்க்குரிய அறங்களையும், நான்கு வருணத்தாரின் கடமைகளையும், வாழ்க்கையின் நான்கு படிகளையும், மணத்தைப் பற்றிய முறைகளையும், இவை போன்ற வேறு விஷயங்களையும் எடுத்து ஓதினர்; பண்டைய இருடிகளின் அறிவுரைகளையே அடிப்படையாகக் கொண்டு இவற்றிற்கு விளக்கம் அருளினர்; சாங்கிய தத்துவம், யோக தத்துவம் இவற்றின் நுட்பங்களை ஆய்ந்து கூறினர்; ஞானிகள், தெய்வங்கள், வேந்தர்கள் இவர்களைப் பற்றிய கணக்கிலாக் கதைகள், மரபுகள் யாவையும் சொன்னர். இப்பேரிதிகாசத்தின் நாலிலொரு பங்கு பீஷ்மருடைய அறிவுரைகளாகக் காட்சி அளிக்கின்றது. இந்துக்களின் ஒழுக்கமுறைகளும், சட்டங்களும் நிறைந்த விலையிலாக் களஞ்சியமாய் இலங்குகின்றது இந்தப் பகுதி.

இதற்கிடையே தருமனுக்கு முடிசூட்டினர்கள். ஆனால், போரில் பெருகிய பயங்கரமான குருதி வெள்ளம், பெரியோர்கள் உறவினர்கள் இவர்களுடைய அழிவு ஆகிய இவ்விரண்டும் தாங்கருந் துயர்ப்பாரமாய் நின்று அவன் உள்ளத்தை மிகவும் வருத்தி விட்டன. வியாசர் அறிவுரைக்கேற்ப அவன் அசுவமேத யாகத்தை (குதிரை வேள்வியை) ஆற்றினன்.

போர் முடிந்ததும் திருதராட்டிரன் அமைதியாயும் பெருமையுடனும் வாழ்வை நடத்தினன். தருமனும் அவன் உடன் பிறந்

தோர்களும் அவனை வணங்கி வழுத்தினர்கள். தருமனை அரியாசனத்தே அமர்த்தி, மூப்படைந்த அந்த வேந்தன், தன் அன்பு மிக்க மனைவியான காந்தாரியுடனும், பாண்டவர்களின் அன்னையான குந்தியுடனும் எஞ்சிய நாட்களைத் துறவறத்தில் கழித்தற்பொருட்டுக் காட்டிற்குச் சென்றுவிட்டான்.

தருமன் தன் சாம்ராச்சியத்தைப் பெற்று முப்பத்தாறு ஆண்டுகள் கழிந்துவிட்டன. கண்ணபிரானர் பூதவுடலை நீத்து விண்ணுடு சென்ற செய்தி தருமன் செவியில் விழுந்தது. ஓர் இருடியராயும், ஒரு நண்பராயும், ஒரு தீர்க்கதரிசியராயும், ஞானியராயும், அறிவுரை வழங்கும் சான்ருேராயும் திகழ்ந்த அப் பெரியோர் மறைந்து போய்விட்டார். அருச்சுனன் துவாரகைக்கு விரைந்து சென்ருன். கண்ணபிரானரும், யாதவர் அனைவரும் மாண்டனர் என்ற செய்தி உறுதியாகிவிட்டது. இந்தச் செய்தி தருமனையும் அவன் உடன்பிறந்தோர்களையும் வெந்துயர்க்கடலில் ஆழ்த்திவிட்டது. அவர்கள் தாங்களும் இவ்வுலகை விட்டு அகல வேண்டியபொழுதும் நெருங்கிவிட்டதுஎன்பதை உணர்ந்தார்கள்; பாராளும் வேந்தர்கள் சுமையை உதறித் தள்ளிவிட்டார்கள்; அருச்சுனன் பேரனை பரீட்சித்து என்பவனை அரியணைமீது அமர்த்திவிட்டுத் தங்களது நீண்ட (மகாபிரஸ்தானம் என்ற) யாத்திரையைத் தொடரும்பொருட்டு இமய மலைக்குச் சென்றுவிட்டார்கள். இது ஒரு தனிப்பட்ட முறையான சந்நியாசமாகும். மூப்படைந்த முடி மன்னர்கள் சந்நியாசம் பூணுவது ஒரு வழக்கமாகும். பண்டைக்காலத்தில் இந்தியாவில் மிகவும் மூப்பெய்தியவர்கள் எல்லாவற்றையும் துறப்பார்கள். அவ்வண்ணமே வேந்தர்களும் துறவறம் மேற்கொள்வார்கள். இனிமேல் உலகில் வாழ வேண்டா என்று விரும்புகிறவர்கள், இமயமலையை நோக்கிச் செல்வார்கள். இப்படிப் போகிறவர்கள் உணவும் அருந்தமாட்டார்கள்; நீர் பருகவும் இசையார்கள்; நடந்துகொண்டே போவார்கள். உடல் கீழே தானே சோர்ந்து விழுகிறவரையில் ஏகுவார்கள்; கடவுளைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தே திரிவார்கள்; உடல் கீழே சாய்ந்து போகும் வரையில் திரிவார்கள்.

பிறகு தேவர்களும் இருடிகளும் வந்து தருமனைப் பார்த்து, "இம்மண்ணகத்தை விட்டு விண்ணிற்கு வரவேண்டும்," என்று சொன்னர்கள். சுவர்க்கத்திற்குச் செல்ல இமயமலையின் மிகவும் உன்னதமான சிகரத்தைத் தாண்டவேண்டும். இமய மலைக்கு

மேல் மகாமேரு என்னும் சிகரமிருக்கிறது. அதன் உச்சியில் சுவர்க்கம் இருக்கிறதாம். தம் உடலோடு அங்கு ஒருவரும் போய்ச் சேர்கிறதில்லையாம். அங்கேதான் தெய்வங்கள் உறைகின்றன. அவை தாம் தருமனை வாவென்றழைத்தன. ஆகவே, பாண்டவர் ஐவரும் திரௌபதியும் மரவுரி தரித்துத் தம் நீள்வழி சென்றனர். போகின்ற பாதையில் ஒரு நாய் அவர்களைப் பின் தொடர்ந்தது. மேலும் மேலும் நடந்து நடந்து வடதிசை நோக்கியே சென்றார்கள்; இமய மலைச் சிகரங்களையும் எய்திவிட்டார்கள். அங்கிருந்து நிமிர்ந்து நிற்கும் மகாமேருவின் உச்சியைக் கண்ணுற்றார்கள். வாளா வாய்புதைத்துப் பனிப்பாறைகள்மீது ஊர்ந்து போனார்கள். அரசி கீழே விழுந்துவிட்டாள்; எழ இயலாது அவள் மாண்டாள். வழிகாட்டி முன்னே செல்லும் தருமனைப் பார்த்துப் பாண்டவர் களில் ஒருவனை பீமன், "வேந்தரே, அரசி கீழே விழுந்து மாய்ந்துவிட்டாள்," என்று மொழிந்தான். தருமன் கண்ணீர் வடித்தான்; திரும்பிப் பார்க்கவில்லை. "நாம் கண்ணபிரானைக் காணப் போகின்றோம்; திரும்பிப் பார்க்கப் பொழுதில்லை; விரை வீர்களாக," என்று தருமன் பகர்ந்தான்.

சற்று நேரங் கழித்து, "இதோ பாருங்கள்! சகாதேவனும் விழுந்துவிட்டான்!" என்று பீமன் உரைத்தான். தருமன் கண் மாரி பெய்தான்; ஆனால், திரும்பிப் பார்த்தானில்லை. "மேலேறுங் கள்," என்று தருமன் செப்பினான்.

ஒருவர் பின் ஒருவராகக் குளிரிலும் பனியிலும் நால்வரும் மடிந்துபோயினர். சற்றும் தளராமல் தன்வழியே தருமன் சென்று கொண்டே இருந்தான். திரும்பிப் பார்த்த பொழுது அந்த நாய் தன்னைத் தொடரக் கண்டான். நடுங்கும் குளிரிலும் பனியிலும் குன்றுகளையும் பள்ளத்தாக்குகளையும் நாயும் அவனும் கடந்து சென்றார்கள்; மேலே போய்க்கொண்டே இருந்தார்கள். மகா மேருவை அடைகிற வரையில் அவர்கள் சென்றார்கள். விண்ணவர் நாட்டு மங்கலகீதங்கள் ஒலித்தன. அறத்தாற்றில் நின்ற தருமன் மீது தேவர்கள் மலர் மழை பொழிந்தார்கள். தேவர்களின் இரதம் கீழே இறங்கிற்று. இந்திரன் தருமனுக்குப் புகழ்மாலை சூட்டினான்; "மனிதக் குழாத்திற்கே சிகரமாய் அமைந்த சான்றோரே, இரதத்தில் அமர்வீராக. மனித உடலுடன் இந்நாடு புகுவதற்கு நீரே பாக்கியம் புரிந்திருக்கிறீர்!" என்றான். "நான் புகமாட்டேன். என்பால் மிக்க அன்பு வைத்த என் அருஞ்சகோதரர்களும், என்

அரசியுமின்றி யான் விண்ணுடுவேண்டேன்,'' என்றான் தருமன். "அவர்கள் உங்கட்கு முன்னரே எங்கள் நாட்டுக்கு வந்துவிட்டார்கள்,'' என்று இந்திரன் விளக்கம் தந்தான்.

பிறகு தருமன் சுற்றிப்பார்த்தான். நாயைக் கண்டு, "என் குழந்தாய், நீ இந்த இரதத்தில் ஏறுவாயாக !'' என்றான். இந்திரன் பிரமித்துப் பெருவியப்பில் ஆழ்ந்துவிட்டான். "ஆ! இந்த அற்ப நாயையா ?'' என்று இயம்பினான். "இந்த நாயைத் துறப்பீராக. நாய் விண்ணகம் புகாது என்பதை அறியீரோ ? பெருந்தகை வேந்தரே, உங்கள் மனத்தை எங்களால் அறிய முடியவில்லையே. நீங்கள் அறிவை இழந்துவிட்டீர்களா ? பைத்தியந்தான் உங்களுக்குப் பிடித்துவிட்டதா ? அறப்பாதையில் மனித இனத்திற்கே மௌலியாய்த் திகழும் நீங்கள் ஒருவரே உம்முடைய உடலோடு விண்ணவர் நாட்டை அடையமுடியும்,'' என்றான்.

"பனியிலும் குளிரிலும் என்பால் அன்பு வைத்து என்னைப் பின் தொடர்ந்த தோழனல்லவா, இந்த நாய்? என் உடன் பிறந்தோர்கள் மாண்டார்கள்; என் அரசி உயிர் நீத்தாள். நட்பான நாய் தான் என்னைவிட்டு அகலவில்லை. இப்பொழுது யான் இதை எப்படிப் புறக்கணித்து அகற்ற முடியும் ?'' என்று மொழிந்தான் தருமன்.

"நாயோடு வரும் மாந்தர்களுக்கு விண்ணில் இடமில்லை. இந்த நாயை விட்டே தீரவேண்டும் ; இதில் ஒரு நியாயமும் பிறழவில்லை,'' என்று இந்திரன் விடை பகர்ந்தான்.

"நாயில்லாமல் எனக்கு இவ்விண்ணும் வேண்டா. என்னையே தஞ்சமாகப் புகுந்த நாயை யான் துறக்கமாட்டேன் ; என் உயிர் போமளவும் நான் புறக்கணிக்கமாட்டேன். தெய்வங்கள் வேண்டினும் சரி ; விண்ணவர் நாட்டுப் பேரின்பங்கள் வருவதானாலுஞ் சரி ; அவற்றிற்கு நான் சற்றும் இடங்கொடேன் ; அறப்பாதையை விட்டு இம்மியும் விலகேன்,'' என்று தருமன் சாற்றிவிட்டான்.

"ஆனல், இந்த நாயும் சுவர்க்கம் புகட்டும். நீங்களோ, அறப்பாதையைப் பின்பற்றும் சான்றோராவீர்கள். இந்த நாயோ, விலங்குகளை வருத்திக் கொன்று தின்னும் இயல்புள்ளது. நீங்கள் நரகத்திற்குப் போகவேண்டும் ; அது விண்ணவர் நாட்டை அலங்கரிக்கட்டும். இதற்கு உடன்பட்டால் நாங்கள் அப்படி மாற்றி அமைப்போம்,'' என்றான் இந்திரன். "ஆம் ; அப்படியே செய்வீராக. நாய் சுவர்க்கத்தை அடையட்டும்,'' என்று தருமன் மொழிந்துவிட்டான்.

உடனே காட்சி வேறுவகையில் தோன்றுவதாயிற்று. இந்தச் சிறந்த பெருமை வாய்ந்த மொழிகளைக் கேட்ட நாய், தன் உண்மை வடிவைக் காட்டிவிட்டது. நாய் வடிவம் எடுத்து வந்தவன் யமனே யாவான். மரணதேவனும் அறக்கடவுளும் அவனே. "வேந்தரே, உம்மைப் போலச் சுயநலமற்றவர் ஒருவரும் இல்லை. நீர் சுவர்க்கமும் வேண்டாவென்று நரகத்தையே ஏற்றீர் அன்றோ? உமது எல்லா அறச்சேமிப்பையும் இழந்து, நரகம் செல்லச் சிந்தித்தீரே! உயர்ந்த குலத்தில் உதித்தோரே, வேந்தர்க்கெல்லாம் வேந்தரே, பரதகுலத் தோன்றலே, மன்னுயிர் அனைத்தின்மீதும் அன்பைச் சொரியும் கருணையின் வடிவே, உம்முடைய பேரறத்தைக் காட்டுவதற்கு இது ஒன்றே ஒளி மிக்க சான்றாகும். அழியாத இன்ப நாடுகள் அனைத்தும் உம்மையே சார்வனவாகுக. அவற்றை உம் அறத்தின் ஆற்றலால் வென்றுவிட்டீர். வேந்தரே, இதுதான் அமர நாட்டின் மிக உயர்ந்த இலட்சியமாகும்," என்றான் அவன்.

பிறகு இந்திரன், யமன் முதலிய மற்றைய தேவர்களோடு உதிட்டிரன் விண்ணவர் ஊர்தியின்மீது அமர்ந்து சென்றான். அவனுக்குச் சில சோதனைகளும் ஏற்பட்டன. ஆகாய கங்கையில் நீராடினான்; தெய்வ வடிவைப் பெற்றான். அமரர்களாய்த் திகழ்கின்ற தன் உடன் பிறந்தோர்களைச் சந்தித்தான். எல்லாம் இறுதியில் இன்ப வெள்ளத்தில் மூழ்கிவிட்டன.

"அறத்திற்கு வெற்றியும் மறத்திற்கு வீழ்ச்சியும் ஏற்படும்," என்ற பெருந்தத்துவத்தைச் சித்திரித்த மாபேரிதிகாசமான மகா பாரதம் இவ்வண்ணம் முடிவடைகின்றது.

உயர்ந்தோங்கிய கம்பீரமான பாத்திரங்களை மிகச் சிறந்த கவிஞரான வியாசர் தம் கற்பனையைக் கொண்டும் மேதையைக் கொண்டும் படைத்தார். மகா பாரதக் கதையை உரைக்குங்கால், அது என் கண்முன் இடையறாத ஊர்வலம் போல விரிகின்றது. அதை என்னால் சித்திரிக்க இயலாது. தளர்ந்தவனும், மூப்பெய்தியவனும், தெய்வத்திற்கு அஞ்சி நடக்கின்றவனும், கண்ணொளி இழந்தவனுமான திருதராட்டிரன் மன அரங்கில் அறத்திற்கும் மைந்தர்கள்பால் வைத்த பாசத்திற்கும் வெம்போர்கள் நடந்தன. பாட்டனாரான பீஷ்மரின் கம்பீரமான பெருந்தன்மை நம்முன் விரிகின்றது. அறத்தில் நிற்கும் வேந்தனான தருமனின் உயர்ந்த பண்பாடும் காட்சி அளிக்கின்றது. ஆற்றலிலும், அன்பிலும்,

பத்தியிலும் தருமனை அவன் சகோதரர்கள் ஒத்திருக்கின்றார்கள். ஞானத்தில் ஒப்பு உயர்வற்று உயர்வற உயர்ந்த கண்ணபிரானுருடைய தோற்றமும் நம் கண்முன் மிதந்து வருகின்றது. காப்பியத்தில் திகழ்கின்ற பெண்மணிகளின் ஒளி மிக்க தோற்றங்களும் நம் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளுகின்றன. காந்தாரியின் உயர்ந்த தோற்றப் பொலிவும், அன்பே வடிவான அன்னை குந்தியின் இயல்பும், திரௌபதியின் கற்பும், இன்னல்களையும் துயர்களையும் ஏற்ற அவளுடைய பொறையும் நம்முன் விரிகின்றன. இவை போன்ற நூற்றுக்கணக்கான பாத்திரங்கள் இவ்விதிகாசத்தில் இடம் பெறுகின்றன. இதில் தோன்றுகின்ற பாத்திரங்களும் இராமாயணத்தில் வருகின்ற பாத்திரங்களும் இந்து உலகம் போற்றி வழிபடும் பரம்பரைச் சொத்தாய்ப் பல்லாயிரம் ஆண்டுகளாய்த் திகழ்ந்து வருவதை உணர்கின்றோம். அவர்களுடைய தூய எண்ணங்களுக்கும், ஒழுக்கத்தைப்பற்றி அவர்கள் கொள்ளும் கருத்துகளுக்கும், அறநெறி முறைகட்கும் அடிப்படையாய் இப்பாத்திரங்கள் இலங்குகின்றன. மக்கட்சமுதாயம் இன்னும் எட்ட விரும்புகின்ற ஒரு பண்புச் சிகரமாய் இராமாயணமும் மகா பாரதமும் திகழ்கின்றன. உண்மையிலேயே பண்டைய ஆரியர்களுடைய வாழ்வையும், ஞானத்தையும் சித்திரிக்கும் அறிவுக்களஞ்சியங்களென இவ்விரு மாபேரிதிகாசங்களையும் நாம் கருதலாம்.

ஜடபரதரின் வரலாறு

[காலிபோர்னியாவில் ஆற்றப்பட்ட சொற்பொழிவு]

பரதன் என்னும் பெயருடைய புகழ்வாய்ந்த வேந்தன் ஒருவன் ஆட்சி புரிந்துவந்தான். அயல் நாட்டார்களால் இந்தியா என்று வழங்கப்படும் தேசத்தை அந்தத் தேசத்து மக்கள் பாரத வருஷம் என்று மொழிவார்கள். மூப்பெய்திய ஒவ்வோர் இந்துவும் இம்மை அலுவல்களனைத்தையும் துறந்துவிட வேண்டும் என்ற கடமை வகுக்கப்பட்டிருக்கிறது. அவன் தன்னுடைய கவலையாம் சுமைகள், சொத்துச் சுதந்தரங்கள், இன்பப் போகப்பொருள்கள் இவற்றைத் தன் மைந்தன்பால் ஒப்படைத்துவிட்டுக் காட்டிற்குச் சென்று தன்னுள்ளே திகழ்கின்ற ஒரே மெய்ப்பொருளான ஆன்மாவைப் பற்றிய சிந்தனையில் ஆழவேண்டும்; வாழ்வோடு தன்னைப் பிணைக்கின்ற தளைகள் எல்லாவற்றையும் தகர்த்து எறிந்துவிடுவதுதான் அழகாகும். வேந்தனாய்த் திகழட்டும்; புரோகிதனாய்ப் பொலியட்டும்; குடியானவனாய்த் தோன்றட்டும்; பணியாளனாய் இருக்கட்டும்; ஆடவனாய்க் காட்சியளிக்கட்டும்; நங்கையாய் மிளிரட்டும். ஒவ்வொருவரும் இந்தக் கடமையை ஏற்றே தீரவேண்டும். இதிலிருந்து விலகுதல் அறம் அன்று. மைந்தன் முறையிலோ, உடன் பிறந்தோன் முறையிலோ, கணவன் முறையிலோ, தந்தை முறையிலோ, மனைவி முறையிலோ, புதல்வி முறையிலோ, தாய் முறையிலோ, உடன்பிறந்தோள் முறையிலோ ஆற்றப்படும் குடும்பக் கடமைகள் யாவும் இந்த ஒரே இறுதிநிலைக்குத் தம்மைத் தகுதியாக்கிக்கொள்ளும் பொருட்டு இல்வாழ்வோர் புரியும் ஆயத்தங்களேயாகும். இந்நிலையில் ஆன்மாவைப் பிரகிருதியோடு பிணைக்கின்ற பந்தங்கள் அறவே அறுந்து போய்விடும்.

இந்நெறியைப் பின்பற்றிய மன்னர்க்கு மன்னனான பரதன், தன் வாழ்வின் இலை உதிர் பருவத்தே மைந்தனை அரியணைமீது அமர்த்திவிட்டுக் காட்டில் உறையச் சென்றுவிட்டான். பல்லாயிரக் கணக்கான மக்கள்மீது ஆட்சி புரிந்த வேந்தன்—பொன்னும் வெள்ளியும் கொண்டு அமைக்கப்பட்ட பளிங்கு அரண்மனைகளில் இன்புற்று வாழ்ந்த வேந்தன்—விலையிலா நன்மணிகள் மிளிரும் கவினுறு பொற்கலங்களில் உணவருந்திய மன்னன்—இமயமலைக் காடுகளில் இப்பொழுது ஓர் ஆற்றங்கரைமீது நாண

லும் புல்லுங்கொண்டு ஒரு சிறு குடில் அமைத்துவிட்டான். தன் கைகளாலேயே திரட்டப்பட்ட கந்த மூலங்களை உண்டே உயிர் வாழ்ந்தான். மனித ஆன்மாவில் எஞ்ஞான்றும் ஒளிவிட்டுக்கொண்டிருக்கும் ஆண்டவன்பால் இடையருத தியானத்தில் மூழ்கி விட்டான். நாட்கள், திங்கள்கள், ஆண்டுகள் கழிந்தன.

இந்த ராஜரிஷி தவம் புரிகின்ற இடத்திற்கு அண்மையில் தண்ணீர் அருந்த ஒரு மான் ஒரு நாள் வந்தது. அக்கணமே சற்றுச் சேய்மையில் ஒரு சிங்கம் பேரிடி முழக்கஞ்செய்தது. மிகவும் அச்சமுற்று நீர் வேட்கையைக்கூடத் தணித்துக்கொள்ளாமலே ஆற்றைக் கடக்கத் துள்ளிக் குதித்து விரைந்தோடிற்று அந்த மான். அது அப்பொழுது முழுச்சூல் கொண்டிருந்தது. அளப்பருந் தொல்லையும் திடுமென எழுந்த அச்ச அதிர்ச்சியும் அது தன் குட்டியை ஈனும்படி செய்துவிட்டன. ஈன்ற அக்கணமே மான் தரைமீது சாய்ந்து மரித்துவிட்டது. தண்ணீரில் நழுவி விழுந்து நொப்பும் நுரையுமாய்க் கொந்தளித்துக் கடிது பெருகும் ஆற்றில் சிக்கி அடித்துக்கொண்டு போகப்படும் அம்மான் குட்டி வேந்தன் பார்வையைக் கவர்ந்துவிட்டது. அவன் தன் தியானத்திலிருந்து எழுந்து நீரில் இறந்து மடியாவண்ணம் விரைந்து அதைக் காப்பாற்றினன்; குடிலுக்குத் தூக்கிச் சென்று, அனலை மூட்டி மிக்க கவனத்துடனும் பரிவுடனும் வெப்பங்கொண்ட தன் கைகளால் வருடி அதனை உயிர்த்தெழும்படி செய்தான். அன்பு மயமாய்த் திகழ்ந்த அப்பெரியான் அதைத் தன் அரவணைப்பில் வைத்துக் கொண்டான். நற்புல்லையும் தீஞ்சுவைக் கனிகளையும் அதற்கு அளித்துச் செல்வத்துடன் பாராட்டினன். கவலையற்று அமைதியில் தன் காலத்தைக் கழிக்க வந்தவனது அன்பின்கீழ் அது ஓர் அழகிய மானய் ஓங்கி வளர்ந்துவிட்டது. பெரிய அதிகாரம், உயர்ந்த பதவி, குடும்பம்—இவற்றின்மீது வாழ்நாள் முழுதும் வைத்த பற்றை அறுத்தெறியும் ஆற்றல் படைத்த அவன் மனம், பெருகு வெள்ளத்திலிருந்து காப்பாற்றப்பட்ட அந்த மானின்பால் மிகுந்த பற்றுக்கொண்டுவிட்டது. எவ்வளவுக்கெவ்வளவு அந்த மானின்மீது அன்பைச் சொரிந்தானே, அவ்வளவுக்கவ்வளவு ஆண்டவன்பால் தியானத்தைச் செலுத்த இயலாமற்போய் விட்டது. மான் காட்டில் மேயப் போய்த் திரும்பிவர நேரமாகி விட்டால், அந்த ராஜரிஷியின் உள்ளம் பதைத்து அல்லலுறும். “இந்த என் சிறு குழந்தையைக் காட்டிலுறையும் ஏதாவது ஒரு

வெம்புலி தாக்கிக் கொன்றுவிட்டதா? அல்லது அதற்கு வேறு ஏதேனும் ஆபத்து நேரிட்டுவிட்டதா? அன்றேல், அது வீடு திரும்ப ஏன் கால தாமதம் செய்கின்றது?'' என்ற சிந்தனை அலைகள்மீது அவன் மிதந்து செல்வான்.

இவ்வண்ணம் சில ஆண்டுகள் கழிந்தன. அவனுக்கு மரண முறும் நாளும் வந்துவிட்டது. அந்த ராஜரிஷி உயிரை நீத்தற்கு ஆயத்தமானான். பரமான்மாவை நாடாமல் அவன் மனம் அந்த மானைச் சிந்தித்தபடியே இருந்தது. தன் அன்பிற்குரிய மானின் துயர் முகில் சூழ்ந்த கண்கள்மீது தன் பார்வையை ஊன்றிய படியே அவன் ஆன்மா உடலை விட்டு அகன்றது. அதன் விளைவாக அடுத்த பிறவியில் அவன் மானாய்த் தோன்றினான்.

அந்த மான் பண்டைப் பிறப்பை உணரும் மானாகவே உதித்தது. வாய் பேசாமல் விலங்கின் உடலில் இருந்தாலும், முன் பிறவியின் நினைவு அழிந்து போகாமல் இருந்தது. தன்னுடைய இனங்களைவிட்டு ஆச்சிரமங்களின் மருங்குகளில் மேயும் உணர்ச்சி அதை ஈர்த்துச் செல்லும். அங்கே அவர் வேள்விகளில் அவிகள் சொரிவதைக் கண்கொண்டு நோக்கும்; உபநிடதங்கள் ஓது வதைச் செவிகளால் பருகும்.

மானுக்குரிய ஆயுள் முடிவானதும், அது இறந்தது; செல்வம் படைத்த ஓர் அந்தணனுக்குக் கடைசிச் சேயாய்ப் பிறந்தது. இந்த வாழ்விலும் அவன் தன்னுடைய முற்பிறவிகளனைத்தையும் உணர்ந்தான். அறியா இளமைப் பருவத்தேயும் வாழ்வின் நல்லது தீது என்ற வலைகளில் சிக்கக்கூடாது என்ற உறுதி கொண்டான். குழந்தையாயிருந்து வளரும் பொழுது அவன் உடல் நலம் பெற்றும் வலிமை அடைந்துமிருந்தான்; ஒரு சடப்பொருள் போலவும் பித்தன் போலவும் காட்சி அளித்தான். அவன் வாயிலிருந்து ஒரு சொற்கூட வரவில்லை. உலக அலுவற்சூழலில் எங்கே சிக்கிவிடு வோமோ என்ற அச்சம் அவனிடம் குடிகொண்டிருந்தது. அவ னுடைய எண்ணங்கள் யாவும் எஞ்ஞான்றும் அகண்டத்தின் மீதே பதிந்திருந்தன. பண்டை வினைப்பயனை நுகர்ந்து அதை ஒழிப்பதற்கே அவன் உயிர் வாழ்ந்தான்.

நாளடைவிலே தந்தை இறந்துவிட்டான். பிள்ளைகள் சொத்துச் சுதந்தரங்களைப் பங்கு பிரித்துக்கொண்டார்கள். தங்கள் இளைய உடன்பிறந்தோன் ஊமை என்றும் ஒன்றுக்கும் உதவாதவன் என்றும் கருதி, அவனுக்குரிய சொத்தையும் தாங்களே பகிர்ந்து

கொண்டார்கள். உயிர் வாழ அவனுக்குப் போதிய உணவு அளிக்கும் பொறுப்போடு அவர்களுடைய அறம் நின்றுவிட்டது. உடன் பிறந்தோர்களின் மனைவிமார்கள் அடிக்கடி அவனைக் கொடுமையாக நடத்தினார்கள்; கடுமையான அலுவல்களை ஆற்றும்படி ஏவினார்கள்; அவனால் இயலாத பொழுது அவனிடத்தில் இன்னும் இரக்கமில்லாது இருப்பார்கள். அல்லல் உற்றதாகவும் அஞ்சுவதாகவும் அவன் காட்டிக்கொள்ளவில்லை; மிகவும் தன்னை வதைத்தால் வீட்டை விட்டு வெளியேறி, அவர்களுடைய சீற்றந் தணிகிற வரையில் ஒரு மரத்தடியில் தங்கிப் பொழுதைப் போக்குவான்; பிறகு அமைதியாய் வீட்டிற்குத் திரும்பிவிடுவான்.

ஒரு நாள் உடன் பிறந்தோர்களின் மனைவிகள் ஆற்றொணாத் துன்பம் விளைவித்த காரணத்தால், பரதன் வீட்டை விட்டே அகன்று ஒரு மரத்தின் நிழலில் தங்கி இளைப்பாறினான். அந்நாட்டு வேந்தன் அங்குச் செல்ல நேர்ந்தது. அவனை ஒரு பல்லக்கில் வைத்துப் பணியாளர்கள் தங்கள் தோள்கள்மீது சுமந்து போனார்கள். எதிர்பாராத வண்ணம் பல்லக்குத் தூக்குவோர்களில் ஒருவன் நோய்வாய்ப்பட்டுவிட்டான். ஜடபரதன் ஒரு வலிய இளைஞனாயிருக்கக் கண்டு, பல்லக்குத் தூக்கும் விஷயத்தில், நோய் வாய்ப்பட்டவனுக்குப் பதிலாகத் தங்கட்கு உதவ முடியுமா என்று அவனை வினவினார்கள். ஆனால் ஜடபரதன் வாளா இருந்தான். அவன் உடல் வலிமை உள்ளவன் என்று தேர்ந்த பணியாளர்கள் சிவிகைத் தண்டை அவன்மீது சுமத்திவிட்டார்கள். பேசாமலே ஜடபரதன் சென்றான். இது நிகழ்ந்த சற்று நேரத்திற்குப் பின் சமனாய்ப் பல்லக்குச் செல்லவில்லையே என்று வேந்தன் கூறிப் பல்லக்கிலிருந்து வெளியிலே நோக்கிப் புதியவனாய்த் தூக்குவோனைப் பார்த்து, "அறிவிலி, உன்னுடைய தோள்கள் வலியுறுமானால், சற்று இளைப்பாறு," என்றான். பல்லக்குத் தண்டைக் கீழே வைத்துத் தன் வாழ்க்கையில் முதன்முதலாக வாயைத் திறந்து பேசலுற்றான். "வேந்தரே, யாரை நீங்கள் 'அறிவிலி' என்று அழைக்கின்றீர்கள்? பல்லக்கைக் கீழே வைக்கும்படி யாருக்குக் கட்டளை இடுகின்றீர்கள்? யார் சோர்வுற்றிருப்பதாக மொழிகின்றீர்கள்? நீ என்று அழைக்கின்றீர்களே, அந்த 'நீ' யார்? 'நீ' என்பது இந்தச் சதைத் தொகுதியானால், உங்கள் உடலும் இதே பொருளால் அமைந்ததுதானே? அதற்குத் தன் உணர்ச்சி இல்லை; அதற்கு அயர்வில்லை; அது துன்பத்தையும்

அறிகிறதில்லை; அதை மனம் என்று நீங்கள் கருதினால், உங்கள் மனமும் அதுவும் ஒன்றே. அது எங்கும் ஒன்றே. 'நீ' என்பது மனத்திற்கப்பால் ஒன்றைச் சுட்டுமாயின், அதுதான் பரமான்மா வாகும். என்னுளே திகழும் மெய்ப்பொருள்தான் உங்களிடமும் மிளிர்கின்றது. இந்தப் பிரபஞ்சத்தில் ஒளிவிட்டு நிற்கிறதும் அது ஒன்றேயாகும். அந்தப் பரமான்மா அயர்வுறும் என்று நினைக் கின்றீர்களா? அது எப்பொழுதாவது சோர்வடையுமா? அது இன்ன லால் நலியுமா? வேந்தரே, இந்த உடற்பாரம் பாதையில் ஊர்ந்து கொண்டிருக்கும் புழுக்கள் நசுங்காவண்ணம் இருத்தற்பொருட்டு முயன்றதால், பல்லக்குச் சமனாய்ச் செல்லவில்லை. அந்தப் பர மான்மா அயர்வுறவில்லை; அதற்குப் பலவீனமே இல்லை; அது பல்லக் கின் சுமைத்தண்டைத் தாங்கிச் செல்லவில்லை. ஏனெனில், அது எல்லாம் வல்லது; எங்கும் நிறைந்தது,'' என்று ஜடபரதர் மொழிந்தார். இவ்வண்ணம் பரமான்மாவின் இயல்பைப்பற்றியும் பழுத்த ஞானத்தைப் பற்றியும் அவர் மிக்க ஆர்வத்துடன் துருவி ஆராய்ந்துகொண்டே போனார். விரிந்த படிப்பு, நுண்ணறிவு, உயர்தத்துவம் இவற்றைப் பெற்றதால் தருக்குற்ற வேந்தன் பல் லக்கை விட்டுக் கீழே இறக்கி ஜடபரதரின் அடியிற்பணிந்து, "பெரியோரே, என்னை மன்னித்தருள வேண்டும்! உங்களைப் பல்லக்குச் சுமக்கப் பகர்ந்தபொழுது, நீங்கள் ஒரு ஞானியார் என் பதை நான் உணர்ந்தேனல்லேன்!'' என்றான்.

பரதர் அவ்வேந்தனுக்கு ஆசிகள் பல கூறி அகன்றார். தம் பண்டைய தூய வாழ்க்கை மாறாத சுருதியில் செல்லும் இயல்பைப் பெற்றார்; உடல் நீத்ததும் பிறவித்தளையிலிருந்தும் விடுபட்டார்.

பிரகலாத சரிதம்

[இது காலிபோர்னியாவில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு]

இரணியகசிபு என்பவன் தைத்தியர்களுக்கு (அசுரர்களுக்கு) வேந்தன். அசுரர்களும் தேவர்களும் ஒரே குலத்தைச் சார்ந்தவர்களேயானாலும், அசுரர்கள் தேவர்களோடு இடையருது போராடிய வண்ணமே இருந்தார்கள். உலக மக்கள் வேள்வித் தீயில் தேவர்களுக்குச் சொரியும் அவிகளிலும், நல்கும் காணிக்கைகளிலும் அசுரர்களுக்குப் பங்கில்லை. உலக ஆட்சியிலும், அதை நடத்துவதிலும் அவர்களுக்கு உரிமை இல்லை. ஆனால், சில சமயங்களில் அவர்களுக்கு ஆற்றல் ஓங்கி வளரும். அவர்கள் விண்ணவர் அனைவரையும் அடித்துத் துரத்தி, அவருடைய அரியணையைத் தமக்கு இடமாக்கிக்கொண்டு சில காலம் ஆளினும் ஆளுவார்கள்.

உலகம் முழுதும் நிரம்பிய திருமாலை அமரர்கள் இறைஞ்சுவார்கள். அவர்களுடைய சிறுமையை அவர் துடைப்பார். அரக்கர்கள் துரத்தியடிக்கப்படுவார்கள்; மீண்டும் தேவர்கள் செங்கோல் புரிவார்கள்.

அரக்கர் வேந்தனை இரணியகசிபு தன் பங்காளிகளைத் தோல்வியுறும்படிச் செய்து, விண்ணவர் நாட்டின் அரியணைமீது வீற்றிருந்து, மனிதர்களும் விலங்குகளும் உறையும் நடுவுலகம், தேவர்களும் அவர்களையொத்தவர்களும் வாழும் மேல்உலகம், அரக்கர் வைகும் கீழ் உலகம் ஆகிய இம்மூவுலகங்களிலும் ஆணை செலுத்தத் தொடங்கிவிட்டான். இந்த உலகத்திற்குத் தன்னையல்லால் வேறு தலைவன் இல்லை என்று தருக்கி நின்றான். தன்னைத் தவிர வேறு தெய்வமும் இல்லை என்று சாதித்தான். எல்லாம் வல்ல திருமாலுக்கு எங்கும் பூசனை புரியக்கூடாதென்றும், இனித் தனக்கே எல்லா வழிபாடுகளும் செய்யப்படவேண்டுமென்றும் ஆணை இட்டுவிட்டான்.

இரணியகசிபுவிக்குப் பிரகலாதன் என்பவன் மைந்தன். அவன் தன் குழவிப் பருவம்தொட்டே ஆண்டவன்பால் அளவு கடந்த பத்தி பூண்டிருந்தான்; குழந்தையாயிருக்கும்போதே பத்திச் சின்னங்களைப் புலப்படுத்தினான். இரணியகசிபு எந்தத் தீமையை உலகத்தை விட்டு நீக்க விழைந்தானோ, அந்தத் தீமை தன் குலத்திலேயே முளைத்தெழக்கூடும் என்று அஞ்சி, சண்டர்,

அமர்க்கர் என்னும் ஆசிரியர் இருவரிடம் மைந்தனை ஒப்படைத்து விட்டு, திருமாலின் பெயரையும் எவரும் உச்சரியா வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற கண்டிப்பான கட்டளையும் இட்டான். ஆசிரியர்களோ, கடுமையான அடக்கப் பயிற்சியுள்ள வர்கள். அவர்கள் அரசிளங்குமரனைத் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று அவனையொத்த மாணுக்கர்களோடு கல்வி பயிலச் செய்தார்கள். ஆனால், சிறுவனான பிரகலாதன் நூல்களைக் கல்லாமல் திருமாலை வழிபடு முறையை மற்றைய மாணவர்கட்குக் காட்டும் துறையில் தன் பொழுதனைத்தையும் போக்கினான். இதைக் கண்ட ஆசிரியர்கள் நடுங்கினார்கள். இரணியகசிபுவின் சீற்றம் தங்கள் மீது பாயும் என்ற அச்சம் அவர்களை எப்பொழுதும் சூழ்ந்தே இருந்தது. அவர்கள், "நீ இப்படிக் கற்பிப்பது அழகன்று. இச் செயலை விட்டுவிட வேண்டும்," என்று பிரகலாதனுக்குச் சொல்லிப் பார்த்தார்கள். மூச்சு விடுவதை நிறுத்துவது எப்படி இயலாத காரியமோ, அப்படியே திருமாலை வழுத்துவதையும் அவர் மகிமையை எடுத்தோதுவதையும் நிறுத்துவது பிரகலாதனுக்கு அரிய செயலாயின. ஆசிரியர்கள் தங்கள் மீது குற்றஞ் சாரா வண்ணம் வேந்தனையணுகி, அவன் மகன் திருமாலைத் தான் தொழுதலேயன்றி, மற்றைய மாணவர்களையும் தொழும்படிச் செய்து, அவர்களையும் கெடுத்துவிடுகின்றான் என்ற பயங்கரமான நிகழ்ச்சியைத் தெரிவித்தார்கள். இதைச் செவியுற்ற பொழுது வேந்தன் மிகவும் வெகுண்டு, பிரகலாதனைத் தன்னிடம் வரச் செய்தான். திருமாலை வழிபடுதலை அவன் நிறுத்திவிட வேண்டுமென்று மிக நயம்பட உரைத்தான். மேலும், மன்னனான தானே வணங்குதற்குரிய ஒரே தெய்வம் என்றும் அவனுக்குக் கற்பித்தான். ஆனால், பயனில்லை. எங்கும் நிறைந்த திருமாலே இவ்வுலகிற்குத் தலைவர் என்றும், அவரே வணங்குதற்கேற்றவரென்றும், அவருடைய சங்கற்பம் முடியும் வரையிலேதான் பார்த்திபனான தன் தந்தையும் அரியணைமீது அமர்ந்திருக்க இயலுமென்றும் திரும்பத் திரும்பச் சாற்றினான் பிரகலாதன். வேந்தன் கொண்ட சீற்றத்துக்கு எல்லை இல்லை. உடனே அவன் தன் தனயனைக் கொல்லும்படி கொலைஞர்க் குக் கட்டளையிட்டுவிட்டான். அரக்கர்கள் கூர்மையான கொலைக் கருவிகள் கொண்டு பிரகலாதனைத் தாக்கினார்கள். பிரகலாதன் மனம் திருமாலிடம் மிகவும் ஆழ்ந்திருந்தபடியால், அக்கருவிகள் விளைத்த வலியை அவன் உணரவில்லை.

தன் முயற்சி பயனற்றதைக் கண்ணுற்ற இரணியகசிபு பேரச்சத்தை அடைந்தான். அரக்கருக்குற்ற மிகக் கொடிய உணர்ச்சிகள் அவன் மனத்தின்கண் அலை மோதவே, தன் மைந்தனை மாய்க்கும்பொருட்டு சற்றும் இரக்கமிலாக் கொடும்பேய்கள் கையாளும் பல்வேறு சூழ்ச்சிகளை வகுத்தான்; யானைக் காலடிகளின்கீழ் அவனை வைத்து நசுக்கும்படி உத்தரவு பிறப்பித்தான். சீற்றங்கொண்ட யானையாலும் அவனை நசுக்க இயலாது போயிற்று; பழுக்கக் காய்ந்த இரும்பின்மீது அடி வைத்த கதையாய் முடிந்துவிட்டது அந்த யானையின் முயற்சி. இந்த முறையும் வீணாய்ப் போகவே செங்குத்தான ஒரு குன்றின் மீதிலிருந்து அவனைக் கீழே தள்ளும்படி கட்டளையிட்டான் மன்னன். இந்த ஆணையும் நிறைவேற்றப்பட்டது. திருமால் பிரகலாதன் உள்ளத்தில் உறைந்த காரணத்தால், புல்லின்மீது மலர் உதிர்வது போலப் பிரகலாதன் தரையை அடைந்தான். இரணியகசிபு அவனுக்கு நஞ்சையருத்தினான்; அவனைத் தீக்குளிக்கச் செய்தான்; உணவளிக்காமல் வாட்டினான்; கிணற்றில் எறியச் செய்தான்; மந்திரங்கள் கொண்டு மாய்க்கப் பார்த்தான். ஒன்றன் பின் ஒன்றாகப் பல கொடிய முறைகளையும் கையாண்டு பார்த்தான். ஆனால், யாவும் வீணாயின. தூயவனை ஒன்றும் துன்புறுத்தவில்லை. ஏன்? திருமால் அவன் மனத்தில் கோயில் கொண்டிருந்தாரல்லரோ!

கீழ் உலகங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட வலி மிக்க அரவங்களால் கட்டி அவனைக் கடலில் எறிந்துவிடும்படி கட்டளையிட்டான் மன்னன். மேலும், அங்கே அவன்மீது பெருமலைகளும் அடுக்கப்பட வேண்டுமாம்; உடனே இறவாமற்போனாலும், நாளடைவில் மரித்துவிடக்கூடுமன்றோ! இந்நிலையில் அவனை விட்டுவிட வேண்டுமென்று உத்தரவு செய்தான்.

இவ்வண்ணம் கொடுமையாக நடத்தப்பட்டும் பிரகலாதன் தன் பேரன்புக்குரிய திருமாலை இடையறாது வழுத்திக்கொண்டே இருந்தான்; 'அண்டர் நாயகனே போற்றி! அழகுடை மாலே போற்றி!' என்று துதித்தான்; திருமாலைப் பற்றிச் சிந்திப்பதாலும், தியானிப்பதாலும் அவர் தன் பக்கலில் இருப்பதாகவே உணரத் தொடங்கினான்; தன் ஆன்மாவிலேயே அமர்ந்திருப்பதாகக் கண்டான்; பிறகு தானே திருமாலாகவும், ஒவ்வொன்றும் தானேயாகவும், தானே எங்கும் இருப்பதாகவும் தேர்ந்தான்.

இத்தகைய அனுபூதிச் செல்வத்தை எய்திய உடனே, அரவத்

தளைகள் யாவும் அறுந்துபோயின; மலைகள் தவிடுபொடியாயின; கடல் கொந்தளித்து மேலே எழுந்தது. அலைகளால் அவன் உந்தப்பட்டு யாதோர் இன்னலுமின்றிக் கரைமீது கொணரப்பட்டான். அங்கே பிரகலாதன் நின்ற பொழுது, அவன் தான் ஓர் மனிதன் என்பதை மறந்தான்; தனக்கு ஒரு மனித உடல் இருப்பதான உணர்ச்சியையும் விட்டான். தானே உலகமெனக் கண்டான்; தன்னை எதுவும் நலிதல் இயலாதென்பதையும் அறிந்தான்; இயற்கைமீது தான் ஆணை செலுத்துவதாக உணர்ந்தான். இத்தகைய இடையருத இன்ப வெள்ளத்தில் சிறிது காலம் கழிந்த பிறகுதான் தனக்கு ஓர் உடல் உண்டென்றும் தான் பிரகலாதனென்றும் அவனுக்கு நினைவு வந்தது. உடலைப் பற்றிய எண்ணம் உதித்ததும், கடவுள் அகத்திலும் புறத்திலும் இருப்பதை அறிந்தான். அவனுக்கு எல்லாம் திருமாலாகவே காணப்பட்டன.

இரணியகசிபு தனக்குப் பகைவனை திருமாலிடம் அளவு கடந்த அன்பு வைத்திருக்கிற தன் மைந்தனைக் கொல்லுவதற்குச் செய்த பல முயற்சிகளும் வீணுயினது கண்டு பேரச்சமுற்று, மேல் யாது செய்வது என்பதை ஓராது, உளம் திகைத்தான்; தன் பிள்ளையை அழைத்துத் தன் அறிவுரைக்குச் செவி சாய்க்கும்படி கனிவுடன் மொழிந்தான். ஆனுல், பிரகலாதனே, தன் கொள்கையி னின்று தளரவில்லை.

இந்தக் குழந்தைப் பிடிவாதங்கள் வயதினுலும், பயிற்சியாலும் அகன்று போய்விடும் என்று கருதி, சண்டர், அமர்க்கர் என்னும் ஆசிரியர்களிடம் முன்போலவே மைந்தனை ஒப்படைத்தான்; அரச கடமைகளை அவனுக்குப் புகட்டும்படி அறிவுறுத்தினுன். ஆனுல், அரசியல் அறிவுரைகள் மைந்தன் மனத்தைக் கவரவில்லை. எல்லாவற்றிற்கும் இறைவரான திருமாலையே வழிபடும்படி தன் ஞேடு படிக்கும் மாணவர்களுக்கு வேண்டிய அறிவுரையை வழங்கி ஞன் பிரகலாதன்.

இச்செய்தியைக் கேட்டதும் சீற்றங்கொண்டு எழுந்தான் இரணியகசிபு; பிரகலாதனை அழைத்து அவனைக் கொல்லுவதாக வும் அச்சுறுத்தினுன்; செவி ஏற்காத வசைமாரியைத் திருமாலின் மீது பொழிந்தான். எனினும், பிரகலாதன் திருமாலே உலகத் திற்கு இறைவரென்றும், தொடக்கமும் முடிவும் அற்றவரென்றும், எல்லாச் சத்தியும் வாய்க்கப்பெற்றவரென்றும், எங்கும் நிறைந்தவ ரென்றும், அக்காரணத்தால் அவரே வழிபடு கடவுளாவார் என்றும்

உறுதியாக மீண்டும் மீண்டும் எடுத்தோதினுன். மன்னன் பெருஞ் சீற்றத்தால் பேரிடி முழக்கஞ்செய்து, "தீயோனே, திருமால் எங்கும் நிறைந்தவனென்ருல், இதோ தெரிகிற தூணில் அவன் இருப்பாஞ?" என்று கேட்டான். "அவர் அங்குந்தான் இருக் கிருர்," என்று மிக்க பணிவுடன் விடை அளித்தான் பிரகலாதன்.

"அப்படியானுல், உன்னை அவன் காப்பாற்றட்டும். இந்த வாளுக்கு உன்னை இரையாக்கப் போகின்றேன்!" என்று வாளொடு அவன்மீது பாய்ந்ததோடு நின்றுவிடாமல், தூணைத் தன் ஆற்றல் முழுவதுந் தோன்ற மிகவும் பயங்கரமாக உதைத்தான் இரணிய கசிபு. உடனே ஓர் இடிக்குரல் கேட்டது. யாவரும் வியப்புறத் திருமால் நரசிங்கத் தோற்றத்தில் தூணைப் பிளந்துகொண்டு வெளிப்பட்டார். அச்சம் நிறைந்த அரக்கர் அனைவரும் பல திசை களிலும் ஓட்டம் பிடித்தனர். ஆனுல், இரணியகசிபு ஒன்றும் ஓராது அவரோடு நீண்ட காலம் போர் புரிந்து, இறுதியில் தோல்வி யுற்று மடிந்தான்.

பிறகு அமரர்கள் விண்ணிலிருந்து மண்ணுலகடைந்து நர சிங்கமூர்த்தியைத் தோத்திரம் செய்தார்கள்; பிரகலாதனும் அவர் அடியில் விழுந்து வணங்கி, உள்ளத்தை உருக்கும் வகையில் புகழும் பத்தியும் நிறைந்த பாமாலையை அவருக்குச் சூட்டினுன்.

"நீ என் செல்வக் குழந்தையாயிற்றே! பிரகலாதா, நீ விழை கின்ற எதையும் கேட்பாயாக," என்ற குரல் எழுந்தது.

உணர்ச்சிப்பெருக்குத் தன் தொண்டையை அடைக்க, "யான் தேவரீரைத் தரிசிக்கப் பெற்றேன்; இதைத் தவிர நான் விரும்பும் பொருள் உளதோ? உலக இன்பத்தையும், அமர நாட்டுப் போகத் தையும் அளித்து என்னை மயக்கிவிடாதீர்கள்," என்ருன் பிரக லாதன்.

"குழந்தாய், ஏதேனும் ஒன்றைக் கேள்," என்ற குரல் மீண்டும் ஒலித்தது. "அறிவிலிகள் உலகப் பொருள்கள்மீது வைக்கும் ஆழ்ந்த அன்பனைய அன்பை நான் உங்களிடம் வைக்க அருள வேண்டும். அன்பிற்கே அன்பு பூணுமாறு எனக்கு நீங்கள் வரந் தரவேண்டும்," என்ருன் பிரகலாதன்.

"பிரகலாதா, என்னுடைய அடியார்கள் இம்மையும் மறுமை யும் வேண்டார்கள். நீ உலக இன்பங்களை இந்தப் பிறவி முடிகிற வரையில் துய்ப்பாயாக. இது நானிடும் கட்டளையாகும். சமய

வழிபாட்டுடன் சிறந்த முறையில் நல்ல செயல்களைச் செய்வாயாக. உன் சித்தம் மட்டும் என்பால் வேரூன்றி நிற்கட்டும். நாளடைவில் இவ்வுடல் நீங்கின உடன் நீ என்னை வந்து அடைவாய்,'' எனத் திருமால் பிரகலாதனுக்கு ஆசி கூறி மறைந்தார். விண்ணவர்கள் பிரமன் தலைமையின் கீழ் அரக்கர்களுடைய அரியாசனத்தின் மீது பிரகலாதனை அமர்த்திவிட்டுத் தத்தம் இருப்பிடம் சென்றூர்கள்.

கோபாலன் என்னும் சிறுவன்

"அன்னாய், காடுகள் வழியாகத் தனியே பள்ளிக்குப் போக நான் அஞ்சுகின்றேன்! மற்றைய மாணவர்களை அழைத்துச் செல்லப் பணியாளர்களோ, மற்றவர்களோ இருக்கின்றார்கள். என்னை வீட்டிற்கு அழைத்துவர ஒரு வேலைக்காரனாவது இருக்கலாகாதா?" என்று கோபாலன் என்னும் ஓர் அந்தணச் சிறுவன் கார் காலத்தில் ஒரு நாள் பிற்பகலில் பள்ளிக்கு ஆயத்தமாயிருக்கும் பொழுது தன் தாயாரைப் பார்த்து வினவினான். பள்ளிக்கூட நேரம் காலையோ, பிற்பகலோ ஆகும். பிற்பகலில் பள்ளிக்கூடம் முடியும் போது இருள் சூழ்ந்துவிடும்; செல்லும் பாதையோ வனங்களின் நடுவில் விரிந்திருந்தது.

கோபாலன் தாய் ஒரு கைம்பெண். அவனுடைய தந்தையார் ஓர் அந்தணர் எப்படி வாழ வேண்டுமோ, அப்படி வாழ்ந்து வந்தார். உலகச் செல்வங்களைப் பொருட்படுத்தாது, படிப்பதிலும், பாடம் கற்பிப்பதிலும் தம் பொழுதைக் கழித்தார்கள்; இறைவனை வழிபடுதலிலும், மற்றவர்களுக்கு இறைவனை வழிபடுவதற்குரிய முறையைப் பின்பற்றுகிற நெறியைக் காட்டி உதவி புரிவதிலும் திளைத்தார். கோபாலன் சின்னஞ்சிறுவனாயிருக்கும் பொழுதே அவர் உயிர் நீத்தார். யாதொரு களைகணும் இல்லாத அவர் மனைவி உலகப் பற்றுகளனைத்திலிருந்தும் ஒதுங்கி நின்று, தனக்கிருந்த சிறிய சொத்துச் சுதந்தரத்தையும் பாராட்டாது தன்னை முற்றிலும் ஆண்டவனுக்கே அர்ப்பணஞ் செய்துவிட்டாள்; பிரார்த்தனைகள் புரிந்தாள்; உண்ணா விரதம் பூண்டாள்; வேறு நியமங்களையும் ஏற்றாள்: எல்லோரையும் துன்பத்திலிருந்து விடுவிக்கும் பெருந்தகையோனான யமனது வருகையைப் பொறுமையுடன் எதிர்பார்த்து நின்றாள்; தன்னுடைய இன்ப துன்பங்களில் எஞ்ஞான்றும் பங்குகொண்ட உற்ற துணைவரும், தொடக்கமற்று இடையறாது திகழும் வாழ்வாம் சங்கிலிப் பிணைப்பில் தோன்றும் நல்லதிலும் கெட்டதிலும் கலந்துகொண்டவருமான தன் கணவரை மறு பிறப்பில் காணவே விழைந்தாள். அவள் ஒரு குடிசையில் உறைந்து வந்தாள். சிறந்த கல்வியை வளர்க்கும்பொருட்டுப் புனித காணிக்கையாகத் தன் கணவருக்கு அளிக்கப்பட்ட ஒரு சிறிய நன்செய் நிலம் வாயிலாகப் போதுமான அரிசி அவளுக்குக் கிடைத்தது. மூங்கிற்புதர்களும், சில தென்னை மரங்களும்,

மாமரங்களும், லிச்சி என்னும் ஒருவகை மரங்களும் நிரம்பிய ஒரு புன்செய் நிலமும் அவளுடைய குடிசையைச் சுற்றி இருந்தது. அவளிடம் பரிவு காட்டும் அந்தச் சிற்றூர் மக்களின் உதவியால் ஆண்டு முழுவதும் வேண்டும் காய்கறிகள் அவளுக்குக் கிடைத்து விடும். மேலும், அவள் ஒவ்வொருநாளும் இராட்டினத்தை மணிக் கணக்காகச் சுழற்றி மிக்க சிரமத்துடன் நூல் நூற்பாள்.

காலைக் கதிரவன் செங்கதிர்கள் பனைகளின் உச்சியைத் தொடு வதற்கு நீண்ட நேரத்திற்கு முன்னரே—புள்ளினங்கள் தத்தம் கூடுகளில் இசையெழுப்பத் தொடங்குவதற்கு முன்பே—அவள் படுக்கையை விட்டெழுவாள். அவள் படுக்கையென்பது, தரைமீது விரிந்து கிடக்கும் ஒரு பாயும் அதை மூடியிருக்கும் கம்பளமுமேயா கும். அவள் எழுந்ததும் பண்டைக் காலத்துப் புனித மங்கையரின் பெயர்களை உச்சரிப்பாள்; பண்டைய முனிவர்களை வழுத்துவாள். மன்னுயிர் அனைத்திற்கும் புகலிடமான நாராயணன், அருள் வடி வான சிவபிரான், அகிலங்காக்கும் அன்னை பராசத்தி—இவர்க ளுடைய திருநாமங்களை இடையறாது ஓதுவாள்; அவள் இதயம் கவர்ந்த கண்ணபிரானைத் தொழுவாள். உலக மக்களுக்கு அறி வுரை வழங்கி அவர்களைக் காப்பாற்றுதற்பொருட்டு அப்பிரான் கோபால வடிவத்தை ஏற்றான். தொலைவில் உள்ள அவன் அருகே இருப்பதாக உணர்ந்து அவள் பேரின்பம் கொண்டாள்; கோபாலன் வடிவத்தில் வந்த ஆண்டவன் நாளுக்கு நாள் தன்னை நெருங்கி வருவதையும் உணர்ந்தாள்.

அவள் கீழ்வானம் வெளுக்கும் முன்னமே பக்கத்திலுள்ள அரு வியில் நீராடுவாள்; நீரால் தன் உடல் மாசு நீங்குவது போல கண்ணபிரானின் பேரருளால் மன மாசும் அகலும்பொருட்டு அவனை இறைஞ்சுவாள்; நன்றாகத் துவைத்த வெண்பஞ்சுத் துகிலை உடுப்பாள்; சில மலர்களைக் கொய்து வருவாள்; ஒரு சிறிய வட்டக் கல்லின்மீது நீர் தெளித்துச் சந்தனக் கட்டை கொண்டு அரைத்து வாசச் சந்தம் கூட்டுவாள். மணங்கமழ் குடிலில் திருத்துழாய் சிலவற்றைக் கொய்து இறை வழிபாட்டிற்கென்றே தனியாய் அமைந்த ஒரு சிற்றறையில் புகுவாள். அந்த அறையிலேதான் அவள் கோபால உருவத்தை வைத்திருந்தாள். ஒரு சிறிய பட்டு விதானத்தின் கீழ் ஒரு மரப்பீடம் இருந்தது. அதன்மீது வெல் வெட்டுச் சேக்கை ஒன்று காட்சி அளித்தது. அந்தப் படுக்கையில் பால கோபாலனது வெண்கலச் சிலையை எழுந்தருளச் செய்திருந்

தாள். அந்தச்சிலை மலர்களால் பெரும்பாலும் மூடப்பட்டிருந்தது. ஆண்டவனை ஒரு சேயாகக் கருதுகிற முறையிலேதான் அவளுடைய தாயுள்ளம் திருத்தியுறும். அவள் மறைகளில் கூறப்பட்டிருக்கிற பிரானைப்பற்றிக் கற்றுணர்ந்த தன் கணவர் அடிக்கடி பேசக் கேட்டிருந்தாள். அவன் உருவமற்றவனென்றும், எல்லையற்றவனென்றும், குணங்கடந்தவனென்றும் அவர் இயம்புவார். கவனமே வடிவெடுத்து நின்றது போல அவள் உற்றுக் கேட்பாள். அதன் முடிவெல்லாம் ஒன்றுதானே? மறைகளில் கூறப்பட்டிருக்கிறது உண்மையாய்த்தானிருக்க வேண்டும்; ஆனால், அந்தத் தத்துவமோ, அளவு கடந்தது; மிகவும் தொலைவிலுள்ளது. அவளோ, திறனற்றவள்; ஒன்றும் அறியாதவள். ஆனால், "அன்பர்கள் எந்த எந்த வடிவில் என்னை நாடுகின்றார்களோ, அந்த அந்த வடிவில் அவர்களை நான் நண்ணுகின்றேன்; நான் வகுத்த நெறிகளையே மன்னுயிரனைத்தும் பின் பற்றுகின்றன," என்னும் உண்மையும் அவற்றில் குறிக்கப்பட்டிருக்கின்றது. அதுவே அவளுக்குப் போதும். அதற்குமேல் அவள் அறிய வேண்டுவது ஒன்றுமே இல்லை. அவளது பற்று, அவளது சிரத்தை, அவளது அன்பு, அவளது இதயம் சொரியக்கூடிய அனைத்தும் கண்ணனை கோபாலனிடமே பதிந்திருந்தன. கண்ணுக்குப் புலனாகின்ற அந்தச் சிறிய கோபால வெண்கலச் சிலையோடு அவளது இதயம் பிணைந்திருந்தது. "தசையும் குருதியுமுள்ள வடிவத்தை எப்படி வணங்குவாயோ, அப்படியே என்னையும் வணங்குவாயாக. நான் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளுகிறேன்," என்ற உண்மைப் பொருளையும் அவள் அடிக்கடி கேட்டிருக்கிறாள். ஒரு தலைவனை வணங்குவது போலவும், அன்பிற்குரிய ஓர் ஆசானை வழிபடுவது போலவும், தன் கண்ணின் பாவையெனக்கருதும் ஒரே குழந்தையான தன் சேயின்மீது அன்பைப் பொழிவது போலவும் அவ்வுருவத்தின்பால் அவள் நடந்துகொண்டாள்.

அந்த உருவத்திற்குத் திருமஞ்சனம் ஆட்டிய பிறகு, ஆடை உடுத்து, அலங்காரம் செய்வாள்; அதற்குச் சாம்பிராணித் தூபம் காட்டுவாள். அந்தோ! அதற்கு அவள் எதைப் படைப்பாள்? அவள் மிகுந்த வறுமையுற்றவளாயிற்றே! தன் கணவர் நூல்களிலிருந்து மொழிந்ததை நினைந்து நினைந்து கண்களில் நீர் மல்க நிற்பாள். "இலைகளையும், மலர்களையும், கனிகளையும் நீரையும், நான் இன்பமாய் ஏற்கின்றேன். எது அன்போடு அளிக்கப்படு

கின்றதோ, அதுதான் நான் உவக்கும் பொருளாகும்,'' என்பது கீதை.

"எம்பெருமானே, உன்பொருட்டுத்தான் உலகம் இம்மலர்களைப் பூத்துச் சொரிகின்றது. நான் நல்கும் சாதாரண மலர்களை அணிவாயாக! உலகத்திற்கு உணவளிக்கும் உயர்ந்தோனே, என்னுடைய எளிய காணிக்கைகளாகிய கனிகளை ஏற்பாயாக! நான் ஆற்றல் அற்றவள்; அஞ்ஞான இருளில் மூழ்கியிருப்பவள். என் தெய்வமே, என் கோபாலா, என் குழந்தையனையதேவே, உன்னை அணுகி நான் எப்படி வணங்குவது என்பதை ஓர்ந்திலேன்! எனது வழிபாடு மாசுமறு அற்றதாயிருக்கட்டும். உன்னிடம் நான்காட்டும் அன்பு சுயநலம் நீங்கிய அன்பாய் மலரட்டும். என் வழிபாட்டில் ஏதாவது ஒரு நலம் இருக்குமாயின், அது உன்னைச் சாரட்டும். கைம்மாறு கருதா ஓர் அன்பை—உன் அன்பையே நாடி நிற்கும் ஓர் அன்பை—எனக்கு அளிப்பாயாக!'' என்றுகூறி வழிபடுவாள்.

ஒரு நாள் காலைப் பொழுதில் இரந்துண்ணும் ஒரு பிச்சைக்காரன் அவளது குடிசையின் முற்றத்தில் பின் வரும் சுருதியில் ஒரு பாட்டை இசைத்துக்கொண்டிருந்தான்.

'மனித!நின் அறிவினை மதியேன்! அஞ்சுவன்
புனிதநின் அன்பினை; பொலன்மிகும் எனதரி
ஆதனம் அதற்கே அசைவுறும்; கண்ணீர்
சேதனன் சிந்தலும் தெய்வம்வந் தருளும்;
இறையோன் அருவன் யாண்டும் முத்தன்
சிறையாம் நரவுருச் சேர்ந்து நின்னெடும்
உறைதலும் ஆடலும் உந்திடும் அன்பினல்.
கற்றதென் விருந்தைக் கானக் கோவலர்,
பெற்றங் கறந்த பேதையர்? ஈந்தனர்
எண்டகும் ஆர்வம்; கொண்டனர் எனையே.'

ஆயர்குலத் தெய்வக் குழந்தையான கோபாலன் பெயரையே அவள் தன் மைந்தனுக்குச் சூட்டினுள். தான் பெற்ற உலகக் குழந்தை கோபாலன் என்ற சிறுவன் தான் வழிபடும் தெய்வத்தினிடம் உறைவதாக அவளது தாயுள்ளம் உணர்ந்தது. உலகச் சூழ்நிலைகளில் அவளுடைய ஆன்மா ஏதோ ஒரு பொம்மை போலச் சுழன்றது; உலகப் பொருளுடன் தொடர்பற்று அமரர் வாழ் விசும்பில் திரிவதற்கு அவள் ஆன்மா ஆயத்தமாயிருந்தாலும்,

அதைத் தடை செய்தது, அவள் தன் மைந்தன்பால் வைத்த அன்பெனும் நங்கூரமேயாகும். அவளுடைய உலக இன்பங்களையும் அன்பையும் சொரிவதற்கு அவன் ஒருவனே எஞ்சி நின்ருன். அவளுடைய நடை உடை பாவனைகள், அவளுடைய எண்ணங்கள், அவளுடைய இன்பங்கள், அவளுடைய உயிர்—இவையனைத்தும், வாழ்க்கையுடன் அவளைப் பிணைக்கும் ஒருவன்பொருட்டே அமைந்தனவெனக் கருதினுள்.

அவள் சில ஆண்டுகள் வரை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்த் தன் மைந்தன் வளர்வதைத் தாய்க்குரிய கவலையுடன் கவனித்து வந்தாள். அவனுக்குப் பள்ளிக்குப் போகும் பருவம்வந்தெய்தியது. அவள் தன் பள்ளிச்சிறுவனுக்குவேண்டுவனவற்றைத் திரட்டுதற்பொருட்டுப் பல திங்கள் அரும்பாடு பட்டாள். ஏழை மக்களுக்குத் தேவைகளாய் உள்ளவை மிகச் சிலவே ஆகும். உள்ள அமைதியுடன் மண் விளக்கொளியிலேயே மக்கள் தங்கள் நூல்களைப் படிப்பதில் தங்கள் வாழ்நாட்களைக் கழிப்பார்கள். அந்த விளக்கிற்குச் சிறிது எண்ணெயிருப்பது போதும். அவ்விளக்கிற்கு அமைந்திருப்பது ஒரு சிறிய பஞ்சுத் திரியே. அவர்கள் அமர்வதற்குரியது ஒரு கோரைப் பாய்தான். இப்படிக் காட்சி அளிக்கின்ற நாட்டில் மாணவர்களுடைய தேவைகள் மிகுதியல்ல. இப்படி இருந்தும், அந்த ஏழை அன்னை இவற்றைப் பெறவும் பல நாள் வருந்த வேண்டியிருந்தது.

அரையில் உடுக்கும் பஞ்சாடையையும் மேலாடையையும் வாங்குவதற்கும் எத்தனையோ நாட்கள் அவள் இராட்டினத்தைச் சுழற்ற வேண்டியிருந்தது. எழுதுவதற்கு ஒரு கற்றைப் பனையோலைகள் வேண்டும். அவற்றைச் சுற்றிக்கொண்டு போக ஒரு சிறு பாயும் தேவையன்றோ? பள்ளிக்கூடத்தில் தனக்கு ஓர் ஆதனமாக அமைத்துக்கொள்ளுவதற்கும் அப்பாய் பயன்படும். நாணற் புல்லால் செய்யப்பட்ட எழுதுகோலும் மைக்கூடும் அவன் பெற வேண்டும். நல்ல நாளில் அரிச்சுவடியைத் தொடங்கி மைந்தன் எழுதுகிற அமயம் எத்தகைய இன்பம் பெருகும் என்பதை ஒரு தாயுள்ளந்தான்—ஏழைமையுற்ற ஒரு தாயுள்ளந்தான்—உணர இயலும்.

ஆனால், இன்று ஓர் இருண்ட நிழல் அவள் மனத்திற் படர்ந்துவிட்டது. காட்டு வழியில் தனித்துப் போகக் கோபாலன் அஞ்சினுன். தன் கைம்பெண் நிலையையும், தன் தனிமையையும், தன்

வறுமையையும் இதுகாறும் அவள் கசந்துகொள்ளவில்லை; இப்பொழுது அவள் மனம் மிகவும் நைந்துவிட்டது! ஒரு கணம் எங்கும் இருள் சூழ்ந்திருப்பது போல எல்லாம் காட்சி அளித்தன. ஆனால், ஆண்டவன் நல்கிய அழியாத அருள்மொழி அவள் சிந்தையில் ஒலித்தது. "எல்லா எண்ணங்களையும் விட்டு என்னையே தஞ்சமாகப் புகுவோர்களுக்குக் காட்சி அளித்து ஆவன செய்வேன் நான்," என்னும் இவ்வருள் மொழியை நம்புகின்ற இயல்புடைய ஆன்மாக்களில் அவளும் ஒருத்தியே.

தாய் தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, தன் மைந்தனைப் பார்த்து, "நீ அஞ்ச வேண்டா. அந்தக் காடுகளில் என்னுடைய மற்றொரு மகன் உறைகின்றான். அவனுக்கும் கோபாலன் என்பதே பெயர். காட்டு வழியிற்செல்லுங்கால் நீ அச்சமுற்றால் உன் சகோதரனாகிய அந்தக் கோபாலனைக் கூவி அழைக்கலாம்," என்றாள்.

தாய் எப்படியோ அப்படியே மைந்தனும் திகழ்ந்தான்; அவன் அதை முற்றிலும் நம்பினான். அன்று காட்டு வழியே வீடு திரும்பும் பொழுது கோபாலன் அஞ்சிக் கோபாலனான தன் உடன் பிறந்தோனைக் கூப்பிட்டான்: "என் அன்னையார் நீ இங்கேயிருப்பாய் என்று சொல்லியிருக்கிறார்; அச்சமுறும்போதெல்லாம் உன்னை அழைக்கச் சொன்னார். தனியாயிருப்பதற்கு எனக்குப் பயமாயிருக்கிறது அண்ணே!" என்று கூறினான்.

"நடுங்காதே! தம்பி, நான் இருக்கிறேன். அச்சமின்றி வீட்டிற்குப் போ," என்ற குரல் மரங்களின் பின்னின்று எழுந்தது.

இவ்வண்ணமே அந்தச் சிறுவன் அழைப்பான்; அந்தக் குரலுக்கு விடையும் வரும். இதைச் செவியுற்ற அன்னை வியப்பிலும் பேரன்பிலும் ஆழ்ந்துவிடுவாள்; காட்டில் உறைகின்ற தன் மூத்தோனை நேரில் காணும்படி அவனுக்குப் போதித்தாள்.

மறு நாள் காட்டு வழியே போகும்பொழுது, 'கோபாலா,' என்று அச்சிறுவன் கூப்பிட்டான்; 'ஏன்?' என்ற குரல் வழக்கம் போலவே எழுந்தது. சிறுவன் காட்டில் உறையும் தன் அண்ணனை நேரில் வரும்படி வேண்டினான். "எனக்கோ, இன்று அலுவல் மிகுதியாயிருக்கிறது. அதனால், வர என்னால் இயலாது," என்ற குரல் ஒலித்தது. அச்சிறுவனோ, மன்றாடிக் கேட்டான். காட்டின் இருண்ட நிழலிலிருந்து அக்கோபாலன் வெளி வந்தான். ஆயர்களின் உடையை அவன் அணிந்திருந்தான். அவன் தலை

மேல் ஒரு சிறிய மகுடம் மிளிர்ந்தது. அந்த மௌலியின்மீது மயில் இறகுகள் காற்றில் அசைந்து ஆடின. அவன் கையில் வேய்ங் குழல் விளங்கிற்று.

அவ்விருவரும் மிகவும் இன்புற்றனர்; அன்று முதல் அவ்விரு வரும் காட்டில் மணிக்கணக்காக விளையாடினர்; மரங்களின் மீது ஏறுவதிலும், கனிகளைத் திரட்டுவதிலும், மலர்களைக் கொய்வதிலும் அவர்களுக்குப் பொழுதுபோகும். கைம்பெண் மைந்தன் கோபால னும் காட்டுறை கோபாலனும் இவ்வண்ணம் விளையாடுங்கால், பள்ளிக்கு நேரமாய்விடும். கைம்பெண்ணின் சேயான கோபாலன், விருப்பற்றவனாய்ப் பள்ளிக்குச் செல்வான். அவன் தன் படிப் பணைத்தையும் பெரும்பாலும் மறந்துவிட்டான். காடுகளுக்கு மீண்டும் மீண்டும் திரும்பிப்போய்த் தன் அண்ணனோடு விளை யாடவே அவன் உள்ளம் துடித்தது.

இவ்வண்ணம் பல திங்கள் கழிந்தன. ஒவ்வொரு நாளும் வியப்பை எழுப்பும் இந்தச் செய்தியை அந்த ஏழைத் தாய் கேட்டாள்; ஆண்டவன் அருள் வாயிலாகப் பெருகும் பேரின்பத் தில் தன் கைம்பெண் நிலையையும், வறுமையையும் மறந்து, தன் னுடைய இன்னல்கட்கு ஓராயிரம் வாழ்த்துக் கூறினாள்.

பள்ளி ஆசிரியர் தம்முடைய முன்னோர்களைச் சிறப்பித்தற் பொருட்டு ஆற்ற வேண்டிய சில வைதிகச் சடங்குகளைப் புரியும் நாளும் நெருங்கிவிட்டது. சிற்றூர்ப் பள்ளிகளின் ஆசிரியர்கள் தனியாகவே இருந்து மாணவர் பலர்க்குக் கல்வி கற்பிப்பார்கள்; அவர்களிடமிருந்து திட்டமான ஊதியம் பெறுவதில்லை. சந்தர்ப்பம் நேரும்பொழுது மாணவர்களுடைய பெற்றோர்களின் உதவியையே நாடி நிற்பார்கள் அவ்வாசிரியர்கள்.

மாணவர்கள் தங்கள் காணிக்கைகளைக் கொணர்ந்தார்கள். சிலர் உயர்ந்த சாமான்களைக் கொண்டு வந்தனர். வேறு சிலர் காசுகள் வழங்கினர். தந்தையாரை இழந்த கோபாலன்—அந்தக் கைம்பெண்ணின் சேய்—என்ன செய்வான்! தங்களுடைய காணிக்கைகளைப் பற்றிப் பெருமிதத்துடன் உசாவிக்கொண் டிருக்கும் மாணவர்களோ, கோபாலனை நோக்கி இகழ்ச்சிக் குறு நகை பூத்தார்கள்.

அன்றிரவு கோபாலன் துயர்ப்பாரம் தாங்க முடியாமல் படுத் திருந்தான்; "ஆசிரியருக்கு ஏதாவது காணிக்கை அளிக்க வேண்டாவா?" என்று தன் அன்னையைக் கேட்டான். அந்த

ஏழைத் தாய் என் செய்வாள்! அளிப்பதற்கு அவளிடம் ஒன்றுமே இல்லை. அவள் தன் வாழ்நாள் முழுதும் எதைப் புரிந்துவந்தாளோ அதையே புரியத் தீர்மானித்தாள்; தான் வழிபடும் கோபாலனையே நம்பி, ஆசிரியருக்குக் காட்டிலுள்ள தன் மூத்தோனிடமிருந்து ஏதேனும் ஒரு காணிக்கையைப் பெறும்படி தன் மைந்தனுக்குக் கூறினாள்.

கோபாலன் மறுநாள் காட்டிலுள்ள சகோதரனை வழக்கம் போலச் சந்தித்தான்; சிறிது நேரம் விளையாடிய பிறகு தன் மனத்தை வருத்தும் துயரைத் தன் அண்ணனிடம் சொன்னான்; ஆசிரியருக்குத் தர வேண்டிய காணிக்கையைத் தரும்படி கெஞ்சினான்.

"தம்பி, நானோ, ஆடு மாடு மேய்க்கும் ஆயன் என்பது உனக்குத் தெரிந்ததே. என்னிடமோ, காசில்லை. இந்தச் சட்டியிலுள்ள பாலாடே நான் தரும் காணிக்கையாகும். இதை உன் ஆசிரியருக்கு அளிப்பாயாக," என்றான், அந்தக் காடுறை அண்ணன்.

ஆசிரியருக்குக் கொடுக்கக்கூடிய ஏதோ ஒன்று தனக்குக் கிடைத்ததே என்று கோபாலன் மிகவும் உவகை பூத்தான். காட்டுறை அண்ணனிடமிருந்து கிடைத்ததில் அவனுக்கு இன்னுமோர் உவகை பிறந்தது. ஆசிரியர் வீட்டிற்கு விரைந்தேகினான்; தம்தம் காணிக்கைகளை ஆசிரியருக்கு வழங்கும் மாணவர் குழாத்திற்குப் பின் ஆர்வம் மிக்க இதயத்துடன் நின்றான். அந்த ஏழைச் சிறுவன் கொணர்ந்த காணிக்கையை நோக்குவதற்குக்கூட அம் மாணவர்கள் நினைந்தார்களில்லை. மற்ற மாணவர்கள் அளித்த காணிக்கைகளோ, பல வகையாகும்.

மாணவர்கள் தன்னைப் புறக்கணித்தது அச்சிறுவன் உள்ளத்தைச் சாம்பும்படி செய்தது; கண்ணீர் மல்க அவன் நின்றான். நற்காலமாக ஆசிரியர் பார்வை அவன்மீது விழுந்தது. கோபாலன் கையினின்று அந்தப் பாலேட்டுச் சட்டியை ஆசிரியர் வாங்கினார். அதை ஒரு பெரிய கலத்தில் ஊற்றினார். யாவரும் வியப்புறுமாறு அந்தச் சட்டியில் மேலும் ஏடு நிரம்பலாயிற்று. இன்னும் பெரிய கலத்தில் ஏட்டை ஆசிரியர் பெய்தார்; மீண்டும் அந்தச் சட்டி நிரம்பிய வண்ணமாகவே நிகழ்ந்தது. அந்தச் சட்டியிலிருந்து ஊற்ற ஊற்ற அது நிரம்பித் ததும்பி நின்றது. ஒவ்வொருவரும் பெருவியப்பில் ஆழ்ந்துவிட்டனர். ஆசிரியர் அந்த ஏழைச் சிறு

வனைத் தழுவிக் கொண்டு, “இத்தகைய ஏட்டுச் சட்டி உனக்கு எப்படிக் கிடைத்தது?” என்று அவனை வினவினர். தன் மூத்தோனை காடுறை ஆயனைப் பற்றி அவன் எடுத்துரைத்தான்; அவன் தன் குரலுக்கு எப்படி விடையளிப்பானென்றும், எவ்வண்ணம் தனக்கு அவனோடு விளையாட்டில் பொழுது போகுமென்றும், அவன் எப்படி அந்த ஏட்டுச் சட்டியைத் தனக்கு நல்கினனென்றும் கோபாலன் மொழிந்தான்.

தம்மைக் காட்டிற்கு அழைத்துச் சென்று அவ்வுடன்பிறந்தோனைக் காட்ட வேண்டுமென்று ஆசிரியர் சிறுவனைக் கேட்டார்.

ஆசிரியரைக் காட்டிற்கு அழைத்துச் செல்லுவதில் கோபாலனுக்கு உண்டான மகிழ்ச்சிக்கோர் எல்லையே இல்லை.

கோபாலன் தன் அண்ணனை உரத்துக் கூவியழைத்தான்; யாதொரு குரலும் அப்பொழுது எழவில்லை. மீண்டும் மீண்டும் அவன் கூப்பிட்டான்; அப்பொழுதும் விடை ஒன்றுமில்லை. காடுறைவோனை வெளியிலே வரும்படி இறைஞ்சினன்; தன் ஆசிரியர் தன்னைப் பொய் பேசுபவன் என்று கருத இடமேற்படுமன்றோ? ஆனல், மிகவும் சேய்மையிலிருந்து வரும் ஒலி போல ஒரு குரல் கேட்டது.

“கோபாலா, உன் அன்னையின் அன்பும் நம்பிக்கையும் உன்னுடைய் ஆர்வமும் சிரத்தையும் என்னை உன்னிடம் ஈர்த்தன; ஆனல், உன் ஆசிரியர் என்னைக் காண நெடுங்காலம் காத்திருக்க வேண்டும் என்று அவருக்கு நீ மொழிவாயாக,” என்றது அக்குரல்.

இந்திய மாதர்

[இது 1900-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், 18-ஆம் நாள் காலிபோர்னியாவில் பாசதேனு என்னும் நகரத்து ஷேக்ஸ்பியர் கழகத்தில் நிகழ்த்தப் பட்ட சொற்பொழிவு.]

சுவாமி விவேகானந்தர் :—எனது சொற்பொழிவு தொடங்குமுன் சிலர் இந்து வேதாந்தத்தைப் பற்றிக் கேள்விகள் கேட்கவும், பிரசங்கத்திற்குப் பிறகு இந்தியாவைப் பற்றிப் பொதுவான வினுக்கள் வினவவும் விழைகின்றனர். ஆனல், எதைப் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவதென்பதே எனது முக்கிய இடர்ப்பாடு; இந்து வேதாந்தத்தைப்பற்றியோ, இந்திய இனம், அதன் சரித்திரம் இவற்றில் ஒன்று சம்பந்தமான எப்பொருள் பற்றியோ சொற்பொழிவாற்ற நான் மகிழ்ச்சியுடன் காத்திருக்கின்றேன். பெண் மணிகளே, பெருந்தகையோரே, நீங்கள் ஏதாவது ஒரு பொருளைக் குறிப்பிட்டால், நான் பெரிதும் மகிழ்வேன்.

வினு :—சுவாமி, அமெரிக்கராகிய நாங்கள் எதனையும் செயல் முறைக்குக் கொண்டுவருவதில் அதிக விழைவுடையவர்கள். இந்து வேதாந்தத்தில் நாங்கள் பின் பற்றுவதற்குரிய தனிச் சிறப்பு வாய்ந்த கொள்கை ஏதேனும் உண்டா? கிறித்தவ மதத்தைக் காட்டிலும் சிறந்ததாக விளங்கும் ஏதேனும் உண்டா என்பதை அறிய விழைகின்றேன்.

சுவாமி விவேகானந்தர் :—அதை முடிவு செய்வது எனக்கு மிகவும் கடினமான செயல். அப்பொறுப்பு உங்களுடையது. நீங்கள் கடைப்பிடிக்கக்கூடியது ஏதேனும் உண்டு என்று நினைத்தால், அதுவும் உங்களுக்கு நன்மை பயக்குமென்ருல், நீங்கள் அதை ஏற்றுப் பின்பற்றலாம். நான் மதப்பிரசாரகன் அல்லேன்; என் கருத்துகளை ஏற்குமாறு மக்களை மாற்றுவதற்காகத் திரிபவனும் அல்லேன். இதை நீங்கள் அறியவேண்டும். எல்லா நற்கருத்துகளும் நன்மை விளைப்பன, பெருமை சான்றன என்பதே என் கொள்கை. உங்கள் கருத்துகளிற்சில இந்திய மக்களுக்குப் பிடிக்கலாம்; அப்படியே எங்கள் கருத்துகளிற்சில இங்கே சிலருக்கு ஏற்றவையாய் இருக்கலாம்; ஆகவே, நற்கருத்துகள் உலகெங்கும் பரப்பப்பட வேண்டும்.

வினு :—உங்கள் தத்துவ விசாரத்தின் முடிவுகளை அறிய

விரும்புகிறோம். உங்கள் நாட்டுத் தத்துவ விசாரமும் சமயமும் உங்கள் நாட்டுப் பெண்டிரை எம் நாட்டவரினும் மேம்படச் செய்திருக்கின்றனவா ?

சுவாமி விவேகானந்தர் :—அது இன்னுமையை விளக்கக்கூடிய வினு என்பதை நீங்களே அறிவீர்கள். என் நாட்டுப் பெண்டிரையும் உம் நாட்டு மங்கையரையும்—இருவரையும் நான் சமமாகப் போற்றுகிறேன்.

வினு :—நல்லது ; பாரதப் பெண்மணிகள், அவர்களுடைய பழக்க வழக்கங்கள், கல்வி நிலை, குடும்பத்தில் அவர்களுக்குரிய பதவி—இவற்றைப்பற்றி நீங்கள் தயவு செய்து கூறுவீர்களா ?

சுவாமி விவேகானந்தர் : - ஓ ! யாதொரு தடங்கலுமின்றி அவற்றை நான் மிக்க மகிழ்ச்சியுடன் கூறுகிறேன். இன்றிரவு நீங்கள் அறிய விரும்புவது இந்திய மாதரைப்பற்றியே ; தத்துவ விசாரணை முதலியன அல்ல.

சொற்பொழிவு

முதன்முதல் நீங்கள் என்னிடம் மிகுந்த பொறுமை காட்ட வேண்டியிருக்கும் என்று கூறிக்கொண்டே என் சொற்பொழிவைத் தொடங்கவேண்டும் ; ஏனென்றால் ஒருபோதும் மணம் செய்து கொள்ளாமலிருக்கும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் கூட்டத்தினருள் ஒருவன் நான். ஆகையால்; தாய், தாரம், மனைவி, சகோதரி என்னும் எல்லா உறவு முறைகளிலும் மங்கையரைப் பற்றிய என் அறிவு, மற்ற மாந்தர்க்குள்ளது போலப் பூரணமானதாக இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. மற்றும், இந்தியா ஒரு நாடு மட்டுமன்று; ஒரு பரந்த கண்டம் என்பதையும், அது பலவேறு இனங்களைச் சார்ந்த மக்கள் வாழும் நாடாகும் என்பதையும் நினைவு படுத்திக்கொள்ள வேண்டும்; ஐரோப்பியத் தேசங்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று மிக அருகே அமைந்து கிடப்பதோடு, ஒன்றை ஒன்று ஒப்பனவாய்க் காணப்படுகின்றன. இந்தியா முழுவதிலும் வேறு வேறான எட்டு முக்கியமான மொழிகள் இருக்கின்றன என்று சொன்னுல், ஒருவாறு உங்களுக்கு அதனைப்பற்றிய பொதுவான கருத்து ஏற்படலாம். எட்டு மொழிகள், வெவ்வேறு மொழிகள் ; ஒரு மொழியின் பல வேறுபாடுகள் அல்ல அவை. ஒவ்வொன்றும் தனக்கே உரிய இலக்கியங்களைப் படைத்துள்ள மொழிகளே. இந்தி மொழி மட்டும் 100,000,000 மக்களால்

பேசப்படுகிறது ; வங்க மொழி பேசுவோர் சுமார் 60,000,000 பேர் உள்ளனர் ; இன்னும் பிறபிற. மறுபடியும், இரண்டு ஐரோப்பிய மொழிகள் தங்களுக்குள்ளே வேறுபடுவதைக் காட்டிலும் அதிகமாக, வடஇந்திய மொழிகள் நான்கும், தென்னிந்திய மொழிகளினின்றும் வேறுபட்டனவாம். அவை முழுமையும் வேறுபட்டவை; உங்கள் மொழி ஜப்பானிய மொழியைக் காட்டிலும் எவ்வளவு வேறுபட்டதோ, அவ்வளவிற்கு; நான் தென்னிந்தியாவிற்குப் போகும்போது, வடமொழி பேசத் தெரிந்த சிலரைச் சந்தித்தாலல்லாமல், அங்கே அவர்களுடன் ஆங்கிலத்திலேயே பேசவேண்டியதாகிறது என்பதை அறிந்தால் நீங்கள் வியப்புறுவீர்கள். மேலும், இந்தப் பல்வேறு இனங்களும், தங்களுக்குள்ளாகவே செயல் முறைகள் பழக்க வழக்கங்கள், உணவு, உடை, எண்ண முறைகள் ஆகியவற்றிலும் வேறுபடுகின்றன.

இன்னும், அங்கே சாதிப்பிரிவுகள் பல ; ஒவ்வொரு சாதியும் தனித்தனியான இனப்பிரிவு என நினைக்கும் வண்ணம் மாறிவிட்டது. ஒருவன் இந்தியாவிலேயே நெடுங்காலம் வாழ்வானுயின், புறத்தன்மைகளைக் கொண்டே, ஒருவன் என்ன சாதியைச் சேர்ந்தவன் என்று உரைக்க முடியும். மற்றும், சாதிகளுக்கிடையில் நடைமுறைகளும், பழக்க வழக்கங்களும் வேறுபட்டவை. சாதி ஒவ்வொன்றும் தனித்தனியாகப் பிரிந்து நிற்கிறது. விளங்கச் சொன்னுல், அவர்கள் சமூக வாழ்வில் சந்திப்பார்களே தவிர, ஒன்றுகூடி உண்ணவோ குடிக்கவோ மாட்டார்கள் ; கலப்பு மணம் செய்து கொள்ளமாட்டார்கள். இவ்விஷயங்களில் அவர்கள் தனித்தே இருப்பார்கள். அவர்கள் சந்திப்பார்கள் ; ஒருவருக்கொருவர் நண்பராய் இருப்பார்கள் ; அவ்வளவே. அத்துடன் தொடர்பு முடிந்துவிடும்.

நான் இடைவிடாது, இடம் விட்டு இடம் பயணம் செய்து கொண்டேயிருப்பதாலும், சமூகத்தின் பல்வேறு தரங்களிடையே பழகுவதாலும், பிறருக்குப் போதிப்பவன் என்ற என் நிலையாலும், தொழிலாலும், மற்ற எந்த ஒருவனைக்காட்டிலும் பெண்களைப்பற்றி அறிந்து கொள்வதற்கு எனக்கு அதிக வாய்ப்பு உண்டு என்பது உண்மையே. (வடஇந்தியாவிலும், ஆடவர் முன்னிலையிலே வாராத பெண்டிர் பல்வேறு இடங்களில் அவ்வொழுங்கை மீறி, எங்கள் போதனைகளைக் கேட்கவும், எங்களுடன் உரையாடவும் வந்திருக்கின்றனர்.) இருந்தாலும், இந்தியப் பெண்மணிகளைப்

பற்றிய அனைத்தையும் நான் அறிவேன் என்று கூறுவது மிகுந்த துணிகரமாகவே முடியும்.

வளர்ச்சி, முன்னேற்றம், உயர்வு, தாழ்வு இவை அனைத்தும் தனியாக அளவிடப்படுவனவல்ல. அவை ஒரு குறிப்பிட்ட அளவு நிலையையே குறிக்கும்; ஒவ்வொரு மனிதனையும் தரமறிந்துகொள்ள வேண்டுமென்றால், அந்த நிலையோடு அவன் அடைந்த வளர்ச்சியை ஒப்பிட்டுப் பார்த்துக் கூறவேண்டும். இதனை நீங்கள் சமுதாயங்களிடையே தெளிவாகக் காணலாம். ஒரு சமுதாயம் நல்லதெனநினைக்கும் ஒன்றை, மற்றொன்று அவ்வாறே நினைக்காமல் போகக் கூடும். உடன் பிறந்த சந்ததியாரிடையே திருமண முறை இந்நாட்டிலே தாராளமாக அனுமதிக்கப்படுவதொன்றாகும். ஆனால், இது இந்தியாவில் முறையற்றது; அதுமட்டுமன்று; இது மிகப் பயங்கரமான முறையற்ற திருமணங்களில் ஒன்றாக—தண்டனைக்குள்ளான குற்றங்களில் ஒன்றாகக் கருதப்படும். இந்நாட்டில் கைம் பெண் மணம் எல்லா முறையிலும் தக்கதே. ஆனால், இந்தியாவில் ஒரு பெண் இரு முறை மணப்பதென்பது மிகத் தாழ்ந்த இழிநிலையாகுமென்று உயர்ந்த சாதியார்களிடையே கருதப்படுகிறது. ஆகையால், நாம் வேறுபட்ட குறிக்கோள்களைக் கொண்டு ஒழுகுவதால், ஒரு நாட்டினரை மற்றொரு நாட்டு மக்களின் அளவை முறைகளைக் கொண்டு அளத்தல் நியாயமுமன்று, அனுபவ சாத்தியமுமன்று என்பதை அறிந்து கொள்ளலாம். அதனால், ஒரு நாடு தனக்கென வகுத்துக் கொண்ட இலட்சியம் என்ன என்பதை அறிந்து கொள்ளவேண்டும். பல சமுதாயங்களைப்பற்றிப் பேசும் போது, 'எல்லோருக்கும் ஏற்ற இலட்சியங்கள் ஒரே மாதிரியானவை; இனங்களனைத்திற்கும் ஒரே மாதிரியான இலட்சியங்கள் ஏற்றவை,' என்ற பொதுவான எண்ணத்தைக் கொண்டிருக்கிறோம். எனினும், நடைமுறைக்கு வரும்போது—பிறரை மதிப்பிட முன் வரும்போது—நமக்கு நல்லனவெல்லாம் பிறர்க்கும் நன்மை செய்வனவாக இருக்கவேண்டும் என்று எண்ணிவிடுகிறோம். 'நாம் செய்வதே தக்க செயல்; நாம் செய்யாதன யாவும் பிறரைப் பொறுத்த வரையில் நீதி தவறியனவே,' என்பதை நான் ஒரு குறையாகக் குறிப்பிடவில்லை; உண்மையை மனத்திற்பதியச் செய்யவே கூறுகிறேன். சான்றாக, சீன நாட்டு மங்கையர் தம் பாதங்களை இறுகப் பொதிந்து வைப்பதை மேலை நாட்டுப் பெண்டிர் குறை கூற நான் கேட்டிருக்கிறேன்; ஆனால், அவர்கள் பூணும்

கச்சுகளை, அவற்றைக்காட்டிலும் தங்கள் இனத்திற்குச் செய்யும் தீங்கை அவர்கள் ஒருபோதும் உணர்ந்தவர்களாகக் காணப்பட வில்லை. இது ஒரேயொரு சான்று. கச்சுகள் உடல் வடிவிற்குச் செய்யும் தீமையில், செய்து கொண்டே வரும் தீமையில், பதி ணையிரத்தில் ஒரு பங்குகூட, கால்களை இறுகக்கட்டும் செயல் செய்ய வில்லை என்பதை நீங்கள் அறிய வேண்டும். இறுகிய கச்சுகளால் ஒவ்வோர் அங்கமும் இடம் பிசகுகின்றது; முதுகெலும்பு பாம்பைப் போல வளைந்துவிடுகிறது. உடை தைக்க அளவெடுக்கும்போது இவ்வளைவுகளை நீங்கள் கவனிக்கலாம். இதை மொழிவது உங்களைக் குறை கூற அன்று; உங்கள் நிலையை உள்ளபடி விளக்கவே உரைக்கின்றேன். நீங்களே அனைவரினும் உயர்ந்தவர்கள் என்று எண்ணிக்கொண்டு பிற இன மாதர் முன் பேராச்சரியவசப்பட்டு நிற்கிறீர்கள். மற்றையோர் உங்கள் நடைமுறைகளையும் பழக்க வழக்கங்களையும் தழுவிக் கொள்ளாத நிலை, அவர்களும் உங்கள் முன் அவ்வாறே பேராச்சரிய வயப்பட்டு நிற்கின்றனர்என்பதையே விளக்குகிறது.

ஆகையால், இருபக்கங்களிலும் ஒருவரை ஒருவர் தவருக அறியும் நிலை நிலவுகிறது. ஆனால், அனைவர்க்கும் பொதுவான ஓர் அரங்கம் உள்ளது; ஒருவரையொருவர் அறிந்துகொள்ள ஒரு பொது நிலம் உள்ளது; நம் அனைவர்க்கும் பொதுவான ஒரு மனிதத் தன்மை உள்ளது; இதை நமது பணிக்கு ஆதாரமாக்க வேண்டும். இங்கும் அங்குமாக, பகுதிகளாக மட்டும் சிதறிக் கிடக் கும் அந்தப் பூரணமான முழு மனிதத் தன்மையை நாம் கண்டு பிடிக்க வேண்டும். எல்லாவற்றிலும் பூரணத்துவம் அடைந்த வனாய் இருக்கும் பாக்கியம் எந்த ஒருவனுக்கும் அமையவில்லை. நீங்கள் ஆற்றுவதற்கு உங்கட்கொரு பங்குண்டு; என் தாழ்மையான வழியிலே பணியாற்ற இன்னொடு பங்கு எனக்கு உண்டு; ஒரு சிறு பகுதியைச் செய்ய இங்கொருவர், அங்கொருவர் உண்டு; இக் கூறுகளெல்லாம் ஒன்ருகக் கூடுதலே பூரணத்துவம்—நிறை வுடைமை. தனி மனிதனுக்கு அமைந்தது போலவேதான், பல மக்க ளினங்களிலும் ஒவ்வோரினமும் செயலாற்ற வேண்டிய ஒரு பங்குண்டு; ஒவ்வோரினத்திற்கும் மனிதப் பண்பிலே வளர்க்க வேண்டிய ஒரு பகுதியுண்டு. நாமோ, இவையனைத்தையும் ஒருங்கே திரட்டிக்கொள்ள வேண்டும்; ஒருகால் நெடுந்தொலையில் நிற்கும் எதிர்காலத்திலே—உலகம் என்றுமே கனவு கண்டிராத ஏதோ

ஓரினம்—இங்குக் குறிப்பிட்ட பல்வேறு இனங்களின் அதியற்புத மான குண நிறைவுகள் எல்லாம் ஒன்ருகத் திரண்டு நிற்கப் பெறும் ஒரு புதிய இனம்—தோன்ற நேரும் போலும்! இதைச் சொல்வதைத் தவிர எவரைப் பற்றியும் விமரிசனம் செய்ய ஒன்று மில்லை எனக்கு. என் வாழ்க்கையில் நான் செய்த பிரயாணம் கொஞ்சநஞ்சமன்று. என் கண்களைத் திறந்தே வைத்திருந்தேன். நான் அதிகமாகச் சுற்றச் சுற்ற, என் வாய் மிகமிக அடங்கி விட்டது. நான் குறை கூறுவதற்கு ஒன்றுமே இல்லை.

இந்தியாவின் இலட்சியப் பெண்மணி தாய். அன்னையே முன்னறி தெய்வம்; அறுதியாக அறியப்படுவதும் அன்னையே. பெண்ணென்ற சொல் இந்தியனுக்கு எண்ணத்திலே தாய்மையையே நினைவூட்டுகிறது. ஆண்டவனையே அவர்கள் அன்னை என்று வணங்குகிருர்கள். குழந்தைப் பருவத்திலே சிறு பிள்ளைகளாய் இருக்கும்போது நாளும் விடியற்காலத்தில் நாங்கள் சிறு கிண்ணத்தில் நீரைக் கொண்டு சென்று தாய் முன் வைக்க வேண்டும். அவள் அதிலே தன் காற்பெருவிரலைத் தோய்ப்பாள். அந்நீரை நாங்கள் பருகுவோம்.

மேலை நாட்டிலோ, பெண்ணென்ருல் மனைவி. பெண்மை என்னும் இலட்சியம் அங்கே மனைவியாகக் குவிந்துள்ளது. இந்தியாவில் பாமரன் கருத்துப்படி, பெண்மையின் முழுச் சத்தியும் தாய்மையில் ஒரு முகப்பட்டுள்ளது. மேலை நாட்டிலே மனைவி வீட்டை ஆள்கிருள். இந்திய குடும்பத்திலே வீட்டை ஆள்பவள் தாய். மேலை நாட்டுக் குடும்பத்திலே ஒரு தாய் நுழைந்தால், அவள் மனைவிக்கு அடங்கியே இருக்க வேண்டும். வீடு மனைவிக்கே உரியது. தாய் எங்கள் அகங்களில் எப்போதும் வாழ்வாள். மனைவி அவளுக்கு அடங்கியே, நடக்க வேண்டும். இங்கே கருத்து வேற்றுமைகளைக் கவனித்தீர்களா?

நான் இப்போது சில விஷயங்களை ஒப்பிடுவதற்காக மட்டும் கூறுகிறேன்; ஏனென்ருல், நாம் இரு பக்கங்களையும் ஒப்பிடும் பொருட்டு உண்மைகளைக் கூறுகின்றேன்.

"மனைவி என்ற இடத்தில் இந்தியப் பெண்மணி வகிக்கும் நிலை என்ன?" என்று நீங்கள் கேட்டால், "அமெரிக்கக் குடும்பத்தில் அன்னைக்கு அளிக்கப்படும் நிலை யாதோ?" என்று இந்தியன் வினவுவான். இன்னும், என்னை ஈன்றெடுத்துப் புகழுக்கெல்லாம் பாத்திரமான அன்னையின் நிலை என்ன? ஒன்பது

மாதங்கள் என்னைத் தன் கருவிலே காத்த அவள் நிலை யாது? தேவைப்பட்டால் இருபது தடவையானாலும் எனக்குத் தன் உயிரைத் தரக்கூடிய அவள் எங்கே? நான் எவ்வளவு தீயோனானாலும், எவ்வளவு இழிந்தவனானாலும், தன் அன்பு என்றும் மாயாத தாயின் நிலை எது? ஒரு சிறிது யான் அவளைத் தவறாக நடத்தியதும் உடனே மணமுறிவு வேண்டி நீதி மன்றம் செல்லும் மனைவியோடு ஒப்பிடுங்கால் அத்தாய் எங்கே? ஓ! அமெரிக்க மங்கையரே,அவள் எங்கே? எங்கே? நான் அவளை உங்கள் நாட்டில் காண இயலாது. தாய்க்கு முதலிடம் தரும் சேயினை இங்கு நான் இதுவரை காணவில்லை. நாங்கள் இறக்கினும் எங்கள் மனைவியரும் மக்களும் அவளுடைய இடத்தை அடைய வேண்டுமென்று விழைய மாட்டோம். எங்கள் தாய்! அவளுக்கு முன்னால் நாங்கள் இறப்பதாயின், அவள் மடியிலே மீண்டும் தலைவைத்தே இறக்க ஆசைப்படுவோம்! அவள் எங்கே? பெண்ணென்பது தூல உடலோடு மட்டும் உறவு படுத்தக்கூடிய ஒரு பெயர்தானா? ஆ! ஊனனோடு ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும் என்பதைப்போன்ற இலட்சியங்களை எல்லாம் கண்டு இந்திய நெஞ்சு நடுங்குகிறது! இல்லை! இல்லை! மங்கையே, மெய்யொடு தொடர்புடைய எதனோடும் உன்னைத் தொடர்புபடுத்துதல் கூடாது. என்றென்றைக்கும் அப்பெயர் புனிதமானதாக்கப்பட்டுவிட்டது. காமம் என்பதே என்றும் அணுகாத, தீய நினைவுகளே என்றும் நெருங்காத ஒரு பெயர், தாய் என்னும் ஒன்றைத் தவிர எது? அதுதான் இந்தியாவின் இலட்சியம்.

உங்களில் கத்தோலிக்கத் திருச்சபையைச் சார்ந்த பிச்சையேற்கும் சந்நியாசிகள் இருக்கிறார்கள் அல்லவா? எங்கள் நாட்டிலும் அதுபோன்ற ஓர் ஒழுக்க முறையைப் பின்பற்றும் ஒரு பரம்பரை இருக்கிறது; நான் அதைச் சார்ந்தவன். விளங்கக் கூறவேண்டுமானால், ஆடை முதலியன அதிகமின்றி, வீடுதோறும் சென்று பிச்சை ஏற்று, அதனால் உயிர் வாழ்ந்து, மக்கள் விரும்பும் போது உபதேசித்து, கிடைத்த இடத்தில் உறங்குவது போன்ற ஒரு நெறியை நாங்கள் பின்பற்ற வேண்டும். இத்துறையைப் பின்பற்றுவோர் ஒவ்வொரு பெண்மணியையும் "தாயே!" என்றுதான் அழைக்க வேண்டும். ஒவ்வொரு பெண்ணையும் சிறுமியையுங்கூட—'அம்மா' என்றுதான் அழைக்க வேண்டும். இதுதான் என் நாட்டு வழக்கம். மேற்கு நாட்டிற்கு வந்தும் அதே பழக்கம் நிலை

பெற்ற காரணத்தால், பெண்களைப் பார்த்து, "ஆம், தாயே!" என்றபோது அவர்கள் திடுக்கிட்டார்கள். அவர்கள் ஏன் அப்படி அஞ்சி நடுங்க வேண்டுமென்பது எனக்கு விளங்கவில்லை. பிறகே காரணத்தைக் கண்டறிந்தேன். 'தாய்' என்றால் வயது முதிர்ந் தவள் என்று அவர்கள் எண்ணுவதே அதற்குக் காரணம். மிகச் சிறந்ததான, தன்னலங்கருதாத, துயர் எலாம் பொறுக்கும், என்றும் மன்னிக்கும் தாய்மையே இந்தியப் பெண்ணினத்தின் இலட்சியம். மனைவி பின்னே நிழல் போன்று நடந்துவருவாள். மனைவி தாயின் வாழ்க்கையை அடியொற்றி நடக்க வேண்டும். அதுவே அவள் கடமை. ஆனால் தாயே அன்பின் உருவம்; அன்னையே வீட்டை ஆள்பவள்; வீட்டிற்குத் தலைவியும் அவளே. குழந்தை குறும்பு செய்தால் அதைத் தண்டிப்பவன் தந்தை; எப் போதும் குழந்தைக்கும் தந்தைக்கும் இடையே புகுந்து அணைப் பவள் தாய். இது இந்தியாவில் உள்ள நிலை. இங்கே இதற்கு நேர் மாறாய் இருப்பதை நீங்கள் காண்பீர்கள். குழந்தையைக் கடிந்து கொள்வது தாயின் தொழில்; பாவம்! அப்பாவியான தந்தை குறுக்கிட்டுச் சமாதானம் செய்வான். இலட்சியங்கள் எப்படி வேறுபடுகின்றன, கவனித்தீர்களா? நான் குறை கூறுவதாக எண்ணக்கூடாது. நீங்கள் செய்வது முற்றிலும் நன்றே. ஆனால், எங்கள் வழியோ, பல ஊழிகளாய்ப் போதிக்கப்பட்டு வழி வழியாக வருவது. பிள்ளையைச் சபிக்கும் தாயைப்பற்றி நீங்கள் கேள்விப் பட இயலாது. அவள் சுபாவம் எப்பொழுதும் மன்னிக்கும் சுபாவமே! எப்பொழுதும் மன்னிப்பே! "பரலோகத்தில் உள்ள எங்கள் பிதாவே!" என்று சொல்வதற்கு மாறாக நாங்கள் எப்போதும் "தாயே!" என்றுதான் கூறுவோம். அக்கருத்தும் அச்சொல்லும் இந்தியர் நெஞ்சிலே என்றும் எல்லையற்ற அன்புடன் தொடர்பு கொண்டிருக்கின்றன. நிலையற்ற நம் உலகிலே அன்னை யின் அன்பே ஆண்டவன் அன்பிற்கு அண்மையிலே அமைந்து கிடப்பது. "அம்மா, தாயே, கருணை காட்டுக; நான் தீயோன்; பல குழந்தைகள் தீயவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனால் தீய தாய் ஒருபோதும் இருந்ததில்லை," என்றார் மகான் இராமப் பிரசாதர். இதுதான் இந்தியாவின் நிலை.

அன்னையின் சொந்த மகள் மணந்து புக்ககம் சென்றதுபோல, மகனுடைய மனைவி, மகள் போல வந்து சேர்கிறாள். எனவே, அவளுடைய பிள்ளை மணந்து மற்றொரு மகளைக் கொண்டுவந்தான்.

ஆகையால், அவள் அரசிகளுக்குப் பேரரசியாய் விளங்கும் தாயின் ஆட்சியிலே அடங்கி இருக்கவேண்டுபவளே. நான் துறவி; என்றும் மணம் செய்து கொள்ளாதவன்; ஒரு நாளும் மணம் புரிந்து கொள்ளாத ஒரு ஞானப் பரம்பரையைச் சேர்ந்தவன்; என்றுலும்' நான் மணம் புரிந்துகொண்டிருந்தேனுயின், என் மனேவி என் அன்னேயை அதிருப்திப்படுத்தத் துணிந்திருப்பின், நான் அவள் மீது அருவருப்பைக் கொள்வேன். ஏன்? நான் என் தாயை வணங்கவில்லேயா? அவளுடைய மருமகள் அவளே ஏன் வழிபட லாகாது? யான் வழிபடும் ஒருவரை அவள் வழிபட்டால் என்ன? என் தலேமேல் ஏறிக்கொண்டு என் தாயை அதிகாரம் செய்ய அவள் யார்? அவள் பொறுக்கவேண்டும். பெண்ணிடம் அமைந்துள்ள பெண்மையைப் பூர்த்தியாக்கும் ஒன்று, அதுதான் தாய்மை—அப்பயனே அவளது பெண்மை அடையுமட்டும், அவள் பொறுக்க வேண்டும். தாயாகும் வரையில் பொறுக்கத்தான் வேண்டும்; பிறகு கிடைக்கும் அவளுக்கு அதே உரிமை. தாய் ஆதலே இந்தியன் எண்ணுகிறபடி பெண்ணின் பெரிய இலட்சியம். ஆனுல், என்ன வேற்றுமை! என்ன வேற்றுமை!! நான் பிறக்க வேண்டுமென்று என் அன்னேயும் பிதாவும் ஆண்டுகள் கணக்காக விரதங்கள், வழிபாடுகள் செய்தார்கள். ஒவ்வொரு குழந்தை பிறப்பதற்கு முன்பும் பெற்ருேர்கள் அப்படியே பிரார்த்தனே செய்வார்கள். 'ஆரியன் யாவன்?' என்று விதி வகுக்கும் எங்கள் மனு—அறம் வகுத்த அண்ணல், "பிரார்த்தனேயின் பலனுகப் பிறந்தவன் எவனே,அவனே ஆரியன்,"என்று கூறுகிருர். அந்த அறம் வகுத்த ஆசாரியர் கருத்துப்படி, பிரார்த்தனேயின் பலனுகப் பிறவாத குழந்தை ஒவ்வொன்றும் முறைகெடத் தோன்றியதே. குழந்தைக்காகத் தவம் கிடக்க வேண்டும். சாபக் கேடுகளுடன் பிறக்கும் குழந்தைகள் மூலம், தடுக்க முடியாத நிலேமையில் கவனம் தவறிய ஒருகணத்தில் உலகில் தவறிப் பிறந்து விடும் குழந்தைகளின சந்ததிகள் மூலம், நாம் என்ன எதிர் பார்க்க முடியும்? அமெரிக்க நாட்டு அன்னேமார்களே, சிந்தித்துப் பாருங்கள் இதை! உங்கள் உள்ளத்திற்குள்ளே ஊன்றிப் பார்த்துச் சொல்லுங்கள்; நீங்கள் பெண்மணிகளாய் விளங்க விரும்புகிறீர்களா? இனம், நாடு தேசீயப் பெருமை என்னும் பொய்யான ஓர் பாவனே—இவ்வேறுபாடுகள் வேண்டுவ தில்லே. துயரும் துன்பமும் மண்டியிருக்கும் இவ்வுலகில் நிலே

பேறில்லா நம் வாழ்வில் பெருமிதம் கொள்ள எவர்தாம் துணிவார்? கடவுளின் எல்லையற்ற சத்தியின் முன் நாம் எம்மாத்திரம்? இன்று நான் உங்களைக் கேட்கும் கேள்விகள் இவை:—"பிறக்கப் போகும் குழந்தைகளுக்காக நீங்கள் எல்லாம் பிரார்த்தனை செய்கிறீர்களா? நீங்கள் தாய்மைப் பேறு அடைவதற்காக நன்றி செலுத்து கிறீர்களா, இல்லையா? தாய்மையினால் நீங்கள் புனிதத்தன்மை அடைவதாக எண்ணுகிறீர்களா, இல்லையா?" உங்கள் நெஞ்சை நோக்கி இவற்றை வினவுங்கள். 'இல்லை' என்று நீங்கள் சொல் வீர்களாயின், உங்கள் திருமணம் ஒரு பொய்யே; உங்கள் பெண்மையும் பொய்யானதே; உங்கள் கல்வி நலனெல்லாம் மூட நம்பிக்கையே; வழிபாட்டின் பயனால் அன்றிப் பிறக்கும் உங்கள் குழந்தைகள், சமூகத்திற்கே ஒரு சாபக்கேடாக மாறும். வேறு பட்ட இலட்சியங்கள் இப்போது நம்முன் தோன்றுவதைக் காணுங் கள். தாய்மையிலிருந்தே பெரும்பொறுப்பு ஏற்படுகிறது. அது தான் அடிப்படை; அங்கிருந்து முன்னேறுங்கள். நன்று; தாயை எதற்காக அப்படிப் போற்றி வழிபட வேண்டும்? ஏனென்றால், பிறக்குமுன் ஊட்டும் சத்தியே, குழந்தை நன்மையோ தீமையோ புரியும் ஆற்றல் அமையத் தூண்டுகின்றது என்று நம் நூல்கள் கூறுகின்றன. நூறுயிரம் கல்லூரிகளுக்குச் செல்லுங்கள்; இலட்சக் கணக்கான புத்தகங்களைப் படியுங்கள்; உலகிலுள்ள கற்றறிந்த சான்றோரையெல்லாம் சார்ந்திருங்கள்; இவை எல்லாவற்றிலும் மேலானது, பிறக்கும் போதே நல்லவனாகும் முத்திரையோடு பிறப்பதே. நன்மையோ தீமையோ செய்வதற்கே பிறந்துள்ளீர்கள். குழந்தை பிறக்கும் போதே தெய்வத் தன்மையோ அசுரத் தன் மையோ வாய்ந்துள்ளது. அப்படித்தான் நூல்கள் அறுதியிட் டிருக்கின்றன. கல்வியும் பிறவும் பின்பே இடம் பெறுகின்றன. அவை எல்லாமுங்கூட அற்பமேயாம். நீங்கள் பிறந்த நிலையின் படியே உங்கள் வாழ்வும் அமையும். உடல் நலம் குன்றிப் பிறந் திருந்தால், எத்தனை மருந்துக் களஞ்சியங்களை முற்றும் விழுங்கி னாலும் நீங்கள் வாழ்நாள் முழுவதும் நோயற்று இருக்க முடியுமா? நோயுற்று இரத்தம் முழுவதும் நஞ்சாக நிறைந்த பலவீனமான பெற்றோர்களுக்கு எத்தனை நல்ல ஆரோக்கியமான உயிர்கள் பிறந் திருக்கின்றன? எத்தனை என்கிறேன். ஒன்றேனும் இல்லை; அறவே இல்லை. நன்மையோ தீமையோ செய்யும் ஆற்றலுடனேயே நாம் பிறக்கிறோம்; தெய்வத் தன்மையோடோ, அசுரத் தன்மை

யோடோ தோன்றுகிறோம். கல்வியோ, பிறவோ, இதனை நோக்க மிகமிக அற்பமானவைகளே.

"பிறவிக்கும் முன்னிலையை நல்வழிப்படுத்துக," என்று நம் நூல்கள் சாற்றுகின்றன. தாய் ஏன் போற்றப்பட வேண்டும்? அவள் தன்னைத் தூய்மையாக்கிக்கொண்டதால். தூய்மைக்கு ஒரு வடிவமாகத் தன்னை ஆக்கிக்கொள்ளும்பொருட்டுச் சில சமயங்களில் அவள் கடுந்தவங்களையும் பயின்று வந்தனள். ஏனென்றால், இந்தியாவில் எந்தப் பெண்மணியும் தன் உடலை எவனுக்காவது அர்ப்பணிக்க வேண்டுமென்று நினைக்கவும் மாட்டாள். தெரியுமா? அது அவளுக்கே சொந்தமானது. ஆங்கில அரசாங்கத்தார் கணவரின் போகானுபவ உரிமைகளைக் காப்பதற்காக இப்பொழுது ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றனர். ஆனால், ஓரிந்தியனும் அதைப் பயன்படுத்திக்கொள்ளவே மாட்டான். ஓராடவன் தன் மனைவியுடன் உடலுறவு கொள்ளும் போது, மனைவி சந்தர்ப்பங்களைத் தானே அடக்கியாள்கிறாள். அவள் செய்யும் பிரார்த்தனை எத்தனை! கோரிக்கைகள் எத்தனை! ஏனென்றால் குழந்தையைப் பிறக்கச் செய்வது முழுமுதற் கடவுளின் புனிதச்சின்னமே யன்றோ? கணவன் மனைவியரிடையே அது ஒரு மகத்தான பிரார்த்தனை; நன்மைக்காகட்டும், தீமைக்காகட்டும், மாபெருஞ்சத்தியுடைய இன்னோர் ஆன்மாவை உலகில் தோற்றுவிக்கும் ஒரு பிரார்த்தனை. அது ஒரு கேலிக்கூத்தா? அது ஒரு சாதாரண நரம்புப் பசித் தணிப்பா? உடலின் விலங்கு இச்சையின் பூர்த்திதானா? இல்லை; ஆயிரம் தரம் கூறுகிறேன். இல்லவே இல்லை என்பான் இந்து.

அதன் தொடர்ச்சியாக மற்றொரு கருத்தும் தோன்றுகிறது. எல்லாத் துயரமும் உற்று எல்லாவற்றையும் பொறுக்கும் தாயன்பே இலட்சியம் எனும் கருத்தோடே நாம் தொடங்கினோம். தாய்க்குச் செய்யும் வழிபாட்டிற்குரிய மூலம் அங்கேதான் அடங்கி இருக்கிறது. என்னை இந்த உலகிற்குக்கொண்டுவந்த ஞானி அவள். நான் பிறப்பேன் என்று அவள் தன் உடலைச் சுத்தமாக வைத்துக்கொண்டாள். மனம், உணவு, உடைகள், கற்பனைகள் எல்லாவற்றையும் பல ஆண்டுக் கணக்காகத் தூய்மையாக. வைத்துக்கொண்டாள். அதைச் செய்ததால் அவள் வழிபாட்டிற்குப் பாத்திரமாகி விடுகிறாள். அதனைத் தொடர்ந்து வருவது என்ன? தாய்மையுடன் பிணைப்புறுவது மனைவி நிலை.

மேலைநாட்டவர்களாகிய நீங்கள், தனி வாழ்க்கையைக் கவனிப்ப

வர்கள். இதை நான் செய்ய விழையும் காரணம் இதை நான் விரும்புவதே. நான் ஒவ்வொருவரையும் கையால் தள்ளிவிடுவேன்; ஏன்? அது என் விருப்பம். என் சொந்தத் திருத்திக்காக நான் இந்த மங்கையை மணக்கிறேன்; ஏன்? நான் இவளை விரும்பு வதால். இப்பெண் என்னை மணக்கிருள். ஏன்? இவள் என்னை விரும்புவதால். இந்த எல்லையற்ற உலகம் முழுவதிலும் இருப்பவர் கள் நானும் இவளுமே. நான் இவளை மணக்க, இவள் என்னை மணக்கிருள்; வேறெவருக்குமே துன்பமில்லை; வேறெவருக்குமே பொறுப்பு இல்லை; உங்கள் *'ஜான்'களும் [1]'ஜேன்'களும் வேண்டுமானுல் காடுகளுக்குச் சென்று தங்கள் வாழ்க்கையை நடத் திக்கொள்ளட்டும்; ஆனுல், அவர்கள் சமூகத்தில் வாழ்வதாயின், அவர்களுடைய திருமணம் என்பது நமக்கு மகத்தான நன்மை யாகவோ தீமையாகவோதான் முடியும். அவர்களுடைய குழந்தை கள், தீவைத்தல், கொலை, கொள்ளை, திருடு, குடி இவற்றைப் பயின்ற பயங்கரமான, இழிந்த, உண்மையான அசுரர்களாகவும் பரிணமிக்கலாம்.

ஆகையால், இந்திய சமுதாய ஒழுங்கின் அடிப்படைதான் என்ன? அதுதான் சாதி முறை. நான் என் சாதிக்காகப் பிறந் தேன்; நான் என் சாதிக்காக வாழ்வேன். ('நான்' என்ருல் என்னைக் குறிக்கவில்லை. நாங்கள் துறவு நிலையைச் சார்ந்துவிட்ட தால் நாங்கள் அதிலிருந்து விலகிவிடுகிருேம்.) சமூகத்தில் இல் லறத்தில் வாழ்கிறவர்களையே நான் குறிப்பிடுகின்றேன். எந்தச் சாதியிற் பிறந்தாலும் அந்தச் சாதியின் ஒழுக்கம் குன்ருமல் வாழ வேண்டும், வாழ்க்கை முழுவதும். வேறு விதமாகக் கூற வேண்டு மானுல், உங்கள் நாட்டு இன்றைய மொழி வழக்கப்படி உரைக் கின், மேலைநாட்டான் ஒவ்வொருவனும் தனக்காகவே பிறக்கிருன். ஆனுல், இந்தியனே, சமூகத்திற்காக—முழுவதும் சமூகத்திற் காகவே—பிறக்கிருன். 'நீ உவக்கும் பெண்ணைத் தேடி நீ மணந்துகொள்ளலாம்' என்று ஆடவனுக்கும், 'நீ விரும்பும் எந்த ஆடவனையேனும் மணந்துகொள்ளலாம்' என்று பெண்ணுக் கும் உரிமை தருகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். என்ன நேர்கிறது? அவன் காதல் கொள்வான்; காதலியின் தந்தை ஒரு வேளை பைத்தியமாகவோ எலும்புருக்கியாகவோ இருக்கலாம். முகத்

*ஜான் — ஆடவன் பெயர்; [1]ஜேன்—பெண்ணின் பெயர்.

தைக் கண்டதும் காதல் கொண்ட மங்கையின் மாமனர் பெருங் குடியராய் இருக்கலாமென்று வைத்துக்கொள்ளுங்கள்; அற நூல் கள் இப்போது கூறுவதென்ன? இது போன்ற மணங்களெல் லாம் முறையற்றவை என்று சட்டம் திட்டம் வகுத்துவிடுகிறது. குடிகாரர், உருக்குநோய் வாய்ப்பட்டவர்கள், பைத்தியங்கள் முத லியவர்களின் பிள்ளைகளுக்குக் கலியாணமே கூடாது. உடற்குறை பாடுகள் உள்ளவர்கள், கூனர்கள், காமுகர்கள், அறிவிலிகள் முதலியவர்களுக்கும் மணங்கூடாது; மேற்கூறிய ஒருவருக்கும் திண்ணமாகவே அது கூடாது என்று சட்டம் மொழிகின்றது.

நாளை மகமதியன் அரேபியாவிலிருந்து வருகிறுன். அவனுக் குத் தனி அரேபியச் சட்டமுண்டு. ஆகையால், அரேபியப் பாலை வனச் சட்டம் நம்மேல் திணிக்கப்படுகிறது. ஆங்கிலேயன் ஆங்கி லச் சட்டத்துடன் வருகிருன். அவன் தன் சட்டத்தைத் தன்னுல் இயலும்வரை நம் தலைமேல் சுமத்தப்பார்க்கிருன். நாம் வெல்லப் பட்டோம். "நாளைக்கு உன் சகோதரியை நான் மணக்கிறேன்," என்று அவன் சொல்கிருன். நாம் என்ன செய்ய முடியும்? "நூறு தலைமுறைகள் இடைவெளி இருந்தாலும் சரி, ஒரே குடும் பத்தினரின் சந்ததியார் தமக்குள்ளாகக் கொடுப்பனை கொள்வினை கள் செய்யக் கூடாது," என்று எங்கள் சட்டம் சொல்கிறது. அத் திருமணம் ஒழுங்கற்றது; அதனுல், அச்சந்ததி நாளடைவில் தாழ்நிலை அடையும்; அன்றேல், அவ்வினமே அற்றுப்போகும். ஆகையால், அத்திருமணம் நடக்கக்கூடாது! அவ்வளவுதான். ஆகையால், என் திருமண விஷயத்தில் தலையிட எனக்கு உரிமை இல்லை; என் சகோதரிக்கும் இல்லை. இவற்றை எல்லாம் தீர்மா னிப்பது சாதி முறையே. சில சமயங்களில் மிக்க இளம்பருவத்தி லேயே எங்கள் மணங்கள் நடைபெற்றுவிடுகின்றன. எதற்காக? பிள்ளை, பெண்களின் சம்பந்தமில்லாமல் திருமணம் எப்படியாவது நடந்துவிட வேண்டும் என்பது கருத்தாயின், இக்காதலைத் தம் கருத்திலே வளர்க்குமுன்பே, இளம்பருவத்திலேயே மணமுடித்து விடுதல் மேலானது என்று சாதி நீதி மொழிகின்றது. இப்படி யிருந்தும், ஆடவரையும் பெண்டிரையும் தனித்தனியாகப் பருவம் அடையும் வரையில் விட்டு வைத்தால் பிள்ளை வேறொரு பெண்ணை நேசிக்கலாம்; பெண்ணும் அதுபோல் வேறொரு பிள்ளையைக் காமுறலாம்; பின்னுல் ஏதேனும் கெடுதல் ஏற்படலாம். ஆகை யால், அவற்றை எல்லாம் முளையிலேயே கிள்ளியெறியச் சாற்று

கின்றது சாதி. என் சகோதரி அங்கவீனமுள்ளவளாயினும், அழகியாயினும், குரூபியாயினும் எனக்கு என்ன? அவள் என் சகோதரியென்பதே போதும் எனக்கு. இவன் என் சகோதரன்; எனக்குத் தெரியவேண்டுவது அவ்வளவே. ஆகையால், அவர்கள் ஒருவர்க்கொருவர் நேசித்துக்கொள்வார்கள். நீங்கள் ஒரு முறை கூறலாம். "அடடா, அவர்கள் மிகுதியான இன்பத்தை இழந்து விடுகிறார்களே!—ஓர் ஆண், ஒரு பெண்ணைக் காதலிக்கையில், ஒரு பெண் ஓர் ஆணை நேசிப்பதில் உள்ள அந்த அற்புத உணர்ச்சிகளை அவர்கள் நுகர்வதெங்கே? இத்திருமணமோ, ஏதோ பழக்கப்பட்டதைப் போன்ற ஒன்று; ஒருவரை ஒருவர் சகோதரி சகோதரர்களைப்போல நேசித்துக்கொள்வது; இதை ஏதோ ஒரு கடமையைப்போலக் கொள்வது," என்று நீங்கள் கூறலாம். கவலை யில்லை. அவ்வாறேயாகுக. ஆனால், இந்து என்ன சொல்கிறான்? நாங்கள் சமூகநல வாதிகள். ஓர் ஆண் அல்லது பெண்ணின் மிக உயர்ந்த தனியின்பத்திற்காக மற்ற நூற்றுக் கணக்கானவர் களின்மேல் துன்பச் சுமையைச் சுமத்த நாங்கள் விரும்பமாட் டோம்.

அவர்கள் திருமணமாகித் தம்பதிகளாகிவிட்டார்கள். மனைவி கணவனோடு வீட்டிற்கு வருகிறாள். அதை இரண்டாம் மணம் என்று சொல்லலாம். இளமை மணம் முதல் மணமாகக் கருதப் படுகிறது. பெண் கணவனைப் பிரிந்து தன் பெற்றோர்களுடனும் மற்ற மங்கையருடனும் வளர்வாள். இருவரும் பருவம் அடைந்த வுடன், மற்றொரு தனிச்சடங்கு நடைபெறும். அதுவே இரண்டாம் திருமணம் (சாந்தி முகூர்த்தம்). அன்று தொடங்கி அவர்கள் சேர்ந்து வாழத் தொடங்குகிறார்கள்; ஆனால், பிள்ளையின் பெற் றோர்களுடன் அதே வீட்டிலேயே வாழ்கிறார்கள். அவள் தாயான வுடன் தன் முறைப்படி வீட்டிலே அரசியாகிறாள்.

இனி, இந்தியாவில் மற்றொரு சிறப்பான வழக்கமும் உண்டு. முதல் இரண்டுமூன்று உயர்சாதிகளினிடையே கைம்பெண்களுக்கு மறுமணம் அனுமதிக்கப்படுவதில்லை என்று சற்று முன்பே கூறி னேன். அவர்கள் அதை விரும்பினாலும், மணக்கமுடியாது. இது பலருக்குத் துன்பமானது என்பது உண்மைதான். எல்லாக் கைம் பெண்களும் மறுமணமின்மையைப் பெரிதும் விரும்பமாட்டார்கள் என்பதை மறுக்க இயலாது. ஏனென்றால், திருமணமின்மை என் பது அவர்களுக்குப் பிரம்மசரிய வாழ்க்கையை அமைத்துவிடும்.

விளங்கக்கூற வேண்டுமானால், ஒரு மாணவன் மீனும் ஊனும் உண்ணக் கூடாது; மதுவருந்தக் கூடாது; வெள்ளுடை அன்றிப் பிறவுடைகளை அணியக்கூடாது. இவைபோன்ற கட்டுத் திட்டங்கள் கணக்கற்றவை. எங்கள் நாடு இடையறாத தவம் செய்து கொண்டிருக்கும் துறவிகள் நாடு; நாங்கள் அதை விரும்புகிறோம். அது மட்டுமன்று; பாருங்கள், மங்கையர் என்றுமே மது அருந்து வதுமில்லை; ஊனைப் புசிப்பதுமில்லை. நாங்கள் பிரம்மசரிய வாழ்க் கையைப் பின்பற்றிய பொழுது இது மாணவர்களுக்குப் பெருந் துன்பமாய் இருந்தது; ஆனால், மாணவிகளுக்கு அப்படியன்று. 'ஊன் புசித்தல்' என்ற எண்ணமே இழிவானது என்பதை எங் கள் மங்கையர்கள் உணர்வார்கள். சில சாதியார்களில், சில சமயங்களில் ஆடவர்கள் விரும்பினால் புலால் உண்பார்கள்; ஆனால், பெண்கள் ஒரு போதும் உண்பதில்லை. இப்படியெல்லாம் இருந்தும், மறுமணம் செய்துகொள்ள அனுமதியாதிருத்தல் பலருக்குத் துன்பமாகவே இருக்கும். இதைப்பற்றி எனக்கு ஐய மில்லை.

நாம் மீண்டும் நம் விஷயத்திற்கு வருவோம்: இந்தியர் தீவிர சமூகநல வாதிகள். புள்ளி விவரங்களைப் பார்த்தால், ஒவ்வொரு நாட்டிலும் உயர்சாதிகளிடையே ஆண்களைக் காட்டிலும் பெண் களின் எண்ணிக்கையே மிகுதியாயிருப்பதைக் கவனிக்கலாம். ஏன்? உயர்சாதிகளினிடையே, தலைமுறை தலைமுறையாகப் பெண்கள் பாடு படாது சுக வாழ்க்கை அனுபவிப்பதாலேதான். "அல்லி மலர்கள் உழைப்பதும் இல்லை; நூற்பதுமில்லை; எனினும் முழுச் சிறப்போடு ஒளிரும் சாலமன் என்பாரும் அவற்றில் ஒன் றிற்கு இணையாக ஆடை அணிந்தவர் ஆகார்." பாவம்! ஆண் பிள்ளைகள் புற்றீசல் போல மடிகிறார்கள். பெண்ணுக்கு ஆயுள் மிகுதியென்று இந்தியர்கள் சொல்வார்கள். புள்ளி விவரங் களைப் பாருங்கள். பெண்கள் எண்ணிக்கையில் ஆண்களை விஞ்சி நிற்பார்கள். சிறிது காலத்திற்குள்ளேயே இம்மாறுதல் நிகழ்கின்றது. இப்பொழுது பெண்களும் ஆண்களைப் போலப் பாடு பட்டு வேலை செய்ய முன் வந்ததிலிருந்து பெண்களின் எண் ணிக்கை சற்றுக் குறைந்திருக்கலாம். தாழ்ந்த சாதிகளில் இருக் கும் பெண்களின் எண்ணிக்கையைக்காட்டிலும் உயர்சாதிகளில் பெண்களின் எண்ணிக்கை மிக மிக அதிகம். தாழ்ந்த சாதி களிலே சூழ்நிலை முற்றும் இதற்கு மாறுபட்டதாய் இருக்கிறது.

அவர்களில் எல்லோரும் வருந்தி-உழைக்கிறார்கள்; பெண்கள் வீட்டினுள் வேலை செய்யவேண்டியிருப்பதால், அவர்கள் சில சமயங்களில் சிறிது அதிகமாகவே பாடு படவேண்டியவர்களாகின்றார்கள். நான் சற்றும் இதைப்பற்றி நினைத்தே இருக்கமாட்டேன். ஆனால், உங்கள் நாட்டு அமெரிக்க யாத்திரிகர்களுள் ஒருவர்—மார்க்ட்வேன் என்பவர்—இந்தியாவைப்பற்றி எழுதுகையில் இவ்வாறு குறிப்பிடுகிறார் :

"இந்துக்களின் பழக்கவழக்கங்களைப் பற்றி மேலைநாட்டு விமரிசகர்கள் பற்பல சொல்லியிருக்கலாம். இருந்தாலும், சில ஐரோப்பிய நாடுகளில் செய்வது போல, ஒரு பசுவுடன் பெண்ணைக் கலப்பையிற் பூட்டுதலையோ, ஒரு நாயோடு இணைத்துப் பெண்ணை வண்டியிற் கட்டுதலையோ நான் அங்கே ஒருபோதும் கண்டதில்லை. வயல்களிலே வேலைசெய்யும் பெண்களையோ, சிறுமியையோ நான் இந்தியாவில் காணவில்லை. புகை வண்டி நிலையத்தின் இரு புறங்களிலும் அப்பாலும் மாநிறமான ஆடையற்ற ஆடவர்களும் சிறுவர்களும் கழனிகளில் உழுதுகொண்டிருந்தார்கள். ஆனால், ஒரு மாதும் காணப்படவில்லை. இந்த இரண்டு மணி நேரங்களில் வயல்களில் வேலை செய்யும் ஒரு மாதையோ சிறு பெண்ணையோ நான் பார்க்கவில்லை. இந்தியாவில் தாழ்ந்த சாதியாரும் கடினமான வேலையை என்றும் செய்வதில்லை. பொதுவாகப் பிற நாட்டு அதே தாழ்ந்த சாதி மக்களோடு ஒப்பிடும்போது இந்தியர் வாழ்க்கை சுகவாழ்க்கையாகும். உழவைப் பொறுத்த மட்டில் அவர்கள் அவ்வேலை செய்வதே இல்லை."

இதுவே நமது நிலை. ஆம்; தாழ்ந்த சாதிகளினிடையே ஆண்களின் எண்ணிக்கை பெண்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் மிகுதி என்பதைப் பார்த்தோம். அதனால், இயல்பாக நாம் எதிர் பார்ப்பதென்ன? ஆடவரின் எண்ணிக்கை அதிகமாகையால், ஒரு மங்கை மணப்பதற்கு வேண்டிய அதிக வாய்ப்புகளைப் பெறுகிறாள்.

கைம்பெண்கள் மறுமணம் புரியாமை பற்றி எழும்கேள்விகளையொட்டியது வேறொரு விஷயம்: முதல் இரு சாதிகளிடையே பெண்களின் எண்ணிக்கை விகிதாசாரமற்று மிக அதிகமாக இருப்பதால் ஒரு தர்ம சங்கடம் ஏற்படுகிறது. ஒரு பக்கம் கைம்பெண்ணிற்கு மறுமணமில்லாமையும் அதனால் வரும் துன்பமும், மற்றொரு பக்கம் இளம்பெண்களுக்குக் கணவன் கிடையாத துன்பமும் ஏற்படுகின்றன. எதை ஏற்பது? கைம்பெண்ணின் சங்கடத்

தையா, வயது முதிர்ந்த கன்னிப் பெண்களின் அல்லலேயா? இவ்விரண்டில் ஒன்றையே ஏற்க வேண்டும். இந்தியனின் மனம் சமூகநலக்கொள்கையைப் பின்பற்றுவது என்ற கருத்தைக் கவனிப் போம். அது என்ன கூறுகிறது? "கவனியப்பா, கைம்பெண்ணின் சங்கடத்திற்கு இரண்டாமிடமே அளிப்போம்," என்று அம்மனம் கூறுகிறது. ஏன்? "ஏனு? விதவைகள் ஒரு முறை வேண்டிய வாய்ப்பைப் பெற்றுவிட்டார்கள். அவர்களுக்குத் திருமணம் ஆகி விட்டது. அவர்கள் சந்தர்ப்பத்தை இழந்துவிட்டார்கள். எனினும், ஒரு முறை அவர்கள் கணவனைப் பெற்றுய்விட்டது. கணவர்களைப் பெற இன்னும் முதல் முறையே வாய்ப்பைப் பெருத இவ்வேழைப் பெண்களின் நிலையை ஆர அமர்ந்து எண்ணிப்பார்!" என்கிறது. கடவுள் உமக்கு நன்மை புரிவாராக! எனக்குக் கவனமிருக்கும் ஒரு சங்கதியைக் கூறுகிறேன்: ஆக்ஸ்பர்டு தெரு; பத்துமணிக்கு மேல் இருக்கும். நூற்றுக் கணக்கான, ஆயிரக்கணக்கான பெண் கள் பொருள்கள் வாங்குவதற்காக வருகின்றுர்கள். அவர்களை எல்லாம் சுற்றி நோக்கி ஓர் அமெரிக்கன் சொல்கிருன்: "ஆ! கட வுளே, இவர்களுள் எத்தனை பேர்களுக்குத் தக்க புருஷர்கள் கிடைப்பார்கள்!" என்று வியப்புக்குள் ஆழ்கிருன். ஆகையால், விதவைகளை நோக்கி இந்திய மனம் அறிவுறுத்துகிறது: "நன்று; அன்னையீர், உங்களுக்கு அளித்த வாய்ப்புத் தீர்ந்து போய்விட்டது. உங்களுக்கு இத்தனை பெரிய அவலம் ஏற்பட்டதற்காக நாங்கள் மிக மிக வருந்துகிரேம்! அதை நாங்கள் தடுக்க இயலாது. மற்றவர் கள் காத்துக்கொண்டிருக்கிறர்கள்."

இப்பொழுது சமயம் இதில் தலையிடுகிறது. இந்து மதம் இத் தருணத்தில் அவர்களுக்கு ஆறுதலைத் தருகிறது. எப்படி, தெரி யுமா? மணம் என்பது அத்தனை நல்லது ஆகாது; அது மனவலி அற்றவர்க்கே வேண்டுவது. உண்மை ஆன்மிக சக்தி படைத்த ஆணே, பெண்ணே மணமே செய்துகொள்வதில்லை. எனவே, சமய நம்பிக்கையுள்ள பெண்மணி என்ன சொல்கிருள்? "சரி; கடவுள் எனக்கு மேலான சந்தர்ப்பத்தையே அருளியிருக்கிருர். திருமணத்தால் யாது பயன்? கடவுளுக்கு வந்தனம் கூறுக; கட வுளை வந்தனை செய்க; மனிதனை நேசிப்பதால் எனக்கு என்ன பயன்?"—இப்படி எண்ணுகிருள். எல்லாரும் சிந்தையைச் சிவ னிடம் செலுத்த முடியாதுதான். சிலருக்கு அது முற்றிலுமே முடி யாததாகிவிடுகிறது. அவர்கள் வருந்த வேண்டுவதுதான். மற்றைய

பேதை மக்கள் இவர்களுக்காகத் துன்புற வேண்டுவதில்லை. இனி இதை உங்கள் தீர்ப்பிற்கே விட்டுவிடுகிறேன். ஆனால், இந்தியாவில் நிலவும் கருத்து மேற்கூறியதுதான்.

அடுத்ததாக, பெண்மணியை மகள் என்ற நிலையில் ஆராய்வோம். இந்தியக் குடும்பம் ஒவ்வொன்றிலும் பெருந்தொல்லையாய் விளங்குபவள் மகளே. பெண்ணும் சாதியும் ஒன்றுகக்கூடி, அந்தோ! அப்பாவி இந்துவை அழித்துவிடுகின்றன! காரணம் தெரியுமா? பெண் அதே சாதியில் வரனைத் தேர்ந்து மணக்க வேண்டும். சாதிக்குள்ளும், அதே பிரிவில் அதே நிலையில் உள்ளவனைத்தேர்ந்து மணக்க வேண்டும். பாவம்! தந்தை பெண்ணை மணம் செய்து தருவதற்குள் சில சமயங்களில் பிச்சைக்காரனாகவும் வேண்டியிருக்கிறது. பிள்ளையின் தந்தை, தன் பிள்ளைக்கு மிகப் பெரிய விலை கேட்பான். பெண்ணைப் பெற்ற பரிதாப மனிதன் சில சமயங்களில் தன் பெண்ணுக்கு ஒரு மணாளனைச் சம்பாதிப்பதற்குள் அனைத்தையுமே விற்க நேரிடும். இந்துவின் வாழ்க்கையில் பெருந்தொல்லையாய் விளங்குவது மகள் விஷயமே. பெண்ணைக் குறிக்கும் சொல் வடமொழியில் 'துஹிதா' என்பது. இது வேடிக்கையே. முன் காலத்திலே குடும்பத்தில் உள்ள மகள் பசுக்களைப் பால் கறப்பது வழக்கம். ஆகையால், 'துஹிதா' என்ற சொல் 'துஹ்' (கற) என்ற வினையடியாகப் பிறக்கிறது. எனவே, 'மகள்' என்ற சொல் தரும் உண்மைப்பொருள் 'பால் கறப்பவள்' என்பதுதான். பிறகே, 'பாற்காரி' (துஹிதர்) என்னும் சொல்லிற்கு வேறு பொருள் கண்டு பிடித்தார்கள். மகள் என்பவள், குடும்பத்தின் பாலை (செல்வத்தை) முற்றும் கறந்து கொள்பவள்; இது இரண்டாவது பொருள்.

மேற்கூறியவைதாம் இந்தியப் பெண்பாலாரிடையில் வழங்கும் வெவ்வேறு உறவு முறைகள். நாம் குறிப்பிட்டது போல, அன்னையே அனைவரினும் மிக உன்னத இடம் வகிப்பவள். தாய்க்கடுத்தவள் தாரம்; மனைவிக்கு அடுத்தவள் மகள். இவ்வரிசை முறைகள் மிகமிகச் சிக்கலான குழப்பமளிக்கக் கூடியவை. இந்தியாவில் பல்லாண்டுகள் வாழ்ந்தாலும், அயல் நாட்டான் இதை அறிந்து கொள்ளமாட்டான். சான்றாக, மக்களைக் குறிக்கும் சொற்களில் மூவிடங்கள் ஒவ்வொன்றிலும் மூன்று சொற்கள் உண்டு. அவை எல்லாம் எங்கள் மொழியில் ஒரு வகையான வினைச்சொற்களே. ஒன்று மிக்க மரியாதைக்குரியது. ஒன்று இடைத்தரப்பட்டது.

மிக மிகத் தாழ்ந்தது மற்றென்று. உங்கள் மொழியில் நீங்கள் குறிக்கும் 'Thou,' 'Thine' என்பவற்றைப் போன்றதை, கடைசியில் கூறிய ஒன்றை, குழந்தைகளையும் பணியாட்களையும் குறிக்க நாங்கள் வழங்குவோம். சமநிலையில் உள்ளவர்களிடையே வழங்குவது, இடையில் கூறப்பட்ட சொல். பல திறப்பட்ட வகைகளில் பின்னிக்கிடக்கும் வெவ்வேறு உறவு முறைகளை அறிந்து இச்சொற்களைப் பயன்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, என் வாழ்க்கை முழுவதிலுமே என் தமக்கையை அழைக்க 'நீங்கள்' (ஆப்னி) என்ற முன்னிலைப் பன்மையையே பயன்படுத்துவேன். ஆனால், அச்சொல்லை அவள் என்றும் வழங்கமாட்டாள். அவள் என்னுடன் பேசுகையில் 'துமி' (நீ) என்றே சொல்வாள். வாய் தவறியேனும் 'நீங்கள்' என்று அவள் சொல்லமாட்டாள். ஏனென்றால், அப்படிச் சொல்வது என்னைச் சபிப்பதாகும். பெரியோர்களிடம் பத்தியை வெளிப்படுத்த மரியாதைப் பன்மையையே வழங்கவேண்டும். அது தான் முறை. அதுபோலவே, நானும் என் அக்காளையோ, அண்ணனையோ, குறிக்க, 'து' (நீ) 'தும்' 'துமி' என்றெல்லாம் சொல்லவே மாட்டேன். தாய் தந்தையரை என்றுமே அப்படிக் கூற மாட்டோம் என்பது சொல்லவும் வேண்டுமோ? தாய் தந்தையரைப் பெயரிட்டு அழைத்தல்—எங்களால் முடியவே முடியாது. இந்நாட்டுப் பழக்கவழக்கங்களை நான் அறியுமுன், இங்கே, மிகமிகப் பண்பட்ட குடும்பம் ஒன்றிலே மகன் ஒருவன் எழுந்து நின்று தன் தாயைப் பெயரிட்டு அழைத்ததைக் கேட்டுத் திடுக்கிட்டேன்! ஆயினும், அதைக்கேட்டுப் பழக்கமாகிவிட்டது. இது இந்நாட்டு முறை. எங்கள் பெற்றோர்களின் முன்னிலையில் அவர்களது பெயரைக்கூட நாங்கள் சொல்ல மாட்டோம். மூன்றுமிடப் படர்க்கைப் பன்மையிலேதான் முன்னிலையில் இருந்தாலும் அவர்களைக் குறிப்போம்.

எங்கள் தேசத்தில் சமுதாய வாழ்விலே ஆடவர் பெண்டிரிடையிலும், உறவு முறையின் பல நிலைகளிலும் காணப்படுகின்ற சிக்கலான பின்னல் முறையை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். நாங்கள் எங்கள் மனைவியருடன் மூத்தோர் முன்னிலையில் பேசமாட்டோம்; நாங்கள் தனித்திருக்கும் போது அல்லது இளைஞர்களின் முன்னிலையிலேதான் பேசுவோம். எனக்கு மணமாயிற்று என்று வைத்துக் கொள்ளுங்கள்; நான் என் மனைவியோடு பேசுவது, என் தங்கை, மருமகன், மருமகள் முன்னிலையிலேதான்; என் தமக்கை, தாய் தந்தையர் இவர்கள் முன்னன்று. சகோதரிகளோடு பேசுகையில்

தங்கள் கணவர்களைப் பற்றிய பேச்சே எடுக்க முடியாது. அதன் தத்துவம் என்னவென்றால், நாங்கள் துறவு வாழ்க்கையினராய் இருப்பதுதான். சமுதாய அமைப்புமுறை முழுவதுமே அத் தத்துவத்தை மேற்கொண்டுள்ளது. திருமணம் என்பது ஏதோ தூய்மையற்றது, தாழ்ந்தது என்றே எண்ணப்படுகிறது. ஆகையால், காதல் என்ற பொருளே என்றும் பேசப்படாததொன்றாகிவிட்டது. நான் என் தமக்கையர், தமையன்மார், அன்னையார்—அல்லது பெரியார் முன்னிலையிலும் சரி, நவீனங்கள் படிக்கக்கூடாது ; நான் மூடிவிடுவேன் புத்தகத்தை.

மற்றும், உண்பதும் பருகுவதும் இதே போலத்தான். பெரியோர் முன்னிலையில் நாங்கள் உண்ண மாட்டோம். பெண்பாலாரோ, என்றும் ஆடவர்களின் முன்னிலையில் புசிக்கமாட்டார்கள்; ஒருவேளை சிறுவரோ, பணியாளரோ இருந்தால், விதிவிலக்காகலாம். உயிர் போனாலும் சரி, மனைவி கணவன் முன்னிலையில் 'கொறித்துத்தின்ன' மாட்டாள். உதாரணமாகச் சில சமயங்களில், சகோதர சகோதரிகள் ஒன்று சேர்ந்து சாப்பிடலாம். நானும் என் சகோதரியும் ஒன்றாகச் சாப்பிடுகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவள் கணவர் கதவருகே வந்தால் போதும் ; சகோதரி சாப்பிடுவதை நிறுத்திவிடுவாள் ; பாவம் ! புருஷர் பறந்துவிடுவார் அங்கிருந்து.

இவையெல்லாம் எங்கள் நாட்டிற்கே உரிய பழக்க வழக்கங்கள். இவற்றில் சிலவற்றைப் பிற நாடுகளிலும் நான் காண்கிறேன். நான் ஒரு போதும் மணந்ததில்லை யாதலால், மனைவியைப் பற்றி நான் அறிந்ததெல்லாம் பூரணமற்றதாய் இருக்கலாம். அன்னையார், சகோதரிகள்—அவர்கள் இன்ன தன்மையார் என்பதை நன்கு அறிவேன். மற்ற மக்களின் மனைவியரைத் தரிசித்திருக்கிறேன். உங்களுக்குக் கூறியவெல்லாம் அவர்களிடமிருந்து கண்டறிந்தனவே.

கல்வியும் பண்பாடும் ஆடவர்களையே பொறுத்தவை. விளங்கச் சொன்னால், ஆடவர்கள் அதிகமாகப் பண்பாட்டைப் பெற்றிருக்கும் இடத்திலே, பெண்களும் பெற்றிருப்பார்கள். ஆடவர் அதனைப் பெறவில்லையென்றால் பெண்களுக்கும் அது இல்லை. பண்டைக் காலத்திலிருந்த இந்து அறநூற்படி ஆரம்பக்கல்வியைப் போதிக்கும் பொறுப்பு, கிராம அமைப்பு முறையைச் சார்ந்தது. அனாதி காலந் தொட்டு எல்லா நிலமும், நீங்கள் சொல்வது போல, தேசிய மய

மாக்கப்பட்டுவிட்டது; நிலமெல்லாம் அரசாங்கத்தின் உடைமையே. தனி மனிதன் உரிமை என்றும் நிலவியதில்லை. இந்தியாவில் அரசாங்க வருமானம் நிலத்திலிருந்து வரும்; ஏனெனில், ஒவ்வொருவனும் ஒரு பகுதி நிலத்தை அரசாங்கத்தினிடமிருந்து பெறுகிறான். இப்பகுதி ஒரு பிரிவினரால் பொதுவுடைமையாக வைத்துக்கொள்ளப்படும். ஐந்தோ, பத்தோ, இருபதோ அல்லது நூறோ குடும்பங்கள் அடங்கியதாக இருக்கும் இப்பிரிவு. இப்பிரிவினரே முழு நிலத்தையும் ஆள்வார்கள்; ஒரு குறிப்பிட்ட அளவு வரியை அரசாங்கத்திற்குச் செலுத்துவார்கள். மருத்துவர், கிராமப் பள்ளி ஆசிரியர் முதலானவர்கள் இவர்களது ஆதரவின்கீழ் வாழ்வார்கள்.

'ஹெர்பர்ட்டு ஸ்பென்ஸரை'ப் படித்தவர்களுக்கு ஒன்று கவனமிருக்கலாம். மடங்களின் மூலம் கல்வி பயிற்றும் முறை ஐரோப்பாவில் வெள்ளோட்டமாகப் பின்பற்றப்பட்டதும், அது சில இடங்களில் வெற்றிகரமாகப் பலனளித்ததும் கவனத்திற்கு வரலாம். அம்முறைப்படி, கிராமத்தார் நியமிக்கும் ஓராசிரியர் இருப்பார். இது போன்ற தொடக்கப் பள்ளிகள் தொடக்க நிலையிலேயே இருந்துகொண்டிருக்கும். அதற்குக் காரணம் எங்கள் முறைகள் மிக மிக எளியவையாய் இருப்பதே. ஒவ்வொரு சிறுவனும் ஆரம்பத்தில் ஒரு சிறு பாயும், ஓலைச்சுவடியும்—அதுதான் அவனது காகிதம்—கொண்டு வருவான். முதலில் ஓலைகளே; காகிதம் அதிக விலையானது அவனுக்கு. ஒவ்வொரு சிறுவனும் தன் சிறு தடுக்கை விரித்து அதன் மேல் அமர்வான்; மைக்கூட்டையும் புத்தகங்களையும் கொண்டு வந்திருப்பான்; பின்பு எழுதத் தொடங்குவான். சிறிது கணிதம், சிறிது வடமொழி இலக்கணம், ஓரளவு மொழி, சில கணக்கு முறைகள்—இவையே ஆரம்பப் பள்ளிகளில் போதிக்கப்படுபவை.

ஒரு சிறு நீதி நூலை—ஒரு முதியவர் போதிக்க—நான் மனப்பாடம் செய்தேன்; அதில் ஒரு பாடல் இன்னும் கவனத்தில் இருக்கிறது:

"தன்னூர் நலத்தை நினைப்பார்க்குத்
  தகவே துறத்தல் தன்னகத்தை;
தன்னாட் டின்சீர் கருதுபவன்
  தன்னூர் நலத்தை விடல்வேண்டும்.

மன்னுயிர் நலமே பெரிதென்று
மறந்திடல் வேண்டும் தன்தேசம்;
துன்னும் உலக நலன்கருதித்
துறத்தல் கடமை அனைத்தையுமே.''

இது போன்ற பொருளுள்ள பாடல்கள் அப்புத்தகத்தில் உள்ளன. அவைகளை நாங்கள் மனப்பாடம் பண்ணுவோம். அவைகளுக்கு விளக்கங்களை ஆசிரியரும் மாணவரும் கூறுவார்கள். சிறுவர்களும் சிறுமிகளும் ஒன்று கூடியே இவற்றைக் கற்போம். பிறகே கல்வி நிலை மாறுபடுகிறது. பழைய வடமொழிப் பல்கலைக் கழகங்களில் ஆடவர்களே முக்கியமாய்ப் பயின்று வந்தார்கள். மங்கையர் வெகு அரிதாகவே அப்பல்கலைக் கழகங்களுக்குச் சென்றனர். ஆனால், இவ்விதிக்கு விலக்குகள் சில உள்ளன.

இந்த நவயுக நாட்களிலே மேலை நாட்டு முறைகளையொட்டி, உயர்தரக் கல்வி பயில வேண்டும் என்னும் பேரூக்கம் நிலவி வருகிறது; பெண்களும் இக்கல்வியைப் பெற வேண்டும் என்ற கருத்துக்கு ஆதரவு பலமாய் இருந்து வருகிறது. இந்தியாவில் இக் கல்வி முறை வேண்டா என்பவர்களும் உண்டு. என்றாலும், வேண்டும் என்றவரின் சொற்களே வென்றன. ஆக்ஸ்பர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலை மன்றங்கள் இந்நாளில் மாதரை அனுமதிப்பதில்லை என்பது ஆச்சரியப்படத்தக்க ஓர் உண்மை. ஹார்வர்டு, ஏல் பல்கலைக் கழகங்களும் அப்படியே. ஆனால், இருபது ஆண்டுகளுக்கு மேலாகவே கல்கத்தாச் சர்வகலாசாலை பெண்களைப் படிக்க அனுமதித்துவிட்டது. நான் பட்டம் பெற்ற ஆண்டு இன்னும் நினைவிலிருக்கிறது. அதே ஆண்டில் பெண்மணிகள் பலர் பட்டம் பெற்று வெளியேறினர். மாணவர்கள் பயின்ற அதே தரமுடைய கல்வியையே அவர்களும் பயின்றார்கள்; அதே பாடத் திட்டந்தான் அவர்களுக்கும். அவர்கள் உண்மையில் மிகச் சிறப்பாகவே வெற்றி பெற்றார்கள். மாதர் கல்வி கற்கக்கூடாது என்று எங்கள் சமயம் தடுப்பதே இல்லை. இம்முறையிலே பெண் கல்வி அமைய வேண்டும். பல்கலைக் கழகங்களிலே ஆடவரோடு பெண்டிரும் சமமாகப் புகுந்து பயின்றனர் என்று எம் பண்டை நூல்கள் கூறுகின்றன. பிற்காலத்திலே, நாடு முழுவதுமே கல்வி புறக்கணிக்கப்பட்டுவிட்டது. அயலார் ஆட்சியிலே நீங்கள் என்ன எதிர் பார்க்க முடியும்? நாட்டை வென்ற அன்னியன் நன்மை செய்யவா இருக்கிறான்? அவனுக்கு வேண்டுவது அவன் திறை.

நான் பன்னிரண்டு ஆண்டுகள் பாடுபட்டுப் படித்தபின் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் பட்டதாரியானேன். நான் எங்கள் நாட்டிலே ஐந்து டாலர்தான் சம்பாதிக்க முடியும்? இதை நீங்கள் நம்புவீர்களா? இது உண்மையே. அன்னியரால் நடத்தப்படும் இந்தப் பல்கலைக் கழகங்கள் செய்வதெல்லாம், அற்ப ஊதியத்திற்காகக் காரியத்திற்குப் பயன்படக்கூடிய ஓர் அடிமைக் கூட்டத்தைப் படைப்பதே. குமாஸ்தாக்கள், அஞ்சல் நிலைய அதிகாரிகள், தந்தி அலுவலாளர்கள் முதலியவர்களை ஏராளமாகப் படைப்பதுதான் அவர்கள் செய்யும் பணி.

இதன் விளைவாக வாலிபர், மாதர் இவர்களின் கல்வி அடியோடு புறக்கணிக்கப்பட்டுவிட்டது. அந்த நாட்டிலே செய்யப்பட வேண்டிய மாபெரும்பணிகள் இன்னும் எத்தனையோ உள்ளன. இதை விளக்க உங்கள் பழமொழியையே உபயோகிப்பதை நீங்கள் மன்னிக்க வேண்டும். "பெட்டை வாத்திற்குப் பானமெதுவோ அதுதான் ஆண் வாத்திற்கும்"—இதைக் கவனம்வைத்துக்கொள்ள வேண்டும் எப்போதும். உங்களைப்போன்ற அயல் நாட்டுப் பெண்பாலார் எப்பொழுதும் பாரதநாட்டுப் பெண்டிருடைய துயரங்களைப் பற்றியே கண்ணீர் சிந்துகிறார்களே தவிர, இந்திய ஆடவரின் குறைகளை ஒரு போதும் சட்டை செய்வதாகத் தோன்றவில்லை. அவர்களெல்லாம் கண்ணீர் மல்க-மல்க அரற்றி அழுகிறார்கள். ஆனால், இந்தச் சிறுமிகள் மணம் செய்விக்கப்படுவது யாருக்கு? கிழவர்கட்கே எனக்கேட்ட ஒருவர், "ஆனால் இளைஞர்கள் எல்லாம் என்ன ஆனார்கள்? என்ன! எல்லாப் பெண்களுமா முதியோருக்கு மணம் செய்விக்கப்படுகிறார்கள்? எப்பொழுதும் கிழவர்களுக்குத் தானா?" என்று கேட்டார். ஒருகால், எங்கள் நாட்டிலே நாங்களெல்லாம் கிழவர்களாகவே பிறக்கிறோம் போலும்!

இந்தியச் சாதியின் இலட்சியம் ஆன்ம விடுதலையே. இவ்வுலகம் பாழ்; இது ஒரு காட்சி; ஒரு கனவு. பல்லாயிரக்கணக்கான பிறவிகளில் ஒன்றே இவ்வாழ்க்கை. இயற்கை முழுவதும் மாயை; எல்லாம் மயக்கமே; பற்பல பிரமைகள் மண்டிக் கிடக்கும் குடிலே இயற்கை முழுவதும். இதுதான் வேதாந்தம். வாழ்க்கை இனிதென்றும் நல்லதென்றும் நினைத்துக் குழந்தைகள் புன்னகை செய்கின்றன; ஆனால், சில ஆண்டுகளுக்குள்ளாக அவை தொடங்கின இடத்திற்கே மீண்டும் செல்லவேண்டுபவையாகின்றன. அவை வாழ்க்கையை அழுகையுடன் ஆரம்பித்தன; அழ

அழ அவ்வாழ்க்கையை முடித்துக் கொள்ளும். 'இளமையின் துடிப்பால் எதையும் செய்ய முடியும், எல்லாவற்றையும் ஆக்க முடியும்,' என்று சமுதாயங்கள் நினைக்கின்றன. "மண்ணுலக தெய்வங்கள் நாங்களே. இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நன் மக்கள் நாங்கள்," என்று அச்சமுதாய மக்கள் செருக்கடைகிறார்கள். உலகினைக் கட்டியாள்வதற்காக, இறைவனின் திட்டங்களை உலகிலே நிறைவேற்றுவதற்காக, விரும்பியதை எல்லாம் செய்து முடிப்பதற்காக, உலகத்தை தலைகீழாக்க, எல்லா வல்லமையுமுள்ள கடவுள் தங்களுக்குச் சாசனம் கொடுத்திருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். கொள்ளையடிக்கவும், கொலைசெய்யவும் உயிர் போக்கவும் உரிமை தரும் அப்பட்டயம் அவர்களுக்கு! கடவுள் அவர்களுக்கு இவற்றையெல்லாம் கொடுத்தார்! அவர்கள் இக்கொடுமைகளை எல்லாம் செய்கிறார்கள். ஏன்? அவர்கள் குழந்தைகள் அல்லவா! இப்படிச் சாம்ராஜ்யங்களுக்குப் பின் சாம்ராஜ்ஜியங்கள் தோன்றிவிட்டன. பெருமை வாய்ந்தவை, ஒளி வீசியவை எத்தனையோ? அவையெல்லாம் மறைந்த மாயம் யாதோ? போயே போய்விட்டன! எங்கு மறைந்தனவோ, யாருக்குத் தெரியும்? அவை அழிந்த செயலும் வியக்கத்தக்கதேயாகலாம்.

கண நேரத்தில் தாமரை இலைமேல் நீர்த்துளி தத்தளித்து உருண்டு ஓடிவிடுவது போன்றது இந்த மாயும் உயிர். நாம் திரும்பும் திசை எல்லாம் அழிவுச் சின்னங்களே காண்கின்றன. இன்று காடு நிற்குமிடங்களில் முன்னொரு காலத்திலே வியன் நகரங்கள் கொண்ட மாபெரும் சாம்ராஜ்ஜியங்கள் நிலைபெற்றிருந்தன. இதுதான் இந்தியன் எண்ணமும், குரலும், கருத்தின் சாயலும். மேலைநாட்டாராகிய உங்கள் இரத்தக் குழாய்களிலே இளமைக்குருதி பாய்ந்தோடுகிறது என்பதை நாங்கள் அறிவோம். சாம்ராஜ்ஜியங்களுக்கு நேர்ந்தகதி மக்களுக்கும் ஏற்படும் என்பதும் அறிவோம். கிரேக்க நாடு எங்கே? உரோமாபுரி எங்கே? அக்காலத்தில் அத்துணைப் புகழ்பெற்றிருந்த ஸ்பானிய வீரன் எங்கே? காலவெள்ளத்திலே பாரதம் என்னுகுமோ! யார் அறிவார்? இப்படியேதான் அவர்கள் பிறக்கிறார்கள்; இறக்கிறார்கள். உயர்வும் தாழ்வுங்கூட இத்தகையனவே. உலகமெங்குமே எந்த ஒரு சத்தியாலும் தடுத்து நிறுத்த முடியாத படைப்பலத்துடன் வந்து முற்றுகையிட்ட மொகலாய வீரனை எந்த இந்தியக் குழந்தைதான் அறியாது? அவன் அன்றோ உங்கள் மொழியில் உடல் நடுங்கச்

செய்யும் 'தார்த்தார்' என்ற பெயரை விட்டுச் சென்றவன்? இந்தியனுக்குப் புத்தி வந்துவிட்டது. இன்றைய குழந்தைகளைப் போல அவன் பிதற்ற விரும்பவில்லை. "மேலை நாட்டார்களே, நீங்கள் சொல்ல வேண்டியவற்றை எல்லாம் சொல்லுங்கள். இது உங்கள் காலம். குழந்தைகளே, ஊம்; ஆகட்டும்; பேசித் தீருங்கள்; உங்கள் மழலைகளையெல்லாம் மிழற்றித் தீருங்கள். இது குழந்தைகள் கொஞ்ச வேண்டிய காலம். நாங்கள் எங்களுக்குரிய பாடங்களைக் கற்றுவிட்டோம். எனவே, நாங்கள் அமைதியோடிருக்கிறோம். உங்களிடம் சிறிது செல்வம் இருப்பதால், எங்களைத் தாழ்ந்த நோக்கோடு பார்க்கிறீர்கள். நல்லது; இது உங்கள் காலம். பிதற்றுங்கள்; குழந்தைகளே, பிதற்றுங்கள்."—இதுவே இந்தியன் மனப்பான்மை.

வெற்றுப் பேச்சுகள் மட்டும் தேவதேவனை அடைந்துவிட அமைந்த சாதனமாகா. அறிவின் சக்தியும் இறைவனுக்கிறைவனை அடைய வழி வகுக்காது. வெற்றி வலிமையும் அதற்கு நெறி காட்டாது. எவனொருவன் அனைத்திற்கும் மூலமான பொருளை அறிந்தவனாகிறானோ, மற்ற எல்லாம் நிலையற்றன என்று அறிகிறானோ, அவனையே இறைவன் வந்தடைகிறான்; வேறெவரையும் வந்தடைவதில்லை. ஊழிக்காலமாகப் பெற்ற அனுபவ மூலம் பாரதம் கற்க வேண்டியதைக் கற்றுவிட்டது; இறைவனை நோக்கித் தன் முகத்தைத் திருப்பிவிட்டது. பாரதம் முன்பே பல பிழைகளைப் புரிந்துவிட்டது; சமுதாயத்தின்மேல் ஏற்கெனவே சுமை சுமையாகக் குப்பை கூளங்கள் குவிக்கப்பட்டுள்ளன. கவலையில்லை; அதனால் என்னவாகும்? குப்பைகளைக் களைவதும், நகரங்களைச் சுத்தி செய்வதும் எம்மாத்திரம்? அது உயிரூட்டுமா? மாபெரு நிலையங்களைப் படைத்த சமுதாயங்களெல்லாம் அழிந்து பட்டனவே! அப்படியிருக்கையில், நேற்றுப் பிறந்த இந்தத் தாபனங்கள், ஐந்து நாட்களுக்குள் உருவாகி, ஐந்தாம் நாள் நிலைகுலைந்து போகும் இந்த மேற்குத் தாபனங்கள் எம்மாத்திரம்? கைக்குள் அடங்கக் கூடியவை என்று கூறக்கூடிய சமுதாயங்களிலே, ஒன்றேனும் இரண்டு நூற்றாண்டுகளுக்குத் தொடர்ந்து வாழாது. எங்கள் சமுதாயங்கள் ஊழிகளாய்க் கால வெள்ளத்திலே நீந்தி நிலைத்து நிற்கின்றன. பாரத புத்திரன், "ஆம்; இவ்வுலகத்துப் பண்டைய சமுதாயங்களெல்லாம் அழிந்தும் நாங்கள் வாழ்கின்றோம்; இனித் தோன்றும் புதிய சமுதாயங்கள் அழிந்து

படுவதையும் பார்ப்போம். ஏனென்றால், எங்கள் இலட்சியம் இவ்வுலகத்தைப் பொறுத்ததன்று; மறுவுலகத்தது. உங்கள் குறிக்கோளைப் போலவே நீங்கள் விளங்குவீர்கள். உங்கள் இலட்சியம் நிலையற்ற தன்மையுடையதாயின், நிலையில்லா இவ்வுலகத்தைப் பற்றியதாயின், உங்கள் எதிர்காலமும் அதுவே. உங்கள் குறிக்கோள் சடமாயின், உங்கள் வாழ்வும் சடமாகும். பாருங்கள்! ஆன்மாவை நாடுவதே எங்கள் இலட்சியம். அது ஒன்றே நின்று நிலவுவது; மற்ற எதுவும் நில்லா இயல்பினது. இறைவனைப் போலவே நாங்களும் என்றும் வாழ்வோம்!" என்று கூறுகிறான்.

இந்தியாவின் கலைச் செல்வம்

[சுவாமி விவேகானந்தர் சான்பிரான்ஸிஸ்கோவில் வென்டே கூடத்தில் இந்தியாவிலுள்ள கலை ஞானங்களும் விஞ்ஞானமும் என்னும் பொருள்பற்றி வியப்புறும் முறையில் மிக்க திறமையுடன் பேசினர். இது அதன் ஒரு பகுதி. அவர் பேச்சுக்குப் பின் பலர் கேட்ட கேள்விகளே அவர் பேச்சின் கவர்ச்சிக்குச் சான்றுகளாகும்]

பல நாடுகளின் வரலாற்றிலே தொடக்கத்தில் ஒரு தேசத்தின் ஆட்சிமுறை எப்போதுமே குருமார்களின் வயமே இருந்து வந்துள்ளது. கல்வியறிவும் அவ்வாறே அவர்களிடமிருந்தே பெருகி வந்தது என்று மொழியலாம். குருமார்களுக்குப் பின்னர் ஆட்சி கைம்மாறி க்ஷத்திரியர்களாகிய அரசர்களிடம் சென்றது. வேந்தரின் ஆற்றல் வளர்ந்து மறம் படைத்த போர் வீரர்களின் ஆட்சியே நிலவி ஆதிக்கம் செலுத்தி வந்தது. இது எஞ்ஞான்றும் உள்ள உண்மையே. இறுதியாக, சுக போகப் பற்றுகளுக்கு ஆட்பட்டு மக்கள் இழிவான நிலைக்கு இறங்கி வரவே, தங்களைக் காட்டிலும் கொடுமையும் வன்மையும் படைத்த இனத்தவரால் ஆளப்படுமாறு நேர்ந்தது.

வரலாற்றுக் காலந்தொட்டு உலக மக்கட்கூட்டத்தினருள்ளே இந்தியாவே 'ஞான பூமி' என்று வழங்கப்பட்டுத் திகழ்ந்துவந்தது. ஊழிக் காலமாக இந்தியாதான் மற்றைய நாடுகளின் மீது படையெடுத்துச் சென்று அவற்றை வெல்ல விரும்பவில்லை. இந்தியர் போர் புரிய ஆர்வம் கொள்ளார். மேலை நாடுகளில் வாழும் நீங்கள் ஊன் உண்பது போல, அவர்கள் ஊன் உண்பதில்லை. ஊனே போர் வீரர்களைப் படைக்கின்றது. விலங்கின் குருதி உங்களை வாளா இருக்கவிடாமல் ஏதேனும் ஒன்றைச் செய்யுமாறு இடையருது தூண்டிக் கொண்டேயிருக்கும்.

இந்தியாவையும் எலிசபெத்து அரசியின் காலத்து இங்கிலாந்தையுமே ஒப்பிட்டுப் பாருங்கள். அக்காலம் உங்கள் மக்கட்கு மிகுந்த இருளடைந்த காலமாகும். உங்கள் நாட்டில் 'இருள் சூழ்ந்த அந்நாளிலேயே எவ்வளவோ அறிவொளிச் சுடர்விட்டு எங்கள் நாடு மூரி நிமிர்ந்து நின்றது. ஆங்கில-சாக்ஸன் மக்கள் கவின் கலைக்கு ஏற்றவர்கள் அல்லர். ஆனல், அவர்களிடையே சிறந்த கவிதை மிளிர்கின்றது. சான்ருக, ஷேக்ஸ்பியரின் எதுகை

யில்லாத பாவினைப் பாருங்கள். அது எவ்வளவு வியப்புறத்தக்கது என்பது புலனாகும். வெற்று மோனையும் எதுகையும் கவிதை ஆகா. உலகில் பண்பாடு மிகுந்துள்ள இனத்தை அது சார்ந்ததன்று.

இந்தியாவில் சங்கீதம் பூரணமான ஏழிசை நிலை வரையில் கொண்டு வரப்பட்டுள்ளது. அரை மாத்திரையுஞ் சரி, கால் மாத்திரையுஞ் சரி, அவர்கட்கு அரியனவல்ல. இந்தியா இசை, நாடகம், சிற்பம் இவற்றிலும் தலைமை பெற்றிருந்தது. இப்பொழுது ஆக்கப்படுவன யாவும் ஒன்றைப் பார்த்து அமைக்கப்படுவனவே யாகும். வயிற்றுப் பிழைப்பை எவ்வளவு சிக்கனமாக நடத்தலாம் என்னும் பிரச்சினையை ஒட்டியே எல்லாம் சுழல்கின்றன.

இந்தியா இருள் அடைந்த நாடா?

[கீழே காணப்படுவது சுவாமி விவேகானந்தர் அமெரிக்க ஐக்கிய நாட்டில் செய்த சொற்பொழிவின் அறிக்கையாகும்; "போஸ்டன் ஈவினிங் டிரான்ஸ்கிரிபடு" என்னும் பத்திரிகையில் 1894-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 5-ஆம் தேதி வெளிவந்துள்ள ஆசிரியரின் குறிப்புகளோடு கூடியது.]

சுவாமி விவேகானந்தர் அண்மையில் டெட்ராய்ட்டுக்கு வந்திருந்தார். அவர் மக்களின் மனத்தில் ஆழ்ந்ததொரு நற்பதிவை உண்டு பண்ணிவிட்டார். எல்லா வகுப்பினரும் அவரது பேச்சைக் கேட்க விரைந்தோடி வந்தனர். முக்கியமாக அந்த அந்தத் தொழிலில் உள்ளவர்கள் அவருடைய தருக்க முறையிலும் சிந்தனையின் உறுதிப்பாட்டிலும் ஆழத்திலும் திளைக்க ஆர்வம் காட்டியுள்ளார்கள். இசை நாடக அரங்கே அவரது சொற்பொழிவுக்குக் கூட்டமாக வந்தவர் அமரத்தக்க இடமாய் அமைந்தது. அவர் ஆங்கிலத்தில் மிகவும் அழகு பெறப் பேசுகின்றார்; நல்லவராய் இருப்பதுடன் சிறந்த தோற்றப் பொலிவுடன் கூடியவராயும் அழகான வடிவம் உடையவராயும் திகழ்கின்றார். அவருடைய சொற்பொழிவுகளின் அறிக்கைச் செய்திகட்கு 'டெட்ராய்ட்டுச் செய்தித் தாள்கள்' மிகுதியான இடம் ஒதுக்கி வைத்துள்ளன. 'டெட்ராய்ட்டு ஈவினிங் நியூஸ்' என்னும் பத்திரிகையின் தலையங்கம் பின் வருமாறு குறிக்கின்றது:

"இந்நகரில் சுவாமி விவேகானந்தர் இதற்கு முன்னர் ஆற்றியுள்ள சொற்பொழிவுகளைவிட நேற்றிரவு இசை மண்டபத்தில் புரிந்த சொற்பொழிவு மிக அழகாகவும் அருமையாயும் இருந்தது என்பதே பெரும்பாலார் கருத்தாகும். அந்த இந்தியர் நேற்றிரவு பேசிய பேச்சின் திறன் அதன் தெளிவில் மிளிர்ந்தது. உண்மைக் கிறித்தவ சமயத்திற்கும் போலிக் கிறித்தவ சமயத்திற்கும் உள்ள மாறுபாட்டை அவர் நன்றாக வரையறுத்துக் காட்டினார். தாம் ஒரு வகையில் கிறித்தவரே என்றும், மற்றொரு வகையில் கிறித்தவரல்லர் என்றும் சாற்றினார். உண்மையான இந்து மதத்திற்கும் அதன் போலிக்கும் வேறுபாடு உளதென்றும் அதன் நன்மையான பொருளிலேயே தம்மை ஓர் இந்துவென்று கூறிக்கொள்ளுகிறாரென்றும் நவின்றார். இந்தியாவுக்குக் கிறித்தவ ஞானப் பணியாளர்கள் வேண்டும். நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும்

அவர்கள் இங்கே வந்து திரளட்டும். கிறித்துவின் தூய வாழ்வின் வரலாற்றை எங்களுக்கு நன்கு எடுத்து ஓதுவீர்களாக. அவர் தந்த ஞான நன்மொழி எங்கள் சமூகத்தின் இதயத்தை ஊடுருவிப் பாயட்டும். இயேசு நாதரைப் பற்றி ஒவ்வொரு சிற்றூரின் மூலை முடுக்குகளிலும் பிரசாரம் செய்யுங்கள்,'' என்று இயம்புகின்ற சுவாமிகளைப் பற்றி எவர் குறை கூற இயலும்?

முக்கியமான பிரச்சினையில் ஒருவர் இத்தனை உறுதியுடன் உரைத்திருக்கும்பொழுது, மற்றைய சிறு விவரங்களைப் பற்றி அவர் யாது கூறினும், நாம் அவர்பால் குற்றங்காண இயலுமோ? வேற்று மதத்து ஞானப் பணியாளர் ஒருவர் கிரீன்லாந்தின் பனிவரை அண்மையில் உள்ளவர்களுக்கும் இந்தியாவில் பவளம் திகழ் கடற் கரையோரத்தவர்கட்கும் வாழ்க்கையையும் வாழ்க்கையின் நடை முறைத் தத்துவங்களையும் எடுத்துக் காட்டிச் செல்லும் காட்சி நமக்கு அளவு கடந்த மானக்கேட்டையே விளைக்கிறது. ஆனால், அவமான உணர்ச்சியே உலகத்துள்ள சீர்திருத்தங்களைத் திற்கும் இன்றியமையாத காரணமாகின்றது. இயேசுநாதரின் மகிமை பொருந்தியதும் மாண்பு மிக்க ஒளிச்சிறப்புடன் கூடியது மான வாழ்க்கை வரலாற்றை உரைத்த விவேகானந்தர், அயல்நாடு களிலுள்ள கிறித்தவர்களின் வாழ்க்கை முறையைப் பற்றிக் கூற வும் உரிமை பெற்றவரல்லரா? நாசரத்தைச் சார்ந்த இயேசு நாதரின் அறிவுரை போல அன்றோ திகழ்கின்றது அவர் கூற்றும்! "வெள்ளியோ பொன்னோ உங்களிடத்தில் வைத்துக்கொள்ளா தீர்கள். உங்கள் பணப் பையில் ஒரு செப்புக் காசுகூட இருப்பது அழகன்று.'' பிரயாணத்தின்போது பையும் உங்களுக்கு எதற்கு? ஒருவனுக்கு இரண்டு சட்டைகளோ, மிதியடிகளோ, கைத்தடியோ எதற்காக? ஏனெனில், மெய் வருத்தம் கூலி தருமன்றோ? அவ னுக்குச் சோறு கிடைக்காமற்போகாது. விவேகானந்தர் வருவ தற்கு முன்னரே இந்து சமய சம்பந்தமான இலக்கியங்களைப் பருகியவர்கட்குக் கீழை நாட்டவர்கள் மேலை நாட்டவர்களை மிகவும் வெறுக்கும் பான்மை நன்கு விளங்கும். அவர்களால் வெறுக்கப்படுவது மேலை நாட்டார்களாகிய எங்களுடைய வாணிக இயல்பே. இதைத்தான் சுவாமி விவேகானந்தர் கடைக்கார வாணிக இயல்பு என்று குறிப்பிட்டுள்ளார். இந்த இயல்பு சமயமுட்பட நாங்கள் புரியும் எல்லாச் செயல்களிலும் புகுந்துவிட்டது.

ஈண்டுக் கிறித்தவ சமயப் பணியாளர்கள் கவனிக்க வேண்டுவ

தொன்றுண்டு: அதை அவர்கள் புறக்கணிக்கக்கூடாது. அஞ் ஞானம் நிறைந்த கீழை நாட்டு மக்கள் தங்கள் மதத்தைத் தழுவச் சமயத் தொண்டர்கள் விரும்பினுல், தாங்கள் வழங்குகிற அறிவுரைக்கு ஏற்றவாறு தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். இவ்வுலக இராச்சியங்களையும் அவற்றின் சிறப்புகளையும் அறவே அவர்கள் துறப்பார்களாக.

நம் சகோதரர் விவேகானந்தர், இந்தியர்கள் உலகிலுள்ள எல்லா நாட்டினர்களைக் காட்டிலும் செம்மையான நெறியை உடையவர்கள் என்று கருதுகின்ருர். அவர்கள் அடிமைகளாய் இருப்பினும், அவர்களுடைய ஆன்மிகம் குன்ருது வன்மையுடன் விளங்குகின்றது. அண்மையில் அவர் டெட்ராய்ட்டில் ஆற்றிய சொற்பொழிவுகளில் உள்ளவை பற்றிய அறிக்கைகளினின்றும் சில பகுதிகளை எடுத்துக் காட்டுகின்ரேம்: இந்தச் சந்தர்ப்பத்தில் தம் பேச்சின் உயர்நிலையாகிய ஒன்றை அவர் எடுத்துக் கூறினுர். தன்னலமறுப்பெல்லாம் நல்லன என்பதும் சுயநலமனைத்தும் தீயன என்பதும் அவர் நாட்டு மக்கள் பேணும் நம்பிக்கையாகும். இந்த விஷயத்தையே அவர் முழுதும் வற்புறுத்தி வந்தமையால், இதுவே மாலைப் பேச்சுக்கு அவர் எடுத்துக்கொண்ட பொருளென்று கொள்ளலாம்.

"வீடு ஒன்றைத் தனக்காகக் கட்டிக்கொள்வது தன்னலம் பாராட்டலாம் என்று ஓர் இந்து உரைக்கின்ருன். ஆதலால், கடவுளைத் தொழவும், விருந்தினர்க்கு உணவளிக்கவும் கோயில் களை அவன் எழுப்புகின்ருன். சோறு தனக்கெனச் சமைத்துக் கொள்வது சுயநலமாகும்; அக்காரணம் பற்றியே அதை ஏழை மக்களுக்குப் படைக்கின்ருன். யாரேனும் விருந்தினர் வந்தால், அவரது பசிப் பிணியை அகற்றிய பின்பே கடைசியாக அவன் உணவருந்துகின்ருன். இத்தகைய உணர்வு இந்திய நாடெங்கும் பரவியிருக்கிறது. எவனும் உண்ண உணவும் தங்க இடமும் கேட்டுப் பெறலாம். எந்த வீட்டு வாயிலும் அவனுக்கு திறந்தே இருக்கும்.

"சாதி தருமத்திற்கும் இந்து சமயத்திற்கும் யாதொருதொடர்பு மில்லை. ஒருவனது தொழில் பரம்பரையானது. தச்சன் பிறக்கும் போதே தச்சனுகவே பிறக்கின்ருன்; அதே போலத் தட்டானும் தட்டானுகவே தோன்றுகின்ருன். வேறு தொழிலை ஏற்றுக்கொண் டவர்கட்கும் இதே நிலைதான் அமைகின்றது. குருமார்களும் குரு

மார்களாகவே பிறக்கின்றார்கள்.

இரு விதக் கொடைகள் சிறந்தவை; கல்விக்கொடை ஒன்று; மற்றொன்று, உயிர்கொடை. ஒருவன் ஓர் உயிரைக் காக்கலாம். அது நன்றே. ஒருவன் மற்றொருவனுக்குக் கல்வி கற்பித்து உதவலாம். அது அதனினும் சிறந்தது. பணத்திற்காகக் கல்வி கற்பித்தல் தீதே. வியாபாரச் சரக்குப் போன்று ஒருவன் காசுக்குக் கல்வியை வாணிகம் செய்வானாயின் அவனை இழித்துக் கூறுவார்கள் மக்கள். ஆசிரியர்களுக்கு அரசாங்கம் அப்போதைக்கப்போது பொருள் உதவி வழங்கும் நெறி முறையில் நின்று பார்க்கும் பொழுது, நாகரிக நாடென்று கூறிக்கொள்ளும் மற்றைய நாடுகளிலுள்ள நிலைமையிலும் இது சாலச் சிறந்ததே என்பது புலனாகும்.

'நாகரிகம்' என்னும் மொழியை வரையறுத்து விளக்குமாறு தாம் சென்ற நாடுகளில் எல்லாம் பற்பல இடங்களிலும் அவர் கேட்டுள்ளார். சில சமயங்களில் மறுமொழி கூறினவர்கள், "நாங்கள் இப்பொழுது பின்பற்றுகிற முறையே நாகரிக முறை," என்றார்கள். அவர் இதனை ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டார். ஒரு நாடு திரை கடல் மீது ஆணை செலுத்தலாம்; மிகப் பெரிய ஐம்பூதங்களையும் அடக்கி ஆளலாம்; வாழ்க்கை விவகாரங்களின் பயனற்ற பிரச்சினைகளை நன்கு வளர்த்து அவற்றை முற்றிலும் தீர்த்துவிடலாம்; ஆனால், 'தன்னை வெல்லக் கற்றவனிடமே நாகரிகத்தின் முதிர்ச்சி உள்ளது,' என்பதை அது அறியாமலிருக்கலாம். வேறெங்கும் இருப்பதைக் காட்டிலும் இந்தியாவிலேதான் இந்நிலை மிகுதியான அளவில் காணப்படுகின்றது. ஏனெனில், ஆன்மிகச் செல்வத்தின் அடிக்கீழேதான் மற்றைய செல்வங்கள் தங்கி நிற்கின்றன என்று அவர்கள் கருதுகின்றார்கள்; ஒவ்வோர் உயிரிலும் உள்ள ஆன்மிக வெளிப்பாடுகளையே கருதி இயற்கையை இந்த வகையிலே நோக்குகிறார்கள். ஆகவே, வெல்ல முடியாத பொறுமையுடன் வாழ்க்கையின் திருவில்லாத இன்னலாம் தாக்குதல்களை ஏற்று அவற்றைப் புறக்கணிக்கவும் செய்கிறான் ஆன்மிகச் செல்வம் படைத்தவன்; அப்போதெல்லாம் தன் மனத்தில் மற்றவர்களுக்குள்ள ஆன்ம வலுவும் ஆன்ம அறிவும் இருப்பதனை முற்றும் உணர்கின்றான். அதனாலேதான் அத்தகைய ஒரு நாட்டிலிருந்தும் அதன் மக்களிடமிருந்தும் இடையறாத ஆன்மிகச் செல்வமாகிய வெள்ளம் பாய்ந்தோடிச் சிந்தனையாளர்களின் நெஞ்சினையும் கவனத்தையும் கவர்கின்றது. இந்த ஞானத் தீஞ்சுவை நீரைப் பருகியவர்கள் தங்களை

வருத்தும் உலகத் துயர்ப்பாரத்திலிருந்து விடுதலை அடைவார்கள்.

அவர் இவ்விரிவுரை நிகழ்த்துமுன் ஒரு முன்னுரையாகத் தம்மை அன்பர் பலர் பல் கேள்விகள் கேட்டுள்ளரெனக் கூறிக் கொண்டார்; அவற்றில் பலவற்றையும் தனித்த முறையில் தெளிவு படுத்துவ்தாக இசைத்துவிட்டு மூன்று வினுக்களை மட்டும் தேர்ந் தெடுத்துக் கொண்டு அவற்றிற்கு மட்டும் தக்க காரணங்கள் இருப் பதால் மேடை மீதிருந்தே விடை இறுப்பதாகத் தெரிவித்தார். அவையாவன: இந்திய மக்கள் முதலையின் வாய்க்குள் தங்கள் குழந்தைகளை எறிந்துவிடுவதுண்டா? ஜகந்நாதத்தில் தேர்க் காலின் கீழே தாமே வலுவில் வீழ்ந்து தம் உயிர்களை மாய்த்துக் கொள்வதுண்டா? இறந்துபட்ட கணவர்களுடன் அவர்கள் மனைவி யரையும் தீயிலிட்டுப் பொசுக்குவதுண்டா? நியூயார்க்கு மாநகரி லுள்ள தெருக்களில் சுற்றிச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் செவ்விந் தியர்களைப் பற்றிய வினுக்களுக்கு வெளியூரில் சென்றுகொண் டிருக்கும் ஓர் அமெரிக்கர் என்ன விடை அளிப்பாரோ, அந்த முறையிலேயே அவர் பேசி முடித்தார். இத்தகைய கட்டுக் கதைகள் பலவும் ஐரோப்பாக் கண்டத்தில் பரவி வருகின்றன அல்லவா? இன்னும் இவை நம்பவும்படுகின்றன. இத்தகைய உரைகள் நகைப் பிற்கு இடமாயிருப்பனவேயன்றி விடை பெறத் தக்கனவல்ல. அறி யாமையால் அல்லது நல்ல எண்ணத்தால் கேட்ட கேள்விகளுக்கு வஞ்சப் புகழ்ச்சி முறையிலேதான் விடைகூற வேண்டியதாயிற்று. கேள்வியாதெனில், 'பெண் குழந்தைகளை மட்டுமே அவ்வாறு ஏன் கொடுக்கிருர்கள்?' என்பது. அவர் மொழிந்த வேடிக்கையான விடையைப் பாருங்கள்! ஒரு கால் பெண் இனத்தின் தசை மென்மையுடன் கூடியதாலும் இளமையோடிருப்பதாலும் அவை நீர் வாழ் உயிர்களுக்கு மிகவும் எளிதில் மென்று சீரணிக்க இயலு மன்றே? அந்நாடு இருளடைந்த நாடன்றே? ஜகந்நாதத்தைச் சுற்றிப் புனையப்பட்டிருக்கும் கதையைப்பற்றிக் கழறுங்கால் இந் நகரிலுள்ள பழமை மிக்க பழக்கத்தைக் குறிப்பிட்டுவிட்டு, யாத்திரிகர் சிலர் தேர் வடத்தைப் பிடித்திழுத்துப் புண்ணியம் ஈட்டிக் கொள்ளும் முயற்சியில் தவறித் தேரடியில் விழுந்து மாண் டிருக்க வேண்டுமென்று மொழிந்தார். மிகைப்படுத்திக் கூறும் இத்தகைய சில செய்திகளைப் பிற நாட்டின் நன்மக்கள் நம்பிக் கலங்கிப் பேரதிர்ச்சி அடைந்துவிட்டார்கள் போலும்! கைம்பெண் களைத் தீயிலிடுவதில்லை என்று மறுத்துக் கூறினர். ஆனல், கைம்

பெண்டிர் சிலர் கொழுந்தியில் தாமே விழுந்து தம்மை எரித்துக் கொண்டது உண்மைதான் என உரைத்தார். இப்படி நடந்துள்ள சிற்சில நிகழ்ச்சிகள் புண்ணியம் படைத்த சான்ருேர் சிலரால் தடுக்கப்பட்டும் வந்தன. இத்தகைய தற்கொலையாம் கொடுமைக்கு எதிர்ப்பிரசாரம் செய்யப்பட்டும் வந்தது என்பது திண்ணம். எனினும், தாம் தம் கணவரைப் பின்பற்ற வேண்டுமென்று தம் கருத்தை வெளிப்படுத்தி அந்தக் கொடுமையான சோதனைக்குத் தாமே தம்மை உட்படுத்திக்கொள்ளும் விருப்பத்தைத் தாமே கொண்டதாக அவர்கள் கூறும்போது எவராலேதான் அவர்களைத் தடைப்படுத்தக்கூடும்? அதிலும் அவர்கள் தங்கள் கைகளை முதலில் தீயிலிட்டு அவை எரிந்துபோம் வரை பொறுமை காட்டி ஞலன்றி, உடன் கட்டையேற அனுமதிக்கப் பெறவில்லை. அவர்களுக்கு விருப்பமின்றித் தடுக்கப்படவில்லை. மேலும், இத்தகைய சம்பவங்கள் நிகழ்வது இந்தியாவில் மட்டுமன்று. அன்புள்ள மகளிர் தம் நாயகர்களின் பிரிவுக்கு ஆற்ருது உடனே அவர்கள் சென்றுள்ள அமரநாட்டுக்குத் தாமும் விரைந்தேக வேண்டுமென்ற அவாவினைத் தீர்த்துக் கொள்ள முன்வந்துள் ளார்கள். இம்முறையான தற்கொலைகள் ஒவ்வொரு நாட்டிலும் நடந்திருக்கின்றன. இது எந்தநாட்டிலும் காணக்கூடிய தனிப் பட்ட வெறியே. ஆனல், இந்நாடுகளிற்போலவே இந்தியாவிலும் இவ்வெறி இயல்பன்று. மக்கள் இந்தியாவில் பெண்களை எரிக்கிற தில்லை. மற்றும் அவர்கள் என்றும் சூனியக்காரிகளை—மாயம்வல்ல வரெனக் கருதப்பட்டவரை—எரித்ததே இல்லை, இல்லை, இல்லை.

கடைசியாகக் கூறப்பட்ட செய்தி மனத்தில் நன்ருய்த் தைக்கக் கூடிய குத்தலேயாகும். இந்த இந்து சந்நியாசியின் ஆன்மிகத் தத்துவ முறையைக் கூறுபடுத்திக் காண்பது இப்போது நமக்கு அவசியமில்லை. இப்போது இங்குக் குறிப்பிட வேண்டுவது ஒன்று மட்டுமே உளது; பொதுவான உண்மை இதுதான்: ஒவ்வொரு வரும் தனிமுறையில் பூரணத்தன்மை பெறும்பொருட்டு போராட வேண்டும். ஓர் இந்திய அறிஞர் இவ்வாண்டில் இலவல் ஸ்தாபன பாட முறையை தொடக்கி வைத்துள்ளார். ஸ்ரீ முசும்தாரவர்கள் தொடங்கி வைத்த அதனைச் சகோதரர் விவேகானந்தர் தக்க முறை யில் பூர்த்தி செய்விப்பது மிகவும் மேன்மையானதே. இந்நாட்டைப் புதிதாகப் பார்க்கவந்தவர் மிகவும் சீரிய தோற்றப்பொலிவு கொண் டவர்; உள்ளத்தைக் கவரக்கூடியவர். இந்தியத் தத்துவ நூலின்

கருத்துப்படி தோற்றப் பொலிவை பொருட்படுத்தக்கூடாது. என்றாலும் அதனைக் கூறாமல் இருக்க இயலவில்லை. சர்வ சமயப்பெரு மன்றத்தில் 'மக்கள் கடைசி வரையில் வெளிச் செல்லாதிருத்தற் பொருட்டு விவேகானந்தரை இருத்தி வைத்திருப்பது வழக்கம். வெப்பமிக்க ஒரு நாள் சொல்லாற்றல் பெறாத ஒரு பேச்சாளர் நீண்ட நேரம் பேசிவிட்டார். நூற்றுக்கணக்கான மக்கள் அப் பேச்சினைச் சுவைக்காமல் வெளியேறி வீட்டுக்குத் திரும்பி சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது தலைவர் எழுந்து ஆசி கூறு முன்னர், சுவாமி விவேகானந்தர் சிறிது நேரம் பேசுவார்களென்று மொழிந்தார். உடனே கொலம்பஸ் மண்டபத்தில் வெப்பம் தாங்காது விசிறிக்கொண்டிருந்த நாலாயிரம் கனவான்களும் கட்டுண்டவர்கள் போன்று விவேகானந்தரின் கால் மணி நேரப் பேச்சைக் கேட்க ஒருமணி நேரமோ இரண்டு மணி நேரமோகூட மிக்க அமைதியுடனும், ஒழுங்குடனும், புன்முறுவல் பூத்த முகப்பொலிவுடனும் காத்தே இருந்தார்கள். சிறந்த பொருளை இறுதியில் வைக்கும் பண்டைத் தந்திரத்தைத் தலைவர் அறிந்திருந்தார் போலும்!

இந்தியா உலகத்திற்கு விடுத்த செய்தி

[சுவாமி விவேகானந்தர் எழுதிக் குவித்த இதழ்களுக்கிடையே துருவி ஆராயும் பொழுது பின்வரும் குறிப்புகள் எங்களுடைய நயன வட்டத்தில் மிதந்து வந்தன. விரிவான நூல் ஒன்றை எழுதக் கருதி அவர் 42 குறிப்புகள் கொண்ட ஒரு திட்டம் வகுத்தார். இவற்றில் சிலவற்றைத் தம் நூலுக்குரிய தோற்றுவாயில் ஆய்ந்தார். ஆனால், அவர் வகுத்துக்கொண்ட திட்ட நூல் முடிவு பெறவில்லை. எங்கட்குக்கிடைத்த கைப்பிரதியை அப்படியே இங்கே வழங்குகின்றோம்.]

பொருட்குறிப்புகள் :

1. 'வீரம் செறிந்த வாழ்வு வாழ்வீராக!' என்பதுதான் நான் மேலை நாட்டுக்கு நல்கிய அறிவுரைச் செய்தியாகும்; என் நாட்டு மக்களுக்குரியது அவர்களைவிட வீரமுற்றுத் திகழ்வதேயாகும்.

2. வியக்கத்தக்க மேலை நாட்டில் யான் நான்காண்டுகள் உறைந்தது என் தாய்நாட்டை இன்னும் சிறந்த முறையில் அறியும்படி செய்தது. செறிந்த இருள் மிக்க நிழல்கள்தாம்; ஆனால் முன்னைவிடச் சுடர் விட்டெழும் தீபங்களே.

3. ஆய்வுக்கண்கள் கொண்டு சுற்றி நோக்குதல்—இந்தியர்கள் இழிவான நிலையை அடைந்திருக்கின்றனர் என்பது உண்மையன்று.

4. எல்லா மக்கள் இனங்களும் கலந்து ஒன்றுபடுவதுதான் நம் நாட்டிற்கு மட்டுமன்றி, மற்றைய நாடுகளுக்கும் முன் நிற்கும் பிரச்சினையாகும். அயல் நாடுகளைக்காட்டிலும் இந்த நாட்டிலும் அது மிக மிக விரிந்ததாகும்.

5. ஒத்த மொழி, ஒத்த அரசியல், இவற்றைக்காட்டிலும் ஒத்த சமயங்களே மன்னுயிரனைத்தையும் பிணைக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்தவை.

6. மற்றைய நாடுகளில் பெருவலிமை கொண்டு இத்தகைய ஒற்றுமையை நிறுவப்பார்க்கின்றார்கள். அதாவது, ஓர் இனத்தின் பண்பாட்டை மற்றையவர்கள் மீது சுமத்தப்பார்ப்பது. இதன் விளைவாக சிறிது காலத்திற்கே நிற்கும் சுறுசுறுப்பான தேசீய வாழ்க்கை உண்டாகும்; பிறகு அழிவுதான்.

7. ஆனால், இந்தியாவில் எவ்வளவுக்கெவ்வளவு சமுதாயப்

பிரச்சினை விரிவாயிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அதைத் தீர்க்கும் முறை பையப் பையவும் அமைதியாகவும் செல்லும். மிகு நெடும்பண்டைக்காலந்தொட்டே மற்றவர்களின் பழக்க வழக்கங்களையும் முரண்பாடுள்ள அமிசங்களையுடைய சமயங்களையும் பொறையுடன் ஏற்பதுதான் நாட்டின் சிறந்த பண்பாடாய்த் திகழ்ந்து வருகின்றது.

8. பிரச்சினை மிகச் சிறியதாயிருந்து, அதைத் தீர்க்கக்கூடிய ஆற்றலும் போதுமான அளவிற்குத் திகழுமானால், ஒற்றுமையை நிறுவக்கூடும்; ஆனால், ஆணை செலுத்துபவர்களைத் தவிர, வேறு உயர்ந்த இனங்களில் காணக்கூடிய சிறந்த இயல்புகளை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடக்கூடிய நிலை பிறக்க நேரும். மன ஆற்றல் படைத்த ஒரு குழு, தன் நலத்திற்காகப் பெரும்பாலாரைப் பயன்படுத்திக்கொள்ளுதல், அவர்கள் முன்னேறக் கூடிய வாயிலை அடைத்ததாகுமன்றோ? மேலும், ஆணை புரிந்தோரின் குழுவின் சத்தியம் நாளடைவிற்குன்றி ஓய்ந்துவிடும். பார்ப்பதற்கு என்றும் சிதைவுறாக் கட்டடம் போலத் தோன்றினாலும், எல்லா நாகரிகங்களும் அடிவரையில் ஆட்டங் கொடுத்துச் சரிந்து மடிந்து மண்ணொடு மண்ணாய்ப் போவது பார்க்கின்றோம். சான்றாக, கிரேக்க சாதியினர், ரோமன் இனத்தார், நார்மன் மக்கள்—இவர்களுடைய நாகரிகங்களைக் கண்டுகொள்ளலாம்.

9. ஒரு பொது மொழி மிகவுந் தேவைதான். ஆனால், இதுவும் குற்றங்குறைகளுக்குட்பட்டதேயாகும். உயிர் வாழ்ந்து செழிப்புற்றுத் திகழ்ந்துகொண்டிருக்கும் மற்றைய மொழிகளை நலிவுறச் செய்யும் ஓர் இன்னல் இதில் கரந்துதான் இருக்கின்றது.

10. மற்றைய மொழிகளெல்லாம் ஒன்றின் வடிவத்தோற்றங்கள் என்று போற்றக்கூடிய ஒரு தெய்வ மொழியைத் தேர்தலே இந்தப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய உபாயமாகும். இத்தகைய மொழி வடமொழியெனக் கண்டார்கள்.

11. திராவிட மொழிகள் என்று சொல்லக்கூடியவை, வடமொழியிலிருந்து பிறந்தவையோ, அல்லவோ என்பதை வரையறுத்துச் சொல்லுவது இயலாது. நடைமுறையில் வடசொற்கள் திராவிட மொழிகளிற் புகுகின்றன; ஆனால், திராவிட மொழிகள் தமக்குரிய தனிச் சிறப்புகளை இழந்துவிடாமல் இலங்கி வருகின்றன.

12. எல்லாவற்றிற்கும் பின் அணியில் காட்சி அளிக்கும் ஒரு மனித இனத்தைக் கண்டோம். ஆரியரே அந்த மனித இனம்.

13. மத்திய ஆசியாவிலிருந்து பால்டிக்கு வட்டாரம் வரையில் ஆரியர்கள் என்ற தனிப்பட்ட இனத்தவர்கள் வாழ்ந்து வந்தார்களா என்பது ஒரு பிரச்சினை.

14. மனித இனங்கள் என்று கூறப்பட்ட இனங்கள் யாவும் கலப்புள்ளவைகளே.

15. செவ்வண்ணமும் மைவண்ணமும்.

16. சரித்திரக் கற்பனை உலகிலிருந்து விழித்து எழுந்து பகுத்தறிவாம் வையகத்திற்கு வருதல். துருக்கி, பஞ்சாபு, வடமேற்குத் திபேத்து—இப்பிரதேசங்களில் ஆரியர்கள் வாழ்ந்து வந்ததாகச் சுட்டும் பழைய ஏடுகள்.

17. பல இனத்தவர்களின் பல வகைப் பண்பாடுகள்—கலாசாரங்கள்—இவற்றின் கலப்பிற்கு இந்நிலம் காரணமாயிருந்தது.

18. எப்படி வடமொழி, மொழிகளினிடையே எழும் முரண்பாடான பிரச்சினையைத் தீர்க்கின்றதோ, அப்படியே மன்னுயிர் முன்னேற்றம், பண்பாடு, சமுதாயம், அரசியல்—இவற்றினின்று எழும் பிரச்சினைகளின் சிக்கல்களை அவிழ்க்கக்கூடியது உயர் பிராம்மண இயலேயாகும். (அந்தணர் செந்தண்மையாகும்.)

19. இந்தியாவின் சிறந்த இலட்சியம் அந்தணர் செந்தண்மையைப்பூண்டு ஒழுகுவதே.

20. யாதொரு சொத்திலும் பற்று இல்லாமல் இருந்தல், தன்னலம் அற்றுத் திகழ்தல், யாதொரு சட்டத்துக்கும் அடிமையாய் அமையாது வாழ்வு நடத்துதல், அறநெறியைத் தவிர வேறு வேந்தரின் ஆட்சியை ஏற்காமல் இலங்குதல்.

21. பல இனத்தவர்கள் பரம்பரையாய் வரும் பிராம்மண இயல் (அந்தணர் செந்தண்மை) தமக்கும் உண்டு என்று பண்டைக் காலத்திலும் இக்காலத்திலும் போராடிப் பெற்றிருக்கின்றனர்கள்.

22. அருஞ்செயல் ஆற்றும் சான்றோன் தான் புரியும் பணியில் யாதோர் உரிமையும் பாராட்டமாட்டான், எதற்கும் உதவாத மடி கொண்ட மதியிலிகளே உரிமையை எதிர்ப்பார்கள்.

23. பிராம்மணர், க்ஷத்திரியர்—இவர்களின் இழிவான நிலை, இந்தக் கலியுகத்தில் பிராம்மணர் அல்லாதவர்களே இருப்பார்கள் என்று புராணங்கள் கூறுகின்றன. இது உண்மைதான். இவ்வுண்மை நாளுக்கு நாள் வலியுறுகின்றது. ஆனால், உண்மையான அந்தணச் சான்றோர் சிலர் இந்தியாவிலேதான் இருப்பர்.

24. க்ஷத்திரிய இயல்பிலிருந்துதான் பிராம்மண இயல்புக்கு

முன்னேற வேண்டும். இப்படி அவர்கள் தங்கள் முன் பிறவிகளில் சென்றிருப்பார்கள். இந்தப் பிறவி அதைப் புலப்படுத்தும்.

25. சமயத்திலேதான் முழுத்திட்டமும் அரும்பும்.

26. ஒரே இனத்தின் பல குடி மக்கள், பாபிலோனியர்கள் வழிபடும் பால்ஸ் என்னும் பொதுத் தெய்வப் பெயரின் கீழ் அமைந்துள்ள ஒத்த தெய்வங்களை வழிபட்டார்கள். ஹீபுரு இனத்தார் வழிபடுவன மோலக்கு என்ற தெய்வங்கள்.

27. பால்ஸ் என்ற தெய்வங்களைப் பால்-மெரோடாசு என்ற பெருந்தெய்வத்தோடு ஒன்றிக் கரைந்துபோகும்படி செய்யும் பாபிலோனியர்களின் முயற்சி, மோலாக் நயாவா, அல்லது யாகு என்ற தெய்வநாயகன் அடிக்கீழ் மோலக்குத் தெய்வங்களைக் கொண்டு வரும் இசரேல் இனத்தாரின் முயற்சியாகும்.

28. பாரசீகர்களால் பாபிலோனியர்கள் அழிக்கப்பட்டார்கள்; பாபிலோனியர்கள் கண்ட தெய்வப் புராண வரலாற்றை ஹீபுரு சாதியினர் தம் தேவைக்கேற்றவாறு திருத்தி அமைத்து, 'ஒருவனே தேவன்,' என்னும் தீவிரமான சமயத்தை நிறுவினர்.

29. ஒரே தெய்வக் கொள்கை சர்வாதிகார மன்னராட்சி போலக் கட்டளைகளை மிகவிரைவாக நிறைவேற்றும்; எல்லாச்சக்திகளும் ஒரே கையில் குவிந்திருக்கும். ஆனால், அதற்கு வளர்ச்சி இல்லை. அதற்குரிய மிக இழிவான அம்சங்களும் உண்டு. கொடுமை, பிறரை நலிவுறுத்தல் ஆகிய இவையிரண்டும் அது தரும் மிகத் தீய விளைவுகளேயாகும். அதன் ஆட்சிக்கீழ் வரும் எல்லா நாடுகளும் சிலகாலம் உயர்ந்து கொழுந்சுடர் விட்டுத் திகழ்ந்து இறுதியில் அவிந்து போய் விடும்.

30. இந்தியாவில் இத்தகைய பிரச்சினை தோன்றிற்று. அதை அவிழ்க்க வேண்டிய முறையையும் இந்தியர் கண்டுவிட்டனர்.

एकं सद्विप्रा बहुधा वदन्ति

இதுதான் ஒவ்வொன்றிற்கும் ஆதாரச் சுருதியாய் ஒலிக்கின்றது; இதுதான் ஒரு "கமானுக்கு" ஆதாரக் கல்லாய் அமைகின்றது.

31. வியப்புறத்தக்க முறையில் எல்லாவற்றையும் ஏற்கும் வேதாந்தியின் பொறை உணர்ச்சியே இதன் விளைவாகும்.

32. பற்பல சமயங்களின் தனித் தகைமைகளை மாய்க்காது

சமரசம் காண்பதே நம்முன் நிற்கும் மிக உயர்ந்த பிரச்சினை யாகும்.

33. விண்ணின் மீதுள்ள ஒரு சான்றேனைப் பற்றி நிற்கின்ற சமயமானுலுஞ்சரி, விண்ணுறைகின்ற ஒரு தேவனைச் சார்ந்தே திகழ்கின்ற சமயமானுலுஞ் சரி, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இயலாது.

34. அத்துவைதத்தின் பெருமை இதுதான். இது ஒரு தத்துவத்தைத்தான் விளக்குகின்றது. உயர்ந்த சான்றேர்களான மாந்தர்களுக்கும் தெய்வங்களுக்கும் இந்தத் தத்துவத்தின் கீழ் முற்றிலும் நடமாட வாய்ப்புண்டு.

35. இம்முறையில் எஞ்ஞான்றும் எல்லாம் நடந்துகொண்டு தான் இருக்கின்றன. இக்கோணத்திலிருந்து நோக்கினுற்றன் நாம் முன்னேறுவதாகக் கொள்ளப்படும். சான்ருக, மகமதிய ஆட்சியின் கீழ் விளங்கிய தீர்க்கதரிசிகளைக் காண்பீர்களாக.

36. பண்டைய நாட்களில் மக்கள் இந்த ஆன்ம ஒளியை நன்கு உணர்ந்து இலங்கினுர்கள். இந்த ஆன்ம ஒளிப் பையப் பைய மங்கிற்று. இப்படி நோக்கும் பொழுதுதான் நாம் சீர் குலைந்து போய்விட்டது புலனுகும்.

37. வருங்காலத்தில் இப்படித்தான் நிகழப் போகின்றது: ஒரு மனித இனம் மற்றைய இனங்களின்மீது ஆட்சி புரிந்து, இவைகளுடைய அருஞ்செயல்களின் விளைவுகளைத் தன் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொண்டால், கருத்துகளிலும் குருதிக் கலப்பிலும் தவிர்க்கமுடியாதபடி ஒன்ருய்ப் போனவர்களுடைய எல்லாச் செல்வங்களும் ஒரு கைக்குள் அடங்கிவிடும். ஒரு மாபெரிய அரக்கன் போல உருவாகின்ற ஒரு மக்கட்சமுதாயத்தை என் அகக் கண் சித்திரித்துப் பார்க்கின்றது. வருங்காலத்து இந்தியா, புதுமைக்கு ஒரு புதுமையாய், பழமைக்கு ஒரு பழமையாய்ப் பொலிவுற்றுத் திகழப்போகின்றது.

38. இந்நெறியில் நாம் பணி ஆற்ற வேண்டும்: சமுதாயப் பழக்கவழக்கங்கள் சுவர்கள் போலக் குறுக்கே நிற்கும். இவை சுமிரிதிகளால் விளைந்தவை; சுருதிகளால் விளைந்தவை அல்ல. சுமிரிதிகள் மாறவேண்டும். இதுதான் எல்லோருக்கும் ஏற்ற நியதியாகும்.

39. வேதாந்தத் தத்துவங்களை இந்தியாவில் எங்கும் பிரசாரம் செய்ய வேண்டும்; இவற்றை வெளிநாட்டிலும் முரசறைந்து தெரி

விப்பது சாலச் சிறந்ததாகும். நம்முடைய கருத்து மற்றைய நாட்டினரின் மனங்களில் நன்கு புகவேண்டும்; வெற்று எழுத்துக்களால் மட்டுமின்றி, நம்முடைய தூய வாழ்வினுலும் அது அவர்கள் உள்ளங்களில் வேரூன்ற வேண்டும்.

40. கலியுக அறம் கருமமே; கருமத்தினுல் புனிதராகாதவர் ஆன்ம ஒளி பெறல் இயலாது.

41. ஆன்மிக ஞானச் செல்வத்தையும், உலக அறிவுச் செல்வத்தையும் வழங்குதல்.

42. துறவு, துறவிகள் என்னும் இந்த முரசொலிதான் நாட்டின் முழக்கமாகும்.

தோற்றுவாய்

மேலை நாட்டு மக்களுக்கு நான் மொழிந்துள்ள அறிவுரைச் செய்தி வீரம் செறிந்ததே. என் அன்பு மிக்க நாட்டு மக்களாகிய உங்கட்கு நான் கூறப்போகும் செய்தி அதனினும் துணிவு மிகுந்ததேயாகும். மேலை நாட்டினருக்கு தொன்மை வாய்ந்த பண்டைய இந்தியாவின் அறிவுரையை வழங்க இயன்ற வரை முயன்றேன். என் முயற்சி வெற்றிகரமாக முடிந்ததோ, வேறு விதமாக முடிவுற்றதோ, அதனை வருங்காலந்தான் திட்ட வட்டமாகத் தெரிவிக்கக்கூடும். ஆனல், அதே வருங்காலத்தில் வலிமையுற்ற குரலாக ஒலிக்கப் போவது இப்போதே மெல்லிய—ஆனல் தெளிவு சான்ற முணுமுணுப்பாக ஒரு செய்தியைப் பரப்பி வருகின்றது. அந்த முணுமுணுப்புகள் நாளுக்கு நாள் வலிமை எய்தி வருகின்றன. அச்செய்தி இப்போது திகழும் இந்தியாவிற்கு வருங்கால இந்தியா அனுப்பும் செய்தியேயாகும்.

மிகப் பெரிய அற்புதமான பல நிலையங்களையும், பழக்க வழக்கங்களையும், ஆற்றலும், வன்மையும் காட்டிய வியத்தகு இடங்களையும் கண்டுள்ள யான், பலதிறப்பட்ட மக்கள் இனத்தாருக்கு நடுவே நின்று அவற்றைத் துருவி ஆராயும் நற்பேறு பெற்றுள்ளேன். ஆனல், இவை யாவற்றிலும் அதிசயிக்கத்தக்கது யாதெனின் புறத்தோற்றத்தில் வேறுபட்டுக் காணும் அவர்களுடைய பழக்க வழக்கங்கள், கலாசாரம், சத்தி முதலியவற்றிற்கு அடியிலே, ஒரே வகையான இன்பங்களாலும், துன்பங்களாலும், ஒரே பான்மையாலும், ஒரே பலவீனத்தாலும், ஆற்றலாலும் உந்தப்பட்டுத் துடித்துக் காட்டும் ஒரு படிப்பட்ட மிகப் பெரிய வலிய மனித இதயமேயாகும்.

நன்மை தீமைகள் எங்கும் பரவியேயுள்ளன. அவற்றின் சமநிலை விசித்திரமான அளவிற்குச் சீர்தூக்கும் கோல்போல அமைந்துள்ளது. ஆனால், எல்லாவற்றினும் மேலாக, மானிடனது பெருஞ் சிறப்பு வாய்ந்த ஆன்மவொளி எங்கணும் சுடர்விட்டெரிகின்றது. இதை அறிந்தோர்க்கு இது விளக்கம் அளிப்பதற்குத் தவறுகிறதில்லை. மன்னுயிர்க்குப் பெருநல்லுதவி நல்கும் சான்றோர்களும் பெண்மணிகளும் எந்த மனித இனத்திலும் பிறக்கின்றார்கள். அதனால், தெய்வத்தன்மை வாய்ந்த மன்னர்க்கு மன்னரான அசோகர் மொழிந்துள்ள "ஒவ்வொரு நாட்டிலும் பிராம்மணர்களும் சிரமணர்களும் உள்ளார்கள்,'' என்ற உரை மெய்ப்பிக்கப்படுகின்றது.

தன்னலமற்ற தூய ஆன்மாக்களே அளிக்கத்தக்க நிறை அன்புடன் என்னை வரவேற்ற மேலை நாட்டாருக்கு நான் என் உளங்கனிந்த நன்றியைச் செலுத்துகிறேன்! ஆனால், வாழ்வு முழுதும் என் பற்றும் விசுவாசமும் இந்த எனது தாய் நாட்டிற்கே உரியவையல்லவா? நான் இன்னும் ஓராயிரம் பிறவிகள் எடுத்தாலும், அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கணமும் என் தோழர்களே, என் நாட்டு மக்களே, உங்களுடைய பணியிலேயே அர்ப்பணிக்கப்பட்டுக் கழியும்.

ஏனெனில், என் உடலும், உண்மை ஆன்மிகம் பற்றிய என் எல்லா உடைமைகளும் இந்நாட்டிற்கு உரியனவே. நான் எதிலேனும் வெற்றி பெற்றிருந்தால், அவ்வெற்றியில் பிறந்த புகழும் மகிமையும் உங்களைச் சார்ந்தவைகளே; எனக்குரியனவல்ல. என்னுடைய பலவீனமும் தோல்வியும் என்னையே சூழட்டும். பிறப்புத் தொட்டே ஒருவனுக்கு அறிவூட்டுவதற்கென அமைந்த பெரும் படிப்பினைகளால் பயன் பெறாவிட்டால், அக்குறைபாடும் தோல்வியும் அவனுக்கே உரியனவாகுமன்றோ?

எத்தகைய சிறப்புற்ற நாடு இது! வரலாற்றுக் காலத்துக்குட்படாத தொன்றுதொட்டுப் பற்பல நூற்றாண்டுகளாக இவ்வையகத்தில் மிக்க தூய்மையுள்ள சான்றோர்கள் உயிர்க்களை பெய்யும் தம் உயர்ந்த எண்ணங்களைப் பரப்பி விலங்கின உணர்ச்சியிலிருந்து மக்களை உயர்தெய்வ நிலைக்கு அழைத்துச் செல்ல அரும்பாடு பட்டிருக்கின்றனர் என்பது உண்மையே. இப்புனித நாட்டில் நிற்கும் எவனும்—நம் நாட்டைச் சார்ந்தவனானாலுஞ் சரி அயல் நாட்டானானாலுஞ் சரி—இதை உணராமற்போகான். இதை உணர இயலாதவன் விலங்கின் நிலைக்கு இறங்கிய கயவனாயிருக்க வேண்

டும். ஆன்மிக ஞானத் துடிப்புகள் இந்நாட்டில் வீசுகின்ற காற்றிலும் கலந்து எழக் காண்கின்றோம். இந்நாடு தத்துவத்துக்கும் அறநெறிக்கும் ஆன்மிகத் துறைக்கும் உறைவிடமாகும் தூய்மை உடையது. தன் அகத்தே உள்ள விலங்கின் தன்மையை வெளியேற்ற முடியாதபடி தடை செய்யும் போராட்டத்தில் மனிதனுக்கு அமைதி அளிக்கும் நாடு இது.

மனிதன் தனது கொடுமை என்னும் ஆடையைக் களைந்து எறிந்துவிட்டுத் தன்னைப் பிறப்பு இறப்பு அற்று என்றும் ஆனந்த முற்ற அழிவற்ற ஆன்மாவாகக் காணச்செய்யும் எல்லா பயிற்சிக்கும் களனுய்க் காட்சி அளிக்கின்றது. இன்பக் கிண்ணம் பருகிய நாடும் துன்பக் கலம் துய்த்த நாடும் இதுவே. எல்லாவற்றையும் பொய்த் தோற்றமென, பேய்த் தேரென, கானல் நீரென உணர்ந்த நாடும் இதுவே. இளமையின் தருக்கில், இன்பப் போகத்தின் அணைப்பில், புகழின் உச்ச வரம்பில், ஆற்றலாம் ஏணிச் சிகரத்தில்—இவையனைத்திலும் மாய வாழ்வின் தோற்றங்களைப் பொய்யெனத் தெளிந்து அத்தளைதனைத் தகர்த்தெரியும் நாடும் இந்நாடே. மக்கட்பெருங்கடலிலே கிளர்ந்தெழும் இன்ப துன்பங்கள், வலிமை, பலவீனங்கள், செல்வம் வறுமைகள், மகிழ்ச்சி, துயர்கள், சிரிப்பு ஓலங்கள், வாழ்வு சாவுகள் என்னும் பெருநீரோட்டங்களுடைய தாக்குகள் எதிர்த் தாக்குகளின் மும்முரத்தைக் கண்ணுறுகின்றோம். இக்கொந்தளிப்பெல்லாம் அடங்கி அழியா அமைதியாம் நல்லிசை முரலக் கேட்போம். அதன் நடுவே துறவாம் ஓர் அரியணை திகழக் காண்பதும் நம் புனித நாடேயாகும்.

பிறப்பு இறப்புகளைப் பற்றியும் வாழ்வின்கண் உயிருக்குள்ள பேரவாவினைப் பற்றியும் வாழ்வைப் பாதுகாக்கும் வீணான போராட்ட வெறியால் துயர்கள் மிகுதலைப்பற்றியும் எழுந்த இப்பிரச்சினைகளெல்லாம் முதன்முதலாகச் சிந்திக்கப்பட்டு, இதுவரையும், இனிமேலும் காண முடியாத அளவிலே தீர்க்கப்படலாயின. காரணம் யாதெனில், இங்கேதான், இங்கு மட்டுந்தான், வாழ்க்கையும் கேடுறும் நிலையேயென்பதும், ஒரே மெய்ப்பொருளாயுள்ள ஒன்றின் நிழலே அது என்பதும் கண்டுபிடிக்கப்பட்டன. தங்கள் உடன் பிறந்தோர்களின் உரிமைகளைப் பறித்தேனும் தம் வாழ்க்கை இன்பங்களை துய்க்க வெறிகொண்டு, அவற்றில் அயல் நாட்டு ஆடவரும் பெண்டிரும் மூழ்குவதுபோல, அவ்வளவு உறுதி

கொண்டு, ஆனுல் நன்முறையிலே பேருண்மை ஒளியைத் தம் அனுபூதிச் செல்வமாக்க அச்சமில்லாமல் மெய்ஞ்ஞானக் கடலில் குதிப்பார்கள். இங்கேதான், இங்கு மட்டுத்தான், மனித உள்ளம் விரிவடைந்து மாந்தர்களை மட்டுமன்றிப் பறவைகளையும் விலங்கு களையும் செடி கொடிகளையும் தன்னுள் அடக்கிக்கொண்டது. மிக உயர்ந்த பொருள்களிலிருந்து மிக அற்பப் பொருள்கள் வரையில்—அதாவது உயர்தேவர்களிடமிருந்து ஒரு சிறு மணல் வரையில் திகழ்கின்ற எல்லாம், மிக விரிவாக அகன்று நீண்டு ஓங்கி வளர்ந்த அகண்ட மனித உள்ளத்தில் இடம் பெறுகின்றன. இங்கேதான் மனித ஆன்மா (சீவான்மா) பிரபஞ்சத்தின் துடிப்பைத் தனது நாடித் துடிப்பாகக் கருதும் அளவிற்கு அதனைப் பின்பற்ற ஒரே பொருளாக உணரலாயிற்று.

இந்தியா சீழ்நிலை எய்திவிட்டதெனவே விரிவாகப் பலர் கூறக் கேட்கின்றோம். நானும் அவ்வாறு கூறுவதில் உண்மையுண்டென்று நம்பிய காலமுமுண்டு. இப்பொழுது என் கண்களை மறைத்த மனக்கோட்டம்—உண்மையை உள்ளவாறு அறியாதபடி குறுக்கே நின்ற மனக்கோட்டம்—அகன்றுவிட்டது. அயல் நாடுகளைப் பற்றிக் கற்பனை வண்ணங்கள் கொண்டு நான் சித்திரித்த ஓவியங் களின் ஒளியெல்லாம் நேரில் கண்ட பொழுது மங்கிவிட்டன. இத்தகைய அனுபவக் குன்றின்மீது நின்று நோக்குங்கால் நான் என் தவற்றை உணர்ந்தேன். அதை மிக்க பணிவுடன் நான் ஒப்புக்கொள்ளுகின்றேன். ஆரியப் புனித நன்னுடே, நீ ஒரு போதும் சீழ் நிலைக்கு இழிந்ததில்லை. செங்கோல்கள் சிதைந்து முறிந்து சேணில் எறியப்பட்டுள்ளன. அதிகாரமாம் பந்து கை மாறிக்கொண்டேதான் வந்தது; ஆனுல், இந்தியாவிலோ, அரசவை களும் அரண்மனைகளும் சிலரையே தான் துன்புறுத்தின; மக்களுட்பெரும்பாலார்—அதாவது, சமுதாய உச்ச ஏணிப்படியி லிருந்து சீழ்ப்படி வரையிலிருக்கிற பெரும்பாலார்—தமக்குரிய தடுக்கவொண்ணுத பாதைகளிலேதான் சென்றுகொண்டிருந்தனர். சில சமயங்களில் நாட்டு வாழ்க்கை வெள்ளம் பையப்பையவும் அரைகுறை நினைவுடனும், வேறு சமயங்களில் வன்மையுடனும் முழு விழிப்புடனும் பெருகிச் சென்றது. கணக்கிலா ஒளி திகழ் நூற்றுண்டுகளாம் இடையறுத மாபெரிய ஊர்வலத்தை நான் மிக்க பணிவச்சத்துடன் நின்று நோக்குகின்றேன். சங்கிலி போல முன்னேறிக்கொண்டு போகின்ற இந்த ஊர்வலத்தில்

ஆங்காங்கே மங்கலான இடைவெளிகள் தோன்றக்கூடும்; ஆனல், அடுத்த கணத்தில் சுடர்விட்டெழுந்து முன்னிலும் மிகுதியான ஒளியோடு அவை இலங்கும். என் நாடாகிய தாய் தனது மாண்புற்ற நல்லூழினை நிறைவேற்றுதற்பொருட்டுப் பொலிவு மிக்க கம்பீரத் தோற்றத்துடன் அடி பெயர்த்து வைப்பதைக் காண்கின்றேன். அவளது அருஞ்செயலை விண்ணிலோ மண்ணிலோ, அதிகாரம் படைத்த எந்த வல்லரசும் மாய்க்க இயலாது. அவளது நல்லூழ் யாதெனில், விலங்கின மனிதனைத் தெய்வப்பெற்றி வாய்ந்த மனிதனுகச் செய்யும் புது மலர்ச்சியே ஆகும். ஆம்; பெருஞ்சிறப்பு வாய்ந்த குறிக்கோளன்றோ அது! என் நேயர்களே, ஏனெனில், உபநிடதக் காலந்தொட்டே நாம் உலகினுக்கு உண்மை சாற்றி, அதை அறைகூவியுள்ளோம்.

न प्रजया न धनेन त्यागेनैके अमृतत्वमानशुः

அமரத்துவம், மிகுந்த உயர் செல்வத்தினுலன்றி, மக்களாலன்றி, கடுந்தியாகத்தினுல் மட்டுமே வாய்ப்பது. இனத்துக்குப் பின் இனமாக இவ்வறைகூவுதலை ஏற்று, இச்சிக்கலான பிரச்சினையை அவாவின் நிலைக்களக் கோணலிலிருந்து அவிழ்க்கப் பெரிதும் முயன்றன. அவை யாவும் பண்டே தோல்வியுற்றன. பழையனவெல்லாம் பொன்னுசை அதிகார நறவாம் வெறி—இவற்றுல் தொலைந்தே போயின. இவை தந்த கொடுமை துன்பம் இவற்றின் பாரம் தாங்க இயலவில்லை. அவற்றுல் புதியவையோ தள்ளாடி விழும் நைந்த நிலையிலுள்ளன. அமைதி நிலவுமா, அல்லது போர்தான் வெற்றியுறுமா? பொறை வெற்றி வாகை சூடுமா, அல்லது பொறுமையின்மை கொடுங்கோல் செலுத்துமா? நன்மை ஆட்சி புரியுமா, அல்லது தீமை தலைவிரித்தாடுமா? தோள் வலி மிகுமா, அல்லது அறிவு ஆணை நடத்துமா? இம்மையின் இன்ப வாழ்வு தன் புகழ்க்கொடியை நாட்டுமா, அல்லது ஆன்மிகந்தான் மௌலி பூண்டு அரியாசனத்தே அமருமா? யார் கண்டார்கள்! நாம் நம்முடைய பிரச்சினையை நீண்ட ஊழிக் காலங்களுக்கு முன்பே தீர்த்துவிட்டோம். திருவுற்றுலும், நலிவுற்றுலும் நாம் கால எல்லையளவும் அக்கொள்கையினைச் சிக்கெனவே விடாப் பிடியுடன் பிடித்து நிற்போம். தீராப் பிரச்சினைக்கு நாம் நல்கும் விடை அவாவறுத்தலே—உயர் துறவே—சந்நியாசமேயாகும்.

இந்தியாவின் ஆயுட்காலப் பணி இத்துறையினதே; இதுவே அதன்கண் வழங்கும் பாட்டுகளின் இடையறாத பல்லவி; அதன் வாழ்வின் முதுகெலும்பு; அதன் இருப்புக்கே காரணமானது; அதாவது, மனித இனத்தையே ஆன்மிக மயமாக்குவது. தார்த்தாரிகள் ஆண்டாலுஞ் சரி, துருக்கர் ஆண்டாலுஞ் சரி, மொகலாயர் ஆண்டாலுஞ்சரி, ஆங்கிலேயர் ஆண்டாலுஞ் சரி—அவளது இக்குறிக்கோளினின்றும் அவள் சிறிதேனும் விலகியதில்லை.

தமது நாட்டு வாழ்க்கையில், இந்தியா ஒருபொழுதேனும் இவ்வையகத்தையே ஆட்டிவைக்கும் மானுடர்களைப் பெற்றிருக்கவில்லை என்று எவரேனும் கூற இயலுமா? ஆனால், அவளது பணி ஆன்மிகம் பற்றியதே. அது போர் முரசத்தினாலோ, அல்லது காலாட்படையின் வலியினாலோ ஆக்கக் கூடியதன்று. அவளது சக்தி மெல்லிய பனித்துளி போல, செவி கேளாதபடி கட்புலனாகாதபடி உலகத்தின்மீது பரவியிருக்கிறது; ஆனால், நிலவுலகிலுள்ள சீரிய பண்புகளாம் மலர்களெல்லாம் அவள் செயலாலன்றோ அலர்ந்திருக்கின்றன! இச்செல்வாக்கு எவ்வித ஆரவாரமுமின்றி அமைதியாய் உருவானபடியால், தக்க சூழ்நிலைகள் ஏற்படும் வரையில் அயல் நாடுகளில் வேரூன்ற நீண்ட காலம் காத்தே இருக்க வேண்டும். ஆகவே, நன்கு கற்றறிந்தவர்கள் தேர்ந்த விஷயம் இதுவேயாகும். தங்கள் இராச்சியத்தை விரியச் செய்யும் நோக்கத்துடன் படையெடுத்து வந்த தார்த்தாரிகளோ, பாரசீகரோ, அல்லது கிரேக்கர்களோ, அராபியர்களோ இந்த நாட்டைப் பிற நாட்டாரோடு இணைத்து வைத்த போதெல்லாம் ஓர் ஆன்மிகச் சத்தியும் கூடவே இங்கிருந்து வெள்ளப் பெருக்குப்போலப் பெருகிச் சென்றது. இத்தகைய சந்தர்ப்பங்களே மறுபடியும் நம் முன் தோன்றியிருக்கின்றன. ஆங்கிலேயர் வகுத்த நில நீர் வியன் பாதைகளும், தாம் உறைவது சிறு தீவேயாயினும் தாம் மேற்கொண்ட வியப்புறத்தக்க மாபேராற்றலும் இந்தியர்களை மற்றைய நாட்டினருடன் தொடர்பு வைத்துக்கொண்டு நெருங்கிப்பழகுமாறு செய்துவிட்டன. இப்போதும் அத்தொடர்பு காணப்படுகின்றது. நான் மொழிவதைச் செவி சாய்த்துக் கவனமாய்க் கேளுங்கள். இது ஒரு சிறிய தொடக்கமே. இனிப் பெரிய விஷயங்கள் வரக் காத்திருக்கின்றன. இந்தியாவுக்கு வெளியேயுள்ள பணியின் பயன் யாதாகுமென்று நான் வரையறுத்துக் கூற இயலாது. ஆனால், இது மட்டும் எனக்குச் செவ்வனே தெரியும். மிக ஆய்ந்தே கூறுகின்

றேன்: நாகரிகம் படைத்த ஒவ்வொரு நாட்டிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் தங்களை உலகப்பொருள் ஒன்றினுக்காகவே பெரிதும் மதித்துத் தருக்கி வாழும் மனப்பாங்கிலிருந்து நீக்க—அப் படுகுழியில் விழாது தடுக்க - வரும் தூதுக்காக ஏங்கிக் கிடக்கின் றார்கள். பொன்னையே போற்றித்தொழும் இக்கால உலகாயதம் தானே தலை கீழாகக் கவிழ விரைகின்றதன்றோ? புதிதாகத் தோன்றியுள்ள சமூக இயக்கங்களையெல்லாம் நடத்தும் தலைவருள் பலர், உயர் வேதாந்தமே தமது சமூக முன்னேற்ற விருப்பங் களை ஆன்ம மயமாக்கி நிறைவேற்றுமென நம்புகின்றனர். நான் மீண்டும் முடிவில் அப்பகுதி பற்றிப் பேச வரவேண்டியிருக்கும். ஆதலால், நான் மற்றொரு அரிய பெரிய பொருள் பற்றிப் பேசக் கருதியிருக்கிறேன். அவ்விஷயம் யாதெனில், நாட்டிற்குள் செய்ய வேண்டிய பணியேயாகும். இப்பிரச்சினை இரு முகங்களுடன் தோன்றி விளங்குகின்றது; எல்லாவற்றையும் ஆன்ம மயமாக்கு வது மட்டுமன்று. நாட்டின் பல்வேறு அமிசங்களையும் தன் கையகத்தே கொண்டு, அவற்றுடன் இரண்டறக் கலக்க வேண்டு மென்பது. பல வேறுபட்ட இனங்கள் இவ்வாறு ஒன்றாகக் கூடுவது ஒவ்வொரு நாட்டின் வாழ்விலும் பொதுப்பட்ட ஒரு பணியாகவே இருந்து வந்துள்ளது.

இந்தியாவின் வரலாறு வளர்ந்த முறை

'ஓம் தத் சத்'

'ஓம் நமோ பகவதே ராமகிருஷ்ணுய.'

இன்மையால் உண்மை பயப்பது இயலாத காரியம். உள்ள பொருள்களுக்கு இல்லாத பொருளொன்று எப்படி ஏதுவாதல் கூடும்? ஒன்றுமில்லாததிலிருந்து ஒரு பொருள் எவ்வளவிலும் எப்படி வர இயலும்? "காரண காரிய விதி என்பது எல்லா வல்லமையும் பெற்றுள்ளது; அது இல்லாத இடமோ, காலமோ இருந்ததே இல்லை," என்னும் கொள்கை மிகவும் தொன்மையான கவித்தன்மை பெற்றுள்ள இருடிகளால் இசைக்கப் பெற்றும், புராண தத்துவ ஞானிகளால் சித்தாந்தமாக முறைசெய்யப் பட்டும் வந்துள்ளது. இந்நாளைய இந்துவும் தன் வாழ்க்கைத் திட்டமாம் கட்டடத்தை நிறுவுதற்கு ஆதாரக் கல்லாய் அதைக் கொள்ளுகிருன்.

முதலில் தொடங்கும் போது அந்த இனத்தில் ஆயும் ஓர் ஆவலே அரும்பி இருந்தது. அது பின்னர்த் துணிவுற்ற ஒரு பாகுபாட்டின் ஆராய்ச்சி முறையாக மலர்ந்தது. வருங்காலத்துச் சிறந்த சிற்பியாகுமொருவனது வேலைப்பாடு முதன் முயற்சியில் கைந்நடுக்கத்துடன் கூடினதாய் இருப்பினும், பின்னர் மிகு விரைவிலேயே ஒழுங்காய்ச் சமைவதுபோல, அஃது ஒழுங்கான ஒரு சாத்திரமாய் உருவெடுத்துவிட்டது. அதினின்றும் துணிவான முயற்சிகளும் திடுக்கிடச் செய்யும் வியப்புக்கிடமான பெரும்பயன்களும் விளையத் தொடங்கின.

அதன் துணிவானது தங்களுடைய வேள்விப் பீடத்தின் அகத்தேயுள்ள ஒவ்வொரு செங்கல்லையும் துருவி ஆராயும்படி செய்தது; பிரித்துப்பார்த்துச் சாந்திட்டுச் சேர்த்தது; வேதவாக்கியத்தின் ஒவ்வொரு மொழியையும் மிகக் கூர்ந்து நோக்கி ஒழுங்குபடுத்தியது; மற்றும், சடங்குகளையும் வேருேர் ஒழுங்கில் அமைத்து ஐயுற்ருே, மறுத்தோ அச்சடங்குகளுக்கு விளக்கங்கொடுத்தது; அவருடைய தெய்வங்களைக் கீழ் மேலாக மாற்றியது; எல்லாம்வல்ல —எல்லாம் அறிந்த—எங்கும் நிறைந்த—விண்ணில் உறைகின்ற அவருடைய பண்டைய படைப்புக் கடவுளான தந்தைக்கும் இரண்டாம் இடத்தை அளித்தது; அல்லது, முற்றும் பயனற்றவரென்று

அடியோடு சேணில் எறிந்துவிட்டது; அவர் இல்லாத உலகந் தழுவும் ஒரு சமயத்தை—பற்பலரும் பின்பற்றும் சமயத்தை—படைத்துவிட்டது. வேள்வி மேடைகளைக் கட்டுவதற்காகப் பல வகையான செங்கற்சிற்பங்களை அமைக்கும் வகையில் இடக் கணித நூலை வளர்த்துவிட்டனர். அம்மட்டோடு நில்லாமல், இறை வழிபாட்டிற்குரிய நேரத்தையும், தீயில் அவி சொரியும் நேரத்தையும் குறிக்கும்பொருட்டுச் செய்த முயற்சியில் விளைந்த வானநூலறிவால், இவ்வையகத்தையே திடுக்கிடச் செய்துவிட்டனர். கணித சாத்திரத்துக்கு மற்றைய நாட்டினரைக்காட்டிலும் எக்காலத்திலும் மிகப்பெரிய அளவில் பங்கெடுக்குமாறு செய்தது. இரசாயன அறிவின் அளவு, மருத்துவத்தில் பயன்படுத்த உதவும் உலகங்களுடைய சேர்க்கைப் பொருள்களின் அறிவு, இசை ஒலிகளின் ஒழுங்கு முறை, விற்கருவிகளிற் புதியனவாய்க் கண்டவை—இவை யாவும் இக்கால ஐரோப்பிய நாகரிகத்தை வளர்ப்பதில் பெரிதும் துணை புரிந்தன. அது வாழ்நாள் முழுதும் மனத்தில் பதிவு ஏற்படுத்தும் ஒரு விஞ்ஞானத்தை—நாகரிக நாடு ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு குழவியும், பள்ளியிலோ, குழந்தைகள் பயிலும் இடங்களிலோ கற்கும் கல்வியை விளக்கும் ஞான நல்லொளி திகழ் கதைகள் வாயிலாகப் பெறும் அரிய விஞ்ஞான அறிவினைப் புதிதாகக் காண்பதற்கு அடி கோலிற்று.

பாகுபடுத்தி ஆராய்ச்சி செய்யும் இத்தகைய நுண்மைக்கும் முன்னும் பின்னும் ஒரு பட்டுறையால் மூடப்பட்டதுபோல மனத்தைப் பற்றிய ஒரு பெரிய தனிச்சிறப்புக் கரந்து நின்றது. அப்படிக் கரந்து நின்றது கவியின் அகநோக்காகும். அதன் சமயம், அதன் தத்துவம், அதன் வரலாற்று நூல், அதன் அறநெறி, அதன் அரசியலறிவு இவை யாவும் கவிதை நல்கும் உருவகங்களாகிய பூந்தொட்டிகளில் அலரும்படி செய்யப்பட்டன. இத்தகைய உருவகங்களைப் படைக்கும் ஓர் அற்புத மொழியை என்னென்று இயம்புவது! அத்தெய்வ மொழிதான் வடமொழி என்னும் சம்ஸ்கிருதமாகும். சம்ஸ்கிருதம் என்னும் சொல்லிற்கு மாசுமறு நீக்கி நன்கமைக்கப்பட்ட மொழி என்பதுதான் பொருளாகும். பிற மொழிகளைக் காட்டிலும் இம்மொழியோ தன்னகத்தேயுள்ள கருத்துகளைப் புலப்படுத்தியும் வேறு முறையிலே அமைக்க இடந்தந்தும் உதவியுள்ளது. கணிதத்திலுள்ள மிகக் கடுமையான செய்திகளுக்கும் செஞ்சொற்கவி இன்ப இசைகொண்டு விளக்கந் தந்தார்கள்.

இந்தப் பாகுபாட்டுத் தருக்க ஆராய்ச்சியும், இதனை முன்னேறச் செய்த கவிதைத் தெய்வக் கனவின் துணிவும் இந்து இனத்தை உருவாக்கின மிகப் பெரிய அகக் காரணங்களாகும். இவை இரண்டும் நாட்டுப் பண்பாட்டின் ஆதாரச் சுருதியாய் ஒலிக்கின்றன. இவ்விரண்டின் சேர்க்கையே ஐம்பொறிகளுக்கப்பால் மனிதனை முன்னேறிச் செல்லுமாறு செய்கிறது. எவ்வாறெனில், தொழிலாளிகள் படைக்கும் எஃகுக் கருவிகள் இரும்புப் பாளங்களை வெட்டிச்செல்லும்; ஆனால், அக்கணமே ஒரு வளையமாகவே எளிதில் வளைந்து விடக்கூடிய அளவிற்கு வணங்கக் கூடியவையாகவும் இருக்கும். அவற்றின் மர்மம் போன்றதே இச்சிந்தனைகளின் மர்மமும்.

பொன்னிலும் வெள்ளியிலும் கவிதை மலரும்படி அருஞ்செயல் புரிந்தனர். அணிகலன்களின் கூட்டிசையும், வியத்தகு சிற்பங்கள் ஊட்டும் திகைப்பும், வண்ணங்களின் இன்னொளியும், நனவுலகு காணாக் கனவிலொளிர் கந்தருவ நாட்டின் கவினுறு மென்துகில்களும்—இவையெலாம் ஆண்டுகள் பல்லாயிரமாக நாடு சேமித்து வைத்த இயல்பாகிய பின்னணியின் விளைவாகும்.

கலைகளும், விஞ்ஞானங்களும், இல்வாழ்க்கையின் நிகழ்ச்சிகளும், கற்பனை செறிந்த கவிதை தரும் கருத்துகளில் தோய்ந்திருக்கின்றன. இவற்றைப்பற்றிச் சிந்தித்துச் சிந்தித்து அதே சிந்தனைப் பாதையில் செல்லுங்கால், புலனுக்குரிய பொருள்கள் புலனுக்கப்பால் போய்விடுவதை உணர்கின்றார்கள். எது உண்மையென்று கருதப்படுகிறதோ, அதுவே மாயையின் நிறத்தையும் ஏற்றுக் கொள்கின்றது.

இத்தகைய பண்பாடு அவர்கள் கையில் சற்றுப் பயன்தரத்தக்க கருவியாய் அமைந்திருந்தது என்பது அந்த இனத்தைப்பற்றி நாம் பெற்ற பழைய வரலாற்றுக் காட்சிகள் வாயிலாகப் புலனாகின்றது. வேதமென்று மொழியப்படும் மறைகளில் இந்த இனம் சித்திரிக்கப்பட்ட வகையைக் காண்கின்றோம். ஆனால் அதற்கு முன்பே முன்னேற்றப் பாதையில் சமயத்தின் பல அமைப்புகளும் சமுதாயத்தின் திட்டங்களும் தோற்றுவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஒழுங்குபடுத்தப்பெற்ற கடவுளர் வடிவங்கள், விரிவான சடங்குகள், தொழில் காரணமாகப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட வேண்டிய கட்டாயத்தால் எழுந்த பர[illegible] பாகுபாடுகள், பல திறப்பட்ட வாழ்க்[illegible]கள்;

மனிதனுக்கு இன்றியமையாதவைகள் ஆகிய இவையனைத்தும் முன்னரே உள்ளன.

தட்ப வெப்ப நிலைகள் இந்தியப் பண்பிலுள்ள நிலைகள் ஆகிய இச்சூழ்நிலைகள் இன்னும் இந்த இனத்தின்மீது ஆணை செலுத்த வில்லை என்பது இக்காலத்து ஆராய்ச்சியாளர்களின் ஒன்றுபட்ட முடிவு.

இன்னும் பல நூற்றாண்டுகள் செல்கின்றன. ஒரு பெருங்கூட்டத்தினர் வடக்கே இமயத்தில் பனிக்கட்டிகளாலும் தெற்கே உள்ள வெப்பத்தினாலும் மிகப்பெரிய ஆறுகள்- பெருக்கெடுத்து விரைந்தேகும் மிக விரிவான சமநிலங்கள், எல்லைகாணாக் காடுகள் ஆகிய இவைகளாலும் சூழப்பட்டுள்ளனர். திராவிடர்கள், தார்த்தாரிகள் முதலிய பழங்குடி மக்கள் காட்சி அளிப்பதைக் கண்டோம். இவர்கள் அளிக்கக்கூடிய குருதித் தொடர்புகளும், மொழிகளும், பழக்க வழக்கங்களும், சமயங்களும் ஆகிய இவைகளும் நம் நயன வட்டத்திற்குள் மிதந்து வருகின்றன. இறுதியில் ஒரு பெருநாடு நம் கண் முன் தோன்றுகின்றது. அது ஆரிய வகுப்பினதாய் அமைந்துள்ளது. அது மிக்கதோரளவில் வன்மை எய்தி விளங்கி விரிந்து- ஒரு நீராகக் கலக்கும் பான்மையினால் உறுதி பெற்றது. எல்லாவற்றையும் தன் மயமாக்கும் இப்பான்மையே உட்கருவாகித் தன் பண்பையும் தன் வகையையும் முற்றிலும் பரிணமிக்கச் செய்து, பெருமிதத்துடன் அந்த இயலை விடாப் பிடியாய்ப்பற்றி, ஆரியன் என்ற பெயரையும் சூடியிருக்கிறது; பிற இனத்தவர்களுக்குத் தன் நாகரிகத்தின் நன்மைகளை நல்க விரும்பினும், அவர்களைத் தன் ஆரிய வகுப்பின் எல்லைக்குள் நுழைய இடந்தர விழையவில்லை.

மேலும், இந்தியாவின் தட்ப வெப்ப நிலை இந்திய இனத்தாரின் மேதைக்கு ஒரு மகத்தான போக்கைத் தந்துள்ளது. இயற்கை அன்னை புன்முறுவல் பூத்து வெற்றிகளையெல்லாம் உவந்தளிக்கும் பொன்னாட்டிலே, நாட்டு மனம் சிந்தனை உலகத்திலுள்ள வாழ்க்கையின் உயர்ந்த பிரச்சினைகளுடன் வெம்போரிட்டு வெற்றி கொள்ளத் தொடங்கியது. இந்திய சமுதாயத்தில் மிகப் பெரிய வகுப்பினராகக் கருதப்பட்டு வந்தவர் இயல்பாகவே மதக்குருமார் அல்லது ஆசாரியரேயன்றி, வாளேந்திய போர் வீரர் அல்லர். வரலாற்றின் வைகறையிலேயே சமய குரவர்களோ, தங்கள் முழு ஊக்கத்தையும் ச ... செலுத்தி வந்தார்கள். நாட்டினர் இச்ச ... யையும் உயிரற்ற சடங்குகளின்

இயல்பினையும் பெரும்பாரமாகக் கருதிய அத்தருணத்திலேதான் தத்துவ சிந்தனைகள் பிறக்கலாயின. முதன்முதலில் இந்தச் சடங்குகளின் சிக்கலை அறுப்பதற்குத் தலைப்பட்டவர்கள் வீரம் செறிந்த குலத்தில் உதித்த க்ஷத்திரியர்களேயாவார்கள். ஒரு பக்கம் பொருளாதார நோக்கங்களால் உந்தப்பட்டுத் தங்கள் பதவியைக் காப்பாற்றுவதற்காகவே தங்கள் இன்றியமையாத நிலையைச் சுட்டக்கூடிய சமயத்தை வற்புறுத்திக் கூற நேர்ந்தது. மறுபக்கம் வேந்தர் மரபினர் தமது வீரத்தாலேயே மக்கள் காக்கப்படுவதனுலும், நன்னெறியில் உய்க்கப்படுவதனுலும், மற்றும் மிக உயர்ந்த தத்துவ சிந்தனைகளிலும் வன்மையிலும் திண்மையிலும் சிறந்த இயல்பை நன்கு அறிந்துள்ளபடியாலும் சடங்கு வகைமுறை மட்டும் தேர்ந்த இந்தக் குருமார்களுக்கே முதலிடம் அளிக்க ஆயத்தப்பட வேண்டும் என்று கருதவில்லை. இதுவும் தவிர, இந்த இரண்டு துறைகளிலும் பயின்று வந்த ஒரு குழுவினரும் உண்டு. தத்துவ நூலோரும் சடங்கு புரிவோரும் இவர்களுடைய நகையம்புக்கு இலக்காயினர். இவர்கள் ஆன்மிகத் துறை, உலகை வஞ்சிப்பதன் பொருட்டுக் குருமார்கள் வகுத்த சூழ்ச்சியே என்று எண்ணிவிட்டார்கள்; இம்மை இன்பங்களைப் பெற்று அவற்றில் திளைப்பதே வாழ்க்கையின் குறிக்கோள் என்று தீர்மானித்தார்கள்; வெறுஞ் சடங்குகளால் அயர்வுற்றுர்கள்; தத்துவத்தை நோக்கி வியப்பெய்தினுர்கள்; அதனுல், உலகாயதர்களையே திரள் திரளாகப் பின்பற்றினுர்கள். இந்நாள்வரை தீராத பிரச்சினையாய் இருப்பது முக்கோணச் சச்சரவே. இது சடங்கு, தத்துவம், உலகாயதம் என்னும் இவற்றைப் பற்றின சர்ச்சை காரணமாகவும் தொடக்கமாகவும் வந்துள்ளது.

இந்த இன்னல் தரும் நிலைகளையெல்லாம் சீர்படுத்தும் முயற்சிக்கு முதல் வழி யாதெனில், பண்டு தொட்டே ஒரே உண்மை பல்வேறு உடைகளில் காட்சி அளிப்பதை உணர்தலேயாகும். யதுகுல திலகராய் அரச குலத்துத் தோன்றிய கண்ணபிரானுரே இதனைத் தம் பெருமை வாய்ந்த கீதையில் அறிவுரையாய் வழங்கினுர். அவரே புத்தர் சமணர் முதலியவர்களின் தாக்குதல்களையும் பெருங்கிளர்ச்சிகளையும் எதிர்த்துப் போராடிப் பெரும்பாலும் நிலையாகத் தம்மை இந்தியாவின் தீர்க்கதரிசியாக நிறுவிக்கொண்டார். அவரது கீதையும் மிக்க பெருமை வாய்ந்து வாழ்க்கைத் தத்துவத்தின் மௌலியெனப் போற்றப்பட்டது. சிறிது காலம் அதன்

இறுக்கம் தளர்ந்து வந்த போதிலும், அது சமூகத் தேவைகளை நிறைவேற்றி மக்கட்கு இன்பத்தை நல்கவில்லை. இக்குறைவுகள் மக்கள் மதக்குருமார்மீது கொண்ட வெறுப்பிற்கும் வேந்தர் குலத்தினரை முதன்மையாகக் கருதுவதற்கும் ஏதுக்களாயின. கண்ண பிரானுர், ஆடவர் பெண்டிர் என்னும் வேறுபாடின்றி, சாதிமதபேதமின்றி, ஆன்மிகச் செல்வக் கருவூலத்தின் கதவுகளை அகலத் திறந்துவிட்டு மோட்ச நெறியை அனைவருக்கும் காட்டி வந்தாரெனினும், சமூகப் பிரச்சினையை முன் நிலையிலேயே விட்டுவிட்டார். இப் பிரச்சினை தீரும்படி இன்னும் பௌத்தரும், வைணவரும் மாபெரு முயற்சி செய்த போதிலும் யாவர்க்கும் சமூக சமத்துவ நிலையோ உரிமையோ அருளப்படவில்லை.

இக்கால இந்தியா, "எல்லா ஆன்மாக்களும் சமமே," என்னும் கொள்கையை ஏற்றுக்கொண்டு, சமூக வேற்றுமை முழுவதையும் அப்படியே வைத்திருக்கிறது.

கி. மு. 7-ஆம் நூற்றுண்டு முதல் தொன்றுதொட்டு வந்த முறையை மாற்றி அமைக்கும் போராட்டத்தை நாம் கண்ணுறுகின்றோம். கி. மு. 6-ஆம் நூற்றுண்டில் பழைய ஒழுங்கு முறை சாக்கிய முனிவரான புத்தபிரானுரடிக்கீழ் ஆழ்ந்து குலைந்துவிட்டது. மத குருக்களின் சிறப்புரிமையைக் களைய விரும்பிய பௌத்தர்கள் வேதங்களின் பழமையான சடங்கு முறைகளனைத்தையும் அழித்துவிட்டு, வேதங்களில் கூறியுள்ள தெய்வங்களையும் தம் மனித முனிவர்களுடைய தொண்டர்களின் நிலைக்குக் குறைத்துவிட்டு, படைப்புக் கடவுள்—உலகத்தை ஆள்கின்ற கடவுள்—மூட நம்பிக்கையின் உருவமென்றும், மத குருவின் கற்பனையென்றும் மிகக் கடுமையான சொற்களால் கண்டித்தார்கள்.

ஆனுல், புத்த தருமத்தின் சிறந்த நோக்கம் சில வகைகளில் வைதிக மார்க்கத்தில் சீர்திருத்தங்களை அமைப்பதேயாகும். விலங்குப் பலியை விலக்குதல், பரம்பரை மதம் என்ற கொள்கையினை அகற்றுதல், தனிப்பட்ட மதக் குரவரின் குழுவினையேற்க மறுத்தல், ஆன்மாக்கள் அழிவற்றன என்ற நம்பிக்கையினை எதிர்த்தல்—இவற்றைப் புரிவதே அதன் முழு நோக்கமாகும். அது இந்து மதத்தை அழிக்க முற்படவில்லை; சமூக ஒழுங்கையும் கவிழ்க்கக் கருதவில்லை. அது துறவியர் வகுப்பை உருவாக்கிச் சிறந்த துறவுச் சகோதரத்துவத்தை அமைத்து வளர்த்தது; பிரம்ம

வாதினிகளைச் சந்நியாசிகளின் குழுவாக நிறுவிற்று; வேள்விச் செந்தீ விளங்குவதற்குரிய இடத்தில் முனிவர்களின் உருவங்களை நிறுவிவிட்டது.

பல நூற்றுண்டுகளாகச் சீர்திருத்தவாதிகள் பெரும்பாலாரான இந்து மக்களின் ஆதரவைப் பெற்றுர்கள். பண்டைய சத்திகள் முற்றும் ஒடுக்கப்படாது போயினும், அவை புத்த சமயம் ஓங்கி வளர்ந்த அந்நாளில் பலப்பல மாறுதல்களோடு அமைந்தன.

பண்டைக் காலத்து நாட்டு வாழ்க்கையின் இதயத் துடிப்புகள் அரசியல் பற்றியனவாய் இல்லை; ஞான ஆன்மிகங்களையே சார்ந்து நின்றன. இன்று போன்றே பண்டும் அரசியல்-சமூக சக்திகள் ஞான ஆன்மிகங்களின் பொன்னடிக் கீழே அமர்ந்திருந்தன. நாட்டின் வாழ்க்கைக் கடலாம் எழுச்சி, இருடிகளின் ஆச்சிரமங்களையும் ஆன்மிக போதகர்களின் இல்லங்களையும் சுற்றி அலை வீசிற்று. பாஞ்சால சமிதிகளும் (பட்டி மண்டபங்களும்), காசி ஆராய்ச்சிக் கழகங்களும், மிதிலைத் திறனுய்வுச்சாலைகளும் சிறந்த ஆன்மிகப் பண்பாட்டிற்கும் ஆன்ம தத்துவத்திற்கும் இருப்பிடங்களாய் இருந்து வந்தமையை உபநிடதங்கள் உரைக்கின்றன. பின்னர் இவ்வட்டங்களே ஆரியர்களுள் பல பிரிவினர்களின் பேராசைப்பேய் தலை விரித்தாடும் நிலைக்களங்களாய் அமைந்து விட்டன.

பேரிதிகாசமான மகாபாரதம் நாட்டின் மேலதிகாரம் பற்றிய போரானது கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் ஏற்பட்டதென்பதை விவரிக்கின்றது. அப்போரில் இரு திறத்தினரும் ஒருவர் ஒருவரை வெட்டி மடிந்தனர். ஆன்மிக ஆட்சி குணதிசையிலுள்ள மகத மைதிலியர்களிடம் நிலவியிருந்து, அங்கே தன்னை நிலை நாட்டிக்கொண்டது. கௌரவ-பாண்டவர் போருக்குப் பின்னர் ஒரு முறையான மேலதிகாரம் மகத வேந்தர்களால் அடையப் பெற்றது.

புத்த மதத்தினரின் சீர்திருத்தமும் அதன் செயற்களனும் அதே கீழை வட்டாரத்திலேதான் இலங்கின. மௌரிய அரசர்கள் தங்கள் வமிச பரம்பரைக்கு ஏற்பட்ட தீமை மிக்க மாசினுல், புதிய இயக்கத்திற்கு ஆதரவு காட்டி, அதைச் செயல் முறையில் தலைமை தாங்கி நடத்தியுங் காட்டினுர்கள். புதிய குருமார் சத்தி, பாடலிபுத்திரப் பேரரசின் சத்தியுடன் ஒற்றுமை கொண்டு வினையாற்றியது. புத்த மதத்தின்மேலுள்ள மக்களன்பும் அதன் புது

ஆற்றலும் மௌரிய மன்னர்களை இந்தியாவில் ஆண்டு வந்த எல்லாப் பேரரசர்களிலும் சிறந்தவர்களாகக் கொண்டாடும்படி செய்துவிட்டன. மிகுந்த வலிமை வாய்ந்த மௌரியப் பேரரசரின் ஆற்றலே புத்த மதத்தை உலக முழுதும் அத்துணைப் பெரிதாகச் செய்துவிட்டது. அந்நிலையை இப்பொழுதும் காண்கின்றோம். அம்மதம் உலக முழுதும் பரவியதன்றோ?

புராதன வேத சமயங்கள், எதனையும் புறத்தினின்று ஏற்காத தனி இயல் கொண்டனவாதலின், புறத்தினின்று யாதொரு வகையிலும் உதவி பெற இயலாமல் தடைபட்டுக் கிடந்தது; ஆனால், அதே சமயத்தில் இத்தகைய தனி இயல்பு அவ்வேத சமயங்களைத் தூய்மை உடையனவாகவும் கீழ்த்தரமான பண்புகளிலிருந்து விடுபட்டனவாகவும் திகழச் செய்தது; ஆனால், புத்த மதந்தான் தீவிரமாய்ப் பரவ வேண்டுமென்ற ஆர்வத்தால் கீழ்ப்பட்டவற்றுள் சிலவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டுவதாயிற்று. நாளடைவில் புத்த மதத்தின் இத்தகைய தீவிர இணக்கத்தன்மை அதன் தனிப் பெற்றியை இழக்கச் செய்தது. மேலும், மக்கட்சமயமாக மிளிர வேண்டுமென்ற அதன் ஆசை, தாய்ச்சமயமாகிய வேத சமயத்தின் ஆற்றலை எதிர்க்க வல்லமையற்றதாகச் சில நூற்றாண்டுகளுக்குள்ளாகவே செய்துவிட்டது. இதற்குள்ளாக வைதிக மரபினர் குழு, எதிர்க்கக்கூடிய இழிவான பான்மைகளை விலக்கிவிட்டது. இழிவான செயல் உயிர்ப்பலியேயாகும். வைதிகக் குழு தன்னிடம் முளைத்த எதிர்சமயமாகிய புத்த மதத்தினின்று உருவ வழிபாடுகள், கோயில் வழிபாடுகள் முதலிய கவர்ச்சிகரமான செயல்களை ஏற்றுக்கொண்டது. தன் அணைப்பில் இந்திய புத்த மதத்தினர் அனைவரையும் தழுவிக்கொள்ள ஆயத்தமாகிவிட்டது. அந்தப் புத்த சமயமோ, ஏற்கெனவே தட்டுத்தடுமாறி விழும் நிலைக்கு வந்து விட்டது.

சிதியர்கள் படையெடுத்ததும் மௌரிய சாம்ராச்சியம் நிலை குலைந்தது. அதனுடன் பாடலிபுத்திரப் பேரரசே மண்ணோடு மண்ணாய் மடிந்து புதைந்துவிட்டது.

படையெடுத்து வந்தவர்கள் முன்னரே தங்கள் மத்திய ஆசிய உறைவிடத்துப் புத்த மதப் பணியாளர்கள் வந்து புகுந்தமையைக் கண்டு வெகுண்டமையால், இங்கு அந்தணர்கள் செஞ்சுடரோனுக்கு ஆற்றி வந்த பூசனையைக் கண்டு மகிழ்ந்தார்கள். தங்களுக்குரிய ஞாயிறு வழிபாட்டோடு அவ்வழிபாடு ஒத்திருந்த காரணத்

தால் பிராம்மணரின் பழக்க வழக்கங்களையும் தங்களுடையன வாகவே கொண்டார்கள்; புதியவர்களாய் வந்தவர்களுடைய பழக்க வழக்கங்களுக்கு ஆன்மிக முத்திரை அளித்து அவற்றையும் தழுவிக்கொண்டார்கள்.

பிறகு ஒரே இருள் திரை விரிந்தது! அசைந்தாடி அச்சுறுத்தும் நீண்ட நிழல்கள், போர்க் குழப்பங்கள், படுகொலைச் செய்திகள்—இவை முற்றுப் பெற்ற பின்னர் ஒரு புதுத் தோற்றம் ஏற்பட்டது.

மகத ஆட்சி மறைந்து விட்டது. வடவிந்தியா, தங்களுக்குள் இடையறுது பெரிதும் போரிட்டுக்கொண்டு வந்த தலைவர் சிலரது ஆட்சிக்குட்பட்டது. கிழக்கிலும், இமய வட்டத்திலும், இந்தியாவின் தென்கோடியிலும் சில பகுதிகளிலிருந்து புத்தமதம் பெரும்பாலும் மறைந்துவிட்டது என்றே கூறலாம். பரம்பரைப் புரோகிதரின் சத்திகளினின்றும் பல நூற்றுண்டுகளுக்குப் பின்னர்க் கடும்போராட்டத்தினுல் விடுபட்ட நாடு விழித்தெழும்போது, பரம்பரைப் பிராம்மணர்களும் புது ஆட்சியாளர்களாகிய முற்றும் துறந்த முனிவர்களும் சேர்ந்து நடத்தும் ஆட்சிக்குட்படுதலை அறிந்தார்கள். இவ்வாட்சி முறையிலும் பௌத்தர்களுடைய குழுவிலிருந்தது போல அதிகாரம் ஓங்கியிருந்தது. மக்களிடம் சிறிதும் பரிவற்ற பான்மையும் சேர்ந்துகொண்டது.

வீரம் வாய்ந்த இராஜபுத்திரர்களின் திண்மையாலும் குருதியாலும் தோன்றிய புதிய இந்தியா, வரலாற்றுப் புகழ் வாய்ந்த மிதிலா நகரத்துப் பிராம்மணர்களின் அன்பு கலவாத இரக்கமற்ற மதி வன்மையால் வரையறுக்கப்பட்டு ஸ்ரீ சங்கரரும் அவர்தம் துணைவர்களும் சேர்ந்து வகுத்த புதுத் தத்துவத்தின் வேகத்தினுல் முன்னே உந்தப்பட்டது; மாளவ நாட்டின் அழகுக் கலைகளாலும் இலக்கிய அறிவினுலும் பழைய சிதைவினின்றும் கிளர்ந்தெழுந்தது.

அப்புதிய இந்தியாவின் அக்காலத்து மக்கள், ஆற்ற வேண்டியிருந்த பணியோ, மிகவும் விரிவானது. அதற்கு முன் அவர்களுடைய முன்னேர்கள் காணுத அத்தகைய பெரும்பிரச்சினைகள் அவர்கள் முன்னர்க் காட்சி அளித்தன; அடக்கமான ஒரு சிறு கூட்டத்தினர் ஒரே குருதியும் ஒரே மொழியும் பெற்றுப் பொலிந்தனர்; ஒரே விதமான சமூக நோக்கங்களையும் மத சம்பந்தமான குறிக்கோள்களையும் கொண்டனர்; தம் ஒற்றுமைகளை வலிவடை

யச் செய்ய வேண்டிய கோட்பாடுகளை யாவரும் கடக்கவொண்ணுத நீள் மதிள்கள் போல நிறுவிக்கொண்டனர். புத்தமதம் ஓங்கி ஆணை செலுத்துங்கால் இக்குழு இனத்தாலும், மொழியாலும், வருணத்தாலும் ஆன்மிக உணர்ச்சியினுலும், சமூகப் பற்ருல் விளைந்த பேராசைகளாலும் மிகப் பெரிதும் வேறுபட்டுத் தம்முள் சச்சரவு புரிந்து வந்த ஓர் இனமாய் விரிந்துவிட்டது. இத்தனை வேறுபாடுகளுற்ற மக்கள் ஒன்றுபட்டு ஒரே நாட்டினர்களாய் மிளிர்தல் வேண்டும். இது இயலுமா? இதே பணியைத்தான் புத்த சமயம் செய்ய முயன்றது. அது முயன்ற பொழுது மக்கட்கூட்டம் அவ்வளவு மிகுதியாய் இல்லை. இதுதான் தீர்க்க வேண்டியுள்ள பிரச்சினையாகும்.

இதுகாறும் ஆரியர்களாக்குமாறு விருப்பத்துடன் வந்த மக்களைத் தம்முடன் சேர்த்துக்கொண்டு வேறு மக்கட்கூட்டங்களையும் ஒன்றுபடுத்தி ஆரியர்களாக்கிக்கொள்ளுவதே பிரச்சினையாயிருந்தது. சலுகைகள் அளித்து விட்டுக்கொடுக்க வேண்டிய பான்மையை மேற்கொண்டிருந்த போதிலும், பௌத்த ஆட்சி மிகவும் வெற்றிகரமாகவே நடந்து வந்தது. புத்த சமயமே நாட்டுச் சமயமாயிற்றென்றே மொழிய வேண்டும். ஆனல், ஐம்புல உணர்ச்சியினுல் தூண்டப்பெற்று மதிமயக்கம் எழுப்பும் பூசனையின் வகைகள்—கண்ட கண்ட கீழ்த்தரமான சாதியினரிடமிருந்து புகுந்து யோசனையின்றிக் கொள்ளப்பட்ட பூசனையின் வகைகள்—ஆரியப் பண்பாட்டின் இதயத்திற்கே இன்னல் விளைவிக்கக்கூடியனவாய்த் தோன்றிவிட்டன; இனியும் தொடர்ந்து வந்தால், ஆரியர்களுடைய நாகரிகமும் பண்பாடுமே வேரோடும் கெடும் என்ற நிலைக்கு வந்துவிட்டன. பின்னர்த் தற்காப்புக் காரணமாக எதிர்வினை இயக்கம் ஒன்று எழுந்தது. பௌத்தர் கூட்டம் ஒரு தனி இனமாய்த் தழைக்க இயலாமல், தாயகத்திலேயே பல பகுதிகளிலும் மறைந்து போய்விட்டது. எதிர்வினை இயக்கம் ஒரே சமயத்தில் வடக்கில் குமாரிலராலும் தெற்கே ஸ்ரீ சங்கரராலும் ஸ்ரீ இராமானுஜராலும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. இந்த இயக்கந்தான் கடைமுறையாக, கணக்கற்ற மதப் பிரிவுகளின் தொகுதி உருவமாயிற்று. பல திறப்பட்ட இப்பிரிவினரின் சடங்குகளும் கோட்பாடுகளுமே இந்து மதமென மொத்தமாகச் சிறப்பித்துக் கூறப்பட்டன. சென்ற ஆயிரமாண்டுகளுக்கு மேலாகவே அதன் பெரியதொரு சாதனை உட்கொண்டு சீரணிப்பதே. இடை இடையே சீர்திருத்த

அலைகள் பொங்கி எழும் இந்த எதிர்வினை இயக்கமானது, முதன் முதலில் வேத முறைகளையெல்லாம் மீண்டும் வழக்குக்குக் கொண்டுவர விரும்பியது; இது இயலாவிட்டால், வேதாந்தத்தின் தத்துவங்களை—உபநிடதங்களை—ஆதாரமாகக் கொள்ள விழைந்தது; இவ்விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு வியாச பகவானின் மீமாஞ்சைத் தத்துவ ஒழுங்கையும் கண்ணபிரானுருடைய கீதையின் அறிவுரையையும் முன்னணிக்குக் கொணர்ந்துவிட்டது. பின்னருள்ள இயக்கங்கள் யாவுமே இதனைப்பின்பற்றி வந்துள்ளன. ஸ்ரீ சங்கரரது இயக்கம் பழுத்த உயர்சுடர் ஞானம் வாயிலாக வலியப் பரவி வந்தாலும், அது பொது மக்கட்கு அதிகம் பயன்படுவதாய் இல்லை. அதன் முறைகள் வகுப்புவாரிச் சட்டங்களை மிகுதியும் சார்ந்தே இருந்தன. சாதாரண மக்களுக்குத் தங்கள் உணர்ச்சியைப் புகட்டவோ அதனைப் பெறவோ இடம் அளிக்கவில்லை. தவிர, வடமொழியே அது பரவும் வாயிலாய் இருந்து வந்தது. ஸ்ரீ ராமானுஜரோ, நடைமுறைக்கான தத்துவத்தை ஏற்றார். அதில் உணர்ச்சி வேகத்திற்குப் பெரியதோர் இடமளிக்கப்பட்டிருந்தது. உணர்ச்சி வயப்படவும் ஒரு நெறி திகழ்ந்தது. அதில் பிறப்புரிமைகளுக்கு இடமே இன்றித் தாய் மொழியிலேயே ஆன்மிகத்தின் உயர்வு போற்றப்படுவதைக் காணலாம். இப்படி அது மக்களைப் பெரும்பாலும் வைதிக தருமத்திற்கே மீட்டுக்கொணரும் பணியில் முழு வெற்றி பெற்றது என்று மொழியலாம்.

சடங்குகளின் ஆக்கத்திற்கான வடதிசை எதிர்-வினை இயக்கம் மாளவப் பேரரசின் இடையே தோன்றும் சிறப்பால் தொடரப்பட்டது; அந்த மாண்பு சிறிது காலத்துக்குள் மறைந்தவுடன் வடவிந்தியா நீண்ட காலம் உறங்கச் சென்றதென்றே இயம்புதல் வேண்டும். அது விழித்தெழுந்த பொழுது ஆப்கானிஸ்தான் கணவாய் வழியாகப் புகுந்த மகமதியரின் குதிரைப்படை வெள்ளத்தின் பேரிடிக்குரல் செவியில் பாய்ந்தது: ஆனல், தெற்கிலோ எனின், ஸ்ரீ சங்கர ராமானுஜர்களுடைய ஆன்மிக எழுச்சிக்குப் பின் இனவொற்றுமையும், ஆதிக்கம் செலுத்தும் பேரரசுகளும் எப்போதும் போலத் தோன்றின. வடவிந்தியா முழுதும்—இரு கடலுக்கும் இடையே திகழும் வடவிந்தியா முழுதும்—மத்திய ஆசிய வெற்றி வீரர்களின் காலடிக்கீழ்க் கட்டுண்டு முனகிக் கிடந்தபோது தென்னிந்தியா இந்திய சமயத்திற்கும் நாகரிகத்திற்கும் உறைவிடமாய் விளங்கிற்று. மகமதியர்கள் பல நூற்றாண்டு

களாகத் தென்பகுதியை அடக்கி வைக்க முயன்று வந்தார்கள். ஆனால், அவர்களுக்கு அடித்தளமாக வலிமை வாய்ந்த ஓரிடமும் கிடைக்கவில்லை என்றுதான் உரைக்கவேண்டியிருக்கிறது. மிகுந்த ஆற்றல் படைத்து ஒற்றுமையுடன் விளங்கிய முகலாய சாம்ராச்சியம் தென்னாட்டின்மீது படையெடுத்து வெற்றி வாகை சூடுவதற்கு முன்னரே, குதிரைப்படை வீரர்களான உழவர்கள் தெற்கேயுள்ள முது குன்றுகளிலிருந்தும் பீடபூமிகளிலிருந்தும் இராமதாசர் அறிவுரை வழங்கி வந்த—துகாராமர் இசைத்து வந்த—நற்சமயத்திற்காக உயிரையும் விடுவதாக வெள்ளம் வெள்ளமாகப் பெருகி வந்தார்கள். இறுதியில் சிறிது காலத்திலேயே மிகப் பெரும்பேரரசாகிய மொகலாய சாம்ராச்சியம் வெறுங்கனவாய், வெறும் பெயராய்ப் போய்விட்டது.

மகமதிய அரசாட்சியின் போது, வடவிந்தியாவில் தோன்றிய இயக்கங்களெல்லாம் வெற்றியாளரின் சமயத்தைப் பொது மக்கள் கைக்கொள்ளாமல் காப்பாற்றப்படவேண்டும் என்ற ஓர் இலட்சியத்தினால் எழுந்தனவே ஆகும். அம்முயற்சிகளின் விளைவாகச் சமூக சமத்துவமும் ஆன்மிகச் செல்வத்தின் பொது உடைமையும் அவர்களுக்கு நல்கப்பட்டன.

இராமானந்தர், கபீர், தாது, சைதன்னியர், நானக்கு என்பவர்களால் நிறுவப்பட்ட சந்நியாச ஆச்சிரமங்களைச் சார்ந்தவர்கள் அவரவர் தத்துவ போதனைகளில் எத்துணை வேறுபட்டவராயிருந்த போதிலும், மனிதரின் சமத்துவ இயலை விரிக்கும் முறையில் ஒன்றுபட்டிருந்தார்கள். அவை இந்த அறிவுரையின் பாதையில் குறுக்கே இடறுகட்டாய் நிற்கவில்லை. பொது மக்களிடையே மகமதியர் சமயம் மிக விரைவாய்ப் பரவி வந்தமையைத் தடுக்கவே அவர்களுடைய சத்திகளெல்லாம் பெரும்பாலும் வழங்கப்பட்டன. ஆகவே, புதிதாகச் சிந்தித்து உயர்ந்த கருத்துகளையும் ஆர்வங்களையும் இலட்சியங்களையும் எடுத்துக் காட்டப் பொழுது இல்லாமற் போயிற்று. தங்களுடைய மத எல்லையை மீறி இந்து மக்கள் ஏகாவண்ணம் அருஞ்செயல் ஆற்றினர்கள்; மகமதியர்களின் மத வெறியைத் தணித்தார்கள் என்பதும் உண்மையே. அவர்கள் வேண்டுகோள் முறையிலேயே மக்களுக்கு நியாயம் எடுத்துச் சொல்லி வாழ்வு பெற அனுமதியை வேண்டி நின்றார்கள். அவர்கள் உயிருக்கே மன்றாடினர்களென்றால், அது மிகையாகாது.

எனினும், ஒரு பெரிய தீர்க்கதரிசியான குரு கோவிந்தர் என்ற

பெரியார் தோன்றினர். அவர் சீக்கியருடைய தலைசிறந்த குருவாய்த் திகழ்ந்து வந்தார். அவர் பேரொளியுடன் படைக்கும் ஆற்றல் பெற்றவர்; ஆன்மிகத் துறையில் நீண்டகாலம் உழைத்தார். அதன் விளைவாக உலகம் போற்றும் சீக்கியர்கள் என்ற கூட்டத்தார் அவரது ஆன்மிகப் பணியைப் பின்பற்றினர். அது பற்றி அறியாதார் யாவர்? ஆன்மிகக் கிளர்ச்சி நேர்ந்த போதெல்லாம், நாடு முழுதும் பரவிய அரசியல் ஒற்றுமைப்பாடு மலரக்காண்கின்றோம். இந்த அரசியலொற்றுமைப்பாடு தன்னை ஈன்ற ஆன்மிகத் துறைக்கு நலஞ் செய்யும் முறையில் அதனை வலிமையுடையதாக்கியது. ஆனல், மராட்டியர் சாம்ராச்சியமோ, அல்லது சீக்கியர் சாம்ராச்சியமோ ஏற்படுவதற்கு முன்னர் இருந்த ஆர்வம் முற்றும் எதிர்த்தாக்கலாகவே வந்துளது. பூனு அல்லது இலாகூர் அரண்மனையில் மொகலாய சாம்ராச்சியத்தை அடுத்திருந்த அறிவின் விரிவையும் மாண்பையும் நாம் காண்பதரிது. அப்படியிருக்க, எப்படி மாளவ வித்தியா நகரின் கழிபெரு மேன்மையை அங்குக் காண இயலும்! இந்திய வரலாற்று நூலிலேயே அது மிகமிக இருள் சூழ்ந்தகாலம்—அஞ்ஞான இருள் எங்கும் குடிகொண்ட காலம். இந்த இரண்டு பேரரசுகள்—கணப்பொழுதே தோன்றி மறையும் விண்மீன்போலக் காட்சி அளித்த பேரரசுகள்—மக்கட்கூட்ட மத வெறியினைக் குறைத்தனவேயன்றிப் பண்பாட்டை வரவேற்கவில்லை. அதனைப் பெருக்கவே செய்தன என்பது மிகையாகாது. வெறுக்கப்பட்ட மகமதிய அரசைக் குலைத்ததும் அவை தம் ஊக்கம் முழுதினையும் கைவிட்டன. ஊக்கம் அளித்த இலட்சிய சத்தி அடியோடு மாய்ந்தே போயிற்று.

பின்னர் மறுமுறையும் ஒரு குழப்பமான காலம் வந்துற்றது. நட்பினர், பகைவர், மொகலாய அதிகாரிகள், அவர்களுடைய மாற்றவர், அதுகாறும் அமைதியுற்றிருந்த அயல்நாட்டு ஆங்கில பிரெஞ்சு வர்த்தகர் அத்தனை பேரும் போரில் குதித்துக் கலந்துகொண்டனர். அரை நூற்றுண்டுக்கு மேலாகச் சண்டையும் கொள்ளையும் படு அழிவுமே நிகழ்ந்தன. கலகமும் கலவரங்களும் வெடிகுண்டுப் புகையும் போரின் ஆரவாரமும் ஒய்ந்தபின் ஆங்கிலேயர்களே மற்றவரைத் தோல்வியுறும்படி செய்து வெற்றி நறவுண்டு இன்பமுற்றுத் திரிந்தார்கள். அவர்களுடைய ஆட்சியில் அரை நூற்றுண்டாக அமைதி நிலவிற்று; ஒழுங்கும் சட்ட முறையும் திகழ்ந்தன. இது முன்னேற்றப் பாதையோ, அல்லது வேறென்றோ

யார் அறிவர்! காலந்தான் தீர்ப்பு அளிக்கக்கூடும். ஆங்கில ஆட்சிக் காலத்தும் இந்திய மக்களிடையே மத சம்பந்தமான சில இயக்கங்கள் நிகழ்ந்தன.

இவை டில்லி சாம்ராச்சியத்தில் வடவிந்தியப் பிரிவினர்கள் மேற்கொண்ட முறையைப்பற்றி எழுந்தன. இவை இறந்தவர்களின் அல்லது கொல்லப்படுபவர்களின் குரலை—வாழ அனுமதி கோரிப் பல்லைக்காட்டி இறைஞ்சும் மக்களின் மங்கிய குரலை—ஒத்திருந்தன. அவர்கள் எப்போதுமே வெற்றி பெற்றவர்களுடைய உள்ளங்கோணுது தங்கள் ஆன்மிகச் சூழல்களையோ சமூகச் சூழல்களையோ அமைத்து உயிர் தப்பிப்பிழைப்பவர்களே. சிறப்பாக உயிர்வாழமட்டும் உரிமைபெற வேண்டும். அவ்வளவே அவர்களுடைய விருப்பம். அதுவும் ஆங்கில ஆட்சியில் இந்நிலை ஏற்பட்டுவிட்டது; ஏனெனில், அங்கே சமூகப் பிரச்சினைகளின் வேறுபாடுகளே, ஆன்மிகத்தைக்காட்டிலும் விரிவாகக் காணக்கூடியன. அந்நூற்றுண்டிலிருந்த இந்துப் பிரிவினர்கள் ஒரே வாய்மையின் குறிக்கோளைக் கொண்டிருந்தார்கள். அது அவர்களுடைய ஆங்கிலத் தலைவர்களின் சம்மதமே, அன்பேயாகும். அவர்களுக்கு நாய்க்குடைகளின் ஆயுள் போன்ற ஆயுளே உளதென்பதில் ஐயமே இல்லை. இதில் வியப்புமிலலை. இந்திய மக்களுள் பெரும்பாலார் அவர்களிடத்தினின்றும் விலகியே நின்றனர். அவர்கள் இறக்கும்போது மக்கள் மகிழ்ச்சிக் குறி காட்டுவதே அவர்கள் பெற்ற சிறப்பாகும். ஆனல், சிறிது காலத்திற்கு வேறு விதமாய் இருந்திருக்க இயலாது போலும்!

இக்கால இந்தியா

[இது 1899-ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள், 'உத்போதன்' என்னும் பத்திரிகைக்குச் சுவாமிகள் வங்க மொழியில் வழங்கிய கட்டுரையின் மொழிபெயர்ப்பாகும்.]

முற்கால வைதிக பிராம்மண குருக்களின் வலிமை மேலானதே; அவ்வலிமைக்கு ஆதாரமானது, அவர்கள் யாகத்திற்குரிய மந்திரங்களை அறிந்திருந்தமையே. (யாக காலத்தில் தேவரை வரவழைத்தற்காகக் குருக்கள் உச்சரிக்கும் வேத மந்திரங்களாகிய கீதங்களே யாக மந்திரங்களாகும்.) இம்மந்திரங்களின் சத்தி தேவலோகத்தினின்றும் தேவரைக் கீழிறங்கி வரச்செய்கின்றது; அவர்க்கெனக் கொடுக்கப்படும் பானங்களையும் உணவுகளையும், அவர் ஏற்கும்படி செய்கிறது; யாகஞ்செய்வோராகிய 'எஜமான'ரின் வரங்களைக் கொடுக்கச் செய்கிறது. இக்காரணத்தால் அரசர்களும் குடிகளும் தங்களுக்கு உலக வாழ்வில் நன்மை உண்டாகும் பொருட்டு இக்குருக்களையே எதிர்பார்த்து நிற்கின்றார்கள். குருக்கள் 'ராஜஸோம'த்தை வழிபடுவார்கள்; (இது வேதங்களிற் பொதுவாகக் கூறப்படும் ஸோமம் என்னும் செடியாகும். யாககாலத்தில் இச்செடியின் சாற்றைத் தேவர்க்குக் குருக்கள் வழங்குவர்.) தம் மந்திரங்களின் சக்தியால் அதைச் செழிக்கச் செய்வர். குருக்கள் கொடுக்கும் இச்சோமரஸம் தேவர்க்கு விருப்பமானதாகும்; இதனால் தேவர் குருக்கள் மீது எப்போதும் அன்பாயிருப்பர்; குருக்கள் விரும்பும் வரங்களை ஈவர். இவ்வாறு தெய்வீக அருளால் வலிமை பெறும் குருக்கள் மக்களின் எவ்வித எதிர்ப்பையும் மதியார்; தேவரின் வலிமைக்கு எதிராக மக்களின் வலிமை யாது செய்ய இயலும்? உலக வலிமை முழுதற்கும் அச்சாயிருக்கும் அரசனும் அக்குருக்களுடைய வாயில் முன்பு இரவலனாய் நிற்பான். குருக்கள் அன்போடு நோக்குவாராயின், அரசனுக்கு அது அனைத்தினும் பெரிய உதவியாகும். அவர்களுடைய வாழ்த்துரையொன்றே நாட்டிற்கு வேறெதனினும் சிறந்த நன்கொடையாகும். ஒரு சமயம் அவர்கள் சாவையும் கேட்டையும் விளைக்கும் காரியங்களைச் செய்யும்படி அரசனை ஏவுவார்கள்; இன்னொரு சமயம் அரசனுக்கு மாறாத தோழராகி அருகு நின்று, அன்பும் ஞானமும் ததும்பும் நல்லுரைகளைக் கூறுவார்கள்; மற்றொரு சமயம் நுட்பமும் சாதுரியமும் வாய்ந்த

அரசியற்சூழ்ச்சி வலையை வீசி அரசனை அதில் எளிதாக வீழ்த்துவார்கள். இவ்வாறு பல முறை குருக்கள் அரச வலிமையையும் தம் அடிக்கீழ் முழுதும் அடக்கிவைப்பதைக் காணலாகும். அனைத்திற்கும் மேலாக, அரசர்களை மிகமிக அஞ்சச் செய்வது ஒன்று உண்டு; அது யாதெனில், தம் முன்னோராகிய அரசர்க்கும் தமக்கும் தம் குடும்பத்தார்க்கும் உரிய பேரும் புகழும் குருக்களது எழுதுகோலின் தயவைப் பொறுத்திருப்பதே. குருக்களே சரிதம் எழுதுபவர்கள். அரசன் உலகத்தைத் தன் குடைக் கீழ் ஆக்கி, அதனாலே தன் ஆட்சியில் ஆன்ற பெருமையைப் பெற்றிருக்கலாம்; தன் குடிகட்கு ஒருங்கே தாயும் தந்தையும் ஆகலாம்; ஆயினும் குருக்கள் திருப்தியடையாது போவாராயின், அவனது புகழெனும் ஞாயிறு அவனது ஆயுளோடே என்றைக்கும் மறைந்துவிடும்; உலகெலாம் புகழத்தகும் அவனது மதிப்பும் நன்மையும், கடலில் மெல்லென விழும் பனி போலக் காலத்தின் பெருவயிற்றில் மறைந்துவிடும். பிறர் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நிகழும் அசுவமேதம் போன்ற பெரிய வேள்விகளைத் தொடங்கியிருப்பர்; மாரிக் காலத்து விடாது சொரியும் மழையைப்போல, கணக்கற்ற செல்வத்தைக் குருக்கள் மீது பொழிந்திருப்பர்; இவர்களுடைய பெயர்களோ, குருக்களது தயவின் மகிமையால், சரித்திர நூலிலே அணிகளாய்த் திகழ்கின்றன. தேவர்க்குப் பிரியமான 'பிரிய தரிசி தர்ம அசோகர்' என்னும் பெயர் (புத்த மதத்தைத் தழுவிய பின்பு பேரரசர் அசோகர்க்கு இடப்பட்ட பெயர் இது) குருக்களது உலகத்தில் ஒரு பெயரேயன்றி வேறில்லை; ஆனால், பரீக்ஷித்தின் மகனாகிய ஜனமேஜயனது (மகாபாரதத்துக் கூறப்படும் பெரும்பாம்பு யாகத்தைச் செய்தவனது) பெயரை அறியாதார் எந்த இந்து குடும்பத்திலாயினும் எவரேனும் உளரோ?

அரசன் நாட்டைக் காக்க வேண்டும்; தனக்கும் தனது பெரும் பரிவாரத்திற்கும் தனித்தனியே வேண்டிய வாழ்க்கை வசதிகட்கும் போகங்கட்கும் செலவாகும் பொருளைத் தேடவேண்டும்; அனைத்திற்கும் மேலாக, எல்லாம் வல்ல குருக்களது பிரீதியைப் பெறுதற் பொருட்டு அவரது பெட்டிகளில் பணம் நிரம்பி வழியச் செய்ய வேண்டும். இக்காரியங்களுக்காக அரசன் தன் குடிகளுக்குரிய பொருளூற்றுகளை இறைக்க வேண்டியவனாகிறான். கதிரவன் பூமியிலுள்ள ஈரத்தை உறிஞ்சுவது போல, அரசனும் ஓயாது குடிகளின்

செல்வத்தை உறிஞ்சிக்கொண்டேயிருக்கிறன். அவனுக்குச் சிறப்பாக இரையாவார் கறவைப் பசுக்களாகிய வைசியரே.

அரசாங்க அலுவல்களில் குடிகள் தமது கருத்தை வெளியிடுதல் என்னும் முறை ஒன்றுண்டு. இந்து அரசரது ஆட்சியிலோ, பௌத்தரது ஆட்சியிலோ, பொது மக்களான குடிகள் இம்முறையில் யாதொரு தொடர்பும் வைத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. வாரணவதத்திலே உதிட்டிரர் இருக்கும்போது வைசியர் வீடுகளை மட்டுமன்றி, சூத்திரர்களின் வீடுகளையும் போய்ப் பார்க்கிறர் என்பது உண்மையே; அயோத்தியை ஆள இராமசந்திரருக்கு முடிசூட்டும்படி குடிகள் வேண்டிக்கொள்வதும் உண்மையே; அம்மட்டோ! குடிகள் சீதையின் ஒழுக்கத்தைப் பழிக்கவும், அவளைக் காட்டிற்கு அனுப்புமாறு இரகசியமாக ஏற்பாடு செய்யவும் தலைப்படுகின்றுர்கள். ஆயினும், தலைமை அரசாங்கத்தில் தலையிட்டுத் தமது கருத்தை நேராக வெளியிடும் உரிமை குடிகட்கு இல்லை என்பதை எல்லோரும் அரசியல் விதியாக ஒப்புக்கொள்கின்றனர். பொது மக்களது சத்தி என்பது யாதொரு முறையுமின்றி ஒழுங்கீனமான சுற்று வழிகளில் தன்னை வெளிப்படுத்தப் போராடிக்கொண்டிருக்கின்றது. அம்மாதிரியான சத்தியின் இருப்பை அறிந்திருப்பதான உணர்ச்சி மக்களுக்கு இன்னும் ஏற்படவில்லை. அச்சத்தியை ஒழுங்காக ஒரு வழிப்படுத்தி, அதன் மூலமாகப் பலர் ஒன்று கூடி ஒரு செயலைச் செய்யும் முயற்சியும் மக்களிடம் இல்லை; அவ்வாறு செய்யும் மன உறுதியும் இல்லை. பிரிந்து கிடக்கும் சிறு சத்தி நிலையங்களை ஒன்று கூட்டி ஒரே தொகுப்புச் சத்தியாக்கி, அவ்வழியாக வெல்லுதற்கரிய ஆற்றலை உண்டாக்கும் திறமை ஒன்றுண்டு; இம்மியளவும் இந்த ஆற்றல் மக்களிடம் காணப்படுவதில்லை.

தக்க சட்டங்கள் இல்லாமையே இதன் காரணமா? அன்று; அதுவன்று. அரசியலின் வெவ்வேறு துறைகளையும் நடத்துதற்கென வெவ்வேருகச் சிறப்பாக அமைக்கப்பட்ட விதிகளும் முறைகளும் உள்ளன; தீர்வை வசூலித்தல், படையை ஆளுதல், நீதி செலுத்துதல், தண்டனை, கொடை போன்ற ஒவ்வொன்றிற்கும் மிக விவரமாக விதிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனல், அனைத்திற்கும் வேராயிருப்பது, 'ரிஷி'யின் கட்டளையே; முனிவரது மொழி தெய்வ ஆணையால் எழும் மொழியே; பரவச நிலையில் அம்முனிவர் மூலமாக வெளிப்படும் அருள் வாக்கே. இவ்விதிகளில் நீக்குப்

போக்கு இல்லையெனல் சற்றேறக் குறைய முழுதும் பொருந்தும். இந்நிலையில் குடிகளுக்குத் தம் உரிமையை வற்புறுத்தும் வகையை அறியவும் வழி இல்லாது போகிறது. பொதுமக்கள் தாங்களே ஒன்று கூடி, தங்கள் பொது நன்மைக்காகும் ஒரு செயலை நிறைவேற்றுதற்காக மனம் ஒன்றுபட்டு நிற்கப் பழகுதல் இயலாததாகிறது; அரசன் குடிகளிடமிருந்து திரட்டும் நிதிகளில் குடிகளுக்கு உரிமையுண்டு என்ற கருத்து உதித்தற்கு வேண்டிய ஒழுங்கான அறிவைத் தரும் கல்வியைக் குடிகள் பெறுதலும் முடியாததாகின்றது; அரசாங்க வரவு செலவுகளை அடக்கியாளும் துறையில் பிரதிநிதித்துவ உரிமையைப் பெறும் ஆசைக்கனலைக் குடிகளிடத்து மூட்டும் கல்விக்கும் வழி இல்லாமற் போகிறது. ஆனால், குடிகள் இச்செயல்களைச் செய்ய வேண்டிய அவசியம் யாது? குடிகளின் செழிப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் உள்ள பொறுப்பு 'ரிஷி'யின் அருட்பரவச நிலையைச் சார்ந்ததன்றோ?

மேலும், அவ்விதிகள் யாவும் நூல்களில் வரையப்பட்டுள்ளன. நூல்களிலிலே செவ்வையாகத் தொகுக்கப்பட்டுள்ள விதி முறைகட்கும், அவ்விதிகளை வாழ்க்கையிலே பின்பற்றும் நடை முறைகட்கும் உள்ள வேறுபாடு உலகினும் பெரியதாகும். ஆயிரம் அக்கினி வர்ணர்களின் காலத்திற்குப் பின்பு ஓர் இராமசந்திரரின் அவதாரம் ஏற்படுகிறது. (அக்கினிவர்ணன் சூரிய வமிசத்து அரசன்; அந்தப்புரத்தை விட்டு ஒரு கணமும் வெளிவராது வாழ்ந்தவன்; மிதமிஞ்சிய போகத்தில் மூழ்கி நோயுற்று மாண்டவன்.) சண்ட அசோகரது வாழ்க்கையைப் பின்பற்றும் அரசர் பலர்; தர்ம அசோகரைப் போல வாழ்தலோ, அரிது! (அசோகர் என்னும் பேரரசர் தம்பியைக் கொன்று முடி சூடியதாலும், வேறு பல கொடுமைகளைச் செய்தமையாலும் முதலில் 'சண்ட அசோகர்', அதாவது மூர்க்க அசோகர் என்னும் பெயரைப் பெற்ருர். ஒன்பது ஆண்டுகள் அரசு புரிந்த பின் புத்த மதத்தைத் தழுவி, திருந்திய ஒழுக்கமுடையராகி, பல நற்செயல்களைப் புரிந்து 'தர்ம அசோகர்' என்னும் பெயரைப் பெற்ருர்.) குடிகளுக்கு நல்வாழ்வை அளித்த அக்பர் போன்ற அரசர்களின் தொகை, குடிகளின் இரத்தத்தை உறிஞ்சி வாழ்ந்த அவுரங்கசீபு போன்ற அரசர்களின் தொகையினும் மிகக் குறைந்ததே.

அரசர், யுதிஷ்டிரரையோ, இராமசந்திரரையோ, தர்ம அசோகரையோ, அக்பரையோ போன்று தெய்வ இயல்புடையவராகவே

இருக்கட்டும்; அவரது அருள் மிகுந்த ஆட்சியின்கீழ்க் குடிகள் பய மின்றியும், செழிப்பாகவும், வாழ்ந்தும் வரட்டும்; குடிகளை அரசர் தந்தை போன்று ஆதரித்தும் வரட்டும். அப்போதும், பிறனொரு வனால் எப்போதும் ஊட்டப் பெறுபவனது கை, உணவை வாய்க் குக் கொண்டுபோகும் திறனையும் படிப்படியாக இழந்துவிடுவது உண்மையன்றோ? பிறனொருவனால் எவ்விதத்தும் எப்போதும் பாதுகாக்கப்படுபவனிடம் தற்காப்புத் திறமை முழுதும் வெளிப் படுதல் ஒருக்காலும் இயலாதன்றோ? மிக்க பலமுள்ள காளையேயா யினும், பெற்றோர் அவனைக் குழந்தையாகப் பாவித்து எப்போதும் பாதுகாத்து வருவராயின், அவன் ஒரு குழந்தையாகவே இருப் பான். தெய்வத் தன்மை வாய்ந்த அரசரது ஆட்சியிலே, குடிகளுக்கு வேண்டியவற்றை அளித்துப் பாதுகாக்கும் கடமை முழுவதும் அவ் வரசரையே சார்கின்றது; அம்மாதிரியான ஆட்சிக்கு எப்போதும் உட்படுவதனால், சுய ஆட்சியின் கொள்கைகளை அறிதற்கு ஒரு சமயமும் குடிகளுக்கு வாய்க்காது போகிறது. அவ்வாறு வாழும் குடிகள் எதற்கும் அரசனையே முழுதும் சார்ந்தவராகின்றனர். பொது நன்மைக்காகவோ, தற்பாதுகாப்புக்காகவோ தாமே முயற்சி செய்வதில் ஒருபோதும் கவனம் செலுத்தமாட்டார்; இத னால், தம்முள் அடங்கியிருக்கும் ஆற்றலையும் பலத்தையும் சிறிது சிறிதாக இழந்துவிடுபவராகின்றனர். பிறரைச் சார்ந்த வாழ்வும், பிறரது பாதுகாப்புக்குட்படுதலும் ஆகிய இந்நிலை நெடுநாள் தொடர்ந்து நிகழின், அது அக்குடிகளின் கேட்டிற்குக் காரணமா கின்றது; அந்நாடு அழிவை அடைய நெடுந்தொலை செல்ல வேண்டு வதில்லை.

ஆனால், ஒரு கேள்வி பிறக்கலாம். சாத்திரங்களோ பெருமை வாய்ந்த முனிவரின் தெய்விகப் பேரறிவினின்றும் அருளால் எழும் அறிவின் பயனாக உண்டாயின; அந்தச் சாத்திரங்களில் ஆணை யாகக் காணப்படும் விதிகளின் தொகுதிகளைத் துணைக்கொண்டே ஒரு நாட்டின் ஆட்சி நடைபெற்று வருகின்றது; அப்படியாயின், அம்மாதிரி ஆட்சியினால் செல்வர் ஏழைகள், அறிவாளிகள் அறி வில்லாதார், அரசன் குடிகள் ஆகிய அனைவர்க்கும் வேறுபாடின்றி இடையறாத நன்மை விளையவேண்டும் என்று முடிவு செய்தல் அறி விற்குப் பொருத்தமானதன்றோ? எனினும், அந்த விதிகளைப் பின் பற்றுதல் அனுபவ வாழ்க்கையில் எந்த அளவிற்கு இயல்வது என் பதையும், இயலக்கூடும் என்பதையும் யாம் முன்னமே கண்டுள்

ளோம். ஆளப்படுவார்க்குத் தமது நாட்டின் ஆட்சியில் அதிகாரம் உண்டு என்பது இக்கால மேற்றிசை உலகினரின் கொள்கை; இக் கொள்கை கடைசியாக வெளி வந்த வடிவத்தின் எதிரொலி அமெரிக்க அரசாங்கத்தாரின் 'உறுதி மொழி அறிக்கை'யில் இடி போன்று முழங்குகின்றது; அந்த அறிக்கை கூறும் மொழிகள், "இந்நாட்டு மக்களின் ஆட்சி அம்மக்களாலேயே அம்மக்களின் நன்மைக்கென்றே நிகழ வேண்டும்," என்பன. இக்கொள்கை பழைய இந்தியாவில் மக்களின் அறிவுக்குச் சற்றும் எட்டாமலே போயிற்று என்று சொல்ல முடியுமா? கிரேக்க நாட்டுப் பிரயாணி களும் பிறரும் இத்தேசமெங்கும் அங்கங்கே பிரிந்து கிடந்த பல சிறு சுதந்தர நாடுகளைக் கண்டுள்ளனர். புத்த மத நூல்களில் பல விடங்களிலும் காணப்படும் குறிப்புகளும் இவ்வுண்மையை வலி யுறுத்துகின்றன. இன்றைக்கும் இந்தியாவில் பலவிடங்களிலும் 'கிராமப் பஞ்சாயத்து' என்ற முறை வழங்கி வருவதைக் காண லாம்; இம்முறையின் வடிவத்திலேனும் சுய ஆட்சியின் முளை இருந்ததென்பதைப்பற்றிய ஐயங்கொள்ள இடமில்லை. ஆனால், அம்முளை என்றைக்கும் முளையாகவே இருந்தது; விதை நிலத்தில் இருந்ததெனினும், அது மரமாக வளர்ந்தது எந்நாளும் இல்லை. சுய ஆட்சி என்னும் கருத்து, 'கிராமப் பஞ்சாயத்து முறை'யாகிய முளை நிலையைக் கடந்து அப்பாற்சென்றது ஒரு காலும் இல்லை.

சமயக் குழுவினர்க்குள், சான்றாக, புத்த மடங்களில் வாழ்ந்த துறவியர்க்குள், சுய ஆட்சி முற்றிய வளர்ச்சியடைந்திருந்தது என் பதற்குச் சான்று நமக்கு நிறையக் கிடைத்துள்ளது. இன்றைக்கும் பஞ்சாயத்து முறையென்னும் சுய ஆட்சிக் கொள்கையின் சத்தி 'நாக' பரம்பரைத் துறவியர்க்குள் நன்றாக வேலை செய்து வரு கின்றது; 'ஐவரது ஆட்சி' (பஞ்சாயத்து) முறையின் மீது அவர் மிகப்பெரிய மதிப்புடையவராகின்றனர்; ஒவ்வொரு 'நாக'ரும் தம் சொந்தக் கூட்டத்தார்க்குள் அவரவர்க்குரிய தனி உரிமை களை வெற்றி பெறச் செலுத்தி வருகின்றனர்; ஒன்று கூடிச் சங்கமாகி ஒத்துழைப்பதன் சத்தி அவர்களுக்குள்ளே மிக மேன்மையாக வேலை செய்து வருகின்றது. இவையனைத்தையும் காணும் ஒருவன் இன்றும் வியப்படைகிறான்.

புத்தமத வெள்ளம் நாட்டில் பாய்ந்தோடிய பின், குருமாரது அதிகாரம் அழியலாயிற்று; வேந்தரது அதிகாரம் ஓங்கலாயிற்று.

புத்தமதக் குருக்கள் உலகத்தைத் துறந்தவர்கள் ; உலக அலுவல்களில் சிந்தனையற்ற, வீடு வாசலற்ற முனிவராய் மடங்களில் வாழ்பவர்கள். அரசரைத் தமது சாப வலிமையாலோ மாய அத்திர வலிமையாலோ அச்சுறுத்தி, அவரது அதிகாரத்தைத் தமக்கு உட்படுத்தித் தமது ஆளுகைக்குள் வைத்திருக்கும் எண்ணமோ, முயற்சியோ அம்முனிவரிடத்து இருப்பதில்லை. அம்மாதிரியான எண்ணம் ஒரு சிறிதேனும் மிச்சமிருந்ததாகக் கொண்டாலும், அதை நிறைவேற்றுதல் அப்போது முடியாத காரியமாகிவிட்டது. ஏனெனில், புத்தமதம் யாக உணவையுண்ணும் தேவர்களனைவருடைய அரியணைகளையும் குலுக்கி, தேவலோகப் பதவிகளினின்றும் தேவர்களைக் கீழே வீழ்த்திவிட்டது. ஒரு புத்தரது பதவி பல பிரம்ம பதவிகளையும் இந்திர பதவிகளையுங்காட்டிலும் மேலானதாயிற்று. ஈசனது தன்மையை எய்திய மனிதராகிய புத்தரது திருவடிகளிலே முடியை வைத்து வணங்குதற்காகப் பிரம்மாக்களும் இந்திரரும் ஒருவரோடொருவர் போட்டி போடுகின்றனர் ! இந்தப் புத்த பதவியை அடையும் உரிமை எம்மனிதனுக்கும் உள்ளது ; இவ்வாழ்க்கையிலும் அது அனைவராலும் அடையத் தகுந்தது. தேவர்களின் வீழ்ச்சி முதலே, அதன் இயல்பான பயனாக, அவர்களால் ஆதரிக்கப்பட்டு வந்த குருக்களின் மேன்மையும் ஒழிந்துவிட்டது.

இதனால் க்ஷத்திரிய சத்தி என்னும் ஆற்றல் வாய்ந்த வேள்விக் குதிரையின் கடிவாளம் வேதமோதிய குருவின் உறுதியான பிடிப்புக்குள் அகப்பட்டுக்கொள்ளாமல் இருந்தது ; அக்குதிரை இப்போது விடுதலை பெற்றுள்ளமையால், கட்டுக்கடங்காது தன் விருப்பப்படியே எங்கும் திரியக்கூடியதாயிற்று. இக்காலத்தில் சத்திக்கு அச்சாயிருப்பவர், சாம கீதங்களை உச்சரித்துக்கொண்டு யஜுர் வேத முறைப்படி யாகங்களை இயற்றும் குருக்களல்லர் ; ஒன்று சேராது பிரிந்து, தத்தம் சிறிய சுதந்திர நாடுகளை ஆண்டு வந்த க்ஷத்திரிய அரசரது கையிலும் இப்போது சத்தி அமையவில்லை. இந்நாளில் சத்திக்கு நிலைக்களன் மன்னாதி மன்னனே. இப்பேரரசனின் தடையற்ற ஆட்சி இந்தியா முழுவதும் ஒரு கோடியிலிருந்து மற்றொருகோடிவரை கடலை எல்லையாகக்கொண்ட அகன்ற நிலப்பகுதிகளின்மீது பரவியிருந்தது. இக்காலத் தலைவர் விசுவாமித்திரரும் வசிட்டருமல்லர் ; சந்திரகுப்தர், தர்ம அசோகர் முதலான பேரரசரேயாவர். புத்தமதம் நிலைபெற்ற இந்நாளில்

இந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்ட பெருமன்னரைப் போன்றவர் அது வரை இந்தியாவில் முடி சூடியவரில் ஒருவரும் இலரானர். அந்நாட்டின் புகழை உச்சநிலைக்குக் கொண்டு வந்தவரும் அப்பெருமன்னரேயன்றி வேறெவரும் அல்லர். இப்புத்த மதக் காலத்தின் முடிவிலே இராஜபுத்திரரது சத்தி காட்சியளிக்கத் தொடங்கிற்று. இக்கால இந்து மதமும் தலைதூக்கிற்று. புத்த மதம் தலைசாய்ந்த பின், இராஜபுத்திர சத்தி மேலெழுதலும், இந்தியப் பேரரசு ஒரு நாயகமிாய் ஆண்ட வல்லரசரது கையினின்றும் நழுவி, மீண்டும் ஆயிரந்துண்டுகளாய்ப் பிரிந்து, வலிமையற்ற சிற்றரசர் பலர்க்கு உரியதாயிற்று. இச்சமயம் பிராம்மண சத்தி மறுபடியும் மேற்கிளம்பியது; ஆனல், முன்போன்று அது அரசனது தலைமையதிகாரத்திற்கு எதிரியாகாது, அதற்கு உதவியாய் நின்றது.

குருக்களது வகுப்பிற்கும் அரசரது வகுப்பிற்கும் உண்டான தலைமையதிகாரத்தைப்பற்றிய ஓயாதபோர், வேத காலம் தொடங்கி, நெடுங்காலம் தொடர்ந்து நிகழ்ந்து வந்தது; சமண மதப் புரட்சிக் காலத்திலும் புத்தமதப் புரட்சிக் காலத்திலும் அது உயர்ந்த மும்முரத்தை அடைந்தது; அப்போர் முன்கூறிய இப்புரட்சியில் மீளாது ஒழிந்துவிட்டது. வலிமையுற்ற இவ்விரு வகுப்பினரும் இப்போது ஒருவரோடொருவர் நேசமாயுள்ளனர்; ஆனல், அரசரது மாட்சிமை மிக்க க்ஷத்திரிய வீரியமோ, பிராம்மணர்க்குச் சிறப்புரிமையான ஞான விளக்கமோ இன்று தோன்றுவதில்லை; இருவரும் தத்தம் முன்னுளைய இயல்பான வலிமையை இழந்துவிட்டனர். வல்லாரான இவ்விருவரும் புதிதாக ஒன்று சேர்ந்ததன் பயன், நாம் எதிர்பார்க்கக் கூடியதே. விரைவில் ஒருவர் மற்றொருவரது சுயநலப் பேற்றுக்கு உதவியாயினர்; தமக்குப் பொது எதிரிகளான பலரையும், முக்கியமாக அக்காலப் பௌத்தரையும், அடியோடழிப்பதிலும் இன்னும் இதுபோன்ற செயல்களிலும் தமது கூட்டு வலிமையைச் சிதறவிட்டுப் பாழாக்கினர். இருவரது சேர்க்கையின் பயனுக, பொது மக்களது இரத்தத்தை உறிஞ்சுதல், பகைவனிடம் பழிக்குப் பழி வாங்குதல், பிறரது சொத்தைக் கொள்ளையிடுதல் முதலிய பல தீய ஒழுக்கங்கள் அவரை நாடலாயின; இவையனைத்திலும் மூழ்கியிருந்தமையின், அவர் பழங்கால அரசரைப்போல இராஜசூயம் முதலிய வைதிக வேள்விகளை இயற்ற வீணுக முயன்று, பிறரது கேலிக்கும் நகைப்புக்கும்

அவற்றை இடமாக்கினர். இதனல் விளைந்தது யாதெனில், முகத்தெதிரே புகழும் காவலாளரது பெருங்கூட்டம் இவரைப் புடைசூழ, அக்கூட்டத்தார்க்கும் அவர் கூறிய இழிவான வெறும் புகழுரைக்கும் இவர் நன்கு கட்டுப்படலானுர்; மேலும், இவர் மந்திர முழக்கமும் அதுபோன்ற பிறவும் அமைந்த முடிவில்லாத கிரியைகளின் வலையிற்சிக்கியிருந்தமையின், மேற்றிசையினின்றும் படையெடுத்த மகமதியர்க்குச் சிறிதுகாலத்திற்குள் எளிதாகவும் எதிர்ப்பின்றியும் இரையாயினர்.

வேத காலம் தொட்டு அரசசத்தியை எதிர்த்து அதனை வெல்லக் கருதிப் போராடிப் பல காலம் அதைத் தொடர்ந்து நடத்தி வந்தது பிராம்மண சத்தியே; இந்தச் சத்தியையும் க்ஷத்திரியர் மீது கொண்ட இவ்வெம்பகையையும் அப்போதைக்காவது தடுத்து நிறுத்தியவர் ஸ்ரீ கிருஷ்ண பகவானே. இவர் தாம் பூலோகத்து வாழ்ந்த காலத்திலேனும் அவற்றை அடக்குவதில் வெற்றி பெற்றதற்குக் காரணமானது இவரது தெய்விகப் பேரறிவே. பிராம்மண சத்தி சமண மத புத்த மதப் புரட்சிக் காலங்களில், இந்தியாவில் வேலை செய்துகொண்டிருந்த வட்டாரத்திலே சற்றே குறைய முழுவதும் துடைத்தழிக்கப்பட்டது; அன்றேல், ஒருகால் ஆற்றல் மிக்க எதிரி மதங்கட்கு அடங்கியிருந்தமையால் சாகமாட்டாது தன்னிலையிலே நின்றது எனலாம். மிஹிர குல வமிசத்தின் கீழும் வேறு வமிசங்களின் கீழும் இந்தியாவின் மீது ஆட்சியைச் செலுத்திய இராஜபுத்திர சத்தி உதித்தநாள் முதலாக, பிராம்மண அதிகாரம் தனது இழந்த பெருமையையே மீண்டும் பெறக் கடைசி முறையாக முயன்றது; தனது தலைமையை நிலைநாட்ட முயன்றதன் பயனுய், அது மத்திய ஆசியாவினின்றும் புதிதாகவந்திருந்த நாகரிகமற்ற மூர்க்கத் திரளின் காலடியில் தன்னையே வீழ்த்திக்கொள்ளலாயிற்று; மேலும், அம்மூர்க்கரின் பிரியத்தைப் பெறும் பொருட்டு அவருடைய வெறுக்கத்தக்க பழக்க வழக்கங்களை நாட்டிற்குள் புகுத்திற்று. பின்னும் அந்தப் பிராம்மண சத்தி அறிவில்லாத அநாகரிகரை ஏமாற்றுதற்குரிய எளிய வழியில் ஈடுபடுதலையே தொழிலாகக் கொண்டு, இரகசியமான செயல்களையும், அவற்றிற்கு ஆதரவாகப் புது மந்திரங்களையும், அவை போன்ற பிறவற்றையும் பழக்கத்திற்குக் கொணர்ந்தது; இச் செயலால் தன் பழைய ஞானத்தையும், முன்னுளைய சுருசுருப்பையும், பன்னுளாக நாடிப் பெற்ற தன் தூய பழக்கங்களையும் இழந்தது. இவ்வாறு

அது ஆரியவர்த்தம் முழுதையும் மிகக் கெட்ட, மிக நடுங்கத்தக்க, மிக வெறுக்கத்தக்க, நாகரிகமற்ற பழக்கங்களென்னும் ஆழ்ந்த அகன்ற நீர்ச்சுழியாக மாற்றியது. இம்மாதிரியான அருவருக்கத் தக்க பழக்கங்களையும் மூடக் கொள்கைகளையும் ஆதரித்ததனுல் விளைந்த தடுத்தற்கரிய பயன் யாதெனில், அது தனக்குரிய உள் வலிமையையும், தாங்கும் சக்தியையும் முற்றும் இழந்து, பலவீன மானவற்றிற்குள் மிக்க பலவீனமுற்றதாயிற்று. இந்நிலையில் அச் சத்தி, மேற்றிசையினின்றெழுந்த முசல்மான் படையெடுப்பு என்னும் புயல் காற்றுப்பட்டதும், ஆயிரம் துண்டுகளாகச் சிதறி வீழ்ந்தது என்பதில் வியப்பு யாது? பெருமையுற்ற பிராம்மண சத்தி இவ்வாறு வீழ்ச்சியுற்றது, இனி என்றைக்கேனும் மீண்டும் எழ வழியுண்டோ? இதை யாரே அறிவார்?

முசல்மான் ஆட்சியின் கீழ் பிராம்மண சத்தி முன்னைய நிலையினை அடைதல் என்பதோ, சற்றும் இயலாத காரியம் ஆயிற்று. மகமது நபி என்பவரே எவ்விதத்திலும் குருமாரது வகுப்பைச் சகியாதவர்; அவ்வகுப்பினரது சத்தியைத் தாம் ஏற்படுத்திய விதிகளாலும் கட்டளைகளாலும் முழுதும் அழிக்க, இயலு மட்டும் முயன்றவர். முசல்மான் ஆட்சியின் கீழ் அரசரே மிகவுயர்ந்த குருவானுர்; அவரே மத சம்பந்தமான காரியங்களில் முக்கியமான துணையாயினர்; அவர் மன்னர்க்கு மன்னரானபோது, 'முசல்மான் உலகம்' முழுமைக்கும் எல்லாக் காரியங்களிலும் தனித்தலைமை வகிக்கும் காலத்தை எதிர்பார்த்து நிற்பார். முசல்மானுக்கு யூதனே, கிறித்தவனே, வரம்பற்ற வெறுப்புக்குரிய ஒரு பொருளாகான்; அவர் இருவரும் மிகத் தாழ்ந்த நிலையிலும் குறைந்த நம்பிக்கையுடைய மனிதராக மட்டுமே கருதப்பட்டார். ஆனல், இந்துவை அவன் அவ்வாறு கருதுவதில்லை. இந்து, விக்கிரகங்களை வணங்குபவன்; மகமதிய மதத்திலே நம்பிக்கையற்றவனுதலின், வெறுப்பிற்கே உரியவன்; இக்காரணத்தால் இப்பிறப்பில் அவன் பலியாவதற்கே தகுதியுடையவன்; இறந்த பின் மீளா நரகில் வீழ்பவன். நம்பிக்கையற்ற இப்பாவிகட்கு ஞான நெறியைக் காட்டுவோரான குருமாரது வகுப்பிற்கு முசல்மான் அரசர் செய்யக்கூடிய மிகப் பெரிய உதவியாவது, எவ்விதத்திலாவது அவர் தமது வாழ்நாளை அமைதியாகக் கழிக்கும்படிக்கும், மரணத்தை எதிர்பார்க்கும்படிக்கும் விட்டுவைத்தலே. சில சமயம் இச் செயல் அளவு மீற, அன்பாகக் கருதப்படுவதுமுண்டு. எந்த

அரசரேனும் வழக்கத்திற்குச் சற்றே மிகுந்த மத ஊக்கமுடைய ராயின், நம்பிக்கையற்ற மூடரைக் கொலை செய்தல் என்னும் பெரிய யாகத்தை நடத்த உடனே ஏற்பாடுகள் செய்யப்படும்!

ஒரு பக்கத்தில் க்ஷத்திரிய சத்தி இப்போது அன்னிய மதத்தைத் தழுவி வேறுபட்ட வழக்கங்களைப் பின்பற்றும் அரசரிடத்தே நிலைத் துள்ளது. மற்றொரு பக்கத்தில், பிராம்மண சத்தி சமுதாயத்தை அடக்கியாண்டும் அதற்குச் சட்டங்களை விதித்தும் வந்த மதிப்பான நிலையிலிருந்து முழுதும் தள்ளப்பட்டது. குர்-ஆனும், அதில் கூறப்படும் விதிகளின் தொகுதியும், மனு முதலியோருடைய தரும சாத்திரங்களிருந்த இடத்திலே அமர்ந்துகொண்டன. வடமொழிக் குப் பதிலாகப் பாரசீக, அராபிய மொழிகள் இடம் பெறலாயின. வெல்லப்பட்ட, வெறுக்கப்பட்ட இந்துவின், முற்றிலும் மத சம்பந்த மான நூல்கட்கும் காரியங்கட்கும் பயன்படும் எல்லைக்குள் மட்டும், வடமொழி அடங்கிக் கிடந்தது; அதனால், அது முதலே அம்மொழி ஆதரவற்ற குருமாருடைய கைக்குட்பட்டு நிலையற்ற வாழ்வைப் பெறலாயிற்று. பிராம்மண சத்தியின் சின்னமாக மிஞ்சிய குருமா ரும், மணம் முதலிய அவ்வளவு முக்கியமல்லாத குடும்பக் கிரியை களை மட்டும் நடத்துதலையே தமது வாழ்விற்கு வழியாகப் பற்ற லானார். அதுவும் ஆட்சித்தலைவரான மகமதியர் இரக்கத்தால் இடம் கொடுத்த காலம் வரைக்கும், இடம் கொடுத்த அளவிற்கு மட்டும் செல்லலாயிற்று.

வேத காலத்திலும் அதையடுத்த காலங்களிலும் பிராம்மண சத் தியால் அமுக்கி அரைக்கப்பட்டு வந்த காரணத்தினால் க்ஷத்திரிய சத்தி தலை தூக்க முடியாது போயிற்று. பிராம்மண சத்தியின் வீழ்ச்சியை உண்டாக்கிய புத்த மதப் புரட்சிக் காலத்தில் இந்தியா விலே க்ஷத்திரிய சத்தி உச்ச நிலையை அடைந்த வகையையும் நாம் அறிந்துளோம். புத்த மதப் பேரரசின் வீழ்ச்சிக்கும், மகமதி யப் பேரரசு நிலைபெற்றதற்கும் இடையிலுள்ள காலத்து, இந்தியாவி லுள்ள இராஜபுத்திரர் மூலமாக க்ஷத்திரிய சத்தி தலையெடுக்க வீணாக முயன்றதையும் அதில் தோல்வியடைந்ததையும் நாம் கண் டுள்ளோம். இத்தோல்விக்கு மூலமானதும், வைதிக பிராம்மணக் குருமார் தமது பழைய (கிரியைகள் வளர்ந்த) காலத்தை மறுபடி யும் கொணர்ந்து அதற்குப் புத்துயிர் ஊட்டுமாறு செய்த அதே பண்டைய முயற்சியே என்பதை ஆராய்ச்சியால் அறியலாம்.

பிராம்மணரது தலைமையதிகாரத்தைக் காலின்கீழ் நசுக்கியே

முசல்மான் அரசன் பேரரசு வமிசங்களின் இழந்த பெருமைகளை நெடுந்தூரம் மீண்டும் நிலைநாட்ட வல்லவனானான்; இம்மாதிரி மேன்மை பெற்றவை, மௌரியர், குப்தர், ஆந்திரர், க்ஷாத்திரியர் (ஆரியாவர்த்தத்திலும் குஜராத்திலும் ஆட்சி செலுத்திய பாரசீக அரசப் பிரதிநிதிகள்) என்னும் வமிசங்களே.

குமாரிலர், சங்கரர், இராமானுசர் போன்ற முனிவர் பிராம்மண சத்தியை மீண்டும் நிலை நாட்ட முயன்றனர்; சிறிது காலம் அச்சத்தி இராஜபுத்திர அரசரது வாளின் ஆதரவையும் பெற்றது; சமண பௌத்த எதிரிகளின் வீழ்ச்சிக்குப் பின் அது தனது அமைப்பை மறுபடியும் புதுப்பிக்கவும் முயன்றது. ஆயினும், அது மகமதியரது ஆட்சியின்கீழ் விழித்தெழ முடியாதபடி, என்றைக்கும் உறங்கும்படி செய்யப்பட்டது. இக்காலத்தில் பகைமையோ போராட்டமோ அரசர்க்கும் குருக்களுக்கும் உண்டாகவில்லை; அரசர்க்கும் அரசர்க்கும் நிகழ்ந்தது. இக்காலத்தின் முடிவில் இந்து அதிகாரம் மறுபடியும் தலை தூக்கிற்று; மராட்டியர் சீக்கியர் மூலமாக ஓர் அளவிற்கு இந்து மதத்திற்குப் புத்துயிரளிப்பதில் வெற்றியும் பெற்றது; ஆயினும், இப்புத்துயிரளிக்கும் முயற்சிகளில் பிராம்மண சத்தி மிகுதியாக வேலை செய்ததாகக் காணப்படவில்லை. அம்மட்டோடு நில்லாது, அதற்கு மாறாக, சீக்கியர் யாரேனும் ஒரு பிராம்மணனைத் தமது சமூகத்திற் புகுத்தியபோது, அவனது முன்னைய பிராம்மண அடையாளங்களைப் பகிரங்கமாக விட்டுவிட்டுத் தமது மதத்திற்குரிய, அனைவரும் ஒப்புக்கொண்ட அறிகுறிகளைப் பற்ற வேண்டும் என்று சீக்கியர் அவனை முதலில் கட்டாயப்படுத்தலாயினர்.

இவ்வாறாக, இவ்விரண்டு சத்திகட்கும் உள்ள போராட்டத்தில் செயலும் எதிர்ச் செயலும் மாறி மாறித் தொடர்ந்து பன்னெடுங் காலம் நிகழ்ந்ததன் பின் இறுதி வெற்றி க்ஷத்திரிய சத்திக்கே உண்டாயிற்று; பல நூற்றாண்டுகளாக இந்திய நாட்டில் விளங்கிய இவ்வெற்றிக்குக் காரணமானவர் அந்நாட்டு மதத்தினின்றும் முற்றிலும் வேறுபட்ட ஒரு மதத்தைத் தழுவிய அயல் அரசரே. ஆனால், இம்மகமதியரது ஆட்சிக்குப் பின், இன்னொரு புத்தம் புதிய அதிகாரம் அரசியல் அரங்கத்திலே தோன்றி, இந்திய உலக அலுவல்களில் தனது வல்லமையை மெதுவாக வற்புறுத்தத் தொடங்கியது.

இந்த அதிகாரமோ, மிகப் புதியது; இதன் இயல்பும் இது

வேலை செய்யும் விதங்களுமோ, இந்தியரது மனத்திற்கு முற்றிலும் புறம்பானவை ; இது கிளம்பிய வகை, கருதற்கு அரிதாயும், இதன் சத்தி வெல்லற்கு அரிதாயும் அமையலாயின. இக்காரணங்களினு லன்றோ, இந்தத் தலைமை அதிகாரம் இன்றளவும் ஆட்சியிலிருந் தும், இதன் தன்மை இன்னது என்பதை அறிவார் ஒரு சிலரேயா யினர் ?

நாம் இப்போது குறிப்பது, இந்தியாவை இங்கிலாந்து கைப் பற்றியதேயாகும்.

நெடுங்காலமாகவே, இந்தியாவின் பரந்த செல்வத்தையும் பண்டம் நிறைந்த களஞ்சியங்களையும் பற்றிய புகழினைக் கேட்ட பல வலிய அயல் நாட்டினர் இந்நாட்டை வெல்லும் ஆசைத் தீ மூளப்பெற்றிருந்தனர். அயல் நாட்டினரால் இது மீண்டும் மீண் டும் வெல்லப்பட்டிருப்பதும் உண்மையே. அப்படியிருக்க, இங்கி லாந்து கைப்பற்றியது இந்தியரது மனத்திற்குப் புதியதும் அயலது மான ஒன்ருயிற்று என்பது நாம் கூறுவதேன் ?

முற்காலத்துப் பிராம்மணர் தவ வடிவந்தாங்கி வீடற்றுத் திரியி னும், ஞான வலிமையையும், பரந்த மத நூற்கல்வியறிவையும் கருவியாகக் கொண்டிருந்தனர் ; அதற்கும் மேலாக, முட்டுப் பாடான காலத்துக் கோபத்தோடு சபிக்கும் ஆற்றலையும் கருவி யாகப் பூண்டிருந்தனர். இக்காரணத்தால், அக்குருமார் சினந்து நோக்கின், அகந்தை மிகுந்த க்ஷத்திரிய சத்தியும் நடுங்கும். இதுவே நினைவுக்கெட்டாத காலம் முதல் இந்தியா கண்டு வந்த காட்சி. பயங்கரமான ஆயுதங்களையும் சேனைகளையும் துணையாகக் கொண்ட எல்லாம் வல்ல அரசர் முன்பு, குடிமக்கள், சிங்கத்தைக் கண்ட ஆட்டு மந்தைகளைப் போன்று அடி பணிந்து, அரசரது கட்டளைகட்கு மௌனமாகக் கீழ்ப்படிதலையும் இந்தியா கண் டுள்ளது. ஆனுல், இப்போதோ, இது வரை காணுத புதுமை யொன்று தோன்றுகிறது. ஒரு நாட்டிலே வைசிய (வியாபாரத் தொழிலுடைய) வகுப்பினர், இணையற்ற செல்வம் படைத்தவரா யினும், அரசர்க்கு மட்டுமன்றி, அரச வமிசத்தினரில் எவர்க்கும், நடுநடுங்கி முழந்தாட்படியிட்டு மிகமிக இழிவாகப் பயபக்தியோடு பணிவது வழக்கமாயிருந்தது ; இந்நாட்டிலிருந்து வைசியர் ஒரு சிலர் தம் சொந்தக் கடல்களையும் கடந்து நெடுந்தொலையிலுள்ள ஓர் அயல் நாட்டிற்கு வியாபாரம் செய்யும் கருத்தோடு வருகின்ற னர் ; தமது புத்தி கூர்மையாலும் செல்வத்தாலும் மட்டும் ஆங்

குள்ள நிலை பெற்றிருந்த பழமையான இந்து மகமதிய வமிசங்களைத் தம் பக்கம் இழுத்துக்கொள்ளும் திறமை பெறுகின்றனர்; இறுதியில் படிப்படியாக அவரை ஏமாற்றிவிடுகின்றனர்; அவரைப் பொம்மைகளாக ஆட்டி வைக்கின்றனர். அம்மட்டோடு நில்லாது அவர் தமது தாய் நாட்டிலே ஆட்சி செலுத்தும் அதிகாரிகளின் பணியையும் விலைக்கு வாங்குகின்றனர்; தமது சொந்தச் செல்வத்தைப் பெருக்குவதற்குப்பலமான ஓர் உபாயமாக உதவுமாறு, அவ்வதிகாரிகளின் ஆயுதங்களையும், வீரத்தையும், அறிவையும் பயன்படுத்துகின்றனர். இந்நாட்டில் குலப்பெருமை எந்நிலையிலிருந்தது! இதில் வாழ்ந்த கவியரசரது தெய்விக எழுதுகோலால் சித்திரிக்கப் பெற்ற பெருமை வாய்ந்த ஒரு பிரபு ஓர் உயர்குடிப்பிறப்பினனிடம் வெட்கமற்ற துணிவோடு ஒழுகிய ஒரு சாதாரண மனிதனை எச்சரிக்கும்பொருட்டு, அவனை நோக்கி, "சாணக் குவியலே, வெளியேறு; உயர்குடி மக்களுள் ஒருவனையும் எதிர்க்கத் துணிவுற்றனையோ?" என்று வெருட்டினர். அவ்வளவு சத்தி வாய்ந்த உயர்குடி மக்களின் சந்ததியாரே, பின்பு சிறிது காலத்திற்குள் 'கிழக்கிந்திய சங்கத்தார்' என்னும் பெயர் புனைந்த ஒரு வியாபாரக் கூட்டத்தாரின் கீழ் நியமிக்கப்பட்ட வேலைக்காரராய் இந்தியாவிற்கு வருவதில் உள்ள தாழ்வையும் கவனியாதவரானர்; அம்மட்டோ! அவ்வேலையை மனிதர் ஆசையோடு முயன்று அடைவதற்குரியவற்றுளெல்லாம் தலைமையானதொரு பதவியாக மதிக்கவும் தலைப்பட்டார். இம்மாதிரிக் காட்சி உண்மையாகவே இந்தியர்க்கு அது வரை தோன்றாததொரு புதுமையாயிற்று!

மனிதனிடத்துச் சாத்துவிகம், ராஜஸம், தாமஸம் என்னும் முக்குணங்களின் அளவுகள் ஒரே மாதிரி எங்கும் இல்லாமல், கூடியோ குறைந்தோ காணப்படுகின்றன; இவ்வேறுபாடுகட்கு ஏற்ப, பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு வருணங்களின் வேறுபாடுகளும் எங்கும் எல்லாக் காலங்களிலும் நாகரிகமுற்ற சமூகங்கள் எல்லாவற்றிலும் உளவாகின்றன. காலத்தின் வலிய கரத்தினது செயலால் அவ்வருணத்தாரின் தொகையும் சத்தியும் கால வேறுபாட்டாலும் தேச வேறுபாட்டாலும் வேறுபடுகின்றன. சில நாடுகளில் இந்நான்கில் ஒரு வருணத்தாரின் எண்ணிக்கையோ சொற்சத்தியோ மற்றவர்க்குரியவற்றை விடக்கூடியிருக்கலாம்; ஏதேனும், ஒரு காலத்து ஒரு வகுப்பினர் மற்ற வகுப்பினரைவிட மிக்க சத்தி

யுடையவராகலாம். ஆனால், உலக சரித்திரத்தை உற்று நோக்கி ஆராய்வார்க்கு ஓர் உண்மை புலனாகின்றது. அதாவது, இயற்கை விதிக்கு இணங்க, பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ஜாதிகள் நான்கும் ஒவ்வொரு சமூகத்திலும் ஒன்றன்பின் ஒன்ருக முறையே உலகத்தை ஆண்டு வருகின்றன.

பழைமை வாய்ந்த சமூகத்தினரை உதாரணமாகக் கொள்வோம். சீனர், சுமேரியர், பாபிலோனியர், எகிப்தியர், சால்டியர், இரேனியர், யூதர், அராபியர்—இவர் அனைவர்க்குள்ளும் ஒவ்வொருவரது சரித்திரத்தின் முதற்பகுதியிலும் சமூகத்திற்கு வழிகாட்டியாகும் மேலான சத்தி பிராம்மணர் அல்லது குருமார் என்பவரது கையில் இருந்தது. இரண்டாம் பகுதியில், ஆட்சி புரியும் சத்தி சுதந்தர அரசின் வடிவாகவோ, தேர்ந்தெடுக்கப்படும் ஒரு சிலர் கூடி நடத்தும் அரசியல் வடிவாகவோ இருப்பினும், க்ஷத்திரியரதே ஆகின்றது. இங்கிலாந்தின் தலைமைக்குட்பட்ட இக்கால மேற்றிசை நாட்டினர்க்குள், சமூகத்தை அடக்கியாளும் சத்தி முதன்முதலாக வைசியர்க்கு வந்துள்ளது; வைசியராவார் வியாபாரத் தொழிலை நடத்துதல் மூலமாகப் பெருஞ்செல்வரான வியாபாரக் கூட்டத்தாரே.

பண்டைக்கால நகரங்களான திராய், கார்த்தேஜ் என்பவைகளும், அவைகளோடு ஒப்பிடின் இக்கால நகரங்களாகும் வெனிஸ் முதலான வேறு சிலவும் வியாபாரத்தால் மேன்மை பெற்று மிக்க சக்தி வாய்ந்த நகரங்களாயின; எனினும், அவற்றுள் உண்மையான வைசிய சத்தியின் எழுச்சி இல்லாது போயிற்று.

உள்ளதை உள்ளவாறு உரைப்போமாயின், அரச குடும்பத்தைச் சார்ந்தவரே பண்டை நாளில் வியாபாரஞ் செய்யும் தனி உரிமையைப் பெற்றிருந்தனர். இவர் பொதுமக்களையும் தம் வேலைக்காரர்களையும் தமக்குக் கீழ் நியமித்துக்கொண்டு அவர் மூலமாக வியாபாரத் தொழிலை நடத்தி,அதனால் விளையும் இலாபத்தைத் தமக்கே பயன்படுத்திக் கொண்டனர். இம்மாதிரியான ஒரு சிலர் தவிர, வேறெவரும் நாட்டின் ஆட்சியிலும் அதைப்போன்ற காரியங்களிலும் தலையிடவோ, தம் கருத்தை வெளியிடவோ அனுமதி பெறவில்லை. எகிப்து போன்ற மிகப் பழைய நாடுகளில் பிராம்மண சத்தி ஒரு சிறிது காலத்திற்கே தொந்தரவின்றித் தலைமை செலுத்தியது; அதன் பின் அது க்ஷத்திரிய சத்திக்கு அடங்கியதாகி, அதற்குத் துணையாகவே வாழ்ந்தது; சீனாவிலே, க்ஷத்திரிய சத்தி,

கன்பூஷியஸ் என்னும் ஞானியாரின் பேரறிவாலே ஒரிடத்துத் தொகுக்கப்பட்டு, தனது முழுச்சுயேச்சையின்படி, இருபத்தைந்து நூற்றுண்டுகளாகப் பிராம்மண சத்தியை அடக்கி நடத்தி வந்துள்ளது; கடைசி இரண்டு நூற்றுண்டுகளில் திபெத்தில் வாழும் அனைத்தையும் உறிஞ்சும் இலாமாக்கள், அரச குடும்பத்தார்க்கு ஞான குருக்களாயிருந்தும், எல்லா விதத்திலும் சீன சக்கரவர்த்திக்கு அடங்கியே தமதுகாலத்தைக் கழிக்கும்படி கட்டாயப்படுத்தப் பட்டனர்.

இந்தியாவிலே க்ஷத்திரிய சத்தி பிராம்மண சத்தியை வென்று தனது தடையற்ற அதிகாரத்தைச் செலுத்துவதில் வெற்றி பெற்றது; ஆனுல், மற்றப் பழைமையான நாகரிகமுற்ற நாட்டினர் அவ்வாறு செய்த காலத்திற்கு நெடுநாளைக்குப் பின்பே இது நிகழலாயிற்று. இக்காரணத்தால் இந்திய சாம்ராஜ்யத்தின் தொடக்கம், சீன எகிப்திய பாபிலோனிய மற்ற சாம்ராஜ்ஜியங்களின் தொடக்கத்திற்கும் நீண்ட காலத்திற்குப் பின்பே உண்டாயிற்று. யூதரது சரித்தில் மட்டும், க்ஷத்திரிய சத்தி பிராம்மண சத்தியை முழுதும் அடிப்படுத்த வருந்தி முயன்ற போதிலும் அம்முயற்சியில் முழுத் தோல்வியை அடையவேண்டியதாயிற்று. யூதர்கள் ஆட்சி புரியும் அதிகாரத்தை வைசியரேனும் பெற்றுரல்லர். இதற்கு மாருக, சாதாரண மக்களாகிய குடிகள் பிராம்மண சத்தியின் அதிகார ஆசை வலைக்குள் வீழாது தப்பித்துக்கொள்ள முயன்ற போது உயிரை இழக்கலானுர்கள். கிறிஸ்தவ சமயம் போன்ற புற மதக்கிளர்ச்சிகளின் குழப்பம் உள்ளே நெருக்க, பெரு வலிமையுற்ற உரோம இராச்சியம் வெளியே நெருக்க, இரண்டிற்கும் இடையே குடிகள் நசுக்குண்டு மாண்டார்கள்.

பண்டைக் காலத்தில் பிராம்மண சத்தி நெடுங்காலம் தொடர்ந்து போராடியும், முடிவில் அதனினும் வலிமை மிகுந்த க்ஷத்திரிய சத்தியால் அடக்கப்பட்டதைக் கண்டோமன்றே? அது போலவே இக்காலத்திலும் புதிதாகக் கிளம்பிய வைசிய சத்தி மும்முரமாகத் தாக்கியபோது, அரசர் முடிகள்பல படிமீது வீழ்ந்து கிடக்கலாயின; செங்கோல்கள் பல துண்டு துண்டாக முறிந்து கிடப்பனவாயின. ஒரு சில அரியாதனங்கள் நாகரிக நாடுகளான சிலவற்றில் இன்றளவும் சிறிது அதிகாரம் செலுத்தவும், அரச மரபின் ஆடம்பரத்தையும் பெருமையையும் பலரறிய எடுத்துக் காட்டவும் அனுமதியைப் பெற்றுள்ளன; ஆனுல், அவை யாவும் உப்பு,

எண்ணெய், சர்க்கரை, சாராயம் விற்போரான வைசியக் கூட்டத்தாருடைய பரந்த பணக்குவியல்களாலே மட்டும் போற்றப்பட்டு வருகின்றன; இந்த ஆதரவும், உண்மையாகப் பின்னின்றுஅடக்கியாளும் கூட்டத்தினரான வைசியர்க்கு ஒரு மேன்மையான ஆடம்பரமான—முன்னணியாக அவை விளங்குவதற்கும் அக்கூட்டத்தாரது புகழை நாட்டும் ஒரு கருவியாதற்குமே உதவுகின்றது.

வலிமையுள்ள புதிதாகக் கிளம்பிய இவ்வைசிய சத்தியின் செயலை என்னென்பது! இதன் கட்டளையாலே மின்சாரம் செய்திகளை ஒருகணத்தில் ஒரு துருவத்திலிருந்து மற்றொரு துருவத்திற்கு எடுத்துச் செல்கின்றது; மலையென உயர்ந்த அலைகளையுடைய பரந்த கடலே இது செல்லுதற்குரிய வீதியாகின்றது; இதன் விருப்பத்தினாலே சரக்குகள் உலகத்தின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு மிக எளிதிற் கொண்டு போகப்படுகின்றன; இதன் ஆணைக்கே மிகப் பெரிய மன்னரும் அஞ்சி நடுங்குகின்றனர். இன்னும் கூறுவதேன்? அனைத்தையும் வெல்லும் இவ்வைசிய சத்தியெனும் பேரலையின் வெண்மையான நுரை மயமான முகட்டிலன்றோ, இங்கிலாந்தின் கம்பீரமான சிங்காதனம் அதன் முழுச் சிறப்பும் தோன்ற நிலை நாட்டப்பட்டுள்ளது?

ஆதலால், இந்தியாவின்மீது இங்கிலாந்து பெற்ற வெற்றி நம்மைப் பன்முறையும் நம்புமாறு நமக்கும் பிறர் அறிவுறுத்துவதன்படி இயேசுநாதரோ பைபிளோ பெற்ற வெற்றியன்று; மொகலாயரும் பட்டாணியரும் இந்தியாவின்மீது பெற்ற வெற்றியைப் போன்றதும் அன்று; இயேசுநாதரின் பெயர், பைபிள், சிங்கார அரண்மனைகள், தேர், யானை, குதிரை, காலாள் என்னும் நால்வகைப் படைகள் குவலயங்குலுங்கத் தரைமீது மிதித்து நடக்கும் ஓசை, போர்க்குரிய பல்லியங்கள், ஊது குழல்கள், பேரிகைகள் இவற்றின் முழக்கம், அரச சிங்காதனத்தின் ஆடம்பரக் காட்சி—இவையனைத்திற்கும் பின்னே, எப்போதும் உண்மையாக நிற்கும் இங்கிலாந்து எத்தன்மையது? அந்த இங்கிலாந்தின் போர்க்கொடி ஆலையின் புகை போக்கியே; அதன்படைகள் வியாபாரக் கப்பல்களே; அதன் போர்க்களங்கள் உலகமெங்கும் சந்தை கூடும் இடங்களே; அதன் பேரரசி ஒளிவீசும் இலக்குமி தேவியே! இக்காரணம் பற்றியே இந்தியாவின் மீது இங்கிலாந்து கொண்ட வெற்றி உண்மையாகவே இது வரை இங்குக் காணப்படாத ஒரு புதுமையென்று முன்னர்க்குறித்தேன். இந்தியா இப்புதிய இராக்கத சத்தியோடு

போராடுவதன் பயனாக நாட்டில் என்ன புதிய புரட்சி விளையுமோ, அப்புரட்சியின பயனாக வருங்கால இந்தியாவில் என்ன புதிய மாறுதல் உண்டாகப் போகின்றதோ, அதை அதன் பழைய சரித்திரத்திலிருந்து ஊகித்தல் இயலாது.

பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் எனும் நால்வகை வருணத்தாரும் ஒருவர்க்குப்பின் ஒருவராக முறையே உலகினை ஆண்டு வருவார் என்று முன்னரே கூறியுள்ளேன். இவ்வருணத்தாரில் ஒவ்வொருவரும் தலைமை அதிகாரம் செலுத்தும் காலத்திலே குடிகளின் பொதுநலத்திற்கு உதவியாகும் செயல்கள் சிலவும், அந்நலத்திற்குக் கேடு விளைக்கும் மற்றவையும் இயற்றப்படுகின்றன.

பிராம்மண சத்திக்கு அடிப்படையாவது அறிவின் வலிமையே யல்லாது போர்க்கருவிகளின் சடவலிமையன்று. ஆதலால், பிராம்மண சத்தி தலைமை எய்தும்போது, அறிவின் பயிற்சியும் இலக்கியப் பயிற்சியும் பெரிதும் வளரத் தலைப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனது நெஞ்சிலும், புலன்கட்கப்பாலான ஞான உலகத்தினோடு தொடர்பு வைத்துக்கொள்ளவும், அதினின்றும் உதவி பெறவும், ஆவல் எப்போதும் குடிகொண்டுள்ளது. அவ்வுலகிற்புகுதல் மக்களிற்பெரும்பாலார்க்கு இயலாததொன்றே; தம் இந்திரியங்களை முற்றவும் அடக்குவதில் வெற்றி பெறக்கூடியவரும், சாத்துவிகக் குணத்தின் சாரம் மேலோங்கும் இயல்புடையவரும் ஒரு சில பெரியோரேயாவர்; பிரகிருதி என்னும் தகர்த்தற்கரிய சுவரைக் குடைந்து, அதற்கப்பாலுள்ள உலகை நேரே காணும் வல்லமை பெற்றவர் சிலரே; அவ்வுலக நிகழ்ச்சிகளை அறிந்து, அங்கிருந்து பெருஞ்செய்திகளைக் கொணர்ந்து, பிறர்க்கு அவ்வுலகைச் சேரும் வழியைக் காட்டுபவர் இவரே. இப்பெரியாரே மனித சமூகங்கட்குக் குருமாரும், ஆதியில் வழிகாட்டுவோரும், தலைவரும், அவற்றை ஆட்டி வைப்போருமாவார்.

வைதிக குரு, தேவரை அறிவார்; அவரோடு நேரிற்பழகுவார்; ஆதலின், ஒரு தெய்வத்தைப்போல வழிபாடு பெறுகிறார். உலகச் சிந்தனைகளைக் கைவிட்ட அவர், நெற்றி வியர்வை நிலத்தில் விழ வயிற்றிற்காக உழைக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டுவதில்லை. உணவுகள் பானங்கள் எல்லாவற்றின் மிகச் சிறந்த முதன்மையான பகுதிகள் தேவர்க்கு ஊணாக வழங்குதற்குரியன; பூமியில் இத்தேவரின் கண் கண்ட பிரதிநிதிகள்—நிலத்தேவர்—இக்குருமாரே. இவரது வாய் வழியாகவே தேவர், தமது ஊணை உண்கின்

றனர். அறிந்தோ அறியாமலோ, சமூகம் குருமார்க்கு ஏராளமான அவகாசத்தை அளிக்கின்றது. அவர் தியானபரராதற்கும் மேன்மையான கருத்துகளைச் சிந்தித்தற்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர். ஆதலால், பிராம்மண சத்தியின் தலைமைக் காலத்திலிருந்தே, முதன்முதலாக ஞான வளர்ச்சியும் கல்வி முதிர்ச்சியும் தொடங்குகின்றன. ஒரு புறம் பயங்கரமான சிங்கமாகிய அரசனும், மறு புறம் அஞ்சி நடுங்கும் ஆட்டு மந்தையாகிய பொதுமக்கள் என்னும் குடிகளும் நிற்க, இருவர்க்கும் இடையே குருமார் நிற்கின்றனர். சிங்கத்தின் கொலைப் பாய்ச்சலைக் குருமாரது கையிலுள்ள ஞான சத்தியெனும் அடக்குங்கோல் தடுத்து வைக்கிறது. அரசனது சுயேச்சையெனும் தீயும், அவனது பொருளாலும் ஏவலாலும் விளையும் இறுமாப்பு வெறியும், அவனது வழியிற் குறுக்கிடும் எதனையும் எரித்துச் சாம்பலாக்கும் திறமை வாய்ந்தன ; ஆனால், பின் தாங்கப் பொருளும் ஏவலும் அற்றோராயினும், ஞான சத்தியைத் தமது தனிப்பலமாகக் கொண்ட குருமாரது மொழியொன்றே, சுயேச்சையாய் ஒழுகும் அரசனது ஆணையையும் தணிக்க வல்லதாகும்.

பிராம்மண சத்தியின் தலைமை ஓங்கும்போது, பல நன்மைகள் காணப்படுகின்றன. அப்போது நாகரிகம் முதன்முதலாகத் தோன்றுகிறது ; தெய்வத்தன்மை மிருகத்தன்மையின்மீது முதன்முதலாக வெற்றிபெறுகின்றது ; சித்துப் பொருள் முதன்முதலாகச் சடப்பொருள்மீது வெற்றி கொண்டாடுகின்றது ; இயற்கையின் அடிமையாயும், ஊன் பொதியாயும் உள்ள இம்மனித உடலிலே உள்ளடங்கியிருக்கும் தெய்விகச்சத்தி முதன்முதலாக வெளித்தோன்றுகிறது. வைதிகக் குருவே சடப்பொருளினின்றும் சித்துப் பொருளை முதன்முதலாகப் பிரித்தறிபவர் ; இவ்வுலகை அடுத்துள்ள மேலுலகோடு நெருங்கிய பழக்கமுடையதாக்க முதல் துணைவர் ; தேவரிடமிருந்து மக்களுக்குச் செய்தியைக் கொணரும் முதல் தூதர் : அரசரை அவர் தம் குடிகளோடு ஒன்றாக இணைக்கும் ஊடு பாலம் போன்றவர். அவரது ஞான சத்தியும், கல்வி ஞானங்களிலுள்ள ஈடுபாடும், அவர்தம் வாழ்க்கைக் கொள்கையான துறவும் மக்கட் பொதுநலம் எனும் முதற்குருத்தைப் பேணி வளர்க்கின்றன. அம்மட்டோ ! தம்முயிர்க்கு இன்றியமையாத குருதியையும் அக்குருத்தை வளர்க்க நீராகப் பாய்ச்சுகின்றனர். இதனால் ஒவ்வொரு நாட்டிலும் முதன்முதலாக வணங்கப் பெற்றவர் அவரே யாவர் ; அக்காரணம் பற்றியே அவரைப்பற்றிய நினைவும் நமக்குப்

புனிதமாகின்றது!

ஆனல், கேடுகளும் உள. வாழ்வு வளரும் போதே மரணத்தின் விதையும் விதைக்கப்படுகிறது. இருளும் ஒளியும் எப்போதும் ஒன்ருய் இயங்குகின்றன. ஆதலால், கேடுகளும் உண்மையாகவே உண்டாகின்றன; இவற்றைத் தக்க காலத்தே தடுக்காவிட்டால், இவை சமூகத்தின் அழிவிற்கே காரணமாகின்றன. பருப்பொருள் வழியாக வெளிப்படும் சத்தியின் இயக்கம் அனைவரது அனுபவத்திற்கும் இலக்காகின்றது. போர்க் கத்தி வீச்சிலும் வாள் வீச்சிலும் தீ மின்னல்களின் எரிக்கும் குணங்களிலும் நன்கு விளங்கும் பரும்பொருட்சத்தியின் காட்சியைப் பாராதார் எவர்? அறியாதார் எவர்? இவற்றை ஐயுறுபவரும் இலர். இவற்றின் உண்மையைப் பற்றிய ஐயம் என்றேனும் எழலும். இயலாது. ஆனல், எங்கே சத்தியின் களஞ்சியமும் அதன் இயக்க மையமும் முழுதும் மனத்தினிடம் அமையுமோ, எங்கே சில சிறப்பான மொழிகட்கு மட்டும், அவற்றை உச்சரிக்கும் சிறப்பு முறைகட்கு மட்டும், வியத்தற்குரிய சொற்பப் பகுதிகளை மனத்துட் கூறி உரு வேற்றுதற்குமட்டும், மற்றும் இவை போன்ற மன முயற்சிகளுக்கும் மனத் தொழில்களுக்கும் மட்டும் சத்தி உரியதாகுமோ, அங்கே ஒளி நிழலோடு கலந்துள்ளது; அங்கே மற்றைய வழிகளால் அசைக்கவொண்ணுத நம்பிக்கைக்கும், பொங்குதல் வடிதலாகிய பீடை இயல்பாகவே ஏற்படும்; அங்கே, நேருக்கு நேராகக் கண்ணுரக் காட்சிகள் காணப்படும்போதும், சில சமயம் அவற்றின் நிகழ்ச்சியைப்பற்றிய ஐயம் நிகழும். எங்கே துயரம், அச்சம், சினம், கேடிழைக்கும் நினைவு, பழி வாங்கும் இயல்பு இவையும், இவை போன்ற வேறு மனித உணர்ச்சிகளும், குறித்த நோக்கத்தை நிறைவேற்றும்பொருட்டு, அனைவரும் அறியக்கூடிய தூலமான ஆயுத சத்தியையும் பருப்பொருள்களையொட்டிய முறைகளையும் கைவிட்டு, அவைகளுக்குப் பதிலாக மந்திர சத்தியின் மூலம் ஸ்தம்பனம் (உடற்சத்திகளில் ஏதேனும் ஒன்றைக் கையாளவொட்டாது தடுத்துவைத்தல்), உச்சாடனம் (பிறனுக்கு அழிவை உண்டு பண்ணல்), வசீகரணம் (யாரேனும் ஒருவனை அடக்கி அடிமைப் படுத்தி வைத்தல்), மாரணம் (பிறனைக் கொல்லல்) போன்ற ஆச்சரியமான மனோ சத்தி முறைகளைப் பயன்படுத்துமோ, அங்கே இருள் கூர்ந்த ஆச்சரியமான மானதசத்தி வழங்கும் அத்தகைய தெளிவற்ற உலகங்களில் அடிக்கடி வாழ்ந்தும் சஞ்சரித்தும் வரும்

அம்மனிதரின் மன வெளியைப் புகை மறைத்தது போன்ற தெளி வின்மையாகிய மேகம் இயல்பாகவே சூழ்ந்துகொண்டிருக்கும். அம்மாதிரியான மனத்திற்கு நேர் வழியான செயலொன்றும் புலப் படாதொழியும்; புலப்படினும், மனம் அதைக் கோணலாகத் திரித்துவிடும். இவையனைத்தின் முடிவான பயன் யாதெனில், உள் ளும் புறமும் வேறுபட்டிருக்கும் தன்மையே; நெஞ்சின் மிகக் குறு கிய பான்மையே; அனைத்திற்கும் மேலாக, பேராபத்தை மிகமிக விளைப்பது எதுவெனின், பிறரது உயர்வான மேன்மையைப் பெருத தீய நெஞ்சப் புழுக்கத்தினின்றும் பிறக்கும் அளவு கடந்த பொருமையே.

வைதிக குரு தனக்குள்ளே பின் வருமாறு சொல்லிக்கொள்வது இயல்புதான்: "எந்தச் சத்தியால் தேவரும் எனக்கு அடங்கிய வரானரோ, எந்தச் சத்தியால் யான் உடலைப்பற்றியும் மனத்தைப் பற்றியும் வரும் நோய்களை வென்றவன் ஆனேனே, எந்தச் சத்தி யால் பேய் பிசாசுகளும் மற்றும் அசுத்தமான பேயினங்களும் எனக்குத் தொண்டு புரியும் பேற்றைப் பெற்றேனே, அந்தச் சத்தி யைவிட்டு நான் எதற்காகப் பிரியவேண்டும்? அளவு கடந்த துறவை அரிய விலையாகக் கொடுத்து இச்சத்தியை யான் பெற்றுள்ளே னன்றே? எதைப் பெறுவதற்காக எனது செல்வம் பெயர் புகழ் என்பவற்றையும், சுருங்கச் சொல்லின், என் உலக சுகங்களையும் இன்பத்தையும் கைவிட நேர்ந்ததோ, அதைப் பிறர்க்கு வழங்குவா னேன்?" மேலும், அச்சத்தி முழுதும் மனோமயமானது. அதனை ஒரு முழு இரகசியமாக வைத்திருக்க எத்தனை வாய்ப்புகள் உள்ளன! இவ்வாறு சந்தர்ப்பங்களின் சுழலிலே சிக்கிக்கொள்ளும் மனித இயல்பு தடுக்க வொண்ணாதவாறு எப்படி ஆதல் வேண்டுமோ, அப் படியே ஆகின்றது; இடையறாது தன்னை ஒளித்தலையே பழகிவரும் பழக்கமுடைமையின், அது அளவிற்கு மிஞ்சிய தன்னயம் வெளி வேடம் எனும் இரண்டிற்கும் இரையாகின்றது; இறுதியில், இவற் றைப் பின் தொடர்ந்து வரும் நச்சுப் பயன்கட்கு அடங்கிவிடுகிறது. உரிய காலத்தில், ஒளிப்பதில் உள்ள இவ்வாசையின் எதிர் வினை அம்மனிதன்மீதே மாறித் தாக்குகின்றது. அறிவும் ஞானமும் எல்லாம், தக்க பயிற்சியின்மையாலும் போதியவாறு பரப்பப்படா மையாலும், ஏறக்குறைய மறைந்துவிடுகின்றன; ஏதாவது சிறிது மிஞ்சியிருப்பினும் அது ஏதோ ஓர் இயற்கைக்கு அதீதமான வழி யாற் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. ஆதலால், புதிய உண்

மையைக் கண்டு பிடிப்பதற்கும், புதிய விஞ்ஞான நூல்களைப்பற்றிய அறிவைத் தேடுவதற்கும் மறுபடியும் முயற்சி செய்தல் என்பது அரிதாகிறது. அது போகட்டும்; பழைய அறிவில் மிஞ்சியிருப் பதற்குள் கேடடைந்த பகுதிகளை நீக்கி அதைத் தூயதாக்கிச் சீர்திருத்தமடையச் செய்யும் முயற்சியும் பயனற்றதாயும் வீணு யும் ஒழியும் என்றும் கருதப்படுகிறது. இவ்வாறு வைதிக குரு பழைய ஞானத்தையும் சலிப்பற்ற தற்சார்ந்தொழுகும் தன்மை யையும் இழந்துவிடுகிறுன்; தன் முன்னேரின் பெயர்களைக் கூறும் அளவிலே தன்னைப் பெருமைப்படுத்திக்கொள்ளுகிறுன்; தன் பெருமை பெற்ற முன்னேர் நுகர்ந்த அதே புகழையும் அதே உரிமையையும் அதே மதிப்பையும் அதே தலைமைப் பதவியையும் சிறிதும் குறையாது தானும் அனுபவிக்க வீண் பாடு படுகிறுன். இக்காரணத்தால் அவன் மற்ற வருணத்தாரோடு மிக்க வலிவுடன் மோதுதல் இயல்பாகின்றது.

புதிய, முன்னிலும், ஆற்றல் மிக்க வாழ்வொன்று விழித்தெழும் இடத்தெல்லாம், அது பழைய சீர் கெட்ட வாழ்வை வெல்லவும், அதன் இடத்துத் தான் அமரவும் முயல்கின்றது; இதுவே இயற்கை விதியாகும். வாழத் தகாதன இறந்தொழிவதற்கும், தக்கன எஞ்சி வாழ்வதற்கும், இயற்கையே உதவி புரிகின்றது. குருமாரது வகுப் பிற்கும் பிற வகுப்பினர்க்கும் இடையே மூண்ட அத்தகைய போராட்டத்தின் அறுதியான முடிவு இன்னதென்பது முன்னரே கூறப்பட்டுள்ளது.

குருமார் வளர்ச்சியடைந்து வந்த காலத்து அவர்தம் துறவும் தன்னடக்கமும் தவமும் முழுமனத்தோடு மெய்ப் பொருளாராய்ச் சித் துறைக்கே பயன்படுத்தப்பட்டன; ஆனல், அவரது அழிவு காலத்துக்கு முன்பு அக்குணங்கள், சுகசாதனப் பொருள்களைத் தொகுத்தலிலும், தமது உரிமையாகக் கருதியே மேன்மையைப் பெருக்கி வருவதிலும் புதிதாகச் செலுத்தப்பட்டும் முழுதும் பயன் படுத்தப்பட்டும் வரலாயின. எந்தச் சத்தியைத் தம்மிடம் குவியச் செய்ததன் பயனுய் எல்லா மதிப்பையும் வணக்கத்தையும் பெற்ற னரோ, அந்தச்சத்தி அதன் உயர்ந்த தெய்விகப் பதவியிலிருந்து நரகப்படுகுழிக்கு இப்போது கீழ்நோக்கி இழுக்கப்படலாயிற்று. பிராம்மண சத்தி தனதுகுறிக்கோளைமறந்து, கண்டமட்டும்திரிந்து அதன் விளைவாகச் சிலந்தியைப் போலத் தான் பின்னிய வலையி லேயே தான் சிக்கிக்கொள்ளலாயிற்று. பிறர் கால்களைப் பிணிப்

பதற்காகத் தலைமுறைதோறும் மிக விழிப்பாகச் செய்யப்பட்டு வந்த சங்கிலி, தன் கால்களைச் சுற்றியே ஆயிரம் முறை வளைத்து வளைத்து இப்போது இறுகப்பிணித்துள்ளது. அதனுல் தனது இயக்கத்தையே நூற்றுக்கணக்கான வழிகளில் தடுத்து வரலாயிற்று. முன்பு அது உடலையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்துதற்குப் புறச்சாதனங்களாகக் கங்கு கரையற்ற கிரியைகளையும் கருமங்களையும் பழக்கங்களையும் ஏற்படுத்தி, அவ்வலையை எல்லாப் பக்கங்களிலும் பரப்பி வந்தது. மக்கட் சமுதாயத்தை அத்தகைய கணக்கற்ற விலங்குகளின் இரும்புப் பிடிப்புக்குள்ளே வைப்பதே அதன் நோக்கமாயிற்று. இப்போதோ, பிறர்க்கென விரித்து வைத்த வலையின் முடிவற்ற நூலிலே தானே அகப்பட்டுக் கொண்டு, அந்தப் பிராம்மண சத்தி இவ்வாறு உச்சி முதல் உள்ளங்கால் வரை தப்ப வழியின்றிச் சிக்கிக்கொண்டு, இன்ன செய்வதென அறியாது, உறங்கிக்கொண்டிருக்கிறது! இப்போது அதை விட்டு வெளியேறுவது அதற்கு இயலாது. அவ்வலையை அறுக்கத்துணிந்தால், வைதிகக் குருமாரின் பிராம்மணத்துவமும் அடிவரை அசைக்கப்படும்! ஒவ்வொரு மனிதனிடத்தும் இயல்பாகவே முன்னேற்றத்தில் வலிவான ஆசை குடிகொண்டுள்ளது;பிராம்மணத்துவ விலங்குகளால்ஒருவன்பிணிக்கப்படும்வரை முன்னேற்ற ஆசையை நிறைவேற்றுவது இயலாத காரியம் என்பதை உணர்ந்தோர், இவ்வலையை அறுத்தெறிந்து, பொருளீட்டுவதற்காகப் பிற வருணத்தாரின் தொழில்களைக் கைப்பற்றுகின்றனர். உடனே சமூகம் அவரிடமிருந்து அவர்தம் பிராம்மண உரிமைகளைப் பறித்துவிடுகிறது. பிராம்மணர் சிகையை வைத்திருப்பதற்குப் பதிலாகத் தலையை மொத்தமாக வளர்த்து இரு கூறுகப் பிரிக்கும்போதும், தம் பண்டைய பழக்கங்களையும் முன்னோர் வழக்கங்களையும் கைவிட்டு, அரை ஐரோப்பிய உடையை அணிந்து மேலை நாட்டினராற் புதுவனவாகப் புகுத்தப்பட்ட முறைகளைப் பின்பற்றிக் கலப்பினத்தாரைப்போல் நடிக்கும் போதும், பெயரளவால் பிராம்மணராகும் அன்னரது பிராம்மண்யத்தில் சமூகம் நம்பிக்கை கொள்ளாது போகிறது. மேலும், புதிதாகப் புகுந்த ஆங்கில அரசியல் எங்கெங்கெல்லாம் புதிய கல்வி வகைகளைப் புகுத்தியும், பொருளைப் பெருக்குதற்குப் புதிய வழிகளை ஏற்படுத்தியும் வந்ததோ, இந்தியாவில் அவ்வப் பகுதிகளில் பிராம்மணச் சிறுவர் பெருங்கூட்டமாகத் தம் பரம்பரையான தொழிலைத்துறந்து,பிற வருணத்தாரின் தொழில்களை ஏற்றுத் தம் பிழைப்பை நடத்தவும்,

செல்வராகவும் முயன்று வருகின்றனர்; இதன் விளைவாக பிராம்மண வகுப்பினர்க்கு நெடுந்தொலையிலுள்ள தம் முன்னோரிடமிருந்து வழிவழியாக வந்த பழக்க வழக்கங்கள் காற்றில் பறக்க விடப்பட்டனவாகி, நாட்டினின்றும் விரைவில் மறைந்துகொண்டிருக்கின்றன.

குஜராத்திலே பிராம்மணர்க்குள் மட்டமான பிரிவு ஒவ்வொன்றிலும் இரு உட்பிரிவுகள் உள்ளன; அவற்றுள் ஒன்றில் பிராம்மணர்க்குரிய வைதிகத் தொழிலை விடாது பின்பற்றி வருவோரும், மற்றொன்றில் பிற தொழில்களால் வாழ்வோரும் உளர். இவ்விரு வகையினருள் வைதிகத்தொழிலை நடத்தி வரும் முதல் வகுப்பினரே 'பிராம்மணர்' எனப்படுகின்றனர்; மற்றொரு வகுப்பினர், பரம்பரையால் பிராம்மணத் தந்தையரின் வழியினராயினும், முந்தியவர் பிந்தியவரோடு மணச் சம்பந்தமான உறவு வைத்துக் கொள்வதில்லை. சான்றாக, பிச்சையேற்று வாழும் வைதிகரான பிராம்மணரே 'நாகரப் பிராமணர்' எனப்படுவர்; அரசியலார்க்குக் கீழ் வேலை ஒப்புக்கொண்டவரும், வைசியரது தொழிலை நடத்தி வருபவருமான பிராம்மணர் 'நாகரர்' என்று மட்டும் வழங்கப் படுவர். ஆனால், குஜராத்தில் இவ்வேறுபாடுகள் நீண்ட காலம் நீடித்து நில்லாவென்று தோன்றுகிறது. நாகர பிராம்மணருடைய பிள்ளைகளும் இந்நாளில் ஆங்கிலக் கல்வி பெற்று, அரசியலைச் சார்ந்த வேலையில் அமர்ந்தும், அன்றேல் வியாபாரத் தொழிலைக் கைக்கொண்டும் வருகின்றனர். பண்டைய வைதிக முறைமையினின்றும் வழுவாத பண்டிதரும் பண முட்டுப்பாட்டிற்குஉள்ளாகித் தம் பிள்ளைகளை ஆங்கிலப் பல்கலைக் கழகங்களைச் சார்ந்த கல்லூரிகட்கு அனுப்பியோ, வைத்தியர், காயஸ்தர் முதலிய பிராமணரல்லாத வகுப்பினரின் தொழில்களைக் கைக்கொள்ளுமாறு அவர்களைத் தூண்டியோ வருகின்றனர். காரியங்கள் இவ்வழியில் சென்றுகொண்டே வருமாயின், இன்னும் எவ்வளவு காலம் வைதிகப் பிராம்மணரது வகுப்பு இந்திய நாட்டிலே நிலைக்கும் என்பது மிகக் கடுமையாக ஆழ்ந்து சிந்தித்தற்குரிய ஒன்றாகும் என்பதில் ஐயமில்லை. பிராம்மண வகுப்பைத் தலைமைப் பதவியினின்றும் கீழ்க் கொணர முயன்ற குற்றத்தை அவ்வகுப்பினரல்லாத வேறு குறிப்பிட்ட ஒருவர் மீதோ ஒரு கூட்டத்தார் மீதோ சாட்டுவார் அறிய வேண்டுவதாகிய உண்மையொன்று உள்ளது. விலக்க வொண்ணாத இயற்கை விதிக்கு இணங்கப் பிராம்மண

வகுப்பே தன் கைகளால் தன்னைப் புதைக்கும் குழியைத் தோண்டுகின்றது என்பதே அது; உண்மையாதற்குரியதும் அதுவே யன்றோ? உயர்பிறப்பையும் உரிமையாகக் கொள்ளும் மேன்மையையும் உடைய ஒவ்வொரு வருணமும் தன்கைகளால் தனக்குரிய சிதையை அடுக்குதலைத் தன் முக்கியக் கடமையாகக் கொள்ளுதல் நன்றேயாகும்; பொருத்தமுமாகும்.

சத்தியைத் தொகுத்தல் எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு அதனைப் பரப்புதலும் இன்றியமையாததாகும்; அன்றி, தொகுத்தலினும் அதிக அவசியமாம். மார்பிலுள்ள இரத்தப் பைக்குள் இரத்தம் தொகுக்கப்படுதல் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத ஒரு நிலையாகும்; அதுபோல உடல் முழுதும் இரத்த ஓட்டம் நிகழாது போயின், மரணமே விளையும். மக்கட்சமுதாயத்தின் நன்மையைக் கருதிச் சில காலங்களில் அறிவையும் சத்தியையும் முழுவதும் சில குடும்பங்களிலோ வருணத்தாரிடத்தோ மட்டும் தொகுத்து வைத்தல் முற்றிலும் இன்றியமையாததே; ஆனால், அவ்வாறு சத்தியை ஓரிடத்தே தொகுத்துக் குவித்து வைப்பது அச்சமயத்திற்கேதான்; அதுவும் பின்புள்ள காலத்துச் சமூக முழுவதிலும் அச்சத்தியை வீசிப்பரப்புவதற்கேயாகும். இவ்வாறு பரப்புதல் தடைப்பட்டுவிடின், அந்த மக்கட் சமூகத்தின் அழிவு கிட்டிவிட்டதென்பதைப் பற்றி ஐயம் வேண்டா.

இனி, மற்றொரு பக்கத்தை நோக்குவோம்: அரசன் சிங்கத்தைப் போன்றவன்; அவனிடம் விலங்கரசாகிய அதற்குரிய நல்ல இயல்புகளும் தீய இயல்புகளும் அமைந்துள்ளன. சிங்கம் தனக்குள்ள இரத்தத்தாகத்தைத் தணிக்க வேண்டி, சமயம் வாய்க்கும் போது, புற்பூண்டுகளை உண்டு வாழும் குற்றமறியா விலங்குகளின் நெஞ்சைத் தன் நகங்களால் மூர்க்கத்தனமாகத் துண்டு துண்டாய்க் கிழித்தெறிய ஒருகணமேனும் என்றைக்கேனும் தயங்குவதில்லை; அன்றியும், அது மூப்புக்குள்ளாகிப் பசிக் கொடுமையால் இறக்கும் அமயத்திருப்பினும், காத்தருள வேண்டித் தன் கையில் வீழ்ந்து சரண் புகும் மிக மெலிந்த நரியையும் ஒருகாலும் கொல்வதில்லையென்பது கவிக்கூற்று. அரச சிங்கத்தின் ஐம்புல இன்ப நுகர்ச்சி நெறியிலே குடிகளாயுள்ள வகுப்பினர் ஒரு கணமேனும் குறுக்கிடுவராயின், அவர்களை அழிவு காலம் தடுக்கவொண்ணுதவாறு வந்தடையும்; அக்குடிகள் அரசனது ஆணைக்குப் பணிந்து நடப்பார்களாயின், அவர்களுக்கு ஒரு விதத்தும்

இன்னல் இல்லாது போம். அது மட்டும் அன்று. பண்டைய நாளைப்பற்றிய பேச்சை விடுவோம்; இக்காலத்திலாவது எந்நாட்டிலும், பலரது நன்மைக்காகத் தனி மனிதனது தன்னில மறுப்பு, ஒரு சமூகத்தின் பொதுநலத்திற்காக அதன் அங்கத்தினர் அனைவரையும் இயக்கும் தனித்தனியான நோக்க முயற்சிகள் பலவும் ஒன்றுபடும் தன்மை, இவ்விரண்டினுலும் விளையக்கூடிய பயனை முழுவதும் அடைந்துள்ள எந்தச் சமூகமும் காணப்படுவதில்லை. இதனால், அரசர் உண்டாதற்கு அவசியம் ஏற்படுகின்றது; சமூகமே அரசரைப் படைக்கின்றது. அரசர் இல்லாவிடில் சமூகத்தின் சக்திகள் யாவும் பிரிந்து சிதறிக் கிடக்கும்; இவை யாவும் எவ்விடத்தே ஒன்றுகூடிக் குவியும்படிச் செய்யப்படுமோ, அம்மையமே அரசன்; அரசர்களாகிய மையங்களிலிருந்தே இவை கிளம்பிச் சமூக உடல் முழுதும் பரவியோடிச் சமூகத்தை உயிர்ப்பித்து ஊக்குகின்றன.

பிராம்மண சக்தி தலைமை செலுத்தும் நாளில் முதன்முதலில் அறிவை நாடும் முதல் தூண்டுதல் உதிக்கின்றது; பிற்காலத்து, முளைத்த பருவத்திலேயே அப்போதும் உள்ள அத்தூண்டுதல் வளர்ச்சியடையுமாறு அதைத் தொடர்ந்து சிரத்தையோடு பேணி வருதல் நிகழ்கின்றது; அதுபோல, க்ஷத்திரிய சக்தி முதன்மை செலுத்தும் காலத்தில், முதன்முதலில் இன்பத்தை நாடும் முயற்சிகளில் பலமான இச்சை தோன்றியுள்ளது; பின்னர் அந்த இச்சையை நிறைவேற்றுதற்குரிய சாதனங்களாகப் புது முறைகளும் கலைகளின் வளர்ச்சியும் விஞ்ஞான சாத்திரங்களின் முன்னேற்றமும் உண்டாகின்றன. மேன்மையின் சிகரத்தே நிற்கும் அரசன், ஏழை மக்கட்குரிய தாழ்வான குடிசைக்குள் தனது பெருமையுற்ற தலையை மறைத்துக் கொள்ளக்கூடுமா? அன்றியும், தன் குடிகளுக்குரிய சாதாரண உணவு என்றைக்கேனும் அவனது அரச இயல்பிற்கேற்ற பசியைத் திருத்திகரமாக ஆற்ற வல்லதாகுமா?

'மண்ணுலகில் எவனும் தனக்கிணையாகாத மதிப்பைப் பெற்றவனும், மனித உடலாம் கோயிலில் வாழும் தெய்வமானவனும் அரசனே அல்லவா? அத்தகைய அரசனுடைய இன்பப் பொருள்களைச் சாதாரண மனிதன் நோக்குதலும் பெரும்பாவமே; அவ்வாறுயின், அவற்றை எப்பொழுதேனும் பெற நினைத்தலைப் பற்றிப் பேசல் வேண்டுமோ? அரசனது உடல் மற்ற மக்களின் உடல்

களைப் போன்றதன்று; எவ்வகை மாசினலும் அழுக்கேறவொண்ணுதபடி அவ்வளவு தூய்மை வாய்ந்தது அது; யமனது ஆட்சிக்கு அது ஒருபோதும் உள்ளாவதில்லை,' என்ற நம்பிக்கையும் சில நாடுகளில் நிலவுகின்றது. அதற்குச் சமமான தூய்மையின் ஒளி அரசியையும் சூழ்ந்து விளங்குகின்றது. இதனல், சாதாரண மக்களின் பார்வைக்கும் இலக்காகாதபடி அரசியைக் குறைவறப் பாதுகாத்து வருகின்றனர் ; கதிரவனும் அவளது அழகை எட்டிப் பார்க்க விடார் ! இக்காரணத்தால் கூரை வேய்ந்த குடிசைகள் இருந்த இடத்தே சிறப்பு மிக்க அரண்மனைகள் கிளம்பலாயின. மதுரமும் இசையமைதியும் கலைத்திறமையும் நிரம்பிக் கேட்பாரைப் பரவசப்படுத்தும் இசை வெள்ளம், தேவகானமோ எனப் பெருகி, கீழ் மக்களின் ஒழுங்கற்ற பேச்சினல் எழும் ஓசையை அமர்த்தலாயின. மகிழ்ச்சியூட்டும் தோட்டங்களும், இனிய சோலைகளும், அழகான மாடங்களும், மனங்கவரும் சித்திரங்களும், மேன்மை மிக்க சிற்ப வகைகளும், விலையுயர்ந்த சிறந்த ஆடைகளும், திருத்தப்படாத காடுகளின் இயற்கையழகையும், எளிய கிராமத்தானது கரடுமுரடான உடையையும் படிப்படியாக வெளியேற்றத் தொடங்கின. ஆயிரக்கணக்கான அறிவுடைய மாந்தர், உழுபவனது பாடு மிக்க முயற்சியைக் கைவிட்டு, அழகுக் கலைகள் என்னும் புதிய துறையில் தம் கவனத்தைச் செலுத்தலாயினர் ; உடலுழைப்புக் குறைந்த எளிய இவ்வழிகளில் தமது அறிவின் நுட்பமான வேலைப்பாட்டை விளங்கச் செய்ய எண்ணினர். கிராமங்கள் தமது முதன்மையை இழந்தன; அவைகட்குப் பதிலாக நகரங்கள் எழுந்தன.

மேலும், இந்தியாவிலேதான் இன்னெரு காட்சியையும் காண்கிறேம் : இங்கே அரசர், சிறிது காலம் உலகபோகங்களை மனமாற நுகர்ந்த பின், தம் வாழ்நாளின் பிற்பகுதியில் உலக வாழ்வில் தாங்கற்கரிய பெருஞ்சலிப்புற்றனர் ; மிதமிஞ்சிய போக நுகர்ச்சிக்குப்பின், இது எழுவது திண்ணமன்றே? இவ்வாறு அவர் உலக இன்பங்களை வெறுத்து, முதுமைப் பருவத்தே தனிமையார்ந்த வனங்கட்கேகி, வாழ்க்கையைப் பற்றி எழும் அரிய வினக்களை ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினர். அத்தகைய துறவினலும் ஆழ்ந்து சிந்தனையாலும் உண்டான விளைவுகளில் இரண்டு அறிகுறிகள் தோன்றலாயின ; அவையாவன : மிக விரிவான கிரியைகளின்மீது பலமான வெறுப்பும், உபநிடதங்கள், கீதை, சமண

பௌத்த சமய நூல்கள் ஆகியவற்றில் அடங்கியுள்ள மிகவுயர்ந்த ஞான உண்மைகளிடத்து மிக்க ஈடுபாடுமாம். இது பற்றியும் பிராம்மண சத்திக்கும் க்ஷத்திரிய சத்திக்கும் பெரும் போராட்டம் நிகழ்ந்தது. விரிவான கிரியைகளை ஒழித்தல் பிராம்மணரது தொழிலைக் கொல்லுதலேயாகும். இக்காரணத்தால், ஒரு பக்கம் இயல்பாகவே எல்லாக் காலத்தும் ஒவ்வொரு நாட்டிலும் வைதிகக் குருமார் கங்கணங் கட்டிக்கொண்டு, பழைய வழக்கங்களையும் ஆசரணைகளையும் இயன்ற வரை பாதுகாக்க முயல்கின்றனர் ; மறு பக்கத்தே அவர்க்கு எதிரியாக க்ஷத்திரிய வீரியத்தையும் ஞான சத்தியையும் ஆதரவாகப் பூண்ட ஜனகர்போன்ற அரசர் நிற்கின்றனர். இவ்விரு கட்சிக்காரர்க்கும் இடையே மூண்ட கடும்பகைமையைப் பற்றி முன்னரே விரிவாகக் கூறியுள்ளேன்.

பிராம்மண குரு எல்லா அறிவையும் கல்வியையும் ஒரு பொது மையத்தினிடத்தே அதாவது தன்னிடத்தே தொகுத்து வைப்பதில் சுருசுருப்பாயிருப்பான்; அதுபோல, அரசனும் உலகியற் சக்திகளையெல்லாம் திரட்டுதற்கும், அவற்றை ஒரு மையத்தினிடத்தே—அதாவது தன்னிடத்தே—குவியச் செய்தற்கும் எப்போதும் உழைத்து வருவான். இரண்டும் சமூகத்திற்கு நலம் விளைப்பன என்பதும் வெளிப்படை. ஒரு காலத்து இருவரும் சமூகத்தின் பொது நன்மைக்காக வேண்டியவராகின்றனர். ஆனால், அக்காலம் சமூகத்தின் குழந்தைப் பருவமன்றோ? ஆயினும், சமூகம் குழந்தைப் பருவத்தைத் தாண்டி, ஆற்றலும் இளமையும் கிளரும் நிலையினை அடைந்துள்ளபோது, குழந்தைப் பருவத்தில் அதற்கிசைவாயிருந்த ஆடையைப் பலவந்தமாக அதற்கு உடுத்தவும், குறுகிய எல்லைக்குள் அதனைக் கட்டுப்படுத்தி வைக்கவும் முயற்சி செய்தல் நன்றன்று; அவ்வாறு செய்யின், அது தனது சுய பலத்தினால் அக்கட்டுகளை அறுத்தெறிந்து முன் செல்ல முயலும்; அதைச் செய்யத் தவறின், அது பின்னடியிட்டுச் சென்று மெல்ல மெல்லப் படிப்படியாகத் தனது ஆரம்ப அநாகரிக நிலைக்கு மீளும்.

அரசர் தம் குடிகட்குப் பெற்றோரைப் போன்றவர். குடிகள் அரசரின் குழந்தைகளைப் போன்றவர்கள். குடிகள் ஒவ்வொரு விஷயத்தும் அரசனையே எதிர்பார்த்து நின்று, வரையாத கீழ்ப்படிதலோடு அவனையே பற்றி நிற்றல் வேண்டும்; அரசனும் நீதியிற் கோடாது ஆட்சி புரிந்து, குடிகளின் நலத்தையே கோரி, தனது சொந்தக் குழந்தைகளிடத்துப் போன்று அவர்கள்மீது அன்பு

செலுத்தல் வேண்டும். ஆனால், தனித்தனி இல்லங்கட்குப் பொருத்த மாகும் விதி எதுவோ, அதுவே சமூக முழுவதற்கும் பொருந்துமாம். எவ்வாறெனில், தனித்தனி இல்லங்கள் சேர்ந்த தொகுதியே சமூக மன்றோ? "மகனுக்கு வயது பதினாறும் போது, தந்தை அவனைத் தன் நண்பனாகவும் தனக்குச் சமானமானவனாகவும் கருதி அவனோடு பழக வேண்டும்," என்பது சாணக்கிய நீதி என்னும் நூலின் போதனை. விதி இதுவாயின், குழந்தை நிலையிலுள்ள சமூகம் எப்போதாவது பதினாறு வயதை அடைவதில்லையா? ஏதோ ஒரு காலத்தில் ஒவ்வொரு சமூகமும் காளைப் பருவத்தை அடைகிறது என்பதற்கும், அப்போது ஆட்சிபுரியும் வர்க்கத்தினர்க்கும் சாதாரண மக்கட்கும் பெரும்போராட்டம் நிகழ்கிறது என்பதற்கும் சரிதநூலே சான்றாகின்றது. அந்தச் சமூகத்தின் வாழ்வும் அதன் பெருக்கமும் அதன் நாகரிகமும் இப்போராட்டத்தில் அதற்கு விளையும் வெற்றியையோ தோல்வியையோ பொறுத்துள்ளன.

மக்கட்சமூக வாழ்க்கையிற் புரட்சியை உண்டாக்கும் அத்தகைய மாறுபாடுகள் இந்தியாவிலே மீண்டும் மீண்டும் நடந்து கொண்டே வந்துள்ளன; இந்நாட்டில் மட்டும் அவை சமயத்தின் பெயரால் உண்டாக்கப்பட்டன; ஏனெனில் சமயமே (ஞான வாழ்க்கையே) இந்தியாவுக்கு உயிராய் அமைவது; சமயமே இந் நாட்டின் மொழியாகிறது; அதனிடத்துத் தோன்றும் எல்லா இயக்கங்கட்கும் அறிகுறியாகின்றது. சார்வாக, ஜைன, பௌத்த, சங்கர, இராமாநுஜ, கபீர், நானக்கு, சைதன்னிய, பிரம்ம சமாஜ, ஆரிய சமாஜ—மதப் பிரிவுகளையும், இவை போன்ற பிறவற்றையும் கவனிப்போம். இவற்றுள் ஒவ்வொன்றும் கிளம்பும்போது, சமயமென்னும் அலை நுரையோடும் இரைச்சலோடும் ஆட்டத்தோடும் முன்னால் உடைகின்றது. பின்னால் சமூக வாழ்விலுள்ள குறைகளைப் பூர்த்தி செய்தல் தொடர்ந்து வருகின்றது. பொருளற்ற சில மொழிப்பகுதிகளை உச்சரிப்பதனால் மட்டும் எல்லா ஆசைகளையும் நிறைவேற்றிக்கொள்ளல் இயலுமாயின், எவன்தான் தனது இச்சையைப் பூர்த்தி பண்ணும் பொருட்டுத் தன்னை வருத்தியும் உழைக்க முன்வருவான்? இந்நோய் ஏதேனும் ஒரு சமூகத்தின் உடல் முழுவதும் புகுந்து பரவுமாயின், அந்தச் சமூகம் சோம்பற்குள்ளாகி, எவ்வித முயற்சியிலும் மனஞ் செல்லாத நிலையெய்தி, விரைவில் தனது அழிவைத் தேடிக்கொள்ளும். இதனாலன்றோ, 'ஐம்புலக் காட்சிகளே மெய்; அப்பால் யாவும்

பொய்,' என்ற கொள்கையைப் பின்பற்றிச் சார்வாகர் சவுக்கடி போன்ற கேலிகளை விடுத்தனர்! மிருக பலி முதலிய பலிகளோடு கலந்த எல்லா வகைப்பட்ட கிரியைமயமான சடங்குகளின் பெருஞ் சுமை இந்திய மக்கட்சமுதாயத்தின் உயிரையே ஏறக்குறைய நசுக்கி வந்த போது, தூய நீதிகளிலும், ஞானவிசார உண்மைகளி லும் மட்டும் பலமாக வேரூன்றியிருந்த ஜைனப் புரட்சியையன்றி வேறு யாது அந்த மக்கட் சமுதாயத்தைக் காப்பாற்றி இருக்கக் கூடும்? பௌத்தப் புரட்சி நிகழ்ந்திராது போயின், வேறு எது, துய ரத்தில் ஆழ்ந்த இலட்சக் கணக்கான கீழ் வகுப்பு மக்களைச் சொற் சத்தி வாய்ந்த உயர்ந்தவருணத்தாரது கடுமையான கொடுங்கோன் மையினின்றும் உய்வித்திருக்கக் கூடும்? நாளடைவில் புத்த மதம் மெலிவுற, அதன் அளவு மிக்க தூய அறநெறி ஒழுக்கத்திற்குப் பதிலாக அதேயளவு சீர்கெட்ட, மாசுற்ற அறத்திற்கு மாறான பழக்கங்கள் பெருகிய போதும்; உலகப் பொதுவான அனைத் துயிரையும் உள்ளடக்கிய சமத்துவத் தன்மையெனும் கோட்பாட் டின் மகிமையால் புத்தமத சமூகத்துள் புகவிடப்பெற்ற பற்பல அநாகரிக ஜாதியாரின் நரக வெறிக்கூத்தினால் இந்திய மக்கட் சமுதாயம் நடுநடுங்கியபோதும்; சங்கரரும் பின்பு இராமாநுஜரும் அன்றோ இந்திய அரசாங்கத்திலே தோன்றி, சமூகத்தை மீண்டும் தன் பழைய புகழுற்ற நிலைக்குக் கொணர்ந்து, அதன் இழந்த மதிப்பை மறுபடியும் நிலைநாட்ட இயன்ற வரை முயன்றனர்; இன்னும் மகம்மதியரது ஆட்சிக் காலத்தில் கபீர், நானக்கு சைதன்னியர் மூவரும், இக்காலத்தில் பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் இரண்டும் தோன்றியிராவிடின், இந்நாளைக்குள் மகமதி யரும், கிறித்தவரும், இந்தியாவில் உள்ள இக்கால இந்துக்களை எண்ணிக்கையில் நெடுந்தூரம் மிஞ்சியிருப்பார்கள் என்பதும் ஐயமற்ற உண்மையே.

பல வகைப்பட்ட மூலப் பொருள்களால் படைக்கப்பட்ட உடலையும், வரையறையற்ற நினைவு அலைகளை வெளியே அனுப்பும் மனத்தையும் உண்டாக்க, வலுக் கொடுக்கும் உணவினும் சிறந்த பொருள் வேறு யாது உள்ளது? ஆனால், உடலை ஆதரித்து மனத் தைப் பலப்படுத்தும் அதே உணவு தக்கபடி உடம்பில் ஒட்டாது போகுமாயின், உடலின் இயல்பான தொழில்களும் சரியாக நடவா தொழியுமாயின், அதுவே எல்லாக் கேட்டிற்கும் வேராகின்ற தன்றோ?

தனி மனிதனது வாழ்வு சமூகத்தின் முழு வாழ்வில் அடங்குகிறது; தனி மனிதனது இன்பம் சமூகத்தின் இன்பத்தில் அடங்குகிறது; தொகுதி வாழ்க்கையினும் வேருகப் பகுதியின் தனி மனிதனது வாழ்க்கையைக் கருதுவதும் இயலாது—இதுவே ஓர் அழிவற்ற உண்மை; உலகக் கட்டடத்தைத் தாங்கும் அடிப்படைப் பாறை இதுவே. அகண்டமான தொகுதி (முழுமை)யாம் சமூகம் இன்புறும்போது தானும் இன்புற்று, "அது துயருறும் போது தானும் துயருற்று, அதனேடு ஒன்றுபட்ட உணர்ச்சியை ஓய்வின்றி வளர்த்து, அதனேடு ஒத்த உணர்வைத் தீவிரமாக உடையவஞகி, இவ்வாறு மெல்ல மெல்ல அகண்ட வாழ்வை நோக்கி அணுகுதலே, பகுதியான தனி மனிதனது முழுக்கடமையுமாகும். அது கடமையாகும் என்பதுமட்டுமன்றி, அதை மீறுவான் மாய்வான்; இப்பேருண்மைக்கு இணங்கி வாழ்வான், இறவாப் பெருவாழ்வை எய்துவான். இஃது இயற்கையன்னையின் முறைமை; என்றும் விழித்திருக்கும் அவள் க்ண்களில் மண்ணைப் போட்டு அவளை ஏமாற்ற யார்க்கு இயலும்? சமூகத்தின் கண்ணை மறைத்து அதனை எல்லாக் காலமும் ஏமாற்ற ஒருவர்க்கும் ஆகாது. சமூகத்தின் மேற்பரப்பில் கழிவும் மண்ணும் குவியல் குவியலாக எவ்வளவு சேர்ந்திருந்தாலும், அக்குவியல்களின் அடியிலே அனைவர்மீதும் செல்லும் அன்பும் அனைவரிடத்தும் காட்டும் தன்னலமறுக்கும் இரக்கமும் உண்டாகும் அதிர்ச்சியால் சமூகத்தின் மூச்சுத் துடித்துக்கொண்டிருப்பதைக் காணலாம். தனக்கு இடைவிடாது செய்யும் தீங்குகளையும் பொறுமையோடு தாங்கி வரும் பூமியைப் போன்றது சமூகம். ஆனல், அஃது ஒரு நாள் விழிப்பது உண்டு; எவ்வளவு நெடுங்காலத்திற்குப் பின் அந்நாள் வருவதாயினும் சரி, அது விழிக்கும்போது நிகழும் குலுக்கத்தின் அதிர்ச்சிச் சத்தி, பொறுமையாக மௌனமாக இலட்சக்கணக்கான ஆண்டுகளிலே அதன் மீது குவிக்கப்படும் தன்னலங்கருதும் இழிவாகிய அழுக்கின் தொகுதியை நெடுந் தொலைக்கு அப்பால் தூக்கி எறிந்துவிடுகின்றது!

இவ்விழுமிய உண்மையை நாம் கவனியாதொழிகிருேம்; இப்பேதைமையால் நாம்ஆயிரம் முறை துயரப்பட்டாலும், இகழத்தக்க நமது மடத்தனத்தால், நம்மிடத்து அடங்கியுள்ள விலங்கியலின் தூண்டுதலால், இவ்வுண்மையில் நம்பிக்கை கொள்வதில்லை. நாம் ஏமாற்ற முயல்கிருேம்; ஆனல், நாமே ஏமாற்றமடைவதை ஆயிரம்

முறைகாண்கிறோம்; பின்னும் நாம்விலகுவதில்லை! பித்துக்கொண்ட நாம் இயற்கையன்னையை ஏமாற்றக்கூடும் என்று கருதுகிறோம்; நமது கிட்டப் பார்வையால், எதை இழந்தாயினும் தன்னலம் பேணலே வாழ்க்கையின் பண்பும் பயனும் என்று நினைக்கிறோம்.

ஞானம், அறிவு, செல்வம், மக்கள், பலம், வீரியம் என்னும் இவையும், இன்னும் நமக்கு இயற்கை திரட்டி அளிக்கும் பிறவும், பிறர்க்குத் தேவையாகும் சமயம் அடுத்துள்ள போது, எல்லாம் பரப்புவதற்கேயாகும். நாம் இவ்வுண்மையை அடிக்கடி மறந்து; நம்மிடம் நம்பிக்கையாகக் கொடுத்து வைக்கப்பட்டவற்றில்; 'எனக்கு மட்டும்' என்ற முத்திரையை அடித்து, அதே சமயம் அதேயளவிற்கு நமது அழிவிற்குரிய விதையையும் விதைத்து விடுகிறோம்!

குடிகளாகிய தொகுதியின் சத்திகட்கெல்லாம் மைய நிலையமாய் விளங்கும் அரசன், அச்சத்திகள் தன்னிடம் தொகுக்கப்பட்டிருப்பதன் கருத்தை விரைவில் மறக்கிறான். அவன் அவற்றைப் பெருக்கியும், ஆயிரமடங்கு அவற்றின் வலிமையை உயர்த்தியும் அவர்க்கே திரும்பக் கொடுத்தற்பொருட்டும், அதன் பயனாக அவை சமூக முழுவதும் பரவி நன்மையளித்தற்பொருட்டும் என்பதே அக் கருத்தாகும். (பாகவதத்திற் கூறப்படும்) வேனன் என்னும் மன்னனைப்போலச் செருக்கு மிகுதியால் தன்னிடமே ஈசத் தன்மையை ஏறிட்டுக்கொண்டு, அவன் பிற மக்களைத் தன்முன் வீழ்ந்து பணியத்தக்க மக்கட்பதராகக் கருதுகிறான்; நன்றேயாயினும், தீதேயாயினும், தனது ஆணையைச் சற்றேனும் எதிர்ப்பராயின் குடிகள் பெரும்பாவம் செய்தவரேயாவர் என்பான். (வேனன் தன்னை மூவரினும் உயர்ந்த ஈசனென எண்ணி, அனைவரும் தன்னை வணங்கல் வேண்டும் என்று கூறலானான். அச்செயல் அடாததென முனிவர் நன்மதி புகட்டியபோதும் அவன் அவரை அவமதித்துப் பணியுமாறு கட்டளையிடவே, முனிவரது சினத்தீக்கு அவன் இரையாகி அழிந்தான்.) இதனால் காத்தலுக்குப் பதிலாகத் துன்புறுத்தலும், போற்றுதற்குப் பதிலாகக் குடிகளின் உயிரை உறிஞ்சலும் நிகழ்கின்றன. சமூகம் மெலிவுற்றும் பலங்குன்றியும் இருப்பின், அரசனது தகாத ஒழுக்கத்தையும் மௌனமாகப் பொறுத்து வருகிறது; இதன் இயல்பான முடிவு யாதெனில், அரசனும் குடிகளும் மேலும் மேலும் கீழ் நோக்கிச்சென்று, மிக இழிந்த நிலையாகிய குழியில்

வீழ்ந்து, தம்மினும் வலிமை மிக்க ஒரு நாட்டினர்க்கு எளிதே இரையாகின்றனர். ஆனால், எங்கே சமூகம் நலமும் ஆற்றலும் உள்ளதாகுமோ, அங்கே அரசனுக்கும் குடிகட்கும் இடையே வெம்போர் மூளும்; இதிலிருந்து விளையும் எதிர்ச் செயலாலும் பெருங்குழப்பத்தாலும் செங்கோலும் முடியும் அப்பாற் பறந்து விடும்; அரச ஆடம்பரங்கள் யாவும் பொருட்காட்சிச் சாலைகளிலே போற்றி வைக்கப்படும் பழைமையான விநோதங்களாகிவிடும்.

இப்போரின் விளைவாக இதன் எதிர்ச் செயலாக, வைசியரது பெருஞ்சத்தி தோன்றுகிறது. இதன் பெருமை இருந்தவாறு என்னே! இவரது சீற்றப் பார்வைக்கு முன் முடியுடை மன்னரும் வீரர் தலைவரும் அரியாசனத்தில் இருந்தபடியே கிடுகிடென நடுங்குவர்; இவரது கையிலுள்ள பொற்காசுகளைப் பெறும் வீணான அவாவினால் இவரை ஆண்டிகளும் அரசரும் பணிவோடு பின்தொடர்வர். அக்காசுகளும் எட்டிப்பிடிக்க முயல்வார்முன் எப்போதும் எட்ட எட்டச் சென்றுகொண்டே இருக்கும்.

பிராம்மணன், "கல்வியே சத்திகள் அனைத்துள்ளும் உயர்ந்த சத்தியாம்; அக்கல்வி என்னைப் பொறுத்து நிற்கின்றது; அக்கல்விக்கு உடையவன் யானே; ஆதலின், சமூகம் எனது கட்டளையைப் பின்பற்ற வேண்டுவது கட்டாயம்," என்று கூறினன். சில நாள் அப்படியே ஆயிற்று. க்ஷத்திரியன், "எனது வாள் வலி இல்லையேல், பிராம்மணனே, உனது கல்வியின் சத்தி முழுதும் இருந்தும், உன் கதி என்னாம்? கணப்பொழுதில் நீ இவ்வுலகினின்றும் இருந்த இடம் தெரியாது மறைந்தழிவாயன்றோ? ஆதலின், மேலானவன் யானே," என்று நவின்றான். வெளிப் பறந்தது சுடர்வாள், சலங்கையார்ந்த கூட்டினின்றும்; சமூகம் தலை குனிந்த வண்ணமாய்த் தாழ்மை விஞ்ச அதன் சத்தியை ஒப்புக்கொண்டது. கல்வியை வணங்குவோனும் அரசனை வணங்குவோராக மாறியவருள் முதலானவனானான். இந்நிலையில் வைசியன், "பித்தனே, ஒளி மயமான எங்கும் பரந்த தெய்வமென இயம்பும் பொருள் இருப்பது இதோ என் கையில்; பார்! எப்போதும் மிளிரும் தங்கமான இந்த எல்லாம் வல்ல பொற்காசை. இதன் அருளால் நானும் உன்னைப்போல எல்லாம் வல்லேனாவதைப் பார். பிராம்மணனே, இப்பொழுதே யான் அதன் அருளால் உன் ஞானம், அறிவு, ஜபம், தியானம் எல்லாவற்றையும் விலைக்கு வாங்குவேன். பெருமையுள்ள அரசனே, உன் வாளும் ஆயுதங்களும் பலமும் வீரியமும் என்னிடத்தி

லுள்ள இப்பொன்னின் அருளால் யான் விரும்பும் காரியங்களை நிறைவேற்றுதற்காகப் பயன்படுத்தப்படும். அதோ உள்ள உயர்ந்த பரந்த ஆலைகளைக் காண்கின்ருயா? அவை என் தேன் கூடுகள். இலட்சக்கணக்கான தேனீக்களின் கூட்டங்களான சூத்திரர் அக் கூடுகளில் தேனை இடையருது திரட்டிக்கொண்டிருப்பதைப் பார். யாருக்காக அவர் உழைக்கின்றனர் என்பதை நீ அறிவாயோ? எனக்காகவே—இந்த எனக்காகவே! நாளடைவில் பின்னிருந்து அத்தேனின் ஒரு சொட்டும் விடாது என் பயனுக்காகவும் இலாபத்திற்காகவும் யானே பிழிந்துகொள்வேன்,'' என்கிருன்.

பிராம்மணனும் க்ஷத்திரியனும் தலைமை செலுத்தும் நாளில் கல்வியும் நாகரிக முன்னேற்றமும் ஓரிடத்தே குவிவது போலவே, வைசியன் தலைமை செலுத்துவதன் பயனுகச் செல்வம் ஒரு பக்கத்துக் குவியும். வைசியனின் சத்தி நாணய உடைமையில் அமைந்துள்ளது; அந்நாணயத்தின் 'கிண்' எனும் ஒலியினது மாயம் நான்கு வருணத்தாருடைய மனத்திலும் புகுந்து தடுக்கவொண்ணுத கவர்ச்சியை எழுப்பி வேலை செய்யும். வைசியன் தனது ஒரே உடைமையான இதைத் தன்னிடமிருந்து பிராம்மணன் வஞ்சனையால் பறித்துவிடுவானே என்றும், க்ஷத்திரியன் தனது உயர்ந்த ஆயுத வலிமையைத் துணைகொண்டு வலியப் பற்றிக்கொள்வானே என்றும், எப்போதும் அஞ்சிக்கொண்டே இருப்பான். தற்காப்புக் கருதி வைசியர் இக்காரணத்தால் ஒருடல் போல ஒன்ருகி, மன ஒற்றுமையோடு வாழ்வர். வைசியன் பணத்தை ஏவல் கொள்கிருன்; பிறர் தனது பணத்தைப் பயன்படுத்துவதற்காக, கையில் சவுக்கைக் கொண்டவன் பயமுறுத்திப் பெறுவது போல, அம்மக்களிடமிருந்து மிகுதியான வட்டியை வற்புறுத்தி வாங்கல் வைசியனுக்கு இயலும்; இவ்வட்டியெனும் ஆயுதத்தால் அவன் எல்லோருடைய உள்ளத்தும் பேரச்சத்தை விளைக்கிருன். தனது பணத்தின் வலிமையால் அவன் அரசனது சத்தியை அடக்குவதில் எப்போதும் சுருசுருப்பாயிருக்கிருன். தனக்குப் பணம் ஓடி வரும் வழியில் அரசனது சக்தி குறுக்கிடாதபடி பார்த்துக்கொள்வதில் வியாபாரி எப்போதும் விழிப்பாயிருக்கிருன். ஆனுலும், சத்தி க்ஷத்திரியனிடமிருந்து சூத்திர வகுப்பினரிடம் செல்வதில் அவன் சற்றேனும் விருப்பமற்றவனுகவே எப்போதும் இருக்கின்ருன்.

வியாபாரி செல்லாத நாடு எது? அவன் தொழிலை நடத்தும் போதே தான் அறியாதே ஒரு நாட்டின் கல்வி ஞானம் கலை விஞ்

ஞானம் என்பவற்றை இன்னொருநாட்டில் நட்டு வைக்கிறான். பிராம்மண க்ஷத்திரிய சத்திகள் முதன்மை செலுத்தும் நாளில் சமூக உடலின் இரத்தப் பையிலே சேர்த்துவைக்கப்பட்ட ஞானமும் நாகரிகமும் கலைகளும், வியாபாரமென்னும் குருதி நாளங்கள் வழியாக வைசியனது பற்பல சந்தைகளை நோக்கி எல்லாத் திசைகளிலும் பரப்பப்படுகின்றன. இவ்வைசியச் சத்தி கிளம்பியிராவிடின், உலகத்து ஒரு மூலையில் உள்ள பயிற்சியும், கல்வியும், உடைமைகளும், உணவுகளும், இன்பபோகத்துக்கு உதவும் பொருள்களும் ஆகியவற்றை மற்றொரு மூலைக்கு இன்று வேறெவர் எடுத்துச் சென்றிருப்பர் ?

இது கிடக்கட்டும் ; எவருடைய உழைப்பினால் மட்டும் பிராம்மணனது சொற்சத்தியும், க்ஷத்திரியனுடைய வீரியமும், வைசியனது செல்வமும் இயலுவனவாகுமோ, அவ்வகுப்பினர் எங்கேயுள்ளனர் ? சமூகத்தின் உண்மையான முக்கியப் பகுதியாயிருந்தும், எல்லாக் காலத்தும் எல்லா நாடுகளிலும் "கீழான பிறப்புடையோர்" என்றே வழங்கப்பட்டு வரும் அவ்வகுப்பினரின் வரலாறு யாது? "அவனது நாக்கை அறுத்து விடுங்கள்! அவனது உடலை அரிந்துவிடுங்கள் !" என்பதையும், இவை போன்ற பிறவற்றையும் மெல்லிய தண்டனைகளாக எண்ணி, அன்பார்ந்த இந்தியா யார்க்கு விதித்ததோ,—அதுவும் எதற்காக ?—தம்முடைய உயர்ந்த வகுப்பினரால் தனியுரிமைகளாகப் போற்றப்பட்ட அறிவு ஞானம் இவைகளில் தமக்கும் பங்கு பெறச் சிறிதாயினும் முயலுதல் என்னும் மிகப் பெருங்குற்றத்திற்காக விதித்ததோ, இந்தியாவின் "நடமாடும் பிணங்கள்" மற்ற நாடுகளின் "பாரம் சுமக்கும் விலங்குகள்" சூத்திரர்கள்—என்று வழங்கப்படும் அவ்வகுப்பினருக்கு வாழ்க்கையிலே கதி என்ன? இந்தியாவைப் பற்றி யான் என்ன இயம்புவது! அந்நாட்டின் சூத்திர வகுப்பைப் பற்றிய பேச்சை விடுவோம். ஞான நூற்கல்வியை முன்புஉரிமையாகப் பெற்றுவந்த அந்நாட்டின் பிராம்மணர் இந்நாளில் அயல் நாட்டுப் பேராசிரியரே ; அதன் க்ஷத்திரியர் அதனையாளும் ஆங்கிலேயரே; அதன் வைசியரும் வியாபாரஞ் செய்யும் இயற்கை உடம்பிலே ஊறிக்கிடக்கும் ஆங்கிலேயரே. இந்நிலையில் சூத்திரத் தன்மையொன்றே, அதாவது மூட்டைத் தூக்கும் விலங்குத் தன்மையே, இப்போது இந்தியரிடத்தே மிஞ்சியிருக்கின்றது.

ஊடுருவிச் செல்லற்கரிய இருளென்னும் மேகம் இந்நாளில் நம்மனைவரையும் சம அளவு சூழ்ந்துகொண்டுள்ளது. இப்போது நம்மிடத்து, எண்ணியதை முடிக்கும் திண்மையோ, புது முயற்சியில் துணிவோ, நெஞ்சில் தீரமோ, மன வலிமையோ, பிறர் நம்மிடம் முறை கெட ஒழுகும்போது வெறுப்போ, அடிமைத்தனத்தில் அருவருப்போ, நெஞ்சத்து அன்போ, ஆசையோ, ஆண்மையோ இல்லை. ஆனல், இந்தியாவில் நம்மிடம் உள்ளவை, வேரூன்றிய பொறாமை, ஒருவர்மீதொருவருக்குப் பலமான வெறுப்பு, எவ்வாற்றானும் எளியாரை அழிப்பதிலும் வலியாரது காலை நாய் போல நக்கிச் சுவைத்தலும் உள்ள நோய் கொண்ட அவா என்பனவே. இன்று மிக உயர்ந்த திருத்தி செல்வத்தையும் சத்தியையும் ஆடம்பரமாக வெளிக்காட்டுவதில் அடங்கிவிடுகிறது. பத்தி தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வதிலும் ஞானம் அழியும் பொருள்களைத் தொகுப்பதிலும் அடங்கியிருக்கின்றன ; யோகம் அருவருப்பான மிகக் கெட்ட பழக்கங்களிலும், கருமம் பிறர்க்கு அடிமையாவதிலும் அடங்குகின்றன ; நாகரிகம் அயல் நாட்டினரின் வழக்கங்களைப் பின்பற்றும் இழிவிலும், சொல்வன்மை பழிமொழிகளைப் பயன் படுத்துவதிலும், இலக்கிய மாண்புப் பொருள் படைத்தோரைப் பற்றிய அளவு கடந்த புகழுரையிலும் நடுங்கச் செய்யும்படி அருவருப்பானவற்றை பரப்புவதிலும் அடங்கி நிற்கின்றன ! நாட்டின் மக்கள் தொகை முழுவதும் அனுபவத்திலே சூத்திரரது மட்டத்திற்கு இறங்கிவிட்டபோது, வேறான சூத்திரரது வகுப்பைப்பற்றித் தனித்துக் கூற யாது உள்ளது ? இந்தியா ஒழிந்த மற்றைய நாடுகளில் உள்ள சூத்திரர் ஒரு சிறிது விழித்திருப்பதாகத் தோன்றுகிறது. ஆனல், தக்க கல்வி பெறாத குறை அவரிடம் உள்ளது. அவ்வகுப்பினர் ஒருவர்மீது ஒருவர் கொள்ளும் பகையை மட்டும் பெற்றுள்ளனர். இது சூத்திரர்க்குப் பொதுவாக ஏற்பட்ட இயல்புதான். மற்ற வகுப்பினரைவிட அவர் பெரிதும் தொகையில் மிஞ்சியவராயிருத்தலினல் யாது பயன் ? பத்து மனிதர்க்குப் பத்து லட்சம் மனிதரது ஆற்றலைத் திரட்டிக் கொடுக்கும் அந்த ஒற்றுமையுணர்ச்சி இன்னும் சூத்திரர்க்கு நீண்ட தொலையிலுள்ளது. இக்காரணத்தால், இயற்கை விதிக்கு இணங்கச் சூத்திரர் தவறாது எங்கும் அடிமை வகுப்பினராகின்றனர்.

ஆனல், அவர்க்கு நற்காலம் வரும் என்ற நம்பிக்கைக்கு இடமுண்டு. காலத்தின் பலம் வாய்ந்த போக்கிலே, பிராம்மணரும்

மற்ற உயர் வகுப்பினரும் சூத்திரரது தாழ்ந்த நிலைக்குக் கீழ்க் கொணரப்படுகின்றனர்; சூத்திரரும் மேலான பதவிகட்கு உயர்த் தப்படுகின்றனர். உரோமாபுரியால் அடிமையாக்கப்பட்ட, சூத்திர ரது நாடாக முன்பொரு காலம் இருந்த ஐரோப்பா, இப்போது க்ஷத்திரிய வீரியம் நிரம்பியுள்ளது. நம் கண் முன்னே வலிமை பெற்ற சீன நாடு வெகு விரைவாகச் சூத்திரத்தன்மையை நோக்கித் தாழ்ந்து வருகின்றது; அதற்கு மாருக, அற்பமான ஜப்பான் ஆகாச வாணத்தைப் போலத் திடீரெனப்புறப்பட்டு, மேற்கிளம்பித் தனது சூத்திர இயல்பை உதறி எறிந்துவிட்டு, உயர்வகுப்பினரின் உரிமைகளின் மீது மெல்ல மெல்லப் படையெடுத்து வருகிறது. இக்கால கிரீஸ் இத்தாலி நாடுகள் க்ஷத்திரிய இயல்பைப் பெறு வதும், துருக்கி ஸ்பெயின் முதலிய நாடுகள் தேய்வடைவதும் இங்குக் கவனிக்கத் தக்கன.

ஆயினும், சூத்திர வகுப்புத் தனது சூத்திரத்தன்மையோடே எழுச்சி அடையும் காலம் வரும்; அதாவது சூத்திரர், வைசியரது, க்ஷத்திரியரது சிறப்பியல்களைப் பெறுவதனுல் பெருமையடைந்து வரும் இக்காலத்துப் போலன்று; ஒவ்வொரு நாட்டிலுமுள்ள சூத்தி ரரும் தமது பிறவியிலே அமைந்த சூத்திர இயல்போடும் வழக்கங் களோடும், வைசியராகவோ க்ஷத்திரியராகவோ உள்ளியல்பில் மாருது சூத்திரராகவோ இருந்து, ஒவ்வொரு சமூகத்திலும் முழுத் தலைமை செலுத்தும் காலம் வரும். இப்புதுச் சத்தியின் அருணோ தயம் மேலையுலகத்தாரது வானத்திலே முன்னமே மெல்லத் தோன்றத் தொடங்கிவிட்டது; இப்புதிய தோற்றத்தின் இறுதி யான விளைவு யாதாகுமோ எனச் சிந்தனையுடையாரும் அறிய மாட்டாது திகைக்கின்றனர். சமூகநல வாதமும், ஆட்சி யொழிப்பு வாதமும், அனைத்து மறுப்பு வாதமும், இவை போன்ற பிறவும் இனி வர இருக்கும் சமூகப் புரட்சியின் முன்னணியிலே உள்ளன. [கி. பி. 1835-ல் சமூக நல வாதமும், 1814ல் பிறந்த ஒருவரால் ஆட்சியொழிப்பு வாதமும், 1862-ல் ரஷியாவில் முதன்முதலாக அனைத்து மறுப்பு வாதமும் தோன் றின.] நினைவுக்கெட்டாக் காலமுதல், சமட்டும் அமுக்கம் கொடுங் கோன்மையெனும் இரண்டின் பயனுகச் சூத்திரர் உயர்வகுப்பின ரது காலை நாய் போல நக்கி வாழும் மிக்க இழிதகவுடையாராகின் றனர்; அன்றேல், கொடிய விலங்குகளைப் போல மனிதத்தன்மை யற்றவராகின்றனர்—இதுவே பொது விதி என்னலாம். இன்னும்,

எல்லாக் காலங்களிலும் அவர் எதிர்பார்ப்பனவும் ஆசைப்படுவன வும் நிறைவேருது போகின்றன; நோக்கத்தில் உறுதியும் செயலில் விடாமுயற்சியும் அவரிடத்துச் சற்றும் இல்லை.

மேலை நாடுகளில் கல்வி பரவியிருந்தும், சூத்திர வகுப்பு உயர் வதற்கு ஒரு பெரிய இடையூறு குறுக்கிடுகிறது. அது யாதெனில், ஏறக்குறைய நல்ல குணங்களோ, தீய குணங்களோ உள்ளமைந் திருத்தலைப் பொருத்து ஏற்படும் சாதியை ஒப்புக்கொள்ளுதலே. பண்டைய நாளில் இந்தியாவில் வழங்கிய இந்தக் குணத்தைப் பற்றிய சாதி முறையே சூத்திர வகுப்பைக் காலையும் கையையும் கட்டி வைத்துக் கீழே அமுக்கி வந்தது. முதலாவதாக பொருளைச் சேர்க்கவோ, தக்க கல்வியையும் அறிவையும் தேடிப் பெறவோ, சூத்திரர்க்கு ஓர் அமயமும் கிடையாது போயிற்று. இக்குறை யோடு இன்னென்றும் சேரலாயிற்று. சூத்திர வகுப்பிலே அசாதா ரணமான திறமைகளோடும் இயற்கையறிவோடும் ஒரு மனிதன் என்றேனும் பிறந்தானுயின், சமூகத்திலுள்ள சொற்சத்தி வாய்ந்த உயர்வகுப்பினர் அவன்மீது உடனே பட்டங்களையும் மதிப்பையும் சொரிந்து, அவனைத் தமது வகுப்பாகிய வட்டத்துக்கு உயர்த்தி வந்தனர். அவனது செல்வமும் அவனது ஞானத்தின் சத்தியும் அயற்சாதியின் நலத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன; அவனது இனத்தவர் அவனுடைய பேறுகளின் பயனைப் பெருது போயினர். இதுமட்டுமன்றி, ஒன்றுக்கும் உதவா மக்களும், உயர்ந்த சாதி களின் கழிவும் அழுக்கும் ஆகும் மக்களும் விலக்கப்பட்டுச் சூத்திர வகுப்பில் தள்ளப்பட்டு, அவ்வகுப்பினரின் தொகையை மிகச் செய் தனர்.

வசிஷ்டர், நாரதர், சத்தியகாம ஜாபாலர், வியாசர், கிருபர், துரோணர், கன்னன் முதலிய சந்தேகத்திற்கிடமான பெற்ருேரை யுடையோர் அவர்தம் மேன்மையான படிப்பையோ கல்வியையோ கருதி,பிராம்மணரது பதவிக்கோ க்ஷத்திரியரது பதவிக்கோ உயர்த் தப்பட்டனர்; ஆனுல், இவ்வாறு உயர்த்தப்பட்டமையால், பரத்தை பணிப்பெண், செம்படவன் தேர்ப்பாகன் என்னும் வகுப்புகள் எவ் வாறு பயன் பெற்றன என்பது இது வரை அறியப்படவில்லை. மேலும், இதற்கு மாருக, பிராம்மண க்ஷத்திரிய வைசிய வகுப்பி லிருந்து வீழ்ந்தோர் சூத்திரரது வகுப்பிற்கே எப்போதும் தள்ளப் பட்டு அதை நிரப்பலாயினர்.

இக்கால இந்தியாவில், சூத்திரப் பெற்ருேர்க்குப் பிறந்த ஏவ

னும், இலட்சப் பிரபுவாயினும் சரி, ஒரு பெரும்பண்டிதனுயினும் சரி, தனது சொந்த வகுப்பை விட்டு வெளியேறும் உரிமையுடையவனல்லன்; இதன் பயனுக, அவனது செல்வமோ, அறிவோ, ஞானமோ, அதன் சத்தி அவனது இனத்தின் எல்லேக்குள் அடைபட்டுக் கிடந்து, அவன் வகுப்பினரின் முன்னேறத்திற்காகப் பயன் படுத்தப்படுகிறது. இந்தியாவிலே பிறவியையொட்டி வரும் இந்தச் சாதி முறை இவ்வாறு தனக்குரிய எல்லேயைத் தாண்டிச் செல்ல இயலாமையாலே, அதே வட்டத்துக்குள் திரியும் மக்களின் முன் னேற்றத்திற்காக, மெல்ல மெல்ல—ஆனுலும் உறுதியாக, உதவி புரிந்து வருகின்றது. சாதி பதவி என்னும் வேறுபாடுகளேப்பொருட் படுத்தாது குடிகளே நடத்திவரும் ஓர் அரசாங்கத்தாரின் கீழ் இந்தியா இருக்கும் வரை இந்தியாவிலுள்ள கீழ் வகுப்பினர் இவ் வண்ணம் மேன்மேலும் திருந்தி வருவர்.

சமூகத்தின் தலேமைப்பதவி கல்வியைத் தமது சுய உரிமையெனக் கொண்டாடுவாரது கையிலோ, செல்வத்தின் சத்தியையோ ஆயுத வலிமையையோ ஆள்வாரது கையிலோ இருப்பினும், அதன் சத்திக்கு மூலம் எப்போதும் குடிகளேயாவார்கள். அதிகாரம் சுமக்கும் வகுப்பு இந்த மூலத்தினின்றும் பிரிந்து போகும். அதே அளவிற்கு அது மெலிவடைவதும் திண்ணம். ஆனுல், விதியின் விசித்திரக் கேலியை என்னென்பது! மாயை வேலே செய்யும் புதுமை இவ்வண்ணம் உள்ளது! அந்தச் சத்தி யாரிடமிருந்து நல்ல வழியாலோ கெட்ட வழியாலோ நேராகவோ சுற்றிய முறையிலோ பெறப்படுகிறதோ—வஞ்சனே, தந்திரம், வலியுறுத்தல் இவைகளாலோ, மனமிசைந்த கொடையாலோ பெறப்படுகிறதோ—அவ் வகுப்பினரைத் தலேமை செலுத்தும் வகுப்பினர் விரைவில் பொருட் படுத்தாதொழிகின்றனர். நாளடைவில் பிராம்மண சத்தி அதற்கு உண்மையான நிலேக்களனுகிப் பொதுமக்களிடமிருந்து முழுதும் தன்னே விலக்கிக்கொண்ட போது, குடிகளின் ஆற்றலே அடிப்படையாகக்கொண்டு நின்ற அப்போதைய க்ஷத்திரிய சத்தியால் கீழே தள்ளப்பட்டது. பின்னும், க்ஷத்திரிய சத்தி தன்னே முழுச் சுதந்தரமுள்ளதாகக் கருதி, தனக்கும் குடிகளான பொது மக்களுக்கும் இடையே வாயகன்ற பெரும்பள்ளத்தை உண்டுபண்ணிய போது, அதன் பயனுக அதுவும் அழிவடையலாயிற்று; அதாவது, பொது மக்களின் ஒத்துழைப்பை மிகுதியாகப் பெறுவதில் அப்போது வெற்றியடைந்த வைசியரது கையில் ஆட்டுவிக்கப்படும் ஒரு

பொம்மையேயாயிற்று. வைசியர் இவ்வாறு தமது கோரிக்கையை நிறைவேற்றவே, இப்போது அவரும் பொது மக்களான குடிகளிடமிருந்து உதவி பெறுதலை இழிவாகக் கருதியும், அதனுல் தம்மை அவரிடமிருந்து வேருக்கிக்கொள்ள இயன்ற மட்டும் முயன்றும் வருகின்றனர்; இதன் பயனுக, இச்சத்தியின் அளவிற்கும் விதை ஊன்றப்பட்டு வருகின்றது.

பொது மக்களான குடிகள் தாங்களே எல்லாச் சத்திகட்கும் களஞ்சியமாயிருந்தும், தமக்குள் ஒருவரை விட்டு ஒருவர் விலகி வாழ்தலையே விடாது எப்போதும் மேற்கொண்டிருத்தலின், தமக்கு ஏற்பட்ட நியாயமான உரிமைகளையும் பரிகொடுத்து நிற்கின்றனர். இம்மாதிரி விலகிய வாழ்வு நடைபெற்று வரும் வரை அவர் அவ்வண்ணமே இருப்பார்.

பொதுவான ஓர் இன்னலோ, சில வேளைகளில் வெறுப்புக்கோ அன்புக்கோ உண்டாகும் ஒரு பொதுக்காரணமோ, மக்களை ஒன்ருகப் பிணைக்கும் சத்தியாகின்றது. ஊனுண்ணும் விலங்குகட்கு இரையாகும் விலங்குகளை மந்தையாகக் கூடி வாழச் செய்யும் விதியின்படியே, மாந்தரும் ஒன்ருகக் கூடித் தமக்கென ஒரு வகுப்பையோ, ஒரே நாட்டினர் எனும் உறவையோ, உண்டாக்கிக் கொள்கின்றனர். தம் சொந்த மக்களின்மீதும் நாட்டின் மீதும் கொள்ளும் ஊக்கமான அபிமானம், அயல் மக்களின்மீதும் நாட்டின்மீதும் காட்டும் வெம்பகையாக உருக்கொள்கின்றது; ஒரு நாடு மற்ருென்றின்மீது கொள்ளும் பகைமையால் தனக்குள் ஒற்றுமையை விளைத்தல் மூலமாகத் தான் அதனினும் முன்னேற்றமடைதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று இதுவே என்பதில் ஐயமில்லை. சான்ருக, பெர்சியாமீது கிரீசுக்கும், கார்த்தேஜின்மீது உரோமுக்கும், காபியர்மீது அரேபியர்க்கும், மூர் என்பவர்மீது ஸ்பெயினுக்கும், ஸ்பெயின்மீது பிரான்சுக்கும், பிரான்சின்மீது இங்கிலாந்து ஜெர்மனி இரண்டிற்கும், இங்கிலாந்தின்மீது அமெரிக்காவுக்கும் உண்டான பகைமையைக் காண்க.

தன்னை நேசித்தலே தன்னைத் துறத்தல் என்னும் நிலையைப் போதிக்கும் முதற்குருவாகும். தனது சுயநன்மையொன்றையே பாதுகாக்கும்பொருட்டு, ஒருவன் தொகுதியின் (சமூகத்தின்) நன்மையை முதலில் கருதுகிருன். ஒருவனது சுய நாட்டினரின் நன்மையிலே அவனது சுய நன்மையும் அமைந்துள்ளது; ஒருவனுடைய நாட்டினரின் செழிப்பிலே அவனது செழிப்பும் அமைந்

துள்ளது. பலருடைய ஒத்துழைப்பின்றிப் பெரும்பான்மையான வேலைகள் எவ்வழியிலும் முன் செல்லமாட்டா ; தற்காப்பும் இயலாத காரியமாய்விடும். இந்தச் சுய நன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு நண்பர் ஒருவர்க்கொருவர் உதவிக்காகக் கைகோத்து ஒன்றுயிருத்தல் ஒவ்வொரு நாட்டினரிடத்தும் ஒவ்வொரு நாட்டிலும் காணப்படுகின்றது. இச்சுய நன்மையெனும் வட்டத்தின் சுற்றளவு மக்கட்குத் தக்கவாறு வேறுபடுகிறது. இனம் பெருக்கலும், ஒரு நிலையான வழியின்றி அன்றுடம் வயிறு வளர்த்து வாழ ஓர் அமயத்தைப் பெறுதலும், இதற்கு மேலாக, உயர்ந்த வகுப்புகளின் ஞான முயற்சிகளுக்கு யாதொரு தீங்கும் வாராத ஒரு நிலைமையை அடைதலுமே இந்தியர்க்கு மிகவுயர்ந்த இலாபமும் நன்மையுமாகும்! இக்கால இந்தியாவிற்கு இதனினும் மேலான ஒன்றை எதிர்பார்த்தலைக் கருதவும் வழியில்லை. இந்தியாவின் வாழ்க்கையேணியின் இறுதிப்படியும் இதுவே!

இந்தியாவின் இக்கால அரசாங்கத்தின் சார்பாக எழுந்த சில கேடுகள் உள ; ஆனல், அவற்றில் மிகப் பெரிய நன்மையான சில பகுதிகளும் உள்ளன. நமக்கு அவற்றில் மிகவுயர்ந்த நன்மையை அளிப்பது இது—பாடலிபுத்திரப் பேரரசின் வீழ்ச்சி முதல் இது வரை, ஆங்கில ஆட்சியைப் போன்று நாடு முழுவதும் செங்கோல் செலுத்திய, சக்தி வாய்ந்த, இயந்திரம் போன்ற ஓரரசாங்கத்தின்கீழ் இந்தியா ஒரு நாளும் இருந்ததில்லை. இந்த வைசியத் தலைமையாட்சியின்கீழ், வைசியருக்கு இயற்கையாயுள்ள கடுமையான துணிவான முயற்சிகளின் பயனுக, உலகத்தின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு வியாபாரச் சரக்குகள் கொண்டு போவது போலவே, அதே சமயம் அச்செயலின் இயல்பான விளைவாக, பற்பல தேசங்களின் கருத்துகளும் எண்ணங்களும் இந்திய மக்களின் எலும்பிற்குள்ளும் இரத்தத்திற்குள்ளும் வலியப் புகுந்து வருகின்றன. இந்தக் கருத்துகள் எண்ணங்களாகியவற்றுள் சில உண்மையாகவே இந்தியாவிற்கு மிக்க நன்மையளிக்கக் கூடியன ; சில கேடு விளைக்கக்கூடியன ; ஆனல், மற்றவை, இந்நாட்டில் வாழ்வார்க்கு உண்மையாகவே நன்மையைத் தரக்கூடியது இன்னது என்பதைத் தீர்மானித்தல் அன்னியரது அறிவுக்கும் திறமைக்கும் எட்டாததென்பதை வெளியிடுகின்றன.

ஆனல், நன்மையோ, கேடோ, எதுவாயிருப்பினும், அத்தொகுதியைத் துலைத்துக்கொண்டு, இந்தியாவின் வருங்கால நலத்

திற்குத் திண்ணமான அறிகுறி எழுவது காணப்படுகின்றது! அது யாதெனில், அந்நாட்டிற்குச் சொந்தமான பழைய தேசிய இலட்சியங்கள் ஒரு பக்கமும் அன்னிய நாட்டினர்க்குரிய புதிதாகப் புகுத்தப்பட்ட விந்தையான இலட்சியங்கள் மற்றொரு பக்கமும் மாறிமாறி ஒன்றையொன்று தாக்க, அப்போது நிகழும் செயல் எதிர்ச்செயல்களின் முடிவாக அந்நாடு, தனது நீண்ட ஆழ்ந்த உறக்கத்தினின்றும் மெல்ல மெல்லக் கண் விழித்து வருகின்றது என்பதே. தவறுகள் அது இழைக்கும்; இழைக்கட்டும்; அதில் யாதொரு தீங்கும் இல்லை; நம் எல்லாச் செயல்களிலும், பிழைகளும் தவறுகளும் மட்டுமே நமக்கு ஆசிரியர்களாகின்றன. தவறுகள் இழைப்பவன் எவனோ, அவனொருவனாலேயே உண்மை நெறி அடையப்படுகின்றது. மரங்கள் தவறு இழைத்தல் ஒரு போதும் இல்லை; கற்களும் பிழைக்கு ஆளாவதில்லை; மாறாத இயற்கை விதிகளை விலங்குகள் மீறுதலும் காண அரிதாகின்றது; ஆனால், மனிதனோ, தவறும் இயல்புடையவன். அம்மனிதனே மண்ணகத் தெய்வமாகிவிடுகிறான். தொட்டிற்பருவமுதல் இறக்குமளவும் நம் செயல் ஒவ்வொன்றும், பொழுது புலரும் வேளையில் எழுந்திருந்தது முதல் நள்ளிரவில் உறங்கப்போகும் வரை நமது நினைவு ஒவ்வொன்றும், நமக்காக நுட்பமான விவரங்களோடு பிறரால் கட்டளையாக விதிக்கப்படுமாயின், அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட விதிகளின் இறுகிய பிடிப்புக்குள் நம்மை வைத்திருக்கும்பொருட்டு அரசனது வாள் வலிமையையும் துணைக்கொள்வதாயின், பின் நாம் நமக்கெனச் சுதந்தரமாக நினைப்பதற்கு மிஞ்சுவது யாதேனும் உண்டோ? ஒரு மனிதனைப் பேரறிஞனாகவும் ஞானியாகவும் செய்வது யாது? அவன் தானாக நினைப்பதும் ஆராய்வதும் சங்கற்பிப்பதுமே அவ்வாறாதற்குக் காரணமல்லவா? பயிற்சி இன்றேல், ஆழ்ந்து சிந்திக்கும் சத்தியை இழக்க நேரும்; தமோ குணம் தலையெடுக்கும்; மனம் மழுங்கிச் சோம்பலடையும்; உயிர் சடப் பொருளின் மட்டத்திற்குக் கீழ்க் கொணரப்படும். இது உண்மையாயிருந்தும், இன்றைக்கும் ஒவ்வொரு மதப் போதகரும் ஒவ்வொரு சமூகத் தலைவரும் சமூகத்தாரை வழி நடத்துதற்காகப் புதிய சட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் அமைப்பதில் பரபரப்புக் கொள்கின்றனரே! நாட்டிற்கு விதிகள் தேவையா? போதுமான அளவு அவை அங்கில்லையா? விதிகளால் நசுக்குண்டு இந்திய மக்கட்சமுதாயம் முழுமையும் தனது அழிவை நோக்கி அணுகி

வருகின்றதே ! நிதானமாக நின்று இதனை அறிவார் யார் ?

கட்டுப்பாடின்றித் தன் விருப்பப்படி ஒழுகும் அரசனது ஆட்சியில், வெல்லப்படும் மக்களினம் ஆட்சியதிகாரிகளால் அவ்வளவு இழிவாக நடத்தப்படுவதில்லை. அம்மாதிரியான இச்சாதிகார ஆட்சியின் கீழ்க் குடிகள் அனைவரும் சம உரிமையராகின்றனர். அதாவது, அதிகாரியை வினவவோ அடக்கவோ எவர்க்கும் உரிமையில்லை. ஆதலின், சாதி பற்றியும் அது போன்ற பிறவற்றாலும் சிறப்பான உரிமைகளை நாட இடமில்லாது போகிறது. ஆனால், ஆளும் மக்களின் சமூகம் தனது வாக்கால் அரசனை எங்கே கட்டுப்படுத்துமோ, வெல்லப்பட்ட சமூகத்தார் எங்கே குடியரசு ஆட்சிக்கு உட்படுகின்றனரோ, அங்கே ஆளுவார்க்கும் ஆளப்படுவார்க்கும் இடையே நெருங்கிய உறவின்றி ஒருவர்க்கொருவர் நெடுந்தொலை விலகி வாழ்கின்றனர் ; அங்கே ஆட்சி புரிவோர் தம் சத்தியிற் பெரும்பகுதியை ஆளப்படுவாரது நன்மைக்கென்றே முழுதும் செலுத்துவராயின், சிறிது காலத்தில் அவர்க்குப் பெருநன்மை புரியலாகும்; எனினும், அச்சத்தியை அவர் அடிமைப்பட்ட மக்களை முற்றும் அடக்கி வைப்பதற்குரிய முயற்சிகளிலும் முறைகளிலும் வீணாக்குகின்றனர். இக்காரணத்தினால் அன்னியரான குடிகள் உரோமக் குடியரசு ஆட்சியின்கீழ்ப் பெற்றதைவிட மிகுதியான இன்ப வாழ்வை உரோமப் பேரரசரது ஆட்சியின்கீழ்ப் பெறலானார். இதே காரணத்தினால், கிறித்தவ மத போதகரான **பால்** என்னும் ஞானியார், வெல்லப்பட்ட யூத சமூகத்திற்பிறந்தவராயினும், தம்மீது சாட்டப்பட்ட குற்றங்களைப் பற்றித் தீர்ப்புப் பெறுவதற்காக உரோமப் பேரரசர் சீசரது மேல் விசாரணைக்கு மனுக்கொடுக்கும் அனுமதியைப் பெற்றனர். ஆங்கிலேயர் சிலர் தனிப்பட்ட முறையில் நம்மைச் 'சுதேசிகள்' என்றும், 'கறுப்பு மனிதர்' என்றும் வழங்குவதனாலும், அநாகரிகமான காட்டு மனிதரென நம்மை வெறுப்பதனாலும், நமக்கு வரும் இலாபமோ நஷ்டமோ இல்லை. வருண வேறுபாடுகள் காரணமாக நமக்குள்ளேயே ஒருவர்க்கொருவர் காட்டும் பகைமையுணர்ச்சியும் இழிவுணர்ச்சியும் ஆங்கிலேயரது உணர்ச்சிகளினும் மிகமிகத் தீவிரமாகின்றன; பிராம்மணர் தமக்கு ஆதரவாக அறிவொளியற்ற மூட க்ஷத்திரிய அரசனொருவனைப் பெறுவராயின், மறுபடியும் "சூத்திரர் நாக்கைத் துண்டிக்கவும், அங்கங்களை வெட்டவும்" கருணையோடு முயலமாட்டார் என யார் கூற முடியும் ? ஆரியாவர்த்தத்

தின் கிழக்குப்பகுதியிலே அண்மைக் காலத்திற் பற்பல வருணத்தாரும் தமது இக்காலச் சமூக நிலையினைச் சீராக்கும் நோக்கத்தோடு தமக்குள் ஒற்றுமையையும் ஒத்த உணர்ச்சியுடையராம் தன்மையையும் வளர்த்து வருபவராகத் தோன்றுகின்றனர் என்பதும், மராட்டியதேசத்திலே பிராம்மணர் 'மராட்டிய' சமூகத்தைப் புகழ்ந்து கீதங்கள் பாடத் தொடங்கிவிட்டனர் என்பதும் உண்மைகளே ; ஆனால், இச்செயல்கள் தூய தன்னலமற்ற இயல்பால் எழுந்தவையெனக் கீழ் வருணத்தார் இப்போதும் நம்பக்கூடுமா ?

ஆனால், ஆங்கிலப் பொது மக்களின் மனங்களிலே மெள்ள மெள்ள ஓர் எண்ணம் உண்டாகிவருகிறது; அதாவது, இந்திய இராச்சியம் அவரது ஆட்சியை விட்டு விலகுமாயின், அது அவர்க்குப் பேரின்னல் விரைவில் விளைத்து, அழிவுக்கும் காரணமாகும் என்பது. ஆதலின், எவ்வழியாலேனும் இங்கிலாந்தின் தலைமைப் பதவியை இந்தியாவில் போற்றி வரல் வேண்டும். அதைச் செய்யும் வழியாவது, இந்தியன் ஒவ்வொருவனுடைய நெஞ்சிலும் பிரிட்டிஷ் மக்கட்சமூகத்தாரது பெருமதிப்பையும் புகழையும் பற்றிய நினைவுகள் ஓங்கி நிற்க ஏற்பாடு செய்தலே என்று அவர் நினைக்கின்றனர். இம்மாதிரியான இழிவான இரங்கத்தகும் உணர்ச்சி ஆங்கிலேயர்க்குள்ளே வலுத்து வரும் வகையையும், அதைச் செயலாக மாற்றும்பொருட்டு அவர் தமது செயல்முறையை ஒழுங்காக விரிவாக்கி வரும் வகையையும் உற்று நோக்கும் போது, சிரிப்பு ஒரு பக்கமும் கண்ணீர் ஒரு பக்கமும் தோன்றுகின்றன. இந்தியாவில் வாழும் ஆங்கிலேயர் பின்வரும் உண்மையை மறந்து வருவது போலத் தோன்றுகிறது. ஆங்கிலேயர் இந்த இந்திய இராச்சியத்தைச் சம்பாதித்தது, தம் தீரத்தாலும் விடாமுயற்சியாலும் சமூகத்திற்குரிய தீவிரமான கருத்தொருமைப்பாட்டாலுமேயாகும்; எல்லாச் செல்வங்கட்கும் தாயகமாய் விளங்கிய இந்தியாவையும் இங்கிலாந்தின் முக்கியமான சந்தைக்குட்புகும்படிசெய்தது, விஞ்ஞான நூலைத் துணைக்கொண்ட அவரது எப்பொழுதும் விழிப்புற்ற வியாபாரப் பேரறிவே; இவ்விரு வகைச் சிறப்பியல்புகளும் அவர்தம் சமூக வாழ்க்கையினின்றும் பெயர்ந்து செல்லாதிருக்கும் வரை இந்தியாவில் அவருடைய செங்கோல் அசைக்கவொண்ணாததாகும். பிரிட்டிஷாரது ஒழுக்கத்திலே இக்குணங்கள் அமைத்திருக்கும் வரை, இந்திய இராச்சியங்களை அவர் ஆயிரக்கணக்காக இழக்க நேரினும், மறுபடியும் ஆயிரக்கணக்கானவற்றை அவர்

பெற்றுவிடுவர். ஆனால் அக்குணங்களென்னும் ஓடையின் பெருக்குக் குறைந்து வருமாயின், பிரிட்டிஷாரது மதிப்பையும் புகழையும் எங்கும் பொறித்து வைப்பதனால் மட்டும் ஓர் இராச்சியத்தை அரசாளக்கூடுமா? ஆகையால், அத்தகைய மேன்மை வாய்ந்த நற்குணங்கள் இன்றும் சமூக வாழ்க்கையில் ஆங்கிலேயரிடத்துத் தலையெடுத்து நிற்கும்போது, பொருளற்ற 'மதிப்பை'க் காப்பாற்றுதற்காக மட்டும் அவ்வளவு திறனையும் சத்தியையும் செலவிடுவது முற்றிலும் பயனற்றதாம். ஆளப்படும் மக்களின் நன்மையின்பொருட்டு அச்சத்தி பயன்படுத்தப்படின், ஆளும் இனத்தார் ஆளப்படும் இனத்தார் ஆகிய இரு திறத்தார்க்கும் அது பெருத்த இலாபமாகும் என்பது திண்ணம்.

வெளி நாட்டாரோடு உரசுதலினால் இந்தியா மெதுவாகக் கண் விழித்து வருகிறது என்பது முன்னரே கூறப்பட்டுள்ளது; இச்சிறு விழிப்பின் பயனாக ஓரளவு இக்கால இந்தியாவில் சுதந்திரம் விடுதலை என்ற கருத்துக்கள் உதித்துள்ளன. ஒரு பக்கத்தே, கோடி ஞாயிற்றின் ஒளியால் கண்களைப் பறிக்கும் இக்கால மேற்றிசை விஞ்ஞானம், நேர்முகமாக வேலை செய்யும் கண் கண்ட கூரிய சத்திகளை உபயோகிப்பதால் திரட்டப்படும் கடுமையான உண்மை நிகழ்ச்சிகளாலாய தேரின்மீதேறி ஓட்டி வருகின்றது; மற்றொரு பக்கத்தே, இந்தியாவின் புகழ் உச்ச நிலையிலிருந்த காலத்து அதன் பண்டைய முன்னோரால் வழங்கப்பட்டுள்ள நம்பிக்கையையும் வலிமையையும் ஊட்டும் ஞான சம்பிரதாயங்கள் நிற்கின்றன; அதன் சொந்த நாட்டிலும் வெளியிலும் வாழ்ந்த மாமுனிவரால் அதன் சரிதப் பகுதிகளினின்றும் திரட்டியளிக்கப்பட்டுள்ளவை இச்சம்பிரதாயங்கள்; இவை அனைத்துயிரின் மீதும் செல்லும் அன்பால் விளையும் பேருக்கமுற்ற சத்தியோடு அதன் இரத்தக்குழாய் ஒவ்வொன்றின் வழியாகவும் எண்ணிறந்த ஆண்டுகளாக—நூற்றாண்டுகளாக—ஓடி வருவனவாகும்! தேவரையும் பொறாமை கொள்ளச் செய்யும் குணங்களான மிஞ்சப்படாத வீரம், மனித எல்லை கடந்த பேரறிவு, மிகவுயர்ந்த ஞானம் என்பவற்றை வெளிக் காட்டுவன இவை;—இவையே வருங்காலத்து இந்தியாவிற்கு நம்பிக்கையை ஊட்டுகின்றன. ஒரு பக்கம், தழும்பேறிய உலோகாயத வாதமும், செல்வ நிறைவும், ஏராளமான சத்திக் குவியலும், தீவிரமான போக முயற்சிகளும் அயலாருடைய இலக்கிய நூல்கள் மூலமாக மிகப் பெரிய கிளர்ச்சியை உண்டு

பண்ணியுள்ளன; மற்ருெரு பக்கம் இசையினிமையற்ற இவ்வொலிகள் யாவும் கலந்த பேரோசைக் குழப்பத்தினூடே, மெல்லியதாயினும் பிழைபடக் கருத முடியாத குரலில் இந்தியா தன் பண்டைய தெய்வங்களின் நெஞ்சைப் பிளக்கும் அழுகையைக் கேட்டுப் பெரிதும் மனம் புண்ணுகின்றது. அந்நாட்டின் முன் மேற்றிசை நாடுகளிலிருந்து புகுத்தப்பட்ட பல வகையான புதிய போகப் பொருள்கள் உள்ளன; அவையாவன, தேவலோகப் பானங்கள், சுவையாகச் சமைக்கப்பட்ட விலையுயர்ந்த உண்டி, நேர்த்தியான ஆடை, மேன்மை வாய்ந்த அரண்மனைகள், புதிய வாகனங்கள் என்பவை. இன்னும், புதிய நாகரிக உடைகளை அணிந்துகொண்டு நாணமற்ற சுதந்தரத்தோடு திரியும் நன்கு கல்வி கற்ற சிறுமியிடம் இவை யாவும் இதற்கு முன்பு உணர்ந்திராத ஆசைகளைக் கிளப்பிக்கொண்டிருக்கின்றன; மறுபடியும் காட்சி மாறுகிறது. அதே இடத்தில் கடுகடுத்த தோற்றமளிக்கும் புதுக்காட்சி விரிகின்றது. சீதை, சாவித்திரி, கடுமையான ஞான சம்பந்தமான விரதங்கள், பட்டினிகள், வனத்துள்ள தனியிடம், பாதி நிர்வாணியான துறவியின் சடை முடியும் காவியாடையும், சமாதியும் பிரம்மத்தைத் தேடும் முயற்சியும், ஆகிய இக்காட்சிகளே தோன்றுகின்றன. ஒரு பக்கம், தன்னயத்தை அடிப்படையாகக் கொண்ட மேலை நாட்டுச் சமூகங்களின் சுதந்தரம்; மற்ருெரு பக்கம், ஆரிய மக்கட்சமூகத்தினது தன்னல மறுப்பின் எல்லை. இவ்வாருன மும்முரமான போராட்டத்தில் இந்திய மக்கட் சமுதாயம் மேலும் கீழும் தூக்கியெறியப்படுவதில் புதுமை யாது உள்ளது ? மேலை நாட்டின் இலட்சியம், தனிமனிதன் சுதந்தரம்; அதன் மொழி, பணந்திரட்டும் கல்வி; அதற்கு நெறி, அரசியல். இந்தியாவின் இலட்சியம் முத்தி; அதன் மொழி, வேதம், அதன் நெறி, துறவு. ஒரு சிறிது நேரம் இக்கால இந்தியா, "இனி வரப்போகும் நிச்சயமற்ற ஞான நலத்தின் கவர்ச்சிக்கு யான் உள்ளாகி, அதனை வீணுக எதிர் பார்த்து இந்த எனது உலக வாழ்க்கையைப் பாழாக்கிக்கொண்டு வருகிறேன்," என்று நினைப்பது போன்று உள்ளது; ஆனல், என்ன ஆச்சரியம் ! மறுபடியும் அது, "மரணமும் மாறுபாடும் நிறைந்த பிறவியாகிய இதிலே, மனிதனே, உனக்கு மகிழ்ச்சி எவ்வாறு உண்டாகும்?" என்ற வாக்கியத்தைக் கேட்டு, மந்திரத்தாற் கட்டுண்டவரைப் போன்று அதைக் கூர்ந்து கவனிக்கின்றது.

புது இந்தியா ஒரு பக்கம், "கணவனையும் மனைவியையும் தேர்வதில் எமக்கு முழுச் சுதந்தரம் இருத்தல் வேண்டும் ; ஏனெனில், எமது வருங்கால வாழ்க்கையில் நேரும் இன்ப துன்பங்களைத் தன்னகத்தே அடக்கிக்கொண்டிருக்கும் மணவினையை எமதுசுயேச்சையின்படியே தீர்மானித்துக்கொள்ளும் உரிமை எமக்குக் கட்டாயம் வேண்டும் !" என்று கூறிக்கொண்டிருக்கிறது. மறு பக்கம் பழமை இந்தியாவோ, "மணம் புரிந்துகொள்ளுதல் போக நுகர்ச்சிக்கன்று; குலவழி மறையாது என்றும் நிலைக்கச் செய்தற்கே. மணம் புரிதலைப் பற்றி இந்தியா கொண்ட கருத்து இதுவே. மக்களைப் பெறுவதனால் நீர் சமூகத்தின் வருங்கால நன்மைக்கோ தீமைக்கோ உதவியவராவீர் ; அதற்குப் பொறுப்புடையவருமாவீர். ஆதலின், 'நீர் இன்னாரை மணந்துகொள்ளல் வேண்டும், இன்னாரை மணத்தல் தகாது,' என்று உமக்குக் கட்டளையிடும் உரிமை சமூகத்திற்கு உள்ளது. சமூகத்தாரது நன்மைக்கு மிகவும் ஆதரவான மணமுறையே சமூகத்தில் வழங்குகின்றது. பலரது நன்மையைக் கருதி உமது தனி இன்பத்திலுள்ள இச்சையைக் கைவிடுவீராக," என்று கட்டளையிடுகிறது.

புது இந்தியா ஒரு பக்கம், மேலை நாட்டினரின் கருத்துகளையும், மொழியையும், உணவையும், உடையையும், நடையையும் நாம் கைப்பற்றினால்தான், மேலை நாட்டாரைப் போன்று ஆற்றலும் சத்தியும் உடையவராவோம்," என்று கூறிக்கொண்டிருக்கிறது. பழைய இந்தியாவோ, மறுபக்கத்தில், "பேதையீர், நடிப்பினால் பிறருடைய கருத்துகள் ஒருவனுக்கு ஒரு நாளும் தனது சொந்த கருத்துகள் ஆவதில்லை—உழைத்துப் பெறுவதனாலன்றி எதுவும் ஒருவனது உரிமையாகாது. சிங்கத்தின் தோலைப் போர்த்த கழுதை சிங்கமாவதுண்டோ ?" என்று மறுத்துரைக்கின்றது.

புது இந்தியா ஒரு பக்கம், "மேலை நாட்டினர் செய்வது நன்மையாவது திண்ணம் ; அன்றேல், அவர் அவ்வளவு பெருமையை எவ்வாறு அடைந்தனர்?" என்று கேட்க, பழைய இந்தியா மறுபக்கம், "மின்னலின் ஒளி மிக மிகச் சுடர் விடுகின்றது. ஆனால், அது ஒரு கணத்திற்கே; சிறுவர்களே, பாருங்கள் : அது உங்கள் கண்ணைப் பறிக்கின்றது. விழிப்பாயிருங்கள் !" என்று எச்சரிக்கின்றது.

அவ்வாறாயின், மேற்றிசையாரிடமிருந்து கற்றுக்கொள்ளத் தக்கது நமக்கு யாதொன்றும் இல்லையா ? பெற்றுள்ளவைகளினும்

மேலானவற்றை அடைய நாம் முயல்வதும் உழைப்பதும் தேவை யல்லவா? நாம் பூரணத்தை அடைந்துவிட்டோமா? நமது சமூகம் யாதொரு குற்றமுமின்றி முற்றிலும் மாசற்றதாய் ஒளிர்கின்றதா? இல்லை, இல்லை. நாம் கற்றுக்கொள்ள வேண்டுபவை பல உள்ளன. நாம் சாகுமளவும் புதிய (முன்னைக்காட்டிலும்) மிக உயர்ந்த பொருள்களைப் பெறக் கட்டாயம் பாடு படல் வேண்டும். மனித வாழ்க்கையின் பயனுவது பாடு படுதலே. "வாழுமளவும் நான் கற்கிறேன்," என்று சொல்வர் ஸ்ரீராமகிருஷ்ணர். கற்றற்கு ஒன்று மற்ற மனிதனே, சமூகமோ, மரணத்தின் வாய்க்குள் முன்னரே புகுந்துவிட்டதாக அறிக. ஆம், மேலை நாட்டாரிடமிருந்து நாம் கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டுபவை பல உள்ளன; ஆனால், அஞ்சவேண்டுவனவும் உள்ளன.

அற்ப அறிவுள்ள ஒரு சிறுவன் ஸ்ரீ ராமகிருஷ்ணரது முன் னிலையில் இந்து சாத்திரங்களை எப்போதும் குறை கூறுவது வழக் கம். அன்னான் ஒரு நாள் பகவற்கீதையைப் புகழலானான். அதைக் கேட்ட ஸ்ரீ ராமகிருஷ்ணர், "யாரோ ஓர் ஐரோப்பியப் பண்டிதர் கீதையைப் புகழ்ந்துள்ளனர் போலும்! அதனால் இவனும் அவ்வண் ணம் செய்யலானான்," என்றனர்.

ஓ இந்தியாவே, உன்னை அச்சுறுத்தும் இன்னல் இதுவே. மேலை நாட்டாரைப் பின்பற்றி நடிக்கும் மயக்கத்திற்குள் நீ மூழ்கி யிருத்தலின், இனி நன்றோ தீதோ அறிவாலும் ஆராய்ச்சியின் முடி வாலும் சாத்திரங்களை எடுத்துக்காட்டியும் உன்னால் தீர்மானிக்கப் படுவதில்லை. வெள்ளையர் புகழ்வனவோ, எக்கருத்துகளாயினும், எவ்வித நடைகளாயினும், அவை நல்லனவாகின்றன; அவர் வெறுப்பனவோ, இகழ்வனவோ, எவையாயினும், அவை தீயனவா கின்றன! அந்தோ! இதைக்காட்டிலும் மிகத் தெளிவான சான்று வேறெது அறிவீனத்தை நிலை நாட்டக் கூடியது?

மேலை நாட்டு மங்கையர் இச்சைப்படி எங்கும் திரிகின்றனர்; ஆகையால், அது நன்று; அவர் தாமே தம் கணவரைத் தெரிந் தெடுக்கின்றனர், ஆகையால், அதுவே முன்னேற்றத்தின் மிக உயர்ந்த படி. மேலை நாட்டினர் நமது உடை, அணிகள், உணவு, வாழும் முறைகள் இவற்றை ஒப்புக்கொள்வதில்லை; ஆகையால், அவை மிகக் கெட்டவையாதல் வேண்டும். மேலை நாட்டார் உருவ வழிபாட்டைப் பாவமானதெனக் கண்டிக்கின்றனர்; அக்காரணத் தால் உருவ வழிபாடு மிகப் பெரும்பாவம் என்பது உறுதி. அதைப்

பற்றி ஐயமே இல்லை!

ஒரே தெய்வ வழிபாடு மிகவுயர்ந்த நன்மையைத் தருமென மேலை நாட்டினர் கூறுகின்றனர்; ஆதலின், நம் தேவரையும் தேவியையும் கங்கையில் எறிந்துவிடுவோமாக! வருண வேறுபாடுகளை வெறுக்கத் தக்கனவாக மேலை நாட்டார் கருதுகின்றனர்; ஆதலின், வெவ்வேறான சாதிகளையெல்லாம் ஒன்றாகக் கலந்துவிடல் வேண்டும்; எல்லாக் கேடுகட்கும் வேராயிருப்பது குழந்தைப் பருவத்து மணம் புரிதலே என்கின்றனர் மேலை நாட்டார். ஆதலின், அதுவும் மிகக் கெட்டதே; உறுதியே அது!

இவ்வழக்கங்கள் கொள்ளத் தக்கவையா தள்ளத் தக்கவையா என்பதைப்பற்றி இங்கே யான் வழக்காடவில்லை; ஆனால், மேலை நாட்டாரால் ஒப்புக்கொள்ளப்படாமையே நம் ஒழுக்க வழக்கங்களின் வெறுக்கத் தகும் இயல்பிற்கு அளவுகோல் ஆமாயின், அதை எதிர்த்து அழுத்தமாகக் கண்டிப்பது நமது கடமையாகின்றது.

இதை எழுதுமெனக்கு ஓரளவு மேலை நாட்டுச் சமூகத்தாரைப் பற்றிய நேரான அனுபவம் உண்டு. அந்த அனுபவத்தின் பயனாக எனக்கு ஏற்பட்ட நிலையான முடிபாவது, மேலை நாட்டுச் சமூகத்திற்கும் இந்திய சமூகத்திற்கும் சமூகத்தின் ஆதிப் போக்கைப் பற்றியும் குறிப்பைப் பற்றியும் உள்ள வேறுபாடு மிகப் பெரிது என்பதே; ஆதலின், மேலை நாட்டு மாதிரியைக்கொண்டு இந்தியாவில் அமைக்கப்படும் எந்த (சமூக) உட்பிரிவும் தனது குறிப்பினின்றும் விலகிவிடும். மேலை நாட்டுச் சமூகத்தின் நடுவே வாழ்ந்திராதார், அக்காரணத்தால் ஆங்கே ஆண்களும் பெண்களும் நெருங்கிப் பழகும்போது பின்பற்றும் விதி விலக்குகள் இன்னின்னவை என்பதையும், அவை மேலை நாட்டுப் பெண்களின் தூய்மையைப் போற்றி வரும் காப்புகளாவதையும் சற்றும் அறியாதாராகின்றனர்; அன்னார் நமது சமூகத்திலும் ஆண்களும் பெண்களும் யாதொரு கட்டுப்பாடுமின்றிக் கலந்து உறவாடும்படி தாராளமாக இடங்கொடுப்பதை யான் சிறிதும் ஒப்புக்கொள்ளேன்.

மேலை நாட்டிலும் யான் ஓர் உண்மையைக் கவனித்தேன்: அங்கே வலிமையற்ற சமூகத்தாரின் குழந்தைகள், இங்கிலாந்திலே பிறந்தவராயின், தம்மை முறைப்படி கிரேக்கரென்றோ போர்த்துகீசியரென்றோ, ஸ்பானியரென்றோ, வேறொரு சமூகத்தினரென்றோ வழங்குவதற்குப் பதிலாக ஆங்கிலேயரென்றே தம்மைச் சொல்லிக்

கொள்கின்றனர். எல்லோரும் வலியாரை நோக்கியே இழுத்துச் செல்லப்படுகின்றனர்; காரணம், மேன்மையுற்றுரிடத்துத் திகழும் மேன்மையொளி தமது சொந்த உடலிலும் எவ்வாறேனும் பட்டு அதைத் திகழச் செய்யலாம் என்பதே; அதாவது, வலியாரது ஒளியைக் கடனுகப் பெற்றேனும் தாம் ஒளிர்தலே எளியாரது ஒரே ஆசையாகின்றது. இந்தியர் ஐரோப்பியரின் அலங்காரமான ஆடைகளை நாகரிக முறைப்படி அணிந்து வருதலை யான் காணும் போது, அவர் தாம் இன்ன சமூகத்தைச் சார்ந்தவர் என்பதையும், அறிவற்ற ஏழைமையான கல்வியற்ற நசுக்குண்ட இந்தியமக்களின் உறவினர் என்பதையும் ஒப்புக்கொள்ள ஒரு வேளை வெட்கப்படுகின்றனரோ என்ற எண்ணம் என் உள்ளத்தே எழுகின்றது! சென்ற ஈரேழு நூற்றுண்டுகளாக இந்துவின் இரத்தத்தால் ஊட்டம் பெற்று வந்த பார்சி ‘சுதேசி’ அல்லவாம்! வருணமற்றவராயினும், தம்மைப் பிராம்மணராகப் பாவித்தும் தாம் பிராம்மணரா தலைப் புகழ்ந்தும் வருவாரது அகந்தையின் முன்பு, பண்டைய வீர உயர்குலப் பிராம்மணரது உண்மையான மேன்மை கரைந்து மறைந்துவிடுகின்றது. மேலும், இடுப்பில் மட்டும் துணி சுற்றியுள்ள அந்த அறிவற்ற கீழ்ச்சாதியைச் சேர்ந்த கோடிக்கணக்கான இந்திய மக்கள் ஆரியரல்லாதார் என மேலை நாட்டினர் நமக்கு இப்போது போதித்துள்ளனர்! ஆதலால், அவர் இனி நமது உறவினராகார்!

இந்தியாவே, பிறர் மொழிகளைக் கிளிப்பிள்ளைப்போல இவ்வாறு சொல்லுதலும், பிறரைப் போல நடிக்கும் இவ்விழிவான செயலும், பிறரைச் சார்ந்து வாழும் இவ்வாழ்க்கையும், இந்த அடிமைத்தனமான பலவீனமும், இந்த மிகக் கெட்ட வெறுக்கத்தக்க கொடுமையும்—இவைகளை மட்டும் கட்டுச்சோருகக் கொண்டு நீ நாகரிகம் பெருமை என்பவற்றின் உயர்ந்த சிகரத்திற்கு ஏற விரும்புகின்றனையோ? பழிக்கத் தக்க உன் கோழைத்தனத்தைத் துணைக்கொண்டு, துணிவுடையோராலும் வீரராலும் மட்டும் அடையத் தகுந்த சுதந்தரத்தை அடைய நீ விரும்புகின்றனையோ? இந்தியாவே, உனது பெண் தன்மையின் இலட்சியம், சீதை சாவித்திரி தமயந்தி என்பதை மறவாதே; நீ வழிபடும் கடவுள், முனிவர்க்குள் தலைவரான மாமுனிவரும் அனைத்தையும் துறக்கும் சங்கரரும் ஆகிய உமாபதியே என்பதை மறவாதே; உன் மனமும், உன் செல்வமும், உன் வாழ்க்கையும் ஐம்புல இன்பத்திற்காக

அல்ல; உன் தனிப்பட்ட சுய ஆனந்தத்திற்காக அல்ல என்பதை மறவாதே; உனது பிறப்பு, தேவியின் பீடத்தே நீ பலியாதற்கே என்பதை மறவாதே; உன் சமூக அமைப்பு முறை அகண்ட அகிலாண்ட அன்னை இயல்பின் பிம்பமே என்பதை மறந்து விடாதே; தாழ்ந்த வகுப்பினரும், அறிவிலாதாரும், கல்லாதாரும், செருப்புத் தைப்போரும், வீதியைச் சுத்தம் செய்வோரும், உன் நெருங்கிய உறவினரே; உன் உடன் பிறந்தோரே என்பதை மறவாதே. வீரனே, நீ துணிவு கொள்க! தீரனுகுக! நீ ஓர் இந்தியனுவது பற்றிப் பெருமையடைக! "யான் ஓர் இந்தியன்; ஒவ்வோர் இந்தியனும் என் சகோதரன்," என்று பெருமையோடு பறையறைக! "அறிவிலா இந்தியனும், ஏழையும் அனுதையுமான இந்தியனும், பிராம்மண இந்தியனும், பறையனுன இந்தியனும்— எந்த இந்தியனும் என் சகோதரனே," என்று கூறுக! அரையிற் கந்தையை மட்டும் சுற்றியுள்ள நீயும் உனக்கு இயன்ற உரத்த குரலில், "இந்தியன் என் சகோதரனே; இந்தியன் என் உயிரே; இந்தியாவின் தேவரும் தேவியரும் என் கடவுளரே; இந்திய மக்கட் சமூகமே எனது குழந்தைப் பருவத் தொட்டிலாவது; என் காளைப் பருவத்தில் இன்பம் தரும் மலர் வனமாவது; என் முதுமைப் பருவத்துப் புண்ணியம் மிக்க பரலோகமும் வாரணுசியுமாவது," என்று கூறுக!" சோதர, "இந்தியாவின் மண்ணே எனது மிகவுயர்ந்த விண்ணுலகம்; இந்தியாவின் நன்மையே எனது நன்மை," என்று கூறி, "கௌரீச, ஜகதாம்பிகே, எனக்கு ஆண்மையை அளித்தருளுக! சத்தி தேவி, என் பலவீனத்தை ஒழித்தருள்க! என் ஆண்மையின்மையைப் போக்கியருள்க! என்னை ஆண்மையுடையோனுக்குக!" என்று அல்லும் பகலும் அவர் திரு நாமம் ஓதி இறைஞ்சுவாயாக!

இந்தியப் பணிக்கு ஒரு திட்டம்

[இது 1895-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், மூன்றாம் நாள், சிக்காகோவிலிருந்து நீதிமன்றத் தலைவர் ஸர். சுப்பிரமணிய ஐயரவர்கட்கு எழுதப்பட்டது]

அன்பு, நன்றியுணர்வு, நன்னம்பிக்கை—இவற்றால் நிறைவு பெற்றுள்ள இதயத்துடனே உங்கட்கு எழுதுமாறு பேனாவைக் கையில் எடுத்திருக்கிறேன். முதலில் நான் உங்கட்கு மொழியவேண்டுவது கருத்தொற்றுமையுடைய மன உறுதி வாய்ந்த ஒரு சிலருள் நீங்களும் ஒருவர் என்பதே. உணர்ச்சி வேகமும் ஞானத்தின் உயர்வும் பெரிதும் பெற்ற நீங்கள் மேன்மையான கருத்துகளைச் செயல்முறைக்குக் கொணர்ந்து முடித்துக் காட்டும் ஆற்றல் பெற்று உருவாகி மலர்ந்து காட்சி அளிக்கும் பெற்றியை வியப்புக்குரிய வகையில் ஒருசேரப் பெற்றுள்ளீர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நீங்கள் உண்மையுள்ளத்துடன் திகழ்கின்றீர்கள். அக்காரணம் பற்றியே நான் உங்களிடம் என் கருத்துகளை ஒப்படைக்கப் பெரிதும் விழைகின்றேன்.

தொண்டானது இந்தியாவில் நல்லதொரு முறையில் தொடங்கியுள்ளது. அந்த நிலைமையில் சீராக அதை வைத்திருப்பதோடு நில்லாது, மிக்க வலிவுடன் அதனை முன்னேறச் செய்யவும் வேண்டும். இப்போதே அதனை ஆற்றவும் வேண்டும். அன்றேல், வேறொரு சமயம் வாய்க்கப்பெறாது போய்விடலாம். நான் மிகுந்த தூரதிருஷ்டியோடு பொருள்களை விரிவாகத் துருவி ஆய்ந்தே உரைக்கின்றேன். பின் கூறப்படும் திட்டத்தின் மீதுதான் என் கவனம் முழுதும் பதிந்திருக்கின்றது. முதன்முதலாக இளைஞர்களுக்கு ஆன்மிக ஆராய்ச்சி செய்வதற்குரிய ஒரு கல்லூரியைச் சென்னையில் நிறுவுவது சாலச் சிறந்ததாகும். அதனைப் படிப்படியாக விரியச் செய்யவேண்டும். வேதங்களிலும், பற்பல பாஷியங்களிலும் (விரிவுரைகளிலும்), உலகத்திலுள்ள சமயங்களைப் பற்றிய தத்துவங்களிலும், அறிவிலும் அவர்கட்கு ஆழ்ந்த பயிற்சி அளிக்க வேண்டும். அதே சமயத்தில் ஆங்கிலத்திலும், தாய்மொழியிலும் இரு செய்தித்தாள்கள் கல்லூரியின் ஆதரவில் வெளியிடப்பட வேண்டும்.

இதுதான் நாம் முதன்முதலில் செய்யவேண்டிய பணி. இதன் பின்னர்ச் சிறிய தொடக்கங்களிலிருந்து பெரிய பயன்களை

விளைக்கும் அருஞ்செயல்களெல்லாம் பிறக்கலாம். சென்னையில் இப்பொழுது பழமையையும் இக்கால வாழ்க்கை நலனையும் ஒருங்கே அறிந்து பாராட்டி நடுவு நிலையில் நிற்கும் பெற்றி பூரணமாய் அமைந்துள்ளது! நடுவுநிலை வகிப்பதில் அவர்கள் வல்லவர்கள்.

இந்தியாவிலுள்ள கற்றறிந்த அறிஞர் கூறுவது போன்று சமூகத்தைப் புரட்டிப்புரட்டி அலசிப் பார்த்து மாற்றி அமைத்தல் வேண்டும். அதனை எவ்வாறு புரிவது? சீர்திருத்தவாதிகளின் அழிவை விளைக்கும் திட்டங்களனைத்தும் உருக்கொள்ளாது போயின. என் திட்டம் இதுவேயாகும்: சென்ற காலத்தில் நாம் நன்றாகவே வினையாற்றியுள்ளோம். நம் சமூகம் கெட்டதன்று; அது நல்லதே. ஆனால், நாம் விரும்புவது, அது இன்னும் நன்றாக விளங்கவேண்டுமென்பதே. பிழையிலிருந்து உண்மைக்கன்று; தீமையிலிருந்து நன்மைக்கன்று; ஆனால், உண்மையினின்றும் மேலானதோர் உண்மைக்கு; நன்மையினின்றும் மேலான நன்மைக்கு; அதினின்றும் எல்லாவற்றிற்கும் மேலான நன்மைக்கு—நல்ல நிலைக்கு—நாம் விரைந்து செல்லவேண்டும். அவர்கள் ஆற்றி வந்தவை யாவும் நன்மையானவைகளே. இப்பொழுது இன்னும் நன்றாகச் செய்யவேண்டிய அமயம் வந்துவிட்டதென்று என்னுடன் வாழும் நாட்டு மக்களுக்கு நான் அறிவுறுத்துகிறேன்.

இப்பொழுது குல தருமத்தை எடுத்துக்கொள்ளுவோம்: வட மொழியில் சாதி அதாவது வருக்கம் என்பது இனம் என்னும் பொருளை அளிக்கும். இதுவே படைப்பின் முதல் கருத்து. வேறுபாடு (விசித்திரதா) என்றால் சாதியைத்தான் சுட்டும். சாதி என்னும் சொல்லிற்கும் படைத்தல் என்பதுதான் பொருளாகும். 'நான் ஒருவனே; பலர் ஆகிவிடுகிறேன்.' (வேதங்களில் பல இடங்களில் இக்கருத்து மிளிர்கின்றது.) படைப்புக்கு முன் இருந்தது ஒன்றே; அது பலவானதே படைப்பாம். பலவாதலின் நிற்றலும், படைப்பும் அழிவுறும். எந்த இனம் வன்மையுடனும், ஆற்றலுடனும் ஆணை புரிகின்றதோ, அந்த இனந்தான் பலவற்றைப் படைத்துத் தீரவேண்டும். அவ்வாறு செய்யாது நின்றுவிடும்போதும் அல்லது அவ்வாறு இயற்றுவதினின்றும் தடை செய்யப்படும் போதும் அது மாய்ந்தே போய்விடுகின்றது. சாதியின் ஆதிக் கருத்து, தனி மனிதனின் சுதந்தரத்தை வெளிப்படுத்துவதே. தன் இயல்பை, தன் பிரகிருதி, தன்னுடைய சாதி இவற்றை—இவன்

புலப்படுத்துகின்றான். இந்நிலை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் அப்படியேதான் இருந்து வந்தது. மிகவும் பிற்காலத்து வந்த நூல்களிலும் ஒன்றாய்க் கூடி இருந்து ஒன்றாய் உண்பது தடுக்கப்படவில்லை. சாதிக் கலப்பு மணங்களும் பண்டைய நூல்களில் தவிர்க்கப்படவில்லை. பிறகு இந்தியாவின் வீழ்ச்சிக்குக் காரணந்தான் யாது? இந்தச் சாதிக்கட்டுப்பாட்டை விட்டதே. கீதை கூறுவது போல, குலம் நசிக்குமாயின், உலகம் அழிந்துவிடும். இப்போதுள்ள மாறுபாடுகளெல்லாம் நின்றவுடன் உலகமே மாய்ந்துவிடும் போல இருக்கின்றதன்றோ? இப்போதுள்ள சாதி உண்மையான சாதியன்று; அந்த உண்மைச் சாதிக்கு ஒரு பெருந்தடையாயிருக்கிறது. சாதியின் சுதந்தரமாயுள்ள அருஞ் செயலை இது தடுத்துவிட்டது. உண்மையில் குலத்தின் இனப்பெருக்கத்தை—வேற்றுமைகளை—தடுத்துவிட்டது. படிகம் போன்று கெட்டியாய் உறைந்து போன வழக்கமோ, உரிமையோ, அல்லது பரம்பரையோ எழுமாயின், எத்தகைய வடிவத்திலிருந்தாலும் அது சாதியின் முழு அதிகாரத்தைச் செலுத்துவதிலிருந்து தடுத்துவிடுகின்றது. எப்பொழுதெல்லாம் ஒரு நாடு இந்தப் பல திறப்பட்ட நிலைமையை உண்டு பண்ணுவதிலிருந்து மீண்டுவிடுகின்றதோ, அப்பொழுதெல்லாம் அது மரித்துவிடுகின்றது. ஆகவே, என் தாய் நாட்டினரே, நான் உங்களுக்கு உரைக்கவேண்டுவது ஈதே. இந்தியா வீழ்ச்சியுற்றது ஏனெனில், நீங்கள் சாதியைத் தடைசெய்தீர்கள்; சாதியைத் தொலைத்தீர்கள்; உறைந்து போன குல மக்களின் தொகுதிகளும் உரிமை பெற்ற பிரிவினரின் கூட்டமும் சாதியைத் தாக்கும் ஒரு பெரும்பகையே தவிரப் பிறிதன்று; அது சாதியாகமாட்டாது. சாதிக்குத் தன் ஆட்சி நிலையை அளியுங்கள். அதற்குக் குறுக்கே நிற்கும் ஒவ்வொரு தடையையும் உடைத்தெறியுங்கள். அப்பொழுதுதான் நாம் எழுச்சி பெறுவோம். இப்பொழுது ஐரோப்பாக் கண்டத்தைப் பாருங்கள். அது சாதிக்குப் பெரிதும் இடம் கொடுத்துச் சாதியை வளர்ப்பவர்களுக்குக் குறுக்கேயுள்ள தடைகளையெல்லாம் அறுத்தெறிந்த உடனே, எழுச்சியுற்றது. அமெரிக்காவில் உண்மையான சாதி வளர்ச்சி பெறப் பெரியதோரளவில் வழி இருக்கிறது. அதனாலேதான் அங்குள்ள மக்கள் சிறப்புடன் திகழ்ந்திருக்கிறார்கள். ஓர் ஆண் குழந்தையோ, ஒரு பெண் குழந்தையோ பிறந்த உடன் சோதிடர்கள் அதன் சாதியைக் கண்டறிந்து முடிபு கூற முன்

வருகின்றூர்கள் என்னும் செய்தி இந்துக்கள் நன்கறிந்ததே. அதுவே உண்மையான 'சாதி.' ஒவ்வொரு மனிதனது தனி இயல்பையும் சோதிடம் வகுக்கின்றது. அந்தத் தனி இயல்பு ஆட்சி புரிவதற்குரிய வாய்ப்பை அளித்தல் வேண்டும். இத்தகைய பல விதமான இயல்புகள் சமத்துவம் இன்மையைக் காட்டமாட்டா; ஒரு தனிப்பட்ட சிறப்புரிமையைச் சுட்டமாட்டா.

இதுவே என் செயலாற்று முறை. அவர்கள் ஒன்றையும் துறக்கவேண்டா. முன்னேர்களாகிய முனிவர்கள் வகுத்த பாதையில் நடக்கவேண்டுமென்பதே என் திட்டமாகும். அதுமட்டுமன்று; புன்மை அடிமைத் தொழிலைப் பல நூற்றுண்டுகளாகப் புரிந்த காரணத்தால் பிறந்த மடியை—சோம்பலை—உதறித்தள்ள வேண்டும். முசல்மான் மன்னரின் கொடுங்கோன்மையின் கீழ் நாம் முன்னேறிச் செல்லுவதில் தடைப்பட்டுள்ளோம். ஆனுல், அப்பொழுது முன்னேற்றமென்பது பிரச்சினை அன்று. உயிர் வாழ்வதா, அல்லது மடிவதா என்ற பிரச்சினைதான் இந்து மக்கள் கண்முன் விரிந்தது. இப்பொழுது அந்த நெருக்கடி கடந்துவிட்டது. நாம் எல்லோரும் நாம் வகுத்த திட்டப்படி நமக்கெனத் தேடிக்கொண்ட நெறியிலேதான் முன்னேற வேண்டும். பாதிரிமார்களும் மத மாற்றம் செய்துவரும் மதிகெட்டவர்களும் நிறுவின அழிவுப் பாதைகளில் நாம் செல்லாமலிருப்பதே நலமாம். கட்டடம் முடிந்தபாடில்லை. பார்ப்பதற்கு எல்லாம் கவினற்றன போலக் காட்சி அளிக்கின்றன. கொடுங்கோன்மை தலை விரித்தாடிய காலத்தில் நாம் நம் பணியை நிறுத்த வேண்டியதாயிற்று என்பது உண்மையே. கட்டட வேலையை முடித்துப் பாருங்கள். அது எழில் போர்த்து மூரிநிமிர்ந்து அந்தந்த இடத்தில் நின்று அழகு சொரியும் நிலையைக் கண்களால் பருகுவீர்கள். இவை யாவுமே என் திட்டங்களாகும். நன்னம்பிக்கையின்பேரில் இவற்றைப்பற்றி நான் உறுதி பூண்டிருக்கிறேன். ஒவ்வொரு நாட்டின் வாழ்விலும் ஓர் உயர் நீரோட்டத்தின் இன்னிசையைக் கேட்கின்றேம். இந்தியாவில் அது மதமாகும். அதை உறுதிப்படுத்துவீர்களாக. இருமருங்கிலுமுள்ள வெள்ளநீர் அவற்றில் அடங்கியேதான் சென்று தீரவேண்டும். இது என் சிந்தையின் ஒரு சாயலைக் காட்டும். சமயம் நேருங்கால் அவற்றையெல்லாம் புலப்படுத்தலாமென்ற நம்பிக்கையுடன் திகழ்கிறேன். ஆனுல், இப்போது எனக்காக இந்நாட்டில் ஒரு பணி காத்து நிற்கின்றது. மேலும், இங்கே நான் பொருளுத

வியை எதிர்நோக்குகின்றேன். ஆனால், இன்றுவரை கருத்துகளைப் பரப்பி வருதல் தவிர, நான் வேறொன்றும் செய்ய இயலவில்லை. இத் தகைய முயற்சி இந்தியாவிலும் ஆற்றப்பட வேண்டும் என்று விழைகின்றேன்.

நான் எப்போது இந்தியாவிற்குத் திரும்பிச்செல்லக் கூடு மென்பது எனக்கு விளங்கவில்லை. நான் என் நாதனின் ஆணை யைத் தலைமேல் தாங்கி நடக்க ஆயத்தமாயிருக்கிறேன். நான் அவன் கையில் திகழும் ஒரு கருவிதானே ? "பணப்பேய் பிடித்து அதனைத் தேடித் திரியும் இந்தப் பித்துலகில் என் ஆண்டவனே, அண்ணலே, நீயே என் மேலான விலை மதிக்க வொண்ணுத மாசிலா நன்மணியெனக் கண்டுகொண்டேன். நான் என்னையே உன் பலிபீடத்தில் அர்ப்பணம் செய்துவிட்டேன். அன்பிற்குரிய ஒரு நண்பனைத்தேடித்திரியும் என் நீள்யாத்திரையில், நீ ஒருவனே நான் அன்பு பூணுவதற்குரியவன் என்பதையறிந்தேன். நான் என்னை உனக்கே அர்ப்பணித்து விட்டேன்.'' [யஜுர்வேத சங்கிதை]

ஆண்டவர் உங்கள்மீது அருள் மாரி பெய்வாராக!

இந்தியாவுக்குத் தேவையான கல்வி

[டார்ஜிலிங்கிலிருந்து ஸ்ரீ சுவாமிகள் 1897-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 24-ஆம் நாள், ஸ்ரீமதி கோசல்ஜி, பி. ஏ. வுக்கு எழுதிய கடிதம்]

வேலை முறை பற்றி நீங்கள் கேட்டுள்ள கேள்விக்கு விடையாக நான் கூறுவது இது: நான் மொழிய விரும்பும் யாவற்றுள்ளும் முக்கியமானது நாம் எதிர்பார்க்கும் பயனுக்குத் தக்கவாறுள்ளவற்றை நாம் தொடங்க வேண்டும் என்பதே. என் சிநேகிதி குமாரி முல்லரிடமிருந்து நான் உங்களுடைய உள்ளப் பரிவு, தாய் நாட்டுப் பற்று, தளரா விடாமுயற்சி ஆகிய இவை பற்றி மிகுந்த அளவில் கேள்விப்பட்டுள்ளேன். உங்களது புலமை உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாகத் தெரிகின்றது. இச்சிறிய சீவன் செய்யக் கூடியதான சிறிய முயற்சி பற்றி நீங்கள் அறிய விரும்புவது நான் பெற்ற பெரும்பேற்றின் பயனே என்பதை உணர்கின்றேன். என்னால் இயலும் வரையில் அதனை எடுத்துரைக்க முயல்வேன். ஆனால், முதன் முதலில் உங்களுடைய ஆழ்ந்த சிந்தனைக்காக யான் கண்ட முடிவுகளை உங்களுக்கு எடுத்துக் கூறுகிறேன் :

நாம் எப்போதுமே அடிமைகளாகவே இருந்துள்ளோம். அதாவது, தங்களுடைய பிறப்புரிமையானதொரு ஞான ஒளியை அவர்கள் புலப்படுத்தும் பாக்கியம் பெறுதவர்களாகிவிட்டார்கள். கடந்த சில ஆண்டுகளாக மேலை நாட்டு மக்கள் சுதந்தரத்தை நோக்கி மிக விரைவாக முன்னேறிச் சென்றுகொண்டுள்ளார்கள். இந்தியாவிலோ, அரசர்களே, குல முறை முதற்கொண்டு எதனை ஒருவர் உண்ணலாம் எதனை உண்ணக் கூடாது என்பது வரை, தீர்மானித்துச் சொல்லியாக வேண்டும். மேலை நாடுகளிலோ, எல்லாம் மக்களே செய்துகொள்வது வழக்கம்.

சமுதாய சம்பந்தமான எதைப் பற்றியும் அரசன் இப்போது யாதும் கூறுவதில்லை. அதற்கு மாறுகவே இந்திய மக்களுக்கும் தங்களைப் பற்றித் தங்களுக்கும் ஒரு சிறிதும் தன்னம்பிக்கை இருப்பதில்லை. வேதாந்தத்திற்கு அடிப்படையான தன்னம்பிக்கையை நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. ஆதலின், முதலில் வகுத்துக் கொண்ட விஷயம் பற்றிய சிந்தனையும், அதன் பிறகு சர்ச்சையும், அதன் பிறகு அதற்கு வேண்டிய சக்திகளையெல்லாம் தொகுத்துச்

செயலாற்றலும் ஆகிய இத்தகைய மேலைநாட்டு முறை இந்நாட்டில் இப்போதும் பயன்படுவதில்லை. இதனாலேதான் அயல் நாட்டு ஆட்சியில் நாம் இவ்வளவு முன்னேற்றமற்றவர்களாயிருக்கின்றோம். இது உண்மையானால், பொது மக்களின் சர்ச்சையால் ஒரு மாபெருஞ்செயலைச் சாதித்துவிடலாம் என்பது இயலாத காரியம். ‘தலையே இல்லாதபோது தலைவலிக்கு வாய்ப்பு ஏது?’ பொது மக்கள் எங்கே? உள்ளது எதையேனும் துருவி ஆயப் புகுவோமானால், நம் சத்தியனைத்தும் குன்றிப் போய் நமக்கு அயர்வும் ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே, செயலாற்றுதற்கு யாதொரு வலிமையும் எஞ்சி இருப்பதில்லை. ஆகையினாலேதான் வங்காளத்திலுள்ள நாம் பெரும்பாலும் எப்போதும், பேசுவது பெரிது; ஆற்றுவது மிகச் சிறிதே. இரண்டாவதாக நான் முன்னமே மொழிந்தவாறு, இந்தியாவிலுள்ள செல்வச் செருக்குற்றவர்களிடமிருந்து நான் எதனையும் எதிர்பார்க்கவில்லை. நம்முடைய இளைஞர்களிடையேதான்; பொறுமை, உறுதி, மோனம், இவற்றோடு வேலை செய்வதில் நம்பிக்கை, ஆசையெல்லாம் வைக்கவேண்டியிருக்கிறது.

இப்போது நாம் செயலாற்றலைப் பற்றிப் பேச முயல்வோம். கல்வியும் கலாசாரமும் மேன்மக்களிடமிருந்து பாமர மக்களுக்கும் படிப்படியாகப் பரவி வரத் தொடங்கியதிலிருந்து மேலை நாடுகளில் நிலவும் இக்கால நாகரிகத்துக்கும், இந்தியா எகிப்து ரோம் முதலியவற்றில் நிலவிய தொன்மை நாகரிகத்திற்கும் உள்ள வேறுபாடு வளரத் தொடங்கியது. ஒரு நாட்டின் முன்னேற்றம், அது பொது மக்களுக்குக் கல்வியும் ஞானமும் பரப்புமளவிலேதான் உள்ளது. இந்தியாவின் அழிவிற்கு முக்கியமான காரணம், செருக்கும் அரசியல் அதிகாரமும் கொண்ட சிலரிடமே தனி உரிமை என்ற நிலையில் அவை குவிக்கப்பெற்றிருப்பதே. நாம் மீண்டும் உயரவேண்டுமானால், அதேமுறையைத்தான் பின்பற்ற வேண்டும்; அதாவது, பொது மக்களிடம் கல்வியைப் பரப்பி வரவேண்டும். சமூகச் சீர்திருத்தம் பற்றிப் பெருத்த ஆடம்பரமான கூச்சல் கடந்த ஐம்பதாண்டுகளாக எழுப்பப்பட்டிருக்கின்றது. பத்து ஆண்டுகளாக நாட்டின் பல இடங்களில் சுற்றி வந்ததில், சமுதாயச் சீர்திருத்தங்கள் பல நிறுவப்பட்டிருப்பதனைக் கண்டுள்ளேன். ஆனால், அவர்களுடைய நலனுக்காக அமைக்கப்பட்ட ஒரு சங்கத்தையும் கண்டிலேன். அவர்களுடைய குருதியைப் பருகியே பலர் கனவான்களாய்த் திகழ்கின்றனர்; கனவான்களாகவே

தொடர்ந்து இருந்துகொண்டும் வருகின்றனர். முசல்மான்கள் எத்தனை போர் வீரர்களைத் தம்முடன் கொணர்ந்தார்கள்? எத்தனை ஆங்கிலேயர்கள் இப்போது உள்ளார்கள்? ஆறே ரூபாய்களுக்காகத் தங்களுடைய தகப்பன், தம்பிமார் இவர்களுடைய கழுத்தை அறுக்கும் இலட்சக் கணக்கான மக்கள் இந்தியாவில் தவிர வேறு எங்கேதான் இருக்கப்போகின்றார்கள்! எழுநூறு ஆண்டுகள் முசல்மான் ஆட்சியில் அறுநூறு இலட்சம் முசல்மான்களும் ஒரு நூற்றாண்டு ஆங்கில ஆட்சியில் இருபது இலட்சம் கிறிஸ்தவர்களும் ஏற்படுவதற்குக் காரணம் என்ன? நாட்டைவிட்டு ஏன் சொந்தமாக ஒன்றினைக் கையாளும் ஆற்றல் அழிந்துவிட்டது; மிகுந்த கைத்திறன் வாய்ந்த தொழிலாளர்கள் நாளுக்கு நாள் ஐரோப்பியர் போட்டியைத் தாங்கமாட்டாமல் மடிகிறார்களே! இது ஏன்? ஜெர்மானிய உழைப்பால் பல நூற்றாண்டுகளாக மூரி நிமிர்ந்து நின்ற ஆங்கிலத் தொழிலாளியின் நிலை குலைக்கப்பட்டது எந்தச் சக்தியினால்?

கல்வியே, கல்வியே, கல்வியே இதற்குக் காரணம்! ஐரோப்பாவிலுள்ள பல நகரங்களையும் நான் போய்ப் பார்த்ததில் ஏழை மக்களின் இன்ப நிலையினையும் கல்வியறிவையும் கண்ட என் கண்கள் என் நாட்டு ஏழை மக்களின் நிலையை நோக்கும்போது நீர் வடித்தன. எனக்குத் தோன்றிய விடை 'கல்வியே' என்பதுதான். கல்வி வாயிலாகத் தம்மிடத்தேயுள்ள சொந்தமான நம்பிக்கையின் மூலம் தம்மகத்தேயுள்ள ஆர்வம், பக்தி ஆகிய இவற்றால் அவர்களுக்குள் உறையும் பேரான்மா விழித்தெழுந்துவிட்டது; நம்மிடத்தே இலங்கும் பேரான்மாவோ, படிப்படியாக உறங்கி வரும் இயக்கமற்ற இழிவான நிலைக்கு இறங்கி வந்துகொண்டிருக்கிறது. நியூயார்க்கு நகரத்தில் அயர்லாந்திலிருந்து வந்து குடியேறிய மக்களை உற்று நோக்கும் பழக்கம் எனக்குண்டு. அவர்கள் அந்நகருக்கு வந்த போது காலால் மிதித்து நசுக்கப்பட்டு, கண் குழிவுற்றுப் பிணம் போன்ற பார்வையோடுள்ள நிலையில், வீட்டில் உணவுக்கு யாதொன்றுமின்றிக் கையில் காசின்றிக் களிமண் மூளையுடன் தங்களுக்குச் சொந்தமாக ஒரே தடியையும் அதன் நுனியில் தொங்கவிடப்பட்ட கந்தலான மூட்டையையும் கொண்டு, நடையில் மிகுந்த அயர்வுடனும் கண்களில் அச்சங் கொண்ட பார்வையுடனும் உழலுவதைக் கண்டுள்ளேன். ஆனால், ஆறு மாதங்களுக்குள்ளாக நான் கண்ட வினோதக் காட்சியை என்

னென்று விளம்புவேன்! அந்த மனிதன் நிமிர்ந்து நடக்கின்றான். அவனது உடையும் மாறிவிட்டது. அவன் கண்களிலும், நடையிலும் அச்சக் குறி காண்பதரிது. இதற்குக் காரணம் என்ன? அதை நம் வேதாந்தமே அறிவிக்கின்றது. அயர்லாந்துக்காரன் தன் நாட்டில் பெரிய இகழ்ச்சியால் தாழ்ந்த நிலையில் வைக்கப்பட்டிருந்தான். அவன் நாட்டுக்குரிய சூழ்நிலை அவனுக்கு ஒரே குரலில் பின்வருமாறு பறையறைந்துகொண்டிருந்தது. "பேட்டுத் தம்பி, உனக்கு நற்கதிக்கு ஆசை இனிக் கிட்டாது. நீ அடிமையாகப் பிறந்துவிட்டாய்; அப்படியேதான் இன்னும் நீ இருக்கப் போகின்றாய்," என்று இப்படிப் பிறப்புத் தொட்டே உணர்த்தி வரப்பட்ட 'பேட்டு' என்பவன் இதனை நம்பித் தன்னைத்தானே கீழ்ப்பட்டவன் என்ற மயக்கத்துக்கு உட்படுத்திக்கொண்டான். அவன் அகத்துறையும் பேரான்ம ஒளியும் சுருங்கிவிட்டது. எப்போது அமெரிக்காவில் வந்து இறங்கினானோ, அப்போது அவனைச் சுற்றி எழும் இன்னொலியைக் கேட்டான். "பேட்டே, கேள்: நீயும் எங்கள் எல்லோரையும் போன்று ஒரு மனிதனே. எல்லாவற்றையும் ஆக்கியவன் மனிதனே! உன்னையும் என்னையும் போன்ற ஆண்டகை யாவற்றையும் இயற்றக்கூடும். உள்ளத்து ஊக்கத்தை விடாமற் கொள்," என்னும் குரல் கேட்டது. பேட்டு நிமிர்ந்து பார்த்து இது உண்மையெனத் தேர்ந்தான். உள்ளே அவிந்து சாம்பற்பூத்த ஆன்மச்சுடர் விழித்தெழுந்தது. இயற்கையே எழுச்சி பெற்றது போன்றதாயிற்று அவனுக்கு அது. 'எழு! விழித்தெழு! குறிக்கோளையடையுமளவும் நில்லாதே! உழைத்து வா!' என்ற அறிவுரையை (கடோபநிஷத் I: iii: 4) முழங்கிற்றுப் போலும்!

இது போலவேதான் நம் இளம்பிள்ளைகள் பெறும் கல்வியும் மிகவும் எதிர் மறையானதாகவே (மறுப்பின் முறையினதாகவே) உள்ளது. பள்ளிப் பையன் ஒன்றும் கல்லாதிருப்பதுமன்றித் தன்னுள் இருப்பனவற்றையும் கெடுத்துக்கொள்கிறான். ஊக்கமின்மையும் ஆர்வமின்மையுமே இதன் விளைவாகும். வேதத்திற்கும் வேதாந்தத்திற்கும் உயிர் போன்ற உட்பொருளாய் உள்ள சிரத்தை—ஆர்வம்—எந்த சிரத்தை நசிகேதனுக்கு எமனையே நேரில் கண்டு அவனையே துணிந்து எதிர்த்து வாதாடவேண்டிய துணிவு அருளியதோ, எந்தச் சிரத்தையால் இவ்வையகம் இயங்கி வருகின்றதோ, அத்தகைய சிரத்தையாம் பெருஞ்சுடர் அவிந்து போவதா?

अज्ञश्चाश्रद्दधानश्च संशयात्मा विनश्यति

"அறிவற்றவன், சிரத்தையை இழந்த மனிதன், ஐயுறுகிற மனிதன், கெட்டே போகின்ருன்." அதனுலேதான் நாம் கேட்டின் அண்மையிலேயே இருக்கிறேம். இதற்கு மாற்று, கல்வியைப் பரவச் செய்தலே. முதன்முதலாக ஆன்ம ஞான ஒளி வேண்டும்; இதனுல் நான் சடைமுடி தரித்துத் தண்டெடுத்துக் கையில் கமண்டல மேந்திக் குகையில் உறையும் துறவியைக் கூறுவதாகக் கொள்ளலாகாது. வேறு எதனை நான் கூற வருகிறேனென்று கேட்பீரேல், அது இதுதான்: "உலக வாழ்வினின்றும் விடுதலையளிக்கும் ஞானமாம் ஆக்கம், சாதாரண வாழ்க்கை நலம் (செல்வம், சம்பத்து) அளியாதா என்ன? திண்ணமாகவே அளிக்கும். சுதந்தரம், பற்றற்ற நிலை, உயர்தியாகம், பெருந்துறவு—இவை யாவும் வானளாவும் குறிக்கோள்களே—

स्वल्पमप्यस्य धर्मस्य त्रायते महतो भयात्

ஆனுல், இந்தத் தருமத்தின் ஓர் அற்ப அளவும் பிறப்பு இறப்புகளையும் களைந்து பெரியதோர் அச்சத்தினின்றும் காக்குமென்பது உறுதியே. துவைதி, விசிஷ்டாத்வைதி, அத்துவைதி, சைவ, வைணவ, சாக்த, புத்த சைனமாகிய ஏனைய மதத்தினரும் இந்தியாவிலுள்ள எல்லா மதப்பிரிவினங்களும் இதில் ஒன்றுபட்ட கருத்துடையவர்களாய்க் காட்சி அளிக்கின்ருர்கள். அதாவது, சீவான்மாவிடம் அளவு கடந்த ஆற்றல் உளது. எறும்பு முதற்கொண்டு பூரண மனிதன் ஈருக ஒவ்வோர் உயிரினிடத்தும் ஒரே நிகரான ஆன்மாவே உறைந்து இலங்குகின்றது. வேறுபாடு வெளித்தோற்றம் ஒன்றிலேதான் உள்ளது. குடியானவன் நீர் வாய்க்காலுக்கு ஏற்படும் தடையை உடைத்தெறிந்துவிடுவது போல (பதஞ்சலியின் யோக சூத்திரம் கைவல்ய பதம் 3) நாமும் அஞ்ஞானத் தளையை அறுத்தெறிந்து விடவேண்டும். அந்தச் சத்திக்கு வாய்ப்பு நேர்ந்த உடனே, தக்க இடமும் காலமும் நேர்ந்த அக்கணமே, அந்தச் சத்தி வெள்ளம் வெளிப்பட்டுப் பெருகும் என்பது திண்ணம். உயர்ந்த தெய்வங்கள் முதலாகத் தாழ்ந்த புல்லளவும் ஒரே சத்திதான் உறைந்து வருகிறது. அது வெளிப்பட்டாலுஞ் சரி, வெளிப்படாவிட்டாலும் சரி, அத்தன்மைத்தான ஆற்றலை நாம் வீடு வீடாகச் சென்று வெளியே பாயுமாறு மிக வருந்தி உழைத்தே தீர வேண்டும்.

இரண்டாவதாக, இத்துடன் கல்வியும் பயிற்றுவித்தல் வேண்டும். இது யார்க்கும் சொல்லுவது எளிதே. அதன்படி ஒழுகுவது என்பதுதான் பெரும்பிரச்சினையாகும். நம் நாட்டில் ஆயிரக்கணக்கான தன்னலமற்ற—அனைத்தையும் துறந்த—உள்ளப்பரிவுள்ள சான்றோர் உளர். அவர்கள் நாடு முற்றிலுந் திரிந்து சமய சம்பந்தமான அறிவுரைகளை வழங்கி வருவதைக் காண்கின்றோம். அப்பெற்றியமைந்த பெரியோர்களுள் பாதித் தொகையினராவது ஆசிரியர்களாகப் பயிற்றுவிக்கப்பட்டு வரலாம். அவர்கள் கல்வி ஒலியைப் பரப்ப ஊர் ஊராகச் சென்று வருதல் வேண்டும். அதற்கு முதன்முதலாக ஒவ்வோர் அரசாங்க மாவட்டத்திலுமுள்ள தலைநகரை நடு இடமாகக் கொண்டு, பின்னர் இந்தியாவிலுள்ள ஒவ்வோர் இடத்திற்கும் பையப் பையப் பரப்புதல் வேண்டும். அண்மையில் சென்னை, கல்கத்தா ஆகிய இரு நகரங்களிலும் இத்தகைய வட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சிறிது காலத்தில் மற்றும் பல நிறுவப்படும். ஏழைகளுக்குக் கற்பிக்கப்படும் கல்வியின் பெரும்பகுதி வாய் மொழியாகவே இருத்தல் வேண்டும். பள்ளியில் நடத்தற்குரிய பரிபாகம் (முதிர்ச்சி) இன்னும் வரவில்லை. படிப்படியாக இந்த முக்கியத் தாபனங்களில் விவசாயம் கைத்தொழில் சம்பந்தமான கல்விகள் கற்பிக்கப்பட்டு வருவதோடு அக்கலைகளை வளரச் செய்வதன்பொருட்டுத் தொழிற்சாலைகளும் நிறுவப்படவேண்டும். இப்போது போன்று சங்கங்கள் அமைக்கப்பட்டு அவை வாயிலாக இங்கே உற்பத்தி செய்யும் பொருள்களை ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். மங்கையர்களுக்கும், ஆடவர்களுக்கு வைத்தது போலவே மத்திய இடங்கள்—தாபனங்கள்—அமைத்தல் பெருநலமாகும். ஆனால், இந்த நாட்டில் இவையெல்லாம் எவ்வளவு கடினமானவை என்பது உங்களுக்கே தெரியும். பின்னும், 'பிறரைத் தீண்டும் பாம்பும் தான் செலுத்திய நஞ்சைத் தானேதான் உறிஞ்சிவிட வேண்டும்!' இந்த ஆக்க வேலைகளுக்கு வேண்டும் போதுமான பொருளும் மேலை நாட்டிலிருந்துதான் வந்தாக வேண்டும் என்பது எனது உறுதியான எண்ணம். அதற்காக நமது சமயம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பிரசாரம் செய்யப்பட வேண்டும். இக்கால விஞ்ஞானம் கிறித்தவ மதம் போன்றவற்றின் அடிப்படையைத் தகர்த்தெறிந்து, அதன் ஆதாரத்தைக் குலைத்து விட்டது. அதற்கு மேல் இன்ப போகங்களின் மிகுதியே மத

உணர்ச்சியை மாய்க்க ஆயத்தமாய் இருக்கிறது. ஐரோப்பாவும் அமெரிக்காவும் இந்தியாவையே மிகுந்த ஆர்வத்துடன் எதிர் நோக்கியுள்ளன. அவற்றினுடைய கொடையைப் பெறுவதற்கு உரிய காலமும் இதுவே. பகைவர்களின் வலுத்த கோட்டைகளைப் பிடிக்கும் தருணமும் இதுவேயாகும்.

மேலே நாடுகளில் மகளிர் ஆட்சி செலுத்துகின்றனர்; செல்வாக்கோ, ஆற்றலோ, யாவும் அவர்கள் கையில் உள்ளன. உங்களைப்போன்ற தைரியமுள்ளவர்களும் அறிவாற்றல் உடையவர்களும்—வேதாந்தத்தில் மூழ்கியவர்களும்-இங்கிலாந்திற்கும் போய் ஞானப் பணி நடத்தினுல் ஒவ்வோர் ஆண்டிலும் நூற்றுக் கணக்கான ஆடவரும் பெண்டிரும்-பாரத நாட்டுச் சமயத்தைப் போற்றுவதால் மிகுதியான ஆசிகளைப் பெறுவார்கள். நம் நாட்டினின்றும் மேலே நாடு சென்ற ஒரு பெண்மணி ரமாபாய் என்பவர் ஆவர். அவருடைய ஞானம், மேலே நாட்டுக் கலே, விஞ்ஞானம் ஆகியவற்றின் அறிவு மிகச் சொற்பமே. ஆனுலும், அவர் தமதறிவால் எல்லோரையும் திடுக்கிடச்செய்துவிட்டார். மேலேநாட்டார்கள் அவரது அறிவினைப் பெரிதும் வியந்து போற்றினுர்கள். உங்களைப் போன்ற ஒருவர் அங்குச் சென்ருல், இங்கிலாந்தே கலக்கப்பட்டுவிடும். அமெரிக்காவைப்பற்றிக் கூறுவானேன்! இந்திய மங்கையர் ஒருவர் இந்திய ஆடையுடன் இந்திய இருடிகள் திருவாய் மலர்ந்துள்ள இந்திய மதத்தை அவர்களிடம் எடுத்துச் சொன்னுல்—நான் தூர திருஷ்டி மகிமையுடன் கண்ணெதிராக இப்போதே காண்கின்றேன்—ஒரு பேரலே வந்து உலகமனைத்தும் வெள்ளமிட்டுப் பெருகப் போகின்றது! மைத்திரேயி, கானு, லீலாவதி, சாவித்திரி, உபய பாரதி என்பவர்களெல்லாம் தோன்றிய நம் நாட்டில் இதனைச் செய்யுமாற்றல் பெற்ற மாதரார் ஒருவர் கூடவா இல்லே! பரமன் அறிவான். ஆங்கில அறிவினுல் நாம் இங்கிலாந்தை வென்று விடுவோம்; இங்கிலாந்தையும் நாமே கைப்பற்றிக்கொள்வோம். "नान्यः पन्था विद्यतेऽयनाय" இதனைத்தவிர்த்து உய்யும் வழி வேருென்றில்லே. மோட்சம் என்பது சங்கங்களாலும் அவற்றின் கூட்டங்களாலுமே அடையப் பெறுவதொன்ருே? நம் ஆன்மிகத்தாலேயே நம்முடைய ஆட்சியாளர்களை நாம் தேவர்கள் ஆக்கவேண்டும். இங்கிலாந்து, ஐரோப்பா, அமெரிக்கா என்னும் நாடுகளை அடிமைப்படுத்துவதே நமது மாபெரும் இலட்சியமாக—உயர்ந்த

மந்திரமாக—இப்போதே செய்தல் வேண்டும். அதனுலேதான் நம் நாட்டின் நலம் நிலைத்து இருக்கும். விரிவே வாழ்க்கையின் அறிகுறி—நற்சின்னம். நாம் நம்முடைய ஆன்மிக இலட்சியங் களைக்கொண்டு பரவிச் செல்லல் வேண்டும். அந்தோ! இந்தக் கூடு (உடற்கூடு) மிகவும் நலிந்திருக்கிறது! வங்காளியின் உடல் நலியாமல் என்ன செய்யும்! அதிலும், ஓர் அபாய நோயும் இதைத் தாக்கியுள்ளது. ஆனுல், நம்பிக்கைக்கும் இடமில்லாமலில்லை.

उत्पत्स्यतेऽस्ति मम कोऽपि समानधर्मा ।
कालो ह्ययं निरवधिर्विपुला च पृथ्वी ॥

"என்னைப் போன்ற ஒருவன் எல்லையில்லாத காலச் சூழலிலிருந்து மக்கள் நிறைந்த மேதினியில் பிறக்கப் போகின்ருன். அவன் எண்ணிய கருமத்தை முடித்தே தீருவான்."

காய்கறி உணவைப்பற்றி நான் இதைத்தான் இயம்பப் போகின்றேன்: என்னுடைய குருநாதர் ஊன் அருந்த மாட்டார். தேவிக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட ஊனை அருந்தாது, அதைத்தம் சென்னியிலேதான் தாங்கி நிற்பார். ஓர் உயிரை செகுத்து உண்ணுதல் பாவமேயாகும்; இதில் யாதோர் ஐயமுமில்லை. ஆனுல், இரசாயன முன்னேற்றத்தினுல் காய்கறி உணவு மனித உடலுக்குப் பொருந்தாது போனுல், வேறு வழியில்லை. ஊனை அருந்தியே தீர வேண்டும். இப்பொழுது போல ரஜோகுணம் நடமாடுகின்ற சூழ் நிலையில் ஊன் உண்பதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை. மன்னர்க்கு மன்னரான அசோகர், 'உயிர் செகுப்போர் வாளுக்கு இரையாக்கப்படுவார்,' என்று அச்சுறுத்திப் பல்லாயிரக் கணக்கான விலங்குகளின் உயிர்களைக் காப்பாற்றினுர் என்பது உண்மையே. ஆனுல், ஓராயிரம் அடிமை வாழ்வு இதைவிடப் பயங்கர மான கொடுமை அன்ருே? ஒரு சில ஆடுகளை மாய்ப்பது பாவமா, மனைவி பெண் இவர்களுடைய மானத்தைக் காப்பாற்றும் திறமை அற்று நிற்பது பாவமா? உங்கள் கண்களின் முன்னேயே பிறர் உங்களுடைய சேய்களுக்குரிய உணவைக் களவாடிச் செல்வர். நீங்கள் செயலற்று நிற்பீர்கள். மெய் வருந்தி உழைத்து உண்ணுத பத்து மேலினத்தார் ஊன் அருந்தாமலிருக்கட்டும். அல்லும் பகலும் உழைத்துப் பாடு படுகிறவர்கள்மீது அவர்கள் காய்கறி களைத்தான் உண்ண வேண்டும் என்னும் கட்டளையைச் சுமத்தும் ஒரு கட்டாய நெறி, தீச்செயலேயாகும். நமது நாடு சுதந்தரத்தை

இழந்ததற்குக் காரணம் இதுவே. நல்ல உணவை—உடலை வளர்க்கும் உணவை—அருந்துவதால் நாடு முன்னேறும் என்பதற்குத் தக்க சான்ருய் ஜப்பான் திகழ்ந்து நிற்கின்றது.

அகில புவனங்களையும் ஆளும் எல்லாம் வல்ல அன்னை, உங்கள் ஆர்வத்தையும் இதயத்திற்குப் பேருக்கத்தையும் அளிப்பாளாக!

இக்கால இந்தியாவின் இடர்ப்பாடும் அதை நீக்கும் முறையும்

[1899-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், 14-ஆம் நாள், உத்போதனுக்கு ஸ்ரீ சுவாமிகள் எழுதியுள்ள கட்டுரையின் ஆங்கில மொழிபெயர்ப்பினின்றும் கொண்டது இது. இப்பத்திரிகை முதலில் இரண்டு வார முறைப் பத்திரிகையாய் விளங்கிப் பின்பு இராமகிருஷ்ண மடத்து மாதப் பத்திரிகையாகிவிட்டது.]

பழைய இந்தியாவின் வரலாறு, தெய்விகம் வாய்ந்த ஓர் இனத்தாருடைய பேரளவிலுள்ள சத்திகள் (ஊக்கங்கள்), அவற்றின் பற்பல பணிகள், எல்லையில்லாத உற்சாகம், பல படிப்பட்ட சத்திகளின் (விசை) தடுக்கவொண்ணாத செயல் ஆற்றலும் அதனைத் தாக்க எழும் மாறுபட்ட எதிர்வினைகளுமாகிய இவற்றின் கூட்டம், எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களுடைய மிகமிக ஆழ்ந்த சிந்தனை சத்தி—இவற்றால் நிரம்பியுள்ளது. அரசர், பேரரசர் இவர்களைப் பற்றிய வெற்று வரலாறுகளும், சிற்சில காலங்களில் அத்தகைய அரசர்களின் தீய விருப்பங்கள், இறுமாப்பு, உலோபம் முதலியவற்றால் ஏற்படும் கொடுங்கோன்மைக்குட்பட்ட சமூகத்தின் வரலாறுகளும் அவர்களுடைய நலம் படைத்த அல்லது தீய பண்புகளால் விளைந்த செயல்களின் பலன்கள் சமூகத்தை எவ்வாறு பாதித்துள்ளன என்பதுமே சரித்திரமாகக் கொண்டால், "இந்தியாவில் இத்தகைய வரலாற்று நூல்கள் இல்லை" என்றுதான் கூறவேண்டி வருகின்றது. ஆனால், இந்தியாவில் சமய சம்பந்தமாகக் குவிந்து கிடக்கும் நூல்களை இலக்கியச் செல்வங்களெனக் கொண்டால், அவற்றின் ஒவ்வொரு வரியும் கவிதைக் கடலைச் சுட்டும் என்பதில் யாதோர் ஐயமுமில்லை. அவர்களுடைய தத்துவங்களும் அவர்களுடைய பற்பல விஞ்ஞான நூல்களுமோ, வாழ்க்கையின் நிகழ்ச்சிகளைக் காட்டும் சரிதங்களாம். வேந்தர்களுடைய பரம்பரைகள், மன்னர்க்கு மன்னராய் விளங்குபவர்களின் குல முறைச் சரிதங்கள் ஆகிய இவற்றைக்காட்டிலும் அவர்களுடைய முன்னேற்றத்தின் ஒவ்வொரு படியையும் நன்கு விளக்கிக் காட்டுகின்றன என்பது உண்மை. அவர்கள் நாகரிக வைகறைக் காலந் தொட்டே பசியாலும், நீர் வேட்கையாலும், அடங்காப் பால் உணர்ச்சியாலும் உந்தப்பட்டார்கள். அவர்களுடைய உள்ளத்தை

எழில் கொள்ளை கொண்டது. அவர்கள் வெல்லுதற்கரிய அறிவாற்றல் படைத்தவர்கள். அவர்களுடைய உள்ளங்களில் பல உணர்ச்சிகள் அலை வீசின. அவர்கள் பல வழிகளாலும் பற்பல முறைகளாலும் வாழ்க்கையின் உயர்ந்த சிகரத்தை எட்டிப் பிடித்தார்கள். அவர்கள் இயற்கையுடன் போராடி வெற்றி கொண்டு நாட்டப்பட்ட கொடிகளின்மீது பகைப் புயல்களாம் சந்தர்ப்பங்கள் மோதி அடித்ததால், அவை கிழிந்து போயின ; ஊழிக் காலமாக மட்கி மடிந்துவிட்டன.

இந்த மக்கள் இனத்தார் மத்திய ஆசியாவிலிருந்து வந்தார்களா, அல்லது வடக்கு ஐரோப்பாவிலிருந்து பரவி ஓடினர்களா, அல்லது வடதுருவ வட்டங்களிலிருந்து வெள்ளமெனப் பாய்ந்தார்களா ? இப்படி வந்து புகுந்து தங்கி இந்திய நாட்டைப் புனிதமாக்கினர்களா, அல்லது இந்தப் புண்ணிய பாரத நாடு அவர்களுடைய தாய் நாடா ? இவ்விஷயங்களை அறிவதற்கு நமக்குப் போதுமான தக்க சான்றுகள் கிடைக்கவில்லை. அல்லது மிக விரிந்துள்ள இந்த இனம் இந்தியாவிலிருந்தோ வெளி நாடுகளிலிருந்தோ தன் நாட்டினின்றும் துரத்தப்பட்டு இயற்கையின் சட்ட திட்டத்திற்குட்பட்டு நாளடைவில் ஐரோப்பாவிற்கும் மற்றைய நாடுகளுக்கும் குடிபுக வந்ததோ, அல்லது இவ்வின மக்கள் சிவப்பு நிறமாய் இருந்தவர்களோ, அன்றிக் கறுப்பாய் இருந்தவர்களோ ? நீலக் கண்கள் அமையப் பெற்றவர்களோ, அல்லது மை வண்ணக் குஞ்சியைப் படைத்தவர்களோ ? இவ்விவரங்களுக்கெல்லாம் இக்காலத்தே சான்று காட்ட இயலாது. அதற்குப் புறநடை ஒன்றுள்ளது ; அதாவது, வடமொழிக்கும் சில ஐரோப்பிய மொழிகளுக்கும் உள்ள தொடர்பு அல்லது உறவே. அதே போன்று இக்கால இந்தியர்கள் இவ்வினத்தாரின் வழிவழி வந்த முறையான குருதி சம்பந்தம் உடையவர்களோ, அன்றி இந்த வருக்கத்தினரின் எவ்வளவு இரத்தம் இவர்களின் இரத்தக் குழாய் வழியாகச் சுரந்து பாய்கிறதோ, அல்லது அம்மட்டுமேனும் இரத்த பாசம் இக்குலத்துக்கு இருக்கின்றதோ என்பவற்றை இறுதியாக அறிவது எளிதான காரியமன்று.

ஆனல், அத்தகைய ஐயப்பாட்டால் நாம் மிகுதியாக இழப்பது ஒன்றுமில்லை. ஒன்று மட்டும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நாகரிகமாகிய ஞாயிற்றின் முதற்கதிர்கள் எங்கே படர்ந்திருந்தனவோ, எங்கிருந்து முதன்முதலாக ஆழ்ந்த

சிந்தனை வெளிப்பட்டதோ, அங்கே முழுச் சிறப்புடனும் மாண்புடனும் இப்போதும் நூறாயிரக் கணக்கில் மக்கள்—அதன் மானச மைந்தர்கள்—அதன் எண்ணங்களையும் அதன் கருத்துகளையும் கொண்டவர்கள்—அவற்றையெல்லாம் பரம்பரையாக வந்த குல தனம் என்று போற்றிக் கொண்டாடவும் முன் வருகின்றார்கள். மலைகள், காடுகள், கடல்கள் இவற்றையெல்லாம் கடந்து, இடம் காலம் இவற்றின் எல்லைகளனைத்தையும் தாண்டி, சிந்தனையாகிய குருதி, உலக கோளத்தின் பல இடத்திலுமுள்ள மற்ற நாட்டினரின் இரத்தக் குழாய்களிலும் ஓடியுள்ளது; இன்னும் ஓடிக் கொண்டிருக்கிறது. அது சில நேரங்களில் தெளிவான முறையிலும், வேறு சில வேளைகளில் யாரும் அறியாத நுண்ணிய முறையிலும் ஓடுகின்றது. பண்டை ஞானச் செல்வத்தின் பெரும்பகுதி நம்மையே சார்ந்து நிற்கின்றது.

மத்தியதரைக் கடலின் கீழை மூலையில் ஒரு சிறிய நாடு திகழ்கின்றது: அது மிகு வனப்பு வாய்ந்திருக்கிறது. இயற்கை அன்னை அதற்கு அணிகலன்களை அளித்திருக்கிறாள். எழிலைச் சொரியும் நன்கமைந்த பல தீவுகள் அதைச் சுற்றி மாலைகளைப் போல மிளிர்கின்றன. இத்தகைய அழகினால் போர்த்தப்பட்ட தீவில் மிகச் சிறிய மக்கள் தொகுதியாகிய ஓர் இனத்தார் உறைந்து வந்தனர். அவர்கள் உள்ளங்கவரும் தோற்றப் பொலிவுள்ளவர்கள்; மிகச் சிறந்த உடல் அமைப்புடையவர்கள்; தசையும் நரம்பும் தடித்தும் கனமாயுமுள்ள வலிமை வாய்க்கப் பெற்றவர்கள். ஆனால், அவர்கள் உடலோ இலேசாகக் காட்சி அளிக்கும். உறுதி உள்ளமும் விடா முயற்சியும் அவர்களிடம் சுடர் விட்டெழுந்தன. அவர்கள் அழகுக்கலை ஆக்கப் படைப்புகளில் இவ்வையத்தில் நிகரற்றவர்கள்; அறிவு நலமும் செயலாற்றும் தன்மையில் வியத்தகு திறமையும் பெற்றிருந்தார்கள். பழமையான மற்றைய சாதியினர் அவர்களை யவனரென்று வழங்கினார்கள். ஆனால், அவர்களோ, தம்மைக் கிரேக்கர்கள் என்று கூறிக்கொண்டார்கள். அந்தச் சிறிய கூட்டத்தினர்—வியக்கத்தக்க ஆண்மையுடனும் வலிமையுடனும் கூடிய அக்கூட்டத்தினர்—வரலாற்றிலேயே இணையற்ற சான்றாகத் திகழ்கின்றார்கள். எங்கேயாவது எந்நாட்டினரிடமாவது நாளை வரை நிலவுலக விஞ்ஞானத்தில் ஒரு முன்னேற்றம் இருந்தது அல்லது இருக்கின்றது என்று ஏற்பட்டால், அங்கே பண்டைய கிரீசின் நிழல் படர்ந்துள்ளது என்று உறுதியாகக் கூறலாம். சமூகத்திலோ,

போர் வீரத்திலோ, அரசியலிலோ, சிற்பத்திலோ, மற்றும் எத்துறையிலோ முன்னேற்றம் இருந்தாலும், இவ்வுண்மை பொருந்தும். பழங்காலத்துச் செய்திகளை விட்டுவிடுவோம். இக்காலத்திலேயே வங்க மக்களாகிய நாம் அந்த யவன குரவர்களை ஐம்பதாண்டுகளாய்ப் பின்பற்றி வருவதாலேதான், இறுமாப்புடன் இலங்கி, மிகுந்த அறிவாளிகளாய்த் தற்பெருமை கொள்ளுகிறோம்; அவர்களுடைய ஐரோப்பிய இலக்கியங்கள் வாயிலாக வந்த ஒரு ஞான ஒளியால் நம் வீடுகளை ஒளிபெறச் செய்துகொள்கிறோம்.

இக்காலத்து ஐரோப்பியர் எல்லா விதத்திலும் பண்டைய கிரீசின் சீடரே; அதன் ஞானச் செல்வத்தைப் பெற்ற பரம்பரையினரே. அதன் அளவு யாதெனில், இயற்கையன்னை எவற்றையெல்லாம் செய்யா தொழிந்தாளோ, அவற்றையெல்லாம் கிரீஸ் படைத்து முடித்துவிட்டது என்பதுதான்.

இவ்விரு பேராறுகள் (ஆரியர்களும் யவனர்களும்) மிகு சேய்மையிலுள்ள வெவ்வேறு வரைகளினின்றும் (இந்தியாவும் கிரீஸ் நாடும்) வெளிக்கிளம்பி ஒன்றுடன் மற்றொன்று கூட, அவ்வாறு கூடும்போதெல்லாம் ஒரு மகத்தான பேரறிவுப் பெருவெள்ளம் அல்லது ஆன்மிகப் பெருவெள்ளம் பொங்கிவந்து நாகரிகத்தின் எல்லையை விரிவடையச் செய்கின்றது; அப்படிச் செய்து மாந்தர்களுக்குள் ஒற்றுமை நலத்தை—உலகத்தையே ஒரு சேரத் தழுவும் சகோதர அன்பு என்னும் பிணைப்பை—வலியுள்ளதாக அமைக்கின்றது.

மிகவும் பண்டைக் காலத்தில் இந்திய தத்துவ ஞானமும் கிரேக்கரின் ஆண்மையும் ஒன்று கூடின; அதன் விளைவாகப் பாரசீகம் உரோமாபுரி முதலிய பற்பல பெரிய ராச்சியங்களுக்கு அடிகோலப் பட்டது. மகா அலெக்ஸாந்தரின் இந்தியப் படையெடுப்புக்குப் பின்னர் இப்பெரு நீர்வீழ்ச்சிகள் இரண்டும் ஒன்றோடொன்று மோதி வந்து, பூவுலகின் பாதியைக் கிறித்தவ தத்துவம் முதலிய ஆன்மிக மாபெரு வெள்ளத்தில் ஆழ்த்திவிட்டன. பின்னும் அதே போன்ற சேர்க்கை அரேபியாவின் வளர்ச்சிக்கும் செழுமைக்கும் காரணமாகி இக்கால ஐரோப்பிய நாகரிகத்துக்கு அடிப்படையாயிற்று. நம் காலத்திலேயே இவ்விரண்டு வானளாவும் மாபெருஞ் சத்திகளும் மீண்டும் ஒன்றாகக் கலக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தத்தடவை இச்சத்தியின் திருவிளையாடலுக்கு நடுநாயகமாய்த் திகழப்போகின்றது நம் நாடு.

இந்தியாவின் சூழ்நிலையே அமைதி நிலவுவதற்குரியது. யவனருடைய பண்பு எஞ்ஞான்றும் சத்தியை வெளியிட்டுக்கொண்டிருப்பதே. ஒன்று ஆழ்ந்த ஆன்ம சிந்தனையில் நிலைத்திருக்கும் இயல்புள்ளது; மற்றொன்றின் அறிகுறி சிறந்த அடையாளம்—எதிர்க்கவொண்ணாத கைவந்த கைத்திறனும் சுறுசுறுப்புமேயாகும். ஒன்றின் அறவுரை, துறவு; மற்றொன்றின் குறிக்கோள், இன்பபோகமே. ஓர் இனத்தாருடைய சத்திகளெல்லாம் அகத்தே திருப்பப்பட்டுள்ளன; மற்றொருவருடைய ஆற்றல்கள் யாவும் புறத்தை நாடுகின்றன. ஓர் இனத்தாரின் கல்விமுழுதும் ஆன்ம அறிவில் (அகவாழ்வில்) ஊன்றியுள்ளது. மற்றவரது மனம் புறப்பொருள்களில் (அழியக்கூடிய படைப்புப் பொருள்களில்) ஆழ்ந்திருக்கும். ஒரு வகுப்பினர் இவ்வுலகப் பொருள்களில் விருப்பற்று மோட்ச விருப்பமுள்ளவர்களாய் (ஆன்ம விடுதலைப்பேற்று நோக்கமுடையவர்களாய்) அமைகிறார்கள். மற்ற வகுப்பினரோ, அரசியலையும் சுதந்தரத்தையும் அவாவுகின்றனர். ஒருவருக்கு இவ்வுலகப் பொருள்களில்—செல்வங்களில்—கருத்தே இருப்பதில்லை; மற்றவரோ, இவ்வையகத்தையே அமர நாடாக்கப் பெரிதும் முயல்கின்றனர். ஒருவர் அழிவற்ற இன்பம் வேண்டி இவ்வாழ்க்கையின் மின்னின் நிலையில்லாதனவாகிய இன்பங்களைப் புறக்கணித்துவிடுகின்றனர் ; மற்றவரோ, அழியாப் பேரின்பத்தின் உண்மையை ஐயுற்று, அல்லது அதை அடைவதரிது என்று எண்ணித் தம்முடைய முழு ஆற்றலையும் பயன்படுத்தி உலக இன்பங்களை வேண்டுமட்டும் துய்ப்பதில் திளைத்தார்கள்.

இக்காலத்தில் இவ்விருவகைப்பட்ட இனத்தினர் ஒழிந்தனர். அவர்களுடைய பரம்பரையில் வந்த மானத சேய்களே இருக்கின்றார்கள். அவர்கள் ஆற்றிய அருஞ்செயல்களும் ஆழ்ந்த சிந்தனைகளுமே நிலவுகின்றன.

ஐரோப்பியரும் அமெரிக்கருமே யவனர்களுள் முன்னேறிய மக்கள் ; அவர்களுடைய முன்னோர்களுக்குப் பெரும்புகழை அளிக்கக்கூடியவர்கள். ஆனால், பாரத நாட்டில் உள்ள இக்காலப் பெருமக்களோவெனின், தங்கள் முன்னோர்களுக்கு இத்தகைய மகிமை நல்க வல்லவர்களல்லர்; எனினும், நீறுபூத்த நெருப்புப் போல முன்னோர்களுடைய கனல் போன்ற சத்தியும் இக்கால இந்தியர்களின் அகத்தே கனிந்துகொண்டிருக்கிறது. எல்லை கடந்த சத்தியுடைய ஆண்டவனுடைய அருளால் தக்க காலத்தில்

அது சுடர்விட்டெழும். அத்தகைய ஆன்மச் சுடர் கொழுந்துவிட்டெரியுமாயின் யாது நேரும் என்பதனை யார் இயம்ப வல்லார்? மறைகளின் முழக்கத்துடன் வைதிக வேள்வித் தீயினின்றும் எழும் திரை போன்ற புகைப்படலங்கள் இந்திய வானத்தைப் போர்த்து விசும்பில் முகில்கள் போலக் காட்சி அளிக்குமா? அல்லது ரந்தி தேவருடைய வேள்விப் பெருமை முன் போன்று பலியிடப்பட்ட விலங்கு வகைகளின் குருதியினின்றும் புத்துயிர் பெற்று மீண்டும் தோன்றப் போகின்றதா? பசு வதை பரி வதை என்ற பண்டைய வழக்கங்களோ அல்லது கணவரின் உடன் பிறந்தவரிடமாகக் குல முறையை வளர்க்கும்பொருட்டு மகப்பேறு எய்துவதும் அது போன்ற பிறவும் திரும்ப வரப் போகின்றனவா? புத்த சமயப் பிரசாரம் முன் போன்று வலுத்து இந்தியா முழுவதையும் ஒரு சந்நியாசி மடமாக்கப் போகின்றதா? மனுவின் தரும சாத்திரங்களெல்லாம் பண்டைக் காலத்து முறை போலவே திரும்பவும் மலரப்போகின்றனவா? விதிவரையறுக்கப்பட்ட உணவைப் பற்றிய பொருள்களெல்லாம் இக்காலம் போன்று நாடுகளின் பரப்பளவினைப் பொறுத்து வேறுபாடுற்றுப் பாகுபடுத்தப்பட்டு அந்தந்த நியதிகளுக்குத் தக்கவாறு நாடு முழுதும் இடைவெளியின்றி ஆணை செலுத்தப்போகின்றனவா? சாதி ஒழுங்கு நிலைத்துவிடுமா, அல்லது இடையறுது மனிதனது பிறப்புரிமை பற்றியே—அதனைச் சார்ந்தே—இருக்குமா, அல்லது அவனது தகுதி பற்றித் தீர்மானிக்கப்படப்போகின்றதா? அந்தக் குல தருமத்தின் உணவைப் பற்றிய ஆய்வு தோன்றுமா? அது தொடக்கூடுமா, தொடக்கூடாதா என்பது தீண்டுபவனின் தூய்மை மாசுகளைப் பொறுத்துள்ளதா, வங்காளம் அல்லது சென்னையைப் போல மிகவும் கண்டிப்பான முறையையே கையாளப் போகின்றதா? அன்றி, பஞ்சாபைப் போல ஒரே மூச்சில் தடையெல்லாம் நீக்கப்படப் போகின்றனவா? பல வகுப்பில் உள்ளவர்களின் மணமுறை மனுவின் காலத்தில் இருந்தது போன்று மேல் வருணத்தினின்றும் வரிசைக் கிரமமாகக் கீழ் வருணத்தாருடன் நடைபெறுமா, அல்லது நேப்பாளத்தில் இன்றும் நிலவிவருவது போல நிலவுமா, அல்லது வங்காளத்தும் வேறு சில இடங்களிலும் உள்ளவாறு ஒரே வகுப்பிலுள்ள பல பிரிவினர்களுக்குள் உள்ள ஒரே இனத்தாருடனேதான் நடக்கப்போகின்றதா, அதுவும் சுருக்கமான அளவிலுள்ள ஒரு சிறு எண்ணிக்கை உள்ளவர்களுடனேதான்

நடக்குமா? இவற்றிற்கெல்லாம் முடிவான விடை பகர்வது எளிதன்று. நாட்டு முறைகளின் வேறுபாடுகளை நோக்குங்கால், இது இன்னும் மிகுதியான இன்னல்களை நல்கக்கூடியதாயிருக்கிறது. ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒவ்வொரு தனி வழக்கம் உண்டு. அம் மட்டோ? நாட்டின் ஒரே பகுதியிலும் தனி வகுப்பின் வழக்கம் குடும்ப வழக்கம் என்றெல்லாம் உள்ளன அல்லவா? இவற்றிற்கிடையே உள்ள வேறுபாட்டின் அளவை யாரே விரித்துரைக்க வல்லார்! நடப்பதுதான் யாதோ?

நமக்கு வேண்டுவது யாதெனின், நம்மிடமில்லாத பொருளே—நம்முன்னோரிடமும் இல்லாத பொருளே—யவனர்களிடமிருந்த ஒன்றே; எதன் உயிர்த் துடிப்பினுல் உந்தப்பெற்று ஒரு மின்சார உற்பத்தி நிலையத்திலிருந்து வெளிக் கிளம்பி வருவது போன்று ஒரு சத்தி வெள்ளம் உலகம் முழுவதையும் உயிர்ப்பித்து வருகிறதோ அதுதான் நமக்கு வேண்டும். அத்தகைய பேராற்றல், அத்தகைய சுதந்தர தாகம், அத்தகைய தன்னம்பிக்கை, அத்தகைய அசைக்க வொண்ணுச் சகிப்புத்தன்மை, அத்தகைய செயலாற்றும் திறன்—இவைதாம் நாம் நாடுகின்ற பொருள்களாகும். எப்போதும் கழிந்தவற்றிற்கு நினைந்துருகும் சிந்தனையைச் சற்று அடக்கி வைத்து விரிந்த பார்வையை வருங்காலத்தை நோக்கிநெடுந்தூரம் செலுத்த வேண்டும். இன்னும் நமக்கு வேண்டுவது, உச்சி முதல் உள்ளங்கால் வரை – அடி முதல் முடிவரை – ஒவ்வோர் இரத்தக்குழாயிலும் அருஞ்செயல்களை விரும்பும் ராஜச உணர்ச்சியேயாகும்.

துறவேயன்றி அமைதி தருவது வேறு எது? ஒரு கணத்தில் அழியக்கூடிய உலக இன்பம் தருவதைக்காட்டிலும், மாளாத பெருநலம் அளிக்கும் ஒன்று மிகவும் சிறந்ததன்றோ? இதில் ஐயப்பாட்டிற்கு இடமுண்டோ? கலப்பற்ற தனி உள்ளத் தூய்மையைக்காட்டிலும்—சத்துவகுணத்தைக்காட்டிலும் வலிவுமிக்க ஆக்கம் உண்டோ? ஆன்ம ஞானப்பேரொளிக்கு முன் மற்றைய அறிவனைத்தும் அஞ்ஞான இருட்பிழம்புகளே என்பதுதான் உண்மை. சத்துவ குணத்தைப் பெற இவ்வையகத்தில் எத்தனை பேர்கள் பேறு பெற்றிருக்கின்றனர்கள் என்று நான் வினவுகின்றேன். பாரத நாட்டில் எத்தனை பேர் இருக்கின்றனர்? கூறுங்கள். 'நான், என்னுடையது' என்னும் எண்ணத்தை அறவே வேரோடு கல்லி எறிந்து, தங்களுக்குரிய எப்பொருளையும் துறக்கக்கூடிய உயர் வீரத்தைப் பெற்றவர்கள் எத்தனை பேர்கள் உள்ளார்கள்? பின்னர்

வருவனவற்றைக் குறித்து முன்னரே அறியக்கூடிய சத்தி படைத்த வர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? இத்தகைய வீர வாழ்வு நடத்தும் சான்றோர்களே வையகத்தின் இன்பங்கள் கண்ணிமைப் பொழுதில் மறைவன என்றும், அவை முற்றும் வீண் பெருமைகள் என்றும் அறிந்துகொள்வார்கள். கடவுளின் அளப்பரிய வனப்பை யும் சொற்கடந்த மாட்சிமையையும் சிந்தித்து, அவற்றில் வேரூன்றித் தங்கள் மெய்யையே மறந்துவிடக்கூடிய ஆன்மாக் கள்—மேலான உள்ளம் பெற்ற ஆன்மாக்கள்—எங்கே இருக் கின்றன? விரிந்த மக்கள் தொகுதியினுள் இத்தகையோர் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவுதான் இந்தியா முழுதிலுமே இருப்பார்கள். இச்சிறு தொகையினர் மோட்சம் அடைவதற்காகக் கோடிக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் இக்காலச் சமூகம் சமயம் இவற்றின் சக்கரத்தில் அகப்பட்டுக்கொண்டு அல்லலுற வேண்டுமா? அதனால் ஆகும் பயன் யாது?

மக்கள் சத்துவம் என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு சிறிது சிறிதாக அஞ்ஞானம் என்ற பேரந்தகாரத்தில்—'தமஸ்' என்னும் மாபெருங் கடலில்—மூழ்கிப் போகின்றார் களல்லவா? அதனை நீங்கள் கண் கூடாகக் கண்ணுறவில்லையா? அறிவு சிறிதளவும் இல்லாத மூடர்களும், தங்களுக்கு மேலான ஆன்ம ஞானம் அடையும் அவா இருக்கிறது என்று இயம்பிக் கொண்டு தங்களுடைய அறிவின்மையை மறைப்பது உங்கள் கண்ணுக்குப் புலப்படவில்லையா? உளம், உரை, செயல் இவற்றை யெல்லாம் கடந்த பரம்பொருளை அறியும் ஆற்றல் தங்கட்கும் இருக்கிறதாம்! எத்தனை உண்மையுடன் கூடியது இது? பிறவி முதற்கொண்டே சோம்பித் திரிந்துகொண்டிருந்தவன் தன் தகுதி யின்மையைக் காட்டிக்கொள்ளாது திடீரெனச் சந்நியாசியின் உடையைப் போர்த்திக்கொள்ள விரும்புவதாகச் சொன்னால், நாம் அவனை நம்பலாமா? விலங்கின இயல்புள்ளவர்கள் கடுந்தவ வேடம் பூண்டால், அது முன்னேற்றக் குறியாகுமா? ஒருவன் தனக்கு வல்லமை இல்லாமலிருந்தும், அது இருப்பது போலவும் ஏனையோரே குற்றமுடையவரென்று காட்டவும் முன் வருவானா னால், சில நூல்களை மனப் பாடம் பண்ணுவதே அறிவென்று கருதப்படுமேயானால், தெய்விக அறிவென்பது மற்றவர்களின் கருத்துகளைத் தின்று அசை போடுவதுதான் என்று ஆகி விடுமானால், மேலான மகிமை நம் முன்னோர்களின் பெயரைப்

பெருமையுடன் முழங்கிக்கொண்டே இருப்பதுதான் என்றுகு மானுல், நாடு முதிர்ந்த தமோ குணத்திலேயே நாளுக்கு நாள் ஆழ்ந்துகொண்டு வருகிறதென்று மொழிய வேறு சான்று ஏதேனும் வேண்டுமோ ?

ஆதலால், சத்துவம் அல்லது கலப்பற்ற தூய்மை என்பது நம் மிடமிருந்து நீண்ட தொலேயிலுள்ளது. நம்மிடம் யாதொரு திறமையுமில்லே; ஆனுல், தகுதி உள்ளவர்களாகத் திகழ ஆர்வம் மட்டும் இருக்கிறது; பரமஹம்ஸ நிலேயை எய்தக்கூடிய பெரு விருப்பம் சுடர் விட்டுத் திகழ்கின்றது. இத்தகையோர்கள் ராஜஸ குணத்திற்பழகி அருஞ்செயலில் சுறுசுறுப்பாய் ஈடுபடுவது நல மாகும். ஒருவன் ராஜஸம் வாயிலாகச் சென்ருலன்றிச் சாத்துவிக நிலேயை அடைவது என்பது இயலுமா ? போகத்தையோ இன்பத் தையோ முன்னரே துய்க்காமற்போனுல், யோகமோ அல்லது கடவுளோடு இரண்டறக் கலத்தலோ முடியாதென்பது திண்ணம். போகத்தைப் புறக்கணித்து அவற்றின்மீது வெறுப்பு ஏற்பட்டு, அவற்றின் மோக வலேகளே அறுக்காமற்போனுல் துறவு வாழ்க்கை எய்தப் பெறுமோ ? உன்னிப் பாருங்கள் !

இதற்கு மாருக, ரஜோகுணமோ, எழுந்தவுடன் மாயக்கூடிய இயல்புள்ளது; உலர்ந்த பனேயோலேகளில் தீப்பற்றி யெரியுமாறு கொழுந்து விட்டெரிந்து அக்கணமே அவிந்துபோய்விடும். சத்தி யத்தின் இருப்பும் நித்தியப் பொருளின்—அதாவது அழியாத மெய்ப்பொருளின் இருப்பும்—ஏறக்குறைய அண்மையிலேயே(அடுத் தடுத்தே) உள்ளன. இதற்கு மாருன ரஜோகுணம் மேலோங்கி நிற்கும் நாடு அத்துணே ஆயுளுள்ளதாக இராது; ஆனுல், சத்துவம் மேலோங்கப் பெற்றுள்ள நாடு, சொல்லப்போனுல் அமரத்துவம் வாய்ந்துள்ளதாகும். இந்த உண்மைக்குச் சான்று அவ்வந்நாட்டு வரலாறுகளே.

இந்தியாவிலே ரஜோகுணம் இல்லேயென்றே இயம்பலாம். அது போன்றே மேலே நாடுகளில் சத்துவகுணம் அமைந்திருப்ப தில்லே. ஆதலால், இந்தியாவிலிருந்து பெருகிவரும் சத்துவமாம் பெருவெள்ளம் அல்லது ஞானச் சுடர் வெள்ளத்தை ஏற்பதைப் பொறுத்தேதான் மேலே நாட்டாரின் உண்மை வாழ்க்கை என்பது நிகழும்; அதேபோல நம் தாமசத் தன்மையை அதன் எதிரிடைக் குணமான ராஜஸ குணத்தினுல் வென்ருலன்றி, நாம் ஒருபோதும் இவ்வுலக நன்மையையோ, இல்வாழ்க்கையின் நலத்தையோ, இப்

பிறவியில் பெற இயலாது என்பதும் திண்ணம். இன்னும் நம் மறுமை வாழ்க்கையிற் சம்பந்தப்பட்ட மிகச்சிறந்த குறிக்கோள் களையும் விருப்பங்களையும் அடையும் பாதையில் கணக்கில்லாத மாபேரின்னல்களையும் தடைகளையும் நாம் எதிர்கொள்ள நேரிடும் என்பதும் நிச்சயமே.

'உத்போதன்' பத்திரிகையின் ஒரே இலட்சியம் மேலே மொழிந்துள்ள இரண்டு வகையான சத்திகளின் பிணைப்பையும் எம்மாலியன்ற அளவு ஆதரிப்பதே.

அவ்வாறு செய்வதில் பெருங்கேடு உள்ளது என்பதும் உண் மையே. இந்த மேலை நாட்டு மாபேரலையாம் ஊக்கத்தால் மக்களால் பெரிதும் போற்றப்படும் சிறந்த நன்மணிகள்—ஊழிக்காலங்க ளாக மிகுதியான பெருமுயற்சிகளால் ஈட்டிய செல்வமெல்லாம் அடித்துக்கொண்டு போகப்படுமோ என்னும் அச்சம் நமக்கு உளது என்பது உண்மையே. அதன் வலிய நீர்ச்சுழியில் விழுந்து பாரத நாடே தன்னை மறந்து உலகப் பொருள்களில் காணும் போராட்டத் தின் செருக்களமாகிவிடக்கூடாதே என்னும் அச்சந்தான் இருக் கிறது. மேலும், இந்நாடு அடையக்கூடாத அயல் நாட்டு வழக்கங் களைப் பின்பற்ற நினைந்து அவற்றை நடித்துவிடக்கூடும். நம் நாட்டு வழக்கங்களையும் இலட்சியங்களையும் வேருடன் களைந்து விட்டு இவ்வாழ்க்கையில் நாம் பெரியனவாக எண்ணியுள்ள யாவற் றையும் இழந்தும் மறுமையிலும் அழிவுற்ருல் என்ன செய்வது என்னும் ஓர் அச்சம் மனத்தில் குடிகொள்ளத்தானே செய்யும்? இத்தகைய இன்னல்களையெல்லாம் விலக்கிவிட நம் நாட்டின் அறி வுச் செல்வத்தை நாம் எப்பொழுதும் நம் கண்முன் வைத்திருக்க வேண்டுவது முக்கியமாகும். அவ்வாறு செய்யும்பொழுது பாமர மக்கள் முதற்கொண்டு எவனும் தன் பண்டைய பரம்பரைச் சொத்து என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வகை செய்து வர லாம். அவ்வாறு நாம் செய்தல் வேண்டும். அத்துடன் வெளிநாடு களினின்றும் வரக்கூடிய எந்த ஒளியினையும் விலக்க நினையாது வர வேற்க மனமுவந்து கதவுகளை அகலத் திறந்து வைத்திருக்க வேண்டும்; ஞானவொளிப் பிழம்புகள் ஏராளமாக வரவிட வேண் டும். ஒளிக்கதிர்க் கற்றைகள் நான்கு திசைகளினின்றும் வரட்டும்; 'சோ' என்று இரைந்துகொண்டும் எழட்டும். மேலை நாட்டிலிருந்து அறிவொளிக் கதிர் முகில்கள் மிகுந்தும் நெருங்கியும்பொழியட்டும். அதனுல் என்ன? வலியிழந்து கெட்டுப் போனவை மறைய வேண்டு

வனவே. அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும்? அவற்றைக் கொண்டுதான் நாம் என்ன புரிய முடியும்? அவை மறைந்தே போகட்டும்! அதனுல் நமக்கு என்ன தீங்கு விளையப் போகிறது? எது வன்மையுடன் கூடியதோ, எது வலுத்தரத்தக்கதோ, அது அமர முத்திரை பெற்றுத் திகழும். அதனை யாரால் அழிக்க இயலும்?

தெய்வப் புனித ஆருன கங்கையினைப் படைக்கத் தக்கவை, கொப்பளித்து வெளிப்படும் எண்ணிறந்த ஊற்றுகளும், பேரிடி போல முழங்கும் பெரிய நீர் வீழ்ச்சிகளும், பனிக்கட்டிகளைப் பெரு வாரியாக இழுத்துச் செல்லும் சிற்ருறுகளுமாகும். எண் கடந்து இவை யாவும் இமயப் பெருவரையின் பனிச் சிகரங்களினின்றும் இழிந்து வந்து ஒன்ருய்ச் சேர்ந்துகலந்துவரவேண்டியிருக்கின்றன! இவை யாவும் திரண்டு குமுறிக்கொண்டு கடுமையான விரைவுடன் பாய்ந்து கடலை நோக்கியே ஓடுகின்றன. அதுபோலவேதான் பல் வேறு எண்ணங்களும் கருத்துகளும் எத்தனையோ சத்திகளோடு சேர்ந்து பாய்கின்றன. கணக்கிலாக் கருத்தோட்டங்கள் எண்ணரிய ரிஷிகளின் இதயங்களிலிருந்து பெருகுகின்றன. எத்தனையோ உலகப் பேரறிஞர்களாகிய மலைகளினின்றும் அறி வுரை யாறுகள் வழிந்தோடி வருகின்றன. இவை பாய்ந்து வந்து கரும பூமியாகவும் மானுடப் பெருமுயற்சிகள் உருவாகும் அரங் காகவும் அமைந்துள்ள இந்திய நாட்டினைச் சூழ்ந்தும் பரவியும் உள்ளன. பெருவிந்தையிலும் விந்தையைப் பாருங்கள்! ஆங்கில அரசாட்சியின் கீழ் எப்படி மின்சாரம், இருப்புப் பாதை, நீராவிக் கப்பல்—இவை விளங்கும் நாட்டில் பல திறப்பட்ட உணர்ச்சிகள் பழக்க வழக்கங்கள் நாட்டு முறைகள் அறநெறிகள் எல்லாம் மின்னல் விரைவில் நாட்டில் பரவி வருகின்றன! அமுதம் தோன்று கின்றது. அதனுடன் நஞ்சுந்தான் பிறக்கின்றது. நன்மையும் தீமை யும் கலந்தே வருகின்றன. சீற்றத்தில் எழும் பகையும், இரத்தம் சிந்துதலும் நிகழத்தானே நிகழும்? இப்பேரலையைத் தாண்டுவது இந்துக்களால் இயலாது. இயந்திரங்களாய் வடிகட்டப்பட்ட நீரில் தொடங்கி எலும்புச் சாம்பரால் சுத்தஞ்செய்யப்பட்ட சருக்கரை வரைக்கும் வரும் அப்பொருள் பெரும்பாலாரான மக்களால் தட்டுத் தடங்கமின்றி அமைதியுடன் பயன்படுத்தப்பட்டுதான் வருகின் றது. வாய் மொழியாக மட்டும் ஏதோ மறுப்பது போன்று பாசாங்கு செய்யப்பட்டு வருகின்றது. பையப் பையச் சட்டத்தின்

வலுவினால் நம்மால் போற்றப்பட்டு வரும் பற்பல நாட்டு முறைகள் வழக்கிழந்துகொண்டு வருகின்றன. இதனை எதிர்க்க நமக்கு ஆற்றல் இல்லாமற் போய்விட்டது. நமக்கு ஏன் அதிகாரம் இல்லை? வாய்மை வலியிழந்து விட்டதா? உண்மையே வெற்றி யுறும்; பொய்ம்மையன்று. இந்தத் தெய்விக வேத வாக்கியம் பொய்த்துவிடுமா? யார் கண்டார்கள்! மேலை நாட்டு ஆதிக்கம் அல்லது மேலை நாட்டுக் கல்வி ஆகிய பெருவெள்ளத்தால் அள்ளி அடித்துக்கொண்டு போகப்பட அந்த ஆசாரங்களே கள்ள ஒழுக்கங்களாய் இருந்தனவோ, என்னவோ! யார் அறிவர்! இவை ஆசாரங்களல்ல; அனுசாரங்களாகவே இருக்கக்கூடுமல்லவா? இந்த விஷயமும் சிந்தனைக்கு உணவுதானே?

बहुजनहिताय बहुजनसुखाय

பல மக்களின் நன்மையின்பொருட்டு, பலரது இன்ப வாழ்வுக் காக—இதனைக் குறியாகக் கொண்டு தன்னலமற்ற முறையில் அன்பும் வணக்கமும் மரியாதையும் நிறைந்த உள்ளத்துடன் ஞானவான்களாயும் பரந்த இதயமுள்ளவர்களாயும் நம்தாய் நாட்டை அன்புடன் நேசிப்பவர்களாயுமுள்ள மாந்தரை, 'உத் போதன்' இவ்விஷயங்களை நன்கு ஆராய்ந்து தெரிந்து ஓர்ந்து சிந்தித்துப் பார்த்துப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகளைக் காண வேண்டுமென்று வருந்தி அழைக்கின்றது. தன்னிடம் யாதொரு வெறுப்பும் பகையும் இன்மையால் தனி மனிதன்மீதோ வகுப்பின் பிரிவினர்மீதோ வசை மொழிவதினின்றும் விலகியிருப்பதால் அது தன்னையே எல்லா வகுப்பினரின் தொண்டுக்கும் அர்ப் பணித்துக்கொண்டிருக்கிறது.

கருமம் புரிந்து வரவே நமக்கு உரிமையுண்டு; அதன் பலன் இறைவன் கையதே. நாம் பின் வருமாறு வேண்டிக்கொள்ளு வோம்: "என்றும் நிலைத்து நிற்கும் முழுமுதற் கடவுளே, எங்களை ஆன்மிக மயமாகச் செய்தருளும்; எல்லா வல்லமையுமுள்ள எம் பிரானே, எங்களை வலிவு படைத்த வீரர்களாகச் செய்வீராக. பேராற்றல் அமைந்துள்ள கோவே, எங்களைப் பேராற்றல் உள்ள வர்களாகச் செய்வீராக."

நம் இப்போதைய சமுதாய நலப் பிரச்சினை

[*1900-ஆம் ஆண்டு, டிசம்பர்த் திங்கள், 23-ம் நாள், தேவ காரி விருந்து (வைத்தியநாதம்) வங்காளி மாதான ஸ்ரீமதி மிருணளினிக்கு வங்க மொழியில் எழுதிய கடிதத்தின் மொழிபெயர்ப்பு இது.*]

स ईशोऽनिर्वचनीयप्रेमस्वरूप:

சொற்பதம் கடந்த அன்பியல் உள்ளவர் ஆண்டவர். நாரதரால் புலப்படுத்தப்பட்ட இந்த இறை இயல்பு வெளிப்படுகிறது என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதுவே, என் வாழ்வின் அசையா நம்பிக்கையாகும். பலருடைய தொகுப்பே 'சமஷ்டி' எனப்படுவது. அச்சமஷ்டியிலுள்ள ஒவ்வொரு மனிதனும் 'வியஷ்டி' அல்லது பகுதி எனக் கூறப்படுவன். நீ, நான், விலங்கு, பறவை, புழு, பூச்சி, மரம், கொடி, புல், கோள், விசும்பில் தோன்றும் விண்மீன்கள் ஆகிய ஒவ்வொன்றும் தனித் தனி வியஷ்டியே. இப்பிரபஞ்சம் சமஷ்டி எனப்படுவது. இதற்கு வேதாந்தத்தில் விராட்டு, ஹிரணியகர்ப்பம், ஈசுவரன் என்னும் பெயர்களும், பிரம்மா விஷ்ணு தேவி என்னும் திருநாமங்களும் புராணங்களில் வழங்கிவருகின்றன. வியஷ்டிக்குத் தனிச் சுதந்தரம் உண்டா, இல்லையா? அப்படி உண்டானல், அதன் பயனென்ன? 'வியஷ்டி' தன் முழுச் சுதந்தரத்தையும், சங்கற்ப சத்தியையும், விருப்பத்தையும் சமஷ்டிக்காகவே துறக்க வேண்டாவா? இவைதாம் ஒவ்வொரு சமூகத்திலும் கிளர்ந்தெழும் நிலையான பிரச்சினைகள். சமுதாயம் எங்குமே இவற்றிற்கு விடைகள் காண முயற்சிகள் செய்துகொண்டே யிருக்கிறது. பெரிய பெரிய அலைகள் போன்று இவை மேலைநாட்டுச் சமூகத்தைக் கலக்கிக்கொண்டிருக்கின்றன. சமூக மேலதிகாரத்திற்குத் தனி மனிதனது சுதந்தரத்தைத் துறக்குமாறு ஏவும் கோட்பாட்டிற்கே 'சோஷலிசம்—சம உடைமை' என்னும் பெயர் வாய்த்திருக்கிறது.

பரம்பரையாக வரும் சமயங்களின் வற்புறுத்தலுக்கு இசைவது, கட்டுப்பாடுகளின் மகிமையை உணர்வது—இவ்வண்ணம் தன்னலத் தியாகத்தை வற்புறுத்தித் தனி மனிதனை அழியாத அடிமையாதலின் பயனுக வந்தவற்றிற்கு மேலான சான்ருக

மிளிர்கின்றது நம் தாய்நாடு. இந்நாட்டில் மாந்தர் பிறப்பதும் சாத்திர விதிப்படியே. அவர்கள் இட்ட திட்டங்களின்படியே வாழ்க்கை முழுதும் உண்டு பருகுகிருர்கள் ; திருமணம் போன்ற விஷயங்களிலும் விதிப்படியே ஒழுகி வருகின்ருர்கள். ஏன் ? சுருங்கக் கூறின், சாத்திரங்கள் விதித்த ஆணைப்படியேதான் இறக்கிருர்கள் என்றும் கூறலாம். கடுமையான இக்கட்டுப்பாடு ஒரு பெருநன்மையை விளைவிப்பதைவிட மிக்க கேட்டுடன் கூடியதாகவே உள்ளது. இதன் நற்பயன் யாதெனில், வழிவழியாக—பல தலை முறைகளாக—பயின்று வருவதால் சிறிய முயற்சியாலேயே ஒரு சில காரியங்களை எளிமையாக மக்களால் இயற்ற இயலுகிறது. மூன்று சிறு மண் கட்டிகளை வைத்த அடுப்பினுல் சில விறகுத் துண்டுகளைக் கொண்டு இந்நாட்டிலுள்ள சமையற்காரர் ஆக்கிய கறி வகைகளையும் அமுதம் போன்ற அரிசிச் சோற்றையும் வேறெங்கேயும் காண இயலாது. பழங்காலத்து ஒரே ரூபாய் பெறும் எளிய தறியால் கால்களை ஒரு குழியில் வைத்துக்கொண்டு துணி நெய்து, இந்நாட்டிலேயே கஜம் ஒன்றிற்கு இருபது ரூபாய் வீதம் விலையுள்ள நூலாடைகளைச் செய்துவிடலாம். கிழிந்த பாய், மண்ணுலான அகல் விளக்கு, அதுவும் விளக்கெண்ணெயால் எரிக்கப் பெறுவது—இத்தகைய எளிய சாதனங்களாலான பொருள்களைப் பயன்படுத்தியே வியக்கத்தக்க புலமை வாய்ந்தவர்கள் தோன்றியுள்ளார்கள். வனப்பற்ற கூன் விழுந்த இல்லாளிடம் மிக்க பொறுமையுடன் கூடிய பற்று வைத்த கணவனும், அவமதிப்புக்கே உரிய ஒரு கயவனுக்கு வாழ்க்கைப்பட்டு அவனிடம் வாணுள் முழுதும் அடிமை வாழ்க்கை வாழ்ந்த அன்புடைய மனைவியும் இந்நாட்டகத்தேதான் இருக்க இயலுமல்லவா ? இவற்றுடன் நல்ல பண்பின் விரிவு முடிந்தது. உயிரற்ற பொறிகள் போன்று உந்தப்பட்ட மக்களால் இவையெல்லாம் ஆக்கப்படுகின்றன. அவர்களிடம் உள்ளத்தில் இயங்கும் சுறுசுறுப்பில்லை; இதயத்தின் விரிவில்லை, உயிர்த் துடிப்பில்லை. நம்பிக்கையின் உயிரோட்டம் இல்லை; சங்கற்ப சத்திக்கு வலிமையூட்டி எழுப்பும் தூண்டுதல் இல்லை; மிக்க இன்பமளிக்கும் அனுபவம் ஒன்றும் இல்லை; ஆழ்ந்த துன்பத்தின் அறிகுறியுமில்லை; புதுமை காணும் கிளர்ச்சியுமில்லை; புதுமைக்கு ஏங்கி நிற்கும் விழைவுமில்லை; புதியனவாகத் தோன்றுவன வற்றிற்குப் பாராட்டுமில்லை; மன இருளாம் முகில்கள் அகலுவதில்லை; இளம்பரிதியின் ஒளி மிக்க ஓவியம் அவர்

களுடைய இதய மாசை நீக்கவில்லை. இதனினும் மிக்க நலமுள்ள நிலை சுடர் விட்டெழும் என்னும் உண்மை உள்ளத்தில் தோன்றித் தளிர்ப்பதில்லை; தோன்றினும், பிறரை நம்புமாறு செய்யும் ஆற்றல் அதற்கு இலதாய்விடுகின்றது; அப்படியே உறுதியான மனம் இருப்பினும், முயற்சி இருப்பதில்லை; முயற்சி இருந்தாலும், மடி—ஊக்க மின்மை—அம்முயற்சியை மாய்த்துவிடுகின்றது.

விதி முறைப்படி நடப்பதால் மட்டுமே மேன்மையடைவது ஒரு தலையெனின், வழிவழியாகப் பல தலைமுறைகளில் வந்துள்ள வழக்கங்களையும் விதிகளையும் உறுதியுடன் பின்பற்றுவது மிக உயர்ந்த நன்னெறி எனின், மரத்தைக்காட்டிலும் அறவழியில் நடப்பவர் யார்? புகை வண்டியினும் பத்தியுள்ள தூய்மை நிறைந்த ஞானி யார்? ஒரு கல்லானது இயற்கையின் விதியை மீறி நடப்பதை நாம் என்றுவது பார்த்திருக்கிறோமா? ஆடு மாடுகள் எப்போதேனும் பாவச் செயலைப் புரிந்து வந்ததை யாரேனும் கண்டுள்ளனரா?

மிகப் பெரிய நீராவிக் கப்பல்—வலிமை மிகுந்த வியன் புகை வண்டியின் இயந்திரம்—இவற்றிற்கு உயிர்ச் சத்தி யாதொன்றுமில்லை; எனினும், இவை நகர்கின்றன; திரும்புகின்றன; ஓடுகின்றன. ஆனால், இவை அறிவின்றியும் இயங்குகின்றன. அதோ பாருங்கள்! அச்சிறு புழுவானது, தன் உயிரைக் காக்குமாறு இரும்புப் பாதையினின்றும் சற்று முன் விலகிச் சென்றதே! அது ஏன் அறிவுடன் கூடித் திகழ்கின்றது? இயந்திரத்தில் சங்கற்பம் செய்யும் சத்தியின் வெளிப்பாடு இல்லை; அது சட்டத்தினை மீற எண்ணுவதில்லை; புழு, சட்டத்தை மீறும் நினைப்பைக் கொள்ளுகிறது; ஆதலால், அது அறிவாற்றலின் ஒளியோடு இலங்குகின்றது; வெற்றி பெறினும், பெறாது போயினும், சட்டத்தை மீறும் நினைப்பைக் கொள்ளுகிறது. இதனால், இன்பம் வளரும்போது சங்கற்ப சத்தி தோன்றும் அளவிற்குச் சீவன் உயிரையுடையது என்பது பெறப்படுகிறது. எங்கும் வெற்றிகரமாக மிகுதியாகத் தோன்றும்போது அந்த அளவிற்கு அது உயர்ந்த சீவனாக அமைகின்றது. இறைவரின் இச்சையே உறுதி பயப்பதாக—முற்றும் பயனுடையதாக—இருப்பதால், அவரே முழு நிறைவுடையவர்; மிகவும் சிறந்தவர்.

கல்வி என்பது யாது? அது ஏட்டு அறிவு மட்டுமா? அல்லது, பல திறப்பட்ட ஞானமா? அதுவுமன்று. மனவுறுதியின்

ஓட்டத்தையும் அதனை வெளிப்படுத்துவதையும் ஒரு கட்டுப் பாட்டுக்கு வயமாக்கும் பயிற்சியே கல்வி எனப்படுவது. இப்பொழுது உன்னிப் பாருங்கள். புறமன ஓட்டத்தைத் தலைமுறை தலைமுறை யாகத் தடுக்க உதவிய கல்வி பெரும்பாலும் மாய்ந்துவிட்டது. பழைய கருத்துகள் ஒவ்வொன்றாக மறைந்து போயின. புதிய கருத்துகளின் ஆட்சியைப் பற்றிக் கூறவேண்டுவதில்லை. மனிதனை இயந்திரமாகச் செய்யும் கல்வி கல்வியாகுமா? சிந்தித்துப் பாருங்கள்! ஓர் இயந்திரம் போல நல்லவனாயிருப்பதைவிட, ஒருவன் தனது சுதந்தர சங்கற்பத்தால் உந்தப்பட்டுத் தீமை செய்தலும் நலமே ஆகுமன்றோ? இதுதான் எனது எண்ணத்தின் வண்ணம். மேலும், மண்ணாங்கட்டிகளைப் போன்றும் குவிக்கப் பெற்ற கூழாங்கற்களைப் போன்றும் தொகுக்கப் பெற்ற மக்கள் இனத்தைச் சமூகம் என்பது பொருந்துமா? இத்தகைய சமுதாயம் எப்படி நலம்பெற இயலும்? நன்மை கிடைக்கக் கூடுமானால் நாம் பல நூற்றாண்டுகளாக அடிமைகளாகவே வாழ்ந்து வருவதற்கு மாறாக உலகிலேயே மிகச்சிறந்த நாட்டினராய் இருந்திருப்போமே! இந்த இந்திய பூமி அறிவின்மைக்கு நிலையமாய் இருந்து வரு வதற்குப் பதிலாக ஞானத்தின் என்றும் வற்றாத பேரூற்றாய் இருந்திருக்குமே!

தன்னல மறுப்பு—துறவு—ஓர் அறமன்றோ? ஒருவருடைய இன்பம், ஒருவருடைய சுகவாழ்வு இவற்றைப் பிறருடைய நலத்திற் காகத் துறப்பது மிக உயர்ந்த அறமாயிற்றே! ஆம்! ஆனால், வங்க முதுமொழி கூறுவதைப்போல, 'துடைத்துத் தேய்ப்பதனால் அழகு மலர்ந்துவிடுமா, என்ன!' முயற்சியினாலும் வலுகட்டாயத் தினாலும் அன்பு அரும்பிவிடுமா? என்றுமே வறுமையே உரு வெடுத்த ஒரு பிச்சைக்காரன் துறப்பதில் ஏதேனும் பொரு ளுண்டா? ஐம்புலச் சத்திகளையெல்லாம் இழந்துவிட்டவன் புலன டக்கம் கொள்கின்றான் என்று சாற்றுவதில் ஏதேனும் பொருளோ, புகழோ, புண்ணியமோ உண்டா? மேலும், உயர்கருத்து இன்றி இளகிய நெஞ்சம் பெற்றிராத—பெயரிலும் புகழிலும் பொருளிலும் ஆசை இல்லாத சமூகம் என்பதனையே அறியும் ஆற்றலில்லாத ஒரு மனிதனின் தியாகம் தியாகமாகிவிடுமா? கைம்பெண் ஒருத் தியை உடன்கட்டை ஏறுமாறு வற்புறுத்துவதால் அவளுக்குக் கண வனிடமுள்ள அன்பு விசுவாசங்கள் வெளிப்படுமா? மூட நம்பிக் கையை வளர்த்து வந்த மக்களைத் தரும காரியங்கள் ஆற்றுமாறு

செய்வதேனே? நான் இயம்புகின்றேன்; அவர்களை விடுதலை செய்வீர்களாக! உங்களால் இயன்ற மட்டும் பிறருடைய தளைகளை அறுத்தெறிவீர்களாக! மாசு, மலங்களை அகற்றிவிடுமா? ஒரு தளை மற்றொரு தளையை நீக்கிவிடுமா? இதற்கு ஒரு சான்றேனும் காட்டக் கூடுமா? பொது மக்களின் இன்பத்திற்காக, உங்களுடைய சுகத்திற்காக அமைந்த ஆசைகளைத் துறப்பது எப்போது? அப்போது நீங்கள் ஒரு புத்தராய்விடுவீர்கள். இது நெடுந்தொலையிலுள்ளது. கொடுமைதான் இதற்கு வழியென நினைக்கின்றீர்களா? நம் கைம்பெண்கள் எவ்வளவு தன்னல மறுப்புள்ளவர்களாய்த் திகழ்கின்றனர்கள்! இளம்பெண் மணங்கள் எவ்வளவு வனப்பு வாய்ந்தவையாயும் இன்பமுள்ளனவாயும் இருக்கின்றன? இப்படிப் பட்ட வழக்கம் வேறெங்கேனும் இருத்தல் கூடுமா? இதில் அருங் காதலன்றி வேறெதுவும் அமைதல்இயலுமோ! இப்படிப்பட்ட கடைப் பட்ட நாயின் மெல்லிய குரைத்தலே வெளியிலே பரவி வருகின்றது. ஆண் மக்களைப்பற்றிய கவலையே இல்லை. அவர்கள், அதிகாரம் செலுத்தும் ஆண்மையுடையவர்கள் ஆயிற்றே! அவர்களுக்குத் தன்னல மறுப்பே தேவையில்லை. பிறர்க்குத் தொண்டு செய்வதை விட வேறு அறம் உண்டோ? இது பிராமணர்களுக்கு வேண்டுவதில்லை. இதை மற்றவர்கள் ஆற்ற வேண்டும். சமூகத்தோடு உறவு கொண்டாடுதற்பொருட்டு இந்த நாட்டில் பெற்றோர்களும் உறவினர்களும் தங்கள் சேய்களின் நலங்களை இரக்கமின்றி மாய்க்கின்றனர்கள். தலைமுறைகளாகக் கற்ற இந்தப் பெருங்கல்வி அவர்களுடைய இதயத்தை இரும்பினும் கடிதாகச் செய்துவிட்டது. இவ்வண்ணம் நடந்து கொள்ளுவது பழக்கத்தால் மிகவும் எளிதாய் விட்டதைக் காண்கிறோம். ஆண்தகையே தன்னல மறுப்புள்ளவனாகத் திகழக்கூடும். ஒருவன் கசையடிக்குப் பயந்து அருவியெனப் பாய்கின்ற கண்ணீரை ஒரு கையால் துடைத்துக்கொண்டே மற்றொரு கையால் ஈகின்றான். இப்படிப் பொருள்களை வழங்குவதால் பயன் யாது? மன்னுயிரனைத்தையும் அன்பால் ஓம்பும் உயர்ந்த நிலை மிகவும் சேய்மையிலுள்ளது. இளஞ்செடி வேலியிட்டுநன்கு காக்கப்படவேண்டும். தன்னலமின்றி ஏதேனும் ஒன்றின்மீது அன்பைச் சொரியக் கற்றுவிட்டால், படிப்படியாக வியன் பிரபஞ்ச அன்பைப் பெற இயலும். நாம் விரும்பிப் போற்றும் தெய்வத்தின்மீது பத்தி அமைந்துவிடின், விராட்டின்மீதும்—எங்கும் பரவிய பரம் பொருள்மீதும்—நம் அன்பு விரியும்.

மற்றொருவனுக்காக ஒருவன் தன்னலத்தைத் துறக்க ஆயத்த மாயிருக்கும் தருணத்திலேதான் அவன் சமூகத்துக்காகத் தான் துறவு பூணப்போவதாகக் கூறிக்கொள்ளலாம். விருப்புள்ள செயலே பற்றற்ற செயலுக்கு ஏற்ற வழி. முதலில் விருப்பமே இல்லாது போகுமாயின் பற்றைத் துறப்பது எப்படி இயலும்? அதன் பொருள் தான் என்ன? இருளே இல்லாமற் போய்விடும்போது ஒளிக்குப் பொருள் உண்டோ!

அன்னையீர், கவலைகொள்ளாதீர். மாபெருமரத்தின் கீழே கடும் புயல் மோதுகின்றது. தீயைக் கிளறுவது அதனை நன்றாகக் கொழுந்து விட்டு எரியச் செய்வதற்காகவே. தலையில் தாக்குண்ட அரவம் படமெடுக்கின்றது. இப்படியே அடுக்கிக்கொண்டு போக லாம். நெஞ்சு புண்பட்டு வேகும் போதும், துன்பம் மனத்தைத் துளைக்கும்போதும், வெந்துயர்ப்புயல் எங்கணும் வீசி அடிக்கும் போதும், இனி ஒளியே மறைந்துவிடும் போலத் தோன்றும் போதும், நம்பிக்கைச் சுடரும் உள்ளத்து உரமும் மிகுதியாக இழந்துவிட்ட போதும், அகத்துறையும் பேரான்ம ஒளி இலங்கத் தான் இலங்குகின்றது. செல்வச் செழிப்பின் மடியிலே தாலாட்டப் பட்டவன்—ரோஜா மலர்ச் சேக்கைமீது கண்வளர்கிறவன்—உல கத்துயர் கண்டு கண்ணீர் சொரியாதவன்—சிறந்த சான்றோனாய்த் திகழக்கூடுமோ? உள்ளப் பேரான்ம ஒளியை அலரச் செய்ய இய லுமோ? நீங்கள் அழுவதற்கு அஞ்சுகின்றீர்கள். கண்ணீர் வடி யுங்கள். கண்ணீர் கண்களின் மாசைத்துடைத்து உள்ளொளி பெருக்கும். மெய்ப் பொருளின் பெருங்காட்சி முன்—அதன் பேரொளி முன்—மனிதன், விலங்கு, மரம் எல்லாம் கரைந்து மறைந்துவிடும். எங்கும் இறையொளி அரசு செலுத்தக் காண் பீர்கள்.

அக்கடவுளையே எங்கும் பார்ப்பதால் ஒன்று ஒன்றை நலிய இடமுண்டோ? இப்படி நோக்குவதால் ஒருவன் தான் அடைய வேண்டிய எல்லையை—பேரின்ப வீட்டை—நண்ணுகின்றான்.

பொது மக்களுக்கு நாம் ஆற்ற வேண்டும் கடன்

[1894-ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 23-ஆம் நாள், சிக்காகோவிலிருந்து மேன்மை தங்கிய மைசூர் மகாராஜாவுக்குச் சுவாமிகள் எழுதியுள்ள கடிதம்.]

எல்லாம் வல்ல ஸ்ரீ நாராயணர் உங்களுக்கும் உங்களைச் சார்ந்தவர்களுக்கும் ஆசி பல அருள்வாராக! மேன்மை பொருந்திய உங்களுடைய் அன்பார்ந்த உதவியாலேதான் நான் இந்நாட்டுக்கு வரமுடிந்தது. இதற்கிடையே இங்கு நான் அறியப்பட்டவனாகிவிட்டேன். இந்நாட்டில் தரும சிந்தனையுள்ள மக்கள் எனக்குத் தக்க ஆதரவையும் நல்விருந்தையும் நல்குகின்றனர்கள்; என் தேவைகள் யாவற்றையும் அளித்துப் பூர்த்தி செய்து வருகின்றனர்கள். இஃது ஒர் அற்புதமான நாடு. இந்நாட்டினரும் பல வகைகளில் விசித்திரமானவர்கள். நாள்தோறும் நடக்கும் செயல்களில் இந்த நாட்டினர் போல எந்த நாட்டினரும் இயந்திரங்களைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இங்கு எல்லாம் இயந்திர மயமே. தவிர, உலக மக்கள் தொகுதியின் எண்ணிக்கையில் இவர்கள் இருபதில் ஒரு பங்கினர்களாகத்தானிருக்கிறர்கள். என்றலும், இவர்களுடைய செல்வமோ, உலகச் செல்வத்தில் ஆறில் ஒரு பங்கு ஆகும். இவர்களுடைய பொருட்பெருக்கத்திற்கும் போகப் பொருள்களுக்கும் ஒர் எல்லையே இல்லை போலும்! அவ்வாறிருந்தும், பொருள்களின் விலைவாசியோ, மிகவும் அதிகம். உழைப்பின் கூலி உலகத்திலேயே இங்கேதான் மிகுதியாயுள்ளது; அப்படியிருந்தும், தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் உள்ள உறவு முறை அவ்வளவு சீராய் இல்லை; மிகுந்த போராட்டத்துடன் கூடினதாகவே இருக்கிறது.

அமெரிக்காவில் இருப்பது போன்று மகளிர்க்கு வேறெங்கும் அவ்வளவு சுதந்தரம் இல்லை. அவர்கள் எல்லாவற்றையும் தாங்களே மெல்ல மெல்ல ஏற்று வருகிறர்கள். அது ஒரு விசித்திரமான செய்தியன்றோ? கற்றுப் பண்பாடுற்ற பெண்டிரைக்காட்டிலும் அத்தகைய ஆடவர் குறைந்த அளவிலேதானுள்ளனர். ஆனல், பெரிய மேதைகளின்—பேரறிஞர்களின்—எண்ணிக்கை பெரும்பாலும் ஆடவர்களிடமே இருந்துவந்திருக்கின்றது. மேலைநாட்டினர் நம்மை எத்துணை குறை கூறினும், அவர்கள் நம்மினும் பெரியதோரளவில் வகுப்பு வேறுபாட்டுடனேதான் உள்ளார்கள். ஆனல், அவர்க

ளுடைய வருணம் செல்வத்தையே பொறுத்துள்ளது. அமெரிக்கர் கூறுமாறு 'எல்லாம் வல்ல டாலர்' எதனையும் இங்கே செய்யக் கூடும். ஆழிசூழ் உலகத்தில் எந்த நாட்டிலும் இத்தனை சட்டங்கள் இல்லை; ஆனால், அதே சமயம், அவற்றை வேறெங்கும் இவ்வளவு புறக்கணிப்பதுமில்லை. மொத்தத்தில் நம் இந்துக்கள் மேலைநாட்டினரைக்காட்டிலும் எத்தனையோமடங்கு நல்ல நெறியில் வாழ்பவர்கள். சமயத் துறையிலும் இங்கே வஞ்சனை புரிகின்றூர்கள்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகின்றூர்கள்; ஒழுங்கற்ற நடத்தையும் இவர்கள் வாழ்க்கையில் புகுந்துவிட்டது; இவர்கள் சமய நறவுண்டு பித்தேறிவிடுகின்றூர்கள். நிதானமுள்ளவர்கள், அவர்களுடைய மூட நம்பிக்கையை வளர்க்கும் மதத்தில் வெறுப்புக் கொண்டு புதிய அறிவொளியின் பொருட்டு இந்தியாவையே நோக்கியுள்ளார்கள். தாங்கள் நேரில் காணுமையால் அதன் ஆழத்தை அளந்து அறிய இவர்களால் இயலவில்லை. அத்துணை ஆவலுடன் இவர்கள் புனித வேதங்களின் மிகவுயர்ந்த ஒளி பொருந்திய சிறு துணுக்குகளையும் பற்றிக்கொள்ளுகிறூர்கள். இக்கால விஞ்ஞானங்களின் எண்ணிறந்த கொடுந்தாக்குதல்களையும் எதிர்த்துப் போராடியாதோர் இன்னலுமின்றிச் சற்றும் மாசுருமல் மறைகள் திகழ்கின்றன. பெரும்பாழிலிருந்து இந்த ஞாலம் படைக்கப்பட்டிருப்பதென்பதும், ஆன்மா சமைக்கப்பட்டது என்பதும், சுவர்க்கமென்னும் இடத்தில் ஓர் அரியணைமீது ஒருகொடுங்கோல் மன்னராகிய கடவுள் அமர்ந்து ஆணை செலுத்துகிறூர் என்பதுமான கொள்கைகள் அறிஞர்களையெல்லாம் வெறுப்படையச் செய்துவிட்டன. முடிவில்லாத வெந்நரகத்தின் கொடுந்தீயைப் பற்றிய கருத்தும் இவர்கள் மனத்திற்கு உகந்ததன்று. படைப்பின் அழிவின்மை, ஆன்மாவின் அமரத்தன்மை, ஆண்டவன் நம் ஆன்மாவில் உறைகின்ற உண்மை, இவற்றைச் சுற்றி எழுந்த மறைகளுடைய மாண்புள்ள எண்ணங்கள் ஆகிய இவை எந்த உருவில் தோன்றினுலும் மேலை நாட்டாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இன்னும் ஐம்பது ஆண்டுகளில் உலகிலுள்ள கற்றூரெல்லாரும், கடவுள், ஆன்மா படைப்புப் பொருள் எல்லாம் அழிவற்ற மெய்ப்பொருள்கள் என்று நம்ப இடமிருக்கிறது. நம்முடைய தூய மறைகளில் கூறப்பட்டுள்ளவாறு மேலான பூரணத்தன்மை வாய்ந்துள்ள நம்முடைய கடவுளிடத்தில் இவர்கள் நம்பிக்கை கொள்வார்களென்பது திண்ணம். இப்பொழுதே இவர்களுடைய ஞானப் பணியாளர் தம் விவிலிய

நூலுக்கு வேதஞான ஒளிகொண்டு விளக்கந் தருவதைப் பார்க்கின் ருேம். என்னுடைய முடிவான கொள்கையாதெனில், நம் ஆன்மிகப் பயிற்சி இவர்களுக்குத் தேவை ; இவர்களுடைய பொருட்செல்வம் நமக்கு வேண்டப்படுவதாகிறது என்பதே.

இந்தியாவிலுள்ள இன்னல்களுக்கெல்லாம் அடிவேராயிருப்பது அதன் ஏழை மக்களின் கொடுமையான வறுமையே. மேலே நாடு களிலுள்ள ஏழைகள் பேய்களே ; இவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க் கும் பொழுது நம்முடைய ஏழைகளைத் தேவதூதர்களென்றே கூற வேண்டும். ஆதலால், அவர்தம் நிலையினை உயர்த்துவது அத் துணைக் கடினமானதன்று. அவர்களுக்கு நாம் ஆற்ற வேண்டும் பணியெல்லாம் அவர்களுக்குக் கல்வி பயிற்றுவித்து அவர்கள் இழந் துள்ள தனித்தகைமையை வளரச் செய்ய உதவுவதேயாகும். அதுவே நம் மக்களும் மகாராஜாக்களும் புரிய வேண்டிய மிகப் பெரிய பணியாகும். இதுகாறும் அத்தகைய பெரும்பணி ஒன்றும் ஆற்றப்படவில்லை. குருமார் ஆதிக்கமும், அயல் நாட்டினர் வெற்றி யும், ஆட்சி முறையும் நூற்றூண்டுகளாக அவர்களைக் காலடியில் வைத்து நசுக்கி நலியச் செய்துவிட்டன. அவர்கள் தாங்களும் மனிதர்களே என்று கருதும் உணர்ச்சியையும் இழந்துவிடக் கூடிய கோரமான நிலை தோன்றிவிட்டது. அவர்களுக்குக் கருத்து களை மனமுவந்து நல்க வேண்டும். அவர்கள் தங்களைச் சுற்றி என்ன நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன என்பதைக் கண்டு உணர அவர்களுடைய கண்கள் திறக்கப்பட வேண்டும். பிறகு அவர்கள் தாங்களே தங்கள் உய்வைத் தேடிக்கொள்வார்கள். ஒரு நாட்டி லுள்ள ஆடவரும் பெண்டிரும் அவரவர் விடுதலையைப் பெற முயல வேண்டுவதே அழகாகும். அவர்களுக்குக் கருத்துகளை உதவுதல் போதும். அந்த ஒர் உதவியே அவர்களுக்குத் தேவையானது. அதனுல் வரக்கூடிய பயன், தானே வரும். நம்முடைய கடமை இரசாயனப் பொருள்களை ஒன்ருகத் திரட்டிச் சேர்த்துக் கலப் பதே ; இயற்கையின் விதிப்படி பளிங்குக் கட்டியாக அப்பொருள்கள் பரிணமித்துவிடும். நம் கடமை நற்கருத்துகளை அவர்கள் மனத் தில் புகுத்துவது ; அவர்களே பிறவற்றைச் செய்துகொள்ளுவார்கள். இதுவே இந்தியாவில் ஆற்ற வேண்டுவது. இந்தக் கருத்தே என் மனத்தில் நீண்ட காலமாகவே வளர்ந்து வந்துள்ளது. இதை நான் இந்தியாவில் நிறைவேற்றி வைக்க இயலாமற் போய்விட்டது ; நான் இங்கு வந்ததும் இதற்காகவே. இதில்—ஏழைகளுக்குக் கற்பிப்ப

தில்—பெரிய இன்னல் இதுதான்: மாட்சிமை தங்கிய நீங்களே ஒவ்வொரு சிற்றூரிலும் ஒவ்வோர் இலவசப் பள்ளியைத் திறந்து வைத்தாலும், அது நன்மை பயவாது—இந்தியாவிலுள்ள கொடிய வறுமை நிலை அத்துணை பெரிது. ஏழைப் பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்கு உதவி புரியவோ, அல்லது தாங்களே பொருள் ஈட்டிப் பிழைக்கும் வழியைத் தேடவோ, போய்விடுவார்கள்; பள்ளிக்குச் செல்ல மாட்டார்கள்; அதற்கு இசைய மாட்டார்கள். மலை மகமதுவினிடம் செல்ல ஆயத்தமாய் இல்லாவிட்டால், மகமது மலையிடம் விரைய வேண்டுவதுதானே? ஏழைச் சிறுவன் படிக்க வரவில்லையென்றால், கல்வியே அவனிடம் செல்லவேண்டுவதே. நம் நாட்டில் ஆயிரக் கணக்கான ஒருமைப்பாடுள்ள தியாக சீலர்களான சந்நியாசிகள் ஞானப்பணி ஆற்றிக்கொண்டு சிற்றூர்தோறும் சுற்றித் திரிகின்றார்கள். அவர்களை ஒருங்கு கூட்டி வைத்து இம்மைக் கல்வி பயிற்றவும் உதவுமாறு செய்யக் கூடுமானால், அவர்கள் ஊர் ஊராக—வீடு வீடாகச் சென்று, சமயப் பணியோடு உலக சம்பந்தமான கல்வியும் போதித்து வரலாமல்லவா? இப்படி இருவர் ஒரு சிற்றூருக்குத் தம் புகைப் படக் கருவி, ஒரு பூகோளம், சில படங்கள்—இவற்றுடன் போனால், அஞ்ஞான இருளில் ஆழ்ந்துள்ள மக்களுக்குப் பெரிய அளவில் பூகோளமும் வான நூலும் கற்பிக்கலாம். பல நாட்டு மக்களின் வரலாறுகளைப் பற்றிக் கதைகள் கூறிவந்தால், நூல்கள் வாயிலாகக் கற்பிப்பதைவிட நூறு மடங்கு செவிப்புலன் மூலம் எளிதில் அறிவு புகட்டி வரலாம். இதற்கு ஒரு சங்கம் வேண்டும். அத்தகைய சங்கத்தை நிறுவப் பணம் ஏராளமாகத் தேவைப்படும். இந்தத் திட்டத்தை உருவாக்க இந்தியாவில் மனிதர்கள் போதுமானவரை இருக்கிறார்கள். ஆனால், அந்தோ! பணந்தானில்லை. ஒரு சக்கரத்தைச் சுழற்றத் தொடங்குவதுதான் சிரமமாகும். ஆனால், அது சுழல ஆரம்பித்தால், சுழலச்சுழல மிகுந்த வேகத்தை அது பெற்றுவிடும். எனது நாட்டிலே பணத்தைத் தேட முயன்றும் அது கிடைக்காது போனதாலேதான், நான் இந்நாட்டிற்கு உங்களது பேருதவியால் வரவேண்டியதாயிற்று. பணம் படைத்தோர் பிறர் துயர் கண்டு உள்ளம் நைந்து உருகும் இயல்பைப் பெற்றிலர். அமெரிக்கருக்கு இந்திய மக்கள் இருந்தாலென்ன, இறந்தாலென்ன! நம்முடைய மக்களே சுயநலம் தவிர மற்றொன்றினையும் மனத்தில் கொள்ளாதிருக்கும்போது அவர்கள் ஏன் அக்கறை கொள்ள வேண்டும்?

பெருந்தன்மை வாய்ந்துள்ள என் மகாராஜாவே, நம் வாழ் நாள் மிகச் சுருங்கியது. உலகப் பெருமைகளெல்லாம் கணப் போதில் மறையக் கூடியவைகள்; ஆனல், தமக்கென வாழாது பிறர்க்கே உரியவர்களான சான்ருேர்களே வாழ்கின்றவர்கள். மற்றையவர் வாழ்க்கை நடைப்பிண வாழ்க்கையே. உங்களைப் போன்ற பெருந்தன்மையும் வேந்தருக்குரிய பெருங்குணமும் படைத்த ஓர் அரசிளங்குமரர் பேருறக்கத்தில் ஆழ்ந்த இந்தியா வைத் தட்டி எழுப்பி உயர்த்திஞல், பிற்கால மக்கள் போற்றுதற் குரிய வாடாத புகழ் மாலையைப் பெறலாம்.

அஞ்ஞானப் பேரிருள் மண்டிக் கிடக்கும் பல்லாயிரக் கணக் கான மக்களுக்காக, உங்கள் விரிந்த உள்ளம் நைந்து உருகும் பொருட்டே ஆண்டவன் அருள் நாடி இறைஞ்சுகின்றேன். இதுவே என் வேண்டுகோள்; இதுவே யான் செய்யும் விண்ணப்பம்.

விவேகானந்தர்.

பத்தி யோகம்

அல்லது

அன்பு பற்று இவற்றின் கூட்டம்

स तन्मयो ह्यमृत ईशसंस्थो ज्ञः सर्वगो भुवनस्यास्य गोप्ता ।
य ईशेऽस्य जगतो नित्यमेव नान्यो हेतुर्विद्यत ईशनाय ॥
यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै ।
तं ह देवं आत्मबुद्धिप्रकाशं मुमुक्षुर्वै शरणमहं प्रपद्ये ॥

அவர் பிரபஞ்சத்தின் ஆன்மா; அவர் அழிவற்றவர்; அவருடையதே ஆட்சி; எல்லாம் அறிந்தவரும், எங்கும் நிறைந்தவரும், பிரபஞ்சத்தைக் காப்பவரும், சாசுவதமாய் ஆளுபவரும் அவரே. உலகத்தைச் சாசுவதமாக ஆள அவரைவிடத் திறமையுள்ளவர் வேறு எவரும் இலர்.

அவர் படைப்பின் தொடக்கத்தில் பிரமனைத் (பிரபஞ்ச சைதன்யம்) தோற்றுவித்து, வேதங்களை அவனுக்கு அளித்தவர்; அந்த ஒளி வடிவினரை அடைக்கலமாக நான் அடைக்கலம் புகுகின்றேன்; அவருடைய சோதியே ஆன்ம புத்தியைப் பிரகாசிப்பிப்பதாகும்.

(சுவேதாசுவதர உபநிஷத்து, VI. 17, 18.)

'பத்தி' என்பதன் விளக்கம்

பத்தி யோகமென்பது ஈசுவரனை உண்மையாகத் தூய வழியில் நாடுவதாகும். இந்த நாட்டம் தொடக்கத்திலும் நடுவிலும் முடிவிலும் அன்பின் வழியதாய் இருக்கும். கடவுளின்பால் முதிர்ந்த அன்பின் பித்து நிலை ஒரு விநாடியளவினதானாலும், அதுவே முடிவற்ற சுயேச்சை நிலையாம். நாரதர் தம் பத்தி சூத்திரத்தில், "பத்தி என்பது பகவானிடத்தில் கொண்டுள்ள நெருங்கிய அன்பாகும். ஒருவனுக்கு அப்பத்தி உண்டாகுமானால்,

அவன் யாவரையும் நேசிக்கிறான்; எவரையும் வெறுப்பதில்லை. அவன் எப்பொழுதும் திருப்தியுடையவனே ஆகிறான்,'' என்று கூறுகிறார். இந்த அன்பை எந்த உலக நன்மைக்கும் பயன் படுத்த இயலாது; ஏனென்றால், உலக ஆசை உள்ள மட்டும் இந்த மாதிரி அன்பு தோன்றுவதில்லை. பத்தி கருமத்தை விடப் பெரியது; யோகத்தைவிடப் பெரியது; ஏனென்றால், இவை மனத்தில் கொண்ட ஒரு விஷயத்திற்காக மேற்கொள்ளப்படுவன; ஆனால், பத்திக்குப் பயனும் சாதனமும் அதுவே; பத்தியின் முடிவு பத்தியே.

நம் ரிஷிகள் இடையறாது மனத்தில் கொண்டிருந்த விஷயம் பத்தியே. சாண்டில்யர், நாரதர் போன்றவர்கள் பத்தியைப் பற்றித் தனித்தனியே எழுதியிருக்கிறார்கள். வியாஸ சூத்திரங்களின் மகா பாஷ்யகாரர்கள் ஞானத்தை எடுத்துக் காட்டுகிறவர்களாயிருந்தாலும்,அன்பைப் பற்றிக் குறிப்பாகச் சிலவற்றை எடுத்துக் கூறுகிறார்கள். சூத்திரங்களின் மூலப் பகுதிகளை (முழுமையும்அன்று)பாஷ்யகாரர் விளக்கும் பொழுது வறண்ட அறிவாகக் கூறுவதில் அதிக விழிப்பைக் காட்டி வந்தாலும், ஈசுவர ஆராதனை என்ற பகுதியை மட்டும் அவர்களால் அவ்வாறு செய்ய முடியவில்லை.

சிலர் நினைக்கிறபடி ஞானத்துக்கும் பத்திக்கும் மிக்க வேற்றுமை இல்லை. முடிவில் இரண்டும் வளைந்து ஓரிடத்திலேயே சந்திக்கின்றன என்பதை நாம் இனிப் பார்க்கப் போகிறோம். ராஜயோகமும் மோக்ஷ சாதனமாகக் கையாளப்படும்போது அதே எல்லையிலேதான் நம்மைக் கொண்டு சேர்க்கிறது. (வேஷதாரிகளும் மாயைக்காரர்களும் விழிப்பின்றியிருப்பவர்களை ஏமாற்றி ராஜயோகத்திற்கு வேறு பயன் காட்டுகிறார்கள்.)

பத்தியின் பெரிய நன்மை யாது என்றால், நம் கருத்திலுள்ள பெரிய தெய்வ எல்லையை அடைய அதுவே இயற்கையானதும் மிக எளிமையானதுமான மார்க்கமாய் இருப்பதுதான். அதிலுள்ள பெருங்குறை, அதன் தாழ்ந்த முறைகளில் வெறுக்கத்தக்க மருட்பேய்களாகப் பல சமயங்களில் மாறிவிடுவதாகும். பத்தியின் இந்தத் தாழ்ந்த படிகளிலிருந்து கூட்டப்பட்டவர்களே இந்து, இஸ்லாம், கிறித்தவ சமயங்களில் காணப்படும் மதப்பித்தத் தொகுதியர்கள். பிரியப்பட்ட ஒன்றினிடம் ஒருமுகமாகக் காட்டப்படும் பற்று (நிஷ்டை) பிறவற்றை நிந்திக்கச் செய்யவும் சில சமயங்களில் ஏதுவாகிறது. நிஷ்டை அவசியந்தான்; அஃதில்லாமல் உண்மை

யான பத்தி ஏற்படாது. ஆனால், உலகில் எல்லாத் தேசங்களிலும், சமயங்களிலும் பரிபக்குவமடையாத மனங்கள், பிறிது எதையும் வெறுப்பதொன்றே தம் கொள்கையில் பிடிப்புடன் இருப்பதற்கு வழி என்று கருதுகின்றன. தன் கடவுள் கொள்கையிலும் சமயத்தி லும் மிகுந்த பற்றுடன் பத்தி கொண்ட ஒருவன், வேறு எந்தக் கொள்கையையாவது சமயத்தையாவது பற்றிக் காதால் கேட்ட வுடனே வெறிகொண்டு ஊளையிடுவதற்கு இதுவே காரணம். நாய் தனக்குள்ள சுய அறிவினால் தன் யஜமானனின் வீட்டில் எவரும் நுழையாதபடி காப்பது போன்றது இந்த அன்பின் வகை; ஆனால், காரண காரியங்களை ஆராயும் மனித விவேகத்தைவிட, நாயின் ஊகம் ஒரு வழியில் சிறந்தது; அது தன் யஜமானன் எந்த உடை யுடுத்தி வந்தாலும், அவனைப் பகைவன் என்று எண்ணாமல், உள்ளபடியே அறியும் ஆற்றலுடையதாய் இருக்கிறது. அன்றியும், வெறி கொண்டவன் உண்மை காணும் சக்தியை இழந்தவனா கின்றான். அவன் சொல்வது நல்லதா, தீயதா என்பதை அவன் ஆராய்வதில்லை. சொல்கிற மனிதன் யாரென்பதிலேயே அவன் தன் முயற்சி முழுவதையும் செலவிடுகிறான்; அவன் யாரென்பதை அறிகிறதிலேயே அவன் முழு விழிப்புடன் இருக்கிறான். தான் நினைக்கிறபடியே நினைக்கும் பிறரிடம் அன்பு, நன்மை, உண்மை, நேசம் இவற்றைக் காட்டுகிற அவனே, தன் சமயக் கோட் பாட்டுக்குப் புறம்பாயுள்ள மக்களிடம் மிக இழிந்த செயல்களைச் செய்யப் பின் வாங்குவதில்லை.

இந்த ஆபத்து, பத்தியின் தொடக்க நிலையிலேதான், அதாவது அதன் கௌண நிலையிலேதான் காணப்படுகிறது. பத்தி முதிர்ந்து, பரபத்தி என்று சொல்லப்படும் உயர்ந்த நிலையை அடையும்போது இந்த வெறியின் புலப்பாடுகள் தோன்றும் என்ற அச்சம் வேண்டு வதில்லை. பத்தியின் இந்த உயர்நிலையால் ஆளப்படும் ஆன்மா, வெறுப்பை வெளிப்படுத்தும் கருவி ஆக முடியாதபடி, அன்புக் கடவுளின் அருகில் அவ்வளவு நெருங்கி அமைந்துவிடுகிறது.

இவ்வாழ்க்கையில் நம்முடைய குணங்கள் ஒற்றுமையுடன் ஒரு சீராக எல்லோருக்கும் அமைவதில்லை. ஆனால், ஞானம், அன்பு, யோகம் என்ற மூன்றும் ஒன்றோடொன்று கூடி அமையும் பண்பாடே மிகச் சிறந்தது என்பதை நாம் அறிவோம். கப்பலின் நகர்ச்சிக்குச் சுக்கான் இன்றியமையாதது போல, பறவை பறப் பதற்கு அதன் இரண்டு இறக்கைகளும் வாலும் ஆகிய மூன்றும்

இன்றியமையாதவை. ஞானம் (அறிவு) ஓர் இறக்கை; பத்தி (அன்பு) மற்றோர் இறக்கை; யோகம் என்பது நிலையைச் சமன் செய்யும் வால். மூன்றான இவ்வழிபாட்டு முறைகளை ஒன்றுக் கொன்று முரண்படாமல் ஒரு சீராகப் பின்பற்ற முடியாதவர்கள், பத்தியொன்றையே தங்கள் மார்க்கமாகக் கொள்கிறார்கள். ஆனால், முன்னேறிக்கொண்டிருக்கிற ஆன்மாவுக்கு உருவங்களும் சடங்கு களும் மிக அவசியமானவையேயானாலும், அவை கடவுளிடம் மிக நெருங்கிய அன்பை உணரச் செய்யும் அந்த நிலைக்கு நம்மைக் கொண்டுபோவதைத் தவிர அவற்றிற்கு வேறொரு மதிப்பும் இல்லை யென்பதை அவர்கள் உணரவேண்டும்.

ஞானாசாரியர்களும், அன்பு மார்க்கத்தைப் போதிப்பவர்களும் பத்தியின் சக்தியை ஒப்புக்கொள்கிறார்கள். அவ்விருவர்க்கும் இடையே கருத்து வேற்றுமை இல்லை. ஞானிகள் பத்தியை மோட்ச சாதனமென்று கருதுகிறார்கள்; பத்தர்களோ, அதைச் சாதன மாகவும் சாத்தியமாகவும் நினைக்கிறார்கள். இவ்விரண்டுக்கும் வேற்றுமையில்லையென்பது என் கருத்து. பத்தியை நாம் ஒரு கருவி யாகக் கருதும்போது, வழிபாட்டின் ஒரு தாழ்ந்த முறையாகவே அது அமைகிறது. பிறகு நாளடைவில் பத்தியின் உயர்நிலைக்கும் ஞானத்தின் தாழ்நிலைக்கும் உண்மையில் வேற்றுமை காணப்படு வதில்லை. ஒவ்வொருவரும் தாம்தாம் செய்துவரும் வழிபாட்டு முறையையே சிறந்ததெனக் கருதுகின்றனர்; ஆனால், முழு அன்பு உள்ள இடத்தில் உண்மை ஞானம் தேடாதபடி தானே வந் தடையும் என்பதையும், பூரண அன்பு ஞானத்திலிருந்து உண்மை அன்பைப் பிரிக்க முடியாது என்பதையும் அவர்கள் மறந்துவிடு கிறார்கள்.

இதனை மனத்திற்கொண்டு இவ்விஷயத்தைப் பற்றி வேதாந்த பாஷ்யகாரர்கள் சொல்வது இன்னதென்பதைக் காண முயல் வோம்: 'ஆவ்ருத்தி ரஸக்ருதுபதேசாத்' [1] என்ற சூத்திரத்திற்குப் பகவான் சங்கரர், "'அவன் அரசனிடம் பத்திகொண்டவன்; அவன் குருவிடம் பத்தி கொண்டவன்,' என்று மக்கள் சொல்லு கிறார்கள்; குருவைப் பின்பற்றுகிற ஒருவனைப்பற்றி அவர்கள் இவ் வாறு கூறுகிறார்கள்; அவன் அவ்வொன்றையே கருத்திற்கொண்டு அவரைப் பின்பற்றுகிறான். இவ்வாறே அவர்கள், 'அன்புள்ள

1 அடிக்கடி கட்டளையிடப்படுகிற தியானம் அவசியமானது.

மனைவி தன் பிரிய புருஷனைத் தியானம் செய்கிறாள்,' என்கிறார்கள். இங்கும் ஆவலும் தொடர்ச்சியுமுள்ள ஞாபகமே குறிக்கப்படுகிறது,'' என்று பொருள் கூறுகிறார். இது சங்கரர் கருத்தின்படி பத்தியாகும்.

ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொரு பாத்திரத்தில் ஊற்றும் எண்ணெயைப் போல, தியானிக்கும் பொருளை இடையறாது தொடர்ந்து நினைவுபடுத்திக்கொள்வதே 'தியானம்' எனப்படும். இத்தகைய நினைவுபடுத்துகை, கடவுளை ஒட்டிச் சித்திக்குமானால், எல்லாப் பற்றுகளும் முறிந்துவிடுகின்றன. இடைவிடாத ஞாபகமே விடுதலைக்கு மார்க்கமென்று சாத்திரங்கள் கூறுவது இதனாலே தான். இந்த ஞாபகப்படுத்திக்கொள்ளுதலும் பார்ப்பதும் ஒன்றே. "சேணிலும் அண்மையிலும் இருக்கிற அவர் காணப்படும்போது இதயத்தைப் பற்றிய பிணிப்புகளெல்லாம் தகர்கின்றன; ஐயங்களெல்லாம் அழிகின்றன; தொழில்களின் பயன்களெல்லாம் மறைகின்றன,'' என்னும் வாக்கியம் கூறுவதும் இதுவே. அருகில் உள்ளவரைப் பார்க்கலாம்; ஆனால், சேய்மையில் உள்ளவரை நினைக்கத்தான் இயலும். சாத்திரமோ, 'அருகிலுள்ளவரைப் பார்ப்பது போல அவ்வளவு நன்றாகச் சேணிலுள்ளவரையும் பார்க்க வேண்டும்,' என்று கூறுகிறது. இதனால் நினைத்தலும் பார்த்தலும் ஒன்றே என்பது குறிக்கப்படுகிறது. ஞாபகத்தை உயர்த்தினால் அது பார்ப்பதாகிறது. வழிபாடு என்பது இடைவிடா நினைப்பு; இவ்வாறு சாத்திரங்களின் சிறந்த பாடங்கள் கூறுகின்றன. அறிதல் என்பதும் திரும்பத் திரும்பச் செய்யும் வழிபாடே; 'அறிதல்' என்பது, 'எப்பொழுதும் நினைத்தல்' என்று விளக்கப்படுகிறது. 'நேரில் காட்சி பெற்றது போன்ற உயர்ந்த நிலையை ஞாபகம் அடையுமானால், அதுவே விடுதலைக்கு வழி,' என்று சுருதி கூறுகின்றது. "பல்வேறு கலைஞானங்களாலோ, அறிவினாலோ, வேதங்களை மிகுதியாகப் படிப்பதனாலோ இந்த ஆன்மாவை எட்ட இயலாது. எவன் இந்த ஆன்மாவை அடைய விரும்புகிறானோ, அவனால் இஃது அடையப்படுகிறது; அவனுக்கு இந்த ஆன்மா தன்னைத் தானே புலப்படுத்துகிறது.'' வெறுங்கேள்வி, நினைப்பு, தியானம் இவை ஆன்மாவை அடையும் மார்க்கமல்ல என்று கூறி, இங்கு, "எவன் இந்த ஆன்மாவை விரும்புகிறானோ, அவனால் இஃது அடையப்படுகிறது,'' என்று சொல்லப்படுகிறது. மிக்க ஆசையுள்ள பொருள் விரும்பப்படுகிறது; எவன் இந்த ஆன்மாவிடம் மிகுந்த

ஆசை வைத்திருக்கிருனே, அவன் இந்த ஆன்மாவால் மிகவும் நேசிக்கப்படுகிருன். ஆகவே, இவ்வாறு நேசிக்கப்பட்டவன் ஆன்மாவை அடையும்பொருட்டு, ஈசுவரரே உதவி செய்கிருர். அவரே, "எவர்கள் என்னிடம் இடைவிடாப் பற்றுக்கொண்டு, என்னை அன்புடன் வழிபடுகிருர்களோ, அவர்கள் என்னிடம் வரு தற்குரிய வழியை நானே அவர்களுக்குப் புலப்படுத்துகிறேன்," என்று கூறுகிருர். ஆகையால், இவ்வித ஞாபகமும் நேர்க்காட்சி யும் ஒன்றேயாதலால், 'எவரொருவர் மிகுந்த அன்புடன் நினைக் கிருரோ, அவர் அந்த ஞாபகக் காட்சிக்குரிய பொருளுக்கும் மிக விருப்பமானவராதலால், பரமாத்துமாவும் அவரை விரும்புகிருர்; அவரால் அப்பரமான்மாவும் அடையப்படுகிருர்,' என்பது சொல்லப்படுகிறது. இந்த இடையருத ஞாபகமே 'பத்தி' என்ற சொல்லால் குறிக்கப்படுவது. இவ்வாறு 'அதாதோ பிரம்ம ஜிஞ்ஞாஸா' என்ற சூத்திர பாஷ்யத்தில் பகவான் இராமானுஜர் கூறுகிருர். (இதன்பின் பிரம்மம் என்பதைப் பற்றிச் சர்ச்சை நடக்கிறது.)

'ஈசுவரப்ரணிதாணுத்வா' அதாவது, 'பரம்பொருள் வழிபாடு என்ற பதஞ்சலி சூத்திரத்திற்குப் பாஷ்யம் எழுதும்போது, போஜர், 'புலன்களின் திருத்திக்குரிய சுகானுபவங்களை எதிர்நோக்காது, எல்லாக் கருமங்களின் பயன்களையும் மகாகுருவுக்கு அர்ப்பணம் செய்வதே பிரணிதானம் என்ற பத்தியாம்,' என்று கூறுகிருர். இதற்கே உரை எழுதிய பகவான் வியாசர், 'பிரணிதானம் என்பது, பரம்பொருளின் கருணையை யோகியிடம் காட்டி, அவன் விருப்பங் கள் யாவற்றையும் அருளி ஆசி கூறுதற்குரிய பத்தியாகும்,' என்று கூறுகிருர். சாண்டில்யர், 'பத்தி என்பது கடவுளிடம் காட்டும் அத்தியந்த பிரேமை,' என்கிருர். பத்தர்களுள் மன்னரான பிரகலாதர்,

या प्रीतिरविवेकानां विषयेष्वनपायिनी ।
त्वामनुस्मरतः सा मे हृदयान्मापसर्पतु ॥

"அறிவீனர்கள் புலன்களுக்குரிய அழியும் பொருள்களிடம் அழியாத எந்தப் பிரேமையைக் காட்டுகிருர்களோ, அந்தப் பிரேமை—உன்னை நான் தியானிக்கும்போது என் மனத்தைவிட்டு அகலாதிருப்பதாகுக!" என்று கூறுகிருர். பிரேமை யாரிடம்

வைப்பது? பரம்பொருளான ஈசுவரரிடம் வைப்பது. வேறு எப் பெரும்பொருளிடம் அப்பிரேமையை வைத்தாலும், அது பத்தி ஆகாது. ஏனெனில், இராமானுசர் பண்டை ஆசாரியர் ஒருவரை மேற்கோள் காட்டித் தம் ஸ்ரீ பாஷ்யத்தில்,

आब्रह्मस्तम्बपर्यन्ता: जगदन्तर्व्यवस्थिता: ।
प्राणिन: कर्मजनित संसारवशवर्तिन: ॥

"பிரம்மன் முதல் புல் ஈருக, உலகில் உயிர் வாழும் எல்லாம், கருமம் காரணமாய் அமைந்த இறப்புப் பிறப்புகளின் அடிமைகளே. ஆகவே, தியானத்திற்குரிய பொருள்களாக அவை பயன்படுவன அல்ல. ஏனெனில், அவை யாவும் அவித்தையில் மூழ்கி, மாறுதலுக்கு உட்பட்டிருக்கின்றன," என்று கூறுகிருர். சாண்டில்யர் கூறிய 'அனுரத்தி' என்னும் சொல்லுக்குப் பாஷ்யம் எழுதும்போது, ஸ்வப்னேசுவரர் என்ற பாஷ்யகாரர் 'அனு-பின்; ரத்தி-பற்று; அதாவது, ஈசுவரனுடைய இயல்பு, மகிமை இவற்றைப் பற்றிய அறிவுக்குப் பின்வரும் பற்று; அப்படியல்லாவிட்டால், மனைவி, மக்கள் போன்ற எவரிடம் வைக்கும் பற்றும் பத்தியாகிவிடும்,' என்று கூறுகிருர். இவற்ருல், சாதாரண வழிபாட்டில் தொடங்கி ஈசுவரரிடத்தில் போய் முடியும் அத்தியந்தப் பிரேமையை அடைய, சமய சாதனை முறையில் செய்யப்படும் தொடர்ந்த மன முயற்சியே பத்தி என்னும் பெயர் பெறும் என்பதை நாம் உணர்கிருேம்.

यतस्ततो न ते ध्याने ध्यानिनामुपकारका: ।
अविद्यान्तर्गतास्सर्वे ते हि संसारगोचरा: ॥

ஈசுவர தத்துவம்

ஈசுவரன் யார்? "ஜன்மாத்யஸ்ய யத:—எவனிடமிருந்து பிரபஞ்சத்தின் பிறப்பு, இருப்பு, அழிவு இவை உண்டாகின்றனவோ, அவன் ஈசுவரன். அவன் என்றுமுள்ளவன்; தூயன்; என்றும் சுயேச்சையானவன்; மகாசத்தி வாய்ந்தவன்; சர்வஞ்ஞன்; பெருங்கருணையுடையோன்; எல்லா ஆசிரியர்களுக்கும் ஆசிரியன்." இவற்றிற்கெல்லாம் மேலே 'ஸ ஈசுவர: அநிர்வசனீய-பிரேமஸ்வரூப:—"ஈசுவரனானவன், தன் சுபாவத்திலே சொல்ல முடியாத பிரேமையாவான்." இவை, உண்மையாக, இஷ்ட

தேவதையின் இலட்சணங்கள். அப்படியானால், கடவுளர் இருவர் இருக்கின்றனரா? தத்துவஞானி கூறும் 'இஃதன்று, இஃதன்று,' என்றதும், சச்சிதானந்த மூர்த்தியும் (ஸத், சித், ஆனந்த மயன் ஆகிய ஒன்றும்) பத்தர்கள் கூறும் இப்பிரேமைக் கடவுளும் வெவ் வேருக இல்லை; சச்சிதானந்த மூர்த்தியும் இப்பிரேமைக் கடவுளும் ஒருவரே; ஒருவர் அருவமானவர்; மற்றவர் உருவமானவர். இரு வரும் ஒருவரே. பத்தன் வணங்கும் தெய்வத்துக்கும் பிரம்மத் துக்கும் வேறுபாடு இல்லை என்பதை உணர வேண்டும். எல்லாம் பிரம்மமே. அது ஏக வஸ்து; இரண்டாவது இல்லை. ஒருமையாயும் தனியாயும் உள்ள பிரம்மம் அன்பு செலுத்தவோ வழிபடவோ இயலாதபடி அவ்வளவு நுண்ணிய பண்பு மயமானது. ஆகையால், பிரம்மத்தின் அமிசமான ஈசுவரனை—உன்னத ஆட்சியாளனை— தன் பத்திக்கு எடுத்துக்கொள்கிருன். இதனை ஓர் உவமையால் அறியலாம். மண் அல்லது ஏதேனும் ஒரு தாதுப் பொருளிலிருந்து எத்தனையோ விதமான பொருள்களைச் செய்கிருர்கள். மண்ணுகப் பார்க்கும்போது எல்லாம் ஒன்றே. ஆனல், உருவமும் தோற்றமும் அவற்றை வேறுபடுத்துகின்றன. இதைப் போன்றதே பிரம்மமும். பொருள்களுள் ஒவ்வொன்றும் செய்யப்படுதற்கு முன்னே, அவை அனைத்தின் இயல்பும் மண்ணில் இருந்தது; அவை யாவும் பொருளில் ஒன்றே. ஆனல், அவை உருவம் பெற்றபின், அவ் வுருவம் உள்ளவரையில் அவை வெவ்வேறே. களி மண் எலி ஒரு நாளும் களி மண் யானையாகாது; ஏனெனில், உருவமமையாத களியாய் ஒன்ருயிருந்த அவை, உருவம் பெற்றவுடன், அவ்வுருவம் அவற்றை வேற்றுமைப்படுத்திவிட்டது. ஈசுவரன் சுத்த உண்மைப் பொருளின் மிகச் சிறந்த தோற்றமாவான்; வேறு விதமாகச் சொல்வோமானல், மனிதன் தன் மனத்திஞல் அந்தக் கேவலப் பொருளை ஈசுவர நிலையில் உணர்வதைவிட மேலே செல்ல இயலாது. படைப்பு நிரந்தரமானது; ஈசுவரனும் நிரந்தர மானவனே.

வியாசர் தம் சூத்திரங்களின் நான்காவது அத்தியாயத்தில், நான்காவது பாதத்தில், விடுதலையடைந்த ஆன்மா மோட்சத்தை அடைந்த பிறகு பெறும் எல்லையற்ற சத்தியையும் அறிவையும் கூறி விட்டு, ஒரு சூத்திரத்தில், 'இவ்வாறு அவ்வான்மா பெற்ருலும், பிரபஞ்சத்தை ஆக்கல், அளித்தல், அழித்தலாகிய ஆற்றலை ஒரு போதும் பெற மாட்டாது,' என்று ஒரு வசனத்தில் கூறுகிருர்.

ஏனென்றால், இம்மூவாற்றல்களும் கடவுளுக்கே உரியன என்பது அவர் கூற்று. துவைதிகள் இந்தச் சூத்திரத்தை விளக்கும்போது, 'தாழ்ந்த நிலையிலுள்ள ஜீவாத்துமா உயர்ந்த நிலையிலுள்ள கடவுளின் எல்லையற்ற சத்தியையும் முழுச் சுயேச்சையையும் எவ்வாறு பெற இயலும்?' என்ற தங்கள் கருத்தை மிக எளிதில் விளக்குகிறார்கள். பரிபூரணத் துவைத பாஷ்யகாரரான மத்துவாசாரியர், இந்தச் சூத்திரத்தை, தமக்குரிய சுருக்க வழியில், வராக புராணத்தை மேற்கோள் காட்டி விளக்கிவிடுகின்றார்.

இந்தச் சூத்திரத்தை விளக்கும்போது பாஷ்யகாரரான இராமானுசருக்கு, 'விடுதலையடைந்த முமுக்ஷுக்கள் பெறும் சத்திகளுள் படைத்தல் முதலிய பரம் பொருளுக்குரிய அபூர்வ சத்தியும் யாவற்றிற்கும் யஜமானத்துவமும் அடங்குமோ!' என்ற ஐயம் எழுகிறது. அன்றியும், 'வீடு பெற்றவர்களின் பெருமையெல்லாம் அப்பரம்பொருளின் காட்சியோடு நிற்குமோ?' என்ற கேள்வியும் எழுகிறது.

இதனால், பின் வரும் வாதமும் விளைகிறது: "சாத்திரங்கள், 'வீடு பெற்றவன் பரப்பிரம்மத்தின் உச்ச நிலையை ஒத்த தன்மையை அடைகிறான்; அவனுடைய விருப்பங்கள் யாவும் நிறைவேறுகின்றன; ஆகவே, அவனுக்குப் பிரபஞ்சத்தின் யஜமானத்துவமும் அமைகிறது. உச்ச நிலையின் ஒத்த தன்மையும், விருப்பங்களின் நிறைவேற்றமும், பரப்பிரம்மத்தின் தனிச் சத்தியான பிரபஞ்ச ஆட்சிச் சத்தியும் பெறாமல், எவ்வாறு அமைய இயலும்? ஆகவே, எல்லா விருப்ப நிறைவேற்றமும் பரம்பொருளை ஒத்த உயிர்நிலையும் பெற, மோட்சமடைந்த ஆன்மா பிரபஞ்ச ஆட்சி ஆற்றலையும் பெற்றே தீரவேண்டும்,' என்று கூறுவதை நாம் ஒப்புக்கொண்டே ஆகவேண்டுமல்லவா?" என்பது வினா. இதற்கு விடையாக நாம் சொல்லுவது, 'பிரபஞ்ச ஆட்சி நீங்கலாக, உள்ள எல்லாச் சத்திகளையும் முமுக்ஷு அடைகிறான்,' என்பதே. 'பிரபஞ்ச ஆட்சி' என்பது, எல்லா உயிர்ப் பிராணிகளினுடையவும் உயிரில்லாப் பிராணிகளினுடையவும் உருவம், உயிர், ஆசைகள் இவற்றைச் செலுத்துவது என்பதே. வீடு பெற்றவன் தன் ஆன்ம சொரூபத்தைக் காண முடியாதபடி மறைத்துக்கொண்டிருக்கும் எல்லாத் தடைகளும் நீக்கப் பெற்று, பிரம்ம சொரூபத்தை நேரில் காணும் அனுபவத்தைப் பெறுகிறானே அன்றி, பிரபஞ்ச ஆட்சிக்குரிய சத்தியைப் பெறுகிறானில்லை. இது பின் வரும் வேத வசனத்

தால் புலனுகின்றது: "எவரிடமிருந்து எல்லாப் பொருள்களும் தோன்றுகின்றனவோ, எவரால் பிறந்த யாவும் வாழ்கின்றனவோ, அவை இறந்தபின் எவரிடம் போகின்றனவோ, அவர் யார் என்று வினவினுல், அவரே பிரம்மம்." இவ்வாறுள்ள பிரபஞ்ச ஆட்சிச் சத்தி விடுதலேயடைந்த ஆன்மாவுக்கும் உண்டு என்ருல், மேலே கூறிய பிரம்மத்தின் விளக்கம் பொருந்தாதது ஆகிறது; ஏனெனில், அவர் மூலமே இப்பிரபஞ்சம் நடைபெறுகிறது என்று மேலே உள்ள விளக்கம் கூறுகின்றது. சிறப்புப் பண்புகளாலேதான் ஒரு பொருள் இன்னது என்பது கூறமுடியும். வேதங்களில், "என் அன்பான மாணவ, ஆரம்பத்தில், தனியே, இரண்டாவதற்ற ஒரே பொருள் இருந்தது. அது பார்த்தது; 'பலவற்றை நான் தோற்றுவிப்பேன்' என்று எண்ணியது; அதிலிருந்து வெப்பம் உண்டாயிற்று"—"உண்மையில் பிரம்மம் ஒன்றே தொடக்கத்தில் இருந்தது. அது பரிணமித்தது. அதிலிருந்து, க்ஷத்திரம் என்ற புண்ணிய உருவம் உண்டாயிற்று. வருணன், சோமன், உருத்திரன், பர்ஜன்யன், யமன், மிருத்தியு, ஈசானன் ஆகிய எல்லாத் தெய்வங்களும் க்ஷத்திரங்களே."—"ஆன்மா ஒன்றே, உண்மையில் ஆரம்பத்தில் இருந்தது; வேறெதுவும் அசையவில்லே; அவர் உலகத்தைத் தோற்றுவிக்க எண்ணினுர்; பிறகு அவர் உலகத்தைத் தோற்றுவித்தார்"—"நாராயணர் மட்டும் இருந்தார்; பிரமனே, ஈசானனே, தியாவா-பிருதிவியோ, விண்மீன்களோ, நீரோ, நெருப்போ, மதியோ, ஞாயிறே இல்லே. அவர் தனித்து இருக்க விரும்பவில்லே. அவர் தியானம் செய்து ஒரு மகளேயும், பத்து அங்கங்களேயும் பெற்ருர்" முதலியன—இன்னும், "பூமியில் இருந்தும் எவர் அதினின்றும் வேறுபட்டவரோ" முதலியன—இம்மாதிரியான சுருதிகள் பரம்பொருள் பிரபஞ்ச ஆட்சி செய்யும் விதத்தைக் கூறுகின்றன......இம்மாதிரி பிரபஞ்ச ஆட்சி பேசப் படும் இடங்களில் எங்கேயும் வீடுபெற்ற ஆன்மாவைப் பற்றியாவது, அத்தகைய ஆன்மாவுக்குப் பிரபஞ்ச ஆட்சி கொடுக்கப்பட்டது என்ருவது கூறப்படவில்லே. அடுத்த சூத்திரத்துக்கு உரை வகுக்கும்போது இராமானுசர், "இக்கருத்துக்கு மாருக, வேதத்தில் நேரடியான வாக்கியங்கள் இருக்கின்றனவே என்ருல், இந்த வாக்கியங்கள், வீடு பெற்றவர்களின் மகிமை சிறு தெய்வங்களினிடையே விளங்குவதையே குறிக்கின்றன," எனக் கூறினுர். இதுவும் துன்ப நிலேயிலிருந்து விடுவிக்க ஓர் எளிய உபாயமேயாம்.

இராமானுசரின் முறைப்படி பூரணத்தின் ஒருமைப்பாட்டை ஒப்புக்கொண்டாலும், அந்தப் பூரணத்தின் உள்ளே நிலையான மாறுபாடுகள் உள்ளன. இஃது அவருடைய மதம். ஆகவே, காரிய வாதங்களுக்கு, அவருடைய மதமும் துவைதமாகையால், தனி ஜீவாத்துமாவுக்கும் இஷ்ட தெய்வத்திற்கும் வேறுபாடு விளக்கமாய் அமைகிறது.

இனி, இந்த விஷயத்தில் அத்வைத மதத்தின் பெரும்பிரதிநிதியானவர் என்ன கூறுகிறார் என்பதைக் காண முயல்வோம். அத்வைதம், துவைதிகளின் நம்பிக்கைகளையும் நாட்டங்களையும் முழுமையும் ஒப்புக்கொண்டிருந்தும், தெய்வத் தன்மை அடைந்த மானிடர் அடையக் கூடிய உயர்ந்த நிலையைக் குறித்த இப்பிரச்சினைக்குத் தனியே தான் ஒரு தீர்வு காட்டுகிறது.

விடுதலை பெற்ற பிறகும் தங்களுடைய தனி மனத்தை விட்டு விடாமல் வைத்துக்கொண்டு, தனித்து வேருயிருக்க விரும்புகிறவர்கள், தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள எல்லா வாய்ப்புகளையும் பெறுவதோடு, பலங்குறைந்த பிரம்மத்தின் ஆசிகளையும் அடைகிறார்கள். இவர்களைப் பற்றித்தான் பாகவத புராணத்தில், "மன்ன, ஆன்மானந்தத்திலே முழுகிக் கிடக்கும் ரிஷிகள், தங்கள் கட்டுகளிலிருந்து விடுபட்டு நின்றும், சர்வ வியாபியான பகவானிடம், அன்பு காரணமாகவே அன்பு செலுத்துகிறார்கள்; பிரபுவின் மகத்தான பண்புகள் அவ்வளவு பெருமை வாய்ந்தவை," எனக் கூறப்பட்டிருக்கிறது. இவர்களைப் பற்றித்தான், சாங்கியர்கள், 'ஒரு கால வட்டத்தில் பிரகிருதியோடு ஒன்றுகிப் பரிபூரணமடைந்த பின், அடுத்த வட்டத்தில் இவர்கள் உலக முறைப்பாடுகளில் தலைவர்களாக வர விரும்புகிறவர்கள்,' என்று கூறுகின்றனர். ஆனால், இப்படிப்பட்டவர்களுள் ஒருவரேனும் ஈசுவரனுக்குச் சமானமாவதில்லை. ஈசுவர நிலையாகிய அந்த உன்னத நிலையை—அதாவது, எங்குப் படைப்போ, படைக்கப்பட்டவையோ, படைப்பவனே இல்லையோ; எங்கு அறிபவன், அறியப்பட்டது, அறிவு என்பன இல்லையோ; எங்கு, 'நான், நீ, அவன்' என்னும் எதுவும் இல்லையோ; எங்குக் கருத்தா, பொருள், உறவு என்பன இல்லையோ; எங்கு, 'யாரை யார் பார்ப்பது?' என்னும் நிலையுள்ளதோ; அந்த இடத்தை அடைந்தவர்கள், மனமும் வாக்கும் எட்டாத இடத்தை அடைந்தவர்களாகிறார்கள்; சுருதிகள், 'இஃதன்று; இஃதன்று,' என்று கூறும் இடத்தை எட்டினவர்களாகிறார்கள்.

அப்படிப்பட்ட இடத்தை அடையாதவர்களும், அடைய மாட்டாத வர்களும், பிரகிருதி, ஆன்மா, அவ்விரண்டின் ஊடே நின்று இரண்டையும் காப்பாற்றுபவன் ஆகிய இம்மூன்றும் ஒன்ருகிப் பிரிக்கவொண்ணுத பிரம்மத்தின் — ஈசுவரனின் — தோற்றத்தை மட்டும் பெறுகிருர்கள். பிரகலாதன் தன்னை மறந்து நின்ற நிலையில், பிரபஞ்சத்தையோ அதன் காரணத்தையோ காணவில்லை. பெயரும் உருவமும் அற்ற எல்லையற்ற ஒரு நிலையே அவனுக்குப் புலப்பட்டது. ஆனல், தான் பிரகலாதன் என்ற நினைவு அவனுக்கு வந்தவுடன், அவன் முன்னே பிரபஞ்சமும் அதன் தலைவனை எல்லையற்ற புண்ணிய குணங்களின் நிலையம் ஆன பிரபுவும் புலப் பட்டார்கள். புண்ணியக் கோவியர்களின் நிலையும் இதுவே. தங்கள் தனித்தன்மையையும், தாங்கள் இன்னுரென்பதையும் உணராத நிலையில் அவர்கள் யாவரும் கிருஷ்ணர்களாகவே இருந்தார்கள். கிருஷ்ணன் பூசிக்கத் தக்கவன் என்ற நினைப்பு வந்தவுடன் அவர் கள் கோவியர்களானுர்கள் ; அந்நிலையில்,

तासामाविरभूच्छौरिः स्मयमानमुखाम्बुजः ।
पीताम्बरधरः स्रग्वी साक्षान्मन्मथमन्मथः ॥

"அவர்கள் முன் தன் செந்தாமரை முகத்தில் புன்னகை அரும்ப, பீதாம்பரமணிந்து, மலர் மாலைகள் சூடி, மன்மதனையும் அழகில் வெற்றி கண்ட மன்மதனுய் நின்ருர்," என்கிறது பாகவதம்.

இனி, ஆசாரியர் சங்கரரிடமே திரும்பிச் செல்வோம். சகுண பிரம்மத்தைப் பூசிப்பவர்கள் தங்கள் மனத்தை இழக்காமல் நிறுத்திக்கொண்டு பரிபூரணப்பொருளோடு சம்பந்தப்படுகிருர்கள். அவர்களுடைய மகிமை அளவுபடுத்தப்பட்டதா, படாததா என்னும் ஐயம் தோன்ற, பின் வரும் வாதம் எழுகிறது. நூல்கள் 'அவர்கள் அவர்களுக்கு உரிய இடத்தை அடைகிருர்கள்;' 'எல்லாத் தெய்வங்களும் அவரை வழிபடுகின்றன;' 'அவர்களுடைய விருப்பங்கள் எல்லா உலகங்களிலும் நிறைவேறுகின்றன,' என இம்மாதிரி கூறுகின்றமையால், அவர்களுடைய மகிமை அளவிடப்படாததாகும். இதற்கு விடையாக, வியாசர், 'பிரபஞ்சத்தை ஆளும் ஆற்றல் இல்லாமல்' என்று கூறுகிருர். முத்தியடைந்தவர்கள் படைப்பாற்றலை ஒழித்து அணிமா முதலிய

ஆற்றல்களைப் பெறுகிறார்கள். பிரபஞ்ச ஆட்சி, நிரந்தர பரிபூரண ஞன ஈசுவரனுக்கே உரியது. ஏன் ? நூல்கள் அவனையே படைப்பு முதலியவற்றின் கர்த்தாவாகக் கூறுகின்றன. இக்கூற்றுகளில், விடுதலையடைந்த முமுக்ஷுக்களின் பெயர்களே இல்லை. பிரபஞ்ச ஆட்சி பரம்பொருள் ஒருவருக்கே உண்டு. படைப்பு முதலியவற்றைப் பற்றிக் கூறும் நூல்கள் அவரையே குறிக்கின்றன. 'சர்வ, பூரணன்' என்ற அடை மொழி அவருக்கே வழங்கப்படுகிறது. அணிமா முதலிய சத்திகள் பிறருக்கு உரியன ; அவையும் கடவுளை நாடவும் வழிபடவுமே பயன்படுவன. அவர்களுக்குப் பிரபஞ்ச ஆட்சியில் இடமே இல்லை. அன்றியும், அவர்கள் தங்கள் மனத்தோடு கூடியவர்களாயிருத்தலால், அவர்கள் மாறுபட்ட அபிப்பிராயமுடையவர்களாதலால், ஒருவர் படைப்பை விரும்பினல், மற்றொருவர் அழிப்பை விரும்பலாம். ஆகையினல், இந்த விபரீதங்களை எல்லாம் நீக்க, எல்லா மனங்களும் ஒரு பெருமனத்துள் அடங்கினவெனக் கொள்வதே ஏற்றதாகும். இவற்றுல் ஏற்படும் முடிவு யாதோவெனில், 'வீடுபெற்ற ஆன்மாக்கள் பரம்பொருளுக்குள் அடங்கினவைகளே,' என்பதேயாகும்.

ஆகையால், பத்தி என்பது பிரம்மத்தின் சகுண வடிவைக் குறித்து அமைவதாகும்.

क्लेशोऽधिकतरस्तेषामव्यक्तासक्तचेतसाम् ।

'அவ்யக்த வஸ்துவிடம் மனம் பதிந்தவர்க்கு மார்க்கம் மிகக் கடினமானது.' பத்தி என்பது நம் சுபாவப் போக்கிலேயே நிதானமாக மிதக்கவேண்டுவதொன்று. உருவும் பண்புமில்லாத பிரம்மத்தைப் பற்றி நாம் எவ்விதமான கருத்தும் கொள்ளமுடியாது என்பது உண்மையே. நாம் அறிந்த ஒவ்வொன்றுக்கும் இஃது உண்மையன்றோ ? அகத்திலும் புறத்திலும் நாம் காணவும் கருதவும் கூடிய எல்லாப் பொருள்களின் அமைப்பிலும் பொருந்தியுள்ள அமிசங்களில் மனிதனது உள் நினைவு ஒன்றுகும் என்பதை நெடுங்காலத்துக்கு முன்பே பகவான் கபிலர் நன்கு விளக்கிக் காட்டியுள்ளார். நம் உடல் முதல் ஈசுவரன் வரையில் நாம் காணும் எல்லாவற்றிலும் ஒவ்வொன்றும் இந்த நினைவும் இதனேடு வேறு சிலவும் சேர்ந்து பொருந்தியுள்ளமையை நாம் காணலாம். இந்தத் தடுக்க முடியாத பிணைப்பையே நாம் உண்மைப் பொருள் என்று சாதாரணமாகக் கருதுகிறோம். மானிடர் மனத்தால் அறியக்கூடிய

எக்காலத்திற்கும் இவ்வளவே சாத்தியமானது. ஆகையால், ஈசுவரன் உருவமும் குணமும் அற்றவனுயிருத்தலால், அவன் உண்மைப் பொருள் அல்லன் என்று கூறுவது பொருளற்ற கூற்றே. மேலை நாடுகளிலே கருத்துண்மை வாதம் (Idealism), பொருளுண்மை வாதம் (Realism) என்ற பயங்கரச் சண்டைகள், பொருளுண்மை (Realism) என்ற சொல்லின் அடிப்படையால் எழுந்த பூசலே ஆகும்; இப்பூசலுக்குக் காரணம் 'உண்மை' என்ற சொல்லுக்குப் பொருள் காண்பதில் உண்டான ஒரு வெறுந் திருக்கே ஆகும். அதைப் போன்றதே இக்கூற்றும். 'ஈசுவரன்' என்பது, 'உண்மை' என்னும் சொல் குறிப்பன யாவற்றையும் தன்னுள் அடக்கிக்கொண்டுள்ளது. பிரபஞ்சத்திலுள்ள எந்தப் பொருளையும் போல, ஈசுவரனும் உண்மையான பொருளே; 'உண்மையானது' என்ற சொல்லுக்கு நாம் காட்டிய பொருளை விடச் சிறந்த பொருள் இல்லை. இதுவே ஈசுவரனைப் பற்றி நாம் கொண்டுள்ள கருத்து.

ஆன்மானுபவமே பத்தி யோகத்தின் நோக்கம்

வறண்ட இந்த விளக்கங்கள், பத்தன் மனத்தை உறுதிப்படுத்தும் அளவே பயன்படுவன. அதற்கப்பால் இவை அவனுக்குப் பயனற்றவை. ஏனெனில், அவன், விளக்கமற்றதும் முரட்டுத்தனமுமான துருவி ஆய்தல் நெறியைவிட்டு, அனுபவப் பிரதேசத்தை அணுகும் வழியிலே சென்றுகொண்டிருக்கிருன். ஈசுவர கிருபையால் அவன் பேரொளியை—நேருக்கு நேர் அனுபவ வட்டத்தை—விரைவில் அடைகிருன். ஆனுல், ஆரவாரமுள்ள—ஆற்றலற்ற—வாதத்தாலும், இருளில் தடவிச் செல்லும் புத்திசாலித்தனத்தாலும், அந்த இடத்தை எட்டுதல் இயலாது. அவன் வாதம் செய்து நம்ப வேண்டிய நிலையைக் கடந்துவிட்டான்; அவனுக்கு எல்லாம் தாமே புலனுகின்றன. அவன் வாதம் புரிவதில்லை; எல்லாவற்றையும் உணர்கிருன். இவ்விதம் கடவுளைக் காண்பதும், உணர்வதும், அனுபவிப்பதும், மற்ற எல்லாவற்றையும்விட உயர்ந்தன அல்லவா? ஏன்? மோட்சத்தைவிட இவ்வாறு பெறும் ஈசுவரானுபவமே உயர்ந்தது என்று கொள்ளும் பத்தர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிருர்கள். இதைவிட உயர்ந்த பயன் உண்டோ? எவை மனி

தனுக்கு மிக்க உபயோகமும் பயனும் உடையனவாயிருக்கின் றனவோ, அவையே அவனுக்கு மிக்க நலம்பயப்பவை என்றெண் ணும் மக்களும் உலகில் இருக்கிருர்கள். அவர்களுக்குச் சமயமும், கடவுளும், அழியா நிலையும், ஆன்மாவும் செல்வத்தையாவது உடல் நலத்தையாவது தாராமையால், அவற்ருல் பயன் இல்லை. இப்படிப்பட்டவர்களுக்குப் புலன்களுக்குத் திருத்தியும் ஆசைக்குத் தணிவும் அளிக்காத விஷயங்களால் பயன் இல்லை. ஒவ் வொருவருக்கும் அவரவர் மனத்தேவைகளுக்குத் தக்கபடி பயனும் பயன் இன்மையும் அமைகின்றன. உண்ணல், குடித்தல், இனப் பெருக்கம் செய்தல் ஆகிய இவைகளுக்கு மேலே செல்லமுடியாத ஒவ்வொருவனுக்கும் புலன் நுகர்ச்சியை விஞ்சிய சுகம் இல்லை. இவற்றைவிடச் சிறிதளவாவது உயர்ந்த ஒரு நிலையை உணர அவர்கள் இன்னும் எத்தனையோ பிறவிகள் எடுத்தாக வேண்டும். ஆனுல், வெறுஞ்சோற்று வாழ்வின் அற்பச் சுகங்களைவிட, ஆன் மானுபவம் சிறந்தது என்பதை உணர்ந்தவர்களுக்கும், புலன் களின் திருத்தியானது சிறு குழந்தைகளின் பயனற்ற விளையாட்டே என்பதை அறிபவர்களுக்கும், கடவுளும் கடவுள் பத்தியுமே வாழ்க் கையின் உயர்ந்த பயன் என்பது நன்கு புலப்படும். பற்று நிறைந்த இவ்வுலகில், இப்படி நினைக்கிறவர் இன்று சிலரேனும் இருக்கின் றனரே என்றெண்ணி, நாம் கடவுளுக்கு நன்றி செலுத்துவோ மாக !

நான் முன்னே மொழிந்தபடி, பத்தி யோகம், கௌணி (தயாரிப்பு நிலை), பரபத்தி (உச்ச நிலை) என்னும் இரு வகையாய் உள்ளது. தயாரிப்பு நிலையில் நமக்கு முன்னேற நேரடியான பல உதவிகள் வேண்டியுள்ளன என்பதை நாம் போகப் போகக் காண் போம். எல்லா மதங்களிலும் காணப்படும் சடங்குகளும் கதை களும் கடவுளை நோக்கிப் பயிற்சிகளைச் செலுத்தும் உதவிகளே என்பதை நாம் உணர்வோம். எந்த மதத்தில் கதைகளும் சடங்கு களும் மிகுந்துள்ளனவோ, அந்த மதத்திலேயே மிகப்பெரிய ஆன்ம ஞானிகள் தோன்றியிருப்பதை நாம் காண்கிருேம். சில மதங் களில் வறண்ட, வெறி பிடித்த சில பழக்க வழக்கங்கள் புகுந்து, வாழ்க்கையின் சுவையையும் அழகையும் சிறப்பையும் குலைத்து, குழந்தை அன்போடு கடவுள் வழியில் செல்லும் ஆன்மாவுக்கு உறுதியான பிழைப்பாய் உள்ளவற்றை அழித்து வருகின்றன. அப்படிப்பட்டவை ஆன்மிகக் கட்டடத்தின் கூரைக் கழிகளைப்

பிரித்து, உயிரளிக்கும் எல்லாச் சத்திகளையும் அறிவில்லா மூட பத்தி எண்ணங்களால் வெருட்டி, மனித ஆன்மாவில் வளரும் தெய்விகச் செடியின் உயிராக்கத்தை அழித்துவிடுகின்றன. அவ் வாறு செய்யும் சமய முறைகளில் முடிவில் வெறுஞ்சொற்களும் ஆரவாரமுமே எஞ்சி, வெற்ருேடு மட்டுமே மிச்சமாயிருப்பதை நாமே காணலாம். ஒருவேளை அவை ஒரு சிறிதளவு சமூகச் சீர் திருத்தம் என்று பேசப்படுகிற அற்பச் சமூகக் குப்பை கூட்டும் வேலையைச் செய்திருக்கலாம்.

இப்படிப்பட்ட மதத்தைப் பின்பற்றும் பெருங்கூட்டத்தினர் யாவரும் தாம் அறிந்தோ அறியாமலோ லோகாயத வாதிகளே ஆவர். இம்மையிலும் மறுமையிலும் அவர்கள் வாழ்க்கையின் நோக்கம் சுகானுபவமேயாகும். வாழ்க்கையின் சாரமெல்லாம் அவர்களுக்கு அதுவே. அதுவே அவர்களது இஷ்டபூர்த்தி. தெருக் கூட்டலும், சாக்கடை பெருக்குதலும், அவர்களின் கருத்தின்படி, மானிட வாழ்க்கையின் ஆதியும் அந்தமுமாகும். அறிவீனமும் வெறியுங்கலந்த இந்தக் கலப்பைப் பின்பற்றுவோர் யாவரும் நாத்தி கர்களோடும் லோகாயதர்களோடும் தாமும் சேர்ந்துவிட்டால்— அவ்வாறு சேரவே அவர்கள் தகுதியானவர்கள்—உலகத்துக்கு எவ்வளவோ நலமாகும். தர்ம வாழ்க்கை, ஆன்மிக சுகானுபவங் கள் இவற்றின் ஓர் அவுன்சு, டன்-டன்னை வெட்டிப் பேச்சையும் பொருளற்ற உணர்ச்சிகளையும்விட மேலானது. இந்த வறண்ட அஞ்ஞானமும் வெறியுங் கலந்த குப்பையிலிருந்து ஆன்மிக மகா புருஷன் ஒருவனேனும் தோன்றியுள்ளானு? இருந்தால் காட்டுங் கள். அப்படிக் காட்ட முடியாவிட்டால், வாயை மூடிக்கொண்டு, உங்கள் இதயங்களைத் தூய ஆன்மிக வெளிச்சம் புகும்படி திறந்து வையுங்கள். தாங்கள் பேசுவது இன்னது என்பதை அறியும் இந்திய முனிவர்களின் திருவடிகளில் குழந்தைகளைப் போல அவர் கள் சொல்வதைக் கவனமாக அவர்கள் கேட்கச் செய்யுங்கள்.

குரு அவசியம்

ஒவ்வோர் ஆன்மாவும் பரிபூரண நிலையை அடைந்தே தீரும்; ஒவ்வொரு பிராணியும், முடிவில் பூரணத்துவத்தை எய்துவது நிச்சயம். இப்பொழுது நாம் இருக்கும் நிலையெல்லாம் முன் நம் செயல்களாலும் எண்ணங்களாலும் அமைந்தவை. இப்பொழுது நாம் நினைக்கும் நினைப்பின் வண்ணமும் செய்யும் செயலின் வண்ணமும் நம் எதிர்காலம் அமையும். ஆனால், நம்விதி உருவாக்கப்படும் முறையில் வெளியுதவியை நாம் வேண்டாவென்று தள்ளுவதற்கில்லை; ஏன்? பெரும்பாலார்க்கு, அப்படிப்பட்ட வெளி உதவி வேண்டித்தான் இருக்கிறது. அந்த உதவி ஏற்பட்டால், ஆன்மாவின் சத்திகளும் அவ்வான்மா ஆற்றக்கூடிய சாதனைகளும் துரிதமாக்கப்பட்டு, ஆன்மிக வாழ்வு எழுப்பப்பெற்று, உயிர் வளர்ச்சி பெற்று, மனிதனைப் புண்ணியனாக்கி, முடிவில் பூரணத்துவத்தை அளிக்கின்றன.

விரைவுபடுத்தும் இந்த ஊக்க உணர்ச்சியைப் புத்தகங்களிலிருந்து பெற முடியாது. ஓர் ஆன்மாவை மற்றோர் ஆன்மாவினாலேதான் ஊக்கப்படுத்த முடியும். வேறெதினின்றும் இவ்வூக்கம் பெற இயலாது. நாம் நம் ஆயுள் முழுமையும் புத்தகங்களைப் படிக்கலாம்; பேரறிஞர்களாகலாம். ஆனால், முடிவில் நாம் எந்த வித ஆன்மிக உணர்ச்சியையும் பெற்றதாக உணரமாட்டோம். புத்திசாலித்தனம் மிக அதிகமாக வளர்ந்துவிட்டதால், அதற்கேற்றபடி மனிதனது ஆன்மிக வளர்ச்சியும் ஏற்பட்டுவிடும் என்பது உண்மையன்று. புத்தகங்களைப் படிக்கும்போது நம் ஆன்மவளர்ச்சிக்கு உதவி கிடைத்துவிட்டதாக நாம் பிரமை அடைவதுண்டு. ஆனால், புத்தகங்களைப் படிப்பதால் நாம் பெற்ற நன்மை யாது என்பதைச் சற்று ஆய்ந்து பார்த்தால் நம்முடைய புத்தி அப்படிப்பால் நன்மையடைந்திருக்கிறதே அன்றி, நம் அந்தராத்துமா அதனால் ஒரு பயனும் அடையவில்லை என்பது நமக்குத் தெரியவரும். ஆன்மிக விஷயங்களைப் பற்றி நாம் ஒவ்வொருவரும் மிக அழகாகப் பேசிவிடலாம். ஆனால், நடை முறையிலோ, ஆன்மிக வாழ்க்கையைச் செலுத்துவதிலோ, நாம் எவ்வளவு தாழ்ந்த நிலையில் இருக்கிறோம் என்பது தெரியவரும். இதனால் புத்தகப்படிப்பு நம் ஆன்மிக வளர்ச்சிக்குப் பயனற்றது என்பது விளங்கும். நம் ஆன்ம சத்தியை

ஊக்க, மற்றோர் ஆன்மாவிடமிருந்து தூண்டுகோல் வர வேண்டும்.

எவருடைய ஆன்மாவிலிருந்து இந்த ஊக்கம் புறப்படுகிறதோ, அவரைத்தான் நாம் குரு—ஆசாரியர்—என்கிறோம். எவனுடைய ஆன்மாவினுள் அவ்வூக்கம் பாய்கிறதோ, அவனைச் சீடன்—மாணவன்—என்கிறோம். இவ்வாறு மற்றோர் ஆன்மாவுக்கு ஊக்கத்தைப் பாய்ச்ச, முதலில் குருவுக்கு அந்தச் செலுத்தும் சக்தி இருக்க வேண்டும். அடுத்தபடியாக, வாங்கிக்கொள்ளும் ஆன்மாவுக்கு அதைப் பெற்றுக்கொள்ளச் சக்தி இருக்கவேண்டும். விதை உயிருள்ளதாயும், நிலம் நன்றாய் உழப்பட்டதாயும் இருத்தல் அவசியம். இவ்விரண்டும் நன்றாய் அமைந்துள்ள மதம் மிக வியக்கத்தக்க வளர்ச்சியைப் பெறுகிறது. "உண்மையான ஆசாரியரிடம் வியக்கத்தக்க ஆற்றல்கள் அமைந்திருக்க வேண்டும்; அவரை நாடுபவன் மிகுந்த நுண்ணறிவுடையவனாய் இருக்கவேண்டும்."

आश्चर्यो वक्ता कुशलोऽस्य लब्धा

இவ்விருவரும் மிகச் சிறந்தவராயும் அசாதாரணமானவராயும் இருந்தால், மிக உன்னதமான ஆன்மிக விழிப்பு ஏற்படுகிறது; வேறு வழிகளில் அஃது ஏற்படாது. இப்படிப்பட்டவர்களே உண்மையான ஆசிரியர்கள்; இப்படிப்பட்டவர்களே உண்மையான சீடர்கள்; உண்மையைத் தேடுவோர். பிறர் எல்லாரும் ஆன்மிகத்தோடு விளையாடுபவர். அவர்களது ஆவல் ஒரு சிறிது தூண்டப்பட்டும், அறிவு சிறிதளவு ஊக்கம் பெற்றும் இருக்கலாம்; ஆனால், அவர்கள் மதம் என்பதன் எல்லைப்புறத்தில் நிற்பவர்களே ஆவார்கள்; இவ்வாறிருப்பதிலும் ஒரு பயன் உண்டு; நாளடைவில் உண்மையான சமய உணர்ச்சி வேட்கை அவர்களிடம் எழ இது உதவும். இயற்கையின் விசித்திர விதி என்னவென்றால், புலம் ஆயத்தமாகிவிட்டால் விதை தானாகவே அதில் வந்து விழும்; அதைப்போல, ஆன்மாவுக்கு மதம் வேண்டுமென்ற ஆர்வக்கனல் எழுந்தால், மதச்சத்தியைச் செலுத்தும் இயந்திரம் தானே செயலாற்ற முற்பட்டு ஆன்மாவுக்கு உதவி செய்யத் தொடங்கிவிடும். மத ஒளியை இழுப்பதற்கு வேண்டிய முழு வலிமையை ஆன்மா பெற்றுவிட்டால், அதனால் இழுக்கப்படும் சக்தி தானே ஒளியைக் கொடுத்துவிடும்.

ஆனல், வழியில் பெரிய இடையூறுகள் இருக்கின்றன. உதாரணமாக, பெற்றுக்கொள்ளும் ஆன்மா தனக்கு இக்காலத்துத் தோன்றும் தோற்றங்களை உண்மை மத ஆவல் என்று மாறுபாடாகக் கருத நேரும். இதை நாம் நம்முள்ளேயே காணலாம். நம் வாழ்க்கையில் நமக்கு மிக நெருங்கிய ஒருவர் இறந்துவிட்டால், நாம் திகைப்பு அடைகிறோம்; உலகமே நம்மிடமிருந்து நழுவி விட்டதோ என்று அஞ்சி, நமக்கு உறுதியையும் உயர்வையும் அளிக்கத்தக்க ஒன்றை நாடி, மதப்பற்று உடையவர்களாகிறோம். சில நாள்களில் இந்த உணர்ச்சியின் வேகம் தளர்ந்துவிடுகிறது. நாம் முன் எந்த இடத்தில் நின்றோமோ, அந்த இடத்துக்கே திரும்பிவிடுகிறோம். இப்படி நிகழும் சில தூண்டுதல்களை, மத வேட்கை என்று தவருக நம்முள் பலர் கருதிவிடுகிறோம். இம்மாதிரி இக்கால உணர்ச்சிகளை நாம் உள்ளபடி அறியமுடியாவிட்டால், உண்மையான, இடையருத, ஆன்ம மத வேட்கை வரவே வாராது. ஆன்ம சத்தி நடத்துதல் ஏற்படாது. ஆகையால், நாம் நாடியும் சத்தியம் புலப்படவில்லை என்றும், நம் முயற்சியெல்லாம் வீணுகிவிட்டன என்றும் எப்பொழுதெல்லாம் குறை கூறுகிறோமோ, அப்பொழுதெல்லாம், நாம் குறை கூறுவதை நிறுத்திக்கொண்டு, நம் ஆன்மாவுக்குள்ளேயே நம்சோதனையைச் செலுத்தி, நம் ஆசையெல்லாம் உண்மையானவைகளா என்பதை ஆராய வேண்டும். இவ்வாறு செய்தால், பெரும்பாலோர் சத்தியத்தைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாயில்லை என்பதும், அவர்களிடம் ஆன்ம தாகம் உண்மையாகத் தோன்றவில்லை என்பதும் புலப்படும்.

ஆன்மக் கடத்தியான குரு விஷயத்தில் இன்னும் பெரிய இடையூறுகள் இருக்கின்றன. சில மூடத்தனத்தில் மூழ்கிக்கிடந்தாலும், ஆணவத்தால், தாம் சகலமும் அறிந்துவிட்டதாகத் தம்மைக் கருதிக்கொண்டு, அதோடு நில்லாமல், பிறரையும் தம் தோள்மீது ஏற்றிக்கொள்ள அழைக்கின்றனர். இவ்வாறு குருடு குருட்டுக்கு வழிகாட்டி இருவரும் குழியில் விழுந்த கதையாகிவிடுவதும் உண்டு.

अविद्यायामन्तरे वर्तमानाः स्वयंधीरा पण्डितम्मन्यमानाः ।
जंघन्यमानाः परियन्ति मूढा अन्धेनैव नीयमाना यथान्धाः ॥

அந்தகாரத்தில் மூடர்கள் குடியிருந்துகொண்டு தம்மை ஞானிக

ளெனப்பாவித்து, பயனற்ற அறிவினல் உந்தப்பெற்று, தள்ளாடித் தள்ளாடி முன்னும் பின்னுமாகச் சென்று, 'குருடுக்கு வழி காட்டும் குருடர்கள் ஆகிறார்கள்' (முண்டகோ. உபநி. 1. 2. 8.) உலகத்தில் இப்படிப்பட்டவர்கள் ஏராளமாய் இருக்கிறார்கள். ஒவ்வொருவனும் குருவாக ஆசைப்படுகிறான்; பிச்சைக்காரன் கோடி ரூபாய் தானம் செய்ய விரும்புகிறான். இப்படிப்பட்ட பிச்சைக்காரர்களுக்கும் இப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கும் வேற்றுமை இல்லை; இருவரும் விசித்திர மக்களே.

குரு சீடர் இலக்கணம்

அப்படியானால், ஆசாரியரை நாம் அறிவது எப்படி? கதிரவனைக் காணத் தீவர்த்தி வேண்டுவதில்லை; ஒரு விளக்கைக் கொளுத்தி அவனை நாம் தேடவேண்டுவதில்லை. பகவான் தோன்றினவுடனே நமக்கு அவன் தானே தெரிந்துவிடுகிறான்; அதைப் போல, ஒரு குரு நமக்கு உதவி செய்ய வரும்போது, நம்மை அறியாமலே அவரிடமிருந்து எழும் ஒளி நம் ஆன்மாவின்மீது படிந்துவிடுகிறது. உண்மைக்குச் சாட்சி அதுவே; அது உண்மையென்று நிரூபிக்கச் சான்று ஒன்றும் வேண்டா. அது சுயம்பிரகாசமுடையது. அது தோன்றியவுடன் உலகம் முழுமையும் ஒருமித்தெழுந்து, 'இதோ உண்மை!' என்று கண்டுகொள்கிறது. வெய்யோனொளி சுடர்விடுவதுபோல ஞானமும் உண்மையும் தீவிரமாக வெளிவிடும் குருமார்கள் உலகில் மகாகுருக்களாய்த் திகழ்கின்றார்கள்; உலக மக்களுட் பெரும்பாலார் அவர்களைத் தெய்வமாக வழிபடுகின்றனர். ஆனால், சற்றுத் தாழ்ந்த குருக்களிடமிருந்தும் நாம் உதவி பெறக் கூடும்; நாம் யாரிடமிருந்து உபதேசமும் மார்க்க ஞானமும் பெறக்கூடும் என்பதை அறியும் இயற்கைத் தூண்டுதல் நம்மிடத்தில் இல்லை. ஆகவே, குரு, சீடர் ஆகிய இருவரின் தகுதிகளையும் கண்டறியச் சில யோக்கியதைகளும் சோதனைகளும் இன்றியமையாதவை.

சீடனுக்கு வேண்டிய தகுதிகளில் முக்கியமானவை, தூய்மை, உண்மையான அறிவு வேட்கை, விடாமுயற்சி என்பனவாம். தூய்மையற்ற எந்த ஆன்மாவாலும் சமய நிலையை எட்ட இயலாது. உளம் உரை செயல் என்ற மனம், வாக்கு, காயம் மூன்றில் தூய்மைகளும் எவருடைய சமய வாழ்க்கைக்கும் இன்றியமையாதவை. அறிவு வேட்கையைப்பற்றியோ, நாம் விரும்புவதொன்றே

நமக்குக் கிடைக்கும் என்பது நெடுங்கால வழக்கு. நாம் மனமார விரும்புவதொன்றைத் தவிரப் பிறிதொன்றையும் நம்முள் எவரும் பெற இயலாது. ஆன்மானுபவம் வேண்டுமென்று தவிப்பது மிகவும் துன்பமான காரியம். அது நாம் நினைப்பதுபோல அவ்வளவு எளியதன்று. மதப் பிரசங்கங்களைக் கேட்பதும், வைதிகப் புத்தகங்களைப் படிப்பதும், இதயம் மதத்துக்காக உண்மையாகத் துடிக்கிறது என்பதற்கு அடையாளமல்ல. மேல் நிலையை அடையவேண்டுமென்ற ஆசை உண்மையாகத் தோன்றி, வெற்றியும் கைகூட வேண்டுமானால், நம் கீழ்நிலை மலங்களோடு ஓயாப் போராட்டமும், தொடர்ந்த பிணக்கும், அவற்றை இரக்கமில்லாமல் வதைக்கும் செயலும் இருந்துகொண்டே வரவேண்டும். இப்போராட்டம் இரண்டொரு நாட்களிலோ, ஆண்டுகளிலோ, பிறவிகளிலோ முடிவடைந்துவிடுவதன்று. நூற்றுக்கணக்கான பிறவிகளை இப்போராட்டத்தில் ஈடுபடுத்த வேண்டிவரும். வெற்றி உடனே கிட்டினாலும் கிட்டும்; முடிவற்ற காலத்திற்குப் போனாலும் போகும். ஆனால், விடாமுயற்சியுடன் பாடுபடும் சீடனுக்கு வெற்றியும் ஆன்மானுபவமும் முடிவில் வந்தே தீரும்.

குருவும், தாம் பின்பற்றும் நூல்களின் தத்துவத்தை உணரவேண்டும். உலகம் முழுமையும் விவிலிய நூல்களையும், வேதங்களையும், குர் ஆன்களையும் படித்துக்கொண்டிருக்கிறது. ஆனால், அவையெல்லாம் வெறுஞ்சொற்களும், எழுத்துக்களுமேயாகும். மதத்தின் எலும்புகள் அவை. சொற்களையே பெரிதும் கையாண்டு, அவற்றின் வேகத்திலே மூழ்கித் திளைக்கும் குரு, அவற்றிலடங்கியுள்ள தத்துவத்தைக் காண்பதில்லை. உண்மையான குரு, இந்து மத நூல்களில் அமைந்து கிடக்கும் தத்துவத்தை நன்றாக உணரவேண்டும். இப்புத்தகங்களிலுள்ள வார்த்தைகள் ஒரு பெருங்காடுபோலிருப்பதால், அக்காட்டினுள் புகும் மானிடன் பெரும்பாலும் வழி தெரியாமல் அலைகிறான்.

शब्दजालं महारण्यं चित्तभ्रमणकारणम् ।

காரணம், "சொற்களின் பின்னல் ஒரு பெருங்காடு; மனம் தடுமாறி அலைவதற்கு அது ஏற்ற இடம்." சொற்களின் புணர்ச்சி விதிகள், அழகான மொழியிற் பேசப் பல்வேறு வழிகள் ஆகியவை வாதம் செய்கிறவர்களுக்கும் தங்கள் பாண்டித்யத்தைக் காட்ட

விரும்புகிறவர்களுக்குமே தகுந்தவை. ஆன்ம தரிசனத்தை வளர்க்க அவை பயன்படமாட்டா.

वाग्वैखरी शब्दझरी शास्त्रव्याख्यानकौशलम् ।
वैदुष्यं विदुषां तद्वत् भुक्तये न तु मुक्तये ॥

இந்த முறைகளில் மதத்தைப் பிறர்க்கு உபதேசிக்க விரும்புகிறவர்கள், தங்கள் கல்வியைப் பிறர் முன்னிலையில் பிரசாரம் செய்ய விரும்புகிறவர்களேயாவார்கள். உலகம் தங்களை மகா வித்துவான்களென மதிக்க வேண்டுமென்பதே அவர்கள் விருப்பம். உலக மகா குருமார் எவரும் மூல நூல்களுக்குப் பலவித உரைகள் கூறினரல்லர்; 'மூலத்தைக் கொலை புரிதல்' அவர்களிடம் காணப்படமாட்டாது. சொற்களையும் அவற்றின் பகுதிகளையும் கொண்டு அவற்றின் பொருளைப் பற்றி ஓயாத விளையாட்டுகளை அவர்கள் புரியமாட்டார்கள். ஆனால், அவர்கள் மிக உன்னதமாகப் போதனை செய்து வந்தார்கள். பிறரோ, ஒரு சொல்லை வைத்துக்கொண்டு மூன்று புத்தகங்கள் எழுதுவர்; அப்புத்தகங்களில், 'இச்சொல்லை இப்பொருளில் முதன் முதலில் உபயோகித்தவர் யாவர், அவர் எதை உண்பது வழக்கம், அவர் எத்தனை நேரம் உறங்குவர்' என்று இப்படியெல்லாம் எழுதிக்கொண்டே போவர்.

பகவான் இராமகிருஷ்ணர் ஒரு கதை சொல்வது வழக்கம். சிலர் ஒரு மாந்தோப்புக்குப் போயினர்; அவசரம் அவசரமாக அங்குள்ள இலைகளையும் சுள்ளிகளையும் கிளைகளையும் எண்ணினர்; அவற்றின் நிறம், உருவம் முதலியவற்றைச் சோதித்து ஒத்துப் பார்த்து, மிக்க விழிப்போடு அவற்றை எழுதி வைத்துக் கொண்டனர். அவற்றைப் பற்றி மிக்க புலமையுடன் வாதம் புரிந்தனர். அவ்வாதங்களில் அவர்கள் சந்தேகமில்லாமல் மிகுந்த இன்பமடைந்தார்கள். ஆனால், அவர்களுள் ஒருவன், அவற்றுள் எதையும் கவனியாமல், மாம்பழத்தைத் தின்னலானான். அவன் மற்றவர்களைவிட அறிவுள்ளவன் அல்லனா? ஆகவே, இந்த இலை எண்ணுதலையும் சுள்ளி எண்ணுதலையும் பிறருக்கு விட்டுவிடுங்கள். இம்மாதிரி வேலைக்கு இடம் உண்டு; ஆனால், ஆன்மிக உலகத்தில் இதற்கு இடம் இல்லை. இந்த இலை எண்ணிகளிடையில் வலிய ஆன்மிக புருஷனை நீங்கள் காணமாட்டீர்கள். மனிதனது உயர்ந்த குறிக்கோளும் உயர்ந்த மகிமையுமான மதத்திற்கு இவ்வளவு

வேலை தேவை இல்லை. நீங்கள் பத்தராக வேண்டுமானால், கிருஷ்ண பகவான் மதுரையில் பிறந்தவரானால் என்ன, விரஜையில் பிறந்தவரானால் என்ன? 'அவர் செய்துகொண்டிருந்தது என்ன? அவர் கீதோபதேசம் செய்த சரியான தேதி யாது?' என்றெல்லாம் கேட்டறிந்து பயனென்ன? கீதையில் கடமையைப் பற்றியும் அன்புடைமையைப்பற்றியும் கூறப்பெற்ற அழகான போதனைகளை அறிய ஆவல் பெறுவது மட்டும் போதுமானது. அதையும் அதன் கர்த்தாவையும் பற்றி அறியும் பிற யாவும் படிப்பாளிகளுக்கு வேண்டுவன. அவர்கள் விரும்புவனவற்றை அவர்கள் பெறுக. அவர்கள் புலமை மிக்க வாதங்களைக் கேட்கும்போது 'சாந்தி! சாந்தி! என்று கூறுங்கள். நீங்கள் பழங்களைச் சாப்பிடுங்கள்.

ஆசிரியர்க்குரிய இரண்டாவது நிபந்தனை, பாவமின்மை என்பதாகும். 'நாம் ஏன் ஆசிரியரின் புருஷாகாரத்தையும் அவர் பண்புகளையும் பற்றி விசாரிக்க வேண்டும்? அவர் சொல்வதை ஆராய்ந்து கொள்ளவேண்டியதுதானே அவசியம்?' என்ற கேள்வி அடிக்கடி எழுவதுண்டு. அது சரியன்று. எனக்கு டைனமிக்ஸ், இரசாயனம், அல்லது பௌதிகக்கலையின் வேறு ஏதேனும் ஒரு கிளை இவற்றைப்பற்றி ஒருவர் சொல்லிக்கொடுக்க வருவாரானால், அவர் எப்படிப்பட்டவரானாலும் குற்றமில்லை. பௌதிக அறிவியல்களுக்கு வேண்டுவன எல்லாம் அறிவுத் தேர்ச்சியே. ஆனால், ஆன்மிகக் கலைகளுக்கு முதலிலிருந்து கடைசிவரை, ஆன்ம ஒளி இன்றி ஒன்றும் நடைபெறாது. மாசுள்ள ஆன்மாவில் இந்த ஒளி ஏற்படாது. மாசுள்ள ஒருவன் எவ்வாறு மதபோதனை செய்ய இயலும்? ஒருவன் ஆன்ம உண்மையை அடைவதனாலும், பிறருக்கு அளிப்பதனாலும் அவனுடைய இதயம் தூய்மை பெற்றிருக்க வேண்டும். ஆன்மா பரிசுத்தமாயிருந்தாலன்றித் தெய்வ தரிசனமோ, அப்பாலுள்ளவற்றின் காட்சியோ ஒருவனுக்கு ஏற்படாது. ஆகவே, மதபோதகரைப் பற்றி அவர் எப்படிப்பட்டவர் என்பதை நாம் முதலில் அறிந்துகொண்டு, பிறகு அவர் சொல்வதை ஆராயவேண்டும். அவர் பரிபூரண சுத்தராய் இருக்க வேண்டும்; அப்படியிருந்தால், அவர் நல்ல கடத்தியாவர்; அதனாலேதான் அவர் சொற்களுக்கு மதிப்பு ஏற்படுகிறது. ஆன்ம சத்தி தன்னிடம் இருக்கப் பெறாதவன், எதைக் கடத்தக் கூடியவனவன்? ஆசிரியன் மனத்தில் ஆன்மிகத்தின் சிறந்த அசைவுகள் அமைந்திருந்தால்தான் மாணவனின் மனத்தில் தயையுடன்

அதைச் செலுத்த இயலும். ஆசிரியரது தொழில் மாணவனிடம் அமைந்துள்ள அறிவையோ பிற ஆற்றல்களையோ ஊக்குவிப்பது மட்டும் அன்று; அவனுக்கு ஒன்றைத் தம்மிடமிருந்து மாற்றுவது மாகும். உண்மையானதும் போற்றத் தக்கதுமான ஏதோ ஒன்று ஆசிரியரிடமிருந்து மாணவனை ஊக்குவதற்குச் செல்கிறது. ஆகவே, ஆசிரியர் தூய்மையுள்ளவராய் இருத்தல் வேண்டும்.

ஆசிரியரிடம் காணவேண்டிய மூன்ருவது பண்பு, அவருடைய நோக்கம். அவர் தமக்குப் பயன்படும் என்ற சுய நன்மைக்கோ, பணத்துக்கோ, புகழுக்கோ போதனை செய்ய லாகாது. அவர் எல்லா மனித இனத்தினிடத்திலும் அன்பு வைத்துத் தம் தொழிலைச் செய்யவேண்டும். ஆன்மிகச் சத்தியை ஒருவரிடமிருந்து மற்ருெருவருக்கு அன்பின் மூலமாகத்தான் கடத்தக் கூடும். பணம் புகழ் போன்ற சுயநல நோக்கம் கொண்டு கடத்தும் மார்க்கம் உடனே அழிந்துவிடும். கடவுளே அன்பு; ஆகவே, அவரை அன்பென உணர்ந்தவரே கடவுள் தன்மையையும் கடவுளையும் மனிதர்க்கு எடுத்துச் சொல்லும் ஆசிரியராவர்.

உன் ஆசிரியரிடம் இந்தப் பண்புகள் இருப்பதை நீ கண்டால் உனக்கு ஆபத்தில்லை; அவை இல்லாவிடில், அவர் போதிப்பதால் உன்னைக் காத்துக்கொள்ள வழி இல்லை. ஏனெனில், உன் இதயத்திற்கு நல்லதை விளைக்க அவருக்குச் சத்தி யில்லாதபோது அவர் தீமையை விளைத்துவிடலாம். இந்த ஆபத்து வாராதபடி மிக விழிப்பாக நீ உன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

श्रोत्रियोऽवृजिनोऽकामहतो यो ब्रह्मवित्तमः

"சாத்திரங்களில் நல்ல பயிற்சியும், பாவமின்மையும், ஆசையால் தீண்டப்படாமையும், பிரம்மத்தை நன்ருக அறிதலும் உடையவனே உண்மையான ஆசான்."

இதுவரையில் சொல்லியவற்ருல், மதத்தை அன்புடன் விரும்பவும், புரிந்துகொள்ளவும், நம்மதாக்கிக்கொள்ளவும் கண்டவரை ஆசிரியராகக் கொள்ளலாகாதென்பது கூறப்பட்டது. 'கற்கள் கூறும் உபதேசங்கள், ஓடும் ஆறுகள் உதவும் புத்தகங்கள், ஒவ்வொன்றிலும் காணும் நன்மைகள்' என்பன யாவும் காவியப் பேச்சுக்குச் சிறந்தனவே. ஆனல், சத்தியத்தின் உயிர்த் தாதுக்களைத் தன்னிடம் கொள்ளாத எவனும், அந்தச் சத்தியத்தில் ஒரு துளி

யையாவது பிறருக்குக் கொடுக்க இயலாது. கற்களும் ஆறுகளும் யாருக்கு உபதேசிக்கின்றன ? மானிட ஆன்மாவுக்கு அதன் கர்ப்பக்கிருகத்திலுள்ள தாமரை ஜீவசத்தியின் துடிதுடிப்பைப் பெற்றுள்ளது. அந்தத் தாமரையின் அழகிய வாயைத் திறக்க ஒளி யானது நன்மையும் ஞானமும் பெற்ற ஆசிரியரிடமிருந்து வர வேண்டும். இவ்விதம் இதயத் தாமரை திறக்கப்பட்ட பின்புதான், கற்கள், ஆறுகள், விண்மீன்கள், சூரியன், சந்திரன் போன்ற நம் தெய்விகப் பிரபஞ்சத்திலுள்ள எந்தப் பொருளினிடமிருந்தும் போதனை பெற உரிமையை அடைகிறது. திறக்கப்படாத இதயமோ, வெறுங்கற்களையும் ஆறுகளையுமே காணக்கூடும். குருடனொருவன் ஒரு காட்சிச் சாலைக்குப் போகலாம் ; ஆனால், அதனால் அவனுக்கு ஒரு பயனும் உண்டாகாது. அவன் கண்கள் முதலில் திறக்கப்பட வேண்டும் ; பின்புதான் அக்காட்சிச் சாலையினின்று அறியக்கூடிய வற்றை அவனால் அறிந்துகொள்ளக்கூடும்.

மத அறிவு பெற விரும்புபவனின் கண்களைத் திறப்பவரே ஆசாரியர். ஆகையால், வமிசத்தில் முன்னோன் ஒருவனுக்கும் பின்னோன் ஒருவனுக்குமுள்ள சம்பந்தமே ஆசாரியனுக்கும் சீட னுக்கும் ஏற்படுகிறது. சிரத்தை, எளிமை, பணிவு, மரியாதை இவற்றை ஆசாரியர்பால் மனமாரக் கொள்ளாவிட்டால், நம்மிடம் எந்தவிதமான சமய வளர்ச்சியும் உண்டாகாது. ஆசிரியருக்கும் மாணவருக்கும் இந்தவிதமான தொடர்பு எங்கு உண்டாகிறதோ, அங்குதான் மிகச்சிறந்த ஆன்மிகப் புருஷர்கள் வளர்கிறார்கள். இந்தமாதிரி ஆசிரிய மாணவ சம்பந்தத்தை அலட்சியம்செய்த நாடு களில் ஆசிரியர் வெறும்பேச்சாளராயும் தம் சம்பளத்தையே எதிர் நோக்குபவராயுமே இருப்பார். சீடனும் தன் மூளையை ஆசிரியர் சொற்களால் எவ்வளவு நிரப்ப முடியுமோ, அவ்வளவு நிரப்பிக் கொள்ளவே ஆசைப்படுபவனாவன். இருவரும் இருவேறு வழிகளிற் செல்லுவர். பயன் ஒன்றும் உண்டாகாது. இந்நிலையில் ஆன்மிகம் இல்லையாகும். அங்குக் கொடுப்பவரும் இல்லை ; கொள்பவரும் இல்லை. இவர்களிடம் மதம் என்பது ஒரு வியாபாரமாகும் ; பணம் கொடுத்து அதனை வாங்கவே எவரும் விரும்புவர். இவ்வளவு எளி தானதாகச் சமயம் என்பது இருக்குமானால் அது நல்லதே; ஆனால், அது அப்படிப்பட்டதாக இல்லை.

மதம் என்பது மிக உயர்ந்த அறிவும் மிக உயர்ந்த ஞானமும் ஆகும். அதனை விலை கொடுத்து வாங்கவோ, புத்தகங்களிலிருந்து

பெறவோ இயலாது. நீ உலகத்து மூலைமுடுக்குகளிலெல்லாம் உன் மண்டையை நுழைக்கலாம்; இமாலயம், ஆல்ப்ஸ், காக்கஸஸ் என்னும் மலைகளின்மீது ஏறி ஆராயலாம்; கடலின் ஆழத்தைக் காணலாம்; திபெத்தின் எல்லா மூலைமுடுக்குகளையும் கோபிப் பாலைவனத்தின் எல்லா இடுக்குகளையும் கண்டுவிடலாம். ஆனால், உன் ஆசிரியர் தோன்றினாலல்லாமல், அவர் உபதேசத்தை உன் இதயம் ஏற்கத்தகுதி பெற்றாலல்லாமல், அந்த இடங்களில் எங்கும் சமய அறிவைக்காண இயலாது. அந்தத் தெய்வாமிசம் பெற்ற ஆசிரியர் தோன்றும்போது, ஒரு குழந்தையின் நம்பிக்கைபோன்ற நம்பிக்கையும் எளிமையும் கொண்டு, அவரை அணுகித் தொண்டு புரிந்து, உன் இதயத்தைத் தாராளமாகத் திறந்து வைத்து, அதில் அவருடைய ஆன்மவேகம் புக இடங்கொடுத்து, அவரிடம் கண்கூடான கடவுளைக் காண்பாயாக. இத்தகைய அன்பும் பத்தியும் கொண்டு சத்தியத்தை நாடுகிறவர்க்கு சத்திய தேவதை, அந்தச் சத்தியம், நன்மை, அழகு இவற்றைப்பற்றிய வியக்கத்தக்க விஷயங்களைத் தோற்றுவிக்கிறது.

अवतार आचार्यकलुम् अवतारमुम्

கடவுளுடைய திருநாமம் பேசப்படும் இடமெல்லாம் புண்ணியத் தலங்களே. இவ்வாறிருக்க, அவர் திருநாமத்தைக் கூறுகிறவர் எவ்வளவு புண்ணிய வடிவாய் இருக்கவேண்டும்? தெய்விக உண்மையைப் புலப்படுத்தும் அவரிடம் நாம் எவ்வளவு பத்தியுடன் இருக்கவேண்டும்? ஆனால், உலகத்தில் ஆன்மிக உண்மையை அளிக்கும் மகான்கள் மிகவும் குறைவானவர்களே; அவர்கள் இல்லாமல் உலகம் ஒருமிக்க வாழவுமியலாது. மானிட வாழ்க்கையின் அழகு மிக்க மலர்கள் அவர்கள்.

अहेतुक दयासिन्धु:

'தமக்கென்று நோக்கமெதுவுமில்லாத கருணைசமுத்திரம்.'

आचार्यं मां विजानीयात् ।

'குருவை நான் என்று அறி,' என்று கிருஷ்ண பகவான் பாகவதத்தில் பகர்கிறார். இத்தகையோர்கள் எந்தக்கணம் முதல் இல்லாமற்போகிறார்களோ, அப்பொழுதே உலகம் பயங்கரமான நரகமாகி, அதன் அழிவை நோக்கித் துரிதமாகச் செல்லத்

தொடங்குகிறது. இவர்களைவிட உயர்வும் மகிமையும் உள்ள ஆசாரியர்கள் உலகில் தோன்றுகிறார்கள். அவர்களே ஈசுவர அவதாரங்கள். அவர்கள் தங்கள் விருப்பத்தாலேயே, ஒருமுறை தொடுவதாலேயே ஆன்மிக அறிவைப் பிறரிடம் பாய்ச்சுவார்கள். அவர்கள் கட்டளையினால் மிக இழிந்தவர்களும் ஒரு வினாடியிலே பெரிய ஞானிகள் ஆகிவிடக்கூடும். அவர்கள் ஆசாரியர்களுக்கும் ஆசாரியர்கள்; கடவுள் மனித உருவத்தில் தம்மைத் தெரிவித்துக்கொள்ளும் பெரிய அவதாரங்களே அவர்கள். அவர்கள் மூலமாகவன்றிக் கடவுளை நாம் காணமுடியாது. அவர்களை நாம் பூசிக்காமல் இருக்க இயலாது. உண்மையாக, அவர்களே நம் பூசைக்கு உரியவர்கள்.

இந்த மானிட உருவத்தில் அளிக்கப்படும் தோற்றங்களிலன்றி இறைவரை வேறு விதத்தில் எவரும் காண இயலாது. வேறு வழியில் நாம் அவரைக்காண முயலும்போது அவரை வெறுக்கத்தக்க ஒரு போலியுருவாக்கி, அதுவே அவர் என்று நம்புகிறோம். இதை விளக்கும் ஒரு கதை உண்டு: ஒருவனைச் சிவபிரான் உருவத்தைச் செய்யச் சொன்னார்கள்; அவன் நெடுநாள் முயன்று ஒரு குரங்குருவத்தைப் படைத்தானாம். ஆகவே, கடவுளை அவரது பரிபூரண நிலையிலிருக்கப் பார்க்க முயலும்போதெல்லாம் நமக்குத் தோல்வியே உண்டாகிறது; நாம் மனிதராய் இருக்குமட்டும், மனிதநிலையை விட்டு வேறாக நாம் அவரைக் கருத இயலாது. நாம் நம் மானிட நிலையைத் தாண்டி மேலேறுவோமானால், அவரை அவர் உள்ளபடி நாம் உணரக்கூடும்; ஆனால், நாம் மனிதராய் இருக்குமட்டும் அவரை மனிதரில் வைத்து மனிதராகவே பூசிக்க வேண்டும். நீ எதைவேண்டுமானாலும் பேசலாம்; எப்படி வேண்டுமானாலும் முயலலாம்; ஆனால், கடவுளை மனிதராக அல்லாமல் வேறு எந்த வகையிலும் உன்னால் நினைக்கமுடியாது. இதைத் தவிர வேறு வழியில்லை. இறைவனையும், நானிலத்துள்ள பொருள்கள் அனைத்தையும்பற்றி அறிவொளி மிக்க பெருஞ் சொற்பொழிவாற்றலாம். தருக்க நிபுணராய்த் திகழ்ந்து, இறைவனின் மனித அவதாரங்களைப்பற்றிய நிகழ்ச்சிகள் யாவும் பேதைமையென்று திருப்தியுற நீர் மெய்ப்பிக்கலாம். ஆனால் செயல் முறைக்கு உதவும் பொது அறிவு நிலைக்குச் சற்றே செல்வோம். இத்தகைய அறிவுப் பொலிவின் பின்னுள்ளது யாது? சூனியமே, ஒன்றுமின்மையே, அவ்வளவு நுரைமட்டுமே. கடவுளின் அவதார வழிபாட்டை எதிர்த்து ஒருவர் அறிவு நலன்மிக்க சொற்பொழிவை நீர் அடுத்த முறை கேட்குங்

கால், அவரைப்பற்றி யிழுத்து, "கடவுளைப்பற்றி நீர் கொண்ட கருத்து யாது? 'ஸர்வ சக்தித்துவம்' 'ஸர்வ வியாபகத்துவம்' என்பவற்றிற்கும், இவைபோன்ற பிற மொழிகட்கும், அவற்றின் எழுத்துக்களுக்கு அப்பால், நீர் கண்ட பொருள்கள் எவை?" என்று வினவுவீராக. அவற்ருல் அவர் அறிந்தது யாதுமில்லை என்பதே உண்மை; அவரது சொந்த மனித இயற்கையால் பாதிக்கப் படாத எக்கருத்தையேனும் அவற்றின் பொருளாக அவர்க்கு வரையறுத்துக் கூற இயலாது; இதுபற்றிப் பேசின், ஒரு நூலையும் வாசித்திராத தெரு மனிதன் ஒருவனைவிட மேலாகார் அவர். எனினும் அத்தெரு மனிதன் அமைதியாயிருப்பான், உலக அமைதியைக் குலையாதிருப்பான், ஆனுல் இப்பெரிய பேச்சாளரோ மன்னுயிர்க்குத் தொந்தரவையும் துயரத்தையும் படைத்தளிப்பார். யாது கூறினும், சமயம் என்பது அனுபூதியே; பேச்சுக்கும் அனுபூதி ஞானத்திற்கும் மிகச் செவ்வனே வரையறுக்கப்பட்டுள்ள வேறுபாட்டைக் காண வேண்டும். நம் ஆன்மாவிற்குள் ஆழத்தே பெறும் அனுபவமே மெய்யுணர்வாகும். இப்பொருள்பற்றியவரை, பொது அறிவைப் போன்று அத்துணை அசாதாரணமானது உண்மையிற் பிறிதொன்றில்லை.

நமது இப்போதைய அமைப்பால் நாம் வரையறையுற்றவராதலின், இறைவரை மனிதனுகக் காணும் கட்டுப்பாட்டுக்கு உள்ளாவோம். உதாரணமாக, எருமைகள் இறைவனை வணங்க விரும்புமாயின், அவை தமது சொந்த இயற்கைக்கேற்ப, அவரை ஒரு பேரெருமையாகவே காணும்; ஒரு மீன் இறைவரை வழிபட விரும்புமாயின், அவரைப்பற்றிய அதன் கருத்து ஒரு பெரும் மீனுகவே அமைய வேண்டியதாகும்; மனிதனும் அவரை மனிதனுகவே நினைக்க வேண்டியவனுவான்; இப்பல்வகைக் கருத்துகளும் நோயினுல் விரைவுற்ற கற்பனையால் எழுந்தவையல்ல. மனிதனும், எருமையும், மீனும் யாவும் அத்தனை வேறு வேருன கலங்களைக் குறிப்பதாகக் கருதலாம். இத்தனை கலங்களும் தத்தம் சுய வடிவிற்கும் கொள்ளும் அளவிற்கும் ஏற்ப நீரை நிரப்பிக்கொள்ளும்பொருட்டு இறைவர் என்னும் கடலுக்குச் செல்லுகின்றன. மனிதக் கலத்தில் நீர் மனித வடிவையும், எருமைக் கலத்தில் எருமை வடிவையும், மீன் கலத்தில் மீன் வடிவையும் பெறுகிறது. இக்கலங்கள் ஒவ்வொன்றிலும் இறைவர் என்னும் கடலிலுள்ள அதே நீர் உள்ளது. மனிதர் இறைவரைக் காணும்போது, அவரை மனிதனுகக் காண்கின்றனர்

விலங்குகளும், அவற்றிடம் இறைவரைப்பற்றிய கருத்து இம்மியே னும் உண்டாயின், ஒவ்வொன்றும் அதனதன் சொந்த இலக்ஷியத் திற்கு ஏற்ப அந்தந்த விலங்காகத்தான் அவரைக் கண்டு தீர வேண்டும். ஆதலால் இறைவரை மனிதனுகக் காணுதல் நமக்குத் தடுக்கவொண்ணுது; ஆதலால் அவரை மனிதனுக வழிபடும் கட்டுப்பாட்டுக்கு உள்ளாயிருக்கிறோம்.

கடவுளை மனிதனுக வழிபடாதவர் இரு வகையினர். அவருள் மதம் என்பதில்லாத காட்டுமிராண்டிகள் ஒருவகையினர்; மானிட எளிமைகளை யெல்லாம் தாண்டி அப்பாற் சென்றவர்களும், தங்களுக்கு இயல்பான மானிட சுபாவத்தின் எல்லையைக் கடந்தவர் களுமான பரமஹம்ஸர்கள் மற்றொருவகையினர். அவர்களுக்குப் பிருகிருதி எல்லாம் தாமே ஆகிவிடுகின்றன. அவர்களே கடவுளை அவருடைய உண்மை நிலையில் வைத்துப் பூசிக்கக்கூடும். பிற விஷயங்களிற்போல இரண்டு ஓரங்களும்—மடமையின் எல்லையும் ஞானத்தின் எல்லையும்—ஒன்றுகூடுகின்றன. இவ்விருவரும் பூசை புரிய வேண்டுவதில்லை. காட்டுமிராண்டி தன் அஞ்ஞானத்தால் பூசை செய்வதில்லை; ஜீவன் முத்தர்கள் (வீடு பெற்றவர்கள்) கடவுளைத்தம்மிடத்திலே காண்பதால் பூசை செய்வதில்லை. இவ்விரு எல்லைகளுக்கும் இடையிலே நிற்கும் எவனேனும் கடவுளைத் தான் பூசை செய்யப் போவதில்லை என்று கூறுவானுனுல் அவனிடம் விழிப்பாயிரு. மரியாதையாகச் சொல்வோமானுல், அவன் பொறுப் பற்றுப் பேசுகிறவன்; அவன் மதம் நேர்மையற்றது; அறிவற்றவர் களுக்கே ஏற்றது என்னலாம்.

மானிடர்க்குரிய குறைகளைக் கடவுள் அறிகிறுர்; மானிட இனத்திற்கு நன்மை புரியும் பொருட்டு அவர் ஒரு மனிதராகிறுர்.

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥
परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

" தர்மம் குறைந்து அதர்மம் தலையெடுக்கும் போதெல்லாம் நான் அவதரிக்கிறேன்; யுகந்தோறும் அறத்தை நிலைநிறுத்த

வும் மறத்தை அழிக்கவும் நல்லோர்களைக் காக்கவும் நான் வருகிறேன்.''

अवजानन्ति मां मूढा मानुषीं तनुमाश्रितं ।
परं भावमजानन्तो मम भूतमहेश्वरम् ॥

"மூடர்கள் மானிட உருவமெடுத்த என்னை நான் சர்வலோகங்களுக்கும் பிரபு என்பதை உணராமல் இகழ்கிறார்கள்.'' இதுவரை அவதாரங்களைப் பற்றிக் கீதையில் சொல்லப்பட்டவை. "பெரும் புயலை வரும்போதே சிறிய வாய்க்கால்களும் சாக்கடைகளும் தாம் அறியாமலே வெள்ளத்தால் நிரம்பி விடுகின்றன; அப்படியே அவதாரம் ஒன்று உலகில் ஏற்படும்போது, பெரியதோர் ஆன்மிக வெள்ளம் உலகத்தில் பரவ, மக்கள் யாவரும் வானமெல்லாம் ஆன்மிகம் நிறைந்துள்ளதை உணர்கிறார்கள்'' என்று பகவான் ராமகிருஷ்ணர் கூறுகிறார்.

மந்திரம்: ஓம்: சொல்லும் ஞானமும்

பேரவதாரங்களான மகா புருஷர்களைப் பற்றி இப்போது நாம் ஆராயவில்லை. ஆனால், சித்த குருக்களைப் பற்றியே பேசுகிறோம். (அவர்கள் சித்தி அடைந்தவர்கள்); அவர்கள் சீடர்களுக்குத் தியானிக்கப்பட வேண்டிய மந்திரங்களின் மூலமாக ஞானத்தின் விதைகளை அவர்களிடம் ஊன்றுகிறார்கள். இம்மந்திரங்கள் என்பன யாவை? இந்தியத் தத்துவ சாத்திரங்களின்படி இப்பிரபஞ்சம் முழுமையும் நாம ரூபங்களின் மூலமாகத்தான் புலனாகின்றன. மானிடச் சிற்றண்டத்தில் நாம ரூபங்களால் அமையாத சித்தவிருத்தியின் அலை எதுவுமே இல்லை. இயற்கை முழுவதும் ஒரே முறையில் அமைக்கப்பெற்றுள்ளது என்பது உண்மையானால், பேரண்டத்தின் அமைப்பும் இதை ஒத்தேதான் இருக்கும்

यथा एकेन मृत्पिण्डेन सर्वं मृन्मयं विज्ञातं स्यात् ।

"களியின் ஒரு பிண்டம் அறியப்பட்டால், களி முழுவதும் அறியப்பட்டதாகும்.'' அதைப்போலச் சிற்றண்டத்தை அறிந்துவிட்டால், அதுவே பேரண்டத்தையும் அறிவிக்கும். சரி. உருவம் என்பது மேல் மூடி; நாமம் அல்லது கருத்தென்பது அதன் சாரம். உடல்

உருவம்; மனம் அல்லது அந்தக்கரணம் நாமம்; பேச்சாற்றல் பெற்ற எல்லாப் பிராணிகளிடமும் நாமத்துக்கும் ஒலிக் குறிகளுக்கும் சம்பந்தம் இருக்கக் காண்கிறோம். தனி மனிதனிடம் அவன் சித்தத்தில், அதாவது குறுகிய அண்டத்தில், எழும் கருத்தலைகள் முதலில் சொற்களாகவும், பிறகு உருவங்களாகவும் புலப்பட வேண்டும்.

பிரபஞ்சத்தில், பிரம்மம் அல்லது இரணியகர்ப்பம் அல்லது மகத்தென்னும் பெரும்பொருள் முதலில் ஒரு நாமமாகவும், பிறகு இந்த உலகமென்னும் உருவமாகவும் பரிணமிக்கிறது. இவ்வாறு வெளிப்பட்டுள்ளதும் புலன்களின் உணர்ச்சிக்கு உரியதுமான பிரபஞ்சமே உருவம்; அதன் பின்னே என்றும் உள்ளதும் இன்னதென்று சொல்லக் கூடாததுமான ஸ்போட்டமும் (sphota) அதனைப் புலப்படுத்தும் லோகாஸ் (logos) அல்லது வார்த்தையும் இருக்கின்றன. சாசுவதமான ஸ்போடம், எல்லாக் கருத்துகளுக்கும் நாமங்களுக்கும் முதற்கருவி. இந்தச் சத்தியைக் கொண்டே ஈசுவரர் பிரபஞ்சத்தைப் படைக்கிறார்; அதாவது, ஈசுவரர் முதலில் ஸ்போட்டமாக மாறி, பிறகு அதிலிருந்து புலன்களுக்குரிய தூலப் பிரபஞ்சமாகப் பரிணமிக்கிறார். ஸ்போட்டத்தைக் குறிக்க ஓம் என்கிற சொல் அதன் அடையாளமாய் இருக்கிறது. சொல்லைக் கருத்திலிருந்து பாகுபடுத்த வழி இல்லாமையால் இந்த ஓம் என்பதும் சாசுவதமான ஸ்போட்டமும் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிக்க முடியாதவை. ஆகவே புண்ணிய வார்த்தைகளுள் புண்ணிய வார்த்தையாகவும், எல்லா நாம ரூபங்களுக்குந் தாயாகவும் இருக்கும் இந்த ஓமிலிருந்தே பிரபஞ்சம் முழுமையும் தோன்றியுள்ளது என்று கொள்ளவேண்டும். கருத்தும்சொல்லும் பிரிக்க முடியாதவை என்பது உண்மையானாலும், ஒரே கருத்துக்குப் பல ஒலிக் குறிகள் இருக்கக் கூடுமாகையால், ஓம் என்பது ஒன்றே கருத்தைத் தெரிவிப்பது என்றாவது, அதிலிருந்துதான் உலகமெல்லாம் தோன்றின என்றாவது ஏன் கூறியிருக்க வேண்டும் என்னும் வினா எழலாம். ஓம் என்பதே எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொள்ளக் கூடிய குறி; அதைப்போன்ற பிறிதொன்றும் இல்லை என்பதே இதற்கு விடையாகும். இந்த ஸ்போட்டம் எல்லா மொழிகளையும் ஆக்கும் பொருளாகும். எனினும், முழு வடிவம் பெற்ற நிலையிலுள்ள எந்தக் குறிப்பிட்ட மொழியும் அன்று. அதாவது, ஒரு மொழியை வேறொன்றினின்றும் பிரித்தறிய உதவும் சிறப்புத்

தன்மைகள் அனைத்தையும் களைந்துவிடின், எஞ்சுவது யாதோ அதுவே ஸ்போட்டம். ஆதலின் இந்த ஸ்போட்டம் 'நாதப் பிரம்மம்' (ஒலி வடிவப் பிரம்மம்) எனப்படும்.

வெளிப்படுத்தவொண்ணு ஸ்போட்டத்தை வெளிப்படுத்துவதற் கெனக் கருதப்படும் ஒவ்வொரு மொழிக்குறியும் அதற்குச் சிறப் புத்தன்மையை அளிப்பதால் அது ஸ்போட்டமாகாது என்னும் நிலை வருமாதலின், அதற்கு மிக மிகக் குறைந்த அளவிற்குச் சிறப்புத் தன்மையை ஊட்டி, அதே சமயம் அதன் இயல்பை மிக அணித் தான வகையிலே வெளிப்படுத்தும் குறி எதுவோ, அதுவே மிகமிக உண்மையான (பொருத்தமான) குறியாகும்; இக்குறி ஓம் என் பதே, அதுவொன்றேயாம்; ஏனெனில், அ உ ம் என்னும் மூன்று எழுத்துகளும் சேர்ந்தொலித்தலால் எழும் ஓம் என்பது, எழக் கூடிய ஒலிகள் அனைத்திற்கும் பொதுமையாக அமைத்த குறி யாகும். அ என்னும் எழுத்து, எழுத்துகளுள் மிகவும் இயல்பானது. ஆகையால், ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில்

अक्षराणां अकारोऽस्मि

"நான் எழுத்துகளுள் அகரம் ஆவேன்," என்றார். எல்லா ஒலிகளும் வாயினுள் நாவின் அடியிலிருந்து உதடு வரையிலு முள்ள இடத்தில் தோன்றுவன. தொண்டையில் உதிப்பது அ; ம் என்பது உதட்டின் நுனியில் உதிப்பது. தொண்டையில் தோன்றி, உதடு வரை செல்லும் ஒலி அலையில் தோன்றுவது உ. சரியானபடி கூட்டி உச்சரித்தால் இம்மூன்று ஒலிகளும் கூடிய 'ஓம்' என்பது அமையும்; வேறு எந்தச் சொல்லும் இம்மாதிரி அமைதல் இயலாது. ஆகவே, ஸ்போட்டத்தின் முழுப் பிரதிநிதி இந்த ஓம் என்பதே. இதன் பொருளும் அதுவே. குறியும் பொருளும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாதாகையால், 'ஓம்' என்பதும் ஸ்போட்டமும் ஒன்றேயாகும். தூலப் பிரபஞ்சத்தின் சூக்குமம் ஸ்போட்டம் ஆதலால், அதுவே கடவுளுக்கு அடுத்தபடி யாவது; தெய்வ ஞானத்தின் முதல் தோற்றமும் அதுவே; ஆகவே, ஓம் என்பது கடவுளை நேரடியாக அறிவிக்கும் அறிகுறியாகும். பிரம்மம் ஏகமாயும், அகண்ட - சச்சிதானந்தப் பொருளாயும், (இருப்பு-அறிவு-இன்பப் பொருளாயும்) இருக்க, அதைக் குறை பாடுள்ள மனிதன், தன் நிலையில் நின்றுதான் உணரக்கூடும்; சில சிறப்புக் குணங்களையே அதன்பால் அமைக்கக்கூடும்; அவன்

உடலாயுள்ள இந்தப் பிரபஞ்சத்தையும் எண்ணுபவனுடைய மனத்தை ஒட்டித்தான் கருதக்கூடும்.

மனத் தத்துவங்களால் அமைந்து வழிபடுகிறவன் மனமும் இந்தத் தத்துவங்களை ஒட்டியே தொழிற்படும். இவ்வாறு, அவரவர் மனத்தின் தன்மைகளை ஒட்டியே ஒரே கடவுள் பற்பல விதமாகக் காட்சியளிக்கின்றார்; ஆகவே, ஒரே பிரபஞ்சமானது பல படியாகப் பலருக்குத் தோன்றுகிறது. இவ்வாறு கடவுளும் பிரபஞ்சமும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்க முடியாத ஒற்றுமை பெற்றிருந்தும் பல வேற்றுமைகளுடன் காணப்படுவதுபோல—ஓம் என்ற சர்வ மேன்மையுள்ள குறிச் சொல்லும், கருத்தும் ஒலிக்குறியும் ஒன்று பட்டனவே எனினும், வெவ்வேறாகக் காணப்படுகின்றன. வேற்றுமைப்பட்ட கருத்துகள் பல இருப்பதுபோல, அவற்றைக் குறிக்கும் சொற்குறிகளும் பலவாகும். முனிவர்கள் தங்கள் திவ்விய ஞானத்தால் ஈசுவரனையும் பிரபஞ்சத்தையும் கண்டு, தாங்கள் கண்ட காட்சிகளுக்கு ஏற்பச் சொற்குறிகளை ஆக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அகண்ட பிரம்மத்தை 'ஓம்' என்பது குறிப்பதுபோல, மற்ற மந்திரங்களும் சொற்குறிகளும் கண்டமான ஈசுவரனைக் குறிக்கின்றன. இவை யாவும் மக்கள் ஈசுவரத் தியானம் செய்யவும், உண்மையான ஞானம் அடையவும் பயன்படுவனவேயாகும்.

பிரதீகங்களையும் விக்கிரகங்களையும் ஆதரித்தல்

அடுத்தபடி பிரதிகா, பிரதிமா பூசைகளைப்பற்றி ஆராய்வோம். ஈசுவரனுக்கு அடுத்தபடியாய்த் தாழ்ந்த நிலையிலுள்ளவை பிரதிகாக்கள் எனப்படும்; அவை

अब्रह्मणि ब्रह्मदृष्ट्याऽनुसन्धानम्

'பிரம்மம் அல்லாததைப் பிரம்மமாகக் கொண்டு பத்தியினால் அதனைப் பஜிப்பது பிரதிகாக்கள்' என்று பகவான் இராமானுசர் கூறுகிறார். "மனத்தைப் பிரம்மமாக வழிபடுவது, அக உபாசனை; ஆகாசத்தைப் பிரம்மமாக உபாசிப்பது தேவர்களைப் பற்றியது," என்று சங்கரர் கூறுகிறார். மனம் என்பது அகப் பிரதிகா; ஆகாசம் என்பது புறப்பிரதிகா; இவை இரண்டும் பிரம்மத்தின் பிரதிநிதிகளாக வழிபட வேண்டுபவை. இன்னும் அவர் சொல்வது இவ்வாறு: 'சூரியன் பிரம்மம்; கட்டளை; நாமத்தைப் பிரம்மமாக உபாசிப்பது.' பிரதிகள் என்பதற்கு நோக்கிச்

செல்வது' என்பது பொருள். ஒரு பிரதிகாவைப் பூஜிப்பது என்பது, பிரம்மத்தை ஒத்ததும் ஆனால் பிரம்மம் அல்லாததுமான ஒன்றைப் பூஜிப்பதாகும். சுருதிகளில் சொல்லப்பட்ட பிரதிகாக்களோடு, புராணங்களிலும் தந்திரங்களிலும் சொல்லப்படும் பிரதிகாக்கள் பல இருக்கின்றன. இந்த வழிபாட்டில் பித்துரு பூசை, தேவபூசை இவற்றின் வகைகளையும் சேர்க்கலாம்.

ஈசுவரனை வழிபடுவது ஒன்றே பத்தியாகும். பிற தேவ, பித்துரு பூசைகளும் பிறவும் பத்தியாகா. பல தேவதைகளைப் பூசிப்பது கர்ம காண்ட வழிபாடாகி, வழிபடுவோனுக்குச் சில தெய்விகச் சுகானுபவங்களைக் கொடுக்குமேயன்றி, பத்தியை உண்டாக்கவோ முத்தியைக் கொடுக்கவோ அவற்றால் இயலாது. ஆகவே. நாம் ஒன்றை மட்டும் மனத்தில் நன்றாகப் பதித்துக்கொள்ள வேண்டும். பிரம்மம் என்பது தத்துவ இலட்சியம் ; அதைப் பிரதிகா நிலைக்கு இறக்கிப் பிரதிகா பூசை செய்வதாலும், பிரதிகாவைப் பூசை செய்பவனது ஆன்மாவாகக் கருதினாலும், அவன் அந்தராத்துமாவாக எண்ணினாலும், பூசிக்கிறவன் வழி தவறியவனாவன்; ஏனெனில், பிரதிகா ஒரு நாளும் பூசை செய்பவனின் ஆன்மாவாகாது. ஆனால், பிரம்மமே பூசையின் இலட்சியமாயும், பிரதிகா அந்தப் பிரம்மத்தின் மாற்றாகவும் கருதப்பட்டால், அதாவது, பிரதிகா மூலமாகப் பிரம்மம் பூசிக்கப்பட்டால்—பிரதிகா என்பது எல்லாவற்றிற்கும் காரணமான பிரம்மமாகக் கருதப்படின்—அந்தப்பூசை பயனுள்ளதாகும் ; இத்தகைய பூசை மனிதர் யாவர்க்கும், பூசையின் முதற்படியான தயாரிப்பைத் தாண்டுகிறவரையில், மிகவும் அவசியமானதே. ஆகவே, எந்தத் தெய்வத்தையோ பிறவற்றையோ அவற்றிற்காகவே பூசிப்பது சடங்குக் கர்மம் என்றதோடு நிற்கும் ; வித்தையாக (விஞ்ஞானம்)க் கருதிச் செய்தால் அந்த வித்தையின் பலனை அடையலாம் ; அவற்றையே பிரம்மமாக வைத்துப் பூசித்தால், ஈசுவரனைப் பூசித்ததின் பயனை அடையலாம். ஆகையால், சுருதியிலும் ஸ்மிருதியிலும் ஒரு தேவதையோ, ரிஷியோ, வேறெந்தச் சிறந்த ஒன்றோ அவரவர் நிலையிலிருந்து பிரம்ம நிலைக்கு உயர்த்தப்பட்டும் பூசிக்கப்படுவது சொல்லப்படுகிறது. 'நாமமும் ரூபமும் நீக்கப்பட்டுவிட்டால், எல்லாம் பிரம்மமாகிவிடவில்லையா?' என்று அத்வைதி வினவுகிறான். விசிஷ்டாத்வைதி, 'ஒவ்வொரு ஜீவனிலும் அந்தர்யாமியாய் இருப்பவன் அப்பெருமான் அல்லனோ?' என்று கேட்கிறான் ;

फलम् आदित्याद्युपासनेषु ब्रह्मै दास्यति सर्वाध्यक्षत्वात् ।

'ஆதித்யன் முதலானோரின் உபாசனைப் பலனை பிரம்மனே அளிக்கிறான்; ஏனென்றால், அவனே யாவற்றிற்கும் தலைவன்.' சங்கரர், தம்முடைய பிரம்ம சூத்திரத்தில்,

ईदृशं चात्र ब्रह्मणः उपास्यत्वं यतः प्रतीकेषु तद्दृष्ट्याध्यारोपणं प्रतिमादिषु इव विष्ण्वादीनां ।

"விஷ்ணு முதலானவர்களை விக்கிரகங்களில் ஆரோபணம் செய்திருப்பதுபோல, இந்த விதத்தில் பிரம்மமும் பிரதிகாக்களில் அமர்ந்து பூசைக்கு உரியதாகிறது."

பிரதிகா பூசைக்குச் சொன்ன யாவும் பிரதிமா பூசைக்குப் பொருந்தும்; அதாவது, விக்கிரகமானது ஒரு தேவதையையோ மகானையோ குறிக்குமானால் அப்பூசையால் பத்தி உண்டாகாது; மோட்சமும் கிடைக்காது. ஆனால், ஒரே பொருளான அப்பிரம்மத்தை அப்பூசை குறிக்குமானால், அப்பூசையால் பத்தியும் முத்தியும் கிட்டும். உலக சமயங்களுள் வேதாந்தம், பௌத்தம், கிறித்தவம் என்னும் மதத்தவர்களிற் சிலர் உருவ வழிபாடு செய்கின்றனர். இஸ்லாம், புரோட்டஸ்டாண்டு கிறித்தவம் ஆகிய இரண்டு மட்டுமே விக்கிரக ஆராதனையை மறுக்கின்றன. ஆனால், இஸ்லாமியர்கள் தங்கள் ஆதரிசிகளின்—சமயத்துக்காக உயிரை விட்டவர்களின்—சவக் குழிகளை விக்கிரகங்களைப் போல வழிபடுகிறார்கள். புரோட்டஸ்டாண்டுகள் ஆண்டுதோறும் சமயத்திலிருந்து பெறும் தூல உதவிகளை மறுப்பவர்களாகி, ஆன்மிகத்திலிருந்து விலகிக் கொண்டே வருகிறார்கள். மிக முன்னேறிய புரோட்டஸ்டாண்டுகளுக்கும், ஆகஸ்து காம்டேயின் சீடர்களுக்கும், அல்லது நீதியை மட்டும் புகட்டும் நாத்திகர்களுக்கும் இடையே இப்பொழுது வேற்றுமை காண்பது அரிதாகிவருகிறது. அன்றியும், கிறித்தவ சமயத்திலும், இஸ்லாமிலும் விக்கிரக ஆராதனையை ஒத்துக் காண்பனவெல்லாம் பிரதிகா அல்லது பிரதிமாப் பூசையை ஒத்தனவாயிருக்கின்றனவேயன்றி, ஈசுவரனின் திருஷ்டி—சௌகர்யத்திற்காக அமையவில்லை. அவை கர்மச் சடங்குகளைப் போலுள்ளனவேவன்றி, பத்தியையோ மோட்சத்தையோ கொடுப்பனவாய் இல்லை. இம்மாதிரிப் பூசைகளில் ஈசுவரனை ஆன்மா நாடாமல் பிறவற்றையே நாடுவதாக அமைகிறது; ஆகவே, படங்கள், பிணக்

குழிகள், கோயில்கள், கோரிகள் இவற்றை வழிபடல் விக்கிரக ஆராதனையாகவே முடிகிறது. அப்படிச் செய்வது பாவமும் அன்று, கொடுமையுமன்று; அது ஒரு சடங்கு—கர்மா—ஆகிறது. அதற்கேற்ற பலன் பூசை செய்கிறவர்கள் பெற வேண்டும்; பெறவும் பெறுவார்கள்.

கொண்ட இலட்சியம்

அடுத்ததாக நாம் கவனிக்க வேண்டுவது 'இஷ்ட நிஷ்டை' என்பதாகும். அதாவது பத்தனாக விரும்பும் ஒருவன், 'கருத்துகளெல்லாம் பல வழிகளாகும்' என்பதே. ஒரே ஈசுவரனுடைய மாட்சிமையின் உருவங்களே உலக மதங்களின் பல பாகுபாடுகளும் என்பதை அவன் அறிந்துகொள்ள வேண்டும். "உன்னைப் பல நாமங்களிட்டுக் கூப்பிடுகிறார்கள்; பல நாமங்களால் உன்னைப் பாகுபாடு செய்கிறார்கள்; ஆனால் இவற்றுள் ஒவ்வொன்றிலும் உன் மகாசக்தி விளங்குகிறது. பூசைகளை இந்த நாமங்களின் மூலமாக நீ அடைகிறாய்...உன்னிடம் எனக்கு உண்மையான பத்திமட்டும் இருந்தால், உன்னை அடைவதற்கு இன்னதுதான் காலம் என்பதில்லை. உன்னை அடைவது மிக எளிது; எனக்கு உன்னிடம் பத்தியில்லையென்றால், அது என் துர்ப்பாக்கியம்."...இது மட்டும் அன்று; பத்தன், உலகத்திலுள்ள பல சமயங்களையும் நிறுவிய மகான்களிடம் குற்றங் காண்பதோ, அவர்களை வெறுப்பதோ செய்தல் கூடாது; அவர்களைப் பற்றிப் பிறர் பேசும் அவதூறுகளைக் கேட்கவும் கூடாது. பத்தியின் செறிவும், அகன்ற அனுதாபமும், உண்மை உணரும் சத்தியும் ஒரு சேர அமைந்தவர் உலகில் ஒரு சிலரே உளர். தாராள மனப்பான்மையும் அனுதாபமும் கொண்ட மக்கள் பத்திச் செறிவில் தளர்ந்து காணப்படுவதை நாம் எங்கும் காண்கிறோம்; அவர்களிடம் மத உணர்ச்சி ஏதோ ஓர் அரசியல் அல்லது சமூகக் குழுவாகிவிடுகிறது. மற்றொரு புறத்தில் ஆழ்ந்த பத்தியிருந்தும் குறுகிய பான்மையுடைய மக்கள், தங்களுக்குரிய போற்றத்தக்க மிகச் சிறந்த படிப்புப் பெற்றிருந்தும், தங்களைப் போலல்லாத பிறரை வெறுப்பதனாலே, தங்கள் பத்தியின் ஒவ்வோர் அணுவையும் பெற்றவர்களாகக் காணப்படுகிறார்கள். தங்கள் இலட்சியத்தில் ஆழ்ந்த பகுதியும், உலக சமயங்களில் அகன்ற அனுதாபமும் கொண்டவர்களைக் கடவுள் படைத்திருக்கலாமே! ஆனால், அத்தகையவர், இங்கொருவர் அங்கொருவ

ராக ஒரு சிலரே காணப்படுகின்றனர். ஆயினும், பத்தியில் ஆழமும் அகலமும் கொண்ட பலரை நாம் கற்பித்து உண்டாக்குவது சாத்தியம் என்பதை நாம் அறிவோம். இவ்வாறு செய்வதற்கு 'இஷ்ட-நிஷ்டை' அல்லது 'தாம் கொண்ட இலட்சியத்தில் பிடிவாதமான பத்தியே' சிறந்த வழியாகும். ஒவ்வொரு சமயத்தின் ஒவ்வொரு கிளையும் தான்கொண்ட இலட்சியத்தையே உலகுக்கு எடுத்துரைக்கிறது. ஆனல், என்றும் நிலையாயுள்ள வேதாந்த சமயமோ, மானிட வர்க்கத்துக்குப் பல கதவுகளைத் திறந்து வைத்து, உள்ளுக்குள் இருக்கும் தெய்வத்தைக் காண வழிகளை அமைக்கிறது; மனிதர்முன் முடிவில்லாத இலட்சியங்களை எடுத்துக்காட்டி, அவை யாவும் சாசுவதமான பரம்பொருளின் உருவங்களே என்றுரைக்கிறது. மிகுந்த அன்புடன், வேதாந்தம் விரும்புகிற ஆடவர்களுக்கும் பெண்டிருக்கும், மானிடவாழ்க்கையின் உண்மைகள் என்ற கெட்டிப் பாறையை வெட்டி அமைத்த பல சாலைகளை அமைத்து வழி காட்டுகிறது. இச்சாலைகள் பண்டைக் காலத்திலும் இன்றும் ஈசுவர உருவங்கள் என்னும் மகான்களால் அமைக்கப்பட்டவை. வேதாந்தம் தன் கைகளை விரித்து எல்லோரையும் (இனிப் பிறக்கப் போகிறவர்களையும்)—ஜீவான்மா மாயையின் பிடிப்பிலிருந்து விடுபட்டு, சர்வசுதந்திரங்களுடனும் அழியாத ஆனந்தத்துடனும் எங்கு செல்லுமோ—அந்தச் சத்தியலோகத்திற்கு, அந்த ஆனந்த சாகரத்துக்கு 'வாருங்கள்' 'வாருங்கள்' என்று அழைக்கிறது.

ஆகையால், அது மோட்சத்துக்கு வழி காட்டும் பல வழிகளுள் எதனையும் மறுக்கவோ, வெறுக்கவோ கூடாதென்று கண்டிப்பாய் உத்தரவிடுகிறது. ஆனல், வளரும் செடி மரம் ஆகும்வரையில் வேலியினுல் பாதுகாக்கப்பட வேண்டும். அடிக்கடி மாறும் கருத்துகளுள்ளும் இலட்சியங்களுள்ளும் மிகவும் இளமைக் காலத்திலே அகப்பட்டுக் கொள்ளுமானல் மெல்லிய ஆன்மிகச் செடி மடிந்து விடும். பரந்த நோக்கம் என்ற பெயரை வைத்துக்கொண்டு மக்கள் பற்பல இலட்சியங்களை ஒன்றன்பின் ஒன்ருகக் கொண்டு தங்கள் ஆசையை வளர்க்கிருர்கள். அவர்களிடம் புதிய விஷயங்களைக் கேட்டல் என்பது ஒருவித நோயாகவும், மதக் கட்குடி வெறியாகவும் மாறிவிடுகிறது. நரம்பு சிறிது ஊக்கம் பெறும்பொருட்டு அவர்கள் புது விஷயங்களைக் கேட்க விரும்புகிருர்கள்; இத்தகைய ஒன்று அவர்களிடம் படிந்து முடிவதற்குள்ளே மற்ருென்றை நாட அவர்கள் சித்தமாகின்ருர்கள். அவர்கள் விஷயத்தில் மதம் என்பது

ஒரு வகைக் கஞ்சாக் குடித்தலே; அதனேடு அது முடிவடைந்து விடுகிறது.

"முத்துச் சிப்பியைப் போன்ற சிலர் உண்டு; சுவாதி நட்சத்திரம் உச்சியில் வரும்போது வானத்திலிருந்து விழும் மழைத் துளியைப் பருகுவதற்காக, முத்துச்சிப்பி கடலின் அடியிலிருந்து கடல் மட்டத்துக்கு எழும். அது தன் கிளிஞ்சில்களை நன்ருகத் திறந்து கொண்டு மழைத் துளி தன்னுள் விழ வேண்டிக் கடற்பரப்பில் மிதந்து கொண்டிருக்கும்; அவ்வாறு நீர்த்துளி விழுந்தவுடன் முத்துச்சிப்பி தன் கிளிஞ்சில்களை மூடிக்கொண்டு கடலின் அடிக்குப் போய் அந்தத் துளி முத்தாக மாறும் வரையில் அங்கேயே கிடக்கும். அந்த முத்துச் சிப்பி போல்வார் சிலர் உண்டு," என்று பகவான் இராமகிருஷ்ணர் கூறுகிருர்.

இஷ்ட-நிஷ்டை என்னும் உண்மையை இதைவிடக் கற்பனையுடனும் அழுத்தமாகவும் புலப்படுத்த இயலாது. தெய்வ பத்தியைத் தொடங்கும் மாணவன், ஏக-நிஷ்டை என்னும் ஒன்றைக் குறித்தலாகிய கொள்கையைத் திடமாகப் பின்பற்றுதல் மிகவும் இன்றியமையாதது. "திருவின் செல்வனும், ஜானகியின் காந்தனும் ஒருவரே என்பதை நான் உணர்ந்தாலும் என்மனம் தாமரைக் கண்ணனை இராமன்பாலேதான் செல்கிறது," என்று அனுமார் கூறினர்; அவரைப் போலவே பத்தியில் இறங்குபவர் மன நிலையும் இருத்தல் வேண்டும். அல்லது, துளசிதாசர், "எல்லாவற்றினின்றும் இனிப்பை எடுத்துக்கொள்; எல்லாரோடும் இரு; எல்லாப் பெயர்களையும் அங்கீகரி; ஆனல், உன் இடத்தை உறுதியாகப் பிடித்துக்கொள்," என்று கூறுவதுபோல நடந்துகொள்ளவேண்டும். இவ்வாறு கொள்ளும் அப்பியாசி உண்மையுடன் உழைத்தால், அவனிடம் தங்கிய சிறிய விதை ஆலமரம்போன்ற பெரிய மரமாய் வளர்ந்து, தன் கிளைகளையும் விழுதுகளையும் பரப்பி, சமயநிலம் முழுவதையும் தன்னுள் தழுவிக்கொள்ளும். இவ்வாறு உண்மையான பத்தன், தன் இலட்சியமான தெய்வமே எல்லாச் சமயத்தாரின் தெய்வமாகவும், பல பெயர்களுடனும், பல உருவங்களுடனும் விளங்குவதை உணர்வான்.

வழிகளும் முறைகளும்

பகவான் இராமானுசர் தம் வேதாந்த சூத்திரங்களில் பத்தி யோகத்தின் வழி முறைகளைப் பற்றிப் பின்வருமாறு உரைக்

கின்றார் : "விவேகம், புலனடக்கம், பயிற்சி, தியாகம், தூய்மை வலிமை, அளவுக்கு மிஞ்சும் மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்தல் என்னும் வழிகளால் நாம் பரம்பொருளை உணரலாகும்." இராமானுசர் கருத்தின்படி விவேகம் என்பது தூய்மையையும் தூய்மையற்றதையும் பிரித்தறியும் ஆற்றலே ஆகும். அவர் கூறுகிறபடி உணவு, (1) வெங்காயம் முதலியவை போன்ற அசுத்தமான உணவுப் பொருள்களின் தன்மையாலும், (2) கொடிய பாவிகளிருப்பிடம் போன்ற அது வரும் இடத்தாலும், (3) மண், அழுக்கு, மயிர் போன்ற அதிற் கலந்துள்ள கெட்ட பொருள்களின் சேர்க்கையாலும் தூய்மை கெடும் என்கிறார். சுருதிகள், "உணவு தூயதானால், சத்துவ குணம் மேலும் தூய்மையடைந்து, அசையாத நினைவாற்றலும் அமைகிறது," என்று கூறுகின்றன.

பத்தர்களுக்கு உணவு விஷயம் எப்போதுமே மிகவும் முக்கியமானதாகும். சில பத்த கோஷ்டிகள் இவ்விஷயத்தில் அளவுக்கு மிஞ்சி சென்றுவிட்டன. என்றாலும், இதில் சிறப்பான உண்மை அடங்கியிருக்கிறது. சத்துவம், ராஜஸம், தாமஸம் என்ற மூன்றும் ஒருமித்து அமைவதால் பிரகிருதி உண்டாகிறது என்றும், அவை வேறுபட்டுப் பிரிவதால் பிரபஞ்சம் உண்டாகிறது என்றும் சாங்கிய தரிசனம் கூறுமானாலும், அவை பிரகிருதியின் மூல தாதுவாகவும் தன்மையாகவும் அமைகின்றன. ஆகவே ஒவ்வொரு மானிட உடலும் மாறுபட்ட அவற்றினால் அமைந்ததே ஆகும்; ஆகவே ஆன்மிக வளர்ச்சிக்குச் சாத்துவிகப் பொருள்கள் மிகுதியாகச் சேரவேண்டியது இன்றியமையாதது ஆகிறது. நம் உடலமைப்பில் நாம் உணவாகப் பெறும் பொருள்களால் நம் உள்ளத்தின் அமைப்பு உண்டாகிறது. ஆகையால், நாம் உண்ணும் உணவில் நாம் மிக விழிப்புடன் இருக்க வேண்டியவர்களாகிறோம். ஆனால், சீடர்கள் உணவு விஷயத்தில் கொள்ளும் வெறிகளுக்கெல்லாம், ஆசிரியர்கள் பொறுப்பாளிகளல்லர்.

ஆனால், உணவு விஷயத்தில் விழிப்பாயிருத்தல் இரண்டாம் பட்சமே ஆகும். 'ஆகாரம்' என்னும் சொல்லுக்குச் சாதாரணமாகக் கொடுக்கப்படும் பொருள் 'உணவு' என்பதே. ஆனால், இந்த உபநிஷத வாக்கியத்திற்குச் சங்கரர் தம் பாஷியத்தில் வேறு பொருள் கொடுக்கின்றார். அவர், சேர்க்கப்படுவது ஆகாரம். ஆன்மானுபவத்திற்காக, ஒலி முதலிய புலனறிவுகள் சேர்க்கப்படுகின்றன. புலனறிவில் சேர்கிற அறிவு தூய்மைப்படுதல், உணவுத்

தூய்மை (ஆகாரம்) ஆகும். 'உணவுத் தூய்மை' என்னும் சொற்றொடருக்குப் புலனறிவை, பற்று வெறுப்பு மயக்கம் முதலிய வற்றின் கலப்பில்லாமற் செய்வது என்பது பொருள். ஆகையால், அந்த அறிவு அல்லது உணவு சுத்தமாக்கப்பட்டபடியால்—அருந்து பவரின் சத்துவம்—அந்தக்கரணம்—தூய்மையாகிறது. இவ்வாறு சத்துவம் தூய்மைப்படுத்தப்படுவதால், சாத்திரங்களில் கூறப்படும் ஈசுவரனது உண்மை இயல்பில் அவனுடைய இடையறாத நினைவு ஏற்படுகிறது.

இந்த இரண்டு விளக்கங்களும் ஒன்றோடொன்று முரண்படுவ தாகக் காண்கின்றன. ஆனால், இரண்டும் உண்மையானவை; அவசியமானவை. ஊனாலான பரு உடலைக் கட்டுப்படுத்து வதைவிட, மனம் என்னும் நுண்ணுடலைக் கட்டுப்படுத்துவதும் முறுக்கி வளைப்பதும் உயர்ந்த செயலாகும். ஆனால், நுண்ணுடலை அடக்கியாள்வதற்குப் பருவுடலைக் கட்டுப்படுத்துவது இன்றியமை யாததாகிறது. ஆகையால், தொடங்குபவர்கள் தமக்குரிய ஆசிரி யர்களின் பரம்பரையில் வந்துள்ள உணவுப் பழக்கத்தை விடாமல் ஏற்கவேண்டும். ஆனால், பொருளற்ற பித்துக்கொண்டவர்களாய் சில ஊதாரிகள் மதத்தை அடுப்பங்கரைக்குள் புகுத்தி அந்த மதத் தின் உயர்ந்த உண்மைகள் என்றும் வெளி வராமலும் அதன்மீது ஆன்மக் கதிரொளி படாமலும் பாதுகாத்து வருபவர்கள் தனிப் பட்ட பௌதிக வாதிகளாவார்கள். இப்படிச் செய்வது ஞான மும் அன்று, பத்தியுமன்று, கர்மமுமன்று. இது ஒருவிதப் பித்து. இவர்கள் பிரம்மலோகம் போவதற்குப் பதிலாகப் பைத்திய விடுதிகளுக்கு ஏகுவார்கள். ஆகையால், உயர்ந்த மானச நிலை அடைய உணவில் விவேகம் வேண்டும்; வேறு வகையால் இதை அடைய முடியாது.

அடுத்தபடியாக நாம் கவனிக்க வேண்டுவது புலனடக்கம். பொறிகளைப் புலன்கள் இழுத்துச் செல்லும் வழியிலேயே செல்ல விடாமல் தடுத்து, அவற்றைத் தன் திட உள்ளத்திற்குள்ளாக்கி அதன் வழி நிறுத்தி வழிப்படுத்துவது என்பதுதான் மதப் பயிற்சி யின் இடைநிலை அறமாகும். இதன்பின் தன்னடக்கமும், தன் மறுப்புமாகிய இரண்டும் வருவன. ஆன்மாவில் ஈசுவர அனுப வத்தை அடைவிப்பதென்பது எளிதில் வந்துவிடாது; முயலும் பத்தன் இத்துறையில் மிகுந்த பயிற்சி செய்யவேண்டும். மனம்

எப்போதும் பகவானை நினைக்க வேண்டும். மனத்தை இடையருது தெய்வத்தை நினைக்கச் செய்வது மிகவும் அரிய செயலே. ஆனல், முயற்சி ஏற ஏற, மனத்துக்கு வலிமையும் ஏறும். ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் அருச்சுனனை நோக்கி, "குந்தியின் மைந்த, பழக்கத்தாலும் பற்றின்மையாலும் மனவலிமை கிட்டு கிறது," என்று கூறுகிருர். யாகங்களோவெனில், பஞ்சமகா யஞ்ஞங்கள் என்னும் ஐம்பெரு வேள்விகளும் வழக்கம்போலச் செய்யப்பட வேண்டுவனவே.

எல்லாவற்றிற்கும் அடிப்படையானது தூய்மை. அந்த அடிப் படையின்மீது தான் பத்திக் கட்டடம் நிற்கிறது. மேல் உடலைச் சுத்தமாக்குதலும், உணவைத் தேர்ந்து உண்ணுதலும் ஆகிய இரண்டும் எளிதானவைகளே; ஆனல், அகத் தூய்மை இல்லாத விடத்துப் புறத்தூய்மை சிறிதும் பயனற்றவையாகும். இராமானுசர் தூய்மைக்குரிய சாதனங்களைக் கூறும்போது, உண்மை, உள் ளன்பு, தயை, (தன் நன்மை கருதாது எவர்க்கும் நன்மை செய் தல்), அஹிம்ஸை (கருத்து, சொல், செயல் இவற்ருல் பிறர்க்குத் துன்பம் விளையாமை), வெஃகாமை (பிறர் பொருளை நயவாமை), வீண் எண்ணங்கள் கொள்ளாமை, பிறரால் அடையுந் துன்பங் களைப்பற்றி வருந்தாமை ஆகியவற்றைக் கூறுகிருர். இவற்றுள் பிறருக்குத் தீங்கிழையாமையாகிய 'அஹிம்ஸை' என்பது சிறப் பாக ஆராய வேண்டுவதாகும். எல்லா உயிர்ப் பிராணிகளிடமும் நாம் அன்பாக நடந்துகொள்ள வேண்டுவது நமது கடமை. சிலர் நினைப்பதுபோல மானிடர் விஷயத்தில் தீங்கிழையாமையும், தாழ்ந்த பிராணிகளிடம் தயையற்றிருப்பதும் அதன் பொரு ளன்று; சிலர் கருதுவதுபோல, பூனையையும் நாயையும் காப் பாற்றி, எறும்புகளுக்குச் சர்க்கரை போட்டுவிட்டு சகோதர மனிதர்களிடம் மிகக் கொடுமையாக நடந்துகொள்வதுமன்று; இந்த உலகத்தில் ஒவ்வொரு நல்ல கருத்தையும் வெறுப்படையத் தக்க எல்லைக்குக் கொண்டுபோவது பழக்கமாயிருக்கிறது. ஒரு நல்ல பழக்கத்தை, அதன் எழுத்துக்குத் தக்கப் பொருளமைத்து அளவுக்கு விஞ்சி நெடுகக் கொண்டுபோனல், அதுவே நேரடித் தீமையாக முடிகிறது. தம்மீதுள்ள பூச்சிகள் இறந்துவிடு மென்று சில மதத்துறவிகள் குளிப்பதே இல்லை; ஆனல் அவர்களால் அண்டையிலுள்ள உயிர்களுக்கு எவ்வளவு நோயும் இன்னலும் விளைகின்றன என்பதை அவர்கள் கருதுவதில்லை.

நல்ல வேளையாக, அவர்கள் வேத மதத்தைச் சார்ந்தவர்கள் அல்லர்.

அஹிம்சையின் முக்கியமான சோதனை அதில் பொறாமையின்மையே. கடுந் தூண்டுதலாலோ, மூடபக்தி அல்லது புரோகித முயற்சியாலோ ஒருவன் ஒரு நல்ல செயலைப் புரியலாம்; அல்லது ஒரு தானத்தை வழங்கலாம். ஆனால், ஒருவரிடமும் பொறாமை கொள்ளாதவனே மனித இனத்தை உண்மையாக நேசிப்பவனாவன். உலகில் பெரியவர்களென்று பேசப்படும் மக்கள் யாவரும், ஒரு சிறிய பெயருக்காகவோ, சிறிய புகழுக்காகவோ, அல்லது சில தங்கக் காசுகளுக்காகவோ, ஒருவர்மீதொருவர் பொறாமை கொள்பவர்களே ஆகின்றனர்கள். பொறாமை என்பது ஒரு இதயத்தில் இடம் கொள்ளும் வரையில், அதற்கும் அஹிம்சைக்கும் நெடுந்தொலை ஏற்பட்டுவிடுகிறது. ஆடோ, மாடோ புலால் தின்பதில்லை. ஆகவே, உயிர்க்கொலை செய்யாதவர்களெல்லாம் பெரிய யோகிகள் ஆகிவிட இயலுமா? எந்த அறிவிலியும் இதையோ அதையோ தின்னமல் இருக்கலாம்; அதனல் அவன் செடிகளை உண்ணும் விலங்கைவிட வேருகிவிடுவானு? ஒரு கைம்பெண்ணேயோ அல்லது புகலற்றவரையோ ஏமாற்றிப் பிழைப்பவனும், பணத்திற்காக எந்தக் கொடுமையையும் இழைப்பவனும்புல்லேமட்டுமே தின்பவனுலும், அவன் விலங்கே. எவர்க்கும் தீங்கொன்றும் கருதாமல், தன் பகைவன்கூட நலத்துடன் வாழ வேண்டுமென்ற எண்ணத்துடன் வாழ்கிறவன், பன்றி ஊனைத் தினந்தோறும் தின்பவனுனலும், அவனே, பத்தன்; அவனே யோகி; அவனே அனைவர்க்கும் குரு. ஆகையால், வெளிப் பழக்க வழக்கங்கள் உளத் தூய்மையை வளர்க்கப் பயன்பட வேண்டும் என்பதை உணர வேண்டும். வெளிப் பழக்கங்களில் சிற்சில குறைபாடுகள் இருக்குமாயினும், உள்ளத்தே தூய்மை இருக்குமானல், அதுவே போதுமானது. சத்தியமானதும், உள்ளே இருப்பதுமான மதத்தின் ஆன்மத் தேவைகளை மறந்து, புறவேடங்களைமட்டும் குரங்குப் பிடியாகப் பிடித்துக்கொண்டு அவற்றை நழுவ விடாமல் பாதுகாக்கும் தனி மனிதனும் வீணனே; அந்த நாடும் வீணே. உள் உயிரின் விளக்கங்களாக அமைவதே புற வேடங்களின் பயன்; அவை உயிர் இருப்பதைக் காட்டத் தவறுமானல், அவற்றை இரக்கமில்லாமல் கொன்றெழிக்க வேண்டும்.

பத்தி யோகம் கைவர அடுத்த வழி வலிமை (அனவஸாத.)

'இந்த (பிரம) ஆத்துமன் பலவீனர்களால் அடைய இயலாதது,' என்பது சுருதி. பலவீனம் என்பது உடல், உள்ளம் என்ற இரண்டுக்கும் உரியதே. 'வலிமையும் உரனும்' உடையவர்களே மாணவர்களாகத் தக்கவர்கள். அற்ப, நோஞ்சல்களால் செய்ய லாவது யாது? யோகப் பயிற்சியால் சிறிதளவு உடலும் உள்ளமும் அதிர்ச்சி பெற்ருலும் வலிமையற்றவர்கள் பொடிப்பொடியாய்த் தகர்ந்துவிடுவர். இளமை, இன்பம், வலிமை ஆகிய இவையே வெற்றி பெறும். ஆகவே, உடல் வலிமை மிகவும் இன்றியமையாதது. பொறிகளை அடக்கியாள முயற்சி செய்யும்போது விளையும் தாக்கல் களை வலிமை நிறைந்த உடல் மட்டுமே தாங்க இயலும். ஆகவே, பத்தனுக விரும்புபவன் வலிமையும் உடல்நலமும் நிரம்பின வனுய் இருத்தல் வேண்டும். உடல் வலிமை அற்றவர் தொடங்கும் யோகப் பயிற்சியால் தீர்க்க முடியாத ஏதேனும் ஒரு நோயையோ, புத்திக் கோளாற்றையோ பெற்றுவிடக்கூடும். வேண்டுமென்று உடலை மெலிவித்துக்கொள்வதாலும் ஆன்மிக ஒளி அமையாது.

மனச் சோர்வு உள்ளவன் ஆன்மாவை அடைவதில் வெற்றி காண மாட்டான். பத்தனுக விரும்புபவன் மனமகிழ்ச்சியுடன் இருத்தல் வேண்டும். மேலை நாடுகளில் பத்தன் என்பவன் சிறிதும் முறுவல்கூடக் கொள்ளலாகாதென்றும், ஒரு கருமுகில் ஒருவன் முகத்தை மூடிக்கொண்டிருக்க வேண்டுமென்றும், அம்முகம் நீண்டு தாடைகள் வற்றிக் காண வேண்டுமென்றும் ஒர் எண்ணம் இருந்து வருகிறது. தேய்ந்த உடலும் நீண்ட முகமும் உடைய வர்கள் மருத்துவர்களிடம் செல்லத்தக்கவர்கள்; அவர்கள் யோகி கள் அல்லர். மகிழ்ச்சியுள்ள மனமே முயற்சியுடையதாகும். ஆயிரம் துன்பங்களையும் கடந்து வழியைக் கண்டுபிடித்துச் செல்ல வலிய மனத்தாலேதான் இயலும். மாயை வலையை அறுத்துக் கொண்டு வழிதேர்ந்து முன்னேறுவது பெரிதும் திடம்பெற்ற உள் ளங்களுக்கே கூடுமாகும். அதே சமயத்தில் அளவுக்கு விஞ்சிய மகிழ்ச்சியையும் (அநுத்தர்ஷம்) நாம் விட்டுவிட வேண்டும். அளவு மீறின மகிழ்ச்சி நம்மை ஆழ்ந்த சிந்தனை செய்ய இடங் கொடாது தடுக்கும். மனச் சத்திகளையும் அது வீணுகச் சிதறச் செய்யும். எவ்வளவுக்கெவ்வளவு உள்ளம் உறுதிபெற்றிருக் கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அது உணர்ச்சிக்கு வயமாகாது. அளவுகடந்த துயர் எப்படிக் கேடுள்ளதோ, அப்படியே அளவுக்கு மிகுந்த இன்பமும் கேடுள்ளதே; ஆன்ம சாதனம், நிதான

மும் சாந்தமும் நிறைவும் பெற்றுள்ள மனத்துக்கே எய்தற் குரியது.

இவ்விதம் ஈசுவர பத்தியை அறியத் தொடங்கலாம்.

பரபத்தி

(அடிப்படைத் தியாகம்)

இதுவரை நாம்—பத்தியரும்பும் நிலையை ஆராய்ந்தோம். இனி, பத்தி பழுக்கும் நிலையாகிய பரபத்தியைத் துருவிப் பார்ப்போம். இப்பரபத்தியின் பயிற்சிக்குரிய படிகளைப் பற்றி இனி ஆராயவேண்டும். அப்படிகளனைத்திற்கும் உயிரைத் தூய்மைப் படுத்துவதே நோக்கம். நாமஜபம், வழிபாட்டுமுறைகள், உருவங்கள், சங்கேதங்கள் என்னும் பலவும் உயிரைத் தூய்மைப்படுத்துவனவேயாம். இவ்வனைத்துள்ளும் தூய்மைக்குத் தலைசிறந்த சாதனம் தியாகம். தியாகமெனும் தூய்மைச் சாதனமின்றி எவனும் பரபத்தி எனும் நாட்டினுள் நுழையமுடியாது. இது பலரை அச்சுறுத்தும்; ஆனல், தியாகமின்றி ஆன்ம வாழ்க்கையில் முன்னேற இயலாது. நம் யோக நெறிகள் எல்லாவற்றிற்கும் இஃது அவசியம். இதுதான் முதற்படி; இதுதான் நடுநாயகம்; உண்மையாக இதுதான் ஆன்ம வாழ்க்கையின் இதயம்; இதுதான் சமய வாழ்வு.

மனிதன் உலகப் பொருள்களினின்று பின்வாங்கி ஆழ்ந்த பொருள்களை எப்போது ஆராயப்புகுகின்றனே, சேதனனுகிய மனிதன் எப்படியோ இங்கே உலக இயலிற் சிக்குண்டு, அதனுல் அசேதனப்பொருளின் நிலைக்கு இழிந்து, அதன்பயனுய் அழிந்து போய்விடுவோம் என்றுணர்ந்து, அசேதன உலகினின்று எப்போது முகத்தைத் திருப்பிக்கொள்ளுகின்றனே, அப்போது தியாகம் அரும்புகின்றது. அப்போது ஆன்ம வாழ்வெனும் பயிர் முளைக்கின்றது. கர்மயோகியின் தியாகமானது தனது செயலின் பயனைத் துறக்கும் வடிவில் அமைகின்றது; அவன் தன் உழைப்பின் பயனில் பற்று வைப்பதில்லை; இம்மையிலும் மறுமையிலும் அவன் ஒரு பரிசுக்கும் ஆசைப்படுவதில்லை. இராஜயோகியானவன் இயற்கை முழுதும் ஜீவனுடைய அனுபவத்திற்காகவே என்றும், அவ்வனுபவமனைத்தாலும் அடையவேண்டிய பயனுவது ஜீவன் ஒன்றே என்றும், இயற்கையினின்றும் முற்றும் வேறனவன் என்பதை உணர்ந்துகொள்வதே என்றும் அறிகிறுன். ஜீவன் தான் என்

றென்றும் சேதனன்; அசேதனப் பொருளல்லன்; அசேதனத்துடன் ஏற்பட்ட உறவு குறுகியகால வரம்புக்குட்பட்டது என்பதை ஆராய்ந்தறிந்து கொள்ளவேண்டும். இராஜயோகியானவன் தனது வாழ்க்கையனுபவத்தின் மூலம் தியாகமாகிற பாடத்தைக் கற்றுக் கொள்ளுகிருன். ஞானயோகி கைக்கொள்ளும் தியாகப்பாதையோ, அனைத்தினும் அரிதானது. அவன் தொடக்கத்திலேயே திட்பமாகக் காணும் இயற்கையனைத்தும் மாயை என்பதை உணர வேண்டுபவனுகிருன்; இயற்கையில் காணப்படும் சத்தியின் மலர்ச்சி எதுவாயிருந்தாலும், அது ஆன்மாவினுடையதேயன்றி, இயற்கைக்கு உரியதன்று என்பதை உணர்ந்துகொள்ள வேண்டுபவனுகிருன். ஆரம்பத்திலிருந்தே அறிவெல்லாம், அனுபவமெல்லாம், ஆன்மாவிடமே உறைகின்றனவென்றும், இயற்கையில் இல்லையென்றும் அவன் தெரிந்துகொள்ள வேண்டும். அதுபற்றிப் புத்தி வன்மையால் உண்மையை ஆராய்ந்து உடனே அவன் இயற்கையின் கட்டினின்று தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டும். அவன் இயற்கையும் இயற்கையைச் சார்ந்த அனைத்தும் தன்னை விட்டு விலகிச்செல்ல விட்டுவிடுகிருன். அவைகளை மறையவிட்டு அவன் தனித்து நிற்க முயல்கிருன்!

எல்லாத் தியாகங்களிலும் எளிதாயும் இயற்கைக்கு முரண்படாததாயுமிருப்பது பத்தியோகம் பயில்பவனுடைய தியாகந்தான். அதில் துன்புறுத்தலில்லை; துறக்க வேண்டுவது ஒன்றுமில்லை; ஒட்டிக்கொண்டிருப்பதை அகற்ற வேண்டுவது ஒன்றுமில்லை; அரும்பாடுபட்டு நாம் பிரிந்து செல்ல வேண்டுவதொன்றுமில்லை. பத்தனுடைய தியாகம் எளியது; முட்டுப்பாடில்லாதது; ஆறுபோல விரைந்து செல்வது; நம்மைச் சுற்றியுள்ள பொருள்களைப்போல இயற்கையுடன் ஒன்றுபட்டிருப்பது. இந்தத் தியாகம் உருக்குலைந்து காணப்பட்ட போதிலும், நம்மிடையே நாள்தோறும் நிலவிவருவதை நாம் காண்கிறோம். ஓர் ஆடவன் ஒரு பெண்ணை நேசிக்கத் தொடங்குகிருன்; சிறிது காலங்கடந்து இன்னொருத்தியிடம் நேசங்கொண்டு முதற்பெண்ணை விட்டுவிடுகிருன்; அவள் அவன் மனத்திலிருந்து மெதுவாகச் சந்தடியின்றி நழுவிவிடுகிருள்; அவன் அவளை மறந்துவிடுகிருன். ஒரு பெண் ஓர் ஆடவனிடம் விருப்பம் கொள்கிருள்; பின்பு மற்றொருவனை நேசிக்கிருள். முதல் மனிதன் அவள் மனத்திலிருந்து நழுவிவிடுகிருன். ஒரு மனிதன் தன் நகரத்தை நேசிக்கிருன்; பின்பு தனது நாட்டையே

நேசிக்கிருன் ; முன்பு அவனது சிறு நகரத்தின்மேலிருந்த ஆழ்ந்த பாசம் இயற்கையாகவே மெல்ல மெல்ல நழுவிவிடுகின்றது. மேலும், ஒரு மனிதன் உலகனைத்தையும் நேசிக்கக் கற்றுக்கொள்ளுகிருன். நாட்டுப்பற்று—வெறி பிடித்தாற்போன்றிருந்த தேய பத்தி—நழுவு கிறது. அது அவனைத் துன்புறுத்துவதில்லை; அதனுல் துன்பம் விளைவதில்லை.

பாமரன் ஒருவன் ஐம்புலன்களாலடையும் இன்பங்களைப் பெரி தும் விரும்புகிருன். அவனே படிப்படியாகப் பண்படையும்போது அறிவால் அடையக்கூடிய இன்பங்களில் விருப்புக்கொள்கிருன். அப்போது ஐம்புலன்களின் இன்பங்களில் அவனுடைய நாட்டம் குறைகிறது. ஒரு நாயோ அல்லது ஓநாயோ எவ்வளவு ஆவலுடன் இரையைத் தின்று இன்புறுகிறதோ, அவ்வளவு ஆவலுடன் எந்த மனிதனும் இன்புறல் இயலாது. ஆனுல், மனிதன் தனது அறி வாற்றலாலும் சாதனைகளாலும் நுகரும் இன்பங்களை ஒரு நாய் அனுபவிக்க இயலாது. ஆரம்பத்தில் இன்பமானது தாழ்ந்த படியிலுள்ள புலன்களின் உறவால் ஏற்படுகிறது. ஒரு பிராணி வாழ்க்கை நிலையில் உயரும்போது தாழ்ந்த வகைப்பட்ட இன்பத் தில் அதனுடைய ஆவல் குறைகிறது. மக்கட்சமுதாயத்தில் எவ்வளவுக்கெவ்வளவு விலங்கினத்தையொட்டி ஒரு மனிதன் வாழ்கிருனே, அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய புலனுகர்ச் சியின் இன்பத்தில் அவனுக்கு ஆவல் வலுக்கிறது. உயர்வடைந்து பண்பாடு மிகும்போது, அறிவின் மூலமாகவும் அது போன்ற நுட்பமான துறைகளிலும் இன்பம் வளர்கிறது. அவ்வாறே ஒரு மனிதன் புத்தியின் நிலைக்கும் அப்பாற்செல்லும்போது, வெறுஞ் சிந்தனையுலகைக் கடந்து, தெய்வத்துடன் உறவாடும் ஆன்மிக உலகிற்புகும்போது, அங்கு அவன் அடையும் இன்பத் துடன் ஒப்பிட்டால், புலனின்பங்களனைத்தும், புத்தியினுல் அடையுமின்பமுங்கூட, ஒன்றுமில்லாதவை போன்றே தோன்றும். மதி ஒளி விடுகையில் விண்மீன்களெல்லாம் மங்கிவிடுகின்றன; ஞாயிறு சுடர் விட்டாலோ, மதியே மங்கிப்போகிறது. பத்தி முதிர் வதற்கு உதவும் தியாகத்தைக் கைக்கொள்ளும்பொருட்டு யாதொன் றையும் அழிக்க வேண்டுவதில்லை; வளரும் பெரிய ஒளியின் முன்னிலையில் சிறிய ஒளிகள் கொஞ்சம் கொஞ்சமாக மங்கி முடிவில் முற்றும் மறைந்துபோவது போல, இயற்கை நியதிப்படி, தானுகவே இந்தத் தியாகம் கைகூடுகிறது. ஆகையால், இந்திரிய

சுகமும், புத்தியில் விளையும் சுகமும் மங்கத் தொடங்கி, இறைவனுடைய அன்பின் முன்னிலையில் நிழல்போல மறைந்து போகின்றன. இறைவனிடம் அன்பு வளர்ந்து கனியும்போது அது பரபத்தி எனப்படுகின்றது. உருவங்கள் மறைகின்றன; சடங்குகள் நீங்குகின்றன; நூல்கள் மறக்கப்படுகின்றன; விக்கிரகங்கள், ஆலயங்கள், கோவில்கள், மதங்கள், மதப்பிரிவினைகள், தேசங்கள், தேசிய சமுதாயங்கள் ஆகிய இச்சிறு வரம்புகள், கட்டுப்பாடுகள், எல்லாம் விலகிவிடுகின்றன. இறைவனுடைய அன்பை உணர்ந்தவனிடமிருந்து இயற்கை நியதிப்படி, தாமாகவே இவை விலகிப் போகின்றன. அவனைக் கட்டுவதற்கோ, அவனுடைய சுதந்தரத்திற்குத் தலையிடுவதற்கோ அப்போது ஒன்றும் மிகுந்து நிற்பதில்லை. ஒரு கப்பல் திடீரென ஒரு காந்தப்பாறைக்கு அருகில் சென்றால் அதனுடைய இரும்பாணிகளும் சட்டங்களும் காந்தத்தின் ஈர்க்கும் சத்தியால் வெளியே இழுக்கப்பட்டுப் பலகைகள் கலகலத்துப்போய் நீரில் மிதக்கத் தொடங்கும். இறைவனுடைய அருளும் அவ்வாறே ஜீவான்மாவைப் பிணைக்கும் ஆணிகளையும் சட்டங்களையும் தளர்வுறச் செய்து, ஜீவனுக்கு விடுதலையளிக்கிறது. ஆகவே, பத்திக்கு அங்கமாக நாம் கூறிய தியாகத்தில் கடுமையில்லை; வறட்சியில்லை; சச்சரவில்லை; அடக்குதலில்லை; அமுக்குதலில்லை. பத்தன் தன் உணர்ச்சிகளில் எதையும் அடக்கவேண்டுவதில்லை; அவைகளை முதிரச்செய்து பக்குவப்படுத்தி இறைவனிடம் செலுத்தவே முயல்கிறான்.

பத்தனுடைய தியாகம் அன்பின் பயன்

நாம் இயற்கையில் எங்கும் அன்பைக் காண்கிறோம். சமூகத்தில் எது நல்லதாகவும் உயர்ந்ததாகவும் சிறப்பு மிக்கதாகவும் உள்ளதோ, அது அந்த அன்பின் செயல்; சமூகத்தில் எது மிகக் கெட்டதாகவும் சீரழிந்ததாகவும் உள்ளதோ, அதுவும் அதே உணர்ச்சியாகிய அன்பின் வழி தவறிய செயலே. இதே உணர்ச்சிதான் கணவன் மனைவியரிடையே தோன்றும் தூயதும் சீரியதுமான அன்பாகவோ அல்லது விலங்கின் வெறி போன்ற கீழ்த்தரமான வேகத்தின் இனங்களைத் திருத்தி செய்விக்கும் காமமாகவோ இயங்குகின்றது. உணர்ச்சி ஒன்றேயாயினும், அதனுடைய விளைவு வெவ்வேறு நிலையில் வெவ்வேறாக உளது. ஒரே உணர்ச்சியாகிய அன்பு, நல்ல வழியில் செலுத்தப்பட்டு, ஒரு மனிதனை நன்மை

செய்யத் தூண்டி, அவனுடைய உடைமையையெல்லாம் அவன் ஏழைகளுக்குக் கொடுக்கும்படியும் செய்யலாம்; அல்லது வழி தவறிச் செலுத்தப்பட்டு, இன்னொருவனைத் தன் சகோதரர்களின் கழுத்தை வெட்டி அவர்களுடைய உடைமைகளையெல்லாம் கவரவும் செய்யலாம். முன்னவன் பிறரை எவ்வளவு நேசிக்கிறானோ, அவ்வளவு பின்னவன் தன்னையே நேசிக்கிறான். பின்னவனுடைய அன்பின் நோக்கம் கெட்டது; முன்னவனுடையது நேர்மையும் சீர்மையுமானது. நமக்கு உணவைச் சமைக்கப் பயன்படும் நெருப்பே ஒரு குழந்தையை எரித்துவிடக்கூடும்; அப்படிச் செய்தால் அது நெருப்பின் குற்றமன்று; அது பயன்படுத்தப்படும் வகையிலேதான் வேறுபாடு உள்ளது. ஆகையால், அன்பு, அதாவது கூடியிருக்க வேண்டுமென்ற ஆழ்ந்த அவா, இருவரிடையே தாம் ஒன்றுபட வேண்டுமென்ற உறுதியான ஆசை—ஆராயுமிடத்து, அனைத்தும் ஒன்றில் இரண்டறக் கலக்க வேண்டுமென்ற ஆசையாகவே இருக்கலாம்;—அது உயர்ந்த நிலையிலோ, தாழ்ந்த நிலையிலோ, இடத்திற்குத் தக்கபடி எங்குங் காணக்கிடக்கிறது.

பத்தியோகம் உயர்ந்த அன்பைப் பற்றிய சாத்திரம். 'அன்பை எப்படிச் செலுத்துவது? அதை எப்படி அடக்குவது? எப்படி ஆள்வது? எப்படிப் பயன்படுத்துவது? எப்படி அதற்கு ஒரு புதிய நோக்கத்தையளிப்பது? எப்படி அதினின்று மிக உயர்ந்ததும் மிக்க பெருமை வாய்ந்ததுமான பயனை அடைவது? அதாவது, எப்படி ஆன்ம வாழ்க்கையின் ஆனந்த நிலைக்கு அழைத்துச் செல்லும்படி அதைச் செய்வது?' என்பவற்றிற்கு அது வழி காட்டுகிறது. பத்தியோகம் "துறந்துவிடு" என்று கூறுவதில்லை; "நேசி; மிக உயர்ந்ததை நேசி," என்றுதான் கூறுகிறது. எவனுடைய அன்பின் இலக்கு மிக உயர்ந்ததோ, அவனிடமிருந்து தாமாகவே தாழ்ந்தவையெல்லாம் விலகிவிடுகின்றன.

"நீ என்னுடைய அன்பு, நீ அழகாயிருக்கிறாய், அந்தோ! நீ அழகாயிருக்கிறாய்! நீ அழகே உருக் கொண்டுள்ளாய் என்பதைத் தவிர, உன்னைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல இயலாது." இந்த யோகத்தில் நாம் செய்ய வேண்டுவதெல்லாம் நம்முடைய அழகு வேட்கையை இறைவனிடம் செலுத்த வேண்டுவதே. மனிதன் முகத்திலோ, விண்ணிலோ, விண்மீன்களிலோ, மதியிலோ என்ன அழகிருக்கிறது? அஃது உண்மையில் அனைத்தையுந் தழுவும் தெய்விக அழகின் ஒரு சிறு பகுதியின் உணர்வே. "அவன்

ஒளிர்வதாலேயே அனைத்தும் சுடர் விடுகின்றன. அவன் சுடரா லேயே எல்லாப் பொருள்களும் மிளிர்கின்றன.'' பத்தியின் இந்த உயர் நிலையில் நில்லுங்கள்; அப்போது உங்களுடைய அற்பமான அபிமானங்கள் மறைந்து போம். உலகின் புல்லிய சுயநலப்பற்று களினின்று உங்களை மீட்டுக்கொள்ளுங்கள். உங்களுடைய மனிதப் பண்பின் ஆசைகளுக்கோ, அல்லது அவற்றினும் உயர்ந்த ஆசை களுக்கோ உறைவிடமாக உலகைக் கருத வேண்டா. சாட்சியாக வும் படிப்பினையை நாடுகிறவர்களாகவும் நின்று இயற்கையின் ஆடல்களைக் கவனித்துக்கொண்டிருங்கள். மனித இனத்திடம் பற்று நீங்கிய நிலையில் நின்று, இந்த உயர்ந்ததான அன்பு, உல கில் எப்படி வேலை செய்கிறதென்று பாருங்கள். சில சமயங்களில் சிறிது முரண்பாடு ஏற்படும்; ஆனால், அஃது உயர்ந்ததும் உண்மையானதுமான அன்பை அடைவதற்குப் படும்பாட்டின் விளைவேயாகும். சில சமயங்களில் சிறு சச்சரவு ஏற்படலாம்; சிறு வீழ்ச்சி நிகழலாம்; அவையெல்லாம் வழியில் தோன்றி மறைபவை. அம்முரண்பாடுகள் தடங்கலின்றி வரட்டும் என்று விலகி நின்று பாருங்கள். உலக ஓட்டத்தின் வேகத்தில் அகப்பட் டுக்கொண்டாற்றான் நீங்கள் முரண்பாடுகளால் துன்புறுவீர்கள்; ஆனால், வெளியே சாட்சியாகவும் படிப்பினையை மட்டும் கருதுபவர் களாகவும் நின்று கவனிக்கும் போது பல கோடி துறைகளில் இறைவன் தன்னை அன்புருவில் வெளியிட்டுக்கொண்டிருப்பதைக் காண்பீர்கள்.

"எங்கெங்கே இன்பம் உளதோ, அது மிகத் தாழ்ந்த இந்திரிய இன்பமாயிருந்தாலுங்கூட அங்கங்கே இறைவனுடைய வடிவமாகிய காலத்தைக்கடந்த ஆனந்தத்தின் ஒரு சிறு பொறி உளது. மிக மிகத் தாழ்ந்த கவர்ச்சிகளிலும் தெய்விக அன்பின் வித்து உளது.'' ஸம்ஸ்கிருத மொழியில் இறைவனுக்குள்ள பெயர்களில் ஒன்று 'ஹரி' என்பது; எல்லாப்பொருள்களையும் தன்னிடம் கவர்ந்து கொள்பவன் என்பது இச்சொல்லுக்குப் பொருள். அவனது கவர்ச்சி ஒன்றுதான் மானிடர்களுடைய உள்ளங்களுக்கு உகந்த தாகும். ஒரு ஜீவனை எது உண்மையில் கவர இயலும்? அஃது அவனே! அசேதனப்பொருள் ஜீவனைக் கவரமுடியும் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? அது ஒருபோதும் நிகழ்ந்ததில்லை; இனியும் நிகழப்போவதில்லை. ஒரு மனிதன் அழகான ஒரு முகத்தைக் கண்டு அதன்பின் செல்வதை நீங்கள் கவனித்தால், ஒருபிடி அசே

தனமான அணுக்களின் தொகுதியா அம்மனிதனைக் கவர்ந்த தென்று கருதுகிறீர்கள்? இல்லவேயில்லை. அவ்வசேதன அணுக் களுக்குப்பின் தெய்விக சத்தியின் விளையாட்டும், தெய்விக அன்பும் இருந்தே தீரவேண்டும். அஞ்ஞானி அதை அறியமாட்டான் என் ருலும், உணர்ந்தோ உணராமலோ, அவன் அதனுல் மட்டுமே கவரப்படுகிருன். ஆகையால், மிக மிகத் தாழ்ந்த கவர்ச்சிகளும் இறைவனிடமிருந்தே தங்கள் சத்தியைப் பெறுகின்றன.

“மனத்திற்கினியவளே, எவளும் கணவன் பொருட்டே கணவனை நேசிக்கவில்லை; ஆன்மாவின்பொருட்டே, உள்ளே உறையும் இறைவன்பொருட்டே, கணவன் நேசிக்கப்படுகிருன்.” அன்புடைய மனைவிகள் இதை அறியலாம்; அல்லது அறியாமலு மிருக்கலாம்; எப்படியிருந்தாலும், உண்மை இதுதான். “எவரும் மனைவியின்பொருட்டு மனைவியை நேசிக்கவில்லை. மனைவியிடம் உறையும் பரமான்மாவே நேசிக்கப்படுகிறது.” அவ்வாறே உல கில் எவரும் ஒரு குழந்தையையோ வேறு எதையோ நேசிப்பது உண்மையில் உள்ளே உறையும் இறைவன்பொருட்டேயன்றி, வேறு காரணத்தாலன்று. இறைவன் ஒரு பெரிய காந்தம்; நாமெல்லாம் இரும்புத்துகள்களைப் போன்றவர்கள்; நாம் இடை விடாது அவனுல் கவரப்படுகிருேம்; நாமெல்லோரும் அவனை அடையவே பாடுபடுகிருேம். உலகில் நாம் படும் பாடெல்லாம் திண்ணமாகத் தன்னலத்தின்பொருட்டன்று. அறிவிலிகள் தாங் கள் செய்வதென்னவென்பதை உணரமாட்டார்கள்; ஆனுல், அவர் களுடைய வாழ்க்கையின் செயலுங்கூட அந்தப் பெரிய காந்தத்தை அணுகுவதற்குச் செய்யும் முயற்சியேயாகும். வாழ்க்கையில் ஏற் படும் எல்லாப் பெரும்பாடுகளும் எல்லாச் சச்சரவுகளும் முடிவில் இறைவனிடம் நம்மை அழைத்துச் செல்வதற்கும் அவனுடன் நாம் ஒன்றுவதற்குமே பயன்படுவனவாம்.

பத்தி யோகியானவன், வாழ்க்கைச் சச்சரவுகளின் இக் கருத்தை உணர்கிருன்; இதை நன்ருக அறிந்துகொள்ளுகிருன். அவன் நீண்டகாலம் தொடர்பாகச் சச்சரவுகளை அனுபவித்து, அவற்றை உள்ளபடி உணர்ந்து, அவைகளால் ஏற்படும் முரண் பாட்டினின்று விடுதலை பெறப் பெரிதும் விழைகிருன். அவன் முட்டுப்பாடுகளைத் தவிர்த்து, நேராகக் கவர்ச்சியின் மையமாகிய சிறந்த ஹரியை அடைய விரும்புகிருன். இதுதான் பத்தனுடைய தியாகம். கடவுளை நோக்கி ஏற்படும் இந்த வலிமிகுந்த கவர்ச்சி

யால் மற்றக் கவர்ச்சிகளெல்லாம் அவனுக்கு மறைந்துபோகின்றன. வலிபொருந்திய, அளவு கடந்த, இந்தத் தெய்வ பத்தி அவன் உள்ளத்திற்புகுந்து வேறு எந்த அன்புக்கும் அங்கே இடமில்லாமல் செய்துவிடுகிறது. அது வேறு எப்படியிருக்க முடியும்? பத்தி அவன் இதயத்தைக் கடவுளின் வடிவேயாகிய அன்புக் கடல் நீரால் நிறைத்துவிடுகிறது; அதன் பிறகு அங்கே அற்ப விருப்பங்களுக்கு இடமில்லை. பத்தனுடைய தியாகம் வைராக்கியமாக, அதாவது கடவுளைத் தவிர மற்றனைத்திலும் பற்றின்மையாக, மிளிர்கிறது; கடவுளிடம் ஏற்படும் விருப்பத்தால், பெரும்பற்றினால், இது நிகழ்கிறது.

இதுதான் பரபத்தியை அடைவதற்குத் தலைசிறந்த சாதனம். இந்தத் தியாகம் கைகூடும் போது, பரபத்தி எனும் சிறந்த தெய்விக உலகின் கதவு திறந்து ஆன்மாவை வரவேற்கிறது. அப்போதுதான் பரபத்தி எத்தகையதென்பதை நாம் உணரத் தொடங்குகிறோம்; பரபத்தியாகிய கோயிலின் கர்ப்பக்கிருகத்தில் புகுந்தவனுக்கு மட்டுமே சமய வாழ்க்கைக்குத் துணையாகக்கொள்ளப்பட்ட உருவங்களும் சங்கேதங்களும் தன்னைப் பற்றியவரை இனிப் பயனற்றவை எனக் கூற உரிமை உண்டு. மானிடச் சகோதரத்துவம் எனப் பொதுவாகப் பேசப்படும் உயர்ந்த அன்பு நிலையை அவனே அடைந்தவனுவான்; ஏனையோர் பேசுவதையொழித்து, அவன் வேற்றுமைகளைக் காண்பதில்லை; அன்புக் கடலே அவனுள் புகுந்துவிட்டதால், அவன் மனிதனை மனிதனுகக் காணுமல், எங்கெங்குந் தனது அன்பின் வடிவாகிய கடவுளையே காண்கிறுன். ஒவ்வொரு முகத்திலும் அவனுடைய ஹரியே அவனுக்குக் காட்சியளிக்கிறுன். கதிரவன் மதி இவற்றின் ஒளியும், மற்றெல்லாச் சுடரும் அவனுடைய வெளித் தோற்றமே. அவனுக்கு எங்கெங்கு அழகும் உயர்வும் தோன்றுகின்றனவோ, அங்கங்கு எல்லாம் இறைவனுடைய அழகும் உயர்வுமே தோன்றுகின்றன; அத்தகைய பத்தர்கள் இன்றும் வாழ்கிருர்கள். உலகில் ஒரு போதும் அவர்களில்லாமலிருப்பதில்லை. அப்படிப்பட்டவர்களை ஒரு பாம்பு கடித்துவிட்டாற்கூட, அவர்கள் தங்கள் அன்பனுகிய இறைவனிடமிருந்து ஒரு தூதன் வந்ததாகவே கூறுவார்கள். அத்தகைய மனிதர்களுக்குத்தான் உலகச் சகோதரத்துவத்தைப் பற்றிப் பேச உரிமை உண்டு. அவர்கள் கோபித்துக்கொள்வதே இல்லை. அவர்கள் மனத்தில் பகைமைக்கும், பொருமைக்கும் இடமில்லை. வெளியுலகம்—இந்திரிய

உலகம்—அவர்களுக்கு முற்றும் மறைந்துவிட்டது. உலக நாடகத்தின் பின்னுள்ள உண்மையைத் தங்கள் அன்பினுல் எப்போதும் கண்டுகளிக்கும் அவர்கள் எங்ஙனம் சிற்றங்கொள்ள இயலும்?

பத்தியோகம் இயற்கையுடன் ஒட்டியிருப்பதும் அதன் உள் இரகசியமும்

“நிலைபெற்ற மனத்தினர்களாய் எப்போதும் உம்மை வழிபடுகிறவர்களுள்ளும், அபேதமான அட்சரப் பொருளை வழிபடுகிறவர்களுள்ளும் எவர்கள் சிறந்த யோகிகள்?” என்று அருச்சுனன் கண்ணபிரானுரைக் கேட்டான். அதற்கு அவர், “என்னிடத்திலேயே மனத்தை நிலைநிறுத்தி, என்னையே இடைவிடாத முயற்சியுடனும் உயர்ந்த சிரத்தையுடனும் எவர்கள் வழிபடுகிறுர்களோ, அவர்களே சிறந்த யோகிகள். விளக்க முடியாததாயும், வேற்றுமையற்றதாயும், எங்கும் நிறைந்ததாயும், நினைக்கவொண்ணுததாயும், அனைத்தையும் அறிவதாயும், அசைவற்றதாயும், என்றுமுள்ளதாயும் இருக்கும் அட்சரப் பொருளைத் தங்கள் இந்திரியங்களின் ஆடல்களையடக்கி, எல்லாப் பொருள்களும் சமம் என்ற உறுதியான புத்தியுடன் எல்லா உயிர்களுக்கும் நன்மை புரிவதிலேயே முனைந்தவர்களாய் எவர்கள் வழிபடுகிறுர்களோ, அவர்களும் என்னிடமே வருகிறுர்கள். ஆனுல், விளக்கமற்றதும் வேற்றுமையற்றதுமான அட்சரப் பொருளில் எவர்களுடைய மனம் நாட்டமுடையதோ அவர்களுக்கு வழியெங்கும் துன்பம் மிக அதிகம்; ஏனெனில், விளக்கமற்ற அபேதப் பொருளை நாடும் வழி உடல் படைத்த எவர்க்குமே மிகவும் கடினமானது. எவர்கள் தங்கள் செயலனைத்தையும் என்னிடம் அர்ப்பணம் செய்து, முழுதும் நம்பி, வேறு எதிலும் பற்றில்லாமல் என்னைத் தியானித்து வழிபடுகிறுர்களோ, அவர்களுடைய மனம் முழுதும் என்னையே பற்றிவிட்டதால், பிறப்பும் இறப்பும் இடைவிடாது சுழன்று வரும் வாழ்க்கைக் கடலினின்று அவர்களை நான் விரைவில் கைதூக்கி விடுகிறேன்,” என்று கூறியுள்ளார்.

ஞானயோகம் பத்தியோகம் ஆகிய இரண்டும் இங்குக் குறிக்கப்படுகின்றன. இரண்டின் தராதரமும் மேலே விளக்கப்பட்டதாகக் கொள்ளலாம். ஞானயோகம் மிகச் சீரியது. அது உயர்ந்த தத்துவநிலை. பெரும்பாலும்
சொல்
னிதனும் அத்தத்துவம் செய்யச்
ண்ணமாகச் செய்யவல்லவன்

என்று நினைக்கிறன். இஃது ஓர் அதிசயம்! ஆனல், உண்மையில் தத்துவ வாழ்க்கை வாழ்வது மிகவும் அரிது. தத்துவத்தின்படி வாழ முயல்வதால் நாம் இடும்பைகளிற் புகுந்துவிடக்கூடும். இவ்வுலகம் இருவகையான மக்களிடையே பிரிக்கப்பட்டுள்ளதாகக் கூறலாம்; ஒருவகை மக்கள், 'உடலைக் காப்பதே வாழ்க்கையின் சாதனமும் நற்பயனுமாம்,' என்று கருதும் அசுர இயற்கை படைத்தவர்கள்; மற்ருெரு வகை மக்கள், 'உடலானது முடிவான ஒரு நற்பயனை எய்துதற்கு ஒரு சாதனம்; ஜீவனைப் பண்படுத்துவதற்காக ஏற்பட்ட ஒரு கருவி,' என்று கருதும் தெய்வ இயற்கை படைத்தவர்கள். ஒரு பேயும் சாத்திரம் பேசலாம்; பேசவும் பேசுகிறது; ஆகையால், ஞான மார்க்கம் நல்ல மனிதனுடைய செயல்களுக்குத் தூண்டுதல் அளிப்பதுபோலவே கெட்ட மனிதனுடைய செயல்களுக்கும் ஆதரவளிப்பதாய்த் தோன்றலாம். இது ஞான யோகத்திலுள்ள பெருங்கேடு. ஆனல், பத்தியோகம் இயற்கையாகவே இனிமையும் அமைதியும் வாய்ந்தது; பத்தன் ஞான யோகியைப்போல உயர ஏறிப் பறப்பதில்லை; ஆகையால், அவன் பெருவீழ்ச்சிகளுக்கும் ஆளாவதில்லை. சமய வாழ்க்கையை நாடும் மனிதன் செல்லும் மார்க்கம் எதுவாயிருந்தாலும் ஜீவனுடைய தளைகள் நீங்கும் வரை அவன் முத்தனாய்விட முடியாது.

ஜீவனைத் தளைக்கும் விலங்குகளாகிய புண்ணியமும் பாவமும் தெய்வ அருள்பெற்ற கோபிகைகளில் ஒருத்தி விஷயத்தில் எவ்வாறு அறுபட்டுப் போயின என்பதை விளக்கும் ஒரு சுலோகம் பின் வருவது.

तच्चिन्ता विपुलाह्लाद क्षीणपुण्यचया तथा ।
तदप्राप्ति महद्दुःख विलीनाशेषपातका ॥
निरुच्छ्वासतया मुक्तिं गतान्या गोपकन्यका ॥

(விஷ்ணு புராணம்)

"இறைவனைச் சந்திப்பதாலேற்பட்ட உயர்ந்த இன்பத்தால் அவளுடைய புண்ணியம் தீர்ந்து, நற்செயல்களாலேற்பட்ட தளைகள் நீங்கிவிட்டன. இறைவனையடையாததாலேற்பட்ட மிகுதியான துன்பத்தின் அனுபவத்தால், அவளுடைய பாவந்தீர்ந்து தீச்செயல்களின் வலிமை நீங்கிவிட்டது. ஆகவே, அவள் முத்தி எய்தியவளானள்."

ஆகையால், பத்தியோகத்தின் மையத்திலுள்ள இரகசியமாவது, " மனிதனுடைய உள்ளத்திலெழும் பல வகைப்பட்ட ஆர்வங்களும் உணர்ச்சிகளும் வேகங்களும் உள்ளபடி தவருனவையல்ல ; அவைகளைக் கருத்துடன் கண்காணித்து, அவை உயர்ந்த இலட்சியத்தையடையும்படி உயர்வடையச் செய்யவேண்டும்," என்பதே. உயர்ந்த இலட்சியமாவது, நம்மை இறைவனிடம் கொண்டு செல்வதே ; மற்ற ஒவ்வோர் இலட்சியமும் தாழ்ந்ததே. இன்பமும் துன்பமும் நமது வாழ்க்கையில் அடிக்கடி மாறிமாறி வரும் உணர்ச்சிகள் என்பதை நாம் அறிகிறோம். ஒரு மனிதன் தனக்குச் செல்வமோ வேறு உலகப் பொருளோ இல்லாமைக்காகத் துன்பமடைந்தால், அவன் தனது உணர்ச்சிக்குத் தவருன இலட்சியத்தைக் கற்பிக்கிருன். எனினும், துன்பத்திற்கும் பயனுண்டு. ஒரு மனிதன், " நான் உயர்ந்த நிலையை எய்தவில்லையே ! கடவுளையடையவில்லையே !" என்று வருந்தட்டும் ; அப்போது வருத்தம் முத்திக்கு வழி காட்டும். உங்கள் கை நிறையப் பணமிருக்கிறதென்று நீங்கள் களிப்படைந்தால் அது இன்பத்தையனுபவிக்கும் சத்திக்குத் தவருன நோக்கத்தைக் கற்பித்ததாகும் ; அதற்கு உயர்ந்த நோக்கத்தைக் கற்பிக்க வேண்டும் ; உயர்வற உயர்நலமாயிருப்பது எதுவோ, அதை எய்துதற்கு அச்சத்தியைத் திருப்ப வேண்டும். அத்தகைய இலட்சியத்திலுள்ள களிப்பே உண்மையில் நமது உயர்ந்த இன்பமாயிருக்க வேண்டும். இவ்வுண்மை நமது எல்லா உணர்ச்சிகளுக்கும் பொருந்தும். இவைகளில் ஒன்றுகூடத் தவருனதன்று என்று பத்தன் கூறுகிருன். அவன் இவையனைத்தையும் மேற்கொண்டு முறை பிறழாது இறைவனை நோக்கிச் செல்லும்படி செய்கிருன்.

அன்பின் பரிணும வடிவங்கள்

அன்பு பரிணமிக்கையில் அது கொள்ளும் வடிவங்கள் சிலவற்றை ஆராய்வோம் : முதலில் வருவது மரியாதை. மக்கள் கோயில்களுக்கும் புண்ணியத்தலங்களுக்கும் மரியாதை காட்டுகின்றுர்கள். ஏனென்றுல், ஆண்டவர் அங்குப் போற்றப்படுவதாலும் அவருடைய நிலைபேறு அவை போன்ற இடங்களுடன் இணைந்திருப்பதாலுமே. மக்கள் ஒவ்வொரு நாட்டிலும் மதாசாரியர்களுக்கு ஏன் மரியாதை செய்கின்றுர்கள் ? அப்படிச் செய்வது மனித உள்ளத்தின் இயற்கை ; ஏனென்றுல், அவர்கள் ஆண்டவரைப் பற்றிப் போதிக்கின்றுர்கள். அடிப்படையில் மரியாதை

அன்பினின்று வளர்வது; எவரிடத்தில் நமக்கு அன்பில்லையோ, அவருக்கு நம்முள் எவருமே உண்மையில் மரியாதை செய்ய இயலாது. இரண்டாவதாக வருவது நேசம்—இறைவரிடத்தில் மகிழ்தல். இந்திரிய விஷயங்களில் மனிதர் எவ்வளவு அதிகமாக மகிழ்கின்றனர்! அவர்கள் ஆசை வைத்த பொருளை அடைய எங்கு வேண்டுமானாலும் போகின்றார்கள்; எந்த ஆபத்திலும் புகுகின்றார்கள். இம்மாதிரியே ஆழ்ந்த அன்புதான் பத்தனுக்குத் தேவையானது; ஆனால், அஃது ஆண்டவரை நோக்கிச் செலுத்தப்பட வேண்டும். மூன்றாவதாக வருவது துன்பமே இன்பமாய்ப் பரிணமிக்கும் விரகம்; அதாவது, காதல் கொண்டவரிடமிருந்து பிரிவாற்றாமை. 'கடவுளையடையவில்லையே!' என்றும், 'உண்மையில் அறிய வேண்டிய பொருளாகிய ஒன்றை அறியவில்லையே!' என்றும் எந்நிலையில் ஒரு மனிதன் அதிகமான வருத்தத்தை அடைந்து அதனால் எதிலும் திருத்தியில்லாதவனாய்ப் பித்துப் பிடித்தவனைப் போலாவானோ, அந்நிலையே 'விரகம்' எனப்படுவது. இம்மன நிலையில் அவன் காதல் கொண்ட பொருளைத் தவிர வேறு எதன் முன்னும் அமைதியின்மையையே (एकरतिविचिकित्सा) அடைகிறான். சிற்றின்பத்தில் எங்ஙனம் அடிக்கடி இவ்விரகம் நிகழ்கின்றதென்பதை நாம் பார்க்கிறோம். மேலும், ஆடவர் பெண்டிரையோ, பெண்டிர் ஆடவரையோ உண்மையாக ஆழ்ந்து காதலிக்கும்போது அவர்களுடைய காதலுக்குப் புறம்பான அனைவருடைய முன்னிலையிலும் இயற்கையாகவே அவர்களுக்கு ஒரு வெறுப்புத் தோன்றுகிறது. அதே மாதிரி பரபத்தி மனத்தையாளும்போதும் விருப்பமற்ற பொருள்களிடம் சகிப்பின்மை மனத்திற்கு ஏற்படுகிறது; கடவுள் சம்பந்தமில்லாத பொருள்களைப் பற்றிய பேச்சுங்கூட அப்போது விருப்பந்தருவதில்லை. "அவனை நினை; அவன் ஒருவனையே நினை; மற்ற எல்லா வீண் வார்த்தைகளையும் விட்டொழி." अन्यावाचो विमुंचथ என்பதற்கேற்ப எவர்கள் அவனைப்பற்றியே பேசுகிறார்களோ, அவர்களிடம் அவனுக்கு நேசம் ஏற்படுகிறது. அன்பில் இதிலும் உயர்ந்த படியை அடைவது எப்பொழுதெனில், வாழ்க்கையானது பத்தி இலட்சியம் ஒன்றிற்காகவே, வாழ்க்கை பண்பும் பயனும் உடையதாவது பத்தியொன்றினாலேயே என்று கருதப்படும்போதேயாம். तदर्थप्राणसंस्थान அதில்லாமல் அவ்வுயிர் ஒரு கணமுந் தங்காது. காதலுக்குரிய

வரை நினைப்பதாலேயே வாழ்க்கை இனியதாகிறது. ஒருவன் பக்தியில் பரிபூரண நிலையடையும்போது 'ததீயத்துவத்தை' (அவனுடைமையாயிருக்கும் நிலையை) எய்துகிருன். ஆனந்தம் நிறைந்தவனுய், அவனுடைய திருவடிகளைத் தொட்டவன் போலாகிருன். அப்போது அவனுடைய இயற்கை முழுதும் தூய்மையாகி முழுதும் மாறிவிடுகிறது. வாழ்க்கையின் நோக்கமெல்லாம் கைகூடுகின்றன. என்ருலும், அம்மாதிரியான பக்தர் பலர் அவனை மீண்டும் வழிபடுவதற்காகவே வாழ்வை விரும்புகின்றனர். அந்த ஆனந்தத்தை—வாழ்க்கையின் பயனுக அவர்கள் கொண்டுள்ள அந்த ஒரே இன்பத்தைமட்டும்—அவர்கள் துறக்கமாட்டார்கள். "அரசே, ஹரியின் கல்யாண குணம் அப்படிப்பட்டது; எவர்கள் அனைத்திலும் திருத்தியுடையவர்களாய் விளங்குகிருர்களோ, எவர்களுடைய இதய முடிச்சுகள் கழன்று போயினவோ, அவர்களுங்கூட, பகவானிடம் நேசம் ஒன்றிற்காகவே நேசம் வைக்கின்ருர்கள்." "எந்தப் பகவானை எல்லாத் தேவதைகளும் எல்லா முமுட்சுக்களும் எல்லாப் பிரம்ம ஞானிகளும் வழிபடுகிருர்களோ, அவனை"— यं सर्वे देवा नमन्ति मुमुक्षवो ब्रह्मवादिनश्चेति (ந்ருஸிம்ம தாபினீ உபநிஷத்து.) பக்தியின் சக்தி அத்தகையது. ஒரு மனிதன் தன்னை முழுதும் மறந்து, தனக்குரிய பொருள் எதுவுமே இல்லையென்றுணரும்போது, அவன் 'ததீயத்துவம்' (அவனுடைமையாய் இருத்தல்) என்னும் நிலையை அடைகிருன். அவனுக்கு அனைத்தும் தெய்விகம் பொருந்தியனவாகின்றன; ஏனென்ருல், அவை காதலனுன கடவுளுடைய சொத்துக்கள். இவ்வுலகக் காதலிலுங்கூடக் காதலிக்குரிய பொருள் ஒவ்வொன்றையும் காதலன் ஏதோ ஒரு வகைத் தெய்விகம் பொருந்தியதாகவும் அதனுலேயே தனக்குப் பிரியமானதாகவும் கருதுகிருன். தன்னுடைய உள்ளத்தில் புகுந்துறையும் காதலிக்குரிய ஒரு சிறு துணியைக்கூட அவன் நேசிக்கிருன். அவ்வாறே ஒருவன் இறைவனை நேசிக்கும்போது உலகம் முழுதும் அவனுக்குப் பிரியம் நிறைந்ததாகிறது, அது அவனுடையதாதலால்.

எங்கும் நிறைந்த அன்பே ஆன்ம சமர்ப்பணத்திற்கு வழி காட்டி

முதலில் 'ஸமஷ்டியை' (எங்கும் நிறைந்ததை) நேசிக்காமல் நாம் எங்ஙனம் 'வியஷ்டியை' (ஒரு பகுதியை) நேசிக்க இயலும்? கடவுள் ஸமஷ்டி; பொதுப்பட எங்கும் நிறைந்த தொகுதியான

முழுப்பொருள் ; நாம் காணும் உலகம் வியஷ்டி ; ஒரு பகுதியான தனிப்பொருள். உலகனைத்தையும் நேசிக்கவேண்டுமென்றால், அது ஸமஷ்டியை — எங்கும் நிறைந்ததை — நேசிப்பதன்மூலந்தான் இயலும். ஸமஷ்டியாய் விளங்கும் ஒன்றில் பல்கோடித் தனிப் பொருள்கள் காணப்படுகின்றன. இந்தியத் தத்துவஞானிகள் தனிப்பொருளாராய்ச்சியில் தங்கிவிடுவதில்லை ; அவர்கள் தனிப் பொருள்களை விரைந்து நோக்கிவிட்டு, உடனே தனிப்பகுதிகளைத் தம்முள் அடக்கிக்கொண்டிருக்கும் பொது வடிவங்களைக் கண்டு பிடிக்கத் தொடங்குகின்றார்கள். எங்கும் நிறைந்ததை ஆராய்வ தொன்றே இந்தியத் தத்துவசாத்திரத்திற்கும் மதத்திற்கும்இயைந்த ஆராய்ச்சி. எதை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகுமோ, ஒன்றேயாகிய அந்த ஒப்புயர்வற்ற பொதுத்தத்துவமாகிய பொருளின் முழுமையைக் காணவே ஞானி முயல்கின்றான். பத்தனும் எவனை நேசித்தால் உலகனைத்தையும் நேசித்ததாகுமோ, அந்தப்பொதுவான பரமபுருஷன் ஒருவனையே அறிந்தனுபவிக்க விரும்புகிறான். யோகியும், எதையடக்கியாண்டால் உலகம் முழு வதையும் அடக்க இயலுமோ, அந்தப் பொதுவான சத்தியின் வடிவைத் தன் வயமாக்கிக்கொள்ள விரும்புகிறான். விஞ்ஞானத் திலும், மனத்தின் ஆராய்ச்சியிலும், பத்தியிலும் தத்துவசாத்திரத் திலும், இந்தியர்களின் மனம் எல்லாவற்றிலும் பொதுவாய் விளங்கும் அந்த ஒன்றைத்தேடும் ஒரு காரியத்திலேயே சரித்திர காலம் முழுவதும் ஈடுபட்டு வந்திருக்கிறது. ஆகையால், பத்தன் செய்யும் தீர்மானமாவது, 'நீ ஒருவனுக்குப் பின்னொருவனை மட்டும் நேசித்துக்கொண்டே போனால், அப்படியே அளவு கடந்த காலம் அவர்களை நேசித்துக்கொண்டு போகலாம் ; ஆனால், சிறிதளவுகூட உலகம் முழுவதையும் ஒரே மாதிரி நேசிக்க முடியாமற்போகலாம்,' என்பதே. 'எல்லா வித அன்பையும் ஒன்று சேர்த்தால், பெறப்படுவது கடவுள் ; உலகனைத்திலும் முத்தரும் முத்திக்கு முயல்பவரும் கட்டுப்பட்டவரும் ஆகிய எல்லா மன் னுயிர்களுடைய ஆர்வங்களையும் ஒன்றுசேர்த்தால் பெறப்படுவது கடவுள்,' என்ற இந்த நடுநாயகமான கருத்து, உறுதிப்பட்ட பின்பே ஒருவன் எங்கும் நிறைந்த அன்பைச் செலுத்த இயலும் கடவுள் ஸமஷ்டி ; காணப்படும் உலகமும் நமக்குப்புலப்படும் வகையில் தனித்துக்காணும் கடவுளே. ஸமஷ்டியை நாம் நேசிக் கும்போது அனைத்தையும் நேசிக்கிறோம். உலகை நேசித்து

அதற்கு நலன் புரிவது அப்போது எளிதாக அமையும்; இந்தச் சத்தியை நாம் கடவுளை முதலில் நேசித்தே பெறவேண்டும். அல்லாது உலகுக்கு நலன்புரிவது எளிதன்று. "அனைத்தும் அவனுடையவை; அவன் என் காதலன்; அவனை நான் காதலிக்கிறேன்," என்கிறான் பத்தன். இவ்வாறு பத்தனுக்கு அனைத்தும் ஆண்டவனுடையனவாய் விளங்குவதால், அனைத்தும் தெய்விகம் பொருந்தியவையாகின்றன. எல்லாரும் அவன் குழந்தைகள்; அவன் திருமேனி; அவன் தோற்றம். அப் படியிருக்க, நாம் எவரைத் துன்புறுத்தக்கூடும்? எவரைத்தான் நேசிக்காமலிருக்க இயலும்? இறையன்புடன் நிச்சயமாய் வருவது உலகிலுள்ள ஒவ்வொருவரிடமும் காட்டும் அன்பு. எவ்வளவுக் கெவ்வளவு நாம் கடவுளை அணுகுகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நாம் எல்லாப்பொருள்களும் அவனிடம் இருப்பதைக் காணத் தொடங்குகிறோம். ஜீவாத்துமா எப்போது பரபத்திப் பேரின் பத்தைத் தன்னுடையதாக்கிக்கொள்வதில் வெற்றி பெறுகிறதோ, அப்போது அவனை அனைத்திலும் காணத்தொடங்குகிறது. நமது இதயம் அதனால் வற்றாத அன்பின் ஊற்றாகிவிடும். இவ்வன்பு மார்க்கத்தில் இன்னும் உயர்ந்த படிகளில் நாம் ஏறும்போது இவ்வுலகப்பொருள்களிடையே தோன்றும் வேற்றுமைகள் அறவே அழிந்துபோம். அப்போது மனிதன் மனிதனாகக் காணப்படாது கடவுளாகவே தோற்றமளிக்கிறான். எந்தப்பிராணியும், அந்தப் பிராணியாகக் காணப்படாது கடவுளாகவே தோற்றமளிக்கிறது. புலிகூட இனிப் புலியாய் இல்லை; கடவுளின் தோற்றமே. ஆகவே, இந்தச் சீரிய பத்திநிலையில், ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வோர் உயிருக்கும், ஒவ்வொரு பொருளுக்கும் பூசனை புரியப்படுகிறது.

एवं सर्वेषु भूतेषु भक्तिरव्यभिचारिणी ।
कर्तव्या पण्डितै-र्ज्ञात्वा सर्वभूतमयं हरिम् ॥

"இங்ஙனம் பகவானாகிய ஹரி எல்லா உயிர்களிலும் உறைகிறான் என்றுணர்ந்து அறிவாளிகள் எல்லா உயிர்களிடத்தும் முறை பிறழாத அன்பைச் செலுத்த வேண்டும்."

இம்மாதிரி சிறப்புற்றதும் அனைத்தையும் தன்னுட் கொண்டது மான அன்பின் பயனாக வருவது பரிபூரண ஆன்ம சமர்ப்பணம். அதுவே நிகழ்வது. எதுவும் நமக்குப் பிரதிகூலமாக இருக்கவிய

லாது (अप्रातिकूल्य) என்பதே நிச்சயபுத்தி. நோய்வந்தால், அன்பு மயமான அவ்வான்மா, "நோயே, உன் வரவு நல்வரவாகுக!" என்று கூறும்; துயர் வந்தால், "துயரே, உனக்கு நல்வரவு கூறுகிறேன். நீயும் என் மனத்திற்கினியவனிடமிருந்தே வருகின்றாய்!" என்று கூறும். ஒரு பாம்பு வந்தாலும், அது கூறுவது, "பாம்பே, உனக்கு நல்வரவு கூறுகிறேன்!" என்பதே. அப்படிப்பட்ட பத்தன், சாவு வந்தாலும், அதைப் புன்முறுவலுடன் வரவேற்பான்; "அவையனைத்தும் என்னை நாடி வருவதால் நான் பாக்கியசாலி! அவையெல்லாம் வரட்டும்!" என்பான். பகவானிடம் ஆழ்ந்த பத்தியாலும் அனைத்தும் அவனுடையனவே என்ற எண்ணத்தாலும் ஏற்படும் இந்நிலையில் பத்தன் தன்னைப் பொறுத்தவரையில் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் வேற்றுமையைக் காண்பதில்லை. நோயைப்பற்றியோ, துயரைப்பற்றியோ, குறை கூறுவது இன்னதென்பதே அவனுக்குத் தெரியாது; இவ்வாறு குறை கூறாமல், அன்பே உருக்கொண்ட கடவுளின் இச்சைக்குப் பணிவதே அரிய வீரச் செயல்களால் ஏற்படும் சிறப்பனைத்தையும்விடப் பெருமதிப்பிற்குரிய செல்வமாகும்.

மக்களில் பெரும்பகுதியினருக்கு உடலே அனைத்தும். அவர்களுக்கு உடலே உலகனைத்தும். உடலால் மகிழ்வதே அவர்களுக்கு உள்ளதெல்லாம். உடலையும் உடலைப்பற்றிய பொருள்களையும் பூசித்தலாகிய பேய்க்குணம் நம்மெல்லோருக்குள்ளும் புகுந்து கொண்டிருக்கிறது. நாம் வீராப்புப்பேசலாம்; உயரப் பறக்கலாம்; ஆனால், அது எப்படியிருந்தாலும், நாம் கழுகுகளைப்போன்றிருக்கிறோம்; நமது மனம் கீழே பள்ளத்தில் அழுகிக்கிடக்கும் பிணத்தை நோக்கியே சென்றுகொண்டிருக்கிறது. நமது உடலை ஒரு புலியினிடமிருந்துதான் ஏன் காப்பாற்றவேண்டும்? அதை ஏன் புலிக்குக் கொடுத்துவிடக்கூடாது? புலி அதனால் மகிழ்ச்சி அடையும்; அக்காரியம் சுயநலத் தியாகம்; பூசை போன்றவற்றினின்று முற்றும் நெடுந்தூரம் விலகியதன்று. தான் என்பது அறவே அழிந்துவிட்ட மனநிலையை நீங்கள் அடைய முடியுமா? அது பத்திமார்க்கத்தின் சிகரத்தில் தலை கிறுகிறுக்கும் உயரம். இவ்வுலகில் அங்கு எப்போதாவது ஏறியவர் ஒரு சிலரே; ஆனால், எப்போதும் ஆயத்தமாய் எப்போதும் முழு மனத்துடன் சுயநலத் தியாகம் செய்யக்கூடிய அந்த உயர்ந்த நிலையை அடையும்வரை,

ஒருவன் முதிர்ந்த பத்தனுக இயலாது. நாமெல்லோரும் நமது உடலை ஏறத்தாழத்திருத்திகரமாய் நீண்டகாலமோ குறுகிய காலமோ பாதுகாக்கலாம். ஆயினும், நம் உடல் அழிய வேண்டுவதே; அது நிலையானதன்று. எவர்களுடைய உடல் பிறருக்குச் செய்யும் சேவையில் அழிகின்றதோ, அவர்கள் பாக்கியசாலிகள். "செல்வத்தையும் தனது உயிரையுங்கூட ஞானியானவன் எப்போதும் பிறருடைய சேவைக்கு ஆயத்தமாய் வைத்திருப்பான். சாவெனும் ஒன்று இவ்வுலகில் நிச்சயமாயிருக்கும்போது இவ்வுடலானது கெட்ட காரணத்தால் அழிவதைவிட நல்ல காரணத்தால் அழிவது சாலச்சிறந்தது." நமது வாழ்வை நாம் ஐம்பது ஆண்டுகளோ, நூறாண்டுகளோ, இழுத்துச் செல்லலாம். ஆனால், அதற்கப்புறம் நிகழ்வதென்ன? கூட்டுறவால் தோன்றிய ஒவ்வொன்றும் பிரிந்து அழியவே வேண்டும்; அது பிரிந்து போக ஒரு காலம் வந்தாக வேண்டும்; வந்தே தீரும். இயேசுவும், புத்தரும், மகமதுவும்—எல்லோரும் இறந்தே போயினர்; பெரிய தீர்க்கதரிசிகள் அனைவரும் உலக மதாசாரியர்களும் இறந்தே போனுர்கள்.

ஒவ்வொன்றும் சிதறிப்போகும் இயல்புடைய நிலையற்ற இவ்வுலகில் நாம் நமக்குக் கிடைத்த காலத்தைச் சிறந்த வகையில் பயன்படுத்தவேண்டும் எனக் கூறுகிருன் பத்தன். உண்மையில் வாழ்வின் தலைசிறந்த பயனுவது, அதை எல்லோருடைய சேவைக்கும் ஆயத்தமாக வைத்திருப்பதே. நமது உடைமையாகக் கிடைத்துள்ள உடலையே முழுதும் நாம் எனக்கொள்ளும் இந்த மாயையும், எப்படியாவது இயன்றவரை பாடுபட்டு நாம் அதைப் பேணி மகிழ்விக்க வேண்டும் என்று அதைப் போற்றுதலுமாகிய இக்கொடிய எண்ணமுமே இவ்வுலகில் எல்லாச் சுய நலத்தையும் விளைவிப்பவை. நிச்சயமாக உங்கள் உடலினும் நீங்கள் வேருனவர்கள் என்பதை உணர்ந்து விட்டால் போரிடுவதற்கும் போட்டியிடுவதற்கும் உங்களுக்கு ஒருவருமே இருக்கமாட்டார். சுய நலம் உங்களிடமிருந்து முற்றும் அழிந்துபோம். ஆகையால், நாம் இவ்வுலகப் பொருளனைத்தையும் பற்றியவரை முழுதும் இறந்துவிட்டவர்களாகவே நம்மை எண்ணிக்கொள்ளவேண்டும் என்று பத்தன் கூறுகிருன். அதுதான் உண்மையான ஆன்ம சமர்ப்பணம். எது வேண்டுமானுலும் வரட்டும்; 'யாவும் உன் சித்தப்படி நடக்கட்டும்,' என்பதன் கருத்து இதுவே; போராடிக்கொண்டும் போட்டியிட்டுக்கொண்டும் இருக்கும் போதே நம்முடைய கோழைத்தனங்களுக்கும் உலகியற்பேராசைகளுக்

கும் இறைவனுடைய இச்சையே காரணமென்று எண்ணிக்கொண் டிருத்தலன்று. ஒருவேளை நம்முடைய சுயநலப் போராட்டங்களி லிருந்துங்கூட நன்மை ஏற்படக்கூடும்; ஆனால், அது கடவுளின் செயல். முதிர்ந்த பத்தனுடைய நோக்கம் ஒருபோதும் தனக்காக என்று எதையும் விரும்பாமலும் செய்யாமலும் இருப்பதேயாம். "ஆண்டவனே, உலகத்தவர்கள் உன் பேரால் உன்னதமான கோவில்களைக் கட்டுகிறார்கள்; உன் பேரால் பெரிய தானங்களைச் செய்கிறார்கள்; நானோ, ஏழை; என்னிடம், ஒன்றுமில்லை; ஆகை யால், என்னுடைய இவ்வுடலை உன் திருவடிகளில் சமர்ப்பிக்கின் றேன். பிரபுவே, என்னைத் தள்ளிவிடாதே!" என்பதே பத்த னுடைய இதயத்தின் ஆழத்திலிருந்து எழும் விண்ணப்பம். அன்பு வடிவாகிய இறைவனுக்குச் செய்யப்படும் இவ்வான்ம சமர்ப்பணம், செல்வத்தைக்காட்டிலும், ஆட்சியைக்காட்டிலும், புகழிலும்போகத் திலும் பரந்து செல்லும் எண்ணங்களைக்காட்டிலும் மிகமிக உயர்ந் தது. பத்தனுடைய அமைதியான சரணாகதியிலுள்ள சாந்தி மனத் திற்கெட்டாததும் மதிப்பிட முடியாததுமாகும். 'அப்ராதிகூல்யம்' எனும் அவாவற்ற மனநிலை, இயற்கையாகவே தனக்கு எதிரிடை யாக எதையும் உணர்வதில்லை. சிறந்த இச்சரணாகதி நிலை யில் எவனிடம் எல்லா உயிர்களும் இருப்புடையனவாய் இயங்கி வாழ்கின்றனவோ, அவனிடம் மட்டும் எல்லாவற்றையும் விழுங்கி நிற்கும் பற்று ஒன்று நீங்கலாக மற்றெல்லாவகைப் பற்றுகளும் அறவே ஒழிந்து போகின்றன. இந்த இறை நிலைப்பற்றானது ஜீவனைக்கட்டுப்படுத்தாமல் அவனுடைய தளைகளையெல்லாம் முற் றும் களைந்துவிடுகிறது.

உண்மைப்பத்தனுக்குப் பரவித்தையும் பரபத்தியும் ஒன்றே

உபநிடதங்கள் 'பரவித்தை' என்றும் 'அபரவித்தை' என்றும் வித்தையை இரண்டாகக் கூறுகின்றன. பத்தனைப்பற்றியவரையில் இந்தப் பரவித்தையும் அவனுடைய பரபத்தியும் ஒன்றே. முண்டக உபநிஷத்துக் கூறுவதாவது:—

द्वे विद्ये वेदितव्ये इति ह स्म यद् ब्रह्मविदो वदन्ति परा चैवापरा च। तत्रापरा ऋग्वेदो यजुर्वेदः सामवेदोऽथर्ववेदः शिक्षा कल्पो व्याकरणं निरुक्तं छन्दो ज्योतिषमिति। अथ परा यया तदक्षरमधिगम्यते ॥

“ பரம் என்றும் அபரம் என்றும் உணர வேண்டிய வித்தைகள் இரண்டு உண்டு என்று பிரம்மஞானிகள் கூறுவார்கள். அவற்றுள் அபரம் (கீழ்) என்பது, இருக்கு வேதம், யசுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம்,சிட்சை (உச்சரிப்பு ஸ்வரம் முதலியன), கற்பம் (யாகம் செய்யும் முறை), வியாகரணம், நிருத்தம் (சொல் இலக்கணம்), சந்தம், சோதிடம் என்பவற்றைக் குறிக்கும். ஆனால், பரம் (மேல்) என்பது, எதனால் அட்சரம் என்னும் (அழியாத ஆன்மப்) பொருள் அடையப்படுமோ, அதுவாகும். ”

ஆகவே, பரவித்தை என்பது பிரம்ம ஞானம் என்பது தெளிவுறக் காட்டப்பட்டது. தேவி பாகவதம் பரபத்தியைப்பற்றிப் பின்வருமாறு சித்தரிக்கிறது :—“ ஒரு பாத்திரத்திலிருந்து இன்னொரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றப்பட்டால், அது தொடர்ச்சியறுபடாமல், தாரையாய் விழுவதுபோல, மனம் சிந்தனையறுபடாமல் இறைவனை நினைத்தால்,நாம் பரபத்தி அல்லது தலை சிறந்த பத்தி நிலையை யடைகிறோம். ” சிதைவுபடாது ஒரு நிலையாய் இங்ஙனம் மனமும் சித்தமும் இறைவனை நாடி இடையறாது பற்றி நிற்குமானால், அதுவே மனிதன் கடவுளிடம் செய்யும் பத்தியின் உன்னதமான நிலை. பத்தியின் மற்ற நிலைகள் இந்நிலையை அடைவதற்குப் படிகளைப் போன்றவைகளே. இப்பரபத்தியானது பற்றுடன் கூடிய ராக பத்திக்குப் பின்வருவதால் ‘ ராகானுகம் ’ (பற்று) எனப்படும் இந்த உன்னதமான பத்தி ஒரு தடவை மனிதனுடைய இதயத்தில் புகுந்துவிட்டால் அவனுடைய மனம் இடைவிடாது கடவுளை நினைக்குமேயன்றி, வேறொன்றையும் நினையாது. அவன் கடவுளைப் பற்றியல்லாது வேறு எண்ணங்களுக்குத் தன் மனத்தில் இடந்தரமாட்டான். அவனுடைய ஆன்மா எதனாலும் வெல்லப்படாததாய்ப் பரிசுத்தமாயிருந்துகொண்டு, ஜடப்பொருளாலும் மனத்தின் குறைபாட்டாலும் ஏற்படும் தளைகளையெல்லாம் தானாகவே உடைத்தெறிந்து, பரம சாந்த நிலையை எய்தும்.இறைவனைத் தனது இதயத்திலேயே வழிபடக்கூடியவன் அவனே. அவனுக்கு வெளி வடிவங்களும், அடையாளங்களும், நூல்களும், கொள்கைகளும் அவசியமில்லை ; எவ்வகையிலும் அவனுக்கு உதவி செய்யக்கூடிய சத்தியை அவை இழந்துவிடுகின்றன. இவ்வாறு இறைவனை நேசித்தல் எளிதன்று. சாதாரணமாக மனிதனுடைய நேசம் எங்குத் திரும்பிப்பெறப்படுமோ, அங்கேயே தழைப்பதைக் காண்கிறோம் ; எங்கு நேசத்திற்கு நேசம் திரும்பி வரவில்லையோ, அங்கு வெறுப்பும்

அலட்சியமுமே ஏற்படுகின்றன. எனினும், நேசம் திரும்பிப் பெறப்படாதபோதுங்கூட, நேசம் காட்டப்படுவது எங்கோ சில விடங்களில் இருக்கின்றது. இத்தகைய நேசத்தை விட்டிற்பூச்சி விளக்கினிடம் காட்டும் நேசத்திற்கு ஒப்பிடலாம். அப்பூச்சி விளக்கை நேசித்து அதில் விழுந்து இறக்கிறது. அம்மாதிரி நேசிப்பது அப்பூச்சியின் இயற்கை. அன்பின் இயற்கையாவது, அன்பு செலுத்துவதேயாதலால், அங்ஙனம் அன்பு செய்தலே நாம் உலகில் காணக்கூடிய அன்பினுள் உத்தமமானதும் முற்றும் சுயநலமற்றது மான வடிவம் என்பதை மறுத்தல் இயலாது. அப்படிப்பட்ட அன்பு ஆன்மிக நிலையில் நிகழ்ந்தால், அஃது அவசியம் பரபத்தியைக் கூட்டுவிப்பதற்கு அழைத்துச் செல்லும்.

பத்தி முக்கோணம்

பத்தியை ஒரு முக்கோணமாக உருவகப்படுத்தலாம். அதன் ஒவ்வொரு கோணமும் பத்தியினின்று இணைபிரியாத ஓர் இலட்சணத்தைக் குறிக்கும். மூன்று கோணமும் கூடாமல் ஒரு முக்கோணமாக்க முடியாது; கீழே கூறும் மூன்று இலட்சணங்களுங் கூடியிராமல் உண்மையான பத்தியும் இருக்க இயலாது. பத்தி முக்கோணத்தின் முதல்கோணம் பின்வருவது: பத்திக்குப் பேரம் பேசத் தெரியாது. எங்கெல்லாம் ஏதேனும் ஒன்று எதிர்பார்க்கப் படுகிறதோ, அங்கெல்லாம் உண்மையான அன்பு இருக்க இயலாது; அது வியாபாரக்கடை வைப்பதுபோலாகும். நாம் காட்டும் மரியாதைக்கும் பணிவுக்கும் கைம்மாருகக் கடவுளிடமிருந்து இந்த நலனையோ அந்த நலனையோ பெற வேண்டும் என்ற எண்ணம் எதுவரை நம்மிடம் உள்ளதோ, அதுவரை உண்மையான அன்பு நமது உள்ளத்தில் வளர இயலாது. தமக்குக் கடவுள் நன்மைகளை வழங்கும் பொருட்டு எவர் அவரை வழிபடுகின்றனரோ, அவர் அந் நன்மைகள் கிடைக்காமற்போனால் நிச்சயமாகக் கடவுளை வழிபட மாட்டார். பத்தன் கடவுளை வழிபடுவது எதற்காகவெனில், அவன் அன்பிற்குரியவனாயிருத்தற்காகத்தான்; உண்மைப் பத்தனின் இந்தத் தெய்விகக் காதலைத் தூண்டுவதற்கும் செலுத்துவதற்கும் வேறு காரணம் இல்லை.

நாம் ஒரு கதை கேட்டிருக்கிறோம்: ஒரு பெரிய அரசன் ஒரு காட்டினுள் ஒரு சமயம் சென்று அங்கே ஒரு யோகியாரைக் கண்டான்; அவருடன் சிறிது நேரம் பேசியதும் அவருடைய தூய்மை

யையும் அறிவையுங்கண்டு மிக்க மகிழ்வெய்தினன்; பிறகு தான் வழங்க விரும்பிய ஒரு தானத்தை ஏற்று அந்த யோகியார் தன்னை அனுகிரகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். யோகியார் அதற்கிசையவில்லை. "எனது உணவிற்குப் போதுமான பழங்கள் வனத்தில் கிடைக்கின்றன; பருகும் நீரை மலைகளினின்று பாய்ந்து வரும் பரிசுத்தமான அருவிகள் அளிக்கின்றன; மரங்களின் பட்டைகள் எனக்குப் போதுமான ஆடைகளாகின்றன; மலைக்குகைகள் எனக்கிருப்பிடமாகின்றன. நான் எதற்காக உன்னிடமிருந்தோ வேறு எவரிடமிருந்தோ ஒரு பொருளைத் தானம் வாங்க வேண்டும்?" என்று கூறினர். அரசன், "அடிகளே, நீங்கள் எனக்கு நன்மை புரிவதற்காக ஏதேனும் ஒன்றை என்னிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். என்னுடன் நகருக்கு வாருங்கள்; என் அரண்மனைக்குப் போவோம்," என்றான். பெரிதும் வேண்டிக் கொள்ளப்பட்டதால் அந்த யோகியார் அரசன் விருப்பத்திற்கிணங்கி அவனுடன் அரண்மனைக்குச் சென்றார். அரசன் யோகியாருக்குத் தானத்தை வழங்குவதற்குமுன், "ஆண்டவரே, எனக்கு இன்னும் மக்களையளியும்; ஆண்டவரே, எனக்கு இன்னும் அதிகமான செல்வத்தையளியும்; ஆண்டவரே, எனக்குப் பரந்த தேசத்தையளியும்; ஆண்டவரே, எனக்கு இன்னும் அதிகமான தேகாரோக்கியத்தையளியும்," என்றெல்லாம் பிரார்த்தனை செய்தான். அரசன் பிரார்த்தனையை முடிப்பதற்குள் யோகியார் எழுந்து அவ்வறையை விட்டு மெதுவாக வெளியே சென்று நடக்கத் தொடங்கி விட்டார். அரசன் மனங்கலங்கியவனாய் அவரைத் தொடர்ந்து சென்று, "அடிகளே, நான் வழங்க விரும்பின தானத்தை பெற்றுக்கொள்ளாமல் போகிறீர்களே!" என்று கெஞ்சினன். யோகியார் திரும்பிப்பார்த்து, "நான் பிச்சைக்காரர்களிடம் பிச்சை யேற்பதில்லை. நீயும் பிச்சைக்காரனே. நீ எப்படி எனக்கு ஒன்றைக் கொடுக்க இயலும்? உன்னைப்போன்ற பிச்சைக்காரனிடமிருந்து எதையும் ஏற்றுக்கொள்ள எண்ணுவதற்கு நான் ஒரு முட்டாளல்லேன். என்னைத் தொடராதே; போ," என்றார்.

கடவுளிடம் பிச்சைக்காரர்களாய்ச் செல்பவர்களுக்கும் பத்தர்களுக்குமுள்ள வேறுபாடு இதனால் நன்கு விளங்கும். பிச்சை கேட்பது அன்பின் மொழியன்று. ஒரு பரிசைக்கருதிக் கடவுளை வழிபடுவது, அது முத்திக்காக இருந்தாலுங்கூட, மட்டமானதே. அன்பிற்குப் பரிசை நோக்கவே தெரியாது. அன்பு செய்வது அன்பு

ஒன்றிற்காகவே. பத்தன் நேசிப்பது எதனுலெனின் அவனுல் நேசிக்காமலிருக்க முடியாது என்ற ஒரே காரணத்தாலேதான். இயற்கையில் அழகானதொரு காட்சியைப் பார்த்து அதை நீங்கள் நேசித்தால், அந்நேசத்திற்குப் பிரதியாக ஒரு பரிசைத் தரச் சொல்லி நீங்கள் அக்காட்சியை நோக்கிக் கேட்பதில்லை; அக்காட்சியும் உங்களையொன்றுங்கேட்பதில்லை. எனினும், அக்காட்சி உங்கள் மனத்திற்கு மகிழ்ச்சியை ஊட்டி, உங்கள் உள்ளத்திருந்த வெப்பத்தைக் குறைத்து, உங்களை அமைதியாக்கித் தாற்காலிகமாக உங்களுடைய மனித இயற்கையினின்று உங்களை உயரத் தூக்கி ஒரு தெய்விக நிலையில் வைத்துவிட்டது. உண்மை அன்பின் இந்த இயல்புதான் நமது முக்கோணத்தில் முதற்கோணம். உங்கள் அன்பிற்குக் கைம்மாருக எதையுங் கேளாதீர்கள்; உங்கள் பதவி எப்போதும் கொடுப்பவனுடையதாகவே இருக்கட்டும்; இறைவனிடம் உங்கள் அன்பைச் செலுத்துக; ஆனுல், அவனிடமிருந்து எதையும் திரும்பக் கேளாதீர்கள்.

பத்தி முக்கோணத்தின் இரண்டாவது கோணம் பின்வருவது: பத்திக்கு அச்சமென்பது தெரியாது. அச்சத்தின் மூலம் கடவுளை வழிபடுபவர்கள் மனிதர்களில் கீழ்ப்பட்டவர்கள்; மனிதப் பண்பு வளரப் பெருதவர்கள். தண்டனைக்கு நடுங்கி அவர்கள் கடவுளை வழிபடுகிருர்கள். அவர்களுக்குக் கடவுள் ஒரு கையில் சவுக்கையும் இன்னெரு கையில் செங்கோலையும் வைத்துக்கொண்டிருக்கும் ஒரு தலைவராகக் காட்சியளிக்கிருர்; அவருக்குக் கீழ்ப்படியாவிட்டால் அவர் சவுக்காலடிப்பார் என்று அவர்கள் அஞ்சுகிருர்கள். தண்டனைக்கஞ்சிக் கடவுளை வழிபடுவது இழிவான செயல். அதை வழிபாடெனக் கொண்டாலும், அவ்வகை வழிபாடு பத்தி வழிபாட்டு முறையின் மிக மட்டமான வகையாகும். உள்ளத்தில் சிறிதாவது அச்சம் இருக்கும்வரை, அதனுடன் அன்பு எப்படியிருக்கும்? அன்பானது அச்சமனைத்தையும் இயற்கையாகவே வென்றுவிடும். ஒரு தாய் தெருவில் சென்றுகொண்டிருப்பதாகவும் அவளை நோக்கி ஒரு நாய் குரைப்பதாகவும் நினைத்துக்கொள்க. அவள் அஞ்சி அருகிலுள்ள வீட்டினுள் ஓடுவாள். ஆனுல், அடுத்த நாள் அவளே தன் குழந்தையுடன் தெருவில் போகும்போது ஒரு சிங்கம் குழந்தை மேல் பாய்வதாக வைத்துக்கொள்க. அவளுடைய இடம் அப்போது எங்கிருக்கும்? குழந்தையைக் காத்துக்கொண்டு சிங்கத்தின் வாயிலேதான் அவளிருப்பாள் என்பதில் ஐயமில்லை. அன்

பானது அச்சத்தையெல்லாம் ஒட்டிவிடும். தன்னை உலகினின்று பிரித்து வைத்துக்கொள்ள வேண்டும் என்ற சுயநல எண்ணத்தாலேயே அச்சம் பிறக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு என்னை நான் சிறுமைத்தனத்திற்கும் சுயநலத்திற்கும் ஆளாக்குகிறேனோ, அவ்வளவுக்கவ்வளவு என்னுடைய அச்சம் அதிகரிக்கிறது. ஒரு மனிதன் தான் பொருளல்லாத ஓர் அற்பன் என்று எண்ணினால், அச்சம் திண்ணமாக அவனைப் பற்றிக்கொள்ளும். உங்களைப்பற்றி நீங்களே பயனற்ற அற்பர்கள் என்று எண்ணுவதை எவ்வளவுக்கெவ்வளவு குறைத்துக்கொள்ளுகிறீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு உங்கள் அச்சமும் குறையும். உள்ளத்தில் அச்சத்தின் ஒரு சிறு பொறி இருந்தாற்கூட அங்கே அன்பு இருக்க இயலாது. அன்பும் அச்சமும் ஒன்றற்கொன்று ஒவ்வாதவை; எவர் கடவுளை நேசிக்கிறாரோ, அவர் கடவுளிடம் ஒரு போதும் பயப்பட மாட்டார். 'பகவானுடைய நாமத்தை வீணாகக் கூறிக் குறைப்படுத்தாதே,' என்னும் கட்டளையைக்கண்டு உண்மையான பத்தன் சிரிப்பான். பத்தி மார்க்கத்தில் ஆண்டவர் திருநாமத்தைக் குறைப்படுத்துதல் எங்ஙனம் இயலும்? இறைவர் திருநாமத்தை எவ்வகையில் நீ கூறினாலும், எவ்வளவுக்கெவ்வளவு மிகுதியாய்க் கூறுகிறீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு உங்களுக்கு அதிகமான நன்மையே ஏற்படும். அவரை நேசிப்பதாலன்றோ அவர் திருநாமத்தை அடிக்கடி நீங்கள் கூறுகிறீர்கள்?

பத்தி முக்கோணத்தின் மூன்றாவது கோணம் பின்வருவது: பத்திக்கு போட்டியென்பதே தெரியாது. தன்னுடைய ஒப்புயர்வற்ற இலட்சியமே திரண்டு வந்ததாக பத்தன் நேசிப்பதால் அந்த இலட்சியத்துடன் போட்டியிடுவதற்கு வேறொன்றுமில்லை. நமது அன்பிற்குப் பாத்திரமான பொருள் நமது பரிபூரண இலட்சியமானாலன்றி நமக்கு உண்மையான பத்தி ஏற்படுவதில்லை. மானிடர்களிடையே காதல் எனப்படுவது பலவிடங்களில் இடந்தவறியும் நோக்கந்தவறியும் ஏற்படலாம். ஆனால், ஒருவனுடைய காதலைக் கவரும் பொருள் அவனுக்கியல்பான உன்னத இலட்சியமாகத் தானிருக்கும். ஒருவன், மிக இழிவான உயிரிடம் தனது இலட்சியத்தைக் காணக்கூடும்; மற்றொருவன், உத்தமமான உயிரிடம் காணக்கூடும்; என்றாலும், ஒவ்வொரு நிலையிலும் இலட்சியத்தைத் தான் ஆழ்ந்த அன்புடன் உண்மையாக நேசிக்க இயலும்: ஒவ்வொரு மனிதனுக்கும் உத்தமமான இலட்சியம் எதுவோ, அது

தான் கடவுள் எனப்படுவது. அறிவிலியோ அறிஞனோ, பாவியோ புண்ணியனோ, ஆணோ பெண்ணோ, கல்லாதவனோ கற்றவனோ, பண்புடையவனோ பண்பற்றவனோ, எப்படியிருப்பினும், ஒவ்வொரு மானிட உயிர்க்கும் உன்னத இலட்சியம் கடவுளே. அழகு, அமைதி, ஆற்றல் ஆகியவற்றின் உன்னத இலட்சியமனைத்திற்கும் உறைவிடமாய் உள்ளது எதுவோ, அதுவே நேசிக்கும் பான்மை யுடையதாயும் நேசத்திற்குகந்ததாயும் உள்ள கடவுளின் பரிபூரண மான இலட்சணம் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

இத்தகைய இலட்சியங்கள் ஏதோ ஒரு வடிவில் ஒவ்வொரு மனத்திலும் குடிகொண்டுள்ளன ; அவை நம்முடைய மனத்தி னின்று பிரிக்கமுடியாதவை. மனித இனத்தின் செயற்பாடனைத் தும் இத்தகைய இலட்சியங்களை அன்றாட வாழ்க்கையில் உருப் படுத்துவதற்காக நிகழ்த்தப்படும் போராட்டங்களே. நம்மைச் சுற் றிச் சமூகத்தில் நாம் காணும் பலவகைப்பட்ட இயக்கங்களெல்லாம் பல மன்னுயிர்களுடைய பலவாறான இலட்சியங்கள் வெளிப்போந்து உருக்கொள்வதற்காக ஏற்பட்ட உழைப்பின் பயனே. அகத்தி லுள்ளது புறத்தில் வருவதற்கு உந்துகின்றது. என்றைக்கும் அழி யாது ஓங்கி நிற்கும் இலட்சியத்தின் வேகந்தான் மனித சமூகத்தி னிடையே இடைவிடாது வேலை செய்வதாய்க் காணப்படும் ஒரே சத்தி ; ஒரே மூலகாரணம். அகத்திலுள்ள இலட்சியத்திற்கிணங்கப் புறத்திலுள்ள நிலைகளை முழுதும் வயப்படுத்திச் சீராக்கப் பாடு படுதல் வீண் முயற்சி என்பதை மனிதன் நூற்றுக்கணக்கான பிறவிகளுக்குப் பின்னும் பல்லாயிரமாண்டுகள் போராடிய பின்னும் காணக்கூடும் ; அதைக் கண்டுகொண்டபின் அவன் தனது இலட் சியத்தைப் புறவுலகில் நிலைநாட்ட முயற்சி செய்யாமல், அன்பின் உன்னதச் சிகரத்திலிருந்துகொண்டு இலட்சியத்தை இலட்சிய மாகவே வழிபடுவான். இலட்சியங்களுள் சிறந்த இப்பரிபூரண இலட்சியம் மற்றத் தாழ்ந்த இலட்சியங்களையெல்லாம் தழுவி நிற்பது. 'காதலன் ஒருவன் (கிரேக்க நாட்டுக் கட்டழகியான) ஹெலனுடைய அழகை (அழகிற் குறைந்த) ஓர் எதியோப்பியப் பெண்ணின் புருவத்தில் காண்பான்,' என்னும் பழமொழியின் உண்மையை ஒவ்வொருவனும் ஒப்புக்கொள்வான். தனித்து நின்று கவனிக்கும் மனிதன் இங்குக் காதல் இடந்தவறி ஏற்பட் டுள்ளது என்பதைக் காண்பான் ; ஆனால், காதலன் தன்காதலியை ஹெலனாக (கட்டழகியாக)க் காண்கிறானேயன்றி (அழகு குறைந்த)

எதியோப்பியையாகக் காணவில்லை. ஹெலனுயினும் சரி, எதியோப்பியையாயினும் சரி, நம் காதற்பொருள்கள் நம் இலட்சியங்களை உருப்படுத்தி விளங்கவைக்கக்கூடிய மையங்களாகவே அமைகின்றன. உலகம் சாதாரணமாக எதை வழிபடுகிறது? நிச்சயமாக, அனைத்தையுந் தழுவிக்கொண்டு பரம பத்தனுடைய சிறந்த பரிபூரண இலட்சியமாயுள்ளது எதுவோ அதையன்று. ஆடவரும் பெண்டிரும் சாதாரணமாய் வழிபடுவது அவரவர்களிடமுள்ள இலட்சியமே; ஒவ்வொருவரும்—ஆணோ பெண்ணோ—தத்தம் இலட்சியத்தின் நிழலையே வெளியே விழச் செய்து, அதன் முன்பு முழந்தாளிட்டுப் பணிகின்றனர். அதனாலேதான் கொடியவர்களாயும் இரத்த வேட்கையுள்ளவர்களாயுமிருக்கும் மனிதர்கள், இரத்த வேட்கையுள்ளவராகவே இறைவரையும் கருதுகின்றார்கள். ஏனெனில், அவர்கள் தங்களுடைய நினைவின்படி தானே உயர்ந்த இலட்சியத்தை நேசிக்க முடியும்? நல்ல மனிதர்களுடைய இலட்சியமோ, மற்றவர்களுடையதினின்று முற்றும் வேறுபட்டிருப்பதால், அவர்கள் கடவுளைப் பற்றிக் கொண்டுள்ள இலட்சியமும் மிக உயர்ந்ததாகும்.

அன்புக் கடவுளின் அத்தாட்சி அவரே

சுயநலம், பண்டம் மாற்றுதல், பேரம் செய்தல் ஆகியவை போன்ற எண்ணங்களைக் கடந்து சென்றுவிட்ட பத்தனுடைய இலட்சியம் என்ன? அப்படிப்பட்ட மனிதன் உயர்ந்த கடவுளிடமும் "நான் என்னுடையவற்றையெல்லாம் உமக்கு அர்ப்பணம் செய்கிறேன்; உம்மிடமிருந்து எனக்கு ஒன்றும் வேண்டாம்; உண்மையில் என்னுடையதென்று கூறிக்கொள்ள என்னிடம் ஒன்றுமேயில்லை," என்பான். இந்தத் தீர்மானம் ஒருவனுக்கு ஏற்பட்டுவிட்டால், அவனுடைய இலட்சியம் பரிபூரணபத்தியும் அந்தப் பத்தியாலேற்படும் பயன் இன்மையுமேயாகும். அப்படிப்பட்ட மனிதனுடைய உன்னத இலட்சியத்தில் பிரிவினையாலாகிய குறுகிய எண்ணம் இராது; அது ஸமஷ்டி அன்பு; எல்லைகளும் தளைகளும் இல்லாத அன்பு; களிப்பற்ற அன்பு; பரிபூரண அன்பு. பத்தி மார்க்கத்தின் இந்தச்சிறந்த இலட்சியம் கைவந்தபோது அடையாளங்களும் அறிவுறுத்தல்களும் அளிக்கும் உதவி தேவையாயிருப்பதில்லை. அது அதுவாகவே நேசிக்கவும் பூசிக்கவும்படுகிறது. அனைத்தையும் தன்னுள்ளடக்கிக்கொண்டிருக்கும் இலட்சியமாகிய

இந்த ஓர் இலட்சியத்தை வழிபடுவதுதான் பரபத்தியின் உத்தம வடிவம். பத்தியின் மற்றெல்லா வடிவங்களும் அதையடைவதற்கான வழியிலுள்ள படிகளே.

பத்தி மார்க்கத்தைப் பின்பற்றுவதில் நமக்கேற்படும் எல்லாத் தோல்விகளும் எல்லா வெற்றிகளும் அந்த ஓர் இலட்சியத்திற்கு அழைத்துச் செல்லும் பாதையில் உள்ளவைகளே. ஒரு பொருளுக்குப் பின் ஒரு பொருளாக எடுத்துக்கொள்ளப்பட்டு உள்ளேயிருக்கும் இலட்சியம் வெளியே அவற்றின் மேலெல்லாம் தொடர்ச்சியாகக் கற்பிக்கப்படுகிறது. உள்ளே எப்போதும் வளர்ந்துகொண்டிருக்கும் அந்த இலட்சியத்தைத் தெளிவுபடுத்த அவ்வெளிப் பொருள்கள் திறனற்றவையென்பது அறியப்படும்போது அவை ஒவ்வொன்றாக விலக்கப்படுகின்றன. வெளிப்பொருள்களில் இலட்சியத்தைக் கண்டனுபவிக்க முயல்வது வீண் என்பதையும், எல்லா வெளிப் பொருள்களும் இலட்சியத்துடன் ஒப்பிடும்போது ஒன்றுமில்லாதவையாம் என்பதையும் முடிவில் முமுக்ஷு உணரத் தொடங்குகிறான்; நாளடைவில் உயர்ந்ததும், பொதுவானதும், குணங்குறியற்றதுமான இலட்சியத்தைக் குணங்குறியற்ற பாவனையிலே அனுபவித்தறியும் சத்தியை அவன் பெறுகிறான். அவனுக்கு அது உயிர்க்கலையுடன் கூடி, உண்மையாகவே விளங்குகிறது. பத்தன் இந்த நிலையெய்தும்போது, ‘கடவுளைக் காட்ட முடியுமா முடியாதா? அவர் எல்லாச் சத்தியும் எல்லா அறிவும் படைத்தவரா அல்லரா?’ என்றெல்லாம் கேட்க அவனுக்கு எண்ணம் எழுவதில்லை. அவனுக்கு இறைவர் அன்பு வடிவம்; அன்பின் உயர்ந்த இலட்சியம். அதுவே அவனுடைய நோக்கங்களையெல்லாம் பூர்த்தி செய்யப்போதுமானது. கடவுள் அன்பாகவே தம்மை விளக்கிக் காட்டுகிறார். அன்பைக் கொள்ளை கொள்ளும் அவருடைய இருப்பைப் பத்தனுக்குக் காட்டிக் கொடுப்பதற்கு எவ்வகை அத்தாட்சியும் தேவையில்லை. மற்ற நெறிகளிற் காணப்படுவது போன்று தண்டிக்கும் தெய்வங்களைப் புலப்படுத்துவதற்கு ஏராளமான அத்தாட்சிகள் தேவைப்படலாம்; ஆனால், பத்தன் அத்தகைய தெய்வங்களை ஒரு போதும் கருதுவதில்லை; கருதவும் அவனாலியலாது. அவனுக்குக் கடவுள் முழுதும் அன்பாகவே இருக்கிறார். ‘பிரியே, எவரும் கணவன் பொருட்டாகவே கணவனை நேசிப்பதில்லை; ஆனால், கணவனிடமுள்ள ஆன்மாவின் பொருட்டே கணவன் நேசிக்கப்படுகிறான்; பிரியே, எவரும் மனைவி

பொருட்டாகவே மனைவியை நேசிப்பதில்லை ஆனால், மனைவியிடமுள்ள ஆன்மாவிற்காக மனைவி நேசிக்கப்படுகிறாள்.

சுயநலம் ஒன்றுதான் எல்லா மானிடச் செயல்களுக்கும் அடிவேராயிருக்கிறதென்று சிலர் கூறுவர். அதுவுங்கூட வேற்றுமை வடிவில் குறுக்கப்பட்டதால் தாழ்வடைந்த அன்புதான். என்னை நான் அனைத்திலும் புகுந்தவனாகஎண்ணிவிட்டால், என்னிடம்தன்னலம் திண்ணமாக இருக்க இயலாது; ஆனால், தவறுதலாக நான் என்னை எதோ ஓர் அற்பமான பொருள் என்று கருதினால், எனது அன்பு குறுகிச் சுருங்கிப் போகிறது. அன்பின் பரப்பைச் சுருக்கி அதன் வழியைக் குறுக்கிவிட்டதுதான் நான் செய்த தவறு. உலகில் எல்லாப் பொருள்களும் தெய்விகமான உற்பத்தியுடையவையாதலால், அவையெல்லாம் நேசித்தற்குரியன; ஆனால் முழுமுதற்பொருளின் நேசத்தில் தனித்தனி பகுதிகளின் நேசம் முற்றும் அடங்கிவிடுகிறதென்பதை மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த முழுமுதலே பத்தர்களுடைய கடவுள். மற்றத்தெய்வங்கள் எல்லாமும்-பரலோகத்திலுள்ள பிதாக்களும், ஆண்டவர்களும், படைப்புக் கர்த்தாக்களும், வாதங்களும், கொள்கைகளும் நூல்களும் — அவர்களுக்குப் பயனற்றவை, அர்த்தமற்றவை; ஏனெனில், அவர்கள் அவைகளையெல்லாம் முற்றுங்கடந்து மேலே சென்றுவிட்டார்கள். இதயம் துப்புரவாக்கப்பட்டு அன்பாகிய தெய்விக அமுதத்தால் நிரப்பப்பட்டபின், தெய்வத்தைப் பற்றிய மற்ற பாவனைகளெல்லாம் அற்பமாய்த் தோன்றுகின்றன; அவை தகுதி குறைந்தனவாய்—மதிப்பற்றனவாய்—விலக்கப்படுகின்றன. மிகச் சிறந்த அன்பு அல்லது பரபத்தியின் சத்தி அத்தகையது; முதிர்ந்த பத்தன் இந்துக் கோயில்களுக்கோ கிறித்தவக் கோயில்களுக்கோ கடவுளைத் தேடிக்கொண்டு போவதில்லை. அவனைக் காணமுடியாத இடமே இல்லையென்பதை அவன் அறிவான். அவரை அவன் கோயிலின் உள்ளேயுங் காண்கிறான்; வெளியேயுங் காண்கிறான்; புண்ணிய புருஷனுடைய புண்ணியத்திலும் கொடியவனுடைய கொடுமையிலும் அவரையே காண்கின்றான்; அதெப்படியெனின், எல்லா ஆற்றலும் வாய்ந்தவரும், அணையாத அன்பு விளக்காய் எக்காலத்தும் இடைவிடாது ஒளிவிட்டுக்கொண்டிருப்பவருமான அவர், அவனுடைய இதயத்தில் ஏற்கனவே பூரணசத்தியுடன் குடிபுகுந்திருப்பதால்.

அன்பின் தெய்விக இலட்சியத்தை மானிடப் பண்பில் உருவகப்படுத்துதல்

மிகச்சிறந்ததும் பாரமார்த்திகமானதுமான இந்த அன்பு இலட்சியத்தின் இயற்கையை மனித மொழியில் விளக்குவது இயலாத காரியம். மனிதனுடைய கற்பனுசத்தி எவ்வளவு உயர ஏறிப்பறந்தாலும், அது அந்த இலட்சியத்தின் அளவு கடந்த வனப்பையும் பூரணத்துவத்தையும் முழுதும் அறிந்துகொள்ள இயலாது. எனினும், பத்தி மார்க்கத்தை உயர்ந்த வகையிலோ தாழ்ந்த வகையிலோ பின்பற்றியவர்கள் எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் தங்கள் தங்கள் பத்தி இலட்சியத்தைத் தாங்கள் தெரிந்துகொள்வதற்கும் பிறர்க்கு விளக்கிக் கூறுவதற்கும் போதுமான சத்தியில்லாத மனித மொழியைத்தான் வழங்க வேண்டியிருக்கிறது. தவிர, பற்பல வடிவில் மக்கட்சமுதாயத்தில் காணப்படும் அன்பும் இந்த விளக்க முடியாத தெய்விக அன்பைச் சுட்டிக்காட்டப் பயன்படுகிறது. மனிதன் தெய்விகப் பொருள்களேயும் தனக்குரிய மனித வழியிலேதான் சிந்திக்க இயலும்; நாம் பாரமார்த்திகத்தையும் நம்முடைய நடைமுறை மொழியிலேதான் விவரிக்க இயலும். அளவு கடந்த பரம்பொருளே அளவுக்குட்பட்ட மொழியில் நமக்கு எழுதிக்காட்டியது போன்றுள்ளது இவ்வுலகனைத்தும். ஆகையால், பத்தர்கள் மக்கட் சமூகத்துக்குக் காணப்படும் பொதுவான அன்புடன் தொடர்புள்ள பொதுச்சொற்களேயே கடவுள் விஷயத்திலும் பகவானே வழிபடுவதிலும் பயன்படுத்துகின்ருர்கள். பரபத்தியைப் பற்றி எழுதியுள்ள பெரியோர் சிலர், இந்தத் தெய்விக அன்பை எத்தனேயோ வகையில் தெரிந்துகொள்ளவும் அனுபவிக்கவும் முயன்றிருக்கிருர்கள். இந்த அன்பை உணர்வதில் முதற்படியாய் இருப்பது 'சாந்த பத்தி' எனப்படுவது. பேருக்குமட்டுமல்லாமல், சடங்குகளுக்கும் சங்கேதங்களுக்கும் சற்று உயர்ந்த நிலேயில் அது உள்ளதாயினும், உணர்ச்சி வயப்பட்ட பத்திப்பித்தன் அடையாளங்களில்லாமல், சுடர்விடுந்தீயைப் போலில்லாமல், மூளேயில் பித்தேருமல், அமைதியாகச் சாதாரணமாக உள்ள அன்பே சாந்தம் எனப்படுவது. இவ்வுலகில் மெதுவாகச் செல்ல விரும்பும் சில மக்களேயும், சுழல் காற்றைப்போல வருவதும் போவதுமாயிருக்கும் வேறு சிலரையும் நாம் பார்க்கிருேம். சாந்த பத்தன் அமைதியாகச் சத்தம் செய்யாமல் அடக்கமாயிருப்பான். அடுத்தது 'தாசிய பத்தி'. அதாவது,

பணியாளனைப் போலிருத்தல். ஒருவன் தன்னை ஆண்டவனுடைய பணியாளாகக் கருதும்போது அது உண்டாகிறது. பத்தனுடைய இலட்சியம் நன்றியுள்ள வேலைக்காரன் தன் எசமானனிடம் வைத்திருக்கும் நம்பிக்கை போன்றது. அடுத்தது 'சக்கிய பத்தி' அல்லது நட்பு. அதாவது, 'நீ எங்களுடைய அன்பிற்குகந்த நண்பன்,' என்பது. ஒரு மனிதன் தன்னுடைய நண்பன் தன் குற்றங்களுக்காகத் தன்னைக் கடிந்துகொள்ளமாட்டானென்றும் தனக்கெப்போதும் உதவி புரியவே முயல்வானென்றும் அறிந்து எப்படித் தனது இதயத்தை அவனுக்கு திறந்து காட்டுவானோ, எப்படி அவனுக்கும் அவன் நண்பனுக்குமிடையே சமமான அன்பு சுரக்குமோ, அப்படியே பத்தனுக்கும் நண்பரான பகவானுக்குமிடையே சமமான அன்பு உள்ளும் புறமும் சுரக்கிறது. அப்படிக் கடவுள் நமது அருகிலிருக்கும் நண்பரும், நமது வாழ்க்கைக் கதைகளைத் தாராளமாகச் சொல்லிக்கொள்ளக்கூடிய சினேகிதரும் ஆகிவிடுகிறார். அவர் காத்து உதவிபுரிவார் என்ற முழு நம்பிக்கையுடன் நமது இதயத்திலுள்ள இரகசியங்களை அவருக்கு நாம் புலப்படுத்தலாம். கடவுள் பத்தன் சமநிலையில் ஏறக்கூடிய நண்பராய் இருக்கிறார். இறைவர் இங்கே ஒரு விளையாட்டுத் தோழர். நாமெல்லோரும் இவ்வுலகில் விளையாடிக் கொண்டிருப்பதாகவே கருதலாம். குழந்தைகள் தங்கள் விளையாட்டுகளை விளையாடுவது போலவும், மாட்சிமை மிக்க அரசர்களும் சக்கரவர்த்திகளும்கூடத் தங்கள் விளையாட்டுகளை விளையாடுவது போலவும், அன்பிற்கினிய ஆண்டவரும் இவ்வுலகுடன் லீலை புரிகிறார். அவர் பரிபூரணர்; அவருக்கு வேண்டுவது எதுவுமில்லை. அவர் ஏன் படைக்கிறார்? நம்மைப் பற்றிய வரையில் எப்போதும் நமது செயலெல்லாம் ஏதோ ஒரு தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகவே ஏற்படுகிறது; தேவை இருப்பின், அதற்கு முன்பே குறை இருந்தாக வேண்டும். கடவுள் பரிபூரணராதலின், அவருக்குத் தேவைகள் இல்லை. அவர் ஏன் இடையறாது வேலை செய்து இந்தப் படைப்புத் தொழிலை நடத்திக்கொண்டிருக்க வேண்டும்? அவருடைய கருத்தென்ன? நாம் கற்பனையில் காணும் ஏதோ ஒரு முடிவுக்காகக் கடவுள் இவ்வுலகை அமைத்திருக்கிறார் என்னும் கதைகளெல்லாம் கதை வடிவில் மட்டும் நன்றாயிருக்கலாமேயன்றி, வேறெந்த வகையிலுமன்று. எல்லாம் லீலை; இவ்வுலகும் அவர் நிகழ்த்தும் லீலையே. அனைத்தையும் நோக்குமிடத்து, இவ்வுலகெல்லாம் அவருக்குக் களிப்பூட்டும் ஒரு

பெரிய வேடிக்கை நிகழ்ச்சியாகத்தானிருக்க வேண்டும். நீங்கள் ஏழைகளானல், அதை வேடிக்கையெனக் கருதி மகிழ்க; பணக்காரரானல், பணக்காரராயிருக்கும் வேடிக்கையில் மகிழ்ச்சியடைக ; இன்னல்கள் வந்தால் அவையும் நல்ல வேடிக்கைதான் ; இன்பம் வந்தால் இன்னும் சிறந்த வேடிக்கையே. உலகம் ஒரு விளையாட்டுக்குரிய இடம் ; இங்கே நாம் விளையாடி வேடிக்கைகளை அனுபவிக்கிறோம் ; கடவுள் நம்முடன் எப்போதும் விளையாடிக் கொண்டேயிருக்கிறார் ; நாமும் அவருடன் விளையாடுகிறோம். கடவுள் நம்முடைய இணைபிரியாத விளையாட்டுத் தோழர். அவர் எவ்வளவு அழகாக விளையாடுகிறார் ! ஒரு கற்பம் முடியும்போது விளையாட்டும் முடிகிறது.

குறைந்த காலமோ, நீண்ட காலமோ, ஓய்வு ஏற்படுகிறது; மறுபடியும் எல்லோரும் வெளியே வந்து விளையாடுகின்றனர். இவை எல்லாம் விளையாட்டுகளே. இவ்விளையாட்டில் நீங்களும் உதவிக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை மறந்துவிடும்போதுதான் துயரமும் விசனங்களும் ஏற்படுகின்றன. அப்போது இதயம் பளுவுடையதாகி, உலகமும் உங்களைப் பிடித்து மிகுந்த சக்தியுடன் அமுத்துகிறது. ஆனல், இந்த மூன்று ·நிமிஷ வாழ்க்கையில் மாறிமாறி வரும் நிகழ்ச்சிகளின் இயற்கையானது, உண்மை என்ற தீவிரமான நம்பிக்கையைக் கைவிட்டு, ‘இது நாம் விளையாடும் மேடை ; நாம் ஆண்டவருடைய லீலையில் உதவி புரிகிறோம்,’ என்பதை உணர்ந்தவுடனே உங்கள் துயரத்திற்கு முடிவேற்பட்டு விடுகிறது. ஆண்டவர் ஒவ்வோர் அணுவிலும் விளையாடுகிறார் ; அவர் பூமிகளையும் ஞாயிறுகளையும் மதிகளையும் ஆக்கிக்கொண்டிருக்கும்போதும் விளையாடுகிறார். அவர் மனித இதயத்துடனும், பிராணிகளுடனும் விளையாடிக்கொண்டே யிருக்கிறார். நாம் அவருடைய சதுரங்க ஆட்டத்திற்குச் சொக்கட்டான் காய்கள் ; அவர் காய்களாகிய நம்மை ஆட்டப்பலகைமேல் வைத்துக் கலைக்கிறார் ; முதலில் நம்மை ஒரு வகையில் வரிசைப்படுத்திப் பின்பு மற்றொரு வகையில் வைக்கிறார். அறிந்தோ அறியாமலோ, நாம் அவருடைய ஆட்டத்தில் உதவுகிறோம். என்ன ஆனந்தம் ! நாம் அவருடைய விளையாட்டுத் தோழர்கள்.

அடுத்தது ‘வாத்ஸல்ய பத்தி’ எனப்படுவது. அது கடவுளைத் தந்தையாராகக் கருதாமல், நமது குழந்தையாகக் கருதுவது. இது விசித்திரமாகத் தோன்றலாம். ஆனல், கடவுள் எல்லாம் வல்லவர்

என்னும் எண்ணத்தை நீக்கி வழிபடுவதற்கு இச்சாதனம் நமக்கு உதவுகிறது. வல்லவர் என்னும் எண்ணம் அத்துடன் அச்சத்தையும் கொண்டு வருகிறது. அன்பில் அச்சமே இருக்கக்கூடாது. மரியாதை, கீழ்ப்படிதல் ஆகிய எண்ணங்கள் குணம் படிவதற்கு அவசியம்; ஆனால், குணம் படிந்த பின்பு, பத்தன் அமைதி பொருந்திய சாந்தபத்தியையும் சிறிதளவாவது தீவிரமான பத்திப் பித்தையும் சுவைத்துவிட்டால், பிறகு அவன் நீதி மார்க்கத்தைப் பற்றியும் கட்டுப்பாடுகளைப்பற்றியும் பேசவேண்டிய அவசியமிராது. கடவுளை ஆற்றல் மிகுந்தவராகவும், மாட்சிமை தங்கியவராகவும் மகிமை பொருந்தியவராகவம், உலகின் பிரபுவாகவும், தேவதேவராகவும் பாவனை செய்வது அன்பு வயப்பட்டவன் தனக்கு அக்கறையில்லை என்கிறான். அச்சத்தை விளைக்கும் ஆற்றலைக் கடவுளுடன் சேர்ப்பதை விலக்கவே அவன் கடவுளைத் தனது குழந்தையாக வழிபடுகிறான். தாயுந்தந்தையும் குழந்தையிடம் உறவாடுவதில் அச்சத்தை உணர்வதில்லை; அவர்களுக்குக் குழந்தையிடம் மரியாதைக்கும் இடமில்லை. தங்களுக்கு ஏதாவது நன்மை புரியும்படி குழந்தையைக் கேட்கவும் அவர்கள் எண்ணமாட்டார்கள். குழந்தையின் நிலை எப்போதும் பெற்றுக்கொள்பவனுடைய நிலை; குழந்தையிடம் அன்பினால் பெற்றோர்கள் நூறு தடவை வேண்டுமானாலுந் தங்கள் உடல்களை விடுவார்கள். தங்களுடைய அந்த ஒரு குழந்தைக்காக அவர்கள் ஆயிரந்தடவை ஆயுள் முழுவதையும் தியாகம் செய்வார்கள்; ஆகையாலேதான் கடவுள் குழந்தையாக நேசிக்கப்படுகிறார். சாதாரணமாகக் கடவுளின் அவதாரத்தில் நம்பிக்கையுடைய மதங்களிலேதான் கடவுளைக் குழந்தையாக நேசிக்கும் எண்ணம் பிறந்து வளர்ச்சியடைகிறது. கடவுளைக் குழந்தையாய்க் கருதும் எண்ணம் மகமதியர்களுக்கு முற்றும் இயலாதது; அதினின்று அவர்கள் ஒரு விதமான அச்சத்துடன் விலகுவர். ஆனால், இந்துவுக்கும் கிறித்தவனுக்கும் குழந்தைக் கிருஷ்ணனும் குழந்தை இயேசுவும் இருப்பதால், அவர்கள் இவ்வழிபாட்டை எளிதில் புரிந்துகொள்ளுகிறார்கள். இந்திய மாதர்கள் வழக்கமாகத் தங்களைக் கிருஷ்ணனுடைய தாயாக எண்ணிக் கொள்வர்; கிறித்தவத் தாய்மார்களும் தாங்கள் கிறித்துவின் தாய்மார்கள் என்னும் எண்ணத்தைக் கொள்ளலாம். அது மேலை நாட்டினர்க்கு மிகவும் அவசியமான கருத்தாகிய கடவுளின் தெய்விகத் தாய்மைப் பண்பின் அறிவை அவர்களுக்குக் கொண்டுவரும்.

கடவுளைப் பற்றிய மூட நம்பிக்கைகளான அச்சமும் மரியாதையும் நமது இதயத்தினுள்ளே ஆழ வேரூன்றியிருக்கின்றன ; கடவுளிடம் மரியாதை, பாராட்டு, அச்சம், மாட்சிமை என்னும் நம் எண்ணங் களை அன்பில் முழுதும் முடுக்கிவிட நீண்ட பல ஆண்டுகள் ஆகும்.

அன்பின் தெய்விக இலட்சியத்தை மானிடப்பண்பில் உருவகப் படுத்துவதில் இன்னுமொரு முறை உண்டு. அது 'மதுர பத்தி.' அது பத்தி வடிவங்கள் அனைத்தினும் உயர்ந்தது. உலகில் வெளிப் படும் அன்பின் ஓங்கிய நிலையை அது அடிப்படையாகக் கொண் டது. அதுதான் மனிதனுக்குத் தெரிந்தவற்றுள் வலிமை மிக்கது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே தோன்றும் காதலைப் போல மனிதனுடைய இயற்கை முழுவதையும் குலுக்குவதும், அவனுடைய உடலின் அணுத்தோறும் ஊடுருவிப் பாய்வதும், அவனைப் பித்த னுக்குவதும், அவன் தனது இயல்பையும் மறக்கும்படி செய்வதும், அவனை முற்றும் மாற்றிவிடுவதும், அவனைத் தேவனுகவோ அரக்க னுகவோ செய்யக்கூடியதுமான அன்பு வேறு எது இருக்கிறது? இந்தத் தெய்விக பத்தியின் மதுரபாவத்தில் கடவுள் நம் கணவர் ; நாமெல்லோரும் பெண்டிர் ; இவ்வுலகில் ஆடவரே இல்லை. ஆடவர் ஒருவரே ; அவர் நமது அன்பிற்குரியவராகிய கடவுளே. ஓர் ஆண் பெண்ணுக்கு அளிப்பதோ, ஒரு பெண் ஆணுக்கு அளிப்பதோ ஆகிய அன்பனைத்தும் இங்கு ஆண்டவருக்கு அர்ப்பணம் செய்யப் படுகிறது.

உலகில் நாம் வைத்துக்கொண்டு விளையாடுவதைப் போலிருப்ப தாகக் காணும் அன்பின் வகைகளெல்லாம் கடவுளாகிய ஒரே இலட்சியத்தையுடையன ; ஆனல், துரதிருஷ்டவசமாக மனிதன் எந்த அளவுகடந்த கடலை நோக்கி இந்த அன்பு ஆறு இடைவிடாது பாய்கிறதோ, அதை அறிந்துகொள்ளாமையால், மதியீனத்தால் அதைச் சிறு மனிதப் பொம்மைகளிடம் செலுத்த முயல்கிருன். மனித இயற்கையில் குழந்தையிடம் ஏற்படும் தீவிரமான அன்பா னது, சிறு பொம்மை போன்ற அக்குழந்தைக்கு மட்டுமேயன்று ; நீங்கள் அதைக் குருட்டுத்தனமாகவும் தனியுரிமையுடனும் குழந்தையிடமே செலுத்தினல், அதன் பயனுக வருந்த நேரிடும். ஆனல், அவ்வருத்தத்தின் மூலம் ஒரு விழிப்பு ஏற்படும். அதனல், உங்களிடமுள்ள அன்பை ஒரு மனித உடலின்மேல் வைத்தால், அது விரைந்தோ தாமதமாகவோ துன்பத்தையுந்

துயரத்தையுந் தரும் என்பதைத் திண்ணமாகக் கண்டுகொள் வீர்கள். ஆகையால், நமது அன்பு என்றும் இறவாதவராயும் மாருதவராயுமுள்ள உத்தமருக்கே அளிக்கப்பட வேண்டும்; எவருடைய அன்புக் கடலில் பொங்குதலும் வடிதலும் இல் லையோ, அவருக்கே அளிக்கப்பட வேண்டும். எல்லா ஆறு களும் கடலை நோக்கியே பாய்கின்றன. மலைச்சரிவில் கீழே வரும் ஒரு துளிகூட ஓர் ஓடையையோ ஆற்றையோ அடைந்த வுடன், அஃது எவ்வளவு பெரிதாயிருந்தாலும், அங்குத் தங்கி விடுவதில்லை; முடிவில் அந்தத் துளியும் எப்படியாவது கடலைத் தேடிக்கொண்டு போய்ச் சேர்ந்தேவிடுகிறது. நம் ஆசைகளுக்கும் ஆர்வங்களுக்கும் ஒரே இலட்சியம் கடவுளே. நீங்கள் கோபித்துக் கொள்ள விரும்பினுல், அவரிடம் கோபித்துக்கொள்க. நீங்கள் உங் கள் தெய்விகக் காதலரைக் கடிந்துகொள்ளலாம்; நண்பராகிய அவரைக் கடிந்துகொள்ளலாம். வேறு யாரை உரிமையுடன் கடிந்துகொள்ள இயலும்? சாகும் இயல்புடைய மனிதன் உங்கள் கோபத்தைப் பொறுமையாகப் பொறுத்துக்கொள்ள மாட்டான். எதிர்ப்பு இருக்கும். நீங்கள் என்னிடம் கோபித்தால் நான் உங்களை எதிர்க்க விரைவது நிச்சயம்; ஏனென்ருல், உங்கள் கோபத்தை நான் பொறுமையுடன் பொறுத்துக்கொள்ள இயலாது. உங்கள் தெய்விகக் காதலரிடம், “நீ ஏன் என்னிடம் வரமாட்டேன் என்கி ருய்? என்னை ஏன் தனித்திருக்க விட்டுவிட்டாய்?” என்று கேளுங் கள். அவரிடமன்றி இன்பம் வேறு எங்குளது? சிறு மண்ணுங்கட்டி களில் என்ன இன்பம் இருக்கவியலும்? அளவு கடந்த அன்பின் சாரம் இறுகிக் கற்கண்டு போலாகியது எதுவோ, அதைத்தான் நாம் தேடவேண்டும். அதுகடவுளிடந்தான் உள்ளது. ஆசைகள் ஆர்வங்கள் எல்லாம் அவரை நோக்கி மேலே செல்லட்டும். அவை அவருக்கே உரியவை; அந்த இலட்சியந் தவறிக் கீழே சென்ருல் அவை தீமையாகின்றன; அவை நேராக இலட்சியத்தை நோக்கிச் சென்ருல், கடவுளை நோக்கிச் சென்ருல் அவற்றின் தாழ்ந்த வடிவமும் உயர்ந்ததாக மாறிவிடும். மனித உடலிலும் உள்ளத் திலும் உள்ள சக்திகளெல்லாம், எந்த வடிவில் வெளிப்பட்டாலும், அவை கடவுளையே இலட்சியமாக, ‘ஏகாயனமாக’ (ஒரே புகலிட மாக) உடையவை. மனித உள்ளத்தின் எல்லா அன்புகளும் எல்லா ஆர்வங்களும் கடவுளிடமே செல்லவேண்டும் அவரே காதலர். வேறு யாரை நமது இதயம் காதலிக்க இயலும்? அவரே

அழகிற் சிறந்தவர்; தூய்மை மிக்கவர். அவர் அழகே உருக் கொண்டவர்; தூய்மையே வடிவெடுத்தவர். அவரைக் காட்டிலும் இவ்வுலகில் அழகு மிக்கவர் யார்? அவரைக்காட்டிலும் இவ்வுலகில் கணவராயிருக்க தகுதி மிக்கவர் யார்? அவரைக் காட்டிலும் இவ் வுலகில் அதிகமாக நேசிப்பதற்குத் தகுந்தவர் யார்? ஆகையால், அவரே கணவராக வேண்டும்; காதலராக வேண்டும்.

இந்தத் தெய்விக அன்பைப் பற்றிப் பாடும் தெய்விகப் பக்தர்கள் பலவகைப்பட்ட மானிடக்காதலின் பரிபாஷையே அதை வருணிக் கப் போதுமானதென்று ஏற்றுக்கொள்வது வழக்கமாய் இருக் கிறது. அறிவிலிகள் இதைச் சரியாக அறிந்துகொள்வதில்லை; ஒரு போதும் அறிந்துகொள்ளவும் மாட்டார்கள். புறக்கண்ணுலேயே அவர்கள் இதைப் பார்க்கிருர்கள். ஆன்மிக அன்புப்பித்தையும் அதனுல் விளையும் அல்லல்களையும் அவர்கள் அறியமாட்டார்கள். எங்ஙனம் அவர்கள் அறிய இயலும்? "காதலனே, நான் உன் உதடுகளால் ஒரு தரம் முத்தமிடப் பெறுவேனு? உன்னுல் முத்த மிடப் பெற்றவனுக்கு உன்னிடம் வேட்கை என்றென்றும் வளர்ந்து கொண்டே போகிறது; அவனுடைய துன்பங்களெல்லாம் மறைத்து போகின்றன; அவன் உன்னைத் தவிர எல்லாப் பொருள்களையும் மறந்து விடுகிருன்." எவருடைய உதடுகள் தொடுவதால் பத்தன் பைத்தியக்காரனுகிருனே, மனிதன் தெய்வமாகிருனே, அந்தக் காதலருடைய முத்தத்திற்கு ஆசைப்படுக. எவருக்கு அந்த முத் தத்தை அடையும் பேறு கிட்டிற்ருே, அவருடைய இயற்கை முழு வதும் மாறிவிடுகிறது; அவருக்கு உலகங்கள் மறைகின்றன; சூரிய சந்திரர்கள் அழிந்து போகிருர்கள்; பிரம்மாண்டமே அளவுகடந்த அன்புக்கடலில் கரைந்துபோகிறது. இதுதான் அன்புப் பைத்தி யத்தின் பரிபூரண நிலை.

ஆம்; உண்மையான ஆன்மிகக் காதலர் அங்குங் கூடத் தங்கிவிடுவதில்லை. கணவன் மனைவியர் அன்புங்கூட அவருக்குப் பித்தேற்றப் போதுமானதன்று. பக்தர்கள் கலியாணத்திற்குப் புறம்பான காதலையுங்கூட, அது வலிமை மிகுந்திருப்பதால், பத்தி யைச் சித்தரிக்கப் பயன்படுத்துகிருர்கள்; அது தவருன தென்பது அவர்கள் கவனத்தில் உறுத்துவதில்லை. இந்தக் காதல் தாராள மாய்ப் பரிணமிக்க எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகத் தடைகள் ஏற்படுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு அதிக ஆர்வம்மிக்க தாவது இதன் இயற்கை. கணவன் மனைவியரன்பு அமைதியானது;

அங்குத் தடைகள் இல்லை. ஆகையால், பத்தர்கள் ஒரு பெண் தன் காதலனிடம் கொள்ளும் அன்பை உதாரணமாக அமைத்துக் கொள்கின்றனர்; அவளுடைய தாயுந் தந்தையும் கணவனும் அதைக் கண்டிக்கின்றனர்; எவ்வளவுக்கெவ்வளவு அவ்வன்பின் போக்கைப் பிறர் தடுக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக அவளுடைய காதல் வலிமை மிகுந்து வளரத் தொடங்குகிறது. ஸ்ரீ கிருஷ்ணர் பிருந்தாவனத் தோப்புகளில் எங்ஙனம் காதலிக்கப்பட்டார் என்பதையும், அவருடைய குரலைக்கேட்டு என்றென்றும் பாக்கியசாலிகளான கோபிகைகள் இவ்வுலகையும், இதன் தளைகளையும், கடமைகளையும் இன்பங்களையும், துன்பங்களையும், அனைத்தையும் மறந்து, அவரைச் சந்திக்க எங்ஙனம் விரைந்தோடினார்கள் என்பதையும் மானிட மொழியால் வருணிக்க இயலாது. மானிடனே, மானிடனே, தெய்விக அன்பைப் பற்றி நீ பேசுகிறாய்; அதே சமயத்தில் உலகத்தின் அற்பமான செயல்களையும் நீ கவனிக்க முடிகிறதே!— நீ உளந்தொட்டுப் பேசுகிறாயா? "எங்கு இராமன் உண்டோ, அங்குக் காமம் இல்லை; அற்பஆசைக்கிடமில்லை. எங்கு அவ்வாசையுண்டோ அங்கு இராமனுக்கு இடமில்லை; இவ்விரண்டும் ஒரிடத்தில் கூடியிருக்க வியலாது; இருளும் ஒளியும் போல இவை ஒரு போதும் கூடியிருப்பதில்லை."

முடிவுரை

பத்தியின் இந்த உயர்ந்த இலட்சியத்தை அடைந்த பின் தத்துவ ஆராய்ச்சி ஒதுக்கப்படுகிறது. அது யாருக்கு வேண்டும்? சுயேச்சை, முத்தி, நிருவாணம் எல்லாம் ஒதுக்கப்படுகின்றன; தெய்விக் அன்பை அனுபவிக்கையில் யார்தான் விடுதலையை விரும்புவார்? "பிரபுவே, எனக்குச் செல்வம் வேண்டா; நண்பர்களும், அழகும், கல்வியும் வேண்டா; முத்தியுங்கூட வேண்டா; நான் மீண்டும் மீண்டும் பிறக்கவும் என்றுமே நீ எனது காதலனாயிருக்கவும் அருள் புரிவாயாக. நீ எப்போதும் என் காதலனாயிரு. நீயே என்றைக்கும் எக்காலத்தும் என் காதலனாயிரு. சர்க்கரையாகப் போய்விட யார் விரும்புவார்கள்? நான் சர்க்கரையை ருசிக்கவே விரும்புகிறேன்," என்கிறான் பத்தன். அப்படி யிருக்கையில் யார் தான் முத்தியடைந்து கடவுளுடன் ஒன்றாய்ப் போக விரும்புவார்

கள்? "நானே அவர் என்பதை நான் அறியலாம்; என்ருலும், நான் என் அன்பிற்குரிய அவரை அனுபவிப்பதற்காக என்னைப் பிரித்துக் கொண்டு வேருயிருக்க விரும்புகிறேன்." இதுதான் பத்தன் கூறுவது. அன்பிற்காகவே அன்பு என்பதுதான் அவனுடைய சிறந்த இன்பம். அன்பிற்குரிய ஆண்டவரை அனுபவிக்கும் பொருட்டு ஆயிரந்தடவை கைகளையுங் கால்களையும் கட்டிக்கொள்ள வேண்டுமானுலும் யார்தான் தயங்குவார்கள்? அன்பு ஒன்று நீங்கலாக, நேசிக்கப்படுவதும் நீங்கலாக, வேறெதையும் பத்தன் பொருட்படுத்துவதில்லை. அவனுடைய உலக இயல்புக்கு மாருன அன்பு ஆற்றையெதிர்த்துப் பாயும் கடலின் அலை போன்றது; பத்தன் ஆற்றின் ஓட்டத்தை எதிர்த்து ஆற்றிற்கெதிர் முகமாய்ச் செல்கிருன். உலகம் அவனைப் 'பைத்தியம்' என்கிறது. அப்படிப் பைத்தியம் என்று உலகம் கூறிக்கொண்டிருந்த ஒருவரை எனக்குத் தெரியும். இதுதான் அவர் கூறிய பதில்: "நண்பர்களே, உலகம் முழுவதும் ஒரு பைத்தியக்கார மருத்துவ நிலையம்; சிலர் சிற்றின்பத்திற்காகப் பித்து பிடித்தவர்; சிலருக்குப் புகழில் பித்துண்டு; சிலருக்குக் கீர்த்தியிலும், சிலருக்குப் பணத்திலும், சிலருக்கு முத்தியிலும், சொர்க்கத்திற்குப் போவதிலும் பைத்தியமுண்டு. இந்தப் பெரிய பைத்தியக்கார மருத்துவ நிலையத்தில் நானும் பித்துப் பிடித்தவனே; எனக்கிருப்பது கடவுள் பித்து. நீங்கள் பணத்திற்காகப் பித்துக்கொண்டால் நான் கடவுளுக்காகப்பித்துக் கொண்டுள்ளேன். நீங்கள் பைத்தியக்காரர்கள்; நானும் அப்படியே. என்ருலும் என்னுடைய பைத்தியமே சிறந்ததென்று நான் கருதுகிறன்." உண்மையான பத்தனுடைய அன்பும் இந்தத் தீவிரமான பைத்தியம்; இதன் முன் மற்றவையெல்லாம் அவனுக்கு மறைந்து போகின்றன. பிரம்மாண்டம் முழுவதும் அவனுக்கு அன்புமயமாயிருக்கிறது; அன்பு ஒன்றே இருக்கிறது; பத்தனுக்கு அப்படித்தான் தோற்றமளிக்கிறது. ஆகையால் ஒரு மனிதன் இந்த அன்பையடைந்தால், அவன் என்றென்றும் பாக்கியவானுகிருன்; என்றென்றும் இன்பம் நிறைந்தவனுகிருன்; இந்தத் தெய்விக அன்புப் பைத்தியமாகிய பாக்கியம் ஒன்று மட்டுமே நம்மிடம் புகுந்துள்ள உலகாயதப் பிணியைத் தீர்க்கும். அப்போது ஆசையுடன் சுயநலமும் மறைந்து போய்விடுகிறது. அவனிடம் முன்பு பொதிந்து கிடந்த அற்ப ஆசைகளனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு அவன் ஆண்டவரருகில் சேர்ந்துவிட்டவனுகிருன்.

பக்தி மார்க்கத்தில் நாமெல்லாரும் துவைதிகளாகவே தொடங்க வேண்டும். கடவுள் ஒருவர் தனியாகவும், நாம் தனியாகவும் இருப்பதாகவே நாம் உணர்வோம். அன்பு அப்போது இடையில் தோன்றவே, மனிதன் கடவுளை நெருங்கத் தொடங்குகிறான்; கடவுளும் சிறுகச் சிறுக மனிதனை அணுகுகிறார். மனிதன் வாழ்க்கையிலுள்ள பல வகைப்பட்ட உறவுகளையெல்லாம் கைக் கொண்டு தந்தையாகவும், தாயாகவும், பிள்ளையாகவும், நண்பனாகவும், எசமானனாகவும், காதலனாகவும் உள்ள பண்பைத் தன்னிடமுள்ள அன்பின் இலட்சியமாகிய தன் கடவுளிடம் பொருத்துகிறான். அவனுக்குக் கடவுள் இவ்வனைத்துமாய் இருக்கிறார்; தான் தனது வழிபாட்டு இலட்சியத்தில் முழுதும் மூழ்கி மறைந்துவிட்டதாயுணரும்போது அவனுடைய யாத்திரையின் முடிவு ஏற்படுகிறது. நாமெல்லோரும் நம்மையே நேசிப்பவர்களாகத் தொடங்குகிறோம்; சிறிய ஜீவனுடைய அளவுக்கு மீறிய ஆசைகள் அன்பையும் சுயநலமுடையதாக்கிவிடுகின்றன. ஆனால், கடைசியில் சுடரின் முழு ஒளியும் வருகிறது; அதில் இச்சிறிய ஜீவன் அளவு கடந்த பரம் பொருளுடன் ஒன்றிவிட்டதாகக் காணப்படுகிறது. இந்த அன்பாகிய ஒளியின் முன்னிலையில் மனிதன் முழுவதும் மாறுதலடைந்து விடுகிறான்; முடிவில் பத்தியும் பத்தனும் பகவானும் ஒன்றே என்னும் அழகிய உண்மை தன்னகத்தே மிளிர அதையறிந்து நுகர்கின்றான்.

என் வாழ்க்கையும் பணியும்

[27—1—1900 காலிபோர்னியாவைச் சேர்ந்த பாஸதேனுவிலுள்ள ஷேக்ஸ்பியர் கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவு.]

சகோதரிகளே, சகோதரர்களே,

இப்பொழுது இக்காலையில் பேசவேண்டியிருந்த பொருள் வேதாந்த தத்துவம் பற்றியது. அப்பொருள் மிக்க சுவை உள்ளது தான்; ஆனால், சற்றுக் கடினமான மிகப் பரந்ததொரு பொருளா யுள்ளது.

இதற்கிடையில் என் தொண்டைப் பற்றியும் நான் செய்து கொண்டு வருவது பற்றியும் சிறிது சொல்லவேண்டுமென்று உங்கள் தலைவரும் இங்குள்ள சகோதர சகோதரிகளுள் சிலரும் என்னைக் கேட்டுக்கொண்டுள்ளார்கள். இங்குள்ள சிலருக்கு அது இன்பமாக இருக்கலாம். ஆனால், எனக்கு அவ்வளவு உவந்ததாக இராது. உண்மையில் அதை எப்படி உங்களுக்குச் சொல்வதென்பதை முற்றிலும் நான் அறியேன். ஏனென்றால், அந்தப் பொருள் பற்றி நான் பேசுவது என் வாழ்க்கையில் இதுதான் முதல் தடவை.

இப்பொழுது நான் எனது குறைந்த ஆற்றலுக்கேற்ப எதை முடிக்க முயன்று வருகின்றேனோ, அதை நீங்கள் அறிந்து கொள்ளும்பொருட்டு உங்களைக் கற்பனை உலகில் இந்தியாவுக்கு அழைத்துச் செல்லுகிறேன். பொருளின் எல்லா விவரங்களையும் அதன் விரிவுகளனைத்தையும் ஆராய நமக்கு நேரமில்லை. அன்றி யும், இக்குறுகிய காலத்தில் ஓர் அன்னிய சமூகத்திலுள்ள எல்லாச் சிக்கல்களையும் தெரிந்துகொள்ளுதல் உங்களுக்கும் இயலாது. இந்தியா எப்படி இருக்கின்றது என்பதை ஒரு சிறு சித்திரமாக்கி உங்களுக்குச் சொல்ல முயலுவேன் என்பதே போதும்.

அது இடிந்து விழுந்து பாழாய்க் கிடக்கும் ஒரு மாபெரு மாளிகை போன்றது. முதன்முதலாக நோக்குவோமாயின், அதற்கு நம்பிக்கையே இல்லை. அது இறந்து பாழான ஒரு நாடு. ஆனால், நிதானித்து ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் அதற்கப்பால் ஏதாகிலும் காண்பீர்கள். உண்மை என்னவென்றால், வெளிப்

பார்வைக்குத் தோன்றும் மனிதன் எந்தக் கொள்கை அல்லது இலட்சியத்தின் புறவடிவமாயுள்ளானே, அக்கொள்கைக்கோ அல்லது இலட்சியத்திற்கோ தீங்காவது அழிவாவது ஏற்படாதவரை அம்மனிதன் வாழ்கின்றான். அப்போது அவனுக்கு நம்பிக்கை உண்டு. நீங்கள் அணியும் சட்டை இருபது தடவை திருட்டுப் போவதானல், நீங்கள் அழிவீர்கள் என்று சொல்லக் காரணமில்லை. நீங்கள் ஒரு புதுச் சட்டையை வாங்கிக்கொள்ளலாம். அச்சட்டை உயிருக்கு அவசியமானதன்று. ஒரு பணக்காரன் கொள்ளையடிக்கப்பட்டமை உண்மையாவதானல், அவனது உயிருக்குத் தீங்கு நேர்ந்ததாகவோ மரணம் உண்டானதாகவோ பொருள் கொள்ளலாகாது; அம்மனிதன் இறவாமலேயிருப்பான்.

இக்கொள்கையை ஆதாரமாகக்கொண்டு நின்று நாம் உள்ளே நோக்குவோம். காண்பது என்ன? இந்தியா இன்று அரசியல் வலிமை பொருந்திய ஒரு நாடாய் இல்லை; அது அடிமைப்பட்ட ஒரு சமூகம். இந்தியர்களுக்குப் பேச்சுரிமை இல்லை. அவர்களுடைய அரசாங்கத்தைப் பற்றி அவர்கள் ஒன்றும் பேச இயலாது. அவர்கள் முப்பது கோடி அடிமைகள் — வேறென்றுமன்று! இந்தியாவில் ஒரு மனிதனுடைய மாத வருமானம் இரண்டு ஷில்லிங்குகள் (ஒன்றரை ரூபாய்). பெரும்பான்மை மக்களின் சாதாரண நிலைமை, பட்டினியே. ஆகையினல், வருமானம் ஒரு சிறிதளவு குறைந்ததென்றால், மக்கள் இலட்சக்கணக்கில் மடிகின்றார்கள். ஒரு சிறு பஞ்சம் நேர்ந்தால் மரணம் பெருகும். ஆதலால், அங்குங்கூட, இந்தியாவின் அப்பகுதியை நோக்கும்போது, நாசத்தையே, முழு நாசத்தையே நான் காண்கின்றேன்.

ஆனல், இந்திய சமூகம் ஒருநாளும் செல்வத்தைக் குறியாகக் கொண்டதில்லை என்பதை நாம் காண்கின்றோம். எந்த நாடும் இதுவரை ஈட்டியுள்ள பெருஞ் செல்வத்தைக் காட்டிலும் இந்தியா அளவற்ற பொருள் சம்பாதித்ததானலும், அச்சமூகம் செல்வத்தைக் குறியாகக் கொண்டதில்லை. அது நெடுங்காலமாக வலிமை பொருந்திய ஒரு சமூகமாயிருந்தது; எனினும், அந்நாடு அதிகாரத்தைக் குறியாகக் கொள்ளவில்லை என்பதையும், வெற்றிகொள்ளும் பொருட்டு நாட்டை விட்டு வெளியே கிளம்பவில்லை என்பதையும் நாம் காண்கின்றோம். தம் சொந்த எல்லைகட்குள்ளேயே பூரணத் திருப்தி கொண்டவர்களாய், யாரையும் அவர்கள் தாக்கியதில்லை. இந்திய சமுதாயம் மண்டலாதிபத்தியப் புகழையும்

பொருளாகக் கொள்ளவில்லை. ஆகையினுல், செல்வமும் அதிகார மும் அச்சமூகத்தின் இலட்சியங்களல்ல.

பின்னை எது இலட்சியம்? அவர்களுடைய இலட்சியம் தக்கதா, தவரு?—அதுவன்று நாம் இப்பொழுது ஆராயும் பொருள். இந்த வாழ்க்கை உண்மையன்று என்பதை மனித சமூகங்களுள் அச் சமூகம் ஒன்றே நம்பி வந்திருக்கின்றது—திண்மையாக நம்பி யிருந்தது. உண்மையான பொருள் அவர்களுக்குக் கடவுளே. அக் கடவுளையே அவர்கள் உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும். அதனுல், அவர்கள் தாழ்நிலை எய்தியபோதும் மதமே முதன்மை பெற்றது. ஓர் இந்து நீர் குடிப்பதும் மத ஆசாரத்தோடுதான்; தூங்குவதும் மத ஆசாரத்தோடுதான்; நடப்பதும் மத ஆசாரத் தோடுதான்; மணப்பதும் மத ஆசாரத்தோடுதான்; திருடுவதும் மத ஆசாரத்துடனேதான்.

நீங்கள் எப்பொழுதாகிலும் அத்தகைய நாட்டைப் பார்த்திருக் கிறீர்களா? ஒரு கொள்ளைக் கூட்டத்தைத் திரட்ட வேண்டுமானுல், அதன் தலைவன் ஏதாவது ஒரு வகையான மதத்தைப் போதிக்க வேண்டும்; பிறகு ஏதாவது போலி வேதாந்தத்தைப் படைத்து, "இதுதான் கடவுளை அடைய மிகவும் சுருக்கமான, தெளிவான வழி," என்று சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் அவனைப் பின் பற்றுவார்கள்; அல்லாவிடில் பின் பற்ற மாட்டார் கள். அதுவே, அச்சமூகத்தின் உயிர்—அதன் பணி மதம் என்பதையும், அதில் யாரும் கைவைக்காததனுலேதான் அச் சமூகம் இன்னும் நிலைந்து நிற்கின்றதென்பதையும் காட்டுகின்றது.

உரோமாபுரியைப் பாருங்கள். அதன் பணி சாம்ராஜ்ய அதிகாரம்; சாம்ராஜ்யப் பெருக்கம்; அது பாதிக்கப்பட்டவுடனே உரோமாபுரி சின்னபின்னமாய்ச் சிதறுண்டு வீழ்ந்து மறைந்து போயிற்று. கிரேக்க நாட்டின் பணி அறிவு; அது பாதிக்கப்பட்ட தும் கிரேக்க நாடு மறைந்தது. அது போலவேதான் இக்காலத்தில் ஸ்பெயின் முதலான நவீன நாடுகளும். ஒவ்வொரு நாடும் உலகத் திற்கியற்ற வேண்டிய பணியொன்றுண்டு. அந்தப் பணிக்குத் தீங்கு நேரிடாத வரை அந்நாடு எத்தகைய இன்னல்கள் வந்தாலும் நிலைத்து நிற்கும். ஆனுல், அந்தப் பணிக்குக் கேடு வந்தவுடனே அந்நாடு நாசமடைகின்றது.

இந்தியாவின் அந்த உயிர்ச்சத்தி இன்னும் பாதிக்கப்பட வில்லை. இந்தியர்கள் அதை விடவில்லை. அவர்களுடைய மூட

நம்பிக்கைகளுக்கிடையேயும் அது இன்னும் பலமாகவே இருக்கிறது. பயங்கரமான மூட நம்பிக்கைகள் அங்குள்ளன. சில திடுக்கிடும்படியானவை எனினும் கவலையில்லை. அந்நாட்டின் உயிர்நாடி—அச்சமூகத்தின் பணி—இன்னும் அழியாதுள்ளது.

இந்திய சமூகம் ஒருபோதும் அதிகாரம் செலுத்தும் சமூகமாய் இராது; பிற நாடுகளை வெளவும் சமூகமாய் இராது; அது எப்பொழுதும் ஒரு வல்லரசாய் இராது. அது அவர்களுடைய வேலையன்று. தேசங்கள் பலவும் சேர்ந்திசைக்கும் மாண்புற்ற இன்னிசைத் தொகுதியிலே இந்தியத் தாய்க்குரிய இசையொலி அதுவன்று. பின்னர் அவள் ஒலிக்க விரும்பும் இசை யாது? கடவுள், கடவுளே. அவள் விடாப்பிடியான மரணத்தைப் போல, கடவுளையே பற்றிக் கொண்டிருக்கின்றாள். இன்னும் அங்கு நம்பிக்கை இருக்கின்றது.

ஆகையினாலே, நீங்கள் யாவற்றையும் ஆராய்ந்த பின் அடையும் முடிவாவது, 'இவ்வறுமை, துயரம் முதலிய யாவும் பாதிக்க மாட்டா; மனிதன் இன்னும் உயிரோடுள்ளான்; ஆதலின் அங்கு நம்பிக்கை இருக்கின்றது,' என்பதே.

நல்லது; அந்நாடு முழுவதிலும் சமய முயற்சிகள் நடந்து கொண்டே வருவதை நோக்குங்கள். இந்தியாவில் பல புதிய சமயப் பிரிவுகள் தோன்றாத ஆண்டு ஒன்றேனும் எனக்கு நினைவில் இல்லை. நீரோட்டத்தின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க நீர்ச்சுழல்களும் சுழிகளும் அதிகரிக்கின்றன. மதப் பிரிவுகள் அழிவுக்கு அறிகுறிகளல்ல; அவை வாழ்வுக்கு அறிகுறிகளாகும். நம்மில் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் ஒவ்வொரு மதப்பிரிவைச் சார்ந்தவனாகும் காலம் வரையிலும் மதப்பிரிவுகள் பெருகட்டும். அதைப் பற்றி நாம் சண்டையிட வேண்டுவதில்லை.

இப்பொழுது, உங்களுடைய தேசத்தை எடுத்துக்கொள்ளுங்கள். (நான் ஏதாவது குறை கூறுவதாக நினைக்க வேண்டா). இங்குச் சமூகச் சட்டங்கள், அரசியல் ஏற்பாடுகள் முதலிய யாவும் மனிதனது வாழ்க்கை யாத்திரையைச் சௌகரியமாகவே அமைக்கப் பயன்படுகின்றன. அவன் இவ்வுலகில் இருக்கும் வரை மிகவும் இன்பமாக வாழலாம். உங்களுடைய வீதிகளைப் பாருங்கள். அவை எவ்வளவு சுத்தமாய் இருக்கின்றன! உங்களுடைய அழகான நகரங்களைப் பற்றி என் சொல்வது! ஒரு மனிதன் பணம் சம்பாதிக்க இங்கே எத்தனை வழிகள் இருக்கின்றன! உலக வாழ்விலே

இன்பங்களை அனுபவிக்க எத்தனை துறைகள் உள்ளன! ஆனால், இந்நாட்டிலே ஒரு மனிதன், "இதோ பாருங்கள்! நான் இம் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு தியானம் செய்யப்போகிறேன்; வேலை செய்ய எனக்கு விருப்பமில்லை," என்று சொல்லுவானாகில், அவன் சிறைக்குச் செல்லவேண்டியிருக்கும். பார்த்தீர்களா? அவனுக்கு ஒரு சந்தர்ப்பமும் வாய்க்காது என்பது நிச்சயம். ஒரு மனிதன் இச் சமூகத்துடன் ஒத்து வாழ்ந்தால்தான் இதில் அவன் வாழ முடியும். இந்த வாழ்க்கையில் நலங்களை அனுபவிக்க வெறி கொள்ளும் போட்டியில் அவன் கலந்துகொள்ள வேண்டும்; இல்லையேல் அவன் இறந்துவிடுகிறான்.

இப்பொழுது, நாம் மறுபடியும் இந்தியாவுக்குத் திரும்புவோம். அங்கே ஒரு மனிதன், "நான் அம்மலை உச்சியின் மீது போய் உட்கார்ந்து கொண்டு இனி என் வாழ்நாள் முழுவதும் மூக்கின் நுனியில் என் நோக்கைச் செலுத்தித் தியானத்தில் அமரப் போகின்றேன்," என்று சொல்வானானால், "போங்கள், உங்களுக்கு வெற்றியுண்டாவதாக!" என்று ஒவ்வொருவனும் ஆசி கூறுவான். அவன் ஒரு சொற் கூடப்பேச வேண்டுவதில்லை. யாராவது ஒருவர் ஒரு சிறு துண்டு துணி கொண்டு வந்து கொடுப்பார். அவனுக்கு எல்லாம் போதுமானதாகிவிடுகின்றது. ஆனால், ஒரு மனிதன், "பாருங்கள், இந்த வாழ்க்கையின் இன்பத்தை நான் சிறிது அனுபவிக்கப் போகின்றேன்," என்று சொல்லுவானாகில் அவனுக்கு ஒவ்வொரு வீட்டுக் கதவும் மூடப்பட்டுவிடும்; உதவுவார் எவருமிரார்.

இவ்விரு நாடுகளுடைய கருத்துகளும் அநீதியானவை என்று நான் சொல்லுகிறேன். ஏன்? இந்நாட்டில் ஒரு மனிதன் விரும்பினால் உட்கார்ந்துகொண்டு மூக்கின் நுனியிலே பார்வையைச் செலுத்தித் தியானம் செய்யக்கூடாது என்பதற்குக் காரணம் ஒன்றும் தோன்றவில்லை. பெரும்பான்மையான மக்கள் இங்குச் செய்வதையே ஏன் ஒவ்வொருவரும் செய்யவேண்டும் என்பது எனக்குத் தெரியவில்லை.

அல்லது, இந்தியாவில் ஒரு மனிதன் பணம் சம்பாதித்து இவ்வாழ்க்கையின் இன்பங்களை ஏன் அனுபவிக்கக் கூடாது? ஆனால், அங்கே எப்படி இலட்சக்கணக்கான மக்கள் கொடுமையால் இதற்கு நேர் மாறான எண்ணத்தை ஏற்றுக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்பதைப் பாருங்கள். இது முனிவர்களுடைய கொடுமை; பெரியோர்களுடைய கொடுமை; ஞானிகளின்

கொடுமை; அறிவாளிகளின் கொடுமை; அறிஞர்களின் கொடுமை மூடனது கொடிய ஆட்சியைக் காட்டிலும் அறிஞன் செய்யும் கொடிய ஆட்சி மிகமிகச் சத்தி வாய்ந்தது என்பதை அறிந்து கொள்ளுங்கள். அறிஞர்களும் புத்திசாலிகளும் தங்கள் கருத்து களைப் பிறர்மீது சுமத்தி ஆள நினைத்தால், மூடர்களால் தகர்த் தெறிய ஒண்ணுதவாறு கட்டுப்பாடுகளையும் இடையுறுகளையும் ஏற் படுத்த ஆயிரம் வழிகளை அறிவார்கள்.

இது நிறுத்தப்பட வேண்டுமென்று நான் சொல்லுகின்றேன். ஒரு மெய்ஞ்ஞானச் சிங்கத்தை உண்டாக்குவதற்காக இலட்சக் கணக்கான மக்களைப் பலியிடுவதில் யாதொரு பயனுமில்லை. ஒரு மெய்ஞ்ஞானச் சிங்கத்தை உண்டாக்கும்போதே ஏனைய பொதுமக் களும் இன்பமாக வாழுமாறு ஒரு சமூகத்தை அமைக்க முடியுமா யின், அது நன்ருகும். ஆனுல், அந்த நன்மைக்காக இலட்சக் கணக்கான மக்கள் மிதிபட வேண்டுமாயின், அது முறையன்று. அதைவிட இவ்வுலகம் உய்யும்பொருட்டுப் பெரியார் ஒருவர் வருந்து வதும் மேன்மையாகும்.

ஒவ்வொரு நாட்டு மக்களிடமும் அவரவர்கள் போக்குகளின் படியே வேலை செய்யவேண்டும். ஒவ்வொரு மனிதனிடமும் அவன வன் மொழியிலேதான் பேசியாக வேண்டும். இங்கிலந்திலோ, அமெரிக்காவிலோ, சமய உண்மைகளைப் போதிக்க வேண்டுமா யின், அரசியல் முறையின் மூலமாகத்தான் அதைச் செய்யவேண் டும். சங்கங்களையும் கழகங்களையும் நிலைநாட்டி, வாக்களித்தல், தேர்தல், ஒரு தலைவரை ஏற்படுத்தல் முதலியவற்றையும் கைக் கொள்ள வேண்டும். ஏனெனில், இதுவே மேலை நாட்டார்க்குத் தெரிந்த மொழி; அவர்களது போக்கு. இதற்கு நேர்மாருக, இந்தி யாவிலோ, அரசியல் விஷயங்களைப் போதிக்க வேண்டுமாயி னும் சமய சம்பந்தமான மொழியிலேயே பேச வேண்டும். அவர் களிடம் இம்மாதிரி சொல்லவேண்டும்: "தனது வீட்டினைக் காலை வேளைகளில் கழுவித் தூய்மைப்படுத்துபவன் இன்ன அளவு புண் ணியத்தைப் பெறுவான்; அவன் சுவர்க்கப் பதவி எய்துவான்; அன்றேல், இறைவனையே அடைவான்," என்று இவ்வண்ணம் இயம்பாவிட்டால், உங்கள் மொழிக்கு அவர்கள் செவி சாய்க்க மாட்டார்கள். எல்லாம் சொல்லும் முறையினைப் பொறுத்திருக் கின்றன. காரியம் எங்கும் ஒன்றுதான். ஆனுல், ஒவ்வோர் இனத் தாரிடமும் அவர்களது மனங்களில் விஷயங்களைப் படியச் செய்ய

அவரவர் மொழியிலேயே பேச வேண்டியிருக்கிறது. இது முற்றிலும் நியாயமான முறையே. இது குறித்து நான் கலவரப்பட வேண்டுவதில்லை.

நான் சேர்ந்திருக்கும் கூட்டத்தில் எங்களைச் சன்னியாசிகள் என்று வழங்குகின்றனர். இச் சொல்லிற்குத் 'துறந்தவன்' என்பது பொருள். இது மிகமிகப் பழையதொரு கூட்டம். ஏசு கிறித்துவுக்கு 560 ஆண்டுகள் முன்னால் இருந்த புத்தரும் இக்கூட்டத்தினைச் சேர்ந்தவரே. அவர் தம் கூட்டத்தைச் சீர்திருத்தியவருள் ஒருவரே யாவர். அவ்வளவுதான். இவ்வளவு பழமையானது இது! உலகத்திலேயே மிகப் பழமையான நூலாகிய வேதத்திலும் இதைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. பண்டைய இந்தியாவிலே ஒவ்வோர் ஆணும் பெண்ணும் தத்தம் வாழ்வின் இறுதிக் காலத்தில் சமூக சம்பந்தங்களினின்று முற்றிலும் விடுபட்டுக் கடவுளையும், தனது ஆன்ம விடுதலையையும் தவிர வேறொன்றும் நினையாதவராய் வாழ வேண்டுமென்ற ஒரு நியதி உண்டு. இது 'மரணம்' என்னும் அந்தப்பெரிய நிகழ்ச்சிக்குத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்கேயாம். அதனாலேதான் பண்டைக் காலத்தில் முதியோர்கள் சன்னியாசிகள் ஆவது வழக்கம். பிற்காலத்தில் இளைஞரும் உலக சம்பந்தத்தினைத் துறந்துவிடத் தொடங்கினர். இளைஞர்கள் சுறுசுறுப்புள்ளவர்கள். அவர்கள் ஒரு மரத்தடியில் அமர்ந்து இடையறாது தங்களது மரணத்தைக் குறித்துச் சிந்தித்திருக்க இயலவில்லை. ஆகையால், அவர்கள் பல இடங்களுக்குச் சென்று சமயப் பிரசாரம் செய்தும், பல்வேறு மதப் பிரிவினைகளை ஏற்படுத்தியும், இன்னும் பல பணிகள் புரிந்தும் வந்தார்கள். இவ்வண்ணமே புத்தரும் இளைஞராயிருந்ததால், தமது பெரிய சீர்திருத்த நெறியை நிறுவினார். அவர் முதியோராயிருந்திருப்பின், அவரும் தமது மூக்கின் நுனியிலேயே தமது பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்து விட்டு மௌனமாய் உயிர் துறந்திருப்பார்.

இந்தக் கூட்டத்தார் ஒரு வைதிக சபையினர் அல்லர்; இக் கூட்டத்தில் சேர்பவர்களும் புரோகிதர்கள் அல்லர்; புரோகிதர்களுக்கும் சன்னியாசிகளுக்கும் மிகப் பெரிய மாறுபாடு உண்டு. இந்தியாவிலே சமூக வாழ்க்கை சம்பந்தமான மற்றெல்லாத் தொழில்களையும்போல, புரோகிதமும் தலைமுறை தலைமுறையாக வரும் பிழைப்புக்கு ஒரு வழியாகும். தச்சன் மகன் தச்சனாகவும், கருமான் மகன் கருமானாகவும் அமைவதுபோன்று, புரோகிதன்

மகனும் புரோகிதன் ஆவான். புரோகிதன் எப்போதும் மணம் புரிந்துகொண்டவனுகவே இருக்கவேண்டும். மனிதன் ஒருவனுக்கு மனைவி இல்லாவிட்டால், அவன் குறை மனிதன் என இந்துக்கள் கருதுகிருர்கள். மணம் ஆகாத எவனுக்கும் வைதிக கருமங்கள் புரிவதற்கு உரிமை இல்லை.

சன்னியாசிகள் சொத்து எதுவும் வைத்துக்கொள்வதில்லை; அவர்கள் மணம் புரிந்து கொள்வதும் இல்லை. இவை தவிர, வேறு கட்டுப்பாடான அமைப்பு எதுவும் அவர்களுக்கு இல்லை. குரு சீடர் பிணைப்பு ஒன்றுதான் அவர்களுக்கு உள்ள பற்று. இது இந்தியா வின் தனிச் சிறப்பான அமிசம். குரு என்ருல், 'யாரோ ஒருவர் எனக்குப் போதிக்க வருகிருர்; நான் அவருக்குக் குறித்ததொரு தொகை தருகிறேன்; அத்துடன் அந்தச் சம்பந்தம் தீர்ந்து போயிற்று,' என்பது அன்று. இந்தியாவில் இது உண்மையிலேயே புத்திர சுவீகாரம் போன்றது. குரு என் சொந்தத் தந்தையாரைவிட மேம்பட்டவர். நான் அவருக்குப் பிள்ளையே; எல்லா முறையிலும் புதல்வனே ஆய்விடுகின்றேன். என் தந்தையாரைக் காட்டிலும் அவருக்கே நான் முதலில் மரியாதையும் வணக்கமும் செலுத்தக் கடமைப்பட்டவன்; ஏனெனில் தந்தையார் இந்த ஊனுடலைத்தான் பிறப்பித்தார்; ஆனல், அவரோ, எனக்கு மோட்ச உலகத்திற்கு வழி காட்டியருளியவர் ஆவர். அதனல், அவர் தந்தையாரினும் மிக்கார். மேலும், எங்களது வாழ்நாள் முழுவதும் இம்மாதிரியான அன்பையும் மரியாதையையும் எங்கள் குருமார்களுக்குச் செலுத்து கின்ருேம். இக்கட்டுப்பாடு ஒன்றுதான் எங்களுக்கு உள்ளது. நானும் சிஷ்யர்களை ஏற்றுக்கொள்கிறேன். சில சமயங்களில் குரு இளைஞராகவும் சீடர் முதியவராகவும் அமைவர். அதைப் பொருட் படுத்த வேண்டா. அப்பொழுதும் சிஷ்யர் குருவின் ஞானப் புதல் வரேயாகின்ருர்; அவர் என்னைத் "தந்தையீர்" என்று அழைப்பார்; நான் அவரைப் புதல்வனென்ருே, புதல்வியென்ருேதான் கூப் பிட்டாக வேண்டும்.

நான் முதியார் ஒருவரை எனக்குப் போதிப்பதற்காகப் பெற நேர்ந்தது. அவர் மிகவும் புது மாதிரியானவர். நூலறிவு அவரிடம் மிகுதியாய் இருக்கவில்லை. அவர் நூல்களைப் படித்ததே அரிது. ஆனல், அவர் சிறுவராய் இருந்தபொழுதே மெய்ப்பொருளை நேரில் காணும் தீவிர எண்ணம் அவரைப் பற்றிக்கொண்டது. முதலில் அவர் தமது சொந்த மத உண்மைகளை ஆராய்ந்து பார்த்தார்;

அதன்பிறகு பிற மதங்களில் உள்ள உண்மைகளையும் அறிந்து அந் நிலைகளையும் அடையவேண்டும் என்று நினைத்தார்; இந்த நோக் கத்துடன் மற்றெல்லா மதப் பிரிவினைகளிலும் ஒவ்வொன்ருகச் சேர்ந்தார்; அந்தந்தச் சமயத்தில் அவ்வவ் வகுப்பினர் கூறும் மொழிகளை ஒன்றும் விடாமல் கடைப்பிடித்தார்; முறையாக ஒவ் வொரு வகுப்பையும் சார்ந்த பக்தர்களுடனும் கூடி வாழ்ந்து, அந் தந்தப் பிரிவினரது தனியான குறிக்கோள் தம்பால் ஊடுருவிப் புகுந்து நிற்கப்பெற்ருர்; சில வருடங்களுக்குப் பிறகு வேருெரு வகுப்பினருடன் சேர்ந்துகொள்வார். இவ்வாறு எல்லாவற்றையும் பரிபூரணமாகக் கண்கூடாகக் கண்டறிந்த பிறகு, "இவை யாவும் மனிதன் மேன்மையடையவே ஏற்பட்டன," என்னும் முடிவுக்கு வந்தார்; எவ்வகுப்பினரைக் குறித்தும் ஒரு குறையும் அவர் கூற வில்லை; ஒரே குறிக்கோளை அடைதற்குரிய பல பாதைகளே அவை எனக் கருதினுர். மேலும், அவர், "இத்தனை பாதைகள் இருப்பது எவ்வளவு பெருமையானது! ஏனெனில், ஒரே ஒரு பாதை இருந் தால், அது ஒரு வேளை ஒரே ஒரு மனிதனுக்குத்தான் தகுதியான தாய் இருக்கும். பாதைகள் பலவாயிருப்பின், ஒவ்வொருவரும் உண்மை நிலையினை அடைவதற்கான சந்தர்ப்பங்களும் அதிகரிக் கின்றன. எனக்கு ஒரு மொழியில் கல்வி கற்க முடியவில்லையென் ருல், நான் இன்னெரு மொழியில், அன்றேல் வேறு ஒன்றில், என்று இம்மாதிரி முயற்சி செய்து பார்க்கலாமே!" என்று கூறினுர். இவ்வாறு அவர் ஒவ்வொரு மாதமும் உண்மையேயென அறிந்து ஏற்றுக்கொண்டார்.

நான் இப்பொழுது பரப்பிக்கொண்டு வரும் சமயக் கருத்துகள் யாவும் அவர் கருத்துகளை எதிரொலிக்கச் செய்யும் முயற்சியே யாகும். நான் சொல்வனவற்றுள் உள்ள தீய, கொடிய, பிழையுள்ள எண்ணங்கள் தவிர, மற்றவை எல்லாம் உண்மையில் என்னுடை யன அல்ல. எப்பொழுதேனும் உண்மையான நன்மையான ஒரு சொல் என்னிடமிருந்து கிளம்பியிருப்பின், அது அவரது குரலினை எதிரொலிக்கச் செய்யும் முயற்சியேயாம். பேரறிஞர் மாக்ஸ்முல்லர் எழுதியுள்ள அவரது வாழ்க்கை வரலாற்றினை படியுங்கள்.

நல்லது! அவரது திருவடிக்கீழ் அமர்ந்த போதே நான் இக் கருத்துகளைப் பெற்றேன். நான் பதினுருண்டுச் சிறுவனுய் இருந்த பொழுது வேறு இளைஞர்களுடன் அவரிடம் சென்றேன்.

நாங்கள் பன்னிருவரோ கூடுதலாகவோ இருந்தோம். எங்களுள் சிலர் என்னைவிட இளைஞராயும் சிலர் என்னினும் மூத்தவராயும் இருந்தனர். அவரது இந்தச் செய்தியை மக்களிடையே பரப்ப வேண்டுமென்று நாங்கள் ஒன்றுசேர்ந்து தீர்மானித்தோம். பரப்புவதோடு செயல் முறையிலும் இருக்க வேண்டும். அது எப்படி என்றால், நாங்கள் கண்கூடாக வாழ்ந்து காட்டுவதனால், எம்மிடம் இந்துக்களது ஆன்மிக அனுபவமும், பௌத்தர்களின் கருணையும், கிறித்தவர்களது ஆக்கவேலைகளும், மகமதியர்களது சகோதரத்துவமும் ஒருங்கே திகழ வேண்டும். "இப்பொழுதே, இங்கேயே ஒரு பொதுவான மதம் ஏற்படுத்துவோம்; காத்திருக்க மாட்டோம்," என்று உறுதி கூறினோம்.

எங்கள் குருநாதர் என்றும் காசைக் கையாலும் தொடாத ஒரு முதியவர். அவர் பகவானது பிரசாதம் சிறிதும், ஒரு சில முழந் துணியுந்தான் ஏற்றுக்கொள்வார். மேற்கொண்டு ஒன்றும் இல்லை. வேறு எந்தப் பரிசையும் ஏற்றுக்கொள்ளும்படி அவரைச் செய்ய எக்காலமும் முடியாது. இம்மாதிரி வியக்கத்தக்க எண்ணங்களில் அவர் கண்டிப்பாக இருந்தார்; ஏனெனில், அதனால் அவர் சுதந்தரத்துடன் வாழ்ந்தார். இந்தியாவிலே துறவி ஒருவன் இன்று அரசனோடு நண்பனாகி, அவனுடன் உண்டு உறைவான்; நாளைக்குப் பிச்சைக்காரனோடு பிச்சைக்காரனாய் ஒரு மரத்தடியில் படுத் துறங்குவான். அவன் எல்லாருடனும் கூடிப் பழகி, எப்பொழுதும் பிரயாணம் செய்துகொண்டே இருக்க வேண்டும். மக்கள் கூறுவது போல, "உருண்டுகொண்டேயுள்ள கல்லில் பாசி படிவதில்லை." சென்ற பதினான்கு ஆண்டுகளாக நான் எந்த ஓர் இடத்திலும் எப்பொழுதும் தொடர்ந்தாற்போல மூன்று மாதங்கள் தங்கியதில்லை; இடைவிடாது சுற்றிக்கொண்டேயிருந்தேன். நாங்கள் எல்லோரும் அப்படியேதான் செய்கிறோம்.

இந்தச் சிறுவர் சிலர் இவ்வெண்ணங்களையும் இவற்றினின்று தோன்றிய அனுபவ முடிவுகளையும் கடைப்பிடித்தனர். சர்வ சம்மதமான மதம், ஏழைகளிடத்துப் பெருங்கருணை முதலியன எல்லாம் வாயினால் பேசும்பொழுது மிக அழகாகவே இருக்கின்றன; ஆனால், இவற்றைச் செயல் முறையில் நடத்திக் காட்டவேண்டும்.

முதியோரான எம் குருநாதர் உயிர் துறந்த துக்ககரமான நாளும் வந்தது. எங்களால் கூடியவரை அவரைப் பராமரித்தோம். எங்களுக்கோ, நண்பர்கள் கிடைக்கவில்லை. இப்பைத்தியக்கார

எண்ணங்களை உடைய ஒரு சில சிறுவர்களுக்கு எவரே செவி சாய்ப்பர்? எவரும் இல்லை. இந்தியாவில் சிறுவர்களை எவரும் மதியார். மக்களிடம் மிகப் பெரிய சீரிய எண்ணங்களைச் சொல்லி அவற்றை வாழ்க்கையிலே செயற்படுத்திக் காட்ட உறுதி கொண்டிருப்பதாகக் கூறிய அப்பன்னிரு சிறுவர்களை நினைத்துப் பாருங்கள்! நேர்ந்தது என்ன? யாவரும் எள்ளி நகைத்தனர். சிரிப்பு மாருக வளர்ந்து துன்புறுத்தலுக்கு வந்து சேர்ந்தது. சிறுவர்களின் பெற்ருேர் எங்களில் ஒவ்வொருவரையும் உதைக்க வேண்டுமெனவும் எண்ணினர். ஆனல், எங்களைப் பிறர் இகழ இகழ, எங்களது உறுதிப்பாடு மேலும் மேலும் வளர்ந்தது.

அப்பொழுது மற்றெல்லாச் சிறுவர்களுக்கும், தனிப்பட்ட முறையில் எனக்கும், ஒரு பெரிய கடினமான சோதனைக்காலம் ஏற்பட்டது. ஆயினும், எனக்கு நேர்ந்த திருவின்மைதான் எவ்வளவு பெரிது! ஒரு பக்கம் என் தாயாரும் சகோதரர்களும் இருந்தார்கள். என் தகப்பனர் அந்தச் சமயத்தில் இறந்ததால் நாங்கள் ஏழைகளாகிவிட்டோம்! அந்தோ! மிகவும் ஏழைகளாய், ஏறக்குறைய முழுப்பட்டினி கிடப்பவர்களாகி விட்டோம். என்னை ஒருவனைத் தான் குடும்பம் நம்பியிருந்தது; நான் ஒருவன்தான் அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யக் கூடியவனுயிருந்தேன். நர்ன் இரு வேறு உலகங்களுக்கு நடுவில் நிற்கவேண்டியவனுய்விட்டேன். ஒரு பக்கத்தில் என் தாயாரும் உடன்பிறந்தோர்களும் பட்டினி கிடந்து இறப்பதைப் பார்த்துக்கொண்டு நிற்க வேண்டும்; மற்ருெரு பக்கத்திலோ, எம் குருவின் எண்ணங்கள் இந்தியாவிற்கும் உலகத்திற்கும் பெருநன்மை பயப்பவை எனக் கருதியதனுல் இவைகளை எங்கும் பரப்புவதோடு, செயலிலும் கொணர வேண்டும். இவ்வாறு நாட்கணக்கில், திங்கட்கணக்கில் இந்தப் போராட்டம் எனது மனத்திலே நடந்து வந்தது. சில சமயங்களில் ஐந்து ஆறு நாட்கள், இரவும் பகலும், இடைவிடாது பிரார்த்தனை செய்துகொண்டேயிருப்பேன். அந்தோ! அந்த நாட்களில் இருந்த மனவேதனை என்னே! நான் நரகத்திலேயே இருந்தேன்! எனது இள இதயம் இயல்பாக உண்டாகும் அன்பினுல் கட்டுப்பட்டு என் குடும்பத்தாரிடைச் சென்றது. எனக்கு மிகவும் நெருங்கிய—மிகவும் பிரியமுள்ள—உற்ருர் துயருறுவதைக் காண என்னுல் பொறுக்க முடியவில்லை! மறு பக்கத்தைப் பார்த்தாலோ, என்னிடம் அனுதாபம் காட்டுவார் யாரும் இல்லை. ஒரு சிறுவனுடைய கற்பனைகளுக்காக

எவரே மனம் இரங்குவார்? அதிலும் பிறருக்குப் பெரிதும் துயர் தரக்கூடிய கற்பனைகளுக்காகவா? எனக்காக மனமிரங்குபவர் எவரும் இல்லை—ஒருவர் தவிர.

அந்த ஒருவரது மன இரக்கத்தினுல் உவகையும் நம்பிக்கையும் பிறந்தன. அவர் ஒரு மாது சிரோமணி. மாபெருந் துறவியான எங்கள் குரு நாதருக்கு அவர் சிறுவராயிருந்தபொழுதே, மிகவும் இளமையிலேயே, மணம் ஆகியிருந்தது. இளைஞரான பிறகு, மத உண்மைகளை அறிய ஆன்ம ஆர்வம் தீவிரமாகக் கொண்டிருந்த பொழுது, அவர் தம் மனைவியாரைக் காண நேர்ந்தது. குழந்தைப் பருவத்திலேயே இருவரும் மணம் புரிந்து கொண்டிருப்பினும், அவர்கள் பெரியவர்கள் ஆகும்வரை ஒருவரையொருவர் அதிகம் பார்த்துக்கொள்ளவில்லை. அப்போது அவர் தம் மனைவியரைக் கண்டு, "இங்கே பார்; நான் உன் கணவன்; உனக்கு இவ்வுடலின்மீது உரிமை உண்டு. ஆனல், நான் உன்னை மணந்திருப்பினும் என்னுல் சாதாரண ஆண்-பெண் வாழ்க்கை நடத்த முடியாது. உனது விருப்பத்திற்குரிய தீர்மானத்திற்கு நான் விட்டு விட்டேன்," என்று கூறினர். அம்மாதரார் அழுதார்; "பகவான் உங்களுக்கு அருளுவாராக! இறைவர் உங்களுக்கு ஆசி அளிப்பாராக! உங்களைக் கீழ்மைக்கு உள்ளாக்கும் மங்கையா நான்? என்னுல் முடியுமானுல், உங்களுக்கு உதவி புரிவேன். உங்களது மனம் போலக் காரியங்களைச் செய்துகொள்ளுங்கள்," என்று பதிலிறுத்தார்.

யான் கூறியது அந்த மாது சிரோமணியைத்தான். கணவனுர் தமது வழியே சென்று, தம் விருப்பத்தின்படியே துறவியாராயினுர். தூரத்திலிருந்துகொண்டே மனைவியார் தம்மால் ஆனவரை உதவி புரிந்து வந்தனர். பின்னர், அம்மனிதர் மாபெரு ஞான வீரராய்த் திகழ்ந்த பொழுது, அம்மாதரார் வந்தார். உண்மையில் அவரே முதல் சிஷ்யையானுர். அவரே தமது எஞ்சிய வாழ்க்கையினைக் குருநாதரது உடல் நலத்தினைக் கவனிப்பதிலேயே செலவிட்டார். அவருக்கோ, தாம் உயிருடனிருக்கின்ருரா, இறந்துவிட்டாரா, வேறேதாவது ஆய்விட்டாரா என்பது ஒன்றும் தெரியாது. சில சமயங்களில் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, மனத்தில் மிகவும் தீவிரமாக எண்ணங்களைக் கொள்ளுவார்; அச்சமயங்களில் எரியும் தணலின்மீது தாம் உட்கார்ந்திருந்தாலும் அதை அறியார். எரியும் தணல் என்ருல் உண்மையிலேயே எரிந்துகொண்டிருக்கும்

தணலே! தமது உடலைப்பற்றிய யாவற்றையும் மறந்து, காலத்தையும் முழுதும் மறந்து, அவ்வாறு இருப்பார். இது நிற்க.

அவரது மனைவியரான அம்மாது சிரோமணி ஒருவரே இச்சிறுவர்களின் கருத்துகளுக்காக அனுதாபம் காட்டியிரங்கியவர். ஆனால், அவராலும் ஒன்றும் செய்ய இயலவில்லை. . எங்களைவிட அவர் ஏழை. அதைப் பொருட்படுத்த வேண்டா என்று நாங்கள் வேலையில் துணிந்து இறங்கிவிட்டோம். இக்கருத்துகள் இந்திய நாட்டை அறிவுக்குப் பொருத்தமான நன்னிலைக்குக் கொணரும் என்றும், இவை பல வெளிநாடுகளுக்கும் அன்னிய இனத்தாருக்கும் பெருநன்மை பயக்கும் என்றும், நான் உயிர் வாழ்ந்திருப்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மையாகவும் உறுதியாகவும் நம்பினேன். இப்பெரு நம்பிக்கையினால் இப்படிப்பட்ட எண்ணங்கள் உலகிலே அழிந்து ஒழிவதினும், ஒரு சிலர் துயருறுதலே மேல் என்ற உணர்வு ஏற்பட்டது. ஒரு தாயாரும் இரு சகோதரரும் இறந்துவிட்டால் என்ன கேடு வந்துவிடும்? இது ஒரு வேள்வி. இது நடந்தேறட்டும். அரிய செயல் எதுவும் தியாகத்தால் அன்றிச்செய்ய இயலாது. இருதயம் பிடுங்கி எடுக்கப்படவேண்டும்; குருதி சொட்டச் சொட்ட இதயம் பலி பீடத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் செயற்கரிய செயல்கள் செய்ய முடிகின்றது. வேறு வழி ஏதேனும் உண்டா? யாரும் கண்டுபிடித்ததில்லை. பெருஞ்செயல் எதையேனும் செய்து முடித்த உங்கள் யாவரையும் கேட்கிறேன். ஆ! அதற்காகப் பட்ட இன்னல்கள் எவ்வளவு! என்ன வேதனை! என்ன துயரம்! ஒவ்வொரு வாழ்க்கையிலும், ஒவ்வொரு வெற்றிகரமான செயலுக்கும், காரணமாக எவ்வளவு பயங்கரமான வேதனையும் துயரமும் அடங்கிக் கிடக்கின்றன! நீங்கள் யாவரும் இதனை அறிவீர்கள் அல்லவா?

இவ்வழியிலேயே, சிறுவர்களாகிய நாங்கள் சென்றோம். எங்களைச் சார்ந்தவர்களிடமிருந்து எங்களுக்குக் கிடைத்தனவெல்லாம் திட்டும் உதையுமே; இவை அன்றி வேறொன்றும் இல்லை. உணவுக்காக வீடு வீடாகச் சென்று பிச்சையெடுக்கத்தான் வேண்டியிருந்தது; எல்லோரும் கழித்துவிட்டனவே எங்களுக்குக் கிடைத்தன. இங்கும் அங்கும் சிறிது உணவும் கிடைத்தது. சிதைந்த, இடிந்த பாழ் வீடு ஒன்று எங்களுக்குக் கிடைத்தது; அதில் சீறும் பாம்புகள் உறைந்தன; அவ்வீடு வாடகைக்கு மிகவும் மலிவாகக் கிடைத்ததால், அதிலேயே நாங்கள் வாழ்ந்து வந்தோம்.

இவ்வாறு சில ஆண்டுகளைக் கழித்தோம்; இடையிடையே இந்தியா முழுவதும் சுற்றிக் கொண்டும், இக்கருத்துகளைச் சிறிது சிறிதாகப் பரப்ப முயன்று கொண்டும் இருந்தோம். நம்பிக்கைக் கதிர் சிறிதும் இன்றி, பத்து ஆண்டுகள் கழிந்தன. மேலும் பத்து ஆண்டுகள் பறந்தன! மனச் சோர்வு ஆயிரந் தடவை உண்டாயது; ஆனாலும், நம்பிக்கை அளிக்கக்கூடிய ஒன்று எப்பொழுதும் எங்களிடம் இருந்தது—அது யாதெனில், ஒருவருக்கொருவர் காட்டும் மாபெரும் நம்பிக்கை—எங்களுக்குள் இருந்த பேரன்பு. என்னைச் சேர்ந்தவர்கள் ஆணும் பெண்ணுமாக நூறு பேர் எனக்கு உளர்; நாளைக்கு நான்பேயாகவே மாறிவிடினும்அவர்கள், "இதோ! இன்னும் உன்னுடனேயே இருக்கின்றோம்! உன்னை என்றும் விடோம்!" என்று கூறுவார்கள். அது ஒரு பெரும்பேறு. இன்பத்திலும், துன்பத்திலும், பஞ்சத்திலும், நோயிலும், சுடுகாட்டிலும், சுவர்க்கத்திலும், நரகத்திலும் எவன் என்னைக் கைவிடாமலிருக்கின்றானோ, அவனே என் நண்பன். அப்படிப்பட்ட நட்புச் சாமானியமானதா? அத்தகைய நட்பினால் ஒருவன் மோட்சத்தையும் அடையலாம். நாம் அவ்வாறு அன்பு பாராட்ட முடியுமானால், அதுவே நமக்கு மோட்சம் அளிக்கும். அத்தகைய நம்பிக்கை நம்மிடம் இருக்குமேயானால், அதுவேதான் மனம் ஒருமுகப்பட்டிருப்பதன் சாரமாகும். அந்த நம்பிக்கையும், அந்த வலிமையும், அந்த அன்பும் இருக்குமாயின், நீங்கள் உலகில் எந்தக் கடவுளையும் வணங்க வேண்டுவதில்லை. அந்தச் சோதனை நாட்களில் எல்லாம் எங்களிடம் அக்குணங்கள் இருந்தன; அவைமிளிர்ந்தன. அதனால் நாங்கள் இமாலயத்திலிருந்து கன்னியாகுமரி வரை, சிந்து நதியிலிருந்து பிரமபுத்திரா நதி வரை செல்ல முடிந்தது.

இந்தச் சிறுவர் கூட்டத்தினர் ஆங்காங்குத் திரியத் தொடங்கினர்; மக்களின் கவனத்தைச் சிறிது சிறிதாக இழுக்க ஆரம்பித்தனர். தொண்ணூறு பங்கு எதிர்ப்புத்தான்; மிகச் சிறிதுதான் உதவியாய் இருந்தது. ஏனெனில், எங்களிடம் ஒரு குற்றம் இருந்தது; நாங்கள் ஏழைமையும், இளைஞர்க்கே உரிய முரட்டுத்தனமும் கூடிய சிறுவர்களாயிருந்தோம். வாழ்க்கையில் தானே உழைத்துத் தனக்கு வேண்டுவன செய்துகொள்ள விரும்புபவன், சிறிது முரட்டுத்தனமாகத்தான் இருப்பான்; இனிமையாகவும், வழவழவென்றும், வணக்கத்துடனும், "என் ஐயா, என் அம்மா," என்று சொல்லிக் கொண்டிருக்க அவனுக்கு நேரம் கிடையாது. இதனை

நீங்கள் வாழ்க்கையில் எப்போதுமே பார்த்திருக்கிறீர்கள். அவன் செதுக்கப்படாத ஒரு வைரம்; அவனிடம் அதிக மெருகும், பளபளப்பும் இல்லை. அவன் குப்பையில் கிடக்கும் ஒரு மாணிக்கம். நாங்கள் அந்த நிலைமையிலேதான் இருந்தோம். "விட்டுக் கொடுப்பதில்லை," என்பது எங்களது கோட்பாடாய் இருந்தது. "அடைய வேண்டிய இலட்சியம் இது; இதனை அடைந்தேயாக வேண்டும். ஓர் அரசனைச் சந்தித்தால், நாம் இறப்பதாயினும், நம் கருத்துகளைச் சிறிது அவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும்; குடியானவனைச் சந்தித்தாலும் அவ்வாறே," எனத் தீர்மானித்தோம். இதனால், இயல்பாகவே எங்களுக்கு எதிர்ப்பு இருந்தது.

ஆனால், வாழ்க்கையின் அனுபவத்தைக் கூறுகிறேன்; கவனியுங்கள்: நீங்கள் உண்மையிலேயே பிறருக்கு நன்மை புரிய விரும்பினீர்களேயானால், இப்புவியிலுள்ள பேர்களெல்லாம் எதிர்த்து நின்றபோதிலும் உங்களை ஒன்றும் அசைக்க முடியாது. உண்மையிலேயே, சிரத்தையும் தன்னல மறுப்பும் கூடியவர்களாயிருப்பீரானல், உங்களுள் உறையும் இறைவனுகிய உங்களது சக்தியின் முன்பு அவ்வெதிர்ப்புத் தவிடுபொடியாகிப் போய்விடும். அச் சிறுவர்களும் இவ்வாறுதான் இருந்தார்கள். இயற்கைத் தாயினின்றும் தோன்றிய புதிய தூய்மையான குழந்தைகளாய் அவர்கள் விளங்கினர்கள். எங்கள் குரு தேவர், "முகரப்படாத மலர்களையும், கைகளால் தீண்டப்படாத கனிகளையுமே நான் இறைவனது பலிபீடத்தில் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்," என்று கூறுவர். அப்பெருந்தகையாருடைய திருவாக்குகளே எங்களுக்கு ஊக்கமளித்துக் காப்பாற்றி வந்தன. கல்கத்தாவின் தெருக்களிலிருந்து அவரால் பொறுக்கப்பட்டவர்கள் என்று சொல்லும்படியான இச் சிறுவர்களது எதிர்கால வாழ்வினை அவர் கண்டறிந்தார். "இந்தப் பையனும், அந்தப்பையனும் என்ன ஆகப்போகிருர்கள் என்பதை நீங்களே பார்ப்பீர்கள்!" என்று அவர் சொல்லும்பொழுது, மக்கள் அவரைப் பார்த்துச் சிரிப்பார்கள். அவரது நம்பிக்கை தகர்க்க முடியாதது. "அன்னையார் எனக்குக்காண்பித்தார். நான் வலிமையற்றவனுய் இருக்கலாம்; ஆனல் அன்னையார் இவ்வாறுதான் நடக்கும் எனக் கூறும்பொழுது அது அப்படித்தான் இருந்தாக வேண்டும். அன்னையார் என்றும் பிழைபடார்," என்பார்.

இப்படியே ஒருவித நம்பிக்கையும் இன்றிக்காரியங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கப் பத்து ஆண்டுகள் இறந்தன. ஆனல், எனதுஉடல்

நலம் அந்த நாட்களில் மிகவும் குறைந்து வந்தது. சிலசமயங்களில் இரவு ஒன்பது மணிக்கு ஒருவேளை சாப்பாடு; மற்ெறாரு முறை காலை எட்டு மணிக்கு; மறுபடியும் இரண்டு நாட்கள் கழித்து ஒரு வேளை; அடுத்தது மூன்று நாட்களுக்கு அப்புறம்—எப்பொழுதும் மிகவும் எளிய சீரற்ற உணவே கிடைக்கும். இப்படி வாழ்ந்தால் நாளடைவில் உடல் நலம் மிகவும் பாதிக்கப்படத்தானே செய்யும்? தன்னிடமுள்ள நல்ல பொருள்களை எவன் பிச்சைக்காரனுக்கு இடப்போகின்றான்? மேலும், இந்தியாவில் மக்கள் நிறைய வைத்துக்கொண்டும் இருக்கவில்லை. ஒருவேளை உணவு கிட்டுவதற்காகப் பெரும்பாலும் நடந்தும், பனி மலைகளைக் கடந்தும், சில சமயங்களில் பத்து மைல் தூரம் இன்னலுற்று மலைகளைத் தாண்டியும் ஆக வேண்டியிருக்கும். இந்தியாவில் மக்கள் நன்றாகப் பக்குவம் செய்யப்படாத உணவையே உட்கொள்ளுகிறார்கள்; சில சமயங்களில் அதனையும் அவர்கள் இருபது முப்பது நாட்களுக்குக் கல்லைவிடக் கடினமாய்ப் போய்விடும் வரை, சேமித்து வைத்துவிடுவார்கள்; பிறகும் அதிலிருந்து ஒரு துண்டைத்தான் தருவார்கள். நான், ஒரு வேளைக்கு வேண்டுமளவு கிடைக்கும் வரை, வீடு வீடாக இதனைத் திரட்டுவதற்குப் போக வேண்டும். இப்படிச் செய்தும், உணவு மிகவும் அரிதாய் இருந்ததால், அதை உண்ணும் பொழுது எனது வாயில் குருதி பெருகும். உண்மையாகவே சொல்லுகிறேன்; உங்கள் பற்களை அந்த உணவு உடைத்துவிடக் கூடியதாகும். நான் அதை ஒரு சட்டியில் இட்டு, ஆற்றிலிருந்து நீரை அள்ளி அதில் கொட்டுவேன். இம்மாதிரி நான் திங்கட் கணக்கில் நாட்களைக் கழித்து வந்தேன். அதனால் எனது உடல் நலம் பாதிக்கப்பட்டது இயற்கையே.

பிறகு நான், "இந்தியாவில் முயன்று பார்த்தாய்விட்டது; வேறு ஒரு நாட்டிலே சென்று முயற்சி செய்ய வேண்டிய நேரம் எனக்கு வந்துவிட்டது!" என்று நினைத்தேன். அந்தத் தருணத்திலேதான் உங்களது சர்வ சமய மன்றம் கூடுவதாய் இருந்தது; இந்தியாவிலிருந்து யாரேனும் ஒருவரை அதற்கு அனுப்ப வேண்டியிருந்தது. நான் நாடோடியாய்த் திரிந்துகொண்டிருந்தேன். ஆயினும், " நீங்கள் என்னை அனுப்பினால் நான் போகிறேன். என்னிடம் இழக்கக் கூடியது அதிகம் இல்லை; இருப்பதை இழப்பினும் நான் அதை மதியேன்," என்று கூறினேன். பணம் கிடைப்பது மிகவும் அரிதாய் இருந்தது; ஆயினும், நீண்டபோராட்

டத்திற்குப் பிறகு எனது பயணச் செலவுக்கு வேண்டிய அளவு மட்டும் அவர்கள் திரட்டினுர்கள். அதனுல், நான் இங்கு வந்தேன். இரண்டொரு திங்களுக்கு முன்பே வந்தேன். ஆகையால், இங்கு ஒருவரையும் அறியாதவனுய், தெருக்களில் சுற்றிக்கொண்டிருக்க வேண்டியவனுய் விட்டேன்.

முடிவில், சர்வ சமய மன்றமும் கூடியது; நானும் எனக்குக் கடைசி வரை உதவி புரிந்த அன்பார்ந்த நண்பர்களைக் கண்டு கொண்டேன். நான் சிறிது பணி செய்தேன்; நிதி திரட்டினேன்; இரண்டு பத்திரிகைகள் நிறுவினேன்; இன்னும் ஆவன செய்தேன்; பிறகு இங்கிலாந்திற்குச் சென்றேன்; அங்கும் பணிகள் செய்தேன்; அதே சமயத்தில் அமெரிக்காவிலும் இந்தியாவிற்காகத் தொண்டுகளை நடத்திக்கொண்டே வந்தேன்.

இந்தியாவிற்காக ஆழ்ந்து ஆலோசித்து உருவாக்கப்பட்டுள்ள எனது செயல் முறைத் திட்டம் இதுதான்; சந்நியாசிகளாக நாங்கள் அங்கு வாழும் வாழ்க்கை முறையையும், எப்படி நாங்கள் வீடு வீடாய்ப் போகிறோம் என்பதையும், அதனுல் யாவரும் ஒரோ வழி ஒரு ரொட்டித் துண்டுக்கு மேற்பட்டு வேறொரு செலவும் இல்லாதவராய் எவ்வாறு மத போதனைகளைப் பெறுகிறுர்கள் என்பதையும் உங்களுக்கு உரைத்தேன். இந்தியாவில் கீழ்மையிலும் கீழ்மையானவன் கூட, சமய வாழ்வின் மிக உயர்ந்த கருத்துகளைக் கடைப்பிடிப்பதை நீங்கள் காண்பது இந்த முறையிலேதான். இவையெல்லாம் நிகழ்வது இந்தச் சந்நியாசிகளின் வேலையினுலேதான். ஆனுல், அங்கு ஒருவனை, "ஆங்கிலேயர் யார்?" என்று கேட்டுப் பாருங்கள்; அவனுக்குத் தெரியாது. "அந்தப் புத்தகங்களிலேயே சொல்லப்பட்டுள்ள, அந்த அரக்கர்களின் சந்ததியார்கள்தானே?" என்று அவன் சொன்னுலும் சொல்லலாம்.

"உன்னை யார் ஆள்வது?"

"எனக்குத் தெரியாது."

"அரசாங்கத்தார் யார்?"

அதுவும் அவனுக்குத் தெரியாது; ஆனுல், அவனுக்குத் தத்துவ ஞானம் தெரியும். அவனுக்கு வேண்டுவது இப்பூவுலகில் வாழ்வதற்குரிய அறிவைப் புகட்டும் செயல் முறைக் கல்வியேயாம். கோடிக் கணக்கான அம்மக்கள் இவ்வுலகை நீத்த பிறகு வரும் வாழ்வுக்குத் தகுதியுள்ளவர்களாய் இருக்கின்றுர்கள் — இது அவர்களுக்குப்

போதாதா? திண்ணமாகப் போதாது. சிறிது உயர்ந்த வகையான உணவும் உடலை மறைக்கச் சிறிது நல்ல கந்தையும் அவர்களுக்குக் கட்டாயம் வேண்டும். 'இவ்வளவு தாழ்ந்த நிலையிலுள்ள கோடிக் கணக்கான மக்களுக்கு எவ்வாறு அந்த நல்ல உணவும், நல்ல கந்தையும் கிட்டும்படி செய்வது?' என்பதுதான் பெரிய கேள்வி.

அவர்கள் நற்கதியடைவார்கள் என்று எதிர்பார்க்கப் பல காரணங்கள் உள என்பதை நான் முதன்முதலில் சொல்ல வேண்டும்; ஏனெனில், இவ்வுலக மக்களுள் அவர்கள் மிகவும் மெல்லிய சுபாவம் படைத்தவர்கள். அதனுல், அவர்கள் பயங் கொள்ளிகள் என்பது பொருளன்று. அவர்கள் போர் புரிய வேண்டும் என்ருல், அரக்கர்களைப் போலப் போர் புரிவார்கள். ஆங்கிலேயர்களிடம் உள்ள சிறந்த போர் வீரர்கள் இந்தியாவின் குடியானவர்களிலிருந்துதான் பொறுக்கி எடுக்கப்படுகின்ருர்கள். மரணம் அவர்களுக்கு ஒரு பொருளேயன்று. "நான் இதற்கு முன்பு, இருபது தடவைகள் இறந்தாய்விட்டது; இதற்குப் பின்னும் பல தடவைகள் இறந்தாக வேண்டும். அதனுல் என்ன?" என்பது தான் அவர்களது மனப்போக்கு. அவர்கள் என்றும் புறங்காட்ட மாட்டார்கள். உணர்ச்சியின் துடிப்பு அவர்களிடம் அதிகம் இல்லை. ஆயினும், அவர்கள் மிகவும் சிறந்த வீரர்களாய்த் திகழ் கின்ருர்கள்.

ஆயினும், அவர்களது இயற்கையான செயல் நிலத்தை உழுவதுதான். நீங்கள் அவர்களுடைய சமய போதனைகளைப் பின் பற்றும் விருப்பத்தை மட்டும் அவர்களுக்குக் கொடுத்து விடுவீர் களாயின், அவர்களைக் கொள்ளையடித்தாலும், கொன்ருலும், வரி விதித்தாலும், வேறு எது செய்தாலும், அமைதியாகவும் மரியாதை யுடனும் இருப்பார்கள். அவர்களும் பிறரது மத அனுஷ்டானத் திலே ஒருகாலும் தலையிட்டுத் தொந்தரவு செய்வதில்லை. "எங்கள் தெய்வங்களைத் தொழுதற்கு எங்கட்குச் சுதந்தரம் அளியுங்கள்; மற்ற யாவற்றையும் எடுத்துக்கொள்ளுங்கள்."—இதுவே அவர்களது மனப்பான்மை. ஆங்கிலேயர் இதனைப் பாதிக்கும்பொழுதுதான், தொந்தரவு உண்டாகிறது. 1857-ம் ஆண்டின் கலகத்திற்கும் இதுவே உண்மையான காரணம்—அவர்கள் மத விஷயத்தில் அடக்குமுறையைப் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டார்கள், பெரிய பெரிய மகமதிய அரசாங்கங்களெல்லாம் தவிடு பொடியாகப் போனதும், அவை இந்தியரின் மதத்தினைப் பாதித்ததாலேதான்.

இந்த ஒரு விஷயத்தை விட்டுவிட்டால், அவர்கள் மிகவும் சமாதானமும், சாந்தமும், மெல்லிய சுபாவமும் படைத்தவர்களே; எல்லாவற்றிலும் மேலாகக் கெட்ட பழக்கம் எதுவும் இல்லாதவர் களும் ஆவார்கள். அவர்களிடம் மயக்கம் தரக் காரணமான பானம் எதுவும இல்லாதிருப்பது மற்றெல்லாத் தேசத்தின் பாமர மக்களையும்விட, அவர்களை மிக மிக உயர்ந்தவர்களாக ஒளிரச் செய்கிறது. இந்தியாவிலுள்ள ஏழை மக்களின் சீரான வாழ்க்கை முறையினை இங்குள்ள குடிசைகளில் வாழ்வோரது வாழ்க்கை யோடு ஒப்பிடவே முடியாது. இங்கே குடிசை வாழ்வு என்ருல், ஏழைமையான வாழ்வு என்பது பொருள்; ஆனல், ஏழைமை என்ருல் பாவமும் மரியாதையின்மையும் தீய ஒழுக்கமும் என்று இந்தியாவில் பொருள்படுவதில்லை. மற்றத் தேசங்களில் கண்ணிய மற்றவர்களும் சோம்பேறிகளுமே ஏழைகளாய் இருக்குமாறு சந்தர்ப்பங்கள் அமைந்திருக்கின்றன. ஒருவன் அறிவற்றவனுக, அல்லது வஞ்சகனுக—அதாவது நகர வாழ்க்கையும் அங்குள்ள ஆடம்பரங்களுமே வேண்டும் என்னும் கும்பலைச் சேர்ந்தவனுக— இருந்தாலன்றி, இங்கு யாரும் ஏழையாக இருக்கக் காரணம் இல்லை. இவர்கள் சிற்றூர்க்குப் போகமாட்டார்கள். "பட்டணங் களில் உள்ள இன்பங்களுடன் இங்கேதான் இருப்போம். நீங்கள் எங்களுக்கு உணவளித்தேதான் ஆகவேண்டும்," என்று இவர்கள் கூறுகின்ருர்கள். ஆனல், இந்தியாவில் இவ்வண்ணம் இல்லை; அங்கு ஏழைகள் காலைமுதல் கதிரவன் மறையும்வரை பாடுபட்டு உழைப்பினும், வேறு யாரோ அவர்களிடமிருந்து உணவைப் பறித் துக்கொள்வதனுல் அவர்கள் குழந்தைகள் பட்டினியாய்க் கிடக் கின்ருர்கள். இந்தியாவில் கோடிக்கணக்கான டன்கள் கோதுமை விளைந்தாலும், உழவனது வாய்க்கு ஒரு சிறிது கோதுமையும் எட்டுவதில்லை. உங்கள் ஊரில் வாழும் சாதாரணப் பறவைகளுக் கும் நீங்கள் போடத் தகுதியில்லாத மிகவும் மலிவான தானியத் தைத் தின்றுதான் அவன் உயிர் வாழ்கின்ருன்.

ஆனல், அவர்கள் அவ்வளவு துயரமடைய ஏதேனும் காரணம் உண்டோ எனில், இல்லை; அம்மக்கள் அவ்வளவு தூயவர்கள்; நல்லவர்கள்! இந்தியாவிலே தாழ்வடைந்துள்ள கோடிக்கணக்கான மக்களையும், இழிவடைந்துள்ள மாதர்களையும் பற்றி எவ்வளவோ பேச்சு நடப்பது எமது காதில் விழுகிறது—ஆனல், எமக்கு உதவி செய்ய முன் வருவார் எவருமில்லை. அவர்கள் சொல்வதென்ன?

அவர்கள் சொல்வதாவது, "உங்கட்கு உதவி செய்வது சாத்தியமாக வேண்டுமானுல், நீங்கள் நல்லவர்களாவது சாத்தியமாக வேண்டுமானுல், அதற்கு வழி ஒன்றே—நீங்கள் இருக்கிறபடி இருப்பதை ஒழித்துவிடுங்கள்," என்பது. மக்கள் இனத்தாரின் சரித்திரத்தை இம்மனிதர் அறியார். இந்தியர் தம் மதத்தையும் தம் நிலையங்களையும் மாற்றுவரேல், இந்தியா என்பதே இனி இராது; ஏனெனில், அந்த இனத்தார்க்கு உயிர்நிலை அதுவே. உண்மையாகவே அந்நாடு அப்போது மறைந்துவிடும்; ஆதலால், உதவி செய்வதற்கு உங்கட்கு எவரும் இரார்.

இன்னும், மற்றெரு பெரிய விஷயமும் கற்றற்கு உள்ளது. அதாவது, உண்மையாக உங்களால் ஒரு நாளும் உதவி செய்ய முடியாது. நாம் ஒருவர்க்கொருவர் என்ன செய்யக்கூடும்? நீங்கள் உங்களுடைய சொந்த வாழ்விலே வளர்ந்து வருகிறீர்கள்; யான் எனது சொந்த வாழ்விலே வளர்ந்து வருகிறேன். நெடுங்காலத்திற்குப் பின் இறுதியிலே எல்லா வழிகளும் ஒரே ஊரைச் சார்கின்றன என்பதை அறிந்துகொண்டு, உங்களது வாழ்க்கை முறையிலே உங்களை யான் முன்னுக்குத் தள்ளக்கூடும்—இது சாத்தியமாகலாம். இது ஒழுங்கான வளர்ச்சியாம். எந்த நாட்டாரது நாகரிகமும் இன்னும் பூரணமடையவில்லை. அந்த நாகரிகத்தை நீங்கள் முன்னுக்குத் தள்ளுங்கள்; அது தனது சொந்த இலட்சியத்தைச் சாரும்; அதை மாற்ற முயலாதீர்கள். ஒரு நாட்டாரின் நிலையங்களையும், பழக்கங்களையும், வழக்கங்களையும் ஒழித்துவிட்டால், எஞ்சி நிற்பது யாது உளது? அவைகளே நாட்டை ஒன்ருகப் பிணைத்து நிற்பன.

ஆனுல், இச்சமயம் பெரிதும் கல்விகற்ற அன்னியர் வருகிருர்; அவர், "பாருங்கள்: ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக வழிவழி வந்த அந்த நிலையங்கள் பழக்கங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, எனது முட்டாள் தன்மைக்குரிய தகரப் பாத்திரத்தைக் கைக்கொள்ளுங்கள்," என்று சொல்லுகிருர். இது மிகவும் அறிவின்மையே.

நாம் ஒருவர்க்கொருவர் உதவி புரிந்துகொள்ள வேண்டும் ஆனுல், இன்னும் ஒரெட்டு முன் செல்லவேண்டும். முதலாவதாக, உதவி செய்யும்போது தன்னலமற்றவராக வேண்டும். "நான் செய்யச் சொல்வதை மட்டும் நீ செய்வையாயின், யான் உனக்கு

உதவி செய்வேன். இல்லையேல், செய்யேன்,'' என்பார். இது உதவியாகுமா?

ஆதலால், இந்துக்கள் உங்களுக்கு ஞான விஷயமாக உதவி செய்ய விரும்பினால், அதில் வரையறை யாதும் இராது. அது முழுமையான தன்னலமின்மையாம். யான் கொடுக்கிறேன்; அதோடு அங்கே அது முடிவடைகிறது. அது என்னிடமிருந்து சென்று விட்டது. எனது மனம், என் சத்திகள், யான் கொடுக்கவேண்டியுள்ள ஒவ்வொன்றும் கொடுக்கப்படும்; கொடுக்கும் கருத்தோடேயே கொடுக்கப்படும்; அதோடு நின்றுவிடும். உலகிற் பாதியைக் கொள்ளையடித்துள்ள மக்களை யான் பன்முறை கண்டுளேன்; அவர்கள் 20,000 டாலர் 'அஞ்ஞானியை மத மாற்ற'க் கொடுத்தார்கள். எதற்காக? அஞ்ஞானியின் நலங் கருதியா, தங்கள் சொந்த உயிர்களை உய்விக்கவா? இதைச் சற்றே சிந்தியுங்கள்.

தீயவை செய்தார்க்கு வரும் கேடு எனும் உண்மை, இயங்கி வருகிறது. மனிதர்களாகிய நாம் நம் சொந்தக் கண்களை மறைத்துக்கொள்ள முயல்கிறோம். ஆனால், நெஞ்சிற்குள்ளே மெய்யான பரம்பொருள் இருந்துகொண்டேயுள்ளது. அது ஒரு போதும் மறவாது; நாம் அதை ஏமாற்ற இயலாது; அதனுடைய கண்களை ஒருபோதும் எதுவும் மறைக்க முடியாது. உண்மையான அறத்தின் தூண்டுதல் ஏதேனும் இருக்கும்பொழுதெல்லாம், ஓராயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னாவது, அது பயனை நல்கியே விடுகின்றது. தடுக்கப்பட்டாலும், அது பின் விழித்தெழுந்து, மறுமுறையும் இடித்து வெடிக்கத் தொடங்குகிறது. நோக்கம் சுயநலமுற்றதாய், தன்னலங் கோரியதாய் இருக்கும்போது, ஒவ்வொரு தூண்டுதலும், சமாசாரப் பத்திரிகைகள் அனைத்தும் பறையறைய, கூட்டங்களனைத்தும் நின்று ஊக்கமூட்ட, வெளியிலே தள்ளப்படினும், அது அதன் குறியைச் சாரத் தவறவே செய்யும்.

இதில் யான் பெருமை கூறிக்கொள்ளவில்லை. ஆனால், கவனியுங்கள்: அந்த இளைஞர்கள் கூட்டத்தின் கதையைக் கூறியுள்ளேன். இன்று அவர்களது பணியை அறிந்து அவர்களை வாழ்த்தாத ஒரு சிற்றூரோ, ஓர் ஆணோ, ஒரு பெண்ணோ இந்தியாவில் இல்லை. நாட்டில் பஞ்சம் நேரும்போது, அவ்விளைஞர்கள் உட்புகுந்து பணி செய்யவும், தங்களால் இயன்றவரை எத்தனையோ மக்களைத் துயரத்தினின்று விடுவிக்கவும் முயன்று வருகின்றார்கள். அவர்கள் பணி செய்யாத பஞ்சம் என்பது இல்லை. அது நெஞ்சிலே

பாய்கிறது. மக்கள் அதனை அறிகின்றார்கள். ஆதலால், உங்களால் இயன்ற போதெல்லாம் உதவி செய்யுங்கள்; ஆனால், உங்களது நோக்கம் இன்னது என்பதைக் கவனித்துக்கொள்ளுங்கள். அது சுயநலமுற்றதாயின், நீங்கள் எவர்க்கு உதவி செய்ய நினைக்கிறீர்களோ, அவரும் பயனடையார்: நீங்களும் பயனடையீர்கள். அது சுயநலமற்றதாயின், எவர்க்கு அது அளிக்கப்படுகிறதோ, அவர்க்கு ஆசிகளைக் கொணரும்; உங்கள்மீதோ எண்ணற்ற ஆசீர்வாதங்களைப் பொழியும். நீங்கள் வாழ்வதைப் போன்று இதுவும் உண்மையே. ஈசனுடைய கண்களை ஒரு போதும் மறைக்க முடியாது. கரும நியதியை ஒரு நாளும் ஏமாற்ற முடியாது.

சரி; என் திட்டங்களாவன, இந்தியப் பொது மக்களுக்கு எட்டுமாறு செய்யப்படும் பல உதவிகளேயாம். நீங்கள் இந்தியா முழுதும் ஏழைகளுக்காகப் பள்ளிக்கூடங்கள் தொடங்குவதாக வைத்துக்கொள்வோம்; அப்போதும் நீங்கள் அவர்கட்குக் கல்விப் பயிற்சியளிக்க முடியாதவர்களே. உங்களால் எவ்வாறு முடியும்? நாலு வயதுப் பையன் உங்களது பள்ளிக்கூடத்திற்குச் செல்வதினும் மேலாக உழவுக்கே செல்வான்; வேலை செய்யச் செல்வான். அவனால் உங்கள் பள்ளிக்கூடம் செல்ல இயலாது. அது முடியாத காரியம். தற்காப்பு என்பதே முதலாவது இயற்கைச் செயல். ஆனால், மலை மகமது நபியிடம் செல்லாதாயின், மகமது நபி மலைக்குச் செல்லக்கூடும். கல்வி வீடு வீடாகச் செல்லக்கூடாதா என்று யான் கேட்கிறேன். உழவன் மகன் கல்விக்கு வர முடியாதெனின், அவன் இருக்குமிடத்திலேயே, உழுமிடத்திலேயே, வேலை செய்யும் ஆலையிலேயே ஏன் அவனைச் சந்திக்கக்கூடாது? அவனது நிழலைப்போல அவனைத் தொடர்ந்து செல்லுங்கள். ஆனால், ஞானத்துறையிலே மக்கட்குக் கல்வி போதிக்கும் நூற்றுக்கணக்கான—ஆயிரக்கணக்கான—துறவிகள் உள்ளார்களே! அதே வேலையை அறிவுத் துறையிலே அம்மக்கள் ஏன் செய்யும்படி விடக்கூடாது? அவர்கள் பொது மக்களிடம் ஒரு சிறிது நாட்டுச் சரித்திரத்தையும், வேறு பல விஷயக்களையும் பற்றிப் பேசக்கூடாதா? கல்வி பெறுதற்குக் காதுகளே மிகச் சிறந்த கருவிகள். நம் வாழ்க்கைகளில் மிகச் சிறந்த கொள்கைகளாய் அமைபவை நம் தாய்மாரிடமிருந்து நம் காதுகள் மூலம் கேட்டவையே. புத்தகங்கள் நெடுக்காலத்திற்குப் பின் வந்தன. புத்தகக் கல்வி ஒன்றுமேயில்லை.

செவிகள் வழியாகவே மிகச் சிறந்த ஆக்க வேலைக்குரிய கொள்கைகளை நாம் பெறுகிறோம். பிறகு சிறுவர்கட்குச் சிரத்தை பெருகும் போது, அவர்கள் உங்கள் நூல்களிடமும் வரலாம். முதலில் அது உருண்டு உருண்டே முன் செல்லட்டும்—இதுவே என் கருத்து.

இது கிடக்கட்டும். துறவு நிலையங்களிலே யான் மிகப் பெரிய நம்பிக்கை கொண்டவனல்லேன் என்பதையும் யான் உங்கட்குச் சொல்ல வேண்டும். அவற்றினிடம் பெருங்குணங்களும் உள; பெருங்குறைகளும் உள. துறவறத்தார்க்கும் இல்லறத்தார்க்கும் இடையே பூரணமாகச் சமன் செய்த நிலை ஏற்பட வேண்டும். ஆனால், துறவறம் இந்தியாவிலே எல்லாச் சத்தியையும் உறிஞ்சி விட்டது. நாங்கள் மிகச் சிறந்த சத்திக்கு அறிகுறியாகிறோம். துறவி வேந்தனிலும் சிறந்தவன். 'துவராடை' உடுத்த துறவியார் உள்ள போது அவர் முன்பு உட்காரத் துணியும் ஆட்சி மன்னன் இந்தியாவில் இல்லை. அவன் தனது ஆதனத்தை விட்டு எழுந்து நிற்கிறான். ஆனால், அது கேடானது. எவரது கையிலும் அவ்வளவு அதிகாரம் இருப்பது நன்றன்று. இத்துறவிகள் மக்களுக்கு அரணாய் இருந்துள்ளார்கள். இவர்கள் வைதிக குருமார்க்கும் அறிவுக்கும் இடையிலிருப்பவர்கள். இவர்கள் அறிவும் சீர்திருத்தமும் உறையும் நிலையங்களாவார்கள். யூதர்கட்குள்ளே தீர்க்கதரிசிகள் எப்படியோ, அப்படியே இவர்கள். தீர்க்கதரிசிகள் வைதிக குருமார்களுக்கு எதிராக எப்போதும் பேசிக்கொண்டிருப்பார்கள்; மூட நம்பிக்கைகளைக் களைந்தெறிய முயன்றுகொண்டிருப்பார்கள். இந்தியாவிலுள்ள துறவிகளும் இப்படியேதான். ஆனால், அது எப்படியானாலும், அவ்வளவு அதிகாரம் அங்கிருப்பது நன்றன்று. அதினின்றும் நல்ல முறைகளை ஏற்பாடு செய்தல் வேண்டியுள்ளது. ஆனால், எதிர்ப்பு மிகக் குறைந்த வழியிலேதான் நீங்கள் வேலை செய்ய முடியும். அங்கே நாட்டின் உயிர் நிலை முழுதும் துறவிலேதான் உள்ளது. நீங்கள் இந்தியாவிற்குச் சென்று எம்மதத்தையேனும் ஒர் இல்லறத்தார்க்குப் போதியுங்கள். இந்து மக்கள் பின்புறம் திரும்பி முன் செல்வார்கள். நீங்கள் உலகைத் துறந்தவராய் இருந்தீர்களானால், அவர்கள், "இவர் நல்லவர்; இவர் உலகத்தைத் துறந்தவர்; இவர் உண்மையான மனிதர்; இவர் போதிப்பதைத் தாமே செய்ய விரும்புவார்," என்பார்கள். நான் சொல்வதன் கருத்தாவது, அது ஒரு மாபெருஞ்சத்தியைக் குறிக்கின்றது.

நாம் செய்யக்கூடியது, அதனை மாற்றுதல் மட்டும் செய்தலே; அதற்கு வேறொரு வடிவங் கொடுத்தலே. இந்தியாவிலே திரியும் துறவிகளிடம் உள்ள இவ்வளவு பெருஞ்சத்தி மாற்றப்படல் வேண்டும்; அது பொதுமக்களை உயர்த்திவிடும்.

பாருங்கள்: நாம் திட்டத்தை அழகாகக் காகிதத்திலே எழுதி வைத்துவிட்டோம்; ஆனால், நானே அதேசமயம் அதை இலட்சிய உலகினின்றும் வெளியே கொணர்ந்துவிட்டேன். இது வரை திட்டம் நெகிழ்வுற்றதாயும், இலட்சிய மயமாயும் இருந்தது. ஆண்டுகள் செல்லச் செல்ல, அது வரவர நன்கு இறுகித் தக்கதாய் அமைந்தது; உண்மையாகவே அதனை நடத்தி வரும்போது, அதன் குறைகளையும் பிறவற்றையும் காணத் தொடங்கினேன்.

இலௌகிகத் துறையில் அது வேலை செய்து வரும்போது யான் கண்டுபிடித்தது யாது? முதலில் கல்வி கற்பிக்கும் முறையில் இத் துறவியர்களைப் பயிற்றுவதற்கு நிலையங்கள் கட்டாயம் வேண்டும். சான்றாக, என் மனிதர்களுள் ஒருவரை அனுப்புகிறேன்; அவர் ஒரு படம்பிடி பெட்டியோடு சுற்றுகிறார்; அம்மாதிரி விஷயங்களில் அவர்க்கே போதிக்க வேண்டுவது உள்ளது. இந்தியாவிலே ஒவ்வொரு மனிதனும் சற்றும் கல்வியறிவற்றவனாயிருப்பதையும், கல்வி கற்பிக்க ஏராளமான நிலையங்கள் வேண்டும் என்பதையும் நீங்கள் காண்பீர்கள். இவையனைத்திற்கும் பொருள் யாது? பணம் என்பதே. இலட்சிய உலகினின்றும் கீழிறங்கி, அன்றாடு செய்ய வேண்டிய வேலையுள்ள உலகிற்கு நீங்கள் வருகிறீர்கள். யான் உங்கள் நாட்டிலே நான்கு ஆண்டுகளும், இங்கிலாந்திலே இரண்டு ஆண்டுகளும் கடுமையாக வேலை செய்துள்ளேன். நண்பர் சிலர் உதவிக்கு வந்தனர் என்பதற்காக யான் மிக்க நன்றி பாராட்டுகிறேன். இன்று உங்கள் நடுவில் உள்ள ஒருவர், அவர்களில் ஒருவர். என்னோடு இந்தியாவுக்குச் சென்ற அமெரிக்க நண்பர்களும் ஆங்கில நண்பர்களும் உள்ளார்கள்; மிக எளிய முறையிலே தொடங்கியுள்ளது. சில ஆங்கிலேயர் வந்து மடத்தில் சேர்ந்தனர். ஓர் ஏழை மனிதர் கடுமையாக உழைத்து, இந்தியாவில் உயிர் துறந்தனர். ஓய்வு பெற்றுள்ள ஓர் ஆங்கிலேயப் பிரபுவும் ஓர் ஆங்கில மாதராரும் உள்ளனர்; அவர்கட்குத் தமக்கெனச் சிறிது சொத்து உள்ளது. அவர்கள் இமய மலையிலே ஒரு நிலையத்தைத் தொடங்கி, குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்து வருகின்றார்கள். யான் தொடங்கியுள்ள பத்திரிகைகளில் ஒன்றை—'பிரபுத்த பாரத'

என்னும் பெயருடைய அப்பத்திரிகையின் ஒரு பிரதியை மேஜையின்மீது காண்பீர்கள்—அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். பொது மக்களுக்கு நடுவே போதித்து வருகின்றனர் ; பணி செய்து வருகின்றனர். கல்கத்தாவிலே இன்னொரு நிலையம் எனக்கு உள்ளது. எல்லாப் பேரியக்கங்களும் தலை நகரினின்றுதான் தொடங்குதல் வேண்டும். எல்லா இரத்தமும் நெஞ்சிற்கு வந்துதான், அங்கிருந்து பல இடங்களுக்கும் பிரித்தளிக்கப்படுகிறது ; ஆதலால், எல்லாச் செல்வமும், எல்லாக் கருத்துகளும், எல்லாக் கல்வியும், எல்லா ஞானமும் தலை நகரை நோக்கியே ஒன்று கூடிப் பின் அதினின்றும் நாற்றிசையும் பரவும்.

யான் மிக எளிய முறையிலே தொடங்கியுள்ளதை மகிழ்ச்சியோடு உங்களிடம் கூறுகிறேன். ஆனால், அம்மாதிரி முறையிலே அதே பணியைப் பெண்களுக்காகவும் தொடங்க எனக்கு விருப்பம். எனது கொள்கையாவது : ஒவ்வொருவனும் தனக்குத்தானே உதவி செய்துகொள்வதே. தொலையிலிருந்தே என் உதவி வருகிறது. இந்திய மாதராரும், ஆங்கில மாதராரும் உளர் ; அமெரிக்க மாதராரும் பணியை ஏற்றுக்கொள்ள வருவார் என்பது எனது நம்பிக்கை. அவர்கள் பணியைத் தொடங்கியதும், யான் அதினின்றும் விலகியிருப்பேன். எந்த ஆணும் ஒரு மாதுக்கு ஆணையிடக் கூடாது. எந்த மாதும் ஓர் ஆணுக்கு ஆணையிடக்கூடாது. ஒவ்வொருவரும் சுவாதீனமுடையவர். பந்தம் ஏதேனும் இருப்பின், அது அன்பால் விளையும் பந்தமேதான். மாதரார் தமக்குரிய விதியின்படியே தம் பணிகளை நிறைவேற்றுவார். ஆடவர்கள் அவர்கட்காக என்றைக்கும் செய்யக்கூடியதைவிட மிக நன்றாகவும் நிறைவேற்றுவார். மாதரார்க்கு விளைந்த கேடெல்லாம், ஆடவர் மாதராரின் விதியை உருவாக்க முயன்றதன் பயனேயாம். ஏதேனும் ஓர் ஆரம்பப் பிழையோடு காரியந் தொடங்க எனக்கு விருப்பமில்லை. ஆரம்பத்திற்செய்யும் ஒரு சிறு பிழை பெருகிக்கொண்டே போகும்; உங்கட்கு வெற்றி உண்டாகுமாயின், நீண்ட காலத்திற்குப் பின் அப்பிழை மிகப் பேரளவினதாக வடிவெடுத்துவிடும். அதனைத் திருத்தல் அப்போது அரிதாகும். ஆதலால், பெண்களைப்பற்றிய பணியின் இப்பகுதியை நிறைவேற்ற ஆடவர்களை உபயோகிக்கும் இப்பிழையினை இழைப்பேனாயின், மாதரார் அதினின்றும் ஒருகாலும் நீங்காதவராவார்—அது ஒரு வழக்கமாக அமைந்து விடும். ஆனால், எனக்கு ஒரு சமயம் கிடைத்துள்ளது. என் குரு

நாதரின் பத்தினியாரான அம்மையாரைப் பற்றி உங்களுக்குச் சொன்னேன். நாங்கள் அனைவரும் அவ்வம்மையார்மீது பெரு மதிப்பைச் செலுத்துவோம். அவர் எமக்கு ஒரு போதும் ஆணை யிடுவதே இல்லை. ஆதலின் ; அது சற்றும் இன்னலற்றது.

அப்பகுதி இன்னும் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது.

அருளுரை

ஜூன் 19, 1895—புதன்கிழமை.

[சுவாமி விவேகானந்தர் "ஆயிரம் தீவுப் பூங்கா"விலே தம் சீடருக்கு, ஒவ்வொரு நாளும் முறை தவருது அருளிய போதனை இன்று தொடக்க மாகிறது. நாங்கள் அனைவரும் இன்னும் அங்கே கூடவில்லை; எனினும், குருநாதரது நெஞ்சம் எப்போதும் பணியிலே ஈடுபட்டிருந்தமையின், அவர் தம்மோடிருந்த மூவர் நால்வர்க்கு உடனே போதிக்கத் தொடங்கினர். இன்று, முதல் நாட்காலை தம் கையில் 'பைபிளை' ஏந்தி வந்து, நாங்கள் எல்லோரும் கிறித்தவர்களாதலின், கிறித்தவ வேதத்தோடு ஆரம்பிப்பதே முறையாகும் என்று மொழிந்து, 'யோவான் எழுதிய நற்செய்தி' என்னும் பகுதியைத் திறந்தார்.]

"தொடக்கத்தில் வாக்கு இருந்தது; அவ்வாக்கு இறைவனேடிருந்தது; வாக்கே இறைவன்." இந்து இதனை மாயை—ஆண்டவன் தோற்றம்—என்று இயம்புவான்; ஏனெனில் மாயை இறைவனின் சத்தியேயாகும். பாரமார்த்திகப் பரம் பொருள் பிரபஞ்சம் வாயிலாகப் பிரதிபலித்தலையே, நாம் இயற்கை என்னும் பெயரால் வழங்குகின்ரேம். வாக்குக்கு இரு வகையான விளக்கங்கள் (சத்தியின் தோற்றங்கள்) உள்ளன: பொதுவானது, இயற்கை எனப்படுவது; சிறப்பானது, கண்ணபிரான், புத்த பிரான், இயேசு நாதர், ஸ்ரீ ராமகிருஷ்ணர் போன்ற பகவானுடைய பேரவதாரமே. பாரமார்த்திகப் பொருளின் சிறப்பான விளக்கமாகிய கிறித்து அறியப்படுபவரும், அறியப்படக்கூடியவரும் ஆவர். பாரமார்த்திகப் பொருள் அறிவு கடந்தது. நம்மால் 'உயர்வற உயர்ந்த தந்தை' எனும் தத்துவத்தை அறிய இயலாது; திருக்குமாரரை மட்டும் நம்மால் உணர இயலும். பாரமார்த்திகப் பொருளை மனிதத் தன்மையெனும் வண்ணம் வாயிலாகத்தான்—கிறித்து மூலமாகத்தான்—நம்மாற் காணக்கூடும்.

யோவான் என்பவர் எழுதிய நூலின் முதல் ஐந்து வரிகளிலேயே கிறித்தவ சமயத்தின் முழுமையான சாரம் அடங்கியுள்ளது. ஒவ்வொரு வரியிலும் மிகமிக ஆழ்ந்த தத்துவ ஞானம் நிரம்பியிருக்கின்றது.

நிறைவுற்ற பொருள் எக்காலும் நிறைவற்றதாகாது. அது இருளிலே உள்ளது; ஆனால், இருளால் பாதிக்கப்படுவதில்லை. இறைவனது அருள் அனைவர்மீதும் பாய்கின்றது; ஆனால், அவர்களின் கொடுந்தீய இயல்பால் அது தடையுறுவதில்லை. கதிரவனை மாறுபட்ட வடிவுடையதாக நம்மைக் காணச் செய்யும் நமது எந்தக் கண் நோயாலும் ஞாயிற்று நிலை மாறுவதில்லை. இருபத்தொன்பதாவது வரியிலுள்ள 'உலகிலுள்ள பாவத்தைப் போக்கி விடுகிறது' என்பதன் பொருளானது, கிறித்து நமக்கு நிறைநிலையடையும் நெறியைக் காட்டுவார் என்பதே. இறைவன் கிறித்துவானது மனிதனுக்கு அவனது உண்மையான இயல்பை—அதாவது நாமும் இறைவனே யாவோம் என்பதை—புலப்படுத்தும் பொருட்டேயாம். தெய்வத்தன்மையின் மீதுள்ள மனிதத் தன்மையான போர்வையே நாம்; ஆனால், தெய்விக மனிதனுகும் நிலையில் கிறித்துவும் நாமும் ஒன்றே.

முப்பொருள் கூடிய (Trinitarian) கிறித்து நம்மினும் உயர்ந்த நிலையில் உள்ளவர்; ஏகப் பொருளாகிய (Unitarian) கிறித்துவோ, ஒழுக்கத்திற்சிறந்த ஒரு மனிதரே. ஆதலின், இவற்றில் எதுவும் நமக்கு உதவ இயலாது. இறைவனது அவதாரமாகித் தமது தெய்வத் தன்மையை மறவாத கிறித்துவே நமக்குத் துணையாக நிற்றல் கூடும்; அவரிடத்து யாதொரு குறையும் இல்லை. அந்த அவதார புருடர்கள் தங்கள் சுய தெய்வத் தன்மையை யாண்டும் உணர்பவர்கள். பிறவி முதலே அதனை அவர்கள் அறிபவர்கள். தங்கள் நாடகம் முடியப் பெற்ற நடிகர்களைப் போன்றவர்கள் அவர்கள்; ஆனால், தங்கள் தொழில் முடிந்த பின்பும் பிறர்க்கு மகிழ்வூட்டும்பொருட்டு அவர்கள் மீளுவார்கள். அச்சான்றோர்கள் பாரிலுள்ள எதனுலும் தீண்டப்படாதவர்கள். அவர்கள் நமக்குப் போதிப்பதற்காகச் சிறிது காலம் நம் வடிவையும் வரையறைகளையும் ஏறிட்டுக்கொண்டவர்கள். ஆனால், உண்மையிலே அவர்கள் ஒருபோதும் வரையறைக்கு உட்பட்டவர்களாகமாட்டார்கள். அவர்கள் நித்திய முத்தர்கள் (எப்போதும் விடுபட்டவர்கள்).

* * *

நன்மை உண்மையை அடுத்துள்ளது; ஆனால், இன்னும் உண்மையாகாதது. தீமையால் நிலைகுலையாதிருக்கக் கற்றுக்கொண்ட பிறகு நன்மையால் உவகையுறாதிருக்கவும் தேர்ந்து

கொள்ள வேண்டும். தீமை நன்மை இரண்டுக்கும் நாம் அப்பாற் பட்டவர் என்பதை நாம் உணர்தல் வேண்டும்; அவை பொருந்த அமைந்திருக்கும் வகையை ஓர்ந்து அவ்விரண்டும் இன்றியமை யாதன என்பதைக் காணுதல் சாலவும் நன்று.

துவைதம் எனும் கருத்து, பழைமையான பாரசீகரிடமிருந்து[1] வந்துள்ளது. உண்மையிலே நன்றும் தீதும் ஒன்றே.[2] அவை நமது உள்ளத்தில் இருப்பன. மனம் சம நிலையில் திகழும்போது, நன்றோ தீதோ அதனை மாறச் செய்யாது. முற்றிலும் முத்தனாய் (விடுபட்டவனாய்) இரு; அப்போது அவ்விரண்டில் எதுவும் மனத்தைத் தாக்காது. நாம் முத்தியையும் இன்பத்தையும் நுகர் கிறோம். தீமை என்பது இரும்பு விலங்கு; நன்மை என்பது பொன் விலங்கு; இரண்டும் விலங்குகளே. பந்தனை அற்றிரு; உனக்குத் துணை யாதும் இல்லை என்பதை முடிவாக உணர்ந்து கொள். இரும்பு விலங்கின் கட்டை நெகிழ்த்தப் பொன் விலங்கைப் பற்று; பின்பு இரண்டையும் எறிந்துவிடு. தீமையெனும் முள் நம் சதையிலே தைத்திருக்கிறது; அதே முட்செடியிலிருந்து இன்னொரு முள்ளையெடுத்து, தைத்த முள்ளைப் பிடுங்கிவிடு; பின் இரண்டையும் எறிந்துவிட்டு விடுதலையடை.

இவ்வுலகின்கண் கொடுப்போனுடைய பதவியை எப்போதும் ஏற்று நில்; அனைத்தையும் அளி; கைம்மாறு ஒன்றையும் எதிர் பாராதே; அன்பை வழங்கு; உதவியைச் செய்; பணியினைப் புரி; உன்னால் இயன்ற எச்சிறு பொருளையேனும் நல்கு; ஆனால் பண்ட மாற்றைத் தவிர்த்துவிடு. கொடுக்கும்போது நிபந்தனைகளை விதியாதே; பிறரால் உன் மீதும் அந்நிபந்தனைகள் சுமத்தப்பட மாட்டா. இறைவன் நமக்கு அருளுவது போலவே, நமக்குரிய வள்ளல் தன்மையைக் கொண்டு நாம் பிறர்க்கு உதவுவோமாக.

இறைவன் ஒருவனே வள்ளல்; வையகத்தாரனைவரும் வியாபாரி களே. இறைவனது 'செக்'கை (உண்டியலை)ப் பெற்றுக்கொள்;

---

[1] *பாரசீகர் என்பவர் சோராஸ்தர் என்னும் பெரியாரைப் பின் பற்று பவர். இப்படைப்பு முழுவதும் ஆர்மஸ்டு (நன்மைத் தத்துவம்) என்ற ஒன்று, அஹரிமான் (தீமைத் தத்துவம்) என்ற மற்றொன்று ஆகிய இரண்டு அடிப்படைத் தத்துவங்களினின்றும் வெளி வந்தது என்று அப்பெரியார் போதித்தார்.*

[2] *ஏனெனில், அவையிரண்டும் திரிகுணமான மாயையால் ஆக்கப்படும் சங்கிலியும் அதனுடைய வளையங்களும் ஆகும்.*

அது எங்கும் செலாவணியாகும். 'விளக்கவும் உரைக்கவும் ஒண்ணுத பேரன்பின் சுவையே இறைவன்.'—இதனை ஓர்ந் துணரலாம். ஆனால், ஒருபோதும் இதற்கு இலக்கணம் வகுக்க இயலாது.

* * * *

நாம் துயரங்களுக்கும் வாழ்க்கைப் போராட்டங்களுக்கும் ஆளாகும்போது உலகம் மிகப் பயங்கரமான இடமாக நமக்குத் தோன்றுகின்றது. ஆனால், இரு நாய்க்குட்டிகள் விளையாடிக் கொண்டும் ஒன்றையொன்று கடித்துக்கொண்டும் இருப்பதை நாம் கவனிக்கும்போது நாம் சற்றும் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. காரணம், அது விளையாட்டே என்பதையும், இடையிடையே வெடுக் கென்று கடித்தாலும் அதனால் உண்மையாகத் தீங்கு விளையாது என்பதையும் நாம் நன்குணர்வோம்; அதுபோல, நம் சண்டை கள் யாவும் இறைவனது கண் முன்பு விளையாட்டேயாகும். இந்த ஞாலம் முழுவதும் அவன் திருவிளையாடலுக்கே அமைந்தது; அதனால் இறைவன் மகிழ்ச்சியே கூர்கிருன்; இதிலுள்ள எதற்கும், இறைவனுக்குச் சீற்றத்தை ஊட்ட இயலாது.

* * * * * * * *

"அன்னுய், வாழ்க்கைக் கடலிலே எனது தோணி அமிழ்ந்து கொண்டிருக்கிறது. மித்தை எனும் சுழல்காற்றும் மோகமெனும் புயலும் கணந்தோறும் வலுத்து வருகின்றன. துடுப்புகளை வலிக்கும் ஐம்புலன்களாம் கலவர்களோ, அறிவிலிகள்; மனமாம் மாலுமி மெலிந்து தளர்வுற்றிருக்கிருன். யான் இருக்கும் இடமோ இன்னதென அறியேன்; எனது தோணி அமிழ்ந்து வருகிறது. அன்னுய், என்னைக் காத்தருள்க!"

"அன்னுய், உனது ஒளி ஞானிக்கென்ருே, பாவிக்கென்ருே நின்றுவிடுவதில்லை; காதலனுக்கும் கொலைகாரனுக்கும் அது ஊக்கத்தை ஊட்டுகிறது."

அன்னை அனைவர் வாயிலாகவும் யாண்டும் தன்னை விளக்கிக் கொண்டிருக்கிருள். ஒளி எதன்மீது படிகின்றதோ, அதனால் தான் மாசுறுவதுமில்லை; நலம் பெறுவதுமில்லை. ஒளி எப்போதும் தூய தாய், எப்போதும் மாறுபடாததாய்ச் சுடர்விடுகின்றது. ஒவ்வோர் உயிருக்கும் உள்ளே தூய, அழகிய, ஒருகாலும் மாறுபாட்டை யடையாத அன்னை எழுந்தருளியிருக்கின்ருள்.

"அன்னாய், நீ மன்னுயிரனைத்துக்கும் ஒளியாய்த் திகழ்கின்றாய். யாம் உன்னை வணங்குகின்றோம்!"

"துயரத்திலும், பசியிலும், இன்பத்திலும், மேன்மையிலும் சமமாக அன்னை வீற்றிருக்கிறாள்."

"வண்டினம் தேனை உறிஞ்சும்போது, அத்தேனை இறைவனே பருகிக்கொண்டிருக்கிறான்."

இறைவனே எங்கும் உறைதலை உணர்ந்து, இருடியர் புகழ்தலையும் இகழ்தலையும் விட்டுவிடுகின்றனர். எதுவும் உனக்குத் தீங்கிழைக்க இயலாது என்பதை உணர். எவ்வாறு? நீ முத்தனன்றோ? நீ ஆன்மா அன்றோ? இறைவனே நமது உயிர்கட்கு உயிராயும், நமது செவிக்குள் கேட்கும் சத்தியாயும், கண்ணுக்குள் காணும் ஆற்றலாயும் அமைகிறான்.

போலீஸ் சேவகனாய் (ஊர்காவலனாய்)பின் தொடரப்படும் ஒரு மனிதனைப் போல நாம் உலகம் வழியாகச் சென்றுகொண்டிருக்கிறோம். ஆதலின், அதன் வனப்பைக் கணிகக் காட்சிகளால் மட்டும் காண்கின்றோம். நம்மைப் பின் தொடர்ந்து வரும் இவ்வச்சம் முழுதும் சடப் பொருளினிடத்து நமக்குள்ள நம்பிக்கையினின்றும் எழுகிறது. இயற்கையின் முழு இருப்புக்குக் காரணம், அதன் பின்னே (அதனை உணரும்) மனம் இருப்பதேயாம். நாம் காண்பதெல்லாம் இயற்கை[1] வழியாக ஊறி வரும் இறைவனேயாகும்.

ஜூன் 23—ஞாயிற்றுக்கிழமை

நீ பெரு வீரனாயும் மிகுந்த ஆர்வமுள்ளவனாயும் இரு; பின்பு எந்நெறியையேனும் அதில் ஈடுபட்டுப் பின் பற்று; அதன் பயனாக முழுப்பொருளையும் சார்தல் உனக்கு உறுதியாகும். சங்கிலியில் ஒரு வளையத்தை ஒரு முறை பற்றுவாயாயின், முழுச் சங்கிலியும் வரிசையாக வந்தே தீரவேண்டும். மரத்தின் வேரிலே நீருற்று. அதாவது, இறைவனை அடை. அது முழு மரத்திற்கும் நீர் ஊற்றியதாகும்; இறைவனைப் பெறின் யாம் அனைத்தையும் பெற்றவராவோம். ஒரு பக்கச் சார்வே குவலயத்திற்குக் கேடாகும். உன்னிடம் பக்கங்கள் பலவாகும் அளவிற்கு, உன்னிடம் உயிர்களும் பல

[1] இங்கே இயற்கை என்பது சடப் பொருளையும் மனத்தையும் குறிக்கின்றது.

வாகும். (பல மக்கட்குரிய நோக்கும் நிலைகளும் உனக்கு உரியன வாகும்.) நீ இப்பிரபஞ்சத்தை எல்லா உயிர்கள் வாயிலாகவும் காணக்கூடும்—அதாவது, பத்தனது கோணத்தினின்றும் ஞானி யின் நிலையினின்றும் காணலாகும். உனது சொந்த இயல்பு இன்ன தென உய்த்துணர்ந்து, அதை விடாது பற்று. நிட்டை (ஒரே குறிக்கோளை உறுதியாகப் பற்றல்) ஒன்றே தொடக்க நிலையிலுள்ள வனுக்கு ஏற்ற நெறியாகும். ஆனல், ஆழ்ந்த பத்தியும் பேரார் வமும் சேரும்போது அதுவே அனைத்திற்கும் வழி காட்டி நம்மை அழைத்துச் செல்லும். கோயில்களும், கொள்கைகளும், உருவங் களும் இளஞ்செடியைப் பாதுகாக்க அமைக்கும் வேலிகளாகும். ஆனல், பிற்காலம் அச்செடி மரமாகுமாறு வேலிகளை வெட்டி யெறிதல் வேண்டும். அது போலப் பற்பல சமயங்களும் பைபிள் களும் வேதங்களும் கொள்கைகளும்—யாவும்—சிறு செடியின் வளர்ச்சிக்கு வேண்டிய தொட்டிகளேயாகும்; ஆனல், அச்செடி தொட்டியை விட்டு வெளி வருதல் இன்றியமையாதது. 'நிட்டை' என்பது ஒரு வகையிலே செடியைத் தொட்டியில் வைத்தலேயாகும். பாடு பட்டு வரும் உயிர்க்குத் தான் தெரிந்தெடுத்த நெறியிற் பாது காப்பேயாகும்.

* * * *

கடலைப்பார், அலையை நோக்காதே; எறும்புக்கும் தேவதூத னுக்கும் இடையே இம்மியளவு வேறுபாட்டையும் பாராதே. ஒவ் வொரு புழுவும் நாசரத்தில் தோன்றிய கிறித்துவின் உடன் பிறப்பே. ஒருயிர் பெரிது என்றும், மற்ருென்று சிறிது என்றும் எங்ஙனம் கூறுவது? ஒவ்வொருவரும் தத்தம் நிலையில் தாம் தாம் பெரியவரே. நாம் இங்கிருப்பது போன்றே செங்கதிர்ச் செல்வ னிலும் உள்ளோம்; விண்மீன்களிலும் திகழ்கின்ருேம். ஆன்மா காலதேசங்களுக்கு அப்பாற்பட்டது; எங்கும் பரந்துள்ளது. எம் பிரானைத் துதிக்கும் ஒவ்வொரு வாயும் எனது வாயே; பார்க்கும் கண் ஒவ்வொன்றும் என் கண்ணே; நாம் எங்கும் அடைபட்டிருக்க வில்லை. நாம் உடலன்று; பிரபஞ்சமே நமது உடல்; நாம் மாத் திரைக் கோல்களை அசைத்து நினைத்த அளவிலே நம்முன் காட்சி களைப் படைக்கும் மந்திரவாதிகளாவோம்; தான் பின்னிய பெரு வலையிலே வாழும் சிலந்தியாவோம். சிலந்தி வெவ்வேருன நூல்கள் வழியாகத் தான் விரும்பும் இடத்திற்கெல்லாம் செல்ல இயலு

மன்ருே ? சிலந்தி இப்போது தான் உள்ள இடத்தைமட்டும் உணர்கின்றது; ஆனுல், உரிய காலத்தில் அது முழு வலையையும் உணர்ந்துகொள்ளும். இச்சமயம் நாம் நமது உடல் உள்ள இடத்தை மட்டும் உணர்பவராவோம்; ஆனுல், நாம் அப்பாலுள்ள பேருணர்வைப் பெறும்போதே, அனைத்தையும் அறிவோம்; எல்லா மூளைகளையும் பயன்படுத்தும் ஆற்றலுள்ளவராவோம். இப்போதும் நாம் உணர்வைப் பிடித்து உந்தலாம்; அது அப்பாற் சென்று அதீத உணர்வு நிலத்திலே தொழில் புரியும். நாம் நம் உண்மை 'இயல்பிலே' இருக்க முயன்றுகொண்டிருக்கிருேம். அதற்குமேல் ஒன்றும் இல்லை. நான் என்பதன்றித் திகழவும், அனைத்தையும் பிரதிபலித்து ஆனுல் எப்போதும் ஒரு தன்மையதாய் இலங்கும் தூய படிகம் போன்று நிலவவும் உழைக்கின்ருேம். அந்நிலையை அடைந்த பின்னர்ச் செயல் இல்லை. உடல் ஒரு வெறுங் கருவியாகிறது; தன்னைப் பற்றிக் கவலையற்ற தூய்மையதாகிறது; அது தூய்மையற்றதாக ஒண்ணுதது.

நீ அகண்ட பரம்பொருள் என்றறி; அப்போது அச்சம் மாயும். 'யானும் என் தந்தையாகிய பரமனும் ஒன்று,' என்று யாண்டும் கூறு.

திராட்சைக் கொடியில் திராட்சைக் குலைகள் பலபல தோன்றுவது போன்றே, எதிர்காலத்தில் கிறித்துகளும் பற்பலர் தோன்றுவர்; அப்போது ஈசன் திருவிளையாடல் முற்றுப்பெறும்; அனைவரும் வெளியேறிவிடுவர். அது எதைப் போன்றதெனின், ஒரு கலத்திலுள்ள நீர் கொதிக்கத் தொடங்கும்போது முதலில் ஒரு குமிழியும், பின் மற்ருென்றும், பின்னர் பற்பலவுமாகி, நீர் முழுதும் கொதித்து நீராவியாய் வெளியேறிவிடுவதைப் போன்றதே. புத்தரும் கிறித்துவும் உலகம் ஈன்ற குமிழிகளுள் மிகப் பெரியதான இரு குமிழிகளாவர். மோஸஸ் என்பவர் ஒரு சிறு குமிழி. அதனினும் பெரிய பெரிய குமிழிகளும் தோன்றின. ஆயினும், ஏதோ ஒரு காலத்தில் எல்லாம் குமிழிகளாகி மறைந்துவிடும். ஆனுல், படைப்பு எப்பொழுதும் புதிதாகவே இருந்து, புதிய நீரை அளித்து, அதனையும் மீண்டும் அதே முறைக்கு உட்படுத்திச் செல்லும் (முன் போலக் குமிழிகளை உண்டாக்கி மறையும்படி செய்யும்).

ஜூன் 24—திங்கட்கிழமை

[நாரதர் இயற்றிய பத்தி சூத்திரங்கள் எனும் நூலினின்றும் இன்று படிப்பு நிகழ்ந்தது.]

"பகவான்மீதுள்ள அத்தியந்தப் பிரேமை (உழுவல் அன்பு) பத்தி எனப்படும்; இந்தப் பேரன்பே உண்மையான அமர நிலை (மரணமிலாப் பெரு வாழ்வு) ஆகும். இந் நிலையைப் பெற்ற மனி தன் முழுத் திருத்தியை அடைகின்றான்; எதை இழப்பினும் துயரை நண்ணான்; ஒரு போதும் அழுக்காறு அடையான். இதை உணர்ந்த மனிதன் உன்மத்தனாகிவிடுகிறான்."

என் குருதேவர் பின்வருமாறு திருவாய் மலர்ந்தருளுவதுண்டு: "இவ்வுலகம் ஒரு பெரும் பைத்தியக்கார விடுதி; இதிலுள்ளோர் அனைவரும் பித்தரே; ஒரு சிலர் பணத்தின்மீதும், ஒரு சிலர் மாதர் மீதும், ஒரு சிலர் புகழின்மீதும் பித்துகொண்டவர் ஆவர். ஒரு சிலரே கடவுள்மீதும் பித்துக்கொண்டவர் ஆவர். கடவுள்மீது பைத்தியங்கொள்ளலே எனக்கு மிகவும் விருப்பமானது. கடவுள் ஒரு பரிசவேதி (தொட்டதைத் தங்கமாக மாற்றும் குளிகை) ஆவர்; ஒரு கணத்தில் அவர் நம்மைச் செம்பொன்னாக (மிக உயர்ந்தவராக) மாற்றுவார்; வடிவமும் அவ்வண்ணமே இருக்கும். ஆனால், பிறர்க்குத் தீங்கு செய்தலோ, பாவஞ்செய்தலோ, நமக்கு இயலாது போகும்.

"இறைவரை நினைந்து அழுவார் சிலர்; பாடுவார் சிலர்; சிரிப்பார் சிலர்; ஆடுவார் சிலர்; வியத்தகு விஷயங்களை விரிப்பார் சிலர்; ஆனாலும், அனைவரும் இறைவரையன்றி வேறொன்றைப் பற்றியும் பேசார்."

ஞான குருமார் போதனை அளிப்பார்; ஆனால், இயேசு நாதர், புத்தபிரான், பகவான் இராமகிருஷ்ணர்போன்ற அவதார புருடரே ஞானத்தை வழங்க வல்லவர். ஒரே பார்வையும், ஒருமுறை தொடுதலும் அதற்குப் போதும். அதுதான் "பரிசுத்த ஆவியின் திறமை"; "கைகளை மேலே வைத்தல்" என்பது. குருவினால் சீடர்க்கு உண்மையாகவே சக்தி (அருட்சத்தி) புகட்டப்படுகிறது. இதுதான் குருசத்திப் பரம்பரையாகும். உண்மையான 'ஞான ஸ்நானம்' (மாசைப் போக்கும் நன்னீராடல்) எனும் அதுவே கணக்கற்ற யுக காலம் வழி வழியாக வந்துள்ளது. "எந்த ஆசைகளையும் நிறைவேற்றப் பத்தியைப் பயன்படுத்தல்

இயலாது; ஏனெனில், எல்லா ஆசைகட்கும் அதுவே தடையாகும்.''

நாரதர் பின்வருவனவற்றை அன்பின் அறிகுறிகளாகக் கூறுகிறார்: "நினைவுகள் யாவும், மொழிகள் யாவும், செயல்கள் யாவும் இறைவனிடமே ஒப்படைக்கப்படுமாயின், இறைவனை இமைப்பொழுதளவு மறப்பினும் அது மிகப் பெருந்துயரடையச் செய்யுமாயின், அப்போதுதான் பத்தி தொடங்கியுள்ளதெனல் வேண்டும்.

"இதுதான் உயர்வற உயர்ந்த பத்தி எனப்படும்; ஏனெனில், எல்லா வகை மனித அன்பிலும் உள்ள பரஸ்பரத்தன்மை—இச்சை (அன்பைக் கைம்மாருக எதிர்பார்க்கும் இச்சை)—இதில் இல்லை.

"சமூக வழக்கத்தையும் சாத்திரம் சாற்றும் வழக்கத்தையும் கடந்து சென்றவன் எவனே, அவனே சந்நியாசி எனப்படுவான். எப்போது நம் மனம் (உயிர்) முற்றும் இறைவனிடத்தில் செல்லுகிறதோ, எப்போது நாம் இறைவனிடத்தில் மட்டும் சரண் புகுகின்றேமோ, அப்போது இவ்விதப் பிரேமை—அளவு கடந்த பேரன்பு—அரும்பப் போகின்றதென்பது நமக்குத் தெரியும்.''

சாத்திரங்களின் துணை வேண்டாத அளவிற்குப் போதிய வலிமை உங்களிடம் பிறக்கும்வரை, அவற்றுக்குக் கீழ்ப்படியுங்கள்; பின்பு அவற்றைக் கடந்து விரைந்து செல்லுங்கள். நூல்கள் முடிவானவையல்ல. மெய்ப்பித்தலே சமய உண்மையை நிலை நாட்டும் ஒரே வழி. ஒவ்வொருவனும் தனக்குத்தானே மெய்ப்பித்துக்கொள்ள வேண்டும். "நான் கண்டுள்ளேன்; ஆனல், நீ காணமாட்டாய்,'' என்று உரைக்கும் எந்தக் குருவும் நம்பத்தக்கவராகார்; "நீயும் காணக்கூடும்,'' என்று உரைக்கும் குரு ஒருவரே நம்பத்தக்கவர். எல்லாச் சாத்திரங்களும், எல்லா உண்மைகளும், எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும் வேதங்களேயாம்; ஏனெனில், இவ்வுண்மைகள் காண்பதற்குரியன; எவனும் இவற்றைக் கண்டு பிடிக்கக் கூடும்.

"பிரேமை எனும் செங்கதிரோன் அடி வானத்தே உதிக்கத் தொடங்கும்போதும் நம் செயல்கள் அனைத்தையும் இறைவரிடமே சமர்ப்பித்துவிட விரும்புகிறேம்; ஒரு கணம் அவரை நாம் மறக்கும்போது, அது நம்மைப் பெரிதும் துயருறச் செய்கிறது.''

ஈசருக்கும், அவர்மீது உனக்குள்ள பேரன்பிற்கும் இடையே

எதுவும் குறுக்கிட விடாதே. ஈசரை நேசி ; ஈசரை நேசி ; ஈசரை நேசி. உலகத்தார் எது வேண்டுமானாலும் உரைக்கட்டும். பத்தி மூவகைப்படும்: ஒரு வகை, வற்புறுத்திக் கேட்கும், எதனையும் பதிலாகக் கொடாது ; இரண்டாவது வகை, ஒன்றைக் கொடுத்து மற்றொன்றைப் பெறும் ; மூன்றாவது வகை, கைம்மாறு கருதாத அன்பு, விளக்கொளியின்மீது விட்டிற்பூச்சிகளுக்குள்ள அன்பு போன்றது.

"பிரேமை கிரியைகளைவிட உயர்ந்தது ; யோகத்தைவிடச் சிறந்தது; ஞானத்தைவிட மேலானது."

கருமம், அதைப் புரிபவனுக்கு, ஒரு பள்ளிப் பயிற்சி அளவே யாம். பிறர்க்கு அதனால் நன்மை யாதும் விளையாது. நமக்குள்ள இன்னலை நாமே தீர்த்துக்கொள்ள முயல வேண்டும். குருமார், முயலும் வகை இன்னதென நமக்குக் காட்டுவர். "உன் நினைவு எதுவோ, அதுவே நீ ஆவாய்." ஆதலின், உனது சுமையை ஏசு நாதரின்மீது சுமத்துவாயானால், அவரைப் பற்றி நினைத்தல் வேண்டும் ; அவ்வழியே அவரைப் போன்று ஆதல்வேண்டும் ; நீ அவரை நேசிக்கின்றாய்.

"உயர்ந்த பத்தியும் உயர்ந்த ஞானமும் ஒன்றேயாம்."

ஆனால், கடவுளைப் பற்றிக் கற்பனை பண்ணுவது போதாது. உலகத்தையும் அதனிடத்துள்ள பொருள்கள் அனைத்தையும் விட்டு விடு ; 'செடி' இளம்பருவத்தில் இருக்கும்போது இதனைச் சிறப் பாகச் செய்தல் வேண்டும். அல்லும் பகலும் கடவுளை நினை ; இயலுமளவு வேறெதைப் பற்றியும் நினையாதே. அன்றாட அவசிய மான நினைவுகள் அனைத்தையும் கடவுள் மூலமாக நினைக்கலாம். அவருக்காக உண் ; அவருக்காகப் பருகு ; அவருக்காக உறங்கு. எல்லாவற்றிலும் அவரைப் பார். அனைவரிடமும் கடவுளைப் பற்றிப் பேசு—இது மிக்க பயன் தருவதாகும்.

ஆண்டவரின் அருளையும் அவரது மிகமிக உயர்ந்த புதல்வர் களுடைய அருளையும் பெறு ; அவரை அடைய இவையே இரு முக்கிய நெறிகளாகும். ஞான ஒளி பெற்ற இப்புதல்வர்களின் இணக்கம் எய்துதற்கு அரியது. அவர்களோடு ஐந்து நிமிடங்கள் இருப்பின், ஒரு முழு வாழ்வையும் அது மாற்றிவிடும் ; போதும் அளவுக்கு உண்மையாக நீ அதை விரும்பினால், ஒருவர் உன் னிடம் வந்து சேர்வார். பகவானிடம் பத்தி செய்பவரின் சந்நிதா னத்தால் ஓரிடம் புனிதமாகிறது. "பகவானுடைய புதல்வர்களின்

மகிமை அத்தன்மையதாகும்.'' அவர்களே பகவானுவார்கள். அவர்கள் பேசும் போது அவர்களுடைய மொழிகள் வேதங்களாகும். அவர்கள் இருந்த இடம் அவர்களால் ஏற்படும் அதிர்வுகளால் நிறைந்துள்ளது. அங்கே செல்பவர்கள் அவற்றை உணர்கிறுர்கள். தாங்களும் புனிதத் தன்மையினை அடையும் போக்கைப் பெறுகின்றுர்கள்.

"அத்தகைய பத்தர்கட்குச் சாதி, கல்வி, அழகு, பிறப்பு, செல்வம், தொழில் சம்பந்தமான வேறுபாடு இல்லை; ஏனெனில் எல்லாம் அவருடையனவே.''

தீயாரை நெருங்குவதை முக்கியமாகத் தொடக்கத்தில், விட்டுவிடு. உலகியற் சார்புடையாரது சேர்க்கையை விலக்கு; ஏனெனில், அது உனது மனத்தைச் சிதறச் செய்யும். 'எனக்கு, என்னது' என்பதை முழுதும் விட்டுவிடு. இப் பிரபஞ்சத்திலே தனதென ஒன்றும் இல்லாதவன் எவனே, அவனிடமே ஆண்டவர் வருகிருர். உலகியற் பாசங்களாகிய அனைத்தின் தளைகளையும் வேரொடும் வெட்டி எறி. சோம்பலையும், உன் கதி என்ன ஆகுமோ என்ற கவலை முழுவதையும் கடந்து அப்பாற்செல். நீ இயற்றியுள்ள கருமத்தின் பயனைக் காணும்பொருட்டு ஒரு போதும் திரும்பிப் பாராதே. அனைத்தையும் பகவானிடம் ஒப்புவித்துவிட்டு முன் செல்; அதைப் பற்றி நினையாதே. ஆன்மா முற்றும், தைலதாரை போன்று இடையருது பகவானை நோக்கிப் பெருகிக் கொண்டே இருக்கின்றது; செல்வத்தையோ, பெயரையோ, புகழையோ நாடப் பொழுதில்லை; இவ்வித நிலை உண்டாகும்போது அந்த அளவுபடாத—வியக்கத்தக்க—பிரேமையின் ஆனந்தம் பிறக்கின்றது. ஆசைகள் யாவும் கண்ணுடி மணிகளேயாகும். பத்தி ஒவ்வொரு கணமும் உண்டாகும். எப்போதும் புதிதாகவே இருக்கும்—தெவிட்டாதிருக்கும்—இது அனுபவத்தால் மட்டும் அறியக்கூடியது. பத்தி அனைத்திலும் மிக எளியது; அது தருக்கத்திற்காகக் காத்துக்கொண்டிருப்பதில்லை. அது இயல்பானதுமாகும். அதைப் பற்றி நமக்கு அத்தாட்சி வேண்டுவதில்லை; அதை மெய்ப்பிக்க அவசியமுமில்லை. யுத்தியென்பது நமது சொந்த மனங்களால் யாதோ ஒன்றை வரையறைக்கு உட்படுத்துவதேயாகும். நாம் வலையை வீசி ஏதோ ஒன்றைப் பிடிக்கிறோம்; அப்போது, அதனை மெய்ப்பித்துவிட்டதாகக் கூறுகின்றோம். ஆனல் ஒரு போதும் நாம் இறைவரை வலையாற்பிடிக்க இயலாது.

பத்தி யாதொன்ருேடும் தொடர்பற்றதாய் இருக்க வேண்டும். நாம் தவருக அன்பு செய்யும்போதும் அது உண்மையான அன்பின்—கலப்பற்ற பேரின்பத்தின்—தன்மையதாகும்; சக்தி ஒன்றே; நாம் அதனை எவ்வாறு பயன்படுத்தினும், அது ஒன்றே. சாந்தியும் ஆனந்தமுமே அதன் இயல்பு. கொலைஞன் ஒருவன் தன் குழந்தையை முத்தமிடும்போது, அன்பொழிந்த ஏனையவற்றையெல்லாம் ஒரு கணம் மறந்துவிடுகிருன். 'தான்' என்பதை—ஆணவத்தை—முற்றவும் விட்டுவிடு. சினம் காமம் இரண்டையும் விட்டு வெளியேறு; அனைத்தையுமே இறைவரிடமே சமர்ப்பித்து விடு. "நான் இல்லை, நீயே உள்ளனை; பழைய (பண்படாத) மனிதன் முற்றிலும் ஒழிந்துவிட்டான்; நீயே எஞ்சி நிற்கிருய். நான் நீயே." எவர்மீதும் குற்றஞ்சாட்டாதே; தீமை வருமாயின் இறைவர் உன்னேடு திருவிளையாடல் புரிகின்ருர் என்று அறி; அதற்காகக் கரை கடந்த மகிழ்ச்சி கொள்.

பத்தி என்பது காலதேயங்களுக்கு அப்பாற்பட்டது; அது அதீதமானது.

ஜூன் 25—செவ்வாய்க்கிழமை

ஒவ்வோர் இன்பத்தின் பின்னும் துன்பம் வருகின்றது; வருவது நீண்ட காலத்திற்குப் பின்னே, சுருங்கிய காலத்திலோ நிகழலாம். மனிதனது பக்குவம் முதிரும் அளவுக்கு மிக விரைவிலே ஒன்றன் பின் மற்ருென்று வரும். நமக்கு வேண்டுவது இன்பமுமன்று, துன்பமுமன்று. இரண்டும் நம்மை நமது உண்மையான இயல்பை மறக்கும்படி செய்கின்றன; இரண்டும் விலங்குகளேயாகும்; ஒன்று, இரும்பு விலங்கு; மற்ருென்று, பொன் விலங்கு. இவை இரண்டுக்கும் நிலைக்களமாய் இருப்பது ஆன்மா. அது இன்பமோ, துன்பமோ இன்னதென அறியாதது. இவை நிலைகளே. இந்நிலைகள் எப்போதும் மாறிக்கொண்டே இருக்கவேண்டும்; ஆனல், ஆன்மாவின் இயல்போ, ஆனந்தம், மாருத சாந்த வடிவமாகும். நாம் அதை (எங்கிருந்தோ) அடைய வேண்டுவதில்லை; நம்மிடம் அது உள்ளது; அழுக்கை மட்டும் கழுவி அதனைக் காண்போமாக. நாம் ஆன்மாவிலே நிலைபெற்றிருப்போம்; அப்போதுதான் நாம் உலகின்மீது உண்மையாக அன்பு செலுத்த இயலும். மிகமிக உயர்ந்த நிலையில் ஏறி நிற்போம்; (அங்கிங்கெனுதபடி) எங்கும்

பரந்த நமது இயல்பை அறிந்துகொண்டு, தொடர்ந்து சென்று கொண்டிருக்கும் உலகக் காட்சியை முழு அமைதியோடு நோக்கு வோம். இது ஒரு குழந்தையின் விளையாட்டளவேயாம்; நாம் இதை அறிவோம். ஆதலின், இதனுல் தொந்தரவு அடையமாட் டோம். மனம் புகழ்ச்சியால் மகிழுமாயின், இகழ்ச்சியால் துன்ப முறும். ஐம்புல இன்பங்கள் அனைத்தும், மன இன்பங்களும் நிலை யற்றன. ஆனுல், நமக்குள்ளே உண்மையான ஒரே இன்பம் உள் ளது; அது எதனேடும் தொடர்புறது. எதனையும் சார்ந்து அது எழுவதில்லை. அது முற்றிலும் சுதந்தரமானது. அது ஆனந்த மயம். நமது ஆனந்தம் எந்த அளவிற்கு நம் உண்ணின்றும் எழுமோ, அந்த அளவிற்கு நாம் அதிகமாக ஞானச் சார்புடைய ராகிறேம். ஆன்ம சுகானுபூதியே சமயத்தாரால் சமய வாழ் வென்று வழங்கப்படுகிறது.

அகத்தேயுள்ள பிரபஞ்சம் ஆகிய மெய்யானதொன்று, புறத்தே யுள்ளதினும் வரம்பு கடந்த பெரியதாகும்; புறத்தே உள்ளது மெய் யானதொன்றின் நிழலனைய தோற்றமேயாம். இவ்வுலகம் மெய் யானதுமன்று, பொய்யானதுமன்று; இது உண்மைப் பொருளின் நிழலேயாகும். "கற்பனையாவது உண்மையின் பொன் முலாம் பூசப்பெற்ற நிழலே," என்றுர் கவிஞர்.

நாம் படைப்பிற்குட் புகுந்து கொள்ளுகிறேம்; அதன் பின்னர் நமக்கு அது உயிருள்ளது (போல) ஆகிவிடுகிறது. பொருள்கள் தம்மளவிலே உயிரற்றனவாகும்; நாமே அவற்றுக்கு உயிர் ஊட்டு கிறேம். உயிர் ஊட்டிய பின் அறிவிலிகளைப் போல அவற்றைத் திரும்பிப் பார்த்து அச்சமடைகின்றேம்; அன்றேல், போகம் நுகர் கின்றேம்; ஆனுல், கடையிலிருந்து வீட்டுக்குச் செல்லும் வழியில் மழையில் அகப்பட்டுக்கொண்டு பூந்தோட்டக்காரரது வீட்டில் அடைக்கலம் புகுந்த செம்படவ மாதரைப் போன்று இராதீர்கள். பூக்களின் நறுமணம் நிறைந்த காற்று வீசும் தோட்டத்தினை அடுத்த ஓர் அறையில் அவர்கள் இரவு தங்கினுர்கள். அவர்கள் தங்க முயன்றதும் வீணுயிற்று. இறுதியில் அவர்களில் ஒருத்தி கூறிய யோசனைப்படி அம்மாதர்கள் தங்கள் மீன் கூடைகளை நனைத்துத் தலையருகே வைத்துக்கொண்டார்கள். அதன் விளைவாக அனைவரும் நல்ல உறக்கத்தில் ஆழ்ந்தனர்.

இவ்வுலகம் நமது மீன் கூடையாகும். சுகம் பெறுதற்காக நாம் அதனைச் சார்ந்திருத்தல் கூடாது. அவ்வாறு அதனைச் சார்ந்

திருப்போர் தாமசிகர், கட்டுண்டவர் எனப்படுவர். எப்போதும் 'நான், நான்' என்று கூறிக்கொண்டே இருப்பவர் தற்பெருமை உடையோராகிய ராஜஸிகர் எனப்படுவர். அவர்கள் சில சமயம் நற்கருமங்களைச் செய்து ஆன்ம ஞானத்தைப் பெறலாம். ஆனால், உண்முக நோக்குடையராகி ஆன்மாவிலே நிலைபெற்று வாழ்பவரே சாத்துவிகர் எனப்படுவர். அவரே அனைவரினும் சிறந்தோராவார். தாமசம், இராஜசம், சாத்துவிகம் எனும் இம்முக்குணங்களும் ஒவ்வொருவரிடத்தும் உள்ளன; வெவ்வேறு காலங்களில் இவற்றில் யாதேனும் ஒன்று தலையெடுத்து நிற்கும்.

படைப்பென்பது ஏதேனும் ஒன்றை உண்டுபண்ணுவதன்று. தக்கைத் துண்டுகள் ஒரு கலத்திலுள்ள தண்ணீரின் அடியிலே போடப்படுமாயின், அவை தனியாகவோ கும்பல் கும்பலாகவோ மேல் நோக்கிக் கிளம்ப விரைவது போல, நாம் இழந்த சமத்துவத்தை மீண்டும் பெறச் செய்யும் போராட்டமே படைப்பு எனப்படும். வாழ்வோடு தீமையும் வருகின்றது; வந்தே தீரவேண்டும். ஒரு சிறிது தீமையே வாழ்விற்கு மூலமாகின்றது. உலகிலே அச் சிறு தீய இயல்பு இருப்பது மிகவும் நன்றே. ஏனெனில், சமத்துவ நிலைக்கு மீண்டதும் உலகம் முடிவடையும்; ஒருபடித்தாயிருத்தலும் நாசமுறுதலும் ஒன்றேயாகும். ஆதலால், உலகம் அழியும்போது நன்றும் தீதும் அதனோடு ஒழியும். ஆனால், இவ்வுலகத்தினைக் கடந்து நிற்க நமக்கு இயலும்போது, நாம் நன்மை தீமை இரண்டையும் போக்கி, ஆனந்தப்பேறடைகிறோம்.

துக்கமில்லாத சுகமோ, தீமையில்லாத நன்மையோ என்றைக் காயினும் இருக்க வழியில்லை; ஏனெனில், வாழ்வென்பதே சமநிலையினை இழந்த தன்மையாம். நமக்கு வேண்டுவது விடுதலையே (சுதந்தரமே); வாழ்வன்று; சுகமன்று; நன்மையன்று. படைப்பு வரம்பற்றது; ஆதியும் அந்தமும் இல்லாதது. அஃது எல்லையற்ற ஓர் ஏரியிலே எப்போதும் வீசிக்கொண்டிருக்கும் அலையாகும். ஆயினும், இழந்த சமநிலையினை மீண்டும் பெற்றுள்ள கிட்டுதற்கரிய ஆழமான பிரதேசங்களும் பிறவும் உள்ளன; ஆனால் அந்த அலையோ யாண்டும் முன் சென்றுகொண்டேயுள்ளது. சமநிலையைத் திரும்பப் பெறும் போராட்டம் நித்தியமானதே. வாழ்வும் சாவும் ஒரே உண்மைக்கு வழங்கிய வெவ்வேறு பெயர்களேயாகும்; ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாகும். இரண்டும் மாயையே; ஒரு கணம் வாழவும், மறுகணம் சாகவும் பாடுபடும் அறிதற்கரிய

ஒரு நிலையே. இதற்கு அப்பால் உள்ளது உண்மையான வடிவ மாகிய ஆன்மாவே. நாம் கடவுளை ஒப்புக்கொள்ளும் போதும் அக் கடவுளும் உண்மையிலே ஆன்மாதான்; அதனிடத்தினின்றும் நம்மைப் பிரித்துக்கொண்டு நமக்குப் புறத்தேயிருப்பது போல அதனை நாம் வழிபடுகிறோம். ஆனால், அது யாண்டும் நமது உண் மையான ஆன்மவடிவே. அதுவே ஒன்றாயுள்ள கடவுளாம்.

இந்தச் சமநிலையை மறுபடியும் அடைய வேண்டின், தமோ குணத்தை ரஜோ குணத்தால் தடுத்து அடக்கவேண்டும்; பின்னர் ரஜோ குணத்தைச் சத்துவ குணத்தால் வெல்ல வேண்டும்; இத னால் விளையும் சாந்தம் மிக்க அழகிய நிலை மேலும் மேலும் ஓங்க, மற்றவை யாவும் மறைந்துவிடும். பந்தத்தை விட்டுவிடு; 'மகனாக' மாறு. அப்போது இயேசு கிறித்துக் கண்ட வண்ணம் நீயும் தந்தையைக் காணலாகும். அளவு படாத வலிமையே சமயமும் கடவுளும் ஆகும். பலவீனத்தையும் அடிமைத்தனத்தையும் விலக்கிவிடு. நீ பந்தமற்றவன் என உணர்வாயாயின், நீ ஆன் மாவேதான்; நீ பந்தமற்றவன் என அறிவாயாயின் உனக்கு இற வாத் தன்மை உண்டு. பந்தமற்றவராயிருப்பின் கடவுள் இருப்பது உண்மையாகும்.

*   *   *   *

உலகம் இருப்பது எனக்காக; யான் இருப்பது உலகத்திற்காக அன்று. நன்மையும் தீமையும் நமக்கு அடிமைகளாம். நாம் அவற்றுக்கு அடிமைகளல்லோம். விலங்கின் இயல்பாவது, தான் இருந்த இடத்தே இருப்பதே; அதாவது, முன்னேறாதிருப்பதே. மனிதனது இயல்பாவது, நன்மையை நாடலும், தீமையை விலக்கு தலுமாம்; தெய்வத்தின் இயல்பாவது, அவ்விரண்டில் எதையும் தேடாமையே! ஆனால், நித்தியமாய் ஆனந்த வடிவமாயிருப்பதே. நாம் தெய்வங்களாய் இருப்போமாக! நெஞ்சைக் கடல் போல ஆக்கு; இவ்வுலக அற்பப் பொருள் அனைத்திற்கும் அப்பாற்செல்; தீமையைக் கண்டும் உவகை நறவுண்டவனாகு; மூதுலகை ஓர் ஓவியமாக நோக்கு; இப்பாரில் உள்ள எதுவும் உன்னைப் பாதிப் பது இல்லை என்பதை ஓர்ந்து, அந்த ஓவியத்தின் வனப்பை நுகர். ஒரு சேற்றுக் குட்டையிலே குழந்தைகள் கண்ணாடி மணிதனைக் கண்டுபிடிப்பதுண்டல்லவா? அதுவே இந்த ஞாலத்துள்ள நன்மை யாவது அமைதியோடும் ஆன்ம திருத்தியோடும் அதனை நோக்கு.

நன்மை தீமைகளை ஒன்ருகக் காண். இரண்டும் இறைவரது திரு விளையாடலேயாம். அனைத்திலும் ஆனந்தம் கொள்.

* * * *

என் குருநாதர் பின்வருமாறு மொழிவதுண்டு: "யாவும் கடவுளே; ஆனல் புலியுருக்கொண்ட கடவுளை விலக்கிவிட வேண்டும். எல்லா நீரும் நீர்தான்; ஆனல், குடிப்பதற்கு அழுக்கு நீரை விலக்குகிருேம்."

வான் முகடு முழுவதும் தூபக் கிண்ணமாகும்; ஞாயிறும் திங்களும் விளக்குகளாகும். (இந்நிலையில்) வேறென்ன கோயில் வேண்டியுள்ளது? "எல்லாக் கண்களும் உம்முடையனவே (கடவுளுடையனவே); எனினும், உமக்கு (கடவுளுக்கு) ஒரு கண்ணும் இல்லை. எல்லாருடைய கைகளும் உம்முடைய கைகளே; ஆயினும், உமக்கு ஒரு கையும் இல்லை."

ஒன்றையும் வேண்டுமெனத் தேடிச் செல்லாதே; (வேண்டா என்று) எதையும் விலக்காதே; எதிர்ப்படுவதை ஏற்றுக்கொள். ஒன்ருலும் தாக்கப்படாமலிருப்பதே சுதந்தரம் என்னலாம். பொறுமையாயிருப்பதோடு நின்றுவிடாதே; பற்றற்றிரு. எருதின் கதையை நினைவில் இருத்திக்கொள். ஓர் எருதின் கொம்பின் மீது ஒரு கொசு நெடுநேரம் அமர்ந்திருந்தது. பின்பு அதன் மனச் சான்று உறுத்திற்று; அதனல், அது எருதை நோக்கி, "ஐய, யான் நெடுநேரமாய் இங்கே அமர்ந்திருக்கிறேன். ஒரு வேளை யான் உமக்குத் தொந்தரவை அளிக்கலாம். எனக்கு அது வருத்தமாயுள்ளது. இதோ நான் போய்விடுகிறேன்," என்று இயம்பிற்று. ஆனல், அந்த எருதோ, அதற்கு மறுமொழியாக, "இல்லை; நீ அப்படிச் சற்றும் நினையாதே. உன் குடும்பம் முழுவதையும் கொண்டுவந்து என் கொம்பின்மீது வாழலாம். உங்களால் எனக்கு யாது செய்ய இயலும்?" என உரைத்தது.

ஜூன் 26—புதன்கிழமை

நாம் ஆணவம் அற்ற நிலையில் உள்ள போதே மிகச் சிறந்த காரியம் நம்மால் இயற்றப்படுகிறது. நாம் அனைத்தினும் உயர்ந்த சத்தியைப் பிறர் மீது செலுத்துவதும் அப்போதுதான். பெரு மேதாவியர் அனைவரும் இதனை அறிவர். (உலக நாடகத்தின்) தெய்விகச் சூத்திரதாரியாகிய இறைவரிடம் நம்மை முற்றும் ஒப்பு

வித்துவிடுவோம். அவரே எல்லாம் செய்யட்டும். நாமாக ஒன்றையும் செய்யாதிருப்போம். கண்ணபிரான், "அருச்சுனு, இவ் வையக முழுதிலும் எனக்குக் கடமையென்பது யாதொன்றும் இல்லை,'' என்கிருர். கடவுளே உன்னை முற்றிலும் ஆட்டி வைக்குமாறு விட்டுவிட்டு, முற்றிலும் தொடர்பற்றிரு; அப்போதுதான் உண்மையாக உனக்குச் செயலாற்ற இயலும். உண்மையான சக்திகளை (காரணங்களை) எவரும் கண்களால் காண இயலாது; காரியங்களை மட்டும் (விளைவுகளை மட்டும்) நாம் நோக்க இயலும். ஆணவத்தைத் தூர வைத்துவிடு; அதை இழந்துவிடு; அதை மறந்துவிடு; இறைவரைச் செயல் புரியும்படி விட்டுவிடு; செயல் புரிதல் அவரது காரியமாகும். ஒதுங்கி நின்று இறைவரைச் செயல்புரிய விடுவதைத் தவிர நமக்குச் செய்வதற்கு ஒன்றும் இல்லை. நமது அகங்காரத்தை எவ்வளவு ஒழிக்கிருேமோ, அவ்வளவுக்கு இறைவர் நம் உள்ளே புகுகிருர். சிறிய 'நான்' என்பதை நீக்கிவிடு; பெரிய 'நான்' என்பதை மட்டும் வாழவிடு.

நம் எண்ணங்கள் நம்மை உருவாக்குமாறே நாம் உள்ளோம். ஆதலால், நினைப்பதைப் பற்றி விழித்தேயிரு. சொற்கள் அவ்வளவு முக்கியமானவையல்ல. எண்ணங்களே நிலைத்து நிற்கின்றன. அவை நெடுந்தொலை செல்கின்றன. நாம் நினைக்கும் ஒவ்வொரு நினைவிலும் நமது சொந்த ஒழுக்கத்தின் வண்ணம் தோய்ந்திருக்கும்; ஆதலால் தூய்மையும் புனிதமும் வாய்ந்த மனிதனின் விளையாட்டுச் சொற்களும் வசை மொழிகளும் அவனுடைய சொந்த அன்பிலும் தூய்மையிலும் ஆழ்ந்தனவாகி, நன்மையை நல்கும்.

ஒன்றிலும் ஆசையுருதே; இறைவரைச் சிந்தனை செய்; கைம்மாறு கருதாதே; ஆசையற்றவரே பயன்களை விளைவிக்கின்றனர். பிச்சை ஏற்கும் துறவியர் வீடுதோறும் சென்று சமய போதனை செய்கின்றனர். அவர்கள் தாங்கள் ஒன்றும் செய்யவில்லை என்று நினைப்பதுமன்றி, தங்களுடையதென்று உரிமை பாராட்டுவது மில்லை. தாங்கள் அறியாமலே தங்கள் காரியங்களை அவர்கள் இயற்றிவருகின்ருர்கள். அவர்கள் ஞானம் என்னும் மரத்தின் கனியை உண்பார்களாயின் அவர்கள் அகங்காரமுள்ளவர்களாவார்கள். அவர்கள் புரியும் நன்மைகளெல்லாம் பறந்துவிடும். 'நான்' என்று அகங்காரங்கொள்ளும் அக்கணம் முதற்கொண்டு நாம் மோசம் போனவர்களாய் விடுகிருேம். அதை 'ஞானம்' என வழங்குகின்ருேம். ஆனுல், அது ஞானமன்று. ஒரு மரத்தோடு

கட்டப்பட்ட காளே அதனேச் சுற்றிச் சுற்றிப் போவது போலாம். இறைவர் தம்மை மிக நன்ருக மறைத்துக் கொண்டுள்ளார். அதஞல், அவரது கருமம் மிகச் சிறந்ததாகின்றது. அதுபோல எவஞெருவன் தன்னேச் செவ்வனே மறைத்துக் கொள்வானே, அவனே மிக அதிகமான ஒன்றை ஆற்றி முடிப்பவஞவான். உன்னேயே வென்றுவிடுவாயாயின், பிரபஞ்ச முழுதும் உனது உடைமையாம்.

சத்துவ நிலேயிலே நாம் பொருள்களின் உண்மை வடிவத்தையே கண்டுவிடுகிருேம். நாம் ஐம்புலன்களுக்கும் அறிவுக்கும் அப்பால் விரைகின்ருேம். நம்மை (அந்த வடிவத்தை அறிய விடாது) உள்ளே அடைத்து வைத்திருக்கும் வைரமனேய சுவர் அகங்காரமே. 'நாம் இதைச் செய்கிருேம்; அதைச் செய்கிருேம்; ஏனேயவற்றையும் செய்கிருேம்,' என்று கருதிக்கொண்டு அனேத்திற்கும் கர்த்தாக்களாகக் கூறிக்கொள்ளுகிருேம். இந்த அற்ப 'நான்' என்பதை ஒழித்துவிடு; உன்னிடத்துள்ள பேய்த்தனத்தைக் கொன்றுவிடு. ''நானல்லேன்; நீயே,' என்று கூறு; இதை உணர்; இதன்படி வாழ். அகங்காரத்தாற் படைக்கப்பட்ட உலகை நாம் கைவிடும் வரை முத்தியுலகிற்குள் ஒரு நாளும் புக இயலாது. தியாகமின்றி இதுவரை அங்கே எவரும் புகுந்ததுமில்லே; இனி எக்காலமும் புகவுமாட்டார். உலகத்தைக் கைவிடுதலாவது, ஆணவத்தை மறப்பதுதான்; உலகைச் சற்றும் உணராது போதலேதான்; உடலில் வாழ்ந்தும் அதன் வயமாகாது வாழ்தலே தான். இச்சண்டாள அகங்காரத்தை அடியோடு அழித்துவிட வேண்டும். மக்கள் உன்னே இகழும்போது, அவர்களே வாழ்த்து. அவர்கள் உனக்கு எவ்வளவு நன்மை செய்கின்ருர்கள் என்பதை நினே. அவர்கள் தங்கட்குத் தாங்களே தீங்கை விளேத்துக்கொள்கிருர்கள். மக்கள் உன்னே வெறுக்கின்ற இடங்கட்குச் செல்; அவர்கள் உன்னிடமுள்ள அகங்காரத்தை அடித்து வெளியேற்றட்டும். நீ இறைவனே முன்னினும் அதிகமாக அணுகுவாய். குட்டியை அணேத்துக்கொள்ளும் தாய்க் குரங்கைப் போல உலகமாகிய குரங்கை நாம் நம்மால் இயலும்வரை மார்போடு அணேத்துக் கொள்கிருேம்; ஆஞல், இறுதியாக (பொறுக்க முடியாத துயரத்தால்) அதனேக் காலடியில் வைத்து அதன் மீது ஏறி நிற்கும் கட்டாயம் வரும்போது, நாம் கடவுளே அடையச் சித்தமாயிருக்கிருேம். அறத்திற்காகத் துயருறுத்தப்படுபவர் அருள் பெற்றவரேயாவர். நாம் படிக்க இயலாதவராய் இருப்பின், நற்பேறு அடைந்

தவராவோம். ஏனெனில், கடவுளிடமிருந்து நம்மை நீக்கக் கூடியவை அந்த அளவிற்குக் குறைந்தனவாகும்.

சிற்றின்ப நுகர்ச்சி என்பது, கோடித் தலைகளைப் பெற்ற நாக மாகும்; அதனை நாம் காலின் கீழ் இட்டு மிதிக்கவேண்டும். நாம் சிற்றின்பத்தைத் துறக்கிறோம்; முன்னேக்கிச் சென்றுகொண்டே யிருக்கிறோம்; எனினும், ஒன்றையும் காணாது ஏக்கமடைகிறோம். ஆனால், ஊக்கம் குன்றாது உறுதியாக நிற்க வேண்டும். உலக மானது ஒரு பேய். இந்த நாட்டை ஆளும் அரசன் அற்ப அகங் காரந்தான். அதைத் தள்ளிவிட்டு மிகுந்த வலிமையுடன் நில். காமத்தையும், பொன்னையும் புகழையும் கைவிட்டு, இறைவரைச் சிக்கெனப் பற்றி நில். இறுதியில் முற்றிய புறக்கணிப்பு (உபேட்சை நிலையை) அடைவாய். ஐம்புல அவாவைத் திருத்தி செய்வதே ஆனந்தம் எனும் கருத்து, கலப்பற்ற உலோகாயதமாகும். அதிலே உண்மையான ஆனந்தம் அணு அளவும் இல்லை. அதிலே தோன்றும் இன்பம் முழுவதும் உண்மையான ஆனந்தத்தின் நிழலேயாகும்.

இறைவரிடம் தம்மை ஒப்படைத்தவர்கள், உழைப்போர் என் னும் பெயர் பெற்றுள்ளவர் அனைவரினும் உலகத்திற்கு அதிக நன்மை செய்பவர்களாவார்கள். தன்னை முழுதும் தூய்மைப் படுத் திக் கொண்ட ஒருவன், ஒரு சேனைப் பிரசாரகர்கள் புரிவதைக் காட்டிலும் மிகுதியாகக் காரியம் சாதிப்பவனுவான். தூய்மை யினின்றும், மோனத்தினின்றும் சக்தி வாய்ந்த மொழி பிறக் கின்றது.

"அல்லிப் பூவைப் போல அமைந்திரு. ஓரிடத்தே நிலைத் திருந்து உன் இதழ்களை விரித்துக் கொண்டிரு. வண்டினங்கள் தாமாகவே அங்கு வந்து சேரும்."

கேசவ சந்திரசேனருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கும் ஒரு பெருவேறுபாடு இருந்தது. இவ்வுலகிலே பாவமும் இடும்பையும் உண்டு என்றோ, போராடுதற்கெனத் தீமை உளதென்றோ ஸ்ரீ ராம கிருஷ்ணர் ஒரு நாளும் ஒப்புக்கொள்வதில்லை. சந்திரசேனர் ஓர் அறநெறிச் சீர்திருத்தக்காரர்; பிரம்ம சமாஜத்தை நிறுவிய அதன் தலைவர். தட்சிணேசுவரத்துத் தீர்க்கதரிசியான ஸ்ரீ ராமகிருஷ்ணர், பன்னிரண்டாண்டுகள் தனிமையில் நோற்ற பின் இந்தியாவில் மட்டுமின்றி, உலக முழுவதிலும் ஒரு (கருத்துப்) புரட்சியை விளை வித்து விட்டார். அனுபூதியொன்றிலே ஈடுபட்டு வாழ்ந்து அன்

பைச் சொரிந்துவிட்டுத் தமது சீவத் தன்மையை மறைத்துக் கொள்ளும் மௌனிகளிடமே சக்தி குடி கொண்டுள்ளது. அவர்கள் 'யான், எனது' என்று ஒரு போதும் உரைப்பதில்லை; கருவிகளாய் இருந்ததனுல், அருட்பேறு எய்தியவர்களாகின்ருர்கள். அத்தகைய மக்களே எப்போதும் (அனுபூதியில் ஆழ்ந்து) வாழ்பவர்களாய், இறைவரோடு முற்றிலும் ஒன்றுபட்டவர்களாய், வடிவ மாத்திர மாய்த் திகழ்பவர்களாய், ஒன்றையும் வேண்டாதவர்களாய், எதையும் அறிந்து செய்யாதவர்களாய், கிறித்துகளையும் புத்தர்களை யும் படைக்க வல்லவர்களாய் இருப்பார்கள். அவர்களே உலகத்தை நடத்தி வருபவர்கள்; சீவன் முத்த நிலையில் இருப்பவர்கள்; ஆணவம் இம்மியளவும் இல்லாதவர்கள்; தாங்கள் ஒரு சீவன் என்ற நினைவே சூறையாடப் பெற்றவர்கள்; பேராசை பாழானவர்கள். அவர்கள் முற்றும் அற வடிவினர்கள்; சீவராக உருப்பெற்றவர் களல்லர்.

ஜூன் 27—வியாழக்கிழமை

[சுவாமிகள் இன்று காலை 'புதிய ஏற்பாடு' எனும் கிறித்தவ நூலைக் கொணர்ந்து யோவான் எழுதிய சுவிசேஷத்தைப் பற்றிப் பேசினுர்]

கிறித்து அனுப்புவதாக வாக்களித்துச் சென்ற 'ஆறுதல் கூறுவோர்' தாமே என்று மகம்மது உரிமை பாராட்டினுர். இயேசுவை ஒரு தெய்விகப் பிறப்பினர் என உரிமை கொண்டாடுதல் அவசியமன்று என அவர் கருதினுர். அவ்வண்ணம் உரிமை பாராட்டுதல் எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும், பொதுவாக நிகழ்ந்துள்ளதே. பெரியார் அனைவரும் தெய்வங்களைத் தம் பெற்ருேராக உரிமை பாராட்டியவரேயாவர்.

அறிதல் என்பது வழக்கில் (வியாவகாரிகம்) இருப்பதே. ஆனுல் கடவுளை ஒருகாலும் நம்மால் அறிய இயலாது. அறிவு கீழ்ப்படியைச் சார்ந்தது. ஆதாம் எனும் ஆதி மனிதன் கீழ் நிலைக்கு இறங்கியது, அவன் (நன்று தீது எனப்பகுத்து) 'அறிய' நேரிட்ட போது தான் நிகழ்ந்தது. அதற்குமுன் அவன் கடவுளாயிருந்தான்; தூய்மையின் உருவாயிருந்தான். நாமே நம் சொந்த முகங்களாகிருேம். (நாமும் நம் முகங்களும் வேறல்ல; நம்முடைய முகங்களை நாமே எப்படிக் காண இயலும்?) பிரதிபிம்பத்தைத்தான் நோக்கஇயலும். (அதற்கு மூலமான) உண்மைப் பொருளை ஒருபோதும் நம்மாற்

காண இயலாது. நாம் அன்பு வடிவம்; ஆனால், அதைப் பற்றி நினைக்கும் போது, நாம் ஒரு மனத் தோற்றத்தைக் கொண்டே அவ்வாறு செய்ய வேண்டுவதாகிறது; இதனால், பிரகிருதியானது புற உருக்கொண்ட நினைவே [1] என்பது மெய்ப்பிக்கப்படுகிறது.

நிவிருத்தியாவது, உலகத்தைவிட்டு வேறு புறம் திரும்பலாகும். முதன்முதல் படைக்கப்பட்டவர் (சனக, சனந்தன, சனாதன, சனத்குமாரர்) நால்வராவர். புறத்தே தோற்றுவித்தல் சிறப்பான தன்று என அன்னத்தால் (கடவுளால்) எச்சரிக்கப்பட்டதாகவும் அதனால் அவர்கள் படைப்புத் தொழிலை ஏற்காது வாளா இருந்த தாகவும் இந்து மதப் புராணம் இயம்புகின்றது. இதன் கருத்து யாதெனின், பேச்சு என்பதே இழிதலாகும் (இழிந்த நிலை எய்த லாகும்); ஏனெனில், வாக்கால் சிறந்த புராணப் பொருளை உரைக்க வேண்டின், எழுத்தைக் கொண்டுதான் உரைக்க இயலும். அப் பொழுது எழுத்து (அப்பொருளை விளக்கமாட்டாது) அதனை மறைத்துவிடுகிறது (உயிரற்றதாக்கிவிடுகிறது). எனினும், பரம் பொருள் பிராகிருதப் போர்வையை அணிந்தே ஆக வேண்டும். போர்வையின் காட்சியில் உண்மைப் பொருள் மறைவதை நாம் பின்னரே அறிகிறோம். பெருங்குரவர் ஒவ்வொருவரும் இதை அறிந்துள்ளவரேயாவர். இதனாலன்றோ தீர்க்கதரிசிகள் ஒருவர் பின் ஒருவராகத் தொடர்ந்து வந்து நமக்குத் தத்துவத்தை எடுத்துக் காட்டி, காலத்திற்கேற்றவாறு ஒரு புதுப் போர்வையை அதற்கு அளிக்க நேர்கிறது? சமயம் ஒன்றே என்றும், எல்லாக் குரவர்களும் அதனையே போதிக்கின்றார்கள் என்றும் என் குரு நாதர் அறிவுரை வழங்கினர். ஆனால், அப்பரம்பொருளை ஒரு வடி வத்தின் மூலமாக எடுத்துக் காட்ட இயலுமாதலின் பழைய வடிவத் தினின்றும் அதனை வெளியே எடுத்து நம்முன் அதனை ஒரு புதிய வடிவத்தில் அமைத்துக் காட்டுகின்றனர். நாம் நம்மை நாம ரூபங்களினின்றும், சிறப்பாக உடலினின்றும் விடுவித்துக்

---

[1] அறிபவன் தனது பிரதிபிம்பத்தை அறிவதன்றித் தன்னை அறிய முடியாதவன் ஆதலின், அவன் எப்போதும் அறியவொண்ணாத பொருளா கிறான். அக்காரணம் பற்றியே அறிவு அறிபவனினின்றும் பிரிந்து வேறாக நிற்கின்றது; ஆதலால், புறவுருக்கொண்ட நினைவாகின்றது. அது அறிப வனுக்கு வெளியே வேறான ஒரு பொருளைப் போன்று நிற்கின்ற நினை வாகும். அறிபவன் 'புருடன்' எனும் பெயர் பெறுதலால், அதனிற் பிரிந்து வேறாக நிற்பது பிரகிருதி எனும் பெயர் பெறுதல் வேண்டும். இதனால், சுவாமி பிரகிருதி புறவுருக்கொண்ட நினைவே என்றார்.

கொள்வோமாயின், நல்லதோ, கெட்டதோ, எவ்வுடலும் நமக்கு வேண்டா எனும் நிலை வருமாயின், அப்போதுதான் நாம் பந்தத்தினின்றும், உய்ந்தவராவோம். முடிவற்ற முற்போக்கு முடிவற்ற பந்தமேயாகும்; உருவ அழிவே விரும்பத்தக்கது. தேவ சரீரமாயினும் சரி, எவ்வுடலினின்றும் [1] யான் விடுதலை அடையவேண்டும். உண்மையாய் இருப்பவர் கடவுளே; இரண்டு பொருள்கள் சத்தானவையாகா. ஆன்மா ஒன்றே; நானே அது.

நற்கருமங்கள் விடுதலைக்கு ஏதுவாகும் முறையிலே மட்டும் விலையுயர்ந்த மதிப்புடையவை; அவை கருமஞ் செய்வோனுக்கே நலன் அளிப்பன; பிறனெவனுக்கும் நன்மையைக் கொடாதன.

அறிதலாவது, இனம் பிரித்தலேயாகும். ஓரினத்தைச் சார்ந்த பல பொருள்களைக் காணும்போது அவற்றின் தொகுதிக்கும் ஒரு பெயரிட்டு, அதோடு திருத்தியடைகிறோம்; 'நிகழ்ச்சி'களை (உண்மைகளை) நாம் கண்டுபிடிப்பதன்றி, அவற்றின் காரணத்தை (ஏன் அவ்வாறு நிகழ்கின்றன என்பதை) ஒரு நாளும் கண்டுபிடிப்பதில்லை. முன்னினும் அகன்றதோர் இருள் செறிந்த பிரதேசத்தில் சுற்றி வந்து (விசாரணை செய்து) விட்டு, நாம் ஏதோ ஒன்றை அறிந்துவிட்டதாக எண்ணுகின்றோம். இவ்வையகத்தில் 'ஏன்' என்ற கேள்விக்கு விடை கூறல் இயலாது; அதனைப் பெற நாம் கடவுளிடம் செல்லவேண்டும். அறிவோனை ஒரு போதும் உரை வரம்புக்கு உட்படுத்த இயலாது; கடலில் விழுந்த ஓர் உப்புக் கல் போன்றதே அவனது நிலை. அறிவோன் கடலில் (பரப்பிரம்மத்தில்) இரண்டறக் கலந்துவிடுவான்.

வேற்றுமைப்படுத்தலினால் படைப்பு ஏற்படுகிறது; ஒருபடித்தாயிருத்தல் எனும் சமத்துவமே கடவுள். வேற்றுமைப்படுத்தற்கு அப்பாற் செல்; வாழ்வையும் சாவையும் அப்போது நீ வெல்வாய்—நித்தியமான சமத்தன்மையை அடைந்து கடவுளிடம் நிலைப்பாய்—கடவுளே ஆவாய். உயிரை இழந்தேனும் முத்தியைப் பெறு. ஒரு புத்தகத்திற்கு (அதனிடமுள்ள) தாள்கள் எத்தன்மையனவோ, அத்தன்மையனவேயாகும் நமக்கு நம் பிறவிகள்; ஆனால், நாமோ, மாறுத சாட்சியான ஆன்மாவாகிறோம். ஒரு கொள்ளிக்கட்டையை

[1] உடல் வரையறைக்குட்பட்ட ஒன்று. ஆதலால் உடலற்றது எல்லையற்றதாய் அகண்டமாய் இருத்தல் வேண்டும். அகண்டப் பொருள்கள் இரண்டு இருத்தல் ஒண்ணாது. ஆதலின், உடலற்ற கடவுளாகிய ஓரே ஆன்மா, ஒன்றாக இருத்தல் வேண்டுமேயன்றி இரண்டாதல் ஒண்ணாது.

மிக விரைவாகச் சுழற்றும்போது ஓர் ஒளி வட்டம் நம் கண்ணுக்குத் தோன்றுவதுபோல, ஒரு பதிவு நம்மீது ஏற்படுகிறது. எல்லாச் சீவர்களுக்கும் அடிப்படையிலுள்ள ஒற்றுமையே ஆன்மா; அது அசையாது நித்தியமாய், மாறுததாயிருப்பதால், அதுவே கடவுள்; ஆன்மா. அது உயிரன்று; உயிராக மாறுபாடடைகின்றது. அது சுகமன்று; சுகமாக மாற்றப்படுகின்றது.

இன்று உலகத்தார் கடவுளைக் கைவிட்டு வருகின்றனர்; காரணம், அவர் உலகத்திற்கு வேண்டுவதைப் போதுமளவு செய்வதாகத் தோற்றுததுதான். ஆதலால், அவர்கள் "அவரால் என்ன நன்மை?" என்கிருர்கள். நாம் கடவுளை நகராண்மைக் கழக அதிகாரியென்ரு கருதுவது ?

நாம் செய்யக்கூடியதெல்லாம், ஆசைகள் பகைகள் வேறுபாடுகள் ஆகிய அனைத்தையும் அடக்கிவிடுவதே; சீவத் தன்மை மீது ஆட்சி புரிவதே; மனம் எனும் துறையில் தற்கொலை செய்வதே என்னலாம். உடலையும் மனத்தையும் தூய்மையாகவும், நல்ல நிலைமையிலும் வைத்திரு; ஆனுல், கடவுளை அடைய நமக்குத் துணை செய்யும் கருவிகளாக மட்டும் அவை திகழட்டும். இதுவே, அவற்றின் ஒரே மெய்ப்பயன். உண்மையை உண்மைக்காகவே நாடு; ஆனந்தத்தையும் எதிர்பாராதே. அது தானே வந்தடையலாம்; ஆனுல், உன்னைத் தூண்டுகோலாகக் கொள்ள அதற்கு இடங்கொடாதே. கடவுளை அடைவதைத் தவிர வேறு நோக்கங் கொள்ளாதே. நரகத்தின் வழியாகவேனும் உண்மையை நாடுந் துணிபு கொள்.

ஜூன் 28—வெள்ளிக்கிழமை

[கூட்டத்தார் அனைவரும் இன்று ஒரு விருந்திற்குச் சென்றனர். எங்கிருந்தாலும் சுவாமிகள் உபதேசித்துக்கொண்டேயிருப்பார்கள்; எனினும், குறிப்புகள் எழுதப்படவில்லை. அவர் பேசியதைப்பற்றிய எழுத்து ஒன்றும் அகப்படவில்லை. ஆனுல், விருந்திற்குப் புறப்படுமுன் காலைச் சிற்றுண்டி அருந்தத் தொடங்குமுன் அவர் பேசியது இது:]

எல்லா உணவிற்கும் நன்றி கூறு. அது பிரம்மமேயாகும். அவரது எங்கும் பரந்த சத்தி தனி மனிதனது சத்தியாக மாற்றப்படுகிறது; நாம் செய்யும் எல்லாச் செயல்களுக்கும் நமக்கு அது துணை புரிகின்றது.

ஜூன் 29 - சனிக்கிழமை

[*சுவாமி தமது கையில் கீதையோடு இன்று காலை வந்தார்.*]

உயிர்கட்கு இறைவராகிய கண்ணபிரானுர் அருச்சுனனுக்கிய குடாகேசனிடம் (உறக்கத்தை வென்றவனிடம்) பேசுகிருர். தர்ம க்ஷேத்திரம் (போர்க்களம்) இவ்வுலகமாகும். (நீதியைக் குறிக்கும்) பஞ்ச பாண்டவர் (நாம் நேசிப்பனவும், எதிர்த்துப் போராடத் தக்கனவுமாகிய) நூறு சகோதரர்களோடு போராடுகின்றனர்; (ஞான விழிப்புற்ற ஆன்மாவாகிய) மிகு வீரத்தன்மை வாய்ந்த அருச்சுனன் சேனைத் தலைவனுகிருன். நாம் எவற்றினிடத்து மிக்க பற்று உடையோமோ, அந்த இந்திரிய சுகங்கள் அனைத் தோடும் போர் புரிந்து, அவற்றைக் கொல்ல வேண்டும். நாம் தனிமையாக நிற்றல் வேண்டும். நாம் பிரம்மம்; ஏனைய எண் ணங்கள் யாவற்றையும் இதனுள் அமிழச் செய்ய வேண்டும்.

கண்ணபிரானுர் எல்லாவற்றையும் இயற்றினுர்; ஆனுல், சிறிதும் பற்றின்றியே செய்தார். அவர் உலகத்து வாழ்ந்தும், உலகத் துக்கு வசப்பட்டவரல்லர். "எல்லாக் கருமங்களையும் செய்; ஆனுல், பற்றின்றிச் செய்; கருமத்தின்பொருட்டே கருமஞ் செய்; உன் பொருட்டு ஒரு பொழுதும் கருமஞ் செய்யாதே."

* * * *

நாம ரூபங்கள் சம்பந்தப்பட்டமட்டில் விடுதலை என்பது ஒரு போதும் உண்மையாகமாட்டாது. (பானைகளாகிய) நாம் எப்பொரு ளால் ஆக்கப்பட்டுள்ளோமோ, அக்களிமண்ணே அது; அப்போது அது வரையறைக்குட்பட்டது; விடுதலை பெற்றுள்ளதன்று. ஆதலால் தொடர்புற்ற ஒன்றைப்பற்றியவரை விடுதலை என்பது ஒரு நாளும் உண்மையாகாது. ஒரு பானை, "நான் விடுதலை பெற்றுள்ளேன்" என்று பானையான நிலையில் ஒரு பொழுதும் கூறலாகாது; உரு வத்தைப் பற்றிய எண்ணம் முழுவதையும் இழக்கும் போதே அது விடுதலை அடைகின்றது. இப்பிரபஞ்சம் முழுவதும் வேறுபாடுக ளோடு கூடிய ஆன்மாவேயாகும். வேறுபாடு அமைந்திருப்பதனுல், பொறுக்கத்தக்கதாக்கப்படும் ஒரு பண் போன்றது; சில சமயம் அபசுரங்கள் ஏற்படுகின்றன. ஆனுல், அவை பின் வரும் இனி மையை மிகவும் பூரணமாக்குவன. எங்கும் நிறைந்த இனிய இசையில் மூன்று கருத்துக்கள் தலையெடுத்துள்ளன; அவையாவன:

சுதந்திரம், வலிமை, சமத்துவம் என்பன. உனது சுதந்தரத்தால் பிறர்க்குத் துன்பம் உண்டாகுமாயின், நீ விடுதலை பெற்றவனுக மாட்டாய்; நீ பிறர்க்குத் துன்பம் விளைவிக்கக்கூடாது.

"பலவீனனுவது துயரமடைதலே யாகும்." என்று இசைக்கின்ருர் மில்டன் என்னும் கவிஞர். கருமஞ் செய்தலும், துன்புறுதலும் பிரிக்கமுடியாதபடி இணைந்துள்ளன (பன்முறையும் பெரிதும் சிரிப்பவன் பெரிதும் துயருறுபவனேயாவான்). "செய்கருமத்தே யன்றிச் சேரும் பயன் தன்னில் ஐய, உனக்கில்லை அதிகாரம்."

* * * *

தீய நினைவுகள், சடவுலக நிலையினின்று நோக்குங்கால், நோய்க் கிருமிகளேயாகும். நம் உடல்கள் இரும்புத் துண்டு போன்றவை; ஒவ்வொரு நினைவும் அதன் மீது ஒரு சிறு சம்மட்டியால் அடிக்கும் அடிபோன்றது. அதன் மூலம் நாம் அதை நினைத்தவாறு உருவாக்குகிருேம்.

நாம் நம் உள்ளங்களைத் திறந்து வைத்திருப்போமாயின் இப் பிரபஞ்சத்திலுள்ள எல்லா நல்ல நினைவுகட்கும் உரிமையுடையவராவோம்.

புத்தகம் முழுவதும் நம்மிடம் உள்ளது. "மூடனே, உனக்கு இது காதில் விழவில்லையா? உனது நெஞ்சிற்குள்ளே இரவும் பகலும் நித்தியமான இன்னிசை—சச்சிதானந்த ஸோஹம், ஸோஹம் (இயல், உண்மையறிவு இன்பம், நான் அவனே, நான் அவனே எனும் இசையொலி) ஒலித்துக் கொண்டேயுள்ளது.

எல்லா அறிவிற்கும் ஊற்று நம்மில் ஒவ்வொருவரிடத்திலும் திகழ்கின்றது; எறும்பினிடத்தும் மிக உயர்ந்த ஞானியிடத்தும் அமைந்துள்ளது. உண்மையான மதம் ஒன்றே; ஆனுல், நாம் உருவங்கள் மூலமும், குறிகள் மூலமும், விளக்கங்கள் மூலமும் போராடுகிருேம். 'இராமராச்சியம்' எனும் இக்காலம் இதைக் காணுந் திறமையுள்ளார்க்கு, முன்னரே இருப்பதுதான்; நாம் நம்மையே இழந்துவிட்டோம். அதன் பின் உலகத்தை இழந்துவிட்டதாக நினைத்துக் கொள்கிருேம்.

'பூரண வலிமை' என்பது இவ்வுலகில் நைஷ்கர்மியமே (செயலின்றியிருத்தலே) யாகும். அது தன்னிலையில் உள்ளது என்பதே; கருமஞ் செய்வதன்று.

உண்மையான நிறைவுத் தன்மை (பூரணத்துவம்) ஒன்றே

தான்; ஒன்றேடொன்று ஒப்பிட்டுக் காணப்படும் பூரணத் தன்மைகள் பலவாகத்தான் வேண்டும்.

ஜூன் 30—ஞாயிற்றுக்கிழமை

பொய்ம்மையின்றி நினைக்க முயலுதல், இல்லாததை இருப்பதாக்க முயலுவதாகும். தூல உதாரணம் ஒன்றின்றிப் "பாலூட்டுவன விலங்குகள்" என்ற கருத்து எழாது; அவ்வாறே கடவுளைப் பற்றிய கருத்தும்.

இவ்வுலகிலுள்ள கருத்துகளினின்றும் வடித்துப் பெற்ற தனிப் பெருங்கருத்தே நம்மாற் கடவுள் எனப் பெயரிடப் பெறுவது.

ஒவ்வொரு நினைவிலும் இரு பகுதிகள் உள்ளன; அவை, கருத்தும் மொழியுமாம். அவை இரண்டும் நமக்கு இன்றியமையாதவை. கருத்துண்மை வாதியரோ, பொருள் உண்மை வாதியரோ, எவரது கூற்றும் சரியானதன்று; கருத்தும் மொழியும் ஆகிய இரண்டையும் நாம் கொள்ளவேண்டும்.

நமது முகத்தைக் காண்பது கண்ணுடியின் மூலமே இயலுமாதலான், அறிவு முழுவதும் பிரதிபிம்பத்தைப் பற்றியதே. எவரும் தம் சொந்த ஆன்மாவையோ, கடவுளையோ அறிய இயலாது. ஆனல், நாம் அந்தச் சொந்த ஆன்மாவேயாவோம்; கடவுளேயாவோம்.

'நீ' என்பதே இல்லாத போது நீ நிருவாண நிலையில் உள்ளனை. "நீ மிகச் சிறந்த நிலையில் இருப்பதும், நீ உண்மையாயிருப்பதும் 'நீ' என்பது இல்லாத பொழுதே;" அதாவது சிறுமையுடைய அகங்காரம் ஒழியும்போதே. தெய்விக உள்ளொளி பெரும்பாலரிடத்து மறைக்கப்பட்டுளது. இரும்புக் கூண்டுக்குள் வைத்த விளக்குப் போன்றது அது; சிறிதளவேனும் ஒளி அது வாயிலாக வெளி வாராது. மெல்ல மெல்லத் தூய்மையாலும் சுய நலமின்மையாலும், மறைக்கும் ஊடு பொருளை வரவர மெல்லிதாக்கி, இறுதியில் அது கண்ணுடியைப் போன்ற ஒளி புகும் பொருளாகுமாறு செய்ய இயலும். இரும்புக் கூண்டு கண்ணுடிக் கூண்டாக மாற்றப் பட்டிருந்தது போன்றவர் ஸ்ரீ ராமகிருஷ்ணர். அவர் வாயிலாக உள்ளொளியை உள்ளவாறே காண இயலும். கண்ணுடிக்கூண்டாதற்கும் அதனினும் மேன்மேலும் உயர்ந்த பிரதி பிம்பங்களாதற்கும் உரிய நெறியில் நாம் அனைவரும் சென்று கொண்டிருக்

கிறோம். ‘கூண்டு’ என்பது ஒன்று உள்ள வரைக்கும், சடசாதனங்கள் வாயிலாகத்தான் அவசியம் கருதவேண்டும். பொறுமையற்றவன் ஒரு நாளும் வெற்றியடைய மாட்டான்.

* * * *

பெருஞானியர் தத்துவத்தினைப் போதிக்க உதவும் தூய விளக்கமாவர். ஆனால், சீடர்கள் ஞானியையே தத்துவமாக்குகின்றார்கள்; அதன் பின் மனிதரிடத்துள்ள தத்துவத்தை மறந்துவிடுகின்றார்கள். உருவக் கடவுளைக் குறித்துப் புத்தர் ஓயாது பலமாகக் கண்டித்ததன் விளைவாகவே இந்தியாவில் உருவ வழிபாடு புகுவதாயிற்று. வேத காலத்தில் மக்கள் உருவங்களை அறியாது போனார்கள்; காரணம் யாதெனின் அவர்கள் கடவுளை, எங்கும் கண்டமையே; படைப்பவரும் தோழருமான கடவுளை இழந்தமைக்கு எதிர்வினையாக எழுந்ததே உருவஞ் சமைத்தல். அதனால், புத்தர் ஓர் உருவமானார். அத்தகையவரே இயேசுவும். உருவங்கள் உலவுவதற்குரிய எல்லையாவது, மரம் கல் என்பவற்றிலிருந்து தொடங்கி இயேசு புத்தர் வரை அமைவதே. ஆனால், நமக்கு உருவங்கள் இன்றியமையாதவைகளே.

* * * *

வலியச் செய்யப்படும் சீர்திருத்த முயற்சிகள் எப்போதும் சீர்திருத்த வேகத்தைத் தணிப்பதிலேதான் முடியும். “நீ தீயவன்” என்னாதே; “நீ நல்லவன். ஆனால், முன்னிலும் நல்லவனாகுக” என்றே மொழி.

ஒவ்வொரு நாட்டிலும், குருமார்கள் கேடு விளைவிப்பவர்களாவார்கள்; ஏனெனில், அவர்கள் கண்டிக்கின்றார்கள்; ஏசுகின்றார்கள்; ஒரு கயிற்றைச் சரிப்படுத்தும்பொருட்டு அதனை இழுத்து இழுத்து, வேறு இரண்டு மூன்று கயிறுகளை இடம் பெயரச் செய்கின்றார்கள். அன்பு ஒரு போதும் குறை கூறாது; பேராசையே அதனைச் செய்கின்றது. நேர்மையான சீற்றம் எனப்பட்டதே இல்லை.

ஒருவனைச் சிங்கமாக இடங்கொடாவிடில், அவன் ஒரு நரியாகி விடுவான். பெண்ணினம் ஒரு சத்தியே. இப்போது மட்டுந்தான், ஆணினம் அதனைத் துன்புறுத்துவதனால் அது தீமை விளைவிக்கவே மிகவும் உரியதாகின்றது.—அவள் நரியாகிறாள். ஆனால், அவளை எவரும் துன்புறுத்தாதபோது அவள் சிங்கமாவாள்.

சாதாரணமாகக் கூறுமிடத்து, ஞான அவாவினை அறிவாற்றலினால் சமன்படுத்துதல் வேண்டும்; அன்றேல், அது வெற்று உணர்ச்சியளவாகவே இழிந்துவிட நேரும்.

* * * *

மாறும் பொருள்களுக்கிடையே மாருத பொருள் ஒன்றுளது என்பதை ஆத்திகர் அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர்; ஆனல், பரம்பொருளைப் பற்றிய கருத்துகளில் அவர்களுக்குள் வேறுபாடு இருப்பது உண்மையே. புத்தர் இந்த உண்மையை முற்றிலும் மறுத்தனர். "பிரம்மம் இல்லை; ஆன்மா இல்லை; தனிச்சீவன் இல்லை," என்று அவர் சாற்றினர். ஒழுக்கத்தைப் பொறுத்த வரையில் உலகம் இதுவரை கண்டவர்களுள் எல்லாம் மிக உயர்ந்தவர் புத்தரே. அவருக்கு அடுத்தவர் கிறித்துவே. ஆனல், கீதையில் உரைக்கப்பட்டுள்ளபடி கண்ணபிரானுருடைய போதனைகள், உலகம் இதுவரை அறிந்தவற்றுளெல்லாம் மிக்க பெருமையுற்றனவேயாம். அந்த வியத்தற்குரிய செய்யுள் நூலை இயற்றியவர் அரிய புருடர்களுள் ஒருவர்; அப்புருடர்கள் உலக முழுதும் புத்துயிரூட்டும் அலையொன்றை அனுப்புகின்றூர்கள். கீதையை ஆக்கியோன் மூளையைப் போன்ற ஒரு மூளையை—அறிவுச் சுடரை—மனித இனம் இனி ஒரு காலமும் காணப்போவதில்லை.

* * * *

நன்மையாகவோ தீமையாகவோ வெளிப்படும் சத்தி ஒன்றேயுள்ளது. கடவுளும் தீமை வடிவமான அரக்கனும் ஒன்றுக்கு ஒன்று எதிரான திசைகளில் ஓடிக்கொண்டிருக்கும் நீரோட்டம் பெற்ற ஒரே ஆறு ஆவர்.

ஜூலை முதல் தேதி—திங்கட்கிழமை

(ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர்)

ஸ்ரீ ராமகிருஷ்ணர் வைதிக நெறியை மிகுதியாகப் பின்பற்றி வாழும் ஓர் அந்தணரின் மைந்தராவர். அந்த அந்தணர், குறிப்பிட்ட ஒரு சாதிப் பிராமணரல்லாத ஏனையோரிடமிருந்து எதையும் தானம் வாங்க மறுப்பார்; அவர் வேலை செய்யக்கூடாது; ஒரு கோயிலிற் பூசாரியாக இருத்தலும் கூடாது; புத்தகங்களை விற்கவும்

கூடாது; எவருக்கும் கீழே தொழிலில் அமரக் கூடாது. விண்ணி லிருந்து விழுவனவற்றையே—பிச்சையையே—ஏற்கக்கூடும்; அப் போதும் இழிந்த நிலையிலுள்ள அந்தணரிடமிருந்து அதனைப் பெறுதல் தகாது. கோயில்கள் இந்து மதத்தைப் பற்றிக்கொண் டிருப்பதில்லை; அவையனைத்தும் அழிந்தாலும், மதம் இம்மியும் பாதிக்கப்படமாட்டாது. ஒரு மனிதன் இல்லங்களைக் கடவுளுக்கும் விருந்தினர்க்குமே நிறுவ வேண்டும்.

ஒருவன் தனக்கென வீடு அமைத்துக் கொள்ளுதல் தன்னலங் கருதலாகும்; ஆதலால், இறைவருக்கு இல்லங்களாகுமாறு அவன் கோயில்களை எழுப்புகின்றான்.

அவரது குடும்பத்தின் நிலை வறுமையின் உச்சியை எட்டி யிருந்தமையால், ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு இளமையிலே தேவிக்கு எனக் கட்டப்பட்டுள்ள ஒரு கோயிலில் பூசாரியாகும் அவசியம் நேர்ந்தது; தேவிக்குப் 'பிரகிருதி' என்பதும் 'காளி' என்பதும் பெயர்; ஒரு பெண் வடிவில் தன் பாதங்களை ஓர் ஆண் வடிவத்தின் மீது வைத்து நிற்கும் கோலம் அதனைக் குறிக்கும். மாயை மேற் கிளம்பும்வரை நம்மால் ஒன்றும் அறிய இயலாது என்பதை அது சுட்டும். பிரம்மம் ஆண் பெண் வேறுபாடு அற்றது; அறியப்படா தது; அறிவின் வரம்பைக் கடந்தது; ஆனாலும், அது புறத்தே தோற்றும் பொருளாக வேண்டும்; அது தன்னை மாயையெனும் திரையால் மறைத்துக்கொண்டு உலக அன்னை (ஜகன்மாதா) ஆகி றது; ஆதலின், உலகைப் படைக்கின்றது. கீழே படுத்துக் கொண் டிருக்கும் சிவம் (பரம்பொருள்) தன்னை மாயை மூடுவதால், சவம் (உயிரற்றது) ஆகிவிட்டது. "வலியயான் (மறைபட்டிருக்கும்) கடவுளை வெளிப்படுத்துவேன்?" என்பதே அத்வைதம்; ஆனால், பத்தனோ, "அம்பிகையை இறைஞ்சுவதால் திறவு கோலை வைத் திருக்கும் ஒருத்தியேயான அவளையே கதவைத் திறக்கும்படி மன் றாடிக் கடவுளைக் காண வைப்பேன்," என்கிறான்.

அன்னை காளியை அனுதினமும் வழிபட்டு வந்ததன் விளைவாக நாளடைவில் இளம்பூசாரியின் நெஞ்சத்தில் பத்தி கிளர்ந்தெழுந் தது; அதனால், கோயிற் பூசையை ஒழுங்காகப் புரிந்து முடிக்க அவருக்கு இயலாமற்போயிற்று. ஆதலால், அவர் தம் கடமைகளைக் கைவிட்டு, கோயில் எல்லைக்குள் இருந்த ஒரு சிறிய சோலையில் ஒதுங்கியிருந்து அங்கே முழுதும் தியானத்திற்கே தம்மை உரிமைப் படுத்தினர். கங்கை ஆற்றின் கரையில் காடுகள் அடர்ந்திருந்தன.

விரைந்தோடும் ஆறு, ஒருநாள் ஒரு சிறு குடிசையை அமைப்பதற்கு இன்றியமையாத பொருள்களை அவரது காலடியிலேகொண்டு வந்து சேர்த்தது. அக்குடிசையிலே அவர் தங்கி, தம் உடலைப் பேணும் நினைவுமின்றித் தமது தேவியைத் தவிர்த்து வேறு கருத்தில்லாமல் அழுதும், இறைஞ்சியும் அகங்குழைந்தனர். அவர் உறவினர் ஒருவர் நாளைக்கு ஒருமுறை உணவூட்டி அவரைக் கவனித்து வந்தார். பின்னுளில் ஒரு சந்நியாசினியார் அவரை அடைந்து அன்னையைக்காண அவருக்கு உதவி செய்யத் தொடங்கினர். அவர்க்கு வேண்டியிருந்த குருமார் சிலர் அவரால் தேடப்படாதபோதே அவரிடம் தாமே வந்து சேர்ந்தனர்; ஒவ்வொரு மதப் பிரிவையும் சார்ந்த ஒவ்வொரு தூயவர் தோன்றி அவருக்கு அவ்வம்மதக் கருத்தை விளக்குவர்; அவர் அனைவர்க்கும் ஆவலோடு செவி சாய்ப்பர். ஆனுல், அவர் அன்னையையே (அம்பிகையையே) வணங்கினர்; அவருக்கு யாவும் அன்னையே.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் என்றும் எவரையும் எதிர்த்து ஒரு கடுமொழியும் கூறியவரல்லர். அவர் எல்லாருடைய கொள்கைகளையும் ஏற்றுக்கொண்டதன் பேரெழிலை என்னென்று இயம்புவது! ஒவ்வொரு மதப் பிரிவினரும் அவரைத் தம் மதத்தினர் என்றே நினைக்கலாயினர். அவர் ஒவ்வொருவர் மீதும் அன்பைப் பொழிந்தார். அவருக்கு எல்லாச் சமயங்களும் உண்மையாயின. ஒவ்வொன்றுக்கும் அவர் தம் மனத்தில் இடமளித்தார். அவர் சுதந்தரராயிருந்தார்; அன்பு செய்யவே அச்சுதந்தரமமைந்ததேயன்றி, இடி முழக்கம் செய்தற்கன்று. சாந்த சீலர் படைப்பர்; இடிக்குரலென ஒலிப்பவர், ஒலியைப் பரப்புவர். பால் என்னும் போதகர் ஒலியைப் பரப்பிய வகையினர்.

எனினும், பால் ஞானியாரது காலம் இன்று கழிந்துவிட்டது; இந்நாளையில் நாமே புது ஒலிகளாகத் திகழவேண்டும். தன்னைத் தானே வேண்டியவாறு அமைத்துக்கொள்ளும் சங்கம் ஒன்று நமது காலத்திற்குரிய பெருந்தேவையாகும். அத்தகைய ஒன்றைப் பெறும்போது அதுவே உலகத்தின் இறுதி மதமாகும். சக்கரம் சுழன்றாக வேண்டும்; நாம் அதற்குத் துணை செய்யவேண்டும்; அதனைத் தடுத்தலாகாது. சமயக் கருத்தாகிய அலைகள் எழும்; விழும்; அனைத்தினும் உயர்ந்த அலைமீது காலம் உணரும் மாகுரவர் (தீர்க்கதரிசி) தோன்றுவார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இன்றைக்கு இன்றியமையாத ஞானத்தை அருள வந்தார்; ஆக்கந் தருவதே அது;

அழிக்கும் தன்மையதன்று. அவர் உண்மைகளைக் கேட்டு உணர்வதற்கென இயற்கையிடம் புதிதாகச் செல்ல நேர்ந்தது ; அதனால் விஞ்ஞானமய சமயத்தைப் பெற்றனர்; அச்சமயம் ஒருபோதும் 'நம்புக' என்னாது, 'காண்க; யான் காண்கின்றேன்; நீயும் காணலாகும்,' என்று சாற்றும். அதே சாதனத்தைப் பற்றுக; அதே காட்சியை நீ பெறுவாய். இறைவர் ஒவ்வொருவரிடமும் வருவார்; சமரசம் அனைவர்க்கும் கிட்டுதற்குரியது. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அறிவுரை இந்து மதத்தின் வடிகட்டின சாருகும்; அது அவர்க்குச் சிறப்பாக உரியது அன்று; அவர் பெயரையோ புகழையோ சற்றும் பொருட்படுத்தியவரல்லர்.

ஏறக்குறையத் தம் நாற்பதாம் வயதிலே அவர் அறிவுரை வழங்கத் தொடங்கினர். ஆனால், அதனை வழங்கும்பொருட்டு வெளியேறியவரல்லர். தம் போதனைகளை விரும்பியவர் தம்மை நாடி வர, அவர் காத்திருந்தனர்.

இந்து மத வழக்கப்படி அவருக்கு இளங்காளைப் பருவத்தே ஐந்து வயது சிறுமியரை மணஞ்செய்து வைத்தனர். அச்சிறுமியர் தம் இளங்கணவர் இயற்றிய உலையாத முயற்சியினை உணராத நிலையிலேயே தொலையிலிருந்த சிற்றூரில் தமது குடும்பத்தினரோடு வாழ்ந்து வந்தார். அவ்வம்மையார் தக்க பருவம் அடைந்தபோது, அவர் கணவர் முன்னரே மத சம்பந்தமான பத்தியில் ஆழ்ந்திருந்தார். அவ்வம்மையார் தம் கணவரைக் காணத் தமது இல்லத்திலிருந்து கணவர் அப்போது உறைந்து வந்த தட்சணேசுவரக் கோயில் வரை நடந்தே சென்றனர்; அவர் கணவரைக் கண்டதும் அவர் இத்தன்மையரென்பதை உணர்ந்தார்; காரணம் யாதெனில், அவ்வம்மையாரும் தூய்மையும் மேன்மையும் பெற்ற ஒரு பேரான்மா ஆவர். எனவே அவர் தம் கணவரது முயற்சிக்கு உதவ விழைந்தனரேயன்றி ஒரு போதும் இல்லறத்தானது நிலைக்கு அவரை இழுக்க விரும்பியவரல்லர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பேரவதாரமூர்த்திகளுள் ஒருவரென இந்தியாவில் வணங்கப்படுகின்றனர். அவரது பிறந்த நாள் அங்கே ஒரு சமயத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

* * * *

விசித்திரமான ஒரு கூழாங்கல்லே எங்கும் பரந்துள்ள திருமா

லின் அறிகுறியாகின்றது. நாள் தோறும் காலையில் ஒரு பூசாரி வந்து, அச்சிலைக்கு பூசை புரிகிறார்; இறைவர் முன்பு தூபத்தைச் சுழற்றுகிறார்; அவரைப் படுக்கையில் அமர்த்துகிறார்; அவரை அவ்வாறு வணங்கியதற்காக அவரிடம் மன்னிப்பு வேண்டுகிறார். ஏனெனில், ஒரு வடிவம் வாயிலாகவோ, யாதேனும் ஒரு பிராகிருதப் பொருளைக் கொண்டோதான் அவரைப்பற்றிக் கருதலாகும். பூசாரி சிலைக்கு நீராட்டுகிறார்; இறைவர்க்கு உடையணிகிறார். தமது தெய்விக ஆன்மாவை அச்சிலையிற் செலுத்தி, அதற்கு உயிரூட்டுகிறார்.

* * * *

ஒரு மதப் பிரிவினர் மொழிவதுபோல, "நல்லதையும் அழகு வாய்ந்ததையும் மட்டும் வணங்குதல் பலவீனமாகும். தீயதையும் வனப்பற்றதையுங்கூட அன்போடு நாம் வழிபடல் வேண்டும்." அப்பிரிவினர் திபெத்து முழுவதும் வாழ்கின்றனர்; அவர்கட்கு மண வாழ்வு இல்லை. இந்திய நாட்டிலோ, அத்தகையார் பலரறிய இருத்தல் இயலாது; ஆதலின், மறைவான சங்கங்களை அமைத்துக் கொள்கின்றனர். தக்க மனிதன் எவனும் மறைவாக அன்றி அச்சங்கத்திற் சேர மாட்டான். திபெத்தில் மும்முறை பொது உடைமைக் கொள்கை சோதிக்கப்பட்டது; மும்முறையும் அது தோல்வியுற்றது. அவர்கள் தவத்தைப் பயன்படுத்துகின்றார்கள்; ஆற்றலைப் பொறுத்தவரையில், தவத்தால் பெரிதும் வெற்றியே அடைகின்றனர். 'தவம்' என்னும் சொல்லுக்கு 'எரிதல்' என்பது தாதுப் பொருள். உயர்ந்த இயல்பை வெப்பப்படுத்தல் ஒரு வகைத் தவம் (உயர்ந்த இயல்பைத் தூண்டிச் சுடர்விடும்படி செய்வது அருந்தவமாகும்). அது சில சமயம் நாள் முழுவதும் இடையறாது 'ஓம்' என்னும் மந்திரத்தை ஓதுதல் போன்றது. கதிரவன் தோன்றுவது முதல் அவன் மறைகின்றவரை பேணும் விரத வடிவமாயிருக்கும் தவம். இத்தகைய செயல்களால் விளையும் ஒரு விதச் சத்தியை உன் விருப்பத்தின்படி ஞான சத்தியாகவோ, உலகியற் சத்தியாகவோ, மாற்றிக் கொள்ளலாம். 'தவம்' எனும் இக்கருத்து இந்து மதம் முழுவதும் புகுந்துள்ளது. உலகத்தைப் படைத்தற்காக ஈசர் தவஞ்செய்தார் என்று இந்து சாத்திரங்கள் இயம்பும். அது மனோமயமான ஒரு கருவி. மூவுலகிலுமுள்ள ஒவ்வொன்றும் தவத்தால் பிடிபடக்கூடியதே.

* * * *

தங்கட்கு நல்ல கருத்து இல்லாத சமயப் பிரிவுகளைப்பற்றி எழுதுவோர், தெரிந்தும் தெரியாமலும், பொய்யுரைப்பவராகவே இருக்கின்றனர். ஒரு மதப் பிரிவில் நம்பிக்கையுள்ளவர் மற்ற வற்றில் உள்ள உண்மையைக் காண்பது அரிது.

* * * *

ஒரு பெரும்பத்தரை (அனுமாரை), ஒரு சமயம், "இன்று தேதி யாது?" என்று வினவியபோது அவர், "இறைவனே எனது நித்தியமான தேதி; வேறு தேதியை நான் பொருட்படுத்துவதில்லை," என்று மறுமொழி அளித்தார்.

ஜூலை 2-ஆம் தேதி—செவ்வாய்க்கிழமை

(தேவியம்மை)

உலகமெங்கும் பரந்துள்ள சக்திக்குச் சாத்தர்கள் தமக்குத் தெரிந்தவற்றுள் மிக இனிமையான நாமமாகிய 'அன்னை' என்பத னைச் சூட்டி வழிபடுகின்றனர்கள்; காரணம் யாதெனில், இந்தியா வில் பெண்மைக்குரிய உயர்வற உயர்ந்த இலட்சியம் தாய்மையே. கடவுளை அன்னையாகவும் அன்பாகவும் வழிபடும்போது, இந்துக் கள் அம்முறையை 'வலம் வரும்' முறை என்பர்; அது ஞானத்தை அடையச் செய்கிறது; ஒரு நாளும் இம்மைச் செழிப்புக்கு உத வாது. கடவுளைக் கோரமான பகுதியோடு வழிபடும்போது, அது 'இடம் வரும்' முறையாகிறது; அது வழக்கமாகப் பெரிய இம்மைச் செழிப்புக்கு வழியாவதன்றி, ஞானத்தை எய்துவிப்பதாவது அரிதேயாம்; ஆனல், இறுதியில் அது கீழ் நிலை அடைதற்கும், பழகுவாரது குலத்தைத் துடைத்தற்கும் ஏதுவாகிறது.

அன்னையாகவே சத்தி முதன்முதலில் வெளிப்படுகின்றது; தந்தையெனும் கருத்தினும் மிகவுயர்ந்ததாகவே அது கருதப்படும். அன்னையெனும் பெயரோடே தெய்விக ஆற்றலும், எல்லா வல்லமை யும் ஆகிய சத்திதேவியின் கருத்தும் தோன்றுகின்றன; குழந்தை தன் அன்னையை எதனையும் செய்யவல்ல எல்லாச் சத்தியும் வாய்ந்தவளென நம்புவது போல, நாமும் அதைக் கருதுகின்றோம்; தேவியம்மையே நம்முள் உறங்கிக்கொண்டுள்ள குண்டலினி சத்தியாவாள்; அவளை வணங்காமல் நம்மை நாம் ஒருகாலும் அறிய மாட்டோம். யாவரிடத்தும் அருள் நிரம்பிய, எல்லாம் வல்ல, எங்கும் உள்ள தன்மையே தேவியம்மையின் இயல்பாம். உல

கெலாம் பரந்துள்ள சத்தியின் முழுத் தொகுதியும் அவளே. இவ்வுலகிற் சத்தியின் வெளித் தோற்றம் ஒவ்வொன்றும் அன்னையே. அவளே உயிர் ; அவளே போதம் ; அவளே அன்பு வடிவம். அவள் உலகத்துள் உறையினும் அதினின்றும் வேறுனவளே. அவள் ஒரு வடிவு பூண்டவள்; (ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவ்வடிவைக் கண்டு அறிந்தது போன்று) அவளைக் காணலும் அறிதலும் இயலும். அன்னையெனும் கருத்து நம்மிடம் நிலைபெறுமாயின், நாம் எதனையும் இயற்ற வல்லுநராவோம். அவள், பிரார்த்தனையை விரைவில் நிறைவேற்றுவாள்.

அவள் எக்கணத்தும், எவ்வடிவிலும் தன்னை நமக்குக் காட்ட வல்லவள். தேவியம்மைக்கு உருவும் பெயரும் கொள்ள இயலும்.

இவ்வாறு நாம் பல வகையாக அவளை வழிபடும்போது உருவும் பெயரும் அற்ற தனிச் சக்தியாகும் நிலைக்கும் உயர வல்லவராவோம்.

ஓர் உயிர்ப் பொருளின் உடலிலுள்ள உயிர் நுண் கூடுகள் (Cells) அனைத்தும் சேர்ந்த முழுத்தொகுதியே ஒரு மனிதன் ; ஆதலின், ஒவ்வோர் ஆன்மாவும் ஒவ்வோர் உயிர் நுண் கூடு போன்றது. அவற்றின் தொகையே கடவுளாம் பொருள்; அதற்கும் அப்பாலுள்ளது அதீதப் பரம்பொருள். அமைதியுற்ற கடல் அதீதப் பரம்பொருள் ; அலைகள் நிறைந்த அதே கடல் தேவியம்மையாகும். அவளே கால தேய நிமித்தமாவாள்.

கடவுள் அன்னையாவார். அவரிடம் வரையறையுற்றதும், வரையறையற்றதுமான இரு வகை இயற்கைகள் உள்ளன. முன்னைய நிலையில் அவளே கடவுள், பிரகிருதி, ஆன்மா என்னும் மூன்றும் ஆவள். பின்னைய நிலையில் அவள் அறியப்படாதவளும் அறியவொண்ணுதவளும் ஆவள். வரையறையற்ற நிலையிலிருந்து கடவுள், பிரகிருதி, ஆன்மா என்னும் (முப்பொருளும்) மும்மையும், வாழ்வெனும் முக்கோணமும் தோன்றின. இதுவே விசிஷ்டாத்துவைதக் கருத்தாம்.

அன்னையின் ஒரு கூறே கண்ணபிரான் ; மற்றொன்று புத்தர்; இன்னுமொன்று கிறித்து நாதர். நம்மைப் பெற்ற தாயினிடம் உள்ள, தேவியின் ஒரு பொறியையேனும் வணங்குவதால், நாம் மேன்மை அடைவோம். நீ அன்பும் ஞானமும் வேண்டுவாயாயின் அவளையே வணங்கு.

ஜூலை 3-ஆம் தேதி—புதன்கிழமை

பொதுப்படப் பேசுங்கால் மனிதனது சமய உணர்ச்சி அச்சத்தியினின்றே தொடங்குகிறது எனலாம். "ஈசனை அஞ்சுதலே ஞானத்திற்குத் தொடக்கமாகின்றது. ஆனால், பின்னர்ப் 'பூரண அன்பு' அச்சத்தை உதறித் தள்ளுகிறது," எனும் உயர்ந்த கருத்துப் பிறக்கின்றது. ஞானம் பெறும் வரை, கடவுளை உணரும்வரை, அச்சம் நம்மிடம் சிறிதளவேனும் இருந்தே தீரும். கிறித்து மனிதரான நிலையில் தூய்மையின்மையைக் கண்டு அதனைக் கண்டித்தார்; ஆனால், கடவுளோ, வரம்பற்ற பெருமையுடையவராதலின், தீமையைக் காணுதவராய், சினங்கொள்ள இயலாதவராய்த் திகழ்கிறார். கண்டனம் ஒரு நாளும் உயர்வற உயர்ந்ததாகாது; தாவீது* என்பவரின் கைகள் குருதிக் கறை பெற்றன; அவரால் கோயில் கட்ட இயலாது போயிற்று.

அன்பிலும், அறத்திலும், புனிதத்தன்மையிலும் நாம் வளர்ச்சி எய்தும் அளவிற்கு ஏற்றவாறு, அன்பையும் அறத்தையும் புனிதத்தன்மையையும் புறத்தும் மிகுதியாகக் காண்போம். பிறரைக் குறை கூறுவதெல்லாம், உண்மையிலே நம்மையே குறை கூறிக்கொள்வதேயாகும். பிண்டத்தைச் சரிப்படுத்திக்கொள் (இது செய்ய உனக்குச் சத்தியுண்டு); அண்டம் தன்னை உனக்காகச் சரிப்படுத்திக்கொள்ளும். அது நீரமுத்த முரண்பாட்டுக் கொள்கை போன்றது; ஒரு துளி நீர் உலகத்தையே சமன் செய்ய வல்லதாம். அகத்தே நாம் ஆகாத ஒன்றைப் புறத்தே நம்மாற்காண இயலாது. மிகப் பெரிய 'இஞ்சி'னுக்கும் (இயந்திரத்திற்கும்) மிகச் சிறிய 'இஞ்சி'னுக்கும் உள்ள தொடர்பே உலகிற்கும் நமக்கும் உள்ளது; சிறிய 'இஞ்சி'னில் நேரும் எந்தப் பிழையின் குறியும் பெரியதில் தொந்தரவு உண்டானதாகப் பாவிக்க நம்மைத் தூண்டுகிறது.

உலகிலே நாம் உண்மையாக முன்னேறும் ஒவ்வோர் அடியும் அன்பின் பயனுக விளைந்ததேயாம்; குறை கூறுவதால், எந்நாளும் எவ்வித நன்மையும் வாராது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அறிஞர் இதனைச் சோதித்துள்ளனர். குறை கூறுதல் ஒன்றையும் ஆக்குவதில்லை.

உண்மையான வேதாந்தி அனைவரிடத்தும் இரக்கங்கொள்ளுதல் இன்றியமையாதது. 'ஏகம்' எனும் அதீத அத்வைத நிலையே

* பைபிள், சாமுவேல்—அத் XVII—முடிவு

வேதாந்தத்தின் உயிராகும். துவைதிகள், தங்கள் நெறியே ஒரே நெறி எனக் கருதுகின்ற காரணத்தால் இயல்பாகவே சகிப்பற்றவராகும் சார்புடையர். இந்திய வைணவத் துவைதிகளே, சற்றும் சகிப்பற்ற ஒரு சமயப் பிரிவினர். இன்னொரு துவைதக் கிளையினரான சைவர்க்குள், கண்டா கர்ணன் (மணிக்காதன்) எனும் அடியானது கதை வழங்கிவருகிறது. அவன் சிவபெருமானிடம் மிக ஈடுபாடுற்ற பத்தனுதலின், வேறொரு தெய்வத்தின் பெயரையும் காதாற் கேட்கவும் விரும்பான்; அதனுல், ஏனைய தெய்வங்களின் பெயர்களைக் கூறும் எக்குரலையும் அமிழ்த்திவிடும்பொருட்டு இரு காதுகளிலும் இரு மணிகளைத் தொங்கவிட்டுக்கொண்டான். சிவபெருமானிடம் பேரன்பு பூண்டவனுதலின், அப்பெருமானுர் அவனுக்குச் சிவன், திருமால் என்னும் பேதம் இல்லை என்பதை அறிவிக்க வேண்டி, அவன்முன் பாதி திருமாலாகவும், பாதி சிவன் வடிவாகவும் ஒருநாள் தோன்றினுர். அவ்வமயம் அடியான் அவர் முன்பு தூபங் காட்டினுன். தூபத்தின் நறுமணம் திருமாலின் நாசியிற் புகுவதைக் கண்டபோது, அவன் அதனுள் தனது விரலைப் புகுத்தி அக்கடவுள் அந்த நறுமணத்தை நுகராத வண்ணம் தடுக்கலானுன். கண்டா கர்ணனது முழு மூட பத்தியின் வெறி அவ்வாறிருந்தது!

சிங்கம் போன்ற ஊனுண்ணும் விலங்கு ஒரறை அறைந்துவிட்டுப் பின்னர்க் கோபம் தணிந்துவிடும்; ஆனுல், பொறுமையான மாடோ, நடையிலே உண்டும் உறங்கியும், நாள் முழுதும் திரியும். சத்தி மிக்க யாங்கி (அமெரிக்கன்) அரிசிச் சோறுண்ணும் சீனக் கூலிக்காரனுக்கு எதிர் நில்லான். படை வலிமை தலையெடுக்கும் வரை ஊனுண்ணல் திகழும்; ஆனுல் விஞ்ஞானம் முன்னேற முன்னேற, போர் சிறிது சிறிதாகக் குறைந்து வரும்; அப்போது மரக்கறி உண்போர் வந்தணைவர்.

* * * *

நாம் கடவுள்மீது அன்பு செலுத்தும்பொருட்டு நம்மையே இரண்டாக்கிக்கொள்கிறேம். நானே என்மீது அன்பைப்பொழிந்து கொள்ளுகிறேன். கடவுள் என்னைப் படைத்துள்ளார்; யானும் கடவுளைப் ப்டைத்துள்ளேன். நாம் கடவுளை நமது வடிவமாகப் படைக்கிறேம்; அவரை நமது தலைவராகப் படைப்பவரும் நாமே. கடவுள் நம்மைத் தம்முடைய பணியாளராகச்செய்வதில்லை. நாம் கடவுளோடு ஒன்ருவோம் என்பதையும், நாமும் அவரும் நண்பர்

கள் என்பதையும் நாம் உணரும்போது சமத்துவமும் சுதந்தரமும் எழுகின்றன. நீ உன்னை இந்த நித்தியமான ஏகப் பரம்பொருளிட மிருந்து மயிரிழையேனும் பிரிந்திருப்பதாகக் கருதும் வரை அச்சம் உன்னைவிட்டு அகலாது.

'இதனால் உலகிற்கு விளையும் நன்மை யாது?'' என்ற பேதைமைக் கேள்வியை ஒரு போதும் எழுப்பாதே. உலகம் கிடக்கட்டும்; அன்பாயிரு; ஒன்றையும் வேண்டாதிரு; அன்பு செய்; ஒன்றையும் அதன் பின் எதிர்பாராதே; அன்பு புரி; எல்லாச் சமயக் கொள்கைகளையும் மறந்துவிடு; அன்பு எனும் அமுதத்தைப் பருகுபித்துக் கொள். "நாத, யான் நினக்குரியேன். என்றென்றும் நினக்குரியேன்,'' என்று உரைத்து அனைத்தையும் மறந்து, உள்ளே மூழ்கு. கடவுளைப் பற்றிய கருத்தே அன்புதான் (அன்பே சிவம்). ஒரு பூனை தன் குட்டிகளிடம் அன்பு செய்தலைக் கண்டு (கைகட்டி) நின்று பிரார்த்தனை செய். கடவுள் அங்கே வெளித் தோன்றியுள்ளார்; இதனை உள்ளபடியே உண்மை எனக்கொள். "யான் நினக்குரியேன்; யான் நினக்குரியேன்,'' எனத் திரும்பத் திரும்ப இயம்பு. ஏனெனின், நாம் கடவுளை எங்கும் காணலாகும். அவரைத் தேடாதே; அவரைக் கண்ணுரக் காண மட்டும் செய்.

"உலகிற்கு ஒளியாய், உலகிற்கு உயிராய் ஒளிரும் இறைவர் உன்னை உயிருள்ளவனாக வைப்பாராக!''

பாரமார்த்திகப் பரம்பொருள் வழிபடுதற்கு ஒண்ணாதது; ஆதலால், அது வெளித் தோன்றும் வடிவமொன்றை, நமது இயல் பினையுடைய ஒன்றை, நாம் வழிபடுதல் தகும். இயேசுவினிடம் நமது (மனித) இயல்பு இருந்தது; அவர் கிறித்து நிலையை எய்தினர்; ஆதலால், நாமும் அவ்வாறு ஆக முடியும். அவ்வாறு நாமும் ஆகியே தீர வேண்டும். கிறித்து என்பதும் புத்தர் என்பதும் அடைதற்குரிய ஒரு நிலையின் பெயர்களேயாம்; இயேசுவும் கௌதமரும் அதனை வெளித் தோற்றுவித்த மனிதரே. 'அம்பிகை' (அம்மை)யே முதலாவதும் உயர்வற உயர்ந்ததுமான தோற்றம். அதனையடுத்தவர்களே கிறித்துகளும் புத்தர்களும். நாமே நமக்குரிய சூழ்நிலையை உண்டாக்குகின்றோம். நாமே தளைகளை நொறுக்கி எறிகிறோம். ஆன்மா அச்சமற்றது. புறத்துள்ள ஒரு கடவுளிடம் வேண்டி நிற்கும்போது, அது நன்றே; ஆனால், நாம் செய்வதை இன்னதென அறியோம். ஆன்மாவை அறியும் போது நாம் உணர்கிறோம். அன்பு வெளிப்படும் மிக உயர்ந்த வடிவம் ஒருமைப்படுத்தலே.

“ இருந்ததுபண் டொருகாலே யான் பெண்ணு அவர் ஆணு
எரிந்துபெரு கன்பதனுல் இருவருமில் லாதொழிந்தோம்
இருந்தனரோர் இருவரெனும் எண்ணமட்டும் மங்கியெழும்
வருந்தனியன் பெம்மிடையே மருவியொன்ருக் கியதெம்மை.”

—பாரசீக குவி பாடல்

அறிவு நித்தியமாய் உள்ளது ; கடவுளோடு இருந்து வருகின்றது. ஞான நியதி ஒன்றைக் கண்டு பிடிப்பவன், ஆவேசமுடையவனேயாவன். அவன் கொணர்வது அருளாற் பெற்ற ஒன்றே; ஆனுல், அருள் மொழியும் நித்தியமே ; அதனை முடிவானதென உறைந்து இறுகச் செய்வதும், பின்னர் அதனை அறிவிலாத் தன்மையாகப் பின்பற்றுவதும் தகாதன. இந்துக்களை வென்ருேர் அவர்களைப் பல ஆண்டுகளாகக் குறை கூறி வருங்கால் அவர்கள் (இந்துக்கள்) தங்கள் மதத்தைத் தாங்களே குறை கூறத் துணிகின்ருர்கள் என்பர் ; இது அவர்களை விடுதலை பெறச் செய்கிறது. அவர்களை ஆண்ட அயல் அரசர் தாம் அறியாதே அவர்களுடைய தளைகளை நொறுக்கிவிட்டனர். மண்ணில் வாழ்வாருள் மிக்க சமயப் பற்றுள்ளவரான இந்துக்களிடம் உண்மையிலே பணிவச்சமின்றிப் பேசலெனும் உணர்ச்சியே இல்லாது போயிற்று. புனிதப் பொருள்களைப் பற்றி எவ்வண்ணம் பேசுதலுமே புனிதத் தன்மையை ஈயவல்லதென அவர்களாற் கருதப்படும். சமயக் குரவர்க்கோ, சாத்திரங்கட்கோ, படிற்ருெழுக்கமான (வஞ்சனையான) பத்திக்கோ, அவர்கள் செயற்கை மரியாதை காட்டுபவர்களல்லர்.

கிறித்தவத் திருச்சபை கிறித்துவைத் தன்னுள் நிறுவ முயல்கிறது. திருச்சபையைக் கிறித்துவுக்கு ஏற்றவாறு அவருள் நிறுவ முயல்வதில்லை. ஆதலால், கைக்கொண்ட நோக்கத்தோடு இசைந்த நூல்கள் மட்டும் காப்பாற்றப்படலாயின. ஆகவே நூல்கள் அவற்றைச் சார்ந்து வாழ்தற்கென ஏற்பட்டனவாகா ; நூல் வழிபாடு, நம் கால்களைப் பிணிக்கும் மிகக் கெட்ட உருவ வழிபாடாகும். எல்லாம்—விஞ்ஞானம், மதம், தத்துவம் யாவும்—நூலிற்கு ஏற்ப அமைய வேண்டுவன. ‘பிராட்டஸ்டன்டு’ பைபிள் செலுத்தும் இக் கொடுங்கோலாட்சி மிகமிகப் பயங்கரமான கொடுங்கோன்மையாகும். கிறித்தவ நாடுகளில் உள்ள ஒவ்வொரு மனிதனும் தன் சென்னிமீது ஒரு திருச்சபையையும் அதன் தலை மீது ஒரு நூலையும்

தாங்குகிறுன். மனிதன் தெய்வமே என்பதை இது மெய்ப்பிக்க வில்லையா ?

இருப்பவற்றுள் மிக உயர்ந்த உயிர் மனிதனே; இதுவே (மண்ணகமே) சாலச் சிறந்த உலகமாகும். கடவுளைப் பற்றிய கருத்து மனிதனைப் பற்றிய கருத்தினும் நனி சிறந்தது. நம்மிடம் எழ முடியாதது; ஆதலால், நம் கடவுள் மனிதனே ; மனிதன் கடவுளே. நாம் கிளம்பி அப்பாற்சென்று அவனினும் ஓங்கி நிமிர்ந்த ஒன்றைக் காணவேண்டின், மனத்திற்கு வெளியே, உடலுக்கும் கற்பனைக்கும் வெளியே குதித்து ஆகவேண்டும் ; பாரமார்த்திக உலகிற்கு நாம் கிளம்புவோமாயின், நாம் இவ்வுலகில் இல்லாதவராவோம். நம்மால் என்றேனும் அறியப்படக்கூடிய ஒரே உலகிலே மனிதனே உச்ச நிலையிலிருப்போனுவன். விலங்குகளைப் பற்றி நாம் அறிவதெல்லாம் ஒப்புமை வாயிலாகத்தான்; நம் செயலையும் உணர்ச்சிகளையும் கொண்டே நாம் அவற்றை மதிப்பிடுகிறோம்.

அறிவின் முழுத் தொகுதி (கூட்டுத் தொகை) என்றென்றும் ஒரே அளவினதாயிருக்கின்றது. சில சமயம் அது மிகுதியாகவும், சில சமயம் குறைவாகவும் வெளிப்படுகின்றது. அதற்கு ஒரேமூலம் உள்ளேதான் ; அங்கேதான் அது அறியப்படும்.

கவிதையும், ஓவியமும், இசையும், (முறையே) மொழி வாயிலாகவும், வண்ணம் வாயிலாகவும், ஒலி வாயிலாகவும் வெளிப்படும் உணர்ச்சிகளே.

எவர்களிடம் தம் பாவங்களின் பயன்கள் விரைவில் நண்ணுகின்றனவோ, அவர்களுடைய கணக்கு விரைவில் முடிக்கப்படுகிறது ! எவர்களுக்குத் தண்டனை காலந்தாழ்ந்து வருமோ, அவர்களுக்குத் துயரமே உண்டாகிறது ; அதனுல் அதன் அளவு மிகுகின்றது !

சமத்துவ நிலையை அடைந்தவர் இறைவரிடம் வாழ்பவர் எனப்படுவர்; எல்லாப் பகையும் தன்னைத் தானே கொலை செய்தலாகும். ஆதலால், அன்பே வாழ்க்கையின் நியதி. இந்நிலைக்கு உயர்தலே பூரணத்தன்மையடைதலாம் ; ஆனுல், நம்மிடம் நிறைவுத்தன்மை மிகும் அளவிற்குக் கருமம் (எனப்படுவது) நம்மிடத்துக் குறைவுறும். அனைத்தும் குழந்தையின் வெற்று விளையாட்டே என்பதைச் சாத்துவிகர் காண்பர்; அறியவும் அறிவர்.

ஓர் அடி அடிப்பது எளிது ; ஆனுல், எழும் கையைத் தாழ்த்தி,

அமைதியாய் நின்று, "ஆண்டவரே, உம்மிடம் யான் அடைக்கலம் புகுகிறேன்!" என்று மொழிந்துவிட்டு அவரது செயலை எதிர்பார்த்து நிற்பது கழிபெருங்கடினமாகும்.

ஜூலை, 5-ஆம் தேதி—வெள்ளிக்கிழமை

எந்த நிமிடமும் மாறுதற்கு ஆயத்தமாயிருக்கும்வரை, நீ ஒரு நாளும் உண்மையைக் காண இயலாது; ஆனால், நீ உறுதியாகப் பற்றி நிற்க வேண்டும்.

* * * *

இந்தியாவில் மிகு பழமை வாய்ந்த ஒரு மதப் பிரிவினராகிய சார்வாகர் என்பார் தீவிர சடவாதியரே (இருப்பது சடப் பொருளே என்பவர்). ஆன்மா உடலாலும், உடற்சத்திகளாலும் விளைவதொன்று என்றும், உடலோடு அதுவும் அழிவுறும் என்றும், மரணத்திற்குப்பின் அதன் இருப்புக்கு யாதொரு சான்றும் இல்லை என்றும் வாதித்தனர்; ஐம்புலக் காட்சியை மட்டும் சான்றாக ஒப்புக்கொண்டு, அனுமானத்தை மறுத்தனர்.

* * *

தெய்வத்தன்மையும் மனிதத் தன்மையும் ஒன்றுபடும்போது, அதாவது 'சமத்துவ நிலை' வரும்போது, சமாதி உண்டாகிறது.

* * *

சடவாதம்—உலகாயதம்—"முத்தியின் குரல், மதி மயக்கம்," என்று மொழிகின்றது. கருத்துண்மை வாதம், "பந்தனையைப் பற்றிக் கூறும் குரல் மதி மயக்கமே," என்று உரைக்கின்றது. வேதாந்தமோ, "நீ ஒரே சமயத்து விடுபட்டவனும் விடுபடாதவனும் ஆவாய்; மண்ணுலகில் ஒரு போதும் விடுபட்டவனாகாய்; ஆனால், விண்ணுலகில் என்றும் விடுபட்டவனாவாய்," என்று விவரிக்கின்றது.

நீ 'முத்தி, பந்தனை' என்னும் இரண்டையும் கடந்த நிலையில் இரு.

நாம் சிவமேயாவோம்; ஐம்புலச் சிறைக்கு அப்பாற்பட்ட அமர நிலையிலுள்ள போதமேயாவோம்.

எல்லையற்ற வல்லமை ஒவ்வொருவரிடத்தும் பின்னணியில் உள்ளது. அம்பிகையை இறைஞ்சு. அவ்வல்லமை உன்னை வந்தடையும்.

"வாக்கை அருளும் தேவீ, தன்மய மெய்ப்பொருளே, என் நாவில் வாக்காக எழுந்தருளுக!" (இது இந்துவின் பிரார்த்தனை).

"இடிக்குரல் அன்னய், காளியே, அழிவற்ற கால வடிவே, எதிர்க்கவொண்ணாச் சத்தியே, நீ என்னிடம் எழுந்தருளுக!"

ஜூலை 6-ஆந் தேதி—சனிக்கிழமை

இன்று வியாசரது வேதாந்த சூத்திரத்தின் சங்கர பாஷ்யத்தை (விரிவுரையைப்) பற்றி அவர் பேசினர்.

ஓம் தத்ஸத்!

சங்கருடைய கொள்கைப்படி, பிரபஞ்சத்தில் இருபகுதிகள் உள்ளன; ஒன்று, 'நான்' என்பது; மற்றொன்று, 'நீ' என்பது. இவை இரண்டும் ஒளியும் இருளும் போல ஒன்றுக்கொன்று மாறுனவை. ஆதலால், இவற்றில் ஒன்று மற்றொன்றிலிருந்து பெறத் தக்கதன்று என்பது சொல்லாமலே விளங்கும். 'திருக்கு' (காண்பான்)மீது 'திருசியம்' (காணப்படுபொருள்) அத்யாசமாக(ஒன்றை மற்றொன்றன்மீது ஏற்றுகையாக)க் கொள்ளப்படுகிறது. 'திருக்கு' ஒன்றே உண்மைப் பொருள்; மற்றது, வெறுந் தோற்றமேயாம். இதற்கு மறுதலையான கருத்து ஆதாரமற்றதே. சடப்பொருளும் புற உலகமும் யாதோ ஒரு நிலையிலுள்ள ஆன்மாவே. உண்மையை உரைக்கின், உள்ளது ஒன்றே.

நமது உலகம் முழுமையும் மெய்யும் பொய்யும் சேர்ந்த இணைப்பிலிருந்தே உண்டாகிறது. சத்திகளின் இணைகர விதிப்படி (parallelogram) ஒரு குண்டு மூலை விட்டத்தின் (diagonal) வழியே இயங்குவதுபோல, நம்மீது தாக்கும் ஒன்றுக்கொன்று எதிரிடையான சத்திகளின் கூட்டுப் பயனே சமுசாரம் (வாழ்வு) என்பது; ஆனல், நாம் காணும் உலகம் அதுவன்று; சிப்பியில் இல்லாத வெள்ளியை நாம் இருப்பதாகக் காண்பது போல்வது இது. இதுவே 'ஆரோபிதம்' (ஏறிடுகை) எனப்படும்; அதாவது, ஓர் உண்மைப் பொருளைச் சார்ந்து நிற்கும் வியவகாரிக இருப்பே; நாம் கண்ட காட்சியை நினைவுபடுத்திக்கொள்வது போன்றது. இது நமக்கு

உள்ள கால அளவினதே; வேறு வண்ணமாகக் கூறின், தண்ணீரில் சூடு இருப்பதாகப் பாவிப்பது போல்வது. ஆனல், சூடு தண்ணீருக்குரியதன்று. ஆதலால், உண்மை உரைக்கின், தனக்கு உரிமை அல்லாத இடத்தே போடப்பட்ட ஒரு பொருளைப் போல்வது. நாம் உண்மையைக் காண்கிறேம். எது வாயிலாக அதைக் காண்கிறேமோ, அப்பொருளினூடே காட்சி திரிபடைகின்றது.

நீ புறவுலகப் பொருளாக மாறிய நிலையிலன்றி வேறு வகையில் உன்னை ஒருகாலும் அறிய இயலாது. ஒன்றை மற்றென்ருகத் தவருகக் காணும்போது, நம்முள் உள்ள பொருளையே எப்போதும் மெய்யாகக்கொள்கிறேம்; காணுத பொருளை உண்மையென ஒரு காலும் கொள்ளோம்; எனவே, காணப்படு பொருளைக் காண்பானெனத் தவருகக் கருதுகிறேம். ஆன்மா ஒரு நாளும் காணப்படு பொருளாவதில்லை. மனம், அந்தக்கரணம். புறத்துள்ள இந்திரியங்கள் அதன் கருவிகள். காண்பானிடம் ஒரு சிறிது காணப்படு பொருளாக்கும் சத்தியிருப்பதால், 'நான் உள்ளேன்,' என்பதை அறியும் திறமை பெறுகிறது; ஆனல், காண்பானே தனக்குக் காணப்படு பொருள் ஆவதன்றி, மனத்திற்கோ, இந்திரியங்களுக்கோ அவ்வாறு ஆவதில்லை. ஆயினும், ஒரு கருத்தை மற்றெரு கருத்தின்மீது அத்யாசமாக ஏறிடலாம்; சான்ருக, 'ஆகாயம் நீலமானது,' எனும் போதும் ஆகாயமே ஒரு கருத்து மட்டுமாதலின் பௌதிக விஞ்ஞானமும், அறியாமையும் உள்ளனவே. ஆனல், ஆன்மா எந்த அறியாமையாலும் பாதிக்கப்படுவதில்லை. வியவகாரிக அறிவும் நல்லதே. ஏனெனில், அது பாரமார்த்திக ஞானத்தில் நம்மை உய்க்கின்றது; ஆனல், புலனறிவோ—மனத்தால் வரும் அறிவோ—வேதங்களினின்று பெறும் அறிவோ—உண்மையானதன்று; ஏனெனில், வியவகாரிக அறிவு எனும் மண்டலத்தினுள் அவையனைத்தும் உள்ளன. 'நான் உடல்' எனும் மயக்கத்தை முதலிற் போக்கிக்கொள்; அப்போதுதான் உண்மையான அறிவை நாடல் இயலும். மனித அறிவு விலங்கறிவின் உயர்ந்த தரமேயாகும்.

* * *

வேதங்களின் ஒரு பகுதி கருமத்தைப் பற்றி—சடங்குகளையும் கிரியைகளையும் பற்றி—பேசுகிறது; மற்றெரு பகுதி, பிரம்ம ஞானத்தைப் பற்றி உரைக்கின்றது; சமயத்தையும் தத்துவத்தை

யும் ஆராய்கின்றது. மறைகள் இப்பகுதியில் ஆன்மாவைப்பற்றி முழங்குகின்றன. அங்ஙனம் அவை முழங்குவதால், அவற்றின் அறிவு மெய்யறிவை அணுகுகின்றது. பாரமார்த்திக ஞானம் புத்தகத்தையோ வேறெதனையோ சார்ந்ததன்று: அது தன்னளவிலே அனைத்திற்கும் அதீதமானது. கல்வியறிவு எத்துணையதாயினும், இஞ்ஞானத்தைத் தாராது; இது வெறுங்கொள்கையன்று; அநுபூதியே. கண்ணாடியிலுள்ள அழுக்கைக் கழுவிவிடு; உனது சொந்த மனத்தைத் தூயதாக்கு. அப்போது கண்ணிமைப் பொழுதில் உன்னைப் பிரம்மமென அறிவாய்.

கடவுள் உள்ளனர்; பிறப்போ இறப்போ, துன்பமோ துயரமோ, கொலையோ விகாரமோ, நன்மையோ தீமையோ இல்லை. அனைத்தும் பிரம்மமே. நாம் பழுதையைப் பாம்பெனக் கொள்கிறோம்; இப்பிழை நம்மதே.........நாம் கடவுளிடம் அன்பு செலுத்தும் போதும், அவர் நமது அன்பைப் பிரதிபலிக்கும் போதுமே நமக்கு நன்மை செய்தல் இயலும். கொலை செய்பவனும் இறைவரே. 'கொலை செய்பவன்' எனும் ஆடை அவன் மீது ஏறிடப்படுவதே (அத்தியாசமே) ஆகும். அவனைக் கையைப் பிடித்து அழைத்து, உண்மையைக் கூறு.

ஆன்மாவுக்குச் சாதியில்லை. அதற்கு அது உண்டென்பது மயக்கமே. அங்ஙனமே, வாழ்வும், மரணமும், இயக்கமும், குணமும். ஆன்மா ஒரு நாளும் மாறுவதில்லை; போவதுமில்லை; வருவதுமில்லை. அதனிடத்து எழும் தோற்றங்கள் அனைத்திற்கும் அது அழியாத சாட்சியாயுள்ளது; ஆனல், அதனை நாம் அத்தோற்றமாகக் கொள்கிறோம்; இதுவே தொடக்கமும் முடிவுமின்றி, யாண்டும் நிகழ்ந்துவரும் மாயாத மித்தையாகும். எனினும் வேதங்கள் நாம் வாழும் மட்டத்திற்கு இறங்கிவர வேண்டுவனவாயிருக்கின்றன; ஏனெனில், உயர்வற உயர்ந்த உண்மையை உயர்வற உயர்ந்த முறையில் நமக்கு அவை கூறுமாயின், நம்மால் அதை அறியவொண்ணது.

* * * * * * * *

சுவர்க்கம் என்பது ஆசையினின்றும் எழும் ஒரு மூட நம்பிக்கையேயாம். ஆசையோ, யாண்டும் ஒரு நுகத்தடியாகும், இழிநிலையாகும். கடவுளாக அன்றி வேறு வகையில் எதனையும் என்றும் அணுகாதே. ஏனெனில், அங்ஙனம் அணுகுவோமாயின்,

நாம் தீமையைக் காண்பவராவோம்; நாம் நோக்கும் பொருளின் மீது மயக்கத் திரையை இட்டபின், நாம் தீமையையே பார்க்கின்றோம். இம்மித்தைகளினின்றும் விடுபடு; பேற்றைப் பெறு; எல்லா மித்தைகளையும் இழத்தலே முத்தியாம்.

ஒரு வழியில் பிரம்மம் ஒவ்வொரு மனிதனுக்கும் தெரிந்ததேயாம். 'நான் உளேன்,' என்பதை அவன் அறிகின்றான்; ஆனால், மனிதன் தன்னைத்தான் உள்ளவாறே அறிவதில்லை. நாம் இருப்பதை நாம் அனைவரும் அறிகிறோம்; ஆனால், நாம் எவ்வாறு உள்ளோம் என்பதை அறியோம். தாழ்ந்த நிலைக்குரிய விளக்கங்கள் அனைத்தும் ஒரு பகுதியின் உண்மைகளே. ஆனால், வேதச் சுவையான கனி யாதெனின், நம் ஒவ்வொருவரிடத்தும் உள்ள ஆன்மா பிரம்மம் என்பதே. பிறப்பு, வளர்ச்சி இறப்பு என்பவற்றில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் அடங்கியுள்ளது.—அதாவது, தோற்றமும், தொடர்ச்சியும், மறைவும் எல்லாவற்றிலும் அடங்கியுள்ளன. நமது அனுபூதி வேதங்களுக்கு அப்பாலானது; ஏனெனில், வேதங்களும் அனுபூதியைச் சார்ந்து நிற்பவைகளே. உயர்வற உயர்ந்த வேதாந்தமாவது, அதீதப் பரம்பொருளைப் பற்றிய தத்துவ ஞானமே.

படைப்புக்கு ஒரு தொடக்கம் உண்டு என்பது, தத்துவ ஆராய்ச்சியினை வேரறுப்பதேயாகும்.

மாயை என்பது இப்பிரபஞ்சத்தின் சத்தியே—இயங்கு சத்தியும் நிலைச் சத்தியும் ஆகும். தேவி நமக்கு விடுதலை அளிக்கும் வரை நாம் விடுதலை பெற முடியாது.

பிரபஞ்சம் நமது அனுபவத்திற்கு உரியதே. ஆனால், ஒன்றையும் வேண்டாதே. வேண்டுதல் பலவீனமாகும். வேண்டலே நம்மைப் பிச்சைக்காரர் ஆக்குகிறது; நாம் அரசிளங்குமரர்களே; இரவலரல்லோம்.

ஜூலை 7-ஆம் தேதி—ஞாயிற்றுக்கிழமை காலை

அகண்டத்தின் வெளித் தோற்றத்தில் அது தன்னைக் கூறுகளாகப்பகுத்துக் கொள்ளினும், பின்னும் அகண்டமாகவே உள்ளது; ஒவ்வொரு கூறும் அகண்டமாகின்றது.*

* அகண்டமாவது இரண்டற்ற ஒன்று; என்றும் பகுக்கவொண்ணாதது வெளித் தோற்றம் அற்றது. 'அகண்டத்தின் வெளித் தோற்றம்' என்னுங்

பிரம்மம் அதன் இருவடிவிலும்—மாறுவது, மாறவொண்ணு தது, வெளித் தோன்றுவது, வெளித்தோன்றவொண்ணுதது, எனும் இருவகையிலும்—ஒன்றேயாம். 'அறிவானும், அறியப்படு பொருளும் ஒன்றே,' என்பதை அறி. அறிவான், அறியப்படு பொருள், அறிதல் எனும் திரிபுடியே (ஞாதிரு, ஞேயம், ஞானம் எனும் முப்பொருளே) பிரபஞ்சமாக வெளித் தோன்றிக் கொண்டிருக்கிறது. யோகி தியானத்திற் காணும் அக்கடவுளைத் தனது ஆன்மாவின் சத்தியாற் காண்கிருன்.

இயற்கை, விதி எனும் பெயர்களால் வழங்கப்படுவது இறைவரது சங்கற்பமேயாகும்.

நுகர்ச்சியை நாடும்வரை தளையும் உள்ளது. நிறைவின்மையே நுகரவல்லதாம்; நுகர்ச்சியாவது, ஆசையை நிறைவேற்றுதலே யாதலின், மனித ஆன்மா இயற்கையை நுகர்கின்றது. ஆன்மா, இயற்கை, இறைவன் (சித்து, அசித்து, ஈசுவரன்) என்பவற்றின் அடிப்படை உண்மையாவது பிரம்மமே. ஆனுல், அது (பிரம்மம்), நாம் வெளிக் கொணர்ந்து காணப்படாததே. அதனை வெளித் தோற்றுவிக்க 'பிரமதனம்' அதாவது உரசுதல் வேண்டும். உரசுதல் மூலம் தீயை உண்டாக்குவது போன்றது அது. உடலே கீழுள்ள கட்டை; 'ஓம்' என்பது கூர்மையான கட்டை; 'தியானம்' என்பதே உரசுதல். இதைப் பயன்படுத்தும்போது பிரம்மஞானம் எனும் அவ்வொளி ஆன்மாவில் திடீரெனத் தோன்றும். அதனைத் தவத்தால் நாடு. உடலை நிமிர்த்தி வைத்துக்கொண்டு இந்திரியங்களை மனத்திலே ஆகுதி பண்ணிவிடு. புலனுணர்வை எழச்செய்யும் நிலையங்கள் அகத்தே உள்ளன. ஆதலின், அவற்றை மனத்திற்குள் ஒட்டு. தாரணையாய் மனத்தைத் தியானத்தில் நிலைநாட்டு. பாலிற்படு நெய்போல் பிரம்மம் பிரபஞ்சத்தில் எங்கும் பரந்துள்ளது. ஆனுல், உரசுதலால் அது ஒரிடத்தே தோன்றுகின்றது. கடைதலால் பாலினின்றும் வெண்ணெய் வருவதுபோல, தியானம் பிரம்ம ஞானத்தை ஆன்மாவில் வெளிப்படுத்துகின்றது.

கால், சுவாமிஜி இந்திரியங்களுக்குப் புலனுகும் பிரபஞ்சம் புலனுகாத பிரபஞ்சம் இரண்டையும் குறிக்கின்ருர். அப்பிரபஞ்சம் இயல்பாகவே வரையற்ற எண்ணற்ற வடிவங்களால் ஆக்கப்பட்டிருப்பினும், முழுமையாக நோக்குங்கால், அது எப்போதும் அகண்டமாயுள்ளதே. அம்மட்டோ! அதன் ஒவ்வொரு பகுதியும் அகண்டத்தோடு பிரிக்கவொண்ணுதபடி இணைந்திருத்தலின், அகண்டமேயாம்.

இந்து மத தரிசனங்கள் அனைத்தும், 'ஆறுவது உணர்வாகிய நேர்க்காட்சியுணர்வு ஒன்று உண்டு,' என உரைக்கின்றன ; அது வாயிலாகவே அருள் நிலை எழுகின்றது.

* * * * * * * *

பிரபஞ்சம் இயக்கமே; உரசுதலால் இறுதியில் எல்லாம் முடிவடையும்; அப்போது ஓய்வு திகழ்கின்றது; அதன் பின் மீண்டும் அனைத்தும் தொடங்கும்.

* * * * * * * *

தோலாகிய விசும்பு மனிதனைச் சூழும்வரை, அதாவது மனிதன் தன்னை உடலோடு ஒன்றுபடுத்திக் கொள்ளும் வரை, அவன் இறைவரைக் காணமாட்டான்.

ஞாயிறு பிற்பகல்

வேதங்களை நம்புவதால் வைதிகமெனப்படும் ஆறு தரிசனங்கள் (தத்துவ நூற்கொள்கைகள்) இந்தியாவில் உள்ளன.

வியாசரது தரிசனம் அனைத்தினும் மிக்க சிறப்புவாய்ந்ததாகி உபநிடத தத்துவமயமேயாகிறது. வியாசர் சூத்தர வடிவிலே எழுவாய் பயனிலைகளின்றிச் சுருங்கிய கணிதக் குறியீட்டு முறையிலே எழுதினர். இதனல், அது பல பொருள் கொள்ளக்கிடக்கும் பான்மை மிகுந்தது; சூத்திரங்களினின்றே துவைதம், விசிஷ்டாத்துவைதம், அத்துவைதம் என்பவை முளைத்தன ; இப் பல்வேறு சித்தாந்தங்களிலும் மிகப் பெரிய உரைகாரர் அனைவரும் சில சமயம் தம் சித்தாந்தத்திற்கு இசையுமாறு சூத்திரங்களை வலிய இழுத்தபடியால், அறிந்தே பொய் புகன்றவர் ஆவர்.

உபநிடதங்கள் எம்மனிதனது செயலையும் பற்றி வரலாற்று முறையிற் சிறிதும் கூறுவனவல்ல; ஆனல், ஏறத்தாழ ஏனைய சாத்திரங்கள் எல்லாம் பெரும்பாலும் மனிதரைப்பற்றிய வரலாறுகளேயாகும். வேதங்கள் சற்றேறக்குறைய முழுமையும் தத்துவத்தைப் பற்றியே பேசுகின்றன. தத்துவமற்ற சமயம் மூட நம்பிக்கைக்குட்படுகின்றது. சமயமற்ற தத்துவம் வறட்டு நாத்திகமாகின்றது.

விசிஷ்டாத்துவைதம் விசேஷணத்தோடு கூடிய அத்துவைதமேயாகும். அதனை விரிவாக உரைத்தவர் இராமாநுஜர். அவர்

கூறுவதாவது : "வியாசர் வேதங்களாகிய பாற்கடலைக் கடைந்து மன்னுயிர்க்கு மிக்க நன்மை பயக்குமாறு தத்துவம் எனும் நவநீதத்தை அளித்தார்." அவர், "எல்லா நன்மைகளும் எல்லாக் குணங்களும் பிரபஞ்சத்தைப் படைத்தவராகிய திருமாலுக்கே உரியன ; அவர் புருடோத்தமர் ; பிரம்மம் அவரினும் தாழ்ந்தது ; பிரபஞ்சமும் அங்ஙனமே," எனக் கூறினர்.

மத்துவர் முழுத்துவைதி. அவர் புராணங்களிலிருந்தே மேற்கோள்களை எடுத்தாள்கின்றனர்.

பிரம்மம் என்பதன் பொருள் திருமாலேயன்றிச் சிவனன்று, காரணம் யாதெனில், திருமாலன்றி முத்தியில்லை என்பதே.

ஜூலை 8-ஆம் தேதி—திங்கட்கிழமை

இராமானுஜர் பின் வருமாறு இயம்புவர்: வேதங்கள் கற்றற்குரிய மிகத் தூய்மையான நூல்களாம். மூன்று உயர்ந்த வருணங்களையும் சார்ந்த புதல்வர்கள் உபநயனம் செய்விக்கப்பெற்று எட்டாவது வயதிலோ, பத்தாவது வயதிலோ, பதினொன்றாவது வயதிலோ வித்தையைத் தொடங்கட்டும் ; அதாவது குருவை நண்ணிப் பூரண முறையிலே சுரத்தோடும், உச்சரிப்போடும், வார்த்தை வார்த்தையாக வேத அத்தியயனம் பண்ணுதலாம்.

ஜெபமானது தூய நாமத்தை ஓதுவதாம் ; இது வாயிலாக மனிதன் அன்பின் அகண்ட நிலைக்கு உயர்கிறான் ; வேள்வியும் சடங்குகளுமாய தோணி எளிதாக உடையக்கூடியது ; பிரம்மத்தை அறிதற்கு—முத்தியடைதற்கு—அதனினும்—மிகுதியான ஒன்று வேண்டும். வீடு என்பது அறியாமையின் அழிவினும் சிறிது அதிகமன்று; அவ்வழிவு நிகழ்வது நாம் பிரம்மத்தை அறியும் போது மட்டுமே. வேதாந்தத்தின் பொருளை உணர இந்த எல்லாச் சடங்குகளின் வழியாகவெல்லாம் செல்வது அவசியமன்று. 'ஓம்' என்பதை ஓதுதல் போதும்.

வேறுபாட்டைக் காண்பதே எல்லா இடும்பைகளுக்கும் வேராகும் ; அறியாமையே வேறுபாட்டைப் பார்ப்பதற்கு மூலமாகும். இது பற்றியே சடங்குகள் அவசியமாகா. அவை சமமின்மைக் கருத்தை வளர்க்குமாதலின், அவற்றைப் பழகுவது யாதேனும் ஒன்றை விலக்கவோ யாதேனும் ஒன்றைப் பெறவோதான்.

பிரம்மம் செயலற்றது. ஆன்மா பிரம்மமே. நாம் ஆன்மாவே. -இது போன்ற அறிவு பிழையனைத்தையும் களைந்துவிடுகின்றது. அதனைக் கேட்டல் வேண்டும்; சிந்தித்து அறிதல் வேண்டும்; இறுதியில் தெளிதல் வேண்டும். (சிரவண மனன நிதித்தியாஸனம் செய்தல் வேண்டும்). சிந்தித்தலாவது, புத்தியைப் பயன்படுத்தி நம்மிடத்துத் தருக்கம் வாயிலாக இவ்வறிவை நிலைநாட்டுதலாம். தெளிதலாவது, அதனைப்பற்றி இடையறுது தியானித்து, அதனை நம் வாழ்வின் ஒரு பகுதியாகச் செய்தலே. இவ்விடையரு நினைவெனும் தியானம் எண்ணெயின் தாரை போன்று தொடர்ந்து நிகழ்வதாகும். அல்லும் பகலும் இந்நிலையிலே மனத்தைப் புரளச் செய்கிறது தியானம். அதனுல் அது விடுதலை (முத்தி) பெறத் துணையாகின்றது. 'ஸோஹம், ஸோஹம்,' என்று எப்போதும் நினை. இது முத்தியைப் போன்றே கிட்டத் தட்ட நன்ருவது. பகலும் இரவும் இதைப் பகர். இத்தகைய இடைவிடாச் சிந்தனையின் பயனுக மெய்யுணர்வு வந்தெய்தும். இறைவனைப் பற்றிய இத் தொடர்ந்த தனி நினைவே பத்தி என்பதன் பொருளாம்.

இந்தப் பத்தியைப் பெற எல்லா நற்செயல்களும் மறைமுகமாகத் துணை புரியும். நல்ல நினைவுகளும், நல்ல செயல்களும், தீயனவற்றைவிடக் குறைந்த வேறுபாட்டுணர்ச்சியை விளைவிக்கும்; ஆதலால், சுற்று வழியிலே அவை முத்தியில் உய்க்கின்றன. கருமம் புரி. ஆனுல், பயன்களை இறைவனிடம் விட்டுவிடு. அறிவொன்றே நம்மைப் பூரணமாக்க வல்லதாம். மெய்ம்மையெனும் இறைவனைப் பத்தியோடு பின்பற்றுபவன் எவனே, அவனுக்கு மெய்ம்மையெனும் இறைவன் தன்னைத் தானே காட்டியருள்வான்.

* * * *

நாம் விளக்குகள்; நாம் எரிதலே, நம்மால் வாழ்வெனப் பெயரிடப்படுகிறது. பிராண வாயுவை ஊட்டுதல் நின்றுவிடும் போது விளக்கு அணைந்துவிடவேண்டும். நம்மாற் செய்யக்கூடியதெல்லாம் விளக்கைத் துப்புரவாக வைத்திருத்தலே. வாழ்வென்பது ஆக்கப்படு பொருள்; ஒரு கூட்டுப் பொருள். அது அத்தகையதாதலின், தன்னிடம் அடங்கியுள்ள மூலப் பொருளாகப் பிரிவுபட வேண்டுவதாகும்.

ஜூலை 9 ஆந் தேதி—செவ்வாய்க்கிழமை

மனிதன் ஆன்மாவான நிலையிலே உண்மையாகவே விடுபட்டவனாகிருன். மனிதனுன நிலையில் அவன் பந்தத்துக்கு உட்பட்டவன்; உடலின் நிலைமை ஒவ்வொன்றுலும் விகாரமடைபவன். மனிதனுன நிலையில் அவன் சுதந்தர நினைவோடு கூடிய ஒரு இயந்திரமே; ஆனுல், அம்மனித உடலே அனைத்தினும் சிறந்தது. மனித உள்ளமே இருப்பவை அனைத்தினும் உயர்ந்தது. மனிதன் ஆன்ம நிலையினை அடையுங்கால் அவனுக்கு ஓர் உடலைத் தனக்கு இயைந்தவாறு அமைத்துக் கொண்டு பிறக்க இயலும். அவன் நியதிக்கு அப்பாற்பட்டவன்.

இவ்வுரை திண்ணமாய் மெய்ப்பிக்கப்பட வேண்டுவதாகும். ஒவ்வொருவரும் தமக்குத் தாமே இதனை மெய்ப்பித்துக் கொள்ள வேண்டும்; நாமே நம்மைத் திருத்திப்படுத்திக் கொள்ளலாம். பிறரைத் திருத்திப்படுத்த இயலாது. மெய்ப்பிக்கப்படக்கூடிய சமய சாத்திரம் இராஜயோகம் மட்டுமே; யானே அனுபவத்தால் மெய்ப்பித்துக் கொண்டுள்ளவற்றையே போதிக்கிறேன். யுத்தி முழுதும் பழுக்கும்போது ஞானக் காட்சியாகிறது; ஆனுல், ஞானக் காட்சி என்பது யுத்தியோடு முரண்பட மாட்டாது.

கருமம் நெஞ்சைத் தூய்மை ஆக்குகிறது; அதனுல், வித்தைக்கு (ஞானத்திற்கு) வழிகாட்டுகிறது. மக்களுக்கும் விலங்குகளுக்கும் இயற்றும் நற்செயல்களே கருமங்களாகும் என்று பௌத்தர்கள் மொழிந்தார்கள்; வழிபாடு முதலிய சடங்குகள் அனைத்தும் சம அளவிற்குக் 'கருமம்' ஆகும் என்றும், அவையும் மனத்தைத் தூய்மையாக்கும் என்றும் பிராமணர்கள் உரைத்தார்கள். நன்மையும் தீமையும் ஆய எல்லாக் கருமங்களும் ஞானத்திற்கு எதிரானவை என்று சங்கரர் பறையறைகின்றனர். அறியாமையை விளைவிக்கும் செயல்கள் பாவங்களே; நேர்முகமாகவல்ல; ஆனுல், அவை காரணங்களாய்த் திகழ்தலின் அவை ராஜச தாமச குணங்களை ஓங்கச் செய்வன. சத்துவம் ஒன்றுலே தான் ஞானம் அடையப்படும். நற்கருமங்கள் ஞானத்தை மூடும் திரையை நீக்குகின்றன. ஞானமொன்றே நம்மைக் கடவுளைக் காண வல்லராக்குவது.

ஞானம் ஒருபோதும் உண்டாக்கப்படுவதன்று; உள்ளதைக் கண்டு பிடித்ததே ஆகும். பேருண்மையைக் கண்டு பிடிக்கும் ஒவ்வொருவனும் அருள் வயப்பட்டவனே. அவன் காணும் உண்மை

ஞானத்தைப் பற்றியதாம்போது, அவனைத் தீர்க்கதரிசி (கால முணர்ந்த பெரியோன்) என்று வழங்குவோம்; சட உடல் சம்பந்த மானதாயின், அவனைப் பௌதிக விஞ்ஞானி என்போம். எல்லா உண்மைக்கும் மூலம் ஒன்றே (ஏக பரம்பொருளே). ஆயினும், முன்னதையே மிக்க சிறப்புடையதாகப் பாராட்டுகிறோம்.

பிரம்மமே வடி கட்டிய சுவையாவது; எல்லா ஞானத்திற்கும் மெய்ம்மையாவது என்றும், ஞாதிரு ஞானம் ஞேயம் எனும் திரிபுடி யாகும் தோற்றங்கள் யாவும் பிரம்மத்தின் மீது சுமத்தப்படும் கற்பனையளவேயாம் என்றும் சங்கரர் சாற்றுகின்றார். இராமாநுசர் ஞானத்தையும் இறைவனுக்குக் குணமாக்குகிறார்; உண்மையான அத்துவைதியர் பரம்பொருளுக்கு எதனையும் குணமாகக்கொள் ளார்; நாம் கருதும் எப்பொருளிலாயினும் சரி, இருப்பையும் அதற்குக் கற்பியார். பகவான் உணர்வோடு பெறும் ஞானத்தின் அருஞ் சுவை என்று இராமாநுசர் உரைக்கின்றார். வேறுபடுத்தப் படாத உணர்வு வேறுபடுத்தப்படும் போது உலகமாகிறது.

* * * *

இவ்வுலகிலுள்ள தத்துவச் செறிவுள்ள சமயங்களில் ஒன்றான புத்த மதம் இந்தியாவின் பொதுமக்களிடையே பரவியது. அத் தகைய கருத்துகளை மனத்திற் பற்றுந் திறமை பெறுதற்கு இருபத் தையாயிரம் ஆண்டுகட்கு முன்பே ஆரியர்களுள் எத்தகைய வியப் புறத்தக்க பண்பாடு இருத்தல் வேண்டும்!

வருணத்தை ஒப்புக்கொள்ளாத ஒரே இந்தியப் பெருந்தத்துவ ஞானியார் புத்தரே; அவரைப் பின்பற்றுபவருள் ஒருவரும் இந்தி யாவில் இப்போது இல்லை. ஏனைய அறிஞர் அனைவரும் சமூக வாழ்க்கையைப் பற்றிய தவறான கருத்துகளுக்கு ஏறக்குறையக் கையாட்களாகவே இருந்தனர். எவ்வளவு உயரம் அவர்கள் பறந் தாலும், பருந்தின் இயல்பு ஒரு சிறிது எஞ்சியிருந்தது. என் குரு நாதர் கூறுகிறபடியே, "பருந்து விண்ணில் கண்ணுக் கெட்டாத உயரத்திற் பறக்கிறது; ஆனால், அது மண்ணிலுள்ள அழுகிய இறைச்சித் துண்டு ஒன்றின் மீதே எப்போதும் கண்ணா யிருக்கும்."

* * * *

பழங்கால இந்துக்கள் வியக்கத்தக்க பண்டிதர்களாயிருந்தார்கள்; உண்மையாகவே உயிருள்ள கலைக் களஞ்சியங்களாக யிருந்தார்கள். அவர்கள், "நூல்களில் திகழும் அறிவும் பிறர் கைப் பொருளும், இல்லாதவை போன்றனவே," எனக் கூறினர்கள்.

சங்கரரைப் பலர் சிவபெருமானுடைய அவதாரமாகக் கருதினர்.

ஜூலை 10ஆந் தேதி—புதன்கிழமை

இந்தியாவிலே ஆறு கோடி ஐம்பது லட்சம் மகம்மதியர் உள்ளனர்; அவர்களுட் பலர் சூபியரே*. சூபியர் மனிதனை இறைவனோடு ஒன்ருகச் செய்வர். அவர்கள் வாயிலாகவே இக் கருத்து ஐரோப்பாவிற்புகுந்தது. அவர்களுக்கு 'ஷீயர்' என்பது பெயர். அவர்கள், "நானே அம்மெய்ப்பொருள்," என்று சொல்லுவார்கள். ஆனல், அவர்களுள் ஒர் அந்தரங்கக் கொள்கையும் ஒரு பகிரங்கக் கொள்கையும் உண்டு; எனினும் மகம்மது நபி அவ்வாறு கொள்ளவில்லை.

'ஹஷ்ஷாஷின்'† என்ற மொழியே ஆங்கிலத்தில் 'அஸ்ஸாஸின்' (கொல்லுகிறவன்) என்ற மொழியாய் மருவிற்று; மகம்மதிய மதத்தைச் சார்ந்த பழைய பிரிவினர் தம் மதத்தின் நம்பிக்கையற்றவரைக் கொல்லுதலைத் தம் கொள்கையின் ஒரு பகுதியாகக் கொண்டிருத்தலே அதற்குக் காரணம்.

மகம்மதியர் வழிபடும் இடத்தில் நீர் நிறைந்த குடம் ஒன்றை வைத்தல் அவசியம். உலகமெங்கும் பரந்துள்ள இறைவனுக்கு அது அறிகுறியாகின்றது.

---

* *இந்தியாவில் மகம்மதிய மதத்திலே இந்து மதத்தின் சார்பினலும், தூண்டுதலாலும் விளைந்த மதப் பிரிவினரே சூபியர் எனப்படுவர்.*

† *ஹஷ்ஷாஷின் என்ற பெயர் 11-ஆம் நூற்ருண்டில் சிரியாவில் வாழ்ந்த ஓர் இராணுவ மதச் சங்கத்திற்கு உரியது; அச்சங்கத்தினர் தம் தலைவரின் ஆணைப்படி இரகசியமாகக் கொலைகள் பல புரிந்து வருவதிற் புகழ் பெற்றவர். அம்மொழியின் (ஹஷ்ஷிஷ்) பதப்பொருள் 'தின்பவன்' என்பது; சங்கத்தின் அங்கத்தினர் கொலைத் தொழிலைப்புரியும் மனவுறுதி பெறும்பொருட்டு 'ஹஷ்ஷிஷ்' என்ற மூலிகையைத் தின்னும் வழக்கமுடையராதலின், அப்பெயர் அங்கத்தினர்க்கு உரியதாயிற்று.*

தெய்வ அவதாரங்கள் பத்து நிகழும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. நிகழ்ந்துள்ளவை ஒன்பது; பத்தாவது இனி வரப் போவது.

* * * *

நூல்களில் உள்ள கருத்துகள் தம் சித்தாந்தத்திற்கு ஆதர வளிக்கின்றன என்பதை நிலைநாட்டும் பொருட்டு போலி வழக் குரையையும் சங்கரர் பயன்படுத்துகின்றனர். துணிவிலும் சிரத்தை யிலும் எந்தக் குரவரினும் புத்தர் மிக்கவரானார். அவர், "எந்த நூலையும் நம்பாதே. வேதங்கள் (கரும காண்டமே இங்குப் பேசப் படுவது) அனைத்தும் வஞ்சனையே. அவை என் கருத்திற்கு இசையு மாயின், அவற்றுக்கு அதே அளவிற்கு அது மிக நன்றேயாம். யானே அனைத்தினும் பெருநூலாவேன். வேள்வியும் பிரார்த்தனை யும் பயனற்றவை," என்று கூறினர். உலகிற்கு ஒரு முழு நீதி முறையை அளித்த முதல் மனிதர் புத்தரே. நல்லவராதற்கெனவே நல்லவரானவர் அவர். அன்பிற்காகவே அன்பு செய்தவர் அவர்.

சங்கரர், "பகவானையும் யுத்தியால் ஆராயவேண்டும், வேதங் கள் அவ்வாறு விரிப்பனவாதலின். யுத்தி உள்ளுணர்வுக்குத் துணை புரியும்; சாத்திரங்களும், அனுபூதி ஒட்டிய அறிவும்— அதாவது, தனி மனிதனுக்கு உரியதாக்கப்பட்ட காட்சியும்— இரண்டும் கடவுளின் உண்மைக்குப் பிரமாணங்களாம்—அத்தாட்சிகளாம்," என்று உரைப்பர். அவரது கருத்தின்படி வேதங்கள் எல்லா அறிவிற்கும் ஒருவகையான அவதாரமேயாவன. இறைவரது உண் மைக்குச் சான்று, வேதங்களை அவர் வெளிப்படுத்தியமையே; வேதங்கட்குப் பிரமாணம், அத்தகைய வியக்கத்தக்க நூல்களைப் பிரம்மனே வெளிப்படுத்த வல்லவனுவான் என்பதே. அவை எல்லா அறிவுக்கும் சுரங்கமாகும். ஒரு மனிதன் மூச்சை விடுவது போன்று அவை இறைவரிடமிருந்து வெளி வந்தன; ஆதலால், சத்தியிலும் அறிவிலும் அவர் வரையறையற்றவர் என்பதை நாம் அறிவோம்.

அவர் உலகத்தைப் படைத்துமிருக்கலாம்; படையாமலும் இருக்கலாம். அது ஓர் அற்ப விஷயம்; வேதங்களை வெளிப்படுத்தி யது அதனினும் சிறந்தது! உலகம் இறைவரைப் பற்றி அறிவது வேதங்கள் மூலமே; வேறு வழி இல்லை.

வேதங்கள், அனைத்தையும் அடக்கியுள்ளன என்னும் சங்கர ரது நம்பிக்கை, அனைவரிடமும் வழங்கி வரும் ஒன்றே. இதனு லன்றோ, 'ஒருவன் தனது பசுவை இழப்பினும் வேதங்களில்

அதைத் தேடத் தொடங்குகிறுன்,' என்னும் ஓர் இந்து பழமொழி உலவி வருகின்றது?

"கிரியைகளைக் கூறியவாறு இயற்றல் அறிவன்று," என்று சங்கரர் மேலும் வலியுறுத்துகின்றனர். இறைவரைப் பற்றிய ஞானம் (பிரம்ம ஞானம்) நீதிவழுவாது இயற்றும் கடமைகளையோ, வேள்வியையோ, கிரியையையோ, நாம் நினைப்பதையோ, நினையாததையோ, சார்ந்ததன்று. இது, ஒரு மரத்தின் அடித்தூற்றை ஒருவன் பேயாகக் கருதினும், மற்ருெருவன் அதை உள்ளவாறு காணினும் அது பாதிக்கப்படாதது போன்றது.

யுத்தியாலும் நூல்களாலும் இறைவரைக் காண ஒண்ணுது என்ற காரணத்தால், வேதாந்தம் இன்றியமையாததே. இறைவரை அபரோக்ஷ ஸாக்ஷாத்காரம் (மெய்யுணர்வுக் காட்சி) ஒன்றினுல் மட்டும் உணரலாம்; வேதாந்தம் அதைப் பெறும் வகையைப் போதிக்கிறது. நீ ஈசுவரனைத் தாண்டி அப்பால் பரப்பிரம்மத்தை அடைதல் வேண்டும். ஒவ்வோர் உயிரும் காணுங் காட்சி கடவுளே; காண இருப்பதெல்லாம் அவரே. 'நான்' என்று கூறுவது பிரம்மமே. அல்லும் பகலும் இவ்வாறு நாம் பிரம்மத்தையே காணினும், நாம் காண்பது அதுவே என்பதை அறியோம். இவ்வுண்மையை நாம் உணர்ந்ததும், எல்லாத் துயரும் மாயும்; ஆதலின், உண்மையைப் பற்றிய ஞானத்தைப் பெறவேண்டும். ஒரே பொருளை அடை; அதன் பின் துவைதம் அங்கே சாராது. ஆனுல், ஞானம் வேள்வியால் வருவதன்று; ஆன்மாவைத் தேடுவதனுலும், வழிபடுவதனுலும், அறிவதனுலும் பெறப்படுவது.

பிரம்மத்தை அறியும் வித்தையாதலின், பிரம்ம வித்தையே அனைத்தினும் உயர்ந்த வித்தையாம். அபரவித்தை (கீழான வித்தை) பௌதிக ஞானம். இதுவே முண்டகோபநிடதத்தின்—அதாவது, சந்நியாசிகட்குரிய உபநிடதத்தின்—போதனையாம். வித்தையில் இருவகையுள்ளன—பரம் (உயர்ந்தது) அபரம் (கீழானது) என்பன. அபர வித்தையாவது பூசையையும், கிரியையையும், இலௌகிக (உலகியல்) அறிவையும் பற்றிப் பேசுவது. நாம் எது வாயிலாகப் பரம்பொருளை அடைகிருேமோ, அதுவே பரவித்தை. அது (பரம்பொருள்) அனைத்தையும் தனது சொந்த இயல்பினின்றே படைக்கிறது; உண்டுபண்ண வேறு எதுவும் இல்லை; வெளியே எதுவும் இல்லை. எல்லாம் சத்தி. இருப்பதெல்லாம் அதுவே. எல்லா வேள்விகளையும் ஆன்மாவாகிய தனக்கே செய்ப

வன் ஒருவனே பிரம்மத்தை அறிகிறான். புறவழிபாட்டை மிக உயர்ந்ததென அறிவிலிகள் கருதுகின்றார்கள். 'கருமங்களால் நாம் கடவுளை அடையலாம்,' என அவர்கள் நினைக்கின்றார்கள். சுழு முனை (யோகிகள் கூறும் 'நெறி') வழியாகச் செல்லுபவரே, ஆன் மாவை அடைவர். அவர்கள் இதைக் கற்க ஒரு குருவிடம் செல்ல வேண்டும். ஒவ்வொரு பகுதியும் முழுப் பொருளைப் போன்று அதே இயல்பை உடையது. அனைத்தும் ஆன்மாவினிடமிருந்து பிறக் கின்றன. தியானமே அம்பு; இறைவரை நோக்கி விரையும் முழுச் சீவனே அம்பை ஆன்மாவாகிய குறியை நோக்கிச் செலுத்தும் வில். எல்லையுற்ற நிலையில் நாம் எல்லையற்ற பரம்பொருளை வெளிப் படுத்த ஒருபோதும் இயலாது. ஆனால், உண்மையில் நாம் எல்லை யற்ற பரம்பொருளே. இதையறிந்து நாம் ஒருவரோடும் வழக் காடுவதில்லை.

பத்தியாலும், தியானத்தாலும் பிரம்மசரியத்தாலும் பிரம்ம ஞானம் அடையப்பட வேண்டும். "மெய்யே வெல்வது; பொய் யன்று." மெய் வாயிலாகவே பிரம்மத்தை நோக்கிச் செல்லும் பாதை பரவுகிறது; பிரம்மத்தினிடந்தான் அன்பும் மெய்யும் உள்ளன.

ஜூலை 11ஆம் தேதி—வியாழக்கிழமை

தாயன்பின்றி எப்படைப்பும் தொடர்ந்து நிகழாது. எதுவும் முற்றும் தூலமானதுமன்று, முற்றும் சூட்சுமமானதுமன்று. ஒன்று மற்றொன்றின் இருப்பை உள்ளடக்கியது, மற்றொன்றிற்கு விவரக் குறிப்பாகின்றது. இத்தூலப் பிரபஞ்சத்திற்கு அடிப்படை ஒன்றுண்டு என்பதை ஆத்திகர் அனைவரும் ஒப்புக்கொள்கின் றனர்; அந்த அடிப்படைப் பொருளின் இயல்பைப் பற்றித் தான் வேறுபடும் கருத்தினராவர். உலோகாயதர் அத்தகைய அடிப்படை இல்லையென்று இயம்புகின்றனர்.

எல்லாச் சமயங்களிலும் ஞானக்காட்சி நிலை ஒன்றேதான். இந்துக்கள், கிறித்தவர், மகம்மதியர், பௌத்தர் என்பவரும், மதக் கொள்கையற்றவருங்கூட, உடலிற்கு அதீதமான நிலையினை அடை யும்போது ஒரே அனுபூதியை உடையவராகின்றனர்.

* * * *

இவ்வையகத்திலே மிகத் தூய கிறித்தவர்களைத் தாமஸ் என்னும் சீடர்—பிரசாரகர்—ஏசுநாதரின் மறைவிற்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் இந்தியாவில் நிலைநாட்டினர். ஆங்கிலோ-ஸாக்ஸன் இனத்தார் தம் உடல்களில் வண்ணம் பூசிக்கொண்டு குகைகளில் உறைந்துவந்த நாகரிகமற்ற மனிதர்களாய் இருந்து வந்தபோது இந்தியாவிலிருந்த கிறித்தவர் முப்பது இலட்சம் பேராவர்; ஆனால், இப்போது உள்ளவர் ஏறக்குறைய பத்து இலட்சம் பேரேயாவர்.

கிறித்தவ சமயத்தை எப்போதும் வாளாற் பரப்பி வந்தார்கள். கிறித்துவைப் போன்ற சாந்தமான ஒருவரின் சீடர்கள் அத்தனை மக்களைக் கொன்றது மிகவும் வியப்புக்குரியதன்றோ! மூன்று பிரசாரக மதங்கள் 'பௌத்தம், மகம்மதியம், கிறித்தவம்' என்பன. பழைய மும்மதங்களான இந்து மதமும், யூத மதமும், சொரோஸ்திரிய மதமும் ஒருகாலும் மக்களை மதமாற்றுவதற்கு முயன்றவையல்ல. பௌத்தர் ஒருபோதும் ஒன்றையும் கொன்றறியார்; ஆயினும், ஓர் அமயம் உலகில் முக்காற் பகுதியைத் தனிச்சாந்தத்தினாலேயே மாற்றிவிட்டனர்.

அஞ்ஞேய வாதியர்க்குள் மிக ஒழுங்காக வழக்காடுபவர் பௌத்தரே. சூனிய வாதம் பரம்பொருள் வாதம் எனும் இருமுனைகளுக்கும் இடையே உண்மையாகவே நிற்க இடமில்லை. பௌத்தர் புத்தி சம்பந்தப்பட்ட மட்டில் அனைத்தையும் அழிப்பவராயினர்; தமது கொள்கையைத் தருக்க முறையிலே இறுதிவரை இழுத்துச் சென்று முடிபு கூறினர். அத்துவைதியரும் தமது கொள்கையைத் தருக்க முறையில் முடிவு வரை வளர்த்து வந்து பரம்பொருளை அடைந்தனர்; அப்பொருள் தன்னிலையுற்ற ஏக முழுப் பொருள்; அதனாலே தான் எல்லாப் பொருள்களும் தோற்றுவிக்கப்படுகின்றன. பௌத்தர்கள், அத்துவைதிகள் ஆகிய இரு சாராரும் ஒரே சமயத்தில் தன்னிலையுண்மை (identity) 'தன்னிலையின்மை' (non-identity) எனும் இரு கருத்துகளையும் கொண்டுள்ளனர்; இவற்றுள் ஒன்று தவறாயும், மற்றொன்று சரியாயும் இருத்தல் வேண்டும். சூனியவாதி தன்னிலையின்மையை உண்மை யெனக் கருதுகிறான். பொருளுண்மைவாதி (realist) தன்னிலையுண்மையை உண்மையென எண்ணுகிறான். இதுவே, உலக முழுதும் நடைபெற்றுவரும் போராகும். இதுவே "இங்கு மங்கும் இழுக்கும் போட்டி."

பொருளுண்மைவாதி, "தன்னிலையுண்மையெனும் கருத்தே எவ்வாறு சூனியவாதிக்கும் உண்டாகிறது?" என்று வினவுகிறான். சுழலும் ஒளி ஒரு வட்டமாகத் தோன்றுவது எப்படி? அசைவற்ற ஒரு புள்ளியே அசைவை விளக்கமாக்குகிறது. சூனியவாதி எதற்கும் அடிப்படை உண்டென்ற மயக்கத்திற்கு ஆதி எது என்பதை ஒரு நாளும் விளக்கிக் கூற இயலாது. கருத்துண்மை வாதியோ, ஒன்று பலவானது எவ்வாறு என்பதை விளக்க இயலாதவனாகிறான். ஐம் புல உலகிற்கு அப்பாலிருந்துதான் விளக்கம் என்பது வந்தாக வேண்டும். ஞானக் காட்சி நிலைக்கு—ஐம்புலக் காட்சியை முற்றி லும் கடந்த நிலைக்கு—நாம் புறப்படவேண்டும். அந்த நுண்ணிய சத்தியை மேலும் கருவியாகப் பயன்படுத்தக்கூடியவன் கருத் துண்மை வாதியென்பவனே. அவன் பரம்பொருளை அனுபூதியில் உணரக்கூடும். விவேகானந்தர் எனும் மனிதர்க்குத் தம்மைப் பகுத்துப் பகுத்துப் பரம்பொருளாக்கிக்கொள்ளவும் பின்னர் மனித நிலைக்கு மீளவும் இயலும். அவ்வாறாயின், அவர் சம்பந்தப் பட்டமட்டில் சங்கடம் தீர்ந்துவிட்டது; பிறர்க்கும் இரண்டாம் பட்சமாக அந்நிலை வருகிறது. எவ்வாறெனில், அவர் பிறர்க்கும் அவ்வழியைக் காட்ட வல்லவராதலின். எனவே, தத்துவ ஆராய்ச்சி முடியும் இடத்தில் சமய அனுபூதி தொடங்குகிறது. "உலகிற்கு நன்மை" என்பது இப்போது நமக்கு உணர்வு கடந்த நிலையி லுள்ளதாகும்; இனிவரும் யுகங்களில் அனைவர்க்கும் உணரக்கூடிய நிலையினதாகும். சமயமே இதனால் உலகஞ் செய்தற்குரிய அனைத் திலும் உயர்ந்த தொழிலாகின்றது; மனிதன் உணராமலே இதனை அறிந்திருத்தலின், ஊழி ஊழியாக அவன் சமயம் எனும் கருத்தை விடாது பற்றி வந்துள்ளான்.

சமயம் எனும் பெருங்கறவைப் பசு பலமுறை உதைத்திருக்க லாம்; ஆயினும், அதைப் பொருட்படுத்த வேண்டா, அது பேரள விற்குப் பாலைத் தருகின்றதாதலின். நிரம்பப் பால் தரும் பசுவின் உதையைப் பாற்காரன் பொருட்படுத்தான். பிறந்துள்ளவை அனைத்தினும் உயர்ந்த குழவி சமயமே; அதுவே பெரும் 'பிர போத சந்திரனாகும்'. அதற்கு உணவூட்டி இப்போது அதுவரை உதவிபுரிவோம். அது மாபெரு மனிதனாகும். ஆசையெனும் மன்ன வனும் ஞானமெனும் வேந்தனும் போர் புரிந்தனர்; பின்னவன் தோல்வியடையும் தருணத்தில் வேதாந்தம் எனும் குழந்தை யொன்று பிறந்து, அவனுக்கு வெற்றி அளித்தது. பின்பு பத்தியும்

ஞானமும் மணம் புரிந்துகொண்டு, அன்று முதல் இன்று வரை இன்பமாய் வாழ்கின்றன. அன்பு, ஒருவன் ஒருத்தியைக் காதலிக்கும்போது நிகழ்வது போன்றே, சங்கற்ப சத்தி முழுமையையும் முயற்சியின்றியே ஒருமைப்படுத்துகின்றது.

பத்திநெறி இயல்பானதாயும் இனியதாயும் திகழ்வது. தத்துவ ஆராய்ச்சி நெறி, மலையினின்று இழியும் அருவியை வலிய அதன் தோற்றத்திற்கே மீண்டும் செலுத்துதலாகும். அது விரைவிற் பயனளிக்கும் நெறி; ஆனால், மிகக் கடினமானது. தத்துவ ஆராய்ச்சி நெறி "அனைத்தையும் அடக்கு" என்கிறது. பத்தி நெறியோ, "அருவி வழியே அனைத்தையும் விட்டுவிடு; நித்திய சரணாகதி நிலையில் (அடைக்கலம் புகும் நிலையில்) இரு," என்று உரைக்கின்றது; இந்நெறி நீண்ட நெறியாகும்; ஆயினும், அதனினும் எளியதாய் இன்பமானதாய் விரியும்.

"என்றென்றும் உமக்குரியேன்; இனி, நான் எனது என்பன எள்ளளவும் என்னிடம் இல்லை."

"கொடுக்கப் பொருள் இல்லாமையால், உணர அறிவு இல்லாமையால், அன்பரே, உமக்கே என்னை யான் அளித்து விட்டேன்; என் உடலையும் மனத்தையும் உமக்கே நல்கி விட்டேன்."

ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் இடையே, அறியாமையோ தவறான கருத்துகளோ எவ்வளவாயினும், தடையினை எழுப்ப இயலாது. இறைவர் இலர் எனினும், அப்போதும் அன்பினை உறுதியாகப் பற்று. அழுகி நாறும் ஊனையே நாடும் நாயாய் வாழ்வதிலும், இறைவரை நாடி உயிர் துறத்தல் மிக நன்று. அனைத்தினும் உயர்ந்த இலட்சியத்தை நாடு; உனது வாழ்வை அதற்கென்றே விட்டுவிடு. இறப்பது அவ்வளவு உறுதியாதலின், ஒரு பெருநோக்கத்திற்கென வாழ்வைத் துறத்தல் மிகமிக உயர்ந்ததாம்.

அன்பு வருத்தமின்றியே தத்துவ ஞானத்தை நண்ணும்; ஞானத்திற்குப் பின் பரபத்தி வந்தடையும்.

ஞானம் எதனையும் ஆராய்ந்து சீர்தூக்கும்; ஒவ்வொன்றையும் பற்றிப் பேராரவாரம் செய்யும்; ஆனால், அன்போ, "இறைவனே தனது உண்மையான இயல்பை எனக்குக் காட்டி அருள்வான்," என்று மொழிந்து அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும்.

ராபியா

படுக்கையில் நோயுறக் கிடக்கும் ராபியா
நங்கையைக் காண்பான் நண்ணினர் ஞானியர் ;
பங்கமில் மாலிகர் பரமுனர் ஹாஸான்
மகம்மது மதத்தினில் மிகுபுகழ் பெற்றவர்
சொல்லுவர் ஹாஸான் : " தூயஅன் புடையவன்
நல்லிறை தருத்துயர் நன்கனம் பொறுப்பான்."
ஆழ்ந்த சிந்தனை அனுபூதி யோடும்
வாழ்ந்த மாலிகர் மதித்துரை செய்வார் :
" ஆண்டவன் ஆய்ந்தருள் எதனையும் விழைபவன்
மாண்புறு துயரை மகிழ்வொடும் ஏற்பான்."
இருவர் உரையிலும் எஞ்சிய சுயநயக்
கருவினை யுன்னிக் கழறினர் ராபியா :
" அருளினைப் பெற்ற ஆண்மைமிக் கோரே !
தெருளவிர் ஆண்டவன் திருமுகம் நோக்குவோன்
அன்பொடும் பிரார்த்தனை ஆற்றிடுங் காலைத்
துன்புறும் நினைவு தோயா திருப்பனே."

—பாரசீகப் பாடல்

ஜூலை 12ஆந் தேதி—வெள்ளிக்கிழமை

சங்கர பாஷ்யம்

நான்காவது வியாச சூத்திரம், " ஆன்மாவே அனைவர்க்கும் குறி," என்கிறது. ஈசுவரன் அறியப்படுதல் வேதாந்தத்தினின்று ; வேதங்கள் சுட்டிக் காட்டுவதும் அவனையே. இந்துக்கள் வழிபடும் கடவுளர்க்குள் தலைமை பூண்டுவரும்—பிரம்மா*, விஷ்ணு சிவன் (அயன், அரி, அரன்)—என்னும் மும்மூர்த்திகளும் கூடி ஒன்றான பொருள் கடவுளே. " இருட்கடலின் அக்கரையிற் சேர்ப்பிக்கும்

---

* ஆண்பாற் பெயராகிய 'பிரம்மா' என்பது மும்மூர்த்திகளிலே படைப்புக் கடவுளைக் குறிக்கின்றது. இது நிர்க்குணப் பரம்பொருளைக் குறிக்கும் 'பிரம்மம்' என்னும் அஃறிணைப் பெயரினின்றும் வேறானது என்பது இங்கே குறிக்கத்தக்கது.

எம் தந்தையார் நீரே,'' என்பது ஈசுவர தோத்திரத்தில் குருவினிடம் சீடன் கூறும் கூற்று.

வேதங்கள் பிரம்மத்தைக் காட்ட இயலாதவை; முன்னமே நீ அதுவாகின்றனை; நம் கண்முன் உண்மையைத் தெரியவொட்டாது மறைக்கும் திரையை நீக்க மட்டும் அவை உதவும். அகலுவதற்குரிய முதல் திரை அறியாமையே; அது ஒழிந்ததும், பாவம் நீங்குகிறது; பிறகு ஆசை நின்றுவிடுகின்றது; சுயநலம் முடிவடைகின்றது. எல்லாத் துயரங்களும் மறைகின்றன. கடவுளும் நானும் ஒன்றே என்பதை யான் அறியும்போதுதான் அறியாமையின் மறைவு நிகழக்கூடும்; வேறு வண்ணமாக மொழியின், உன்னை ஆன்மாவோடு ஒன்றுபடுத்திக்கொள்; மனிதனுக்குரிய வரையறைகளோடு ஒன்றுபடுத்தாதே. உடலோடு ஒன்றுபடுத்திக்கொண்டிருப்பதை விட்டுவிடு. எல்லா இடும்பைகளும் ஒழியும். இதுவே நோயைத் தீர்க்கும் இரகசியம். பிரபஞ்சம் மயக்கத்திற்கு உட்பட்டமையால் விளைந்ததே; உன்னை மயக்கத்தினின்றும் விடுவித்துக்கொள்; அவ்வாறு துயருறுவதை ஒழித்துவிடு.

முத்தியடைவதற்கு நாம் பாவம் வழியாகப் புண்ணியத்திற்குச் சென்று; பின்னர் இரண்டையும் நீக்கிவிடல் வேண்டும். தாமஸ குணத்தை ராஜஸ குணத்தால் வெல்ல வேண்டும்; அவ்விரு குணங்களையும் சாத்துவிகத்தில் அமிழ்த்திவிட வேண்டும்; பின்னர் முக்குணங்களையும் தாண்டி அப்பாற்செல்ல வேண்டும். உன் உயிர்ப்பே ஒரு பிரார்த்தனையாகும் நிலையினை அடை.

நீ வேறொருவனுடைய சொற்களினின்றும் கற்கும் (ஒன்றைப் பெறும்) போதெல்லாம் முற்பிறப்பில் அந்த அனுபவத்தை அடைந்திருந்தாய் என்பதை அறி; ஏனெனில், அனுபவம் ஒன்றே குருவாகின்றது.*

எல்லா வல்லமைகளோடும் முன்னினும் மிகுந்த துயரம் வருகின்றது; ஆதலால், ஆசையை மாய்த்துவிடு. எந்த ஆசையேனும் எழுவது, கடம்பைக் கூட்டுக்குள் ஒரு கோலை விடுவது

---

* எந்த மனிதனையாவது இடத்தையாவது பொருளையாவது நீ அறியும்போதெல்லாம் நீ அறிவதற்குக் காரணம் அதனைப் பற்றிய ஞாபகம் உனக்கு எழ இயல்வதே; அந்நினைவு எழ இயலாவிடில், நீ அதை அறியவில்லை என்கிறாய். முன்னரே அனுபவத்திற்கு வந்த ஒன்றையே நினைவுக்குக் கொண்டு வர இயலும். ஆதலால், அனுபவம் ஒன்றே குருவாகிறது.

போன்றதே; வைராக்கியமாவது, ஆசைகள் தங்கமுலாம் பூசிய நஞ்சுருண்டைகளே என்பதைக் கண்டறிவதேயாகும்.

"மனம் பிரம்மமன்று" (சங்கரர்) "தத்—த்வம் அஸி" (நீ அது வாகிருய்); "அஹம் பிரம்மாஸ்மி" (நான் பிரம்மமே.) ஒரு மனிதன் இதனை உணரும்போது அவனுடைய இதயக்கிரந்திகள் (கன்மக்கட்டுகள்) யாவும் அறுபடுகின்றன; அவனுடைய ஐயங்கள் அனைத்தும் மறைந்துவிடுகின்றன. ஈசனேயாயினும் நமக்கு மேலே உள்ளவரை அச்சமின்மை கைகூடாது; நாமே ஈசனுக வேண்டும். பிரிந்திருப்பது என்றைக்கும் பிரிந்தே இருக்கும்; நீ ஈசனினின்றும் வேருய் இருப்பாயாயின், நீ ஈசனேடு ஒரு போதும் ஒன்ருக மாட்டாய்; இதனைத் தலைமாற்றிக் கூறினும் ஒக்கும். உனது அறத்தால் நீ ஈசனேடு சேர்ந்திருப்பாயாயின், அது நீங்கும்போது பிரிவு ஏற்படும். இணைப்பு நித்தியமானது. அறம் ஆவரணத்தை (திரையை) நீக்க மட்டும் உதவுகின்றது. நாம் விடுபட்டவர் (ஆஸாத்) ஆவோம்; நாம் அதை உணர்ந்தே தீர வேண்டும். 'ஆன்மா யாரைத் தெரிந்தெடுக்கிறதோ' என்பதன் பொருளாவது, 'நாம் ஆன்மாவேயாதலின், நாமே நம்மைத் தெரிந்தெடுக்கிறேம்,' என்பதே.

காட்சி என்பது நம்முடைய சொந்த முயற்சிகளைப் பொறுத்ததா, அன்றேல் வெளியிலுள்ள ஒன்றைச் சார்ந்ததா? அது நம்மையே பொறுத்துள்ளது. நம் முயற்சிகள் தூசியையே நீக்குகின்றன; ஆனல், கண்ணுடி மாறுபடுவதில்லை. காண்பானே, காட்சியோ, காணப்படு பொருளோ ஒன்றும் இல்லை. "நான் அறியவில்லை" என்பதை அறிபவனே அதை அறிவான். ஒரு கொள்கையை உடையவன் ஒன்றும் அறியான்.

நாம் கட்டுப்பட்டுள்ளோம் என்னும் கருத்து மித்தையே.

சமயம் இவ்வுலகத்தைப் பற்றியதன்று; மன மாசைக் கழுவித் தூயதாக்கவே அது இருக்கிறது; உலகத்தின்மீது அதனுல் விளையும் பயன் முக்கியமன்று. முத்தியென்பது ஆன்மாவின் இயல்பினின்றும் பிரிக்கவொண்ணுதது. இந்த ஆன்மா எப்பொழுதும் தூயதாய், எப்பொழுதும் பூரணமாய், எப்பொழுதும் மாறுபாடற்றதாய் உள்ளது. இந்த ஆன்மாவை உன்னுல் ஒருகாலும் அறிய முடியாது. 'நேதி; நேதி', (இதுவன்று; இதுவன்று) என்பதன்றி ஆன்மாவைப்பற்றி வேறு யாதொன்றும் நம்மால் இயம்ப இயலாது. "எவ்வித மனத்திறமையாலோ, கற்பனையின் வல்லமையாலோ

நம்மால் வெளியிட முடியாதது எதுவோ அதுவே பிரம்மம்,'' என்பது சங்கரர் வாக்கு.

*　　*　　*

பிரபஞ்சம் நினைவே; வேதங்கள் இந்நினைவை வெளியிடும் மொழிகளே. இம்முழுப் பிரபஞ்சத்தையும் நம்மால் ஆக்கவும் அழிக்கவும் இயலும். மொழிகளைத் திரும்பத் திரும்ப உரைக்கும் போது காணவொண்ணு நினைவு எழுப்பப்படுகிறது; அதன் பயனுக்க் காணப்படுகிற விளைவு ஒன்று உண்டாகிறது. கர்மிகளில் (கிரியைகளில் ஈடுபடுவோரில்) ஒரு சாரார் வற்புறுத்திக் கூறும் விஷயம் இது. நம்முள் ஒவ்வொருவரும் படைப்பவரே என்று அவர்கள் கருதுகின்றுர்கள். சொற்களை நவில்வதால் அவற்றுக்குரிய நினைவும், அதன் விளைவும் உண்டாகும். "நினைவே மொழியின் வலிமை. மொழியே நினைவை வெளிப்படுத்தும் வகை,'' என்பர் இந்து மதத்தைச் சார்ந்த ஒரு தரிசனத்தாராகிய மீமாம்ஸகர்.

ஜுலை 13 ஆம் தேதி—சனிக்கிழமை

நாம் அறியும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கூட்டுப் பொருளே; ஐம்புல அறிவு முழுதும் பகுப்பு முறையாற் பெறப்படுவதே. மனம் பகுக்கவொண்ணுததென்றே, தனிப்பொருளென்றே, சுதந்தர முள்ளதென்றே நினைப்பது துவைதமாகும். தத்துவஞானம் நூல்களைப் பயில்வதால் பெறப்படுவதன்று. நூல்களை மிகுதியாகப் படிக்கப் படிக்க மனம் மிகுதியாகக் கலக்கத்தை அடைகிறது. ஆராய்ச்சியற்ற தத்துவ அறிஞர்களின் கருத்தாவது, மனம் பகுத்தற்கரிய பொருள் என்பது; இக்கருத்து அவர்களை மனிதச் சுயேச்சையில் நம்பிக்கையுடையவராக்கியது; மனத்தைப் பகுத்தறியும் உள நூலோ அதை ஒரு கூட்டுப் பொருளாக எடுத்துக் காட்டுகிறது; ஒவ்வொரு கூட்டுப் பொருளும் வெளியிலுள்ள யாதேனும் ஒரு சத்தியால் ஒன்றுகப் பிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்; ஆதலால், சங்கற்ப சத்தி வெளிச் சத்திகளின் சேர்க்கைக்குக் கட்டுப்பட்டதே. மனிதனுக்குப் பசி எழுந்தாலன்றி, உண்ணும் நினைவு எழ வழியில்லை. நினைவு இச்சைக்கு அடங்கியது; ஆனுல், நாம் சுதந்தரமுடையோம் என்பதை ஒவ்வொருவரும் உணர்கின்றனர்.

அஞ்ஞேயவாதி இக்கருத்து ஒரு மயக்கமெனக் கருதுகிறுன். அப்படியாயின், உலகம் இருப்பதை மெய்ப்பிப்பது எப்படி? அதனை நிலைநாட்டும் ஒரே வழியானது, 'நாம் அதனைக் கண்ணுறுகிறோம்; அதனை உணர்கிறோம்,' என்பதே. ஆதலால், அதே அளவிற்குத் தான் நாம் அனைவரும் சுதந்தரத்தை உணர்கிறோம். உலகிலுள்ளார் அனைவரும் அதை ஒப்புக் கொள்ளுதலே உலகம் இருத்தலை உறுதிப்படுத்துகிறது என்னில், அதனால் சுதந்தரத்தை உறுதிப் படுத்துவதாகவும் அதனை (அச்சான்றினை) ஒப்புக்கொள்ள வேண் டும். ஆனல், சுதந்தரம் சங்கற்பத்திற்கு (இப்போதுள்ள நிலையிலே) இல்லை. சுதந்தரத்தில் மனிதனுக்குள்ள நம்பிக்கை அவனது அமைப்பைப்பற்றி எழுவது. அதுவே எல்லாத் தருக்கத்திற்கும் அடிப்படையாவது. சங்கற்பம் கட்டுப்பட்ட நிலையை அடையுமுன் இருந்தபடி சுதந்தரமானதே. சுதந்தரமான சங்கற்பம் என்ற கருத்தே ஒவ்வொரு கணமும் பந்தத்தை எதிர்த்து நிற்கும் மனித முயற்சியைக் காட்டுவதாகின்றது. சுதந்தரமுள்ளது ஒரே பொருளாகத்தான் இருக்க இயலும்; அது வரையறையற்றது; அகண்டமானது; வரம்புகட்கு அப்பாற்பட்டது. மனிதனிடத்துள்ள சுதந்தரம் இப்போது ஒரு ஞாபகமே; சுதந்தரத்தை அடைதற்கான ஒரு முயற்சியே.

பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொன்றும் ஆதிநிலைக்குத் திரும்புதற்காக—அதற்குள்ள உண்மையான ஒரே தாயகமாகிய ஆன்மாவுக்கு மீளுதற்காக—ஒரு வட்டமான பாதையைச் சுற்றி வர முயன்று கொண்டிருக்கிறது. ஆனந்தத்தை நாடுதலே சமநிலையைக் காண்பதற்குரிய—சமநிலையை மீண்டும் பெறுதற்குரிய—ஒரு முயற்சியாகின்றது. ஒழுக்கம் என்பதே, (கட்டுப்பட்ட சங்கற்பம்) கட்டு நீங்குவதற்காகச் செய்யும் முயற்சியே. நாம் பூரண நிலையினின்றும் வந்துள்ளோம் என்பதனை அதுவே மெய்ப்பிக்கின்றது.

* * *

கடமையென்னும் கருத்து உயிரையே பொசுக்கும் நண்பகல் துயரக் கதிரவனாகும். "மன்னரே, இவ்வொரு சொட்டு அமுதினைக் குடித்து, இன்புற்றிரும்." "நான் கருத்தா அல்லேன்"—இதுவே அமுதம்.

எதிர்வினையின்றியே கருமம் நடக்கட்டும்; கருமம் இனியது; எல்லாத் துயரமும் தருவது எதிர்வினையே. குழவி தன் கையைச்

சுடரில் இடுகின்றது; அது இன்பம்; ஆனுல், அதன் உடலில் எதிர்வினை நிகழும்போது சுடுதலாகிய துன்பம் வருகின்றது. அந்த எதிர்வினையை நம்மால் நிறுத்தக் கூடுமாயின் அஞ்சுவதற்கு நமக்கு யாதொன்றுமில்லை. மூளையை அடக்கிவிடு; பதிந்ததை அது அறியும்படி விடாதே; சாட்சியாய் இரு; எதிர்வினை இயற்ருதே. இவ்வாறே நீ இன்புற்றிருக்கலாம். நாம் என்றேனும் அறிந்தவற்றுள் மிக்க இன்பம் பெற்ற வேளைகளாவன, நாம் நம்மை முழுதும் மறந்த சமயங்களே. உனது சொந்த விருப்பத்தோடு கருமம் புரி; கடமையைக் கருதியன்று. நமக்குக் கடமை யாதொன்றும் இல்லை. இவ்வுலகம் ஓர் உடற்பயிற்சிக்களமேயாம். இதில் நாம் விளையாடுகிறோம்; நமது வாழ்வு நித்தியமான ஒரு விடுமுறைக் காலமே.

இருப்பின் முழு இரகசியம், அச்சமின்றி இருத்தலே. உனக்கு என்ன ஆகும் என்பதைப்பற்றி ஒரு போதும் அஞ்சாதே; ஒருவரையும் சார்ந்திராதே. எல்லா உதவியையும் நீ விலக்கும் போதே நீ சுதந்திரமடைவாய். நீரை முற்றும் உறிஞ்சிய கடற்பஞ்சு பின்னும் அதை உறிஞ்ச இயலாது.

*　　*　　*

தற்காப்புக்காகப் போர் புரிதலும் தவறேயாகும்; ஆனுல், வலிந்து போர் புரிவதினும் அது உயர்ந்ததே. "அறச்சீற்றம்" என்பதே இல்லை. ஏனெனில், கோபம் எழுவது 'சமத்துவ'த்தை உணராமையாலேதான்.

ஜூலை 14ஆந் தேதி—ஞாயிற்றுக்கிழமை

எதன் மூலம் நாம் இறைவரைக் காண்கின்றோமோ, அது தான் இந்தியாவில் தத்துவ ஆராயச்சியின் பொருளாகின்றது; சமயத்தின் நியாயப் பகுதியும் அதுவேயாகும். ஆதலின், சமயத்திற்கும் தத்துவ ஆராய்ச்சிக்கும் ஒரு தொடர்பு வேண்டும் என்று எந்த இந்துவும் கேட்கமாட்டான்.

தூலத் தன்மை, பொதுமை, நுண்மை என்னும் இவைகளே தத்துவ ஆராய்ச்சியில் உள்ள மூன்று படிகளாம். அனைத்துப் பொருள்களுக்கும் ஒப்ப முடிந்த உயர்வற உயர்ந்த நுண்மை, ஏகமான பரம்பொருளே. சமயத்தில் முதலில் குறிகளும் உருவங்

களும், பின்னர்ப் புராணமும், இறுதியில் தத்துவ விளக்கமும் காணப்படும். முதலிரண்டும் அந்தந்தச் சமயத்துக்கே உரியவை; தத்துவவிளக்கம், அனைத்திற்கும் அடியில் அமைந்த ஆதாரமாகும்; ஏனையவை அறுதியான பரம்பொருளை அடைதற்குரிய முயற்சியிலுள்ள படிகளேயாம்.

மேலை நாட்டுச் சமயத்தின் கருத்தாவது, 'புதிய ஏற்பாடும் கிறித்துவும் இன்றிச் சமயமே இருக்க இயலாது,' என்பதே. யூத மதத்திலும் மோஸஸையும் தீர்க்கதரிசிகளையும் பற்றி அதே மாதிரி நம்பிக்கை உள்ளது; காரணம், இம்மதங்கள் புராணத்தை மட்டும் சார்ந்திருத்தலே. மிகவுயர்ந்த உண்மைச் சமயம் புராணத்திற்கு அப்பால் நிமிர்ந்து நிற்கின்றது. ஒருகாலும் அது புராண ஆதாரத்தின் மீது எழ இயலாது. இக்கால விஞ்ஞானம் உண்மையாகவே சமய ஆதாரத்தை வலியுள்ளதாக்கிவிட்டது. பிரபஞ்சம் முழுதும் ஒன்றே என்பதை விஞ்ஞான வாயிலாக மெய்ப்பிக்கக் கூடியதே. தத்துவ ஆராய்ச்சியாளர் 'சத்து' என்பதைப் பௌதிக நூலார் 'சடப் பொருள்' என்பர்; ஆனல், உண்மையிலே இருவர்க்கும் சண்டை இல்லை; ஏனெனில், இரண்டும் ஒன்றே. அணுவானது காணற்கரியதாய், நினைத்தற்கரியதாய் இருப்பினும், அதில் பிரபஞ்சத்தின் முழுச் சத்தியும் வலிமையும் உள்ளன. ஆன்மாவைப் பற்றி வேதாந்தி விரிப்பதும் அதுவே. எல்லாத் தரிசனங்களும், உண்மையை உரைக்குமிடத்து, ஒரே பொருளைப் பல்வேறு மொழிகளிலே எடுத்துக் கூறுவனவாம்.

வேதாந்தமும் இக்கால விஞ்ஞானமும் தானே பரிணமிக்கும் ஆதி காரணப் பரம்பொருளை ஒப்புக்கொள்ளுகின்றன. அப்பரம் பொருளினிடமே எல்லாக் காரணங்களும் உள்ளன. எடுத்துக் காட்டாக, குடத்தை வனையும் குயவனைப் பற்றி ஆராய்வோம்; குடத்திற்குக் குயவன் நிமித்த காரணம்; மண் முதற்காரணம்; சக்கரம் துணைக் காரணம். ஆனல் ஆன்மாவோ இம்மூன்றுமாம். காரணமும் காரியமுமே ஆன்மா. வேதாந்தி கூறுவதாவது, "பிரபஞ்சம் உண்மையானதன்று. அது தோற்றம் மட்டுமே; அறியாமை வாயிலாக நோக்கப்படும் கடவுளே இயற்கையாம்," என்பது. 'எல்லாம் கடவுள்' எனும் வாதியர், "கடவுளே இயற்கையாகவோ, உலகமாகவோ உள்ளார்," என்பர். அத்துவைதிகளோ, "கடவுளே இவ்வுலகமாகக் காட்சியளிக்கிருர்; ஆனல், அவர் இவ்வுலகமல்லர்," என்பார்கள்.

அனுபவத்தை மனோவிருத்தியாகவே—மனத்தில் ஒரு நிகழ்ச்சியாகவும், அதோடு மூளையில் ஒரு பதிவாகவும் மட்டுமே—நாம் அறியக்கூடும். நாம் மூளையைப் பின்னோக்கியோ முன்னோக்கியோ தள்ள இயலாது; ஆனால், மனத்தை அங்ஙனம் செய்யலாகும்; மனம், 'இறப்பு, நிகழ்வு, எதிர்வு' என்னும் முக்காலமும் பரவக்கூடும்; ஆதலால், மனத்தில் உள்ள உண்மைகள் நித்தியமாகப் போற்றிவைக்கப்படுகின்றன. எல்லா உண்மைகளும் எங்கும் பரந்துள்ள மனத்தில் முன்னரே பொதுவுரைகளாக மாற்றப்பட்டுள்ளன.*

காண்டு என்னும் தத்துவ அறிஞர் சாதித்த ஒரு பெருங்காரியம் யாதெனில், 'தேச கால நிமித்தங்கள் நினைவின் பிரகாரங்களே,' என்ற உண்மையைக் கண்டறிந்ததே; ஆனால், வேதாந்தம் அதனை நெடுங்காலத்திற்கு முன்னரே போதித்து, மாயையென அதற்குப் பெயரிட்டது. ஷோபனேர் என்பார் நியாயத்தை ஆதாரமாகக் கொண்டு வேதங்களை யுத்திக்கு உட்படுத்திக் காட்டுகிறார். சங்கரரோ, வைதிக வேத முறையைப் போற்றினார்.

* * * *

'மரத்தன்மை' எனும் மரத்தைப் பற்றிய கருத்து, பல மரங்களினின்றும் வடித்தெடுக்கப்பட்ட அது, அறிவு ஆகின்றது. ஒப்பிலா உயர்ந்த அறிவு ஏகமே.

'சகுணப் பிரம்மம்' என்பது பிரபஞ்சத்தைப் பற்றி அறுதியான பொதுவுரை; ஆனால், அது மங்கலாகவே உள்ளது; தெளிவான வடிவற்றது; தத்துவ ஆராய்ச்சிக்கு ஏற்றதன்று.

ஏகத்துவம் (ஒருமை) தானே பரிணமிக்கும் தன்மையது; ஒவ்வொன்றும் அதனிடத்திருந்தே உதித்தது.

பௌதிக விஞ்ஞானம் தனி நிகழ்ச்சிகளைக் கண்டுபிடிப்பது; தத்துவ ஆராய்ச்சி மலர்களை ஒரு செண்டாகப் பிணைக்கும் நூலாகும். நுண்பொருள் ஒன்றைப் பிரித்தெடுத்தலும் தத்துவ

---

* தேச கால நிமித்தங்களுக்கு உட்பட்டுள்ள முழுப் படைப்பும், ஞானம்—இச்சை—கிரியைகளாகத் தன்னைத் தோற்றுவிக்கும் மனமோ, ஞாபகமோ. அதற்கு அப்பால் ஒரு போதும் இருக்கவொண்ணாதாதலின், தேச கால நிமித்தங்கள் அதில் இருந்தே தீர வேண்டும். ஆதலால், மனம் எங்கும் பரவியுள்ளது. தனி மனிதனது மனம் உடலிற்குள் கிட்டத்தட்ட அடைபட்டுள்ள எங்கும் பரந்துள்ள மனத்தின் ஒரு பகுதியேயாகும்; நிலத்தால் பெரும்பாலும் சூழப்பட்ட ஒரு சிறு கடற்பகுதி ஓர் ஒடுங்கிய கால்வாயினால், கடலோடு இணைக்கப்படுவது போன்றது.

ஆராய்ச்சியின்பாற்படும்; ஒரு மரத்தின் வேரில் உரமிடுதலும், பிரித்தெடுக்கும் முறையினை உள்ளடக்கியதாம்.

சமயத்தில் தூல வடிவும் அதனிலும் நுண்ணிய பொதுவுரை வடிவும், அறுதியான ஒருமையும் அடங்கியுள்ளன. தனித்தனியாகக் குறிப்பிடப்படுவனவற்றுள் பற்று வையாதே. கொள்கைக்குச் செல்; ஏகத்தைச் சார்ந்திரு.

* * * *

பேய்கள் இருளைத் தரும் இயந்திரங்கள்; தேவதூதர்கள் ஒளியை நல்கும் கருவிகள். ஆனால், இருவரும் கருவிகளே. மனிதனே உயிருள்ளவன். இயந்திரத்தை உடை; வரவு செலவுக் கணக்கைத் தீர்.* அப்போது மனிதன் விடுதலை அடையக்கூடும். இந்த வையகம் ஒன்றிலேயே மனிதன் தனது உய்வைப் பாடுபட்டு அடையலாகும்.

"ஆன்மா யாரை வரிக்குமோ," என்பது உண்மையே. வரித்தல் உண்மையே; ஆனால், அதை உள்ளே வைத்துக்கொள். நமக்குப் புறம்பான ஒன்றையும் விதியையும் வற்புறுத்தும் அக் கொள்கை பயங்கரமானதே.

ஜூலை 15 ஆந்தேதி—திங்கட்கிழமை

ஒருத்தி பல கணவரை மணக்கும் வழக்கம் உள்ள இடத்தில்—திபெத்தில் உள்ளது போல—பெண்டிர் ஆடவரினும் உடல் வலிமை மிக்கவராயிருக்கின்றனர். ஆங்கிலேயர் அங்கே செல்லும் போது, அப்பெண்டிர் பருத்த ஆடவரையும் மலைமேல் தூக்கிச் செல்லுகின்றனர்.

மலையாளத்தில்—பல புருடரை மணக்கும் வழக்கம் அங்கில்லையெனினும்—மங்கையரே ஒவ்வொரு துறையிலும் தலைமை தாங்குகின்றனர். தனிப்பட்ட ஒரு துப்புரவு எங்கும் வெளிப்படையாகத் திகழ்கின்றது. கல்வி பெறுதற்கு மிகப் பெருஞ்சத்தியின் தூண்டுதல் உள்ளது. நானே அந்நாட்டில் இருந்தபோது வடமொழி

* உனக்கும் இயந்திரத்திற்கும் உள்ள தொடர்பு, ஒரு கருத்தாவிற்கும் கருவிக்கும் உள்ள தொடர்பே என்பதைக் கண்டு பிடி; அதனோடு உன்னை ஒருகாலும் ஒன்றுபடுத்திக்கொள்ளாதே.

நன்ருகப் பேசும் பல பெண்டிரைச் சந்தித்தேன்; ஆனுல், இந்தியாவில் மற்றைய பாகங்களில் இலட்சம் பெண்டிருள் ஒருத்தி கூட அம்மொழி பேசத் தெரிந்தவள் இல்லை. எஜமானனுகும் இயல்பு உயர்த்தும்; அடிமைத்தனம் தாழ்த்தும். போர்த்துகீசியரோ, மகம்மதியரோ, மலையாள நாட்டை ஒரு நாளும் வென்றுவிடவில்லை.

திராவிடர் மத்திய ஆசியாவிலுள்ள ஆரியரல்லாத ஒரு சாதியினர்; ஆரியர்க்கு முன்னமே வந்தவர்; தென்னிந்திய திராவிடர் மிக்க நாகரிகமுற்றவர். அவர்க்குள் மங்கையர் ஆடவரினும் உயர்ந்த நிலையில் இருந்தனர். பிற்காலத்தில் அவர்கள் பிரிவுபட்டு, சிலர் எகிப்துக்கும் மற்றவர் பாபிலோனுக்கும் சென்றனர்; எஞ்சியவர் இந்தியாவிலேயே இருக்கலாயினர்.

ஜுலை 16-ஆந்தேதி—செவ்வாய்க்கிழமை

(சங்கரர்)

'அதிருஷ்டம்'—காணப்படாத காரணம்—வேள்வி, வழிபாடு என்பவற்றைச் செய்யும்படி தூண்டுகிறது; இதன் பயனுகக் காணக்கூடிய பயன்கள் விளைகின்றன; ஆதலால், நாம் முதலில் விஷயங்களைக் கேட்க வேண்டும் (சிரவணம்); பின்பு சிந்தித்தல் வேண்டும்; யுத்தியால் ஆராய வேண்டும் (மனனம்); பின்னர், பிரம்மத்தைத் தியானிக்க வேண்டும் (நிதித்தியாஸனம்).

கருமங்களின் விளைவும் ஞானத்தின் விளைவும இரு வேறு பொருள்கள். "செய்"—"செய்யாதே" என்னும் இரண்டும் எல்லா நீதிக்கும் அடிப்படையாகும். ஆனுல், உண்மையிலே அவை உடலுக்கும் மனத்திற்குமே உரியவை. எல்லா இன்பமும் துயரமும் புலன்களோடு விலக்கவொண்ணுதபடி இணைந்துள்ளன; அவற்றை அனுபவிக்க உடல் அவசியமாம். உடலின் தரம் உயர உயர அறத்தின் தரமும் மேலும் மேலும் உயரும்; பிரம்மா வரையும் இவ்வாறே. ஆனுல், அனைவர்க்கும் உடல் உண்டு. உடல் உள்ளவரை இன்ப துன்பங்கள் இருந்தே தீரும்; உடலைக் களைந்த பின்னரே ஒருவர் அவற்றினின்றும் தப்ப இயலும். 'ஆன்மா உடலற்றது,' என்பர் சங்கரர்.

எவ்வித நியதியாலும் உனக்கு விடுதலை அளிக்க இயலாது; நீ

விடுபட்டவனே. முன்னரே உன்னிடம் விடுதலை இல்லாவிடில் உனக்கு அதனை நல்க எதனாலும் இயலாது. ஆன்மா தன்னொளி பெற்றுள்ளது. காரணமும் காரியமும் அங்கே சேர்வதில்லை. இந்த உடலற்ற நிலையே முத்தியாவது. இருந்ததும், இருப்பதும், இருக்கப் போவதும் ஆனவற்றுக்கு அப்பால் பிரம்மம் உள்ளது. ஒரு காரிய மான நிலையில் முத்திக்கு யாதொரு மதிப்பும் இராது; அது ஒரு சேர்க்கைப் பொருளாகும். அந்நிலையில் பந்தத்திற்குரிய விதைகள் அதனிடமே அடங்கியுள்ளன. அதுவே உண்மையான ஒரு பகுதி, அது அடையத்தக்கதன்று. ஆன்மாவின் உண்மையான வடிவமே அது.

ஆயினும், கருமமும் வழிபாடும் இரண்டும் மறைப்பை நீக்கு தற்கும் பந்தத்தையும் மித்தையையும் போக்குதற்கும் இன்றியமை யாதவை. அவை நமக்கு முத்தியைத் தாரா; ஆயினும், நம் முயற்சி யின்றி நாம் நம் கண்களைத் திறக்கவும், நமது இயல்பை அறியவும் மாட்டோம். அத்துவைத வேதாந்தமே வேதங்களின் முடிச்சோதி யாய் மலர்ந்தது என்று மேலும் சங்கரர் மொழிகின்றார்; ஆனால், கீழ்த்தரமான வேதங்கள் கருமத்தையும் வழிபாட்டையும் போதிப் பதனாலும் அவற்றின் மூலம் பலர் இறைவனைச் சார்வதாலும் அவை அவசியமேயாகும். பிறர் வேறு எவ்வித உதவியுமின்றி அத்துவைதத்தின் மூலமாகவே லட்சியத்தை அடையலாம். கரும மும் வழிபாடும் அத்துவைதத்தைப் போன்று அதே முடிவான நிலைக்குச் செலுத்தும்.

நூல்கள் இறைவனைப் போதிக்க மாட்டா; ஆனால், அவை அறியாமையை அழிக்கக்கூடியவை; அவற்றின் செயல் தடையை நீக்குவதேயாம். நூல்களை விடாது பற்றி அதே சமயம் முத்திக்கும் வழியைத் திறந்து காட்டிய அருஞ்செயல் சங்கரர் சாதித்த பெருஞ் செயலாகும். ஆனால், எவ்வளவு கூறினும், அது அளவிற்கு விஞ்சிய நுட்பம் பேசும் ஒரு வகையே ஆகும். மனிதனுக்கு முதலில் தூலப் பொருளைக் கொடுத்து, மெல்ல மெல்ல அவனை மிகவுயர்ந்த நிலைக்கு உயர்த்துதல் வேண்டும். பற்பல சமயங்களின் முயற்சி இதுவே. இதுவே அவற்றின் இருப்பிற்கு விவரக் குறிப்பாகும்; அவற்றுள் ஒவ்வொன்றும் யாதேனும் ஒரு வகைப் பக்குவ நிலைக்கு ஏற்றதாக அமைதலை அது விளக்கும். நூல்கள் எதை ஓட்ட உதவுமோ, அந்த அறியாமையின் ஒரு பகுதியே ஆகின்றன. ஞானத்தின்மீது படர்ந் துள்ள அறியாமையை ஓட்டுவதே அவற்றின் கடமை. "மெய்

பொய்யினை ஓட்டிவிடும்.'' நீ முத்தனுவாய்; உன்னை அவ்வாறு ஆக்குதல் இயலாது. உன்னிடம் ஒரு கொள்கை உள்ள வரை உன்னிடம் இறைவன் இல்லை. ''தான் அறிந்ததாக அறிபவன் ஒன்றையும் அறியான்.'' அறிபவனை அறிவார் யார்? இறைவனும் பிரபஞ்சமும் உள்ளவற்றில் அழியாத இரண்டு உண்மைகள். முன்னது மாருதது; பின்னது மாறுபடுவது. உலகம் நித்தியமாய் உள்ளது. மாறுபாட்டின் அளவை உன் மனத்தால் மாற்ற முடியாதபோது, நீ அதனை நித்தியமானது என்கின்றனை. நீ கல்லையோ அதில் செதுக்கப்பட்டுள்ள சிற்பத்தையோ காண்கிருய்; எனினும் இரண்டையும் ஒரே சமயம் காணமாட்டாய்; ஆனுலும், இரண்டும் ஒன்றே.

* * *

ஒரு நொடிப் பொழுதேனும் அசைவின்றி உன்னை இருக்கச் செய்ய உனக்கு இயலுமா? உனக்கு இயலும் என்றே எல்லா யோகிகளும் இயம்புகின்றனர்.

* * *

அனைத்தினும் மிகப் பெரிய பாவமாவது, உன்னை நீ பலவீனன் என நினைப்பதே. உன்னினும் பெரியார் எவருமில்லை; நீ பிரம்மமே என்பதை உணர், நீ அளிப்பதைத் தவிர எதற்கும் சத்தியென்பது இல்லை. ஞாயிற்றுக்கும், விண்மீன்களுக்கும், பிரபஞ்சத்திற்கும் அப்பால் நாம் உள்ளோம். மனிதனது தெய்வத்தன்மையைக் கற்பி; தீமை இருப்பதை மறந்துவிடு; ஒன்றையும் படையாதே; நிமிர்ந்து நின்று, ''நான் தலைவன்; அனைவர்க்கும் தலைவன்,'' என்று கூறு. நாமே விலங்கை அமைத்துக் கொள்கிறோம். நம்மாலே அதனை உடைத்தெறியவும் இயலும்.

உனக்கு முத்தியை அளிக்க எந்தச் செயலுக்கும் இயலாது. ஞானமொன்றே உன்னை முத்தனுக்க வல்லது. ஞானம் தடுக்க வொண்ணுதது. மனத்திற்கு அதனை ஏற்றுக்கொள்ளவோ விலக்கவோ இயலாது. அது வரும்போது மனம் அதனை ஏற்றுக்கொண்டே தீரவேண்டும்; ஆதலால், அது மனத்தின் செயலன்று. ஆனுல், அது வெளிப்படுவது மனம் வாயிலாகவே.

கருமமும் வழிபாடும் உன் சொந்த வடிவத்திற்கு உன்னை மீண்டும் கொண்டு வருவதற்காகவே ஏற்பட்டுள்ளது. 'ஆன்மா, உடல்' என்று கூறுவது முழு மித்தையேயாகும். ஆதலால், இங்கே

இவ்வுடல் வாழும்போதே நம்மால் முத்தராய் இருக்கக்கூடும். உடலுக்கும், ஆன்மாவுக்கும் உள்ள பொதுத்தன்மை யாதொன்றும் இல்லை. மித்தையாவது மெய்யைப் பொய்யாகக் கொள்ளுதலே—இல்லாத பொருள் அன்று.

ஜூலை 17ஆம் தேதி—புதன்கிழமை

இராமனுசர் பிரபஞ்சத்தைச் சித்து, அசித்து, ஈசுவரன்—மனிதன், இயற்கை, இறைவன்—தன்னுணர்வுடையது, உணர்வற்றது, உணர்வு கடந்தது—எனும் மூன்ருகப் பகுக்கிருர். இதற்கு மாருகச் சங்கரர், "ஆன்மா எனும் சித்துப் பொருளும், இறைவனும் ஒன்றேயாம். இறைவன் சத்தியமாயும் ஞானமாயும் அனந்தமாயும் இருக்கிருன்; இவை குணங்களுமல்ல. இறைவனைப்பற்றிய எந்த நினைவும் ஒரு வரையறையே; அவனைப்பற்றிப் பகர்வதெல்லாம் 'ஓம் தத் ஸத்' என்பதே," என்று கூறுகிருர்.

சங்கரர் பின்னும், "சத்து (இருப்பு) என்பதை வேறு எந்தப் பொருளுக்கும் அன்னியமாகக் காண இயலுமா? இரு பொருள்களுக்குள் வேறுபாடு எங்குள்ளது? ஐம்புலக் காட்சியில் இல்லை. அன்றேல், யாவும் அதில் ஒன்ருகிவிடும். தொடர்ச்சியிலே நாம் காட்சிபெற வேண்டியதாகிறது. ஒரு பொருள் இன்னது என்றறிய அறிவைப் பெறுவதில் அது எதுவாக இல்லையோ அதையும் பெறுகிரேம். வேறுபடுத்தும் குறிகள் நினைவில் (ஞாபகத்தில்) உள்ளன; அங்கே தொகுத்து வைக்கப்பட்டிருப்பதோடு ஒப்பிடுவதால் பெறப்படுகின்றன. ஒரு பொருளின் இயல்பிலே வேறுபாடு இல்லை; அது மூளையில் உள்ளது. வேறுபடுத்துபவை அகத்தே (மனத்திலே) உள்ளன; ஆதலால், பல என்ற கருத்து மனத்தின் படைப்பே. வேறுபடுத்துபவை தனித்தனியாகவும், ஆனுல் ஒரு பொருளில் இணைந்தும் உள்ள பொதுக் குணங்கள் (பண்புகள்) ஆகின்றன. வேறுபாடு இன்னது என நம்மால் உறுதியாக உரைக்க இயலாது. பொருள்களைப்பற்றி நாம் காண்பதும் உணர்வதும் எல்லாம் கலப்பற்ற தனியான இருப்பு என்பதே. மற்றவை யாவும் நம்மிடத்தேயுள்ளன. எல்லா வேறுபாடும் கயிற்றிலுள்ள பாம்பு போல முக்கியமற்ற மெய்ம்மையே; ஏனெனில், பாம்பினிடத்தும் ஒரு வகை மெய்ம்மையுள்ளது; தவருகக் காணப்படினும், ஏதோ ஒன்று காணப்படுகிறதன்ரே? கயிற்றைப்பற்றிய அறிவு இன்மையாகும்போது பாம்பைப்பற்றிய அறிவு உண்மை

யாகிறது; அது உண்மையாகும்போது, இது இன்மையாகிறது; ஆயினும், 'ஒன்றை மட்டும் நீ காண்பதால் மற்றென்று இல்லை' என்பது முடிவாகாது. உலகைப்பற்றிய கருத்து, கடவுளைப் பற்றிய கருத்தை மறைக்கும் ஒரு தடையாகின்றது. அது நீக்கப்பட வேண்டுவதே; ஆனாலும், அதற்கு ஓர் இருப்பு, உள்ளதொன்றே யாம்," என்று கூறுகிறார்.

இருப்புக்கு இறுதியான அத்தாட்சி காட்சியே என்று சங்கரர் மீண்டும் கூறுகிறார். அது தன்னொளியுடையது; தன்னுணர்வுடையது; ஏனெனில், புலன்கட்கு அப்பாற் செல்லுதற்கும் காட்சி நமக்குத் தேவையாகும். காட்சியோ, புலன்களையோ எல்லாக் கருவிகளையுமோ சார்ந்திருப்பதன்று. அது வரையறையற்றதே. உணர்வின்றிக் காட்சியில்லை. காட்சி தன்னொளியுள்ளது. இத்தன்னொளியுண்மையே குறைந்த அளவில் உணர்வு எனப்படுகிறது. காட்சியெனும் எந்த ஒரு செயலும் உணர்வற்றதாயிருக்க இயலாது; உண்மையாதெனில் உணர்வே காட்சியின் வடிவமாம். இருப்பும் காட்சியும் ஒரு பொருளே; இரு பொருள்கள் ஒன்றோடொன்று இணைந்ததன்று. காரணம் வேண்டாதது அகண்டமே; ஆகவே, காட்சிக்கு இறுதியான அத்தாட்சி தானேயாதலின், அது நித்தியமாம். அது எப்போதும் காண்பவனாகிறது. காட்சியென்பதே அதற்குரிய காண்பவனாகும். காட்சி மனத்திலில்லை; ஆனால் காட்சி மனத்தைக் கொணர்கிறது. அது அதீதப் பரம்பொருள்; ஒன்றேயான காணும் பொருள். ஆதலால், காட்சி உண்மையாக ஆன்மாவே. காட்சி தானே காண்கிறது; ஆனால், ஆன்மா அறிபவனாக (ஞாதாவாக) இயலாது. ஏனெனில், 'ஞாதா' அவ்வாறு ஆவது ஞானத்தின் செயலாலேயே. ஆனால், சங்கரர் 'இந்த ஆன்மா', 'நான்' அன்று என்கிறார்; காரணம் யாதெனில், 'அகம்' என்ற உணர்ச்சி ஆன்மாவிடம் இல்லை. நாம் அந்த ஆன்மாவின் பிரதிபிம்பங்களேயாவோம்; ஆன்மாவும் பிரம்மமும் ஒன்றே.

பாரமார்த்திகப் பொருளைப் பற்றிப் பேசும்போதும் நினைக்கும் போதும் வியாவகாரிக மொழிகளைக்கொண்டே அவ்வாறு செய்ய வேண்டும்; ஆதலால், தருக்க முறைக்கு இயைந்த வழக்குகளெல்லாம் பொருந்தும். யோகத்திலே காட்சியும் ஞானமும் ஒன்றே. இராமானுசர் விரித்துரைக்கும் விசிஷ்டாத்துவைதம் ஒரு வகை ஒருமையைக் காணுதலேயாம்; அது அத்துவைதத்திற்கு ஒரு படி. 'விசிஷ்டம்' என்பது 'வேறுபடுத்தல்' எனப் பொருள்படும்.

பிரகிருதியாவது உலகத்தின் வடிவமே; அதற்கு விகாரம் உண்டாகிறது. மாறும் இயல்புடைய சொற்களில் வெளியிடப்படும் மாறும் இயல்புடைய கருத்துகள், பாரமார்த்திகப் பொருளின் இருப்பிற்கு ஒரு போதும் அத்தாட்சியாகா. சில குணங்கள் குறைந்த ஏதோ ஒன்றைத்தான் நீ அடைவாய்; பிரம்மத்தையே அன்று. சொற்களால் ஒன்றுபடுதலையே—மிக நுண்ணிய கருத்தையேயன்றி, வியாவகாரிகத்தின் இன்மையையன்று.

ஜுலை 18 ஆம் தேதி— வியாழக்கிழமை

[*இன்றைய பாடமும் பெரும்பாலும் சாங்கிய சித்தாந்தத்தின் முடிபுகளை எதிர்த்துக் கூறும் சங்கரரது வழக்கேயாம்*]

உணர்வு என்பது ஒரு கூட்டுப்பொருள் என்றும், அதற்கு அப்பால் பகுத்துப் பார்க்கில், இறுதியாகச் சாட்சியான புருடனே எஞ்சும் என்றும் சாங்கியர் மொழிவார். ஆனால், புருடர் பலர்; நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு புருடர். இதற்கு மாறாக, அத்துவைதம் உறுதியாக உரைப்பதாவது, 'புருடன் ஒருவனே ஆக வேண்டும்,' என்பது. அப்புருடன் உணர்வுடையவனுமாகான்; உணர்வற்றவனுமாகான்; எவ்வித விசேடணமும் உடையவனாகான்.

ஏனெனில், இக்குணங்கள் பந்தப்படுத்தும்; அன்றேல், முடிவிலே இல்லாதனவாம். ஆதலால், ஒன்றாகிய பரம்பொருள் ஞானமுட்பட எவ்விதக் குணமும் அற்றதாக வேண்டும். அது பிரபஞ்சத்திற்கோ, வேறெதற்கோ காரணமாக மாட்டாது. "ஆதியில் இருந்தது ஒன்றே; இரண்டற்ற ஒன்றே," என்று வேதங்கள் முழங்கும்.

* * *

சத்துவ குணத்தோடு ஞானமும் இயைந்திருப்பதால், சத்துவமே ஞானத்திற்குக் காரணம் என்பது மெய்ப்பித்ததாகாது; அதற்கு மாறாக, சத்துவம் மனிதனிடம் முன்னரே இருப்பதை வெளியே கொணர்கிறது; நெருப்பு தன்னருகேயுள்ள இரும்புக் குண்டைச் சூடாக்குவது, அதனிடத்து மறைந்துள்ள சூட்டைக் கிளப்புவதனாலேதான்; குண்டுக்குட் புகுவதனாலன்று.

"ஞானம் கடவுளின் வடிவமாதலால், அது ஒரு தளையாகாது,"

என்கிறார் சங்கரர். தூலமாயினும் (வெளிப்படினும்), சூக்கும மாயினும் (வெளிப்படாதிருப்பினும்), உலகம் எப்போதும் உள் ளது; ஆதலால், நித்தியமான புறப்பொருள் ஒன்று உள்ளதே யாகும்.

'ஞானம், பலம், கிரியை' (அறிவு, ஆற்றல், செயல்) என்பதே கடவுள் (ஈசன்). அவர்க்கு வடிவம் வேண்டா. ஏனெனில், அகண்ட ஞானத்தை ஏந்தி வைத்திருக்க ஒரு தடையை ஏற்படுத் தும்பொருட்டு வரையறையுற்ற பொருளுக்கு மட்டும் உருவம் அவ சியம்; ஆனால், கடவுளுக்கோ, உண்மையில் அத்தகைய உதவி அவசியமன்று. 'சஞ்சரிக்கும் ஆன்மா' என்பது ஒன்றில்லை. ஒரே ஆன்மாவே உள்ளது. பஞ்ச உயிர்த் தத்துவங்களும் ஒன்று கூடும் இடமாகிய இந்த உடலுக்குச் சீவனே அறிவோடு கூடிய ஆளு வோன். எனினும், அந்தச் சீவனே ஆன்மா. ஏனெனில், எல்லாம் ஆன்மாவே. நீ அதைப்பற்றி நினைப்பது உனது மயக்கமே. அது சீவனிடத்தில்லை. நீ கடவுளே. நீ உன்னை வேறெதுவாக நினைத்தா லும், அது தவறே. கண்ணபிரானிடத்து உள்ள ஆன்மாவை நீ வணங்க வேண்டும். கண்ணபிரானைக் கண்ணபிரானாக வணங்கக் கூடாது. ஆன்மாவை வணங்குவதனால் மட்டும் முத்திப்பேறு கைகூடும். சகுணக் கடவுளும் புறத்தே தோன்றும்படி ஆக்கப் பட்ட ஆன்மாவே. 'ஒருவனது சுய உண்மை வடிவத்தை மிகுந்த ஆர்வத்துடன் தேடுதலே பத்தி,' என்பர் சங்கரர். கடவுளை அடை தற்காக நாம் மேற்கொள்ளும் சாதனங்கள் யாவும் உண்மை யானவையே. துருவ நட்சத்திரத்தை (வடமீனை)க் காணும் பொருட்டு, அதைச் சுற்றியுள்ள விண்மீன்களைக்கொண்டு அதன் இருப்பிடத்தைக் காண முயல்வதைப் போன்றதே அது.

* * * * * * * *

பகவத்கீதை வேதாந்தத்திற்கு அனைத்தினும் சிறந்த பிரமாண மாகும்.

ஜூலை 19-ந் தேதி—வெள்ளிக்கிழமை

'நீ' என்று நாம் பேசும் வரை, கடவுள் நம்மைக் காப்பாற்றி வருவதைப்பற்றிப் பேச எனக்கு உரிமையுண்டு. நான் இன்னொரு வனைக் காணும்போது, அதன் விளைவுகள் அனைத்தையும் ஒப்புக் கொண்டு, எம் இருவர்க்கும் இடையே நிற்கும் இலட்சியப் பொரு

ளாகிய மூன்றுவதையும் உள்ளே வர விடவேண்டும்; அதுவே முக்கோணத்தின் உச்சியாவது. நீராவி பனியாகி, பின் நீராகி, பின் கங்கையாகிறது; ஆனல், நீராவி உள்ள போது, கங்கை யில்லை. நீருள்ள போது அதில் ஆவியிருப்பதாக நாம் நினைப்ப தில்லை. 'படைப்போ, அல்லது மாறுபாடோ?' என்ற கருத்துச் சங்கற்பத்தோடு பிரிக்கவொண்ணதபடி இணைக்கப்பட்டுள்ளது. இவ்வுலகம் இயங்குவதாகக் கருதுமளவும் இதற்குப் பின்னுள்ள சங்கற்பத்தை நினைத்தாக வேண்டும். பௌதிக சாத்திரம் புலன் களால் விளையும் மயக்கத்தை நிலை நாட்டுகிறது; நாம் கண்டு கேட்டு உண்டு உயிர்த்துச் சுவைக்கின்றபடி ஒன்றும் உண்மையில் இல்லை. சில விளைவுகளை உண்டாக்கும் சில அதிர்வுகளே நம் புலன் களைப் பாதிக்கின்றன. நாம் வியவகாரிக உண்மையை மட்டும் உணர்கிறோம்.

உண்மை என்பதைச் சுட்டும் வடமொழி 'சத்து' என்பது. நமது இக்கால நிலையில் இவ்வுலகம் நமக்குச் சங்கற்பமாகவும் உணர்வாகவும் தோன்றுகிறது. நாம் நமக்கு எந்த அளவுக்கு ஒரு பொருளாகிறோமோ, அதே அளவுக்குச் சகுணக் கடவுள் நமக்கும் ஒரு பொருளாகிறார்; அதற்குமேல் இல்லை. நாம் காணப்படுகிற வண்ணமே இறைவரையும் ஒரு வடிவாகக் காணல் இயலும். மனித ராகின்ற நிலையில் நமக்கு ஓர் இறைவர் திண்ணமாக வேண்டும்; ஆன்மாவாகும் நிலையில் நமக்கு எவரும் வேண்டா. இக்காரணம் பற்றியே ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்மைச் சுற்றியுள்ள வேறு எப் பொருளையும்விட உண்மையாக, தேவியாகிய அன்னை தம்மோடு எப்போதும் இருப்பதை இடையறாது தரிசித்து வந்தார்; ஆனாலும், சமாதியில் ஆன்மாவைத் தவிர மற்றெல்லாம் மறைந்தன. சகுண மாகிய இறைவர் நம்மை மேலும்மேலும் அணுகி, இறுதியில் கரைந்துவிடுகிறார். சகுண இறைவர் என்பதோ, 'நான்' என்பதோ, இல்லாதொழிகிறது; எல்லாம் ஆன்மாவில் இரண்டறக் கலந்து விடுகின்றன.

உணர்வு என்பது ஒரு பந்தனை; மனத்திட்ட ஏற்பாடு என்ற கருத்திலிருந்து வழக்காடுபவன் விரிப்பது, 'வடிவத்திற்கு அறிவு முந்தியது,' என்பது; ஆனல், அறிவு எதற்கேனும் காரணமாயின், அதுவும் முறைப்படி ஒரு காரியமாகின்றது. அது மாயை. கடவுள் நம்மைப் படைக்கிறார்; நாம் கடவுளைப் படைக்கிறோம். இது மாயை. இவ்வட்டம் பிளவுபடாதது. மனம் உடலை உண்டாக்கு

கிறது; உடல் மனத்தை அமைக்கின்றது. முட்டையினின்றும் குஞ்சு வெளிப்படுகின்றது, குஞ்சினின்றும் முட்டை வெளிப்படுகின்றது; மரம் விதையைத் தருகிறது, விதை மரத்தை அளிக்கிறது. உலகம் முழுதும் வேறுபாடுடையதுமன்று; முழுதும் ஒரு தன்மையானதுமன்று. மனிதன் விடுதலையுள்ளவன்; இருதிறத்தார்க்கும் அப்பாற் கிளம்பவேண்டியவன். இரண்டில் ஒவ்வொன்றும் அததற்குரிய இடத்தில் உண்மையே. ஆனால், 'சத்து' என்னும் உண்மைப் பொருளை அடைய, வாழ்வு, சங்கற்பம், உணர்வு, செய்தல், போதல், அறிதல் என்பவற்றைப்பற்றி நாம் இப்போது அறிவனவற்றை யெல்லாம் கடந்து நிற்றல் வேண்டும். சீவனுக்கு உண்மையான தனிப் புருடத்தன்மை இல்லை; முடிவில் அது ஒரு கூட்டுப் பொருளாகும் நிலையில், துண்டு துண்டாகச் சிதைவடையும். மேலும், பகுக்கவொண்ணாத் தன்மையது எதுவோ, அதுவே 'தனிப் பொருள்'; அதுவே உண்மை; முத்தி; அமரத் தன்மை; ஆனந்தம். இப்பொய்யான தனிப் புருடத் தன்மையைப் பாதுகாத்தற்காகச் செய்யும் எல்லா முயற்சிகளும் உண்மையாகத் தீயவைகளே. இத்தனிப் புருடத்தன்மையை இழத்தற்காகச் செய்யும் எல்லா முயற்சிகளும் நன்மைகளே. பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொன்றும் அறிந்தோ, அறியாமலோ, இந்தத் தனிப் புருடத் தன்மையை உடைக்க முயன்று வருகின்றது. நல்லொழுக்கம் அனைத்தும் வேருயிருக்கும் தன்மையின்—அதாவது பொய்யான தனிப் புருடத் தன்மையின்—அறிவையே ஆதாரமாகக் கொண்டது; ஏனெனில், அதுவே எல்லாப் பாவங்களுக்கும் காரணம். நல்லொழுக்கம் முதலில் உள்ளது; பின்னர் சமயம் அதை ஒழுங்குபடத் தொகுத்து வைக்கின்றது. வழக்கங்கள் முதலில் தோன்றுகின்றன; பின்னர்ப் புராணம் அவற்றிற்கு விரிவுரை எழுதப் பின் தொடர்கின்றது. செயல்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும்போது, அவை தருக்கவாதத்தினும் மிக உயர்ந்த ஒரு நியதிப்படி தோன்றுகின்றன; அவற்றை அறிய முயலும்போது தருக்கவாதம் பின்னர்க் கிளம்புகின்றது. தருக்கவாதம் பிடித்துந்தும் சத்தியன்று. அது பின்னர் 'அசை போடுவது' ஆகும். தருக்கம் என்பதே மனிதனின் செயல்களைப்பற்றி எழுதும் வரலாற்று நூலாசிரியனாகும்.

* * *

புத்தர் பெரிய வேதாந்தி. (புத்தமதம் மெய்யாகவே வேதாந்தத்தினின்றும் தழைத்த ஒரு கிளை மதமேயாம்.) சங்கரர் 'பிரச்சின்ன பௌத்தர்' எனப் பன்முறையும் வழங்கப்படுகிறார். புத்தர் பகுப்பு முறையைப் பின்பற்றினார்; சங்கரர் அதினின்றும் தொகுப்பு முறையைப் பின்பற்றினார். புத்தர் வேதத்திற்கோ, சாதிக்கோ, புரோகிதர்க்கோ, வழக்கத்திற்கோ, ஒருநாளும் தலை வணங்கியவரல்லர். புத்தி செல்லும் அளவும் அச்சமின்றி அவர் புத்தி வாதம் புரிந்து வந்தனர். அச்சமின்றி உண்மையை நாடும் அத்தகைய தன்மை உயிருள்ள பொருள் ஒவ்வொன்றின்மீதும் பொழியப்படும். அத்தகைய அன்பையும் உலகம் ஒருகாலும் கண்டதில்லை. புத்தர் சமய உலகிற்கு வாஷிங்டன் போன்றவர்; புத்தர் ஓர் அரியாசனத்தை வென்று பெற்றது, அதை உலகிற்கு அளித்தற்காகவே. வாஷிங்டனும் அமெரிக்க மக்களுக்கு அங்ஙனமே செய்தார். அவர் தமக்கென ஒன்றையும் தேடினாரல்லர்.

ஜூலை 20ஆந் தேதி—சனிக்கிழமை

காட்சியே நமக்குரிய மெய்ஞ்ஞானம்; காட்சியே மெய்ச் சமயம். ஆன்மாவைப்பற்றி ஊழிக்காலம் வரை பேசினாலும் ஒருபோதும் அதனை நாம் அறியமாட்டோம். கொள்கைகளைப் பேசிக் கொண்டிருப்பவர்க்கும் நாத்திகனுக்கும் வேறுபாடில்லை. உள்ளதை உரைக்கின், நாத்திகன் முன்னவனினும் உண்மையான மனிதனவன். வெளிச்சத்தில் யான் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும், என்றைக்கும் என்னுடையதேயாகும். நீ ஒரு தேசஞ் சென்று அதைக் கண்டதும், அது உன்னதாகிறது. நம்முள் ஒவ்வொருவரும் அவரவர்க்காகவே காட்சி பெறவேண்டும்; குருமார் உணவைக் கொண்டுவருதல் ஒன்றையே செய்ய இயலும்; நாம் ஊட்டம் பெற வேண்டின் அதனை உண்ணல் வேண்டும். வழக்காடிக் கடவுளின் இருப்பை ஒருகாலும் நிலைநாட்ட முடியாது; தருக்க முறையிற் பெறும் ஒரே முடிபாகவே அதனை மெய்ப்பிக்க இயலும்.

நமக்கு வெளியே இறைவனைக் காணல் இயலாததொன்று. நமக்கு வெளியேயுள்ள தெய்வத்தன்மை முழுவதையும் நம் சொந்த ஆன்மாவே அளிக்கின்றது. நாமே நம்மிடத்தே காண்பதன் மங்கலான போலியே புறத்தேயுள்ள தோற்றம். மனத்தின் ஆற்றல்களைக் குவியச் செய்தலே, நம்மைக் கடவுளைக் காணும்படி செய்யத் துணை

புரியும் ஒரே கருவியாகும். நீ உனக்குச் சொந்தமான ஓர் ஆன்மாவை அறிவாயாயின், நீ இறந்த கால நிகழ்கால வருங்கால ஆன்மாக்கள் அனைத்தையும் அறிவாய். சங்கற்ப சத்தி மனத்தை ஒருமுகப்படுத்துகிறது; சில பொருள்கள் சங்கற்ப சத்தியைத் தூண்டி அடக்கியாள்கின்றன. எடுத்துக்காட்டாக, தருக்க அறிவு, அன்பு, பத்தி, மூச்சுவிடுதல் முதலியவற்றைக் கூறலாம். ஒருமுகப் படுத்தப்பட்ட உள்ளம் ஒரு விளக்காகி, ஆன்மாவின் ஒவ்வொரு மூலையையும் நமக்குக் காட்டுகிறது.

ஒரேவழி அனைவர்க்கும் பொருத்தமாதல் இயலாது. இம்முறைகள் பற்பலவும் ஒன்றன்பின் ஒன்ருகக் கைக்கொள்ளப்படவேண்டிய அவசியத்திற்கு உட்பட்ட படிகளல்ல. கிரியைகள் மிகத் தாழ்ந்தவைகள். அடுத்தவர் புறத்துள்ள கடவுள். அவர்பின் உள்ளவர் அகத்தேயுள்ள கடவுள். சிலர்க்குப் படிப்படியாகச் செல்லுதல் அவசியமாகலாம்; பலர்க்கு ஒரு வழியே வேண்டியதாகும். "நீ ஞானத்தை அடையுமுன் கருமம் வழியாகவும் பத்தி வழியாகவும் சென்றுதான் தீரவேண்டும்," என்று ஒவ்வொருவர்க்கும் உரைத்தல் பேதைமையின் உச்ச நிலையாகும். உனது தருக்க அறிவைப் பற்றியிருந்து அதனினும் உயர்ந்த ஒன்றை அடை; அது அவ்வறிவோடு முரண்படாதாதலால், அதனினும் உயர்ந்ததென நீ அறிவாய். உணர்வுக்கு அப்பாற்பட்ட நிலை சமாதியாகும்; ஆனல், நரம்பு நோயால் விளையும் வெறி நிலைகளை உண்மையான அனுபூதியெனக் கருதும் தவற்றுக்கு ஒருகாலும் ஆளாகாதே. இம்மெய்ஞ்ஞான போதத்திற்குப் பொய்யுரிமை கொண்டாடுவதும், இயல்பூக்கத்தை (இயற்கை அறிவை) மெய்ஞ்ஞான போதமெனத் தவருகக் கருதுவதும் பயங்கரமான செயலாகும். ஞானபோதம் பெற்றதற்கும் புறத்தே சோதனையில்லை; நாமே நமக்குள்ளே அறிகிருேம். தவற்றுக்கு ஆளாகாது, நம்மைக் காப்பது (தருக்க) அறிவின் குரலே— அதுவும் நேராகக் காப்பது இல்லை. சமயம் முழுவதும் அறிவைத் தாண்டிச் செல்லுதலேயாம்; ஆனல், அங்கே புகுவதற்கு ஒரே வழிகாட்டியாவது அறிவே. இயல்பூக்கம் பனிக்கட்டியைப் போன்றது; அறிவு நீரைப் போன்றது; மெய்ப்போதம் மிக நுண்ணிய வடிவினதான ஆவி போன்றது; ஒன்று மற்ருென்றைத் தொடர்ந்து வருவது. எங்கும் இந்த நித்தியமான தொடர்ச்சி முறையே - உணர்வின்மை, உணர்வு, புத்தி, சடம், உடல், மனம் என்பதே. ஆனல், சங்கிலி தொடங்குவது நாம் முதலிலே பற்றும் ஒரு குறிப்பிட்ட

வளையத்திலேதான் என்பது நமக்குத் தெரிகிறது. இரு திறத்து வழக்குகளும் சமச்சுமை உள்ளனவாகத் தோன்றுகின்றன. இரண் டும் உண்மையே. நாம் இரண்டையுந் தாண்டி ஒன்றோ மற் றென்றோ இல்லாத நிலைக்குச் செல்லுதல் வேண்டும். இத்தொடர்ச்சி கள் எல்லாம் மாயையேயாம்.

சமயம், அறிவுக்கு அப்பாற்பட்டது. விசுவாசம் என்பது வெற்று நம்பிக்கை அன்று; அறுதிப் பொருளைப் பற்றுதலேயாம்; ஞான விளக்கமேயாம். முதலில் கேட்டல், பின்பு சிந்தித்தல், அறிவால் ஆராய்ந்து ஆன்மாவைப் பற்றி அது அளிக்கக்கூடியதை யெல்லாம் கண்டுபிடித்தல்; தருக்க அறிவின் வெள்ளம் அதன் மீது பாயட்டும், எஞ்சுவதைக் கைப்பற்று. ஒன்றும் எஞ்சாதொழியின், ஒரு மூடக் கொள்கையினின்றும் நீ உயர்ந்தனை என்பதைக் கருதி இறைவர்க்கு நன்றி கூறு. எதுவும் ஆன்மாவைப் பறிக்க இயலாது என்பதையும், எந்தச் சோதனைக்கும் அது தாழாது நிற்கும் என் பதையும் நீ தீர்மானமாக உணர்ந்தபின், அதனைவிடாது பற்றி, அனைவர்க்கும் அதனைக் கற்பி. உண்மை ஒரு பக்கம் சாய்ந்த தாகாது; அது அனைவர்க்கும் நன்மை பயப்பதாகும். இறுதியில் அசைவற்று நின்று சாந்தியோடு அதனையே தியானி. உன் மனத்தை அதிலே ஒரு முகப்படுத்து. உன்னை அதனோடு ஒன்றாக் கிக்கொள். பேச்சு வேண்டாதபோது மோனமே உண்மையை எடுத்துச் சொல்லும். பேசுவதில் உன் சத்தியைச் செலவு செய் யாதே; ஆனால், மோனமாயிருந்து தியானம்செய். புற உலகத்தின் ஓட்டம் உனக்குத் தொந்தரவு செய்ய இடங் கொடாதே. உன் மனம் உயர்வற உயர்ந்த நிலையில் உள்ளபோது நீ அதனை உண ராது போவாய். மோனத்தால் சத்தியைக் குவித்து வைத்துக்கொள். ஞானத்தை உண்டாக்கும் இயந்திரம் போலாகு. பிச்சைக்காரனால் எதைக் கொடுக்க இயலும்? வேந்தனே கொடுக்கவல்லான்; அவனும் தனக்கு என ஒன்றையும் வேண்டாதபோதே அங்ஙனம் கொடுக்க வல்லவன் ஆவான்.

* * *

உனது பணத்தை வைத்திருக்கும்போது இறைவருக்குரியதைப் பேணும் பொக்கிஷக்காரனாகவே நினைத்துக்கொள். அதன்மீது பற்று வையாதே. பேரும் புகழும் பணமும் ஒழியட்டும். அவை ஒரு பயங்கரமான பந்தமாகும். சுதந்தரத்தின் வியக்கத்தக்க வாயு மண்டலத்தை உணர். நீ விடுதலை பெற்றவன், முத்தன், பந்தமற்ற

வன். 'என்ன பேறுபெற்றேன்! முத்தியே யான்! யான் அகண்டப் பொருள். என் ஆன்மாவில் ஆதியும் அந்தமும் இல்லை. எல்லாம் என் ஆன்மாவே'—இதனை இடையறாது கூறிக்கொள்.

ஜூலை 21-ஆந்தேதி—ஞாயிற்றுக்கிழமை

(பதஞ்சலி யோக சூத்திரம்)

யோகமானது சித்தத்தை விருத்திகள் எழாதவாறு தடுத்தலைக் கூறும் சாத்திரமாம். மனம் என்பது இந்திரியக் காட்சியும் உணர்ச்சிகளும் அடங்கிய கலவையே; அதாவது, தாக்குதலும் எதிர்த்தலும் ஆகிய இரண்டின் கலவையே; ஆதலால், அது நிலையானதாயிருக்க இயலாது. மனத்திற்கு ஒரு சூக்குமமான உடல் உள்ளது; அது வாயிலாக அது தூல உடலின்மீது தன் ஆட்சியைச் செலுத்துகிறது. மனத்திற்குப் பின் உண்மையான ஆன்மா உள்ளது என வேதாந்தம் விளம்புகின்றது. இந்தத் தரிசனம் ஏனைய இரண்டையும் ஒப்புக்கொள்வதோடு மூன்றாவதாக ஒரு பொருளையும் உள்ளதென உரைக்கின்றது; இது நித்தியமானது. அறுதிப் பொருளாவது; பகுத்துச் செல்லும்போது முடிவான பொருளாவது; பின்னர்ப் பகுக்கவொண்ணாத மூலப் பொருளாவது. பிறப்பாவது, மறுபடியும் பொருள்களை ஒன்றுசேர்த்தலே; இறப்பாவது, பொருள்களைப் பிரிவுபடுத்தலே. பகுத்தற்கு முடிவு, ஆன்மா காணப்படும் இடமே; பின்னும் பகுத்தல் இயலாமையின், நிலையானது அடையப்படுகிறது.

ஒவ்வோர் அலையின் பின்னும் கடல் முழுவதும் உள்ளது; எல்லா வெளிப்பாடுகளும் அலைகளே; சில மிகப் பெரியன; சில சிறியன; ஆயினும், யாவும் சாற்றை ஆராயின், கடலே முழுக் கடலே. ஆனால், அலையான நிலையில் ஒவ்வொன்றும் ஒரு பகுதியே. அலைகள் ஒடுங்கும்போது எல்லாம் ஒன்றே—பதஞ்சலி முனிவர் மொழிகிறபடி, 'பார்த்தற்கு ஒன்றுமின்றிப் பார்ப்பான் இருத்தலே' யாம். மனம் சுறுசுறுப்பாகும்போது ஆன்மா அதனோடு கலந்து கொள்கிறது. பழைய வடிவங்கள் விரைவாகத் தொடர்ந்து மீண்டும் தோன்றுதலே ஞாபகம் (நினைவு) என்பதாகும்.

பற்றற்றிரு. அறிவே சத்தி. ஒன்றைப் பெறும்போது மற்றொன்றைப் பெறுவாய். அறிவால் சட உலக முழுமையும் நீ ஒழித்துவிடலாம். எந்தப் பொருளிலிருந்தேனும் ஒவ்வொன்றாகக்

குணங்களை மனத்தால் ஒழித்து, இறுதியில் அனைத்தும் ஒழியும்படி செய்ய இயலும்போது, அப்பொருளை உனது உணர்வினின்றும் நினைத்தபோது மறக்கும்படி செய்ய உனக்குக் கூடும்.

பக்குவம் பெற்றார் மிக விரைவாக முன்னேறி, ஆறு மாதங்களுள் யோகிகளாதல் கூடும்; அத்துணைப் பக்குவம் பெறாதவர்களுக்குப் பல ஆண்டுகள் வேண்டியிருக்கலாம். எவரும், சிரத்தையோடு பயிற்சி செய்வதனாலும், ஏனைய எல்லாவற்றையும் கைவிடுவதனாலும், அப்பியாசத்திற்கே தம்மை முழுவதும் ஈடுபடுத்திக்கொள்வதனாலும், பன்னிரண்டு ஆண்டுகளுள் தம் குறிக்கோளை அடையலாம். இத்தகைய மானத வித்தைகளுள் யாதொன்றுமின்றியும் பத்தி* உன்னை அவ்விடத்து உய்க்கும்; ஆனால், அது தாமதமாகச் செல்லும் நெறியாகும்.

இறைவர் மனத்தினாற் பற்றப்படுகின்றபடியோ, காணப்படுகின்றபடியோ உள்ள ஆன்மாவேயாவர். அவர்க்குள்ள உயர்வற உயர்ந்த திருநாமம் 'ஓம்' என்பதே; ஆதலால், அதை ஓது; அதையே தியானித்து வா. அதன் வியத்தகு இயல்பையும் எல்லாக் குணங்களையும் பற்றி நினை. இடைவிடாது 'ஓம்' என்னும் மந்திரத்தை ஓதுதலே ஒரே உண்மையான வழிபாடாகும். அது மொழியன்று; இறைவரே.

சமயம் புதிதாக ஒன்றையும் அளிப்பதில்லை. அது தடைகளை நீக்குதல் மாத்திரம் செய்து, உனக்கு உனது ஆன்மாவைக் காணும்படி துணை புரிகின்றது. நோய், முதலாவதான பெருந்தடை; நலம் பெற்ற உடலே மிகச் சிறந்த கருவியாகும். துயரப்படுதல் கிட்டத்தட்ட தாண்ட முடியாத ஓர் இடைச் சுவராகும். பிரம்மத்தை ஒரு

---

* இங்கே 'பத்தி' என்னும் மொழிக்கு இறைவர்மீது செலுத்தும் தீவிரமான அளவிலாத அன்பு எனச் சுவாமிஜி பொருள் கொள்ளவில்லை. "அனுபூதியான பத்தியும் மிக உயர்ந்த ஞானமும் ஒன்றே," என அவர் முன்னமே போதித்துள்ளனர்; இன்னும் பத்திக்கு இலக்கணம் வரையறுக்கும்போது அவர், "இந்த முழுமையான இடையறாத இறைவரைப்பற்றிய நினைவே பத்தியெனப்படுவது," என்று இயம்பியுள்ளார். ஆகவே, இங்கே பத்தியென்னும் போது அவர் குறிப்பது முழுமனத்தோடு ஈடுபடும் நிலையினை அடையாத பத்தியேயாம். இறைவரை இறைவருக்காகவே அன்பு செய்யும் பத்தர்கள் அருகிலேயே இருப்பார்கள். பத்தர்களுட் பெரும்பாலார் அவர் மீது பத்தியைச் செலுத்துவது அவரது எல்லாம் வல்ல தன்மைக்காகவேயாம்; அச்சத்தியைத் துணைக்கொண்டு அவரல்லாத ஏனைய பொருள்களின் மீதுள்ள ஆசைகளை அவர்கள் நிறைவேற்றிக்கொள்ள வல்லவர்களாகின்றார்கள்.

முறை அறிவாய் ஆயின், அதன் பின் நீ ஒரு போதும் துயரப்பட மாட்டாய். ஐயம், விடாமுயற்சியின்மை, தவறான கருத்துகள்— இவை ஏனைய இடர்ப்பாடுகளாம்.

* * *

பிராணன்கள், நுண்ணிய சத்திகள், இயக்கத்திற்கு மூலங்கள். அவை மொத்தம் பத்தாகும்—ஐந்து உட்பிராணன்கள், ஐந்து வெளிப் பிராணன்கள். பெரிய ஓர் ஓட்டம் மேல் நோக்கி நிகழ்கிறது; மற்றொன்று கீழ்நோக்கியது. பிராணயாமம் என்பது மூச்சு மூலமாகப் பிராணன்களை அடக்குதலாம். மூச்சு விறகாகும்; பிராணன் நீராவியாகும்; உடல் இயந்திரமாகும். பிராணயாமம் மூன்று பகுதிகளை உடையது. அப்பகுதிகள் பூரகம் (மூச்சை உள்ளிழுத்தல்), கும்பகம் (மூச்சை நிறுத்துதல்), ரேசகம் (மூச்சை வெளிவிடுதல்) என்பவையாம்.

* * *

ஞான சத்தியை உனக்குக் கொணரும் வாகனமாகின்றவர் குருவே. யாரும் போதிக்கட்டும். ஆனால், குரு சீடருக்குச் சத்தியை வழங்கவேண்டும்; அது பயனையளிக்கும். சீடர்களுக்குள் உள்ள உறவு சகோதரத்துவமே. இது இந்தியாவில் சட்டத்தாலும் உண்மையாகவே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. குரு, தாம் தமக்கு முன்னுள்ளாரிடமிருந்து பெற்றுள்ள நினைவாற்றலாகிற மந்திரத்தைப் பிறர்க்கு அளிக்கிறார்; குருவின்றி ஒன்றும் செய்ய இயலாது; உண்மையாகவே பேராபத்து விளைகின்றது. குருவின் துணையின்றிப் பழகும் இந்த யோக சாதனங்கள் வழக்கமாகக் காமத்தை விளைக்க ஏதுவாகின்றன. ஆனால், அவரது துணை உள்ள போது இது அரிதாகவே நிகழ்கின்றது. ஒவ்வோர் 'இஷ்ட' தெய்வத்திற்கும் ஒரு மந்திரம் உண்டு. வழிபடுவோர்களுள் அவரவர்க்குத் தனியாகச் சிறப்பாக உரியது ஒரு குறிக்கோள் (இலட்சியம்) ஆகும்; மந்திரம் அதனை வெளிப்படுத்த உதவும். புறத்துள்ள மொழியாம் இம்மொழியை இடைவிடாது உச்சரிப்பது இலட்சியத்தை மனத்தில் உறுதியாக நிலைநாட்டத் துணை புரிகின்றது. இத்தகைய வழிபாட்டு முறை இந்தியா முழுவதிலும் சமயப் பற்றுள்ள அடியார்களுக்குள் வழங்கி வருகிறது.

ஜுலை 23-ஆந் தேதி—செவ்வாய்க்கிழமை

(பகவத்கீதை......கருமயோகம்) கருமம் வாயிலாக முத்தி யடைய, கருமத்தோடு உன்னை இணைத்துக்கொள்; ஆனால், ஆசை யின்றியும் பயனை எதிர்பாராமலுமிரு. அத்தகைய கருமம் ஞானத் தில் உன்னைக் கொண்டு விடும்; அது முறையே முத்தியைத் தரும். ஞானம் பெறுமுன் கருமத்தைக் கைவிடுதல் துயரத்திற்கு வழி யாகும். ஆன்மாவிற்காகச் செய்யும் கருமம் பந்தத்தை விளையாது. கருமத்தால் விளையும் இன்பத்தில் ஆசை வைக்கவோ, துயரத்துக்கு அஞ்சவோ வேண்டா. 'கருமம் புரிவன மனமும் உடலுமே; நானல்லேன்,' என ஓயாது உனக்குட்சொல்லிக்கொண்டேயிரு; அதனை உணர். நீ கருமம் புரிவதை அறியாதிருக்க முயல்.

செய்வன அனைத்தையும் வேள்வியாக (பூசனையாக) இறை வர்க்குச் செய்; உலகத்தில் இரு; ஆனால், உலகியலைச் சாராதே; தாமரையின் வேர் மண்ணிற் புதைந்திருப்பினும் அதன் இலையைப் போல் (நீரில்) ஒட்டாது எப்போதும் தூய்மையாயிரு. எவர் உனக்கு என்ன செய்யினும், உன் அன்பு அனைவர்மீதும் செல்லட்டும். ஒரு குருடன் நிறத்தைக் காண முடியாது; ஆதலால், தீமை நம்மிடம் இல்லாத போது அதனை எவ்வாறு பிறரிடம் நாம் காணக்கூடும்? நாம் புறத்தே காண்பதை நம் முன்னே காண்பதோடு ஒப்பிட்டு அவ்வண்ணமே தீர்ப்பளிக்கிறோம். நாம் தூயராயின், தூய்மை யின்மையைக் காண இயலாது. அது இருக்கலாம்; ஆனால் நமக்கு இல்லாது போகும். ஒவ்வொரு மனிதனிடத்தும் மங்கையிடத்தும் குழந்தையிடத்தும் தெய்வத்தையே காண்; அதனை உள்ளொளி யால் நோக்கு; அதனைப் பார்க்கும்போது வேறொன்றையும் நம்மாற் காண இயலாது. இவ்வுலகத்தை வேண்டாதே; ஏனெனில், நீ விரும்புவதையே நீ பெறுவாய். இறைவரை நாடு. அவரையே நண்ணு. சத்தி மிகுதியாவதற்கு ஏற்ப பந்தமும் மேலோங்கு கின்றது; அச்சமும் வளர்கின்றது. எறும்பைவிட நாம் எவ்வளவு அதிக அச்சத்திற்கும் துயரத்திற்கும் ஆளாகிறோம்! அவற்றை யெல்லாம் விட்டு வெளியே வா. இறைவரிடமே சேர். படைத்தவரைப் பற்றிய சாத்திரத்தை அணுகு; படைப்பைப்பற்றிய வரலாற்றை அணுகாதே.

"நானே செய்பவன்; நானே செயலும். காமக் குரோத அலையை வெல்ல வல்லவன் ஒரு பெரிய யோகியாவான்."

"அப்பியாசத்தாலும், வைராக்கியத்தாலும் மட்டுமே நாம் மனத்தை வெல்லக் கூடும்."

* * *

நம் இந்து முன்னேர் தனியிடத்தமர்ந்து இறைவரையும் ஒழுக்கத்தையும் பற்றிச் சிந்தித்தனர்; ஆதலால், அதே முடிவுக்காகப் பயன்படுத்த உதவும் மூளையை நாமும் பெற்றுள்ளோம்; ஆனால், இலாபத்தை அடைய முயலும் பாய்ச்சலில் அவற்றை மறுபடியும் இழக்கும் தறுவாயில் இருக்கிறோம்.

* * *

உடல் தன் பிணியைத் தீர்த்துக்கொள்ளும் சத்தியை ஓரளவிற்குத் தன்னிடத்தே பெற்றுள்ளது; மன நிலைகள், மருந்து, பயிற்சி முதலிய பல பொருள்கள் இந்தப் பிணி அகற்றும் திறனை வெளிக்கிளப்ப வல்லன. தூலப்பொருள்களின் நிலைமைகளால் நாம் தொந்தரவு படும் அளவும் தூலப் பொருள் சம்பந்தமான ஏதுக்களின் உதவியை நாடியவராவோம். நரம்புகளின் பந்தத்தை நீக்கிவிடும் வரை, அவற்றை மதிக்காமலிருக்க முடியாது. உணர்வுக்கு வாராத மனம் ஒன்று உண்டு. ஆனால், அது மனித அமைப்பின் ஒரு பகுதியேயாகிய உணர்வுக்குக் கீழ் உள்ளது. தத்துவ ஆராய்ச்சி என்பது மனத்தைப்பற்றி யுத்தியால் உத்தேசமாக உரைப்பதேயாம். சமயமோ, அறிவுக்கு ஒரே ஆதாரமான காட்சியை—புலனைத் தொடுதலை—அடிப்படையாக உடையது. உணர்வினுக்கு அப்பாலான மனத்தைத் தொடுவது எதுவோ, அதுவே உண்மையாம். 'ஆப்தர்கள்' எனப்படுவார் சமயத்தை 'நேர்க் காட்சி'யாற் கண்டவரே. அவர்கள் மேற்கொள்ளும் நெறியை நீயும் பின்பற்றுவையாயின், நீயும் காண்பாய் என்பதே அதற்கு அத்தாட்சியாம். ஒவ்வொரு சாத்திரமும் தனக்கென ஒரு சிறப்பான முறையையும் கருவிகளையும் கொண்டுள்ளது. வான நூலார் எவரும் சமையலறையிலுள்ள பானைகள் தட்டுகள் அனைத்தையும் பயன்படுத்தினலும், சனியெனும் கோளைச் சூழும் ஒளி வட்டத்தை உனக்குக் காட்ட இயலாது. அவருக்கு வேண்டுவது ஒரு தொலை நோக்கியே (தூரதிருஷ்டிக் கண்ணுடியே.) அது போன்றே, சமய சம்பந்தமான பேருண்மைகளைக் காணவேண்டின், முன்னரே அவற்றைக் கண்டுள்ளார் பின்பற்றும் முறையே பின்பற்றப்பட வேண்டும். சாத்திரம் பெரிதாகும் அளவிற்கு அதனை

ஆராயும் முறைகளும் முன்னினும் பல திறப்பட்டனவாகும். நாம் உலகிற்குட்புகுமுன்னே இறைவர் அதினின்றும் வெளியேறும் உபாயத்தை அமைத்து வைத்தார்; ஆதலால், நாம் செய்யவேண்டுவ தெல்லாம் அவ்வுபாயத்தைக் காண்பதே. ஆனுல், உபாயங்களைப் பற்றிப் போராடாதே. அனுபூதி ஒன்றையே நாடு. உனக்குப் பொருத்தமான மிகச் சிறந்த முறையைக் கண்டுபிடித்துக்கொள். மாம்பழங்களை அருந்து; அப்பழக் கூடையைப்பற்றிச் சண்டை செய்யும்படி பிறரை விட்டுவிடு. கிறித்துவைக் காண். அப்போது நீ ஒரு கிறித்தவனுவாய்; மற்றவையெல்லாம் வெறும் பேச்சே. பேச்சுக் குறையும் அளவிற்கு நலம் மிகும்.

செய்தியே செய்தி கொண்டு வருபவரை ஆக்குகிறது. இறைவரே கோயிலை ஆக்குகிருர்; கோயில் இறைவரை உண்டாக்குவதில்லை.

“சுவேதகேதுவின் வதனத்தின் மூலம் பிரம்மத்தின் மகிமை விளங்கியது போன்று, உன் முகத்தின்மூலம் அது சுடர் விடும்வரை கற்றுக்கொண்டிரு.”

ஓர் ஊகத்திற்கு எதிராக வேருேர் ஊகம் எழுகிறது. இதனுல் சண்டை மூளுகிறது; ஆனுல், நீ கண்டதையே பேசுவையாயின், எந்த மனிதரது நெஞ்சமும் அதனை எதிர்க்க இயலாது. ‘பால்’ எனும் போதகர் அனுபூதியின் வலிமையால், தமது சங்கற்பத்திற்கு மாருகவும் மனமாற்றத்தைப் பெற்றனர்.

செவ்வாய்க்கிழமை பிற்பகல்

[பகலுணவு ஆன பின்பு சிறிது நேரம் சம்பாஷணை நிகழ்ந்தது; அதில் சுவாமி கூறியதாவது:]

மயக்கம் மயக்கத்தைப் படைக்கும். மயக்கம் தன்னைத்தானே படைத்துத் தன்னைத்தானே அழிக்கிறது. இத்தன்மையதே மாயை. அறிவு (எனப்படுவது) முற்றும் மாயையை ஆதாரமாகக் கொண்டிருத்தலின், அது தவறு விளக்கும் ஒரு வட்டமாகும்; நாளடைவில் அந்த அறிவு தன்னைத்தானே மாய்த்துக்கொள்ளும். ‘கயிற்றை விட்டுவிடு.’ மயக்கம் ஆன்மாவைத் தொட இயலாது. நாம் கயிற்றைப் பற்றிக்கொண்டிருந்தபோது—மாயையொடு நம்மை ஒன்றுபடுத்திக்கொள்ளும்போது—மாயையாகிய அன்னை நம்மை அடக்கியாள்கிருள். அது வெளியேறட்டும். நீ சாட்சியாய் மட்டும் இரு;

அப்போது கலங்காது பிரபஞ்சமாம் ஓவியத்தை நீ புகழ்ந்து பேச வல்லவனுவாய்.

ஜூலை 24-ஆந் தேதி—புதன்கிழமை

யோகம் பழகுதலினுல் விளையும் சித்திகள் பூரண நிலையை அடைந்த யோகிக்குத் தடைகளாகா; ஆனுல், அவற்றைப் பயன் படுத்துவதனுல் பிறக்கும் வியப்பாலும் இன்பத்தாலும் அவை தொடக்க நிலையிலுள்ளார்க்குத் தடையாகக் கூடியனவாம். பழகு வதில் வெற்றியடைந்ததற்கு அறிகுறியாக உண்டாகும் ஆற்றல் களே சித்திகள். மந்திரங்களை ஓதுதல், யோகம் பழகுதல், தியா னம் செய்தல், பட்டினி கிடத்தல், மூலிகைகள் மருந்துகளைப் பயன் படுத்துதல்—இவை போன்ற பல வழிகளால் அவ்வாற்றல்கள் உண் டாகின்றன. பெற்ற சித்திகளில் ஊன்றும் கருத்தை முழுவதும் வென்றவரும், தம் செயல்களினுல் விளையும் எல்லாத் தருமத்தையும் துறப்பவருமான யோகியார் ‘ தரும மேகம் ’ (அறமுகில்) என்னும் நிலையை (சமாதி நிலைகளில் ஒன்றின் பெயர்) அடைந்து, ஒரு முகில் மழை சொரிவதுபோலப் புனிதத் தன்மையை வீசுவார்.

தியானம் என்பது பல பொருள்களின் தொடர்பைப் பற்றி யது; ஏகாக்கிர சித்தம் (ஒருமுகமாய்க் கவிந்த மனம்) ஒரு பொருளைப் பற்றியது.

மனம் ஆன்மாவால் அறியப்படுகின்றது; ஆனுல், தன்னெளி யுடையதன்று. ஆன்மா, எதற்கும் காரணமாக இயலாது. அது எவ்வாறு இயலும்? புருடன் தன்னைப் பிரகிருதியோடு (இயற்கை யோடு) எவ்வாறு சேர்த்துக்கொள்ளும்? அது அவ்வாறு செய்வ தில்லை; அவ்வாறு சேர்த்துக்கொண்டதாகக் கருதப்படுவது மித்தையேயாகும்.

* * *

இரக்கம் கொள்ளாமலும் துயரம் ஏதேனும் இருப்பதாக உண ராமலும் உதவி செய்யக் கற்றுக்கொள். பகைவனிடத்தும் நண்ப னிடத்தும் ஒரே வண்ணமாக நடக்கப் பயில். உனக்கு அதைச் செய்ய இயலும்போது, ஆசை எதுவும் உனக்கு இல்லாதபோது இலட்சியம் அடையப்படுகிறது.

பற்றின்மை என்னும் கோடாரியால் ஆசையாம் ஆலமரத்தை வெட்டி வீழ்த்து; அது முழுதும் மறைந்துவிடும். அது முற்றும்

மித்தையே. "கேடும் மயக்கமும் எவனிடமிருந்து நீங்கிவிட்ட னவோ, பிறரோடு இணங்குவதால் வரும் தீமைகளை வென்றவன் எவனோ, அவனே விடுதலை பெற்றவனாகிறான்."

எவனையும் அவனுக்காக அன்பு செய்தல் பந்தமாகும். அனைவரிடத்தும் ஒரே வண்ணம் அன்பு செய்; அப்போது ஆசைகள் அனைத்தும் மாயும்.

'அனைத்தையும் விழுங்கும்' காலம் வருகின்றபோது, அனைத்தும் அகல வேண்டுவனவாயிருக்கின்றன. மண்ணகத்தைச் சீர் திருத்தவும், வண்ணத்துப் பூச்சிக்கு வண்ணம் ஊட்டவும் முயல்வதேன்? அவையெல்லாம் இறுதியில் போயாக வேண்டும். மிதித்துச் சுழலச்செய்யும் இயந்திரத்தில், வெண்மையான சுண்டெலிகள் ஆரத்தை அழுத்தி அதைச் சுழலும்படி செய்துகொண்டேயிருக்கும்; அவ்வற்பச் சுண்டெலிகளைப்போன்று எப்போதும் வேலை செய்துகொண்டு, ஒருகாலும் எதையும் முடியாமல் இராதே. ஆசை நன்றாயினும், தீதாயினும், ஒவ்வோர் ஆசையும் தீமையைச் சுமந்து நிற்கும். ஒரு துண்டு இறைச்சியை நாடி ஒரு நாய் குதித்துக் கொண்டிருக்க, அவ்விறைச்சி அதற்கு எட்டாது, எப்போதும் விலகிக்கொண்டே இருக்க, இறுதியில் நாயாகவே மரணமடைகின்றதைப் போன்றது அது; அந்த நாயைப்போல இராதே. எல்லா ஆசைகளையும் வெட்டி எறிந்துவிடு.

* * *

பரமான்மாவே மாயையை அடக்கியாளும் நிலையில் ஈசுவரராகின்றார்; மாயைக்குட்பட்ட நிலையில் ஜீவான்மா ஆகிறார். மாயை என்பது வெளித்தோற்றம் அனைத்தின் முழுமையாகும். முழுதும் அது மறைந்துவிடும்.

மர-இயல்பு மாயை; அது உண்மையாகவே இறைவரது இயலாம்; ஆனால் அதனை நாம் மாயை எனும் திரை வழியாகக் காண்கிறோம். எதற்கும் 'ஏன்' என்று கேட்பது மாயைக்குள் இருப்பது. 'மாயை ஏன் தோன்றிற்று?' என்று கேட்பது பயனற்ற வினாவாகும்; ஏனெனில், அதற்கு விடை மாயையால் ஒருபோதும் அளிக்க ஒண்ணாதது; மாயைக்கு அப்பால் யார் அதனைக் கேட்பர்? தீமையே 'ஏன்' என்பதைப் படைக்கிறது. 'ஏன்' என்பது தீமையைப்படைப்பதில்லை; ஏன் என்று கேட்பது தீமையே. மித்தை மித்தையை அழிக்கும். தருக்க அறிவு என்பதே முரண்பாட்டை ஆதாரமாகக்

கொண்டதாகலின், எல்லாம் ஒரு வட்டமாகும். அது தன்னையே மாய்த்துக்கொள்ள வேண்டும். ஐம்புலக் காட்சியும் ஓர் அனுமானமே; எனினும், எல்லா அனுமானமும் புலக் காட்சியினின்றே விளைகிறது.

அஞ்ஞானம் (அறியாமை) இறைவரது ஒளியைப் பிரதிபலிப்பதால் காணப்படுகிறது; அது தன்னளவிலே பூச்சியமாம். கதிரவன் ஒளி, முகிலின்மீது பட்டாலன்றி முகில் தோன்ருது.

"நான்கு பிரயாணிகள் ஓர் உயர்ந்த சுவரை அடைந்தனர். முதலாமவன் சிரமப்பட்டுச் சுவரின் உச்சியிலேறி,திரும்பிப்பாராது உள்ளே குதித்தனன். இரண்டாமவன், சுவரின்மீது மெய்வருந்த ஏறி, அப்புறம் உள்ளதைப் பார்த்து மகிழ்ச்சியாற் கூக்குரலிட்டு மறைந்தான். மூன்ருமவனும், முறைப்படி உச்சியிலேறித் தன்னுடைய தோழர் எங்கே சென்றனர் என்பதைப் பார்த்து ஆனந்தத்தாற் சிரித்து அவர்களையே தொடர்ந்தான். நாலாமவனே, தன் தோழர்கட்கு என்ன நேர்ந்தது என்பதை மொழியத் திரும்பி வந்தனன். அப்பால் ஏதோ ஒன்று உள்ளது என்பதை நமக்குக் காட்டும் அறிகுறியாவது மாயையாகிய சுவரிலிருந்து குதித்துள்ள பெரியாரிடமிருந்து பின்புறமாக ஒலித்துவரும் சிரிப்பேயாம்."

* * *

பாரமார்த்திகப் பொருளினின்றும் நம்மைப்பிரித்து, அதற்குச் சில குணங்களை ஊட்டுவதால் ஈசுவர தத்துவம் பெறப்படுகிறது. நம் மனம் வாயிலாகப்பார்க்கப்படும் பிரபஞ்சத்தின் உண்மையே, தீமையின் வடிவமான சாத்தான். அவன் மூட நம்பிக்கையுடையாரின் மனங்கள் வாயிலாகக் காணப்படும் உலகத் துயரமே யாவான்.

ஜூலை 25-ஆந் தேதி—வியாழக்கிழமை

(பதஞ்சலியின் யோக சூத்திரம்)

"காரியங்கள் செய்யப்படலாம்; செய்விக்கப்படலாம்; நீக்கவும் படலாம். மூன்றிடத்தும் நமக்கு விளையும் பயன் கிட்டத்தட்டச் சமமேயாகும்."

முழு பிரம்மசரியம், மிக்க அறிவாற்றலையும் ஞான ஆற்றலையும் அளிக்கிறது. பிரம்மசாரி உள்ளத்திலும் உரையிலும் செயலி

லும் காமமின்றித் தூயனுயிருத்தல் வேண்டும். உடலின்மீது வைக்கும் மதிப்பை இழந்துவிடு; இயன்றவரை அதைப்பற்றிய உணர்ச்சியைப் போக்கிவிடு.

ஆசனம் (இருக்கும் நிலை) அசைவற்றதாயும் இன்பமானதாயும் இருத்தல் வேண்டும்; இடையருப் பழக்கத்தால்—மனத்தை அகண்டத்தில் ஒன்றும்படி செய்வதால்—இதைப் பெறலாகும்.

இடைவிடாது ஒரு பொருளின்மேற் கருத்தைச் செலுத்துதல் தியானமாகும்.

அமைதியான நீரில் ஒரு கல்லை எறியும்போது நீரில் பல அலை வட்டங்கள் உண்டாக்கப்படுகின்றன; அவற்றுள் ஒவ்வொன்றும் வெவ்வேருயினும், அனைத்தும் ஒன்றையொன்று பாதிக்குந்தன்மையுடையன; அதுபோன்றதே நம் மனமும். வேறுபாடு இதுதான். நம்மிடம் அது நம் உணர்விற்குத் தோன்றுவதில்லை; ஆனல், யோகியினிடம் அது உணர்விற்கு விளங்குகிறது. நாம் ஒரு சிலந்தி நூற்றுள்ள வலையில் அச்சிலந்திபோலுள்ளோம்; யோகம் பழகுவதால் சிலந்தியைப் போன்று வலையிலுள்ள எந்த நூல் வழியாகவும் நம் விருப்பத்தின்படி செல்லும் திறமையைப்பெறுகிருேம். யோகியரல்லாதவர், தாம் உள்ள இடத்தில் இருக்கக் கட்டுப்பட்டவராவார்.

* * *

இன்னெருவர்க்கு இன்ன விளைவிப்பது பந்தத்தை உண்டாக்குகிறது; உண்மையை மறைக்கிறது. எதிர்மறையான குணங்கள் போதாவாகும். நாம் மாயையை வென்ருக வேண்டும்; அப்போது அவள் நம்மைப் பின் தொடர்வாள். பொருள்கள் நம்மைப் பந்தத்துக்கு உள்ளாக்காத நிலை வரும்போதுதான் நாம் அவற்றைப் பெறும் தகுதியுடையவராவோம். அப்பந்தம் நீங்கும்போது மெய்யாகவே எல்லாப் பொருள்களும் நம்மை வந்தடையும். ஒன்றையும் வேண்டாதாரே இயற்கையை ஆளுபவராவார்.

“தம் பந்தத்தை முன்னரே அறுத்துள்ள எவரேனும் ஒரு பெரியோரிடம் சரணடை; உரிய காலத்தில் அவர் தம் கருணையால் உன்னை விடுவிப்பார். அதனினும் உயர்ந்தது இறைவரிடம் சரண் புகுவது; ஆனல், அது மிக அரியது. ஒரு நூற்றுண்டுக்கு ஒரு முறையே, உண்மையாக அவ்வாறு செய்த ஒருவரைக் காணலாகும். ஒன்றையும் உணராமல், ஒன்றையும் அறியாமல், ஒன்றையும் செய்யாமல், ஒன்றையும் உடைமையாக்காமல், அனைத்தையும்

இறைவரிடம் ஒப்புவித்துவிட்டு, 'உமது திருவுள்ளம்போல நடக்கட்டும்,' என்று இயம்பு. நாம் இப்பந்தம் உள்ளதாகக் கனவே காண்கிரேம். விழித்தெழு ; அதனை ஒழித்துவிடு ; இறைவரிடம் சரண் புகு; அவற்ருலேயே மாயையெனும் பாலையைக் கடக்க இயலும் ; வீரத் துறவியே, உன் பிடியை விடு. 'ஓம் தத்ஸத் ஓம்!' என்று முழங்கு.'' நாம் தரும சிந்தனையுடையராக அனுமதிக்கப்படுதல் நமது பேறேயாகும் ; ஏனெனில், அவ்வாறு கருதும்போதே நாம் வளர்ச்சியடையக்கூடும். ஏழை மனிதன் துயருறுவது நாம் உதவி பெறுவதற்காகவே. கொடுப்பவன் முழங்காற்படியிட்டு நன்றி பாராட்டுவாஞக ; வாங்குபவன் எழுந்து நின்று அனுமதி தருவாஞக. ஒவ்வோர் உயிர்க்கும் பின்ஞல் இறைவர் இருப்பதைக் காண்; அவருக்கே கொடு. நாம் தீமையைக் காணுதபோது, உலகம் நமக்கு முடிவடையும். அத்தவற்றினை ஒழிப்பதே அதன் ஒரே நோக்கமாதலின், ஏதோ குறையிருப்பதாக நினைப்பது அதனைப் படைப்பதாகும். வலிமையையும் பூரணத்தையும் பற்றிய நினைவுகளே அதனைத் தீர்ப்பனவாம் ; உன்ஞல் இயன்ற நன்மையைச் செய். அதில் ஏதேனும் தீமை அடங்கியே இருக்கும் ; ஆஞல் உனக்கெனப் பயனென்றையும் கருதாது அனைத்தையும் புரி. எல்லாப் பயன்களையும் இறைவரிடம் ஒப்பித்துவிடு. நன்மையோ, தீமையோ, உன்னைத் தடை செய்யாது.

கருமஞ்செய்தலே சமயமாகாது ; ஆஞல் நேராகச் செய்யும் கருமம் முத்திக்கு வழியாகும். உண்மை யாதெனில், இரக்கமெல்லாம் இருளேயாகும்; ஏனெனில், இரக்கம் காட்டுவது யாரிடம்? இறைவர் மீது இரக்கம் காட்ட இயலுமா? (இறைவரைத் தவிர)வேறு யாதேனும் உள்ளதா ? நீ வளர்ச்சி எய்துதற்கு உதவியாகுமாறு நல்லொழுக்கப் பயிற்சிக் களமாக இவ்வுலகினை உனக்கு அளித்ததற்காக இறைவருக்கு நன்றி கூறு; ஆஞல், உன்ஞல் உலகிற்கு உதவி செய்ய இயலும் என ஒருபோதும் கருதாதே. உன்னைச் சபிப்பவனுக்கு நன்றிகாட்டு. ஏன் எனின், சபித்தல் இன்னது என்பதை உனக்குக் காட்ட ஒரு கண்ணுடியையும், தன்னடக்கம் பழகுதற்கு ஒரு சந்தர்ப்பத்தையும் அவன் உனக்கு அளிக்கிருன். ஆதலால், அவனை வாழ்த்தி மகிழ். பயிற்சியின்றிச் சத்தி வெளிவர இயலாது ; கண்ணுடியில்லாது நாம் நம்மைக் காண இயலாது.

கற்பனையாற் பிரம்மசரியத்தை இழத்தல் செயலாற் பிரம்மசரியத்தை இழைப்பதைப்போன்று, அதேயளவிற்குக் தீதாகும். அடக்

கப்படும் ஆசை மிக வுயர்ந்த பயனை அளிக்க வழியாகும். காம மெனும் சத்தியை ஞானசத்தியாக மாற்று; ஆனாலும், உன் ஆண் மைச் சத்தியை அழித்துக்கொள்ளாதே; ஏனெனில், அது உன் சத்தியைத் தூர எறிவதாகும். அச்சத்தி வலுக்கும் அளவிற்கு அத ால் அதிகம் இயற்றலாகும். சத்தி வாய்ந்த நீரோட்டத்தைக் கொண்டே நீர் விசையால் நிலத்தைக் குடையலாம்.

இன்று நமக்கு வேண்டுவது யாதெனின், இறைவர் உளர் என் பதையும் இங்கேயே இப்பொழுதே இறைவரைக் காண்பதும் உணர் வதும் நமக்கியலும் என்பதையும் அறிவதே. சிக்காகோ நகரி லுள்ள ஒரு பேராசிரியர், "இவ்வுலகினைப் பற்றிக் கவனமாயிரு; இறைவர் மறு உலகினைப்பற்றிக் கவனித்துக்கொள்வார்?" என்று கூறுகிறார். என்ன பேதைமை! இவ்வுலகினைப்பற்றி நம்மாற் கவனித்துக்கொள்ள இயலுமாயின், மறு உலகினைப்பற்றிக் கவனித் துக்கொள்ள இறைவரது இலவச உதவி எவ்வாறு அவசியமாகும்?

ஜூலை 26-ஆம் தேதி—வெள்ளிக்கிழமை

(பிருகதாரணியக உபநிஷத்து)

உலகிலுள்ள எல்லாப் பொருள்கள்மீதும் ஆன்மா வாயிலாக வும் ஆன்மாவிற்காகவும் மட்டும் அன்புசெய். யாஞ்ஞவல்கியர், தம் மனைவி மைத்திரேயியினிடம், "ஆன்மா வாயிலாக நாம் அனைத்துப் பொருள்களையும் அறிகிறோம்," என்று உரைத்தார். ஆன்மா ஒரு நாளும் அறியப்படும் பொருளாகாது; அறிபவனை அறிதலும் ஒண் ணாது. அதனை ஆன்மாவாக அறிபவன் தனக்குத்தானே நியதியாகி றான். தானே பிரபஞ்சமும் அதைப் படைப்போனும் என்பதை அவன் அறிவான்.

* * *

உவமைக் கதைகள் வடிவமாகப் பழைய பொய்க் கதைகளை நீடு வாழச் செய்வதும் அவற்றுக்குத் தகாத முக்கியத்துவத்தை அளிப்பதும் மூட நம்பிக்கையை வளர்ப்பனவாகும். அது உண்மை யிலே பலவீனமுமாகும். விட்டுக் கொடுத்துச் சமாதானம் செய்தல் மெய்யாகாது. உண்மையைக் கற்பி. எந்த மூட நம்பிக்கைக்கும் சமாதானம் கூறவேண்டா; கேட்பவனுடைய நிலைக்குப் பொருந்து மாறு உண்மையைக் கீழே இழுத்துக் கொண்டு வாராதே.

ஜூலை 27-ஆந் தேதி—சனிக்கிழமை

(கடோபநிஷத்து)

ஆன்மாவைப்பற்றிய உண்மையை அதனை உணர்ந்தவனிடத் தன்றி வேறெவனிடத்தும் கற்காதே; பிறரிடமெல்லாம் அது வெறும் பேச்சளவாய் நிற்கும். மெய்ஞ்ஞானம், அறம் பாவம் இரண்டிற் கும் அப்பாற்பட்டது; துவந்தங்களை (முரண்பட்ட இரண்டையும்) கடந்துள்ளது. "களங்கமற்றவன் ஆன்மாவைக் காண்கிறான்; நித்தியமான அமைதி ஆன்மாவிற் குடிகொள்கிறது." பேசுதல், வழக்காடுதல், நூல்களைப் பயிலுதல், மிக மிக உயரம் பறக்கும் அறிவு, வேதங்கள் ஆகியவையனைத்தும் ஆன்மாவைப்பற்றிய ஞானத்தை அளிக்க இயலாதனவாம்.

நம்மிடம் இரு பொருள்கள் உள்ளன. அவை பரமான்மாவும் ஜீவான்மாவுமாம். பின்னது நிழலேயாகும். முன்னதுதான் உண்மையான ஒரே செங்கதிரோன் என்பதை இருடிகள் அறி வார்கள்.

நம் மனத்தை இந்திரியங்களோடு இணைத்துக்கொள்ளாவிடில், கண்கள், மூக்கு, காதுகள் முதலியவற்றினின்றும் யாதொரு செய்தி யையும் பெறமாட்டோம். புற உறுப்புகள் மனத்தின் சத்தியாற் பயன்படுத்தப்படுகின்றன. இந்திரியங்களைப் புறத்தே செல்ல விடாதே; அப்போது உடலையும் புற உலகத்தையும் ஒழித்துவிட லாகும்.

புற உலகமாக இங்கே காணும் மறைபொருளே இறந்தோர் களால் அவரவரது மனநிலைகட்கு ஏற்றவாறு சுவர்க்கமாகவோ, நரகமாகவோ காணப்படுகிறது. இம்மையும் மறுமையும்இரு கனவு கள். பின்னது முன்னதின் மாதிரியாகவே அமைக்கப்பட்டுள்ளது. இரண்டையும் நீக்கிவிடு; எல்லாம் எங்கும் உள்ளனவே; எல்லாம் இப்போதே உள்ளனவே. இயற்கையும், உடலும், மனமும் மரணத்தை அடையும்; நாம் அடையோம். நாம் போவதுமில்லை, வருவதுமில்லை. மனிதனான சுவாமி விவேகானந்தன் இயற்கையில் உள்ளான்; பிறக்கிறான்; இறக்கிறான்; ஆனால், சுவாமி விவேகா னந்தனாக நாம் காணும் ஆன்மாவோ, பிறப்பதுமில்லை; இறப்பது மில்லை. அது நித்தியமான மாறவியலாத உண்மைப் பொருளே.

மனத்தின் ஆற்றலை ஐந்து இந்திரியங்களாகப் பகுத்தாலும் ஒன்றையே நாம் காணினும், அது அவ்வாறே உள்ளது. "ஒவ்

வொன்றுக்கும் தனித்தனியான எதிரொலியுள்ளது; ஆதலால் யான் கைகளைத் தட்டி, அதன் எதிரொலியைப் பெறுகிறேன்; அதன்பின் என்னைச் சுற்றிலுமுள்ள ஒவ்வொன்றையும் இன்னதென இயம்ப வல்லேனுவேன்,'' என்று ஒரு குருடன் கூறுவான். ஆதலால், மூடு பனியில் கண்ணில்லாதான் கண்ணுடையானுக்கு ஆபத்தின்றி வழி காட்டுவான். மூடுபனியோ, இருளோ, அவனுக்கு வேறு பாடற்றதாய் அமைகின்றது.

மனத்தை அடக்கு; இந்திரியங்களோடுள்ள தொடர்பை அறுத்துவிடு; அப்போதே நீ யோகியாவாய்; அதன் பின்னர் மிச்சமெல்லாம் வரும். கேட்கவும், காணவும் முகரவும், சுவைக்கவும் மறுத்துவிடு; புற இந்திரியங்களினின்றும் மனத்தின் சத்தியைக் களைந்துவிடு. உன் மனம் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் போது நீ அறியாமலே அதனை எப்போதும் செய்து வருகிருய்; ஆதலால், அறிந்தே அதனைச் செய்யக் கற்றுக் கொள்ளல் இயலும். மனம் தன் விருப்பத்தின்படியே இந்திரியங்களை அமைக்க இயலும். நாம் உடல் வாயிலாகச் செயல் புரியும் அவசியத்திற்கு உள்ளாகியிருக்கிருேம் என்ற அடிப்படையான மூட நம்பிக்கையை அகற்றிவிடு. நமக்கு அந்த அவசியம் இல்லை. உன்னறைக்குட்புகுந்து உபநிடதங்களை உன் சொந்த ஆன்மாவிடமிருந்தே பெற்றுக்கொள். இதுவரை இருந்தவற்றுள்ளோ, இனி வரப்போகின்றவற்றுள்ளோ, மிக உயர்ந்த புத்தகம் நீயே. உள்ளேயிருக்கும் குரு கதவைத் திறந்தாலன்றி, புறத்திலிருந்து வரும் போதனை முழுதும் வீணுகும். அதனுல், ஏதேனும் பயன் பெற வேண்டின், நெஞ்சமாம் புத்தகத்தைத் திறக்க வழி காண வேண்டும்.

சங்கற்பமே 'அமைதியான மென்குரல்'. 'செய்' 'செய்யாதே,' என்று உரைக்கும் உண்மையான அதிபதி அதுவே. நம்மைப் பந்தத்திற்கு உள்ளாக்கும் அனைத்தையும் அது செய்ய வல்லது; அறியாமையுற்ற சங்கற்பம் பந்தத்திற் கொண்டு சேர்க்கும்; அறிவுற்ற சங்கற்பம் நம்மை விடுவிக்க வல்லதாகும். ஆயிரக்கணக்கான வழிகளிலே சங்கற்ப சத்தியை வலியுறுத்தலாகும்; ஒவ்வொரு வழியும் ஒவ்வொரு வகை யோகமே; ஆனுல், ஒழுங்குபடுத்தப்பட்ட யோகம் அதே தொழிலை மிகு விரைவிற்செய்கிறது. பத்தி யோகம், கரும யோகம், ராஜயோகம், ஞான யோகம் என்பன, மிக்க பயன் விளைக்கும் முறையில் அக்காரியத்தைச் செய்து முடிக்கும். எல்லாச் சத்திகளையும்—தத்துவ விசாரணை, கருமம், பிரார்த்தனை, தியா

னம் அனைத்தையும்—பயன்படுத்து; பாய்களையெல்லாம் விரித்து விடு. நீராவியின் சத்தியை முழுதும் திருப்பிவிடு; இவ்வாறு இலட்சியத்தை அடைக. எவ்வளவு விரைவாக இதனைச் செய்து முடிக்கின்றோமோ, அவ்வளவுக்கு நன்மையுண்டு.

* * *

'ஞான ஸ்நானம்' உன் தூய்மைக்கு அறிகுறியான புறத் தூய்மை. அது புத்தமதத்தினின்று பிறந்தது. 'புனித விருந்து' எனும் கிரியை அநாகரிக மக்களுக்குள் வழங்கிவந்த மிகு பழமையான ஒரு வழக்கம் இறவாது நிலைத்துவிட்டதேயாம். அவர்கள் சில சமயம் தங்கள் பெருந் தலைவர்களைக் கொன்று அவர்களுடைய ஊனை அருந்தினுர்கள்; காரணம், அத்தலைவர்கட்குப் பெருமை அளித்த குணங்களைத் தாங்களும் அதனுற் பெறலாகும் என்பதே. தலைவனை வீரமும் ஞானமும் வாய்ந்தவனுக்கிய இயல்புகள் அவ்வழியாலே தமக்கும் உரியனவாகும் என்றும், ஒரு மனிதனுக்குப் பதிலாக அந்தச் சாதி முழுமைக்கும் வீரமும் ஞானமும் உரியவாகும் என்றும் அவர்கள் நம்பினுர்கள். நரபலியும் யூதருடைய கருத்தேயாம்.

ஜெஹோவா (இறைவர்) என்பவரிடமிருந்து பல தண்டனைகளைப் பெற்றும், அவர்களை விட்டு நீங்காது, அது பற்றிக்கொண்டிருந்தது. இயேசுநாதர் சாந்தமாயும் அன்பாயும் இருந்தவர்; ஆனுல், அவரை யூதர்களுடைய நம்பிக்கைகளோடு பொருத்துதற் பொருட்டு, கழிவிரக்க வடிவிலோ, பிறருடைய பாவங்களை ஏற்றுப் பின் மாய்க்கப்படும் ஒரு மனித வடிவிலோ நரபலியிடும் கருத்து வந்தாக வேண்டியிருந்தது. இக்கொடிய கருத்தே, இயேசுவின் போதனைகளினின்றே கிறித்தவ சமயத்தை விலகச் செய்யவும், கொலையும் குருதி சிந்துதலும் ஆகிய நீர்மையை வளர்க்கவும் ஏதுவாயிற்று.

* * *

எதைச்செய்வதானுலும், 'அது எனது இயல்பு,' என்று இயம்பு; 'எனது கடமை அது,' என்று கூருதே.

'மெய்ம்மையே வெல்வது; பொய்ம்மையன்று.' மெய்ம்மையின் மீது நில்; நீ இறைவரை அடைந்தவனுவாய்.

* * * * * * * *

இந்தியாவிலே மிகப் பழைய கால முதல் அந்தணச் சாதியிற் பிறந்தோர் தம்மை எல்லாச் சட்டங்களுக்கும் அப்பாற்பட்டவ ராகவே கருதி வந்துள்ளனர்; அவர்கள் தம்மைத் தேவர்களென்றே பாராட்டுகின்றுர்கள். அவர்கள் ஏழைகளாயிருப்பார்கள்; ஆனல், அவர்களுடைய குறை யாதெனில், அதிகாரத்தை அவர்கள் நாடு வதே. இங்கே நல்லோராயும், ஒழுக்கமுடையோராயும், உடைமை யற்ருேராயும் அறுநூறு இலட்சம் மக்கள் ஏறக்குறைய உள்ளார் கள்; அவர்கள் அந்நிலையிலிருப்பதற்குக் காரணம் அவர்கள் பிறவி முதலே தங்களைச் சட்டதிட்டங்களுக்கும் தண்டனைக்கும் அப்பாற் பட்டவர்களாக நினைக்கும்படி போதிக்கப்படுவதேயாகும். அவர்கள் தங்களை 'இரு பிறப்பாளர்கள்' என்றும், 'விண்ணவர் மைந்தர் கள்' என்றும் கருதுகிருர்கள்.

ஜுலை 28-ஆந் தேதி—ஞாயிற்றுக்கிழமை

('அவதூத கீதை' எனும் 'தூயோர் பாடல்'—தத்தாத்திரேயர்* இயற்றியது.)

"எல்லா அறிவும் மன அமைதியைப் பொறுத்தது."

"பிரபஞ்ச முழுதும் நிறைந்திருப்பவரும், ஆன்மாவுக்குப் பரமான்மாவாயிருப்பவருமான ஒருவரை (பரம்பொருளை) எப்படி நான் வணங்குவேன் ?"

ஆன்மாவை எனது இயல்பு என்று அறிதலே ஞானமும் விஞ் ஞானமுமாகும். "நான் அவனே; இதைப்பற்றி எனக்கு இம்மியும் ஐயமில்லை."

"நினைவு, சொல், செயல் எதுவும் எனக்குப் பந்தத்தை உண்டு பண்ணுவதில்லை. யான் இந்திரியங்களுக்கு அப்பாலுள்ளேன். யான் ஞானமாய் ஆனந்தமாய் உளேன்."

உண்மையும் இல்லை, இன்மையும் இல்லை; எல்லாம் ஆன் மாவே. ஒன்றுக்கொன்று சார்பாயுள்ள எல்லாக் கருத்துகளையும் உதறிவிடு; எல்லா மூடக் கொள்கைகளையும் உதறியெறிந்துவிடு; சாதியும் பிறப்பும் தேவர்களும் மற்றெல்லாமும் மறைக. இருத் தலைப்பற்றியும் ஆதலைப்பற்றியும் பேச்சு ஏன்? துவிதம் அத்துவிதம்

*தத்தாத்திரேயர் ஒரு முனிவர்; அத்திரிமுனிவருக்கும் அநசூயைக்கும் பிறந்த குமாரர்; பிரம்மா, விஷ்ணு, ருத்திரர் எனும் மூவரின் திரு அவதார மானவர்.

இரண்டையும் பற்றிய பேச்சை விட்டுவிடு. இரண்டையோ ஒன்றையோ பற்றிப் பேசுதற்கு நீ இரண்டாயிருந்தது எப்போது? பிரபஞ்சம் என்பது புனிதமான ஏகப் பொருளே; அவனேதான். உன்னைத் தூய்மையாக்க யோகத்தைப்பற்றிப் பேசாதே; உன் இயல்பாலே நீ தூயை. எவனும் உனக்குப் போதிக்க இயலாது.

இந்தக் கீதத்தை எழுதியவரைப் போன்ற மக்களே சமயத்தை உயிரோடு வைத்திருப்பவர்கள். அவர்கள் உண்மையாகவே மெய்யுணர்வு பெற்றவர்கள். அவர்கள் எதையும் பொருட்படுத்த மாட்டார்கள்; உடலுக்குச் செய்யும் எதையும் உணரார்கள்; தட்ப வெப்பங்களையோ, ஆபத்தையோ, வேறெதனையோ, கருத்திற் கொள்ள மாட்டார்கள்; செந்தழலே உடலை எரிக்கினும் அவர்கள் அமைதியாயிருந்து ஆன்மானந்தத்தை நுகர்ந்து கொண்டிருப்பார்கள்.

"ஞாதா, ஞானம், ஞேயம் எனும் மூவகைப் பந்தனையும் ஒழியும்போது அங்கே ஆன்மா உள்ளது."

"நீ உள்ளத்தை அடக்கினுல் என்ன, அடக்காவிட்டால் என்ன? உன்னிடம் பணமிருந்தாலென்ன, இல்லாவிட்டால் என்ன? நீ என்றைக்கும் தூய ஆன்மாவே! 'நான் ஆன்மா. எவ்விதப் பந்தமும் என்னருகே என்றேனும் வந்ததில்லை. நான் மாற்றமடையாத விசும்பே ஆவேன்; கொள்கைகளாம் முகில்கள் என் மேல் படர்ந்து செல்லலாம்; ஆனுல், அவை என்னைத் தொடா,' என்று இயம்பு."

"அறத்தை எரித்துவிடு; பாவத்தை எரித்துவிடு. முத்தியென்பது குழந்தையின் குதலையே. யானே அந்த அழிவற்ற ஞானம். யானே அந்தத் தூய்மை."

"என்றேனும் பந்தமுற்றவனும் இல்லை; என்றேனும் முத்தி பெற்றவனும் இல்லை. என்னையன்றி வேறெவரும் இல்லை. யானே அகண்டமானவன்; நித்திய முத்தன். என்னிடம் பேசாதே. ஞானச் சுவையான என்னை எது மாற்றமுடியும்? கற்பிக்கவல்லார் யார், கற்பிக்கப்பட வல்லார் யார்?"

"வழக்கையும் தத்துவ ஆராய்ச்சியையும் குழியில் தள்ளிவிடு."

"அடிமையே அடிமைகளைக் காண்பான்; மோகமுற்றவனே மோகத்தைக் காண்பான்; தூய்மையற்றவனே தூய்மையின்மையைக் காண்பான்!"

தேசம் காலம் நிமித்தம் இவையனைத்தும் மயக்கங்களேயாம்.

நீ கட்டுப்பட்டிருப்பதாகவும், பின்பு விடுதலையடைவாய் என்றும் கருதுவதே உன் நோயால் என அறி. நீ மாறவொண்ணுதபொருள். வாளா இரு; கீழே அமர்; எல்லாப் பொருள்களும் கரைந்தழிய விடு. அவை கனவுகளேயாம். வேறுபாடு என்பதில்லை. பிரித்தறிதல் என்பதில்லை. அவையெல்லாம் மூட நம்பிக்கைகளே. ஆதலால், மோனமாயிரு. உன்னை இன்னுனென அறி.

"நான் ஆனந்தத்தின் சுவையாவேன்." எக்குறிக்கோளையும் பின்பற்றுதே. இருப்பதெல்லாம் நீயே. ஒன்றுக்கும் அஞ்சாதே. நீ உண்மையின் சாரமாவாய். சாந்தமாயிரு. உனக்கு நீயே தொந்தரவு கொடாதே. நீ ஒரு நாளும் பந்தமுற்றிருந்ததில்லை. நீ ஒரு நாளும் புண்ணியமோ,பாவமோ அடைந்ததில்லை. இம்மயக்கங்கள் அனைத்தையும் போக்கிவிடு. சாந்தியாயிரு; யாரை வணங்குவது? வணங்குபவர் யார்? எல்லாம் ஆன்மாவே. பேசலும், கருதலும் மூட நம்பிக்கையே. "யான் ஆன்மா, யான் ஆன்மா," என்று திரும்பத் திரும்பக் கூறு. ஏனைய யாவும் ஒழியட்டும்.

ஜுலை 29-ஆந் தேதி—திங்கட்கிழமை

சில சமயம் நாம் ஒரு பொருளைக் குறிப்பிடுதற்காக அதன் சூழ்நிலையைச் சித்திரிக்கிறேம். நாம் 'சச்சிதானந்தம்'என்னும்போது சொற்பதம் கடந்த அதீதப் பொருளின் கரையையே சுட்டுபவராவோம். அதைப்பற்றி 'உள்ளது' என்றுகூட உரைக்க இயலாது; ஏனெனில், அதுவும் வியவகாரிகமே. எந்தக் கருத்தும், எந்தக் கற்பனையும் வீணே. 'நேதி; நேதி' ('இதுவன்று, இதுவன்று') என்பதே சொல்லக்கூடியதெல்லாம்; ஏனெனின், நினைத்தலும் வரையறைக்கு உட்படுத்துவதாகும்; அக்காரணத்தால் இழப்பதாகும்.

இந்திரியங்கள் உன்னைப் பகலிலும் இரவிலும் ஏமாற்றுகின்றன. வேதாந்தம் அதனைப் பல யுகங்களுக்கு முன்னமே கண்டுபிடித்துவிட்டது; இக்கால விஞ்ஞானம் அதே உண்மையை இப்போதுதான் கண்டுபிடித்து வருகின்றது; ஒரு படத்திற்கு நீளமும் அகலமுமே உள்ளன; ஓவியக்காரனே, ஆழம் எனும் தோற்றத்தைச் செயற்கையாகப் படைப்பதால் இயற்கையைப் பின்பற்றுவதில் நம்மை ஏமாற்றிவிடுகிருன். எந்த இரு மனிதரும் அதே உலகைப் பார்ப்பதில்லை. அசைவே இல்லை என்பதையும், எதிலும் மாறுபாடு இல்லை என்பதையும், அதைப்பற்றிய கருத்தே முற்றும்

மாயை என்பதையும் உயர்ந்த ஞானம் உனக்குக் காட்டும். இயற்கையை முழுமையாக ஆராய்ந்து பார். அதாவது, அசைவையே ஆராய்ந்து பார். மனமும் உடலும் நம்முடைய உண்மையான ஆன்மாவல்ல; இரண்டும் இயற்கைக்கு உரியன ; ஆனால், இறுதியில் உள்ளதை உள்ளவாறே அறிய நமக்கு இயலும். அப்போது மனத்திற்கும் உடலிற்கும் அப்பாற் செல்லுதலின், அவர்கள் கருதுவதெல்லாம் ஒழிந்துவிடும். உலகை அறிதலும் காணலும் முற்றிலும் நீங்கும்போது நீ ஆன்மாவை உணர்கிறாய். வியவகார அறிவைத் தள்ளி வைத்தலே நமக்கு வேண்டுவது. எல்லையற்ற மனமோ, வரம்பற்ற அறிவோ இல்லை. ஏனெனில், மனமும் அறிவும் வரையறைக்கு உட்பட்டன. நாம் இச்சமயம் ஒரு திரை வழியாகக் காண்கிறோம். இப்போது நம் அறிவுக்கெல்லாம் அடிப்படையான உண்மைப் பொருளாகிய அந்த அறிவரிய பொருளை அடைகிறோம்.

ஓர் அட்டையிலுள்ள ஊசித் தொளை வழியாக ஒரு படத்தை நாம் காண்போமாயின், முற்றிலும் தவறான ஒரு கருத்தைப் பெறுகிறோம் ; எனினும், நாம் காண்பது உண்மையாகவே படந்தான். நாம் தொளையைப் பெரிதாக்கும்போது நமக்குக் கருத்து மேலும் மேலும் தெளிவடைந்து வருகிறது. நாம ரூபங்களைப்பற்றிய நம் தவறான காட்சிகளுக்கியைய நாம் வேறுபட்ட பல கருத்துகளை மெய்ப்பொருளினின்றும் உண்டாக்குகிறோம். நாம் அட்டையை அப்பால் எறியும்போது நாம் அதே படத்தைப் பார்க்கிறோம் ; ஆனால், நாம் அதை உள்ளவாறே காண்கிறோம். எல்லா நலங்களையும் எல்லாப் பிழைகளையும் உள்ளே திணிக்கிறோம் ; அதனால், படமோ மாறுபடுவதில்லை. அதன்காரணம் ஆன்மாவே அனைத்திற்கும் உண்மையான பொருளாதலேதான் ; நாம் காண்பதெல்லாம் ஆன்மாவே. ஆனால், நாம் அதை நாமரூபங்களாகக் காணுதலின், அவையெல்லாம் நமது திரையாகிய மாயையிலே உள்ளன.

ஒரு தொலைநோக்கியில் பொருளை அடுத்துள்ள கண்ணாடியில் இருக்கும் புள்ளிகளைப் போன்றவை அவை; எனினும், நமக்குப் புள்ளிகளைக் காட்டுவது கதிரவனது ஒளியேயாம். பிரம்மன் என்னும் மெய்ப்பொருளாகிய அடிப்படை இல்லையாயின், மித்தையையும் நம்மாற் காண இயலாது. 'சுவாமி விவேகானந்தர்' எனும் கருத்து பொருளையடுத்துள்ள கண்ணாடியின்மீதுள்ள சிறு புள்ளியேயாகும்; யானோ, ஆன்மா ; மெய்ப்பொருள்; மாறவொண்ணாதது ; அந்த மெய்ம்மையே எனக்குச் சுவாமி விவேகானந்தரைக் காணும்திறனை

அளிக்கின்றது. ஒவ்வொரு மயக்கக் காட்சியிலும் சாரமாவது ஆன்மாவே. ஆனால், ஞாயிறு கண்ணாடியின்மீதுள்ள புள்ளிகளோடு ஒருகாலும் ஒன்றுபடுத்தப்படுவதில்லை; அதுவே அவற்றை நமக்குப் புலப்படுத்துகிறது. நம் செயல்கள், தீயனவாகவோ நல்லனவாகவோ இருப்பதற்கேற்ப, புள்ளிகளை அதிகமாக்கவோ, குறைக்கவோ செய்கின்றன. ஆனால், அவை நம்முள் அமர்ந்திருக்கும் இறைவரை ஒருபோதும் பாதிப்பதில்லை. மனத்தைப் புள்ளிகள் ஒழியுமட்டும் முற்றக் கழுவு; அக்கணமே, "யானும் என் தந்தையும் ஒருவரே," என்பதைக் காணலாம்.

நாம் முதலில் காண்கிறோம்; பின்பு யுத்தியால் ஆராய்கிறோம். இக்காட்சியை நாம் உண்மையாகப் பெறவேண்டும். இதுவே சமயம்; இதுவே அனுபூதி. ஒருவன் ஒரு நாளும் கொள்கையைப் பற்றியோ சமய குரவரைப்பற்றியோ நூலைப்பற்றியோ கேட்டிராவிடினும், இக்காட்சியை அவன் பெறட்டும். அதன்பின்னர் வேண்டுவது ஒன்றும் இராது. மனத்தைத் தூய்மைப்படுத்து; இதுவே சமயம் முழுவதும். நாமே புள்ளிகளை நீக்காவிடில், உண்மைப் பொருளை உள்ளவாறு நம்மாற் காணவொண்ணாது. குழந்தை பாவத்தைக் காண்பதில்லை; குழந்தையிடத்து அதனை அளக்கும் கருவி இல்லை. உன்னுள்ளிருக்கும் குறைகளை அகற்று; வெளியில் எக்குறையும் காண உனக்கு இயலாது. ஒரு குழந்தை ஏதோ களவு நிகழ்வதைக் காண்கிறது. அதற்கு அச்செயல் அவ்வாறு சிறிதும் பொருள்படுவதே இல்லை. புதிர்ப் படத்தில் மறைந்திருக்கும் பொருளை ஒரு முறை காணுவாயாயின், அதன் பின் எப்போதும் அதனைக் காண்பாய். ஆதலின், ஒருமுறை நீ மாசற்றவனாகி முத்தனாகும்போது சுற்றியுள்ள உலகில் முத்தியையும் தூய்மையையும் மட்டுமே நீ காண்பாய். அக்கணம் இதயக் கிரந்திகள் அனைத்தும் வெட்டப்படுகின்றன; வளைந்த இடங்கள் யாவும் நேராக்கப்படுகின்றன.

"இவ்வுலகம் ஒரு கனவென மறைகிறது." அத்துணை அற்பக் கனவை நாம் என்றேனும் காண நேர்ந்ததும் எவ்வாறோ, என்று நாம் விழிக்கும்போது வியப்படைகிறோம்.

"அதை அடைந்தபின் மலையென ஓங்கிய பெருந்துயரமும் மனத்தைச் சலிக்கச் செய்யும் திறமையற்றதாகிறது."

ஞானம் எனும் அரிவாளால் சக்கரங்களை வெட்டியெறிக; பழைய சத்தியின் வேகம் மனமும் உடலுமாகிய சக்கரத்தைச்

செலுத்திக்கொண்டிருக்குமாயினும், ஆன்மா விடுபட்டு நிற்கிறது. சக்கரம் இப்போது நேராகத்தான் செல்லக்கூடும். நன்மையை மட்டும் செய்ய இயல்வதாகும். அவ்வுடல் ஏதேனும் தீயதைச்செய்யுமாயின், அம்மனிதன் சீவன் முத்தனல்லன் என அறிக; அவ்வண்ணம் முத்தனென உரிமை பாராட்டுவானுயின், அவன் பொய்யுரைப்பவனே. சக்கரங்கள் (மனத்தைத் தூய்மைப்படுத்துவதனுல்) நன்ருக நேராக இயங்கும்போது மட்டும் வாளைப் பயன்படுத்திக் கொள்ள இயலும். தூய்மைப்படுத்தும் செயல்கள் யாவும், மயக்கத்தினை அறிந்தோ அறியாமலோ புடைக்கின்றன. இன்னெருவனைப் பாவி என்று இயம்புவது, உன்னுற் செய்யக் கூடியவற்றுள் மிகத் தீயதாகும். அறியாமையாற் செய்யும் நற்செயலும் அதே பயனை நல்கும்; பந்தத்தை உடைத்தெறிய உதவும்.

பொருளையடுத்த கண்ணுடியிலுள்ள புள்ளிகளோடு ஞாயிற்றை ஒன்றுபடுத்துதல் அடிப்படைத் தவருகும். பரிதியாகிய 'நான்' என்பது எதனுலும் என்றைக்கேனும் பாதிக்கப்படாதது என்பதை அறி; புள்ளிகளை ஒழித்தல்மூலம் தூய்மைப்படுத்துதற்கே உன்னை ஈடுபடுத்து. அனைத்தினும் உயர்ந்த வழிபாடாவது, மனிதனை வணங்குதலே. அதாவது, கண்ணபிரானர், புத்தர், கிறித்துப் போன்ற சான்ருேர்களை வழிபடுவதேயாம். உனக்கு வேண்டுவதை நீ படைக்கிருய். ஆசையை ஒழித்துவிடு. தேவதூதரும், இறந்தோரும், அனைவரும், இம்மண்ணுலகை விண்ணுலகெனப் பார்த்துக்கொண்டே இங்கேயே உள்ளனர். அனைவரும் அவரவரது மனநிலைக்குத் தக்கவாறு காண்பது அறியவொண்ணுத அவ்வொன்றையே. அந்த அறியவொண்ணுத ஒன்றினைப்பற்றிய மிகச் சிறந்த காட்சியைப் பெறுவது இப்புவியிலேதான் இயலும். ஒரு நாளும் சுவர்க்கம் செல்ல விரும்பாதே; ஏனெனில், அது மிகக் கெட்ட மதி மயக்கமே. இங்கும் அளவிற்கு மிஞ்சிய செல்வமும், அலைக்கழிக்கும் வறுமையும் ஆகிய இரண்டு பந்தனைகளே, சமயத்தை நாடவொட்டாது நம்மைத் தடுக்கின்றன. முப்பெரும்பேறுகள் நம்மிடத்துள்ளன. முதலாவது, மனித உடல்; (மனிதனது மனமே மிக அணித்தான இறைவரின் பிரதிபிம்பம்; நாம் அவருடைய சொந்தப் பிரதிபிம்பம்) இரண்டாவது, மோட்ச இச்சை; மூன்ருவது, மயக்கமெனுங் கடலைக் கடந்துள்ள ஒரு மேன்மையுற்ற பெரியவரைக் குரவராகத் துணைக் கொள்ளல். இம்மூன்றையும் நீ பெற்றுள்ளபோது இறைவரை வாழ்த்து; நீ முத்தி பெறுவது திண்ணம். அறி

வால் மட்டும் நீ பற்றியுள்ள ஒன்றை ஒரு புது வழக்கால் தோல்வியுறச் செய்யலாம். ஆனுல், உனது அனுபூதியோ, என்றென்றும் உள்ளதே. பேச்சு, சமயப் பேச்சு, அற்ப நன்மையுடையதேயாம். ஒவ்வொன்றின் பின்னும்—மனிதனே, விலங்கோ, உணவோ, தொழிலோ எதன்பின்னும்—இறைவரை எழுந்தருளச் செய். இதனை ஒரு பழக்கமாக்கு.

“இவ்வுலகினின்றும் பெறக்கூடிய மிக உயர்ந்த அளவினில் இந்த ஆரஞ்சுப் பழத்தின் சாற்றைப் பெறுதலில் எனக்கு நம்பிக்கையுண்டு; ஏனெனில், நாம் திண்ணமாக அறிந்ததெல்லாம் இவ்வுலகமே,” என்று ஒரு நாள் இங்கர்சால் என்னிடம் உரைத்தார். யான் அதற்குப் பின்வரும் மறுமொழியளித்தேன்:

“நீர் அறிந்ததினும் மிகச் சிறந்த வழியில் இவ்வையகமாம் கனியின் சாற்றை ஒட்டப் பிழியும் முறையை யான் அறிவேன்; யான் இதினின்றும் உம்மினும் மிகுதியாகவும் பெறுவேன். யான் இறக்கவொண்ணுதவன் என்பதை அறிவேன்; அதனுல், எனக்கு விரைவு வேண்டா. அச்சமுமில்லை என்பதை யான் உணர்வேன்; ஆதலால், சாறு பிழிவதை நுகர்கிறேன். எனக்குக் கடமையும் இல்லை; மனைவி, மக்கள், உடைமை என்னும் பந்தமும் இல்லை; ஆடவர் மகளிர் அனைவரிடத்தும் என்னுல் அன்பு செய்ய இயலும். ஒவ்வொருவரும் எனக்கு இறைவரே. மனிதரை இறைவராக அன்பு செய்யும் உவகையை உன்னிப் பாரும்! இவ்வண்ணம் உமது ஆரஞ்சுப் பழத்தைப் பிழிந்து அதினின்றும் பதினுயிரம் மடங்கு அதிக சாற்றைப் பெற்றுக்கொள்ளும். ஒவ்வொரு துளியையும் விடாது பெறும்.”

சங்கற்பமெனத் தோன்றுவது பின்னுள்ள ஆன்மாவே; அது உண்மையாகவே விடுதலை பெற்றுள்ளது.

திங்கட்கிழமைப் பிற்பகல்

இயேசுநாதர் பூரண நிலை பெற்றவரல்லர்; காரணம், அவர் தம் இலட்சியத்திற்கு இயைந்தவாறு முற்றும் வாழவில்லை; அனைத்திற்கும் மேலாக, ஆணுக்குச் சமமாகப் பெண்ணுக்கும் அவர் பதவி அளிக்கவில்லை. பெண்களே அவர்க்கு அனைத்தையும் இயற்றினுர்கள்; ஆனுலும், யூதரது வழக்கத்திற்கு அவர் கட்டுப்பட்டவராயினமையால், ஒரு நங்கையேனும் போதகரது பதவியைப் பெருது போயினள்.

ஆயினும், புத்தருக்கு அடுத்தவராக அவரே மிகச் சிறந்த ஒழுக்க விழுப்பம் வாய்ந்தவர் ; புத்தரும் முழுதும் பூரணம் பெற வில்லை; ஆயினும், சமயத்துறையில் ஆடவர்க்குச் சமமாக மகளிர்க்கும் உள்ள உரிமையை ஒப்புக்கொண்டார்; அவர்தம் முதற் சீடரும் மிகப் பெரிய சீடர்களுள் ஒருவரும் ஆனவர் அவர்தம் மனைவியாரேயாவர். அவ்வம்மையாரே இந்திய மாதர்களுக்கிடையே பரவிய பௌத்த இயக்கம் முழுமைக்கும் தலைவியாரானார். ஆனால், இம்மாதிரியான சான்றோர்களைக் குறைகூறுதல் நமக்குத் தகாது; நம்மினும் எவ்வளவோ தொலைவு உயர்ந்திருப்பவரென்றே அன்னாரைக் கருதுதல்வேண்டும். எனினும், எத்துணைப் பெரியவராயினும் எவரிடமும் முழு நம்பிக்கை வைத்தல் கூடாது. நாமும் புத்தர்களும் கிறித்துகளும் ஆதல் வேண்டும்.

எம்மனிதனையும் அவனுடைய குறைகளைக்கொண்டு மதிப்பிடலாகாது. ஒரு மனிதனிடத்துள்ள பெரும்பண்புகளே அவனுக்கு உரியவை; ஆனால், அவனுடைய பிழைகளோ, மனித இனத்திற்குரிய பொதுவான குறைகளேயாதலின், அவனது ஒழுக்கத்தை மதிப்பிடுங்கால், அவை ஒருபோதும் கருதத்தக்கனவல்ல.

''வீரத்தன்மையைக் குறிக்கும் வடமொழியான 'வீர' என்பதே 'அறம்' (Virtue) என்று பொருள்படும் ஆங்கில மொழியின் தாதுவாகும்; காரணம் யாதெனின், பண்டை நாளிலே மிகச் சிறந்த போர் வீரனே மிக்க நல்லறம் வாய்ந்தவனெனக் கருதப்பட்டமையே.

ஜூலை 30-ஆம் தேதி—செவ்வாய்க்கிழமை

கிறித்துகளும் புத்தர்களும் நம் சொந்த அகத்தின் ஆற்றல்களைப் புறத்தே தோற்றுவித்தற்கென வாய்ந்த சந்தர்ப்பங்களின் அளவேயாவார்கள். நம் சொந்தப் பிரார்த்தனைகளை உண்மையாகவே நிறைவேற்றுபவர்கள் நாமே.

இயேசுநாதர் என்றேனும் பிறந்திராவிடில், மன்னுயிர் உய்வடையாது போய்விடும் என நினைத்தல், தெய்வத்தன்மையை அவமதித்தலேயாகும். மனித இயல்பிலே அடங்கியுள்ள தெய்வத் தன்மையை, வெளிப்பட்டுத் தீரவேண்டிய தெய்வத்தன்மையை, இங்ஙனம் மறத்தல் நடுக்கந் தருவதாகும். மனித இயல்பின் மாட்சியை ஒருபோதும் மறவாதே. இதுவரை என்றேனும் இருந்தவர்க்

குள்—இனி என்றேனும் வருபவர்க்குள்—எல்லாம் மிக உயர்ந்த தெய்வம் நாமே. கிறித்துகளும் புத்தர்களும் 'நானே'. அவர்கள் கங்குகரையற்ற கடல்மீது எழும் அலைகளேயாவார்கள். உன் சொந்தப் பரமான்மாவிற்கு அன்றி, வேறெதற்கும் நீ தலை வணங் காதே. தேவாதிதேவனும் அப்பரம்பொருளே நீ என்பதை அறி யும்வரை உனக்கு ஒருபோதும் முத்தியில்லை.

நம் பழைய செயல்கள் யாவும் மெய்யாகவே நல்லவை. ஏனெ னில், நாம் அடையும் இறுதி நிலையில் நம்மை உய்ப்பனவே அவை. எவரிடத்து இரப்பது? உண்மையாய் உள்ள பொருள் யானே. 'யானே' ஆவதல்லவை யாவும் கனவே. 'யானே' முழுக்கடலும். நீ உண்டாக்கியுள்ள சிற்றலைக்கு 'யான்' என்று பெயரிடாதே; அலையேயன்றி வேறன்று அது என்பதை அறி. சத்தியகாமன் உட் குரல் தன்னிடம் பின் வருமாறு கூறியதைக் கேட்டான்: "நீயே அகண்டப் பொருள்; அகண்டப் பொருள் உன்னிடத்து உள்ளது. உன்னை அடக்கிக்கொண்டு உனது உண்மையான ஆன்மக் குரலுக்குச் செவி சாய்ப்பாயாக."

ஞானப் போர் புரியும் பெருங்குரவர்கள், உயர்ந்த எண்ணங் களை எண்ணிக்கொண்டும், அவ்வாறே உலகிற்கு உதவி புரிந்து கொண்டும் புனிதமிக்க மேலான வாழ்வைப் பூணும் மாகுரவர் களைப் பார்க்கினும் குறைந்த நிறைவுத் தன்மையடைந்தவர்களே யாவார்கள். இஞ்ஞான மாகுரவர் ஒருவர்க்குப்பின் ஒருவராய்த் தோன்றி மறைய, இறுதியில் தம் வாழ்க்கையின் பயனாகத் திறமை மிக்க போதகாசிரியர் ஒருவரைப் படைக்கின்றனர்.

* * *

அறிவு என்றும் உள்ளதே; மனிதன் அதனைக் கண்டுபிடித்தலை மட்டும் செய்கிறான். வேதங்களே நித்தியமான அறிவாகும். அவை வாயிலாகவே இறைவர் உலகினைப் படைத்தனர். அவை உயர்ந்த (உயர்வற உயர்ந்த) தத்துவத்தைப்பற்றிப் பேசுகின்றன; இச்செய லுக்கு மிக்க பேருரிமை பாராட்டுகின்றன.

* * *

உண்மையைத் துணிந்து கூறு. பிறரைப் புண்படுத்தினாலும் படுத்தாவிடினும் சரியே. பலவீனத்துக்கு இணங்கி உதவிபுரியாதே. அறிவார்ந்த மக்களுக்கு உண்மை பொறுக்கவொண்ணாததாகி அவர்களைத் துரத்திவிடுமாயின், அவர்கள் ஏகட்டும்; விரைந்து ஏகு

வதற்குத் தக்கவாறு அது அமையுமாயின், அது நனி நன்றும். குழந்தைத்தனமான கருத்துகள், இளங்குழவிகளுக்கும் நாகரிக மற்றவர்க்கும் ஏற்றவை; அவர் அனைவரும் குழவிகளுக்குரிய அறைகளிலும், காடுகளிலும் மட்டும் உள்ளனர் என்பது கருத்தன்று; அவர்களுட்சிலர் கிறித்துவின் கோயிலில் ஞானப் பிரசங்க மேடைகளிலும் தவறி வந்துள்ளனர்.

அவர் ஞான வளர்ச்சி எய்திய பின்னரும் கிறித்துவின் கோயிற் சபைக்கு அடங்கி அங்கிருத்தல் தீதே. வெளியே வந்து சுதந்தரம் நிலவும் திறந்த வெளியில் இறந்துவிடக் கடவர்.

எல்லா முன்னேற்றங்களும் வியவகார உலகில் உள்ளன. மனித வடிவமே உயர்வற உயர்ந்தது. மனிதனே எல்லாவற்றினும் உயர்ந்த உயிராவான்; ஏனெனில், இங்கே இப்போதே நாம் வியவகார உலகினை முற்றிலும் ஒழித்துவிடலாகும்; உண்மையாகவே முத்தியடையலாகும்; இதுவே முடிந்த நிலை. இதை நம்மால் அடைய இயலும் என்பது மட்டுமன்று. சிலர் நிறைவை எய்தியுள்ளனர். ஆதலால், இதனினும் எத்துணை நுண்ணிய உடல்களைப் பெறினும் அவை வியவகாரிக உலகில் மட்டும் இருத்தல் கூடும்; நம்மால் மனித உடலால் அடையக்கூடிய எதனினும் உயர்ந்த ஒன்றையும் பெற இயலாது; ஏனெனில், முத்தியெய்துதலே நம்மாற் செய்யக்கூடிய அனைத்தும் ஆகும்.

தேவதூதராவோர், தீய செயல்களை ஒருகாலும் செய்யார்; எனவே, ஒருபோதும் தண்டனையடையார். உதைகளே நம்மை விழித்தெழச் செய்து கனவையழிக்கத் துணை புரிகின்றன.

இவ்வுலகின் நிறைவின்மையை அவை நமக்கு உணர்த்தி, இதினின்றும் தப்பித்துக்கொள்ளவும் முத்தியடையவும் நம்மை விரும்பச் செய்கின்றன.

* * *

மங்கலான ஒளியிற்கண்ட ஒரு பொருளுக்கு ஒரு பெயரிடுகிறேம்; அதே பொருளை முழு வெளிச்சத்திற் கண்டதும் வேறு பெயரால் அதனை வழங்குகிறேம். நம் அற இயல்பு உயரும் அளவிற்கு நமது சங்கற்ப வலிமையும் மிகுகின்றது.

செவ்வாய்க்கிழமைப் பிற்பகல்

நினைவுக்கும் சடப் பொருளுக்கும் உள்ள பொருத்தத்திற்குக் காரணம், அவை இரண்டும்—இன்னதென்றறியப்படாத—ஒரே

பொருளின் இரு பக்கங்கள் ஆதலே. அவ்வொரு பொருள் தன்னை அகத்தது புறத்தது எனும் இரு கூறுகச் செய்துகொள்கிறது.

'சுவர்க்கம்' என்று பொருள்படும் ஆங்கில மொழியாகிய 'பரடைஸ்' என்பது 'பரதேச' எனும் வடமொழித் தொடரினின்றும் பிறந்துள்ளது; அது பாரசீக மொழிக்குள்ளும் புகுந்தது; அதன் பொருளாவது: 'தேசத்திற்கு அப்பாலானது', 'அப்பாலுள்ள தேசம்'—அதாவது 'பரலோகம்' என்பதே. மனிதன் ஒரு நாளும் சரீரமல்லன் என்றும், அவன் ஆன்மாவே என்றும் பண்டை ஆரியர் எப்போதும் நம்பி வந்தனர். அவர்களுடைய சுவர்க்கங்களும் நரகங்களும் எல்லாம் சிறிதுகாலம் இருப்பவைகளேயாம்; ஏனெனில், எந்தக் காரியமும் அதன் காரணத்திற்குப் பின்னும் வாழ முடியாது; அன்றியும், எந்தக் காரணமும் நித்தியமானதன்று. ஆதலால், காரியங்கள் அனைத்தும் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும்.

வேதாந்த தத்துவம் முழுவதும் பின்வரும் கதையில் அடங்கியுள்ளது :

பொன்னிறச் சிறகுகள் அமைந்த இரு பறவைகள் ஒரே மரத்தில் அமர்ந்தன. மேற்கிளையிலிருந்த பறவை அமைதி வடிவாய், கம்பீரமாய், தன் சொந்தப் பெருமையில் ஆழ்ந்ததாய் இருந்தது. கீழ்க்கிளையிலிருந்த பறவை பரபரப்புற்று, மரத்தின் பழங்களில் தீஞ்சுவையானதை ஒரு முறையும் கசப்பானதை மறு முறையும் தின்றுகொண்டே இருந்தது. ஒரு முறை வழக்கத்திற்கு மாறுக மிக்க கசப்புள்ள கனியை அது அருந்திற்று; அப்போது சற்று நின்று மேலுள்ள கம்பீரமான பறவையை அண்ணாந்து நோக்கிற்று ; ஆனால், விரைவில் அந்தப் பறவையைப் பற்றி மறந்தது; முன் போலவே மரத்தின் கனிகளைத் தின்றுகொண்டேயிருந்தது. மறுபடியும் கசப்பான கனி ஒன்றைத் தின்றதும், அம்முறை, மேலுள்ள பறவையிருந்த கிளைக்குச் சில கிளைகள் அருகே பறந்து அமர்ந்தது. இம்மாதிரியே பல முறை நிகழ, இறுதியில் கீழுள்ள பறவை மேலுள்ள பறவையின் இடத்தினைச் சார்ந்து தன்னையே மறக்கலாயிற்று. அது திடீரெனக் கண்ட உண்மை யாதெனில், இரு பறவைகள் என்றும் இருந்ததில்லை என்பதும், அமைதி வடிவாய், கம்பீரமாய், தன் பெருமையில் ஆழ்ந்திருந்த மேலுள்ள பறவையாகவே தான் எக்காலத்தும் இருந்தது என்பதுமே.

ஜூலை 31-ஆந் தேதி—புதன்கிழமை

லூத்தர் என்பவர் துறவை நீக்கிவிட்டு அதற்கு மாருக அற வாழ்வை நமக்கு அளித்தபோது, சமயத்திலே ஆணியை அறைந்து விட்டார். நாத்திகர்க்கும் உலோகாயதர்க்கும் நீதியைப் பெற இய லும். ஆனுல், இறைவரிடம் நம்பிக்கையுள்ளவர்க்கே சமயம் கைகூடும்.

பெரியாரது புனிதத்தன்மைக்குத் தீயோர் தம் தீமையால் ஈடு செய்கின்றனர். ஒரு தீயோனைக் கண்ணுறும்போதெல்லாம் அதை நினைவுறுத்திக்கொள். செல்வமுடையான் சுகவாழ்வு பெறுதற் பொருட்டு ஏழை மனிதனின் உழைப்பு வேண்டப்படுவதுபோல, ஞான உலகிலும் அவ்வாறே வேண்டப்படுகிறது. மீராபாய், புத்தர் முதலானோரைப்போன்ற பெருமக்களைப் படைத்தற்காக, இயற்கை, இந்தியாவிலுள்ள பொது மக்களைக் கோரமான கீழ் நிலையில் வைக்க வேண்டியதாகிறது—முன்னதற்குப் பின்னது விலை ஆகிறது.

* * *

"புனித மக்களின் புனிதத்தன்மை நானே." (கீதை). "யானே வேராகிறேன். ஒவ்வொருவனும் அதைத் தன் முறைப்படி பயன் படுத்திக் கொள்கிருன். ஆனுல், எல்லாம் யானே." "அனைத்தை யும் செய்பவன் யானே. நீ சந்தர்ப்பத்தை மட்டும் அளிப்பவன்."

பேச்சை வளர்க்காதே. உன்னுள் இருக்கும் ஆன்மாவை உணர்; அப்போதே நீ ஞானியாவாய். இதுவே அறிவு (ஞானம்); மற்றவை யாவும் அறியாமையே. அறிய வேண்டிய அனைத்தும் பிரம்மமே. அதுவே யாவும்.

* * *

"இன்பத்தையும் அறிவையும் நாடுவதன் மூலம், சத்துவம் கட்டுறுத்துகிறது. ரஜஸ், ஆசை வாயிலாகப் பந்தப்படுத்துகிறது. தமஸ், தவருன காட்சியையும் சோம்பலையும் கொண்டு தளையை விளைக்கிறது. கீழான இரண்டையும் சத்துவத்தால் வெல்க; பின் னர் அனைத்தையும் இறைவரிடம் ஒப்புவித்துவிட்டு விடுதலை அடைக."

"பத்தியோகம் வாயிலாக ஒருவன் பிரம்மத்தை மிக எளிதாக உணர்ந்து முக்குணங்களுக்கும் அப்பாற் செல்கின்ருன்." (கீதை, 12-ஆம் அத்தியாயம்)

சங்கற்பம், ஆசை, கோபதாபங்கள், உணர்வு இந்திரியங்கள்—இவையனைத்தும் ஒன்றால் இணைந்தே 'சீவன்' எனப்படுவதை உண்டாக்குகின்றன.

முதன்முதலாக வெளிப்படையான சீவன் (உடல்) உள்ளது; இரண்டாவதாக, உடலைத் தானாகக் கருதும் மனமாகிய சீவன் (மாயையாற்கட்டுண்ட பாரமார்த்திகப் பொருள்)உள்ளது. மூன்றாவது, நித்திய சுத்த, நித்திய முத்த ஆன்மா உள்ளது. ஒருவாறு பார்க்கும்போது, அஃது இயற்கையே; முற்றும் பார்க்கும்போது இயற்கை முழுதும் மறைகிறது; அதைப்பற்றிய ஞாபகமும் ஒழிகிறது. விகாரமடைவது (அழிவது), நித்தியமாக விகாரமடைவது (இயற்கை), விகாரமற்றது (ஆன்மா) இம்மூன்றும் உள்ளன.

* * *

முற்றிலும் நம்பிக்கையற்றவனாகு. அதுதான் உயர்வற உயர்ந்த நிலை. நம்பிப் பெறற்குரியது யாது? நம்பிக்கையால் விளையும் பந்தங்களை உடைத்தெறி; உன் ஆன்மாவைச் சார்ந்து நில்; அமைதியாயிரு. நீ இயற்றும் செயலை ஒருபோதும் பொருட்படுத்தாதே; அனைத்தையும் இறைவரிடமே ஒப்புவித்துவிடு; ஆனால், இதில் வஞ்சக ஒழுக்கத்திற்கு இடங்கொடாதே.

"உனது ஆன்மாவைச் சார்ந்து நில்" என்று பொருள்படும் வடமொழிச் சொல்லாகிய 'ஸ்வஸ்த' என்பது, பேச்சு வழக்கில், "உன் உடல் நலமாயுள்ளதா? நீ இன்புற்றிருக்கிறாயா?" என்பதை உசாவப் பயன்படுகிறது. இந்துக்கள், "நான் ஒரு பொருளைக் கண்டேன்," என்பதை வெளியிடும்போது, "நான் ஒரு பதார்த்தத்தை (ஒரு பதத்தின் பொருளை)க் கண்டேன்" என்பர். இப்பிரபஞ்சமே ஒரு 'பத அர்த்தந்'தான்.

* * *

பூரணமான ஒரு மனிதனது உடல் ஒழுங்காய் இயந்திரம் போல இயங்கும்; அது நன்மையை மட்டும் செய்யக்கூடும். ஏனெனில், அது முற்றும் தூயதாக்கப்பட்டுள்ளது. உடலெனும் சக்கரத்தை உருட்டிக்கொண்டே வரும் பழவினையின் தொகுபயன் நன்மையே; எல்லாத் தீய சார்புகளும் எரிந்துவிட்டமையே.

* * *

"இறைவரைப்பற்றிப் பேசாத நாளே உண்மையில் தீய நாளாகும்; புயல் வீசும் நாளன்று." பரம்பொருள்மீது செலுத்தும்

அன்பே உண்மையான பத்தியாகும். வேறெவரிடத்தும் செலுத்தும் அன்பு, அவர் எத்துணைப் பெரியாராயினும், பத்தியாகாது. 'பரம் பொருள்' என்னும்போது ஈண்டுக் 'கடவுள்' என்பதுபொருள். மேற்றிசையார் ஆகிய நீங்கள், 'சகுணக் கடவுள்' என்னும் தொடராற் குறிக்கும் கருத்திற்கும் அப்பாற்செல்கின்றது, கடவுளைப்பற்றிய கருத்து. "இப்பிரபஞ்சம் எவரிடமிருந்து தோன்றுகின்றதோ, எவரிடம் தங்குகிறதோ, எவரிடம் மீளுகின்றதோ, அவரே கடவுள். அவர் நித்தியமானவர்; தூய்மையானவர்; அருள் நிரம்பியவர்; எல்லாம் வல்லவர்; எல்லாம் அறிந்தவர்; குருமார் அனைவர்க்கும் குருவாயிருப்பவர்; தமது சொந்த இயல்பாலே உரைக்கவொண்ணு அன்பு வடிவமான புருடராவர்."

மனிதன் தனது சொந்த அறிவால் கடவுளை உண்டுபண்ணுபவன் அல்லன். ஆனால், அவன் தனது சொந்தத் திறமைக்கேற்ற அளவிலேதான் கடவுளைக் காணலாகும்; தான் அறிந்தவற்றில் மிகச் சிறந்ததையே அவர்க்கு ஏறிடுவான்; ஒவ்வோர் இயல்பும் கடவுளின் முழுமையாகும்; ஒரு குணத்தால் முழுமையையும் இவ்வாறு குறித்தலே சகுணப் பிரம்மத்தைப்பற்றிய தத்துவ முறையான விளக்கக் குறிப்பாகும். கடவுள் வடிவற்றவராயினும், அவருக்கு எல்லா வடிவங்களும் உள. அவர் குணங்களற்றவராயினும் எல்லாக் குணங்களும் உடையவர். மனிதரான நிலையில் கடவுள், மனிதன், இயற்கை என்னும் முப்பொருளின் உண்மையைக்காணுதல் நமக்கு அவசியமாகிறது; வேறெதுவும் செய்ய நம்மால் இயலாது. ஆனால், பத்தனுக்கோ (மெய்யன்பனுக்கோ) இத்தத்துவ வேறுபாடுகள் யாவும் வீண்பேச்சேயாம். அவன் வழக்கைச்சற்றும் பொருட்படுத்தான்; யுத்தியால் ஆராயமாட்டான்; தானே உணர்கிறான்; அவன் காட்சிபெறுகிறான். கடவுள் மீதெழும் தூய அன்பினில் அவன் தன்னையே இழக்க விரும்புகிறான்; முத்தியைக் காட்டினும் அதுவே பெரிதும் விழையத்தக்கது என்று சித்தாந்தஞ் செய்யும் பத்தர்களும் இருந்துள்ளார்கள். "எனக்குச் சருக்கரையாக விருப்பமில்லை; சருக்கரையைச் சுவைப்பதிலேதான் விருப்பம். எனது காதலராய கடவுள்மீது அன்பைச் சொரிந்து அவரை அனுபவிக்கவே யான் விரும்புகிறேன்," என்று அவர்கள் உரைப்பார்கள்.

பத்தி யோகத்திலே முதன்முதலாக வேண்டப்படுவது, கடவுளை உண்மையாகவும் தீவிரமாகவும் கலப்பதே. நமக்குக் கடவுளை

ஒழிந்த ஒவ்வொன்றிலும் விருப்பம் எழுகிறது. காரணம் யாதெ னில், நம் சாதாரண ஆசைகளைப் புற உலகம் நிறைவேற்றுவதே. நம் தேவைகள் தூல உலகின் எல்லைக்குள் அடைபட்டிருக்கும் வரை, கடவுள் தேவை என்பதை எள்ளளவும் நாம் உணர்வதில்லை; நமது வாழ்க்கையில் வலிய மொத்துண்டு, இங்குள்ள ஒவ்வொன் றுலும் ஏமாற்றமடையும்போது மட்டும், அதனினும் மேலான ஒன்றை நாடும் அவசியத்தை நாம் உணர்கிறோம். அப்போது நாம் கடவுளை நாடுகிறோம்.

பத்தி (மெய்யன்பு) அழிக்கும் இயல்பினதன்று. நம்மிடத்துள்ள திறன்கள் அனைத்தும் முத்தியை அடைதற்குச் சாதனமாகலாம் என்று அது போதிக்கிறது. நாம் அவையனைத்தையும் கடவுளை நோக்கித் திருப்புதல் வேண்டும். நிலையற்ற ஐம்புல விஷயங்களின் மீது செலுத்தி வழக்கமாக வீணாக்கும் அந்த அன்பை, அவர்பால் செலுத்துதல் வேண்டும்.

பத்திக்கும், சமயத்தைப்பற்றி மேற்றிசையாராகிய நீங்கள் கொள்ளும் கருத்திற்கும் வேறுபாடு உண்டு; அது யாதெனின், அச்சம் என்பதற்குப் பத்தி இம்மியும் இடந் தாராது. இதில் திருத் திப்படுத்தவோ, சமாதானப்படுத்தவோ எவரும் இருப்பதில்லை. இறைவரைத் தம் சொந்தக் குழவியாக வழிபடும் பத்தரும் உள்ள னர். ஆதலால், அச்சமோ பயபத்தி எனும் உணர்ச்சியோ இருப்ப தில்லை. உண்மையான அன்பில் அச்சம் இருத்தலும் ஒண்ணாது; மிகச் சிறிதளவேனும் அச்சம் இருக்கும்வரை பத்திதொடங்குதலும் இல்லை எனக்கூடும். பத்தியில் இறைவரிடம் இரத்தற்கோ வாணி பஞ் செய்தற்கோ இடமும் இல்லை. இறைவரிடம் எதையேனும் வேண்டுதல் எனும் கருத்தும் பத்தனுக்குத் தூய்மையைக் கெடுப்ப தாகும். அவன் தன் உடல் நலத்தையோ, பொருளையோ, தான் சுவர்க்கத்திற்குச் செல்லுதலையோ வேண்டான்.

பத்தனாதற்கும், இறைவர்மீது அன்பு செலுத்துதற்கும் விரும் பும் ஒருவன், இவ்வெல்லா ஆசைகளையும் ஒரு சுமையாகக் கட்டி இவற்றை வாயிலுக்கு வெளியிலே எறிந்துவிட்டுப் பின்பு உட்புக வேண்டும். ஒளியுலகங்களிற்புகும் விழைவுடையவன், "வாணிபம் செய்யும்" (வியாபாரம் செய்யும்) சமயத்தையெல்லாம் ஒருமூட்டை யாகக் கட்டி, வாயிலைக் கடந்து செல்லும் முன்பே அதைத் தூர எறிந்துவிட வேண்டும். நீ வேண்டுவதைப் பெறுவதில்லை என்பது கருத்தன்று; நீ எல்லாம் பெறுவாய்; ஆனால், அது தாழ்ந்தது;

இழிவானது; ஓர் இரவலனது சமயம் ஆகும். "கங்கைக் கரையின்மீது வாழ்ந்துகொண்டே நீர் பெறுதற்காக ஒரு சிறு கிணறு தோண்டுபவன் உண்மையாகவே பேதையாவான். மணிகள் அடங்கிய ஒரு சுரங்கத்திற்கு வந்த பின் கண்ணாடி மணிகளைத் தேடத் தொடங்குபவன் மெய்யாகவே பேதையாவான்." உடல் நலத்திற்காகவும் செல்வத்திற்காகவும் இம்மை வாழ்வின் செழுமைக்காகவும் செய்யும் இப்பிரார்த்தனைகள் பத்தியாகா. இவை மிக மிகத் தாழ்ந்த கரும வடிவம் பெற்றவை. பத்தி இவற்றினும் மேம்பட்டதொன்று. மன்னர் மன்னராம் இறைவரது முன்னிலையில் வர நாம் முயன்று வருகிறோம். இரவலனது உடையோடு நாம் அங்கே செல்ல இயலாது. ஒரு சக்கரவர்த்தியின் முன்னிலையிற் செல்ல நாம் விரும்புவோமாயின், இரவலனது (பிச்சைக்காரனது) உடையோடு நம்மை அரண்மனைக்குட் புகவிடுவார்களா? விட மாட்டார்கள் என்பது திண்ணம். வேலைக்காரன் நம்மை வாயிலுக்கு வெளியே துரத்திவிடுவான். வேந்தர் வேந்தர்கட்கும் அரசராய் இருக்கும் இந்த இறைவர் சந்நிதிக்கு ஒருகாலும் பிச்சைக்காரனது கந்தையோடு நாம் செல்ல ஒண்ணாது. கடை வியாபாரிகளை ஒருபோதும் இங்கே புகவிட மாட்டார்; வாங்கலும் விற்றலும் இங்கே சற்றும் இயலா, வாங்குவோரையும் விற்போரையும் கோயிலை விட்டு இயேசுநாதர் வெளியேற்றினார் என்று 'பைபிளி'ல் நீங்கள் படித்துள்ளீர்கள்.

ஆதலால், ஒரு பத்தனாதற்குவேண்டிய முதன் முயற்சியாவது, சுவர்க்க வாழ்வை விரும்புதல் முதலான ஆசைகள் அனைத்தையும் துறந்துவிடுதலே என்பது கூறாமலே விளங்கும். அத்தகைய சுவர்க்கம் இவ்விடத்தை—இப்பூமியைப்—போன்றதேயாம்; ஆனால், சற்று மேலானது. கிறித்தவர் சுவர்க்கத்தைப் பற்றிக்கொள்ளும் கருத்து, தீவிரமான சிற்றின்ப வாழ்விற்குரிய ஓர் இடமே அது என்பது. அஃது இறைவர் ஆதல் எவ்வாறு இயலும்? சுவர்க்கத்திற்கு ஏகும் இவ்விச்சை முழுதும் போகத்தின்மீதுள்ள இச்சையேயாம். இதனை விட்டே தீர வேண்டும். பத்தனது அன்பு, முற்றிலும் தூயதாய், தன்னலமற்றதாய், இம்மையிலோ மறுமையிலோ தனக்கென ஒன்றும் நாடாததாய் அமையவேண்டும்.

"சுகதுக்க ஆசையையும் இலாப நஷ்ட இச்சையையும் ஒழித்துவிட்டு அல்லும் பகலும் இறைவரை வழிபடு; ஒரு கணத்தையும் வீணாகக் கழித்தலைத் தவிர்."

"ஏனைய நினைவுகள் அனைத்தையும் விட்டபின் முழு மனமும் பகலிலும் இரவிலும் இறைவரையே வழிபடுகின்றது. இவ்வண்ணம் அவரை வழிபட்ட பின் அவர் தம்மையே காட்டியருள்கிருர்; தம்மை வழிபடுவோரைத் தம்மை உணருமாறு செய்கிருர்."

ஆகஸ்டு 1-ஆம் தேதி—வியாழக்கிழமை

நமது ஞானப்பிறவி எவர் மூலம் வாய்க்கிறதோ, அவரே உண்மையான குருவாவர்; ஞானப் புனல் நமக்குப் பெருகுதற்குரிய கால்வாய் ஆவர். அவர் ஞான உலகம் முழுமையோடும் நம்மை இணைக்கும் ஒரு வளையம் ஆவர். ஒரு மனிதனிடத்து அளவுக்கு மிஞ்சிய நம்பிக்கைவைப்பதால் பலவீனத்தையும் உருவ வழிபாட்டையும் உண்டாக்கும் இயல்பு தோன்றுகின்றது. ஆனல், குருவின்மீது கொள்ளும் தீவிர அன்பால் வளர்ச்சியின் விரைவு இயல்வதாகிறது; காரணம் யாதெனில், அவர் அகத்தேயுள்ள குருவோடு நம்மை இணைத்துவிடுகிருர். குருவினிடம் மெய்யாக உண்மை இருப்பின், அவரை வணங்கு; குரு பத்தி உன்னை விரைவில் உயர்வற உயர்ந்த நிலைக்கு உய்த்துவிடும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர், தூய்மையில் குழந்தையனையராயிருந்தார். அவர் தம் வாழ்க்கையில் ஒரு போதும் காசைத் தொட்டதில்லை. காமம் அவரிடம் முழுவதும் அழிவுற்றது. பெருஞ்சமயகுரவருடைய முழுச்சத்தியும் ஞானத்துறையிலே செலுத்தப்படுகின்றதாதலின், பௌதிக விஞ்ஞானம் கற்க நீ அவரிடம் செல்லாதே. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம் மனிதத் தன்மை முழுதும் இறந்துவிட்டது; தெய்வத்தன்மையே எஞ்சி நின்றது. அவர்க்குப் பாவத்தைக் காணல் உண்மையாகவே இயலாது; தீமையைக் காண ஒண்ணுத அளவிற்குத் தூய்மை மிகுந்த கண்களையுடையவராயினர் என்பது உள்ளதை உள்ளவாறு உரைத்தலேயாகும். இத்தகைய பரமஹம்ஸர் ஒரு சிலரின் தூய்மையே இவ்வுலக முழுவதையும் ஒன்ருகப் பிணைப்பது. அவரனைவரும் இறந்து இவ்வுலகினை விட்டு ஏகுவாராயின், இவ்வுலகம் தூளாகும். அவர்கள் தங்கள் இருப்பொன்ருலேயே நன்மை புரிகின்ருர்கள். அதனையும் அவர்கள் அறியாதவர்களே. அவர்கள் இருக்கின்ருர்கள் என்பதே தான் உண்மை.

* * * *

நூல்கள் உள்ளொளியின் இருப்பைக் குறிப்பிடுகின்றன; அதனை வெளிப்படுத்தும் முறையையும் உணர்த்துகின்றன; ஆனால், நாமே அவ்வறிவைத் தேடிப் பெறும்போதே அவற்றின் பொருள் நமக்கு விளங்கும். உள்ளொளி உன்னிடம் உதயமானதும் நூல்களைக் கைவிட்டு, உள்ளே மட்டும் நோக்கு. உன்னுள்ளே அனைத்தும் உள்ளன; நூல்கள் யாவற்றிலும் உள்ளத்தினும் ஆயிர மடங்கு அதிகமும் உள்ளது. உன்னிடத்து வைக்கும் நம்பிக்கையை ஒரு நாளும் இழந்துவிடாதே. இப்பிரபஞ்சத்தில் எதனையும் உன்னால் இயற்றலாகும். உன்னையே நீ பலவீனனாக்கிக் கொள்ளாதே. எல்லாச் சத்தியும் உள்ளதே.

சமயமும் வாழ்வும் நூல்களையோ யாரேனும் ஒரு சமய குரவரின் உண்மையையோ சார்ந்திருக்குமாயின், எல்லாச் சமயமும் நூல்களும் அழிக! சமயம் நமக்குள்ளே இருப்பதே. நூல்களோ, குருமாரோ, அதைக் காணத் துணைபுரிவதற்கு மிகுதியாக ஒன்றும் செய்வதில்லை. அத்துணைகளின்றியும் எல்லா உண்மையையும் உள்ளே பெறலாகும். எனினும், நூல்களுக்கும் குருமார்க்கும் அடிமைப்படாது நன்றி பாராட்டு. உன் குருவை இறைவராகவே வணங்கு; ஆனால், குருட்டுத்தனமாக அவர்க்குக் கீழ்ப்படியாதே. முழு வலிமையோடும் அவரிடத்து அன்பு செலுத்து. ஆனால், நீயே சிந்தனை செய். குருட்டுநம்பிக்கை எதுவும் உன்னைப் பாதுகாவாது. நீயே உனது சொந்த முத்திக்காகப் பாடுபடு. இறைவரைப் பற்றி அவரே நித்தியத் துணையாவார் என்னும் இந்த ஒரே கருத்தைக் கொள்.

முத்தியும் உயர்வற உயர்ந்த அன்பும் ஒன்றாகக் கூடி நிற்றல் வேண்டும். அப்போது அவ்விரண்டில் எதுவும் பந்தனையாக மாட்டாது. இறைவர்க்கு நாம் கொடுக்கக்கூடியது யாதொன்றும் இல்லை. அவரே நமக்கு அனைத்தையும் அளிக்கிறார். அவரே குருமார்க்கும் குருவாவர்; அவரே நம் ஆன்மாக்கட்கும் ஆன்மாவாவர்; நாமேயாவர். நாம் அவரிடம் அன்பு செலுத்துவதில் வியப்பென்ன? அவர் நம் ஆன்மாவுக்கும் ஆன்மாவாய்த் திகழ்கின்றாரல்லரோ? வேறு எவரை, வேறு எதனை நாம் நேசிக்க இயலும்? 'வெப்பமும் புகையும் இன்றி எரியும் நிலையான சுடராயிருத்தல்' நமது விருப்பம். இறைவரொருவரையே காணும்போது எவர்க்கு உன்னால் நன்மை செய்ய இயலும்? இறைவர்க்கு நன்மை செய்தல் உனக்கு இயலாது. எல்லா ஐயமும் ஒழிகின்றது. எல்லாம் 'வேறு

காத ஒன்றே'. நீ நன்மை செய்வாயாயின், உனக்கே நன்மை செய்துகொள்கின்றனை. ஏற்பவனே மேலோன் என்பதை உணர். நீ பிறனுக்குப் பணி புரிவதன் காரணம், அவனிலும் நீ தாழ்ந்தோன் ஆதலே. அவன் தாழ்ந்தோனாக நீ அவனிலும் உயர்ந்தோன் என்பதன்று. கொடு. கொடுப்பதாக இம்மியும் உணராதே. தனக்குரிய இயல்பாகிய நறுமணம் நல்கும் ரோஜா மலரைப் போன்று நல்கு.

இத்தகைய தன்னலமற்ற பணிக்கு வியத்தகும் எடுத்துக் காட்டாய் விளங்கியவர் இந்து சமயத்தினைச் செவ்வைப்படுத்தியவராய ராஜா ராம்மோஹன் ராய் என்பவர். அவர் தம் வாழ்வு முழுதையும் இந்தியாவிற்கு உதவிபுரிதற்கெனவே சமர்ப்பித்தனர். கைம்பெண்டிரைக் கணவருடலுடன் எரித்தலை நிறுத்தியவர் அவரே. இச்சீர்திருத்தம் முற்றும் ஆங்கிலேயர்க்கே உரியதென நம்புவது வழக்கமாயிற்று. ஆனால், அவ்வழக்கத்தினை எதிர்க்கும் கிளர்ச்சியைத் தொடங்கியவர் ராஜா ராம்மோஹன் ராய் என்பவரே. அதனை அடக்குவதற்கு அரசியலாரின் ஆதரவை நாடுவதில் வெற்றி பெற்றவரும் அவரே. அவ்வியக்கத்தை அவர் தொடங்கும்போது ஆங்கிலேயர் செய்தது யாதொன்றும் இல்லை. பிரம்ம சமாஜம் எனும் சிறந்த சமயச் சங்கத்தை நிறுவியவரும் அவரே. பல்கலைக் கழகமொன்றை நிறுவியதற்காக ஓர் இலட்சம் பவுன் நிதி வழங்கியவரும் அவரே. அதன் பின்னர் அவர் அதை விட்டு விலகி, தம்மைச் சார்ந்திராமலே முன்னேற்றம் அடையுமாறு சங்கத்தினர்க்குக் கூறினர். அவர் தமக்கெனப் புகழையோ பயன்களையோ சற்றும் நாடினரல்லர்.

வியாழக்கிழமைப் பிற்பகல்

வெளித்தோற்றங்கள் முடிவற்ற வரிசைகளாய் அமைந்துள்ளன. அவை சுழலும் இராட்டினத்திலுள்ள ஆசனங்கள் போன்றவை. அவற்றின்மீது ஆன்மாக்கள் அமர்ந்து ஊர்கின்றன (சவாரி செய்கின்றன) என்னலாம். இவ்வரிசைகள் நித்தியமாயுள்ளன. தனிச் சீவர் விடுதலையடைகின்றனர். ஆனல், நிகழ்ச்சிகள் நித்தியமாகத் திரும்பத் திரும்ப நடைபெற்று வருகின்றன. இக்காரணம் பற்றியே ஒருவனுடைய இறந்தகால எதிர்கால வரலாறுகளைப் படிக்கலாம். எவ்வாறெனில், அனைத்தும் மெய்யாகவே

இங்குள்ளன. ஒரு சீவன் ஏதோ ஒரு சங்கிலிக் கோவையில் உள்ள போது, அக்கோவைக்குரிய அனுபவங்கள் வழியாகச் செல்ல வேண்டுவதாகிறது. ஒரு வரிசையினின்றும் சீவர்கள் மற்றொரு வரிசைக்குச் செல்லுகின்றார்கள். ஏதோ ஒரு வரிசையினின்றும் அவர்கள் தங்களைப் பிரம்மமென உணர்ந்து, பின் என்றைக்கும் உய்வடைகின்றார்கள். ஒரு கோவையிலுள்ள ஒரு முக்கிய நிகழ்ச்சியைக் கைப்பற்றி அதை விடாது பற்றிக்கொண்டே இருப்பதனால், முழுச் சங்கிலியையும் இழுத்து உள்ளதை வாசித்தல் இயலும். இச்சக்தி எளிதாகப் பெறக்கூடியதே; ஆனால் இதற்கு உண்மையான மதிப்பு இல்லை, இதனைப்பழகுதற்கு நமது ஞான சத்தியினின்றும் அவ்வளவு பகுதியைச் செலவிட வேண்டுவதாகும். இப்பொருள்களைப் பின்பற்றிச் செல்லாதே; ஆனால், இறைவரை வழிபடு.

ஆகஸ்டு 2-ஆந் தேதி—வெள்ளிக்கிழமை

நிஷ்டை (ஒரே இலட்சியத்தில் உறைந்து நிற்றல்) அனுபூதியின் தொடக்கமாகும். எல்லா மலர்களினின்றும் தேனைக்கொள். அமர்ந்து, அனைவரோடும் நட்பாயிரு. அனைவரிடத்திலும் ஒடுக்க வணக்கத்தோடு ஒழுகு. அனைவர்க்கும், 'சரி, சோதரரே, சரி,' என்று கூறு. ஆனால், உன் சொந்த நெறியை உறுதியாகப் பின்பற்று. அதனினும் உயர்ந்தது யாதெனின், பிறனது நிலையினில் அமர்தலேயாம். யானே அனைத்துமாயின், என் சோதரருக்காக உண்மையாகவே சுறுசுறுப்பாக அனுதாபங் காட்டுதலும், அவரது கண்கொண்டு நோக்குதலும் ஏன் எனக்கு இயலா? எனக்குப் பல வீனம் உள்ள வரை யான் ஒரு நெறியையே பற்ற வேண்டும் (நிஷ்டையுடையனாதல் வேண்டும்). ஆனால், யான் வலிமையுற்றவனும்போது, பிறன் ஒவ்வொருவனோடும் ஒத்த உணர்ச்சிகொள்ளலும் அவனுடைய கருத்துகளுக்குப் பூரண அனுதாபங் காட்டலும் எனக்கு இயலுமன்றோ?

'ஏனைய கருத்துகளையெல்லாம் அழித்தேனும், ஒரு கருத்தை வளர்த்தல்' என்பது பண்டைய கருத்து. 'அனைத்தும் ஒத்திசைக்குமாறு இணங்கச் செய்தல்' என்பது இக்கால முறை. மூன்றாவது முறை யாதெனில், 'மனத்தை வளர்த்து அதனை அடக்குதலும், அதனை நீ நினைத்த இடத்தே நிலைபெறுத்தலும்.' இதன் பயன் விரைவில் வந்தடையும். இதுவே உண்மை மிக்க முறையில் உன்னை

வளரவிடும். மனம் குவிவுறும் நிலை பெறப் பயின்று, அதனை எத் துறையிலும் பயன்படுத்து. இவ்வாறு நீ எதனையும் இழவாதிருப் பாய். முழுவதையும் பெறுபவன் பகுதிகளையும் பெற்றவனுதல் வேண்டும். துவைதம் அத்துவிதத்தில் அடங்கிவிடுகிறது.

“முதலில் யான் அவனைக் காண, அவனும் என்னைக் கண் டான். கண்ணொளி என்னிடமிருந்து அவன் மீதும், அவனிட மிருந்து என் மீதும் பாய்ந்தது.”

“அது நிகழ்ந்துகொண்டேயிருக்க, இறுதியில் இரண்டு ஆன் மாக்களும் மிக நெருங்கி இணைந்து மெய்யாகவே ஒன்ருயின.”

* * * *

சமாதியில் இரு பார்வைகள் உள்ளன—யான் என்மீதே மனத்தை ஊன்றச் செய்கிறேன்; பின்னர் ஒரு பொருளின் மீது ஊன்றச் செய்கிறேன். திருக்கு (காண்பான்), திருசியம் (காணப் படும் பொருள்) இரண்டும் ஒன்ருகின்றன.

விவரம் ஒவ்வொன்றிலும் முழு அனுதாபங் காட்டவும் பின்னர் உயர்வற உயர்ந்த அத்துவித நிலைக்கு உடனே மீண்டும் குதிக்கவும் நீ திறமையுடையவனுதல் வேண்டும். உன்னைப் பூரணமாக்கிக் கொண்ட பின்னர், நீ உன் விருப்பப்படி உன்னையே வரை யறைக்கு உட்படுத்திக்கொள். முழுச் சத்தியையும் ஒவ்வொரு செயலிலும் செலுத்து. குறிப்பிட்ட ஒரு சமயம் துவைதியாய் இருக் கவும் அத்துவிதத்தை மறக்கவும் திறமை பெறு; ஆயினும், நினைத்தபோது அதனையே மீண்டும் எய்தும் திறனையும் பெறு.

* * * *

காரண காரியங்களும் எல்லாம் மாயையே. குழந்தைக்குரிய கட்டுக்கதைகள் நமக்கு இப்போது எவ்வாறு தோன்றுகின் றனவோ, அவ்வாறே நாம் காண்பனவெல்லாம் ஒன்ருேடொன்று சம்பந்தம் அற்றவை என்பதை நாம் வளர்ச்சியுற்ற பின்னர் அறிவோம். காரண காரிய நியதி என்ற ஒன்றும் உண்மை யில் இல்லை. இதை நாம் அறியப் பெறுவோம். பின்னர் உனக்கு இயலுமாயின், உன் அறிவைத் தணிந்த நிலைக்குக் கொணர்ந்து, எந்த உவமைக் கதையாயினும், சம்பந்தத்தைப் பற்றி விசாரியாது உன் மனம் வழியாக அதைப் புகவிடு. சித்திரங்களிலும் அழகு மிக்க கவிதையிலும் ஆர்வத்தை வளர்த்து வந்து, பின்னர் எல்லாப்

புராணக் கதைகளிலும் கவிதை இன்பத்தை நுகர்; வரலாறு தருக்கவாதம் என்னும் கருத்துகளோடு புராணத்தினை அணுகாதே. உன் மனம் வாயிலாக அது ஒரு புனல் போலப் போகட்டும்; உன் கண் முன் ஒரு மெழுகு வர்த்தியைப் போல அது சுழற்றப்படட்டும்; வர்த்தியைப் பிடிப்பவர் யார் என்னும் கேள்வி வேண்டா; உனக்கு வட்டம் வந்து சேரும்; மெய்யாகிய எச்சம் உன் மனத்தில் தங்கும்.

எல்லாப்புராணங்களையும் எழுதியவர்கள் தாங்கள் கண்டதையும் கேட்டதையும் குறிகள் வடிவிலே எழுதினர்கள்; ஓடும் படங்களாகத் தோன்றுமாறு அவர்கள் அவற்றைச் சித்திரித்தார்கள். அவற்றில் அடங்கியுள்ள பொருள்களைப் பிரித்தெடுக்க முயன்று படங்களை அழிக்காதே. அவற்றை உள்ளபடியே கருதி அவை உன் மனத்தே உரிய தொழிலை இயற்றுமாறு விடு. விளைவினைக் கொண்டு மட்டும் அவற்றை மதிப்பிடு. அவற்றினின்றும் நலனைப் பெறு.

* * * *

உன்பிரார்த்தனைகளை நிறைவேற்றுவதெல்லாம் உனதுசொந்த சங்கற்ப சக்தியே; பற்பல மதக் கருத்துகளின் வேடம் பூண்ட வண்ணம் ஒவ்வொரு மனத்திலும் அது தோற்றம் அளிக்கிறது என்பதே. நாம் அதைப் புத்தர் என்றோ, ஏசு என்றோ, கண்ணபிரானர் என்றோ, ஜெஹோவா என்றோ, அல்லா என்றோ வழங்கலாம். ஆனல், அது ஆன்மாவே; 'நான்' என்பதே.

கருத்துகள் வளர்ச்சியுறுகின்றன; ஆனல், அவற்றை எடுத்துக் காட்டும் உவமைக் கதைகளில் வரலாற்றை உணர்த்துதலாகிய பயன் யாதும் இல்லை. மோஸஸின் காட்சிகள் நம் காட்சிகளினும் மிகுதியாகப் பிழை பொதிந்தனவாய் இருக்க நியாயம் உண்டு; காரணம் யாதெனில், நம்மிடம் அறிவு மிகுந்திருத்தலின், பொய்க் காட்சிகளால் குறைந்த அளவிற்கு ஏமாற்றம் அடையும் நிலையில் நாம் உள்ளோம்.

நமது சொந்த (அறிவெனும்) புத்தகம் திறக்கப்படும் வரை, புத்தகங்கள் பயனற்றனவாம்; அதன்பின்னர், ஏனைய புத்தகங்கள் யாவும் நம் அறிவை வலியுறுத்தும் அளவிற்கு நன்மை பயப்பனவாம். வலிமையுற்ற ஒன்றே வலிமையை உணரும்; சிங்கத்தை அறிவது யானையேயன்றி, எலியன்று. நாம் ஏசுவுக்கு ஒப்பானவர் ஆயின் அல்லால், நம்மால் அவரை அறிதல் எங்ஙனம் இயலும்? இரண்டு ரொட்டிகளைக் கொண்டு ஐயாயிரம் மக்களை உண்

பிக்கவோ, ஐந்து ரொட்டிகளைக் கொண்டு இருவரை உண்பிக்கவோ எல்லாம் கனவிலேதான் நிகழும். இவ்விரண்டிலும் எதுவும் உண்மையன்று; ஒன்று மற்றொன்றை பாதிப்பதுமன்று. சிறப்பே சிறப்பின் மதிப்பை உணரும். ஈசனே ஈசனை உணர்வான். கனவு, கனவு காண்போனேயாகும். அதற்கு வேறு ஆதாரம் ஏது? ஒன்று அது; கனவு காண்பான் வேறொன்று என்பதன்று. இக்கீதம் முழுவதும் பரவும் ஆதார சுருதியாவது, "யானே அவன்," என்பதே. ஏனைய சுருதிகள் யாவும் அதன் மாறுபாடுகளே; உண்மைப் பொருளை அவை பாதிப்பவையல்ல. நாம் வாழும் புத்தகமாவோம். புத்தகங்கள் நாம் பேசிய மொழிகளேயல்லவா? ஒவ்வொன்றும் உயிருள்ள இறைவரே; வாழும் கிறித்துவே. அவ்வண்ணமே அதனை நாடு. மனிதனைப் படி; அவனே வாழும் கவிதையாவன். எல்லா 'பைபில்களுக்கும்' என்றேனும் தோன்றியுள்ள எல்லாக் கிறித்துகளுக்கும், புத்தர்களுக்கும் விளக்கம் அருளும் ஒளி நாமே. அது இன்றேல் அவை நமக்குப் பிணமாம்; உயிருள்ளனவாகா.

உனது சொந்த ஆன்மாவின் மீதே ஊன்றி நில்.

பிணம் எதற்கும் சீற்றமுறுவதில்லை: நாமும் நம் உடல்களைப் பிணங்களாக்குவோம்; அவற்றோடு நம்மை ஒன்றுபடுத்திக் கொள்ளுவதை நிறுத்திவிடுவோம்.

ஆகஸ்டு 3-ஆந் தேதி—சனிக்கிழமை

இப்பிறவியிலேயே முத்தி எய்த நிற்கும் புருடர்கள் ஆயிரம் ஆண்டு வாழ்வை ஒரு பிறவியிலேயே வாழ்ந்தாக வேண்டும். அவர்கள் தங்கள் காலத்தைத் தாண்டி முன்னேற வேண்டும். ஆனால், பொது மக்களோ, நகரவே வல்லவர்கள். இவ்வாறே கிறித்துகளையும் புத்தர்களையும் நாம் பெறுகிறோம்.

* * * *

முன்னொருகால் வாழ்ந்த ஓர் இந்து அரசியார் தம் மக்கள் அனைவரும் அதே பிறவியிலேயே முத்தியடைய வேண்டும் என அத்துணை ஆர்வமுற்றார்; அதனால் தாமே அவர்களை எல்லாவகையாலும் பராமரித்தார்: அவர்களைத் தாலாட்டும்போது எப்போதும் 'தத்வமஸி', 'தத்வமஸி' என்ற ஒரே பாடலையே பாடி வந்தார். அம்மக்களுள் மூவர் துறவியராயினர். ஆனால், நாலாம் மைந்தனைத்

தாயாரிடமிருந்து பிரித்து அரசனுக்குமாறு வேறிடத்தில் வளர்த்து வந்தனர். அவன் இல்லத்தை விட்டு வெளியேறும்போது அன்னையார் அவனிடம் ஒரு துண்டுத்தாளைக் கொடுத்து, அவன் காளைப் பருவம் அடைந்தபின் அதனைப் படிக்கக் கோரினர். அத்தாளில் " இறைவனே மெய்ப்பொருள் ; ஏனைய யாவும் பொய். ஆன்மா ஒருபோதும் கொல்வதில்லை ; கொல்லப்படுவதும் இல்லை. தனியே வாழ் ; இயலாதாயின், தூயரோடு இணங்கியிரு," என்பதே எழுதப் பட்டிருந்தது. அரசிளங்குமரன் அதனைக் கண்ணுற்றதும் உலகைத் துறந்து துறவியானன்.

விட்டுவிடு ; உலகத்தைத் துறந்துவிடு. ஒரு சமையலறைக்குள் தவறிப் புகுந்து ஒரு துண்டு இறைச்சியைத் தின்னும் நாய்களைப் போன்று நாம் இப்போது உள்ளோம். எக்கணமும் யாரேனும் ஒருவர் வந்து நம்மை விரட்டிவிடுவாரோ என்ற அச்சத்தால் சுற்றிப் பார்த்துக்கொண்டேயிருக்கிறோம். இதற்கு மாறாக, மன்னராய் இருந்து, இவ்வையகம் நமக்கு உரியதே என்பதை அறிவோமாக. நீங்கள் உலகத்தைத் துறக்கும் வரை, அது உங்களைக் கட்டுப்படுத்தாது ஒழியும் வரை, ஒரு நாளும் இந்நிலை வந்தடைவதில்லை. தூல உடலைத் துறவாவிடில், மனத்தால் துறந்துவிடுக. உங்கள் நெஞ்சாரத் துறந்துவிடுக. வைராக்கியம் பெறுக. இதுவே உண்மையான தியாகம். இதுவின்றி ஞானம் எய்துதல் இயலாததே. ஆசையறுமின். ஏனெனின், ஆசைப்படுவதை நீங்கள் அடைவீர்கள். அதனுடன் பயங்கரமான பந்தமும் வந்தணையும். மூன்று வரங்கேட்க விரும்பிய மனிதனைப் போன்று (நம்மீது மூக்குகளைப் பெறுவதன்றி) வேறில்லை.*

---

* ஓர் ஏழை மனிதனுக்கு ஒருகாலத்தில் ஒருதேவதையைத் திருத்தி செய்ய இயன்றது. இம்முறை சொக்கட்டான் ஆட்டத்தில் காயை எறியும் போது மூன்று வரங்களைக் கேட்குமாறு அத்தேவதை கூறிற்று. மகிழ்ச்சி பெற்ற அம்மனிதன் இல்லஞ்சென்று, இந்த நல்ல பேறு வாய்ந்த செய்தியைத் தன் மனைவிக்கு உரைத்தான். அவளும் உவகை மேலிட்டு, உடனே செல்வம் வேண்டும் எனக் காயை உருட்டச்சொன்னாள். அதற்கு மாறாக அவன், "நம் இருவருக்கும் மிக அழகற்ற சிறு மூக்கே உள்ளது. அதைக் கண்டு மக்கள் நம்மை எள்ளி நகையாடுகின்றார்கள். ஆகவே, முதன் முதலாக அழகான கூரிய மூக்குகள் வேண்டுமெனக் காயை உருட்டுவோம். செல்வத் தால் நம் உடல்களின் அழகின்மை நீங்காதன்றோ!" என்றனன். ஆனால், மனைவியோ, முதலில் செல்வத்தையே வேண்டினாள். ஆதலின், காயை எறியாதபடி தடுக்கும்பொருட்டு அவனது கையைப் பிடித் துக்கொண்டாள். அவன் தனது கையை விரைவாகத் திமிறிக்கொண்டு,

நாம் குறைவற்றிருக்கும் வரை நமக்கு முத்தி கிட்டாது. "ஆன்மா தன்னைத்தான் உய்விப்பது; பிறிதன்று." ஏனைய உடல்களிலும் நீ இருப்பதை உணரக் கற்றுக்கொள்; நாம் அனைவரும் ஒருவரே என்பதை அப்போது அறிவாய். மற்றைய அறிவீனத்தையெல்லாம் காற்றில் பறக்கவிடு. நன்றோ தீதோ ஆன உன் செயலை ஒழி. மீண்டும் அவற்றை ஒருகாலும் நினையாதே. செய்தது செய்தாயிற்று. மூடக் கருத்துகளைத் தூர அகற்று. மரணமே எதிர் நிற்பினும் பலவீனமற்றிரு.

கழிந்ததற்கு இரங்காதே; நிகழ்ந்த செயல்களைப் பற்றிச் சிந்தியாதே; உன் செயல்களையும் நினைவுறாதே; விடுதலை அடை. பலவீனரும், அஞ்சுபவரும், அறியாதவரும் ஒரு போதும் ஆன்மாவை அடையார். கழிந்த செயலை நினைக்கவொண்ணாது; அதன் பயன் வந்தே தீரும். அதன் எதிரே நில்; ஆனால், அதை ஒருபோதும் மறுமுறை செய்யாத வண்ணம் விழிப்பாயிரு. எல்லாச் செயல்களின் சுமையையும் இறைவரிடமே ஒப்பித்துவிடு; நன்று தீது இரண்டையும்—அனைத்தையும்—சமர்ப்பித்துவிடு; நன்றை வைத்துக் கொண்டு தீதை மட்டும் சமர்ப்பியாதே. தமக்குத் தாமே உதவி செய்துகொள்ளாதவர்க்குப் பகவான் உதவுவார். "ஆசை நறவைப் பருகி உலகம் பித்துக்கொள்ளுகிறது." பகலும் இரவும் ஒருங்கே

"நம் இருவரிடத்தும் அழகிய மூக்குகள் அமையட்டும். அம்மூக்குகளைத் தவிர வேறொன்றும் வேண்டா," என்று மொழிந்துகொண்டே காயை உருட்டினன். அந்தக் கணமே இருவரின் உடல்கள் முழுவதும் அழகான பல மூக்குகள் தோன்றின, ஆனால், அவை அவர்கள் இருவர்க்கும் பெருந் தொந்தரவை அளித்தமையால், அவை நீங்குமாறு இரண்டாம் முறை காயை உருட்ட இருவரும் சம்மதித்தனர். அவ்வாறு செய்ததும் தம் சிறிய சொந்த மூக்கையும் இழந்தனர்; அதனால், மூக்கே அற்றவராயினர்; இரு வரங்களையும் இழந்தனர்; மனம் மிகக் குழம்பிச் செய்வதறியாது திகைத்தனர். கேட்பதற்கு ஒரு வரமே எஞ்சியது. தங்கள் மூக்குகளை இழந்தமையால் அவர்கள் முன்னிலும் அழகற்றவர்களானார்கள். அந்தச் சங்கடமான நிலையில் வெளியே செல்லுதலைக் கனவிலும் அவர்கள் கருத மாட்டாதவர்களானார்கள்; இரண்டு அழகிய மூக்குகளைப் பெற விரும்பினார்கள். ஆயினும் எல்லா மக்களும் தங்களிடமுள்ள மாறுதலை வினவியறிந்து, மூன்று வரங்களைத் துணைக்கொண்டும் தங்கள் நிலையைச் சீர்திருத்திக்கொள்ள முடியாத இரு முழு மூடர்கள் எனத் தங்களைக் கருதுவார்களோ என்று அஞ்சினார்கள். ஆதலால், இருவரும் தம் அழகற்ற சிறு மூக்கையே பழையபடி பெறுவதற்கு இசைந்தனர்; அங்ஙனமே காயை நீ எறிந்தனர். இக்கதை, "ஆசைப்படாதே; ஏனெனில், ஆசைப்பட்டதை நீ பெறுவாய். அதோடு பயங்கரமான பந்தமும் வந்தடையும்," எனும் முந்திய வாக்கியத்தை விளக்குகிறது.

வருதல் ஒரு போதும் இல்லை ; அது போன்றே, ஆசையும் இறைவரும் ஒரு காலும் சேர்ந்து வருதல் இல்லை. ஆசையை மாய்த்துவிடு.

'உணவு, உணவு', என்று சொல்வதற்கும் அதனை உண்பதற்கும், 'நீர், நீர்' என்பதற்கும் அதனைக் குடிப்பதற்கும் பெரு வேறுபாடு உண்டு. அவ்வாறே, 'ஈசன், ஈசன்' என்னும் மொழியை மீண்டும் மீண்டும் மொழிவதனால் அனுபூதியை அடையலாம் என்ற நம்பிக்கை தகாதது. நாம் முயற்சி செய்யவும் பழக வேண்டும்.

கடலில் மீண்டும் விழுவதால் மட்டும் அலை எல்லையற்ற தன்மையை மருவலாகும் ; அலையென்ற தன்மையில் ஒரு நாளும் அதை அடையவொண்ணாது. அலை கடலோடு மருவிய பின்னர் அது மீண்டும் தன் வடிவங்கொள்ளல் கூடும். இச்சைப்படி எத்துணைப் பெரிய அலையும் ஆகலாம். உன்னை நீரோடையோடு ஒன்றுபடுத்திக் கொள்ளுதலை ஒழி ; நீ விடுபட்டவன் என்பதை அறி. உண்மையான தத்துவ ஆராய்ச்சியாவது சில இந்திரியக் காட்சிகளால் நிகழும் அறிவை ஒழுங்குபடுத்துதலே. சமயம் தொடங்கும் இடத்து அறிவு முடிவடைகிறது. ஞானக் காட்சி தருக்க அறிவினும் மிக உயர்ந்தது. ஆனால், அதனோடு மாறுபடக்கூடாது. கடுமையான முயற்சியை இயற்ற உதவும் பண்படாத கருவியே தருக்க அறிவு ; முழு உண்மையையும் காட்டும் சுடரொளியே ஞானக்காட்சி. ஒரு காரியத்தை இயற்றும் மனத் திண்மை ஞானக் காட்சியாதல் வேண்டும் என்னும் அவசியமில்லை.

மாயைக்குள் முன்னேறுவதெல்லாம் ஒரு வட்ட நெறியில் செல்லுதலேயாம் ; அந்நெறி உன்னைப் புறப்பட்ட இடத்திற்கே கொண்டுவந்து சேர்த்துவிடும் ; ஆனால், அறிவிலானாகத் தொடங்கி, எல்லா அறிவும் பெற்று முடிவிடத்திற்கு வா. கடவுள் வழிபாடு, புனிதப் பெரியாரை வணங்கல், ஏகாக்கிர சித்தம் (ஒரு முகமாகக் குவிந்த மனம்), தியானம், தன்னலமற்ற கருமம்—இவையே மாயையின் வலையினை அறுத்து வெளியேறும் முறைகள் ; ஆனால், முதலில் நம்மிடம் விடுதலையடைவதிற் பேரவா எழல் வேண்டும். நமக்கு இருளில் கதிரைத் தரும் மின்னலொளி நம்முள்ளே திகழ்வது ; அதுவே நமது இயல்பான அறிவு. (இதில், 'பிறப்புரிமை' இல்லை ; ஏனெனில், நாம் என்றும் பிறந்தோமல்லோம்.) நாம் செய்ய வேண்டுவதெல்லாம் அதனை மறைக்கின்ற முகில்களை ஓட்டுதலே.

இந்த ஞாலத்திலோ, துறக்கத்திலோ சிற்றின்பம் நுகரும் அவா

அனைத்தையும் துறந்துவிடு. இந்திரியங்களாகிய உறுப்புகளையும் மனத்தையும் அடக்கு. நீ துயருறுகிறாய் என்பதை எப்பொழுதும் அறியாதே. ஒவ்வொரு துயரத்தையும் பொறுத்திரு. வீடடைதலன்றி வேறெதனையும் நினையாதே. குருவிடத்தும், அவருடைய போதனைகளிலும், யாது நிகழினும் நீ விடுதலை பெற இயலும் என்ற உறுதியிலும் நம்பிக்கை கொள். 'ஸோஹம்', 'ஸோஹம்'—'நானே அவன்', 'நானே அவன்'—என்று மொழி. உண்ணும் போதும், உலவும் போதும், துன்புறும் போதும் உனக்குள் இதைக் கூறிக் கொள். நாம் காண்பது ஒரு போதும் இருந்ததில்லையென்றும், 'நான்' என்பதே உள்ளது என்றும் இடைவிடாது மனத்திற்கு உரைத்து வா. இவ்வெண்ணம் உள்ளே மின்னென ஒளிரட்டும். அப்போது கனவு மறையும். 'இப்பிரபஞ்சம் சூனியமே ; இறைவன் ஒருவனேயுள்ளான்,' என்பதை அல்லும் பகலும் நினை. முக்தியடைய வேண்டும் என பேரவாக் கொள்.

நண்பர் உறவினர் அனைவரும் 'உலர்ந்த பழங்கிணறுகளே' யாவர். நாம் அவற்றுள் வீழ்ந்தபின் கடமை பந்தம் எனக் கனுக் காண்கின்றோம். அதற்கு முடிவே இல்லை. எவர்க்கேனும் உதவி செய்து மித்தையைப் படையாதே. மேன் மேலும் பரவும் ஆலமரம் போன்றது அது. நீ துவைதியாயின், கடவுளுக்கு உதவ முயலும் பேதையாவாய். நீ அத்துவைதியாயின், நீயே பிரம்மம் என்பதை அறிவாய். அங்ஙனமாயின், கடமை ஏது ? கணவனுக்கோ குழந்தைக்கோ, நண்பனுக்கோ ? கடமை உனக்கு இல்லை.* காரியங்களை நிகழுமாறே ஏற்றுக்கொள் ; வாளா இரு. உன்னுடல் மிதக்கும்போது செல். கடல் பொங்கும்போது உயர். கடல் வற்றும் போது தணி. உடல் இறக்கட்டும் ; உடல் என்னும் இக்கருத்துத் தேய்ந்து மாய்ந்த பொய்க்கதையேயாகும். "அமைதியாயிருந்து, 'நானே பிரம்மம்', என்பதை அறி."

உள்ளதெல்லாம் நிகழ்காலமே. நினைவிலும் கழிந்த காலம் எதிர்காலம் இல்லை; ஏனெனில், அதை நினைக்கும் பொருட்டு அதை

---

* உடலுச்கும் ஆணவத்திற்கும் அப்பாற்பட்ட உயர்வற உயர்ந்த ஞான நிலையிலிருந்து சுவாமிஜி இங்குப் பேசி வருகிறார் என்பது நினைவுறத் தக்கது. இவ்வுயர் நிலைக்கு உயர இயலாதவர்க்குக் கடமைகளை இயற்றுதல் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு சாதனமே. உடலும் ஆணவமும் என்னும் உபாதிகட்கு உட்படாதவன் ஒருவனே கடமையைத் தாண்டிச் செல்ல வல்லவனுவன்.

நிகழ்காலமாக்க வேண்டும். அத்தனையையும் விட்டுவிடு; அது நினைத்தவிடத்தே மிதக்கட்டும். இவ்வுலகம் முழுவதும் ஒரு மயக்கமே; மீண்டும் இது உன்னைப் பேதைமையுறுத்தும்படி இடங் கொடாதே. அது எது அன்றோ அதுவாக நீ அதனை உணர்ந் துள்ளனை; அது எதுவாகுமோ அதுவாக இப்பொழுது உணர். எங் கேனும் உடல் இழக்கப்படுமாயின், அங்கே அதனைச் செல்லவிடு; உடல் எங்குள்ளது என்றதைப் பொருட்படுத்தாதே. கடமை என் னும் இக்கொடுங்கோன்மைக் கருத்து அஞ்சுதற்குரிய நஞ்சாகும். இதுவே உலகை அழித்து வருகிறது.

ஒரு யாழ்பெற்ற பின்னர் சிறிது காலத்திற்குள் ஓய்வு பெறு வேன் என்று காத்திராதே. ஒரு யாழைக் கைக்கொண்டு, இங்கேயே தொடங்காததேன்? சுவர்க்கத்திற்காகக் காத்திருப்பதேன்? இங் கேயே அதைச்செய். சுவர்க்கத்திலே மணம் புரிவதோ புரிவித்தலோ இல்லை; இங்கே அதனைத் தொடங்கி இங்கேயே யாருமற்ற நிலையை எய்தாததேன்? துறவியின் மஞ்சள் ஆடையே விடுபட்ட தற்கு அறிகுறி. இவ்வுலகிற்குரிய பிச்சைக்கார உடையைத் துறந்து விடு; சுதந்தரக் கொடியாகிய காவியாடையை அணி.

ஆகஸ்டு 4-ஆந் தேதி—ஞாயிற்றுக்கிழமை

"அறிவிலார் எவரை வணங்குகிறாரோ, அவரை யான் உனக் குப் போதிக்கிறேன்."

ஏகமாயுள்ள அந்த ஒரே கடவுள் அறியப்பட்டவற்றுளெல்லாம் மிக நன்றாக அறியப்பட்டவரே. நாம் எங்கும் காணும் ஒரே பொருள் அவரே. அனைவரும் தமது சொந்த இருப்பை அறிவர். 'யான் உளேன்,' என்ற கருத்தை அனைவரும் உடையர்—விலங்கு களும் உடையன. நாம் அறிவதெல்லாம் ஆன்மாவின் சிருஷ்டி யையே. இதைக் குழந்தைகட்குப் போதி. அவர்கட்கு இதனை அறிதல் இயலும். ஒவ்வொரு சமயமும் ஆன்மாவையே வழிபட்டு வந்துள்ளது; அறியாமலேனும் அதைச் செய்துள்ளது. காரணம், வேறெதுவுமின்மையே.

நாம் இங்கே காண்கிறபடி உள்ள வாழ்வை மட்டிலாது பற்றும் இதுவே எல்லாத் தீங்கிற்கும் வேராகும். எந்த ஏமாற்றையும் களவையும் அனைத்தையும் உண்டாக்குவது அதுவே. அது பணத்தை ஒரு தெய்வமாக்குகிறது; எல்லாத் தீமைகளும் அச்சங்களும் பின் தொடர்கின்றன; தூலப் பொருளான எதனையும் மதியாதே; அத

ஐனப் பற்றுதே. நீ எதனையும் பற்றுதிருப்பாயாயின், வாழ்வையும் பற்றிக் கொள்ளாதிருப்பின், அச்சமே இல்லை. "இவ்வுலகில் பல வற்றைக் காண்பவன் மீண்டும் மீண்டும் மரணத்தையே அடைகிருன்." எல்லாம் ஒன்றே என்பதைக் காணும்போது நமக்கு உடலின் மரணமோ, மனத்தின் மரணமோ நேர வழியில்லை. எல்லா உடல்களும் என்னுடையன அல்லவா ? ஆதலின், உடலும் நித்தியமே; மரமும் விலங்கும் ஞாயிறும் திங்களும் பிரபஞ்சமுமே எனது உடலேயாதலின், அந்நிலையில் அதற்குச் சாவு எவ்வாறு நிகழக் கூடும் ? ஒவ்வொரு மனமும் ஒவ்வொரு நினைவும் என்னுடையதே; அந்நிலையில் மரணம் எங்ஙனம் வரமுடியும்? ஆன்மா என்றும் பிறப்பதுமில்லை ; என்றும் மரிப்பதுமில்லை. நாம் இதை உணரும் போது எல்லா ஐயங்களும் மறைகின்றன. "யான் உளேன்; அறிகிறேன் ; நேசிக்கிறேன்." இவை ஒருகாலும் ஐயத்திற்குரியன வாகா. பசியென்பது எனக்கில்லை. உண்ணப்படுவனவெல்லாம் என்னுலே உண்ணப்படுவன. ஓர் உரோமம் உதிர்ந்தால், நாம் மாய்வதாகக் கருதுவதில்லை; ஆதலால், ஓர் உடல் இறக்குமாயின், ஓர் உரோமம் உதிர்ந்ததேயாகும்.

* * *

அதீத உணர்வு நிலையே கடவுள். அது வாக்கிற்கும் நினைவிற்கும் உணர்வுக்கும் அப்பாற்பட்டது. மூன்று நிலைகள் உள்ளன— விலங்கியல் (தாமஸம்), மனித இயல் (இராஜஸம்), தெய்வ இயல் (சாத்துவிகம்). உயர்வற உயர்ந்த நிலையை அடைவோர் மட்டுமே உள்ளனர். அங்கே கடமை இறக்கின்றது ; அவர்களே நேசிக்கின்ருர்கள் ; காந்தத்தைப்போன்று பிறரைத் தம்பால் இழுக்கின்ருர்கள். இதுவே முத்தி. அறச் செயல்களை அதன்பின் நீ செய்வதில்லை; ஆனுல், நீ செய்வனவெல்லாம் அறமாக அமையும். பிரமத்தை அறிந்தவன் 'பிரம்மவித்து'; எல்லாத் தெய்வங்களிலும் உயர்ந்தவன். ஏசுநாதர் மோகத்தை வென்றபின், "சாத்தானே, எனக்குப் பின்னே வா," என்று இயம்பியதும், தேவர்கள் அவரை வணங்கும் பொருட்டு வந்து சேர்ந்தார்கள். ஒரு 'பிரம்மவித்து'க்கு எவரும் உதவி செய்தல் இயலாது. பிரபஞ்சமே அவருக்கு முன் வீழ்ந்து பணிகிறது. அவரது ஆசை ஒவ்வொன்றும் நிறைவெய்து கின்றது ; அவரது சத்தி பிறரைப் புனிதமாக்குகிறது. ஆதலால், உயர்வற உயர்ந்த பொருளை அடையவேண்டின், பிரம்ம வித்தை வணங்கு. இறைவரருளாற் பெறக்கூடிய முப்பெரும் பேறுகளாகிய

மனிதப் பிறவியும், முத்திபெறுதலில் பேரவாவும், முத்தி நெறியைக் காட்டுதற்கு ஒரு பெரியாரின் துணையும் நமக்கு வாய்த்துள்ளபோது முத்தியை நாம் அடைவது திண்ணம். முத்தி நம்மதே.

* * *

உடலின் இறுதி மரணமே நிர்வாணம். அது எதிர் மறை முகத்தாற் கூறும் முறை; "நான் இதுவன்று; இதுவுமன்று; இப்பொருளுமன்று," என்று உரைக்கும். வேதாந்தமோ, அதற்குமேல் ஓர் அடி எடுத்து வைத்து, உடன்பாட்டு முகத்தால், "அது முத்தியே; விடுதலையே," என்று வற்புறுத்தும். "யான் இயல்பான உண்மை; இயல்பான அறிவு; இயல்பான இன்பம். (பாரமார்த்திக சச்சிதானந்தம்); யான் பிரம்மமே." இவ்வுரையே வேதாந்தம்; முழுவளேவின் தலேக்கல்.

வடநாட்டுப் பௌத்தத்தை நாடுவோரிற் பெரும்பாலோர் முத்தியில் நம்பிக்கையுடையவரே. அன்னார் உண்மையாகவே வேதாந்திகள். இலங்கையரே நிர்வாணத்தைச் சர்வ நாசமாக ஒப்புக்கொள்கின்றனர்.

எந்த நம்பிக்கையோ, அவநம்பிக்கையோ, 'நான்' என்பதைக் கொல்ல வல்லதாகாது. நம்பிக்கையினுல் உட்புகுந்து அவநம்பிக்கையினுல் வெளியேறுவது எதுவோ, அது மயக்க மாத்திரமே. எதுவும் ஆன்மாவைத் தொடாது. "எனது சொந்த ஆன்மாவுக்கே என் வணக்கம்! ஆன்ம ஒளி பெற்ற யான் என்னேயே வணங்குகிறேன்! யான் பிரம்மனே." இவ்வுடல் ஓர் இருட்டறை; நாம் இதனுட் புகும்போது இது ஞான ஒளியைப் பெறுகிறது; இது உயிருடையதாகிறது. எதுவும் என்றும் ஞான ஒளியை உண்டாக்க மாட்டாது; அதனே அழிக்கவும் மாட்டாது. இது மறைபடலாம்; ஆனுல், இதனே அழித்தல் ஒரு காலும் ஒண்ணுது.

* * *

இக்காலம் கடவுளேத் தேவியாக, வரம்பில்லாத சத்தி வடிவமாக, வழிபடல் வேண்டும். இது தூய்மையிற் கொண்டு போய்ச் சேர்க்கும்; இங்கு,அமெரிக்காவிலே மிகுதியான சத்தி வந்தடையும். இங்கே கோயில்கள் நம்மை நசுக்குவதில்லே; வறுமை மிக்க நாடுகளிற்போல மக்களில் எவரும் துயருறுவதில்லே. பெண்டிர் பல கற்ப காலம் வருந்தியுள்ளனர்; அதனுல் அளவிலாப் பொறுமையும் வரம்பற்ற விடா முயற்சியும் வாய்க்கப்பெற்றுள்ளனர். பெண்

ணுருத்தி ஒரு கருத்தை விடாது பற்றுவாள். எந்த நாட்டிலும் மூடக் கொள்கை நிறைந்த மதங்களுக்கும் புரோகிதர்க்கும் ஆதார மாகுமாறு அவளை ஆக்குவது இதுவே; இதுவே அவளுக்கு விடுதலை யையும் அளிக்கும். நாம் வேதாந்திகளாகி இப்பெருங்கருத்தை வாழ்வாக உருவெடுக்கச் செய்யவேண்டும். பொதுமக்கள் இதைத் திண்ணமாகப் பெறவேண்டும். சுதந்திர அமெரிக்காவிலேதான் இது நடக்க இயலும். இந்தியாவிலே இக்கருத்துகளைப் புத்தர், சங்கரர் முதலானோர் வெளிப்படுத்தினர். ஆனல், பொதுமக்கள் இவற்றைத் தரிசிக்கச் செய்யவில்லை. இப்புது யுகத்திலே பொது மக்கள் வேதாந்த வாழ்வைப் பற்றும் காட்சியைக் காணல் வேண்டும்; இது பெண்டிராலேயே நிகழ்தல் வேண்டும்.

"உன் இதயத்தில் முழுக் கவனத்தோடு அன்பு மிக்க எழிலார்ந்த தேவியை எழுந்தருளச் செய்.

"நா ஒழிந்த மற்றெதனையும் வெளியே எறிந்துவிடு. 'அம்மா, அம்மா' என்று உரைக்கவே அதனை வைத்திரு!

"புன்மதி அமைச்சர்களை உட்புகவிடாதே. நீயும் நானும் நெஞ்சே, தனியே தேவியைக் காண்போம்.

"வாழும் அனைத்திற்கும் அப்பால் ஆயினை; என் வாழ்விற்கு மதியே, என் உயிர்க்கு உயிரே!"

ஞாயிற்றுக்கிழமைப் பிற்பகல்

உடல் மனத்தின் கையிலுள்ள கருவியாவது போன்று, மனம் ஆன்மாவின் கையிலுள்ள ஒரு கருவியாகிறது. சடப்பொருள் வெளியேயுள்ள அசைவு; மனம் உள்ளேயுள்ள அசைவு; எல்லா மாற்றமும் தொடங்குவதும் முடிவதும் காலத்திலே. ஆன்மா மாற்ற வொண்ணாததாயின், அது பூரணமாதல் வேண்டும்; பூரணமாயின், எல்லையற்றதாதல் வேண்டும்; எல்லையற்றதாயின், ஒன்றேயாதல் வேண்டும்; ஏனெனில், வரம்பற்றனவாக இரு பொருள் இருத்தல் ஒண்ணாது. ஆகவே ஆன்மா ஒன்றேதான் இருத்தல் கூடும். அது பலவாகத் தோன்றினும், உண்மையில் அது ஒன்றேதான். ஒருவன் கதிரவனை நோக்கிச் செல்வானாயின், ஒவ்வோரடி எடுத்து வைத்த பின்னும், வேறு வேறான கதிரவனைக் காண்பான்; ஆயினும், முடிவிலே இருப்பது அதே கதிரவனே.

'அஸ்தி' (இருப்பு) என்பது எல்லா ஒருமைக்கும் ஆதாரம்; ஆதாரம் காணப்பட்டதும் பூரணத்தன்மை பின் வரும். எல்லா

வண்ணங்களையும் ஒரு வண்ணமாகமாற்றி விடுவோமாயின், சித்திரம் வரைதல் நின்றுவிடும். பூரணமான ஒருமை அமைதியே; எல்லா வெளித் தோற்றங்களையும் ஒரு பரம்பொருளுக்கே உரியனவாகக் குறிப்பிடுகிறோம். டேயோ மதத்தினர், கன்பூஷிய மதத்தினர், பௌத்தர், இந்துக்கள், யூதர், மகம்மதியர், கிறித்தவர், சொராஸ்திரியர் — அனைவரும் ஒரே பொன்மொழி போன்ற ஒழுங்கை ஏறக்குறைய ஒரே வண்ணமான சொற்களால் ஓதி வந்துள்ளார்கள். ஆனால், இந்துக்கள் மட்டும் அதைக் காரண காரிய முறையுடன் உரைத்தார்கள். ஏனெனில், அவர்களே காரணங் கண்டவர்கள்; மனிதன் பிறரை நேசித்தல் வேண்டும் என்பதற்குக் காரணம், அப்பிறர் தானேயாதலாம். உள்ளது ஒன்றேதான்.

உலகம் அறிந்துள்ள பெருஞ்சமய குரவர்க்குள், லயாட் ஸே, புத்தர், ஏசுநாதர் எனும் மூவரும் அப்பொன்மொழியான ஒழுங்கைக் கடந்துசென்று, "உங்கள் பகைவர்க்கும் நன்மை புரியுங்கள்; உங்களை வெறுப்போரை நேசியுங்கள்," என்று சாற்றினார்கள்.

கொள்கைகள் உள்ளன ; நாம் அவற்றைப் படைப்பதில்லை; நாம் அவற்றைக் கண்டுபிடிக்க மட்டும் செய்கிறோம். சமயமென்பது அனுபூதியிலே மட்டும் அடங்கியுள்ளது ; கொள்கைகள் நெறிகளே; சமயமல்ல. வேறுபடும் சமயமெல்லாம் பற்பல நாட்டினரின் தேவைகட்குத் தக்கவாறு அமைக்கப்பட்ட ஒரே சமயத்தின் முறைகளே. கொள்கைகள் நடத்திச் செல்வது சழக்குக்கே ; ஆகவே, சாந்தியைக் கொணர்ந்தளிக்க வேண்டியஆண்டவரின் திருநாமம், உலகிற்சிந்தப்பட்ட குருதியின் ஒரு பாதிக்குக் காரணமாயுள்ளது. நேரே மூலப் பொருளுக்கே செல். இறைவரிடமே, அவர் யாவர் என்பதைக் கேள் ; அவர் விடையளிக்காவிட்டால், அவர் இல்லை என்று கூறு; ஆனால், ஒவ்வொரு சமயமும் அவர் விடையளிக்கிறார் என்றே போதிக்கிறது.

நீயாகச் செய்வதற்கென எதையேனும் வைத்திரு; அன்றேல், பிறர் கூறியதைப் பற்றி உனக்குக் கருத்து ஏதேனும் இருக்கட்டும். பழைய மூடக் கொள்கைகளை உறுதியாகப் பற்றிக்கொண்டிராதே; புது உண்மைகளைப் பெற எப்போதும் ஆயத்தமாயிரு. பழைய மூடக் கொள்கைகளைப் பற்றுவது நம் முன்னோர் வெட்டியுள்ள ஒரே கிணற்றினின்றும் உவர் நீரைக் குடிக்க விழைவதாகும். பிறர் தோண்டிய ஒரு கேணியினின்றும் தீஞ்சுவை நீரைப் பருக விரும்

பாதவரும் பேதையரே. நாமே ஆண்டவரை அனுபூதியாற் கண்டா லன்றி, அவரைப்பற்றி ஒன்றும் அறிய இயலாது. ஒவ்வொருவனும் தனது இயல்பாலே பூரணமாயுள்ளான். தீர்க்கதரிசிகள் இப்பூரணத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்கள் ; ஆனால், இது நம்மிடத்து உள்ளடங்கியிருக்கின்றது. நாமும் கடவுளைப் பார்த்தாலன்றி, மோஸஸ் அவரைக் கண்டார் என்பதை நாம் எவ்வாறு அறிய முடி யும்? ஆண்டவர் எவர்க்கேனும் முன் வந்தார் எனின், அவர் எனக் கும் முன் வருவார் ; அவர் என்னிடம் பேசட்டும். நான் நம்பிக் கையை ஆதாரமாகக் கொள்ள முடியாது. அது நாத்திகமும் வணக்கமற்ற பேச்சும் ஆகும். இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் அரேபியாப் பாலைவனத்திலே கடவுள் ஒரு மனிதனிடம் பேசினர் எனில், அவர் இன்றும் என்னிடம் பேச இயலும். அன்றேல், அவர் இறந்துவிடவில்லை என்பதை யான் எவ்விதம் அறியக்கூடும்? உனக்கு இயன்ற எவ்வழியாலேனும் கடவுளை அடை ; அது மட்டும் செய். ஆனால், அவரை அடைய வரும்போது எவரையும் கீழே தள்ளாதே.

அறிவுடையோர் அறிவிலார்மீது இரக்கங் கொள்ள வேண்டும். அறிவுடையவன் ஓர் எறும்பிற்காகவும் தன் உடலை விடப் பிரியப் படுவான். ஏனெனில், உடல் ஒரு பொருளன்று என்பதை அவன் அறிவான்.

ஆகஸ்டு 5-ஆந் தேதி—திங்கட்கிழமை

இதுதான் வினு : அனைத்தினும் உயர்ந்ததை நாடுதற்கு அதற் குக் கீழுள்ள படிகள் எல்லாவற்றின் வழியாகவும் செல்லுதல் அவசியமா, அன்றேல் ஒரே குதியாகக் குதித்துவிடுதல் இயலுமா? இக்கால அமெரிக்கச் சிறுவன் தன்னுடைய முன்னோர் நூற்றுக் கணக்கான ஆண்டுகளிற் செய்ததை இருபத்தைந்து ஆண்டுகளிற் செய்து முடிக்கிறான். ஓர் இந்துவின் முன்னோர் எண்ணுயிரம் ஆண்டுகளில் எய்திய உயர்பதவியை அவன் இருபது ஆண்டுகளில் அடைந்து விடுகிறான். உடலைப் பற்றிய பகுதியிலோ, கரு நுண் ணுயிர்க் கூறு நிலையிலிருந்து கருப்பையிலுள்ள மனித நிலைக்குச் செல்லுகிறது. இவை இக்கால விஞ்ஞானத்தின் போதனைகள். கழிந்த காலத்தைச் சார்ந்த மனித இனமுழுவதன் வாழ்வையும் நாம் வாழ்ந்தாக வேண்டும் என்பதோடு நில்லாது, வேதாந்தம்

இன்னும் முன் சென்று மனித இனத்தின் வருங்கால வாழ்வையும் நாம் வாழ்ந்தாக வேண்டும் எனவும் போதிக்கிறது. முதல் வினையை இயற்றுபவன் கல்வி கற்றவன்; இரண்டாவதை இயற்றுவோன் ஜீவன் முத்தன்; இப்பிறவியிலேயே முத்தி பெற்றவன்.

காலம் என்பது நம் எண்ணங்களை அளக்கும் கோலே; நினைவு கருதவொண்ணாத அளவிற்கு விரைவுடைமையின், வருங்கால வாழ்வையும் முன்னரே வாழ வல்லவராம் விரைவிற்கு எல்லையில்லை. ஆதலால், வருங்கால வாழ்வு முழுவதையும் வாழ எத்துணைக் காலம் பிடிக்கும் என்பது இயம்புவதற்கு இயலாதது. ஒரு கணத்திலும் அது ஆகலாம்; அன்றேல் ஐம்பது பிறவிகளின் பின்னும் ஆகலாம். அது ஆர்வத்தின் தீவிரத்தைப் பொறுத்தது. இக்காரணத்தால், கற்பிக்கப்படுவோரின் தேவைகட்கு ஏற்றவாறு போதனை மாற்றி அமைக்கப்படவேண்டும். உடலை உண்ணும் தீ அனைவர்க்கும் தயாராயுள்ளது; நீரும் பனிக்கட்டித் துண்டங்களும் அதனை விரைந்து விழுங்கும். பறவையைச் சுடும் குண்டுகளைத் தொகுதியாகச் சுடு; ஒன்றேனும் குறியின்மேற்படும். ஒரு மனிதனுக்கு உண்மைகள் நிறைந்துள்ள ஒரு பொருட்காட்சிச்சாலையிலுள்ள அனைத்தையும் :கொடுத்துவிடு. அவன் தனக்குப் பொருந்தியதை உடனே எடுத்துக்கொள்வான். பழம்பிறவிகள் நம் சார்புகளை உருவாக்கியுள்ளன; ஆதலால், கற்கும் மாணவனுக்கு அவனது இயல்பிற்கு ஏற்றதைக் கொடு. அறிவுநெறி, யோகநெறி, அன்புநெறி, கருமநெறி—இவற்றில் ஒன்றை அடிப்படையாக்கு. ஆனால், பிறவற்றையும் அதோடு போதி. அறிவை அன்பினாலேயே சமநிலைப் படுத்து; யோகநெறியை அறிவாற் சமன் செய்.

உரிய கருமம் செய்தல் ஒவ்வொரு நெறியிலும் ஒரு பகுதியாக அமையவேண்டும். ஒவ்வொருவனையும் அவனவனது நிலையிலிருந்து தொடங்கி முன்னேக்கிச் செல்லும்படி உந்து. சமய போதனை எப்போதும் ஆக்குநெறிப்படல் வேண்டும்; அழிக்கும் நெறிப்படலாகாது.

ஒவ்வோர் இயல்பும் கழிந்த காலத்தில் வாழ்வு முழுதும் செய்த முயற்சியினைக் காட்டுகிறது; அம்மனிதன் செல்லவேண்டிய பாதை ஒரு கோட்டினையோ, ஆரத்தையோ குறிக்கின்றது. எல்லா ஆரங்களும் மையத்திலே முடியும். எவனுடைய இயல்புகளையும் தடை செய்ய ஒருகாலும் முயலாதே; ஏனெனில், அங்ஙனம் செய்தல் கற்பிப்போனையும் கற்போனையும்—இருவரையும்—பின் தள்ளு

கிறது. நீ ஞானம் போதிக்கும்போது, நீ ஞானியாக வேண்டும்; கற்பவன் நிற்கும் அதே நிலையிலே மனத்தால் நின்றுகொள். இங்ஙனமே ஏனைய ஒவ்வொரு யோகத்தும் செய். ஒவ்வொரு திறமையையும் அது ஒன்றே உடைமை என்பதுபோல வளர்த்து வா; சமரச வளர்ச்சியெனப்படுவதில் அடங்கிய மெய்யான இரகசியம் இதுவே. அதாவது, ஆழத்தோடு விரிவையும் பெறு; ஆழங் கெடாது அதனை நாடு. நாம் அகண்டமாயுள்ளோம்; நம்மிடம் வரையறை இல்லை. மிகு தீவிர மகம்மதியனைப்போன்று ஆழ்ந்தும், நாத்தமும்பேறிய நாத்திகனைப் போன்று விரிந்தும் நாம் இருக்க இயலும்.

இதை ஆற்றும் வகை யாதெனில், ஏதேனும் ஒரு பொருளில் மனத்தை நிறுத்துதலன்று; மனத்தையே முதிரச் செய்து அடக்குதலே; பின்னர் அதனை நினைத்த வழியே திருப்ப உனக்கு இயலும். இவ்வாறே ஆழத்தையும் விரிவையும் போற்று. இருப்பதெல்லாம் ஞானமே என்பது போன்று, அதனை உணர்; அவ்வாறே, பத்தியையும், ராஜயோகத்தையும், கருமத்தையும் உணர். அலைகளை விட்டு ஆழிக்குச் செல்; பின் உன் விருப்பப்படி அலைகளையும் அடையக்கூடும். உன் மனமாம் ஏரியை அடக்கு. அடக்காயேல், பிறரது மனமாம் ஏரியை அறிதல் உனக்கு ஒண்ணாது.

எவரொருவர் தமது முழுச் சத்தியையும் கற்பிக்கப்படுவோனது இயல்பிலே தாக்கச் செய்யவல்லவரோ, அவரே உண்மையான குருவாவர். உண்மையான அனுதாபமின்றி, நாம் ஒருபோதும் நன்கு கற்பிக்க இயலாது. மனிதன் ஒரு பொறுப்புள்ள உயிர் என்னும் கருத்தை விடு; நிறைவுற்ற மனிதனே பொறுப்புடையவனுவன். அறியாதார், மயக்க மதுவை நன்கு குடித்திருப்பவர்; தெளிந்த அறிவுடையவரல்லர். அறிவு பெற்றுள்ள நீ, அவர்களிடம் அளவற்ற பொறுமை காட்டவேண்டும். அவர்களிடம் அன்பன்றி வேறெதனையும் கொள்ளாதே. உலகைத் தவருகக் காணுமாறு அவரைச் செய்துள்ள பிணியைக் கண்டுபிடி; பின்னர் அதை நீக்கவும், தக்க காட்சி பெறவும் அவர்க்குத் துணைசெய். முத்தரே சுயேச்சையுடையார் என்பதை எப்போதும் நினைவில் இருத்திக்கொள். ஏனையோர் எல்லோரும் கட்டுப்பட்டவரேயாவர். தாம் செய்வனவற்றுக்கும் பொறுப்பாகமாட்டார். சங்கற்பம் தன்னிலையிலே கட்டுப்பட்டதேயாகும். இமயமலையின் உச்சியிலிருந்து உருகி வரும்போது நீர் விடுபட்டிருக்கிறது. ஆனல், ஆருய் விரிந்த பின், அது இரு கரை

களுக்குள் கட்டுப்படுகிறது ; ஆயினும், அதனை இயங்கச் செய்த மூலச் சத்தியால், அது கடலிற் சேர்க்கப்பட்டதும், தன் விடுதலையை மீண்டும் பெறுகிறது. முதலாவது, 'மனிதனது வீழ்ச்சி'; இரண்டாவது, 'உயிர்த்தெழுதல்'. ஓரணுவேனும் தன் விடுதலையை அடைந்தாலன்றி அமைதியாயிராது.

சில கற்பனைகள் பிறவற்றால் விளையும் கட்டுகளை உடைத்தெறிய உதவுகின்றன. பிரபஞ்ச முழுதும் கற்பனையே; ஆனால், கற்பனைகளின் ஒரு தொகுதி மற்றொரு தொகுதியினைக் குணப்படுத்தும். உலகில் பாவமும் துயரமும் மரணமும் உள்ளன என நமக்குக் கூறுபவை பயங்கரமானவைகளே ; ஆனால், எப்போதும், "யான் புனிதன் ; கடவுள் உள்ளனர் ; துயர் இல்லை," என்று மொழியும் மற்றொரு தொகுதிக் கற்பனைகளோ, நன்மை பயப்பன ; மற்றவைகளால் விளையும் தளையை அறுக்க உதவுவன. சங்கிலிக் கோவையிலுள்ள எல்லா இணைப்புகளையும் உடைக்கவல்ல மிக உயர்ந்த கற்பனையே சகுணக் கடவுளைப் பற்றியதாகும்.

"ஓம் தத் ஸத்"—மாயைக்கப்பால் உள்ள ஒரே பொருள் இதுவே; ஆனால், கடவுளோ, நித்தியமாயிருப்பவர். நயாகரா நீர் வீழ்ச்சி உள்ளவரை, வானவில் திகழும் ; ஆனால், நீர் இடையறாது ஓடிக்கொண்டேயிருக்கிறது. நீர்வீழ்ச்சி பிரபஞ்சமே ; வானவில் சகுணக் கடவுளே; இரண்டும் நித்தியமே. பிரபஞ்சம் உள்ளபோது கடவுளும் இருத்தல் வேண்டும். கடவுள் பிரபஞ்சத்தை உண்டாக்குகிறார்; பிரபஞ்சமும் கடவுளை உண்டாக்குகிறது. இரண்டும் நித்தியமே. மாயை உள்ளதுமன்று, இல்லதுமன்று ; நயாகரா நீர்வீழ்ச்சியும் வானவில்லும் மாயை வாயிலாகக் காணப்படும் நித்தியமான மாருத பிரம்மமே. சொராஸ்திரியரும் கிறித்தவரும் மாயையை இரு கூறுகப் பிரித்து, நல்ல பகுதியைக் 'கடவுள்' என்றும், தீய பகுதியைச் 'சாத்தான்' என்றும் வழங்குகின்றனர். வேதாந்தமோ, மாயையை ஒரு முழுப் பொருளாகக் கொண்டு, அதற்கு அப்பாலுள்ள தனிப் பொருளாகிய பிரம்மத்தையும் ஒப்புக்கொள்ளுகிறது.

* * *

கிறித்தவ சமயம் 'ஸெமிட்டிக்கு' இனத்தாரது (ஹீபுருக்கள், அரேபியர், அஸ்ஸிரியர் முதலானோரது இனம்) எல்லை கடந்து வழி தவறிச் செல்வதை மகம்மது நபி கண்டனர்; அவர்தம் போதனைகள் கிறித்தவ சமயம் ஸெமிட்டிக்கு இனத்தார்க்குரிய சமயமாகவே

இருக்க வேண்டும் என்றும், ஒரு தெய்வத்தையே பற்றி நிற்கவேண்டும் என்றும் எடுத்துக்காட்டுகின்றன. "யானும் என் தந்தையும், ஒன்றே," என்ற ஆரியரது கருத்து அவர்க்கு அருவருப்பையும் அச்சத்தையும் உண்டுபண்ணிற்று. ஜெஹோவா (கடவுளின் பெயர்) மனிதனினின்றும் என்றைக்கும் வேறானவர் என்ற துவைதக் கருத்தைப்பார்க்கிலும் மூவர் கலந்து ஒன்றான தெய்வத் தன்மையெனும் கொள்கை (The Trinity) உண்மையிலே ஒரு பெரு முன்னேற்றம் அடைந்ததாயிற்று. இறைவரும் மனிதனும் ஒன்று எனும் கருத்தை உணர்தற்கு வாயிலாக உள்ள கருத்துச் சங்கிலியில் அவதாரக் கொள்கையே முதலாவது இணைப்பு ஆகும். முதலில் ஒரு மனித வடிவில் தோன்றிப் பின்பு மறுபடியும் வெவ்வேறு சமயங்களில் மனித வடிவங்களில் தோன்றும் இறைவரை ஒவ்வொரு மனித வடிவத்தும், அதாவது எல்லா மனிதரிடத்தும்இருப்பதாக இறுதியில் உணர்கின்றனர். அத்துவிதமே உயர்வற உயர்ந்த நிலை. 'ஒன்றே தெய்வம்' என்னும் கொள்கை அதனினும் தாழ்ந்த நிலை. தருக்க ஆராய்ச்சியினும் மிக விரைவாகவும் எளிதாகவும் கற்பனை உயர்வற உயர்ந்த நிலைக்கு உன்னை உய்க்கும்.

ஒரு சிலர் வேறாக நின்று இறைவர்க்கெனவே வாழ்ந்து உலகத்தார்க்காகச் சமயத்தைப் பாதுகாப்பாராக. மோகங்களைப் பிறப்பிப்பவனாக (ஜனகராக) மட்டும் நீ உள்ளபோது ஜனகரைப் போன்று இருப்பதாகப் பாவனை செய்யாதே. ('ஜனகர்' என்பதற்குப் 'பிறப்பிப்பவர்' என்பது பொருள்; அப்பெயர் பூண்ட வேந்தர் தம் குடிமக்களுக்காகத் தம் நாட்டுக்கு மன்னராயிருப்பினும், அனைத்தையும் மனத்தால் துறந்திருந்தவர்.) நேர்மையாயிரு; "இலட்சியத்தைக் காண்கிறேன்; ஆனால் அதனை இன்னும் அணுக இயலாதவனாகிறேன்," என்று கூறு. துறவாத போது துறந்ததாகப் பாவனை செய்யாதே. துறந்தனையாயின், (அவ்வண்ணமே) உறுதியொடு நில். போரில் ஓராயிரம் பேர் வீழினும், கொடியைக் கைப்பற்றி முன்னே செல். எவர் தோல்வியெய்தினும், அதனால் இறைவரது உண்மை உண்மையே. தோற்பவன் கொடியைப் பிறன் எடுத்து முன் செல்லுமாறு வேறொருவனிடம் கொடுக்கட்டும்; அப்போது அது ஒரு போதும் விழ வழியில்லை.

நான் நீராற் கழுவப்பட்டு மாசற்றிருக்கும்போது, அழுக்கை என்மீது எதற்காகப் பூசிக்கொள்ள வேண்டும்? முதலில் அழியாத விண்ணகத்தை நாடு; ஏனைய யாவற்றையும் விட்டுவிடு;

ஏனைய யாவற்றையும் துறந்துவிடு. 'உன்னோடு சேர்க்கப்படு தற்காக' எதனையும் வேண்டாதே. அதனை நீக்கிவிட்டோம் என்றே மகிழ்ச்சியுறு. விட்டுவிடு. நீ ஒரு போதும் வெற்றியைக் காணமாட்டாய் எனினும், அது உன்னைத் தொடரும் என்பதை அறி. ஏசுநாதர் பன்னிரு செம்படவரை விட்டுச் சென்றார்; எனினும், அந்த ஒரு சிலர் ரோம சாம்ராச்சியத்தை அதிர்ந்து வெடிக்கச் செய்து அழித்தனர்.

இறைவரது பீடத்தே வையகத்திலே பெறற்குரிய அனைத்தினும் மிகத் தூய, மிகச் சிறந்த ஒன்றையே பலியாகக் கொடு. ஒருபோதும் முயற்சி செய்யாதவனைவிட உழைப்பவன் சிறந்தோனுவன். துறவி ஒருவனைக் காணலும் தூய்மை பயப்பதாகும். இறைவர்க்கென்றே நிமிர்ந்து நில்; உலகம் ஒழியட்டும். இணங்கும் பேச்சுக்கு இடம் கொடாதே. உலகத்தை விட்டொழி. அப்போதுதான் உடற்பிறப்பு உனக்கு நெகிழ்ச்சியடையும். அது இறக்கும்போது நீ விடுதலை பெறுவாய். கட்டற்றிரு. இறப்பு ஒன்றே ஒருகாலும் நம்மை விடுவிக்க இயலாது. வாழும்போதே நாம் சொந்த முயற்சிகளாலே விடுதலையைத் திண்ணமாய் அடைய வேண்டும். பின்னர், உடல் விழும்போது, விடுபட்டவர்க்கு மீண்டும் பிறத்தல் இல்லாதொழியும்.

உண்மையைப் பற்றித் தீர்ப்புக் கூற உண்மையே வேண்டும்; வேறென்றுலாகாது. உண்மைக்குச் சோதனையன்று நன்று செய்தல். செங்கதிரோனைக் காணத் தீவர்த்தி அவசியம் அன்று. பிரபஞ்சம் முழுதையும் உண்மை அழிக்கும் எனினும், அது உண்மையேயாம்; அதைப் பற்றி நில்.

சமய சம்பந்தமான தூலக்கிரியைகளை இயற்றப் பழகுதல் எளிதே. அது பொதுமக்கள் மனத்தைக் கவர்கின்றது; ஆனல், அப் புறக் கருமங்களில் உண்மையாக ஒன்றுமேயில்லை (ஒரு பயனுமில்லை.)

"சிலந்தி தன்னுள்ளிருந்தே தன் வலையை வெளியே தோற்றுவித்துப் பின்பு உள்ளிழுத்துக் கொள்வது போல, இப்பிரபஞ்சமும் கடவுளால் வெளியே கொணரப்பட்டு (பின்னர்) உள்ளிழுத்துக் கொள்ளப்படுகிறது."

ஆகஸ்டு 8-ஆந் தேதி—செவ்வாய்க்கிழமை

'நான்' இல்லாது புறத்தே 'நீ' இருக்க இயலாது. இதிலிருந்து சில தத்துவ அறிஞர் காண்பானிடத்தன்றிப் புறவுலகம் இருக்க

வில்லையென்றும், 'நீ' என்பது 'நான்' என்பதில் மட்டும் இருந்தது என்றும் முடிவு கட்டினர். பிறரோ, 'நீ' என்பதன் மூலத்தினுல் மட்டும் 'நான்' என்பது அறியப்படும் என்று தருக்க முறையால் சம அளவிற்கு வழக்காடுகின்றனர், இவ்விரு வகைக் கொள்கைகளும் பகுதியுண்மைகளேயாவன. ஒவ்வொன்றும் ஓரளவு தவருனதும் ஓரளவு சரியானதும் ஆகும். உடலைப் போன்று நினைவு அதேயளவு சமமானதும், அதேயளவு இயற்கையில் உள்ளதும் ஆகும். சடப்பொருளும் மனமும் இரண்டும் மூன்ருவதான ஒரு தனிப் பொருளில் அமைந்திருக்க, அதுவே தன்னை இரு கூருகப் பகுத்துக் கொள்கிறது. இந்த தனிப் பொருளே 'ஆன்மா' எனும் உண்மையான பரம்பொருளாகும்.

உள்ளது, இன்னதென அறியவொண்ணுத ஒன்று; மனமும் சடப்பொருளும் என இரண்டாகத் தன்னைத் தோற்றுவிக்கிறது. காணும் உலகில் அதன் இயக்கங்கள் நியதியெனப்படும் சில மாருத துறைகளிலே நிகழ்கின்றன. ஒருமையான (ஏகமான) நிலையில் அது சுயேச்சையுற்றது; பலவான நிலையில் அது நியதியெனும் பந்தத்திற்கு உட்பட்டது. எனினும், இப்பந்தமெல்லாம் இருப்பினும், சுதந்தரம் எனும் கருத்து எப்போதும் உள்ளதே; இதுவே 'நிவிருத்தி'யாவது; பற்றினின்றும் விலகிச் செல்வது என்பது. பற்றின் மூலம் உலகியற் காரியங்களில் சுறுசுறுப்பாகத் தலையிடுமாறு நம்மைச் செலுத்துவனவான சட மயமாக்கும் சத்திகள் 'பிரவிருத்தி' எனப்படும்.

சடப்பொருளின் பந்தத்தினின்றும் நம்மை விடுவிக்கும் செயலே அறச் செயலாகும்; தலைமாறிய கூற்றும் உண்மையாம். ஒவ்வொன்றும் வட்டநெறியிற் செல்லுதலின், இவ்வுலகம் வரையறையற்றதெனத் தோன்றுகிறது; இது புறப்பட்ட இடத்திற்கே மீளுகிறது; வட்டம் ஒன்று கூடுகிறது. ஆதலின், இங்கே எவ்விடத்தும் ஓய்வோ அமைதியோ இல்லை. நாம் வெளியேறத்தான் வேண்டும். அடைய வேண்டிய முடிவான பேறு முத்தியே.

* * * *

தீமை, வடிவிலே மாறும்; ஆனல், இயல்பு மாருதிருக்கும். பண்டைக் காலங்களில் வலிமை அரசாண்டது. இன்ருே, தந்திரம் அரசு செலுத்துகிறது. இந்தியாவிலுள்ள துயரம் அமெரிக்காவிற் போன்று அவ்வளவு கேடானதன்று; ஏனெனில், இங்குள்ள ஏழை மனிதன் தனது சொந்தக் கேடான நிலைமைக்குப் பேரளவு மாரு

யிருப்பதையும் காண்கின்ருன்.

நன்றும் தீதும் பிரிக்கவொண்ணுதவாறு இணைந்துள்ளன; ஒன்றை மற்ருென்றின்றித் தனியே பெற முடியாது. இப்பிரபஞ்சத்துள்ள சத்தி ஓர் ஏரி போன்று உள்ளது; ஒவ்வோர் அலையும் மேலெழும்போதும், தடுக்கமுடியாத வகையிலே அதற்கேற்ப ஒரு பள்ளத்தை உண்டுபண்ணுகிறது. மொத்தம் முற்றிலும் மாருததாகிறது. ஆதலால், ஒருவனை இன்புறுத்தல் மற்ருெருவனைத் துன்புறுத்தலேயாகின்றது. புறத்துள்ள இன்பம் சட மயமானது. கிடைக்கக்கூடிய பொருளும் குறிப்பிட்ட அளவினது; ஆதலால், கடுகளவு ஒருவன் பெறுதலும் பிறனிடமிருந்து எடுக்காது இயலாது. சடவுலகிற்கு அப்பாலுள்ள பேரின்பம் மட்டும் பிறர்க்கு நஷ்டம் விளையாது பெறக்கூடியதாகும். சடவுலக இன்பம் சடவுலகத் துன்பத்தின் மாறுதலேயன்றி வேறன்று.

மேலெழும் அலையிற்பிறந்து அதிலே இருப்பவர், பள்ளத்தையும் அங்குள்ளதையும் காணுர். உலகத்தை முன்னிலும் நல்லதாக்கலும், இன்பமானதாக்கலும் உனக்கு இயலும் என ஒருநாளும் நினையாதே. செக்குமாடு தனக்கு முன்பே கட்டப்பட்டுள்ள வைக்கோற் புரியினைப் பற்றுவது ஒருநாளும் இல்லை. அது எண்ணெயைப் பிழிய மட்டும் செய்யும். அதுபோன்றே, நாம் இன்பம் எனும் மாய விளக்கைப் பின் தொடர்ந்து எப்போதும் ஏமாற்றத்தை அடைகிருேம்; இயற்கையாகிய செக்கை ஆட்ட மட்டும் செய்கிருேம். பின்னர் இறந்து, மீண்டும் அதையே தொடங்குகின்ருேம். தீமையை நீக்க நமக்கு இயலுமாயின், அதனினும் மேலான ஒன்றின் காட்சியைக் கணமேனும் பெறமாட்டோம். நாம் திருத்தியடைந்தவராய் விடுதலைபெற ஒருபோதும் முயலோம். சடப்பொருளில் இன்பத்தை நாடுதல் அனைத்தும் பேதைமை என்பதை மனிதன் காணும்போது தான் சமய வாழ்வு தொடங்குகிறது. மனித அறிவு முழுவதும் சமயத்தின் பகுதியேயாகும்.

மனித உடலில் நன்மை தீமைகள் இரண்டும் அவ்வளவு சம நிலையில் இருத்தலின், மனிதன் தன்னை அவ்விரண்டினின்றும் விடுவித்துக்கொள்ள விரும்புதற்கு ஒரு சந்தர்ப்பம் நேர்கிறது.

பந்தமற்றவன் ஒருகாலும் பந்தமுருன். அவன் எங்ஙனம் பந்தமுற்ருன் என்ற வினு தருக்கத்திற்கு மாருன ஒரு வினு. எங்குப் பந்தமில்லையோ, அங்குக் காரணமோ காரியமோ இல்லை. "கனவில் யான் ஒரு நரியானேன். ஒரு நாய் என்னைத் துரத்திற்று." இதில்

நாய் என்னைத் துரத்தியதேன் என்று நான் வினவக் கூடுமா? நரி கனவின் ஒரு பகுதியாயிற்று. நாய் அதனைப் பின்தொடர்ந்தது இயல்புதான்; ஆனால், இரண்டும் கனவைச் சார்ந்தவை; இரண்டிற்கும் வெளியே இருப்பு இல்லை. நம்மைப் பந்தத்தினின்றும் வெளியேற்ற விஞ்ஞானமும் சமயமும் முயல்கின்றன; சமயம் மிகத் தொன்மையானது என்பது மட்டுமா? அது மிகப் புனிதமானதுமாகும் என்ற மூட நம்பிக்கை நம்மிடத்துள்ளது. ஒரு வகையில் அது மிகப் புனிதமானதுதான்; ஏனெனில், அற ஒழுக்கத்தை அது உயர்நிலையாக்குகிறது; விஞ்ஞானம் அவ்வாறு செய்வதில்லை.

"நெஞ்சத் தூய்மையுடையார் பேற்றை அடைந்தோரே; ஏனெனில், இறைவரைத் தரிசிப்பவரேயாவர்." இவ்வாக்கியம் ஒன்றே மனித இனத்தை உய்விக்கும். எல்லா நூல்களையும் சமய குரவர்களையும் இழப்பினும் சரி, இந்நெஞ்சத் தூய்மையே கடவுட் காட்சியை நல்கும். இப்பிரபஞ்சத்தின் கீத முழுவதும் இசைப்பது இதையே. தூய்மையில் பந்தமே இல்லை. அறியாமைத் திரைகளைத் தூய்மையால் நீக்கு. நாம் உண்மையாக உள்ளவாறே நம்மை அப்போது தோற்றுவித்துக்கொள்வோம். நாம் எந்நாளும் கட்டுற்றதில்லை என்பதையும் உணர்வோம். பலவற்றைக் காணுதலே உலக முழுதிலும் உள்ள பெரும்பாவம். அனைவரையும் ஆன்மாவாகக் கண்டு அனைவர் மீதும் அன்பு செலுத்து; வெவ்வேறானவை என்ற கருத்தெல்லாம் ஒழியட்டும்.

* * *

கழிபெருங்கொடுமையாளனும் என்னுடலில் ஒரு பகுதியே. வாட்புண்ணே, தீப்புண்ணே போன்றது அதுவும். நாம் அதற்குச் சிகிச்சை செய்து முன்னினும் சீராக்க வேண்டியவராகிறோம். அது போன்று கழிபெருங்கொடுமையாளனுக்கும், அவன் பிணி தீர்ந்து, மீண்டும் மகிழ்வும் உடல் நலமும் பெறும் வரையும் தொடர்ந்து மருத்துவம் செய்.

வியவகாரிக நிலையில் நின்று சிந்திக்கும்போது உடலாயிருக்கும் தன்மையில் வியவகாரிகப் பொருள்கள் நம்மைப் புண்படுத்த இயலும் என்றும், சம அளவிற்கு அவை நமக்கு உதவி புரியக்கூடும் என்றும் நம்புதற்கு நமக்கு உரிமை உண்டு. உதவியெனும் இக் கருத்தை (பண்பை) வேறாகப் பிரித்தெடுத்தால், இதுவே நாம் கடவுளென வழங்குவதாகும். உதவியைப்பற்றிய கருத்துகள் அனைத்தையும் கூட்டிய மொத்தமே கடவுள் என்பது.

தயையும் நலனும் உதவுந் தன்மையும் வாய்ந்த அனைத்தும் இணைந்த ஒரு கூட்டுப் பொருளாகிய பண்பே இறைமையாகும். அதுவே தனிக் கருத்தாதல் வேண்டும். ஆன்மாவான நிலையில் நமக்கு உடல் இல்லை. ஆதலின், "யான் இறைவனே; நஞ்சு எனக்குத் தீங்கு செய்யாது," எனல் பொருந்தாக் கூற்றுகும். உடலும் இருந்து நாமும் அதைக் காணுங்கால், நாம் இறைவரை உணராதவரேயாவோம். ஆறு மறைந்தபின் சிறுசுழி எஞ்சியிருத்தல் இயலுமோ? உதவி வேண்டுமெனக் கதறு. உனக்கு அது கிடைக்கும். உதவிக்காகக் கதறினவன் மறைந்ததையும் உதவி செய்தவனும் மறைந்ததையும் கூத்து முடிந்துவிட்டதையும் இறுதியிற் காண்பாய்; ஆன்மா ஒன்றே எஞ்சுகின்றது.

இதை ஒருமுறை இயற்றியபின் மீண்டும் வந்து, இச்சைப்படி விளையாடு. இவ்வுடல் அப்போது தீங்கினை இயற்றவொண்ணாத நிலையினை அடையும்; ஏனெனில், தீய சத்திகள் அனைத்தும் எரிந்து போம் வரை, முத்தி கைகூடுவதில்லை. மலம் முழுதும் எரிந்துவிட்டது; எஞ்சுவது 'சூடும் புகையும் இல்லாச் சுடரே.' பழவினையின் தொகுப்புச் சத்தியே உடலை நடத்திச் செல்கின்றது; ஆனால், அது நன்றே செய்யவல்லது. ஏனெனில், விடுதலை வருமுன்பே தீயனவெல்லாம் ஒழிந்துவிடுகின்றன. சிலுவைமீது மரிக்கும் தருணத்திருந்த கள்வன், தன் பழவினைப் பயன்களையே நுகர்ந்தான். அவன் யோகியாயிருந்து தவறிவிட்டவன். பின்பு மீண்டும் பிறக்க நேர்ந்தது; மறுபடியும் அவன் வழுக்கி வீழ்ந்து, கள்வனுனன்; ஆனல், அவன் ஆற்றியிருந்த பண்டைய நல்வினை பழுத்தது. முத்தி கைவருங் கணத்தே அவன் ஏசுநாதரைத் தரிசித்தான். ஒரு மொழி அவனை உய்வித்தது.

புத்தர் தமது மிகு பெரும்பகைவனை முத்தனுக்கினர்; காரணம் யாதெனில், அவரை (புத்தரை) அவ்வளவு பகைத்தமையால் அவன் இடையருது அவரையே சிந்தித்து வந்தான்; அந்நினைவு அவனது உள்ளத்தைத் தூயதாக்கிற்று. முத்திபெற அவன் ஆயத்தமானன். ஆதலால், எக்காலத்தும் இறைவரையே நினை. அது உன்னைத் தூயோனுக்கும்.

* * * *

[எமது அன்பிற்கினிய குரவர் நடத்திய பாடங்கள் இவ்வாறு முடிந்தன. அடுத்த நாள் அவர் ஆயிரந் தீவுச் சோலையை நீத்து, நியூயார்க்குக்கு மீளலானர்.]

அமெரிக்க நாட்டுச் செய்தித் தாள்களில் வெளி வந்துள்ள அறிக்கைகள்

பல் சமயப் பெருமன்றத்தில்

('டுபூக்கு' என்னும் இடம், அயோவா நகர், டைம்ஸ் (Times)தாள் செப்டம்பர் 29, 1893).

உலகக் காட்சி விழா, செப்டெம்பர் 29—(சிறப்பு மலர்)

பல்சமயப் பெருமன்றம் கடுமனக் கசப்பு விளையும் நிலையினை எட்டியது. மரியாதையாம் மென்துகில் புறத்தை மறைப்பினும், அகத்தே கொதிப்பு எழுந்துகொண்டிருந்தது. ஜோஸப்புப் பாதிரியார் இந்துக்களை கொடுமையாக நிந்திக்கவே, அதனினும் கொடுமையாக இந்துக்கள் நிந்தித்தார்கள். உலகம் படைக்கப்பட வில்லை என்று மொழிவது மன்னித்தற்கரிய பிதற்றல் என்று அவர் கூறினர்; ஆனல், உலகிற்குத் தொடக்கம் உண்டெனல் தானே விளங்கும் பொருந்தாக் கிளவியே என்று இதற்கு விடையாக ஆசியாக் கண்டத்தினர் சாற்றினர். ஐக்கிய அமெரிக்க நாட்டிலுள்ள பாதிரிகளின் இயல்பைத் திரித்துக்கூறி அவர்களைச் சிறுமைப்படுத்தி விட்டதாகச் சேணிலுள்ள ஒகியோ ஆற்றங்கரைகளிலிருந்தே பிஷப்புப் பட்டம் பெற்ற ஜே. பி. நியூமன் என்னும் ஆசிரியர் குணதிசை அறிஞர்கள் மீது வசை அம்புகளைத் தொடுத்தார். கீழை நாட்டினரும் சீற்றத்தைக் தூண்டும் பேரமைதி கொண்டும், இகழ்ச்சியைக் காட்டும் முறுவல்கொண்டும், 'இப்படிப் பாதிரியார் இயம்புவதற்குக் காரணம் அவரது அறியாமையைத் தவிரப் பிறிதன்று,' என்று விடை இறுத்தனர்.

புத்தர் வகுத்த தத்துவ முறை

'உங்களுடைய கொள்கை யாது?' என்று நேரடியாக பௌத்தப் பேரறிஞர் மூவரை நாங்கள் உசாவிய பொழுது, இறை, மனிதன், பிரகிருதி—இவற்றைப்பற்றிய கற்பாறையனைய அடித்தளத்தில்

ஆழ்ந்து ஊன்றி நிற்கும் தங்கள் கொள்கையைத் தெள்ளத் தெளிவாக வனப்பு மிக்க மொழியில் அவர்கள் வழங்கினார்கள்.

[இதை ஒட்டியே 'புத்தர்பால் உலகம் கொண்ட கடன்' என்ற கட்டுரையின் சுருக்கம் படிக்கப்பட்டது.

இதற்கு அணிந்துரையாகச் சிங்கள மொழியில் இயற்றப்பட்ட மங்கல வாழ்த்துக் கீதத்தை இவர் இசைத்தார் என்ற செய்தியை வேறு வாயிலாக நாங்கள் அறிகிறோம். பிறகு இந்தக் கட்டுரை தொடர்ந்து செல்கிறது.]

இவருடைய - (தர்மபாலருடைய) முடிவுரை - சிக்காகோப் பேரவையினர் அதுகாறும் கேட்டிராதபடி அத்தகைய அழகினை யுடையதாய் அமைந்தது. அதனை டெமாஸ்தனீஸ் என்பவரும் விஞ்சினாரல்லர்.

சொற்போர் வளர்க்கும் கூற்றுகள்

இந்து துறவியாரான சுவாமி விவேகானந்தருக்கு நாங்கள் எதிர் பார்த்த பேறு அன்று வாய்க்கவில்லைபோலும்! அவர் வழக்கமான மனநிலையில் இல்லாதவராய், அதனை விரைவில் வெளிப்படுத்திக் காட்டியவர்போலத் தோன்றினார். அவர் ஆரஞ்சு சிவப்பான உடையில் பொலிவுற்று விளங்கினார்; அவர் திருச்சென்னி மீது சற்று வெளுத்த மஞ்சட்பாகை திகழ்ந்தது. கிறித்தவ நாடுகளைக் கடுமையாகத் தாக்கும் முறையில் அவர் வாதப்போரில் குதித்தார். பின் வரும் சொற்கள் அவர் உதடுகளினின்று வெடித்தெழுந்தன: "கீழை நாட்டிலிருந்து வந்து இந்த அவையில் நாள் தவறாது வீற்றிருந்து எங்களைக் கிறித்தவ சமயத்தைத் தழுவத்தான் வேண்டும் என்று சலுகை காட்டும் முறையில் பேசி வருகின்றார்கள். ஏனெனில், கிறித்தவ நாடுகளே தழைத்து ஓங்கி நிற்கின்றனவாம். நாங்கள் சுற்றி நோக்குகின்றோம்; இந்த வையகத்தில் கிறித்தவ நாடுகளுள் மிக்க செழிப்புற்றிருப்பதாக நாம் காண்பது இங்கிலாந்தேயாகும். மேலும், அந்நாடு 250,000,000 ஆசிய நாட்டினரின் தலைகள்மீது அமர்ந்து ஆணை செலுத்துகின்றதாம். முன் நிகழ்ந்த சரித்திரக் காட்சிகளுக்கு எங்கள் கண்கள் விரைந்தன. கிறித்தவ ஐரோப்பாக் கண்டத்தின் திரு, ஸ்பெயின் நாட்டோடு தொடங்கிற்று. ஸ்பெயினின் செல்வத் தொடக்கம் மெக்ஸிக்கோமீது இந்நாடு படையெடுத்ததினின்றும் பிறந்தது. கிறித்தவர்களுடைய ஆக்கமோ, சகோதர மக்கள் ஒருவரை ஒருவர் வெட்டிமடிவதால் எழுகின்றது. இத்தகைய

கொடிய கடுவிலை கொடுத்துத் தன் இம்மைச் செழுமையைப் பெருக்க எந்த இந்துவும் விழையான்.''

* * *

இத்தகைய வெஞ்சொற்கள் விரிந்துகொண்டே போயின. அடுத் தடுத்துப் பேசுகின்ற சொற்பொழிவாளர்களும் வாதுக்கிழுக்கும் உணர்ச்சியை வளர்த்துக் கொண்டே போனார்கள் போலும்!

('அவுட்லுக்கு' (Outlook) என்ற செய்தித்தாள், அக்டோபர் 7, 1893)

...' இந்தியாவில் கிறித்தவர்களின் பணி' என்னும் பொருள் ஆராய்ச்சிக்கு வரவே, ஒளி மிக்க காவி உடை அணிந்த சுவாமி விவேகானந்தர் மூரி நிமர்ந்து நின்று பேசலுற்றார். கிறித்தவர் களின் ஞானப் பணியை அவர் தாக்கிப் பேசினார். இப்படித் தாக்கி மொழிந்ததைக் கொண்டு அவர் கிறித்தவ சமயத்தை உள்ளவாறு அறிய முயன்றாரில்லை என்பது தேற்றம் என்றார்கள். பல்லாயிர ஆண்டுகளாகத் தாம்கொண்ட நம்பிக்கைகளிலும், இனக்கோட்டங் களிலும் ஊறிக் கிடந்த கிறித்தவப் பாதிரிகள் தம்முடைய (விவேகா னந்தரின்) மதமான இந்து சமயத்தை உணரவேண்டிய முயற்சி களும் செய்யவில்லை என்று கூறத் தமக்குரிமை உண்டு என்று பதில் இறுத்தார். தம்முடைய கருத்துப்படி, இந்தப் பாதிரிகள் தங்க ளுடைய புனிதமான கொள்கைகள் மீது நிந்தனைகளைப் பொழிய வும் தம்முடைய நாட்டு மக்களின் தூய்மையான நல்லொழுக்கங் களையும் ஆன்மிகச் சிறப்பையும் வேரறுக்கவும் வந்தவர்களே தவிர வேறல்லர் என்று விளம்பினார்.

* * *

('கிரிட்டிக்கு', (Critic) அக்டோபர் 7, 1893)

பல் சமயப் பெருமன்றத்தில் காட்சி அளித்தவர்களுள் தோற்றப் பொலிவால் மக்கள் உள்ளத்தை மிகவும் ஈர்த்தவர்கள் இலங்கை நாட்டுப் புத்த பிக்குவான தருமபாலரும் இந்து துறவியாரான சுவாமி விவேகானந்தரும் ஆவார்கள். ''மெய்ப்பொருளை நாடும் பாதையில் இறைநூலும் வெறுங்கொள்கையும் குறுக்கிடுமாகில், அவற்றைப் புறக்கணித்து மனக்கோட்டமின்றிச் சிந்திக்கும் முறை யைக் கற்றுக்கொள்ளுங்கள்; மன்னுயிரனைத்தின் மீதும் அன்பிற் காகவே அன்பைப் பொழியுங்கள்; அச்சமின்றி நீங்கள் கொண்ட மனவுறுதி காட்டும் கருத்துகளை வெளியிடுங்கள்; தூய வாழ்வு நடத்

துங்கள். உண்மையாம் பரிதி உமக்கு ஒளியை உதவட்டும்,'' என்று முன்பு மொழிந்தவர், மனத்தை உறுத்தும் வண்ணம் மொழிந்தார். இந்தப் பேரவையில் ஆற்றப்பட்ட சொற்பொழிவுகள் சுருக்கமாயினும், நாவன்மையை நன்கு புலப்படுத்தின. அவற்றின் வெற்றிகரமான ஊக்கம் அப்பாலோ கழகத்தார் 'இறைவா போற்றி! இறைவா போற்றி !' என்று இசைத்த மங்கல கீதத்தில் முடிவடைந்தது. பேசியவர்களுள் இந்து துறவியாராகிய சுவாமி விவேகானந்தரைப்போலப் பல்சமயப் பெருமன்றத்தின் நோக்கத்தைப்பற்றியும் அதன் குறைகளைப்பற்றியும் அது உள்ளத்தின்மீது செலுத்திய மிக்க சிறப்பு வாய்ந்த ஆட்சியைப்பற்றியும் ஒருவரும் உரைத்திலர். அவர் புரிந்த சொற்பொழிவை முற்றிலும் அப்படியே வரைகின்றேன் ; ஆனால், அவையோர்களின் மனத்தை எப்படி அது கொள்ளைகொண்டது என்பதைக் குறிப்பாகத்தான் என்னால் இயம்ப இயலும். அவர் ஆண்டவரின் அருளும் உரிமையும்பெற்ற சிறந்த நாவலர். பொருட்செறிவும் இசைக்கட்டும் கோப்பும் பொருந்திய ஆர்வமிக்க அவர் சொற்றொடர்களுக்கு இன்பம் பயக்கும் வண்ணத்தில், மஞ்சளும் ஆரஞ்சும் கலந்து விரியும் ஓவியமனைய பின்னணியில் ஆற்றலும் அறிவும் காட்டும் அவர் திருமுக மண்டலம் பின் வாங்கவில்லை..... [சுவாமிகளின் இறுதிப் பேச்சின் பெரும்பகுதியை மேற்கோளாகக் கொண்ட கட்டுரை இன்னும் தொடர்கிறது.]

கண்கூடாகக் காணக்கூடிய இந்த மாபெருமன்றத்தின் விளைவு யாதெனில், அயல் நாட்டு ஞானப் பணியாளர்பால் இது எழுப்பிய உணர்ச்சியேயாகும். அரைகுறையாக இறைநூலைக் கற்றவர்களை அறிவும் கல்வியும் முதிர்ந்த கீழ்த்திசைப் புலவர்களுக்குப் போதிக்கும்படி அனுப்பும் மிகவும் ஒவ்வாத முறையை இதுபோல ஆங்கிலம் பேசும் அவையோர்களுக்கு எந்த அவையும் மனத்தில் நன்கு அழுத்தமாய்ப் பதியும்படி எடுத்துக் காட்டவில்லை. சமயப் பொறையோடும் மனப்பரிவோடுமே அவர்களுடைய கொள்கையை அணுக உரிமை பெற்றிருக்கிறோமே தவிரப் பிறிதில்லை. அறிவுரைகள் வழங்கி மக்களைத் தூண்டுவோர்கள் இத்தகைய உயர்ந்தஇயல்புகளைப் பெறவில்லை. புத்த சபையினர் நம்மிடமிருந்து எவ்வண்ணம் (அறிவொளியை) அடைகின்றனரோ அவ்வண்ணமே நாமும் அவரிடமிருந்து அடைகிறோம் என்ற உண்மையை நாம் உணரவேண்டும். ஓர் இதய இயைபு வாயிலாக மிகச் சிறந்த ஆதிக்கத்தை-செல்வாக்கை-எய்துதல் இயலும்.

(சிக்காகோ, அக்டோபர் 3, 1893)

லூயி மன்ரோ

[நடந்த பேரவையின் தனிச் சிறப்பைப்பற்றிப் பல்வேறு மதச் சார்பில் வந்தவர்கள் தங்கள் உணர்ச்சியையோ கருத்தையோ எடுத்துக் கூறுமாறு 1893-ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 1-ம் நாள் வெளி வந்துள்ள 'நியூயார்க்கு வோர்ல்டு' ('The New York World') என்னும் பத்திரிகை வேண்டிக்கொண்டதற்கு இணங்க, சுவாமி விவேகானந்தர் கீதையிலிருந்தும், வியாசரிடமிருந்தும் சில வரிகளை உதவினர்.]

"முத்துமாலையில் ஊடுருவிச் செல்லும் நூலேபோல ஒவ்வொரு சமயத்திலும் திகழ்கின்றவன் நானே." தெய்வத்தன்மை வாய்ந்தவர்களும் பூரணத்தை எய்தியவர்களும் தூய்மை அடைந்தவர்களுமான சான்றோர்கள் எல்லாச் சமயங்களிலுமே காட்சி அளிக்கின்றார்கள். அக்காரணம் பற்றியே அவர்கள் அனைவரும் ஒரே மெய்ப்பொருளினிடம் நம்மை நடத்திச் செல்கின்றார்கள். நஞ்சிலிருந்து அமுதம் பிறக்க இயலுமோ ?

பொருட்குறிப்பு அகராதி

அ

அக்பர் - 22, 164
அசுவபதி - 38
அசுவமேதம் - 162
அசோகன் - 22, 141, 162, 164, 224
அஞ்ஞேயவாதம் - 6, 22
அஞ்ஞேயவாதி - v, 409, 416
அட்சோகினி - 71
அத்திரி முனிவர் - 448
அத்துவைதம் (இதன் பெருமை)- 139, 383 400
அதிருஷ்டம் (இதன் விளக்கம்) 421
அந்தணர் (இவருடைய குணங்கள்) - 53
அநசூயை - 448
அபரம் (இதன் விளக்கம்) - 310
அபரவித்தை - 407
அபரோக்ஷ ஸாக்ஷாத்காரம் (மெய்யுணர்வுக் காட்சி) - 407
அபேதானந்தர் - xiv
அம்பின் சத்தி - 70
அமர்க்கர் - 86, 88
அமரத்துவம் - 144
அமெரிக்கா (இந்நாட்டின் சிறப்பு) - 244, 245
அமெரிக்காவில் (பல சீடர்கள்) - x, xi
அயர்லாந்துக்காரன் (இவன் நிலை) - 220
அயோத்தி - 34, 163
அரசன் (இவனுடைய இயல்புகள், கடமைகள்) - 162, 185, 186, 187, 188
அரிஸ்டாட்டில் - v
அருச்சுனன் (விவேகானந்தர் உவந்த வீரன்) - iv, xvii, 53, 54, 55, 56, 66, 68, 71, 289, 300, 378
அருந்தவம் (இதனுல் முத்தி அடைய முடியும்) - xiv
அரேபியர்கள் - 145, 175, 483
அல்லிப்பூ - 373
அலெக்ஸாந்தர் - 229
அவதூத கீதை - 448
அவுட்லுக்கு - 492
அவுரங்கசீபு - 164
அறியாதவன் (சிரத்தை இழந்த மனிதன்) - 221
அன்பின் பரிணும நிலை - 302, 303, 304, 305
அன்பே தகளியா (இயற்பா) - xviii
அனுமான் (விவேகானந்தரின் இலட்சிய புருஷன்)- iv, xv, 39, 40, 41, 42, 286, 387
அனுரத்தி (இதன் விளக்கம்) - 255
அஷ்டாத்தியாயி (எட்டு நாளில் சுவாமிகள் முடித்தார்) - xiii
அஸ்ஸாஸின் - 432
அஹம் பிரம்மாஸ்மி - 414
அஹிம்ஸை (இதன் முக்கிய சோதனை) - 290
அஹிரிமான் (தீமைத் தத்துவம்) - 357
அஹுரமஸ்தா - 23

ஆ

ஆங்கில ஆட்சி - 160
ஆங்கிலம் பொதுமக்களின் கருத்து - 204
ஆங்கிலேயர் - 159
ஆங்கிலோ ஸாக்ஸன் - 409
ஆசிரியரின் பண்பாடு - 271, 272
ஆடவர்கள் (இவர்களுக்கும் பெண்களுக்குமுள்ள வேறுபாடு) - 119
ஆப்தர்கள் - 437

ஆப்த வாக்கியம் - 7
ஆயிரம் தீவுப் பூங்கா - 355
ஆர்நால்டு (மக்களை மூன்று வகையாகப் பிரித்தல்) - xv
ஆர்மஸ்டு (நன்மைத் தத்துவம்)- 357
ஆரியன் - 150
ஆரிய சமாஜம் - 189
ஆரியப் பண்பாடு - 156
ஆவிருத்தி - 252
ஆழ்வார் - xvi
ஆறு தரிசனங்கள் 400
ஆறுவது உணர்வு - 400
ஆன்ம ஞானம் (தனித்த மனிதனுக்கு மட்டுமன்றிச் சமுதாயத்திலும் நடமாட வேண்டும்) - ii
ஆன்மா (இதன் இலக்கணம்) - 10, 11, 15
ஆன்மிக ஆராய்ச்சிக் கல்லூரி - 221
ஆனந்தத்தின் மக்கள் - 12

இ

இங்கர்சால் - 454
இங்கிலாந்தில் (ஞானப் பயிர் தழைத்தது) - xi
இங்கிலாந்தின் பண்பாடு - 200
இங்கிலாந்து - 177
இடம் வரும் முறை - 387
இந்திரப் பிரஸ்தம் - 55
இந்திரன் - 77, 78
இந்திய மாதர் (இவர்களைப் பற்றி விளக்கம்) - 100, 114
இந்தியாவின் இலட்சியப் பெண் மணி (தாய்) - 105
இந்தியாவின் கலைச் செல்வம் - 126, 127
இந்தியாவின் சங்கீதம் (அதன் பூரண நிலை) - 127
இந்தியாவின் சூழ்நிலை - 230
இந்தியாவின் வரலாறு - 146
இந்து மக்கள் (இவர்கள் வந்த விதம்) - 227
இயேசுநாதர் - 25, 72, 73, 129, 177, 335, 354, 355, 362, 364, 369, 391, 408, 447, 451, 454, 455, 479, 485
இரணியகசிபு-85, 86, 87, 88, 89
இரணிய கர்ப்பம் - 279
இராச சூய யாகம் - 279
இராச புத்திரரின் ஆட்சி - 165
இராஜ யோகம் - 403
இராமகிருஷ்ணர் - i, ii, v, vi, vii, viii, xv, xvii, xviii, xxix, 146, 208, 270, 278, 355, 362, 373, 380, 382, 383, 384, 385, 388, 422, 464
இராம ராஜ்யம் - 379
இராமன் - iv, 34. 36, 38, 39, 40, 43, 45, 46
இராமா (உயிரளிக்கும் மந்திரம்) - x, 163, 164, 286, 326
இராமாயணம் - iv, 30, 79
இராமானந்தர் - 158
இராமானுசர் - ix, xxvii, 156, 157, 172, 189, 255, 257, 258, 259, 281, 387, 400, 404, 424, 425
இராவணன் - 39
இருந்தது பண்டொரு காலே - 392
இரேனியர் - 175
இலக்குவன் - 35, 39, 40
இலங்கை 25, (இதன் சித்திரம்)- 43
இலவ குசர் - 45
இலாகூர் - 159
இன்குஸிஷன் (inquisition) மதத்தின்பொருட்டுப் பிறரைத் துன்புறுத்தல் - 21
இஷ்ட தெய்வம் - 435
இஷ்ட நிஷ்டை (இதன் விளக்கம்) - 284, 285, 286

ஈ

ஈச்வரப் பிரணிதா - 254
ஈசனை அஞ்சுதல் (ஞானத் தொடக்கம்) - 389

உ

உச்சாடனம் (பிறரைஅழித்தல்) - 180
உண்மையான ஞானஸ்நானம் - 362
உணவைத்தா (நாம் அளிப்பனவோ கற்கள், விவிலிய நூல்) - 24
உத்திரை - 68
உத்போதன் - 161, 266, 235
உதிட்டிரர் - 50, 51, 55, 56, 57, 65, 66, 68, 78, 163, 164, 187
உபநிடதம் - v, viii, xii, xvi, 82, 157, 408
உபய பாரதி-223
உருவ வழிபாடு (இதைப் பற்றிய சர்ச்சை) - 18, 20
உரோமாபுரி (இது போன்ற ராஜ்யங்கள் அழிவுறுகின்றன) - 123, 197, 229, 331
உலோகாயதம் – 205, 373
உற்ற முறைகள் (பெண்பாலாரிடையில் வழங்கும் வெவ்வேறு முறைகள்) - 117

எ

எகிப்தியர் - 175, 176
எகிப்து - 218
எகோவா - 23
எங்கள் குருநாதர் - 336, 337, 338
எப்பொருள் (குறள்) - vii
எமர்சன் (கீதை மூலமாக இவர் பெற்ற பேறு) - 71
எலிசபத் - 126

ஏ

ஏகம் முதற் (கம்ப இராமாயணம், பாலகாண்டம்) - xii

ஒ

ஓம் (இதன் வழிபாடு) - xxvi, 227, 280, 281
ஓம் தத் ஸத் - 481

ஔ

ஔடு - 34

க

கட வல்லி (வீரனுடைய லட்சியம்) - xii
கடோபநிஷத் - 220, 445
கண்டா கர்ணன் - 390
கண்ணன் (பிருந்தாவனக் கண்ணனை விடக் குருக்ஷேத்திரக் கண்ணனிடம் ஈடுபாடு) - iv, xvii, xxiv, xxvi, 56
கண்ணபிரான் - 68, 71, 72, 73, 74, 75, 76, 79, 92, 151, 355, 371, 378, 379, 382, 388, 427, 453
கணித நூல் (இது வந்த விதம்)- 148
கபிலர் - 261
கபீர் - 158, 189
கம்ஸன் - 73, 74
கம்பர் (அயோத்தியின் வருணனை) - xii
கருத்துண்மை வாதி - 410
கரும காண்டம்-26
கரும யோகம் (இதன் விளக்கம்) - xxviii
கல்கத்தா (விவேகானந்தர் அரசாங்கக் கல்லூரியில் படித்தவர்) - iv
கல்வி (ஆடவர்களுக்கும் பெண்டிர்களுக்கும்) - 121
கல்வி (இதன் சிறப்பு) - 218, 219, 240, 241
கல்விக்கொடை (உயிர்க்கொடையைவிடச் சிறந்தது) - 131
கவிதைத் தெய்வக் கனல் - 149
கலியுக அறம் (கருமமே) - 140
கற்கள் (இவைகூறும்உபதேசம், ஷேக்ஸ்பியர் - நீ விரும்பியபடியே (As you like it) - 272
கற்பனை (இதற்கு இலக்கணம்) - 367
கன்பூஷியஸ் - 175, 479
கன்னன் - 198

கா

கா. கி. (ஆராய்ச்சிக் கழகங்கள்) - 153
காந்தாரி - 75, 79
கார்த்தேஜ் - 175
காரண காரிய விதி - 147
கான்டு - v, 419
காணு - 223

கி

கிராமப் பஞ்சாயத்து - 166
கிரீஸ் (இதன் நாகரிகம்) - 228, 229
கிரீஸ்லந்து - 129
கிருபர் - 198
கிருஷ்ணன் - 13, 14, 21, 22, 169, 187, 260, 271, 274, 280, 289, 300, 323, 326, 355
கிரேக்கர்கள் - 145
கிரேக்க சாதியினர் - 136
கிரேக்க நாடு - 123, 228, 331
கிழக்கிந்திய சங்கத்தார் - 174
கிறித்து - 22, 356, 360, 361, 374, 388, 389, 391, 392, 409, 453, 456
கிறித்துமதத்தில் திரிமூர்த்திகள் - 355

கீ

கீதை - v, xiii, xxvi, 50, 71, 72, 151, 157, 271, 274, 278, 382, 459, 494

கு

குஜராத்தில் - 184
குட திசைக்கும் குண திசைக்கும் உள்ள வேறுபாடு - 47, 48
குண்டலினி - 387
குண திசையும் குட திசையும் கலத்தல் - xxii
குந்தி - 54, 75, 79
குமரி (விவேகானந்தர் அம்மையைத் தரிசித்தல்) - ix
குமாரி முல்லர் - 217
குமாரிலர் - 172
குர்-ஆன் - v, 171
குரு அவசியம் - 265, 266, 267
குரு கோவிந்தர் - 158
குருடுக்கு வழிகாட்டும் - 268
குருதேவர் - 362, 370, 404
குருமார் வளர்ச்சி - 182
குருக்ஷேத்திரம் - iv, 71, 74
குலமுறை வழி (இதன் விளக்கம்) - 9
குழந்தை மனிதனுக்குத் தந்தை - 19

கே

கேசவ சந்திரசேனர் - 373

கை

கைகேயி - 36
கைம்பெண் மணம் (இதைப் பற்றி) - 115, 116
கைம்பெண்கள் (இவர்கள் தீப் புகுதல்பற்றி) - 133

கொ

கொலம்பஸ் மண்டபம் - 134
கொலம்பியா - 23

கோ

கோசல்ஜி - 217
கோபாலன் (இச்சிறுவனைப்பற்றிய கதை) - 91
கோயில்கள் (இவற்றைப் பற்றிய கருத்து) - 19

கௌ

கௌதமன் - 391

ச

சகாதேவன் - 66, 68, 76
சகுணப் பிரம்மம் - 417
சகுனி - 57

சங்கரர் - xvii, xxvi, 155, 156, 157, 172, 189, 260, 283, (ஆகாரத்திற்கு விளக்கம்) 288, 403, 404, 405, 406, 407, 414, 421, 422, 424, 425, 430
சங்கர பாஷ்யம் - 412
சங்கராந்தி (விவேகானந்தர் பிறந்த தினம்) - iii
சடவாதியர் - 394
சத்திகளின் இணைக்கரவிதி - 395
சத்திய காமர் - 198, 456
சத்தியவான் - 59, 61, 62, 63
சதானந்தர் - xiii
சந்திர குப்தர் - 167
சப்த ரிஷிகள் (இவர்களுள் விவேகானந்தர் ஒருவர்) - vi
சமணம் – v
சமயங்கள் (இவற்றைப் பற்றி விவேகானந்தர்) - xx
சமய போதனை (இந்தியாவுக்குப் பெருந்தேவையன்று) - 24
சமரசம் - 29
சமரச சன்மார்க்கம் (Concord Movement) - 72
சமஷ்டி - 238
சமூக நலவாதம் - 197
சர்வ சமயம் - 29
சர்வ சமயப் பெருமன்றம் (1893 ஆம் ஆண்டில் கூடிற்று) - x, 38
சராசந்தன் - 56
சன்னியாசிகள் (இவர்களுடைய இலக்கணம்) - 336, 345
சனக, சனந்தன, சனாதன, சனத் குமாரர் - 375

சா

சாக்கியம் - v
சாக்கிய முனிவர் - 25, 26
சாங்கியத் தத்துவம் - 74
சாண்டில்லியர் - 250, 254, 255
சாணக்கிய நீதி - 189
சாத்தர்கள் - 387

சாதி (இதற்கு விளக்கம்) - 213 214, 215
சாதிப் பிரிவு - 102
சாந்தர் - 85, 88
சார்வாகர் - 189
சால்டியர் - 175
சாவித்திரி - 58, 59, 60, 61, 62, 63, 64, 65, 206, 210, 223
சான்பிரான்ஸிஸ்கோ - 126

சி

சிக்காகோ (இந்த நகரில் சுவாமிகள் கண்ணீர் வடித்தல்)- xiii, xxi, 1, 244, 494
சிங்காரவேலு முதலியார் (விவேகானந்தர் தொட்ட மாத்திரத்தில் ஞான ஒளி பெறல்) - xiv
சிதியர்கள் - 154
சிரமணர்கள் - 141
சிரவணம் (மனன முதலியவை) - 402

சீ

சீடன் (இவனுக்கு வேண்டியவை தூய்மை, உண்மை முதலியவை) - 268
சீதா (என்ற பெயருக்கு விளக்கம்) - 35
சீதை - 35, 38, 39, 40, 41, 42, 43, 44, (இலட்சியப் பெண்மணி) - 46, 47
சீனர் - 175
சீனு - 175, 176

சு

சுக்கிரீவன் - 43
சுகதேவர் - xvii
சுப்பிரமணிய ஐயர் - 212
சுமேரியர் - 175
சுயம்வரம் (இதன் விளக்கம்) - 35, 51
சுவர்க்கம் (இதன் விளக்கம்) - 397
சுவேத கேது (இவருடைய வதனம்) - 438
சுவேதாசுவதர உபநிடதம் - 249

சூ

சூத்திரர்களின் நிலை - 195, 196, 197, 198
சூபி மாடல் - 392
சூபியர் - 405

செ

சென்னை (சுவாமிகள் விஜயம் செய்தல்) - xiii

சை

சைதன்னியர் - 158, 189

சொ

சொராஸ்திரியர்கள் - xx, 2, 6, 4, 77

ஞா

ஞாதிரு ஞேயம் ஞானம் (இம் முப்பொருள் விளக்கம்) - 399, 404, 449
ஞான காண்டம் - 25
ஞான பூமி - 126
ஞான யோகம் - 446
ஞான வாழ்க்கை(இந்தியாவுக்கு உயிராய் அமைவது) - 189
ஞான ஸ்நானம் - 447

டா

டார்ஜிலிங் - 217

டி

டிராய் - 175

டெ

டெட்ராய்ட் - 128
டெட்ராய்ட் ஈவினிங் நியூஸ் - 128
டெமாஸ்தனிஸ் - 491

டே

டேயோ - 479

டை

டைம்ஸ் - 491

த

தட்சிணேச்சுவரம் (கீழை நாடு வெற்றி கண்ட இடம்) - i, iii, v
தத்தாத்திரேயர் - 448
தத்துவமஸி - 415, 470
தமயந்தி - 210
தயரதன் - 34, 36
தர்ம பாலர் - 491
தர்மம் குறைந்தது (கீதை) - 278
தருமத்தின் ஓர் அற்ப அளவு - 221
தருமராஜன் - 62
தருமன் - 68, 69, 74, 75, 76
(இந்திரனுக்கும் தருமனுக்கும் வாதம், நாயைச் சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லுதல்) - 77, 78, 79

தா

தாது - 158
தாம் இன்புறுவது (குரல்) - xii
தாய்மை (இந்திய நாட்டில் இதன் சிறப்பு) - 107
தார்த்தர் - 124, 150

தி

திபெத்து - 176, (இதில் காணப்படும் பழக்க வழக்கங்கள்) - 420
தியானம் (இதன் விளக்கம்) - 253
திராவிட மொழிகள் - 136
திராவிடர்கள் - 150, 421
திருதராட்டிரன் - 50, 51, 56, 57, 68, 74, 78
திருமணங்கள் (இவற்றைப் பற்றி) - 103
திரௌபதி - 53, 57, 58, 68, 76, 79

து

துகிதர் (இச்சொல்லிற்கு விளக்கம்) - 117
துயுமத்சேனன் - 59
துரியோதனன் - 51, 55, 56, 57 65, 69, 71
துருபதன் - 52, 53,
துரோணர் - 50, 71, 198
துவைதம் - 415
துவைதிகள் - 357, 389, 390
துளசி தாசர் - 286

தூ

தூயோர் பாடல் - 448

தெ

தெய்வத்தன்மை - (The Trinity) 484

தே

தேவேந்திரநாத் தாகூர் (இவரை விவேகானந்தர் உசாவுதல்) -v
தேவி பாகவதம் - 310
தேவியம்மை (வழிபாடு) - 387

ந

நகுலன் - 65, 66, 68
நசிகேதசு - 220
நரநாரணர் - xvi
நரேந்திரர் (இவர் குடும்பத்தின் சிறப்பு) - iii, vi, vii

நா

நாகரப் பிராம்மணர் (இதன் விளக்கம்) - 184
நாகரிகம் (இதற்கு விளக்கம்) - 131
நாசரத்து - 72, 73, 129 360
நாத்திக வாதம் - 6, 22
நார்மன் மக்கள் - 136
நாரததேவர் - xvii, 31, 33, 60, 61, 198, 238, 249, 250, 362, 363
நாராயண - 92, 244, 258
நான் (இதற்கு விளக்கம்) - 8
நான் (எழுத்துக்களுள்) - 280
நானக்கு (குரு) - 158, 189

ந்

ந்ருஸிஹ்ம (உப நிஷத்து) - 304

நி

நியுமன் - 490
நியூயார்க்கு - 132, 219
நியூயார்க்கு வொர்ல்டு - 494
நிர்விகற்ப சமாதி - vii, xii, xvii
நிவிருத்தி (இதன் இலக்கணம்) - 375
நிவேதிதை - xxx
நிறை மனிதன் (இதற்கு இலக்கணம்) - xii, xvii
நிஷ்டை - 467

நீ

நீதி நூல் - 120
நீர் நீங்கள் (இவற்றை வழங்கும் முறை) - 118

ப

பகவத் கீதை (இதைப் புகழ்தல், இதற்கு இராமகிருஷ்ணர் அளித்த விடை)-208, 427, 436
பகை வளர்ந்த முறை - 200
பத்தி (முக்கோணம்) - 311, 312, 313, 314
பத்தி (பலவிதப் பத்திகள்) -319, 320, 321, 322, 323, (இதற்கு இலக்கணம்) 362, 363, 364, 365
பத்தி சூத்திரம் - 362
பத்தி யோகம் (இதன் விளக்கம்) - 249
பத்தி யோகம் - 446, 459, 461, 462, 463
பதஞ்சலி - 221, 254
பதஞ்சலி யோக சூத்திரம் - 433 441
பயில்வான் சுவாமி (விவேகானந்தர்) - xiii

பரதன் - 49, 80, 83, 84
பரபத்தி - 292
பரம் (இதன் விளக்கம்) - 310
பரிசவேதி - 362
பரீட்சித்து - 75, 162
பல் சமயப் பெருமன்றம் - xxi

பா

பாகவத புராணம் - 259
பாச தேனு - 327
பாஞ்சாலி சமிதிகள் - 154
பாடலிபுத்திரம் - 153, 201
பாண்டு - 50
பாபிலோனியர் - 138, 175, 176
பாரசீகப் பாடல் (ராபியா) - 412
பாரசீகம் - 229
பாரசீகர்கள் - 138
பாரத் (இதன் விளக்கம்) - 49
பாரதம் - iv, 123
பாரத வருஷம் - 80
பால் - 384
பால்டிக்கு - 137
பால் மெராடாசு - 138

பி

பிரகதாரணிக உபநிஷத் - 444
பிரகலாதன் - 85, 86, 88, 89, 90, 260
பிரகஸ்பதி - xvii
பிரணி தானம் (இதற்கு விளக்கம்) - 254
பிரபோத சந்திரன் - 410
பிரம்ம சமாஜம் - v, 189, 373
பிரம்ம வித்தை - 407
பிராமண சத்தி (இதன் இயல்பு)- 179
பிரிட்டானிகா கலைக் களஞ்சியம் (விரைவில் முடித்தார்) - xiii
பிரியதரிசி தரும அசோகர் - 162
பிருந்தாவன் - 326, 355
பிரேமை (இதற்கு விளக்கம்) - 254 (இதன் சிறப்பு) - 364, 365
பிளேட்டோ - v
பிறவிக்கு முன் - 110

பீ

பீமன் - 55, 66, 68, 76
பீஷ்மர் - 71, (மரணப் படுக்கையிலிருந்தே அறிவுரை வழங்கினர்) - 74, 78

பு

புத்த தருமம் - 152
புத்தர் - ix, xvii xxvi, 23, 25, 26, 72, 152, 167, 354, 361, 362, 374, 381, 382, 388, 391, 404, 430, 453, 455, 456, 479, 489, 490, 491
புதிய ஏற்பாடு - 374
புது இந்தியா - 207
புவனேசுவரி (விவேகானந்தரின் தாயார், இவர் சிறப்பு) - iii
புனு - 159

பை

பைபில் - v, 177, 355, 392

பொ

பொருட் குறிப்புகள் - 135, 140
பொருளுண்மை வாதி - 409
பொன்னிறச் சிறகுகள் அடைந்த இரு பறவை - 458

போ

போஜர் - 254
போஸ்டன் ஈவினிங் டிரான்ஸ்கிரிப்டு - 128

பௌ

பௌத்த - 189, 190

ம

மகதம் - 153, 155
மகமது - 247, 374, 483
மகா பாரதம் - 30, 49 (இதைப் பற்றிய விளக்கம்) 70, 71, 78, 79, 153
மகா பிரஸ்தானம் - 75
மகா வாக்கியங்கள் - xvii, xviii, 257
மத்திய ஆசியா - 138
மத்துவர் (ஜெபத்தின் இலக்கணம்) - 401

மதுரையில் - 271
மந்தரை - 36
மரத்தினைப் பழத்தினுல் அறியலாம் (விவிலிய நூல்) - 18
மலையாளம் - 420
மன்மதன் - xvii
மனிதன் - 94
மனு - 171
மனைவி (இவளுடைய நிலை) - 108

மா

மாணவன் (மாணவனுடைய இலக்கணம்) - 114
மாது சிரோமணி (சாரதா தேவியார்) - 340, 341
மாயை (இதற்கு இலக்கணம்) - 341, 468
மார்கரெட்டு நோபிள் - xi
மாரணம் - 180
மாரீசன் - 38
மாளவ நாடு - 155

மி

மிதிலைத் திறனுய்வுச் சாலைகள் - 153
மிருநாளினி - 238
மில்டன் - 361, 379

மு

முக்குணங்கள் - 174
முச்சுடர்கள் (சாத்திரங்கள், குரு நாதர், தாய் நாடு) - xxx
முசும்தார் - 133
முண்டகோபநிஷத்து - 268
முத்துமாலை (இதன் நூல்போல்) - 21
முதிர்ந்த கன்னிப் பெண்கள் - 116
முப்பொருள் கூடிய (Trinitarian) - 356

மூ

மூடர்கள் மானிட (கீதை) - 280
மூவர் கலந்து ஒன்ருன தெய்வத் தன்மை (Trinity) - 484
மூன்று சமயங்கள் (சரித்திர காலத்துக்கு முற்பட்ட சமயங்கள், இந்து, சொராஸ்திரிய, யூத) - 6

மே

மேலை நாட்டில் (பெண்மணி என்ருல் மனைவி) - 105

மை

மைசூர் மகாராஜா - 244
மைத்திரேயி - 223
மைதிலியர் - 153

மோ

மோலக்கு - 138

ய

யட்சன் (அபூர்வமான வினுக்கள், அவற்றிற்கேற்ற விடைகள்) - 66, 67
யஜுர் வேத சங்கிதை - 216

யு

யுதிஷ்டிரர் (தருமனுக்கு மற்ருெரு பெயர்) - 14

யூ

யூத சமயம் - 5, 409
யூதர் - 175, 176

யோ

யோவான் - 355

ர

ரக்பிசேபல் (என்னும் கவிதை) - xv
ரமாபாய் - 223

ரா

ராபியா - 412
ராஜா ராம்மோஹன் ராய் - 466

ரோ

ரோம் - 217
ரோமன் இனத்தார் - 136
ரோஜா மலர் (எப்பேரிட்டு வழங்கினுலும் அது தனது நறுமணத்தையே தரும்) - 17

ல

லவாட்ஸே - 479

லீ

லீலாவதி - 223

லூ

லூதர் - 459
லூயிமன்ரூ - 495

வ

வசிஷ்டர் (குணதிசைப் பண்பாட்டைச் சுட்டுகிறுர்) - i, vi, 167, 198
வசீகரணம் (பிறரை வயப்படுத்தல்) - 180
வடநாட்டுப் பௌத்தம் - 477
வட மொழி (இதன் பெருமை) - 148
வழிபாடு (இதன் விளக்கம்) -253

வா

வாரணவதம் - 163
வாரணசி - 211
வால்மீகி (இவருடைய வரலாறு)- 30, 31, 33, 34, 35
வாலி - 40
வான நூல் (இது வந்த விதம்) - 148

வி

விக்கிரக வழிபாடு (இதைப் பற்றிய நிகழ்ச்சி) – 18
விசுவநாதர் (விவேகானந்தரின் தந்தையார், இசைக் கலையில் வல்லவர்) - iii
விசுவாமித்திரர் (குடதிசைப் பண்பாடு வசிஷ்டருக்கும் விசுவாமித்திரருக்கும் நிகழ்ந்த போர் கீழை நாட்டையும் மேலை நாட்டையும் குறிக்கும்)- i, vi, 167
விதுரன் - 51
வியஷ்டி - 238, 305
வியாசர் - 22, 55, 78, 189, 250 254, 256, 495
விரஜை - 271
விராட வேந்தன் - 68
விவேகானந்தர் (கிருத யுகத்தை எழுப்ப நினைத்த பாரதி கண்ட உண்மையை நினைத்தே பாடுகிறுர்) - i, ix, (இவர் வாயிலாக இராம கிருஷ்ணர் தம் அறிவுரையை விரித்துரைத்தல்)- x, xi, xii, xiii, xv, xvi, xvii, xviii, xix, xx, xxii, xxiii, xxiv, xxviii, xxix, xxx, 100, 101, 126, 128, 129, 130, 133, 134, 248, 491, 492, 493, 494
விஷ்ணு புராணம் - 301

வீ

வீரமா குரவர் - i

வெ

வெனிஸ் - 165

வே

வேர்ட்ஸ் வொர்த்து (இக் கவி கண்ட இயற்கை எழிலில் விவேகானந்தரின் ஈடுபாடு) - iv
வேதம்-v, viii, (முதலும் முடிவும் இல்லை; இதன் விளக்கம்) - 7, 13, 14, 25, 26, 30, 162

வேதாந்தம் - 157, 480, 483
வேற்றுமையில் ஒற்றுமை - 20
வேனன் – 192

ஜ

ஜகந்நாதம் - 135
ஜடபரதர் - 80, (வேந்தனுக்கும் ஜட பரதனுக்கும் நிகழ்ந்த உரையாடல்) - 83, 84
ஜப்பான் - 25
ஜன்மாத் யஸ்ய - 255
ஜனகன் - 35, 484
ஜனமேஜயன் - 162

ஜா

ஜாபாலர் - 198
ஜான் - 20
ஜானகி - 286

ஜெஹோவா

ஜைனம் - 1

ஜோஸப்பு -

ஸமஷ்டியை

ஸ்

ஸ்பானிய வீரன் 123
ஸ்பெயின் - 331
ஸ்போடம் - 279, 280

ஸெ

ஸெமிட்டிக்கு - 484

ஸோ

ஸோமம் - 161

ஹ

ஹஷ்ஷாஷின் - 405
ஹஷ்ஷிஷ் - தின்பவன் - 405

ஹீ

ஹீப்ரு - 138

ஹெ

ஹெகல் - v
ஹெர்பர்ட்டு ஸ்பென்ஸர் - v, 120
லன் (இவள் அழகை எதி யாப்பியப் பெண்ணில் ணுதல்) - 316

ஹோ

ாமர் - 49

ஷீ

ா - 405

ஷே

ஷேக்ஸ்பியர் - 127

ஷோ

ஷோப்பனேர் - v, 419